www.gnanam.info
www.gnanam.lk
ISSN 2478-0340

மார்ச் 2021

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

250

## ஞானம் பரிசுச் சிறுகதைகள்

# 60

சிறப்பிதழ்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் மாபெரும் இலக்கியப் போட்டிகள்!

## ஞானம் பிரதம ஆசிரியர் **தி. ஞானசேகரனின்** 80ஆவது **அகவையை** முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்தும் **மாபெரும் இலக்கியப் போட்டிகள்**

**பரிசுத் தொகை ரூபாய் 300,000/=**



2000ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு பெப்ரவரிவரை வெளிவந்த சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கான பரிசுப் போட்டிகள் ஆறு பிரிவுகளில் நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| (01) **முதற் பிரிவு** | : | **நாவல் - குறுநாவல் -** நாவல், குறுநாவல், குறுநாவல் தொகுப்பு. |
| (02) **இரண்டாம் பிரிவு** | : | **சிறுகதை -** குறைந்தது 9 சிறுகதைகள் உள்ளடங்கிய சிறுகதைத் தொகுப்பு. |
| (03) **மூன்றாம் பிரிவு** | : | **கவிதை -** கவிதைத் தொகுப்பு – மரபுக் கவிதை, புதுக்கவிதை, காவியம். |
| (04) **நான்காம் பிரிவு** | : | **கட்டுரை -** பொருட்பரப்பு எதுவாகவும் இருக்கலாம். |
| (05) **ஐந்தாம் பிரிவு** | : | **ஈழத்துப் பழந்தமிழ் ஆய்வு -** பல்கலைக்கழக மாணவர்களுக்கு உரியது. |
| (06) **ஆறாம் பிரிவு** | : | **ஈழத்துச் சிற்றிதழ்.** |

### போட்டிகளுக்கான விதிமுறைகள் :

ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எவரும் இப்போட்டிகளில் பங்கு பற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம். ஆனால் ஒருபிரிவுக்கு ஒரு படைப்பை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். போட்டி முடிவுத் திகதி 30–06–2021. அதன் பின்னர் வந்துசேரும் படைப்புகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஞானம் ஆசிரியர் குழுமத்துடன் போட்டி தொடர்பான கடிதம், தொலைபேசித் தொடர்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. ஞானம் பதிப்பகத்தில் வெளிவந்த நூல்கள் இப்போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அனுப்பவேண்டிய முகவரி - Editor, Gnanam, 3-B, 46th Lane, Colombo 06, Sri Lanka என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். தபால் மேலுறையின் இடதுபக்க மூலையில் பங்குபற்றும் போட்டிப் பிரிவின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

### பிரிவு 1 – 4 மேலதிக விதிமுறைகள் :

ஆகக் குறைந்தது 80 பக்கங்கள் கொண்ட நூல்களாக இருத்தல் வேண்டும். நூலின் இரண்டு பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். போட்டியாளர்கள் தமது இலக்கிய முயற்சிகள் உள்ளடங்கிய தம்மைப்பற்றிய சிறுகுறிப்பு ஒன்றினையும் அவர்கள் வெளியிட்ட நூல்களின் பட்டியலையும் வேறாக இணைத்தல் வேண்டும்.

### பிரிவு 5 மேலதிக விதிமுறைகள் :

தற்போது பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். இப்போட்டிக்கென எழுதப்பெற்ற ஈழத்துப் பழந்தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மாத்திரமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். பட்டப்படிப்புக்கு சமர்ப்பித்த ஆய்வுகளையோ அதன் பகுதிகளையோ அனுப்பமுடியாது. ஆய்வுக்கட்டுரைகள் ஆகக் குறைந்தது A4 தாளின் 40 பக்கங்களில் தட்டச்சு செய்து 2 பிரதிகளை அனுப்புதல்வேண்டும். அனுப்பப்படும் ஆய்வு அவரால் எழுதப்பட்டது என்பதற்கான பல்கலைக்கழக துறைத்தலைவரின் உறுதிக் கடிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

### பிரிவு 6 மேலதிக விதிமுறைகள் :

போட்டியில் பங்குபற்றும் சிற்றிதழின் ஆசிரியர் ஈழத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும் (1) சிற்றிதழ் பற்றிய சிறுகுறிப்பு (2) இதுவரை காலமும் வெளிவந்த இதழ்களின் அட்டைப்படம், பொருளடக்கம், ஆசிரியத் தலையங்கம் ஆகியவற்றின் போட்டோ பிரதிகள் (3) வெவ்வேறு காலங்களில் வெளிவந்த 10 இதழ்களின் இரண்டு பிரதிகள் ஆகியவற்றை இணைத்தல் வேண்டும்.

**ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறாக பரிசுத் தொகைகளும் பரிசுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.**

**முதற்பரிசு ரூபா 25,000/=    இரண்டாம் பரிசு ரூபா 15,000/=    மூன்றாம் பரிசு ரூபா 10,000/=**

**– ஞானம் நிர்வாக ஆசிரியர்**

ஒளி : 21
சுடர் : 10
250-1

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்



## தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka



வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்புபவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |


*⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

## இதழினுள்ளே.....

**சிறுகதைகள்**


⊙ சாரங்கா 07
⊙ தாட்சாயணி 12
⊙ முல்லைமணி வே.சுப்பிரமணியம் 23
⊙ மாதுமை சிவசுப்பிரமணியம் 28
⊙ Dr. ச. முருகானந்தன் 35
⊙ கார்த்திகா பாலசுந்தரம் 42
⊙ ஓ. கே. குணநாதன் 47
⊙ தீரன், ஆர். எம். நௌஸாத் 56
⊙ திருமதி கார்த்திகாயினி சுபேஸ் 60
⊙ கார்த்திகா பாலசுந்தரம் 68
⊙ கே. எஸ். சுதாகர் 73
⊙ தெ.நித்தியகீர்த்தி 80
⊙ திருமதி கமலினி சிவநாதன் 94
⊙ இ. இராஜேஸ்கண்ணன் 98
⊙ கார்த்திகா பாலசுந்தரம் 102
⊙ சந்திரகாந்தா முருகானந்தன் 109
⊙ புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் 117
⊙ இ. இராஜேஸ்கண்ணன் 129
⊙ தீரன் ஆர். எம். நௌஸாத் 135
⊙ இ. இராஜேஸ்கண்ணன் 143
⊙ ஹேமந்த் கருணாகரன் 148
⊙ திருமதி கார்த்திகாயினி சுபேஸ் 155
⊙ பாடும்மீன் சு. ஶ்ரீகந்தராசா 161
⊙ அகளங்கன் நா. தர்மராஜா 171
⊙ பவானி சிவகுமாரன் 177
⊙ எஸ்.பி. கிருஷ்ணன் 'வேரற் கேணியன்' 182
⊙ அகளங்கன் நா. தர்மராஜா 191
⊙ கேணிப்பித்தன் ச. அருளானந்தம் 198
⊙ சாம்பசிவம் அகிலேஸ்வரன் (அகில்) 205
⊙ ஓ. கே. குணநாதன் 212
⊙ சாம்பசிவம் அகிலேஸ்வரன் (அகில்) 218
⊙ 'வேரற்கேணியன்' எஸ். பி. கிருஷ்ணன் 225
⊙ திருமதி கார்த்திகாயினி சுபேஸ் 230
⊙ அகளங்கன் நா. தர்மராஜா 237

⦿ கண மகேஸ்வரன் 244
⦿ நல்லையா சந்திரசேகரன் 249
⦿ கே. கே.அருந்தவராஜா 256
⦿ நவஜோதி ஜோகரட்னம் 262
⦿ சூசை எட்வேட் 267
⦿ திருமதி மாலாதேவி மதிவதனன் 277
⦿ ஆவூரான் 283
⦿ அனுராதா பாக்கியராஜா 287
⦿ எஸ்.ஐ.நாகூர்கனி 292
⦿ Dr. ச. முருகானந்தன் 299
⦿ திருமதி மைதிலி தயாபரன் 304
⦿ மூதூர் மொகமட் ராபி 311
⦿ உ.நிசார் 323
⦿ தேவகி கருணாகரன் 330
⦿ அண்டனூர்சுரா 340
⦿ Dr. அஸாத் எம் ஹனிபா 346
⦿ சவுந்தரராஸா லிசாந்தினி 351
⦿ ஈழநல்லூர் கண்ணதாசன் 357
⦿ கே.எஸ்.சுதாகர் 363
⦿ அன்டனூர் சுரா 371
⦿ ஈழநல்லூர் கண்ணதாசன் 379
⦿ முஸ்டீன் 386
⦿ என். நஜ்முல் ஹுசைன் 393
⦿ எஸ். ஐ. நாகூர்கனி 398
⦿ ஈழநல்லூர் கண்ணதாசன் 403
⦿ Dr. எஸ்.சிவகலை 412

⦿ பேராசிரியர் செ. யோகராசா 418
(ஈழத்து ஆரம்பகால சஞ்சிகைகளும்
சிறுகதைப் போட்டிகளும்)

ஞானத்தில் தமது முதலாவது சிறுகதையை
எழுதிய எழுத்தாளர்கள் (பட்டியல்) 422

ஞானத்தில் வெளிவந்த
மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் 424

போர்க்காலச்சிறுகதைத் தொகுப்புகள் 428


**பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !**

# ஆசிரியர் பக்கம்

அன்புள்ள இலக்கிய நெஞ்சங்களே,

வணக்கம்

ஞானம் சஞ்சிகையின் 250ஆவது இதழ் **இரட்டை இதழ்களாக** மலர்கிறது என்ற மகிழ்ச்சிதரும் செய்தியை வாசகர்களிடம் பகிர்ந்துகொள்கிறோம். வழமையாக வெளிவருகின்ற ஞானம் இதழினை விட, மேலதிகமாகவும் ஒரு சிறப்பிதழை வெளிக்கொணர்வதில் நாம் இரட்டிப்பு மகிழ்ச்சிகொள்கிறோம்.

**ஞானம் பரிசுச் சிறுகதைகள் – 60** என்ற மகுடத்தில் வெளிவரும் இச்சிறப்பிதழ், ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு ஞானம் ஆற்றிய பங்களிப்பினை முன்னிறுத்துவதாக அமைகிறது.

நவீனத் தமிழ் இலக்கியப்பரப்பில் தமிழுக்கு அணிசெய்யும் இலக்கிய வகைகளில் சிறுகதைக்கு முக்கிய இடம் உண்டு. சிறுகதை வளர்ச்சியில் பெரும்பங்கு ஆற்றிவருபவை சிற்றிதழ்களே.

தமிழகத்தில் வெளிவந்த **மணிக்கொடி** இதழே முதன்முதலில் சிறுகதை வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுத்த சிற்றிதழாகும். பி.எஸ். ராமையா அச்சிற்றிதழின் ஆசிரியராக இருந்த காலத்தில் அதனை முற்றுமுழுதாய் சிறுகதை இதழாகவே வெளியிட்டார். இதில் புதுமைப்பித்தன், கு.ப. ராஜ கோபாலன், ந.பிச்சமூர்த்தி, மௌனி போன்றவர்கள் சிறந்த சிறுகதைகளை எழுதினார்கள்.

ஈழத்தில் சிறுகதை வளர்ச்சிக்கு **ஈழகேசரி** பத்திரிகை கணிசமான பங்கினை வழங்கியபோதிலும், அந்தப் பத்திரிகை மரபு இலக்கியத்திலே காலூன்றி நின்றது. நவீன இலக்கியத் துறையில் ஓரளவே அக்கறை காட்டியது. வரதரின் **மறுமலர்ச்சி** சிற்றிதழே ஈழத்தின் முதலாவது நவீன இலக்கியச் சிற்றிதழ் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டது. அ.செ.முருகானந்தன், சு.வேலுப்பிள்ளை, அ.ந.கந்தசாமி, சு.இராஜநாயகன், தாழையடி சபாரத்தினம், சொக்கன் ஆகியோர் மறுமலர்ச்சியில் முகிழ்ந்த சிறுகதை எழுத்தாளர்களாகக் குறிப்பிட்டுள்ளார் "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" எழுதிய இரசிகமணி செந்திநாதன்.

"ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கொண்ட கலைநயம்மிக்க எழுத்தாளர்களால் ஈழத்து இலக்கியத் துறையைச் செழுமைப்படுத்திய எழுத்தாளர்களான செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன் உட்பட 27 எழுத்தாளர்களின் பட்டியலைத்தந்து, இவர்கள் யாபேரும் ***கலைச்செல்வி***ப் பண்ணையில் வளர்ந்தவர்களே" எனக் குறிப்பிட்டுள்ளார் சிற்பி சிவசரவணபவன்.

கலைச்செல்வியின் பின் தோன்றிய சிற்றிதழான **மல்லிகை**யும் தனக்கென மார்க்ஸியக் கருத்தியல் கொண்ட ஓர் எழுத்தாளர் பட்டாளத்தைத் தோற்றுவித்தது. அதிகமான முஸ்லிம் படைப் பாளிகளை உருவாக்கிய பெருமை மல்லிகைக்குரியது.

ஈழத்தில் தோன்றிய சிற்றிதழ்கள் யாவுமே அதனதன் நிலையில் சிறுகதை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்து வந்துள்ளன. இதனை விளக்குவதாக, பேராசிரியர் **செ. யோகராசா** அவர்கள் எழுதிய "ஈழத்து ஆரம்பகால சஞ்சிகைகளும் சிறுகதைப் போட்டிகளும்" என்ற கட்டுரை இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளது.

ஞானம் சஞ்சிகை தற்பொழுது 250ஆவது இதழை வெளிக்கொணர்ந்துள்ளது. ஞானம் சஞ்சிகையின் அத்தனை இதழ்களிலும் நாம் சிறுகதைகளை வெளியிட்டு வந்துள்ளோம். அத்தோடு சிறுகதைப் போட்டிகளை வருடாவருடம் நடத்தி அவற்றில் பரிசு பெற்றோருக்குப் பணப்பரிசு, பரிசுச்சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தி வந்துள்ளோம்.

ஞானம் நடத்திய இந்தப் போட்டிகளில் மூத்த தலைமுறை எழுத்தாளர்கள் முதல், புதிய தலைமுறை எழுத்தாளர்கள் வரை பங்குகொண்டு தரமான பல சிறுகதைகளைத் தந்துள்ளார்கள். இப்போட்டிகள் மூலம் பல புதியவர்கள் எழுத்துலகில் காலடி பதித்திருக்கிறார்கள். உலகத்தரமான பல சிறுகதைகள் இந்தப் போட்டிகள் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளன. புலம்பெயர் நாடுகளான அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, போன்ற நாடுகளிலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் பலர் இப்போட்டிகளில் பங்குபற்றியிருக்கிறார்கள். அதேவேளை இலங்கையின் சகல மாகாணங்களிலிருந்தும் எழுத்தாளர்கள் உற்சாகத்துடன் பங்குபற்றியிருக்கிறார்கள்.

2003, 2004ஆம் ஆண்டுகளில் புதிய எழுத்தாளர்களுக்கான **சிறுகதைத் தொகுப்புப் போட்டி**களை நடத்தினோம். அந்தப் போட்டி விதிகளின்படி போட்டியில் பங்குபற்றுவோர் தாம் எழுதிய ஒன்பது சிறுகதைகளைத் தொகுத்து அனுப்பவேண்டும். போட்டி நடுவர்களாக **கே. எஸ். சிவகுமாரன், செங்கை ஆழியான், சிற்பி சரவணபவன், புலோலியூர் க.சதாசிவம், புலோலியூர் ஆ. இரத்தின வேலோன்** ஆகியோர் பணியாற்றினர். இந்தப்போட்டிகளுக்கு அனுசரணை வழங்கியவர் ஞானத்தின் இணை ஆசிரியராக இருந்த புலோலியூர் க.சதாசிவம் அவர்கள். போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பணப்பரிசு வழங்கியதோடு வெற்றிபெற்ற தொகுப்புக்கள் நூலாகவும் வெளிக்கொணரப்பட்டன. **தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றில் ஞானம் சஞ்சிகை மட்டுமே இத்தகைய தொகுப்புப் போட்டிகளை நடத்தியது என்பது வரலாறு**. இந்தச் சிறப்பிதழில் மேற்குறிப்பிடப்பட்ட தொகுப்புப்போட்டிகளில் பரிசுபெற்ற தொகுப்புகளின் மகுடக்கதைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இணை ஆசிரியராகப் பணியாற்றிய **புலோலியூர் க. சதாசிவம்** 2005இல் அமரரானார். அவரது ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டிகள் ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக அன்னாரது குடும்பத்தினரின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. 2005, 2006, 2007ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசுகளும் பரிசுச்சான்றுகளும் பெற்ற கதைகள் தொகுக்கப்பட்டு அவற்றை நூலாக்கும் பணியினையும் ஞானம் மேற்கொண்டது. அவ்வகையில் **கொக்கிளாய் மாமி, சிறைப்பட்டிருத்தல், கருமுகில் தாண்டும் நிலவு** ஆகிய தொகுதிகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன.

**அல்வாயூர் மு. செல்லையா** ஜனன நூற்றாண்டுக் குழுவினரின் அனுசரணையுடன் 2007ஆம் ஆண்டில் அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா ஜனன நூற்றாண்டு ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியை ஞானம் சஞ்சிகை நடத்தியது. அதற்கான பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

2007ஆம் ஆண்டிலிருந்து வருடாவருடம் **செம்பியன் செல்வன் ஆ. இராஜகோபால்** ஞாப கார்த்தச் சிறுகதைப்போட்டியை அன்னாரின் குடுபத்தினரது அனுசரணையுடன் ஞானம் சஞ்சிகை நடத்திவருகிறது. இதுவரை 12 செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டிகள் நடத்தப் பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டிகள் யாவற்றிலுமே 45க்கும் 167க்கும் இடைப் பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். பரிசுக்குரிய கதைகள் மூவர் கொண்ட நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசுக்கதைகள் ஞானம் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டதோடு, பரிசுபெறாத ஆனால் பிரசுரத்திற்குத் தகுதியான சிறுகதைகளையும் ஞானத்தில் பிரசுரித்து வந்துள்ளோம்.

போட்டியில் பரிசுபெற்ற கதைகள் யாவும் அந்தந்தக்காலச் சமூகப்பிரச்சினைகளைப் பேசு பவையாக அமைந்தன. குறிப்பாக போர் நடந்த காலகட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னம் – அதனால் மக்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள், பாலியல் தொல்லைகள், இராணுவத்திற்குப் பயந்து வாழும் இளைஞர்களின் மனநிலை, இராணுவத்திற்கு கையூட்டுக் கொடுத்து போராளிகள் வெளிநாடு செல்லல், தமது பாலியல் இச்சைக்கு இணங்க மறுக்கும் பெண்களின்மேல் இடம்பெறும் இராணுவப் பழிவாங்கல்கள், போர்க்காலத்தில் அமுலில் இருந்த 'பாஸ்' நடைமுறையினால் ஏற்பட்ட சிரமங்கள், இராணுவத்தினரின் வாகனத் தொடரணி

செல்லும்வேளைகளில் ஏற்படுத்தப்படும் பாதைமறிப்பு காரணமாக மக்கள் பட்ட கஷ்டங்கள், இராணுவத்தினரின் முள்வேலி முகாம்களில் மக்கள் அனுபவித்த துன்பங்கள், காணாமல்போனோர் புதைகுழிகளில் புதைக்கப்பட்ட அவலம், போர்க்கால மரணங்கள் மக்களிடத்தே ஏற்படுத்திய பீதி, முள்ளிவாய்க்கால் இறுதிநாள் யுத்தத்தில் அகப்பட்டவர்களின் அவலங்கள், இயக்கப் போராளி ஒருவர் மரணமடைந்தால் அவரது பெற்றோரோ உறவினரோ வெளிப்படையாக அழமுடியாத நிலைமை, நில அபகரிப்பு, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் – தமிழ்மக்களிடையே ஏற்பட்ட முறுகல் நிலை, யாழ் மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மனநிலை அவர்களது மண்ணைப்பற்றிய ஏக்கம், பிள்ளைகள் புலம்பெயர்ந்து சென்றதால் தாய்தந்தையர் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், போர்க்காலத்தில் வெளிநாடு சென்ற போராளிகளின் வாழ்வியல் பிரச்சினைகள், புலப்பெயர்வு ஏற்படுத்திய பண்பாட்டு மாற்றங்கள், புலம்பெயர் நாடுகளுக்கு திருமணம் செய்து போகும் பெண்களின் ஏமாற்றம், போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனை, போரினால் கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம், பெண்ணியச் சிந்தனை, சாதிய ஒடுக்குமுறை, போரில் தாய் தந்தையரை இழந்து அநாதையாகிப் போன குழந்தைகளின் ஏக்கம், போரினால் கணவன் அங்கயீனனாகிய குடும்பத்தின் பிரச்சினை, யுத்தகால வறுமையினால் பணிப்பெண் வேலைக்கு அரபுநாடுகளுக்கு சென்ற பெண்களின் அவலம், நுண்கடன் பெற்ற கைம்பெண்களிடம் பாலியல் லஞ்சம் கோருதல், நுண்கடன் பெற்றவர் கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாமல் தற்கொலை செய்துகொள்ளல், அநாதை இல்லம் என்ற போர்வையில் பாலியல் கொடுமைகள், சிறைக்கைதிகளின் பிள்ளைகள் மனைவியர் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள், நவீன தொழில் நுட்பத்தினால் தொலைபேசி ஏற்படுத்தும் பிரச்சினைகள், தமிழ் மொழிப் பற்று, மண்பற்று, போன்ற பலவகை கருப்பொருள்களைக் கொண்டவையாக இந்தச் சிறுகதைகள் அமைந்துள்ளன ***இரண்டு தசாப்த காலம் ஈழச் சமூகத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளதும் மக்களின் துன்பியல் வாழ்வினதும் ஒரு வெட்டுமுகத்தைத் தருபவையாக இந்தப் பரிசுக்கதைகள் அமைந் துள்ளன.*** இவற்றோடு சமகாலத்தில் உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனாத் தொற்று அவலத்தைப் பிரதிபலிக்கின்ற கதையொன்றும் இடம்பெற்றுள்ளது.

சிறுகதைப் போட்டிகளை நடத்துவதோடு அமையாது வேறும் பல வழிகளிலும் சிறுகதை வளர்ச்சிக்கு ஞானம் பங்களிப்புச் செய்துவருகிறது.

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு அணிசேர்க்கவல்ல, முதல் இரண்டு ஆண்டு காலத்தில் ஞானத்தில் வெளிவந்த ***போர்க்காலச் சிறுகதைகள்*** தொகுக்கப்பட்டு நூலாக வெளியிட்டுள்ளோம்.

எமது வேண்டுகோளுக்கு இணங்க அக்காலப்பகுதியில் சிங்கள எழுத்தாளர்களால் பத்திரிகை களில் எழுதப்பட்ட போர் தொடர்பான சிறுகதைகளை ***வ.ஆ. தங்கவேலாயுதம்*** மொழிபெயர்த்துத் தந்தார். அக்கதைகளைத் தொடராக ஞானத்தில் வெளியிட்டோம். பின்னர் அக்கதைகளை ***யுத்தத்தின் சாபம்*** என்ற மகுடத்தில் நூலாக வெளிக்கொணர்ந்தோம். சிங்கள மக்கள் இந்தப்போரை எவ்வாறு நோக்கினார்கள்? அவர்களது மனவுணர்வுகள் எத்தகையதாக இருந்தன என்பதை இக்கதைகள் வெளிப்படுத்தின.

இதுவரை சில குறுங்கதைகள் அடங்கலாக **910 *சிறுகதைகள் ஞானத்தில் வெளிவந்துள்ளன.*** அவற்றுள் மொழிபெயர்க்கப்பட்ட பிறமொழிச் சிறுகதைகளாக 46 சிறுகதைகள் அடங்குகின்றன. அவை ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்சு, எத்தியோப்பிய, அரபு, பாரசீகம், ஜம்முகஷ்மீர், வங்காளம், ரஷ்ய, கானா மூலமொழிச் சிறுகதைகளாகும். எமது வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் உலகத் தரத்திலான சிறுகதைகளை அறிமுகம்செய்யும் நோக்கத்துடன் அவை வெளியிடப்பட்டன. ஞானத்தில் இதுவரைகாலம் வெளிவந்த மொழிபெயர்ப்புச் சிறுகதைகளின் பட்டியல் ஒன்றினை வாசகர் நலன்கருதி பின்னிணைப்பாக இச்சிறப்பிதழில் இணைத்துள்ளோம்.

வளர்ந்துவரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன் 2003–2004 காலப்பகுதியில் **ஈழத்து இலக்கிய நம்பிக்கைகள்** என்ற தொடரில் 11 இளம் தலைமுறை எழுத்தாளர்களை அறிமுகப் படுத்தினோம்.

அதேபோன்று 2006ஆம் ஆண்டுமுதல் **புதிய தலைமுறைப் படைப்பாளிகள் அறிமுகம்** என்ற மகுடத்தில் 54 எழுத்தாளர்களை அவ்வப்போது அறிமுகப்படுத்தி வந்துள்ளோம்.

"ஈழத்துச் சிறுகதை வரலாறு" என்ற ஆய்வுநூலை எழுதிய **கலாநிதி க. குணராசா – செங்கை ஆழியான்**, சிறுகதை எழுதுதல் தொடர்பான இரண்டு கட்டுரைத் தொடர்களை ஞானத்தில் எழுதினார். **புனைகதை இலக்கியம்: அறிவோம் கற்போம் படைப்போம்** என்ற முதலாவது கட்டுரைத் தொடர், ஞானம் 51ஆவது இதழில் ஆரம்பித்தது 15 அத்தியாயங்களில் விரிந்தன. இக்கட்டுரைத் தொடரில் இலக்கியம் என்றால் என்ன? இலக்கியத்தின் பிரிவுகள், இலக்கியத்தின் மூலக்கூறுகள் பற்றிய விளக்கங்கள், கருத்தியற் கோட்பாடுகள், சிறந்த சிறுகதைகள் எவ்வாறு அமையும், நல்ல சிறுகதைகளின் உதாரணங்கள், சிறுகதை வகைகள், நாவல்கள், எழுத்தாளர்களாக விரும்புவோர் கட்டாயம் படிக்க வேண்டிய படைப்புகள் போன்ற இன்னும் பல விடயங்கள் அடங்கியுள்ளன.

123ஆவது ஞானம் இதழில் ஆரம்பமான செங்கை ஆழியானின் இரண்டாவது கட்டுரைத்தொடர் ஆறு அத்தியாயங்கள் கொண்டது. **சிறுகதை எழுதுவோம்** என்ற தலைப்பில் அமைந்த இத்தொடரில் சிறுகதை என்றால் என்ன? அது எப்படி அமையவேண்டும் போன்ற விபரங்களை, ஈழத்தின் சிறந்த சிறுகதைகளை உதாரணங்களாகக் காட்டி விளக்கப்பட்டுள்ளது.

சிறுகதை எழுதும் இளம் படைப்பாளிகளை ஆற்றுப்படுத்தும் வகையில் **'இளந்தலைமுறைச் சிறுகதைப் படைப்பாளிகளின் கவனத்திற்கு'** என்ற தலைப்பில் ஞானம் ஆசிரியரால் 124ஆவது இதழில் ஆசிரியத் தலையங்கம் எழுதப்பட்டது.

கதைக்கரு, உருவம், உள்ளடக்கம், வெளியீட்டுமுறைமை ஆகியவற்றில் சிறந்து விளங்கிய சிறுகதையான "போர்வைகள் மறைக்காத பார்வைகள்" என்ற சிறுகதையை, ஞானம் **முத்திரைக் கதை**யாகத் தேர்ந்தெடுத்து அக்கதைக்கு பரிசும் சான்றிதழும் வழங்கியுள்ளோம். அக்கதையும் இந்தச் சிறப்பிதழில் 12ஆவது கதையாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஒரு சிறுசஞ்சிகையில் தமது முதலாவது சிறுகதையை எழுதியவர்கள் என்ற வகையில் 46 எழுத்தாளர்கள் ஞானத்தில் தமது முதலாவது சிறுகதையை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, டென்மார்க், கனடா நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் என்பதும் அவர்களில் சிலர் தொடர்ந்து ஞானத்தில் எழுதி புகழ்பெற்ற எழுத்தாளர்களாக இன்று திகழ்கிறார்கள் என்பதும் ஞானம் சஞ்சிகைக்குப் பெருமைதரும் விடயமாகும்.

தமது முதலாவது சிறுகதையை வேறு பத்திரிகையில் எழுதிய சிலர், தொடர்ந்து ஞானத்தில் எழுதியதன்மூலம் இலக்கிய உலகில் வெளிச்சத்திற்கு வந்தவர்களாகவும் பிரபல்யம் பெற்றவர் களாகவும் திகழ்கிறார்கள். அவ்வகையில் இருபதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களைக் குறிப்பிட முடியும் அவர்களும் ஞானம் வளர்த்தெடுத்த எழுத்தாளர்களே.

இன்று பிரபல்யம் அடைந்திருக்கும் அதிகளவிலான **புதிய தலைமுறை மலையக எழுத் தாளர்கள்** ஞானம் இலக்கியப் பண்ணையில் வளர்ந்தவர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் இதழியல் வரலாற்றில் எந்தவொரு பத்திரிகையோ அல்லது சிற்றிதழோ சிறுகதைப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் வருடாவருடம் சிறுகதைப் போட்டிகளை பதினைந்து வருடங்களுக்குமேல் தொடர்ச்சியாக நடத்திப் பரிசுகள் வழங்கிய வரலாறு இல்லை.

**ஞானம் சஞ்சிகை இதுவரை 21 சிறுகதைப் போட்டிகளை நடத்தி வரலாறு படைத்துள்ளது.**

ஞானம் சஞ்சிகை ஈழத்தின் சிறுகதைத்துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை வெளிப்படுத்துவதாக இச்சிறப்பிதழ் அமைகின்ற அதேவேளையில் புதிதாக சிறுகதை எழுத முற்படுவோருக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்மிக்க இதழாகவும் இச்சிறப்பிதழ் அமையும் என நம்புகிறோம்; மனநிறைவு கொள்கின்றோம்.

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!


❍❍❍

1



சாரங்கா நவீனத்துவ உள்ளியல்புகளை நேர்த்தியாக உள்வாங்கி, இயற்பண்பியலின் நல்ல அம்சங்களையும் மனத்திலிருத்தி தனக்கென ஒரு தனிப்பாணியை அமைத்த ஆக்க ஆளுமையுடைய படைப்பாளி. அவரது படைப்புகளில் நாம் வாழும் சமூகத்தின் எரியும் பிரச்சினைகள், சமகாலப் போர்ச் சூழலின் அவலங்கள், பெண்ணியம் ஆகியவற்றை அழகாகக் கையாண்டுள்ளார். விடுதலை வேண்டிநிற்கும் அவலப்பட்ட குரலின் விழிப்பு ஓசை கேட்கிறது. அது இன விடுதலையிலிருந்து பெண்விடுதலை வேண்டி நிற்கும் பெரும்பரப்பில் எதிரொலிக்கிறது. ஆக்க அமைதியுடன் படைக்கப்பட்ட இவரது ஆக்கங்கள், உருவச் செழுமையுடன் கலாநுட்பம் கொண்டவையாக அமைந்துள்ளன. உணர்ச்சிகளின் மென்மையான வெளிப்பாடு இவரது கதைகளின் உயிர்நாடி. வாழ்க்கைக் கோலத்தின் முரண்பாடுகளை இவர் அணுகும்முறை அற்புதமானது. சொற்சிக்கனம், கவிதை நடையின் சாயல், குறியீடுகளின் பயன்பாடு சொல்லாமல் சொல்லும் உத்தி ஆகிய சிறப்புகளுடன் சிறுகதைப் பிரக்ஞையுடன் சாரங்காவின் படைப்புகள் அமைந்துள்ளன.

- **புலோலியூர் க. சதாசிவம்**







தண்ணீருக்குள் 'களுக்'என்றொரு சத்தம் அமுங்கிக் கேட்டது போலிருந்தது. 'கிணற்றோரமாய் நடக்கின்றார்களோ ...அவ்விதம் அவர்கள் நடக்கும்போது ஒருவன் கல்தூக்கிக் கிணற்றினுள் வீசியிருக்கலாம்'.

சாவிக்கான சிறுதுவாரத்தின் வழியே ஒளிபுகுந்து சாவிதழுவிச் சாய்ந்து சிதறிற்று. பூட்டிய கதவின் உட்பக்கமாகச் சாய்ந்தபடி அவள் நின்றிருந்தாள். சாயாது தனித்த சுயாதீனமாய் நிற்க முடியாது போலிருந்தது.

நெஞ்சில் கைவைத்து இரைச்சலுடன் வெளிவந்த மூச்சினை அமைதியாய்த் தழைத்து அனுப்பி வைத்தபோது சூழ்நிலையின் பயங்கரத்தை நன்கு உணர்ந்து கொண்டிருந்த அவளது கரங்கள் நடுங்கின. எவ்வேளையிலும் அவர்கள் உட்புகுந்துவிடக்கூடும்.

அந்தச் சிறுவீட்டின் கூடம் தூசி நிறைந்து காணப்பட்டது. தூசி மணம் நாசிபுகுந்து தும்மலை வர வழைத்து விடுமே என்ற நினைப்பு அவளை மேலும் திகினுள் அழுத்திற்று. தப்புத லுக்கான தீவிரம் ஓடிவரும் வழியில் அந்தக் கிழவனின் சிறுவீட்டின் கதவு தள்ளித்திறந்து உட்பக்கமாகப் பூட்டிக் கொண்டதுவரை நினைப்பின்றிச் செய்ய வைத்து விட்டிருந்தது. உள்ளே யாரும் இல்லை. கிழவன் அருகிலுள்ள தன் தோட்டத்திற்குப் போயிருக்கக் கூடும். பெறுமதி அற்றிருப்பதில் அவனது சின்னஞ்சிறு வீட்டைத் திறந்தநிலையில் விட்டுச் செல்லமுடிகிறது அவனுக்கு.

அவர்கள் உட்புகுவது ஆபத்தின் உச்சக் கட்டமாக இருக்கும். இவளது போற்றற்குரிய மகத்தான சிறுவயது முதலே பாதுகாத்திருந்த ஏதோ ஒன்று என்றுமே அறியாதவர்களால் சிதைக்கப் படக்கூடும் என்ற அச்சநினைவில் உடல் தழலாய்க் கொதித்தது, கண்கள் முட்டக் கண்ணீர். வல்லூறுகளால் துரத்தப்பட்ட சிறுபறவைக் குஞ்சு அல்லது அணிற் குஞ்சாக அவள் கதவோடு ஒட்டி நின்றிருந்தாள்.

அழுகை வெடித்து விடாதிருக்கும் படி கீழ் உதட்டினை மேற் பல்வரிசையால் அழுத்தியிருந்தாள். இப்போதுங்கூட உதடுகள் சிவக்கும். இயல்பில் ரோஜா நிறமான உதடுகள் இரத்தச் சிவப்பாய் மாறும். இந்த உதடுகள் பற்றி சீரான வெண்ணிறப் பல்வரிசைபற்றி தங்க நிறமான முகத்தில் கீறப்பட்டதாய் அழகாய் வளைவுறுகின்ற கண்ணிமைகள் பற்றி சற்றே அகன்ற ஒளிவிழிகள் பற்றி நெற்றிப் பிரதேசத்திலும் வலிந்துரிமை கொள்கின்ற முன்நெற்றியோரச் சுருள் முடி பற்றி இன்னும் அழகான அவளது உடலமைப்புப் பற்றிக் கொண்டி ருந்த பெருமையெல்லாம் கரைந்தழியத் தக்கதான 'அந்தநிகழ்வு' நடந்தேவிடப்

**வலிமையான உறுதியான கால்கள் அவளை மிக அண்மித்திருந்தன. தம்மை ஆசுவாசப்படுத்திய கால்கள் அவளைச் சுற்றின. எறிந்து விழுத்தப்பட்ட சின்னஞ்சிறு முயற்குஞ்சினை எழுந்தோடிவிடாது பாதுகாக்கின்ற வேட்டை நாய்களின் கால்கள், எகத்தாளம். சுற்றிநின்ற கால்களாலான வளையம் அவள் கழுத்தை இறுக்குவதாய் நெருங்கிக் கொண்டிருந்தது.**



**அந்த மனநோய் மருத்துவமனையில் பொருந்தாத ஒரு காட்சிச் சித்திரமாய் அவள் கிடந்தாள். விட்டேற்றியான பார்வை யாராவது அவளது கட்டிலைக் கடக்கும் போதெல்லாம் தன் மெல்லிய நீண்ட விரல்களால் அச்சத்தோடு முகம் மறைத்துக் கொள்கிறாள். ஒரு முகிலால் மறைக்கப்பட்ட நிலவாய் அவளது முகவிலாசம். மூடிய கண்களுள் மீண்டும் மீண்டும் எழும்பிக் கொடிதாய் வருத்தும் அந்த நினைவு. அது நினைவா? நிஜமில்லையா? கனவா? இல்லை. உண்மைதானோ? சகலதும் மறந்துபோய் விட்டதா என்ன? ஒரே குழப்பம். முகம் மூடுதலும் அழுதலும் தவிர வாழ்க்கையில் வேறெதும் இல்லை. இதைக் கூட அவள் கையாளும் 'தீக்கோழிச் சாகசம்' எனப் பார்க்க வந்தவர்கள் கதைத்தார்கள்தான்.**

போகிறதா? இனி அவளது வாழ்வை இரக்கம் நிறைந்த பரிதாபத்தினுள் அல்லது இரக்கமற்ற கேலியினுள் சமூகம் வீசி எறிந்துவிடப் போகிறதா? வியர்வையில் உடல் முழுதும் நனைந்திருப்பதாய்ப் பட்டது.

கடைசித் தருணங்கள். சிறுசிறு சத்தங்கள் காய்ந்த இலைகளின் மீது யாரோ மிதிப்பதாய்ச் சரசரப்பொலி.

'வந்தே விட்டார்களோ....'

இதயத்துடிப்பு மிகவேகமானதாய்த் தோன்றிற்று. 'ஐயோ' என்று பெருங்குரலெடுத்து அழவேண்டுமான மனத்துடிப்பு. பெண்ணெனப் பிறந்தது பற்றிய கவலை அவளைக் 'கப்பென' அப்பிற்று.

ஆனாலும் அவள் 'பெரிய' பெண்ணானதைப் பற்றி எவ்வளவு சந்தோஷத்தை விசிற முடிந்தது? அப்போதெல்லாம் பாட்டி கண்ணூறு நாவூறு கழித்துத் திருஷ்டி சுற்றி 'அறையில்' அமர்த்தியதில் இருந்து ஒரே கொண்டாட்டந் தானே. சின்னஞ் சிறுசுகளின் கும்மாளங்களில் வீடு இரண்டுபட்டது. இவளதே வயதுடைய பக்கத்துவீட்டுப் பையன் 'முட்டாள்தனம்' மிக்க 'அதே' சிறு பையனாய் இருக்க இவள் மட்டும் 'பெரிய மனுஷித்தனமாய்' பட்டுப் புடவையில் அமர்ந்திருந்தது எவ்வளவு பெரிய சந்தோஷமாயிருந்தது.

"போடி! தலையில...களிமண்...'

இப்படித்தான் வாய்த்தர்க்க... முடிவுகளில் அவன் 'சொல்' விசிறுவான்.

'சரிதான் போடா...' நினைப்பாள் சொல்லமாட்டாள்.

'இல்லையே...' தலையைத் தட்டிவிட்டுச் சொல்லுவாள். தன்வார்த்தை 'தைக்காத' தோல்வியில் சலிப்போடு அவன் போனபிறகு 'தலைக்களிமண்' பற்றி நிறையநேரம் யோசிப்பாள்.

'சின்னஞ் சிறிசுகளைக் கலைச்சு விடுங்கோ' சுதா மாமியின் குரலுக்குத் தானாகவே விலகிஓடிய அவனது கேலிகளைக் கூட இவளது 'பெண்மை' தானே தடுத்துநிறுத்திற்று.

"ச்சே... இப்பபோய் இந்த நினைப்பெல்லாம்..." கணப்பொழுதில் சிந்தனை தடம்மாறி அவசரங்காட்டி ஓடிற்று.

'தப்பித்தாக வேண்டும்...வேறெதுவுமே வேண்டாம்...'

அந்தச் சின்னவீட்டின் பக்கப்புறக் கதவு திறந்துகொண்டு ஓடுவது புத்திசாலித்தனமா? சுற்றிலும் குறும் பற்றைகள், தனித்துநிற்கும் பனைமரங்கள். செம்மணியினதே போன்ற ஊமைப் பனைமரங்கள். ஒற்றையடிப் பாதை. மக்கித்தரை பிரதான வீதி சேருவதற்கு அதன் வழியே எத்தனைதரம் கால் பெயர்த்து நடுக்கந் தளர்த்திய கால்களால்

ஓடவேண்டும்? ஆண்கள் வலிமை யானவர்கள். எப்போதும் எதிலும் இறுகிய தசைகளையும் வலிமையான கால்க ளையும் உடைய அவர்கள் பெண் களைக் 'காபந்து' பண்ணும் நோக்கு டனேயே அவ்விதம் படைக்கப் பட்டார்கள். ஆனாலும் அதே 'ஆண்க ளிடம்' தப்பியோட, வேண்டிய நிலை மைகளில் 'அவ்விதம்' ஆண்களை ஸ்திரப் படுத்திய கடவுளை சபிக்கத் தோன்று கிறது.

மெல்லப் பக்கக்கதவு திறந்தாள். சத்தமெழாது ஓடத்தொடங்கினாள். வியர்த் திருந்த உடலைக் காற்று வருடியதில் சிலிர்த்தது. கால்கள் மெழுகுகளால் ஆகியதாயும் மக்கித் தரையே நெருப்பா கவும் ஓட ஓட கால்கள் உருகுவது போலவும் இருந்தது. கால்களைப் பெயர்க்க முடியாதிருந்தது. எனினும் ஓடியே ஆகவேண்டும்.

'தொப்.... தொப்.... தொப்....'

தொண்டைக்குள் ஏதோ ஒரு வகைப் பறவை எழுப்பிய சத்தம் தன்னிச் சையாக எழுந்தது. மூச்சிரைக்க ஓடினாள். நாடித்துடிப்பு நொடிக்குநொடி அதிகரித்துக் கொண்டிருந்தது.

கண்களில் யாராவது ஒரு உதவி தென்படக் கூடாதா? இளஞ்சந்ததிகளின் நகர்வு குறித்த விளைவான 'பாழடைவு' தெளிவாக முகங்காட்டத் தொடங்கிய ஊருக்கு வந்தது தவறு. வந்தே இருப்பினும் துணைக்கு யாருமின்றி சின்ன ஒழுங்கையில் நடக்கத் தொடங் கியது முட்டாள்தனம். இனிப் புரிந் தென்ன? அது ஏன்? தவறுகள் இழைக்கப் பட்ட பிறகுதான் புரிகின்றன?

சற்றுநேரத்தில் திரும்பிப் பார்த்த போது மூச்சு நின்றுவிடத்தக்க அதிர்ச்சியில் உறைந்தாள். குறிப்பிடத்தக்களவு அண் மித்திருந்தார்கள். மூன்றுபேர் முன்பா கவும், இருவர் சற்றே பின்னாலுமாக... ஐந்துபேராக இருக்க வேண்டும்.

'கடவுளே...'

இந்தக் கணத்தில் செத்துவிட்டால் போதும், ஆனால் எப்பிடி? ஆரோக்கியம் மிகுந்த ஒரு இளம்பெண் நினைத்த கணத்தில் விழுந்து இறக்கமுடியுமா? அந்த வசதியையாவது இந்தநாட்டுப் பெண்களுக்கு இறைவன் வழங்கி யிருக்கலாம்.

'இன்னும் ஒரு ஐந்தாறு மீற்றர் ஓடினால் போதும் பிரதானவீதி தொட்டு விட முடியும்.

'இன்னுங் கொஞ்சம்.... கொஞ்சம்... தான்'

மனம் கால்களைக் கெஞ்சிற்று. முடியா திருந்தது. சிறுகல் தடக்கி விழுந்ததில் முழங்கால் தேய்ந்து.... ரத்தம். திரும்பி எழும்பி ஓட முடியுமா? எப்படி?

'அம்...மா....'

வலிமையான உறுதியான கால்கள் அவளை மிக அண்மித்திருந்தன. தம்மை ஆசுவாசப்படுத்திய கால்கள் அவளைச் சுற்றின. எறிந்து விழுத்தப் பட்ட சின்னஞ்சிறு முயற்குஞ்சினை எழுந்தோடிவிடாது பாதுகாக்கின்ற வேட்டை நாய்களின் கால்கள், எகத்தாளம். சுற்றிநின்ற கால்களாலான வளையம் அவள் கழுத்தை இறுக்குவதாய் நெருங்கிக் கொண்டிருந்தது.

❖❖❖

"அம்...மா..."

அவளுக்கு மிஞ்சிப் போனால் பதினேழு வயதுதான் இருக்கும். அழகான மிகஆழமான சோகத்தில் புதைந்த முகம். துருதுருப்பற்ற மிரட்சி நிறைந்த கண்கள். வேதனையில் அழுத்திச் சிவத்த ரோஸாநிற உதடுகள். அந்த மனநோய் மருத்துவமனையில் பொருந்தாத ஒரு காட்சிச் சித்திரமாய் அவள் கிடந்தாள். விட்டேற்றியான பார்வை யாராவது அவளது கட்டிலைக் கடக்கும் போதெல்லாம் தன் மெல்லிய நீண்ட விரல்களால் அச்சத்தோடு முகம்

மறைத்துக் கொள்கிறாள். ஒரு முகிலால் மறைக்கப்பட்ட நிலவாய் அவளது முகவிலாசம். மூடிய கண்களுள் மீண்டும் மீண்டும் எழும்பிக் கொடிதாய் வருத்தும் அந்த நினைவு. அது நினைவா? நிஜ மில்லையா? கனவா? இல்லை உண்மை தானோ? சகலதும் மறந்துபோய் விட்டதா என்ன? ஒரே குழப்பம். முகம் மூடுதலும் அழுதலும் தவிர வாழ்க்கையில் வேறெதும் இல்லை. இதைக் கூட அவள் கையாளும் "தீக்கோழிச் சாகசம்" எனப் பார்க்க வந்தவர்கள் கதைத்தார்கள்தான்.

தலையை மண்ணுள் புதைத்துக் கொண்டு உலகம் இருண்டதாய் உணர்கிற தீக்கோழிபோல இவள் முகத்தை விரல்களால் மூடி அவமானத் திலிருந்து தப்ப விழைவதாய் ஊர் பேசிக் கொள்வது புரிகிறது. திருந்த முடியவில்லை. அழமட்டுந்தான் முடிகிறது.

"நெருங்கின சொந்தத்துக்குள்ளை யாரோ 'பிரச்சினைப்பட்டுத்' தற்கொலை பண்ணிச் செத்ததாம். அதிலை இருந்து…"

"அதிலை இருந்து என்னவாம்?"

"அந்தண்டு இரவு ஏதோ கனவுகண்டு பயந்து எழும்பி அழுததாம் பிறகு இப்பிடித்தான்…"

"அப்பிடித்தானே தாய்தகப்பன் சொல்லுங்கள்…"

"அப்ப 'ஏதாவது' நடந்தும் இருக்கும் எண்டு சொல்லுறியளோ…?"

"நடந்தும் இருக்கும்…சின்னப் பெட்டை… பாவம்…. இனியென்ன சீவியம்…?"

ஊர் விமர்சனங்கள் துளைத்துவிடச் சிரமமான 'மனநிலைப் பிறழ்வு'. சரியாகச் சரியாக வேதனைதான். யாரோ அவளருகில் வருவதை உணர்ந்தாற் போல சடுதியாய் முகம் மூடிக் கொள்கிறாள் அவள். மென்மையாய் மிகுந்த தண்மையான கரங்களால் இவளது முகம் மூடிய கரங்கள் விலக்கப் படுகின்றன. இந்த அன்பு நிறைந்த 'தொடுகையை' அவளுக்குப் புரிந்து கொள்ளவும் நேசிக்கவும் முடியும். மெல்லக் கண்களைத் திறக்கிறாள். முன்னே மாறாத மென்னகையோடு கருணை பொங்கும் விழிகளோடு 'டொக்ரர்'.

அவள் விழிகள் அமைதியாய்க் கேட்கின்றன.

'டொக்ரர்…நான் சரியாயிடுவேனா?...'

அவரது மென்னகையின் ஆமோ திப்பை உணர்ந்தபடியே அவள் எழும்ப முயற்சிக்கிறாள். எழும்புந் தருண மெல்லாம் அவளைத் தள்ளிவிடத் தயாரான வார்த்தைகளோடு ஊர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவள் ஒரு பெண்ணா னதால்.


❍

2



இச்சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியை தாட்சாயணி ஈழத்தின் இன்றைய தலைமுறைப் பெண் படைப்பாளிகளில் முன்னணி வகிப்பவர்களில் ஒருவர். பிரேமினி சபாரத்தினம் என்கிற இயற்பெயர் கொண்ட இவர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி.

சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டு எழுதிவரும் தாட்சாயணி பல சிறுகதை, கவிதைப் போட்டிகளில் முதற்பரிசினைப் பெற்றதோடு தரமான பல படைப்புகளைத்தந்து ஈழத்து எழுத்துலகில் தனது பெயரை ஆழமாகப் பதித்துக் கொண்டவர். இவர் ஈழத்தின் போர்க்காலச் சூழ்நிலையில் முகிழ்ந்த எழுத்தாளர். யுத்தச் சூழ்நிலையில் வாழ்ந்து அதன் வாழ்வியல் நெருக்கடிகளை இலக்கியமாக்கித் தருபவர். அதனால் இத் தொகுப்பிலுள்ள பெரும்பாலான கதைகள் போர்க்காலக் கதைகளாகவே இருக்கின்றன. போர்க்கால அவலங்களை ஒரு பெண்ணிலை நின்று அவற்றை இலக்கியமாக்கித் தரும்போது தாட்சாயணியின் கதைகள் அற்புதமான கலை வடிவங்களாகின்றன. ஒரு பெண் எழுத்தாளராலேயே இத்தகைய கதைகளை எழுத முடியும் என்று கூறக்கூடிய அளவுக்கு இத் தொகுதியிலுள்ள பல கதைகள் தனித்துவமுடையவையாக விளங்குகின்றன. கதாபாத்திரங்களின் இயல்புகளையும் உணர்வுகளையும் சித்தரிப்பதில் தாட்சாயணியின் திறன் ஆங்காங்கே பளிச்சிடுகிறது. தெளிந்த நீரோட்டம் போன்ற நடையில் அநாயாசமாகக் கதைகளை நகர்த்திச் செல்லும்விதமும் மொழியினைக் கையாளும் நுட்பமும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன. கதைகளில் அவர் சொல்லவந்த மனோநிலையை வார்த்தைகளால் காட்டாது கதையை வாசிக்கும் வாசகர்களின் மனதில் ஏற்றி விடுவதில் இவர் அபாரத்திறமையுடையவராகக் காணப்படுகிறார்.




இச்சிறுகதைத் தொகுதி மூலம் தாட்சாயணி ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதனை துணிந்து கூறலாம்.

**–தி. ஞானசேகரன்**



# ஒரு மரணமும் சில மனிதர்களும்

## - தாட்சாயணி

**ஞானம் நடத்திய புதிய பரம்பரை எழுத்தாளர்களுக்கான சிறுகதைத் தொகுப்புப் பிரதிப் போட்டியில் அதிசிறந்த படைப்புக்கான ஞானம் விருது (2004) பெற்ற எழுத்தாளர் தாட்சாயணியின் 'ஒரு மரணமும் சில மனிதர்களும்' தொகுப்பின் மகுடக் கதை**

அம்மம்மாவிற்கு நிலை கொள்ளாத மகிழ்ச்சியாக இருந்தது. கண்களூடு கரையப் பார்த்த கண்ணீர் வேறு.

"இந்தாடியம்மா சாப்பிடு... இதெல்லாம் அப்ப கொம்மா தேடித் தேடிக் கொண்டந்து நட்டது தெரியுமே... பார் இப்ப அது காய்க்கிற நேரம் அனுபவிக்கக் கொடுப்பினை இல்லை..."

நன்கு முற்றிப் பருத்திருந்த கொய்யாக் காய்களை நடுங்கும் விரல்களால் நயனியிடம் கொடுத்தபடி அவள் கைகளைத் தடவி அங்கலாய்த் தாள்.

"என்ரை குஞ்சு, எப்பிடி வளந் திட்டாய்....? பாத்து எவ்வளவு காலம்...?"

ராசாத்தி ஆவலோடு அக்காவின் மகளைப் பார்த்தாள். நெடுநாளின் பின் வந்திருந்த பெறாமகளைப் பார்த்த சந்தோசத்தைக் காட்டிலும், அவள் கண்களில் கலக்கம் அதிகம் தெரிந்தது. அக்காவின் குடும்பம் வன்னிக்குப் புறப்பட்டதற்கான காரணம் அவளுக்குத் தெரியும். அதற்குப் பிறகும் மகிழ்வ தெப்படி...?

குமரனும், வேலனும் தன் ஒன்றுவிட்ட அக்காவைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் துள்ளிக்குதிக்க, ராசாத்தி 'உஸ்' என்று வாயில் விரல் வைத்து அவர்களை அடக்கினாள்.

நயனிக்கு ஏற்கனவே அம்மம்மாவில் பாசம்வேறு. அம்மம்மா, அம்மம்மா என்று பின்னாலேயே திரிந்தாள்.

"இதென்ன அம்மம்மா காலெல்லாம் நிகம் பெரிசா வளந்திட்டுது. இருங்கோ, நான் வெட்டி விடுறன்..." என்று சொல்லி கச்சிதமாய் நகங்களை வெட்டி விட்டாள்.

அம்மம்மா மனங்குளிர்ந்துபோய் பேத்தியைப் பார்த்தா.

"இனி இந்த நிமிசமெண்டாலும் சாகலாம்..."

"இதென்ன கதை அம்மம்மா...." அவள் சிணுங்கியபடி முகம் சுழித்தாள்.

"சித்தப்பா எங்கை சித்தி...?"

ஞாயிற்றுக்கிழமையின் நினைவை மனதில் உள்வாங்கியபடி நயனி கேட்டாள்.

"ரவுணுக்குத்தான் போட்டார். இனி வந்திடுவார்..." என்றபடியே ராசாத்தி குமரனைக் கூப்பிட்டாள்.

"டேய், தம்பி, ஒருக்கா அந்தச் சந்திக் கடைக்குப் போட்டு வா அப்பு...."

"எனக்கப்பிடியொண்டும் விசேசமாக வேண்டாம். நீங்கள் சாப்பிட்டுக் குடிக் கிறதே எனக்கும் காணும்..."

குமரனை அனுப்பிய சித்தியின் மனவோட்டத்தை உணர்ந்து நயனி சொன்னாள்.

"சும்மா இரு நயனி, வராதனி வந்திருக்கிறாய். ஒழுங்காச் சாப்பிட்டுக் குடிச்சிருப்பியோ..?"

அம்மம்மாவின் கைப்பிடிக்குள் அடங்கியபடி கதைத்துக் கொண்டிருந்த நயனி அம்மம்மாவின் கைகளை விலக்கிவிட்டு மெல்ல எழும்பி வந்தாள்.

"சித்தி...."

ராசாத்தி என்ன என்பதுபோல் ஏறிட்டாள்.

நயனி ஒன்றும் சொல்லாமலே சித்தியின் கண்களைப் பார்த்தபடி நின்றாள்.

**"இது நான் பிறந்து வளந்த மண். உன்ரை தாத்தாவோடை சேர்ந்து வாழ்ந்த இந்த மண்ணை விட்டு நான் போகன். போறதெண்டாலும் என்ரை சாவுக்குப் பிறகுதான்.."**

**"அது மாதிரித்தான் அம்மம்மா எனக்கும்– நான் பிறந்த இந்த மண்ணை அவலத்திலை விட்டிட்டு நான் மட்டும் தப்பிப் போக எனக்குப் பிடிக்கேல்லை."**

"என்ன நயனி, என்ன கஷ்டம் உனக்கு…?"

"ஒண்டுமில்லைச் சித்தி… நான் இஞ்சை வந்து நிக்கிறதாலை உங்களுக்குக் கரைச்சல் ஒண்டும்…" அவள் முடிக்கும் முன் சட்டென்று வாயை மூடினாள் ராசாத்தி.

"நீ எங்கட குடும்பத்துப்பிள்ளை, இதுவே குமரனோ, வேலனோவாய் இருந்திருந்தால் எங்களாலை மறுக்க ஏலுமே. ஆனா, நீ கவனம் நயனி. இந்த நேரம் உன்னைப் பத்திரமா வைச்சிருந்து, உன்ரை அப்பா, அம்மாட்டைத் திருப்பி அனுப்புவமோ எண்ட கவலைதான் நயனி…"

"நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப் படாதைங்கோ சித்தி. ஆனா, நான் உங்களுக்கும் கரைச்சல் தரமாட்டன். ரெண்டு, மூண்டு நாளிலை நான் போடுவன் சித்தி…"

"இப்ப வேறை கதைகள் வேண்டாம். அவள் ஆறுதலாகக் கொஞ்சம் இருக்கட்டும்…"



அம்மம்மா அடுப்படிக்குள் போய் எலுமிச்சம்பழம் கரைத்து வந்து அவளுக்கு ஊட்டி விட்டா.

"எனக்கு எங்கடை வீட்டுக் கிணத்தடிலை ஆசை தீர முழுகோணும் போலை கிடக்கு…"

நயனி ஆசையோடு பழைய சனிக்கிழமை முழுக்குகளை மனதில் அசை போட்டாள்.

சின்ன வயதில் இந்த அம்மம்மா சனிக்கிழமை தோறும் தலை நிறைய எண்ணெய் அப்பி, ஊறவிட்டு அரைத்து வைத்த சீயக்காயும், வெந்தயமும் தேய்த்துக் கதறக் கதற முழுக வார்ப்பது ஞாபகம் வந்தது.

சித்தி சீயக்காய் அவிப்பதற்காக உள்ளே போக, நயனி அம்மம்மாவின் மடியில் தலை சாய்த்தாள்.

"அம்மம்மா…."

"என்ன பிள்ளை…."

"எனக்கு முந்தி நீங்கள் சீயக்காய் தேய்க்கிற மாதிரி இனி எப்ப தேய்ப்பீங்களோ…?"

அம்மம்மா நடுங்கும் விரல்களால் அவளது தலைமயிரைக் கோதிவிட்டா.

"ஏன், எனக்கென்ன, நானே இண்டைக்கும் தேய்க்கிறன்…"

"வேண்டாம், அம்மம்மா, உங்களாலை ஏலா…."

கொஞ்ச நேரம் பேத்தியின் முகத்தைப் பார்த்துத் தடவிய படியிருந்த அம்மம்மா சிறிது நேரத்தின்பின் மெல்லக் கேட்டா, "நீ…. ஏன் பிள்ளை என்னை விட்டிட்டுப் போனனி…?"

நயனி தொண்டைக்குள் வலித்த வலியை, கஷ்டப்பட்டு விழுங்கியவாறே கண்களை மெதுவாக மூடிக் கொண்டாள்.

"ஏனடி, இப்பிடிச் செய்தனி, இனியாவது விட்டிட்டுப் போகாதை என்ரை செல்லம்..."

அவள் ஒன்றும் பேசாதிருந்தாள்.

“அம்மாவைப் போய் பாத்தியே அங்கை…”

“ம்…”

“என்ன மாதிரியங்கை…”

“சரியான கஷ்டம்தான்…”

“கொண்ணன் அங்காலை வெளியிலை போறதுக்கு போனவனெல்லே … போய்ச் சேந்திட்டானே…”

“இல்லை இன்னும் கொழும்பிலை தான் நிக்கிறார்…”

“நீயும் ஓமெண்டிருந்தா அவன் தீபன், கவிசுக்கு உன்னை எடுப்பிச்சிருப்பான். நீதான் அதுக்கிடையிலை..”

“அம்மம்மா…”

“என்ன செல்லம்…”

“நீங்கள் ஏன் அம்மம்மா, சனமெல்லாம் இடம்பெயர்ந்து சாவச்சேரிக்குப் போகேக்கை போகேல்லை…”

“இது நான் பிறந்து வளந்த மண். உன்ரை தாத்தாவோடை சேர்ந்து வாழ்ந்த இந்த மண்ணை விட்டு நான் போகன். போறதெண்டாலும் என்ரை சாவுக்குப் பிறகுதான்..”

“அது மாதிரித்தான் அம்மம்மா எனக்கும்... நான் பிறந்த இந்த மண்ணை அவலத்திலை விட்டிட்டு நான் மட்டும் தப்பிப்போக எனக்குப் பிடிக்கேல்லை.”

அம்மம்மா விக்கித்துப் போய் நின்றாள்.

இவளோடு வாய் கொடுக்க முடியாது. சரியான வாயாடி. முன்பெல்லாம் உரத்த குரலில் நியாயத்துக்கு வாதாடுவாள் அவள். இப்போது…. அவள் குரல் அடங்கி விட்டிருந்தது. ஆனாலும் உறுதி இருந்தது. அவள் மனதிற்குள் ஓடிய தீவிரம் என்னவென்பதை எளிதில் புரிய முடியாதிருந்தது.

சித்தி அடுக்களை வாயிலிலிருந்து எட்டிப் பார்த்தாள். அவள் பார்வையில் தவிப்புக் கலந்திருந்தது. அடிக்கடி நடத்தப்படுகின்ற சுற்றிவளைப்புகள் குறித்து அவள் அஞ்சவேண்டியிருந்தது.

“நயனிக்கா…” என்று குதித்தபடி வந்த குமரனை சித்தி பெரும்பாடுபட்டு அடக்க வேண்டியிருந்தது.

“உடுப்பை மாத்து நயனி, நான் சீயக்காய் அரைச்சு வாறன்…” என்றபடியே சீயக்காய் அரைத்த சித்தி கிணற்றடியில் நயனிக்குச் சீயக்காய் தேய்த்தும் விட்டாள். அந்த வேளையில் கிணற்றடியைச் சுற்றியிருந்த வேலிகள் இன்னும் சற்று உயரமாய் இருந்திருக்கக் கூடாதோவென்று மனதினுள் ஏங்கினாள்.

வேலிக்கதிகாலாயிருந்த பூவரசு பூக்களை வஞ்சகமில்லாமல் பூத்திருந்தது. அந்தப் பூவரசம் பூவொன்றில் நீல நிற வண்ணத்துப்பூச்சி செட்டை அடித்துப் படபடத்துக் கொண்டிருந்தது.

“நல்ல வடிவான வண்ணத் துப்பூச்சி…” மனத்துக்குள் ரசித்தபடியே சுடுநீரும், சீயக்காயும் கலந்து, சித்தி தேய்த்து விட்ட இதத்தில் கண்களை இறுக மூடிக் கொண்டாள் நயனி. கண்களுக்குள் காட்சிகள் விரிந்தன.

குமரன், வேலன், வதனி, உதயா, திவாகர் என்று எல்லாரும் அந்த வீட்டில் சொந்தங்களோடு வசித்திருந்தபோது எவ்வளவு குதூகலமாய் இருந்தது…?

சந்தோஷமாய் சின்னஞ்சிறிசுகளாய் ஆர்ப்பரித்து விளையாடி….

இந்தக்கூடு குலைந்தது எப்படி...?

இந்த அம்மம்மாவோடு சித்தி குடும்பம் மட்டும்தானே இருக்கிறது இப்போது. இங்கே இவர்கள்…. அங்கே அம்மா, அப்பா, அத்தை, மாமா… என்று எல்லோரும் பிரிந்திருக்க …. இன்னும் என்னென்ன கஷ்டம் வருமோ…?

அங்கேகூட கடைசியாய்ப் போனபோது அம்மம்மாவைப் பார்க்கச் சொல்லி அம்மா சொன்னது ஞாபகம்…. இந்த அம்மம்மாவும், தாத்தாவும், சின்னனில் எவ்வளவு கதை சொன்னார்கள்.

இந்த உறவுகளையெல்லாம் பிரிவதென்றால்....

இமைகளை ஒரு நீர்த்திரை உடைத்துக் கொண்டு கொப்புளிக்க, நெற்றியில் அணையாக ஒரு கரத்தைச் சித்தி பிடித்துக் கொண்டிருந்தபோதிலும், கன்னக்கரையோரம் வழிந்த சில சீயக்காய்த் துளிகள் திறந்த இமைகளுக்கிடையில் சிக்கிக்கொள்ள, அவளது கட்டுப்பாட்டையும் மீறித் தலை இருபுறமும் சிலிர்த்தது.

"என்ன நயனி, கண்ணிலை பட்டிட்டுதோ...?" சித்தி கவனமாய்ப் பக்கத்தில் வைத்திருந்த தண்ணீரைக் கிண்ணத்தில் மொண்டு கொடுக்க, கண்களில் அடித்துக் கண்ணீரைக் கழுவினாள் நயனி.

கண்ணீர்.... எவ்வளவு காலமாய்க் கட்டுப்படுத்தி வைத்திருந்த கண்ணீர்.... ஒரு நிமிடப் பொழுதுள் கட்டுப்பாடிழந்து கொட்டுவதென்றால்... சித்திக்குத் தெரியாமல் முகத்தைக் கழுவுவது சுலபமாயிருந்தது.

நல்லவேளை, கண்ணீருக்கும், தண்ணீருக்கும், சுவையைத் தவிர வேறெவற்றிலும் பேதம் காண முடியாதது அவளுக்குத் திருப்தியாயிருந்தது.

தண்ணீர் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்து மென்பது எவ்வளவு உண்மை. இரண்டு வாளி தண்ணீரைத் தலைக்கு ஊற்றிக் கொண்ட பிறகு மனதை இறுக்கிய உணர்ச்சிகள் இளகித் தளர்ந்து விட ஒரு புத்துணர்ச்சி உடலெங்கும் பரவிட, முந்தைய காலங்களைப் போலவே, அந்த முழுக்கையும், ஒரு ரசனைத் தனத்தோடு, நீண்ட நேரம் செலவிட்டு முடித்து விட்டு வந்தபோது, சித்தி தலை துவட்டுவதற்குத் தயாராக உலர்த்தியதுவாயோடு காத்திருந்தாள். சித்திக்கு வாகாகத் தலையைக் கொடுக்கையில் அந்தப் பரிவுக்கு

**சித்தப்பா தொண்டைக்குள் விழுந்து**
**முடிச்சை இறுக விழுங்கிக் கொண்டு,**
**மனதுக்குள் ஓலமிட்டார்.**
**"ஐயோ, என்ரை மகளே.**
**உனக்காக வெளிப்படையா,**
**அழக்கூட ஏலாமல்.**
**இதென்ன கொடுமை "**
**படலையடியில் பறை**
**பலமாய் முழுங்கத் தொடங்கிற்று.**
**அம்மம்மாவுடையதும்,**
**ராசாத்தியுடையதும் குரல்கள்**
**உச்சமாய் ஓங்கித் தளும்பின.**

இதமாக, மீண்டும் மனம் கனக்கத் துவங்கிற்று. அம்மம்மா அடுப்புத் தணலை சாம்பிராணித் தட்டில் வாரிக் கொட்டிக் கொண்டு வர, பக்கத்திலேயே சாம்பிராணித் தூள் பையோடு, வேலனும் அவளைச் சூழ்ந்தார்கள்.

இறுகத் தட்டி, ஈரத்தைப் போக்கிவிட்டு சித்தி நகர, சாம்பிராணித் தூளைத் தணலில் போட்டு, பேத்தியின் கூந்தலுக்கருகே புகையை ஊடுருவ விட்டா அம்மம்மா.

"நல்லவேளை, இந்த அருமந்த தலைமயிரை நீ வெட்டேல்லை..." அம்மம்மாவின் வாய் மெல்ல முணுமுணுத்தது.

நயனி ஒன்றும் சொல்லாமலே கூந்தலை சீவிக் கொண்டிருந்தாள். வெட்டியிருக்கலாமோ..? வெட்டியிருந்தால் இந்தச் சாம்பிராணிப் புகை போட்டிருக்க முடியாது. இப்படிப் பாசத்தைப் பொழிகின்றார்களே என்று உள்ளுக்குள் உருகி வழியவும் தேவையில்லை.

"என்னடா குமரா..." ஒன்றுமே பேசாமல் தன் மெலிந்து உயர்ந்த தோற்றத்

தையும், தலைமயிரையும் பார்த்துக் கொண்டிருந்த தம்பியைப் பார்த்துக் கேட்டாள்.

“நீங்கள், நல்ல வடிவு நயனியக்கா, பேசாமல் சுவிசுக்குப் போயிருக்கலாம்…”

சட்டென அவளிடத்தில் குறும்பு எட்டிப் பார்த்தது.

“அப்பிடியோ? என்ரை வடிவு இஞ்சை எடுபடாமத்தான் சுவிக்குத் தள்ளப் பாக்கிறியோ..?”

“ஐய்யய்யோ? அப்பிடி இல்லை யக்கா. சிம்ரன் மாதிரியக்கா, நீங்கள்…”

“சிம்ரன் மாதிரியோ…? எதிலோ தோற்றுவிட்டது மாதிரி அவளுக்கு ஓர் உணர்ச்சி தோன்றிற்று.

இந்தச் சின்னவன் முந்திய எல்லா வற்றையும் மறந்து சிம்ரனை அடையாளம் காண்கிற அளவுக்கு, அவனை சினிமா வியாபித்திருக்கிறதா..?

அப்படியென்றால் இந்த மண்ணிலிருப் பவர்களுக்கு ஒரு மயக்கத்தைக் காட்டி விட்டால் போதுமா? மதுவுண்ட மந்திகளாய் கிறங்கிக் கிடப்பவர்களா அவர்கள்? இதிலே பிரிந்துபோன பழைய உறவுகளை நினைப்பது எங்ஙனம்…?

“படம் பாப்பியாடா…?”

“ம்… ஆனா அப்பா நெடுகப் பாக்க விடுறதில்லை…”

கொஞ்சம் பரவாயில்லைப் போலி ருந்தது. ஆனாலும் நெஞ்சு வலித்தது. ஒருகாலம் இருந்தது. இங்கு ஒரு தமிழ்க் கலாச்சாரம், மணக்க… மணக்க, அவள் யாழ்ப்பாணம் வருகிறபோது எவ்வளவு ஆவலோடு சொந்த மண் என்கிற பிடிப்போடு வந்தாள். எல்லாம் பற்றற்றுக் கழன்ற மாதிரி.

சித்தப்பா வந்து விட்டார். நெற்றி நிறைய திருநீறை அம்மம்மா பூசிவிட்டுக் கும்பிடு பிள்ளை என்றபோதும் அவளுக்கு சித்தப்பாவோடு கதைக்கவேண்டும் என்ற அவசரத்தில் இறை நினைப்பில் மனம் ஒன்றவில்லை. என்றாலும் சோலையடி முருகன் கண்ணுக்குள் நின்றான்

“இஞ்சை வந்திட்டும் முருகனைக் காணாமல் போறதெண்டால் அது ஏலாது. ஒருக்கா சோலையடிக்குப் போகோணும்.”

அவள் அம்மம்மாவுக்குக் கேட்க முணுமுணுத்தாள்.

“சோலையடிக்கோ.. நீயோ? தயவு செய்து வீட்டாலை வெளிக்கிடா தையம்மா… முருகனுக்குத் தெரியும் உன்னைப் பற்றி. நீ வரேல்லையெண்டு கோவிக்கமாட்டான் முருகன், வீட்டி லையே இருந்து கும்பிடு…”

அம்மம்மாவுக்கு அந்த ஊரைப் பற்றித் தெரியும். ஊருக்குள் அரசல் புரசலாய்க் கதை பரவினாலும், தன் பேத்தியைச் சூழவுள்ள அபாயத்திலிருந்து அவளைக் காப்பாற்றியாக வேண்டுமென்ற வேகத்தில் பேசினா.

“சரி அம்மம்மா, நான் போகேல்லை….” என்று மனமில்லாமலே உரைத்துவிட்டு சித்தப்பாவை நாடிப் போனாள் நயனி.

ஈரங்காயாமல் விரித்த கூந்தலோடு தன்னை நோக்கி வந்த மகளைப் பார்த்ததும் பத்திரிகையைக் கீழே போட்டு விட்டு, கண்ணாடியை ஒருமுறை கண்களுக்கு மேலால் உயர்த்திப் பார்த்தபடி “வா நயனி, எப்ப வந்தனி…” என வரவேற்றார் சித்தப்பா.

“என்ன சித்தப்பா, யாழ்ப்பாணம் இப்பிடி மாறிப் போச்சு….”

சித்தப்பா ஒரு வேதனைச் சிரிப்பை உதிர்த்தார்.

தமிழாசிரியரான சித்தப்பாவின் தர்க்கரீதியான கதைகள் அவளுக்கு மிகவும் பிடிக்கும். அதனால் சித்தப்பா வோடு பேசிக் கொண்டேயிருக்கலாம் போல் தோன்றுவதுமுண்டு.

“ஒவ்வொரு நாடும், நகரமும்கூட சிலசில குறிப்பிட்ட காலங்களைக் கடந்து தான் நயனி செல்ல வேண்டியிருக்கு.

அதிலை யாழ்ப்பாணத்துக்கு இது நல்ல காலமோ? கெட்ட காலமோ? எல்லாம் அவரவர் மனதைப் பொறுத்தது நயனி…"

இப்படிச் சொன்னவர் அவளது மனதைத் துருவ முயலவில்லை. அவருக்கு விளங்கும். இளம் உள்ளங்களைப் புரிகிற சக்தி அவருக்குக் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கிறது. அதனால்தானோ அவரால் பிள்ளைகளுக்கு அதிகம் செல்லம் கொடுக்காமலும், அதிகம் கண்டிப்புக் காட்டாமலும் வளர்க்க முடிகிறது?

"முந்தி இருந்ததைக் காட்டிலும் மெலிஞ்சு போனாயம்மா…"

"நானோ…" அவள் லேசாய் சிரித்தாள்.

அப்படியே சித்தப்பா மேலும் பேசிக்கொண்டு போனார். அவளுக்கு மனதிலிருக்கிற எல்லாவற்றையுமே கொட்டிவிட வேண்டும் போலிருந்தது. ஆனால், அவள் தன் மனத்திற்கும் கொஞ்சம் அணை போட வேண்டியிருந்தது.

அன்று சித்தியின் சாப்பாடு அவளுக்கு மிகவும் சுவையாயிருந்தது. அம்மம்மாதான் சோறு குழைத்துப் புகட்டி விட்டா.

ஆற அமர்ந்து வீட்டுச் சுகத்தைச் சந்தோஷமாய் அனுபவித்துச் சிரித்தாள் அவள். தம்பிகளோடு வாயடித்தாள். இனிப்பு செய்யப் போவதாய் சொல்லி கொஞ்ச நேரம் அடுப்போடு மாரடித்து தேங்காய்ப்பூ இனிப்புச் செய்து வந்து எல்லோருக்கும் கொடுத்தாள். தானும் எச்சில் ஊறச் சாப்பிட்டாள். இடையிடையே தீவிரமாய் ஒரு யோசனை. மறுபடி கலகலப்பாகி விட்டாள்.

இரண்டு நாள்வரை இனிமையாகவே சென்றது. அப்படியும் எல்லோரிடமும் ஒரு கலக்கம்.

அடுத்தநாள் எல்லோரும் நிற்கின்ற சமயத்தில் புறப்படுவதற்கான ஆயத்தங் களுடன் அவள் வெளியே வந்தாள்

"நான் போகப் போறன்…"

பொதுவாய்ச் சொன்னாள்.

எல்லோர் முகத்திலும் அதிர்ச்சி. அந்தக் கலக்கம் விலகியிருந்தாலும் ஒரு கவலை முகத்தில் படர்ந்தது.

"எங்கை போவாய்…"

"போக வேண்டிய இடத்துக்கு…"

"போகப் போறியோ…" அம்மம்மாவின் குரல் வாய்க்குள்ளேயே எழுந்து அடங்கியது.

"சித்தி, நான் போறன்…"

"போறன், எண்டு சொல்லாதை, போட்டு வாறன் எண்டு சொல்லு…"

சித்தியின் குரலை மீறி அவளிடம் ஒரு வறண்ட சிரிப்பு.

"கவனமாப் படியுங்கோ, படம் பாக்காமல்…"

அக்காவின் வார்த்தைக்குப் பதில் சொல்லமாட்டாமல் அவர்கள் நின்றிருக்க…

"போட்டு வாம்மா கவனமா…" சித்தப்பாவின் மென்மையான குரல் அவளை வழியனுப்பியது.

அவள் போய்விட்டாள்.

அம்மம்மா வாசல் படியோடு அப்படியே சாய்ந்து விட்டா.

❖❖❖

"நான் நம்பன்…" அம்மம்மாதான் கிறீச்சிட்ட குரலில் முதலில் கத்தினா.

"அம்மா கொஞ்சம் மெல்லமா… எங்களுக்கும் ரெண்டு இளம்பொடியள் இருக்கிறாங்கள்.."

ராசாத்தி வாய்க்குள் விக்கியபடி மெல்லிய குரலில் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் விழுங்கினாள்.

சித்தப்பா தான் 'உதயனி'ல் படித்ததை விவரமாய்ச் சொன்னார்.

குமரன், பத்திரிகையை மௌனமாக வாசித்துவிட்டு, வேலனிடம் கொடுத்தான்.

"அப்பா அது எங்கட நயனிக்காதான்.." வேலன் முணுமுணுத்தான்.

"இப்ப போசமலிருக்கிறதுதான் நல்லம். அக்கம்பக்கம் கூட அவள் இஞ்ச வந்து நிண்டது தெரிய வேண்டாம்.."

எவ்வளவோ இயல்பாகச் சொல்ல முனைந்தும் சித்தப்பாவின் உதடுகளில் ஓர் இறுக்கம் விரவிப் பாய்ந்தது.

"இஞ்சை இவ்வளவு பேர் சொந்த மெண்டு இருக்க அவள் ஆஸ்பத்திரிலை அநாதைப்பிணமா...." அம்மம்மா முகம் கோணியபடி மூலைக்குள் உட்கார்ந்து விட்டாள்.

குமரனும் வேலனும் முகத்தைத் தொங்கப் போட்டபடி வெளிக்கிடாமல் இருந்தார்கள். ராசாத்தி அடுக்களைக்குள் அடிக்கடி யோசித்தபடியிருந்தாள். நாலு நாளாய் இறுக்கம் தளரவில்லை.

ஐந்தாவது நாள் விடிந்தபோது, பக்கத்து வீட்டில் ஒப்பாரிச் சத்தங்களோடு விடிந்தது. கிணற்றடியில் தண்ணி அள்ளப் போன புவனம் கிறுதி சுற்றி கிணற்றில் விழுந்து இறந்து விட்டாளாம்.

வேலன் போய்விட்டு வந்து சேதி சொன்னான்.

அம்மம்மா விறுவிறென்று எழும்பி பக்கத்து வீட்டுக்குப் போனா. முற்றத்தில் குழுமியிருந்த பெண்களை விலக்கிக் கொண்டு உள்ளே போனாள்.

"ஐயோ என்ரை செல்லம் விட்டிட்டுப் போட்டியோ.... கூடிக்கூடிக் குலவினதெல்லாம் விட்டிட்டுப் போகத் தானே.... என்ன பாவம் செய்தமெண்டு இப்பிடித் தவிக்க விட்டிட்டுப் போனனி..."

அம்மம்மாவின் கேவிக் கொண்டிருந்தா.

பக்கத்தில் ராசாத்தி, "உன்ரை தாய் தேப்பனுக்கு நாங்கள் என்ன பதில் சொல்ல.... இப்பிடி விட்டிட்டுப் போட்டியே.."

தூரத்தில் விக்கியழும் சத்தம். இரண்டு பையன்களும் ஓரமாய் நின்று, மெல்ல உதிர்ந்த நீரைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள்.

சித்தப்பா தொண்டைக்குள் விழுந்து முடிச்சை இறுக விழுங்கிக் கொண்டு, மனதுக்குள் ஓலமிட்டார்.

"ஐயோ, என்ரை மகளே... உனக்காக வெளிப்படையா, அழக்கூட ஏலாமல்... இதென்ன கொடுமை"

படலையடியில் பறை பலமாய் முழங்கத் தொடங்கிற்று.

அம்மம்மாவுடையதும், ராசாத்தி யுடையதும் குரல்கள் உச்சமாய் ஓங்கித் தளும்பின.

ஹோவென்ற இரைச்சல், ஆரவாரம் இங்கே...

இவையெல்லாம் இல்லாமல்.... ஆஸ்பத்திரிச் சவச்சாலையின் தனித்த அமைதியான இருளுக்குள்... அவளது உடல்....!

❍



# புலோலியூர் க. சதாசிவம்

புலோலியூர் க. சதாசிவம் அவர்கள் ஞானம் சஞ்சிகையின் துணை ஆசியரியராக 25ஆவது இதழிலிருந்து 52ஆவது இதழ்வரை பணிபுரிந்தவர். 14-09-2004 அன்று அவர் அமரத்துவம் அடையும்வரை ஞானம் சஞ்சிகையின் வளர்ச்சியில் பங்கேற்று உழைத்தவர். அவற்றுள் தலையாயது அவர் ஆரம்பித்து வைத்த புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கான சிறுகதைத் தொகுப்புப் போட்டிகளாகும். அவர் அமரத்துவம் அடைந்த பின்னர், 'புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டிகளை அவரது குடும்பத்தினரின், அனுசர ணையுடன் ஞானம் நடத்திவந்துள்ளது. தொகுப்புப் போட்டிகளில் பரிசுபெற்ற 'ஏன் பெண்ணென்று', 'ஒரு மரணமும் சிலமனிதர்களும்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும் புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டிகளில் பரிசுபெற்ற பரிசுக்கதைகளின் தொகுப்புகளான 'கொக்கிளாய் மாமி', 'சிறைப்பட்டிருத்தல்' ஆகிய தொகுப்புகளும் நூலுருவம் பெற்றுள்ளன.

புலோலியூர் க.சதாசிவம் 20-03-1942இல் புலோலியைச் சேர்ந்த புற்றளையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியைப் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்திலும், பின்னர் புலோலி வேலாயுதம் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பெற்றவர். தனது பட்டப் படிப்புக்கான கல்வியை கொழும்பு மருத்துவக் கல்லூரியில் பெற்றவர்.

1964ஆம் ஆண்டில் மலையகப் பகுதியில் வைத்தியராகக் கடமையேற்ற சதாசிவம் திஸ்பனை, கற்றபூலா, டயறபா ஆகிய பெருந்தோட்டங்களில் நாற்பது ஆண்டுகள் கடமையாற்றிய பின் சேவையிலிருந்து இளைப்பாறினார். அதன் பின்னர் தனியார் மருத்துவமனை ஒன்றை நிறுவி, மலையக மக்களுக்கே சேவையாற்றிக் கொண்டிருந்தார்.

அம்மக்களில் ஒருவனாக வாழ்ந்து, அவர்களது வாழ்க்கையை ஆழமாகவும் நுணுக்கமாகவும் நோக்கி இலக்கியம் படைத்தார்.

1972ஆம் ஆண்டில் நாவலர் சபை நடத்திய சிறுகதைப் போட்டியில் சதாசிவத்தின் 'ஒருநாட் பேர்' என்ற சிறுகதை முதற்பரிசு பெற்றது. இக்கதை மலையக மக்களின் வாழ்வியலைப் பின்னணியாகக் கொண்டது. சதாசிவம் வேறும் பல மலையகக் கதைகளைப் படைத்துள்ளார். அச்சிறுகதைகள் அடங்கிய தொகுதி 1995ஆம் ஆண்டில் 'ஒருநாட் பேர்' என்ற மகுடத்தில் வெளியாகியது. இத்தொகுதி மலையகத்தில் பிறக்காத பிறமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரால் வெளியிடப்பட்ட முதலாவது மலையகச் சிறுகதைத் தொகுதி என்ற பெருமையைப் பெற்றது.

சதாசிவம் எழுதிய முதலாவது நாவல் 'நாணயம்'. 1980இல் வெளிவந்தது. இந்நாவல் வடமராட்சி வாழ்க்கையின் சில அம்சங்களைப் படம்பிடித்துக் காட்டு கின்ற பிரதேசப் பண்பு வாய்ந்த நாவலாகும். இந்த நாவலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

1983இல் 'மூட்டத்தினுள்ளே' என்ற மலையக நாவலை எழுதினார். இந்நாவல் வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் மலையகப் பிராந்தியப் பரிசு நாவலாக வெளிவந்தது. அத்தோடு அவ்வாண்டில் வெளிவந்த சிறந்த நாவலுக்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக் கொண்டது.

'ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது', 'புதியபரிமாணம்', 'அக்கா ஏன் அழுகிறாய்?' (2006) என்பன சதாசிவத்தின் ஏனைய சிறுகதைத் தொகுதிகளாகும்.

அவரது மனைவி இலட்சுமிப்பிள்ளை ஓர் ஆசிரியை. மகன் கலையழகன் ஒரு டாக்டர். மகள் கலைவாணி ஒரு விஞ்ஞானப் பட்டதாரி.

சதாசிவத்தின் இலக்கியப் பணிகளைப் பாராட்டி பல நிறுவனங்கள் அவரைக் கௌரவித்திருக்கின்றன. இந்து சமய தமிழ் அலுவல்கள் அமைச்சு 1991ஆம் ஆண்டில் 'இலக்கிய வித்தகர்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது. ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சு 'இலக்கியச் செம்மல்' என்ற பட்டத்தினை வழங்கியது. 1996இல் மலையக இலக்கியப் பேரவையும், 1999இல் கண்டி மக்கள் இலக்கிய ஒன்றியமும் இவரது நீண்டகால மலையக இலக்கியச் சேவையினைப் பாராட்டிக் கௌரவித்தன. மல்லிகை தனது 1991 நவம்பர் இதழ் அட்டையில் இவரது படத்தைப் பொறித்துக் கௌரவித்தது. ஞானம் சஞ்சிகை அவரது படத்தை 53ஆவது இதழ் அட்டையில் பொறித்து தனது அஞ்சலியைச் செலுத்தி துயர் பகிர்ந்துகொண்டது.

# கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2005 முடிவுகள்



## முதற்பரிசு - ரூபா 5000/-

| | | |
|---|---|---|
| ❍ கொக்கிளாய் மாமி | முல்லைமணி வே. சுப்பிரமணியம் | வவுனியா. |

## இரண்டாம் பரிசு - ரூபா 3000/-


| | | |
|---|---|---|
| ❍ காதலாகி கசிந்து.. | மாதுமை சிவசுப்பிரமணியம் | திருகோணமலை. |

## மூன்றாம் பரிசு - ரூபா 2000/-

| | | |
|---|---|---|
| ❍ ஒரு விடியலை நோக்கி | டாக்டர் ச. முருகானந்தன் | கிளிநொச்சி. |

## ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்

| | | |
|---|---|---|
| ❍ சுரங்களும் சுருதிகளும் | தம்பு சிவா | கொழும்பு 06. |
| ❍ வியூகம் | செல்வி. புனிதகலா | வட்டவளை. |
| ❍ தளிருக்குள் துளிர் | நவஜோதி ஜோகரட்னம் | லண்டன் |
| ❍ தீண்டாத சர்ப்பங்கள் | மு. சந்திரகாந்தா | கொழும்பு-06. |
| ❍ அப்பாவின் துயரங்கள் | த. அஜந்தகுமார் | கரவெட்டி. |
| ❍ திருப்தி | தாட்சாயணி | சாவகச்சேரி. |
| ❍ உசத்தியான புட்டுவம் | டி. ஜனார்த்தனன் | தெகிவளை. |
| ❍ கருமாதி | சிவனு மனோகரன் | ஹட்டன். |
| ❍ அலைகள் தந்த பாடம் | எஸ். உதயச்செல்வன் | நீர்கொழும்பு. |



நடுவர்கள்:

தெளிவத்தை ஜோசப்,

திருமதி பத்மா சோமகாந்தன்,

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

**கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம்**
**ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2005இல்**
**முதற் பரிசு பெற்ற கதை**

# 03

1



# கொக்கிளாய் மாமி

முல்லைமணி
வே. சுப்பிரமணியம்

மாமிக்கு வருத்தம் கடுமை. ஒரு மாதம் ஆசுப்பத்திரியிலை வச்சுப் பாத்தம். வருத்தம் குறைஞ்ச பாடில்லை தமிழ் வைத்தியம் செய்து பாத்தம். சிவசம்புப் பரியாரியார் என்னென்னவோ குளிசையெல்லாம் குடுத்துப் பாத்தார். சுகம் வரயில்லை அவரும் கையை விரிச்சுப் போட்டார். இன்னும் கொஞ்ச நாள்தான் எண்டு சொல்லிப் போட்டார். சொந்தக்காரர் வந்து பாத்திட்டுப் போகினம் சகோதரங்கள் பிள்ளையள் பேரப் பிள்ளையள் சுத்தி நிண்டு கண்ணீர் விடுகினம். மாமிக்கு இடைக்கிடை நினைவு தப்பிப் போகும். நினைவு வந்த போது அவ குஞ்சியரைச் சைகை காட்டிக் கூப்பிட்டா. குஞ்சியர் கிட்டப் போனார் "வயல் எல்லாம் உழுது விதைச்சாச்சா இந்தமுறை



முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளையில் 3.5.1933 இல் பிறந்த முல்லைமணி ஆசிரியராகவும், பாடசாலை அதிபராகவும், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும் முல்லை மாவட்டக் கல்விப் பணிப்பாளராகவும் 36 ஆண்டுகள் பணியாற்றி 2.3.1993 இல் ஓய்வு பெற்றவர். கடந்த ஐம்பது ஆண்டுகளாக எழுத்துத்துறையில் தடம்பதித்து வரும் இவர், இதுவரை 13 நூல்களை வெளியிட்டுள்ளார். கலைக்கழகப்பரிசு, தேசிய சாகித்ய மண்டலப் பரிசு (இரு முறைகள்), வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் இலக்கியப் பரிசு (இரு முறைகள்), துறைநீலாவணை இலக்கியப் பேரவைக் கவிதைப்பரிசு, வீரகேசரி பிராந்திய நாவல் போட்டியில் பரிசு என்பவை இவர் பெற்ற பரிசுகளாகும். இவரது நான்கு நாவல்கள், இரண்டு சிறுகதைத் தொகுதிகள் ஒரு நாடக நூல் (பண்டாரவன்னியன் 4 பதிப்புக்கள்) 3 பக்திப் பாமாலைகள், பாடநூல் ஒன்று, இரண்டு கட்டுரைத் தொகுப்புக்கள் நூலுருவம் பெற்றுள்ளன. கலாபூஷணம், தமிழ்மணி, கலைஞர் திலகம், இலக்கியச் செல்வர், தமிழ் அறிஞர் முதலியன இவர் பெற்ற பட்டங்கள். வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருதினையும் இவர் பெற்றுள்ளார். பல சமயக் கட்டுரைகளையும் இவர் எழுதி வருகின்றார்.

**(ஞானம் 63, ஆகஸ்ட் 2005)**

கச்சான் போடவேணும்" எண்டு சொன்னா குஞ்சியர் தலையாட்டினார் வேறை என்ன செய்யிறது?

மாமிக்கு சாகிற நேரத்திலும் வீடு வாசல் தோட்டம் துரவு வயல் எண்ட நினைப்புத்தான்.

மாமி அப்புவின் கடைசித் தங்கச்சி முள்ளியவளையிலைதான் பிறந்து வளந்தவ. கொக்கிளாய் உடையாரைக் கலியாணம் செய்து புகுந்த ஊரையே சொந்த ஊராக்கிப் போட்டா. மாமிக்கு மூண்டு பெட்டைக் குஞ்சுகள். ஒரேயொரு பெடியன். பெடியன் சங்கக்கடை மனேச்சர் கொஞ்சநாள் கிராமச் சங்க அங்கத்தவராகவும் இருந்தார். உடையாரின் பேரைச் சொல்லித்தான் சனம் அவருக்குத் துண்டு போட்டுதாம்.

சொத்துச் சேர்க்கத் தெரியாத உடையார் மாமா சின்ன வயதிலையே செத்துப் போனார். மாமி கொஞ்சம் தடதடத்துப் போனார். ஒரு விதவைக்குரிய கெட்டித் தனம் மாமிக்கு வந்திட்டுது. எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பிள்ளையளை வளத்து ஆளாக்கிக் கரைசேத்துப் போட்டா. மாமாவின் தாய் வள்ளிநாச்சிக் கிழவி நல்ல உயரமான சிவப்பி. கிழவியின் துணையும் மாமிக்கு இருந்தது. வயதுபோன நேரத்திலும் காட்டிலை கிராஞ்சி வெட்டித் தலையிலை சுமந்து வந்து வேலி அடைச்சுப் போடும்.

மாமிக்கு முப்பது முப்பத்தைஞ்சு வருஷம் கொக்கிளாய் சீவியந்தான். வயல் தோட்டம் துரவு எண்ட மாமாவின் பரம்பரைச் சொத்தைப் பராமரிக்க வேணுமே.

இப்ப எலும்பும் தோலுமாய் கிடக்கும் மாமி முன்பு தளதள எண்டு நல்ல வடிவாய் இருந்தா. ஐம்பத்தைஞ்சு வயசெண்டு சொன்னால் எவரும் நம்ப மாட்டினம். நல்ல துடியாட்டம் எடுத்த கருமத்தை எல்லாம் ஒப்பேத்திப் போடுவா.

கொக்கிளாய் மாமி எண்டுதான் நாங்கள் சொல்லுவம். அப்புவின் தமக்கை பெரிய மாமி வத்தாப்பளையில். அவவை வத்தாப் பளை மாமி எண்டுதான் சொல்லுவம்.

சின்ன வயசிலிருந்தே கொக்கிளாய் மாமியிடந்தான் எங்களுக்குப் பட்சம் அதிகம். மாசம்ஒருக்கா கொக்கிளாயிலிருந்து வருவா. கூப்பன் வண்டிலில்தான் அவவின் பிரயாணம். வேறு வாகனப் போக்குவரத்து இருக்கேல்ல. வண்டில் அம்பிடாட்டால் இருவத்தைஞ்சு மைலையும் நடந்து வந்திடுவா. நடக்கிறதுக்கும் அவ ஒரு சீமாட்டிதான். சங்கக் கடைக்குக் கூப்பன் சாமான் வாங்க முல்லைத்தீவுக்கு வண்டி வரும். இதனைக் கூப்பன் வண்டில் எண்டு தான் சனம் சொல்லும்.

மாமி வந்திட்டால் எங்களுக்கு ஒரே கும்மாளம். தோடம்பழ முட்டாசு, விசுக் கோத்து இல்லாட்டால் புடிப்புட்டு கொண்டு வருவா.

பத்து வயதுச் சிறுவன் நான் மாமியைச் சுத்திச் சுத்தி வருவன். அவ தாற இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடுவன். அண்ணன்மார் தூர நிண்டு மாமியைப் பாப்பினம். கிட்டவரக் கூச்சம்போல. அவையளையும் கூப்பிட்டுக் குடுப்பா. மாமிக்கு மூத்த அண்ணரிலை ஒருகண். மாமியின்ரை புடிப்புட்டுச் சோக்காய் இருக்கும். தின்னத் தின்ன ஆசையாய் இருக்கும். ஆச்சியும் இடைக்கிடை புடிப் புட்டு அவிச்சுத் தாறவதான். மாமியின்ரை புடிப்புட்டுப் போல ருசியாய் இருக்காது. இதைச் சொன்னால் ஆச்சிக்கு மூக்கின் மேலை கோவம் வரும் எண்டதாலை நாங்கள் ஒண்டும் சொல்லுறேல்லை.

மாமியின்ரை தாய் சின்னாச்சிப் பெத்தாச்சி குஞ்சியரோடைதான் இருக்கிறா. அவவுக்கு சின்னமோள் எண்டால் உயிர். தாயையும் அப்பு, குஞ்சியர் பெரிய மாமி பிள்ளையள் எல்லாரையும் பாக்கத்தான் மாமி வாறவ. நாங்கள் மிக அருமையாகத் தான் கொக்கிளாய் போவம்.

குஞ்சியரிடம் ஒரு சோடி கிண்ணியாய் மாடுகள் நிண்டன.அது மாமியின்ரை எண்டு பிறகுதான் அறிஞ்சன். ஒவ்வொரு வருஷமும் குஞ்சியர் மாடுகளைக் கொண்டுபோய் மாமியின்ரை வயலை உழுது விதைச்சுக்

> **“ கொக்கிளாய் வடக்கையும், கிழக்கையும் இணைக்கிற கிராமம். யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத் தீவுக்கு வந்து நாயாத்து வழியாய்க் கொக்கிளாய் போகலாம். கொக்கிளாயிலிருந்து ஆத்தை கடந்தால் புல்மோட்டை என்னும் முஸ்லிம் கிராமம். அங்கையிருந்து திரியாய் குச்சவெளி நிலாவெளி வழியாய் திருகோணமலை போகலாம். அங்கிருந்து வெருகல் ஆத்தைக் கடந்தால் மட்டக்களப்பு போகலாம். எல்லாமே தமிழ்க் கிராமங்கள். வடக்கும் கிழக்கும் காலாதி காலமாகத் தமிழர் வாழ்ந்து வரும் பிரதேசங்கள். ”**

*குடுத்திட்டு வருவார். மாமியாலை மாடுகளைப் பராமரிக்க ஏலாது. இதனால் மாடுகளை முள்ளியவளைக்குக் கொண்டு வந்து விடுவார். வண்டில் மாடுகளால் குஞ்சியருக்கும் வருமானம் உண்டு.*

*நான் கொக்கிளாய்க்கு மூண்டு முறைதான் போயிருக்கிறன். ஒருமுறை சின்னப்பிள்ளை மச்சாளின் கலியாணத்துக்குப் போனனான். அப்பு, ஆச்சி, சின்னண்ணன் நான் எல்லோரும் வண்டிலில் போனம். மூத்தண்ணை வரயில்லை. சின்னப்பிள்ளை மச்சாளை மூத்தண்ணருக்குச் செய்யிற தெண்டுதான் பேச்சு அடி பட்டுது. ஆனால் அது நிறைவேறவில்லை. அதுக்கு ஆச்சிதான் இடைஞ்சலாய் இருந்தவ எண்டு கதைக்கினம். “கழுத்துக்கும் காதுக்கும் ஒண்டுமில்லாத பொம்பிளையை எடுத்துப் போட்டுக் கோயில் குளத்துக்குக் கூட்டிக் கொண்டு போறது எப்பிடி” எண்டு ஆச்சி சொன்னதாகக் கேள்வி.*

*கொக்கிளாய்க்கு நாயாத்தால் போற தெண்டால் வண்டில் மாடுகளைப் பாதையில் ஏத்தி அக்கரை சேர்க்கோணும். ஆண்டாங்குளம் வழியாலே போற தெண்டால் ஆத்தைக் கடக்கத் தேவையில்லை. நாங்கள் ஆண்டாங்குளம் வழியாய்த்தான் போனம். ஒரு முழுநாள் பிரயாணம். இவளவு தூரத்தையும் மாமி எப்பிடித்தான் நடந்து வந்தா எண்டு நினைச்சுப் பாத்தன்.*

*கொக்கிளாய் அழகான சிறிய கிராமம் நாப்பது அம்பது குடும்பங்கள் தான். பால் போல வெள்ளை மண், மிதிக்கப் பட்டுப் போல இருக்கும். கச்சான் செய்கைக்கு ஏத்த மண். கத்தரி, பயித்தை, வெண்டி, மிளகாய், வெங்காயம் நட்டுத் துரவிலை பட்டையால் தண்ணி ஊத்தி வளப்பினம். தாழ்வான நிலம் இருவாட்டி மண் வளமான மண்ணெண்டு சொல்ல முடியாட்டாலும் வயலில் விளையும் நெல் சாப்பாட்டுக்குப் போதும். மானாவாரிதான். கடற்கரை ஓரம் தென்னஞ்சோலை. இதமான காற்று. மாமியின் வளவிலும் பத்துப் பன்னிரெண்டு தென்னை மரங்கள் உண்டு. காலமை வெள்ளெனக் கடற்கரைக்குப் போனால் காசு கொடுக்காமல் மீன் வாங்கலாம். மீன் பிடிக்கிற காலத்தில் சிங்கள மீன் பிடிகாரர் வந்து வாடி அமைச்சு மீன் பிடிப்பினம். ஊராக்கள் தூண்டில் போட்டு மீன்பிடிப்பினம். சிலபேர் கட்டுமரத்தில் போய் வலைவீசி மீன்பிடிப்பினம். சிங்கள மீன்பிடிகாரர் ஊர் மக்களுடன் அன்னியோன்னியமாகப் பழகுவர். இன வேறுபாடு மருந்துக்கும் இல்லை.*

*ஒரு பாடசாலை, ஒரு வாசிகசாலை, உப தபால் கந்தோர், சங்கக்கடை என்பன சின்னச் சின்னக் கட்டிடங்களில் இயங்கின.*

*பாடசாலை ஆசிரியர் மிக நல்ல மனுஷன். ஒழுங்காகப் படிப்பிப்பார். அதனால் அவருக்கு நல்லபேர். ஆள்*

கொஞ்சம் குள்ளமானவர். அவர் மனைவி அவரைவிட உயரம். சிலவேளை கணவனுக்கும் மனைவிக்கு மிடையே சண்டை வரும். மனைவிக்கு அடிக்கத் தடியை எடுப்பார் அவள் தடியைப் பறிச்சு உயர இறப்பில் செருகிவிடுவா. வாத்தியார் தொங்கிப் தொங்கிப் பாப்பார் எட்டாது. மனைவி கொடுப்புக்குள் சிரிப்பா. வாத்தியாருக்குக் கோபம் ஆறிவிடும் முகத்தை நீட்டிக் கொண்டு பேசாமல் இருப்பார்.

கலியாண வீட்டில் ஒரு பிரச்சனை. மாப்பிளை நீலநிறத்தில் கூறை வாங்கினது மாமிக்குப் பிடிக்கேல்லை. கூறை சிவப்பில் தான் இருக்க வேணுமெண்டு அவ நினைக்கிறா. உந்தக் கூறையை உடுக்க விட மாட்டன் எண்டு மாமி அடம்பிடிச்சா. அப்புவும் குஞ்சியரும் மாமியைச் சமாதானப் படுத்திச்சினம்.

கலியாண வீடெண்டால் ஓமம் வளத்து அம்மி மிரிச்சு அருந்ததி காட்டி நடக்கவேணும். கொக்கிளாயில் குருக்கள் இல்லை. பிள்ளையார் பிடிச்சுவைச்சு கர்ப்பூரம் கொழுத்துவினம். ஊர்ப் பெரியவர் ஒருவர் தாலியை எடுத்து மாப்பிளையிடம் கொடுத்தார். தேங்காய் உடைக்க மாப்பிளை தாலியைக் கட்டினார்.

பொம்பிளை வீட்டில் வழக்கமான சடங்குகள் முடியப் பொம்பிளை மாப்பிளை கூடார வண்டிலில் மாப்பிளை வீட்டுக்குப் போச்சினம். முன்னும் பின்னும் மூண்டு நாலு கூடார வண்டிகளில் சொந்தக்காரர் போவினம். மாடுகளின் கழுத்தில் வெண்டயம் கட்டப் பட்டிருந்தது. வெண்டயச் சத்தம் அரைக்கட்டை தூரத்துக்குக் கேக்கும். மாப்பிளை பொம்பிளை வரவைக் குறிக்கும் கோடாலி வெடியும் எறிவெடியும் முழங்கும்.

மாமி கலியாணம் செய்த காலத்தில் நல்ல வசதியாகச் சந்தோஷமாகத்தான் வாழ்ந்தா. அவ நாலு பிள்ளையளைப் பெத்த பிறகுதான் மாமா மோசம் போனவர்.

கொக்கிளாய் வடக்கையும், கிழக்கையும் இணைக்கிற கிராமம். யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத் தீவுக்கு வந்து நாயாத்து வழியாய்க் கொக்கிளாய் போகலாம். கொக்கிளாயிலிருந்து ஆத்தை கடந்தால் புல்மோட்டை என்னும் முஸ்லிம் கிராமம். அங்கையிருந்து திரியாய் குச்சவெளி நிலாவெளி வழியாய் திருகோணமலை போகலாம். அங்கிருந்து வெருகல் ஆத்தைக் கடந்தால் மட்டக்களப்பு போகலாம். எல்லாமே தமிழ்க் கிராமங்கள். வடக்கும் கிழக்கும் காலாதி காலமாகத் தமிழர் வாழ்ந்து வரும் பிரதேசங்கள்.

கொக்கிளாய்ச் சனம் புல்மோட்டைக்குப் போய் உடும்பு பிடிச்சு வருவினம். முஸ்லிம்கள் உடும்பு சாப்பிடமாட்டினம். இதனால் அங்கை உடும்புகள் சாதாரணமாக உலாவித் திரியும்.

1984வரை எல்லாம் நல்லாய்த்தான் இருந்தது. கொக்கிளாய்ச் சனம் சந்தோஷமாக இருந்ததுகள். உண்மையோ பொய்யோ தெரியாது. மீன்பிடிகாரர் தண்ணி அள்ளுற கிணத்திலை ஆரோ செத்த நாயைப் போட்டிட் டாங்களாம். ஆமிதான் பிரச்சனையைக் கிளப்ப அப்பிடிச் செய்தது எண்டும் கதை அடிபடுகுது. எங்கை எண்டிருந்த ஆமிக்கு இது நல்ல சாட்டாகப் போட்டுது. சாணி அப்பின மாடு போல ஆமி குபு குபு எண்டு ஊருக்கை புகுந்தது. சனம் பயக்கெடுதியிலை காட்டுக்கை போட்டுது. ஆமி லவுட்ஸ்பிக்கரிலை சனத்தைக் கூப்பிட்டுது. எல்லாச் சனத்தையும் உடனடியாக ஊரைவிட்டு ஓடும்படி சொல்லிச்சுது. போய்விடு எண்டு சொன்னதும் நலிவடைஞ்ச சனங்கள் உடுத்த துணியோடு வெளிக்கிட்டிட்டுதுகள்.

வெளிக்கிட்ட சனம் தனியுத்து, வத்தாப் பளை, முள்ளியவளை, வண்ணான் வயல், புதுக்குடியிருப்புக் கிராமங்களுக்குப் போச்சினம். அவையளைச் சொந்தக்காரர் ரெண்டு மூண்டு நாள் ஆதரிச்சினம்.

நிவாரணம் எண்டு மூண்டுமாதம் ஏதோ குடுத்தாங்கள் பிறகு அதுகுமில்லை.

இப்பிடி வேரோடும் வேரடி மண்ணோடும் வாழ்ந்த நிலத்திலை இருந்து பிடுங்கி வீசப்பட்ட சனங்களுள் ஒருத்தியாக மாமியும் வந்தா. சோர்வடைஞ்ச நிலையிலும் அவ நம்பிக்கையை இழக்கவில்லை. மற்றச் சனங்களைப் போல எண்டைக்கோ ஒரு நாள் ஊருக்குத் திரும்பலாம் எண்டு மாமி நம்பினா. வீடு வாசல் தோட்டம் துரவு வயல் நிலம் எல்லாத்தையும் பார்க்க வேணுமெண்ட துடிப்பு மாமிக்கு.

இந்தியன் ஆமி வந்த காலத்தில் மாமி நடமாடித் திரிஞ்சா. அவையள் திரும்பவும் தங்களை ஊருக்குப் போக விடுவினம் எண்டு அவ நம்பினா.

நான் ஆசிரியனாகி ஒரு பள்ளிக்குடப் பிறின்சிப்பலாகவும் வந்திட்டன். எங்கடை ஊரில் இது பெரிய சாதனைதான். கொக்கிளாய்ச் சனங்களை திரும்பக் குடியமர்த்தப் போவதாகக் கதை அடிபட்டுது. கொக்கிளாயில் பள்ளிக்குடம் துடங்குமாறு டிப்பாட்மென்ருக்கும் அறிவித்தல் வந்திட்டுது. கொக்கிளாய் போகும் குழுவிலை என்னையும் சேத்தினம்.

ஆமியின்ரை அனுமதி பெற்றுத்தான் அங்கு போகமுடியும். முல்லைத்தீவு ஆமிக் கொம்மாண்டரைச் சந்திச்சு அனுமதி கேட்டம். வெலிஓயாவுக்கு வேறை ஆமிக் கொம்மாண்டர் இருக்கிறார். அவரைத்தான் கேட்க வேணும் எண்டு சொன்னார்.

நாங்கள் கொக்கிளாய்க்குத்தான் போகப் போறம் வெலி ஓயாவுக்கல்ல எண்டம். இப்ப கொக்கிளாயை வெலி ஓயா எண்டுதான் சொல்லுறது எண்டார் அவர். 'வெலி ஓயா' முன்பு எப்போதும் கேட்டறியாத சொல் அது.

மாமி எப்பிடியோ இதைக் கேள்விப் பட்டுவிட்டா. தன்ரை வீட்டையும் காணியளையும் பாத்து வருமாறு என்னட்டைச் சொன்னா. தலையாட்டி விட்டுக் கொக்கிளாய்க்கு(வெலிஓயாவுக்கு)போனம்.

அங்கை கொக்கிளாய் எண்ட ஊர் இருந்த அடையாளமே இல்லை. பெரியதொரு நகரம் உருவாக்கப்பட்டிருந்தது. அகலமான வீதிகள் இருமருங்கும் பெரிய பெரிய கடைகள், பெரிய வைத்திய சாலை, வாசிகசாலை, கிராம முன்னேற்றச் சங்கம், தபால்கந்தோர், றெஸ்ற் ஹவுஸ், நிரந்தரமான கல்வீடுகள், பப்பாசி மரங்கள் இவையளைத்தான் பார்க்க முடிஞ்சுது. பெரும்பான்மை இனமக்கள் நெருக்கமான வீடுகளில் வசித்துக் கொண்டிருந்தனர். அநுராதபுரம் கச்சேரி அவையளுக்குக் காணி உறுதி கூடக் குடுத்திட்டுதாம். இந்த நிலையில் மாமியின் வீட்டையோ காணியளையோ எப்பிடிக் கண்டு பிடிப்பது?

இந்த உண்மையை மாமிக்கு எப்பிடிச் சொல்லுறது? "வீடு காணி எல்லாம் அப்பிடியே இருக்குது" என மனமறிந்து பொய் சொன்னன். மாமிக்கு நல்ல புளுகம்.

இது நடந்து மூண்டு வரியம் ஓடிவிட்டுது. மாமி ஊர் நினைவிலேயே உருக்குலைஞ்சு போனா. வருத்தமும் கூடி விட்டுது. நினைவு வந்தபோது ஒருக்கால் என்னைக் கூப்பிட்டா "என்ன மாமி" எண்டன்.

"என்னைக் கொக்கிளாய்க்குக் கொண்டு போங்கோ" எப்பிடி மறுப்பது? "நான் ஒழுங்கு செய்யுறன்" எண்டு சொல்லி ஒரு டிறாக்ரரில் மாமியை ஏத்தினன். ஊருக்குப் போற சந்தோசம் அவ முகத்தில் பளிச்சிட்டது. டிறாக்ரர் வைத்தியசாலையை நோக்கிப் போனது. மாமி மீண்டும் மயக்க நிலையில் மூண்டு முறை விக்கல் எடுத்தா; தலை சாய்ந்தது. அப்பு நாடியைப் பிடிச்சுப் பார்த்தார்; கையை விரிச்சுக்காட்டினார். ஊருக்குப் போறன் எண்ட நிம்மதியோடு மாமி போய்ச் சேந்துவிட்டா.

இப்ப கொக்கிளாயும் இல்லை மாமியும் இல்லை. நினைவு மட்டும் என் நெஞ்சை நெருடிக் கொண்டிருக்குது.



04

## மாதுமை சிவசுப்பிரமணியம்

யாழ். இணுவில் கிராமத்தில் 1978ஆம் ஆண்டு பிறந்த மாதுமை பாடசாலையில் கல்வி கற்கும் காலத்திலிருந்தே எழுத்துத்துறையில் தடம்பதித்த இவர், தமிழ்தினப் போட்டிகளில் கலந்துகொண்டு ‘சிறுகதை’ ஆக்கத் துறையில் பல முதற்பரிசுகளை பெற்றுள்ளார். 1993ஆம் ஆண்டு தொடக்கம் 1997வரை தமிழ்தினப் போட்டிகளில் கோட்ட மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டங்களில் முதலிடம் பெற்று அகில இலங்கை மட்டத்தில் 1993இல் இரண்டாம் இடத்தையும் 1996இல் 3ஆம் இடத்தையும் 1997ஆம் ஆண்டு முதலிடத்திற்குவந்து தங்கப்பதக்கத்தைப் பெற்றார்.

திருகோணமலை மாவட்ட சாஹித்யப் பேரவை நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடத்தை பெற்றுக்கொண்டார். இக்காலப்பகுதிக்குள் அவரால் எழுதப்பட்ட 23 சிறுகதைகள் யாவுமே பரிசில்களைப் பெற்றுள்ளன. அவற்றில் 15 சிறுகதைகளின்முதற்தொகுப்பு “தூரத்து கோடை இடிகள்” அண்மையில் திருகோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வெளியீட்டு விழாக்களைக் கண்டுள்ளன.

பட்டப்படிப்புக்காகக் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு வந்தபின் கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ் சாஹித்ய மன்றத்தினால் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதல் இடத்தையும், பேராதனை பல்கலைக்கழக சாஹித்ய மண்டலம் நடாத்திய சிறுகதை போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். மித்திரன் பத்திரிகையிலும், பார்த்தேன், தமிழ்த்தென்றல், ஞானம் இலக்கியச் சஞ்சிகையிலும் இவருடைய ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. சிலகால இடைவெளிக்குப்பின் மீண்டும் எழுதத்தொடங்கிய மாதுமை, ‘ஞானம்’ நடத்திய அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசையும், விபவி கலாசார மையம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசிற்கான விருதையும் பெற்றுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக B.A (Hons) பொருளியல் முதலாம்தர பட்டதாரியான இவர், சுவிற்சலாந்து நாட்டின் புலமைப் பரிசில் பெற்று மேற்படிப்புக்காக அங்கு சென்றுள்ளார். ஈழத்தில் வளர்ந்துவரும் எழுத்தாளராக தன்னை இனங்காட்டியுள்ள இவரை ‘பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்’ நடாத்திய கருத்தரங்கில் இவருடைய சிறுகதை ஆக்கங்கள் பற்றி இரண்டு எழுத்தாளர்கள் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.

கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2005இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை

2



# காதலாகி, கசிந்து கண்ணீர் மல்கி

(ஞானம் 64. செப்டெம்பர் 2005)

வீட்டில் அம்மாவுக்கு உதவியாக இருப்பேன். மற்றப்படி எனக்கு நேரம் போவதே பெரும்பாடாகிப் போய்விடும்.

இன்ரன்சிப் எப்ப வரும். எங்காவது தூர இடத்திற்குப் போட்டுத் தந்தார்களானால் எவ்வளவு நல்லம். புதுஇடம், புதுச்சூழல், புதிய முகங்கள்.......... பார்க்கிற சந்திக்கின்ற சந்தர்ப் பம் கிடைக்காதா என்று எண்ணுவேன்.

சொந்தவீடு, சொந்தஊர், பழகிய முகங்கள் அம்மா அப்பா சொந்தங்களை விட்டுப் பிரிந்து செல்வதா? என்று நினைக்கும்போது மனத்திற்குள் என்னையறியாமலே ஒரு நெருடல். நித்திரைக்குச் செல்லும்போது மனம் அலை பாய்ந்தபடி இருக்கும். விடிந்தும் படுக்கையைவிட்டு எழாமல் இன்ரன்சிப் பற்றிய சிந்தனையில் மூழ்கிக் கிடக்கின்றேன்.

அம்மா கூப்பிடும் சத்தம் கேட்டு "என்னெணய் அம்மா" என்றேன்.

"மகள், இந்தா கோப்பியை குடிச்சிட்டு முகத்தை கழுவிட்டு வா. உனக்குப் பிடித்த அரிசிமா புட்டும் முருங்கைக்காய் பிரட்டலும் செய்து வைச்சிருக்கிறன்" என்றார்.

அம்மாவை விட்டிட்டுப் போனால் இப்படி யார் வாய்க்கு ருசியாய் சாப்பாடு சமைத்துத் தருவார்கள். அதை நினைக்க என்மனம் வேதனைப்பட்டது.

இப்பொழுது ஏன் மனத்தைப் போட்டு அலட்டிக் கொள்ள வேண்டும். வரும்போது பார்த்துக் கொள்ளுவோம் என்று எண்ணி அன்றாட வேலைகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.

இரவுச் சாப்பாடு முடிந்து, அப்பா அம்மா நான் மூவரும் கதைத்துக் கொண்டிருந்தோம். கதையோடை கதையாக அப்பா சொன்னார்........... "இன்ரன்சிப்புக்கு யாழ்ப்பாணத்துப் பிள்ளைகளை திருகோணமலை, மட்டக்களப்பு எண்டு அனுப்புவார்களாம். மட்டக்களப்பு, திருகோணமலைப் பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலை விடுவார்களாம் என்று கதைக்கிறார்கள்"

"அப்ப எங்கடை பிள்ளையும் திருக்கணாமலை மட்டக்கிளப்பு எண்டு" அம்மா சொல்ல.........

"அவளுக்கும் ஊர் உலகம் தெரிய வேணுமப்பா. மொண்டசூரி தொடக்கம் யூனிவசிற்றிவரை இங்கதானே இருந்து படிச்சவள். நாலுலகும் தெரியவேணுமல்லே" என்றார் அப்பா.



நான் யூனிவசிற்றியிலை படிக்கிற காலத்திலை என்னுடன் படித்த திருகோண மலை மட்டக்களப்புப் பிள்ளைகள் விடுமுறை காலங்களில் தங்கள் ஊர்களுக்கு வரும்படி கேட்டும், பொம்பிளைப் பிள்ளைகள் கண்டபடி திரியக்கூடாது என்று சொல்லி அம்மா போகவிடாமல் மறிச்சுப்போட்டார்.

❖❖❖

இன்ரன்சிப் திருகோணமலை ஆதார வைத்தியசாலை என்று கடிதம் கிடைத்தது. அம்மாவை ஒருவாறு ஆறுதல் படுத்திவிட்டு, அப்பாவுடன் பல சென்றிப் பொயின்ட் எல்லாம்

தாண்டி காங்கேசன்துறை போய் கஷ்டப் பட்டுத்தான் திருகோணமலைக்கு கப்பலில் வந்து சேர்ந்தோம். போர்ச் சூழ்நிலையில் பிரயாணங்கள் பெரும் கஷ்டமாக இருந்த காலப்பகுதி. கப்பலுக்கு சீற் எடுப்பது பதிஞ்சுவைத்துத்தான் செய்யவேணும். வைத்தியவேலைக்குவருகின்றகாரணத்தால் அரச அதிபரின் சிபாரிசில் அப்பாவுக்கும் எனக்கும் சீற் கிடைத்துவிட்டது. ஒருவாறு திருகோணமலைக்கு வந்து சேர்ந்து அப்பாவின் பழைய நண்பர் ஒருவரின் வீட்டில் தங்குவதற்கு றூமும் எடுத்து விட்டோம்.

அடுத்தநாள் காலையில் ஆஸ்பத் திரிக்குச் சென்று கடிதத்தைக் காட்டி என்னை அறிமுகப்படுத்தினேன்.

அங்கே.......... கொழும்புத் தமிழ்த்தின விழாவில் நான் சிறுகதை ஆக்கத்திற்கு முதல்பரிசு தங்கப்பதக்கம் பெற்றேன். அதே விழாவில் கவிதை ஆக்கத்திற்கு முதல்பரிசாகத் தங்கப்பதக்கம் பெற்றவரும் தன் தாயுடன் வந்திருந்தார். அவரும் இன்ரன்சிப்புக்குகொழும்பிலிருந்துவந்துள் ளதைத் தெரிந்து கொண்டு கதைத்தேன். இரண்டாம் முறையாக இருவரும் ஒரு இடத்தில் சந்திப்போம் என்று எதிர் பார்க்கவில்லை என்றேன். அவரும் சிரித்தபடி ஆம் என்று தலையாட்டினார். சிரிக்கும்போது அவருடைய தெத்திப் பல்லு மிக அழகாகக் காட்சி தந்தது.

சற்றுத் தூரத்தில் என் அப்பாவும் முகுந்தனின் அம்மாவும் சிரித்துக் கதைத்த படி இருந்தார்கள். அதைப்பார்க்க எனக்குச் சற்று வியப்பாகத்தான் இருந்தது.

முகுந்தன் சொன்னான்.... "அம்மா கொழும்பில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில்உங்களைக்கண்டுகதைத்தபிற்பாடு என்னிடம் இரகசியமாகச் சொன்னவ..... உங்கடை அப்பாவும், என்ரை அம்மாவும் படிக்கிற காலத்திலை லவ்வாம். ஏதோ சந்தர்ப்ப சூழ்நிலையாலை கல்யாணம் செய்யமுடியாமல்போய்விட்டதாம்" என்று சொல்லி முடிக்க, அப்பா என்னிடம் வந்து "இஞ்சை கப்பலுக்கு நிண்டு சுணங்கேலாது நான் கொழும்புக்கு போய் பிளேனில் யாழ்ப்பாணம் போறன்" என்றார்.

அப்பாவும் முகுந்தனின் அம்மாவும் எங்கள் இருவரிடமும் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டுவிட்டார்கள்.

நாங்கள் இருவரும் எம். எஸ். சின் அறைக்குள் சென்றோம். இருவருக்கும் ஒரே வாட்டில் வி. பிக்குக்கீழ் வேலை என்று தெரிந்துகொண்டோம்.அங்குநிற்கும்போது இறந்தவர்கள் காயப்பட்டவர்கள் என்று கொண்டுவருவதும் எடுத்துச் செல்வதுமாக இருந்தார்கள். டாக்டர்கள், தாதிமார் மற்றும் உதவியாளர்கள் ஓடித்திரிந்து தாங்கள் கடமைகளில் ஈடுபட்டிருந்தார்கள். பொலிஸ், ஆமி, நேவி பலரையும் காணக்கூடியதாக இருந்தது.

அன்றுமாலை வேலைமுடிந்து கால் நடையாக இருவரும் தங்கியிருக்கும் இடங்களுக்குப் புறப்பட்டோம். கடற் கரை தெரிந்தது. சற்று இருந்துவிட்டு செல்வோமா? என்று முகுந்தன் கேட்க, சற்றுத்தூரத்தில் சென்று ஆட்கள் குறைவான இடத்தில் அமர்ந்து கொள் கின்றோம். எனக்கு எங்கிருந்துதான் இந்தத் துணிவு வந்ததோ தெரியவில்லை. ஆறு வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தமிழ்த் தினவிழாவில் சந்தித்த நாங்கள் நீண்ட இடைவெளிக்கு பின் இன்று சந்தித்தி ருக்கின்றோம். அதற்கிடையில் இத்தகைய நெருக்கமா? எடுத்த எடுப்பிலேயே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டோமா? பல கேள்விகள் என்மனத்தில் வந்து ஊசலாடிச் சென்றுவிட்டன.

"என்னகவிதாபலமாகயோசிக்கின்றீர்" என்று முகுந்தன் என் சிந்தனையைக் கலைத்தார்.

"கவிதா உங்களிடம் ஒரு விடயத்தை இன்று சொல்லியே ஆகவேண்டும். தமிழ் தின விழாவில் உங்களை என் அம்மா கண்டபிற்பாடு என்னிடம் உங்களைப்

பற்றியே சொல்லிக் கொண்டே இருப்பார். தானும் உங்க அப்பாவும் காதலித்து கல்யாணம் செய்யாமல் போனது அம்மாவைப் பெரிதும் பாதித்துவிட்டது என்றுதான் நினைக்கின்றேன். அதற்குப் பிராயச்சித்தமாக நான் உங்களைத்தான் கல்யாணம் செய்ய வேண்டுமென்று அடிக்கடி சொல்லி என் மனத்திலும் உன் ஆசையை வளர்த்து விட்டிட்டார். என் அம்மாவின் பெயரை உனக்கும் உங்கள் அப்பாவின் பெயரை எனக்கும் வைத்ததிலிருந்து தெரியவில்லையா அவர் களின் காதலின் ஆழத்தை" என்று முகுந்தன் கூறிய வார்த்தைகள் என் மனதையும் தொட்டுவிட்டது. இருந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் கொஞ்சநேரம் மௌனமாக இருந்துவிட்டு நாங்கள் போவமா? என்று சொல்லிக்கொண்டு எழுந்தேன்.

"நான் இப்படிச் சொன்னது பிழையா கவிதா. நீங்களும் வேறுயாரையும் விரும்பி இருக்கின்றீர்களா?"

"முகுந்தன் அப்படி ஒன்றுமே இல்லை. பெரியவங்களாகப் பார்த்து முடிவுசெய்தால் எனக்கு ஒருவித ஆட்சேபனையும் இல்லை என்றேன்"

அவர் முகத்தில் ஒரு புன்னகையுட னான மகிழ்ச்சியை அவதானித்தேன்.

❖❖❖

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் சேமநலன்களைக் கவனிப்பதற்காக திரு கோணமலைக்கு வந்த பாகிஸ்தான் நாட்டு டாக்டர்களுடன் பணியாற்றுவதற்காக எங்கள் இருவரையும் மூதூருக்குப் போகச் சொன்னார்கள். எங்களுக்கு புதுஇடம் அத்துடன் போர்பயம் என்ன செய்வது. வெளிநாடுகளிலிருந்து வந்து கஷ்டப் பிரதேசங்களில் அவர்கள் கடமையாற்றும் போது, நாங்கள் எமது சொந்த நாட்டில் சேவை செய்ய ஏன் தயங்கவேண்டும் என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டோம்.

அடுத்தநாள் காலைமுதல் லோஞ்சில் மூதூர் செல்ல ஏற்பாடு. இரவு அம்மாவுக்கு போன்பண்ணி விடயத்தை சொன்னேன். "அங்கை தான் அடிக்கடி பிரச்சனை வருகிற இடமென்று பேப்பரிலை படிக்கிறன். நீ என்னெண்டு அங்கை தனியாய் போய்............" என்று அம்மா கவலைப்பட்டுச் சொல்ல.......... நான் சொன்னேன் வெளிநாட்டு டாக்டர் களுடன்தான் இங்கே இன்ரன்சிப்புக்கு வந்த எல்லோரும்தான் போறம் நீங்கள்

**மாப்பிள்ளை சொந்தத்தில்**
**கிடைத்திருப்பது**
**நாங்கள் செய்த புண்ணியம்.**
**நீ தனிப்பிள்ளை.**
**தெரியாத இடத்தில் கல்யாணம்**
**கட்டினால் நீ தனிச்சுப் போவாய்.**
**ஏதாவது கஷ்டம் துன்பம் வந்தாலும்**
**சொல்லி ஆறுவதற்குக் கூட ஆட்கள்**
**இருக்க மாட்டார்கள்.**
**காதல் செய்யும்போது பரவசத்தைக்**
**கொடுக்கும் என்பது உண்மைதான்.**
**ஆனால் அது வாழ்க்கையாக**
**அமையும்போது எத்தனை பேருக்கு**
**சிறப்பாக அமைந்திருக்கின்றது.**
**காலப்போக்கில் அது ஒரு**
**போலி வாழ்க்கையாகவே**
**அமைந்துவிடுவதுமுண்டு.**
**இது நான் கண்ட அனுபவம்.**
**அம்மாவின் விருப்பப்படி**
**உன் அத்தானைத் திருமணம் செய்வது**
**மிகவும் சிறந்தது.**
**அதுதான் என் பரிபூரணமான**
**விருப்பமும்"**

ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். எங்களுடன் ஏழுபேர் காலையில் மருந்துப் பொருட்களுடன் திருமலை யெற்றியைச் சென்றடைந்தோம். அங்கு நாங்கள் கொண்டுபோன சாமான்களையெல்லாம் ஆமிக்காரர் செக் பண்ணினார்கள். என்னைப் பார்த்து இரண்டு ஆமிக்காரர் ஏதோ சிங்களத்தில் கதைத்துவிட்டு ஏதோ 'யாப்பணய' என்று கேட்டார்கள். முகுந்தன் வந்து அவர்களுடன் சிங்களத்தில் கதைத்தார்.பின்பு எல்லோரையும்லோஞ்சில் ஏறவிட்டார்கள். லோஞ் மூதூர் நோக்கிப் புறப்பட்டது. கடல் கொந்தளிப்பாக இருந்த படியால் லோஞ் ஆடத்தொடங்கிவிட்டது. எனக்குப் பயம் ஏற்பட்டு விட்டது. முகுந்தன் எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். கொஞ்சத்தூரம் போனபிறகு கடல் சாந்த மாகவே இருந்தது. கடலின் அழகையும் இடைக்கிடையே காணப்படும் சிறிய குன்றுகளின் அழகையும் சூரியனின் வருகை யால் வானம் வெளித்திருந்த அழகையும் இரசித்தபடி ஒன்றரை மணித்தியாலப் பிரயாணத்தின்பின் மூதூர் யெற்றியைச் சென்றடைந்தோம். அங்கும் ஆமிக்காரர்கள் லோஞ்சில் வந்தவர்களுடைய சாமான் களைச் செக் பண்ணிக் கொண்டு நிற்கின் றார்கள். அந்த நேரத்தில் ஐ. சி. ஆர். சி வான் இரண்டு வந்து நின்றது. அதில் வந்தவர்கள் இறங்கிவந்து ஆமிக்கார பெரிய வனுடன் ஏதோ கதைத்தார்கள். அவர்கள் எங்கள் சாமான்களைச் செக்பண் ணாமல் எங்களைப் போக அனுமதித் தார்கள். நாங்கள் மூதூர் வைத்தியசாலையில் போய்ச் சேர்ந்தோம். அங்கு நோயாளிகள், காயப்பட்டவர்கள், வயோதிபர், குழந்தை கள் என்று ஏகப்பட்ட கூட்டம். இரண்டு டாக்டர்கள் மட்டுமே இவர்களைக் கவனித் துக் கொண்டிருந்தார்கள். முகுந்தன் சொன் னார் "இப்படியான இடத்தில் சேவை செய்வதுதான் உண்மையான சேவை" அவருடைய நல்ல மனத்தை என்னால் அப்பொழுது உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. சில நாட்களில் என்னைப் போய் படுக்கச் சொல்லிவிட்டு இரவு முழுவதும் நோய்வாய்ப்பட்டு வருபவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை செய்வதில் ஈடுபட்டிருப்பார். எல்லோ ருடனும் அன்பாகப் பழகுவார். வந்த சில நாட்களிலேயே எல்லோருடைய அன்பையும் பெற்றுவிட்டார்.

❖❖❖

இரண்டுமாதம் கழித்து வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். மாமாவின் மகன் சேயோன் இலண்டனிலிருந்து வந்திருப்பதாகவும், அவருக்கும் எனக்கும் கல்யாணம் நிச்சயிக்கப் பட்டிருப்பதாகவும் வீட்டில் தெரிந்து கொண்டேன். என்மனம் ஏனோ ஒரு நிலையில் இருக்கவில்லை. அப்பாவின் நிலை எப்படியிருக்கும் என்று அறிவதற்கு பெரும் ஆவலாக இருந்தேன்.

அப்பாவிடம் சென்றேன். என்முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அப்பா புரிந்து கொண்டு விட்டார். சற்று மௌனமாக இருந்துவிட்டு..........

"மகள் உனக்கு நல்ல படித்த மாப்பிள்ளை சொந்தத்தில் கிடைத்திருப்பது நாங்கள் செய்த புண்ணியம். நீ தனிப்பிள்ளை. தெரியாத இடத்தில் கல்யாணம் கட்டினால் நீ தனிச்சுப் போவாய். ஏதாவது கஷ்டம் துன்பம் வந்தாலும் சொல்லி ஆறுவதற்குக் கூட ஆட்கள் இருக்க மாட்டார்கள். காதல் செய்யும்போது பரவசத்தைக் கொடுக்கும் என்பது உண்மைதான். ஆனால் அது வாழ்க்கையாக அமையும்போது எத்தனை பேருக்கு சிறப்பாக அமைந்திருக்கின்றது. காலப்போக்கில் அது ஒரு போலி வாழ்க்கை யாகவே அமைந்துவிடுவதுமுண்டு. இது நான் கண்ட அனுபவம். அம்மாவின் விருப்பப்படி உன் அத்தானைத் திருமணம் செய்வது மிகவும் சிறந்தது. அதுதான் என் பரிபூரணமான விருப்பமும்" என்று சொன்னார்.

எனக்கு முகுந்தனை நினைக்க........ அவரது அம்மாவின் ஆசைகளை நினைக்க மனத்தில் என்னையறியாமல் ஒரு வேதனை ஏற்பட்டது உண்மைதான்.

❖❖❖

மாமன் மகன் சேயோனை திருமணம் செய்து இலண்டனுக்குச் சென்றுவிட்டேன். இரண்டு பிள்ளைகள். பிள்ளைப்பெத்துப் பார்க்க அம்மாவை வரச் சொல்லிக் கூப் பிட்டும் அம்மா அப்பாவை விட்டுவிட்டு வரமாட்டன் என்று சொல்லிப்போட்டார்.

இலண்டனுக்குச் சென்று எழு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. ஒரு நாள் திடீர் என்று அம்மாவின் ரெலிபோன். "அப்பாவுக்கு சரியான நெஞ்சு வருத்தம். உடனும் வைப்பாஸ் ஒப்பறேசன் செய்ய வேணுமாம். எனக்குப் பயமாய் கிடக்கு உடனே ஓடிவா பிள்ளை". அத்தானுக்கு விடயத்தைத் தெரிவித்து இலங்கைக்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, கொழும்பை வந்தடைந்தோம். நவலோகா கொஸ்பிற்றலில்தான் அப்பாவைச் சேர்த்தி ருந்தார்கள். அம்மா எங்களைக் கண்ட வுடன் அழத் தொடங்கிவிட்டார். அவவுக்கு ஆறுதல் கூறினேன். அவ பேரப் பிள்ளை களைத் தூக்கிக் கொஞ்சினார். அப்பா நித்திரையாக இருந்தார்.

அங்கு நின்ற அத்தானின் மச்சான் சொன்னார் "இந்த டாக்டர்தானாம் இப்ப இலங்கையிலை பிரபல்யமானவராம். அவரிடம் ஒப்பறேசன் செய்வதற்கு பலர் மாதக்கணக்கில் காத்திருப்பதாகவும் உங்கடை அப்பாவைப் பார்த்தவுடன் நாளைக்கு என்று திகதி குறித்துவிட்டார்."

❖❖❖

ஒப்பறேசன் முடித்துக்கொண்டு டாக்டர் வெளியில் வந்தார். முகுந்தன் நீங்களா? என்னையறியாமல் கத்தி விட்டேன். "ஒப்பறேசன் சக்சஸ், நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்" என்று சொல்லிவிட்டு தன் அறைக்குள் சென்றார். நானும் பின் தொடர்ந்து அவர் அறைக்கு சென்றேன். "வாங்க உட்காருங்க என்று மரியாதையுடன் சொன்னார். அப்பாவுக்கு இரண்டு இடத்திலை புளக் இருந்திருக்கு அதனால்தான் உடனும் ஒப்பறேசன் பண்ணினேன். என் அம்மாவைக் கவர்ந்த வரல்லவா? எனக்கும் கடமை இருக்குத் தானே அதைத்தான் செய்தேன்."

"மிக்க நன்றி முகுந்தன். உங்கள் உதவியை என்றுமே மறக்க முடியாது" என்றேன்.

"தாங்ஸ் இருக்கட்டும் நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்."

"எனக்கென்ன நல்ல கணவர் இரண்டு பிள்ளைகள் லண்டன் வாழ்க்கை ஏதோ ஓடிக்கொண்டிருக்கின்றது." என்றேன்.

"நீங்கள் ஒரு டாக்டர் அங்கு வேலை செய்யவில்லையா?"

எனக்கு வேலைக்குப் போக விருப்ப மில்லாதபடியால் வீட்டில் இருக்கிறேன்.

"அது இருக்கட்டுக்கும் உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்" என்றேன்.

"என்னைப்பற்றி உண்மையாகவே தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?" என்று புதிர் போட்டார். நானும் ஆவலில் சொல்லுங்களேன் என்றேன்.

"உங்கள் அப்பா, அம்மாவை ஏமாற்றி யதால், அவர் மனத்தால் பாதிக்கப்பட்டே இருந்திருக்கின்றார். அச்சந்தர்ப்பத்தில் என் அப்பாவைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அம்மாவுக்கு அந்த வாழ்க்கை சந்தோஷத்தைக் கொடுத்ததோ என்னவோ நான் பிறந்தேன். நான் பிறந்து இரண்டு வருடத்திற்கு பின் அப்பா வேறு ஒரு பெண்ணை மணந்துகொண்டு நோர்வேக்குப் போய் அங்கேயே இருந்து விட்டார். அம்மா அதுபற்றி எதுவித கவலையும் படவில்லையாம். அம்மா ஆசிரியராக இருந்தபடியால் என்னை றோயல் கல்லூரியில் விட்டுப் படிப்பித்தார். பின்பு கொழும்பு பல்கலைக் கழகத்தில்

கல்வி கற்று மருத்துவத் துறையை முடித்துக் கொண்டு வெளியேறினேன். ஒரு நாள் தான் வைத்திருந்த அல்பத்தைக் காட்டி உங்களைப்பற்றிச் சொன்னார். அம்மாவின் அல்பத்தில் உன் அப்பாவின் இருபத்தேழு படங்கள் இருந்தன. அவ்வளவு தூரம் என் அம்மா, உன் அப்பாவை எவ்வளவு தூரம் நேசித்திருந்தார் என்பதைப் புரிந்து கொண்டேன். என்று கூறிய முகுந்தன் தொடர்ந்து......

"திருகோணமலை ஆஸ்பத்திரியில் முதல் நாங்கள் இருவரும் இன்ரன்சிப்புக்கு வந்தபோது என் அம்மாவும் உங்கள் அப்பாவும் எங்கள் இருவருடைய திரும ணத்தைப் பற்றித்தான் பேசியதாகவும், உங்கள் அப்பாவும் சம்மதம் தெரிவித்த தாகவும் அம்மா சொல்லி சந்தோசப் பட்டார்."

"ஐ ஆம் வெறி சொறி" முகுந்தன்.

"உங்கள் அப்பா என் அம்மாவை ஏமாற்றிய மாதிரி நீங்களும் என்னை ஏமாற்றிப்போட்டு வேறு திருமணம் செய்து கொண்டு விட்டீர்கள். இதனால் பெரிதும் மனக்கவலை அடைந்திருந்த அம்மா ஒருநாள் திடீரென்று மாரடைப்பு வந்து இறந்துவிட்டார்."

"தயவு செய்து என்னை மன்னித்து கொள்ளுங்கள்."

"அப்பா நோர்வேக்கு வரும்படி கடிதம் எழுதியிருந்தார். நான் அங்குபோக விரும்பவில்லை. ஸ்ருடண்ட் விசாவில் இலண்டனுக்குச் சென்று அங்கு பாட் ரயிம் வேலை பார்த்து எப். ஆர். சி. எஸ் முடித்துக்கொண்டு திரும்பவும் நம் நாட்டுக்கு வந்து வேலை பார்க்கிறேன்."

"அப்ப உங்கள் குடும்பம்" என்றேன்.

"ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள்தான் என் குடும்பத்தவர்கள்"

"நான் அதைக் கேட்கவில்லை, உங்கள் திருமண வாழ்க்கையைப் பற்றிக் கேட்டேன்" என்றேன்.

"நான் திருமணம் செய்து பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டன"

"யார் அவர்கள்? எங்கு இருக்கின் றார்கள்?" என்று கேட்டேன்.

"இவருடன் தான் இதயத்தால் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்........." என்று சொல்லி தன் பேசை எடுத்து விரித்து காட்டினார்.

அது என்படம். என் இதய நாடிகள் உறைந்து விட்டன. என் நிலையை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு...........

"உங்களுக்கு என்ன பைத்தியமா?" முகுந்தன் என்றேன்.

"கவிதா நீங்கள் எப்படி வேண்டு மானாலும் எடுத்துக் கொள்ளலாம். எனக்கு அம்மா கற்றுத்தந்த பாடம். உங்கள் அப்பாவையே நினைத்துக்கொண்டு காலம் எல்லாம் வாழ்ந்து மரணத்தையே தழுவிக் கொண்டார். அவர் உண்மையான காதலுக் காகவே வாழ்ந்திருக்கின்றார்."

எனக்கு என்ன சொல்லுவதென்றே தெரிய வில்லை. தொண்டையை ஏதோ இறுக்குவது மாதிரியான ஒருநிலை. பேசவே முடியவில்லை.

என்னையே சற்றுநேரம் உத்துப்பார்த்து விட்டு முகுந்தன் சொன்னார்..............

"கவிதா என்னைப் பொறுத்தளவில் காதல் புனிதமானது. அது ஒரு முறைதான் வரும். இது என் அம்மாவிடமிருந்து நான் பெற்ற பாடம். இதை உயிருள்ளவரை எந்தச் சக்தியாலும் அழித்துவிடமுடியாது."

என்று முகுந்தன் சொல்ல என் கண்கள் பனித்துவிட்டன.

அப்பொழுது என் கணவர் என்னை வந்து அழைக்க, ஒன்றுமே பேசமுடியாமல் முகுந்தனின் அறையைவிட்டு வெளியே போகின்றேன்.

Dr. ச. முருகானந்தன்



# ஒரு விடியலைத் தேடி

05

*1976ஆம் ஆண்டு தொடக்கம் எழுத்துலகில் தடம்பதித்த டாக்டர் ச. முருகானந்தன் பல்துறை சார்ந்த எழுத்தாக்கங்களை எழுதிவந்த போதிலும் சிறந்த சிறுகதை எழுத்தாளராகவே இனம் காணப்பட்டார். சுமார் 200 சிறுகதைகள் வரை எழுதியுள்ள இவர் நான்கு சிறுகதைத் தொகுதிகளையும் ஒரு கவிதைத் தொகுதியையும், ஒரு கட்டுரைத் தொகுதியையும் நூலுருவில் வெளிக்கொணர்ந்துள்ளார்.*

*1979இல் சென்னை இலக்கிய சிந்தனைப் பரிசைப் பெற்ற முதலாவது இலங்கையராவார். "தரை மீன்கள்" சிறுகதை தொகுதி 2003இல் சாகித்ய மண்டல விருது பெற்றது. முத்தமிழ் விழா சிறுகதைப் போட்டி உட்பட இருபது தடவைகள் சிறுகதைக்காகவும், மூன்று தடவைகள் கவிதைக்காகவும் பரிசில்கள் பெற்றுள்ளார். இவரது சிறுகதைகள் தெலுங்கு, ஹிந்தி, சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.*

பூரணை நிலா கடலின் தொடுவானப் பகுதியிலிருந்து சற்று மேலெழுந்து எட்டிப் பார்த்தது. அகதி முகாம் குடிசைகள் யாவும் சோபையிழந்து போய்க் கிடந்தன. ஓரிரு குடிசைகளில் மட்டும் மின்மினிப் பூச்சிபோல் விளக்கு எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

முகாமின் பக்கவாட்டில் செழித்து வளர்ந்திருந்த வேப்பமரத்தின் கீழுள்ள மணற் தரையில் சிவலிங்கம், கார்த்திகேசு, விநாயகமூர்த்தி ஆகியோர் அமர்ந்திருந்தனர். சில்லென்று வீசிய காற்று அவர்களின் உடலைத் தழுவிச் சென்றது. தொலைவில் மீன்பிடிக் கூட்டுத்தாபன கட்டடத்திலிருந்து மின் விளக்கின் ஒளிக்கீறல் முகாமின் ஒரு பக்கத்தில் கோடுகள் போல் விழுந்து கொண்டிருந்தன.

போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு வருடங்கள் கடந்த பின்னரும் இல்லிட மாகிப் போன தங்கள் வாழிடங்களுக்கு செல்ல முடியாத தவிப்பு அவர்கள் உரையாடலில் இடம்பெற்றது. கொடிய யுத்தம் முனைப்புப் பெற்று இருபகுதியிலும் பெரும் மோதல்களும் இழப்புக்களும் இடம் பெற்றுக் கொண்டிருந்த காலம் மனதில் நிழலாடியது.

யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரு பகுதியினரும் தாக்குதல்கள் செய்வதற்காகத் தம்மைப் பாதுகாக்க வேண்டியவர்களாகவும், தாங்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு தாக்குதல் செய்ய வேண்டியவர்களாகவும் இருந்த சூழ்நிலை.

**கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2005இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை**

3

**(ஞானம் 65, அக்டோபர் 2005)**



அப்போது இவர்களது குடியிருப் புக்களை அண்மித்த பகுதிகளிலே ஒரு கடற்படை முகாம் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்தக் கிழக்குக் கடலோர மீனவர்களின் வாழ்வில் இருள்சூழத் தொடங்கியது. ஏற்கனவே பிறமாவட்டங்களிலிருந்து வந்து வாடிய மைத்து, அரச மீன்பிடிக் கூட்டுத்தாபன உதவியுடன் தொழில் புரிந்து கொண்டிருந்த வர்களின் அடாவடித் தனங்களால் மனம் சோர்வுற்றிருந்த உள்ளூர் மீனவர்களுக்கு, கடற்படை முகாமமைப்பு இரட்டிப்பு சுமையை ஏற்படுத்தியது.

முகாம் அமைத்த கடற்படையினர் அடிக்கடி வந்து சுற்றி வளைப்பு, விசாரணை யென்று தொல்லைகொடுக்க ஆரம்பித் தார்கள். ஒரு நாள் கார்த்திகேசுவின் தம்பியையும் விநாயக மூர்த்தியின் மகனையும் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்றார்கள். வருடங்கள் பல கழிந்தும் இன்றுவரை அவர்கள் பற்றிய தகவலே கிடைக்கவில்லை.

திடீரென்று ஒரு நாள் உள்ளூர் மீனவர்களின் குடியிருப்புப் பிரதேசத்தை பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப் படுத்திய கடற்படையினர் இருபத்திநாலு மணிநேரத்தில் குடியிருப்பு வாசிகள் வெளியேற வேண்டும் என்று உத்தர விட்டார்கள். இதனால் அவ்வூர் மீனவர்கள் கலங்கிப் போனார்கள்.

“நாங்க இப்ப வெளியேறி எங்கே போறது? வேற வீடுவாசல், காணி பூமி கூட இல்லை. இந்தக் கடலை விட்டால் தொழிலுமில்லை” சிவலிங்கம் ஆதங்கத்தோடு கூறினான்.

“இந்தக் குஞ்சு குமருகளோட எங்கே போய் ஒதுங்கிறது...” பவளம், சிவலிங்கத்தை கவலையோடு நோக்கினாள். எல்லா வீடு களிலும் இதே கவலை. எல்லோரும் கூடிக் கூடி கதைத்தார்கள். “இப்ப என்ன செய்யலாம்?”

“நாங்க பொலிசிலை முறையிடுவோம்...” என்றான் செபமாலை. பிரயோசனமில்லாத வேலை என விக்ரர் நினைத்தான்.

“பொலிசிலை முறையிட்டு பயனில்லை. சிவில் அதிகாரியைச் சந்திப்போம்” கார்த்திகேசு தனது அபிப்பிராயத்தைக் கூறினான்.

“மாவட்ட செயலரும் அவங்கட ஆள்தானே? ஒரு காலத்தில் எங்கட தனித்தமிழ் பிரதேசமாக இருந்த இந்த மாவட்டம் இன்று அரச குடியேற்றத் திட்டங்களால பறிபோய்க் கொண்டிருக்கு. வடக்குக்கும், கிழக்குக்கும் மகாவலி கங்கை வரப்போகுது என்று மகிழ்ந்தோம். அது வெறும் நப்பாசையாகப் போச்சு. தண்ணி வரமுன்னரே பெரும்பான்மையின் குடியேற்றம் ஆற்றங்கரை எல்லாம் வந்திட்டுது. இப்ப எங்கட கடல் வளமும் பறிபோகுது...” விநாயகமூர்த்தி உண்மை நிலையை எடுத்துக் கூறினான்.

“எதுக்கும் மாவட்ட செயலாளரைச் சந்தித்து மனுக் கொடுக்கிறதுதான் நல்லது.....”

“உதிலை மினக்கடுகிறதை விட்டுட்டு, நாங்க எழும்பாமல் இருப்பம்....” என்றான் விக்ரர்.

“எழும்பாமலிருந்தால் செல் அடிச்சே கலைத்து விடுவார்கள்.... எதுக்கும் அரசாங்க அதிபரைச் சந்திக்கிறதுதான் நல்லது”.. இதை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

திட்டமிட்டபடியே அன்று அரச அதிபரிடம் மனுக்கொடுத்தார்கள். அவரும் அனுதாபத்தோடு இவர்களது பிரச்சனையைக் கேட்டறிந்தார். பின்னர் பாதுகாப்புப்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கதைத்தார். இறுதியில் சாதகமான முடிவு வந்தது.

“நீங்கள் எழும்ப வேண்டியதில்லை.... ஆனா பயங்கரவாதிகளை உங்கட பகுதியில வரவிடக் கூடாது. அப்படி வந்தால் பிரச்சினைதான்....”

“நாங்களும் எங்கட தொழிலுமாக இருந்து சீவிக்கிறம்.... எந்தத் தீவிரவாதியும் எங்கட பகுதிக்கு வர விடமாட்டம்.......”

“வந்தால் தகவல் சொல்லவேணும்.....”

அரச அதிகாரியின் வாக்குறுதி நீண்ட நாள் நீடிக்கவில்லை. அடிக்கடி வந்த படையினரின் தொடர் தொல்லையைத் தாங்கமுடியாதிருந்தது. செபமாலையின் சகோதரிஜோசெபீன்,பெரியாஸ்பத்திரியில் தாதியாக இருப்பவள்,

ஒருநாள்கடமைமுடிந்துதிரும்பாததால் எல்லோரும் குழம்பித் தவித்தனர். இரவு ஊரடங்கு உத்தரவு ஆதலினால் தேடவும் முடியவில்லை.

மூன்று நாட்களின் பின்னர் முகாமுக்கு கிட்டவாக உள்ள கிணற்றிலிருந்து அவளது சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது. ஊரே கதறி அழுதது.

ஜோசெபீன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டதாக சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவித்தார். உடனடியாக குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும்படி நீதிபதி பொலிசாருக்குப் பணித்தார். பத்திரிகைச் செய்திகள் பரபரப்பாக வெளியாகின. அவ்வளவுதான் இன்றுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் படவேயில்லை.

சில நாட்களின் பின் கடலில் மீன் பிடிப்பதும்தடைசெய்யப்பட்டது.இதனால் அந்தக் கிராம மக்கள் தொழில் இழந்து வருவாயின்றி பசியாலும் பட்டினியாலும் வாடினர். அரச அதிபரிடம் கொடுக்கப் பட்ட மனுவை அடுத்து பகலில் மட்டும் அதுவும் குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று மீன் பிடிக்க அனுமதி கிடைத்தது. அவர்களது வாழ்க்கைப் பயணம் சிரமத்துடன் தொடர்ந்தது.

ஒருநாள் இரவு அந்த மீனவக் கிராமமே உறங்கிக் கொண்டிருந்த சாம வேளையில் ஆயுததாரிகள் பலர் உட்புகுந்து கிராமமக்கள் பலரை பெண்கள், குழந்தைகள் என்று கூடப் பார்க்காமல் வெட்டிச் சரித்தனர். தப்பிப் பிழைத்தவர்கள் சிதறி ஓடினர். பத்திரிகை, ஊடக தணிக்கை இருந்தபடியினாலும், வெளிநாட்டு நிருபர்

களுக்குக் கூட அனுமதி இல்லாத மையினாலும் நடந்த அனர்த்தங்கள் அனைத்துமே மூடி மறைக்கப்பட்டன. லங்கா புவத்தும் இருட்டடிப்புச் செய்தது.

அன்று அகதியானவர்கள்தான்.... பாட சாலைகளில் தஞ்சம் புகுந்து சில காலம் அதுவே அகதி முகாமாக இருந்தது. பின்னர் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியினால் அமைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகை முகாம்களிலிருந்து இப்போது சில நாட்களாக சிறு சிறுகுடிசைகளமைத்து அகதிகளாக வாடிக்கொண்டிருக்கும் இவர்களது சோகம் அதிகமாக வெளி யுலகுக்குத் தெரியாது. பசியிலும், பட்டி னியிலும் வாடி, மழையிலும் பனியிலும் தோய்ந்து நோயிலும் நொடியிலுமாக இவர்கள் படுகின்ற அவலம் வார்த்தை களால் வடிக்க முடியாதவை.

போர்த்தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற் பட்ட பின்னர் இவர்களது மனதில் நம்பிக்கை ஒளிக்கீற்று தோன்றியது என்னவோ உண்மைதான். ஆனால் இன்று அதுவும்தேய்பிறையாக ஒளியிழந்து கொண் டிருக்கிறது. நிழலிலே பேசிக் கொண்டிருந்த மூவரின் பேச்சிலும் மீள்குடியேற்றம் பற்றிய ஆதங்கமே தொனித்தது.

"அண்ணை பீடி இருந்தா தாங்க....... சரியான கூதலாக இருக்கு....... ஒரு தரம் அடிச்சாத்தான் நல்லாயிருக்கும்" என சிவலிங்கம் கேட்டதும், விநாயகமூர்த்தி மடியைத் துளாவிப் பார்த்தபடி, "என்னி டமும் இல்லை....." என்றான். அருகிலிருந்த கார்த்திகேசு தனது காதில் செருகியிருந்த பீடியை எடுத்து நீட்டினான்.

"விக்ரரை இன்னமும் காணோம்.... முக்கியமான விசயம் கதைக்க வேணும் ரவுணுக்குப் போயிட்டு வாறன் என்று சொல்லிவிட்டுப் போனானே?" சிவலிங்கம் வீதியைப் பார்த்தான். தொலைவில் யாரோ வருவது நிலவொளியில் மங்கலாகத் தெரிந்தது. விநாயகமூர்த்தி உற்றுப் பார்த் தான்.

விக்ரர் முகாம் வளாக கேற்றைத் திறந்து கொண்டு வந்து கொண்டிருந்தான்.

"போன விசயம் எப்படி? எம். பியைக் காணக்கிடைச்சுதா?"

"இன்னும் சரியான முடிவு தெரியல் லெண்ணு எம். பீ கூறினார். விரைவில் கடற்படை முகாமை வேறிடத்திற்கு மாற்றப் போறாங்க. அப்புறம் எங்களுடைய நிலமும் பாதுகாப்பு வலயமாக இருக்காது. நாங்க போய் மறுபடியும் குடியேறலாம்"

விக்ரர் சற்று உற்சாகத்தோடு கூறினான்.

விக்ரர் வயதில் இளைஞன். அத்துடன் இவர்களைவிட நாலெழுத்துக் கூடப் படித்தவன். இதனால் இந்த அகதி முகாமிலிருந்த பெரியவர்கள் கூட அவனில் தனி மதிப்பு வைத்திருந்தனர். முகாமிலுள்ள இளைஞர்கள் எல்லோருமே அவனுக்கு நண்பர்கள். அவன் எள் என்றால் எண்ணெய் யையே கொண்டு வந்து விடுவார்கள்.

குடிசையிலிருந்த பவளம் இவர்களுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். விக்ரரின் பார்வை குடிசைப்பக்கம் மேய்ந்தது. சுகந்தி கண்ணில் படுவாள் என்ற தவிப்பு! மெல்லிய நிலவொளியில் எதுவும் தெரியவில்லை. தேநீர் இனிமையாக இருந்தது. சுகந்திதான் போட்டிருப்பாள் என்று விக்ரர் நினைத்தான்.

"அப்ப கெதியிலை சரிவரும் என்று விக்ரர் தம்பி சொல்லுறியள்"

"சரிவரத்தானே வேணும்? எங்கட பொடியள் இவ்வளவு உயிரைத் தியாகம் செய்யுதுகள்... இது ஒரு தர்மயுத்தம் கண்டியளோ... மகாபாரதத்தில்...." விநாயக மூர்த்தி தனது புலமையைப் பறை சாற்றினான்.

"அண்ணை இன்னொரு சந்தோசமான விசயம் எம்.பீ சொன்னவர். நாங்கள் எங்கட காணியிலை மீளக்குடியேறுவதற்கு புலம் பெயர்ந்த எங்கட வெளி நாட்டில உள்ளவர்கள் உதவி செய்யப் போகினமாம்."

"அந்தக் குளிரிலையும், பனியிலையும் கஸ்ரப்பட்டு உழைச்சு, தாயகத்தை

மறக்காமல் உதவி செய்கின்ற அவர்களுடைய உதவி மகத்தானது. அரசாங்கம் உதவியும் செய்யாமல், பொருளாதாரத் தடையும் போட்டு உள்ளூரிலேயே எங்களை ஏதிலிகளாக்கி அகதியாக விரட்டின போது வெளிநாட்டில இருந்து எங்கட பிள்ளையள் அனுப்புகின்ற பணத்தால தான் தாக்குப் பிடிக்கிறம்...." சிவலிங்கம் பூரிப்போடு கூறினான்.

"உண்மைதான்.... அவர்கள் அனுப்பும் பணத்தால்தான் இந்த நாசயுத்தத்திலையும் பட்டினிசாவுகள் தவிர்க்கப்பட்டிருக்கு...." கார்த்திகேசுவும் இதை ஆமோதித்தான்.

"ஒரு காலத்தில, யுத்தத்திற்குப் பயந்து புலம் பெயர்ந்தவர்களை சிலர் இழிவாகக் கதைக்கினம். ஆனா இப்போது அவர்களுடைய பொருளாதார உதவியிலதான் இங்கே எல்லாமே நடக்குது.... " என்றான் விநாயகமூர்த்தி.

இன்றைய நிலவுப்பேச்சு இப்போது நிறைவுக்கு வரவே எல்லோரும் எழுந்து தமது குடிசைகளுக்குச் சென்றார்கள். விக்ரர் தனது இளவட்ட நண்பர்களைச் சந்திக்க பிரசாந்தனின் குடிசைக்குச் சென்றான்.

முகாமின் பக்கவாட்டிலிருந்த வேப்ப மரம் இவர்களுக்குத் தூயகாற்றைத் தருவதுடன், பகலில் நிழலையும் தருவதால், அதன் கீழ் மணல் பரவி நிழலில் கூடிக் கதைப்பார்கள். நிலாப்பொழியும் நாட்களில் இரவிலும் கூட்ட மண்டப கூடம் இந்த வேப்பமர நிழல்தான்.

அடுத்த சில நாட்கள் மீள் குடியேற்றம் பற்றிய நினைவுகளின் மகிழ்வோடு முகாம் வாசிகள் சந்திக்கும் போதெல்லாம் உரையாடுவார்கள்.

பாதுகாப்பு வலய பிரதேசத்தில் காணியுள்ளவர்கள் மீள் குடியேற்றத்திற்குப் பதிவுசெய்யும்படி வேண்டப்பட்டபோது எல்லோரும் மகிழ்ச்சியுடன் கிராமசேவை அலுவலரிடம் பதிவு செய்தனர்.

விரைவிலேயே கடற்படை முகாமும் அகற்றப்பட்ட சேதி அவர்கள் மனதில் பாலை வார்த்தது. இது காலவரை இருண்டு போயிருந்த முகங்களின் சோகங்களெல்லாம் விடைபெற, சொந்தக் காணிகளில் குடியேறப் போகும் மலர்ச்சி அனைவரின் முகங்களிலும் தெரிந்தது. கண்ணிவெடிகள் அகற்றிய பின் குடியேறலாம்.

ஒருநாள் மகிழ்ச்சியான சேதியோடு குடியிருப்புத் தலைவர் சிவலிங்கத்தைத் தேடி விக்ரர் வந்தான். குடிசை வாசலில் நின்று "ஐயா" என்று அழைத்தான். சுகந்திதான் வெளியே வந்து எட்டிப்பார்த்து இவனைக் கண்டு பூரிப்பும் பதட்டமுமாக வரவேற்றாள்.

"வாங்கோ"

"அப்பா....?"

"அப்பாவும், அம்மாவும் குச்சவெளிக்கு ஒரு கல்யாண வீட்டுக்குப் போட்டினம்...."

"அப்ப நான் பிறகு வாறன்..."

"நில்லுங்கோ... தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம்" சுகந்தி கொக்கி போட்டி ழுத்தாள்.

"இந்த வெயில் வெக்கைக்கு தேத்தண்ணியே?"

"தேசிக்காய் கரைக்கிறன்..."

சுகந்தி எலுமிச்சை ரசத்துடன் வந்து அவனிடம் நீட்டினாள்

"நல்ல இனிப்பு.... உம்மைப்போல..."

"கொஞ்சச் சீனிதான் போட்டனான்...."

"உம்மட கை பட்டதெல்லே..." அவனது பதிலில் அவள் "கிளுக்" என்று சிரித்தாள்.

"மற்றவையின்ர கல்யாண வீட்டுக்குப் போயிருக்கினம். எப்பவாம் மகளின்ர கலியாணமா?

"அதை நீங்கள் தான் சொல்லவேணும்...."

"வேதத்தில செய்ய உம்மட அப்பா அம்மாவை ஓமாமோ?" அவளை நிமிர்ந்து பார்த்தான் விக்ரர்.

"பேதங்களற்ற தாயக விடுதலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்ற போது சாதியும், சமயமும்.... தமிழர் எல்லாம் ஒன்றுதான்...."

"ஏன் மனிதர்களே ஒரே சாதிதான்... ஆனா ஆறறிவு படைச்ச மனிசன் இனமதம் என்று அடிபட்டுச் செத்துக் கொண்டிருக்கின்றது தான் வேடிக்கை..."

"இப்ப அரசியலும், தத்துவமும் பேசவே வந்தனீங்கள்?.... அம்மா அப்பாவை போனதைக் கண்டுட்டுத்தானே வந்தனீங்கள்.....? "

"உம்மைப் பார்க்கவும் தான்... அதோட அப்பாவுக்கு ஒரு தகவல் சொல்ல வேணும் ... எங்கட காணிகளிலே மிதிவெடி அகற்றி முடிஞ்சுதாம்... கெதியில நாங்கள் மீளக் குடியேறலாம்.... எல்லைகள் தான் அழிஞ்சு போச்சு..."

"அப்ப இனி காணிக்காரிடையே எல்லைச் சண்டை தானென்று சொல்லுங்கோ...." நீண்ட நேரம் சுகந்தியுடன் கதைத்து விட்டு வெளியேறினான் விக்ரர்.

அடுத்த சில நாட்கள் அகதி முகாம் வாசிகள் தமது மீளக்குடியேற்றம் பற்றிய இனிய எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்த போது, விக்ரர் எல்லோருக்கும் ஏமாற்றமளிக்கும் தகவலோடு வந்து சேர்ந்தான்.

"எங்கட காணிகளிலை வெளி மாவட்டத்துச் சிங்களவர் அடாத்தாகக் குடியேறியிருக் கிறாங்கள்"

"இதென்ன அநியாயம்? நாங்க உடனே அரசாங்க அதிபரைச் சந்திக்க வேணும்..." சிவலிங்கம் படபடத்தான் "எந்தவித பலனும் இல்லை... அரசியல்வாதி, அதிகாரிகள், பொலிசார் எல்லோருடைய அனுசரணையுடன்தான் குடியேற்றம் நடந்திருக்கு....

"இப்ப என்ன செய்யலாம்?"

"அரச அதிபரிடம் ஊர்வலமாய்ச் சென்று மகஜர் கொடுப்போம்... சத்தியாக்கிரகம் செய்வோம்" என்று ஆவேசமாக விநாயக மூர்த்தி கூறினான்.

"1960ம் ஆண்டிலிருந்து சத்தியாக்கிரகம் செய்து என்னத்தைக் கண்டோம்....?" பிரசாந்தனும் நண்பர்களும் சலிப்போடு கூறினார்கள்.

"எதற்கும் அவர்கள் அரசாங்க அதிபரைச் சந்திக்கட்டும்... பிறகு யோசிப்பம்.." என்றான் விக்ரர்.

"சந்திக்கட்டும்... பிறகு யோசிப்பம்"

அவர்களது பிரதிநிதிகளாக சிவலிங்கம், கார்த்திகேசு, விக்ரர் ஆகிய மூவரும் அரச அதிபரைச் சந்தித்தார்கள்.

"நீங்க சொல்லுறது சரி.. அது உங்கட காணிகள் என்பதற்கு என்ன ஆதாரம்?"

"எங்கட உறுதிகள் எல்லாம் எரிஞ்சு போச்சு ஐயா...."

"அதுக்கு நான் ஒன்றும் செய்யேலாது. பிரதி எடுத்து வாங்க...." பிரதிகளுக்கு விண்ணப்பித்தார்கள்.பதிவேடுகள்சிதைந்து போனதாகப் பதில் வந்தது. எம். பீயும் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். எனினும் அத்துமீறிக் குடியேறியவர்களை எழுப்ப முடியவில்லை.

அகதி முகாம் வாசிகள் நொடிந்து போயினர். "ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ. முள்ளை முள்ளால தான் எடுக்க வேணும் ...." விக்ரர் ஆவேசமாகக் கூறினான்.

இரவு நடுசிசியைத் தாண்டிவிட்டது. எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. விக்ரர், பிரசாந் மற்றும் முகாமைச் சேர்ந்த இளைஞர்கள் கையில் கத்தி, பொல்லு முதலிய ஆயுதங்களுடன் தமது குடியிருப்புக் காணிகளில் நுழைந்தனர்.

மறுநாள்.....

பயங்கரவாதிகள் சிங்கள அப்பாவிகளின் குடியிருப்புக்களில் புகுந்து தாக்கி, கொலை செய்து தீயிட்டனர். லங்கா புவத்தை ஆதாரம் காட்டி வானொலிகளும் தொலைக்காட்சிகளும் செய்தி வெளியிட்டன. குடியிருப்புக் காணிகளில் இப்போது எவரும் இல்லை! விடியும் ... இனி விடியும்.

# கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2006 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

- சிறைப்பட்டிருத்தல் — கார்த்திகா பாலசுந்தரம் — கரவெட்டி.

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**


- தேசம் விடியவில்லை — ஓ. கே. குணநாதன் — மட்டக்களப்பு.

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

- மீள்தகவு — என். ஏ. தீரன், ஆர். எம். நௌஷாத் — கல்முனை

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| பிந்துனுவெவ | நவஜோதி ஜோகரட்னம் | இங்கிலாந்து |
| இருப்பும் செப்பும் | செ. கந்தசாமி | பருத்தித்துறை |
| புதிய வருகை | கே. எஸ். சுதாகர் | அவுஸ்திரேலியா |
| பக்கி | பிரமிளா செல்வராசா | ஹாலி - எல |
| புதைமணல் | ம. பா. மகாலிங்கம் | இணுவில் |
| பலாமரம் | பொன்னம்பலம் சுகந்தன் | கரவெட்டி |
| நிகழ்வுகளும் மீளும் கிராமமும் நிகழ்காலமும் | தர்மராஜா அஜந்தகுமார் | கரவெட்டி |
| மலினங்கள் | சிவனு மனோகரன் | ஹட்டன் |
| என்று தணியும் | ஆ. புனிதகலா | வட்டவளை |




நடுவர்கள்: திரு. கே. ஆர். டேவிட், திரு. ஆ. இரத்தினவேலோன், திரு. மு. தயாபரன்

குறிப்பு : ஒன்பதாவது இடத்தைப் பெற்ற 'மண்ணின் மைந்தர்கள்' என்ற சிறுகதை ஏற்கனவே பிரசுரமாகிவிட்டதாக அதன் ஆசிரியர் அகளங்கன் அறிவித்துள்ளார். அதனால் அக்கதை நடுவர்களால் நீக்கப்பட்டு, ஆ. புனிதகலா எழுதிய 'என்று தணியும்' என்ற சிறுகதை தெரிவு செய்யப்பட்டுள்ளது. – ஆசிரியர்

**ஞானம் 78, நவம்பர் 2006**

06

# சிறைப் பட்டிருத்தல்

1 ● கார்த்திகா பாலசுந்தரம்



**கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2006இல் முதற் பரிசு பெற்ற கதை**

*யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த கார்த்திகா பாலசுந்தரம் 25.08.1977இல் பிறந்தவர். கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நூலகத்தில் நூலகராகத் தொழில் புரியும் இவர், நூலக விஞ்ஞான மாணி தரம் I தகைமை பெற்றவர். சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் எழுதிவரும் இவரது படைப்புகள் நமது ஈழநாடு (சிறுகதை), காலச்சுவடு (கட்டுரை) ஆகியவற்றில் வெளிவந்துள்ளன. விபவி இளம் எழுத்தாளர்களுக்கான படைப்பாற்றல் போட்டியில் முதற் பரிசு (2004), நமது ஈழநாடு இரண்டாவது ஆண்டு நிறைவுச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு (2004) பெற்றுள்ளார்.*

*இவரது முகவரி : 'மூப்பியாவளவு', விக்னேஸ்வரக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு*

*இரவில ஒரு சின்னச் சத்தங் கேட்டாலும் நெஞ்சு விறைக்கத் தொடங்கியிடும். இப்ப இருக்கிற நிலமையில பயப்பிடாமலுக்கு இருக்கேலுமே? என்னவும் நடக்கலாம். ஆர் கேக்கிறது? ஒவ்வொரு கட்டத்திலயும் தப்பிவந்து கடைசியா ஏதோ ஒரு கட்டத்துக்குள்ள சிக்கி சீரழிஞ்சிடுவனோ? ஆருக்குத் தெரியும். எந்தப்பக்கம் திரும்பினாலும் தடுப்புகள். அந்தத் தடுப்புகளுக்குள்ளாலதான் திரிய விதிக்கப்பட்டவளாக நான்! எவனின்ரை பார்வையும் பிடிச்சு விழுங்கிற மாதிரித்தான் இருக்கு. அம்மா கொஞ்சம் பெருமைப் பட்டுத் தான் சொல்லுவ "எண்பத்தேழாமாண்டில சனமெல்லாம் இடம் பெயர நானும் பிள்ளையும் தனிச்சிருந்தனாங்கள். அவங்களால எந்தக்கரச்சலு மில்ல. அவங்கள் தங்கடபாடு நாங்க எங்கடபாடு" அம்மா இஞ்சவாணை! அப்ப உன்ர பிள்ளைக்கு என்ன வயது? ஆறுவயதும் முடியேல்ல. சின்னப் பெட்டை. பெரிசாத் தோற்றமில்ல. இப்ப உன்ர பிள்ளைக்கு என்ன வயது? இருபத்தைஞ்சு நடக்குது. பாக்கிற சனமெல்லாம் உன்ர மகள் ஒரு வாகனம் மாதிரி வந்திட்டாள் என்கினம்- மற்றது அப்ப இருந்த அவங்கள் மாதிரி இல்ல இப்ப இருக்கிற இவங்கள் - பாக்கிற*

**(ஞானம் 79, டிசம்பர் 2006)**

பார்வையிலயே பிடிச்சுத் திண்டுடுவாங்கள் போல இருக்கு. வெயிலேறத் தொடங்கி னோன்ன பூவரசுகளில இருந்து இறங்கி ஊர்ந்து திரியிற மசுக்குட்டியள் கணக்காக இப்ப எங்க பாத்தாலும் இவங்கள்தான். இவங்களின்ர பார்வையில இருந்து தப்பேலுமே?.... 'ஒரு நாளைக்கு முறையா அகப்பிடு அப்ப பாரன் என்ன நடக்குமெண்டு' எண்டு சொல்லுற மாதிரியிருக்கு இவங்களின்ரை பார்வையள். இவங்களைக் கடந்து சைக்கிளில போகேக்க நெஞ்சு பக்பக்கெண்டிருக்கும். ஏதாவது காது கூசிற மாதிரி என்ர அவையவங்களைக் குறிச்சுக் கொச்சைத் தனமாச் சொல்லு றதையே வழக்கமாக வச்சிருக்கிறாங்கள். நான் செவிடு மாதிரி குனிஞ்சதலை நிமிராமல் போக வேண்டியதுதான். இதைத்தவிர பாதுகாப்பான வேற வழியேதும் இருக்கோ?! அப்பா, அண்ணா எண்டு ஆரிட்டையும் சொல்லேலுமே? சொன்னாலும் அவையென்ன செய்யிறது? இவங்கட கையில படைக்கலங்கள் இருக்கு எதுகும் செய்வாங்கள். அதால என்ன நடந்தாலும் பேசாமல் பறை யாமல் குனிஞ்சதலை நிமிராமல் திரிய வேண்டியதுதான். கெம்பஸ் பெட்டையள் எண்டால் இவங்கள் வித்தியாசமாத்தான் பாப்பாங்கள், ஏதோ நாங்கள் வெடி பொருட்களை கொண்டு திரியிறம் என்கிற மாதிரி. லெக்சர்சுக்கு றூமிலயிருந்து வெளிக்கிட்டு தனியாப் போறத நினைச்சால் பயமாயிருக்கு. நானும் சசியும் இருக்கிற றூமில இருந்து கூப்பிடு தூரம்தான் இவங்கடை முகாமிருக்கு. எப்பிடியும் அதைத்தாண்டித்தான் போக வேண்டியிருக்கு. உட்பாதையளெண்டு எதுகுமில்ல. நானும் சசியும் சேர்ந்துதான் லெக்சர்சுக்குப் போறம். நாங்கள் போகேக்க அவங்கள் காத்து நிண்டு சீக்காய டிப்பாங்கள். அல்லாட்டி ஏதும் காது கூசுகிற மாதிரி நொட்டை சொல்லுறாங்கள். நாங்கள் குனிஞ்சதலை நிமிராமல்தான் போய்வாறம். சசி றூமில நிக்காத நாள்ள நான் லெக்சர்சுக்குப் போகன். ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப் போகுதெண்டு உள்மனம் சொல்லுது. இப்ப பலாலி ரோட்டால சைக்கிள்ள போகேக்க ஒரு மயானத்துக் குள்ளால போற மாதிரிக் கிடக்கு. முந்தியெண்டா ரோட் கலகலப்பாயிருக்கும் எத்தினை வாகனம் போய்வரும். புதிசு புதிசாய் கடையள் திறந்து இரவு பகலாய் ஓயாமல் வியாபாரம் நடந்து கொண்டிருக்கும். இப்பபாத்தால் எல்லாக் கடையளும் அநேகமாப் பூட்டி யிருக்கு, ஒண்டுரண்டு சைக்கிள் திருத்திற கடையளத் தவிர. இவங்கட வாகனங்கள் தான் வலுவேகமாய்ப் போய்வருகுது. இப்ப கொஞ்ச நாளா ஒருவழமை என்னெண்டா இவங்கட வாகனத்தொடரணி போய் வாறதுக்காக ரோட்டில சனங்களை மறிச்சு வைக்கிறது. மத்தியானம் பன்னிரண்டு மணிக்கும் பின்னேரம் நாலு மணிக்கும் ரோட்டில அடிக்கொருத்தனா நிக்கிறவங் களில ஒருத்தன் விசில் ஊதுவான். அதுக்குப்பிறகு ஆரும் அசையேலாது நிண்ட இடத்தில நிக்க வேண்டியதுதான். சிலநேரம் ஒரு மணித்தியாலத்திற்கு மேல நிற்கவேண்டி வரும். இவங்கட வாகனத்தொடரணி போய் முடிஞ்சாப் போலதான் சனம் போகலாம். இதனால நானும் சசியும் கன லெக்சேர்ஸைத் தவற விட்டிருப்பம். என்ன செய்யிறது? எது நடந்தாலும் பேசாமலிருக்க வேண் டியதுதான். லெக்சேர்சும் முந்தின மாதிரி கலகலப்பாயில்ல. ஏதோ செத்த வீட்டுக்கு துக்கம்விசாரிக்கப்போய்வாறமாதிரியிருக்கு. லெக்சரர்மார் தொடக்கம் பொடியள் பெட்டயள், எண்டு எல்லாரின்ர முகங் களும் இறுகிப் போய் ஒருத்தரோட ஒருத்தர் கதைக்கவும் பயந்து..... இப்படியே காலங்கழியுது. சிலநேரம் சசி வடம ராட்சியில இருக்கிற தன்ர வீட்டுக்குப் போகிடுவாள். றூமில நான்தான் தனியா இருக்க வேண்டி வரும். வீட்டுக்கார அன்ரி



இருக்கிறாதான். அவ வேளைக்கு லைட்டை நூத்திட்டுப் படுத்திடுவா. படுக்கிறதுக்கு முதல் ஒருக்கா றூமை எட்டிப் பாத்து "பிள்ளை கெதியா லைற் ஓவ் பண்ணிப் போட்டுப்படும்.படிக்கிறதெண்டா காலமை எழும்பிப் படியும் நான் படுக்கப் போறன்" எண்டிட்டுப் போகிடுவா. மனுசி படுத்ததுதான் தாமதம் குறட்டைவிடத் தொடங்கியிடும். அன்ரிக்கென்ன கவலை. வயதும் அறுபதைத் தாண்டியிடுத்து. பிள்ளையள் மூண்டும் வெளிநாட்டில. புருஷன்காரன்ர பென்சனும் கிடைக்குது. அதுக்குள்ள எங்கட வாடைக்காசும். அவ படுத்தோண்ண குறட்டை விடுகிறதுக்கு என்ன குறை? இது நான் தனிய றூமுக்குள்ள முடங்கினபடியே யன்னலையும் கதவையும் பூட்டியிட்டு இருள் விழுங்கின அறைக்குள்ள புழுங்கி அவிய கண்ணோடு கண் மூடாமல் பயந்து செத்தொண்டிருப்பன். வெளியில ஆரோ கனபேர் நடமாடுற மாதிரி இருக்கும். நாயள் வலு மோசமாக் குலைக்கும். முத்தத்துப் பிலா உதிர்க்கிற சருகுகள் நொருங்கிற மாதிரியும் சத்தம் கேட்கும். இண்டைக்கு நான் துலையப் போறன் எண்டு நினைப்பன். என்ன நடந்தாலும் ஆருக்கும் தெரியாது. கதவு தட்டுற சத்தம் ஏதும் கேட்குதோ எண்டு காதைத் தீட்டிக்கொண்டு நெஞ்சுக்குள் தண்ணி இல்லாமல் உடல் விறைக்க அங்கால இங்கால அசையவும் பயந்து மல்லாந்து கிடப்பன். இரவு எனக்குப் பாதகமாக நீண்டு கொண்டிருக்கும். வெளியில கேட்கிற சின்னச் சத்தமும் பீதியைக் கிளப்பும். பிலாமரத்தால ஏறி ஓட்டில நடந்து திரிய பூனை, ரீய்ய்... எண்ட சத்தத்தோட தொடர்ந்திரைய நிலக்கறையான். எங்கையோ இருந்து தேக்கம் பழங்களைக் கவ்விக் கொணந்து ஓட்டுக்கு மேல விழுத்தியிட்டு படக் படக் கெண்டு செட்டையடிச்சொண்டு போற வெளவால் - கிடக்கிறதுக்கிதமா முத்தத்து மண்ணை வறுகிற அன்ரியின் செல்லப் பிராணி 'ரொமி' நாய் - எல்லாம் எளிய மூதேசியள். திட்டம் போட்டுத் தாக்கிற விரோதியளப் போல இருள் விழுங்கியிருக்கிற இரவின்ர கனத்தைக் கூட்டி என்னை வெருட்டி சாக்காட்டிக் கொண்டிருக்குங்கள். ஒரு கோழித் தூக்கம்

மாதிரித்தான் என்ர நித்திரை. இடையில் கெட்ட கனாக்களும் வரும். கண்முழிச்சா நான் ஆஸ்பத்திரி பிரேத அறைக்குள்ள கிடக்கிற மாதிரி இருக்கும். நெஞ்சு வேகமா அடிச்சுக் கொண்டிருக்கும். போதாக் குறைக்கு அன்ரி விடுற குறட்டைச் சத்தம் இன்னும் பயத்தைக் கிளப்பும். றோட்டில வாகனங்கள் இரையிற சத்தம் கேட்கும். என்ர உடம்பு தன்பாட்டில விறைக்கத் தொடங்கிவிடும். பிறகு பாத்தா வாகனங்கள் வீட்டை நோக்கி வாறமாதிரியிருக்கும். இனியென்ன அவங்கள் வந்து கதவைத் தட்டப்போறாங்கள். ஐசியைப்பாத்திட்டு 'நீ வன்னியில இருந்தா வந்தனி? உன்னில எங்களுக்கு சந்தேகம் வலுக்குது. உன்னை விசாரிக்கோணும். கெதியா வா!.' என் பாங்கள். போகவேண்டியதுதான். நடந்தது ஆருக்குத் தெரியும். நான் துலைஞ்சு போகிடுவன். பிறகு பேப்பரில நியூஸ் வரும். என்னைக் காணேல்லையெண்டு. வரிக்கு வரி கடிதத்தில பிள்ளை கவனம்! பிள்ளைகவனம் எண்டு எழுதுற அம்மா தவிச்சுப்போவா!. எதுக்கும் அன்ரியை எழுப்புவமோ? அப்பிடி நினைச்சாலும் தொண்டைக்குள்ளால சத்தம் வெளிக் கிடாது. இப்பிடியே கிடந்து துலைய வேண்டியதுதான். எடியே! சசி!. உனக்கினி வைதேகி எண்டொரு சிநேகிதி இல்லையடி. அவள் துலையப்போறாள். நடக்கப் போற அசம்பாவிதம் உனக்குத் தெரியாது. நீ உன்ரை அம்மாவோட நிம்மதியா உறங்கிக் கொண்டிருக்கிறாய்!. எனக்கு முடிவு நெருங்கிக் கொண்டிருக்கு........

நான் தனிச்சுப்போய் ஒடுங்குகிற இரவுகளில இப்பிடித்தான் எப்பவும் தவிர்க்கேலாமல் செத்துக் கொண்டிருக்கிறன். பகல் தொடங்கினால் எந்தக் கணத்தில என்ன நடக்குமோ? எண்டு மனந்தவிக்கத் தொடங்கியிடும். எல்லாம் உலரத் தொடங்கியிடும். வெக்கை தோலைக் கருக்கத்தொடங்கும். ஒரு சொட்டு மழை வந்து இந்த இறுக்கத்தைக் குலைக்காதா? எண்டு மனம் ஏங்கம். மழை வாறதுக்கான எந்த அறிகுறியும் தென்படாமலிருக்கு. ஹர்த்தால், கடையடைப்பு நாள்களில பகல் முழுக்க றூமுக்குள்ளதான் ஒடுங்க வேண்டியிருக்கும். உடம்பெல்லாம் வேர்த் தொழுக வெறுந்தரையில மல்லாந்து கிடக்க வேண்டியதுதான். எதும் நோட்சை எடுத்துப் படிக்கிறதும் ஏலாது. மனதில எப்பிடிப்பதியும்? கண்கள் எழுத்து களில தாவிக் கொண்டிருக்க மனதில பயந்தருகிற காட்சியள் ஓடிக் கொண்டி ருக்கும். முகத்தைக் கறுப்புத் துணியால மறைச்சுக்கட்டிக்கொண்டு நிற்கிற அவங்கட உருவங்கள் அடிக்கடி வரும். வெறிபிடிச்சு அலையிற நாயளாக அவங்கள் சனத்தை வெட்டியும், சுட்டும் கருக்கிக் கொண்டி ருப்பாங்கள். சனங்கள் எல்லாம் அவங் களால் அடிச்சு நொருக்கப் படவும், சுட்டுக்கொல்லப்படவும் பிறந்ததுகள் மாதிரி தலையைக் குனிஞ்சு கொண்டு நிக்குங்கள்.

கொஞ்ச நாளைக்கு முன்னம் மதியந் திரும்பினாப் போல நானும் சசியும் லெக்சர்ஸ் முடிஞ்சு வாறம். அண்டைக்கு ஒரு அசம்பாவிதம் நடந்து அவங்களில இரண்டு பேர் செத்திட்டாங்கள். பலாலிறோட்டால வந்த ஒரு பஸ்சை மறிச்சு இளந்தாரியள இறக்கி கேபிள் வயறுகளாலையும், துவக்குச் சோங்குகளாலையும் நாலைஞ்சு பேர் வெறிபிடிச்ச நாயள்மாதிரி மாறி மாறி அடிச்சுத் துவைச்சுக் கொண்டிருந் தாங்கள். அப்பதான் நான் முதல் முதலா அவங்கள் அடிச்சுத் துவைக்கிறதைப் பாத்திருக்கிறன். இப்படித்தான் என்னையும் சசியையும் போல பெட்டையள் தனியப் போய் அகப்பட்டால் சட்டையளக் கீலங் கீலமாக் கிழிச்சு வாயால சொல்லேலாத வேலையள் எல்லாம் செய்வாங்கள் எண்டு நினைச்சோண்ண எனக்கெண்டால் தலை விறைக்கத் தொடங்கி யிடுத்து. ஒருமாதிரி தப்பித்தவறி றூமுக்கு வந்து சேந்தாப் போலயும் எனக்கு உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. அண்டைக்கு இரா முழுக்க அவங்களட்ட நானும் சசியும்

இன்னும் சில பெட்டையளும் தனிய அகப்படுறதும் அவுங்கள் எங்களைக் குழறக் குழற இழுத்தொண்டு போய் சட்டையளக் கிழிச்செறிஞ்சிட்டு சின்னா பின்னப் படுத்திறதுமா ஏதோ கனவெல்லாம் வந்து நான் படுக்கையில குழறியிட்டன். அடுத்த நாள் 'சசி என்னடி இரவிரவாகக் கத்திக் கொண்டிருந்தாய்' எண்டு விழுந்து விழுந்து சிரிச்சாள். எனக்கு உண்மையில கோபந்தான் வந்தது. 'பேய்ச்சி' இன்னும் நிலமைவிளங்காமல்செல்லங்கொட்டுறாள் என்டு. இவளமாதிரித்தான் இங்கை கன பெட்டையளுக்கு நிலமை விளங்கிற தில்ல. நாளுக்கு நாள் நிலமை மோசமாகிக் கொண்டு வருது. இனிமேல் பெண்ணாப் பிறந்தனாங்கள் என்ன செய்யப்போறம்? எண்ட அச்சத்துக்குரிய பெரியகேள்வி யொண்டிருக்கு. ஆரிட்டையும் இந்தக் கேள்விக்கு விடையில்லை. திறந்த வெளியில திரியிற செம்மறியாடுகள் மாதிரித்தான் எங்கடை நிலை. ஆரும் குளிருக்கு போர்க்க எங்கடை மயிரைக் கத்திரிக்கலாம். அல்லாட்டில் இறைச்சிக்காக எங்களைக் கொல்லலாம். நாங்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமலுக்குத் தலையைக் குனிஞ்சு கொண்டு திரிவம். அவ்வளவுதான். நான் அடிக்கடி நினைப்பன் இந்த கம்பஸ் படிப்பை விட்டுட்டு ஊரில போய் இருப்பமெண்டு. பிறகு மூண்டு வருசமாக் கனக்கக் காசு செலவழிச்சாச்சு. இன்னும் ஒருவருசங்கிடக்கு. பல்கலைக் கடிச் சொண்டு பேசாமல் இருப்பம் எண்ட முடிவுக்குத்தான் வாறன். என்ன செய்யிறது. எங்கை சண்டை தொடங் கினாலும் எங்களைப்போல பொம்பி ளையளுக்குத்தான் ஆபத்து காத்திருக்கும். ஆக்கிரமிக்கிறவங்களின்ர மிருகத்தனமான உணர்ச்சிகளுக்கு இரையாகிறதெல்லாம் நாங்கள்தான். அவங்கள் மாமிசத்தை நுகர்ந்த நாயள் கணக்காக அலைஞ்சு திரிவாங்கள். எப்ப சந்தர்ப்பம் வாய்க்குதோ அப்ப கடிச்சுக் குதறிப் போட்டுப் போவாங்கள். பேப்பருகளில பெரிசாச் செய்தியள் வரும். பலர் கண்டனம் தெருவிப்பினம். மருத்துவ அறிக்கையைப் பலரும் ஆவலோட எதிர்பாத்திருப்பினம். பாலுறுப்புகளில் நிகக்கீறலும் கடிகாயமும் அவதானிக்கப்பட்டிருக்கிறதா அறிக்கை வெளியாகும். வழக்குப்பதிவு நடந்து விசாரணையள் தொடங்கும். சாட்சியங்கள் பொதுவாக இருக்காது. 'சம்பவத்துக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கப்படும்' எண்டொரு கூற்று வெளியாகும். கொஞ்ச நாளைக்கு எந்த அசம்பாவிதமும் நடக்காது. பிறகு அவங்கள் பழையபடி தங்கட வேலையளத் தொடங்கியிருப்பாங்கள் காலப்போக்கில அறிக்கை வெளியிட விரும்புகிற சிலர் எழுதுவினம் 'ஆக்கிரமிப்புப் பிரதேசங் களில இப்படி நடக்கத்தான் செய்யும். கொங்கோவைப் பாருங்கோ, ஈராக்கைப் பாருங்கோ, இதெல்லாம் தவிர்க்கேலாது' எண்டு கனக்க ஆதாரங்கள் காட்டி விளக்குவினம். இதெல்லாத்தையும் நாங்கள் வாசிச்சுக் கொண்டு செம்மறி யாடுகளாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரியவேண்டியதுதான். என்னைப் போல பெட்டையளில அக்கறையுள்ள ஒரு கடவுள் இருந்தால் அவர் கனவில யெண்டாலும் வரோணும். வந்தால் நான் கேட்கிற வரம் இதுதான். எங்களுக்கு மேல் உண்மையில அக்கறையுள்ள கடவுளா நீர் இருந்தால் எங்களை உடன கிழவியாக்கிவிடும். இல்லாட்டில் பால்குடிக் குழந்தையள் ஆக்கி விடும். உம்மில நாங்கள் விசுவாசமானவளுகளாக இருப்பம். இதுகும் முடியாட்டில் எங்களைக் கல்லாக்கி விடும் அல்லது சாக்காட்டிவிடும். உமக்குப் புண்ணியங்கிடைக்கும். நாங்கள் நிம்மதி யில்லாமல் எவ்வளவு காலத்துக்கு செத்துக் கொண்டிருக்கிறது? கடவுளே கருணைகாட்டும்.'



07

மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த ஓ.கே. குணநாதன் 1960இல் பிறந்தவர். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் M.A., M.phil கல்வித் தகைமையுள்ளவர். சிறுகதை, கட்டுரை, நாவல், சிறுவர் இலக்கியம், நகைச்சுவை ஆகிய துறைகளில் எழுதி வருகிறார். இதுவரை இவரது 20 நூல்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள் வீரஆனந்தன் (சிறுவர் நாவல்) சுதந்திரம் (சிறுவர் நாவல்) ஆகியவை வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றவை. மாயக்கிழவி (சிறுவர் நாவல்) யாழ் இலக்கியவட்ட விருது பெற்றது. நரியின் தந்திரம் (சிறுவர் கதைகள்) வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய விருதும், யாழ் இலக்கிய விருதும் பெற்றது. ஒரு துளி (நாவல்) இந்தியாவின் தேவியின் கண்மணி சஞ்சிகைப் பரிசு பெற்றது. தர்மத்தின் வெற்றி (சிறுவர் நாவல்) தேசிய இளைஞர் சேவைகள்மன்ற சிறுவர் இலக்கிய விருது பெற்றது. குட்டி அணில் (சிறுவர் கதை) ஆரம்பக்கல்வி வாசிப்புக் கல்வி நூலானது. வெள்ளைக் குதிரை (சிறுவர் நாவல்), மாவீரன் புள்ளிமான் (சிறுவர் நாவல்) ஆகியவை இலங்கை அரச தேசிய சாகித்திய விருதும், வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய விருதும் பெற்றவை.

முகவரி :- 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.

# தேசம் விடியவில்லை

ஓ.கே. குணநாதன்

2

**ஊ**ரடங்குச் சட்டம் போல எங்கும் அமைதி. சன நடமாட்டமில்லை. ஆள் அரவமில்லை.

பொழுதுகூட இன்னும் முற்றாக விடியவில்லை. அரை குறையாக... புலர்ந்தது பாதி... புலராதது பாதியாக... இருட்டு தொக்கி நிற்கிறது.

அவன் அவசரமாகச் செல்கின்றான். நடையில் வேகம். திரும்பிப் பார்க்கிறான். ஒரு வாகனம் கூட வரவில்லை.எரிச்சலுடன் கால்கள் வேகமாகின்றன.

வெளிக்குளத்திலிருந்து புறப்பட்டவன், சில நிமிடங்களில் ஒரு மைல் நடந்து இறம்பைக் குளத்திற்கு வந்து விட்டான்.

இன்னும் தெரு வெறிச்சோடிக் கிடக்கிறது.

மாசி மாதத்து பனி கூட மெல்லியதாகக் கொட்டுவது தெரு விளக்கொளியில் புகைப் படலமாகத் தெரிகிறது. பனிக்குளிர் ஊசி குத்துவது போலக் குத்துகிறது.

பனிக் குளிருக்கு நடுங்கிய நாய்கள் சூட்டுக்காக தெருவில் சுருண்டு கிடக் கின்றன.

அவனுடைய சப்பாத்தோசை கேட்டதும், வேண்டா வெறுப்பாக மெதுவாகத் தலையை நிமிர்த்திப் பார்த்துவிட்டு ஒரு நாய் மீண்டும் சுருண்டு கொள்கிறது.

ஞானம் 80, ஜனவரி 2007

கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2006இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை

இறம்பைக்குளம் சந்திக்கு வந்து விட்டான்.

ஆள் அரவம் கேட்ட சென்றிக்கு நின்ற ஆமிக்காரன் புலியென்று நினைத்து பங்கருக்குள்ளிருந்து எட்டிப் பார்த்து விட்டு, ஆமை போல தலையை இழுத்துக் கொள்கின்றான்.

சமாதானச் சூழல்

இல்லையேல்… அவனைக் கூப்பிட்டு விசாரித்து… பா(B)க்கைப் பார்த்து… ஐடின்டிக் காட்டைப் பார்த்து… அவன் போன மாதிரித்தான் இருக்கும்.

தூணில் தொங்கிய லைற் வெளிச் சத்தில் கைமணிக்கூட்டைப் பார்க்கிறான்.

மணி… ஆறுக்குப் பத்து.

இன்னும் பத்து நிமிடங்களில் பஸ் புறப்பட்டு விடும்! எப்படியாவது பஸ்ஸைப் பிடித்து விட வேண்டும்!

வேகமாக நடந்தான். நடந்தான் என்பதனை விட ஓடினான் என்று சொல்ல வேண்டும். அவ்வளவு வேகம்!

பஸ் ஸ்டாண்டுக்கு வந்து விட்டான்!

தூரத்தில் வரும் பொழுதே பஸ்ஸைக் கண்கள் அழாவுகின்றன.

பஸ் இன்னும் போகவில்லை. மட்டக் களப்புப் பெயர்ப் பலகையுடன் கிடக்கிறது.

பஸ்ஸைக் கண்டவுடன் தான் நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

பஸ்ஸினுள் ஏறினான். இன்று வியாழக் கிழமையாதலாலோ என்னவோ சனம் மிகக் குறைவு. பல ஆசனங்கள் வெறுமையாகவே கிடந்தன.

பஸ் புறப்படத் தயாரானது…

“சேர்…” பின்னால் இருந்து ஒரு குரல்.

பழக்கப்பட்ட குரல்!

திரும்பினான். கண்டக்டர் பிலிப்.

போகுமிடத்தைச் சொல்லாமலே மட்டக்களப்பிற்கான ரிக்கட்டைக் கொடுக் கிறான். பழக்கதோசம்…!

என்றைக்குப் பிறந்த மட்டக்களப்பு மண்ணைத் தொலைத்து விட்டு வவுனியா மண்ணில் ஒட்டிக் கொண்டானோ… அன்று தொடங்கிய பயணம் இன்று வரை…



*அடிக்கடி பயணித்ததால் அந்த 'ரைட்டானிக்' பஸ்சும் கண்டக்டர் பிலிப்பும் உறவாகிப் போனார்கள்... இறுக்கமாகிப் போனார்கள்... குழப்ப காலத்திலே பாவப்பட்ட மக்களையும்... துன்பங்களையும் சுமந்த பஸ். அதே கண்டக்டர் பிலிப்.*

*பஸ் பயணத்தை ஆரம்பித்தது.*

*பயணித்து இரண்டு... மூன்று அடிகள் தூரம் நகர்ந்திருக்கும்... திடீரென பஸ் நின்று கொண்டது.*

*என்னவோ... ஏதோ... என்று எல்லோரும் வெளியே எட்டிப் பார்த்தார்கள்.*

*அங்கே விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் நடன ஆசிரியை வேணி ரீச்சர் பஸ்ஸில் ஏறிக்கொண்டிருந்தாள்.*

*மனத்திலும் முகத்திலும் பஸ்ஸைத் தவறவிடப் பார்த்தோமே என்ற ஏக்கம்! பரபரப்பு.*

*அவனுக்கு எதிரே இருந்த சீற்றில் அமர்ந்தாள். அவனைப் பார்த்து ஒரு மெல்லிய சிரிப்பு. 93 இலிருந்து ஒன்றாய்ப் பயணித்த உறவாய் மலர்ந்தது.*

*"என்ன ரீச்சர் இண்டைக்குப் போறீங் கள்...?"*

*"சனிக்கிழமை ஒரு டான்ஸ் புறோகிறம் இருக்குது. இண்டைக்கும் நாளைக்கும் றிகேசல் பார்க்க வேணும். அதுதான் போறன் சேர்... நீங்கள்...!"*

*"இண்டைக்கு கச்சேரியில் ஒரு மீட்டிங் இருக்குது. கட்டாயம் அட்டன் பண்ண வேணும். அதுதான்..."*

*சம்பாசனைகள் தொடர்ந்தன.*

*பஸ் வேகமாகச் சென்று கொண்டி ருந்தது.*

*ஈரற்பெரியகுளம் சென்றிப் பொயின்ரை நெருங்கியதும் அவனது கை அவனையும் அறியாமல் பிற்பக்கட்டில் இருந்த பேர்ஸை ஒரு தடவை தட்டிப் பார்த்தது. அடையாள அட்டைக்காக ஏங்கியன விரல்கள்.*

*குழப்ப காலத்தில் என்றால் சென்றிப் பொயின்றுக்கு பத்துப் பதினைந்து யார்களுக்கு முன்னால் பஸ்ஸை நிப்பாட்ட வேணும். பஸ்ஸில் வந்த சனங்கள் எல்லாம் மூட்டை - முடிச்சுகளோட சென்றிப் பொயின்றுக் குள்ளால் கால் மைல் தூரம் நடக்க வேணும்.*

*பாஸ் நடைமுறை வேறு. பாஸ் இல்லாத ஆக்கள் அங்கால போகவும் இயலாது. நிரந்தரப் பாஸ்... ஆறு மாதப் பாஸ்... மூன்று மாதப் பாஸ்... வன் டே பாஸ்... இன்னும் என்னென்னவோ பாஸெல்லாம்.*

*இவையெல்லாவற்றையும் அந்தந்த கவுண்டரில் பதிந்து... மூட்டை - முடிச்சுக் களைச் செக் பண்ணி... விசாரணைகள் முடிந்து... ஒருவாறாக மீண்டும் பஸ் புறப்பட ஒரு மணி நேரமாவது செல்லும்.*

**நடுறோட்டில் அபாயச் சமிக்கையாக பெரியதொரு தென்னங்குற்றி. பஸ்ஸினால் போக முடியவில்லை. அதற்கிடையில் பளீர்... பளீர்... கல்லெறி வீச்சுக்கள். பஸ்ஸின் கண்ணாடிகள் கல்லெறிக்கு இரையாகிப் போயின. சனங்கள் அல்லோலகல்லாலம்! சிலர் பஸ்ஸை நோக்கி ஆயுதங்களுடன் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். சிலருடைய கைகளில் பெற்றோல் கலனும் பொல்லும்... சனங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களின் உயிர்கள் இழையில் ஊசலாடிக் கொண்டிருந்தன.**

ஆனா... இன்றைக்கு பிரபா - ரணில் செய்த உடன்படிக்கை ஒப்பந்தத்தால்... ஒரு கரைச்சலும் இல்லாமல் பஸ் போய்க் கொண்டிருந்தது.

பஸ் வேகமாக வேகமாக ஓட, இன்னும் வேகமாக ஓடாதா என்றிருந்தது அருணனுக்கு. அவனுடைய எண்ண மெல்லாம் எவ்வளவு விரைவாக கந்தோ ருக்குப் போக முடியுமோ போய் விட வேண்டும் என்றிருந்தது.

பதினொரு மணிக்காவது போனால் ஒரு மாதிரி லீவு போடாமல் சமாளிச்சுப் போடலாம்!

வேகமாக வந்த பஸ் வாகனேரி வளைவைத் தாண்டியது.

வயல்வெளிகளையும்தாண்டிதொலை தூரத்திலே காகித ஆலைக் கட்டிடங்கள் தெரிந்தன.

கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

சரியாகப் 10 மணி.

அப்பாடியோவ்...!

வாழைச்சேனை வந்து விட்டது.

குழப்ப காலத்தில் என்றால்... வவுனியா விலிருந்து ஏழு மணிக்குப் பிறகு பஸ் வெளிக்கிட்டு... வழி நெடுக ஒவ்வொரு சென்றிப் பொயின்டிலையும் பேக்குகளைத் தூக்கிக் கொண்டு ஏறி... இறங்கி... ஐடின்டிக்காட் காட்டி அலுத்து... குண்டும் குழியும் நிறைந்த ‘பை’ றோட்டால் குலுக்கி அடித்து, சுற்றிச் சுற்றி ஓடி.... அதைவிட ரோட்டில் நடக்கிற திடீர்ச் செக்கிங்கிற்கு முகம் கொடுத்து... றோட்டில ஏதும் குண்டு வெடிப்பென்றால் அது வேற... பிக்கட்டிங் நாளென்றால் பஸ்ஸை றோட்டோரத்தில் நிற்பாட்டிப் போட்டு பயந்து பயந்து வாகனத் தொடர் போக மட்டும் காய்ந்து கிடந்து... சீ... என்று போகும்!

எல்லா அவலத்தையும் தாங்கி ஆகக் குறைந்தது 5 மணிக்குத்தான் மட்டக் களப்புக்கு போகலாம். ஒரு நாள் பயணம்!

பஸ் ஓட்டமாவடிப் பாலத்தினுள் நுழைந்தது.

இனி மட்டக்களப்பிற்குப் போன மாதிரித்தான்! மனம் மகிழ்ச்சியில் குதித்தது.

ஒரு கணந்தான்!

பஸ் பாலத்தைக் கடந்து வெளியே வந்ததும் அவர்கள் கண்ட காட்சியினால் நிலைகுலைந்து போனார்கள்.

தொலைவில் நிகழும் அவலம் ஏதோ ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்து கொண்டிருப் பதனைக் கட்டியம் கூறியது.

ஓட்டமாவடி.

அடிக்கடி முஸ்லிம் - தமிழ் கலவரம் நிகழும் களம்.

றைவர் ரவிக்கு என்ன நடக்கிறது என்று புரிந்து விட்டது. ஆனால் என்ன செய்வது என்றுதான் புரியவில்லை.

பாலத்தினுள் வர முன்னர் என்றால் திரும்பி ஓடியிருக்கலாம். இனி பஸ்ஸைத் திருப்பிக் கொண்டு ஓடவும் முடியாது.

இதயம் அல்லாடியது.

அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சம் கண்களில்...!

இனியும் தாமதிக்க முடியாது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு போவதைத் தவிர வேறு வழியில்லை.

நிமிர்ந்து பார்த்தான். கடைத்தெரு ஆள் அரவமற்று வெறிச்சோடிப் போய்க் கிடக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித நிழலே இல்லை!

எல்லோருடைய உயிரையும் சுமந்து கொண்டான். பஸ்ஸை வேகமாகச் செலுத்தினான்.

கடைத் தெருவிற்கு வந்து விட்டான்! மனிதவாடை மருந்துக்குமில்லை!!

நடுறோட்டில் அபாயச் சமிக்கையாக பெரியதொரு தென்னங்குற்றி. பஸ்ஸினால் போக முடியவில்லை.

அதற்கிடையில் பளீர்...பளீர்...கல்லெறி வீச்சுக்கள். பஸ்ஸின் கண்ணாடிகள் கல்லெறிக்கு இரையாகிப் போயின.

சனங்கள் அல்லோலகல்லோலம்!

சிலர்பஸ்ஸைநோக்கிஆயுதங்களுடன் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். சிலருடைய கைகளில் பெற்றோல் கலனும் பொல்லும்...

சனங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களின் உயிர்கள் இழையில் ஊசலாடிக் கொண்டிருந்தன.

இனியும் பஸ்ஸினுள் இருந்தால் உயிர் மட்டுமல்ல, ஒரு பிடிச் சாம்பர் கூட மிஞ்சாது என்பதனை உணர்ந்தான் அருணன்.

பஸ்ஸினுள் இருந்து இறங்கி ஓட நினைத்தான்.

முன் சீற்றில இருந்த வேணி ரீச்சர் அவனை வேதனையுடன் பார்த்தாள். அவளின் கண்கள் பயத்தில் பனித்திருந்தன. அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

“கெதியா இறங்குங்க ரீச்சர்”

அவசரத் தொனியில் கத்தியபடி, அவளையும் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு பின் கதவால் வெளியே பாய்ந்தான்.

எங்கேயாவது ஓட வேண்டும். எங்கே ஓடுவது? திசை தெரியாமல் திண்டாடினான். நெஞ்சு பதறித் துடித்தது.

அவர்கள் தப்பி ஓடுவதைக் கண்ட சிலர் அவர்களைத் துரத்திக் கொண்டு ஓடிவருவது தெளிவாகத் தெரிகிறது.

அவர்களின் கைகளில் பட்டால் கசாப்புக் கடைகளில் தொங்கும் ஆடு, மாடுகளின் நிலைதான் அவர்களின் நிலையும்.

அவளையும் இழுத்துக் கொண்டு குறுக்குத் தெருவால் ஓடினான். வல்லூறுக்குப் பயந்த கோழிக் குஞ்சைப் போல நடுங்கினாள். அவனுக்கும் அதே நிலைதான்!

அவர்களும் அவர்களைத் துரத்திக் கொண்டே ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

‘டுமீர்…’

வெடியோசை! அந்த ஊரே நடுங்கியது - அதிர்ந்தது.

திடுக்கிட்டுத் திரும்பினார்கள். அவர்களைத் துரத்தி வந்தவர்களைக் காணவில்லை.

ஆனால்…அடாவடித்தனமான அரசியல் நடுத்தெருவில் பகிரங்கமாக அரங்கேறிக் கொண்டிருந்தது.

அவர்களைச் சுமந்து வந்த பஸ் குண்டு வீச்சுக்கு இரையாக, தீ நாக்குகள் வளர்ந்து கொண்டே சென்றன. பஸ் எரியும் கரும் புகைப்படலம் வானத்தில் தொங்குகிறது.

அவர்கள் மயிரிழையில் தப்பி விட்டார்கள்…! பாவம்… கண்டக்டரும்… றைவரும் என்ன ஆனார்களோ!

பஸ்ஸினுள் இருந்தவர்களின் பதறும் குரல்களும்… அழுகையின் அலறல்களும்… மாடு வெட்டுகின்ற மடுவத்திலே கேட்கின்ற மரண ஓலமாகக் கேட்கின்றன.

உயிர் வலிக்க ஓடுகிறார்கள்.

டயருடன் சேர்ந்து உயிர்களும் உருகி எரியும் பிணவாடை துரத்துகிறது.

இனி… தெருவால் ஓடிப் போனால் அவர்களுக்கும் அதே நிலைமை தான்!

சேறும் சகதியும் நிறைந்த தெருவோரக் கானுக்குள் பாய்ந்து யாருக்கும் தெரியாமல் குனிந்தபடி ஓடுகின்றார்கள்.

ஒரு சின்ன ‘வோக்கு’ - கொஞ்சம் பாதுகாப்பான மறைவான இடம். அங்கே இங்க ஓடுறத விட … அதற்குள் மறைந்து கொள்ளுறது கொஞ்சம் பாதுகாப்பு. ஓட்டுக்குள் சுருண்டு கொள்ளும் நத்தை போல இருவரும் அதற்குள் சுருண்டு கொள்கிறார்கள்.

கண்ணீரும் பெருமூச்சுக்களும் அந்த இடத்தை நிறைக்கின்றன. சுவாசத்தின் ஓசைகள் கூட வெளியே கேட்டு விடுமோ என்ற பயம்.

ஒவ்வொரு கணங்களும் ஒவ்வொரு யுகங்களாக கழிந்து கொண்டிருந்தன. பொழுதை இருள் கௌவாதா என்று ஏங்கின. கடவுளை இறைஞ்சின.

பொழுது விடைபெற்றது. இருள் ஒட்டிக் கொண்டது. இரவோடு இரவாக ஓட்டமாவடி எல்லையை விட்டு வெளியேறிவிட நினைத்தான். ஆனால் அவன் போகவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் இன்னும் அந்த இடத்தை விட்டு அகன்றிருக்க மாட்டார்கள் என்று அவனுக்குத் தோன்றுகிறது.

அதே வேளையில் இன்னும் அந்த வோக்குக்குள் கிடப்பது ஆபத்தானது என்பதனை உணர்ந்தான். அந்த வேளையில் தான் அவனுடன் வேலை செய்யும் நண்பன் ஹனீபாவின் வீடு அருகில் இருப்பது நினைவுக்கு வருகிறது.

அவனுடைய வீட்டிற்குப் போனால், அவன் எப்படியும் அவர்களைக் காப்பாற்று வான். மனதில் நம்பிக்கையின் கீறல்கள்!

வெளியே எட்டிப் பார்த்தான். தெருவே மயானமாகக் கிடக்கிறது. ஆள் அரவம் எதுவுமில்லை.

இருளோடு இருளாக ஹனீபாவின் வீட்டை நோக்கி நடைப்பிணங்களாக வெற்றுடல்களாக நடந்தார்கள்.

ஹனீபாவின் வீட்டு முன் கதவு பூட்டிக் கிடக்கிறது. உள்ளே ஒரு சின்ன வெளிச்சம் மட்டும் தெரிகிறது.

கதவுக்கு நோகாமல் முன் கதவில் மெல்லத் தட்டினான்.

கதவு திறந்து கொண்டது.

ஹனீபா அந்த நேரத்தில் அவர்களை எதிர்பார்க்கவில்லை. அதுவும் அந்தக் கோலத்தில்! பயத்தால் வெளிறிய முகங்கள்... கலைந்த கேசம்... சேறு ஒட்டிய உடல்கள்...

அவர்களுடைய கோலங்கள் அவர் களுக்கு நடந்த அவலத்தைச் சொல்லாமலே சொல்லுகிறது.

இன முரண்பாடுகள், இன நல்லுறவுப் பாலம், இன நல்லுறவு இலக்கிய விழா... இப்படியான இன உறவு நிகழ்வுகளைத் திட்டமிட்டு நடாத்திய நண்பனுக்கா இந்த நிலைமை!

அவனுக்கே இந்தநிலைமையென்றால்... ஒன்றுமே தெரியாத அப்பாவிச் சனங்களின் நிலை...?

இன உறவு என்றும் இன ஒற்றுமை என்றும் நெஞ்சு வெடிக்கக் கத்துவதனால் கிடைத்த பயன்? வெறும் வாய் வெடிப்புத் தானா...!

அவனால் ஜீரணிக்க முடியவில்லை. துடித்துப் போனான்.

அருணன் நடந்ததைச் சொல்ல எண்ணி னான். முடியவில்லை... கண்ணீருக்கிடையே வார்த்தைகள் கரைந்து போயின.

இருவரையும் உள்ளே அழைத்துக் கொண்டு, கதவை அடித்துச் சாத்தினான். அவன் தன்னுடைய சமூகத்தில் கொண்டி ருந்த கோபம், அந்தக் கதவை அடித்துச் சாத்திய வேகத்திலே வெளியேறியது.

மண்டபத்திலே கிடந்த கதிரையிலே தொப்பென விழுந்தார்கள் இருவரும். அவர்களுடைய நடுக்கமும் பயமும் இன்னும் தணியவில்லை. நெஞ்சங்கள் பட படத்துக் கொண்டேயிருந்தன.

**பரீதா கொடுத்த ஹவாயாவை உடுத்திக் கொண்டு சோலினால் தலையை மூடி முகத்தை மறைத்தாள். அவளுடைய அழகிய முகமும் சிவந்த வெள்ளையும் மெல்லிய தோற்றமும் மாற்றங்காண முடியாத முஸ்லிம் பெண்ணாகவே காட்டின. பரீதா கொடுத்த அடையாள அட்டையையும் வாங்கினாள். அந்த நிழல்படம் கூட அவளைப் போலவே இருந்தது. ஒட்டுமொத்தமாக இருவரும் அசல் முஸ்லிம்கள் போலவே இருந்தார்கள். இனிப் போகும் வழியில் அவர்களை யாரும் தமிழர்களாக அடையாளம் காண முடியாது. அடையாளம் கண்டால் கூட அந்த அடையாள அட்டைகளைக் காட்டித் தப்பி விடலாம். நம்பிக்கைகள் வலுவடைந்தன.**

ஹனீபாவுக்கு அவர்களை ஆற்றுகைப் படுத்த வேண்டும் போல இருந்தது. அவர்களுக்கும் அது தேவையாக இருந்தது.

அவனும் எதிரேயிருந்த கதிரையில் அமர்ந்தான்.

அருணனுக்கு நடந்த சம்பவங்களை யாரிடமாவது சொல்லி வாய்விட்டு அழ வேண்டும் போல இருந்தது. இல்லையேல்... நெஞ்சுக்குள்ளே அழுத்திக் கொண்டு கனத்துக் கிடக்கும் வேதனையினால் நெஞ்சம் வெடி குண்டாக வெடித்துச் சிதறி விடும்.

நிகழ்வுகளை அடுக்கிக் கொண்டே போனான் அருணன்.

ஹனீபாவின் கண்களில் ஆச்சரியக் குறிகள்!

இவர்கள் எல்லாம் ஒரு மனிதர்களா...! மிருகத்திலும் கேவலமானவர்கள்..!! பஸ்ஸை எரிக்கிறதாலும் சனங்களைக் கொல்லுற தாலும் என்னத்தைக் காணப் போகிறார்கள். இப்படியாக ஆள் மாறி ஆள் பஸ்ஸையும் சனங்களையும் எரித்துக் கொண்டு வந்தால், நாளைக்கு மிஞ்சப் போறது எரிந்து எரிந்து கருகிப்போன ஒரு தேசந்தான். சீ...! வெட்கமாக இருக்குது...

ஹனீபாவின் இதயம் வேதனையில் துடித்தது.

இருவருக்கும் தேநீரைக் கொண்டு வந்து கொடுத்தாள் ஹனீபாவின் மனைவி பரீதா. இரத்தக் கறைகளினால் எழுதப்படும் வரலாறுகள் அவளின் செவிப்பறையை எட்டியிருக்க வேணும். அவளுடைய கண்களின் கதவுகளினூடாகவும் கண்ணீர்.

ஒரே தாகம்... பசி...

தேநீரின் இரண்டு மிடறை விழுங்கி னார்கள்.

தெருவிலே இனம் புரியாத சத்தம்.

அந்தத் திடீர்ச் சத்தம் அவர்களையும் அறியாமல் ஒரு வித பய உணர்வை ஏற்படுத்தியது. கையில் இருந்த தேநீர்க் கோப்பைகள் கிடுகிடுவென நடுங்கின.

'கிறீச்' என்று கேற் திறக்கும் ஓசை.

இருவருக்கும் உயிரே போனது போல இருந்தது.

"என்ட கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் உங்களை யாருமே ஒன்றும் செய்ய முடியாது. அறைக்குள்ள போங்க...?" மெதுவாகச் சொன்னான் ஹனீபா.

அரவம் எழும்பா வண்ணம் அறை யினுள் போனார்கள்.

ஹனீபா கதவிலுள்ள திறப்பு இடுக்கி னூடாகப் பார்த்தான். கொலைக் கருவி களுடன் சிலர் நிற்பது மங்கலாகத் தெரிகிறது.

கதவைத் தட்டினார்கள். கதவு உடைந்து விடுகின்ற வேகம்.

ஹனீபா கதவைத் திறந்தான்.

அவனுடைய பார்வை அவர்களை நோக்கி "என்ன?" என்று கேட்பது போல இருந்தது.

"இங்க யாராவது வந்தார்களா?" கடுஞ்சொற்களை அவனை நோக்கி வீசி னார்கள்.

அவன் "இல்லை" என்றான்.

"சரி." போனார்கள்.

ஆனாலும்...

இரவு முழுவதும் ஒருவித இனம் புரியாத சத்தம். தெருநாய்களின் ஓலம்...! தெருநாய்களுடன் சேர்ந்து ஊர் நாய்களின் அரவம்...!

மோப்பம் பிடிக்கும் நாய்கள் போல சிலர் அடிக்கடி வீட்டை சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

அரவம் கேட்கும் ஒவ்வொரு தடவை யும் அருணன் திறப்பின் இடுக்கினூடாக வெளியே பார்ப்பான். தெருவில் குருதி தோய்ந்த கருவிகள் தோளில் தொங்க சிலர் இரவு முழுவதும் அலைந்து கொண்டி ருந்தார்கள்.

பல தடவைகள் கதவைத் தட்டி னார்கள். கதவு தட்டப்படும் ஒவ்வொரு பொழுதும் வேரோடு உயிரைக் கிள்ளி எறிவது போல நெஞ்சு வலிக்கும். வேணியின் கண்கள் அழுதழுது கண்ணீரிலே ஊறிப் போய்க் கிடந்தன.

இரவு முழுவதும் அச்சமூட்டுவதாகவே கரைந்தது.

இரவு விடை பெற்றது.

இரவு விடைபெற்ற கையோடு தகவல் அறிந்து வர வெளியே போனான் ஹனீபா.

நேரம் பதினொரு மணியை நெருங்கிய போதும் அவன் இன்னும் வீடு திரும்ப வில்லை.

ஊர்க்குருவி போல ஊரெல்லாம் சுற்றினான்.

வன் செயல்கள் முற்றுப் பெறவில்லை. குழம்பிய ஊர் இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. நிலைமை இன்னும் மோசமாகலாம் எனச் செய்திகள் கசிந்தன.

அந்தச் செய்திகளைச் சுமந்து கொண்டு பதினொரு மணியளவில் வீட்டிற்கு வந்தான்.

அவனுக்கு ஒரே சிந்தனைக் குழப்பமாக இருந்தது. இனியும் அவர்களை வீட்டில் வைத்திருந்தால் அவனே அவர்களைக் கொலைக் களத்திற்குக் கொண்டு போய்க் கொடுப்பது போலாகிவிடும்.

அவர்களின் உயிரைத் தக்க வைப்ப தற்கு ஒரேயொரு வழி மட்டுந்தான் இருந்தது.

இன்று வெள்ளிக்கிழமை பன்னிரண்டு மணிக்கு எல்லோரும் பள்ளிக்குத் தொழு கைக்குப் போய்விடுவார்கள். அந்த நேரம் எந்த வித அசம்பாவிதமும் நடக்காது. வன்செயல் சூன்ய நேரமாக இருக்கும். அந்தச் சமயம்... 'பாங்கு' சொல்லும் நேரம் பார்த்து எல்லையைக் கடந்து விட்டால்...

அருணனுக்கு நிலைமையைக் கூறினான் ஹனீபா... அவனுக்கும் சரி எனவே பட்டது.

பள்ளித் தொழுகைக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அருணன் ஹனீபாவின் வெள்ளைச் சரத்தையும் வெள்ளைச் சேட்டையும் உடுத்துக் கொண்டான். தொழுகையின் போது அணியும் வெள்ளைத் தொப்பி யையும் அணிந்தான். முழு முஸ்லிம் போலவே இருந்தான்.

அவனுடைய அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு தன்னுடைய அடையாள அட்டையைக் கொடுத்தான் ஹனீபா. அந்த அடையாள அட்டையைப் பார்த்தான் அருணன். இருவரும் இரணைப் பிள்ளைகள் போலவே இருந்தார்கள். சின்ன வயசில் எடுத்த அடையாள அட்டை உருவம் சிதைந்து அவனுடைய உருவம் போலவே தோன்றியது. இனி அவனை முஸ்லிம் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது.

பரீதா கொடுத்த 'ஹவாயாவை' உடுத்திக் கொண்டு 'சோலினால்' தலையை மூடி முகத்தை மறைத்தாள். அவளுடைய அழகிய முகமும் சிவந்த வெள்ளையும் மெல்லிய தோற்றமும் மாற்றங்காண முடியாத முஸ்லிம் பெண்ணாகவே காட்டின. பரீதா கொடுத்த அடையாள அட்டையையும் வாங்கினாள். அந்த நிழல்படம் கூட அவளைப் போலவே இருந்தது.

ஒட்டுமொத்தமாக இருவரும் அசல் முஸ்லிம்கள் போலவே இருந்தார்கள். இனிப் போகும் வழியில் அவர்களை யாரும் தமிழர்களாக அடையாளம் காண முடியாது. அடையாளம் கண்டால் கூட அந்த அடையாள அட்டைகளைக் காட்டித் தப்பி விடலாம். நம்பிக்கைகள் வலுவடைந்தன.

'பாங்கு' சொல்லுவதற்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன.

ஹனீபா கேற்றைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

ஆள் அரவம் எதுவுமில்லை!

"சரி வாங்க..."

அருணன் ஹனீபாவின் பைசிக்கிளை உருட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

வேணி பைசிக்கிளில் ஏறினாள்.

பைசிக்கிள் புறப்படுமுன் இருவரும் திரும்பி இருவரையும் பார்த்தனர். கண்ணீர்த் திவலைகளின் திரைகளினூடாக இருவரும் மங்கலாகத் தெரிந்தனர். பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றனர்.

ஒருவாறு பிரதான வீதிக்கு வந்து விட்டனர்.

தெருவைக் கடைக்கண்ணால் பார்த் தார்கள்.

அங்கே.

அவர்களைச் சுமந்து வந்த பஸ் கருகிப் போய்க் கிடக்கிறது. அந்த பஸ்ஸைப் போல இன்னும் பல... சிதைந்து போன வெற்றுடல்கள் தெருக்கரையில் அநாதர வாகக் கிடந்து எட்டிப் பார்க்கின்றன. பிண நாற்றம் இன்னும் அடங்கவில்லை. தெருவெல்லாம் இரத்தச் சகதியாகி சிவந்த கானல் நீராய்... அங்கொன்றும் இங்கொன்றுமாக அடையாளம் தெரியாத எலும்புத் துண்டுகள்...

காட்சிப் பயத்தில் மனம் உதைக்க, கொஞ்சம் வேகமாக பைசிக்கிளை ஓட்டினான்.

தங்களை யாரும் அடையாளம் கண்டு விடுவார்களோ என்று பயந்தார்கள். ஆனால், தொழுகைக்குச் செல்லும் பரபரப்பில் அவர்களை யாரும் அடை யாளம் கண்டு கொள்ளவில்லை.

சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு பள்ளிவாசலில் இருந்து பாங்கோசை கேட்டது. அந்த நேரம் ஓட்டமாவடி எல்லையைத் தாண்டி கறுவாக்கேணி எல்லைக்குள் நுழைந்தார்கள்.

இனிப் பயமில்லை. தமிழூருக்கு வந்து விட்டார்கள். போன உயிர் மீண்டும் திரும்பி வந்தது போல... நீண்ட நிம்மதிப் பெருமூச்சு அடி மனதில் இருந்து வந்து காற்றில் கலந்தது. தலைகளில் இருந்த தொப்பியையும் சோல்லையும் கழற்றி கையில் எடுத்தனர்.

அச்சமும் பதட்டமும் நடுக்கமுமின்றி சுதந்திர மண்ணில் பைசிக்கிளை ஓட்டி னான்.

கறுவாக்கேணிச் சந்தியிலே ஆல மரத்தின் கீழே ஒரு கும்பல் நிற்பது தெரிகிறது.

அவன் எந்தச் சலனமுமின்றி பைசிக் கிளை ஓட்டினான். அவர்களைப் பற்றி அக்கறை கொள்ளவுமில்லை.

பைசிக்கிள் அவர்களைத் தாண்டியது. அவர்களை நோக்கிச் சிலர் ஓடி வந்தார்கள்.

தமிழனுக்குத் தமிழன் ஏன் பயப்பட வேண்டும்?

அவன் பயப்படவில்லை.

ஒரு காலைப் பெடலிலும் மறுகாலை நிலத்திலும் ஊன்றினான். பைசிக்கிள் நின்றது.

ஒருத்தன் ஓடி வந்து பைசிக்கிள் கெண்டிலைப் பிடித்தான்.

"டேய் காக்கா, எங்கடா போறாய்...!"

"செய்யுறதையும் செய்து போட்டு தமிழூருக்குள்ளாள போறயா...!"

"காக்கா எங்கட ஊருக்குள்ளால போறத்திற்கு உனக்கு எவ்வளவு துணிவு இருக்க வேணும்...!"

அவனை நோக்கி வார்த்தைகளை அள்ளி வீசினார்கள்.

"நாங்கள் முஸ்லிம் இல்ல... தமிழர்கள்" என்றான் அருணன்.

அவர்கள் நம்புவதாக இல்லை.

பலமுறை சொன்னான். ஒரு முறையும் நம்புவதாக இல்லை.

அவர்கள் வேடிக்கைப் பொருளா னார்கள்.

அவர்களை எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள்.

"நீ தமிழனென்றா... எடுடா உண்ட ஐடின்டிக்காட்ட...!"

காடைத்தனமாக அடையாளங்களைத் தோண்டினார்கள்.

"ஹனீபா..."

"பரீதா..."

முதுகுச் சட்டைக்குப் பின்னால் இருந்து இழுத்தான் ஒருவன் வாளை. குருதி காயாத வாள் பளபளத்தது.

இருவரும் நடுங்கினார்கள்.

உயிர்கள் உதிர... பைசிக்கிள் கீழே சரிந்து விழுந்தது.

❍



கல்முனை சாய்ந்தமருதைச் சேர்ந்த என்.ஏ. தீரன் (ஆர்.எம். நௌஷாத்) 1960இல் பிறந்தவர். தபால் அதிபராகத் தொழில் புரியும் இவர், பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பின் முதற் கலைமாணி கல்வித் தகைமையுடையவர். கவிதை, சிறுகதை, விமர்சனம் ஆகிய துறைகளில் எழுதி வருகிறார். பிரான்ஸ் (தினக்குரல்) தமிழ்ஒலி வானொலியின் நாடகப் போட்டியில் மூன்றாம் பரிசும் சான்றிதழும், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசும் (தங்கப் பதக்கம்) பெற்றுள்ளார்.

இவரது முகவரி : தபால் அலுவலகம், கல்முனை.

# 08

**கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2006இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை**

3

# மீள்தகவு

(ஞானம் 81, பெப்ரவரி 2007)

- பேரு...?
- முகம்மது யூஸுப் அப்துல்லா.
- ஊரு?
- காங்கேயன் ஓடை. மட்டக்களப்பு.
- என்ன விஸயமா வந்தீங்க?
- ஸேர்! போன மாசமும் வந்தநான். அங்கயீன ருக்கான உதவிக் காசி வெசயமா... ந்தாயிருக்கு ஸேர் பைல் நம்பர்...
- ஙா... செரி... செரி... ஆனா உங்கட பைலில் 'டயக்னஸிஸ் கார்ட்' ல்லையே...
- காட்டா? போன மாசந்தானே ஸேர் ரெண்டு 'ரிப்போட்டு' 'செட்டிகட்டு' குறையுதுண்டு கொண்டு வந்து தந்துட்டன் ஸேர்!
- ஓம். அது சரி... ஆனா அதுல 'எப் ஐ போம்', 'பேத் சீ, ஜீயெஸ் ரெக்கமன்டன்ஸ்' 'பொலிஸ் என்ட்ரி' எல்லாம் சரி. ஆனா 'டயக்னஸிஸ் கார்ட்' ல்லை.
- அப்பிடியெண்டா...?
- 'ஒஸ்பிற்றல்'ல அனுமதிச்சதுக்கு தாற ரிப் போர்ட்டு! 'டயக்னஸிஸ் கார்ட்'
- அதுக்கு நான் என்ன ஸேர் செய்யனும்?
- ஒஸ்பிற்றல்ல எடுக்கனும். எடுத்துட்டு வாங்க.
- ப்ப எப்பிடி ஸேர் எடுக்கிற? ஊருக்கு போய் வெரணும். ரெண்டு மூணு கௌமயாயிடும் ஸேர்.
- அதுக்கு நான் என்ன செய்யிற? கார் ஒண்டு பிடிச்சித்தரவா? போய் எடுத்துட்டு அடுத்த கௌம ல்லாட்டால் அடுத்த மாதம் வாங்க!
- அடுத்த மாசமா? என்ன ஸேர் இது? கை வௌங்காத என்னப் போட்டுப்பிடி அலைய

**என்.ஏ. தீரன் ஆர்.எம். நௌஷாத்**

வெய்க்கறீங்க... எம்பத்தாறு எனக் கலவரத்துல எண்ட கை பிஞ்சி பறந்த ஸேர்! பாருங்க ஸேர்!

- என்ன மடத்தனமா பேசறீங்க? மிஸ்டர்! டயக்னஸிஸ் கார்ட ல்லாம 'மெற்றர' எப்பிடி 'சப்மிற்' பண்ற? 'எக்கவுண்டன்' மூலக் கொதியன். 'பைல்' மூஞ்சிக்கு வெரும். எறிவான்! உனக்கென்ன? எனக்குத்தானே?

- செரி... செரி... கோவிக்காதீங்க ஸேர். எடுத்திட்டு வாறன்

❖❖❖

- பேரு?
- முகம்மது யூஸுப் அப்துல்லா
- ஊரு...?
- காங்கேயன் ஓடை. மட்டக்களப்பு.
- எப்ப நடந்த?
- எம்பத்தாறாமாண்டு. எனக்கலவரத்துல ஐயா!
- எங்க?
- ஊருலதான் ஐயா.
- அதில்ல... எந்த ஒஸ்பிற்றல்ல மொதல்ல இருந்த நீர்?
- ஞ்சதான்... ஏத்தி உட்டாங்க ஐயா.
- திகதி தெரியுமா?
- எம்பத்தாறு ஏப்புரல் பதினாறுல் லாட்டி பதினேழு.
- தேடனும். எப்ஆர்ஐ முழுதும் தேடனும். 'சப்ஜெக்ட் கிளார்க்' லீவு. அடுத்த கிளம வாங்க...
- அடுத்த கிளமயா? எனக்கி அவிசிரமா வேணும் ஐயா. நாளைக்கி கொழும்புக்கு அனுப்பனும்.
- அதுக்கு நான் என்னப்பு செய்யிற? நீர் முந்தி வந்திருக்கனும்!
- முந்தி அங்க கேக்கல்ல ஐயா.
- அங்க கேக்காததுக்கு நானா பள்ழி? அடுத்த கௌமை வாருமன்!
- கொஞ்சம் அவிசிரம் ஐயா! எனக் கலவரத்துல என்ட தகப்பன்காரன் மீன் யாவாரத்துல போனவரு கடத்தி மௌத் தாய்ட்டாரு. அவரத் தேடிப்போன எடத்துல எனக்கி ஆமிக்காறன் வெடி வெச்ச. ந்தப் பார்ங்க ஐயா... ந்தக் கய் பிஞ்சி பறந்துட்டு ஐயா.

- ப்படி ஆயிரம் புராணம் கேட் டுட்டன். எண்பத்தி ஆறாம் ஆண்டு எண்டால் எப்ஆர்ஐ பாக்கனும். அதுக்கு ஏஓ வேனும் அப்பு! சப்ஜெக்கு செய்யிற பொம்புள லீவு. பிள்ளத்தாச்சி லீவு. வரிசத்துக்கு மூணு எண்டல்லே அடுக்கி றவள்... புரிசன்...

- ஐயா, காலப் புடிச்சன். அங்கயீனர் காசி எடுக்க மூணு வரிசமா அலைறன். கொஞ்சம் எரக்கம் காட்டுங்க ஐயா. நான் கை வெளங்காதவன்.



- இனக்கலவரத்துல நீரும் முன்னுக்கு நிண்டிருப்பீர். ஆரு கண்டா? அதவிடும். ப்ப எடுக்க ஏலாது. ஆள் லீவு கண்டியோ? உமக்கு அவிசிரமா டெம்பரரியா வேணுமெண்டா 'ஒஸ்பிற்றல் பொலிஸ்' ரிப்போட்டிலயும் இருக்குமப்பு. அங்க போய் எடும். கெதியா ஓடுமன்!

- நீங்க தெரமாட்டிங்களா ஐயா?

- தமுள்ளதானே சொன்ன நான்! 'சப்ஜெக்ட்டு க்ளாக் மெற்றினிற்றி லீவு' எண்டு. ஏஓ தான் அந்த வேல பாக்குறவர். சைன் பன்றவரு. நான் ல்லப்பு. இடத்தக் காலி பண்ணு அப்பு.

- அவரு... ஏஓ எப்ப வெருவாரு?

- அது அவரின்ர பெண்டிலுக் கெல்லோ தெரியும்? பருத்தித்துறையில இருக்கினம். கேட்டுச்சொல்லவே?

- ஒஸ்பிற்றல் பொலிஸ் எங்க ஐயா இருக்கி?

❖❖❖

- நம...? நம...? பேரு...?

- முகம்மது யூஸுப் அப்துல்லா. மாத்தயா!

- கம...? ஊரு...?

- காங்கேயன் ஓடை. வெற்றிக்களோ மாத்தயா!

- கவதா மே சிதுவுனே...?

- ‘சிங்குளம்’ தெரியா மாத்தயா!

- ஹெட்ட எண்டகோ!

- எம்பத்தாறு எனக்கலவரத்துல... ஊருல...

- மே மச்சாங்! பொட்டக் எண்டகோ! மெயாகென் டிக்க அஹன்ன!

- அந்த மாத்தயாவுக்கு தமுள் வெளங்குமா மாத்தயா?

- அடோ, ஆர்டா நீ... கைல என்னடா பொல்லு?

- கய் ஒண்டு ல்ல மாத்தயா... எம்பத் தாறு எனக்கலவரத்துல...

- ப்ப நீ வந்த என்னடா வள்ளா?

- இதப் பாருங்க மாத்தயா... இந்த டைக்னிஸ் ரிப்போட்டு வேணும். மினிஸ்ற்றியில கேக்காஹ... அங்கயீன ருக்கான...

- ஏய்... வள்ளா! இது ஒஸ்பிற்றல்ல எடு ஓய்!

- ஒஸ்பிற்றல்ல சொணங்குமாம் மாத்தயா... ஒரு மாசம் போவ்மாம். ஆள் லீவாம். எனக்கி அவிசிரமா வேணும். ஞ்சயும் ‘கொப்பி’ எடுக்கலாம் ண்டு...

- வள்ளா! நீ ஒஸ்பிற்றல்ல வந்த ‘டேட்டும்’ டைமும்தான் ஞ்ச எடுக்கலாம்.

- செரி மாத்தயா... அவிசிரமா அது வேணும். ண்டைக்கே எடுக்கலாமா மாத்தயா?

- ....ண்டைக்க எடுக்கலாம்டா வள்ளா! நில்றா அப்பிடிப் போயி!

- செரி மாத்தயா! நான் அங்கயீனன். கடத்தின வாப்பாவத் தேடிப் போய் ஆமிக்காரன், வெடி வெச்ச...

- ‘கொட்டி’யா சுட்ட எண்டு சொல்றா வள்ளா!

- செரி மாத்தயா...ப்ப எண்ட ந்த ரிப்போட்டக் கொஞ்சம்...

- ரிப்போட்டுல சைன் பண்ற ஓஐஸி அந்தா குடிச்சிட்டுப் படுக்கான். போய் எளுப்பி சைன் கேப்பியாடா வள்ளா? புடிச்சி மத்தக் கய்ய முறிச்சி ரிமாண்டுல போட்டு மூத்திரம் பருக்குவான்... ம்ம்ஞ்ஞும்...?

- அப்ப நாளக்கி வெரயா மாத்தயா...

- ப்ப போடா வள்ளா... பளயாங் ஹுத்தோவ்!

❖❖❖

- பேரு...?

- முகம்மது யூஸுப் அப்துல்லா. சேர்!

- என்ன வெசயமா வந்தீங்க...?

- அஞ்சாறு வரிசமா அலைறன் சேர். அங்கயீனருக்கான ஒதவிக் காசி வெசயமா... ந்த பைல் நம்பரு...

- ஙா... சரி... சரி... நீ அனுப்பின ரிப்போர்ட் ஸேர்க்குலர்ல கேட்ட ரிப்போர்ட் இல்ல. நாங்க கேட்டது டயக்னஸிஸ் கார்ட். ஆனா இது ‘ஓபீட்டி’ என்ட்ரி. ஓஐசி ஸைன் பண்ணிச் சரிவராது. அப்படியெண்டா இத உறுதிப்படுத்தி டொக்டரும், ரெஜிஸ்ட் டாரும் ப்ராங் பண்ணி கவுண்டர் சைன் பண்ணனும். என்ன மடத்தனம் இது?

- தெரியா ஸேர்! அவங்க இது போதும் எண்டாங்க. ‘கை’ ஒண்டு இல்லாத நான்...

- டயக்னஸிஸ் கார்ட் வேணும்!

- அப்ப... நான்...?

- எடுத்துட்டு அடுத்த கிளம வாங்க.

❖❖❖

- பேரு...?

- முகம்மது யூஸுப் அப்துல்லா...

- ஊரு...?

- காங்கேயனோடை. மட்டக்களப்பு. எம்பத்தாறு எனக்கலவரத்துல...

# கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2007 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| ❍ **கருமுகில் தாண்டும் நிலவு** | கார்த்திகாயினி சுபேஸ் | கொழும்பு 15 |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| ❍ **ஒடுக்கம்** | கார்த்திகா பாலசுந்தரம் | கரவெட்டி |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| ❍ **கற்றுக் கொள்வதற்கு!** | கே. எஸ். சுதாகர் | அவுஸ்திரேலியா |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| ❍ நான் சாகமாட்டேன் | ச. முருகானந்தன் | கொழும்பு 06 |
| ❍ மீளாமகன் | தர்மராஜா அஜந்தகுமார் | கரவெட்டி |
| ❍ பாடமாத்தி | சிவனு மனோகரன் | ஹட்டன் |
| ❍ கல்லடிப் பாலம் | 'தீரன்' ஆர். எம். நௌஸாத் | கல்முனை |
| ❍ அறம் செய்ய | 'ஆவூரான்' சந்திரன் சண்முகம் | அவுஸ்திரேலியா |
| ❍ தவம் கலைகிறது | 'கேணிப்பித்தன்' ச. அருளானந்தம் | திருகோணமலை |
| ❍ தேடல் | 'கயிலை' தம்பையா கயிலாயர் | கொழும்பு 04 |
| ❍ ஒரு நாள் | பிரமிளா செல்வராஜா | Ethkandura |
| ❍ கனவு கனவாயே | ச. நிரஞ்சனி சபாரத்தினம், | சாவகச்சேரி |




**நடுவர்கள்:**

செங்கை ஆழியான், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், கே. ஆர். டேவிட், மு. தயாபரன், கோகிலா மகேந்திரன்.

**(ஞானம் 89, அக்டோபர் 2007)**



# 09

யாழ்ப்பாணம் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகாயினி சுபேஸ் ஒரு பத்திரிகையாளர். தற்போது தினக்குரல் பத்திரிகையில் உதவியாசிரியராகக் கடமை புரிகின்றார். குலநாயகம் கருணாவதி தம்பதிகளின் மகளான இவர் கவிதை, சிறுகதை, விமர்சனம் ஆகிய துறைகளில் எழுதி வருகின்றார். இவரது படைப்புக்கள் உதயன், சஞ்சீவி, தினக்குரல், இடி ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. புதிய அலைவட்டம் நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு, விபவி கலாசார மையம் நடாத்திய சிறுகதை, கவிதைப் போட்டிகளில் சான்றிதழ்கள் ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

இவரது தொடர்பு முகவரி : 601/2, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15, தொலைபேசி 077 6509790, 078 6291614

டமார்... டட்... டங்... டங்... டங்...,

பாத்திரங்களை வீசி எறிந்த சத்தம் இரவின் நிசப்தத்தை கிழித்துக் கொண்டு சென்றது.

"தரித்திரம் பிடிச்ச நாயே... சனியனே... உன்னைக் கொண்டாலும் என்ர ஆத்திரம் தீராதடி... நாயே... மனிசன் பசியோட வீட்ட வந்தா... சாப்பாடு கூட போடமாட்டாத நீயெல்லாம் ஒரு மனிசியா?... பிள்ளைய மட்டும் பெத்துப்போடத் தெரியுது... புருஷனுக்கு சாப்பாடு மட்டும் போடத் தெரியாது... சமைக்கிறதையெல்லாம் எவனுக்கெடி குடுக்கிறனி,"




**(ஞானம் 90, நவம்பர் 2007)**

'டமார்... டடட்... டங்... டங்...'

'குவாக்... குவாக்...'

திடுக்கிட்டு எழும்பிட்டன் நான்,

இதுவரை பக்கத்து வீட்டிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சத்தங்களை காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த நான்... சுஜிக்குட்டி அழும் சத்தம் கேட்டதும் பொறுக்க மாட்டாமல் படுக்கையை விட்டு எழும்பிட்டன்.

"சனியன் பிடிப்பான் வந்திட்டான்... குடிச்சுப்போட்டு வந்து சீதாக்காவுக்கு அடிக்கிறவன்... இப்ப சுஜிக் குட்டிக்கும் அடிக்கிறானோ தெரியாது... பாவி... படுபாவி... துலைஞ்சு போவான்..."

மேசையில் மெல்லிதாக எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாம்பை 'தூண்டி' விட்டு சுற்றிவரப் பார்த்தன்...

அண்ணா அப்பாவுக்கு மேல காலப்போட்டபடி வாயை 'ஆ' வெண்டு திறந்து கொண்டு நித்திரை கொண்டு கொண்டிருந்தார். 'ஆ' எண்டு கிடந்த அவற்றை வாயைப்

பாக்கேக்க எனக்கு அவர் கிட்டிப்புள் விளையாடேக்க கிண்டிற சின்னக்குழிதான் ஞாபகம் வருகுது... இவன் செல்லடிச்சாலும் எழும்பமாட்டான் போல,

அப்பா முழிப்போ, நித்திரையோ தெரியேல்லை... இடைக்கிட ஆடுற அவற்ற காலப் பாக்கேக்க... கண்ண மூடிக் கொண்டு பக்கத்து வீட்டில நடக்கிற சண்டைய காது குடுத்துக் கேட்டுக் கொண்டிருக்குமாப் போலதான் கிடக்கு...

அம்மா...

அவ கண்ணத் திறந்தபடி என்னையே பாத்துக் கொண்டிருந்தா... "என்னடி... சாமத்தில எழும்பி நிண்டு கொண்டு எல்லாரையும் பாத்துக் கொண்டு நிக்கிறாய்..."

அம்மா பதில் சொல்ல முதல் அப்பா பதில் சொல்லிப்போட்டார்,எப்ப படுக்கையில இருந்து எழும்பினாரோ தெரியாது

நான் பேசாமல் அம்மாவைப் பார்த்தன்!

"உவள் சீதா பாவமப்பா... எந்த நாளும் அவன் போட்டு அடிச்சு வதைக்கிறான். பச்ச உடம்புக்காறி... அவள் அடிய வாங்கிக் கொண்டு சத்தம் போடாமல் இருப்பாள்... பாவம்... ஒருக்கா போய்..."

"என்ன விசர்க்கதை கதைக்கிறாய்... இப்பபோய் என்னத்த கதைக்கப் போறாய்... அவன் வெறியில வேற நிப்பான்... எல்லாத் தையும் காலம பாத்துக் கொள்ளலாம் இப்ப பேசாமல் படுங்கோ பாப்பம்..." அப்பா பேசிப்போட்டு போத்து மூடிக்கொண்டு படுத்திட்டார்.



"ஒண்டும் இல்லையம்மா... சீதாக்காவ மாஸ்டர் போட்டு அடிக்கிறார் போல... சுஜிக் குட்டிக்கும் அடிக்கிறாரோ தெரியாது... பாவம் அழுது கேக்குது."

"அதுக்கிப்ப என்ன செய்யிறது..."

"ஒருக்கா பொட்டுக்கால போய் அடிக்க வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டு வருவமே"

"போ... போய்ச் சொல்லு... உனக்கும் சேத்து அடிப்பான்... நல்லா வாங்கிக் கொண்டு வா!"

சிக், எனக்கு அங்க போய் பாக்குமட்டும் இனி நித்திரையே வராது... எல்லாரும் மூசி... மூசி நித்திரை கொள்ளுறதப் பாக்க எனக்கு எரிச்சலெரிச்சலா வந்தது... மேசைக்குப் பக்கத்தில இருந்த கதிரையில இருந்து கொண்டு லாம்பின்ர வெளிச்சத்தை கூட்டிக் குறைச்சுக் கொண்டிருந்தன்.

'ச்சு' பாவம் சுஜிக்குட்டியும் சீதாக் காவும்... எனக்கு ஒரே அவையின்ர நினைப்பாத்தான் கிடக்கு... நித்திரையும் வருகுதில்லை...

பாலாமாஸ்டர் இருக்கிறாரெல்லோ… அதுதான் சீதாக்காவின்ர மனிசன், அவர் எங்கட பள்ளிக்கூடத்திலதான் உடற்கல்வி மாஸ்டரா இருக்கிறார். மாஸ்ரர் என்ற படியால்தான் எல்லாருக்கும் அடிச்சுக் கொண்டிருக்கிறாரோ தெரியாது.. எப்ப பாத்தாலும் ஆரோடயேனும் சண்டை பிடிச்சுக்கொண்டு தானிருப்பார்… விமலன் உவரக் கண்டால் 'இடியமீன்' எண்டு தான் சொல்லிறவன்… எனக்கு இடியமீன் ஆரெண்டு உண்மைக்கும் தெரியாது… ஆனா இப்ப பாலா மாஸ்ரறப் போலத் தான் அவனும் இருப்பான் எண்டு நெக்கிறனான்.

சீதாக்காவும் பாலாமாஸ்டரும் இப்ப இருக்கிற வீட்டுக்கு ஒரு வருஷத்துக்கு முதல்தான் வந்தவை… அவையள் வந்த நாள் அண்டைக்கு என்ர பிறந்தநாள். என்ர பிறந்த நாளுக்குச் செய்த வடையையும் முறுக்கையும் கொண்டு நானும் அம்மாவும் அவையின்ர வீட்ட போட்டு வந்தனாங்கள். அண்டைக்கு இரவில தொடங்கின சண்டைதான் ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டு தானிருக்கு…

சீதாக்காவின்ர அம்மா ஒருக்கா வந்து நிண்டவா… பாலா மாஸ்டர் ஏதோ சண்டை பிடிச்சு…

"இனி இஞ்சவரக்கூடாது… வந்தியெண்டால் உன்ர மகளக் கொல்லுவன்" எண்டு சொல்லிப் போட்டாராம். இப்ப அவவும் வாறதில்லை. அவையின்ர வீட்ட ஒருத்தருமே வாறயில்லை. சீதாக்காவும் ஒரு இடமும் போகமாட்டா. எங்கட வீட்ட கூட வாறயில்ல எண்டாப் பாருங்கோவன்… பாலா மாஸ்டர் அவவுக்கு அடிக்கிற நேரத்தில அவ சத்தமா அழவும் மாட்டா, அதால அந்த இடியமீன் அவவப் போட்டு அடிச்சாலும் எங்களுக்கு தெரியாது.

அவவுக்கு சுஜிக்குட்டி பிறக்கேக்க அம்மாதான் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போனவா… மாஸ்டர் அண்டைக் கெண்டு வீட்டுக்கு கூட வரையில்லயாம்.

எனக்கு சுஜிக் குட்டியெண்டால் நல்ல விருப்பம். சீதாக்கா ஆஸ்பத்திரியில இருந்து வந்தாப்பிறகு… நான் போய் பாக்கேக்க சுஜிக் குட்டி, குட்டிக் கையை இறுக்கமூடிக் கொண்டு கண்ணையும் மூடிக் கொண்டிருந்தான். நான் அவனை மெல்லமாய் தொட்டுப் பார்த்தன்… எனக்கு நல்ல ஆசையாய் இருந்தது. அப்பத்தான் சீதாக்கா… தம்பிக்கு ஒரு பேர் வைக்கச் சொல்லிக்கேட்டவா… நான் தான் அவளுக்கு 'சுஜீவன்' எண்டு பேர் வைச்சனான். நான் நெடுகிலும் அவனை தூக்கி வைச்சு விளையாட்டுக் காட்டுறனான். அவனுக்கும் என்னில நல்ல விருப்பம்.மாஸ்டர் நிண்டால் எனக்கு அங்க போகப்பயம்! அம்மாவும் மாஸ்டர் நிக்கேக்க அங்க போகக் கூடாது எண்டு சொன்னவா…? ஏனெண்டு கேக்க… 'அப்பிடித்தான்… போக்கூடாது என்றால் போக்கூடாது தான்?' எண்டு என்னோட எரிஞ்சு விழுந்தா அம்மா இப்பிடித்தான்.. சிலவேளை நானேதும் கேட்டால்… பதில் சொல்லாமல் என்னைத்தான் பேசுவா…

பாலா மாஸ்டர் ஒரு 'ரைப்' எண்டு விஜிதாக்கா சொன்னவா. அவ எங்கட வீட்டுக்குப் பின்வீட்டில் தான் இருகிறவா. எட்டுக் கோடு விளையாடேக்க என்னையும் கூப்பிடுவா. எனக்கு கொக்கான் வெட்டிற விளையாட்டுத்தான் விருப்பம். ஆனா அம்மா வீட்டுக்குத் தரித்திரம் பிடிக்குமாம் எண்டு என்னை விளையாட விடுறதில்லை. கொக்கான் விளையாடேக்க நான் ஏந்தி இறக்கினன் எண்டால் ஒரு கொக்கானும் கீழ விழாது. அதால நான் தான் 'பழம்' கூட எடுக்கிறனான். விஜிதாக்கா வீட்ட போற நேரம் நான் அங்க கொக்கான் வெட்டி விளையாடிறனான். அவையின்ர வீட்ட தரித்திரமும் பிடிக்கேல ஒண்டும் பிடிக்கேல, எங்கட அம்மா இப்பிடித்தான் சில நேரம் விசர்க் கதையள் கதைப்பா… அதவிடுங்கோ… உந்த பாலா மாஸ்டர் இருக்கிறாரெல்லோ அவர் நல்லவரில்லையாம்… அது எனக்கு எப்பிடித் தெரியுமெண்டால்…

நான் பள்ளிக் கூடத்தால வரேக்க விஜிதாக்கான்ர சைக்கிளில்தான் வாறனான். அவ பத்தாமாண்டு படிச்சுக் கொண்டி

ருந்தவா. அவவோட சேர்ந்து அவவின்ர சினேகிதப் பெட்டையளும் வருவினம்... எனக்கு அவையளோடை யெல்லாம் பெரிசாப் பழக்கமில்லை. நான் விஜிதாக் கான்ர சைக்கிள் பின் கரியலில் இருந்து வாறனான். அப்பேக்க அவையள் பள்ளிக் கூடத்தில நடந்த கதையள் எல்லாம் கதைப்பினம்.

அண்டைக்கும் அப்பிடித்தான் பள்ளிக் கூடத்தால வரேக்க "சுதன் அகிலாவுக்கு கடிதம்குடுத்து அவள் போய் கோமதி ரீச்சரிட்ட சொல்ல பெரிய பிரச்சினையாய் போச்சு... ரீச்சர் அதிபரிட்ட வேற சொல்லிப் போட்டா... பாவமடி சுதன்... நல்ல அடியெடி அவனுக்கு..." என்றா கூடவே சைக்கிளில் வந்த அக்கா.

"பாவமோ... அவன்..., அவன் பெட்டை யளுக்கு கடிதம் குடுக்கத்தானடி பள்ளிக் கூடத்துக்கே வாறவன். அவளுக்கு இன்னும் வேணும் இதோட அவன் திருந்திடுவான்..." எண்டா விஜிதாக்கா.'

அவவின்ர சைக்கிளுக்குப் பின்னால இருந்து அவையின்ர கதையைக் கேட்டுக் கொண்டு வாறதில எனக்கொரு சந்தோஷம். பள்ளிக் கூடத்தில் நடக்கிற விஷயமெல்லாம் எனக்கும் தெரியவந்திடும். ஆனா நான் ஒருத்தருக்கும் ஒண்டும் சொல்ல மாட்டன். இப்பிடி இவையள் கதைக்கேக்க எனக்குச் சிலது விளங்காது... அது மாதிரித்தான் அகிலாவுக்கு கடிதம் குடுத்ததுக்கு சுதனுக்கு ஏன் அதிபர் அடிச்சவர் எண்டு எனக்கு விளங்கேல. கடிதம் குடுக்கிறது பிழையே... அப்பிடி யெண்டால் எங்களுக்கு கடிதம் கொண்டுவாற தபால்கார மாமாவுக்கு அடிக்கவல்லவோ வேணும்... என்ன கதையோ எனக்கு ஒண்டுமா விளங்கேலை... திடீரெண்டு இன்னொரு அக்கா... "உங்களுக்கு பாலா வாத்தியிண்ட விளையாட்டுத் தெரியுமேயெடி..." எண்டா!

பாலா வாத்தி எண்டதும் நான் கொஞ்சம் உசாராகி என்ன சொல்லப் போறா எண்டு அவவின்ர வாயையே பார்த்துக் கொண்டு வந்தன்.

"பாலா வாத்தியார்... உடற்கல்வி படிப்பிக்கேக்க எல்லாரையும் விளையாட்டு மைதானத்துக்கு வரச்சொல்லி உடற் பயிற்சி சொல்லிக் குடுத்தவராம்..."

"உதில என்னடி விஷயமிருக்கு..."

"பொறனடி... சொல்லி முடிக்க விடன்... அவர் பெட்டையள் செய்யிறது பிழையெண்டிட்டு அவையின்ர கையக் காலப் பிடிச்சு அப்பிடிச் செய்யுங்கோ இப்பிடிச் செய்யுங்கோ எண்டு சொல்லிக் குடுத்தாராம்... அவையளுக்கு என்ன செய்யிறதெண்டே தெரியாமல் போச்சுதாம்... பதினொராம் ஆண்டு படிக்கிற சீலாதான் எனக்குச் சொன்னவள்... பாத்தியே வாத்தியிண்ட வண்டவாளத்தை..."

"அந்த வாத்தி அப்பிடித்தானடி. பெட்டை யளக் கண்டால் வழியிறதும் தொட்டுத் தொட்டுக் கதைக்கிறதும்... சுதனுக்குக் குடுத்தமாதிரி உவருக்கும் அதிபர் நல்லா சாத்த வேணுமடி" உவையள் பாலா மாஸ்டரப் பற்றி ஏதோ குறை கதைக்கிறது எனக்கு விளங்கிச்சுது. அப்ப மாஸ்டர் பொல்லாதவர்தான் எண்ட உண்மை எனக்கு உறுதியாய் போச்சு...

"எடியே... இன்னும் படுக்காமல் என்னடி செய்யிறாய்..." அம்மா கத்தின கத்தில நான் சத்தியமா திடுக்கிட்டுப் போனன்... இனியும் போய் படுக்காட்டி அடிதான் விழும் எண்டிட்டுப் போய் அம்மாவுக்குப் பக்கத்தில் படுத்திட்டன்.

காலமை எழும்பி முகம் கழுவிப் போட்டு வந்ததும் "அம்மா சீதாக்கா வீட்ட ஒருக்காப் போட்டு வாறன்..." எண்டன்.

"இந்தா... தேத்தண்ணி போட்டுட்டன் குடிச்சிட்டுப் போவன்..."

தேத்தண்ணியை எடுத்து வாயில வைச்சா சரியாச் சுடுகுது... அதை ஆறுதலா இருந்து குடிக்க எனக்குப் பொறுமையில்லை. அதில எப்பனைக் குடிச்சிட்டு பொட்டுக்கால போய் சீதாக்கா வீட்ட எப்படிப் பார்த்தன்... வீட்டுக்கு முன்னால பாலா மாஸ்டரின்ட சைக்கிள் இல்லை. அதால நான் மளமள வெண்டு

வீட்டுக்கு போனன்.. சீதாக்காவும், சுஜியும் படுத்திருந்திச்சினம் ஆனா ரெண்டு பேரும் முளிச்சபடிதான் இருந்திச்சினம்.

"சீதாக்கா ஏன் நேற்று சுஜிக்குட்டி அழுதவன்...," என்ர கேள்விக்கு அவ பதில் சொல்லாமல் மெல்லிசா சிரிச்சுப் போட்டு இருந்தா. தலைமயிரெல்லாம் குழம்பிப்போய் இருந்திச்சு. சட்டையிண்ட ஒரு கை கிழிஞ்சுபோய் தொங்கிக் கொண்டிருந்திச்சு... குசினிச் சாமான் சிலது விறாந்தையில சிதறுப்பட்டுக் கிடந்திச்சு...

நான் சுஜிக் குட்டியைத் தூக்கி மடியில வைச்சுக் கொண்டிருந்தன். அப்ப அம்மாவும் வந்திட்டா... அம்மாவக் கண்ட உடன சீதாக்கா கண்கலங்கின மாதிரி கிடந்தது...

"என்ன சீதா அந்த மனிசன்... நேற்றும் உனக்கு அடிச்சுப் போட்டானே... பச்ச உடம்புக்காறி எண்ட எண்ணம்கூட அவனுக்கில்லை..."

அக்கா அழுதே... போட்டா! அம்மா பக்கத்திலிருந்து அவவின்ர முதுகைத் தடவி...

"தண்ணி வெந்நியேதும் குடிச்சி ருக்கமாட்டாய்.. இந்தா தேத்தண்ணி... கொண்டுவந்தனான் குடி...."

"என்னால உங்களுக்கு எவ்வளவு கரைச்சல்..."

"எங்களுக்கு என்ன கரைச்சல் உன்ன நினைச்சாத்தான் கவலையாக் கிடக்கு... அதுசரி... என்னடி கழுத்தில ஒண்டையும் காணேல்ல...?"

"அந்த மனுசன் என்னத்தை விட்டு வைச்சிது... ஆறுமுகத்தார் வீட்டில தான்... எந்த நேரமும் குடியும் கூத்துமாய் இருக்கிறார்... ராத்திரி வந்ததும் வராததுமா என்னோட சண்டை பிடிச்சிட்டு கழுத்தில் கிடந்த தாலியையும் அறுத்துக் கொண்டு போட்டார்..." என மூக்கால வழிஞ்ச சளியை சட்டையால துடைத்துக் கொண்டு அழுதா சீதாக்கா...

"அந்த அயோக்கியன் ஆறுமுகத் தோட, சேந்திட்டால் உன்ரபுருஷன் உருப்பட்ட மாதிரித்தான். பொம்பிளையள் இல்லாத வீட்டில அடிக்கடி பொம்பிளையள்தான் வந்து போய்க் கொண்டிருக்கிறாளவை. நீயேன் இதில இருந்து வாய்பாத்துக் கொண்டிருக்கிறாய், பள்ளிக்கூடம் போக நேரம் போகுதெல்லே போய் குளிச்சிட்டு வெளிக்கிடுபாப்பம்..."

அவை என்ன கதைக்கினம் எண்டத கேட்டுக் கொண்டிருந்த என்னை திடீரென அம்மா அந்த இடத்தால கலைக்சுப் போட்டா... எனக்கெண்டால் பள்ளிக்கூடம் போக விருப்பம் இல்லாமலிருந்திச்சு...

நான் பள்ளிக்கூடம் போக பிந்திப் போச்சு... எனக்குப் பக்கத்தில இருக்கிற 'அலாப்பி' கவிதா, "சீதாக்காவீட்ட நேற்றும் வாத்தியார் வந்து சண்டை போட்டவராம்... என்ன நடந்தது...," எனக் கேட்டாள், அவளும் எங்கட வீட்டுக்குக் கிட்டத்தான் இருக்கிறவள்.

"மாஸ்டர் அக்கான்ர தாலிக் கொடியப் பறிச்சுக் கொண்டு போட்டாராம் பாவம் சீதாக்காவும்... சுஜிக்குட்டியும் அழுது கொண்டிருக்கினம். சீதாக்கா சுஜிக்குட்டியோடையும் என்னோடையும் விளையாட இன்னொரு தங்கச்சிக் குட்டியை பெத்துதாறன் எண்டு சொன்னவா.. அதுக்கிடையில மாஸ்டர் வந்து அவவின்ர தாலியப் பறிச்சுக் கொண்டு போட்டார். தாலி இல்லாட்டி அவவுக்கு இனி... தங்கச்சிப்பாப்பா பிறக்காதெல்லோ... என்ன... ச்சு...," நான் சொல்லிக் கொண்டி ருக்கேயே ரீச்சரும் வகுப்புக்குள்ள வந்திட்டா... பிறகு கவிதாவோட கதைக்க கிடைக்கேல...

நான் பள்ளிக்கூடத்தால வரேக்க ஆறுமுகத்தாரிண்ட படலேக்க அவரும் பாலாமாஸ்டரும்நிண்டுகதைச்சுக்கொண்டி ருந்தினம். பாலாமாஸ்டர் இண்டைக்கு பள்ளிக்கூடம் வரையிலப் போல... எனக்கு ஆறுமுகத்தாரக் கண்டாலே பிடிக்காது...

நான் முந்தி அவரை ஆறுமுகம் மாமா எண்டு தான் சொல்லுறனான். அவருக்கு பானை மாதிரி வயிறு. நடுவில மொட்டை விழுந்த தலை. ஏறு நெத்தியில மூண்டு விபூதிக் குறி பூசியிருப்பார்... வேட்டிதான் நெடுகக் கட்டுவார். அதுவும் வண்டிக்குக் கீழ கழண்டு விழுமாப் போலதான் கட்டுவார். ஆரும் அப்பிடிக் கட்டுறது எனக்குப் பிடிக்காது, தாயத்து மாதிரி ஒரு பென்ரன் போட்ட நீட்டு தங்கச் சங்கிலி ஒண்டு போட்டிருப்பார். அது அவற்ர பொக்குள் வரைக்கும் இருக்கும். அவற்ர பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டில மனிசியும் செத்துப்போக... தனிய இருக்க பொழுது போகேல எண்டிட்டு வீட்டில ரீயூசன் சொல்லிக் குடுத்தவர்... நான், அலாப்பி கவிதா, நிலா, கமலி, விஜயன், ராகுலன் எல்லாரும் அவரிட்ட ரியூசனுக்கு போனனாங்கள்.

அவர் பெரிசா ஒண்டும் படிப்பிக்க மாட்டார். எந்தநேரமும் பகிடிக் கதை விட்டுச் சிரிப்பார். அவருக்கு பொம்பிளப் பிள்ளையள் என்டால் நல்ல விருப்பம் போல... அதால அவையள மட்டும் கட்டிப் பிடிச்சு மூஞ்சையில கொஞ்சுவார்... அவற்றை மீசை மூஞ்சிய குத்தும். வாயில நாத்தல் மணம் மணக்கும். உவாக்... அந்த மணம் வயித்தப் பிரட்டுற மாதிரி இருக்கும். அவர் கிட்ட வந்தாலே நான் விலத்திக் கொள்ளுவன். அதால அவருக்கு என்னைப் பிடிக்காது. தான் செல்லம் கொஞ்சுற பிள்ளையளுக்குத்தான் அவர் வெளிநாட்டுக் கன்டோஸ் குடுப்பார். எனக்கும் நீலாவுக்கும் ஒருநாளும் கிடைக்கேல... கமலிக்குத்தான் அவர் நிறையக் குடுக்கிறவர். அவளிலதான் அவருக்கு நல்ல விருப்பம் போல.

ஆனா பாவம் கமலி ஒருநாள் பள்ளிக் கூடம் வரேல்ல. வீட்டவந்தாப் பிறகுதான் அவள் ஆசுபத்திரியில இருக்கிறது தெரிஞ்சிது... ஆறுமுகத்தார் கமலிக்கு அடிச்சுப் போட்டாராம் எண்டு நீலா சொன்னாள்... அவரை பொலிஸ் வந்து பிடிச்சுக்கொண்டுபோய் ஒருகிழமை கழிச்சு விட்டவங்கள்... வாத்தியார் அடிச்சால் ஏன் பொலிஸ் வந்து பிடிக்குது... எங்கட பள்ளிக் கூடத்தில எத்தின வாத்திமார் எத்தின பிள்ளையளுக்கு அடிச்சிருப்பினை... அவயளை எல்லாம் பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போனதே... இல்லையே... எனக் கெண்டால் ஒண்டுமா விளங்கேல்லை... அதுக்குப் பிறகு ஒரு பிள்ளையளையும் அவரிட்ட படிக்கப் போக விடுறதில்லை. ஊரில ஒருத்தருமே முந்தினமாதிரி அவரோட பழகுறதுமில்லை. அவரக் கண்டால் எங்கட அம்மாவில் இருந்து ஒரு பொம்பிளையளுக்கும் பிடிக்காது...

ஒரு நாள் நான் கமலியிட்ட "ஆறுமுகம் மாமா உனக்கு ஏன் அடிச் சவர்" எண்டு கேட்டனான். 'அவர் தனக்கு அடிக்கேல' எண்டு சொன்னாள்.

"அப்ப ஏன் ஆசுப்பத்திரியில இருந்தனி..."

"எனக்குத் தெரியாது ஆறுமுகம் மாமா உனக்கு என்ன செய்தவர் எண்டு அம்மா கேட்டா நான் எல்லாத்தையும் சொன்னன். அம்மா அழத் தொடங்கீட்டா பிறகு காச்சல் எண்டு ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டே விட்டா." என்றாள்.

எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை. என்னை எல்லாரும் சேர்ந்து குழப்பிற மாதிரிக் கிடந்தது... அதுக்குப்பிறகு நான் அவரை ஆறுமுகம் மாமா என்டு

**"இவன் என்ரபிள்ளை**
**யெண்டால் இவனை**
**என்னட்டத் தந்திட்டு போ...**
**இல்லை...**
**இவன் எனக்குப் பிறந்தவன்**
**இல்லையெண்டால்**
**இந்தா இந்த கற்பூரத்தில்**
**சத்தியம் பண்ணிப்போட்டு...**
**அவனை கொண்டு**
**நீயும் போ..."**

சொல்லுறதை விட்டிட்டு ஆறுமுகத்தார் எண்டு எல்லாரும் சொல்லுமாப்போல சொல்லுறனான். இப்ப பாலா மாஸ்டர் ஒராள்தான் அவரோட திரியிறவர்.

அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை... நான் சுஜிக்குட்டியோட விளையாடிட்டு பொழுது படேக்க வந்து முகம் கழுவி சாமி கும்பிட்டுக் கொண்டிருக்கேக்க பாலா மாஸ்டரின்ட குரல் சத்தமா கேட்டுது... எண்டைக்கும் இல்லாத அதிசயமா சீதாக்காவின்ர குரலும் சத்தமா கேட்டுது. ஒருக்கா அங்க போய் பாப்பம் எண்டு வெளியில வந்தனான். அம்மா என்னப் பார்த்த பார்வையிலேயே பேசாமல் நிண்டிட்டன்... ஆனால் கொஞ்ச நேரத்தில அங்க கனபேரிண்ட குரல் கேட்டிச்சு. அம்மா சீதாக்கா வீட்ட போக வெளிக்கிட்டா நானும் பின்னால போக... “போடி அங்க வரக்கூடாது” எண்டு சொல்லிப் போட்டுப் போனா... எனக்கெண்டால் இருப்புக் கொள்ளேல்ல... கொஞ்சத்தால அங்க போனன்... அங்க போய் பாத்தா...?

பக்கத்து வீட்டு பரிமளா அன்ரி.. முன் வீட்டு முத்துமாமா... ஆறுமுகத்தார்.. சுப்புமாமா... எண்டு ஊர்ச்சனம் சீதாக்கா வையும் மாஸ்டரையும் சுத்தி நிண்டிச்சு... நான் என்னை அம்மா காணாதமாதிரி சனத்துக்குள்ள ஒளிஞ்சு நிண்டு பாத்தன்... சீதாக்கா சுஜிக் குட்டியை தூக்கி வைச்சபடி அழுது கொண்டு நிண்டா. தலைமயிர் எல்லாம் குலைஞ்சு போய்க்கிடந்திது... பாலா மாஸ்டர் சறத்தையும் மடிச்சுக் கட்டிக் கொண்டு கோபத்தில நிண்டார். அவருக்குப் பக்கத்தில ஆறுமுகத்தார். மாஸ்டர் ஆவேசமாக் கத்தினார்.

“போடி.... எங்க வேணும் எண்டாலும் போய்த்துலை... பாருங்கோ... எல்லாரும் பாருங்கோ... ஒரு பொம்பிள ஆடிற ஆட்டத்தை பாருங்கோ கட்டின புருஷன் என்னையே வேண்டாம் எண்டிட்டுப் போறாள் பாருங்கோ... நான் என்ன குற வைச்சிட்டன் எண்டிட்டுப் போறாள்... ‘ராணி’ மாதிரி வைச்சிருந்தன் என்னை வேண்டாம் எண்டிட்டுப் போறாள்... ஏய்... எவனத் தேடிப் போறாய் எண்டு சொல்லிட்டுப் போடி....” அவர் பேசினத கேட்ட சீதாக்கா. நெருப்புக்குமேலே நிக்குமாப்போல துடிச்சா... சுத்தி நிண்டவை எல்லாரும் வாயில கையவைச்சு பாத்துக் கொண்டு நிண்டிச்சினமேயொழிய ஒருத்தரும் ஒண்டும் கதைக்கேல...

அம்மாவப் பாத்தன், அவவின்ர கண்ணெல்லாம் கலங்கிப் போய் இருந்திச்சு.. ஆறுமுகத்தார் கொடுப்புக்க சிரிச்சுக் கொண்டு நிண்டார். பிறகும் கத்தினார் மாஸ்டர்.

“என்னடி முழிக்கிறாய் நீ போடி... நான் ஆம்பிள்ளையடி ஆம்பிள்ளை; நாளைக்கே ஒரு பொம்பிளையைக் கட்டி ராஜா மாதிரி வாழுவனடி. பெட்டைச்சி உனக்கே... இவ்வளவு கொழுப்பிருந்தால்...ஆம்பிள்ளை எனக்கு எவ்வளவு இருக்குமெடி... போடி... ஆனால் நான் பெத்த மகன் அவன்... அவனை விட்டிட்டுப் போடி... என்னையே வேண்டாம் எண்டிட்டு போற உனக்கு எதுக்கெடி என்ர பிள்ளகுட்டி...?” என்று கத்தியபடி சுஜிக்குட்டிய சீதாக்காட்ட இருந்து பறிக்கப்போனார்.

சீதாக்கா பயந்துபோய் சுஜிக் குட்டிய இறுக்கி கட்டிப்பிடிச்சபடி கல்லுப்போல நிண்டா...

கூடத்தில நிண்ட சிவலிங்கம் தாத்தா... “தம்பி... ஏன் அந்த அப்பாவிப் பிள்ளையைப் போட்டு இந்த வதை வதைக்கிறாய்... வீட்டவிட்டு வெளிக்கிடாத பிள்ளையப் பாத்து இப்பிடி யெல்லாம் பிழையாய் கதைக்கிறாய். கடவுள் பொறுக்க மாட்டார் கண்டியோ... உனக்கு அவளோட வாழ விருப்பம் இல்லை யெண்டால் அவளை விட்டுட்டு நீ ஆரையேன் கட்டு... ஒண்டும் தெரியாத பிள்ளையை இப்பிடி வதைக்காதே...”

எண்டு சொன்னது தான் தாதம்...

ஆறுமுகத்தார் குறுக்கிட்டு...

“ஏய் கிழட்டு வயசில அறளை பேந்த கதையெல்லாம் கதைக்காத. கட்டின

புருஷனே அவளத் தப்பா சொல்லுறா னெண்டால் அவள்தான் நடத்தை கெட்டவள்... புருஷன்ர பேச்சையும் கேளாமல் போறத்துக்கு ஒற்றைக்காலில் நிக்கிறாள்... நீ விழல் கதை கதைக்கிறாய், இது அவையின்ர குடும்ப விஷயம் ஆரும் தலையிடக் கூடாது... உங்கட உங்கட வேலையை நீங்க பாத்துக் கொண்டிருங்கோ... காணும்..." எண்டு சொல்லிப் போட்டு... மாஸ்டரப் பார்த்துச் சிரிச்சார். மாஸ்டரும் பதிலுக்குச் சிரிச்சார்... பிறகு சீதாக்கான்ர பக்கம் திரும்பி... "என்னடி பிள்ளையைக் குடுக்கப் போறியா இல்லையா" எண்டார்... சீதாக்கா சுஜியை இறுக்கிப் பிடிச்சபடி... "உயிர் போனாலும் தரமாட்டன்" எண்டா, சுஜி பயத்தால் வீரிட்டு அழுது கொண்டிருந்தான்...

"ஓ... அப்பிடியோ... அப்ப நான் சொல்லுறத செய்திட்டுப்போ..." எண்டு சொல்லிப்போட்டு சீதாக்காவையும் கூடி நிண்ட சனத்தையும் பார்த்தார்... எல்லாரும் அவர் என்ன சொல்லப் போறார் எண்டு மாஸ்டரிண்ட வாயையே பார்த்தபடி நிண்டினம்.

"இவன் என்ர பிள்ளையெண்டால் இவனை என்னட்டத் தந்திட்டு போ... இல்லை... இவன் எனக்குப் பிறந்தவன் இல்லையெண்டால் இந்தா இந்த கற்பூரத்தில் சத்தியம் பண்ணிப்போட்டு... அவனை கொண்டு நீயும் போ..." எண்டு சொன்னபடி நிமிர்ந்து நிண்டார்.

பாவம் சீதாக்கா "கடவுளே இது என்ன கொடுமை" எண்டு தலை தலையா அடிச்சு நிலத்தில இருந்து அழுதா... ஆறுமுகத்தார் ஒரு தட்டில கற்பூரத்தை கொழுத்தி வைச்சார். எப்பிடி இவருக்கு உடன கற்பூரம் கிடைச்சதெண்டு எனக்கு ஆச்சரியமாய் இருந்திச்சு...

சீதாக்காவுக்கு முன்னால தட்டில கற்பூரம் எரிஞ்சு கொண்டு இருந்திச்சு. அவ கொஞ்ச நேரம் அதையே உத்துப் பார்த்துக் கொண்டிருந்தா. கற்பூரம் எரிவது அவவின்ர கண்ணுக்குள்ளயும் தெரிஞ்சுது.

"கற்பூரம் நூரப் போகுது... கெதியில சத்தியம் பண்ணு... அல்லாட்டி பிள்ளை யக்குடு...,"

ஆறுமுகத்தார் அவசரப் படுத்தினார்.

சீதாக்கா முகத்தை துடைச்சுக் கொண்டு நிமிர்ந்து இருந்தபடி பாலா மாஸ்ரரையும் ஆறுமுகத்தாரையும் மாறி மாறிப் பார்த்தா... அவவின்ர கண் நெருப்பு மாதிரிச் சிவந்திருந்திச்சு... கையை நீட்டி எரிஞ்சு கொண்டிருக்கிற கற்பூரத்துக்குமேலே அடிச்சு அதை அணைச்சா... சுத்தி நிண்டவை எல்லாரும் அதிர்ச்சியாய் பார்த்துக் கொண்டிருக்கேக்க...

"சத்தியமா என்ர பிள்ளைக்கு நீ அப்பன் இல்லை... உன்னால அப்பனா இருக்கவும் முடியாது..." எண்டு அழுத்தமாச் சொல்லிப்போட்டு சுஜீக் குட்டியை தூக்கிக்கொண்டு திரும்பி நடக்கத் தொடங்கினா. மாஸ்டரும், ஆறுமுகத்தாரும் வாயடைச்சுப் போய் ஆளையாள் பாத்துக் கொண்டு நிண்டிச்சினம். ஒருத்தரும் அவவைப் போய் மறிக்கேல... நான் சுஜிக்குட்டியைப் பாத்தன்... இவ்வளவு நேரமா அழுது கொண்டிருந்தவன் இப்ப சீதாக்காவின்ர தோளுக்கு மேலால எட்டிப் பார்த்து சிரிச்சுக் கொண்டு போனான்... நான் "சுஜிக்குட்டி" எண்டு கூப்பிட்டபடி பின்னால ஓடிப் போக அம்மா என்ர கையப் பிடிச்சிழுத்து நிப்பாட்டிப் போட்டா. நான் சீதாக்கா மறையும் மட்டும் பாத்துக் கொண்டிருந்தன்... அவ எங்க போவா எண்டு எனக்கு ஒரே யோசினை.. அவ என்ர கண்ணில இருந்து மறஞ்சதும் திரும்பிப் பாத்தன். ஒருத்தரையும் காணேலே. கொஞ்சம் கொஞ்சமாய் இருளத் தொடங்கி இருந்தது... அண்ணாந்து வானத்தைப் பார்த்தன்...கருமுகிலுக்குள்ள மறைஞ்சிருந்த நிலவு வெளியே வந்து பிரகாசமாய் தனியே சென்று கொண்டிருந்தது. அதனை வரவேற்க நட்சத்திரங்கள் கண்சிமிட்டிக் காத்திருந்தன.




10



யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கார்த்திகா பாலசுந்தரம் 1977இல் பிறந்தவர். கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நூலகத்தில் நூலகராகப் பணிபுரியும் இவர், நூலக விஞ்ஞானமாணி தரம்-1 தகைமையுடையவர். தற்போது இளங்கலைக் கற்கை, முதற் தேர்வு (வெளிவாரி, யாழ் பல்கலைக்கழகம்) கற்கை நெறியில் ஈடுபட்டுள்ளார். சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் எழுதிவரும் கார்த்திகா, விபவி - இளம் எழுத்தாளர்களுக்கான படைப்பாற்றல் போட்டியில் (2004) முதற்பரிசு, நமது ஈழநாடு - இரண்டாவது ஆண்டு நிறைவுச் சிறுகதைப் போட்டியில் (2004) முதற்பரிசு, புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தப் போட்டியில் (2006) முதற்பரிசு பெற்றுள்ளார். காலச்சுவடு சஞ்சிகையில் இவரது கட்டுரை வெளிவந்துள்ளது.

முகவரி :- 'மூப்பியா வளவு', விக்னேஸ்வரக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு.

கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி
2007இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை

2

ஆஸ்பத்திரி றோட்டால பஸ் போய்க்கொண்டிருக்கு. குப்பெண்டு ஒரு புழுத்த மணமடிக்குது. இவளுக்கு வயித்தைப் பிரட்டிக் கொண்டு வருகுது. இவளோட அநேகமான ஆக்கள் லேஞ்சியால மூக்குகளைப் பொத்துகினம். நிண்டு கொண்டு வாற ஆம்பிளையளில சிலர் கதைக்கினம். "உது அழுகின பிரேதமணம் - இரண்டு நாளைக்கு முந்தி கொடியாமத்தில உருக்குலைஞ்ச நிலையில பிரேதங்கள் மீட்பு எண்டு பேப்பரில போட்டிருந்தாங்கள். அதெல்லாம் இப்ப ஆஸ்பத்திரிக்குள்ள தானாம் இருக்கு". ஆஸ்பத்திரி றோட்டை பஸ் கடந்தாப் போலயும் அந்த மணத்தின்ரை வீச்சு குறைஞ்சபாடில்லை. அது பிரேதமணம் எண்டாப் போல இவள் இன்னும் பயந்திட்டாள். கொஞ்சநாளா இவளுக்கு அர்த்தமில்லாத பயம் - பகலில போக்குவரத்துச் செய்யேக்க இடைநடுவில ஏதும் நடந்திடுமெண்டு பயம் - றோட்டில நடக்கேக்க அக்கம்பக்கம் பாக்கப்பயம் - வேலை செய்யிற இடத்தில இவள் வாய் திறந்து ஒண்டும்

(ஞானம் 91, டிசம்பர் 2007)

கதைக்கிறேல்ல. நிலைமை மோசம் - ஆரையும் நம்பிச் சிரிக்கேலாது. மனம் விட்டுக்கதைக்கேலாது. சுவருக்கெல்லாம் காதுகள் முளைச்சிருக்கிற மாதிரி இவளுக்கு கனவு வருகுது. மூச்சு விடுறதுக்குக் கூட பயப்பிட வேண்டியிருக்கு. வேலை செய்கிற இடத்தில கேள்விபடுகிறதெல்லாம் அந்தச் சந்தியில ஓராளைச் சுட்டாச்சாம். இந்தச்சந்தியில ஓராளைச் சுட்டாச்சாம் எண்ட செய்தியள்தான். சில நேரம் இவள் பஸ்ஸில போகேக்க கண்டிருக்கிறாள். ஒருநாள் விடிய கச்சேரி பஸ்ஸில போய்க் கொண்டிருக்கிறாள். ஆவரங்கால் சந்தியில கொஞ்சச்சனம் சுத்தியிருக்குது. நடுவில வெள்ளைச் சீலையால மூடிக்கிடக்கு. சைக்கிளொண்டு பாட்டத்தில சரிஞ்சு போய்க் கிடக்கு. “நேற்று பின்னேரம் அஞ்சரைக்கு சுட்டதாம் - சைக்கிள் கடை வைச்சிருக்கிற பொடியனாம் - ஆறு மணிக்கு ஊரடங்குச் சட்டம் எண்டதால பிரேதத்தை எடுக்கேலாமப் போச்சாம்.- அப்படியே றோட்டில விட நாயள் குதறிப்போடும் எண்டதால சொந்தக்காரச் சனம் இரவிரவா விளக்குக் கொழுத்தி வைச்சு வெள்ளைக் கொடியும் குத்திப் போட்டு காவல் இருந்ததுகளாம்” எண்டு பஸ்ஸில வந்த சனங்கள் கதைக்க இவளுக்கு தலையைச் சுத்துது - இனிவரப் போற நாட்களை நினைக்க இவளுக்கு வேர்த்துச் சொரியுது.

இப்பிடியொரு நிலமை வரும் எண்டு ஆருங் கனவிலயும் நினைக்கேல்ல. ஆவணி பதினொண்டு பின்னேரம் தொடங்கின வெடிச்சத்தங்கள் இன்னும் கேட்டுக் கொண்டேயிருக்கு. ஊரடங்குச் சட்டம் இரவில தொடர்ந்து அமுலில இருக்கு. அமுலுக்கு வருகிற நேரங்கள் நாளுக்கு நாள் முன்னோக்கியோ பின்னோக்கியோ நகர்ந்து கொண்டிருக்கு. காலம கண்முழுச்சதும் இவளுக்கு வேலை யாழ் சேவையைக் கேக்கிறதுதான். அதில தான் ஊரடங்கு நேரம் ஒலிபரப்பப்படும். அதைக் கேட்டுத்தான் வேலைக்கு வெளிக்கிடுவாள். பஸ் ஓட்டமும் ஒழுங்



**“என்னப்பா! பருத்துறையில ஒரு பொடியனைச் சுட்டுப் போட்டாங்களாம். நீர்வேலியில இரண்டு பேரைப் போட்டாச்சாம்– சங்கானையில நாலுபேரை வெள்ளை வானில கடத்தின தாம். மானிப்பாய்ப் பெட்டையொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்ததாம். மூண்டு நாளா அதைக் காணேல்லையாம்”**

கில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து கடைசி பஸ் எத்தினை மணிக்கெண்டும் சொல்லேலாது. எப்பிடியும் வீட்டிலயிருந்து ஏழு மணிக்கு வெளிக்கிட்டா ஏழரைக்கு பஸ் எடுத்து நாலைஞ்சு சோதனைச் சாவடியளக் கடந்து வேலைத்தளத்துக்குப் போக எட்டேமுக்கால் ஒம்பதாகும். பிறகு அங்கையிருந்து இரண்டரை மூண்டுக்கு வெளிக்கிட்டால் வீட்டைவந்து சேர எப்பிடியும் நாலரையஞ்சு மணியாகும். இவளுக்கு எல்லாம் சலித்துப் போய் ஒரு சடப்பொருளாய் மாறிவிட்டாள். தன்னைச் சுற்றி என்ன நடக்குதெண்டதை விளங்கிக் கொள்ள அவகாசமில்லாமலுக்கு காலங் கழிஞ்சொண்டிருக்கு - நெருக்கடியான பஸ்பயணத்திலேயே ஆயுள் முடிஞ்சிடும் போல இவளுக்குத் தோன்றுது. இப்ப பஸ் இருபாலைப் பொயின்றுக்கு வந்திட்டுது. “இதில ஒருத்தரும் இருக்கேலாது. இறங்கிப் போங்கோ?” கொண்டக்ரர் கத்திறார். இவள் சீற்றிலையிருந்துதான் வந்தவள். ஆனால் இருக்கவிரும்பேல்ல. முழுச்சனமும் இறங்காமலுக்கு அவங்கள் செக் பண்ணுறதுக்கு பஸ்ஸில ஏறமாட்டாங்கள். உள்ளை இருக்கிற ஆக்களில அவங்கட கவனம் குவியும். பிறகு தேவையில்லாத கேள்விகள். பிரச்சனைகள் - அதால சீற் போனாலும் பரவாயில்லை எண்டு இவள் இறங்கி விடுவாள். “தங்கச்சி நல்ல லக்சனய்” எண்ட அவங்கட குரலுக்கு எந்தப் பிரதிபலிப்பையும் காட்டாமல் செவிடி மாதிரி அடையாள அட்டையைக் காட்டிப் போட்டு இவள் போறாள். இப்ப இருக்கிற சூழ்நிலையில செவிட்டு ஊமையாய் இருக்கிறதுதான் பாதுகாப்பெண்டு இவள் நினைக்கிறாள். சாப்பிடுறதுக்கு மட்டும் வாய்திறக்கிறது தான் நல்லதெண்டும் இவளுக்குப் படுகுது. செக்கிங் முடிஞ்சு பஸ் வந்தோண்ண நிக்கிற ஆம்பிளையள் வதவதெண்டு பாஞ்சு ஏறுகினம். இவள் ஒதுங்கி நிண்டிட்டு எல்லாரும் ஏறினாப் போல ஏறுறாள்- சீற்செல்லாம் நிரம்பிப் போய் நிக்கவும் இடமில்லாமக் கிடக்கு. “இண்டைக்குச் சரியான நசலாய்த் தானிருக்கப் போகுது” எண்டு இவள் மனஞ் சலிக்கிறாள் - இவளுக்கு சீற்றில இருந்துதான் போகோணும் எண்டில்லை. நசல்படாமல் போகோணும் எண்டுதான் விரும்புவாள். பஸ்ஸில வாற ஆம்பிளயளில இவளுக்குப் பொதுவா நல்ல அபிப்பிராயம் இல்லை. அநேகமானவை பச்சிளம் பாலகர் மாதிரி முகத்தை வைச்சுக் கொண்டு நிப்பினம். சந்தர்ப்பம் கிடைச்சோண்ண அங்க இஞ்சை தற்செயலா நடக்கிற மாதிரி உரசுறதும், இடிக்கிறதும், முட்டுறதுமா நிப்பினம். இப்பவும் அப்படித்தான். எல்லோரும் ஏறி வசதியான இடத்தில நிக்கினம். இவள் ஒருமாதிரி ஏறி உள்ளுக்கை போறாள். ஒரு பொடியன் இவளிலும் பத்து வயதெண்டாலும் குறைவாயிருக்கும். தற்செயலா தவிர்க்கேலாதெண்ட மாதிரி முழங்கையால வலது மார்பகத்தில நல்ல தாக்கமான இடி. சொண்டைக் கடிச்சுக் கொண்டு அங்கால நகருகிறாள். ஒரு ஆம்பிள்ளை இருக்கிற சீற்றோட அண்டி நிக்கிறாள். அவன் முதல் நல்லபிள்ளை மாதிரி இருந்திட்டுப் பிறகு மெல்ல மெல்ல ஆக்கிரமிப்பில இறங்கிறான். முழங்கையால வயித்தில மெல்லமாக ஒரு தட்டல் பிறகு கீழுக்கு இறங்கி தேய்க்கத் தொடங்குகிறான். இவளால் நகர முடியேல்ல. எல்லா இடமும் ஆக்கள் நெருங்கி நிக்கினம். இவள் திரும்பவும் சொண்டைக் கடிக்கிறாள். வேறை என்ன செய்யலாம்? உடம்பு மரத்துப் போய் விட்டது. பஸ் போய்க் கொண்டிருக்கேக்க டக் கெண்டு விசிலடிக்கிற சத்தம் கேக்குது. ஆமிதான் அடிக்கிறான். “சரி அலுப்புத் தொடங்கியிட்டுது. அரோகரா. இண்டைக்கு எத்தினை மணிக்கு வீட்டை போறதோ தெரியா. இப்ப நாலம்பது. எப்படியும் ஒண்டு ஒண்டரை மணித்தியாலம் அலுப்புத்தான்.” எண்டு உள்ளுக்கை நிக்கிற சில ஆம்பிளைகள்

கதைக்கினம். பஸ் மெயின் றோட்டால திரும்பி ஒரு குறுக்குப் பாதைக்குள்ள திரும்பி நிக்குது. உள்ளுக்கை நிக்கிற ஆக்கள் வெளியில இறங்கிப் போகினம் - இவளுக்கு ஒரு ஆறுதல் - இதுவரைக்கும் அனுபவிச்ச நசல்லயிருந்து மீளுறாள் - பெம்பிளையள் இருக்கிற சீற் பக்கமாப் போய் நிண்டு. லேஞ்சியால வியர்வையைத் துடைக்கிறாள். இவளும் இந்தப் பாதை மறிப்புக்குள்ள அகப்படாமல் வீட்டைப்போய்ச் சேந்திட வேணும் எண்டுதான் ஒவ்வொருநாளும் காலமை வெளிக்கிடேக்க நினைப்பாள். ஆனால் வேலை செய்கிற இடத்திலயிருந்து வெளிக்கிட மூண்டரைக்குமேலாயாகும். அதுக்குமுதல் வெளிக்கிடேலாது. மேலதிகாரி சொல்லுவார். "ஏழுமணிக்குத்தானே கேர்வியூ - நாலரைவரையும் வடமராட்சிக்கு பஸ் இருக்கு" இதுக்கு மேலால இவளால என்ன செய்யேலும் - எப்பிடியும் நாலரைக்கு அவங்கள் விசிலூதிப் போடுவாங்கள். அதுக்குப்பிறகுஎந்தவாகனமும்றோட்டால போகேலாது. அது அவங்கடை வாகனத் தொடரணி போற நேரம். அதெல்லாம் போய் முடிஞ்சு திரும்பவும் அவங்கள் விசிலூதினாப் போலதான் எந்த வாகனமும் போகலாம். அதுவரை காய வேண்டியது தான். இண்டைக்கு எத்தினை மணிக்கு விடப்போறாங்களோ எண்டு இவள் தவிப்படையிறாள். இப்ப இவளைப் போல சில பிள்ளையள் உள்ளுக்கை நிக்கினம். நிண்டு கொண்டு வந்த ஆம்பிளையள் எல்லாம் வெளியில போய் இறங்கி நிக்கினம். உள்ளுக்கை இருக்கிறவை மெல்லமாக் கதைக்கத் தொடங்கினம். "என்னப்பா! பருத்துறையில ஒரு பொடியனைச் சுட்டுப் போட்டாங்களாம். நீர்வேலியில இரண்டு பேரைப் போட்டாச்சாம் - சங்கானையில நாலுபேரை வெள்ளை வானில கடத்தின தாம். மானிப்பாய்ப் பெட்டையொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்ததாம். மூண்டு நாளா அதைக் காணேல்லையாம்" எண்டெல்லாம் மாறிமாறிக் கதைக்கிறது இவளுக்குக் கேட்குது. இவளுக்கெண்டா தலைவெடிச்சிடும் போல இருக்கு. இப்ப ஆரைச் சுட்டாலும், கடத்தினாலும் அது சாதாரணமாப் போச்சு. எந்தவழியாலையும் வெளிக்கிடேலாத அளவுக்கு ஒரு வலைக் குள்ள அகப்பட்டிருக்கிறதாக இவள் உணருகிறாள். நேரம் போய்க் கொண் டிருக்கு. உள்ளுக்கை இருக்கிற சிலர் கொட்டாவி விடுகினம். சிலர் தண்ணி குடிக்கினம். சிலர் முந்திரியப் பழம் தின்னுகினம். இப்ப யாழ்ப்பாணத்தில முந்திரியப்பழமொண்டுதான்மலிவு. இவளோடு நசல்பட்டவன் சீற்றிலிருந்து இவளையே பார்த்துக் கொண்டிருக்கிறது தெரியுது. "எளிய மூதேசி - என்ற வயதில மகளுமிருக்கும். அதின்ர மேய்ச்சலைப் பாரன்- விளக்கு மாத்தால ஓட ஓட அடிக்கோணும்" யன்னலுக்குள்ளால வெளில பாத்துக் கொண்டு இவள் மறுகிறாள். இவளால வேறை என்ன செய்யேலும்? இவள் என்ன கண்ணகியே முலையைத் திருகி எறிஞ்சு நகரத்தை எரிக்கிறதுக்கு? அப்பிடி எரிக்கிறதுக்கு இவளால முடியுமெண்டா அநேகமா ஒரு ஆம்பிளையும் மிஞ்சமாட்டன். இன்னும் அவங்கடை வாகனத் தொடரணி போகிற சிலமனைக் காணேல்ல. நேரம் ஆறுமணி யாகிட்டுது. ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வர இன்னும் ஒரு மணித்தியாலம்தான் இருக்கு. பஸ் இப்ப வல்லைவெளியில நிக்குது. "ஆறரைக்கு அவங்கள் பாதையை விட்டாலும் கால் மணித்தியாலத்தில் நெல்லியடிக்கு போகிடலாம். பிறகு சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டை போக பத்து நிமிசம் காணும்" எண்டு மனதுக்குள்ள ஒரு கணக்கைப் போட்டு ஆறுதல்படுகிறாள். இவளின்ரை வயதுப் பிள்ளையள் பஸ்ஸில குறைவாய் இருக்கி றதைப்பாக்கபயங்கிளம்புது - அதுக்குஎன்ன செய்யிறது? நடக்கிறதைக் கண்டு கொள்ள வேண்டியதுதான். இவள் கொஞ்சம் வடிவுதான். அதால எல்லாற்ற கவனமும்

இவளில தான் திரும்புது. போக்குவரத்தில காது கூசுகிற வார்த்தையளக் கேக்கிறாள். கடந்து செல்கிற பொடியளுக்கு இவளிலும் பத்துவயதாவது குறைவாகத் தானிருக்கும். "கோழியளுக்கு நல்ல தீன் விழுகுது போல இப்படிப் பெருத்திருக்கு" "இரண்டும் நல்லாக் குலுங்குது மெதுவாப் போங்கோ" இப்படி எவ்வளவோ வார்த்தையள இவள் நாளாந்தம் கேக்கிறாள்.

அந்த நேரங்களில இவளுக்கு தேக மெல்லாம் பத்தியெரியும். "எளிய மூதேசியள்" எண்டு மனதுக்குள்ள திட்டிப் போட்டு ஓய்ஞ்சிடுவாள். ஒடுங்குறதுதான் எல்லாத்துக்கும் நல்லது. ஆரார் என்னென்ன திட்டத்தோட திரியிறாங்கள் எண்டு இவளுக்கென்ன தெரியும்? நாளுக்கு நாள் சூழ்நிலை இறுகிக்கொண்டு போகுது. இனி மூச்சு விடுற சத்தங்கூட வெளியில கேக்காமல் வாழ வேண்டிய சூழ்நிலையும் வரலாம். முந்தியெண்டா இவள் சின்னவளாய் இருக்கேக்க ஊரில இருந்திருந்திட்டு ஆரும் வயது போனாக்கள் சாவினம். அதே பெரிய சங்கதியா இருக்கும். ஆனால் இப்ப நாளுக்கு இரண்டு மூண்டு பேர் செத்தாலும் சனம் சாதாரணமாகக் கருதப்பழகியிட்டுதுகள் - அதுக்கை முந்தி யெண்டா இவள் சின்னவளாய் இருக்கேக்க ஏதும் பிரேதத்தைப் பாத்தா மூண்டு நாலு நாளுக்கு நித்திரை வராது. நல்ல காய்ச்சலுமடிக்கும். இப்பெண்டா இவளுக்கு இதெல்லாம் சாதாரணமான விசயம். அண்டைக்கொருநாள் இவள் பஸ்ஸால் இறங்கி வேலைத் தலத்துக்கு போய்க் கொண்டிருக்கேக்க ஒரு பொடியன் சைக்கிள்ள வந்தொண்டிருந்தான். பதினைஞ்சு இருபது வயதிருக்கும். டப்பெண்டு அவனுக்குப் பின்னால வேகமாய் ஒரு மோட்டச்சையிக்கிள் வந்து படக்படக்கெண்டு சுடுறதும் அவன் குப்புற றோட்டில விழுந்து துடிக்கிறதும் சைக்கிள் பாட்டத்தை விழுந்து முன்சில்லு சுத்திக் கொண்டிருக்கிறதும் தெரியுது. முதல்ல என்ன செய்யிறதெண்டு தெரியாமல் பதட்டப்பட்டாள். றோட்டால வந்த சனங்கள் திரும்பியோடிச்சுதுகள். இவளுக்கு எங்கை ஓடுறதெண்டு தெரியேல்ல - வேலைத்தலத்துக்கு ஓடினாள். நல்லா வேர்த்தொழுகிச்சுது. பிறகு எல்லாம் சாதாரணமாப் போச்சு. இவள் வேலை முடிஞ்சு வரேக்க பாத்தாள். றோட்டில கொஞ்சம் இரத்தம் உறைஞ்சிருந்தது. வேறையொண்டையும் காணேல்ல. போற வாற சனம் உதுலதான். உதுலதான், எண்டு புதினம் பாத்தொண்டு போகுதுகள். இவளுக்கு மனம் நல்லா இறுகியிடுத்து. வீட்டை வந்தோண்ண நேரில பாத்த சம்பவத்தின்ர தாக்கம் நல்லா குறைஞ்சு போச்சு. திரும்பவும் விசிலூதிற சத்தம் கேக்குது. பாதையைத் திறந்திட்டாங்கள் - பாதையைத் திறந்திட்டாங்கள். வெளியில நிண்டாக்கள் அடிச்சுப் பிடிச்சு ஓடியந்து பஸ்ஸில ஏறுகினம். பஸ் வெளிக்கிடுது. இவள் நேரத்தைப் பாக்கிறாள் ஆறுநாப்பது கொஞ்சம் பதட்டமா இருக்கு. ஆனால் இவளால் என்ன செய்யேலும். பஸ் ஆறு அம்பத்தைஞ்சுக்கு நெல்லியடியில இவள இறக்குது. இவள் சைக்கிள் விட்ட வீடு நல்ல காலம் திறந்திருக்கு. வீட்டுக்கார அன்ரி நிக்கிறா. "என்ன பிள்ளை வேளைக்கு வாறதுக்கென்ன? உம்மால நான் கேற் பூட்டவும் வழியில்ல. கெதியா சைக்கிள எடும். இப்பிடியெண்டா இனி வேற இடத்தில சைக்கிள விடும்" எண்டு அவ சினக்கிறா. இவள் ஒண்டும் பேசாமல் சைக்கிளை எடுத்துக் கொண்டு றோட்டில மிதந்து உழக்கிறாள். றோட்டில் ஒரு காகம் குருவியில்ல. வேகமா உழக்கிறாள், அம்மா பதறிக்கொண்டுகேற்றடியில நிக்கப்போறா! தற்செயலா நான் காணாமல் போனாலும் அவவால என்ன செய்யேலும்? எனத் தன்னைத் தானே கேட்டுக் கொள்ளுறாள்.

11

மூன்றுவார விடுமுறை கிடைத்தது. வியட்நாம் போவதற்கு விரும்பினேன். அவுஸ்திரேலியாவிற்கு புலம்பெயர்ந்த பின்பு புறப்படும் முதல் பயணம். வியட்நாம் - வல்லரசான அமெரிக்காவை நடுங்க வைத்து நிமிர்ந்த தேசம்.

ஆனால் நண்பன் 'வான் மான் நூஜ்ஜின்' அப்படியல்ல; எப்போதுமே எங்களைச் சிரிக்க வைப்பான். ஒவ்வொரு ஈஸ்டர் விடுமுறையின் போதும் அவனது அம்மாவிற்குச் சுகமில்லாமல் வந்துவிடும். அவனும் லீவைப் போட்டுவிட்டு அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்டு தனது தாய்நாடான வியட்நாமிற்குப் போய்விடுவான். இந்தமுறை நானும் அவனுடன் கூடச் சென்றேன். போனவிடத்தில் அவனைப் பற்றிய ஓர் அதிர்ச்சியான செய்தி என்னை மலைக்க வைத்தது.

"அம்மாவின் கடைசிக்காலம். கட்டாயம் பக்கத்தில் இருக்க வேண்டும்" இப்படித்தான் நூஜ்ஜின் சொல்லுவான். நூஜ்ஜின் என்பது அவனது குடும்பப் பெயர். அதற்காக 'வான்' என்றோ 'மான்' என்றோ கூப்பிடலாமா? நூஜ்ஜின் சற்றே குட்டையான உருவமுடையவன். சப்பை மூக்குக் கொண்டவன். எப்போதுமே சின்னத்தாடி ஒன்று வைத்திருப்பான். சமயங்களில் அதற்கு மையும் தீட்டிக் கொள்ளுவான். அவன் கார் உற்பத்தித் தொழிற்சாலையில் பதினாறு வருடங்களுக்கும் மேலாக வேலை செய்கின்றான். நான் கடந்த நாலு வருடங்களாக வேலைசெய்து வருகின்றேன். அம்மாவிற்கு எண்பத்தியேழு வயதாகின்றது எனவும் தொடர்ந்து படுத்த படுக்கையாக இருக்கின்றா என்றும் நூஜ்ஜின் கவலையுடன் சொல்லுவான். இதை நான்




யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்த கே.எஸ். சுதாகர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியலாளராகப் பட்டம் பெற்றவர். தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் இவரது முதற்சிறுகதை 1983இல் ஈழநாடு பத்திரிகையில் வெளியாகியது. கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம் பத்தி எழுத்து, ஆகியதுறைகளில் எழுதிவரும் இவரது படைப்புக்கள் ஈழநாடு, முரசொலி, சிந்தாமணி, உதயம், உள்ளம், பாலம், கலப்பை, ஞானம் ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. நோர்வே தமிழ்ச்சங்கம், ஈழம் தமிழ்ச் சங்கம் (மெல்பர்ன்) அவுஸ்திரேலியா, மரத்தடி இணையம், இலண்டன் பூபாள ராகங்கள், ஞானம் (2006), தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆகியவை நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ளார்.

முகவரி: 28 Throsby Crescent, Deer Park, Victoria 3023, Australia.
kssutha@hotmail.com


# கற்றுக் கொள்வதற்கு



கே.எஸ்.சுதாகர்

3

கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2007இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை

(ஞானம் 92, ஜனவரி 2008)

விளங்கிக் கொள்ள மிகவும் கஷ்டப்பட்டுப் போனேன். அவனது வாயிலிருந்து வரும் வார்த்தைகளை விளங்கிக் கொள்வது மிகவும் கடினம். 'பிறதர்' என்பதை 'பிறடர்' என்பான். 'அமெரிக்கா' என்பதை 'மேரிக்கா' என்பான்.

நீண்ட நாட்களாக வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் 'லோங் சேர்விஸ் லீவை' பகுதி பகுதியாக எடுப்பான் நூஜ்ஜின். வருடத்திற்கு குறைந்தது இரண்டு தடவையாவது தாய்நாடு போய்விடுவான். இதுவரை காலமும் சிறுகச் சிறுகச் சேமித்து வைத்திருந்த லீவை, அவனுடன் கரைப்பது என்று முடிவு எடுத்தேன்.

நூஜ்ஜினிற்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். மனைவி எங்கோ 'றெஸ்ற்ரோறன்ற்'றில் வேலை செய்வதாகச் சொல்லுவான். அவனிற்கு 'ஹோச்சிமின் சிற்றியில்' பெரியதொரு வீடு வளவு இருக்கின்றது. அவுஸ்திரேலியாவின் மதிப்பீட்டில் எட்டு இலட்சம் தேறும் என்பான். அதை வாடகைக்கு விட்டிருப்பதாகச் சொன்னான்.

அவுஸ்திரேலியாவில் எந்த ஊரில் வசிப்பவர்களுக்கும், குறைந்தது இரண்டு அல்லது மூன்று இலவச 'லோக்கல் பேப்பர்கள்' வாரமொருமுறை கிடைக்கும். அதைப் பிரித்துப் படிப்பவர்களுக்கு 'ஆஸ்மா வரும்' என்ற செய்தியைத் தவிர ஏனைய செய்திகள் எல்லாம் அதில் இருக்கும். குறைந்தது அந்தப் பேப்பரைப் படித்து முடிப்பதற்குள் பத்துப் பதினைந்து முறையாதல் தும்மல் வராவிடில், அவர் அந்தப் பேப்பரை முழுமையாகப் படிக்கவில்லை என்பது அர்த்தமாகும்.

இத்தகைய குணாதிசயங்கள் கொண்ட பேப்பரினால், அவித்த 'ஒக்ரா' எனப்படும் கிழங்கை (எங்கள் ஊரில் சீனி வத்தாழங்கிழங்கு) காற்சட்டைப் பொக்கற்றுக்குள் வைத்து அடிக்கடி வேலை செய்யுமிடத்தில் சாப்பிடுவான் நூஜ்ஜின். அடிக்கடி அதைச் சாப்பிடுவதால் ஒருவித நாற்றத்தில் கீழ்வாணமும் விடுவான். 'எங்கள் இடத்தில் இதைப் புவர் பீப்பிள்தான் சாப்பிடுவினம்' என்று எனது சீன நண்பன் சொல்லுவான். அவன் 'புவர் பீப்பிள்' என்று சொல்லும் நளினத்தில் இருந்தே அவனது நாட்டு ஏழைமக்கள் எப்படி இருப்பார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தொழிற்சாலை றேடியோவில் எப்பொழுதும் ஆங்கிலப் பாடல்கள் பாடியபடி இருக்கும். குஜாலாக இருக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் நூஜ்ஜின் 'வேற்றிக் கலாக' ஆசனத்தை உயர்த்தித் தாழ்த்தி ஆடுவதைப் பார்க்க மிகவும் ரம்மியமாக இருக்கும். நாங்கள் 'றொயிலற்' போவதற்கு முன்பும் பின்பும் கைகளைக் கழுவுவோம். நூஜ்ஜின் அப்படியல்ல. கையில் கிளவ்ஸ் போட்டிருக்கும்போது கையை ஏன் கழுவ வேண்டும் என்பது அவன் வாதம்.

இரவு நேரத்தில் தொழிற்சாலையைத் துப்பரவு செய்ய ஒப்பந்த அடிப்படையில் வருபவர்களில் ஒரு நாற்பது நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண் இருந்தாள். அவளைகாட்டி 'மைகேர்ள்ஃபிரண்ட்' என்பான்.



'நீ போன கிழமை இன்னொருத்தியைக் காட்டி மை கேர்ள் ஃபிரண்ட் என்றாயே' என்று கேட்டால், 'ஐ லைக் எனி கேர்ள்ஸ்' என்பான். விசித்திரப்பிறவி அவன். வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பதை நடைமுறைப்படுத்த வந்தவ னாகவே அவனை நான் நினைத்தேன்.

சிங்கப்பூரினூடாகச் சென்ற விமானம் 'ஹோச்சிமின் சிற்றி' எயாப்போட்டில் தரையிறங்கியதும் எங்களுக்காக ஒருவன் காருடன் காத்திருந்தான். அவனும் நூஜ்ஜினும் தமது மொழியில் ஏதோ பேசிக் கொண்டார்கள். கார் நூஜ்ஜினின் தாயாரின் வீட்டை நோக்கிப் போனது. பெரிய வீடு. முகப்பில் அவனது தந்தையாரின் படம் பொறிக்கப்பட்டிருந்தது. வீட்டிற்கு வந்ததும் முதலில் அம்மாவைப் பார்க்க ஓடோடிப் போனான் நூஜ்ஜின். அவனின் பின்னாலே மனைவியும் பிள்ளைகளும் கூட விரைந்தார்கள். அவனது வருகையின் சத்தம் அறிந்து தாய் படுக்கையிலிருந்து எழுந்து கொண்டாள். ஒடிந்து விழுமாப் போன்ற தேகம். முதுகு கூனி கழுத்து நிரந்தரமாகக் கவிழ்ந்து கிடந்தது. "என்னடா மோனை எப்பிடி இருக்கிறாய்?" எண்டதுமாப்போல் தனது பாஷையில் ஏதோ சொல்லிக் கொண்டாள். அவன் அம்மாவிற்காகக் கொண்டுவந்த பொருட் களை அவளது படுக்கை 'பெட் சீற்'றில் பரப்பினான். எண்பத்தி ஏழு வயதுடைய கிழவி ஐம்பத்தி மூன்று வயதுடைய தனது மகனை வாஞ்சையுடன் கட்டித் தழுவிய அந்தக்காட்சி என் மனதை நெகிழ வைத்தது. அவனது துணையுடன் கட்டிலிலிருந்து கீழிறங்கினாள் அவள். மருமகளையும் பேரப்பிள்ளைகளையும் கட்டித் தழுவிவிட்டு அவர்களுடன் நடை பழகினாள். 'உதுதான் இவ்வளவு காலமும் நடக்குதுபோல' என என் மனம் நினைத்தது. உது உப்பிடியே இன்னமும் தொடரப் போகின்றது. நூஜ்ஜினும் ஒவ்வொரு வருஷமும் வரத்தான் போகின்றான்.

நான் அவர்களது அறை வாசலில் நின்று விடுப்புப் பார்த்துக் கொண்டு நின்றேன். "கிழவி இவ்வளவுகாலமும் 'கூவர்' மாதிரி கொஞ்சம் கொஞ்சமா இழுத்து வைச்சிருந்த சங்கதிகளையெல்லாம் வெளி யிலை கொட்டப் போகுது" என்று நூஜ்ஜினின் அண்ணனின் மனைவி எனக்கு சொல்லி விட்டுப் போனாள்.

"என்னவாம் அம்மா சொல்லுறா?" நூஜ்ஜினைப் பார்த்துக் கேட்டேன். "பக்கத்து வீட்டு மனிசி கண்டதையும் சாப்பிட்டுப் போட்டு ஹொஸ்பிட்டலிலை போய்ப் படுத்துக் கிடக்கின்றாளாம். அவள் இக்கணம் சாகப்போகிறாளாம் எண்டு அம்மா கவலைப்படுகின்றா" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் நூஜ்ஜின்.

"அம்மா! இவன் முருகன். என்னோடை வேலை செய்கின்றார். இன்னும் 'மரி' பண்ணேல்லை. வண் கேர்ள் வெயிட்டிங் சிறீலங்கா" என்று வாசலில் நின்ற என்னை தனது தாயாரிடம் அறிமுகம் செய்தான். தலை நரைத்துப் போன என்னை அவனது தாய் உற்று உற்றுப் பார்த்தாள். 'வண் கேர்ள்' என்று அவன் சொன்னது பவானியைத்தான். பவானி எனது வீட்டிற்கு நாலு வீடு தள்ளி ஊரில் இருந்தாள். சிறுவயதுப் பராயத்தில் அவளுடன் விளையாடுவேன். வளர்ந்த போதும் சிலபோது கதைத்ததுண்டு. அவள் அதைத் தப்பாக எடை போட்டுவிட்டாள். அம்மாவிற்கும் பவானியை நன்றாகப் பிடித்திருந்தது. அம்மாவிற்கும் எனக்கு மிடையே நடக்கின்ற ரெலிபோன் சம்பாஷ ணையைப் பாருங்கள்.

"என்னமாதிரி பவானியை கலியாணம் செய்யுறியா"

"என்னம்மா நீ! எலி தான் போகக் காணேல்லையாம், எப்பிடி விளக்கு மாத்தையும் தூக்கிக் கொண்டு போறது?"

பவானி கட்டினால் என்னைத்தான் கட்டுவேன் என்று கொஞ்சக்காலம் காத்தி ருந்தாள். இரண்டு மூன்று வருஷங்கள்.

"சரி பவானியும் கலியாணம் செய்து கொண்டு போயிட்டாள். வேறை யாரையும் ஊரிலை பார்க்கட்டா?"

பவானி திருமணம் செய்து நான்கு மாதத்தில் அவளது கணவன் குமார் இறந்துபோய்விட்டான். துணைப்படையில் இருந்தபோது ஒருநாள் அகாலமாய் இறந்து போனான்.

"பவானியும் விதவையாகிவிட்டாள். நீ உங்கை ஆரையேனும் பார்த்துப் பிடிச்சா கலியாணம் செய்துகொள்."

இப்பொழுது கூட இங்கு வரும்போது நான் அம்மாவிற்கு ரெலிபோன் எடுத்துச் சொல்லவில்லை. சொன்னால் "நீ வியட்நாம் பெட்டையை 'மரி' பண்ணப் போறாய் போல கிடக்கு" என்றுதான் சொல்லுவா.

நூஜ்ஜினின் அண்ணன் மோட்டார் சைக்கிளை உருட்டிக் கொண்டு வீட்டிற்குள் வந்தான். வந்ததும் வராததுமாக எனக்குக் கை குலுக்கிவிட்டு 'ரமில் ரைகர்' என்று சொல்லிச் சிரித்தான். மோட்டார் சைக்கிளி லிருந்த 'பியர்' போத்தல்கள் அடங்கிய பெட்டியை இறக்கி வைத்துவிட்டு நூஜ்ஜினுடன் குசுகுசுத்தான். எனக்கு ஒரு போத்தலை நீட்டியவாறே "ஐ லைக் ரமில்ஸ்' என்றான். பின் அவர்கள் தங்களது குடும்பக் கதைகளிற்குத் தாவினார்கள்.

முதல் மூன்று நாட்களும் 'ஹோச்சிமின் சிற்றி'யையும் அதைச் சூழவுள்ள இடங் களையும் பார்த்தோம். யுத்தத்தின் தாக்கம் இன்னமும் அங்கே தெரிகின்றது. தெருவேங்கும் மோட்டார் சைக்கிள்கள் நிரம்பி வழிந்தன. கார்ச் சாரதி மிகவும் சரளமாக ஆங்கிலம் கதைத்தான். தன்னை 'ஹா' என்று அறிமுகம் செய்தான். அம்மன் கோவிலுக்குப் போனேன். நிறைய வியட்நாம் மக்கள் வந்து கும்பிட்டுவிட்டுப் போனார்கள். பெரும்பாலான மக்கள் நட்புடன் பழகினார்கள். போருக்கு முன்பதாக நிறை இந்தியர்கள் இருந்தார் களாம்.

வடக்கு வியட்நாம் பார்க்கப் போகும் போது தானும் மனைவியும் நின்றுகொண்டு பிள்ளைகளை எங்களுடன் அனுப்பி வைத்தான் நூஜ்ஜின். தனக்கு கொஞ்சம் வேலை இருப்பதாகச் சொன்னான். பிள்ளைகள் அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்தவர்கள். நான் சாரதிக்குப் பக்கத்தில் அமர்ந்தேன். நூஜ்ஜினின் பிள்ளைகளான ருவானும் லிண்டாவும் அவர்களது ஒவ்வொரு நண்பர்களையும் கூட்டிக் கொண்டு வந்திருந்தார்கள்.

அமெரிக்கர்களை ஓடஓட விரட்டிய காடுகளையும், போரின் முதுகெலும்பாக விளங்கிய விவசாயிகளின் கிராமங்களையும் பார்த்துக் கொண்டே பிரயாணம் தொடர்ந்தது. எங்களுடைய வன்னி நிலப் பரப்புக்கூட இப்பிடித்தானேஇருக்கும்! "இந்தக் கிராமங்களிலும் மலைகளிலுமுள்ள மக்கள் தாழ்வாகப் பறந்த எதிரிகளின் விமானங் களைச் சுட்டு வீழ்த்தினார்கள்; எங்கள் தலைவர்கள் எவரையும் அமெரிக்காக் காரன்களால் பிடிக்க முடியவில்லை" பெருமையாகச் சொன்னான் ஹா. எங்க ளின் தலைவர்களை எங்கடை ஆக்களும் சிங்களத் தலைமைகளுமே கொன்றொழித்து விட்டார்கள் என்பதை நான் பெருமையாகச் சொல்ல முடியாது.

"சிறீலங்காவிற்கு சீனாவும் இந்தியாவும் உதவி செய்கின்றனவாமே? பத்திரிகையில் பார்த்தேன்" என்றான் தொடர்ந்து. எங்களின் பிரச்சினையை யாரிடம் சொல்லி முறையிடுவது? "சோழியன் குடுமி சும்மா ஆடாது எண்டதுமாப்போல இந்தியா சம்பூரிலையும் சீனா புத்தளத்திலையும் அனல் மின் நிலையம் போடுகினம். இதுகளின்ர அடிப்படையெல்லாம் இன அழிப்புக்குத்தான்."

"எந்த நேரமும் சண்டை நடந்து கொண்டிருக்கிற ஒரு நாட்டின் பொருளா தாரம் ஒரு போதும் உயரப் போவதில்லை" என்றான் ஹா.

மலைகளும் பள்ளத்தாக்குகளும் மாலைச் சூரியனின் ஒளிபட்டுத் தகதகத்துக் கொண்டிருந்தன.

**வெளியில் இருந்து பார்க்கிறவர்கள் போர் முடிந்துவிட்டது என்று தான் சொல்லுவார்கள். ஆனால் போர் உண்மையில் அதுக்கு பிறகுதான் ஆரம்பமாகிறது. எங்கள் நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும். பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும்"**

*"நாளைக்கு இந்த நேரம் நாங்கள் ஹோச்சிமின் சிற்றியில் இருக்க வேண்டும்" கார்க்கண்ணாடியினூடாக பின்புறமிருந்த நூஜ்ஜினின் பிள்ளைகளைப் பார்த்துவிட்டு ஹா சொன்னான்.*

*"ஏன் என்ன அவசரம்? இன்னும் கொஞ்சம் இருந்து பார்த்துவிட்டுப் போகலாமே?"*

*"இல்லை, சற்றடே போர்ட் மீற்றிங் இருக்கல்லவா?"*

*எனக்கு ஹா சொன்னது ஒன்றுமே புரியவில்லை.அவனை வியப்புடன் பார்த்தேன்.*

*"உங்களுக்கு நூஜ்ஜின் ஒன்றுமே சொல்லவில்லையா?"*

*"சொல்லியிருப்பான். ஆனா விளங்கக் கூடிய விதத்தில் சொல்லியிருக்க மாட்டான்" நான் அவனது காதிற்குக் கிட்டக் குனிந்து மெதுவாகச் சொன்னேன்.*

*காரை ஒரு இளைப்பாறும் இடத்தில் நிற்பாட்டினான் ஹா. ருவானும் லிண்டாவும் நண்பர்களும் இறங்கிக் காலாற நடந்தார்கள். ஹா ஒரு சிகரட்டைப் புகைத்துக் கொண்டே இன்னொன்றை எனக்கு நீட்டினான். ஒரு முறை செருமிவிட்டு, நூஜ்ஜினின் சரித்திரத்தை சொல்லத் தொடங்கினன்.*

*நூஜ்ஜினின் இளமைக்காலம் மிகவும் கொடுமையானது. வறுமை. போர். நான்காவது வகுப்பு வரையுமே படித்திருப்பான். அவனது தந்தை வடக்கு வியட்நாமில் ஒரு விவசாயி, ஒரு போராளி. அவர்களுக்கு எட்டுப்பிள்ளைகள். அமெரிக்கப் படைகள் அவர்களின் கிராமத்தை எரித்தார்கள், மக்களைக் கொன்றார்கள். அவர்களின் பாதிக்குடும்பம் போரிற்கு பலியானது. 1968ஆம் ஆண்டு போரின் உச்சக்கட்டம். போரின் கோர முகங்கள் வியட்நாம் என்று பசுமை நிறைந்த நாட்டை சின்னாபின்னமாக்கின. நூஜ்ஜின் கூலி வேலைகள் பல செய்தான். ஆரம்பத்தில் சீமெந்து குழைத்தான். கல்லுகள் தூக்கினான், முட்டாள் வேலைகள் பல செய்தான். பிறகு ஒரு பெட்டிக்கடை, பெட்டிக்கடை பெரிதாக வீடுகட்டும் சாமான்கள் விற்கும் கடையாகியது. படிப் படியாக வாழ்க்கையில் முன்னேறினான். ஆனாலும் அவனால் படிக்க முடியாமல் போய்விட்டது.*

*அமெரிக்கப் படைகளின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக வியட்கொங் போராளிகள் போராட்டம் நடத்தினர். போராளிகளின் கெரில்லா உத்திகள் அமெரிக்கப் படைகள் ஆட்டுவித்தன. மக்கள் போராளிகளாக மாறினார்கள்; ஒற்றுமையாக படைகளைக் கட்டி எழுப்பினார்கள்; யுத்தத்தை நடத்தினார்கள். கலப்பை ஒரு கையிலும் துப்பாக்கி மறு கையிலுமாகப் போராடினார்கள். வடக்கு தெற்காக போர். போரிலை மிக உச்ச இழப்பை இந்த உலகத்திலை நாங்கள்தான் சந்தித்திருக்கின்றோம் என்றான் ஹா.*

*அப்பொழுதெல்லாம் வியட்நாம் அரசு ஆக்களை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கவில்லை. களவாக வெளிக்கிட்டு தப்பி ஓடியவர்களும், கடலிற்குள் அயல்நாட்டு மீனவர்களால் பலி வாங்கப்பட்டார்கள். ஆண்களைக் கடலிற்குள் தள்ளிவிட்டு பெண்களை தங்களின் இச்சைக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். நூஜ்ஜினின் தந்தை*

போரினில் மடிந்தபோது நூஜ்ஜின் மலேசி யாவிற்கு கப்பலில் தப்பி ஓடினான். அதன் பின்பு அங்கிருந்து அவுஸ்திரேலியாவிற்கு வந்தான்.

வெள்ளிக்கிழமை மதியமளவில் வீட் டிற்குப் போய்விட்டோம். வீட்டின் பின்புறமிருந்த மரத்திற்குக் கீழே கதிரை களைப் போட்டுவிட்டு சாப்பிடத் தொடங்கினோம். சூடான சாப்பாட்டுடன் பேச்சும் சூடு பிடிக்கத் தொடங்கியது.

“போரின் நிஜத்தை சந்திக்காமல் வாய் கிழியக் கதைக்கிறதில் அர்த்தம் இல்லை. நான் போருக்குப் பயந்து தப்பி ஓடி வந்தவன். நீண்டகாலம் நீடித்த போரில் எத்தனை ஆயிரம்பேர் செத்துப் போனார்கள். எத்தனை மில்லியன் தொன் குண்டுகளைக் கொண்டு வந்து வான் வழியாகக் கொட்டியிருப்பான்கள். கை இழந்தவர்கள், கால் இழந்தவர்கள், கண் இழந்தவர்கள், காணாமல் போனவர்கள், விதவையானவர்கள் சொல்லத் தேவை யில்லை. என்னுடைய அம்மாகூட இளம் வயதிலேயே விதவையாகிப் போய் விட்டாள். வெளியில் இருந்து பார்க்கிற வர்கள் போர் முடிந்துவிட்டது என்று தான் சொல்லுவார்கள். ஆனால் போர் உண்மையில் அதுக்கு பிறகுதான் ஆரம்பமாகிறது. எங்கள் நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும். பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும்” நூஜ்ஜின் சொல்லிக் கொண்டே போக ஹா மொழிபெயர்த்துக் கொண்டிருந்தான். நான் வியந்து போனேன். நூஜ்ஜினா இப்படிக் கதைக்கின்றான்?

“ஜப்பானியர்கள் கடற்கரையில் மரக் கலங்களை நிறுத்தி விவசாயம் செய்கின் றார்கள். சிங்கப்பூர் பொருளாதாரத்தில் எவ்வளவோ முன்னேறி விட்டது. எமது நாடு? அடுத்தவர்கள் வந்து எமது நாட்டில் வர்த்தகம் செய்வதைவிட நாமே அதைச் செய்வது நல்லது. கம்யூனிஸ்ட் கொள் கைகள்கூட இப்ப இங்கே எவ்வளவோ தளர்த்தப்பட்டுவிட்டன.”

இன்னொரு நாட்டின் பிரஜையாக இருந்து கொண்டு தன் சொந்தநாட்டையே நினைப்பதும் அதை முன்னேற்றுவதும் பிழையான சிந்தனையல்லவா?” நான் இடையில் குறுக்கிட்டேன்.

“நான் இரண்டு நாட்டினதும் பிரஜை தான். எங்கள் நாட்டைச் சுரண்டி சூறை யாடும் போது இந்தக் கேள்வியை யாரும் கேட்கவில்லையே? நான் உழைக்கின்றேன். என்னுடைய உழைப்புக்குக் கிடைக்கிற ஊதியத்தில் ஒரு பகுதியை, என் சொந்த நாட்டை முன்னேறுவதற்காகப் பாவிக்க நினைப்பதில் என்ன தவறு இருக்கின்றது?”

மாலையில் நூஜ்ஜின் எனக்கு ஒரு ஆடைத் தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டினான். கூடவே அவனது அண்ணனும் ஹாவும் வந்தார்கள். தையல் இயந்திரங்களின் சத்தங்கள் கேட்டன. கிட்டத்தட்ட இருநூறுபேர் மட்டில்வேலை செய்யும் அந்த ஆடைத்தொழிற்சாலையில் பெரும்பாலும் பெண்களே வேலை செய்தார்கள். அந்தப் பெண்களில் எண்பது சத விகிதமானவர்கள் விதவைகள் என்றான்.

மனம் ஏதோ சுமையில் கனப்பது போல இருந்தது. “எங்கள் நாட்டுப் பிரச்சனையும் கிட்டத்தட்ட வியட்நாமிற்கு ஒப்பானதுதான்” வீடு திரும்பும்போது சொன்னேன். “எனக்குத் தெரியும்” என்றான் நூஜ்ஜினின் அண்ணன். கார் ஓடிக் கொண்டிருந்தது. நானும் நூஜ்ஜினின் அண்ணனும் பின்புறம் இருந்தோம்.

“என்ன ஒரே சிந்தனையில் இருக்கின் றீர்கள்?” என்றான் ஹா.

“பெரிதாக ஒன்றும் இல்லை. நாலாம் வகுப்புப் படித்த நூஜ்ஜினும் நாலு வருடங்கள் பல்கலைக்கழகத்தில் படித்த நானும் ஒன்றாக ஒரே இடத்தில் வேலை செய்கின்றோம். அதை நினைச்சுப் பார்த்தேன்” இதை நான் வேண்டுமென்று சொல்லவில்லை. நரம்பில்லாத நாக்கு வரம்பு மீறிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். நூஜ்ஜினின் முகம் கறுத்துப்

போனதை கண்ணாடிக்குள்ளால் அவதானித்தேன்.

"ஒன்றுமில்லை. நூஜ்ஜினை நான் பெருமையாகத்தான் சொல்லுகிறேன். இங்கிலிஸ் நன்றாகத் தெரியாத நூஜ்ஜின் அந்த வேலையைச் செய்வதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்" சமாளிக்கப் பார்த்தேன்.

"அந்த வேலை உண்மையில் எனக்குரியது. காரைத் துடைப்பதற்கும் பெயின்ற் அடிப்பதற்கும் நாலு வருஷங்கள் பல்கலைக்கழகத்தில் படிக்க வேண்டுமா?" தனக்கு வந்த ஆங்கிலத்தில் கோபமாக கத்தினான் நூஜ்ஜின். அவனிற்கு அப்படிக் கோபம் வந்ததை இன்றுதான் பார்க்கின்றேன்.

"நீங்கள் உங்கள் நாட்டில் என்ன வேலை பார்த்தீர்கள்?" ஹா என்னிடம் கேட்டான். "ஆரம்பத்தில் ஒரு பட்டதாரி ஆசிரியராக இருந்தேன். பின்பு கல்வி அமைச்சில் பாடத்திட்டங்கள் தயாரிக்கும் குழுவில் இருந்தேன்"

"அப்படியென்றால் நூஜ்ஜின் சொல்வது தான் சரி. நீங்கள் ஏன் இந்த வேலைக்கு வந்தீர்கள்?"

"வயிறுதான். வேறொன்றும் இல்லை" என் வயிற்றைச் சுட்டிக் காட்டினேன். "முப்பது முப்பத்தைஞ்சு வருஷங்கள் நடந்த உங்கட நாட்டுப் பிரச்சினை எழுபத்தி மூண்டோடை முடிஞ்சுது. உங்கட ஆக்கள் எல்லாம் எப்பவோ புலம்பெயர்ந்திட்டினம். எங்கட பிரச்சினை இன்னமும் தீர்ந்தபாடில்லை. நான் நேற்று வந்தவன். எனக்கு இந்த வேலைதான் கிடைக்கும்"

"அப்படியென்று இல்லை. நீங்கள் இந்த வேலையைச் செய்து கொண்டே இன்னமும் படிக்கலாம். படிப்பதற்கு எல்லை இல்லை. படித்து பெரிய பதவிக்கு வரலாம். நாலாம் வகுப்புப் படித்த என்னால் இவ்வளவு செய்யக்கூடியதாக இருக்கு என்றால் உங்களால் எவ்வளவோ செய்யலாம்" நூஜ்ஜின் படபடவென்று பொரிந்து தள்ளினான். 'நாலாம்வகுப்பு' என்று சொன்னது அவனிற்கு சுட்டுவிட்டது.

"அமைதி. அமைதியாக இருங்கோ" என்று நூஜ்ஜினின் அண்ணன் சொன்னான். அதன்பின்பு ஒருவரும் கதைக்கவில்லை.

காரின் வேகத்தைவிட எனது சிந்தனைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. பவானி ஒருமுறை மனதில் வந்து போனாள். அவளும் ஒருவேளை தையல் இயந்திரத்துடன் இப்பொழுது போராடிக் கொண்டு இருக்கலாம். 'அடுத்தமுறை அம்மாவோடை கதைக்கேக்கை பவானியைப் பற்றியும் ஒருக்கா விசாரிக்க வேணும்.'

கார் வீட்டை அடைந்ததும் நூஜ்ஜின் இறங்கித் தன்பாட்டில் போனான். அவனது கோபம் இன்னமும் தணியவில்லை. நாளை நான் அவுஸ்திரேலியாவிற்கு திரும்ப வேண்டும். அதற்கிடையில் இந்தச் சம்பவம் நடந்துவிட்டதே என கவலையாக இருந்தது.

எனக்கு ஒதிக்கித் தந்த அறையின் கட்டிலில் இருந்து 'பாக்'கை அடிக்கிக் கொண்டிருந்தேன். கதவு தட்டப்பட்டது. ஒரு கையினில் 'ரீ' கப் ஒன்றை நீட்டிக் கொண்டு நூஜ்ஜின் வந்தான். "மன்னிக்க வேண்டும். அப்படி நான் நடந்து கொண்டதற்கு மன்னிக்க வேண்டும்" சொல்லிக் கொண்டே வந்து கட்டிலில் என்னருகே இருந்தான். உண்மையில் நான் அல்லவா அவனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்?

"நன்றாகப் படியுங்கள். கற்றுக் கொள்வதற்கு நிறையவே இருக்கின்றன. எங்களுக்கு என்று இன்னொருவர் வந்து உதவி செய்யப் போவதில்லை" சொல்லிவிட்டு கட்டிலில் இருந்து எழுந்து செல்லும் பொழுது தெளிவான ஆங்கிலத்தில் கூறினான்,

"முருகன், ஐந்து நிமிடத்தில் போட் மீற்றிங் இருக்குது. நீ பார்த்த ஆடைத் தொழிற்சாலை எனது சொத்து. அதனைவிட இன்னொரு ஆடைத் தொழிற்சாலையும் உண்டு."

12

# போர்வைகள் மறைக்காத பார்வைகள்

தெ. நித்தியகீர்த்தி



வெலிங்டன் நிலப்பரப்பு மிக அழகானது. மலைக் குன்றுகள் முத்து மாலையைப் போல் அதைச் சுற்றியிருக்கும். நீல நிறக் கடல், அலைகள் அலங்கரிக்கும் அழகிய சேலையை நகருக்குக் கட்டியிருக்கும். இந்தச் சேலையின் நிறம் பருவ காலங்களுக்கு ஏற்ப செம்மையாக மாறுவதும் உண்டு. என்ன வண்ணம் கொண்டாலும் நியூசிலாந்து தலைநகருக்கு நிகராக இன்னும் ஒரு நகரை நான் காணவில்லை. ஆனாலும் அன்று அந்த அழகை இரசிக்கும் மனநிலை எனக்கு இல்லை. வெலிங்டன் விமான நிலையத்தில் இருந்து அந்த விமானம் எப்பொழுது புறப்படும் என்ற ஆவல் என்னை முழுக்க முழுக்க ஆக்கிரமித்திருந்தது. விமானப் பயணங்கள் எனக்குப் புதிதல்ல. எனது வேலை நிமித்தம் பல நாடுகளுக்குப் பலமுறை பயணம் செய்திருக்கின்றேன். ஆனாலும் இந்தப் பயணம் வித்தியாசமானது. என் மனதில் தூங்கிக் கிடந்த, உறைந்து போன பல உணர்வுகளைத் தட்டி எழுப்பி என்னைத் தடுமாற வைக்கிறது.

விமானம் ஓடு பாதையில் ஓடி மேலெழுந்து பறக்க ஆரம்பித்தது. விமான நிலையத்தின் மூன்று பக்கங்களிலும் கடல். கடல் கன்னியைக் கட்டியணைத்து விடைகொடுப்பது போல், அவளைத் தொட்டும் தொடாமலும் விமானம் பறக்கும் போது, கடலில் வீழ்ந்து விடுவோமோ

யாழ்ப்பாணம் புலோலி கிழக்கைச் சேர்ந்த தெட்சணாமூர்த்தி தம்பதிகளின் இரண்டாவது புதல்வராக 04-03-1947 அன்று பிறந்த நித்தியகீர்த்தி ஒரு எம். பி.ஏ. பட்டதாரியாவார். இவர் சிறுகதை, நாவல், விமர்சனம், நாடகம், பத்தி எழுத்துக்கள் என எழுதியிருப்பவர். தினகரன் பத்திரிகையில் பிரசுரமான 'கடவுள் கதைப்பாரா' என்ற சிறுகதையூடாக இவர் இலக்கிய உலகத்துக்கு அறிமுகமானார். இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்து உலகின் பல பகுதிகளிலும் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் அவ்வப்போதான ஸ்தம்பிதங்கள் ஏற்பட்டாலும் தொடர்ந்தும் இலக்கிய உலகோடு இணைந்திருந்தார். புலம்பெயர்ந்து வேற்று நாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த காலங்களிலும் இவரது படைப்புகள் ஈழத்துப் பத்திரிகைகளிலும் புலம்பெயர் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகிக் கொண்டிருந்தன. இவர் எழுதிய நாவல் மீட்டாதவீணை புலோலி கிராமத்தைப் பகைப்புலமாகக் கொண்ட முதலாவது நாவல் என்ற சிறப்பினைக் கொண்டது.

(ஞானம் 91, டிசம்பர் 2007)



என்ற அச்சம், பயணிகளுக்கு வருவது உண்டு. விமானத்தைவிட வேகமாக என் மனம் பயணமாகின்றது. இந்த மனதுதான் எத்தனை விந்தையானது. இதற்கு, நேரம், தூரம், காலம் என்று எந்தத் தடைகளும் கிடையாது. சுற்றியிருக்கும் சூழல் கூட அதனைக் கட்டிப்போட முடியாது. சிறைச்சாலையில் பூட்டி வைத்தாலும் மனம் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதை யார்தான் தடுக்க முடியும்?

என் மனம் பல வருடங்களைத் தாண்டி பின்நோக்கி ஓடியது. பல மைல்களைக் கடந்து ஈழ மண்ணில் காலைப் பதித்தது. அப்பொழுது எனக்குப் பதினெட்டு வயது. காதல் கவிதை வடிக்கும் வயது. பொறுப்புக்களை பெற்றோரிடமும் பெரியோரிடமும் விட்டு, சிட்டுக்குருவியாகப் பறக்கும் இளமைக் காலம். காற்றோடு போட்டியிட்டு எங்கள் துவிச்சக்கர வண்டிகள் வேகமாக ஓடும். “பிறேக்” இல்லாத வண்டிகள், பாதங்கள் இரண்டாலும் சக்கரத்தை அழுத்தி ‘கிறீச்’ என்ற ஓசையுடன் வண்டியை நிறுத்தும் அந்த லாவகம், ஒரு வண்டியில் நான்கு பேரை ஏற்றிச் செல்லும் திறமை. அவை காலத்தால் அழிக்க முடியாத பசுமை நிறைந்தவை. அந்த நாட்களில் வசதியுள்ளவரின் இளம் பெண்கள் வாடகைக் காரில் பள்ளிக்கூடம் செல்வார்கள். எங்களைப் போல் பல்லிளிக்கும் காவாலிகள் கண்களில் படக்கூடாது என்று பெற்றோர் பெரும் கவனம் எடுப்பார்கள்.

அப்படியொரு வாடகைக் கார்தான் காதல் வாடைக்காற்றை என்மீது வீசியது. அந்தக் கார் காலை 8.20க்கு நாற் சந்தியைத் தாண்டி வட இந்து மகளிர் கல்லூரியை நோக்கித் திரும்பும். பனம் பாத்தியில் அடுக்கி வைத்த பனம் கொட்டைகள் போல் காரின் உள்ளே ஒரு பஸ்ஸில் செல்லக்கூடிய அளவு இளம் மாணவிகள். கடைசியாக அவள் ஏறுவதால் கதவோரம் அவளுக்கு. கார்க் கதவின் கண்ணாடியில் அவள் முகம் பதிந்திருக்கும். சந்தியில் கார் திரும்பும் வேளை என் துவிச்சக்கர வண்டியும் அந்தக் காரோடு திரும்பும். சந்தியில்தான் எங்கள் விழிகள் சந்திக்கும். அந்தச் சில விநாடிகளில் நாடி நரம்பெல்லாம் ஓடிச்செல்லும் இன்ப உணர்வுகளை நினைக்கும் பொழுதெல்லாம் இனிக்கும். இனிக்கும்பொழுதெல்லாம் அவளை

நினைக்க வைக்கும். பள்ளிக்கூட நாட்களில் ஒரு நாள் தவறாது அந்தத் தேவி தரிசனம் எனக்குக் கிடைத்தது.

விமானம் மேலே மேலே பறந்து கொண்டிருக்கிறது. என் மனதைப்போல். மெல்பேர்ன் நோக்கிய இந்த விமானப் பயணம் பல ஆண்டுகளுக்குப் பின் அவளை நேருக்கு நேர் சந்திக்கப் போகும் முதற் பயணம். "கல்யாணி". அவளின் அழகான பெயரை முணுமுணுப்பதில் ஏதோ ஓர் இனம்தெரியாத இன்பம். இத்தனை நாள் அது எங்கே மறைந்திருந்தது? அன்று ஏணி வைத்தும் எட்ட முடியாத உயரத்தில் அவளிருந்தாள். நானோ ஏழ்மையில் புரள்பவன். வழமையான காதல் கதைகள் போல் அவள் மாடி வீட்டுப்பணக்காரப் பெண். அவளைச் சந்திக்கவோ பேசவோ எனக்குச் சந்தர்ப்பங்களே கிடைத்ததில்லை. ஆனாலும் அந்தப் பார்வைகளின் சந்திப்பில் நாங்கள் பல நூறு கதைகள் பேசிக்கொண்டதாக எனக்கு நினைப்பு. அவளுக்கு எப்படியோ? அன்றைய பல இளங் காளையரின் கனவுக் கன்னியவள். சுருண்ட அவளது கேசம் நெற்றிப் பொட்டைத் தொட்டுக் கொஞ்சி விளையாடும். குமுதத்தில் லதா வரைந்த சாண்டில்யனின் யவன ராணி என அவளுக்கு நாங்கள் பெயர் வைத்தோம். கடல் புறாவாக அவள் பறந்து விடுவாளென நான் எண்ணியதில்லை. ஒரு நாள் திடீரென அவள் மறைந்து விட்டாள். அவள் கொழும்பு சென்றுவிட்டதாகச் சிலர் சொன்னார்கள்.

குண்டுகளும், பதுங்கு குழிகளும், குழிகளுக்குள் புதைந்த உடல்களும் வாழ்க்கையின் யதார்த்தங்களைப் புரிய வைத்தன. அவள் நினைவுகள் இதயத்தின் ஆழத்தில் புதைந்தன. ஈழம் எரிய ஆரம்பித்தது. சிறீலங்கா இன ஒழிப்பாளர்களின் குண்டுகள் வானத்தில் இருந்து பொழிந்தன. நாளாந்தம் சாவுச் செய்திகள். கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டன. தலையாட்டிகள் முடி தரித்த காலம். இனவெறி இராணுவத்தோடு சேர்ந்து இயங்கும் இவர்கள் முகமூடி அணிந்திருப்பார்கள். யாரை யாவது பார்த்து இவர்கள் தற்செயலாக தலை அசைத்தாலும் போதும், அந்த அப்பாவிகளை இராணுவம் பிடித்துச் சென்றுவிடும். என் நண்பர்கள் சிலர் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப் பட்டார்கள். சிலரின் சித்திரவதை செய்யப் பட்ட பிணங்கள் தெருவோரங்களில் வீசி எறியப்பட்டன. அவர்கள் நிச்சயமாக இறந்து விட்டார்கள் என்று தெரிந்து கொண்டோம். மற்றவர்களின் தலை விதியை அறியமுடியாது சொந்தங்கள் தலையில் அடித்து அழுது கொண்டிருந்தன. இன்னும் அழுது கொண்டிருக்கலாம். அல்லது அழுதவர்களும் அழிக்கப்பட்டிருக்கலாம்.

இராணுவத்தின் அட்டூளியத்தைப் பார்த்து அழத்தான் என்னால் முடிந்தது. என்னை விட இளையவர்கள், இளம் பெண்கள், அங்கவீனர்கள்கூட விடுதலைக்குப் போராடுவதை பார்த்தபோது நான் வெட்கப்பட்டேன். ஆனால், ஆட்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் தரகர்களிடம் இரு முறை இருந்ததையும், இரவல் வாங்கியவையையும் இழந்தும் நாட்டை விட்டு ஓடும் முயற்சியைக் கைவிடவில்லை. தாய்லாந்தில் அகதியாக இரண்டு வருடங்களைத் தள்ளினேன். அகதி என்பவன் காற்பந்து போலத்தான். யார் எங்கே எப்பொழுது உதைப்பார்கள் என்று தெரியாது. உதைப்பார்களோ என்றும் தெரியாது. விரக்தியின் உச்சக் கட்டம். விடுதலைக்காக உயிரை விட்டிருக்கலாமே என்று மனச்சாட்சி உறுத்தும். தன்மான உணர்வு தலை தூக்கும் போதெல்லாம் இதயம் வெடித்துச் சிதறும். மானுட உலகில் வேண்டப்படாத ஒரு ஜந்தாக கருதப்படுவோம். கொலை

வெறியரிடமிருந்து தப்பி வந்த நம்மை ஆயிரம் கொலைகள் செய்த கொடிய வனைப் போல் பல விழிகள் பார்க்கும். ஒவ்வொரு பார்வையும் விஷம் தீட்டிய ஊசிகள். கைதிக்குக் கூட தனக்கு எத்தனை ஆண்டு தண்டனை என்று தெரியும். புரியாத குற்றம். தெரியாத தண்டனை. நாளை என்று ஒன்று இல்லை என நாடி நரம்பெல்லாம் நம்பும் வாழ்க்கை. ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அன்புக் கரம் எப்படியோ என்னை அந்தச் சேற்றிலிருந்த நியூசி லாந்தில் கரை சேர்த்தது.

நியூசிலாந்து என்னை வாழ வைத்த நாடு. முடிந்து விட்டதாக நான் முற்றுப் புள்ளி வைத்த எனது வாழ்க்கைக்கு மீண்டும் ஒரு புதிய அத்தியாயத்தை எழுத வைத்த நாடு. அங்கு படிக்க பல வாய்ப்புக்கள். கடுமையான உழைப் புக்கு ஏற்ற பலன். படித்தேன். பட்டம் பெற்றேன். ஒரு கொம்பனியில் தலைமை நிர்வாகியாகக் கடமையாற்றுகின்றேன். அன்றாட வாழ்க்கைத் தேவைக்கு மீறிய ஊதியம். நெற்றியில் சுருக்கங்கள். தலைக்கு கறுப்பு மை பூசுவதா வேண்டாமா என்று மனதுக்குள் போராட்டம். வயது நாற்பத்தைந்தை தாண்டிவிட்டது. வழி யில் மனதில் சபலத்தை, ஆசை களை ஏற்படுத்திய பல பெண்கள். ஆனாலும் என் கைக்கு எட்டாமல் யார் யாரையோ மணந்து குழந்தைகளோடு வாழ்கின்றார்கள். சிலர் என் நண்பர் களை மணந்து அவர்களையும் பறித்துக் கொண்டார்கள். அவர்கள் வீடுகளுக்குப் போனால் சுவையான உணவு கிடைக்கும். “ஜொனி வோக்கரை” நான் கொண்டு போவதால் அடிக்கடி போனால் மனைவி யருக்குப் பிடிக்காது. அது இல்லாது போனால் நண்பர்களுக்குப் பிடிக்காது.

“உன்றை சாட்டிலையாவது குடிக்க லாமடா” என்று அங்கலாய்ப்பார்கள்.

**ஈழம் எரிய ஆரம்பித்தது.**
**சிறீலங்கா இன ஒழிப்பாளர்களின் குண்டுகள் வானத்தில் இருந்து பொழிந்தன.**
**நாளாந்தம் சாவுச் செய்திகள்.**
**கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டன.**
**தலையாட்டிகள் முடி தரித்த காலம்.**
**இனவெறி இராணுவத்தோடு சேர்ந்து இயங்கும் இவர்கள் முகமூடி அணிந்திருப்பார்கள்.**
**யாரையாவது பார்த்து இவர்கள் தற்செயலாக தலை அசைத்தாலும் போதும், அந்த அப்பாவிகளை இராணுவம் பிடித்துச் சென்றுவிடும். என் நண்பர்கள் சிலர் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப் பட்டார்கள். சிலரின் சித்திரவதை செய்யப் பட்ட பிணங்கள் தெருவோ ரங்களில் வீசி எறியப்பட்டன.**
**அவர்கள் நிச்சயமாக இறந்து விட்டார்கள் என்று தெரிந்து கொண்டோம். மற்றவர்களின் தலை விதியை அறியமுடியாது சொந்தங்கள் தலையில் அடித்து அழுது கொண்டி ருந்தன. இன்னும் அழுது கொண்டி ருக்கலாம். அல்லது அழுதவர்களும் அழிக்கப்பட்டிருக்கலாம்.**

இதனால் தனிமையை பல சமயங் களில் உணருவேன். அப்பொழு தெல்லாம் என் பால்ய நினைவுகளில் ஊறிப்போய் விடுவேன். அந்த நினைவு களின் ஊடே கல்யாணியின் நிழல் ஓடும். மீண்டும் கேட்ட பழைய பாடல் போல அது, பின்னர் மறைந்து விடும். சென்ற வாரம் வரை அப்படித்தான் இருந்தேன்.

மெல்பேர்னில் இருந்து வந்த நண்பன் சுகுவின் தொலைபேசி அழைப்பு அதை மாற்றிவிட்டது.

"டேய், உனக்கு நினைவிருக்கே, சங்கரப்பிள்ளையரின்ர காரில போற கலியாணி. அவளைக் கண்டனடா"

எனக்கு உடல் சிலிர்த்தது. "எங்கடை வட கின்டு கேர்ள்ஸ்.."

"ஓமடா. இஞ்ச மெல்பேர்னிலதான் இருக்கிறாள்"

எனக்கு வார்த்தைகள் வரவில்லை.

"என்னடா கார்ட் அட்டாக்கே? சத்தத்தைக் காணோம்." வேகமாகத்தான் என் இருதயம் அடித்துக் கொண்டது.

"சுகு, எங்கேயடா கண்டனீ? எப்படி இருக்கிறாள்?"

"நீ சனிக்கிழமை வாராய் தானே அப்ப கதைப்பம்" அவன் தொலைபேசியை வைத்து விட்டான்.

எனக்கு எரிச்சல் வந்தது. சுகு அப்படித்தான். அந்த நாட்களில் சிரஞ்சீவி, மேதாவி, தமிழ்வாணன் மர்மக் கதைகளைப் படிப்பவன். எதையும் ஒரு "சஸ்பென்ஸ்" வைத்துச் செய்வதில் இன்பம் காண்பவன். மற்றவர்களுக்கு அது சித்திரவதையானால் அதில் அதிக மகிழ்ச்சி அவனுக்கு.

நான் திருப்பி அவன் தொலைபேசி இலக்கத்தை அழுத்தினேன். எடுத்தது அவன் மனைவி மாலினி.

"உவன் நியூசிலண்ட் சிவாவே. நான் இல்லை என்று சொல்லு" அவன் கத்தினான்.

"சிவா அண்ணே அவர் சொன்னது கேட்டிதே" மாலினி சிரித்தாள்.

மனதுக்குள் திட்டியது வெளியில் வராது. நா காத்துக் கொண்டது.

"மறக்காமல் பிளைக் லேபலை வாங்கிக் கொண்டு வரச்சொல்லு" சுகு கத்தியது கேட்டது.

சுகுவும் மாலினியும் எனக்கு மெல்பேர்னில் பல ஆண்டுகளாகத் திருமணம் பேசுகிறார்கள். எனக்குப் பிடித்தால் பெண்ணுக்குப் பிடிப்பதில்லை. பெண்ணுக்குப் பிடித்தால் எனக்குப் பிடிப்பதில்லை. இருவருக்கும் பிடித்தால், சாதகம் பார்க்கும் சோதிடருக்குப் பிடிப்பதில்லை.

நேரம் போனதே தெரியவில்லை. விமானத்தின் வேகம் குறைகின்றது கீழே பார்த்தேன். மெல்பேர்ன் நகரின் இரவு நேர விளக்குகள் தரையில் நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தை விரித்திருந்தன. விமானம் தரை தட்டியது. பயணிகள் எல்லோரும் பரபரப்பாக இறங்குவதற்கு ஆயத்தமாகிறார்கள். எனக்கும் என்றுமில்லாத ஆவல். கல்யாணியைப் பற்றி பல கற்பனைகள். இத்தனை காலம் திருமணம் செய்யாது இருந்ததில் பலன் இருக்குமோ என்ற ஒரு நப்பாசை.

**அவளின் அழகான பெயரை முணு முணுப்பதில் ஏதோ ஓர் இனம்தெரியாத இன்பம். இத்தனை நாள் அது எங்கே மறைந்திருந்தது? அன்று ஏணி வைத்தும் எட்ட முடியாத உயரத்தில் அவளிருந்தாள். நானோ ஏழ்மையில் புரள்பவன். வழமையான காதல் கதைகள் போல் அவள் மாடி வீட்டுப்பணக்காரப் பெண். அவளைச் சந்திக்கவோ பேசவோ எனக்குச் சந்தர்ப்பங்களே கிடைத்ததில்லை. ஆனாலும் அந்தப் பார்வைகளின் சந்திப்பில் நாங்கள் பல நூறு கதைகள் பேசிக்கொண்டதாக எனக்கு நினைப்பு. அவளுக்கு எப்படியோ? அன்றைய பல இளங் காளையரின் கனவுக் கன்னியவள்.**

அவசர அவசரமாக விமானத்தை விட்டு இடித்து மோதிக்கொண்டு இறங்கினேன். கடவுச்சீட்டு பரிசோதனைக்கு நிரையில் நின்றபோது பொறுமைக்கு ஒரு சோதனை. அது முடிந்த கையோடு ஓட்டமாக ஓடி "ஜொனி வோக்கரை" வாங்கிக் கொண்டேன். பின்னர் சுத்துகின்ற சக்கரத்தில் எனது பெட்டி வரும் வரை காத்திருந்தேன். என்ன மண்ணாங் கட்டியைத்தான் இந்த விஞ்ஞானம் கண்டு பிடித்தது? இதை விரைவாக்க ஒரு வழி தெரிய வில்லையே என்று அயன்ஸ்டைனையும் திட்டித் தீர்த்தேன். சுங்க இலாகா அதிகாரிகளுக்கும் வீட்டில் சண்டை போலும். நீட்டி நிதானமாக கேள்விகளைக் கேட்ட வண்ணம் பெட்டியில் இருந்த என் உள்ளாடைகளையும் உதறிக் கொட்டி னார்கள். எரிச்சலைக் கொட்டினால் இன்னும் இழுத்தடிப்பார்கள் என்று தெரிந்ததால், இயற்கைக்கு மாறான இனிய புன்னகையை முகத்தில் ஒட்டிக் கொண்டேன்.

அவர்களை எல்லாம் கடந்து வெளியே வந்தபோது, சுகு என்னை நோக்கி விரை வாக வந்தான். கரிய நெடிய உயரம். உலகம் பிறந்தது எனக்காக என்பது போல் உலக இன்பங்களைத் தேடி அனுபவிக்கும் கவலை இல்லாத மனிதனாக நான் அவனைக் கருதுவேன். நண்பனை அன்போடு அணைத்துக் கொள்ள, பெட்டியைக் கீழே வைத்து கையை நீட்ட நினைக்கும் முன் அவன் ஓடி வந்து என் மறுகையில் இருந்த ஜொனி வோக்கர் பையைப் பறித்து நெஞ்சோடு ஒத்திக்கொண்டான்.

'கல்யாணி' என் நெஞ்சு முட்டி, தொண்டைக் குழிகளையும் தாண்டி நாவில் வந்த சொல் என் உமிழ் நீருக்குள் அமிழ்ந்து கரைந்து மீண்டும் உள்ளே சென்றது. மாலினியும் அங்கு

**"தம்பி ஆருக்குச் சொல்ல? கலியாணங்கட்டி கொழும்பில நல்லாத்தான் இருந்தவள். தாலி அறுத்த 83" அவர் முகத்தில் கோபம் கொப்பளித்தது.**

**"கத்தி பொல்லோட காடையங்கள் வந்து வாசல்க் கதவை உடைச்சவங்கள். என்னையும் கலியாணியையும், அவளின்ர புருசன் பாத் றூமில ஒளிக்கச் சொல்லிட்டு, வந்த அவங்களைத் திசை திருப்ப, பின் பக்கத்தால ஓடினார். அந்த இனவெறி நாய்கள் விட்டுதுகளே. பின்னால திரத்திப் போய்...." அவர் விம்மினார்.**

**"அதோட போனதுதான் அவளின்ர வயித்தில இருந்த ஆறுமாதக் குழந்தையும்" விம்மலோடு வெடித்தன அந்த வார்த்தைகள்.**

நின்றதை அப்போதுதான் கவனித்தேன். என்னதான் நெருங்கிப் பழகினாலும் அவள் முன்னால் என் ஆசைகளைச் சொல்லமுடியவில்லை. மாலினியின் சுருண்ட அழகான கேசம் தோளோடு நின்று விளையாடியது. மணி, மணியாக வெள்ளியிலான காதணிகள் அவளைக் கொஞ்சிக் கொண்டிருந்தன. நீண்ட நீளக் காற்சட்டையோடு, மெல்லிய வெண்ணிற மேலணி, நெற்றியில் அழகான தீபத்தின் வடிவில் பொட்டு ஒட்டியிருந்தாள்.

"சிவா அண்ணா எப்படி?" என்ற கேள்வி யின் பின்னால், சிமிட்டும் விழிச் சிரிப்பு, உங்கள் மனதில் ஓடும் கல்யாணியின் எண்ணம் எனக்குப் புரிகிறது என்று சொல்வது போலிருந்தது.

இவளுக்கு வீட்டில் வேலையில்லை யோ? என்னையும் சுகுவையும் சிறிது நேரம் தனியாக விடக்கூடாதா? கல்யாணி யைப் பற்றி அறிய ஆவலாக இருந்த எனக்கு இது சங்கடமாக இருந்தது. அதுவும் போதாதென்று,

“ஏனண்ணா, இந்தக் கண்ராவிகளை வாங்கிக்கொண்டு வாறியள்? இவர் குடிச்சுக்.. குடிச்சு..” என்று தொடங்கிய மாலினி சிறிது நேரம் காருக்குள்ளும் அதைத்தொடர்ந்தாள். திடீரென கதை மாறியது.

“அண்ணா இந்த முறையும் கலி யாணம் வேண்டாம் என்று சொல்லா தேங்கோ, இந்தப் பிள்ளையை கட்டாயம் உங்களுக்கப் பிடிக்கும்.. வடிவானது. கொஞ்சமும் பெருமையில்லை. நல்ல குணம்” மாலினி தொடர்ந்து என் ஆவலைத் தூண்டினாள்.

கார் அவர்கள் வீட்டை வந்து சேர்ந்த பின்பே அவள் புகழாரம் நின்றது. அவர்கள் தெருவோரத்தில் நிறைய வாகனங்கள் நிரையாக நிறுத்தப் பட்டிருந்தன. பக்கத்து வீட்டில் ஏதோ ‘பார்ட்டி’ என்று நினைத்தேன். மாலினி வீட்டுக் கதவைத் திறந்ததும், ‘பார்ட்டி’ அவர்கள் வீட்டில்தான் அதுவும் எனக்காக ஒழுங்கு செய்யப்பட்டது என்று தெரிந்தது.

எனது பழைய நண்பர்கள் பலர். இன்னும் அந்த பழைய ‘என்னடி ராக்கம்மா’ பெரிதாக ஒலித்துக் கொண்டி ருந்தது. கையில் ‘கிளாசோடு’ ஒரே ஆட்டம். மெல்லிய விளக்கொளி. அதையும் மறைக்கும் ‘சிகரெட்’ புகை மண்டலம்.

“எப்படியடா மச்சான்?” என்று ஏக காலத்தில் பல குரல்கள். ஜொனி வோக்கர் என்னையும் நிரப்ப ஆரம்பித்தது. பல பெண்கள் அங்கு மிங்கும் உணவுத் தட்டுக்களோடு திரிந்து கொண்டிருந்தனர். கல்யாணி அவர்களுக்குள் இருப்பாளா என கண்கள் தேடின. மாலினி என் கதிரைக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.

“அங்க பார்த்தியளே அவள்தான்”

நான் ஆவலோடு பார்த்தேன். அந்தப் பின்புறமே தெரிந்தது. அவள் ஒருத்திதான் அங்கே சேலை கட்டி யிருந்தாள். விரிந்த தலைமுடி. திரும்பி எங்களை நோக்கி வந்தாள். கையில் தின்பண்டங்கள் நிறைந்த தட்டு. மெல்லிய விளக்கொளியில் அவள் சிவந்த முகம் மின்னியது. அது கலியாணியா? அந்தக் கண்களைத் தேடினேன். சாந்தமான இந்த விழிகள் கலியாணியுடையது அல்லவே.

“சுகுணா இஞ்ச வா” மாலினி அந்தப் பெண்ணை அழைத்தாள். என் மனதில் பெரிய ஏமாற்றம். “இவ டாக்டர் சுகுணா. இவர்தான் நான் சொன்ன சிவா”

“கலோ” என்ற சுகுணாவின் விழி களை நான் சந்தித்தேன்.

நேரான பார்வை. வழக்கமான அறிமுக வார்த்தைகளின் பின் நாங்கள் தங்கு தடையின்றி பேச ஆரம் பித்தோம். அரசியல், இலக்கியம், சமூகப் பிரச்சனைகள் எனப் பல விடயங்கள் எங்கள் உரையாடலில் வந்து போயின. அவளுக்குப் பல விடயங்களில் ஆழமான அறிவு இருந்தது. மாலினி எங்களைத் தனியாக விட்டுப் போனதை நாங்கள் கவனிக்கவில்லை. அவளது நிதானமான சிந்தனைத் தெளிவு



என்னை மிகவும் கவர்ந்தது. சரளமாக தங்கு தடையின்றி அவள் பேசுவதில் ஓர் அழகு இருந்தது. ஆனால் அவள் என் தனிப்பட்ட விடயங்கள் எதையுமே கேட்கவில்லை. மாலினி என்னைப்பற்றிச் சொல்லியிருக்கக் கூடும். வயது முதிர்ந்த தன் தாயோடு வாழ்கின்றாள். இன்னும் சில டாக்டர்களுடன் சேர்ந்து ஒரு கிளினிக்கில் வேலை செய்கின்றாள். முக்கியமான விடயம் அவளுக்குத் திருமணம் ஆகவில்லை. அவள் காதோ ரத்தில் இருந்த சிறிய நரைமுடியை மறைக்க முயலவில்லை. எனக்கு அவளைப் பிடித்தது. முதன் முறையாக இந்தப் பெண்ணோடு என் வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்ற எண்ணம் மேவியது. எல்லோரும் விடை பெற்றுச் செல்ல ஆரம்பித்தனர். சுகுணாவும் எழுந்தாள்.

மாலினி அவளை உள்ளே அழைத்துச் சென்றாள். அவர்கள் தங்க ளுக்குள் மெதுவாகப் பேசி சிரித்துக் கொண்டார்கள். இடை இடையிடைவே என்னைப் பார்த்து மாலினியின் கண் சிமிட்டல், சிரிப்பு, சுகுணா முதன் முறை யாக என் கண்களை நேராக ஏனோ பார்க்கவில்லை. அவளோடு இன்னும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்கலாமே என எனக்குத் தோன்றியது. இனந் தெரியாத ஒரு குழப்பம் மனதில். கலியாணியைப் பற்றி அறியவேண்டும் என்ற ஆவல் மீண்டும் துளிர்த்துக் கொள்ள சுகுவைத் தேடினேன். அவன் மதுபோதையில் சோபாவில் சாய்ந்து நித்திரையாகிவிட்டான். மாலினியும், சுகுணா வும் என்னை நோக்கி வந்தனர். மாலினி என் மனதை அறிந்து கொண்டாளோ என்னவோ,

“சுகுணா, அந்தக் கலியாணி இவரின்ரை ஊர்தானாம். அவளைச் சந்திக்கவேணுமாம்”

“ஓ யேஸ் நோ ப்ரப்ளம். நாளைக்குப் பத்து மணிக்குக் கிளினிக்கு வாங்கோ. அவ அங்க வருவா”

“கலியாணியைப் பார்க்க வேணு மென்றுதான் சொன்னனான். உன்னை யில்லை” சுகுணாவைப் பார்த்து மீண்டும் மாலினியின் கண்சிமிட்டுச் சிரிப்பு. சுகுணாவும் விடை பெற்றுக் கொண்டாள்.

இரவு நன்கு தூங்கிவிட்டேன். காலையில் கையில் காப்பியோடு என் கட்டிலில் வந்திருந்து சுகு, “டேய் எழும்படா” என்று சொன்னபோதுதான் கண்விழித்தேன்.

“என்னடா அதுக்குள்ளே எழும் பிட்டாய்?”

“நானேன் எழும்பினனான்? உவள் படுக்க விட்டால் தானே? உன்னை கிளினிக்குக் கூட்டிக்கொண்டு போகட்டாம். என்ன வருத்தம் என்று கேட்டன். சிரிக்கிறாள். என்னடா உனக்கு?”

நேரம் 9.30 ஐக் காட்டியது.

“பொறடா, நான் பிரஸ் பண்ணிட்டு வாரன்” துள்ளி எழுந்தேன். அறையோடு இணைந்து குளியலறையும் இருந்தது. மாலினி எல்லாவற்றையும் சுத்தமாக வைத்திருந்தாள். எப்படி பெண்களால் இது முடிகின்றது. ஆண்களால் முடிவ தில்லை என நினைத்துக் கொண்டேன்.

மருத்துவ கூடம் மிக அருகிலேயே இருந்தது. சுகுவும் நானுந்தான் காரில்.

“என்னடா கலியாணியைப் பற்றி நீ ஒன்றுமே சொல்லயில்லை”

கவலையில்லாத மனிதன் முகத்திலும் ஒரு சோகக் கீறல்.

“என்னத்தைச் சொல்ல?” அவன் குரலில் ஒரு மாற்றம். “அந்தச் சுகுணா நல்ல பெட்டை நேரத்தை வீணாக்காதே. இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி ஜொனி வோக்கரைக் காவிக்கொண்டு வீடு வீடாய் திரியப் போறாய் பேசாமல் இவளைக் கட்டு. இராத்திரி முழுக்கக் கனநேரமா கதைச்சியள், பிடிச்சுதோ?”

நான் மௌனமானேன். சுகுணாவைக் காணவேண்டும் என்ற எண்ணமே என் மனதில் மேலோங்கியிருப்பதை என்னால் உணர முடிந்தது. கலியாணியை அல்ல. என்ன முட்டாள்தனம்? என்னை கலியாணிக்கு நினைவிருக்குமா? ஒரு நாள் கூட நாங்கள் ஒருவரோடு ஒருவர் பேசியதில்லை. அந்த நாட்களில் திரையில் வரும் கதாநாயகிகளைக் கண்டு கனவு காண்பது போல் இதுவும் ஒரு வீண் கனவு. இது காதல் அல்லவே. வெறும் வாலிப வயது மோகம். நான் ஒரு பைத்தியக்காரன். சுகுணா என் மனதை இப்பொழுது முழுதாக ஆக்கிரமித்துக் கொண்டாள். அவள் பேசிய அழகை அசைபோட ஆரம்பித்தேன்.

"நான் சொப்பிங் போயிட்டு ஒரு மணித்தியாலத்தில வாரன். நீ வெளியில் நில்" சுகு காரை நிறுத்தினான். பக்கத்தில் ஒரு பழைய கார் நின்றது. ஒரு பெரியவரும் ஒரு பெண்ணும் மருத்துவ கூடத்திலிருந்து அதை நோக்கி வந்து கொண்டிருந்தனர். பெரியவரின் முகம் எனக்குப் பழகியது போலிருந்தது.

"டேய் சிவா, பார்த்தியே? அங்க கலியாணி..."

என் கண்கள் நம்ப மறுத்தன. கறுப்பும் வெள்ளையுமான தலை. சீப்பையே என்றும் கண்டிருக்காதது போல் கலைந்த கூந்தல். கனத்த உருவம். சேலை கட்டியிருந்தாள். சேலையின் ஒரு பகுதி இடையில் சரியாகச் செருகப்படாததால் நிலத்தை உரசிக் கொண்டிருந்தது. சேலை முழுவதும் கழன்று விழாதவாறு அவள் அதைக் கையால் பிடித்திருந்தாள். சதைகள் மடிப்புப் போடும் இடை. அவளா? கலியாணியா? நான் கண்களைக் கசக்கிப் பார்த்தேன். நான் காரில் இருந்து இறங்கிவிட்டேன். பெரியவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். அந்நியர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட அசட்டுப் புன்னகை. அந்தக் கணம் கலியாணியும் என்னை நோக்கினாள். வெறித்துப் போன அவள் பார்வை ஒரு விநாடி என் முகத்தில் நிலைத்தது. வாடகைக் காரில் சென்ற என் கலியாணியின் பார்வையல்ல. சுகு கையைக் காட்டிவிட்டுப் புறப்பட்டான். அந்தக் கலியாணி தங்கள் காரில் ஏறிக் கொண்டாள். என்னைத் தாண்டி கார் நகர்ந்தது. கார்க் கதவுக் கண்ணாடியில் அவள் முகம் பதிந்திருந்தது. அவள் பார்வை என் மீது பதிந்திருந்தது. நிச்சயமாக அது காதல் பேசிய என் கலியாணியின் பார்வையல்ல.

"கலோ சிவா" என்ற வண்ணம் சிரிப்போடு சுகுணா மருத்துவ கூடத்திலிருந்து படிகளில் இறங்கி வந்தாள். அவள் நடையில் ஓர் அழகிருந்தது.

"இப்பத்தான் கலியாணி..." சுகுணா முடிக்கும் முன் நான் இடைமறித்தேன்.

"நான் அவளைப் பார்த்தனான். அவளுக்குச் சுகமில்லையோ"

"சுகமில்லாத ஆக்கள் தான் இங்க வருவினம்" அவள் சிரித்தாள். "என்ர பேசண்டைப் பற்றி நான் கதைக்கக் கூடாது. எல்லாருக்கும் தெரிஞ்சதுதான். அவள் மன நோயால பாதிக்கப்பட்டிருக்கின்றாள்"

அதற்கு மேல் நானும் ஒன்றும் கேட்கவில்லை. அர்த்தமில்லாத ஒரு கற்பனைக் காதலை நெஞ்சில் கட்டி வளர்த்த என்னைத் திட்டிக்கொண்டேன்.

அன்றைய பொழுதின் பெரும் பகுதியை இருவரும் ஒன்றாகவே கழித்தோம். ஒன்றாக உணவுண்டோம். மெல்பேர்ன் பல பகுதிகளை சுகுணா எனக்குச் சுற்றிக் காண்பித்தாள். இத்தனைக்கும் அவள் என்னைப்பற்றி எதுவுமே கேட்கவில்லை. பொது விடயங்களையே நாங்கள் கதைத்தோம். கலியாணி என் ராடரில் இருந்து முற்றாக மறைந்து போனாள்.

அடுத்தடுத்த நாட்களில் எனக்கு அலுவலகம் சம்பந்தப்பட்ட வேலைகள் நகரப் பகுதியில் இருந்தன. அதனால் வசதியாக நகர்ப் பகுதியில் தங்கினேன். சுகு, மாலினி, சுகுணாவைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. வெலிங்டனில் எங்கள் ஊர் மிளகாய்த் தூள், கறித்தூள் அதிகம் கிடைப்பதில்லை. அங்குள்ள என் நண்பர்களின் மனைவியர் ஒரு பெரிய பட்டியலே தந்திருந்தனர். அவர்களுக்கு வேண்டிய தூள் வகைகளை வாங்கிக் கொண்டேன்.

வெலிங்டன் நோக்கிய என் பயணத்துக்காக மெல்பேர்ன் விமான நிலையத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே சென்று விட்டேன். அங்கிருந்த காப்பிக் கடையில் எனக்குப் பிடித்த 'கப்பச் சீனோ காப்பியை' அருந்தியபடி 'தி ஏஜ்' பத்திரிகை ஒன்றை படிக்க ஆரம்பித்தேன். மெதுவாகப் பத்திரிகையிலிருந்து தலையை நிமிர்த்திய போது பக்கத்து மேசையைத் துடைத்துக் கொண்டிருந்த வேலையாள் என்னை உற்று நோக்கினார். என் இதயம் உறைந்து போயிற்று. அது மருத்துவ கூடத்தில் நான் பார்த்த கலியாணியின் தந்தை.

"என்ன பார்க்கிறீர்? நீர் எங்கடை ஊரல்லே? என்ன? ஏரம்பரின்ர மகன் தானே? நான் எஞ்சினியர் ஆறுமுகம். 'ரிடயர்ட்.'"

நான் எழுந்து கொண்டேன்.

"இரும். இரும் ஊர்ப் பிள்ளைகளைக் கண்டால் ஒரு சந்தோசம். ஏயர் நியூசிலண்ட பிளைட்டோ?" அவர் என் மேசையில் இருந்த பயணப் பத்திரங்கள் கொண்ட உறையைப் பார்த்திருக்க வேண்டும்.

"தம்பி எனக்கு வேலை முடிஞ்சுது. யூனி போர்மை கழட்டி வைச்சிட்டு வாரன். கொஞ்சம் கதைப்பமே" அவர் குரலின் தயக்கம் என்னை ஏதோ செய்தது.

"வாங்கோ ஐயா" என்றேன். ஊரில் அவர் தெருவில் நடந்ததை நான் பர்த்ததில்லை. அவர் கொழும்பில் வேலை செய்பவர் என்ற செய்தி மாத்திரமே எனக்குத் தெரிந்திருந்தது. அவரை அந்தக் கோலத்தில் பார்க்க வேதனையாக இருந்தது. அவரோடு பேசவேண்டும் என்ற ஆவல் எனக்கும் இருந்தது. சில நிமிடங்களில் அவர் நல்ல வெள்ளைச் சேர்ட்டும், கறுப்பு ஜக்கட்டோடும் என் முன்னிருந்தார். என் நெஞ்சை உறுத்திக் கொண்டிருந்த அந்தக் கேள்வியோடு நான்தான் உரையாடலை ஆரம்பித்தேன்.

"கலியாணிக்கு என்ன நடந்தது? ஏன் அப்படி?"

பொட்டென்று ஒரு துளிக் கண்ணீர் மேசையில் விழுந்து தெறித்தது. அவர் அதைத் துடைத்துக் கொள்ளாமலே குளமான கண்களோடு என்னைப் பார்த்தார். ஏன் கேட்டேன் என்று நான் என்னை நொந்து கொண்டேன்.

"தம்பி ஆருக்குச் சொல்ல? கலியாணங் கட்டி கொழும்பில நல்லாத்தான் இருந்தவள். தாலி அறுத்த 83" அவர் முகத்தில் கோபம் கொப்பளித்தது. "கத்தி பொல்லோட காடையங்கள் வந்து வாசல்க் கதவை உடைச்சவங்கள். என்னையும் கலியாணியையும், அவளின்ர புருசன் பாத் றூமில ஒளிக்கச் சொல்லிட்டு, வந்த அவங்களைத் திசை திருப்ப, பின் பக்கத்தால ஓடினார். அந்த இனவெறி நாய்கள் விட்டுதுகளே. பின்னால திரத்திப் போய்...." அவர் விம்மினார்.

"அதோட போனதுதான் அவளின்ர வயித்தில இருந்த ஆறுமாதக் குழந்தையும்" விம்மலோடு வெடித்தன அந்த வார்த்தைகள்.

நான் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டேன். அவர் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் ஓட ஆரம்பித்தது.

"அன்றைக்கு விழுந்தவள்தான் கலியாணி. அதுக்குப் பிறகு அவள் அப்பிடித்தான். என்னைத் தவிர வேறு ஒருத்தரோடையும் கதைக்க மாட்டாள். தன்னோடு படிச்ச பிள்ளைகளோடு கூடக் கதைக்கமாட்டாள்."

இப்பொழுது மேசையில் தெறித்தது அவர் கண்ணீர்த்துளி அல்ல, எனது. அதற்குப்பின் அவர் என் நலனை, மறைந்து விட்ட என் தந்தையைப்பற்றி ஏதோ விசாரித்தார். நாங்கள் என்ன கதைத்தோம் என்றுகூட எனக்கு நினைவில்லை. என் எண்ணமெல்லாம் கார்க்கதவுக் கண்ணாடியில் முகத்தைச் சாத்திச் சென்ற சிறுமியிலேயே இருந்தது.

நான் அவரிடமிருந்து விடை பெற்றேன்.

"தம்பி, சுகமாய்ப் போயிட்டு வாங்கோ. இந்தப் பக்கம் வந்தால் எங்களையும் வந்து பாருங்கோ. ஏலுமென்றால்"

நான் கையைக் காட்டி விட்டு பயணிகள் மாத்திரம் செல்ல வேண்டிய கதவருகில் வந்தபோது அவரது குரல் மீண்டும் கேட்டது.

"கலியாணி சொல்லாவிட்டால் நீங்கள் எங்கடை ஊர்ப்பெடியன் என்று தெரிஞ்சிருக்காது."

அந்தக் கணமிருந்து அந்த வார்த்தைகள் என் காதில் ஒலிக்க ஆரம்பித்தன. மருத்துவ கூடத்தில் அவள் என்னைப் பார்த்த அந்தப் பார்வை நிழலாடியது.

"கலியாணி என்னை மறக்கல்லை" என்னை அறியாது நான் முணு முணுத்தேன்.

என் முன்னால் நின்ற பயணி "ஆர் யூ டோக்கிங் டு மி?" என்றார்.

என் காற்சட்டைப் பையிலிருந்த தொலைபேசி பேசியது. சுகுதான் கதைத்தான்.

"என்னடா, உனக்கு சுகுணாவைப் பிடிச்சுதே. இவள் மாலினி இருக்க விடுறாளில்லை. உன்னைக் கேட்டுச் சொல்லட்டாம்."

"நல்லாப் பிடிச்சுது. எதுக்கும் நான் அவளோட போனிலை கதைக்கிறன்"

"கேட்டியே மாலினி. அவருக்கு சுகுணான்ரை போன் வேணுமாம். அவளோடதான் கதைக்கப் போறாராம்" மாலினியின் சிரிப்பொலி கேட்டது.

என் மனதை மெல்பேர்னில் விட்டு விமானம் மேலே பறந்தது.

**பின்குறிப்பு:**

இவையெல்லாம் நடந்து இப்போது இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. எனக்குத் திருமணமாகி வருகின்ற சனிக்கிழமை எங்கள் குழந்தையின் முதலாவது பிறந்த நாள். அதை நாங்கள் மெல்பேர்னில்தான் சுகு வீட்டில் கொண்டாட இருக்கின்றோம். இன்னும் கலியாணி முற்றாகத் தேறவில்லை. சுகுணாவைத் தவிர மற்றப் பெண்களோடு பேசத் தயங்குகின்றாள். என்னையும் தன் தந்தையையும் தவிர வேற ஆண்களோடு பேசவேமாட்டாள். சிறிது சிறிதாக மாறுவாள் என்று சுகுணா சொன்னாள். எங்கள் மகளுக்கு சுகுணா என்றே பெயர் வைத்திருக்கிறோம். சுகுணாதான் கலியாணியோடு பேசி எங்கள் திருமணத்தை நடத்தி வைத்தவள். சுகுணா இப்பொழுது ஏழு மாதக் கர்ப்பிணி. தன்னோடு வேலை செய்த ஒரு டாக்டரைத் திருமணம் செய்துகொண்டாள். எங்கள் மகளின் முதலாவது பிறந்த நாளை அவளோடும் சேர்ந்து கொண்டாடவே மெல்பேர்னுக்குப் போகிறோம்.



# செம்பியன் செல்வன் ஆ. இராஜகோபால்

1943ஜனவரி முதலாம் திகதி திருநெல்வேலியில் ஆறுமுகம் தமர்தாம்பிகை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இராஜகோபால் என்ற இயற்பெயர்கொண்ட செம்பியன் செல்வன், ஆரம்பக் கல்வியை யாழ். இந்து தமிழ் ஆரம்பப் பாடசாலையிலும், உயர்கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் பெற்றவர். 1960இல் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று புவியியல் சிறப்புப் பட்டதாரியானவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குள் இவர் நுழைந்த காலத்தில் தாய் மொழி மூலமான போதித்தல் அங்கு ஆரம்பமாகியது. தாய்மொழிமூலமான சிந்தனை, தரமான படைப்பாளிகளை பல்கலைக்கழகத்திற்குள்ளும் வெளியிலும் உருவாக்கியது. பல்கலைக்கழக காலத்தில் வெளிவந்த கவிதைப்பூங்கா, மற்றும் விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளின் பிதாமகர்களில் செம்பியன் செல்வனும் ஒருவர்.

செம்பியன் செல்வன் தனித்துவமான ஓர் இலக்கியச் செல்நெறியை தனக்கென அமைத்துக் கொண்டவர். ‘இலக்கியம் என்பது ஒரு கலைசார்ந்த சீர்திருத்தமாகும். கலை சமூக மாற்றத்தை உருவாக்கும். சமூகமாற்றம் கலை வடிவங்களை மாற்றி அமைக்கும்’ என்பது இவரது கருத்துநிலை. தனது எழுத்துக்கள் காலத்தை உணர்த்திநிற்க வேண்டும் என்பதில் இவர் திடமாக இருந்தார்.

1974இல் புவனேஸ்வரியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரேமகன் இராகுலன்.

செம்பியன் செல்வன் முறையே திருகோணமலை சென். ஜோசெப் கல்லூரியிலும் செட்டிக்குளம் மகா வித்தியாலயத்திலும் யாழ். இந்துக் கல்லூரியிலும்

ஆசிரியராகக் கடமை புரிந்தவர். பின்னர் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியின் அதிபராகச் சிலகாலம் கடமையாற்றி யாழ்ப்பாணம் கோட்டக் கல்வி அதிபராக உயர்பதவி பெற்றுப் பணிபுரிந்து இளைப்பாறினார்.

இவரது 'சர்ப்பவியூகம்' சிறுகதைத் தொகுதி இலங்கை சாகித்திய விருதினைப் பெற்றது. கானகத்தின்கானம், நெருப்பு மல்லிகை, விடியலைத் தேடும் வெண்புறா என்பன இவர் எழுதிய நாவல்கள். கலைக்கழகம் நடாத்திய நாடகப் போட்டிகளில் தொடர்ந்து நான்கு வருடங்கள் முதற் பரிசினைத் தனதாக்கிக் கொண்டவர். இவற்றை விடவும் பல நாடகப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றுள்ளார். இவற்றின் காரணமாக 1977இல் இருந்து 1983 வரை இலங்கை கலாசாரப் பேரவையின் நாடகப்பிரிவுக்கான செயலாளராக செம்பியன் செல்வன் கடமையாற்றியுள்ளார். இவர் யாழ். இலக்கிய வட்டத்தின் தாபகச் செயலாளராகவும் மத்தியகுழு உறுப்பினராகவும் விளங்கியவர். இலங்கை இலக்கியப் பேரவையின் செயலாளர், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர்.

1968 தொடக்கம் 1971 வரை வெளிவந்த விவேகி இதழின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய காலத்தில் இவரது படைப்பாற்றலும் புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்திய பணியும் குறிப்பிடத்தக்கவை. 1986இல் வெளிவந்த அமிர்தகங்கை இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பின்போது 'கலைஞானம்' என்ற சஞ்சிகை ஆசிரியராகவும் விளங்கினார். செங்கை ஆழியானின் புவியியல், நுண் அறிவியல் ஆகிய சஞ்சிகைகளின் இணையாசிரியராகக் கடமை ஆற்றியதோடு பங்களிப்பும் செய்துள்ளார்.

செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவலின் திரைப்பட எழுத்துப் பிரதியின் சொந்தக்காரர். ஈழத்துத் திரைப்படக் குறும்படங்களிலும் அவை தொடர்பான வழிகாட்டல் விரிவுரைகளிலும் பங்கேற்றவர். நாவல், நாடகம், சிறுகதை, உருவகக்கதை, குறுங்கதை, திரைப்படம், ஆன்மீகம், பத்திரிகை, மேடைப்பேச்சு எனப் பல்துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்.

செம்பியன் செல்வன் 20-05-2005 அன்று அமரரானார்.

ஞானம் சஞ்சிகையினுடனான செம்பியன் செல்வனின் நினைவலைகள் தொடர்கின்றன. கடந்த பன்னிரண்டு வருடங்களாக வருடாவருடம் செம்பியன் செல்வன் ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியை அவரது குடும்பத்தினரின் அனுசரணையுடன் ஞானம் நடத்திவருகிறது. அவர் நினைவாகப் பரிசளிப்பும் இடம் பெறுகிறது. ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றில் அவரது தடம் ஆழமானது. அவர் என்றும் நினைவு கூரப்பெறுவார்.

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2007 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| பரிணாமம் | திருமதி கமலினி சிவநாதன் | மட்டக்களப்பு |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| குதறப்படும் இரவுகள் | இ. இராஜேஸ்கண்ணன் | உடுப்பிட்டி |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| சூடு கண்டவன் | கார்த்திகா பாலசுந்தரம் | கரவெட்டி |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| முற்றத்து மண் | எம். எஸ். அமானுல்லா | மூதூர் 05 |
| உறங்கும் எரிமலைகள் | திருமதி புனிதகலா ஜெயராஜ் | ஆள்கரன் ஓயா |
| சிறகொடிந்த சிறுவர்கள் | டாக்டர். ச. முருகானந்தன் | கொழும்பு 06 |
| பள்ளிக்கூடம் செய்வோம் | ஆவூரான் சண்முகம் சந்திரன் | அவுஸ்திரேலியா |
| சீண்டச் சீண்டத் தொடரும் | திருமதி பவானி சிவகுமாரன் | தெஹிவளை |
| நேற்றைய காற்று | ஆ. இரத்தினவேலோன் | கொழும்பு 06 |
| கோபுர தீபம் | சந்திரகாந்தா முருகானந்தன் | இரத்மலானை |
| இது காத்திருக்கும் காலமல்ல | செல்வி ச. ஜனனி | யாழ்ப்பாணம் |
| சுங்கா | பிரமிளா செல்வராஜா | ஹாலி - எல |
| லயத்து குருவிகள் | சிவனு மனோகரன் | ஹட்டன் |

---

நடுவர்கள்: 'சிற்பி' சி. சரவணபவன், திருமதி. கோகிலா மகேந்திரன், 'செங்கை ஆழியான்' க. குணராசா, திரு. மு. தயாபரன், திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை, திருமதி. வசந்தி தயாபரன்

**(ஞானம் 92. ஜனவரி 2008)**

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2007இல் முதற் பரிசு பெற்ற கதை

1

13



(இக்கதைக்கு எழுத்தாளர் இட்ட பெயர் பரிணாமம்)

# வேரடி மண்...

திருமதி கமலினி சிவநாதன்



*பாண்டிருப்பு கல்முனையைச் சேர்ந்த திருமதி கமலினி சிவநாதன் 12.06.1972இல் பிறந்தவர். க.பொ.த. உயர்தரம் வரை கல்விகற்ற இவர் ஒருங்கிணைந்த அஞ்சல்சேவை உத்தியோகத்தராகக் கடமை புரிகிறார். அணையா விளக்கு சஞ்சிகையில் 'வாசமில்லா மலர்கள்' என்ற சிறுகதையை எழுதியதன் மூலம் எழுத்துலகில் காலடி எடுத்துவைத்த இவரது படைப்புகள் வீரகேசரி, தினக்குரல், தினமுரசு, மித்திரன், வாரசுரபி டொட் கொம். (இந்தியா) ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. அஞ்சல் நலன்புரி அமைப்பு, விபவி கலாசார மையம், யாத்திரா கவிதை இதழ் ஆகிவை நடத்திய போட்டிகளில் பரிசுகளும் சான்றிதழ்களும் பெற்றுள்ளார். கவிதை சிறுகதை ஆகிய துறைகளில் எழுதிவரும் இவரது "தொலைவில் ஒரு கனவு" என்று சிறுகதைத் தொகுதி சமீபத்தில் வெளிவந்துள்ளது.*

*இவரது தொடர்பு முகவரி : இல, 03, அரசவிடுதி, கிறீன்ஸ் வீதி, மட்டக்களப்பு*
*தொலைபேசி : 065 2227473*

ஈச்சந்தீவுப் பெரிய வீட்டில் இன்று ஆட்கள் அவ்வளவாக இல்லை. போடியார் சாய்மானக் கதிரையில் சாய்ந்து கிடந்தார். பொன்னிக்கிழவி ஈர்க்குக் கட்டினால் தரையை "வறக், வறக்" என பெருக்கிக் கொண்டிருந்தாள்.

"கேட்டியா பொன்னி?"

போடியாரின் குரலுக்கு கடுக்கும் இடுப்பை தடவியபடி முகத்தில் வலிகாட்டி நிமிர்ந்தாள் கிழவி.

"என்னய்யா?"

"என்ர மகனும் பொஞ்சாதி புள்ளயளும் வாறாங்களாம்"

"மெய்யா சங்கதி, இருவது வருசம் போன பொடியனுக்கு ஊரப் பார்க்க ஆச இருக்காதா பின்ன?"

"ஓமோம், தாய் செல்லம் தவறிப்போனதுக்கும் அவன் வரல்ல கண்டியோ. அவன் வேல செய்யிறது வங்கியாமே, அங்க திடீரெண்டு லீவு குடுக்கமாட்டாங்களாம், சீவன் பிரியக்காட்டிலும் மகன வழிபாத்து கண்ண மூடவேண்டியதாப் பொயிற்று செல்லத்துக்கு"

**(ஞானம் 93, பெப்ரவரி 2008)**

போடியாரின் குரல் தளும்பி நின்று விட்டது. மனைவியின் மரணத்துக்குப் பின்னரான தனிமை அவரை மிகவும் வருத்தி விட்டிருந்தது.

"கடைசிக் கடமை கூட செய்யிறதுக்கு மகன்வராமப் போனது அவட விதி தானாக்கும், நாம என்னய்யா செய்யேலும்?"

போடியாரின் மனதுக்கு ஆறுதல் கூறுவதாக வந்து விழுந்தன கிழவியின் வார்த்தைகள். அவள் மீண்டும் தன் வேலையில் மூழ்கினாள். அதிகாலையில் வந்து போடியாரின் வீடுவாசலைப் பெருக்கிச் சுத்தஞ் செய்து, அவருக்கு உணவு சமைத்து வைத்து, மாலையானதும் வீட்டுக்குத் திரும்பிச் செல்வது பொன்னி யின் நாளாந்தக் கடமை.

பல வருடங்களுக்கு முன், போடியாரின் மனைவி குழந்தை பெற்றிருந்த வேளை, மிளகு தண்ணி சமைத்து, குழந்தையைக் குளிப்பாட்டி, வயற்காட்டுக்கு தேநீர் அனுப்பி... இப்படிச் சகல வேலைகளையும் கவனிக்கவென பொன்னி அங்கு வேலைக்குச் சேர்ந்தாள். அன்றிலிருந்து இன்றுவரை அவள்தான் அந்த வீட்டு வேலைக்காரி.

அந்தக்காலத்தில் ஈச்சந்தீவுப் பெரிய வீடுதான் ஏழைபாளைகளின் வாழ்வா தாரம். போடியாருக்கு ஏகப்பட்ட வயற்பூமி. அதுவும் இரண்டுபோகஞ் செய்யும் பூமி. உழவு இயந்திரங்கள், மாடுகள் என ஏகப்பட்ட வளங்கள். நூற்றுக்கணக்கான வேலையாட்கள். தனக்கென ஒரு சமஸ் தானத்தை அமைத்துக்கொண்ட தலை வனைப் போல போடியார் களிப் புற்றிருந்த நாட்கள் அவை. அந்தக் கால கட்டத்தில்தான், தமிழ் பேசும் சமுதாயத்துக்குள்ளிருந்து போராட்டக் குழுக்கள் வெளிக்கிளம்பின. அத்தனை நாட்கள் சீராக ஓடிக் கொண்டிருந்த வாழ்க்கை வண்டி திடீரெனப் பாதை மாறியது.

கல்வி, விவசாயம் எல்லாமே பின் தள்ளிப்போக உரிமைக்காகப் போராடுவதே முதற்கடமையாகியது. அப்போதெல்லாம் வடகிழக்கு நாட்கள் கறுப்பாகவே விடிந்தன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டுக் கதவையும் மரணம் வந்து தட்டியது. அந்தப் பயங்கரத்திலிருந்து தமது பிள்ளை களைக் காப்பாற்றுவதற்காக பணம் படைத்தவர்கள், நிலவுடைமையாளர்கள் தமது பிள்ளைகளை ஐரோப்பிய தேசத்துக்கு அனுப்பிவைத்தனர். அப்படித்தான் போடி யாரும் தனது ஒரேமகனை தூரதேசத்துக்கு அனுப்பிவைத்தார். அப்போதிருந்த மனோ நிலையில் தனது பாரம்பரியம், கலாசாரம், எதிர்காலம் எதைப் பற்றியும் சிந்திப் பதற்கு அவருக்கு அவகாசமிருக்கவில்லை. இனவாதப் பிரச்சனை மட்டுமே பூதாகர மாகத் தெரிந்தது.

நிலைமை நாளுக்கு நாள் மோசமான நிலைக்குமாறிக்கொண்டிருந்தது.விவசாயப் பூமிகள் எல்லைப் புறங்களில் இருந்த மையால் அங்கு சென்று தொழிலில் ஈடுபடமுடியாத சூழ்நிலை தோன்றியது. சோதனைகள், சந்தேகங்கள், கைதுகள் தொடர்ந்ததால் வேளாண்மைத் தொழில் கைவிடப்பட்டது. போடியாரின் சமஸ் தானமும் கலைந்தது. அவரும் மனைவியும் அந்தப் பெரிய வீட்டில் தனித்து விடப்பட்டார்கள். சூழலிலிருந்த தொழி லாளர் கூட்டம் தமக்கென ஓர் இருப்பைத் தேடிச் சென்றுவிட்டது. அப்போதும் பொன்னி அவர்களுடன் தானிருந்தாள். மனைவி இறந்துவிட்டபின் போடியார் முழுவதுமாக வரண்டுபோனார். இருபது வருடங்களாக தனது ஒரே மகனையும் பிரிந்து வாழவேண்டிய வனவாசம் அவருக்கு.

மகன் வெளிநாட்டிலேயே ஓர் இலங்கைப் பெண்ணை திருமணஞ் செய்து விட்டதாக கடிதம் எழுதியிருந்தான். அதிலேயே மன்னிப்பும் கேட்டிருந்தான். இப்படித்தான் இடைக்கிடை மகனிட மிருந்துவரும் கடிதங்களில் சில மணி

*நேரங்கள், பழைய வாழ்க்கையை அசை போடுவதில் பல மணி நேரங்கள் என வாழ்ந்தவருக்கு, வரண்டுபோன நிலத்தில் வீழ்ந்துவிட்ட மழைத்துளி போலிருந்தது மகனின் வருகை.*

*போடியாரின் வீட்டுக்கு காவி பூசுவதி லிருந்து, வடலிவெட்டி வேலியடைப் பதுவரை அத்தனை வேலைகளையும் பொன்னியின் குடும்பமே செய்து கொண்டி ருந்தது.*

*"கந்தசாமி!"*

*"ஐயா"*

*"மாங்காயள ஆயன், கரும்பு முத்திக் கிடக்கா எண்டுபாரு, நுங்கு வெட்ட ஆரும் வந்தா விட்டுராத. ஒரு நாளும் வராத புள்ளயள் வருகுதுகள். ரெண்டு கிழம நிக்கிறதாம். அதுக்குள்ள என்ர ஆசைக்கு எல்லாத்தையும் அதுகளுக்கு குடுத்துரணும். பொன்னி பயத்தம் பலகாரம் சுடுவாய்தானே, எறிஞ்சா ஆள்ற தல உடையிற மாதிரி பண்ணிப் போடாத. வாயில போட்டா உவிஞ்சு போற மாதிரி ருசியாச் சுடு"*

*பொன்னிக்கிழவி நமட்டுச் சிரிப்புடன் நகர்ந்தாள்.*

*மகனையும், அவனது குடும்பத்தையும் வரவேற்கவும், அவர்களுடன் சந்தோசமாக நாட்களைக் கழிக்கவும் அவர் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார்.*

*"பொன்னி, மருமகள் நல்ல ஆசார மான குடும்பத்துப் பெட்டையாம் எண்டு எழுதியிருந்தவன் குத்துவிளக்கத் துடச்சிவை. சாமியறையில அவள் வந்து விளக்கத்தேடுவாள்" போடியாரின் ஆணை கள் முடிவற்றிருந்தன.*

*மகன் வந்து இறங்கினான். மொழு மொழுவென்றிருந்த பேரனை வாஞ்சை யோடு கட்டித்தழுவப் போனவரின் கைகளை தட்டிவிட்டது குழந்தை.*

*"டடா, ஹூ இஸ் திஸ் ஓல்ட் மேன்?".*

*"யுவர் கிராண்ட் பாதர்" என்றான் மகன். போடியாரின் பார்வை அவன்மேல் வெறுப்பாய் விழுந்தது.*

*"அப்பா, அவனுக்குப் பழக்கமில்ல தானே. பிறகு சரியாப்போகும், நீங்க வாங்க"*

*"இந்த தென்னயப் பாத்தியா? நீ பிறந் தண்டைக்கு வச்சனான். உன்னப் பாக்க ஏலாத கவலய இதப் பாத்துத்தான் ஆத்தியிருக்கன்" அவருடைய உணர்வு பூர்வமான வார்த்தைகள் மகனில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என்பதை அவனது பதிலில் இருந்து கண்டு கொண்டார்.*

*"தேங்கா நிறயப் பழுத்திருக்கு. பிடுங்க வேணும் யார் தலையிலயும் விழுந்துரப் போகுது"*

*தான் மகனாகப் பார்த்த மரத்தை, மகன் மரமாகப் பார்க்கிறான். இத்தனை நாட்கள் அவர் மனதில் கட்டிவைத்திருந்த ஆசைக்கோட்டை சரிந்து மண்மேடாகியது.*

*சின்னச் சின்ன மனவருத்தங்களுடன் ஒருவாரம் கழிந்துவிட்டிருந்தது. பேரக் குழந்தைகளோ மருமகளோ போடியாரிடம்*

**"எவ்வளவு ஆசையோட இருந்தனான் செல்லம், அவனிட்ட நிறயக்கதைக்க வேணு மெண்டிருந்தனான். என்ர உணர்வுகளை அவள் மதிக்கல்ல பாத்தியா. அவன் தன்ர பிள்ளயளுக்கு, பொஞ்சாதிக்கு, நம்மட வாழ்க்கமுறை பற்றி, இந்த ஊர் பற்றி, எங்கட சூழல்பற்றி சொல்லவே இல்ல. லண்டனில பிறந்து வளந்து புதிசா இஞ்ச வந்தவனப் போல நடக்கிறான். உன்ர கடைசிப்பயணத்துக்கும் வராதவன் இப்ப வந்து உன்னப்பத்தி ஒரு வார்த்த கதைக்கல்ல. அதுதான் என்ர மனதுக்க கிடந்து அறுக்குது"**

பிரியமாக நடந்து கொள்ளவில்லை. கரும்பையும், மாம்பழத்தையும் ருசித்து சாப்பிட்டவர்களுக்கு, கிறவல் தரையும் புழுதி மணலும் பிடிக்கவில்லை.

பொன்னியின் பேரப்பிள்ளைகள் வந்து மறைந்து நின்று வெளிநாட்டிலிருந்து வந்தவர்களை வேடிக்கை பார்ப்பதும், வீட்டுக்குத் திரும்பி ஓடிச் செல்வதுமாக இருந்தார்கள். போடியார் கூடத்தில் மாட்டப்பட்டிருந்த மனைவியின் புகைப் படத்துடன் மானசீகமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"எவ்வளவு ஆசையோட இருந்தனான் செல்லம், அவனிட்ட நிறயக்கதைக்க வேணு மெண்டிருந்தனான். என்ர உணர்வுகளை அவன் மதிக்கல்ல பாத்தியா. அவன் தன்ர பிள்ளயளுக்கு, பொஞ்சாதிக்கு, நம்மட வாழ்க்கமுறை பற்றி, இந்த ஊர் பற்றி, எங்கட சூழல்பற்றி சொல்லவே இல்ல. லண்டனில பிறந்து வளந்து புதிசா இஞ்ச வந்தவனப் போல நடக்கிறான். உன்ர கடைசிப்பயணத்துக்கும் வராதவன் இப்ப வந்து உன்னப்பத்தி ஒரு வார்த்த கதைக்கல்ல. அதுதான் என்ர மனதுக்க கிடந்து அறுக்குது"

"அப்பா!" மகன்தான் அழைக்கிறான்.

"சொல்லு"

"நாங்க கொஞ்சம் வெளியில போய் தங்குவமெண்டு பார்க்கிறம். இவயளுக்கு ஏ.சி. இல்லாம சரியான நித்திரையில்ல"

"லண்டனில் வெய்யிலே இல்லையோ"

"இல்ல, அதான் வெய்யில சமாளிக்க ஏ.சி இருக்கு"

"ஆ!... தாராளமாப் போய் தங்குங்க"

"கொழும்புல போய் நிண்டுட்டு அப்பிடியே போவமெண்டு யோசிக்கிறன்"

"லண்டனுக்கா?"

"ஓமோம்"

"சரி"

"இல்ல அப்பா, நான் வந்தனான் ஏன்னண்டா, கொழும்புல ஒரு பிளட் பாத்திருக்கன். அறுவது லச்சம் சொல்லு றாங்கள். காசு கொஞ்சங் குறையுது."

போடியார் நிமிர்ந்து மகனது முகத்தைத் தீவிரமாகப் பார்த்தார்.

"இல்லப்பா, நம்மட வயல்பூமிய வித்து கொஞ்சம் காசெடுத்தா அத வாங்கலாம். வயல வாங்குறதுக்கும் ஆள் றெடி பண்ணிற்றன். என்ர பிரன்ட் காதர். அவன் நம்மட பூமிய வாங்க விரும்புறான்."

இப்போது போடியார் மகனை ஆச்சரிய மாகப் பார்த்தார். அவன் தீட்டியிருந்த திட்டங்களையிட்டு அவர் உண்மையிலே ஆச்சரியப்பட்டார். அவன் ஒரு அந்நிய னாகத் தெரிந்தான் அவருக்கு.


"சிவா!" முதன்முறையாகப் பெயர்கூறி அழைத்தார் போடியார்.

"இந்தப் பிரதேச மக்களுக்கு ஒழுங்கான பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, விவசாயக் கந்தோர்,சந்தை எதுவும் இல்லை.விவசாயஞ் செய்ய ஏலாதெண்டு கைவிட்டுக் கிடக்கிற பூமிய, கிழக்கு அபிவிருத்திக்கு அனுசரணை செய்யிறவங்களிட்ட பாரங் கொடுத்தா, அவங்க அதுக்குள்ள கட்டடங்கள் கட்டித் தருவாங்க. ஏதோ எங்கட மக்களுக்கு என்னால முடிஞ்ச ஒரு சின்ன உதவியா இதச் செய்ய நினைச்சிருக்கன். நானும் ஒரு பணக்காரனா இருந்தனான் என்றதுக்கும், இந்த மண்ணுல பாசம் வச்சிருந்தனான் என்றதுக்கும் இது ஒரு சாட்சியா இருக் கட்டும். இத உன்னட்ட கதச்சு, உன்ர உதவியோட செய்யலா மெண்டிருந்தனான். ஆனா நான் நினச்சது போல நீ இல்ல. மற்றப் பூமிய விவசாயத்துக்குப் பயன்படுத்தி, இஞ்ச வாழ்றவங்களுக்கு ஏதும் நன்மை செய்யலாமா எண்டு பாரு. இல்லாட்டி விடு, இந்த வீடு வளவ பொன்னிட மகளுக்கு எழுதப் போறன். என்ர கடைசிக்காலம் இஞ்சதானே" கூறியவர் விருட்டென எழுந்து தனது அறைக்குச் சென்று தாளிட்டுக் கொண்டார்.

முற்றத்தில் நின்ற தென்னை தன் கீற்றுக்களை அசைத்து ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது.

❍

# குதறப்படும் இரவுகள்



**இ. இராஜேஸ்கண்ணன்**



யாழ்ப்பாணம் வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இ. இராஜேஸ்கண்ணன் 22.01.1973ல் பிறந்தவர். தற்போது இமையாணனில் வாழ்ந்துவருகிறார். சமூகவியல் பட்டதாரியான இவர் தற்போது யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் எழுதிவரும் இவரது படைப்புக்கள் உதயன் சஞ்சீவி, தாமரை, ஞானம், இடி, தினக்குரல், தூண்டி ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. இவரது 'முது சொமாக' என்ற சிறுகதைத் தொகுதி 2002 இல் வெளியானது. 'தொலையும் பொக்கிசங்கள்' என்ற இவரது சிறுகதை 2007 பத்தாம் வகுப்பு தமிழ்மொழிப் பாட ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியிலும் ஞானம் மித்ராவுடன் இணைந்து தமிழகத்தில் வெளியிட்ட 'போர்க்காலக் கதைகள்' என்ற தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளன. இவரது சிறுகதைத் தொகுப்பில் உள்ள 'லீவுபோம்' என்ற சிறுகதை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு தியவின, தினுமின பத்திரிகைகளில் வெளியாகியது. இவர் இலக்கியம், சமூகவியல், மானுடவியல் கட்டுரைகளையும் எழுதிவருகிறார்.
இவரது தொடர்பு முகவரி : சாத்வீக பிரஸ்தம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி

இரவு என்பது ஒரு அற்புதமான உற்பவிப்பின் ரகசியம். ஊழியும் இருள் கவிந்ததுதான். மனிதன் உயிராகும் கருவறை இருண்டது. கடவுள் உறையும் கருவறையும் கூட இருள் கவிந்ததுதான். கதைகளில் கூறப்படும் அரக்கர்கள் இருள் நிறத்தினர். இரணியன், மகிடாசுரன், மாபலி என்று நீளும் பட்டியல் மட்டுமல்ல இராமன், கிருஷ்ணன் போன்ற ரக்ஷகர்களும் இருண்டவர்களே. இராட்சதர்கள் மட்டுமல்ல ரக்ஷசகர்களிலும் இருள் நிறத்தினர் அதிகம் பேர்.

இரவுகள் இனிமையான அற்புதங்கள் என்றால் அவை என்னை ஆதர்சயப்படுத்துவன.

**அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2007இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை**

**(ஞானம் 94, மார்ச் 2008)**

இரவுகளைப் பாடாத கவிஞர்கள் இல்லை. நிலவு வழியும் இரவுகள் கற்பனைகளாய் நீளும். அம்புலி மாமா வா... அம்மா வெளியே வா அம்மா... என்றெல்லாம் இரவுகள் பாடவைத்தன.

வெண்மணல் பரப்பிய முற்றத்தில் சால்வைத் துண்டை விரித்தபடி அப்பா பள்ளிகொள்வார். அவரின் வயிற்றோடு நாரிசார்த்தி அம்மா சோறு குழைத்த பாத்திரத்துடன். மணலில் கால்கள் புதைத்தபடி முன்னே நாங்கள் மூன்றுபேரும். பூவரசம் இலையில் சிறிய சிறிய கவளங்களை அம்மா பிடித்து வைப்பாள். கவளங்களின் மேலே முள் அகற்றிய சிறுதுண்டு தீயல்மீன். சில சமயம் நெருப்பில் வாட்டிய திரியாப்பாரைக் கருவாட்டுத் துண்டு. நிலவு இல்லாவிட்டால் கண்ணாடிலாம்பு வெளிச்சம்.

இரவின் குளிர்மை. பகல் முழுவதும் வெப்பம் தின்ற நிலம் கசிக்கும் இனிய வெம்மை. மண்ணில் கிளம்பும் புழுதி வாசனை. மல்லிகைப் பந்தலில் நுழைந்து வரும் காற்றின் வாசம். பூவரசம் இலையின் பச்சைமணம் கவளங்களுடன் பிசைந்து.

நானும் தங்கச்சியும் பாட்டுக்குப் பாட்டு. அப்பா நடுவர். அப்துல் ஹமீத் போல. சிலசமயம் அம்மாவும் அப்பாவும் பாட்டுக்குப் பாட்டு. நாங்கள் நடுவர்கள். விடுகதைகள் கூறி அவிழ்த்தலும்.

சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயிலில் சீர்காழியின் கச்சேரி. கால் நடையாய் இரவைக் கிழித்து வயல் வரம்புகள் தரவைகள் தாண்டி கச்சேரிக்கு. வல்வெட்டித்துறையின் இந்திர விழா ஓர் இரவில். அகிற் புகை வாசம் கமகமக்க பித்துக்குளி முருகதாஸின் கச்சேரிக்காக கூடிய ஓர் இரவு.

அந்த இரவுகள் அர்த்தம் பொதிந்திருந்தன.

காதுகளை அடைக்கும் இருளின் வாளிப்பினை சமயம் வாய்க்கும் போதிலெல்லாம் அனுபவிப்பதில் அளவில்லாத பற்று எனக்கு. அந்தகாரம் கிழித்துவரும் பூச்சிகளின் ரகசியங்களை ஒட்டுக்கேட்டு அனுபவிப்பதில் அலாதி சுகம். தென்னங் குருத்துகளைத் துளைக்கும் வண்டின் 'கிறீச்' சிடும் ரீங்காரம். பின்புறத்து களஞ்சிய அறையில் போடப்பட்டிருக்கும் தட்டு முட்டுச் சாமான்களிடையே சந்ததியின் நீட்சிக்காக சல்லாபிக்கும் தத்துவட்டியன்களின் கீதம். பிரசவிக்கக் காத்திருக்கும் சோடிக்கு நெல்மணி சேர்த்து முகட்டு வளையில் ஓடிவரும் எலியின் சிறுகால் ஒலி. தூரத்தில் எங்கோ ஓரிடத்தில் சோடி நத்தின் முனகல். புத்தக அறையின் பழைய பத்திரிகைக் கட்டுக்களிடையே கரப்பான்களின் குசுகுசுப்பு. வீட்டின் பின்புறத்தே 'ஆட்டடியில்' அசைமீட்கும் தாயாட்டின் நெறுமலும், மடியில் வாய்பு தைத்த குட்டியின் மிடறின் வழி பால் இறங்கும் ஒலியும். அடைவைத்து பொரித்த குஞ்சுகளை தன் சிறகுப் போர்வையுள் விரித்துக் கொள்ளும் கோழியின் பாசப் பரிவின் ஒலி. இருளைக் கிழித்து நீளும் என் காதுகளின் புலன் இவற்றைப் பிரித்துப் பிரித்து தனித்து ரசித்துக் கொள்ளும்.

மூலையிலே தணித்து வைக்கப்பட்டிருக்கும் 'கண்ணாடி லாம்பின்' மங்கிய ஒளியில் அவளின் முகம் எண்ணெய்த் தாளின் ஒளிக்கசிவுடன் கலைந்த கேசம் கன்னங்கள் வழியே பரவிக் கிடக்கும். நெற்றியில் அன்று பகல் முழுவதும் பவ்வியமாக இடப்பட்டிருந்த 'மரூண்' நிற குங்குமம் வியர்வைத் துளிகளோடு கரைந்து நெற்றிப் புருவம் வரை கசிந்திருக்கும். கழுத்தைச் சூழ்ந்த சங்குவளைய தசை மடிப்புக்களிடையே நெளிந்து கிடக்கும் கட்டைச் சங்கிலி. கால்களை மடித்து நாரித் தண்டை வளைத்து மார்பின் மென்மையான உஷ்ணத்தை ஒன்றரை வயதாகின்ற என் செல்லத்தின் கன்னங்களில் சுகம்தர வைத்துப் படுத்துக் கொண்டிருப்பாள். ஆழ்ந்த உறக்கம்.

பாவம் அவள். பகல் முழுவதும் சக்கரத்தை கால்களிலே கட்டியபடி சுழன்றடிப்பாள். அதிகாலையின் நான்கரை மணிக்காக 'அலாரம்' வைத்துவிட்டுப் படுக்கைக்குப் போவாள். செல்லம் 'அருளு வதற்கு' முன்னர் காலைச் சாப்பாட்டுக்கு உரியவற்றையும், மதியத்துக்கு இன்னொன் றையும் தயார் செய்துவிட்டு எனக்குரிய 'பார்சலை' என் பையினுள் திணித்து விட்டு இரவு முழுவதும், முதனாளும் செல்லம் நனைத்துத் தள்ளிய துணிகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு சென்று மீளவும் மணி ஏழாகிவிடும். தன்னுடைய புத்தகப்பைகளை ஒழுங்குபடுத்தி பாடக் குறிப்புகள், அடையாள அட்டைகள், மோட்டார் சைக்கிள் 'பாஸ்' என்பவற்றைச் சரிபார்த்துக் கொள்ளவும் செல்லம் கண்விழிக்கவும் சரியாகவிருக்கும். மெல்லிய சுடுநீர் வைத்துச் செல்லத்தைத் துடைத்து 'பௌடர்' போட்டு, பால் கொடுத்து தாய்வீட்டில் ஒப்படைத்துவிட்டு அவள் பள்ளிக்கூடம் புறப்படும்போது நான் அரைவாசித் தூரத்தைக் கடந்து பயணித்துக் கொண்டிருப்பேன்.

பாடசாலை முடித்துவந்ததும் செல்லத் துக்கு பால் கொடுத்தல், குளிப்பாட்டுதல், காயப்போட்ட உடுப்புகளை எடுத்து வைத்தல், வீடுவாசல் கூட்டுதல், இரவுச் சாப்பாட்டுக்குத் தயார்ப்படுத்துதல், அதி காலை சாப்பாடு தயாரிக்க ஆயத்தம் செய்துவைத்தல், அடுத்தநாள் பாடக் குறிப்புகளை ஆயத்தம் செய்தல், வேண்டும் போதெல்லாம் இரவில் செல்லத்துக்குப் பால் கொடுத்தல் என்று தொடரும் பம்பரவாழ்க்கை அவளுக்கு.

இவ்வளவு வேலைகளையும் வரித்துப் போட்டுச் செய்து கொண்டு தன் கபிலநிற விழியால் என்னைப் பார்த்துப் புன்னகை செய்யவும் எப்படி முடிகிறது?...

அவளின் கன்னத்தில் சிதைந்திருந்த மயிர்களை ஒதுக்கி காதோரம் விட்டுக் கொண்டு மிருதுவாக அவளின் நாரியை தடவிக் கொடுப்பேன். ஏதோ ஒன்றைத் தவறவிட்டவளாய் திரும்பி என் மார்போரம் முகம் புதைப்பாள். அவளை நெஞ்சோடு அணைத்துக் கொள்வேன்.

இன்றும் அப்படித்தான். காதுகளை அடைக்கும் அந்தகார இருள்.

காலையில் பரபரப்புக்களிடையே அவளின் கண்களில் தெரிந்த ஏக்கம் என் மனதின் ஆழம் வரை கிறக்கம் தந்தது. மூன்று நாட்களின் பின் முதல்நாள் முழுகிய தலை. அருகில் அவள் நடக்கும் போது காற்றில் கலக்கும் வியர்வை வாசனை. பாதங்களின் மேலே உருளும் பாதசரத்தின் சின்னச் சிணுங்கல். "பின்னேரம் வரேக்கை ரீயோடை சாப்பிட ஏதேனும் வாங்கி வாங்கோ" என்ற வார்த்தைகளில் வெளிப் பட்ட நளினம். அன்றைய பகல் பலமடங்கு களாய் நீண்டு கழிந்தது எனக்கு.

இரவின் நிசப்தம். முற்றத்தில் நான் வளர்த்த மரங்கள் கூட மௌன பூதங்களாய் நின்றன. பயனற்றுத் தூங்கி வழியும் நிலா. பிள்ளையை அணைத்தபடி அவள்.

**குஞ்சுகள். என் செல்லம்**
**போன்ற குஞ்சுகள். பதகளித்தன.**
**தாய்க் கோழியைக் காணாது**
**பரிதவித்தன. தாயின் சிறகுக்**
**கணப்பு இழந்து அல்லோல**
**கல்லோலப்பட்டன.**
**வீட்டுக் கோடிப்புற மூலையில்**
**கூடு பிய்த்து இழுத்து வரப்பட்ட**
**தாய்ப்பேடு குதறப்பட்டுக் கிடந்தது.**
**இரத்தம் தோய்ந்த இறகுகளோடு.**
**"தம்பி.. உது மரநாய் அல்லது**
**கீரியாத் தான் இருக்குமப்பு"**

முதுகுப்புறம் நான். காலையில் பார்த்த பத்திரிகைச் செய்தி படிமமாய் மனதில் விடாப் பிடியாய்.

எங்கோ ஒரு திசையில் நாயொன்றின் ஊளை ஒலி. வீழும் போது ஓலையைத் தட்டும் பனம்பழத்தின் ஓசையில் பதக ளிக்கும் அணிலின் கூக்குரல். எங்கோ ஒரு தொலைவில் ஏதோ ஒரு இயந்திர உறுமல். காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டேன்.

"முந்தநாள் இரவும் பரமநாதன் வீட்டிலை மரநாய் வந்து பேடு ஒண்டைக் கொண்டு போட்டுதாம். எங்கடை பக்கம் வலுத்த சாரையளும் அடிக்கடி வந்து போகுதுகள். குஞ்சுகளும் கவனம். கீரியள் பெரிசா இரவிலை வராது. எண்டாலும் சொல்லிக் கொண்டே. இரவிலை அடிக்கடி காதைக் குடுத்து சத்தஞ் சந்தடியை கேளுங்கோ" என்று பக்கத்துவீட்டு மாமி காலையில் கூறியது ஞாபகம் வந்தது.

வாங்கிவிட்டு ஒருவாரங்ககூட ஆகாத விறாத்துக் குஞ்சுகள் நான்கும், ஏற்கனவே பொரிச்ச குஞ்சுகள் ஐந்தும் தனித்தனியான கூடுகளில் அடைக்கப்பட்டிருந்தன.

அவள் இன்னும் பூரணமாக நித்திரை யாகி விடவில்லை. பிள்ளை மார்பை உறிஞ்சிக் கொண்டிருந்தது. அவளை ரசிக்கும் நிலையில் எண்ணம் இல்லை. பத்திரிகைச் செய்தியின் கீழே போடப் பட்டிருந்த இறந்து கிடந்த அந்தப் பெண்ணின் புகைப்படம் மனத்திரையில் அப்பியபடி. மனதெல்லாம் ஒருவித வெறுமை உணர்வு ஆட்கொண்டிருந்தது.

என்னுடைய செல்லத்தைப் போன்ற அந்தக் கோழிக் குஞ்சுகள் தாயின் இறக்கை அணைப்பில் இதமாகப் படுத்திருக்கும்.

பக்கத்துவீட்டு மாமி கூறியது மீண்டும்...

அவள் திரும்பிப் படுத்துக் கொண்டு என் மார்பில் தன் மூச்சுக் காற்றினால் ஸ்பரிசித்தாள்.

மனம் பத்திரிகைச் செய்தியையும், மாமியின் வார்த்தைகளையும் தவிர எதிலும் லயிக்கவில்லை என் மனக்குழியில் ஆயிரம் புழுக்கள் நெளிந்து கொண்டிருந்தன.

திடீரென வீட்டின் பின்புறம் கோழிக் கூட்டில்தான் கூக்குரல். குஞ்சுகள் பதகளித்துக் கீச்சிட்டன. விறாத்துக் குஞ்சுகள்செட்டைகளைஅடித்துக்கீச்சிடும் சத்தம். இருளைக் கிழித்துவந்த அவல மான ஓலங்களாய்...

"சூய்... சூய்... சூய்..." ஓடிச் சென்றேன்.

குஞ்சுகள். என் செல்லம் போன்ற குஞ்சுகள். பதகளித்தன. தாய்க் கோழியைக் காணாது பரிதவித்தன. தாயின் சிறகுக் கணப்பு இழந்து அல்லோல கல்லோலப் பட்டன.

வீட்டுக் கோடிப்புற மூலையில் கூடு பிய்த்து இழுத்து வரப்பட்ட தாய்ப்பேடு குதறப்பட்டுக் கிடந்தது. இரத்தம் தோய்ந்த இறகுகளோடு.

"தம்பி.. உது மரநாய் அல்லது கீரியாத் தான் இருக்குமப்பு"

சத்தம்கேட்டுஎட்டிப்பார்த்தமாமியின் 'ஊகம்' இது. மரநாய் எண்டாலென்ன?... கீரிதான் எண்டால் என்ன?... அந்தக் குஞ்சுகள்?... "சடலமாக மீட்கப்பட்ட பெண் இரண்டு பிள்ளைகளின் தாய் ஆவார்..." மாமியின் பத்திரிகைச் செய்தி மீண்டும் என் மூளை அணுக்களில் விடாப்பிடியாய் சுவறுகின்றது.

அம்மாவின் கவளச் சோறு....

காதை அடைக்கும் இருளில் பூச்சிகளின் ரகசியம்...

என்னவளின் பாதசரச் சிணுங்கல்... எல்லாம் பொய்யாக இருள் என்னை அப்பிப் பிடித்துப் பிய்த்துத் தின்றது.


என் செல்லத்தை அணைத்தபடி அவள். தலைமாட்டிலேஅதிகாலைநான்கரைக்காக 'அலாரம்' வைத்த மணிக்கூடு இயந்திர இயக்கத்துடன். அந்தகார இருள் மட்டும் அப்படியே...



இவனுக்கு வீட்டால வெளிக்கிடக் கால்கூசுது. எப்ப பாத்தாலும் கதவை உள்ளால பூட்டிப்போட்டு அறைக் குள்ளையே கிடக்கிறான். ஆர்வந்து தன்னைக் கூப்பிட்டாலும் ஆள் இல்லையெண்டு சொல்லச் சொல்லி வீட்டாக்களுக்கு சொல்லி யிருக்கிறான் - வீட்டாக்கள் இவனைப் பாத்துப் பயப்பிடுதுகள்- இவனுக்கு என்னத்தோடையும் தொடர்பிருக்கோ? எண்டு வீட்டாக்களும் சந்தேகப்படுகுதுகள் - இவனும் திருப்பத்திரும்ப யோசிச்சுப் பாக்கிறான். எனக்கு என்னத்தோடையும் தொடர் பிருக்கோ? எண்டு - இருக்கிற மாதிரித்தெரியேல்ல - எண்டாலும் தொடர்பைப் பாத்தே சூடுவிழுகுது? இருமினது, தும்மினது, செருமினது, எண்டு எல்லாத்துக்கும் இப்ப சூடு விழுகுது. விடிஞ்சால் பொழுதுபட்டால் சூடுவிழுந்ததைப் பற்றித்தானே சனம் கதைக்குது. இவனுக்கு வாற கனவுகள் எல்லாம் சூடுவிழுகிறதைப் பற்றித்தான் - கனவுகள் முடிச்சாப் போலயும் இவன் ஆட்டம் அசைவில்லாமல் கிடப்பான் - தான் செத்துப் போகிட்டனாக்கு மெண்ட நினைவில.

ஒருத்தரின்ரை கண்ணிலயும் படாமல் கிடப்பமெண்டால் அது நடக்கிறகாரியமே. வேலைக்கு போயே தீரோணும். இவனுக்குப் பதிலா ஆரும் வேலைக்குப் போய் வர ஏலுமோ? லீவு போட்டு எத்தினை நாளைக்கெண்டு சுழிக்கிறது? அநேகமான ஆக்கள் சுழிச்சுச் சுழிச்சு ஓடிக்கொண்டிருக்கினம். இவனுக்கெண்டா சுழிச்சுச் சுழிச்சு ஓடவும் தெரியாது? வேலை நாளில இவனுக்கு உடம்பு பதறத்தொடங்கியிடும். தாய்க்காரி பாத்துப் போட்டுச்சொல்லுவ ‘உதென்ன உப்பிடி பதறுது? வைச்சுக் கொண்டிருக்காமலுக்கு பெரியாஸ் பத்திரியில் கொண்டேக் காட்டு! என்ன கோதாரியோ தெரியாது!’. இவனுக்கு தாய்க்காரியை புளுத்தபாட்டில பேசோணும் போலயிருக்கும் - ஆனால் வாய்திறவான் - வேலைக்குப் போய் வாறதே சீவனக் கொண்டு போகுது - அதுக்குள்ள கண்டறியாத பெரியாஸ்பத்திரி. ஒரு நாளைக்கு இவனுக்கு எத்தினை கண்டம் கழியுது? எண்டு ஆருக்குந்தெரியுமோ?

இவனோட வேலை கிடைச்சவங்களெல்லாம் பெரிய மட்டத்தில செல்வாக் குள்ளவங்கள். ஊரோட வேலை செய்யிறாங்கள். சைக்கிள்ளையோ, மோட்டச் சைக்கிள்ளையோ போய் வந்திடலாம். இவனுக்கு யாழ்ப்பாணத்திலவேலை. இருக்கிறது கரவெட்டியில. காலமை பஸ்எடுத்துப் போகோணும், வல்லையில ஒரு செக்கிங். நீர்வேலியில ஒரு செக்கிங், இருபாலையில ஒரு செக்கிங். ஏறியேறி



இறங்கோணும். வேலைத் தலத்துக்குப் போக இரண்டு மணித்தியாலம் வேணும். மேலதிகாரி நக்கலா ஒவ்வொருநாளும் கேப்பார். 'ஏன் லேற்?' இவன் சொல்லு வான் 'சரியான செக்கிங் சேர்'. கொஞ்சம் வேளைக்கு வெளிக்கிட்டு பஸ் எடுத்தா ஏர்ளியா வரலாந் தானே!' எண்டுவார் மேலதிகாரி. இவனுக்குப் பத்திக்கொண்டு வரும் - முதல் பஸ் எடுத்து வாறான். அதுக்குமேலால என்னத்தை வெட்டிப் புடுங்கிறது. இவன்பேசாமல் போய் வேலையைப் பாப்பான் - எதிர்த்துக் கதைக் கிறதுக்குப்பயம் -ஆரார் என்னென்னத் தோட தொடர்பான ஆக்களோ இவனுக் கென்ன தெரியும் - ஏன் வீண்சோலியை?

இவன் கொஞ்சக்காலமாக சாப்பி டவும் தண்ணி குடிக்கவும் தான் வாயைத் திறக்கிறான். ஆரும் எதும் கேட்டால் 'ஓம்' 'இல்லை' எண்டு சுருக்கமானபதில் - இல்லாட்டில் ஒரு தலையசைப்பு. அதைமீறி வாயைத்திறக்கிறேல்லை. அதுக் குள்ளை இன்னுமொண்டு ஆரையும் இவன் தலை நிமிந்து பாக்கிறேல்லை - தற் செயலாய் இவனை ஆரும் உற்றுப்பாத்தா பயங்கவ்வத் தொடங்கியிடும். என்னைத் துலைக்கிறதுக்குத்தான் உப்பிடிப் பாக்கி றாங்களோ ? எண்டு மனங் குழம்பத் தொடங்கியிடுவான்- தன்ரை பெயர், விலாசம் ஆருக்கும் தெரியக்கூடா தெண்டு தான் இவன் விரும்புறான். தனக்கு ஒரு தபால்தன்னும் வந்தால் இவனுக்குப் பயமாயிருக்கு - எங்கையும் மோட்டச் சையிக்கிள் உறுமுற சத்தங் கேட்டால் நெஞ்சு பக் பக்கெண்டு அடிக்கத் தொடங்கி யிடும். பாசையூர் புனித அந்தோனியார் தொடங்கி கனகராவளவுப் பிள்ளை யார் வரை ஒரு நூறு கடவுளையெண் டாலும் துணைக்கழைச்சபடி ஆடாமல் அசையாமல் படுக்கையில கிடக்கிறான். மூத்திரம் முட்டினாலும் வெளியில இறங் கான்.

**உவனைச் சுட வந்துதான்**
**மாறிச் சுவேந்தியைச்சுட்டதாம்**
**எண்டு கதைப் பாங்கள். அப்ப**
**அங்கை ஆரும் நோட்பண்ணிக்**
**கொண்டு நிப்பாங்கள். பிறகு...**
**அதைவிட உவன் இவ்வளவு நாளும்**
**சுவேந்தியோடதான் போய்வாறவன்.**
**நேற்று மட்டும் சுவேந்தியோடை**
**வரேல்ல. உவனுக்கு சுவேந்தியைச்**
**சுடப் போறது தெரிஞ்சிருக்குது.**
**அதுதான் நைசாக் காய்வெட்டிப்**
**போட்டான். உவனுக்கும்**
**சுட்டாக்களுக்கும் நெருங்கின**
**தொடர்பிருக்கு எண்டுங் கதைப்பினம்.**
**அது இன்னொரு பக்கத்தால**
**வில்லங்கத்தைக் கொண்டுவரும்.**
**அதால இவன் செத்த வீட்டுப்பக்கம்**
**தலைகாட்டேல்ல.**

இவனுக்கு நெருங்கின சிநேகித மெண் டால் அது சுவேந்திதான். அவனும் இவனோடதான் வேலை பாக்கிறவன். இவன்ரை வீட்டுக்கொரு பத்துவீடு தள்ளித் தான் சுவேந்தியின்ரை வீடு, சுவேந்தி மோட்டச்சயிக்கிள் வைச்சிருந்தான். இப்ப கொஞ்சக் காலமாக இவனும் சுவேந்தி யும் மோட்டச்சயிக்கிள்ளதான் வேலைக் குப் போய்வந்து கொண்டிருந்தாங்கள். சுவேந்தியும் இவனைப் போல தான் சூட்டுக்கு பயந்தவன்.அவனுக்கும்தன்னை ஆரும்சுட்டுப் போடுவாங்கள் எண்ட எண்ண மிருந்தது. இரண்டு கிழமைக்கு முன்னம் சுவேந்தி வேலைமுடிஞ்சு மோட்டச் சயிக்கிள்ள வரேக்க சூடுவிழுந்திட்டுது. அண்டைக்கு இவனுக்கு கொஞ்ச வேலை யிருந்ததால சுவேந்தியோட மோட்டச் சயிக்கிள்ள வரேல்ல. நடந்ததைக் கேள்விப் பட்டோண்ண இவனுக்கு நடுங்கத்

தொடங்கியிட்டுது. சாவச்சரி ஏஜியே ஒவிசில வேலை பாக்கிற பருத்துறைப் பொடியனைச் சுட்டிட்டாங்களாம் எண்டு பஸ்ஸில வரேக்க சனம்கதைச்சுது. இவனுக்கு அஞ்சுங் கெட்டு அறிவுங் கெட்டுது. இடைக்கிடை ஆள்மாறிச் சுட்டதாம், ஆள்மாறிச் சுட்டதாம் எண்டும் சில சனங்கதைக்கிறது கேக்குது. இவனுக்கு மனம் பதகளிச்சு உள்ளுக்கை ஒப்பாரி வைக்குது. என்ரை ஐயோ அப்ப என்னைத் தான் சுடவெளிக் கிட்டவங்களோ?..... வீட்டை போய்ச் சேரு மட்டும் நெஞ்சுக்கை தண்ணியில்லை. வீட்டாக்கள் இவனைக் காத்துக் கொண்டு பேயறைஞ்ச மாதிரி நிண்டினம். 'தம்பி என்னடா நடந்தது? என்ரைராசா உனக்கொண்டு மில்லையே' தாய்க்காரி பதகளிச்சாள். இவன் உடுப்பைக் கழட்டாமல் ஓடிப்போய் படுக்கையில குப்புறவிழுந்தான். இரா முழுக்க ஒரே காய்ச்சல் - அழுகல் கனாக்களாக வந் தொண்டிருந்தது. எல்லாம் சுவேந்திக்கு பதிலாய் இவனுக்கு சூடு விழுந்திட்டதா சனங்கதைக்கிற கனாக்கள். தாய்க்காரி நெற்றியையும் நெஞ்சையும் தொட்டுப் பாக்கிறதும் 'அனலாக் கொதிக்குது, பிள்ளை நல்லாப்பயந்திட்டுது எண்டு சொல்லுறதுமா இருந்தாள் - வீட்டாக்களில ஆரோ ஒராள் அநேகமா இவன்ரை தகப்பனாயிருக்கவேணும். 'தலையிலதான் சூடுவிழுந்திருக்குது. அதிலையே ஆள்சரி - நாளைக்குத்தான் பிரேதங்குடுப்பாங்கள் - நேரம் போகிட்டுது. அதுக்குள்ளை கேர்வியூவும்' எண்டு பொரிஞ்சு கொண்டி ருக்கிறதும் இவனுக்குக் கேக்குது. இவனுக் கெண்டா கண்திறக்கேலாம இருக்கு. தொண்டை வரண்டு போயிருக்கு - உடம்பு விறைச்சுக் கொண்டிருக்கு. விடியறதுக் கிடையில செத்துடுவான் போலயிருக்கு.

விடிஞ்சாப்போலயும் இவன் படுக்கை யால எழும்பேல்ல. தலையைத் தூக்கேலாத பாரம். இரத்தம் முழுக்க வடிஞ்சு போன மாதிரிச் சோர்வு - ஒருபத்துமணி போல இவன் வீட்டடியால ஒருவாகனம் இரைஞ்சு கொண்டு போச்சுது. இவன்ரை தேப்பன் வெளியில நிண்டு பாத்திட்டு வந்து சொன்னார். 'சவம் வந்திட்டுது பின்னேரம் அடக்கமாம்' எண்டு. தாய்க்காரி வந்து இவனை எழுப்பினா 'தம்பி எழும்பி முகத்தைக் கழுவிப் போட்டு ஒருக்கா செத்தவீட்டில தலையைக் காட்டிப் போட்டுவாவன்' எண்டு. இவன் அந்தப் பக்கமே தலை வைச்சுப் படுக்கேல்ல. எப்பிடிப் போறது? அங்கை ஆரார் வாறாங்கள் எண்டு ஆருக்குத்தெரியும். இப்படி யிருக்கேக்க இவன் செத்தவீட்டில தலையைக் காட்ட அங்கை நிற்கிறாக்கள் பல விதமாக் கதைப்பினம். 'உவன் தான் சுவேந்தியோட கூடப் போய் வாறவன்.' எண்டு கதைக்கேக்க ஆரேனும் பாத்துக் கொண்டு நிண்டால் இவன் துலைஞ்சான். இல்லாட்டில் 'உவனைச் சுட வந்துதான் மாறிச் சுவேந்தியைச்சுட்டதாம்' எண்டு



கதைப்பாங்கள். அப்ப அங்கை ஆரும் நோட்பண்ணிக் கொண்டு நிப்பாங்கள். பிறகு........ அதைவிட 'உவன் இவ்வளவு நாளும் சுவேந்தியோடதான் போய்வாறவன். நேற்று மட்டும் சுவேந்தியோடை வரேல்ல. உவனுக்கு சுவேந்தியைச் சுடப் போறது தெரிஞ்சிருக்குது. அதுதான் நைசாக் காய்வெட்டிப் போட்டான். உவனுக்கும் சுட்டாக்களுக்கும் நெருங்கின தொடர்பிருக்கு எண்டுங் கதைப்பினம். அது இன்னொரு பக்கத்தால வில்லங்கத்தைக் கொண்டுவரும். அதால இவன் செத்த வீட்டுப்பக்கம் தலைகாட்டேல்ல. பேசாமல் குறண்டிக் கொண்டுகிடந்தான். மனம் சுழன்டடிச்சுப் பயமுறுத்திச்சுது. 'நேற்று இந்நேரம் ஒவீசில வேலை செய்து கொண்டிருந்த சுவேந்தி இண்டைக்குப் பிரேதம். இப்ப குறண்டிக்கொண்டு கிடக்கிற நான் நாளைக்குப் பிரேதம்.' எண்டு யோசிச்சு திடுக்காட்டியப்பட்டான். சுவேந்தி வீட்டில பறையடிக்கிறசத்தம் பெலத்துது. நாளைக்கு இங்கையும் இப்பிடித்தான் பறைகேக்கும் எண்டு நினைச்சுக்கொண்டு கிடந்தான். சுவேந்தியின்ரை அடக்கம் முடிஞ்சு நாலைஞ்சு நாள் கழிஞ்சாப் போலயும் இவன் வீட்டுவாசல்தாண்டி வெளியில இறங்கேல்ல. மனப்பேதலிப்பு அவ்வளவு கெதியில அடங்கிற மாதிரி இல்லை. ஒவிசில இருந்து கோல் பண்ணிச்சினம். 'என்ன தம்பி ஒரு முன்னறிவித்துலுமில்லாமல் நாலைஞ்சு நாள் உம்மடை எண்ணத்துக்கு மட்டம் போட்டுட்டீர்? என்ன சங்கதி? யெண்டு. 'எனக்கு சரியான காய்ச்சல் என்கிறான் இவன். 'நல்ல காய்ச்சல்தான். ஒரு கோல் எடுத்து சொல்லியிருக்கலாமே. சரி உடனடியாவந்து சேரும். பிறகு கவலைப் படவேண்டிவரும். நாங்கள் ஒண்டும் செய்யேலாது' எண்டு ஒவீஸ்காரர் சொல்லிச்சினம். இவனுக்கு தலை வெடிச்சுது. அடுத்தநாள் பயந்து பயந்து வேலைக்கு வெளிக்கிட்டான். எங்கையும் மோட்டச் சையிக்கிள் இரையிற சத்தம் கேட்டா ஓடுறதுக்கு தயார் நிலையில இருந்தான். பஸ்சால இறங்கி ஓட்டமும் நடையுமா ஒவீசுக்குப்போனான். சிலர் சுவேந்தியைப் பற்றி விசாரிச்சினம். இவன் பெரும்பாலும் தெரியாது தெரியாது எண்டுதான் பதில் சொன்னான். இவன்ரை மேலதிகாரி மூஞ்சையை நீண்டிக் கொண்டி ருந்தார்.இவன்வராதநாள்வேலையெல்லாந் தேங்கிப் போயிருந்தது. வீட்டை திரும்பிப் போயிடுவனோ? அல்லாட்டில் சுவேந்திக்கு நடந்ததைப்போல.... எண்டு நினைச்சதில வேலையைச் செய்யக் கை ஏவேல்ல. வழமையாகச் செய்யிறவேலையின்ர படி முறைகள் எல்லாம் குழப்பமாயிருந்தது. மேலதிகாரி அவசரப்படுத்தினார். இவன் தவிர்க்கேலாமல் கைக்கு வந்தபடி வேலையைச் செய்தான். அதுதான் பிறகு இவன்ரை வழக்கமாப் போச்சு. எதையும் சிந்திச்சுப்பாக்க இவனுக்கு அவகாச மில்லை. ஆரோ மறைஞ்சு நிண்டு இவனை அவதானிக்கிற மாதிரியிருக்கு. எங்கையும் மோட்டச்சையிக்கிள் இரையிறசத்தம் கேட்டா உடம்பெல்லாம் வேர்க்கத் தொடங்கியிடுது. ஒவ்வொரு நாளும் முடியேக்க இவனுக்கு ஒரு தத்துக்கழியிற மாதிரித்தான். இப்ப வேலை செய்யிற இடத்தில தெரிஞ்சாக்களைப் பாத்துச் சிரிக்கிறதுக்கே இவனுக்கு தயக்க மாயிருக்கு. முந்தநாள் இவனுக்கு மேலதிகாரியிட்ட யிருந்து ஒரு விளக்கங்கோரும் கடிதம் வந்திருந்தது. அதில் 'உம்மால் நிறைவேற்றப் படவேண்டிய வேலைகளை உரியகாலத்தில் நிறைவேற்றாமை மற்றும் நிறைவேற்றிய வேலைகளிலுள்ள வழுக்கள் தவறுகள் ஆகியவற்றுக்காக 'உம்மை ஏன்தண்டிக்கக் கூடாது?' என்பதற்கான விளக்கத்தை மூன்று நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கோருகிறேன்' எண்டு இருந்தது. இவன் அந்தக் கடிதத்துக்கு இன்னுந்தான் பதில் எழுதேல்ல. ஏனென்டா பதில் எழுத இவனுக்கு அவகாசமில்லை. அதைவிட என்ன பதிலை எழுதுறதெண்டும் இவனுக்கு விளங்கேல்ல!



# அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா

கவிஞர் மு. செல்லையா அவர்கள் வடமராட்சியிலுள்ள அல்வாய்க் கிராமத்தில் 1906ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 07ஆம் திகதி முருகேசர் - குஞ்சரம் தம்பதியருக்கு புதல்வராகப் பிறந்தவர்.

சைவப் பெரியார் கா.சூரனின் மாணாக்கரான இவர், கரவெட்டி பண்டிதர் திரு. க. மயில்வாகனம் அவர்களிடம் இலக்கண இலக்கிய சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். பின்னர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஆகியோரிடமும் பாடங்கேட்டவர். 1927ஆம் ஆண்டில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்றவர். இவரே ஒடுக்கப்பட்ட சிறுபான்மைச் சமூகத்தில் முதல் பயிற்றப்பட்ட சைவாசிரியர் என்ற பெருமைக்குரியவர். 24 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

1927இல் மகாத்மா காந்தியை யாழ்ப்பாணத்தில் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்ற இவர், காந்தியத்தால் கவரப்பட்ட நிலையில் காந்திய வாதியாகவே தன்வாழ்வை மேற்கொண்டவர். கதராடை உடுப்பவர், புலால் உண்ணாத சைவர். எந்தநேரமும் திருநீறணிந்த நெற்றியினனாய் இனிய சொல்லுக்குரியவராகத் திகழ்ந்தவர்.

கவிஞர் மு. செல்லையா அவர்களின் கல்விச் செயற்பாடுகளாக, அவர் தலைமை ஆசிரியராகச் செயற்பட்டமை, ஆசிரியர்களை உருவாக்கியமை, பாடசாலையை உருவாக்கியமை, கல்வி மேம்பாடு குறித்து மாணவர்களை ஊக்குவித்தமை என்பன அமைந்தன. கவிஞர் செல்லையா அவர்கள் சமுதாய விடுதலைப் போராட்டங்களிலும் ஈடுபட்டு உழைத்தவர். தீண்டாமைக்கு எதிராகப்போராடியவர். ஆலயப்பிரவேசம் தொடர்பான தீர்வுக்கு பொருத்தமான அணுகுமுறையாக 'பொங்கி எழுதற்குப் பதிலாக பொறுமையோடு செயற்படுதல் வெற்றிதரும்' என்ற வழிமுறையை முன்வைத்தவர். பல

சமூகப்பணிகளிலும் ஈடுபட்டு உழைத்தவர். இவர் கலை வளர்ச்சியிலும், சமயம் பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை கொண்டு உழைத்தவர்.

30-05-1934 இல் உருவாக்கப்பட்ட 'ஹரிசன வாலிபர் சங்கம்' காந்தி அடிகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட 'காந்திய சேவா சங்கம், மற்றும் 'வட இலங்கை சைவ சமரச சங்கம்' ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு உழைத்த சமூகப்பணியாளர்.

1930 - 1950 காலப்பகுதியில் ஈழகேசரிக்கால கவிஞர்களில் முக்கியமான ஒருவராகக் கணிப்புப் பெற்றவர். 'அம்மா வெளியே வா அம்மா' எனத் தொடங்கும் 'வளர்பிறை' என்னும் தலைப்பிலான கவிதையை எழுதியதன் மூலம் முக்கியமான குழந்தைக் கவிஞராகவும் இவர் கணிக்கப் பெற்றவர். அல்வாயூரில் கவிஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அல்வாய் மனோகரா வாசிகசாலையின் தொடக்கவிழாவில் கவிஞர் அவர்களின் ஆக்கங்களுக்கு கிடைத்த ஊக்குவிப்பானது அவரை பல்வேறு புனைபெயர்களில் கவிதைகளை எழுதத் தூண்டியது.

கவிஞர் செல்லையா அவர்கள் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், மொழி இலக்கணம் ஆகிய துறைகளில் தனது படைப்புகளைத் தந்தவர். இவரது வளர்பிறை என்ற நூல் 1952இல் வெளிவந்தது. காலத்துக்குரிய நிகழ்வுகளையும் அவற்றிற்குத் தேவையான மாற்றங்களையும் கருப்பொருளாகக் கொண்டு கவிதைகள் உருவாகும் என்பதற்கு வளர்பிறையும் புறநடையாக இருக்கவில்லை. இலங்கைத் தேசியம், இந்தியத் தேசியம், மனித நேயம், பெண்களின் மேம்பாடு, முதியோரைப்போற்றுதல், இயற்கை அனுபவம், தொழில்மகத்துவம், தெய்வபக்தி, சுகவாழ்வு முதலியன பாடு பொருளாக இருந்தன. இந்நூலே அவருக்கு கவிஞர் என்ற பட்டத்தையும் பெற்றுக் கொடுத்தது. பின்னர் இலங்கையில் அமைந்துள்ள பிரசித்திவாய்ந்த ஆலயங்கள் பற்றிய இவரது பாடல்கள் தொகுக்கப்பட்டு நூல்களாக வெளிவந்தன. இவருடைய ஆக்கங்களில் புதிய 'வண்டு விடுதூது' என்ற கவிதை வானொலிக் கவிதைப்போட்டியில் முதற்பரிசாகத் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது.

பதினான்கு நூல்கள் கவிஞரால் வெளியிடப்பட்டன. அவையாவன, தேசிய கீதங்கள், சுகாதார சுலோகங்களும் கும்மியும், வளர்பிறை கவிதைத் தொகுதி, குமாரபுரக் குமரவேள் பதிகம், புதிய வண்டுவிடு தூது, தங்கத் தமிழ்க்கண், கதிர்காமக் கந்தப் பெருமாள் வேல் வெண்பா, முருகமூர்த்தி தோத்திரக்காரிகை, செல்வச் சந்நிதி சுப்பிரமணிய சுவாமிதுதி, வற்றாப்பளை அம்மன் துதி, என்பனவாம்.

கவிஞரின் துணைவியார் பெயர் நாகமுத்து. விவேகானந்தன், சபாலிங்கம், பாரதி ஆகியோர் நன்மக்களாவர்.

அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா படைப்புகள் யாவும் தொகுக்கப்பட்டு 2018இல் அல்வாயூர்க் கவிஞர் செல்லையா நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. (மேற்படி தகவல்கள் இத்தொகுப்பு நூலில் பெற்றவை)

கவிஞர் மு. செல்லையா அவர்கள் 09-12-1966இல் அமரரானார்.

அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா ஜனன நூற்றாண்டுவிழா ஏற்பாட்டுக் குழுவினரின் அனுசரணையுடன் 2007இல் ஞானம் சஞ்சிகையால் சிறுகதைப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

## அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா ஜனன நூற்றாண்டு விழாச் சிறுகதைப் போட்டி 2007 முடிவுகள்



### முதற்பரிசு - ரூபா 5000/-

| | | |
|---|---|---|
| எதிர்கொள்ளல் | சந்திரகாந்தா முருகானந்தன் | இரத்மலானை |

### இரண்டாம் பரிசு - ரூபா 3000/-

| | | |
|---|---|---|
| தொலையும் முகவரிகள் | புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் | கொழும்பு 06. |

### மூன்றாம் பரிசு - ரூபா 2000/-

| | | |
|---|---|---|
| சங்கார தரிசனம் | இ. இராஜேஸ் கண்ணன் | யாழ்ப்பாணம் |

### ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்

| | | |
|---|---|---|
| நீதியின் நிறம் கறுப்பு | திருமதி கமலினி சிவநாதன் | மட்டக்களப்பு. |
| தோணி ஒன்று கரைக்கு வருகிறது | ஆரையம்பதி ஆ. தங்கராசா | ஆரையம்பதி 03 |
| நெஞ்சக் கனல் | க. முருகானந்தன் அன்பகம் | கரவெட்டி |
| ஔவியம் பேசுதல் | கார்த்திகா பாலசுந்தரம் | கரவெட்டி |
| ஊன்று கோல் | எச். எல். எம். நிசார் | மாவனல்லை |
| அந்திப் பூக்கள் | எம். எஸ். அமானுல்லா | மூதூர் 05 |
| ஆருத்திரா தரிசனம் | கொற்றை பி. கிருஷ்ணானந்தன் | வல்வெட்டித்துறை |
| பட்டினிப் பண்டம்' | திருமதி. பிரியா பாலேந்திரன் | இரத்மலானை |
| புதிய காஞ்சி | வே. அகிலன், அர்ச்ஜனம் | அல்வாய் |
| ஒரு மாணவன் - ஒரு தொழிலாளி - ஓர் அடிமை | எஸ். ஜோன்ராஜன் | அக்கரைப்பற்று |

நடுவர்கள்: தெளிவத்தை ஜோசப், திருமதி பத்மா சோமகாந்தன், திரு. மு. தயாபரன்

(ஞானம் – 96, மே 2008)

அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா ஜனன நூற்றாண்டு விழாச்
சிறுகதைப் போட்டி 2007இல் முதற் பரிசு பெற்ற கதை



*2003ம் ஆண்டு மல்லிகை மலரில் பெண்ணியக் கட்டுரை மூலம் எழுத்துலகில் காலடி வைத்து பெண்ணிய எழுத்தாளராக வளர்ச்சியுற்ற இவரது முதலாவது சிறுகதையான 'யாரொடு நோவேன்?' ஞானம் சஞ்சிகையில் வெளியானது. மிகக் குறுகிய காலத்தில் சிறுகதை, கவிதைகளுக்காக பதினைந்துக்கு மேற்பட்ட பரிசில்களைப் பெற்றுள்ள இவர் சர்வதேச ரீதியிலும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், லண்டன் பூபாள இராகங்கள் ஆகியன நடாத்திய சிறுகதைப் போட்டிகளிலும் பரிசு பெற்றுள்ளார். சர்ச்சைக்குரிய பெண்ணிய ஆக்கங்களுக்காக பாராட்டுதலையும், கடும் எதிர்ப்பையும் கொண்ட விமர்சனங்களுக்கு முகம் கொடுத்தவர்.*

*அரச ஊழியர்களுக்கான சிறுகதைப் போட்டி, பேராதனை பல்கலைக் கழக தமிழ்ச் சங்க சிறுகதைப் போட்டி, ஈழநாடு, வெள்ளி நாதம், தமிழ் அலை, ஞானம், அகிலம் சஞ்சிகைகள் நடாத்திய சிறுகதைப் போட்டிகளிலும் பரிசில்கள் பெற்றுள்ளார். கம்பன் கழகம் நடாத்திய மகரந்தச் சிறகு கவிதைப் போட்டியிலும் பரிசு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிழக்கு பெண்கள் அமைப்பினர் நடாத்திய போட்டிகளிலும் தேசிய ரீதியில் பரிசு பெற்றுள்ளார்.*



# எதிர்கொள்ளல்

## சந்திரகாந்தா முருகானந்தன்

செல்வி பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தாள். முற்றம் கூட்டி யாயிற்று. உள்வீடு கூட்டித் துப்பர வாக்கி யாயிற்று. இனி சமையல் கட்டில் உதவி செய்வாள். சுறுசுறுப்பாகக் காலை யிலிருந்து வேலைசெய்யும் அவளைப் பார்க்க வியப்பாகவும், பாவமாகவும் இருக்கும். நானும் இவளது வயதில் சுறுசுறுப்புத்தான். அப்போது எங்கட வீட்டில் வேலைக்காரப் பிள்ளை இல்லை. வேலைக்காரியை வைத்திருக்கக் கூடிய வசதிகளுமில்ல.

எங்கட வீட்டில செல்வி வேலைக் காரப்பிள்ளை எண்டு வரயில்லை. யுத்தத்திலை தேப்பனை பறிகொடுத் திட்டாள். ஐஞ்சு சகோதரியள். தாயும் நித்திய வருத்தக்காரி. அம்மா பாவம் எண்டுதான் புகலிடம் கொடுத்தவ. "கஸ்டப்பட்ட பிள்ளை ஏதோ காச்சிற திலை கொஞ்சம் கிள்ளிக் கொடுப்பம். இப்போதையிலை என்னாலையும் முந்தி மாதிரி வேலை வெட்டி செய்யேலாது... நீயும் வேலைக்குப் போயிடுவாய் பிள்ளை... வீட்டிலை எனக்கும் ஒத்தாசை யாயிருக்கும்" எண்டு அம்மா சொன்னவ.

**(ஞானம் 98, ஜூலை 2008)**

மற்றும்படி வேலைக்கு ஆள் வைச்சிருக் கிறதிலை எனக்கு துளியும் விருப்ப மில்லை.

காலமை எழும்பின நேரத்திலை யிருந்தே தலை வலிச்சுக் கொண்டிருக்கு. மனம் வலிச்சால் தலையும் வலிக்குமோ? "வாசுகி, ஏன் இண்டைக்கு வேலைக்குப் போகயில்லையோ?" நேரம் தாமதமாகிக் கொண்டிருந்ததைக் கண்ட அம்மா கேட்கிறா. "இல்லையம்மா போகத்தான் வேணும்." என்று பதிலளித்துவிட்டு துரிதமாக இயங்கிறன். தம்பி குகன் இன்னமும் குறட்டைவிட்டு நித்திரை கொள்ளுறான். இரா இராவாய் சினேகிதர் மாரின்ர வீடுகளிலை கும்மாளமடிச்சிட்டு சாமத்திலைதான் வந்து படுப்பான். கொஞ் சமும் வீட்டுப் பொறுப்பில்லை. அம்மா எழுப்பி ஏதோ சொல்லுறா. அவன் பேசிப் போட்டு மற்றப் பக்கமாய் படுக்கிறான். ஏன்தான் இப்படி ஒரு தம்பி வந்து பிறந்தா னோ எண்டு எனக்கு எரிச்சலாய்க் கிடக்கு.

துரிதமாகவெளிக்கிடுறன்.இந்தபஸ்ஸை விட்டால் நேரம் பிந்தியிடும்.. மனம் நிம்மதி யின்றி தவித்துக் கொண்டிருக்கு. இனி கலியாணக் கனவை மறக்க வேண்டியது தான்... எத்தனை முறைதான் ஒருத்திக்கு கலியாணம் பேசுறது...? சீதனம் காணாது, நிறம் குறைவு, வயசு கூடியிட்டுது... இப்படி பல காரணங்கள் சொல்லி குழம்பிப் போகும். நேற்றும் உப்பிடித்தான்.

வேகமாக வெளிக்கிட்டு பஸ்தரிப்பு நிலையத்துக்கு ஓடுறன். வழக்கம் போல பஸ்ஸில ஒரே சனநெருக்கடிதான்... ஒரு மாதிரி ஏறி நெரிபட்டு, நசிபட்டு உள்ளே ஏறிட்டன். பஸ் பயணம் எண்டுறது இப்பெல்லாம் வதையாப் போச்சு... யுத்தம் வெடிச்ச பிறகு எதிலைதான் நிம்மதி?... ம்... அதுவும் பொம்பளையின்ற பாடு பெரும்பாடு, மத்தளம் மாதிரி...

மெலியாரை வலியார் வதைத்தால், வலியாரைக் கடவுள் வதைப்பார் எண்டு சொல்லிவினம். எனக்கெண்டால் உதிலை நம்பிக்கை இல்லை. எங்கட நாட்டிலை நடக்கிற அட்டுழியங்களைப் பார்த்துக் கொண்டு கடவுளும் கண்ணை மூடிக் கொண்டிருக் கிறாரோ எண்டு யோசிப்பன். ஜீவகாருண்ணியத்தை, அகிம்சையை உலகிற்கு போதிச்ச புத்தபிரான்ர சிலையள் சந்திக்குச் சந்தி மலிஞ்சு போய்க் கிடக்கு. ஆனாலும் எங்கட நாட்டில இம்சைக்குக் குறைவேயில்லை. தேவாலயத்திற்கு மேலாலை குண்டு போட்டு அகதிச் சனத்தை அழிக்கிறாங்கள், மசூதியிலை கொலை நடக்குது. புதுவரிச நாளிலை சாமி கும்பிட வந்த பாராளுமன்ற உறுப்பினரை கோயிலுக்குள்ளை சுட்டுக் கொல்லுறாங்க. கடவுளோ கண்ணை மூடிக் கொண்டி ருக்கிறார். முடிவேயில்லாமல் நாட்டிலை வன்முறை தொடருது. செய்யுறவங்கள் பிடிபடாமல் தப்புறாங்கள்... கடவுளாலும் தண்டிக்க முடியேல்ல.

**ஆம்பிளையளின்ர அக்கிரமங்களை, அடக்கு முறையளை எல்லாம் பொறுத்துக் கொண்டு பொம்பிளையள் தியாகிகளாக வாழ வேணுமெண்டு பாரம் பரியமாய் எழுதாத சட்டம் இருக்கு. மதம், பண்பாடு, கலாசாரம் எல்லாமே பொம்பி ளையளுக்கு எதிராகத்தான் இருக்கு. மெல்லினம் எப்பவும் குதறப்பட்டுக் கொண்டிருக்கு. இயற்கையிலேயே பொம்பளையள் உடல்வலு குறைஞ்சவைதான். ஆனால் மனவலிமையிலை குறைஞ்சவையில்லை.**

இன, மத, வர்க்க, சாதிய வேறுபாடு ஒரு புறம் இருக்கட்டும். மெலியாரை வலியார் தாக்குற மாதிரித்தான் எல்லாச் சமூகத்திலயும் ஆம்பிளையள், பொம்பிளை யளை நசிக்கினம்..வீட்டுக்குவீடு,வீதிக்குவீதி பொம்பிளையளுக்கு எதிரான வன்முறை அதிகரிச்சபடியே இருக்குது எனக்கு இதுகளைத் தாங்க முடியேல்லை.

முதல்ல கவிதை எண்ட பெயரிலை ஏதோ கிறுக்கினதை சினேகிதிமாருக்குக்

காட்டினனான். காதலும், இயற்கையும் இடம்பிடிச்ச என்ர கவிதையளிலை பொம்பிளையள் படுகிற கஸ்டத்தை எழுத ஆரம்பிச்சன். பிறகு ஞானத்திற்கும் மல்லிகைக்கும் என்ர கவிதையளை அனுப்பிப் பார்த்தன்... என்ன ஆச்சரியம்! அறிமுக எழுத்தாளர் பகுதியிலை என்ர கவிதை பிரசுரமாகியிருந்தது. சாப்பிடவே பசி எடுக்காதளவு சந்தோசம்.. அண்டைக்குப் பிடிச்ச பேனை இண்டைக்கும் ஓயேல்ல. கவிதை மட்டுமல்லாமல் கதையள், பெண்ணியக் கட்டுரையள் எண்டு எழுத ஆரம்பிச்சன், என்ர எழுத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தது. தினசரிகளின்ர வாரப் பதிப்பிலை எல்லாம் பத்தி எழுத்து வரவேற்பைப் பெற்றது. ஓய்வில்லாமல் ஆணாதிக்கத்திற்கு எதிராக எழுதினன்.

கிட்டடியில எங்கட மாமா ஒருத்தரின்ர வீட்டிலை வேலைக்கு நிண்ட பிள்ளையொண்டு பிள்ளைத் தாய்ச்சியாய்ப் போச்சு. பிறகு மூடி மறைச்சு வயிறு கழுவக் கொண்டு போய் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு, அருந்தப்பிலை தப்பிப் பிழைச்சது. எனக்கு மனம் கொதிச்சது. வேலைக்காரப் பிள்ளையள் படுகிற கஸ்டங்களையும், அவர்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றியும் எழுதினேன். அதோட சொந்தக் காரருக்கு என்னோட கோபம். நான் எழுதுறதிலை சொந்தக்காரருக்கோ, அயலட்டைக்கோ கொஞ்சமும் விருப்பமில்லை. ஆம்பிளையளைப் பற்றி கண்டபடி தாறு மாறாக எழுதுகிறனாம். வயது வட்டுக் குள்ள போயும் இன்னும் கலியாணமாகாமல் இருக்கிற எனக்கு உதவி ஏதும் செய்து வைக்க மனசில்லை... அடக்கி ஒடுக்க மட்டும் வந்திடுவினம்..ம்..

இப்பெல்லாம் பொம்பிளையள் அனுபவிக்கிற கஸ்டங்களை, அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை எல்லாம் எழுதிக்கொண்டு வாறன். பொம்பிளையள் விழித்தெழ வேணும். ஆணாதிக்கத்தை முறியடித்து, பால் சமத்துவத்திற்காகவும் போராடவேணும் எண்டதையெல்லாம் மனதிலை பதியிற மாதிரி எழுதுவன். நடுவிலான் குகன், இப்ப வீட்டிலை இருக்கிற என்ர ஒரே தம்பி, ஆள் வலு குழப்படி.. இவன் கூடித் திரிகிற பொடியள் எல்லாம் பொறுப்புத் தெரியாததுகள்... வெளிநாடுகளிலை கஸ்டப்பட்டு உழைச்சு சகோதரங்கள் அனுப்புறதை சுதிபண்ணுற கூட்டம்.. ஆளுக்கொரு மோட்டார் சைக்கிள். இவனும் பின்னால தொத்திக் கொண்டு சுத்துறான். அம்மாவுக்கும் இவனால்தான் பெரும் கவலை. ஒரு தம்பி நாட்டை மீட்கப் போயிட்டான். இவன் கெடுக்கவெளிக்கிட்டிருக்கிறான்... இவனுக்கு எப்ப பார்த்தாலும் என்ர எழுத்துக்களைப் பற்றி கிண்டல்!... பொம்பிளையள் பொம்பிளையள் மாதிரி இருக்கவேண்டுமாம்... அடக்க ஒடுக்கமாய் இல்லாமல், சேவல் கொக்கரிக்கிற மாதிரி கொக்கரிக்கக் கூடாதாம்.

ம்... இவனைச் சொல்லிக் குற்றமில்லை. ஆம்பிளையளின்ர அக்கிரமங்களை, அடக்கு முறையளை எல்லாம் பொறுத்துக் கொண்டு பொம்பிளையள் தியாகிகளாக வாழ வேணுமெண்டு பாரம் பரியமாய் எழுதாத சட்டம் இருக்கு. மதம், பண்பாடு, கலாசாரம் எல்லாமே பொம்பிளையளுக்கு எதிராகத்தான் இருக்கு. மெல்லினம் எப்பவும் குதறப்பட்டுக் கொண்டிருக்கு. இயற்கையிலேயே பொம்பளையள் உடல்வலு குறைஞ்சவைதான். ஆனால் மனவலிமையிலை குறைஞ்சவையில்லை. இந்த மனவலிமையும், சாதுரியமும் இருந்திட்டால் எவ்வளவோ சாதிக்கலாம். அதை பெண்கள் வளர்த்துக் கொள்ளவேணுமெண்டதைப் பற்றி எழுத்துக்களிலை வலியுறுத்திறனான்.

"அக்கா நீ உப்புடியே ஆம்பிளையளை எதிர்த்து எழுதிக் கொண்டிரு... இக்கணம் ஒருத்தரும் உன்னைக் கட்ட மாட்டாங்கள்." முகத்துக்கு நேரே சொல்லிச் சிரிப்பான். ஏதோ அமைதியாய் இருக்கிற பொம்பிளையளை எல்லாம் கட்டுறதுக்கு ஆம்பிளையள்

தயாராக இருக்கிற மாதிரி இவன் சொல்லுற போது எனக்கு சிரிப்பு வரும். "போடா... என்னை ஒருத்தரும் கலியாணம் கட்ட வேண்டாம்... நான் இப்படியே இருந்திட்டுப் போறன். எனக்கு இப்ப என்ன குறை?" வீம்பாக அவனுக்கு பதிலளிக்கும் போதும் மனது கனக்கும்.

"அக்கா. நீ சொல்லுறது நரியும், திராட்சைப் பழமும் கதை மாதிரிக் கிடக்கு... எட்டாதவை எல்லாம் சீச்சி... இந்தப் பழம் புளிக்கும் எண்டுதான் சொல்லுறவை." மனதைக் குத்திக் கிழிக்கும் அவனுடைய வார்த்தைகளில் துடிதுடிச்சுப் போவன்.

மந்திகை ஆசுபத்திரியடியிலை பஸ் நிக்குது. கொஞ்சப் பேர் இறங்கியினம். அதைவிடக் கூடுதலாக ஏறுகினம். மீண்டும் நெரிசல் அதிகரிப்பு... இனி பயணம் பண்ணின மாதிரித்தான்... மனம் சலித்துக் கொண்டது.

எல்லா ஆம்பிளையளும் கெட்டவை எண்டில்லை. சில ஆம்பிளையள் எவ்வளவு கண்ணியமானவையள்.

பஸ் வெளிக்கிடுது. பஸ்ஸோட சேர்ந்து மனதும் பயணிக்குது.

காலமை அம்மா சொன்னது இப்பவும் மனதை அரிச்சுக் கொண்டிருக்குது. "பிள்ளை, நீ இனி கட்டுரை பேப்பரிலை எழுதுறதை நிப்பாட்டு. நீயே உனக்குத் தெரியாமல் உன்ர தலையில மண்ணை அள்ளிக் கொட்டுறாய்... கலியாணம் பேசாத இடமில்லை. ஓரிடமும் இன்னும் கைகூடி வரவில்லை. குறிப்பு பொருந்தி வந்த வாத்தியார் மாப்பிள்ளை பகுதியும் வேண்டா மெண்டிட்டினம். அதோட நீ ஆம்பிளையளை மதிக்காமல் பத்திரிகையிலை எழுதிறியாம். ம்.... தங்கைச்சிக்கும் வயது ஏறிக் கொண்டு வருகுது.. உன்ர அலுவலை முடிச்சால்தானே அவளைப் பற்றியும் யோசிக்கலாம்..?" அம்மாவின் ஆதங்கம் எனக்குப் புரிகின்றது. நானும் ஒன்றும் சந்நியாசியில்லை... ஒவ்வொரு தடவையும் ஏமாற்றத்தில் குன்றிப் போவேன்...

அம்மா இப்ப கவலைப்படுகிறா இரண்டு, மூன்று வருஷத்துக்கு முன்னால வலிய வந்த மாப்பிள்ளையை அம்மாவும், மாமாவும், குஞ்சியப்பும் தட்டிக் கழிச்சவை. ரவி நல்ல உத்தியோகத்திலை இருந்தவர். சீதனமும் கேட்கயில்லை. சாதி எங்களை விடக் குறைவெண்டு வேண்டாம் எண்டவை. கிளார்க்காக இருந்த ரவி, இப்ப பிரதேச செயலாளராகிவிட்டார்... ம்... பொசிப் பில்லாமல் போச்சு.

பஸ் குலுக்கலில் நினைவுகள் அறுகிறது. நெருக்கத்திலை நிற்கிற ஆளின்ர மூச்சுக் காற்று என்ர தோளிலை படுகுது. சாடை யாய் கடைக் கண்ணால பார்க்கிறன். கேடு கெட்ட ஆம்பிளைதான்... என்னிலும் சின்னப் பொடியன் எப்படா பஸ் குலுக்கும், இவளிலை சாயலாமெண்ட மாதிரி நிற்கிறான். கொஞ்சம் விலத்தி முன்னுக்கு போகலாமெண்டால் இடமில்லை. அவன் பின்னால தள்ளி நிக்கலாம். அக்கா, தங்கைச்சியோட பிறக்காத எளிய நாய். நல்லாய் சுடச்சுடக் குடுக்க வேணும் எண்டு மனம் உந்துது. காலமை அம்மா சொன்னது வாய்க்குப் பூட்டுப் போடுது.

அக்கா, தங்கைச்சியோட பிறந்தது கள் எண்டாப் போல திறமே?.... என்ர தம்பி குகன் ஒருத்தன் போதும்... பிறகேன் மற்றவைகளைப் பற்றி?...

நெல்லியடியிலையும் சனம் பஸ்ஸிலை ஏறுது. இதுதான் தருணம் எண்டு அந்தப் பொடிப் பிள்ளை எனக்கு நேரே பின்னால வந்து நிக்குது. நான் நினைச்ச மாதிரியே பஸ் குலுக்கலிலை என்ர பின்னாலை முட்டுறதும் விலகுறதுமாய்... ஒரு மாதிரி விலத்தியபடி சாடையாய் அவனைப் பார்க்கிறன்.. ஏதோ எனக்கும் இது விருப்பம் எண்ட மாதிரி பல்லை இளிக்கிறான். பெண்டுகள் எல்லாம் இவையளின்ர உரசலுக்காக தவமிருக்கினம் எண்ட மாதிரி...

ம்...அவங்கள் இப்படி நினைக்கிறதுக்கும் எங்கட சில பெட்டையளும்தான் காரணம். வெளிநாட்டிலை இருந்து சகோதரங்கள்

குளிர், பனி எண்டும் பார்க்காமல் அடிச்சு உழைச்சு அனுப்புற காசிலை, அவங்கள் படுற கஷ்டம் புரியாமல் கண்ட கண்ட உடுப்பையெல்லாம் போட்டுக் கொண்டு பொடியங்களோட சுத்தி சுதி பண்ணுகினம். ஆம்பிளையளை திருத்த முதல்ல இப்படிப்பட்ட பெட்டையளைத் திருத்தவேணும்.

கொஞ்சம் விலத்திறன். அங்காலை கமலாக்காவும் கஸ்டப் பட்டுக் கொண்டு நிக்கிறா. என்னைக் கண்டவுடனை சிரிக்கிறா. 'ஏதாவது கேள்விப்பட்டனீரெ?' எண்டு கேட்டு விட்டு சொல்லுகிறா. 'நீர்வேலிப் பக்கம் ஒரு பிள்ளையை சுற்றி வளைப்பிலைசிதைச்சுப்போட்டாங்களாம். அந்தப்பிள்ளை தூக்குப் போட்டுக் கொண்டு செத்துப் போச்சாம்... இவங்கட அட்டூளியங்களுக்கு முடிவேயில்லை.' கமலாக்காவின் வார்த்தைகளில் மனம் கொதிக்கிது. கமலாக்காதான் தொடர்ந்து சொல்லுறா. 'என்ர கையிலை உவன் தர வெளி துவக்கொண்டும் இல்லாமல் சிக்க வேணும். கண்ட துண்டமாய் வெட்டிப் போடுவன்.. ஓ..' கமலாக்கா ஆவேசமாய்க் கூறியபோது அவவை எல்லாரும் பார்க் கினம்.

அடுத்த தரிப்பிலை கமலாக்கா இறங்கிறா... பிறகும் நெரிசல். பழையபடி அந்தத் தேவாங்கு எனக்குப் பின்னாலயே வருகுது. இண்டைக்கு என்னைக் கசக்கிப் பிழியுறது எண்டுதான் நிக்கிறான்.. எளிய மூதேவி... சிலதுகள் சாடைமாடையாய் எதிர்ப்பைக் காட்டினால் விலத்தியிடுங்கள். சிலதுக்கு சூடு சுரணை இல்லை. இவனும் இப்படிப்பட்ட சனியன்தான். ஆளின்ர உடுப்பையும், ஸ்டைலையும் பார்த் தால் வலு 'டிப்டொப்..' இந்தப் பூனை யும் பால் குடிக்குமோ எண்ட மாதிரிக் கிடக்கு. இந்த நாளையிலை வெளித் தோற்றத்தைக் கொண்டு ஒருத்தரையும் மட்டுக்கட்டேலாது. நான் மறுபடியும் சீற் நெரிசலுக்கால விலத்தி நிற்கிறன்.

இவங்கள் எல்லாப் பெண்டுகளும் இப்படித்தானெண்டு நினைக்கிறாங்கள் போலஇருக்கு.இப்பநான்விலத்திநிற்காட்டி என்னையும் தப்பானவளாய் நினைச்சுப் போடுவாங்கள்..அவனிருக்கட்டும்பார்க்கிற சனம் என்ன நினைக்கும்?... பக்கத்திலை சுபாசினி இருந்தாலும் கதைச்சபடி அப்படி யிப்பிடி கொஞ்சம் விலத்தி நிற்கலாம்.. அவள் எங்கயோ பின்னுக்கு நிற்கிறாள். பார்வையை சுழற்றுறன்.. அவளோடையும் ஒருத்தன் நசிச்சுக் கொண்டு நிற்கிறான்.. ஆரது? பிறேமனோ? ஓம்.. அவன்தான்... விடுகாலி... அவன் பஸ்ஸிலை வாறதே பெட்டைகளோட உரசத்தான். எத்தனை நாள் என்னிலையும் உரசப் பார்த்தவன்... பலிக்கேல்ல. ஒரு முறை ஒரு மனிசியோட உரசப் போய் நல்லாய் வாங்கிக் கட்டி னவன். அவனும் விட்டானே 'பஸ் நிறைய மாட்டுப் பட்டி போல சனம் அடைஞ் சிருக்கு... முட்டாமல் நசுங்காமல் வர வேணு மெண்டால் காரிலை பயணம் செய்யுங்கோ.' மனிசிக்கு வாயடைச்சுப் போச்சு.

ஒரு நாள் நானும் சுபாசினியும் றோட் டாலை வரையுக்க சயிக்கிள்ளை வந்து பின்னால தட்டிப் போட்டுப் போனவன். நல்ல செவ்வையாக் குடுத்தனான். அதுக்குப் பிறகு என்னிலை பயம்... 'எளிய நாய்' எண்டு சுபாசினியும் இவனைத் திட்டினவள். இப்ப என்னடாவெண்டால் வலு சந்தோசமாய் நசிபட்டுக் கொண்டு வாராள். இண்டைக்கு அலுவலகத்திற்குப் போனவுடனே அவ ளுக்கு நல்லாப் பேச்சுக் குடுக்க வேணும்.

பஸ் குடியிருப்புகளைத் தாண்டி வல்லை வெளிக்கு வருகுது, இனி வலு வேகமாக ஓடும்.... ஜன்னலுக்கால காற்று இதமாக வீசி உடலைத் தழுவுது.. அட... இந்தச் சனியன் திரும்பவும் உரசுது... திரும்பி முறைச்சுப் பார்க்கிறன். விளங்காத மாதிரி வேற பக்கமாய்ப் பார்த்தபடி விலத்தி நிற்கிறான்.. நான் கொஞ்சம் அங்காலை காலை எடுத்து வைச்சு அரக்கி நிற்கப் பார்க்கிறன். வலு கஸ்டமாயிருக்கு.. இப்ப பிறகு இன்னொரு அரைக்கிழடு.. அதுவும்

உரசல் விளையாட்டு விளையாடுது... எளிய மூதேசியள். இவனுக்கு என்ர வயசிலை ஒரு பிள்ளை இருக்கும். வீட்டிலை மனிசிமார் இருக்க இவையளுக்கு இளசுகள் தேவைப்படுது. பொம்பளையெண்டா வெறும் உடம்பு எண்டு மட்டும் நினைக்கிறாங்கள்... உணர்ச்சியுள்ள சீவனெண்ட எண்ணமில்லை... இல்லாட்டில் உணர்ச்சிகளைத் தூண்டி குளிர்காயப் பார்க்கிறார்களோ? எத்தினை பொம்பிளையெண்டாலும் சில ஆம்பிளையளுக்கு அடங்காது. பெண்டுகளிலை எங்காவது ஒரு சிலதுகள் உப்பிடி இருக்கலாம். ஆனால் ஆம்பிளையள் வலு மோசம் ஒரு சிலரைத் தவிர.

சிலோசினியக்கா அண்டைக்கு பஸ்ஸிலை வந்த ஒருத்தனோட வலுவாய் ஒட்டிக்கொண்டு வந்தவ. நான் இதைப் பற்றி சுபாசினியிட்டை கதைச்சனான். அவள் சொல்லுறாள் 'பாவம் அவவுக்கும் முப்பத்தி ஐந்து வயசாச்சு. சீதன மில்லாததால கலியாணம் காட்சி இல்லாமலிருக்கிறா' எண்டு விதண்டாவாதம் பேசுறாள். இப்ப என்னடாவெண்டால் இவளும் பிறேமனோட வலு குசாலாக ஒட்டிக்கொண்டு வாறாள். அமர் பிடிச்சு அலையுதுகள்.

வல்லைச் சந்தியிலை பதுங்குகுழி அமைச்சு காவலரணிலை ஆமி நிக்குது, அங்காலை சோதனைச் சாவடி. இதிலை எல்லாரையும் இறக்கி செக் பண்ணிப் போட்டுத்தான் விடுவாங்கள்.

பஸ் நிண்டவுடனை சனமெல்லாம் இறங்குது, அப்பாடா வெண்டு ஆறுதலாயிருக்கு. இனி இவங்கடை கொச்சையான பச்சை கிண்டல்களுக்கும் காது கொடுக்காமல் போகவேணும். இவங்களை பார்க்கிற போது மனது படபடவெண்டு அடிக்கும். கையிலை காவுற துவக்குகள் எப்ப வெடிக்குமோ எண்டு மனது பயப்படும். சுற்றி வளைப்பிலை எளியதுகள் செய்யுற அக்கிரமங்களை நினைச்சால் பயமும் கோபமும்தான் வரும். போன வரிசம் எங்கட பகுதியைச் சுத்தி வளைச்சு தேடுதல் நடத்தின போது பொடியங்களையெல்லாம் பிடிச்சுக் கொண்டு போய் முகமூடியணிந்த தலையாட்டிக்கு முன்னாலை விட்டு அவன் தலையாட்டினவங்களை எல்லாம் பிடிச்சோண்டு போனவங்கள். ஒரு பாவமும் அறியாத பெரிய தம்பியையும் பிடிச்சிக் கொண்டு போட்டாங்கள். பிறகு பிடிக்கேல்லை எண்டிட்டாங்கள். அம்மா முகாம் முகாமாய் அலைஞ்சதுதான் மிச்சம். தம்பி உயிரோட சிறையிலை இருக்கிறானோ இல்லையோண்டும் தெரியாது. அப்பாவின்ர பிரிவுக்கு பிறகு இப்ப எங்கட குடும்பத்திலை விழுந்த பேரிடி இது. அம்மா அழுதழுதே வருத்தக்காறியாயிட்டா. பிறகு கொஞ்ச நாளையிலை சின்னவன் காணாமல் போயிட்டான். அவன் இயக்கத்தில் சேர்ந்ததோட அம்மா இன்னும் நொடிஞ்சி போனா. எண்டாலும் காலப் போக்கில் கவலையுக்குள்ளையும் அவனைப் பற்றி பெருமை. வீட்டோட இருந்து தண்டச்சோறு திண்டு கொண்டிருக்கிற குகனைப் பற்றித்தான் கவலை. வரவர குகன் சரியான மோசம். எப்ப பார்த்தாலும் ஏதாவது வம்பை விலைக்கு வாங்கினபடி. அம்மாவும் நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துக் களைச்சுப் போனோம் திருந்திற பாட்டைக் காணம். இந்த பஸ்ஸிலை உரசுற எளியதுகள் போலத்தான் இவனும். இவனுக்கு ஒரு கலியாணத்தை கட்டி வைச்சால் திருந்திடுவான் எண்டு அம்மா சொல்லுவா. இவனை நம்பி ஆர் பொம்பிளை கொடுப்பினம்? வேலை வெட்டி இல்லாமல் ஊர் சுத்துற காவாலிக்கு கலியாணம் ஒரு கேடோ? வருமானம் இல்லாமல் வாழேலுமோ?

போன மாதம் என்ர சிநேகிதிமார் இரண்டு பிள்ளைகள் படம் பார்க்க போயிருக்குதுகள். ஒரு பொடிப்பிள்ளை பக்கத்தில் வந்திருந்து கொண்டு சேட்டை விட்டவனாம். பிறகு ஆரெண்டு பார்த்தால் என்ர தம்பி குகன்தானாம். நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போல இருந்தது.

செக்கிங் முடிஞ்சு எல்லாரும் பஸ்ஸிலை ஏறுகினம். வல்லலையில் பயணம் செய்யுற போது முந்தி இரவிலை முனியளுக்கு பயப் படுவினம். இரவு பகல் எண்டில்லாமல் இப்ப துவக்கு முனியள். அந்த நாளையிலே முனியளுக்கு பயந்தோ என்னவோ முனியப்பர் கோயில் எண்டு ஒரு கல்லை வைச்சு சனம் கும்பிட்டது. இப்ப பெரிய கோயிலாக எழும்பி விட்டது. வாற போற பஸ்ஸெல்லாம் நிப்பாட்டி உண்டியலுக்கு காசு போட்டுட்டு போயினம். கொண் டக்டர் காசு போட்டதும் பஸ் மறுபடி வேகம் கொள்ளுது. அச்சுவேலி, ஆவரங் கால் புத்தூர், நீர்வேலி எண்டு பஸ் போகுது. நீர்வேலியிலே சில பேர் நோட்டீஸ் குடுக்கினம். முகாமுக்கு பக்கத்திலை, பாலியல் வல்லுறவுக்கு உள்ளா னதாலை தற்கொலை செய்த இளம் பெண்ணுக்கு கண்ணீர் அஞ்சலி நோட்டீசும், இராணுவத்தை கண்டிச்சு நோட்டீசும் வழங்கியீனம். எனக்கு இரத்தம் கொதிக்குது. பொம்பிளைகள் எண்டவுடனை இவங்களுக்கு கிள்ளுக் கீரை. ஒரு உயிர் எவ்வளவு அற்பமாய் போச்சு? இதுக்கெல்லாம் முடிவு காணுறது எப்போது? நோட்டீஸ் குடுக்கிற பொடி யளைப் பார்க்க பெருமையாயிருக்கு. இவங்களை போல துடிப்புள்ள, இனப் பற்றுள்ள பொடியள்தான் ஏதும் சாதிக்க வேண்டும். ஆனாலும் காட்டிக் கொடுக்கிற கூட்டம் இருக்கிறபோது இவர்களுக்கும் துவக்குச் சூடு விழலாம்.

பொம்பிளைகளுக்கு ஏதும் அவலமாய் நடந்ததை கேள்விப்பட்டால் என்னால் தாங்க முடியுறேல்ல. எவ்வளவு கனவு கற்பனையோட உறங்கப் போயிருப்பாள்? வெறும் உடல் இச்சைக்குப் பலியாகி இண்டைக்கு தற்கொலை செய்திட்டாள். உண்மையிலேயே இவள் தற்கொலை செய்திருக்கத் தேவையில்லை. இதை ஒரு விபத்தாக நினைச்சு வாழுற மனப்பக்குவம் வேணும். மனப்பக்குவம் இருந்தாலும் இந்த சமூகம் விட்டு வைக்கப் போகுதே? கற்பு என்டது உடல் சார்ந்த விடயம் மட்டு மில்லையே.

குகனை எப்படியும் திருத்த வேண்டும் அப்பாவும் பெரியதம்பியும் இருந்திருந்தால் கட்டுப்பாடாயிருந்திருப்பான். இப்ப இவ னுக்குப் பயமில்லை. உழைக்காட்டிலும் பரவாயில்லை. வீட்டு வேலையளிலை ஒத்தாசையென்டாலும் செய்யலாமே? காலமை அம்மா, சங்கக்கடைக்கு போய் நிவாரணம் எடுத்து வரும் படி இவனைப் கேட்டவ. மாட்டன் என்டிட்டான்.

பல வேறு எண்ணங்களுடன் பயணிக் கிறன். பஸ் யாழ் நகரை அடைந்தவுடன், இறங்கி விரைந்து அலுவலகத்துக்குச் செல்கிறன். மனிசரின்ர போக்குவரத்துக் கஷ்டம் தெரியாமல் சிவப்புக்கோடு அடிச்சி டுவார் மேலதிகாரி. ஆனால் கௌசல்யா வந்து சேரும் வரை கோடடிக்க மாட்டார்.. நெளிஞ்சி பல்லிளிச்சாத்தான் எதுவும் நடக்கும்... எனக்கு எரிச்சல் எரிச்சலாக வருகுது. தேநீர் இடைவேளையின் போது சுபாஷினிக்கு பேச்சுக் கொடுக்கிறன்.. அவள் அசடு வழியச் சிரிக்கிறாள். 'இல்ல நாங்க நினைக்கிற மாதிரி பிறேமன் தப்பான ஆளில்லை. அவருக்கு என்னிலை விருப்ப மாமடி.' இவளின்ர முகம் பூரிக்கிறதைப் பார்க்க எனக்கு கோபம் வருகுது.

அலுவலகத்திலை வேலை குவிஞ்சு கிடக்கு. ஊரடங்குச் சட்டத்தால ஓவர் ரைமும் செய்ய ஏலாது. எப்ப வேலை முடியும், வீட்டுக்கு வெளிக்கிடலாமெண்டு தான் எல்லாரும் அவசரப் படுவம். மூண்ட ரையாகுது. நாலு மணி பஸ்ஸை விட்டால் பிறகு கடைசி பஸ்ஸில் போக இருண்டு போகும். பிறகு சென்ரிகளைத் தாண்டிப் போறதெண்டா வலு பயங்கரம்... எல்லாரும் வெளிக்கிட்டு பஸ் தரிப்புக்கு ஓட்டமும் நடையுமாய் விரையுறம். பஸ் தரிப்பிலை பஸ்ஸைக் கண்டதும் தான் ஆறுதல். விழுந்தடிச்சு ஏறுகிறம். வாழைக்குத்தியளை அடுக்கி வைச்ச மாதிரி நெரிசல். இனி பழைய குருடி கதவைத் திறவடி கதைதான்... இப்ப வேர்வை வெடுக்கு மறுபுறம்... வழியிலை

கமலாக்காவும் ஏறுகிறா. கமலாக்காவைக் கண்டவுடன் மனதுக்கு நிம்மதி... பஸ்ஸால இறங்கி வீடுவரை கூடிக் கொண்டு போகலாம். எங்கட அயலட்டைதான் அவவும். ஒரு மாதிரி ஆடிப்பாடி பஸ் பருத்தித்துறையைச் சென்றடையுது. இனி இந்தக்களைப்போட நடந்து வீட்டுக் குப் போகவேணும். சென்ரி தாண்டுற தெண்டால் ஒவ்வொரு நாளும் பயம்தான். முந்தி கொஞ்ச நாள் பயமில்லாமல் போய் வரக் கூடியதாய் இருந்தது. ஆட்சி மாறினதோட அதிகார வர்க்கத்தின்ரை நிலைப்பாடு மாறின தோட, இவங்களும் மாறிட்டாங்கள். கடவுள் புண்ணியத்தில இண்டைக்கு பிரச்சினையில்லாமல் சென்ரி யைத் தாண்டியாச்சு. கமலாக்கா இல்லாமல் தனியவாற நாளையில பயம் கூடவாக இருக்கும். ஒரு மாதிரி வீட்டடிக்கு வந்திட் டம். மனதிலை பாரம் இறங்கின மாதிரி நிம்மதியாக இருக்கு.

வீட்டு வாசல்ல ஆக்கள் நிக்கினம். ஒரே பரபரப்பாய் இருக்கு... பதறியபடி கமலாக்காவும் நானும் உள்ளே போனம். மாமி, சின்னம்மா, சொந்த பந்தம் எல்லாம் நிக்கினம். அம்மாவின்ர சிலமனைக் காணோம். மனம் பதகளிக்குது, செல்வி என்னை கண்டதும் ‘ஓ’ எண்டு குளறிக் கொண்டு வாறாள். எனக்கு கையும் ஓடேல்லை, காலும் ஓடேல்லை... இதுக் கிடையில் செல்வியை உறுக்கிப் போட்டு மாமி நடந்ததைச் சொல்லுறா.

‘பாவம் அநாதையள், அகதியள் எண்டு எளிய சாதியளுக்கு தஞ்சம் குடுக்கப் போனா, இவள் செய்திருக்கிற வேலையைப் பார்த்தியே வாசுகி?... குகனை கத்தியாலை தோள் பட்டையிலை குத்தியிருக்கிறாள்... அவனை ஆஸ்பத்திருக்கு கொண்டுபோட்டி னம். இவளைக் கொண்டாலும் ஆத்திரம் தீராது.’

எல்லாரும் சொன்ன கதைகளிலிருந்து நடந்தவற்றை அறிய முடிந்தது. அம்மா சங்கக் கடைக்கு நிவாரணம் எடுக்கப் போன இடையிலை செல்வி தனியாய் நிண்டு சமைச்சுக் கொண்டிருந்திருக்கிறாள். எங்கயோ போயிட்டு வந்த குகன் செல்வி யோட தப்பாய் நடந்து கொள்ள பலவந்தப் படுத்தியிருக்கிறான். இவளும் போராடியிருக்கிறாள். முடியேல்ல. இதுக்கி டையில் சமயோசிதமாக மரக்கறி வெட்டின கத்தியை எடுத்து அதாலை அவனைத் தாக்கியிருக்கிறாள். குகன் எதிர்பார்க்கவில்லை. தோளிலை காயம். துடிதுடிச்சுப் போனான். பிறகு அம்மாவும் சொந்தக்காரரும் செல்விக்கு அடிச்சி ருக்கினம்.

கதையைக் கேட்டதும் எனக்கு குகன் மீதும், உறவினர்கள் மீதும் கோபம் ஏற்பட்டது. இதற்கிடையில் என்னோடு வந்திருந்த கமலாக்கா, பாரன் இந்தப் பெட்டையின்ர கொழுப்பை? அது அதுகளை அந்த அந்த இடத்திலை வைக்கா ததுதான் பிழை. எண்டு செல்வியை ஏச ஆரம்பித்தபோது நான் விறைத்துப் போனேன். என்ன முரண்பாடுகள்...!

நான் எல்லாரையும் அடக்குமாப் போல் உரத்துக் கத்தினேன். “செல்வி செய்தது சரிதானே? பிறகேன் அவளுக்கு அடிச்சனீங்கள்? ஒரு பெட்டை தன்ர மானத்தை, கற்பைக் காத்துக் கொள்ள ஒரு காமுகனை எதிர்த்துத் தாக்கினது பிழையே? நானெண்டாலும் இப்படி ஒரு சூழ்நிலையிலை இதைத்தான் செய்தி ருப்பன்; சொல்லிப் போட்டன். ஒருத்தரும் செல்வியைத் தொடப்படாது... செல்வி, இங்கேவா பிள்ளை.’ என்று அவளை அருகே அழைத்து அணைக்கிறன். வீராங்கனை பூலான்தேவி போல் அவள் எனக்குத் தெரியிறாள். பெண்கள் மெல்லினம் மட்டுமல்ல... வல்லினமும்தான்....

ம்... நான் எழுதுவன்; இன்னும் எழுதுவன். இனியும் எழுதிக் கொண்டே யிருப்பன்.

# தொலையும் முகவரிகள்

17

2

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்



சிறுகதை, திறனாய்வு சார்ந்த பத்திஎழுத்து, பதிப்புத்துறை போன்றவற்றில் ஈடுபாடுகாட்டிவரும் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் 25.12.1958இல் பிறந்தவர். 'நிலாக்காலம்', 'நெஞ்சாங்கூட்டு நினைவுகள்' ஆகிய இவரது சிறுகதைத் தொகுதிகள் முறையே வடகிழக்கு, வடக்கு மாகாண இலக்கிய விருதுகள் பெற்றன. 'வேட்டை' 'நெஞ்சாங்கூட்டு நினைவுகள்' ஆகிய இரு சிறுகதைகள் யாழ் இலக்கிய வட்டத்தின் கனகசெந்தி கதாவிருது பெற்றன. ஆறு சிறுகதைத் தொகுதிகள், மூன்று திறனாய்வுசார் பத்தி எழுத்துத் தொகுப்புகளின் சொந்தக்காரன். மீரா பதிப்பகத்தினூடு 75க்கு மேற்பட்ட நூல்களை வெளிக்கொணர்ந்த இவரின் முதல் மூன்று சிறுகதைத் தொகுதிகளும் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பிற்காக ஆய்விற்குட்படுத்தப்பட்டன. இலண்டன் பூபாளராகங்களின் இலக்கிய செயற்பாட்டிற்கான இலங்கை இணைப்பாளராக செயற்பட்டுவரும் இவர் தற்போது 'தினக்குரல்' பத்திரிகையில் பிரதி விளம்பர முகாமையாளராகப் பணி புரிந்து வருகின்றார். இவரது இரு சிறுகதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது 'வேட்டை' சிறுகதை அண்மைக்கால சிறுகதைகளுள் உன்னதமான சிறுகதைகளுள் ஒன்று என ஞானம் 'மே' இதழில் கலாநிதி செங்கை ஆழியான் குறிப்பிட்டுள்ளார். 'மல்லிகை' அட்டைப்பட அதிதியாகவும் கௌரவம் பெற்றவர்

இவரது தொடர்பு முகவரி : 'மீரா பதிப்பகம்' இல 191/23 ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. 0775342128, 2513336 அல்லது 4618938

ஏறத்தாழ விழா முடிவுற்று விட்டது.

விழா ஏற்பாட்டுக்குழுத் தலைவர் நன்றியுரையாற்றிக் கொண்டிருந்தார். இயல்பாக நகைச்சுவை ததும்பக் கதைகள் சொல்லும் அவர் மேடையில் வலு 'சீரியஸாக', தனது நன்றியுரையில் எவரையும் தவறவிட்டுவிடக்கூடாது என்பதிலேயே குறியாக இருந்தார். மண்டபத்தை நிறைத்திருந்த சனங்கள் இன்னும் கலைய ஆரம்பிக்கவில்லை. எங்களூரில், இலங்கையிலாக இருந்தால் நன்றியுரை கேட்க நாலைந்து பேர்தான் இருந்திருப்பார்கள். அவர்களும் அனேகமாக மேடையில் வீற்றிருப்போருக்கு மிக வேண்டப்பட்டவர்களாகவோ அல்லது அவர்களது வாகனத்தில் வந்தவர்களாகவோதான் இருப்பார்கள். ஆனால் லண்டனில் இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு வந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது கூட எனக்கு சற்று வியப்பாக இருந்தது. நூற்றி ஐம்பது பேருக்கு மேலாவது இருக்கமாட்டார்களா?

**அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா ஜனன நூற்றாண்டு விழாச் சிறுகதைப் போட்டி 2007இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை**

(ஞானம் 99, ஆகஸ்ட் 2008)

தனது உரையில் ஆங்கிலப் பதங்கள் ஊடுருவிவிடக் கூடாது என்பதில் விழாக்குழுத்தலைவர் மிக்க அவதானம் பேணிவந்தார். எனது பெயரைக் கூட அழகுதமிழில் அவர் உச்சரித்தது என்னை அதிசயிக்க வைத்தது. எங்களூர் பள்ளிக் கூடத்தில் படிப்பித்த பெரியதம்பி வாத்தியாருக்குப் பிறகு எனது பெயரை இத்தனை அழகாகத் தமிழில் உச்சரித்தது இவராகத்தான் இருக்க முடியும். இந்த விழாக்குழுவினர் கூட ஊரில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரே! தாயகப் பாடசாலையின் வளர்ச்சிக்காக இப்பேர்ப்பட்ட விழாக்கள் மூலம் நிதி திரட்டி உதவி இன்று சர்வ தேசப் புகழடைந்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் நடாத்திய சிறு கதைப் போட்டியில் பரிசுபெற்ற கதை களைத் தொகுத்து இன்று நூலாக வெளியி டுகிறார்கள். எழுத்தாளன் என்ற ரீதியில் இந்நிகழ்விற்குச் சிறப்பு அதிதியாக இவர் களால் அழைக்கப்பட்டு லண்டன் வந்துள்ளேன்.

இங்கு வருவதற்கு விசா எடுப்பதற்கு முயற்சித்தபோது, இவர்களின் அனு சரணைக் கடிதத்தைப் பார்த்துவிட்டு, 'பத்து சதம்வீதம்தான் சாத்தியம் எதற்கும் போய் முயற்சித்துப் பார்!' என்றுதான் அனேகமாக எல்லோரும் சொன்னார்கள். ரவல் ஏஜன்சியில் பணிபுரியும் பள்ளி நண்பன் ஒருவன் மூலம் விசா விண்ணப்பப் பத்திரங்களை நிரப்பிக்கொண்டு ஒரு துணிச் சலுடன்தான் விசா எடுப்பதற்கென்று புறப்பட்டேன். விண்ணப்பத்தை ஏற்கும் அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரிகளுடன் சீரியஸாக இருக்குமாறு திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுத்திருப்பார்கள் போலும். கடுகடுப்பாகவே அந்த அதிகாரி முகத்தை வைத்திருந்தார்.

விசா விண்ணப்பப்பத்திரத்தையும் அனு சரணைக் கடிதத்தையும் பவ்வியமாகச் சமர்ப்பித்தேன். அவற்றினை வாசித்துப் பார்த்து விட்டு அதிகாரி ஓர்தடவை என்னை உச்சிமுதல் உள்ளங்கால்வரை பார்த்தார். சிறப்பு அதிதியாக அழைக்கப் பட உனக்கென்ன தகுதியிருக்கு? என்பது போலிருந்தது அந்தப் பார்வை. கையோடு கொண்டு சென்ற நான் எழுதிய ஏழெட்டுப் புத்தகங்களையும் எடுத்து மேசையில் அடுக்கினேன். புத்தகங்களை ஒவ்வொன்றாக அட்டைப் படத்திலிருந்து பின் அட்டை வரை பனாட்டுத் தட்டைப் போல் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். புத்தகங்களின் தலைப்புக்களோ அதிலுள்ள விடயதானங்களோ அவருக்கு விளங்கி யிருக்க நியாயமில்லைத்தான். பின் அட்டை களில் எனது புகைப்படங்கள் இருந்தது நல்லதாகிப்போய் விட்டது. அப்படங் களைப் பார்த்ததும் அவரது கடுகடுப்பில் கணிசமான வீதம் குறைந்திருந்தது.

அதன் பின்னர் லண்டனில் யார்யாரைத் தெரியும் என்று கேட்டார். அனுசரணை வழங்கியவர்களைத் தவிர வேறொரு குருவியையும் தெரியாது என்று கற்பூரத்தில் அடித்துச் சத்தியம் பண்ணாத குறையாக பயபக்தியுடன் சொன்னேன். அனேகமாக அந்தப் பதில்தான் சாதகமாக அமைந்திருக்க வேண்டும். இரண்டு கிழமைக்குள் விசா கையில் கிடைத்துவிட்டது.

கையில் லண்டன் விசா குத்திய பாஸ்போட்டுடன் டுப்ளிகேசன் வீதியி லிருந்து காலி வீதிவரை நடந்தபோது எனக்குக் காற்றில் மிதந்து செல்வதுபோல் இருந்தது. சந்திர மண்டலத்தில் முதன் முதலில் காலடி பதித்த ஆம்ஸ்ரோங் கூட அங்கு மிதந்து திரிந்ததாக சின்னவயதில் எங்கோ வாசித்தபோது சந்தோச மிகுதியால்தான் அவர் மிதந்திருப்பார் என பலநாட்களாக நான் எண்ணிக் கொண்டது ஏனோ அப்போது என் நினைவுக்கு வந்தது. எனது பதினெட்டு வயதில் முதலாவது கதை பத்திரிகையில் வெளிவந்தபோதும் இப்படித்தான் ஒரு

தடவை ஆம்ஸ்ரோங்காக மாறியிருந்தேன்.

ஒருவாரகால பயண ஆயத்தங்களின் பின்னர் ஒரு வழியாக விமானமேறி லண்டனை வந்தடைந்து விட்டேன். கீத்றோ விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரி யிடம் பாஸ்போட்டை நீட்டியபோது அடுத்த தத்து காத்திருந்தது. இங்கும் அதிகாரியாக ஒரு நரசிம்மராவ்தான் இருந்தார். அவர் சிரித்து பத்துப் பதினைந்து வருடங்களாகியிருக்கும்போல்தோன்றியது. லண்டனுக்கு எதற்கு வந்ததாகவும் எங்கு தங்கியிருக்கப் போவதாகவும் அவர் வினவியதை கஷ்டப்பட்டு விளங்கிக் கொண்டேன். லண்டனுக்கு என்ன புண் ணாக்கு வாங்கவோ வந்திருப்பேன்? மூக்கு முட்ட வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு கைப்பைக்குள் தயாராக வைத்திருந்த அனுசரணைக் கடிதத்தின் நகல் பிரதியை நீட்டினேன். மளமளவென்று வாசித்து விட்டு என்னை ஏறிட்டுப் பார்த்தார். கோட்சூட்டுடன் சுமாராகத் தான் நின்றிருந்தாலும் என்னையே அறியாது எனக்குள் ஒரு பதட்டம் தொற்றிக்கொண்டது. இதயம் வேறு படக் படக் என்று தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது. எவ்வளவு காலம் தங்கி யிருக்கப் போகிறீர்கள்? என்று கேட்டார். 'ஜஸ் ட்ரு வீக்ஸ்' என்றவாறே றிட்டேன் ரிக்கெட்டை சமர்ப்பித்தேன். 'ஓ.கே' என்று கூறியவாறே பாஸ்போட்டில் திகதியை குத்தி பொத்தென்று என்முன் போட்டுவிட்டு "நெக்ஸ்ட் பிளீஸ்" என்ற போதுதான் எனக்கு இதயம் 'நோமலாக' அடிக்க ஆரம்பித்தது.

குகைபோல் நீண்டுசென்ற 'எக்ஸிட்' வழியே புகுந்து வெளியே வந்தபோது எனது பெயரை கடதாசி மட்டையில் எழுதித் தாங்கியவாறே அனுசரணையாளர்கள் காத்து நின்றார்கள். தொலைபேசியில் கதைத்துப் பழகியவர்களை முதன் முதலாக நேரில் சந்தித்தேன். கந்தசஷ்டி விரதம் இருந்து விட்டு வந்ததைப் போன்ற தோற்றங் கொண்ட என்னை தூரத்தில் வரும்போதே தான் ஊகித்துக் கொண்டதாக, தொலை பேசியில் என்னுடன் 'அண்ணா, அண்ணா' எனக் கதைக்கும் அந்த இளைஞன் கரன் சொன்னாள், நான் எதிர்பார்த்ததை விட இன்னும் இளமையுடன் காட்சியளித்த கரன் கூடவே நின்ற, என்னைப்போல் நடுத்தர வயது கனவானைக் காட்டி "இவர் தான் எங்கடை சங்கத் தலைவர் மிஸ்டர் நாதன் என்னுடைய அங்கிள்" என்றான். "ஆனால் ஒரு துர் அதிஷ்டம் பாருங்கோ. எனக்கு மகள் ஒருதரும் இல்லை. ஒரு மகன் மட்டும் தான்" என்றார் மிஸ்டர் நாதன். மூவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

இப்போது சபையிலும் சிரிப்பொலி கேட்கிறது. அதே சங்கத் தலைவர் மிஸ்டர் நாதன்தான் தனது உரையின் இறுதியில் ஏதோ நகைச்சுவையாகச் சொல்லி யிருப்பார் போலும்.

"அடுத்த வருட எமது நிகழ்வில் மீண்டும் சந்திப்போம். அதுவரை உங்கள் அனைவரிடமிருந்தும் விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்!" என் றவாறே அவர் என்னருகே வந்தமர "இத்துடன், அழைப்பிதழில் குறிப்பிட்ட படியே சரியாக எழுமணிக்கு இந்நிகழ்வினை நிறைவு செய்து கொள்கின்றோம்" என விழாவிற்கு தலைமை வகித்த 'அறிஞர்' கூறிய பின்னர்தான் சனங்கள் கலையத் தொடங்கினார்கள்.

மேடையில் இருந்து இறங்கிக் கொண்டி ருந்தபோது சபை முன் வீற்றிருந்த சிலர் என்னை நோக்கி வந்து கொண்டிருந் தார்கள். புலம்பெயர்ந்து இங்கு வந்த நம்நாட்டு எழுத்தாளர்கள், ஊடகவி யலாளர்கள், நான் முன்னர் பணிபுரிந்த நிறுவனத்து நண்பர்கள், கல்லூரியில் என்னுடன் படித்தவர்கள், எங்களூரவர் கள் எனப் பல ரகத்தினராய் அவர்கள் இருந்தார்கள். "உங்கடை பேட்டி தீபம் தொலைக்காட்சியிலை நேற்றுப் பார்த்தம். அப்பதான் தெரிஞ்சுது நீங்கள் இங்கை

வந்திருக்கிற சங்கதி" என்று கையைக் குலுக்கியவாறே நாட்டு நிலவரங்கள், இலக்கியப் புதினங்கள் என பத்தையும் பலதையும் கதைத்துக்கொண்டு நின்றார்கள்.

அப்போதுதான் சற்றுத் தூரத்தில் ஒரு நடுத்தர வயதுத் தம்பதியினர் என்னை எதிர்பார்த்தபடி நிற்பது தெரிந்தது. என் உறவினர்களாகவோ அல்லது நண்பர் களாகவோ அவர்களை இனங்காண முடியாதிருந்தது. அதிலும் அசப்பிலே பார்த்தால் அந்த நாள் நவரச நடிகர் முத்துராமனைப்போல் காட்சியளித்த அந்த கனவானை இதற்கு முன்னர் ஒரு போதும் நான் சந்தித்திருக்கவில்லை. ஆனால் தமிழ் கலாசாரத்தையே மொத்த மாகக் குத்தகைக்கெடுத்தாற் போல் காட்சி தந்த அந்தப் பெண்மணியை, அவளின் அந்தக் கண்களை எங்கோ, எப்போதோ அருகில் வைத்துப் பார்த்ததைப் போன்ற ஒரு பிரமை. நண்பர்களிடம் 'எக்சியூஸ் மீ' கேட்டவாறே அத் தம்பதியினரை நோக்கிச் செல்கிறேன். அவர்களும் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

முதலில் அந்தப் பெண்மணிதான் கதைக்க ஆரம்பித்தாள்.

"என்ன ஆரெண்டு இன்னும் கண்டு பிடிக்கேல்லைப் போலை கிடக்கு?"

"எனக்கோ தர்மசங்கடமாகி விட்டது. கொழும்பில் சில கல்யாண வைபவங்களில் இப்படித்தான் சில்லெடுப்புகள் வருவ துண்டு. ஒரு தடவை ஒன்றுவிட்ட தங்கையிடமே குறிப்பெடுக்க முடியாது வசமாக வாங்கிக் கட்டிக் கொண்டதும் ஞாபகத்திற்கு வந்தது. லண்டனில் அப்படியான உறவுமுறையில் அக்கா, தங்கைகள் எவருமே எனக்கில்லையே? அவர்களைத் தெரிந்த மாதிரி நடித்து பின்னர் தெரிந்து கொள்வதா...... அல்லது யாரென்று இன்னமும் அடை யாளங் காணமுடிய வில்லை என்று சரணாகதியடைவதா?

"சந்திச்சுக் கனகாலம் தானே... நேற்று தீபத்திலை பார்த்ததாலை உங்களை எனக்குத் தெரியுது. உரிமையோடை கதைக்க முடியுது. ஆனால் இருபத்தைஞ்சு வருசத்துக்குப் பிறகு சந்திக்கைக்குள்ளை திடீரென்று கண்டு பிடிக்கேலாது தானே......"

இந்த நாடே ஒரு வியப்பு... அதற்குள் இப்படியும் இன்னொரு வியப்பா? எனக்கோ தலை சுற்றிக்கொண்டு வந்தது.

"நான் பரமேஸ். இவர் என்னோட கணவர் பரந்தாமன்"

"ஓ! பரமேஸ்" என உச்சஸ்தாயியில் சொல்ல வந்தாலும் பக்கத்தில் பரந்தாமன் நின்றதால் அடக்கியே வாசித்தேன். "பரமேஸ்... எவ்வளவு காலத்துக்குப் பிறகு? நீங்கள் யூ.எஸ்.ஏயிலை எண்டெல்லா கேள்விப்பட்டனான்."

"கலியாணம் முடிச்ச கையோட, ஆரம்பத்திலை ஒரு ஐந்து வருஷம் அங்கை யிருந்தம். இப்ப இங்க லண்டனிலை செற்றில்டவுனாகி பதினெட்டு வருஷங் களாகுது"



பேதையாய், பெதும்பையாய் பள்ளி நாட்களில் என்னுடன் பழகிய பரமேசை இத்தனை நீண்டகால இடைவெளியின் பின் ஒரு பேரிளம் பெண்ணாய் இந்த அந்நிய மண்ணில் அதுவும் இப்படியான ஒரு இலக்கிய நிகழ்வில் வைத்துச் சந்திப்பே னென்று ஒரு கணமேனும் நான் எண்ணி யிருந்ததில்லை!

எங்களூர் பள்ளிக் கூடத்தில் அரிவரி யிலிருந்து ஏழாம் வகுப்புவரை ஏழு வருடங்கள் தொடர்ச்சியாக என்னுடன் படித்து வந்தவள்தான் இந்தப் பரமேஸ். வகுப்பில் முன்வாங்கில் இருப்பது மட்டு மல்லாது எப்பொழுதும் அவள் முதலாம் பிள்ளையாக வந்ததாகவே எனக்கு ஞாபகம். ஆறாம் வகுப்பிலாகத்தான் இருக்க வேண்டும். ஒரு தடவை பரமேசை விட நான் கூடுதலாகப் புள்ளிகள் பெற்று முன்னணியில் திகழ்ந்தேன். மூத்ததம்பி வாத்தியார் கூட 'இந்தத் தடவை பரமேஸ் அவுட் போலை கிடக்கு' என்று சொல்லி வாய் மூடுவதற்குள் பாழாய்ப்போன சங்கீத பாடத்தின் புள்ளிகள் வந்து நிலைமையைத் தலைகீழாக்கியது. சங்கீத பாடத்திற்கு என்னை விட பரமேசுக்கு முப்பது புள்ளிகள் கூட இருந்ததில் இரண்டு புள்ளிகள் வித்தி யாசத்தில் அவள் முதலாம்பிள்ளையானாள்.

அப்படியாக... படிப்பில் என்றுமே என்னால் வெல்லப்படாத, என் பால்ய சிநேகிதி இத்தனை ஆண்டுகள் கடந்த நிலையிலும்... பவித்திரமான அந்த அன்பி னைப் பேணிக் கொண்டு......!

"நேற்று ரெலிவிஷனிலை உங்கடை பேட்டி போகக்குள்ளை உண்மையிலை பெருமையாக இருந்தது. என்னோடை ஏழெட்டு வருஷங்கள் ஒன்றாகப் படித்த, பழகின ஒருதற்றை பேட்டி.. எனக்கு முதன் முதலா கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது. எங்கடை பள்ளிக்கூடத்தைப் பற்றி நீ சொல்லேக்குள்ளை கொஞ்ச நேரம் அந்தக்காலத்துக்கே போய்வர முடிஞ்சுது. அந்தப் பள்ளிக்கூடம், பெரிய தம்பி வாத்தியார், மூத்ததம்பி வாத்தியார், நாகபூசணி ரீச்சர், ஆறுமுகப்பா கடை... ஓ என்ன அற்புதமான வாழ்க்கை அது? அதை றெக்கோட் பண்ணி வைச்சு இவருக்கும், இரண்டு டோட்டேசுக்கும்... எல்லாரும் வேலையாலை வந்த பிறகு போட்டுக் காட்டினன். பேட்டியின்ரை முடிவிலை இந்த விழா நடக்கிற விபரங்களையும் சொன்னதாலை எப்பிடியும் உங்களை சந்திக்க வேணுமெண்டு விடாப்பிடியா நிண்டு இவரையும் இழுத்துக் கொண்டு வந்தன்!" படபட வென்று பரமேஸ் சொல்லிக்கொண்டு போனாள்.

"எங்கை தங்கியிருக்கிறீங்க?" முதன் முறையாகப் பரந்தாமன் வாய் திறந்தார்.

"எனக்கு ஸ்பொன்சர் பண்ணின தம்பி யோடை... மிடில் செக்சிலை..." என்றேன் தூரத்தில் நின்ற கரனைக் காட்டியவாறே.

"நல்லதாப் போச்சுது. நாங்கள் ரூட்டிங் கிலைதான் இருக்கிறம். நீங்கள் எப்ப திரும்ப பிளைட்" பரந்தாமன்தான் கேட்டுக் கொண்டிருந்தார்.

"வாற சனிக்கிழமை"

"அதுக்கிடையிலை எங்கடை வீட்டுக்கு ஒருக்கால் விசிட் பண்ண வேணும். இவை யளின்ரை அட்றஸ்சை ஒருக்கால் கேட்டு நோட் பண்ணுங்கோ அப்பா" என்றாள் பரமேஸ்.

அந்த நேரம் பார்த்து கையில் கனதியான ஏதோ பொருட்களுடன் அவசர அவசரமாக என்னருகே வந்த கரன் "போவோமா அண்ணா' என்று கேட் டான். பரமேசையும் பரந்தாமனையும் அறிமுகப்படுத்தி வைத்தேன். பரஸ்பரம் 'ஹலோ' சொல்லிக் கொண்டனர். மறக்காது கரனின் விசிட்டிங்காட்டைப் பெற்றுக் கொண்டு பரந்தாமனும் பரமேசும் விடைபெற்றுச் சென்றார்கள்.

மூன்றாவது நாள் விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுதில் தொலைபேசியில் என்னை யாரோ அழைப்பதாகக் கூறிய வாறே கரன் என்னிடம் கையடக்கத் தொலைபேசியைத் தந்தான். மறுமுனையில் தொங்கிக் கொண்டு பரமேஸ் நின்றாள்.

"இண்டைக்கு உங்களுக்கு லஞ் குடுக்கலாமெண்டு இருக்கிறம். இன்னும் ஷாப்பா வண் அவரிலை உங்களை 'பிக்கப்' பண்ண இவர் அங்கை வருவார். றெடியா இருங்கோ"

"என்ன இது திடீரென்று"

"இண்டைக்குத்தான் இவருக்கு லஞ் ரைமிலை கொஞ்சம் அஜெஸ்ட் பண்ணக் கூடியதாய் இருக்குமாம். காலையிலையே வந்தீங்கள் எண்டால் இங்கை நிண்டுட்டு அப்பிடியே லஞ் எடுத்துட்டு ஆறுதலா ஆவ்ர நூன் மிடில்செக்சுக்குப் போகலாம் என்ன?"

"ஓ.கே." என நான் சொன்னதும் சொல்லாததுமாக இருந்த வேளையில் தொலைபேசியைத் துண்டித்துக் கொண் டாள் பரமேஸ்.

கரனிடம் விடயத்தைக் கூறி ஒரு மணித்தியாலத்தில் தயாராக நின்றேன். குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு நிமிடமும் பிந்தாமல் பரந்தாமனின் வாகனம் வாசலில் வந்து நின்றது. வாகனத்தில் ஏறி முன் சீற்றில் அவர் அருகே அமர்ந்து சீற் பெல்ட்டை மாட்டிய பின்பே பயணம் தொடர்ந்தது. இலண்டனில் வாகனத்தில் ஏறியதும் மூச்சுவிட மறந்தாலும் பெல்ட்டை கட்ட மறக்கக்கூடாது. பெல்ட் மாட்டுவதற்குக் கூட தனியாகப் பயிற்சி எடுக்க வேண்டும் போல... நிதானத்துடன் அதைக்கற்க வேண்டும். வந்த முதல் இரு நாட்கள் பெரிதும் சிரமப்பட்டு இப்போ பெல்ட்டை மாட்ட நன்றாகப் பழக்கப்பட்டுக் கொண் டேன்.

ரூட்டிங் செல்ல சரியா வண் அவர் ஆகும். M4 ஹைவேய்ஸ் சாலை போய் A 205 றூட்டை எடுத்தமெண்டால் சிம்பிளா போயிடலாம்" என்றவாறே வாகனத்தை ஆர்முடுக்கிச் செலுத்திக் கொண்டிருந்தார் பரந்தாமன். நம்நாட்டு விமான நிலைய நெடுஞ்சாலை போல் வீதிகள் விசால மாகவும் நீண்டும் கிடந்தன.

நவீன கடைத்தொகுதிகள், பெற்றோல் நிரப்பு நிலையங்கள் என நம்மவர்கள் 'தும்படிக்கும்' இடங்கள் யாவும் மிக வேகமாக பின்னோக்கிச் சென்று கொண்டி ருந்தன.

எங்களூர் பாடசாலையில் ஏழாம் வகுப்புவரை படித்த பின்னர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி ரவுணில் உள்ள ஆண்கள் கல்லூரிக்கு நானும் பெண்கள் கல்லூரிக்கு பரமேசும் சென்றுவிட்டோம். எல்லோரும் வியக்கும் படியாக அட்வான்ஸ் லெவலில் முதன் முறையிலேயே நல்ல றிசல்ற் எடுத்து பரமேஸ் பட்டப்படிப்பிற்காக பல்கலைக் கழகம் சென்ற பின்பு அட்வான்ஸ் லெவலில் மூன்று முறையும் மட்டையடித்து விட்டு பணிபுரிவதற்காக நான் கொழும்பு வந்தடைந்தேன். சில வருடங்களின் பின், ஆடிக் கலவரத்தை அண்டிய நாட்களில் பட்டப்படிப்பை முடித்த பரமேஸ் அயல்கிராமத்தைச் சேர்ந்த ஒரு சட்டத் தரணியைத் திருமணம் செய்து அமெரிக்கா சென்று விட்டதாக யாரோ சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

"உங்கட டோட்டர்ஸ் மறி பண்ணி விட்டார்களா?" மௌனத்தை கலைத்த வாறே பரந்தாமனிடம் வினவினேன்.

"மூத்தவ முடிச்சிட்டா. சின்னவவுக்கு இன்னும் சில நாட்களிலை நடக்க இருக்கு" லாவகமாக ஸ்ரியறிங்கைச் சுழற்றியவாறே அவர் கூறினார்.

ஸ்ரூடன்ஸ் விசாவில் லண்டனுக்கு வந்திருக்கும் எங்களூர் 'பொடியனாக' அல்லது இங்கு உயர்பதவி வகிக்கும் உறவுக்கார பையனாக பார்த்து மகளுக்கு மணமுடித்து வைத்திருப்பார்கள் போலும். இங்கு வந்து சேர்ந்த எமது தேசத்து இளைஞர்கள் பகல் இரவு பாராது எவ்வளவு கஷ்ரப்படுகிறார்கள். கரன் வீட்டில் இருக்கும் ராஜன், கோபு என்ற இரு இளைஞர்களும் தினமும் நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்கள் மட்டுமே தூக்கம் கொள்வார்கள். அகால வேளைகளில் வீட்டுக்கு வரும்போது

'தும்படிச்சுப்போட்டு' வாறம் என்பார்கள். அதன் அர்த்தம் விளங்காது நான் புருவங் களை உயர்த்தியபோதுதான் 'வெவ்வேறு இடங்களில் தொடர்ச்சியாகப் பகுதிநேர வேலைகள் புரிவதுதான் தும்படிக்கிறது என்பது' என வியாக்கியானம் சொன் னார்கள்.

"இப்ப சிலோனிலை நிலவரங்கள் சரியானமோசம்என்ன?" வாகனவானொலி யில் ஏதோ ஒரு அலைவரிசையைப் பிடிப் பதற்கு முயற்சித்தவாறே பரந்தாமன் என்னிடம் வினவினார்.

"என்னென்ன நடக்கப் போகுதோ எண்ட பயப்பிராந்தியிலைதான் எல்லாரும் சீவிக்கிறம்"

"நீங்கள் ஏன் லண்டனிலை இப்படியே நிற்பதற்கு முயற்சிக்கக் கூடாது?" சுற்று வட்ட மொன்றில் வாகனத்தைத் திருப்பி யவாறே, திடீரென ஆங்கிலத்தில் கேட்டார் பரந்தாமன்.

அவரது கேள்வியில் விக்கித்தேன். நான் பதில் கூற முன்னரே தனது உரையாடலைத் தொடர்ந்து கொண்டிருந்தார்...

"இப்பிடியே நிக்கிறது ஸ்பொன் சேஸுக்குபிரச்சினைஎண்டால்,உங்களுக்கு மல்டி விசாதானே தந்திருப்பினம். இப்ப போயிட்டு ஏதாவது காரணத்தைச் சொல்லி இரண்டொரு மாதத்திலை திரும்பவும் லண்டனுக்கு வாருங்கோ. பிறகு நாட்டு நிலவரத்தைக் காட்டி அப்பிடியே இங்கை நில்லுங்கோ. அஸ் ஏ லோயர் பிறகு வாற சிக்கல்களுக்கு வேணுமெண்டால் நான் உங்களுக்கு கெல்ப் பண்ணுறன்"

வாகனத்தில் இப்போ ஒரே நிசப்தம்

ரம்மியமான இந்தத் தேசம். அமைதியான பதற்றமற்ற சூழல். எல்லா வற்றையும் விட பாதுகாப்புக்கு நூற்றுக்கு நூறுவீத உத்தர வாதம். வந்து இறங்கிய கணத்திலிருந்தே லண்டன் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஏற்கனவே சந்தித்திருந்த உறவினர் ஒருவர் வாயிலாக தற்காலிக தொழில்வாய்ப்பு ஒன்றிற்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. இப்போது மீளவும் நான் இங்கு வருவதற்கும் தொடர்ந்து தங்குவதற்கும் தான் உதவுவதாக பரந்தாமனின் உறுதி மொழி வேறு. தானாகவே வந்து கொண்டி ருக்கும் இந்தப் பொன்னான வாய்ப்புக்களை நழுவவிட்டு விட்டால்......

"என்ன கனக்க யோசிக்கிறீங்கள்?"

"எல்லாம் என்ரை வயதைப் பற்றித் தான்"

"அப்பிடி என்ன வயது? பரமேசின்டை வயதுதான் உங்களுக்குமெண்டால் இப்ப இது ஒரு பெரிய வயதோ? அறுபது வயதாக்கள்கூட உழைக்கிறதுக்கெண்டு இஞ்சை அடிச்சு விழுந்துகொண்டு வரைக் குள்ளை... ரேக் யுவர் ஒன் டைம். திங் இற் ஓவர் அன்ட் லெட் மீ நோ... இண்டைக்கு போறதுக்கிடையிலை உங்கடை முடிவைச் சொல்லுங்களேன்."

பெரிய பூங்கா ஒன்றினைத் தாண்டி வாகனம் சென்று கொண்டிருந்தது.

'இதுதான் கியூ சார்டின். லண்டனிலை இருக்கிற ஒரு பெரிய தாவரவியல் பூங்கா... எங்கட நாட்டு பேராதனை மாதிரி" பரந்தாமன் சொல்லிக் கொண்டே வந்தார்.

ஆடிக் கலவரத்தை ஒட்டி வந்தவர்கள் தான் இப்போதிங்கு வீடும் வாகனமுமாக வசதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள். அப்போது எனக்குக் கிடைக்காத வாய்ப்பு கால் நூற்றாண்டு கடந்து இப்போது கிடைத்திருக்கிறது. பரந்தாமன் கூறுவது போலவே இச்சந்தர்ப்பத்தினை வாழ்வின் ஓர் திருப்பு முனையாக ஏன் நான் கொள்ளக்கூடாது?

வாகனத்தின் வானொலியில் இப்போது ஆங்கிலப் பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது. என்னையே ஆகர்ஷிக்கும் வகையில்.

நெடுஞ்சாலையிலிருந்து விலகி விளம் பரப் பலகை ஒன்றினை கோணலாகத் தாங்கி நின்ற வீதியொன்றின் வழியாக வாகனம் இப்போது சென்று கொண்டி ருந்தது.

‘எங்கடை வீடு கிட்டிவிட்டது’ என்று பரந்தாமன் கூறிய ஐந்து நிமிடங்களில், விளையாட்டு பில்டிங் புளொக்குகளில் கட்டி அடுக்கி வைத்தால்போல் அமைந் திருந்த ஒரே மாதிரியான வீடுகளில் மூலை வீடு ஒன்றின் முன் வாகனம் வந்து நின்றது. சீற்றோடு பிணைத்திருந்த பெல்ட்டை விடுவித்து வாகனத்தை விட்டு இறங்கியபோது வாசலில் வரவேற்கு மாப்போல் பரமேஸ் நின்று கொண்டி ருந்தாள். அவளது கையில் பிறீவ்கேஸ் ஒன்றிருந்தது.

வாசல்வரை என்னுடன் வந்த பரந்தாமன் “பரமேஸ் உங்கடை பிரண்ட் இப்ப எனக்கும் நல்ல பிரண்டாகீட்டார்” என்று கூறியவாறே பரமேசின் கையில் இருந்த பிறீவ்கேசை வாங்கிக் கொண்டார். “அக்ஸுவலி கீ இஸ் வெரி சொப்ட் பேசன். எல்லாரோடையுமே ஒத்துப்போகக் கூடியவர்” என்று பரமேஸ் கூறவே மூவரும் சிரித்தோம்.

“நீங்கள் உள்ளை போய் கதைச்சுக் கொண்டு இருங்கோ. ரூ அவஸ்சிலை நான் வந்திடுவேன்” என்று என்னைப் பார்த்துக் கூறிவிட்டு பரமேசுக்கு கையசைத்தவாறே சென்று மீண்டும் வாகனத்தில் ஏறினார் பரந்தாமன்.

வாகனம் புறப்பட்டதும் வீட்டினுள் நுழைந்தோம். இங்கு நான் சென்று விசிட் பண்ணிய வீடுகள் எல்லாவற்றையும் விட இந்த வீட்டின் உள் அமைப்பு சற்று வித்தியாசமாக இருந்தது. கீழ் மாடியில் பெரிய வரவேற்பறையும் இறுதியில் ஓடை போல் சென்று அதில் சமையலறையும் அதனருகே மூலையில் ஓர் சிறிய அறையும் இருக்க மற்றைய அறைகளெல்லாம் மேல் மாடியிலேயே அமைந்திருந்தன.

வரவேற்பறையின் மூலையை ஆக்கிர மித்துக்கொண்டு குறுக்காக ஷோகேஸ் ஒன்று இருந்தது. பள்ளிக் கூடம் போகிற வயதுப் பருவத்துச் சிறுமிகள் இருவர் சிரித்துக் கொண்டிருக்கபின்னால் அவர்கள் தோள்களில் கை வைத்தவாறே பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முந்திய பரமேசும் பரந்தாமனும் வாசலைப் பார்த்த வாறே இருக்கும் பெரிய படமொன்றும் சில விருதுக் கேடயங்களுமாய் ஷோகேசின் மேல்தட்டு நிறைந்திருந்தது. தொங்கும் கேட்டின் துணி காற்றில் அசையும் போது ஆளை மிஞ்சிய உயரத்தில் ஒரு குளிர் சாதனப் பெட்டி மேல்தட்டில் ஆப்பிள் பழங்களுடன் சமையலறையிலிருந்து எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

“லண்டனுக்கு வந்ததிலை இருந்து இங்கைதான் இருக்கிறம். வந்த புதுசிலை கடன்பட்டு இந்த வீட்டை வாங்கினம். முழுக்காசும் கட்டி முடிச்சு இன்னும் ஒரு வருஷம் கூட ஆகேல்லை” என்னெதிரே இருந்த சோபாவில் வந்தமர்ந்தவாறே

**“சிலவற்றைக்**
**சொல்லாமலிருக்கிறது தான் சிறப்பு.**
**ஆனால் உனக்கு நான் எதையும்**
**மறைக்க விரும்பேல்லை...**
**எல்லாமே அடிப் படையிலை உள்ள**
**பிரச்சினைதான். அந்தப் பொடியனுக்கு**
**ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது.**
**இங்கத்தைய வாழ்க்கை முறைகள்**
**பழக்கப்படாதது. பிரியாவுக்கு தமிழே**
**தெரியாது. அவள் வளர்ந்த முறை**
**சிலோன் பொடியன்ரை கொள்கைகள்**
**கோட்பாடுகளுக்கு ஒத்து வரேல்லை.**
**நான் எண்டால்**
**அந்தப் பொடியனையும் குறை**
**சொல்லமாட்டன்.**
**பிரியாவிலும் குற்றஞ்**
**சொல்லமாட்டன்.**
**சொல்லப்போனால் தமிழினி ஒரு**
**வெள்ளைக்கு வாழ்க்கப்பட்டதுகூட**
**நல்லதுக்குத்தான் எண்டு**
**நாங்கள் இப்ப நினைக்கிறம்”**

பரமேஸ் கூறினாள். விழாவிலன்று பார்த்ததை விட பரமேஸ் இன்று முற்றிலும் வித்தியாசமாக காட்சியளித்தாள். நெற்றிப் பொட்டைத் தவிர உடையலங்காரம் எல்லாமே ஐரோப்பியமயப்பட்டிருந்தது.

என்னுடைய மனைவி, பிள்ளைகள் பெயர் மற்றும் விபரங்களை பரமேஸ் ஒன்றுமே விடாது கேட்டறிந்து கொண்டாள். என் மனைவி சாந்தி, ரவுணில் கல்லூரியில் படித்த காலங்களில் அறிமுகம் இருந்ததாகவும் தன்னைவிட அவள் ஜூனியராகஇருந்தாலும்நட்புடன்பழகியது இன்னும் தனக்கு ஞாபகத்தில் இருப்பதாகவும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“எங்களோடை படிச்ச காஞ்சனா, சாவித்திரி, பாரதி மற்றது உன்ரை பெஸ்ட் பிரண்ட் ரவிச்சந்திரன் எல்லாரும் எப்பிடி இருக்கினம்?”

“காஞ்சனாவை யெண்டால் ஊரிலை இரண்டு வருசத்துக்கு முந்தி ஆசுப்பத்திரியிலை ஒரு நாள் சந்திச்சுக் கதைச்சன். நேசாக இருக்கிறாள். இரண்டு மகள் மாரையும் மெடிசினுக்கு என்ர பண்ண வைச்சிருக்கிறாள். மற்றவையளைப் பற்றி அவ்வளவு விபரங்கள் தெரியேல்லை.” என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போது மூலையில் இருந்த அறையிலிருந்து அரைத்தூக்கத்தில் இருந்து எழுந்து வந்தது போல மூன்று வயது மதிக்கத்தக்க வெள்ளைக்காரச் சிறுமி ஒருத்தி கையில் ஏதோ விளையாட்டுப் பொம்மையை இழுத்தவாறே வந்து பரமேசின் மடியில் முகம் புதைத்தாள்.

“அன்பே! நீ நித்திரையை விட்டு எழுந்து விட்டாயா?” என ஆங்கிலத்தில் கேட்டவாறே அக்குழந்தையை முத்தமிட்டாள் பரமேஸ்.

“யாரும் அடுத்தவீட்டு குழந்தையாக இருக்கலாம்” என்று நான் நினைத்துக் கொண்டிருந்தபோது இது என்ரை செல்லப் பேத்தி. மூத்தவளின்ரை மகள்” என்றாள் பரமேஸ்.

எனக்கு மூச்சு ஒரு கணம் எட்ட மறுத்தது. சின்ன வயதில் கிணற்றடியில் அம்மா எனக்கு முழுகவார்க்கும் போது இப்படித்தான் சிலசமயங்களில் மூச்சு எட்ட மறுப்பதுண்டு.

குஷன் கூடியதில் நான் அமர்ந்திருந்த சோபா என்னையே விழுங்கி விடும்போல் இருந்தது. அதில் இருக்கவே பிடிபடாது திணறிக்கொண்டிருந்தேன்.

“ஏன் உந்த சோபாவிலை இருக்கிறது அன்கொம்பட்ட பிள்ளா இருக்குதா?”

“இல்லை, இல்லை, இப்ப ஒ.கே.” என்றவாறே எழுந்து மீண்டும் ஒரு தடவை அமர்ந்து என்னை நான் சுதாகரித்துக் கொண்ட பின்னர் பரமேஸ் தொடர்ந்தாள்...

மூத்தவள் மறி பண்ணினது லண்டனைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு வெள்ளைக்கார போயைத்தான். இரண்டு பேரும் கேம்பிறிச்சிலை ஒண்டா வேக் பண்ணின இடத்திலை சந்தித்துப் பழகீட்டினம். லிவிங்ருகெதரா இருக்கப் போறதா வீட்டைவிட்டு மகள் வெளிக்கிட்டா. ஒருமாதிரி அட்வைஸ் பண்ணி சிம்பிளா வெடிங்கை முடிச்சு வைச்சம். இப்ப எங்களோடைதான் இருக்கினம். இரண்டு பேரும் காலையிலை வேளையோடையே வேலைக்குப் போய் விடுவினம். இனி அவை வருமட்டிலும் பேத்தி என்னோடைதான்”

முகம் புதைத்திருந்த அந்தக் குழந்தை இப்போ தாவி ஏறி பரமேசின் மடியில் குந்திக்கொண்டது.

“மம்மீ...” நிலவிய கணநேர நிசப்தத்தை குலைத்தவாறே மேல்மாடியிலிருந்து பெண் குரல் ஒன்று ஒலித்தது.

“எல்லாம் தயார் நீ கீழே வரலாம்” சோபாவில் இருந்தவாறே ஆங்கிலத்தில் கத்தினாள் பரமேஸ்.

“அது சின்னவள். கொம்பியூட்டர் பேம் ஒண்டிலை புறோகிறாமரா இருக்கிறா. நல்ல வேலை. கை நிறையச் சம்பளம். கொஞ்ச நேரத்திலை றாண்ஸ்போர்ட் வரும் பிக்கப் பண்ணிக்கொண்டு போக”

**“அங்கு தமிழனைப் பூண்டோடு அழித்தாலும் அவன் புதுப்புதுப் பயிர்களாகத் தளிர்த்து முளைத்துக் கொண்டேயிருப்பான். ஆனால் இங்கு முளைக்கும் பயிர்கள் எல்லாமே தமிழனின் அடையாளங்களைத் தொலைத்து நிற்கின்றனவே…?”**

---

*பரமேஸ் சொல்லிக் கொண்டி ருக்கும் போது ‘டக்டக்’ என்று பலகைப்படிகள் எழுப்பிய தாளலயத்துடன் கீழே வந்து சேர்ந்தாள் சின்னவள்.*

*“கிளாட் ரு மீட் யூ அங்கிள்” என்றாள் என்னை நோக்கியவாறே.*

*மடந்தைப் பருவத்தில் பரமேஸ் எப்படி இருந்தாளோ அதையே உரிச்சு வைச்சிருந்தாள் சின்னவளும். அன்று பரமேஸ் பாவாடை சட்டை போட்டி ருப்பாள். இன்று இவள் ஜீன்ஸ் அணிந்தி ருக்கிறாள். அதுமட்டும்தான் வித்தியாசம்.*

*“கிளாட் ரூ மீட் யூ” என்று சின்ன வளைப் பார்த்து கூறிவிட்டு “உங்கடை பிள்ளையளுக்கு என்ன பெயர் எண்டு இன்னும் சொல்லேல்லையே…” என்றேன் பரமேசைப் பார்த்தவாறே.*

*“மூத்தவவுக்கு தமிழினி எண்டும் இவ வுக்கு தமிழ்ப்பிரியா எண்டும் வைச்சம்” என்ற பரமேஸ், “மத்தியானத்துக்கு கொண்டு செல்லும் சாப்பாடும் காலைச் சாப்பாடும் தயாராக மேசைமீது இருக்கிறது” என்று தமிழ்ப்பிரியாவிடம் ஆங்கிலத்தில் கூறினாள்.*

*“ஏன் பரமேஸ் பிள்ளைகளோடு நீங்கள் தமிழில் கதைப்ப தில்லையா?” என்று நான் அங்கலாய்த்தேன்.*

*“தமிழினிக்கு ஓரளவு தமிழ் தெரியும். கதைக்கேலாட்டிலும் விளங்கிப் பதில் சொல்வாள். இவவுக்கு அடிச்சுப் போட்டா லும் தமிழ் வராது”*

*“ஏன் நீங்கள் சொல்லிக் குடுத்திருக் கலாமே…”*

*“எவ்வளவோ முயற்சித்தம். பாவம் இவர் எத்தனையோ தனிப்பட்ட வகுப்புகள் எல்லாம் ஒழுங்குபடுத்தியும் குடுத்துப் பார்த்தார். வை ஷுட் வி லேண் ரமில் எண்டு கேட்டுதுகள். அப்பிடியே தொப்பெண்டு விட்டுட்டம்”*

*வெளியில் வாகன ஹோண் சத்தம் கேட்கவே, “பிரியா உங்கள் வாகனம் வந்து விட்டது” என்று பரமேஸ் உள் நோக்கி குரல் கொடுத்தாள். “கமிங் கமிங்” என்றவாறே உள்ளிருந்து ஓடிவந்த தமிழ்ப்பிரியா எங்களைப் பார்த்து ‘பாய்’ சொல்லிவிட்டு பரமேசின் மடியிலிருந்து அக்குழந்தையையும் முத்தமிட்டுவிட்டு வெளியே சென்றுகொண்டிருந்தாள்.*

*“தமிழ்ப்பிரியாவுக்காவது தமிழ்ப் பொடியனாகப் பார்த்துச் செய்து வை யுங்கோ” என்று நான் ஆதங்கப்பட்ட போது பரமேசின் முகம் உடனேயே வதங்கியது. மேலே கதைக்க முடியாது நின்றாள். முதன் முதலாகப் பெருமூச்சு ஒன்று உதிர்த்தவாறே பின்னர் மெல்ல மெல்ல சொல்லத் தொடங்கினாள்…*

*“பிரியாவுக்கு இரண்டு வருஷத்துக்கு முன்னம் ஒரு யாழ்ப்பாணத்துப் பொடிய னாகப் பார்த்துத்தான் புறப்போஸ் பண்ணி செய்து வைச்சம். ஒரு மாதம் கூட ஒண்டா இருந்திருக்க மாட்டினம். டிவோஸ் அளவுக்கு பிரச்சினை முத்தியிட்டுது.”*

*“அப்பிடி… என்ன…”*

*“சிலவற்றைக் சொல்லாமலிருக்கிறது தான் சிறப்பு. ஆனால் உனக்கு நான் எதையும் மறைக்க விரும்பேல்லை… எல்லாமே அடிப் படையிலை உள்ள பிரச்சினைதான். அந்தப் பொடியனுக்கு ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. இங்கத்தைய வாழ்க்கை முறைகள் பழக்கப்படாதது. பிரியாவுக்கு தமிழே தெரியாது. அவள் வளர்ந்த முறை சிலோன் பொடியன்ரை கொள்கைகள்*

கோட்பாடுகளுக்கு ஒத்து வரேல்லை. நான் எண்டால் அந்தப் பொடியனையும் குறை சொல்லமாட்டன். பிரியாவிலும் குற்றஞ் சொல்லமாட்டன். சொல்லப்போனால் தமிழினி ஒரு வெள்ளைக்கு வாழ்க்கப் பட்டதுகூட நல்லதுக்குத்தான் எண்டு நாங்கள் இப்ப நினைக்கிறம்"

எனக்கு நெஞ்சில் ஏதோ வந்து அடைப்பது போல் இருந்தது. ஏதாவது குடித்தால் நல்லதுபோல் தோன்றியது.

"பரமேஸ் குடிக்கக் கொஞ்சம் தண்ணி எடுக்கலாமோ?"

"சொறி மை டியர்… வீடு தேடி வந்த உங்களுக்கு குடிக்கக் கூட ஒண்டும் தராமல் என்ரை பிரச்சினையளைச் சொல்லி போறடிச்சுக் கொண்டு இருக்கிறன். கூலா முதலிலை ஏதாவது குடிக்கத் தரட்டுமா?"

"வேண்டாம் பரமேஸ் முதலிலை குடிக்கக் கொஞ்சம் தண்ணி தாங்கோ"

ஒரு மிடறு தண்ணீர் தொண்டைக்குள் இறங்கிய பின்புதான் மீண்டும் எனக்கு கதைக்கக் கூடிய தெம்பு வந்தது.

"பிரியாவுக்கு இன்னும் கொஞ்ச நாளையிலை வெடிங் எண்டு பரந்தாமன் சொன்னாரே…" அப்பாவித்தனமாய் நான் கேட்டபோது;

"அதைப் பற்றித் தான் அடுத்ததாகச் சொல்ல இருந்தன். இப்ப பிரியாவுக்கு ஒரு போய் பிரண்ட் இருக்கிறார். பொடியன்ரை பூர்விகம் போச்சுக்கல். அருமையான போய். இப்ப பிரியாவோடைதான் வேக் பண்ணுறார். இன்னும் இரண்டொரு மாதங்களிலை பழைய பிரச்சினை எல்லாம் முடிஞ்சு டிவோஸ் கிடைச்சிடும். அதுக்குப் பிறகு சிம்பிளா மறேஜை செய்து வைக்கலாம் எண்டிருக்கிறம்."

அந்தப் பிஞ்சுக் குழந்தை இப்போ என்னை ஏறிட்டுப் பார்க்க ஆரம்பித்தது.

"கமோன் பேபி… கம் கியர்" என்றவாறே கைகள் இரண்டினையும் நீட்டினேன். எங்களூர் கோயில் கட்டுத்தேர் போல் மெல்ல மெல்ல நகர்ந்து என்னை நோக்கி வந்தது. அருகில் வந்ததும் என் கண்களை உற்றுப்பார்த்து பூ மலர்ந்தாற் போல் புன்னகை சிந்திற்று. தூக்கி என்னருகே அமர வைத்துக் கொண்டேன்.

"ஓகே இனி நாங்கள் பிறேக் பாஸ்ட் எடுத்துட்டு நான் மெல்ல மெல்ல குக்கிங்கைத் தொடங்குகிறன். உங்களுக்கெண்டு ஸ்பெஷலாக நேற்று சிலோன் றைஸ் வாங்கி வைச்சிருக்கிறம். யாழ்ப்பாணத்து சனங்களின்ரை கடை ஒண்டு இஞ்சை இருக்கு… பருத்தித்துறை வடையிலிருந்து பச்சையரிசி மாப்பக்கெட் வரைக்கும் எல்லாம் எடுக்கலாம்" என்று கூறியவாறே பம்பரமாகச் சுழல ஆரம்பித்தாள் பரமேஸ்.

காலைச்சாப்பாடு முடிந்ததும் தேநீர் நிரம்பிய கப்பைக் கையில் தந்தவாறே "நீங்கள் ரீவியை பார்த்துக் கொண்டு இருங்கோ. இன்னும் கொஞ்ச நேரத்திலை இவரும் வந்திடுவார். கதைச்சுக் கொண்டு இருக்கலாம்" என்றவாறே தொலைக் காட்சியை ஒளிரவைத்து விட்டு பரமேஸ் சமையலறைக்குள் சங்கமமானாள்.

தீபம் தொலைக்காட்சியில் நேர்காணல் ஒன்று போய்க் கொண்டிருந்தது. இலங் கையில் இருந்து இங்கு வந்திருக்கும் கட்டடக்கலைஞர் ஒருவர் தனது கருத்துக் களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டிருந்தார். கீத்றோ விமான நிலையத்தில் துளைத்து எடுத்திருப்பார்கள் போலும். கட்டடக் கலைஞர் மிகவும் களைத்துப் போனவர் போல் காட்சி யளித்தார்.

இந்திய சனலொன்றில் புகுந்தேன். கொடியது எது, இனியது எது, புதியது எது என தனது சந்தேகங்களுக்கு ஔவை யாரிடம் முருகன் விளக்கங்கேட்டுக் கொண் டிருந்தார்.

இன்னொரு சனலிற்குத் தாவினேன். பட்டிமன்றம் ஒன்று போய்க்கொண்டி ருந்தது. இந்த நிலையில் மனம் அதையே நாடிற்று. இரு பக்கத்தினரும் தமது

நியாயங்களை அடுக்கிக் கொண்டிருந்தார்கள். தலைமை வகித்தவர் அங்காலும் இங்காலும் பாடிக் கொண்டிருந்தார். இப்போது என்மனதிலும் ஒரு பட்டி மன்றம் களைகட்டிற்று. லண்டனுக்கு புலம் பெயர்வதில் உள்ள சாதகபாதகங்களை மனம் பட்டியலிட்டது. தீர்ப்புச் சொல்ல வேண்டியதுதான் பாக்கி.

நிலத்தில் குவிக்கப்பட்ட விளையாட்டுப் பொம்மைகளுடன் குழந்தை போராடிக் கொண்டிருந்தது. இடையிடையே நிமிர்ந்து பார்த்து என் இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தது.

சனலை மீண்டும் தீபத்திற்கு மாற்றினேன்.

"இலங்கையில் வன்னியில் நடைபெற்ற வான் தாக்கு தலில் இருபதிற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பலி" எனும் தலைப்புச் செய்தியுடன் செய்திகள் ஆரம்பமாயின.

செய்திகேட்டு பரமேசும் ஒரு தடவை வரவேற்பறை வந்து அதனைச் செவிமடுத்தாள்.

"தமிழினைப் பூண்டோடை அழிக்கிற தெண்டுதான் நிக்கிறாங்கள்" என்றவாறே என்பதிலையும் எதிர்பார்க்காமல் உள் நுழைந்து விட்டாள்.

"அங்கு தமிழனைப் பூண்டோடு அழித்தாலும் அவன் புதுப்புதுப் பயிர்களாகத் தளிர்த்து முளைத்துக் கொண்டேயிருப்பான். ஆனால் இங்கு முளைக்கும் பயிர்கள் எல்லாமே தமிழனின் அடையாளங்களைத் தொலைத்து நிற்கின்றனவே...?" என்று நான் நினைத்துக் கொண்டிருந்தபோது வாசல் கதவைத் திறந்தவாறே பரந்தாமன் உள்ளே நுழைந்தார்.

"ஓ! எங்கடை குட்டித்தேவதை உங்களோடையும் ஒட்டீட்டா போலை கிடக்கு" என்று சொல்லியவாறே அருகில் வந்து அக் குழந்தையைத் தூக்கி அதன் வயிற்றில் முத்தமிட்டார். கூச்சம் தாளாது அது கெக்கட்டம் விட்டுச் சிரித்தது!

மனதில் நிகழ்ந்த பட்டி மன்றத்திற்கு தீர்ப்புக்கு ஏதுவாய் என்னுள் சில கேள்விகள் எழுந்தன.

குட்டி தேவதை என்று இந்த அப்பாவி மனிதர்கள் கொண்டாடும் இக்குழந்தை, புலம்பெயர்ந்து இங்கு வந்தவர்களின் எதிர்கால எச்சங்கள் உள்வாங்கப் போகும் மொழி, கலாசார மற்றும் விழுமியங்களின் ஒரு குறியீடல்லவா?

இன்னமும் எங்களூரிலும் அதன் பசுமையான நினைவுகளிலும் ஏங்கும் பரமேஸ் என்னைத் தேடிவந்து சந்தித்தது... தொலைந்து கொண்டிருக்கும் தம் முகவரியினைத் தேடும் ஒரு எத்தனிப்பிலா?

"சமையல் தயார்...இனிச் சாப்பிடலாம்..." வியர்க்க விறுவிறுக்க சமையலறையிலிருந்து வெளிப்பட்ட பரமேஸ், ஆங்கிலத்தில் கூறி இருவரையும் அழைத்தாள்.

விருந்து பரிமாற அவர்கள் உற்சாகமாகச் செயற்பட்டார்கள். இருந்த இடத்திலிருந்து எழுந்து வோஷ்றூம் சென்று முகத்தை கழுவிவிட்டு வந்து சாப்பாட்டு மேசைமுன் அமர்கின்றேன்.

பரமேஸ் உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

குழந்தையை தூக்கியவாறே மேல்மாடி சென்றிருக்கும் பரந்தாமனை நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். உடன் உணவு அருந்த மட்டுமல்ல... லண்டனுக்குத் திரும்பி வருவதா இல்லையா என்பது பற்றி எனது மனதில் உருவாகியுள்ள உறுதியான முடிவையும் கூற...!

என்னை விழுங்கி விடாது தக்கவைத்துக் கொண்டிருக்கும் குஷன்களேதுமற்ற இந்த சாப்பாட்டு மேசைக் கதிரை இப்போ எனக்கு மிகவும் சௌகரியமாகத் தெரிகிறது.

❍

# சுங்கான் தர்சனம்



இ. இராஜேஸ்கண்ணன்

18

அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா ஜனன நூற்றாண்டு விழாச் சிறுகதைப் போட்டி 2007இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை

சுந்தரியார் வல்லை முனியப்பர் முன்னே மும்முறை தலையில் குட்டி, தோப்புக்கரணம் போட்டுத் திரும்பவும் 'விசில்' ஊதப்படவும் சரியாக இருந்தது.

'விசில்' ஊதப்பட்டால் அவர்களின் வாகனத் தொடரணி செல்வதற்காக பாதையில் செல்ல ஏனையவர்களுக்குத் தடை என்பதுதான் அர்த்தம்.

வீதியில் வந்தவர்கள் ஒரு புறத்துத் தரவையில் இறக்கிவிடப் படுகின்றார்கள்.

"ச்சே.... இதிலை இறங்காமல் போயிருந்தால் இதைத் தாண்டிப் போயிருப்பன் போலை.... இனி எவ்வளவு நேரமோ சந்நிதியானே...."

என்று அலுத்துக் கொண்டார் சுந்தரியார்.

'என்ன சுந்தரம் ஐயா நீங்களும் பாதை மறிப்பிலை மாட்டுப் பட்டுப் போனியள் போலை.... இது துலையாத நித்திய சீவியமாப்போச்சு மனிசனுக்கு'

என்று கூறிக்கொண்டே தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு முனியப்பர் கோயில் அருகில் அடர்த்தியாக வளர்ந்த பற்றை மறைப்புத்தேடி ஒரு நடுத்தர வயதுக்காரன் அவதியுடன் போய் மறைந்தான்.

"பொயிலைச் சுந்தரி" என்றால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரபலமான சந்தைகளில் இப்போதும் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. சுன்னாகம், கல்வியங்காடு, கொடிகாமம், அச்சுவேலி, பருத்தித்துறைச் சந்தைகளையெல்லாம் ஒரு காலத்தில் ஒரு கலக்குக் கலக்கிய மனிசன் அவர்.

பொயிலைச் சுந்தரி என பொதுவாக எல்லோரும் அறிந்தபோதிலும் தருணங்கள் தோறும் அவர் எடுக்கும் பாத்திரவேறுபாடுகளில் பொதிந்திருந்த உள்நோக்கங்கள் கருதி "தரகுச் சுந்தரி", "சீட்டுச்சுந்தரி", "கண்டுச் சுந்தரி" என்று வெவ்வேறு பெயர்களால் சந்தைகளில் அழைக்கப்பட்டு வந்தவர்.

இந்தப் பெயர்கள் எல்லாம் காரணப் பெயர்கள்தான். சுன்னாகம் சந்தைதான் அவரின் பிரதான மையமாக இருந்தது. அங்கே சிறிய

(ஞானம் 100, செப்டெம்பர் 2008)

அளவிலான ஒரு வெற்றிலைக் கடை உரிமையாளர் அவர். ஊர் வெற்றிலை, கொழும்பு வெற்றிலை, நாறல் பாக்கு, கைச்சீவல், மெஷின் சீவல், சுண்ணாம்பு, பாணிப் புகையிலை, பாணி போடாத புகையிலை என்று சுந்தரியாரின் 'அயிற்றங்கள்' பல.

எத்தனை வகையறாக்கள் அவரிடம் இருந்தாலும் அவரின் புகையிலைக்கு இருந்த கிராக்கி வேறு யாருக்கும் இல்லாதது.

சுந்தரியாரின் புகையிலைக்காக வென்றே தேடிவந்து வாங்கும் வாடிக்கைகாரர் பலர். மொத்தமாகவும், சில்லறையாகவும், துண்டுகளாயும் தரப்படுத்தித் தேவைக் கேற்ப வியாபாரம் செய்யும் நுட்பம் அவருக் கேயுரிய தனித் திறன்.

புகையிலைகளைத் தரம்பிரித்து வெவ் வேறு சாக்குகளிலே அடியும் தலைப்பும் வெளியே தெரியவிட்டு பவ்வியமாக சுற்றி வைத்துக் காரம் போகாது பாதுகாத்து வைத்துக் கொள்வார்.

அது வெறுமனே சந்தையில் புகையிலை விற்றதால் வந்தபெயர் என்று நினைத்து விடக் கூடாது. அந்த நாளில் கேகாலை, கம்பளை போன்ற இடங்களில் கடைகளை வைத்திருந்த முதலாளிமார் புகையிலை வாங்குவற்கு லொறிகளுடன் வரும்போது சுந்தரி காட்டில் நல்ல மழைபெய்யும். தனது மனைவியைச் சந்தை வியாபாரத்தைப் பார்க்க விட்டுவிட்டு அவர்களுடன் லொறி யிலே ஏறி காரைநகர் தொடக்கம் பருத்தித் துறை வரை ஒரு சுற்றுச் சுற்றி வருவார்.

பருத்தித்துறைப் பக்கம் போனால் செல்வச் சந்நிதி முருகன் கோயில் வாசலுக்கு எப்படியாவது லொறிக்காரனைத் திருப்பி ஓடி ஓடி என்றாலும் சந்நிதியானை ஒரு வட்டம் அடித்துத்தான் திரும்புவார்.

திரும்பி வரும்போது மடிகனக்கும். கையில் உள்ள தோல்பையுள் கட்டாயம் ஒரு 'போத்தலும்', பருத்தித்துறை வடையும் இருக்கும். இன்னொரு உரப்பையில் 'கடைசார்' புகையிலை எடுத்துவருவார். தனக்குச் சுருட்டுச் சுற்றுவதற்காக.

அது மட்டுமல்ல புகையிலை நடவு காலம் வந்தாலும் சுந்தரியாருக்கு நல்ல கிராக்கி. நல்ல இன புகையிலை நாற்றுக்காக வடமராட்சியின் பொலிகண்டி, தொண்ட மானாறு, அத்தாய் பகுதிகளுக்குச் சென்று புகையிலை நாற்றுக் களைத் 'தட்டோடு தீர்த்து' தன்னுடைய தரகு இலாபத்தையும் பெற்றுக் கொண்டு வருவார். அப்படி அவசரமாகப் போகும் போது கூட சந்நிதி முருகனுக்கு ஒரு 'சலாம்' போடத்தானும் மறந்ததில்லை. அவ்வளவு பற்று சந்நிதி யானில்.



மாரிகாலம் தொடங்கிவிட்டால் இரண் டொரு நாட்களுக்குச் சுந்தரியாரை சந்தையில் காணக் கிடையாது. வீட்டில் 'பதியம் வைத்த' கமுகு நாற்றுக்கள் தேசிக்கன்றுகளை ஒரு 'லாண்ட்மாஸ்ரர்' பிடித்து ஏற்றிக் கொண்டு கரவெட்டிப் பகுதியில் இருந்த, புகையிலை வியாபாரத் தொடர்பால் கிடைத்த நண்பர் ஒருவர் வீட்டுக்கு வெள்ளிக்கிழமை நாள் பார்த்துப் புறப்படுவார். அந்த நண்பர் சுந்தரியாரின் கன்றுகளுக்கு ஒரு குட்டி முகவராக

**"நேரத்துக்குப் போய்ச்சேர்ந்தால் ஒருக்கால் சந்நிதிக்குப் போய்ச் சூரன் பார்க்கலாம் எண்டு நினைச்சன்.**
**இனிச் சரிவராது போலை" ஒருவர் வேதனைப்பட்டார்**
**"எங்களுக்குச் சூரனுமில்லை கந்தனுமில்லை**
**இந்தத் தரித்திரவாழ்க்கைதான்."**
**பதிலுக்கு இன்னொருவர் ஏதோ அர்த்தம் பொதித்துக் கூறுவதான தோரணையுடன். "கலியாண நாள் நேரங்கள்கூட இவையின்ரை வாகனங்கள் எப்பபோகும் – எந்த நேரம் பாதை மறிப்பினம் எண்ட நேரமெல்லாம் பார்த்துத்தான் எடுக்க வேணும் எண்ட நிலை வந்திட்டுது"**
**நீளமாக வேறொருவர்.**

இருந்தது மட்டுமல்ல, சந்நிதி முருகனைத் தரிசிப்பதற்கு துணையாகவும் விளங்கினார். சந்நிதியானைத் தரிசித்து வந்து நண்பரின் வீட்டில் நல்லதொரு படையல் சாப்பாடும் முடித்துஆரச்சோரஇருந்துவிட்டுபொழுது சாயும் போதுதான் புறப்பட்டுச் செல்வார்.

கொடுக்கல் வாங்கல்களில் சுந்தரி யாரின் நேர்மையை எல்லா மட்டத்து வியாபாரிகளும் அறிந்து வைத்திருந்தனர். சிறு வியாபாரிகள் தமக்குள் போடும் ஒரு ஏலச் சீட்டுக்கு, ஒரு பத்துப்பதினைந்து வருடங்களாக சுந்தரியார்தான் 'தாய்ச்சி'. ஒவ்வொருவருக்கும் விழுந்த சீட்டுத் தொகையைத் திரட்டிக் கொடுக்கும் போதும்,

"சந்நிதியானே.... இவனுக்கு இந்த முதல் நல்ல படியா பெருகவேணும்"

என்று சந்நிதி முருகனை பகிரங்கமாக வேண்டிக் கொண்டே கொடுப்பார்.

இப்போது சுந்தரியார் கொஞ்சம் தளர்ந்து போனார். வெற்றிலைக்கடையைத் தவிர மேலதிகமான வேலைகளைச் செய்ய அவரது உடல் மட்டுமல்ல, நாட்டுச் சூழ் நிலையும் பொருந்தி அமையவில்லை.

சந்நிதி முருகனை அடிக்கடி போய்த் தரிசிக்கக்கூட சந்தர்ப்பங்கள் வாய்ப்ப தில்லை என்பது அவரின் நித்திய கவலை யாகிவிட்டது.

இவ்வளவு காலத்திலும் ஒரு வருடம்கூட தவறவிடாது கந்தசஷ்டி விரதம் இருந்து வருபவர் அவர். கந்தசஷ்டி காலத்தில் ஆறு நாட்களும் தவறாது முருக தரிசனம் செய்த காலங்கள் பல. ஆகக்குறைந்தது சூரன்போர் அன்றிலாவது, என்ன வேலை இருந்தாலும் ஒரு பக்கமாகப் போட்டுவிட்டு சென்று வருவார்.

கடந்த வருடம் நாட்டு நெருக்கு வாரங்களால் அவரால் சந்நிதி முருகனின் சூரன் போரைக் கூடக் காணமுடியவில்லை என்ற கவலை இப்போதும் அவரின் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது.

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு திரும்பிய அந்த நடுத்தர வயதுக்காரன்

"சுந்தரம் ஐயா..... சந்நிதிக்குப் போறியள் போலை. இண்டைக்குச் சூரன் போராக்கும். இப்ப இங்காலை கரவெட்டிப்பக்கம் கண்டு கள் கொண்டு வாறதில்லைப் போலை...."

தனக்குத் தெரியாத ஒருவன் தன்னை இப்படியெல்லாம் விசாரணை செய்வது சுந்தரியாருக்கு எரிச்சலாக இருந்தாலும், வல்லை வெளியில் தனது பழைய வியா பாரத்தை விசாரிக்க ஒரு உறவு இருந்ததை எண்ணும்போது உள்ளூர மகிழ்ச்சி ஏற்பட்டது.

"வயசுவரவர கஷ்டம்தானே ராசா....இப்ப அதெல்லாம் விட்டாச்சு.... பிரச்சினையளும் மோசம். வழிதெருவிலை போய்வரேலாமல் கிடக்கு. ரண்டு வரியமாச்சு உந்த சந்நிதியா னெட்டை போய் கூட, இண்டைக்காய்ச்சும் போவமெண்டால்"

சந்தரியார் அலுத்துக் கொண்டார்.

"இல்லை ஐயா விட்டிடுவாங்கள்"

மனமறிந்த பதில்.

"எவ்வளவு நேரமப்பு மறிப்பினம்?"

"அது சொல்லேலாது அவங்கடை வாகனமெல்லாம் போய் முடியவேணும். சில நாளிலை பொழுதுபட்டு 'சட்டம்' போடுற நேரமும் வந்திடும். இண்டைக்கு சூரன் எண்டபடியால் விடுவினம் எண்டு நினைக்கிறன்"

என்று கூறிக்கொண்டே பின்னே வந்து தரவைக்குள் திரண்டிருந்த மோட்டார் சைக்கிள்காரர்களில் ஒருவனை பார்த்துச் சிரித்தவாறு நடந்தான் அவன்.

கதைக்கக் கிடைத்த ஒருதுணையும் நழுவிப் போனது.

இதற்கிடையில் தனியார் 'மினிபஸ்', லொறிகள் போக்குவரத்துச் சபை 'பஸ்கள்' என்று ஒன்றன்பின் ஒன்றாக வீதி ஓரத்தில் அடுக்கப்பட்ட வாகனங்கள். பயணிகள் பலர் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக ஏதேதோ கதைத்து நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் 'முனியப் பருக்கு' அருகே கச்சான் விற்பவர்களிடம் கச்சான் வாங்கி கொறித்துக் கொண்டி ருந்தனர். வேறு சிலர் 'பாதை மறிப்பு நேரம்' பார்த்தே நிறுத்திவைக்கப் பட்ட 'ஐஸ்கிறீம் வானில்' தமக்கு விரும்பியதை வாங்கிச் சுவைக்கின்றனர். அவர்களில் பலருக்குப் பசியும் எடுத்தி ருக்கலாம். சிலர் வெறும்வாயை மென்று கொண்டு இருந்தனர்.

"நேரத்துக்குப் போய்ச்சேர்ந்தால் ஒருக் கால் சந்நிதிக்குப் போய்ச் சூரன் பார்க்க லாம் எண்டு நினைச்சன். இனிச் சரிவராது போலை" ஒருவர் வேதனைப்பட்டார்

"எங்களுக்குச் சூரனுமில்லை கந்தனு மில்லை இந்தத் தரித்திரவாழ்க்கைதான்."

பதிலுக்கு இன்னொருவர் ஏதோ அர்த்தம் பொதித்துக் கூறுவதான தோர ணையுடன்.

"கலியாண நாள் நேரங்கள் கூட இவை யின்ரை வாகனங்கள் எப்பபோகும் - எந்த நேரம் பாதை மறிப்பினம் எண்ட நேர மெல்லாம் பார்த்துத்தான் எடுக்க வேணும் எண்ட நிலை வந்திட்டுது" நீளமாக வேறொ ருவர்.

சுந்தரியாருக்கு எரிச்சல் மனதில் குமுறிக் கொண்டிருந்தது. பின்னே அடிக் கடி திரும்பிப் பார்த்தவாறு இருந்தார். நிறுத்திவைக்கப்பட்ட வாகனங்கள் ஒரு நீண்ட புகையிரதமாக... அந்த வாகனங் களுக்கிடையே தோளில் காவடியுடன் ஒருவனும் அவனுடன் கூடிவந்த ஒரு கூட்டத் தினரும்.

"நேர்த்திக்கு காவடி எடுத்தவன்கூட காவல் நிற்கிறான். பாவம்... சந்நிதி யானே..." என்று தனக்குள் தானே நொந்து கொண்டார்.

அவரின் மனத்திரையில் தான்பார்த்த எத்தனையோ சூரன்போர்கள் வரிசையாக....

அடித்து ஊற்றிய மழை வெள்ளத்தினுள் ஆறுநாட்கள் 'மிளகு தண்ணீர்' குடித்து விரதமிருந்தவன்கூட எடுப்பாக நிமிர்ந்து நின்று ரசிக்குமாறு எத்தனை சூரன் போர்கள். தென்பகுதிகளிலிருந்து லொறி களில் வந்து குவியும் இளநீர் மலை மலையாக. மதர்த்து இனிப்பேறிய கரும்பு களின் குவியல்கள், எண்ணுக் கணக்கற்ற காவடிகள், கரகங்கள், கற்பூர வாசனை கலந்த புகை மழை நீரோடு கரைந்து உடலில் வழிய பக்திப் பரவசம் பொங்கும். 'அரோகரா' ஒலி விண்ணைப் பிளக்கும். பறை முழக்கங்கள், தவில் நாதஸ்வர கானங்கள் கோயிலின் மணிகளுடன் குழைந்து ஆர்பரிக்கும். நீள விரிந்திருக்கும் வல்லை வெளிப்பரப்பின் வகிர்ந்துவிட்ட உச்சியான வீதியில் எத்தனை தூக்குக் காவடிகள், துலாக் காவடிகள் வீதியில் அவசர அவசரமாக மக்களைச் சுமந்து செல்லும் 'தட்டிவான்கள்', லொறிகள் கசகச ஒலியெழுப்பும் பட்டுச்சேலைகள், வேட்டிகள்.

திரண்ட புயங்களில் சூரனைத் தாங்கி எறிந்து, ஏந்தி சூரனாட்டும் இளைஞர்களின்

'கோரஸ்' ஒலி. ஒவ்வொரு மாயத் தோற்றங்களின் போதும் சூரன் ஆடும் நளினமான ஆட்டம் தலை கொய்த பின்னர் விசிறப்படும் தீர்த்தநீர். சிறு பிள்ளைகளைத் தோளில் சுமந்து சூரன்காட்டும் அப்பாக்கள்.

பொழுதுபட்ட பின்னர் சுற்றுவீதியில் ஒளிரும் 'பெற்றோமக்ஸ்' விளக்குகள். அந்த ஒளியில் மணிக்கடைகள், தோசைக் கடைகள், பாய் பெட்டி பாத்திரக் கடைகள்.

திருமணம் செய்து முதன்முதல் மனைவியோடு வந்து, சூரன் போர் பார்த்து, மழையில் நனைந்து, கடையில் சுடச் சுடச் தோசை சாப்பிட்டு இரவு பத்து மணியாகியும் போக மனமில்லாமல் 'றலி சைக்கிளில்' மனைவியை ஏற்றிக்கொண்டு வல்லை வெளியில் தனிமையை சுவைத்தவாறு திரும்பிப்போன இனிய நினைவுகள் சுந்தரியாரின் மனதில் முகிழ்த்துக் கிளர்ந்தன.

அன்றைய வல்லை வெளியின் நிசப்த இருளில் கூட ஒரு சுகம். வளர்பிறைக் கால வல்லை வெளியின் காற்றில் நிலவை உரசிய ஒளிச் சிதறல்கள் பரவிவரும். எந்தவித கட்டுப்பாடும் இல்லாது சுதந்திரமாய் வீசிவரும் காற்று. இரு புறங்களிலும் விரிந்துகிடக்கும் கடல்நீர் தொடுவை. உயிர் நிறைக்கும் கூதலில் கொடுகிடும் மனம். சாமப் பொழுதுகூட சந்தோஷம் தந்து நின்ற நாளை எண்ணிப் பெருமூச்சு எறிந்து கொண்டார்.

"நேரம் அஞ்சரை ஆகுது.... இண்டைக்கு ஆறுமணிக்குத் தான் போலை விடப் போயினம்"

பின்னே நின்ற தனது மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்று முன்னே நிறுத்திக் கொண்டே கூறினார் ஒருவர்.

சுந்தரியாருக்கு மனம் பதைபதைத்தது.

"இவ்வளவு தூரம் வந்தும் சூரன்போர் பார்க்க ஏலாது போலை கிடக்கு. அஞ்சு மணிக்குச் சூரன் எண்டு 'பேப்பரிலை' கிடந்தது.... ஆறுமணியுமாகப் போகுது. சந்நிதியானே...."

என்று சொல்லிக் கொண்டு பனங்கூடலுக்கு மேலாக வடமேற்கு மூலையில் தொலைவில் தெரிந்த சந்நிதி முருகனின் தேர்முட்டிக் கூரையைப் பார்த்து ஒரு பெருமூச்செறிந்தார்.

நேரம் ஆறுமணி.... ஆறுபத்து, ஆறு பதினைந்து... என்று நிமிடங்களாய் செத்தொழிந்து கொண்டிருந்தது.

"சந்நிதியானே... இனி ஊரடங்குச் சட்டம் போடுற நேரம் வந்திடும். இந்த வரியமும் உன்ரை சூரன்போர் பார்க்க எனக்கு குடுப்பினை இல்லை. உதிலை கூப்பிடு தூரத்திலை இருக்கிற உன்னைப் பார்க்க.... எத்தினையை தாண்டவேண்டிக் கிடக்கு... அப்பனே அடுத்த வரியம் எண்டாலும் என்னைக் கூப்பிடு"

தலையில் கைகூப்பியபடி தேர்முட்டிக் கூரையைப் பார்த்து 'பழியை' முருகன் மீது போட்டுக் கொண்டு சைக்கிளைத் திருப்பினார் சுந்தரியார்.

நிறுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு வாகனங்களையும் தாண்டி அவரின் பழைய 'றலி' சைக்கிள் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறது.

மனைவி எதிர்பார்த்துக் காத்திருக்கும் சந்நிதியான் திருநிறு....?

அயல்வீட்டார் சொல்லிவிட்ட தீர்த்த நீர்....? வினாக்களாய் மனதில் மிதக்க,

காவடி ஏந்தி நேர்த்தி கழிக்கப் போனவர்கள் காத்துக் கொண்டே நிற்கிறார்கள். அவர்களைத் தாண்டிச் செல்லும்போது,

"முருகா... சந்நிதியானே...." என்று பெருமூச்செறிந்து வாய்விட்டு உரத்துக் கூறிக்கொண்டே தோளில் இருந்த சால்வைத் துண்டினால் தன் கடைக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

மனைவி எதற்காகவோ நேர்த்திவைத்து முடிந்து வைத்து கொடுத்துவிட்ட காசு இப்போதும் அவர் மடியில் பத்திரமாய் கிடந்தது.

❍

# கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2008 முடிவுகள்



## முதற்பரிசு - ரூபா 5000/-

| | | |
|---|---|---|
| ❍ தாய். மொழி | தீரன் ஆர். எம். நௌஸாத் | கல்முனை |

## இரண்டாம் பரிசு - ரூபா 3000/-

| | | |
|---|---|---|
| ❍ துகிலுரிப்பு | வதிரி. இ. இராஜேஸ்கண்ணன் | உடுப்பிட்டி |

## மூன்றாம் பரிசு - ரூபா 2000/-

| | | |
|---|---|---|
| ❍ காகக்குட்டி | ஹேமந்த் கருணாகரன் | கிளிநொச்சி |

## ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்

| | | |
|---|---|---|
| ❍ சூதகப்பாடு | கார்த்திகா பாலசுந்தரம் | கரவெட்டி |
| ❍ கவ்வாத்துக்களம் | மு. ஜெயசீலன் | பேராதனை |
| ❍ மணல்திட்டு | ச. அருளானந்தம் | திருகோணமலை |
| ❍ நான்கண்ணகியில்லை | பாலா சங்குப்பிள்ளை | ஹட்டன் |
| ❍ அசலும் நகலும் | கே. எஸ். சுதாகர், | அவுஸ்திரேலியா |
| ❍ பாப்பா புள்ள | சிவனு மனோகரன் | ஹட்டன் |
| ❍ அக்கரைகள் பச்சை | எச். எல். எம். நிசார் | மாவனல்லை |
| ❍ வாழ்வியல் | திருமதி கமலினி சிவநாதன் | மட்டக்களப்பு |
| ❍ இருண்ட வீட்டிற்கு | நெடுந்தீவு இரா. தர்மலிங்கம் | தெகிவளை. |

---

**நடுவர்கள்:** திருமதி பத்மா சோமகாந்தன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், திரு. மு. தயாபரன்

**(ஞானம் 102, நவம்பர் 2008)**

19

# தாய். மொழி.

## தீரன் ஆர்.எம்.நௌஸாத்





கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2008இல் முதற் பரிசு பெற்ற கதை

தாய்லாந்து...! கிழக்காசியாவில், பிரித்தானியப் படைகளால் ஒரு போதும் ஆளப் படாத ஒரேயொரு நாடு...! தலை நகரம் பாங்கொக்கிலிருந்து முன்னூறு கிலோ மீற்றர் தூரம், அதன் 'கூவன் கோவ்' மாநிலத்திற்கு பறந்து அல்லது விரைந்து வாருங்கள். உங்களை வரவேற்கிறது ஹொரங்க்லா'! இரவுக் களியாட்ட விடுதிகளின் மாநகரம்...! சூதாட்டக் கிடங்குகளின் சொர்க்க பூமி. பகலில் இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கி, இரவில் விழித்திருக்கும் மின்மினி நகரம்.

'ஹோரங்க்லா'வின் நெருக்கமான சீமெந்துக் கட்டிட மரங்களிடையே படு சுத்தமான கார்ப்பட் தெருக்களில் வழுக்கும் பன்னாட்டுக் கார்கள்... பாதாள ரயில் தொடர்... பளீரிடும் நியோன் விளக்குகளின் வர்ணஜால ஒளிவெள்ளத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கும் பந்தயத் திடல்கள்... பற்பல நட்சத்திரங்களை மார்பில் சூடிய ஹோட்டல்கள்... உல்லாசபுரிக்கான சிவப்புத் தெருக்கள்... இலட்சக்கணக்கில் மனிதர்கள்... மனிதர்கள்... மனிதர்களிடையே ஒருவனான நான், தாமோங்...! தாய்யீக்காரனல்லன். அசல் இலங்கைத் தமிழன். அரசரத்தினம் தாமோதரநாதன் என்ற நீளப் பெயர் இங்கு தாய்யி(லாந்து) மொழி உச்சரிப்பு வசதிக்காக "தாமோங்...!" அப்படித்தான் என்னை அழைக்கிறார்கள். ஊர் கோவில்பற்று. வயது முப்பது. புலம் பெயர்ந்து வந்த கதைகள் ஏராளமாக பின்னணியில் உள்ளன. ஆனால், அதல்ல நான் இப்போது சொல்ல வந்தது. இது தாய். மொழியின் கதை.

நீண்டுயர்ந்த தென்னைமரங்களை அற்பப்புற்களாகக் கருதிக் குனிந்து பார்க்கும் ஊசிக்கட்டிடங்களின் அடுக்குகளிடையே தனிக் கம்பீரமாக மூன்று ஏக்கர் பரப்பில் விரிந்திருக்கும் இரவுக்களியாட்டரங்கு 'சாயுங்'! ஆறாயிரத்து நூறு ஊழியர்கள் பணி செய்யும் இந்தக் களியாட்டரங்க விடுதியில் எனக்கு வேலை. என் வேலை சுலபமானதுதான். ஆனால் எப்போதும் அபாயம்

(ஞானம் 103, டிசம்பர் 2008)

அதன் பின்னணியில் ஒளிந்திருக்கும். 'சாயுங்' களியாட்டரங்க விடுதியின் ஸீ வலயக் கட்டிடத் தொகுதியில் உட்புற வாகனத் தரிப்பிடத்தில் நான் ஒரு சாதாரண காவல் சிப்பாய். இரப்பர் குண்டுகள் நிரப்பிய அதிநவீன துப்பாக்கியும், கறுப்புச் சீருடையும் தந்திருக்கிறார்கள். தீப்பெட்டி களை அடுக்கி வைத்தாற் போன்று பரந்து தரித்திருக்கும் வாகனத்தரிப்பிடத்தில் அவற்றை ஒழுங்குபடுத்தும் காவல் சிற்றூழி யர்களில் ஒருவன் நான். இரவு பத்துமணி தொடக்கம் காலை ஆறு மணிவரை வேலை.

பணத்தையும் வாழ்க்கையையும் சேர்த்தே பிடுங்கும் "சாயுங்"கின், ஸீ வலயமான சூதாட்டக் கிடங்கில் முதலீடு செய்ய வரும் மனிதர்கள்... தாய்யிகள்... அரபிகள்.. வெள்ளையர்கள்..ஆபிரிக்கர்கள்... விதம்விதமான மனிதர்கள்... "வர்ணங்கள் வேற்றுமைப்பட்டாலும் அதில் மானிடர் வேற்றுமையில்லை" என்று பாரதி பாடியது இந்த இடத்திற்கும் மிகப்பொருந்தும். தனி விமானத்தில் பறந்து வந்து சூதாடி, உடுத்தாடையும் இழந்து தம் தாய்நாட்டுக்கு சாயுங் தெருக்களில் பிச்சையெடுத்தபடியே திரும்பிச் சென்றோரும், அதே தெருக்களில் பிச்சையெடுத்து அதை வைத்துச் சூதாடி அதிர்ஸ்ட தேவதை முகம் பார்த்ததால் பண வெள்ளம் கொட்டித் தனி விமானத்தில் வேறு தாய்நாடு தேடிப் பறந்தவர்களும் இருக்கிறார்கள்...! இன்றைய உன் பணம் நாளை என் பணம் என்பது இங்கு எழுதப் படாத விதியாயிருக்கும்போது அபாயம் அதன் பின்னணியிலிருக்காதா என்ன...?

என்ன சொல்ல வந்தேன்... ஆம்...! நான் தாமோங்...! வாகனத் தரிப்பிடத்தில் காவல் புரிந்து கொண்டும், சூதாடிவிட்டு வெளிவரும் வாடிக்கையாளரின் வாக னத்தை முன்பின்னாக எடுக்க உதவுவ திலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். வெற்றியுடன் வருபவர்கள் என்னை நோக்கி சில 'பாத்'களை வீசிச் செல்வர். அவற்றைப் பொறுக்கிச் சட்டைப்பைக்குள் போடுவேன். தோற்றுவிட்டு வருவோர் வீசும் தாயிமொழித் தூஷணச் சொற்களை அப்படியே 'குவான்ஸோ' நதியில் வீசி விடுவேன். எட்டு மணித்தியால வேலை என்றாலும் வேண்டிய மட்டிலும் மேலதிக நேர வேலையும் கிடைக்கும். சாப்பாடும், தங்குமிட வசதியும் 320 பாத்களும் தருகி றார்கள். தாராளம்... வாகனத் தரிப்பிட அன்பளிப்புகள் வேறு... இந்த வேலைக்கு அவர்களின் தாயிமொழி ஓரளவு தெரிந் திருக்க வேண்டும். எனக்கு தாயி மொழி பேசப் புரியும். ஆயின் எனது சொந்தத் தாய்மொழி பேசத்தான் இங்கு யாருமிலர்.

ஆயிரத்து இருநூறு கார்கள் வரிசையிட்டு நிறுத்தியிருக்கும் அழகை ரசித்தபடி, போகும் வரும் வாகனங்களுக்கு

**நிலவறைச் சிறையில் பொறுப்பதி காரியாக இருப்பவன் சாவோங். சப்பை மூக்குடனும் கொடூரமான இடுங்கிய கண்களுடனும் இருப்பான். பொல்லாத குரூர மனத்தினன். குடித்தால், அடிப்பதற்கு யாராவது கட்டாயமாக வேண்டும்.! இன்னும் குடிக்கவில்லை போலும். நிதானமாக இருந்தான். கூண்டுக்குள் இன்று குற்றவாளிகள் யாருமிலர். வழமையாக இரண்டு மூன்று குற்றவாளிகளாவது இருப்பர். ஆனால், நேற்று இங்கு விஜயம் செய்த தலைமைப் பாதுகாப்பு அதிகாரியால் அனைவரும் பொலிஸிடம் ஒப்படைக் கப்பட்டு விட்டதால் அறை காலியாக விருந்தது. இப்படி இருப்பதும் ஒரு வகையில் ஆபத்து. ஏனெனில், வரும் போகும், பாதுகாப்புச் சிற்றூழியர்கள் எல்லோரும், குடித்துவிட்டு யாரையாவது அடிக்க வேண்டும் போலிருந்தாலும், இங்குதான் வருவார்கள்.**

உதவியாக சிற்சில சமிக்ஞைகள் காட்டிக் கொண்டிருந்தேன். கதவு திறந்து வெளிப் படும் பிரமுகர்களுக்கு தலை வணங்கி 'சாலானு' கூறி வழியனுப்பிக் கொண்டி ருந்தேன்.திடீரென அரங்கிலிருந்துவெளியே ஒரு தாயிப் பெண்மணியும், எனது மேலதி காரியான ஒரு பாதுகாப்பதிகாரியும் பரபரப் புடன் வருவது தெரிந்தது. அப்பெண் தாயி மொழியில் ஆத்திரத்தில் கிறீச்சிட்டுக் கத்திக்கொண்டே வந்தாள். மேலதிகாரி, ஒரு வாலிபனைப் பிடித்து இழுத்துக் கொண்டு கூடவே, வந்தான். நான் மேலதி காரியை நோக்கி ஓடிச் சென்றேன். என்ன கலவரமோ...?

நான் ஓடி அவர்களை நெருங்கியதும், மேலதிகாரி,"தாமோங்...!ஹாங்கூ.ஹொக்குந் ஜதாஸியோவ்...! ஜதாஸி...! குணங்குவ்... மாவோ...!" என்று கட்டளையிட்டான்.நான் சற்றும் தாமதியாது பிடித்துவரப்பட்ட அவ்வாலிபனை பின்கட்டாக மடக்கிப் பிடித்துக் கொண்டேன். அந்த வாலிபன் தாயிக்களைப் போலல்லாது கறுப்பு நிறத்தவனாக இருந்தான். தலையை மொட்டையடித்திருந்தான். பார்வைக்கு அப்பாவி ஆசாமி போலும், ஆனால், தாய்லாந்தின் பாதாளக் கிடங்குவாசிகள் போலும் இருந்தான். தாயிமொழியில் என்னவோ சொன்னான். சொன்னது விளங்கவில்லை. முகத்தில் அடி வாங்கியதில் உதடுகள் வெடித்து இரத்தம் கசிந்திருந்தது. அந்தப் பெண்மணி இன்னமும் உரக்க ஏதோ புகார் சொல்லிக் கத்திக் கொண்டிருந்தாள். என் மேலதிகாரி அவளது ஆத்திரத்தை உள்வாங்கி, வருத்தம் தெரிவித்து, சிரித்த முகத்துடன் கவனமாகக் கேட்டுக் கொண்டு அவளைச் சாந்தப்படுத்தினார்...

எனக்கு விளங்கியதிலிருந்து, இவ் வாலிபன் இப்பெண்மணியிடம் அதிக இலாபம்கிடைக்கும்அதிர்ஸ்டச்சக்கரத்தில் பலவந்தமாக முதலீடு செய்வித்து ஆயிரத் திருநூறு பாத்களைத் தோற்க வைத்த தாகவும், அதே சமயம் இதற்காக இருநூறு பாத்கள் கமிஷன் பெற்றுக் கொண்ட தாகவும் மேலும், தனது பெறுமதிவாய்ந்த தங்கக் கைக்கடிகாரம் ஒன்றைத் திருடி விட்டதாகவும் குற்றம் சாட்டியிருந்தாள். பணத்தைத் தோற்ற ஆத்திரத்தில் வாடிக்கை யாளர்கள் இப்படிக் குற்றம் சாட்டிச் சண்டைக்கு வருவது இங்கு வழக்கம் தான் என்றாலும், கைக்கடி காரத் திருட்டு நடந்ததில்லை. பாதுகாப் பதிகாரியும், அக்கைக் கடிகாரத்தை அவ்வாலிபனின் காற்சட்டைப் பையி லிருந்தே கைப்பற்றியிருந்தார்.

இக்குற்றத்திற்கு, இங்கு தண்டனை கொடூரமாக விருக்கும். பொலிஸில் ஒப்படைக்கு முன்னரே விடுதியின் உள் நிலவறையில் அடைத்து வைப்பார்கள். மணல் நிரப்பப்பட்ட பொலித்தீன் பைகளால் கடுமையாக அடிப்பார்கள். காயம் ஏதும் இல்லாமல் வலி உயிர் போகுமளவுக்கு இருக்கும். போதுமானளவு அடித்துவிட்டு மிகத் தாமதமாகவே பொலிஸாரை வரவழைப்பார்கள்.

அவ்வாலிபனைப் பார்க்கவே மிகவும் பரிதாபமாகவும், அதேசமயம் கோப மாகவும் இருந்தது. தாயிப்பெண்மணி அவனை இலேசாக மன்னிப்பதாயில்லை. எனவே, பாதுகாப்பதிகாரி அப்பெண்ணை மேலதிக விசாரணை அறைப்பக்கமாக அழைத்துச் செல்ல முடிவு செய்து, அவ் வாலிபனை என்னிடம் ஒப்படைத்தார்.

'யஜ்ஜிங்கூவ்... தாய்க்வ. சாவோங், ஸீஙான்...!' (இவனை நிலவறைச் சிறைப் பொறுப்பாளன் சாவோங்கிடம் ஒப்படை...!)

நான் அந்த வாலிபனை துப்பாக்கி முனையில் சற்றுப் பலவந்தமாக நிலச்சிறை யறைக்குத் தள்ளிச் சென்றேன்..., அவனை நடத்திக் கொண்டு வருவதில் ஒரு சிரமமுமிருக்க வில்லை. ஏற்கனவே இங்கு வந்த அனுபவம் உள்ளவனைப் போலத்தான் தோன்றியது. ஏனெனில், அவன் முன்னால் நடந்து கொண்டிருக்கும்போதே சந்து பொந்துகளில் தானாகவே திரும்பினான். மற்றது, போகும்போதே ஒரு தடவை

என்னைத் திரும்பிப் பார்க்காமலே, மெதுவாக

“நுமக்னா ஸதோஜ் பாத் செவுநீன்?” என்றான். (உனக்கு எழுபது பாத்கள் வேண்டுமா…?) இதன் கருத்து அவனைத் தப்ப வைப்பதற்குச் சம்மதா.

“ஜிமஞன் மஸாது மூய்யீ… லய்யீ…” (நான் மலம் சாப்பிடுவதில்லை) என்று அவனுக்குப் பிடரியில் ஓர் அறை கொடுத்தேன். பின், நிலவறைக்குள் நெட்டித் தள்ளி விட்டேன். வேகமாகத் தள்ளுப்பட்டுச் சென்று சுவரில் மோதி விழுந்தான்.

❖❖❖

நிலவறைச் சிறையில் பொறுப்பதிகாரியாக இருப்பவன் சாவோங். சப்பை மூக்குடனும் கொடூரமான இடுங்கிய கண்களுடனும் இருப்பான். பொல்லாத குரூர மனத்தினன். குடித்தால், அடிப்பதற்கு யாராவது கட்டாயமாக வேண்டும்.! இன்னும் குடிக்கவில்லை போலும். நிதானமாக இருந்தான். கூண்டுக்குள் இன்று குற்றவாளிகள் யாருமிலர். வழமையாக இரண்டு மூன்று குற்றவாளிகளாவது இருப்பர். ஆனால், நேற்று இங்கு விஜயம் செய்த தலைமைப் பாதுகாப்பு அதிகாரியால் அனைவரும் பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதால் அறை காலியாக விருந்தது. இப்படி இருப்பதும் ஒரு வகையில் ஆபத்து. ஏனெனில், வரும் போகும், பாதுகாப்புச் சிற்றூழியர்கள் எல்லோரும், குடித்துவிட்டு யாரையாவது அடிக்க வேண்டும் போலிருந்தாலும், இங்குதான் வருவார்கள். அல்லது இவன் சாவோங்கே போய் யாரையாவது கூட்டி வருவான். குடிப்பதற்கும், அடிப்பதற்கும் பங்காளியாக… சந்தர்ப்பத்தில் பல குற்றவாளிகள் இருந்தால்,அடிகள் பரவலாக எல்லோருக்கும் பகிரப்பட்டுவிடும். ஆனால், இவ்வாலிபனின் துரதிர்ஸ்டம்… இன்று இவன் மட்டும் தனியாக… சகல அடிகளையும் வாங்கியாக வேண்டும்.

பொறுப்பதிகாரி சாவோங் மகிழ்ச்சியுடன் எழுந்தான்… இரும்புக் கம்பிக் கூண்டுக் கதவை இழுத்துச் சாத்தினான். மோதி விழுந்த அந்த வாலிபன், விரைவாக ஓடிவந்து கம்பிக் கதவுகளைப் பிடித்துக்கொண்டு

‘ஞா… ஸொல்ங்கவு… சஜ்ஜி லாங்கூ… சஜ்ஜி லாங்கூ!” என்று கத்தினான்.

‘சஜ்ஜிலாங்கூ தாவோயிங்… பொலிஸ்லு நுஞ்சி கட்கு வாணங்கோவ்…’ இறுக்கமான முகத்துடன் சொல்லி விட்டு, சாவோங்கைப் பார்த்தேன். சாவோங் தன் கண்களை இடுக்கிக் கொண்டு.

‘நாஞ்சுக்கு சன்வியாவோ… தாமோங்…!’ என்று என்னிடம் கேட்டான். (பசியோடிருந்தேன். புதிய பட்சி கிடைத்திருக்கிறது தாமோங்.)

‘சோய்ங்… சாஜுு!” (அடித்துச் சாப்பிடு) என்று வெறுப்புடன் சொன்னேன்.

‘ஞா… சோல்வர்…! ஞா… சோல்வர்…!’ (நான் நிரபராதி… நான் நிரபராதி…) கூண்டுக்குள்ளிருந்து அந்த வாலிபன் கூப்பாடினான். அவனது கெஞ்சுதலுக்கும், கூப்பாடுகளுக்கும் செவி கொடாமல் சாவோங் கூண்டுக்குள் கைவிட்டு துப்பாக்கியால் அவனை ஓர் இடி இடித்தான்.

‘ஆ…!’ கதறித் துடித்தபடியே நிலத்தில் விழுந்தான் அவன். இதைப் பார்த்துக் கொண்டு நிற்க என்னால் முடியாது. எக்கேடாவது கெட்டுப் போகட்டும். இனி அவன் பாடு… சாவோங் பாடு… இப்படி எத்தனையோ கேஸ்கள் பார்த்தாயிற்றே… ‘ஜய்… சாவோங்…! நுய்ஞ்நாய் ஸல்மோவ்’ என்று சொல்லி விட்டு நடந்தேன்.

எனக்கு பசியெடுத்தது. வாகனத் தரிப்பிடத்தை விட்டு நீங்கி வந்ததால், பொருளாதார இழப்புகளும் இருந்தன. விரைவாக வந்து மறுபக்கத்திலுள்ள சிற்றூழியர்களின் உணவுக் கூடத்துள் நுழைந்தேன். பலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். எங்கும் பளீரென சுத்தம். காதுகளில் தாய்யின் இசைமேதை லாஜுுனின் புகழ்பெற்ற “தாயீ… தாயீ… ஸென்மஹோ… வொக்சஙீ…”

**என் சர்வாங்கமும் கூசி மயிர்க்கூச் செறிந்தது… இந்த மொழி..**
**தாய்யி மொழி அல்ல… சொந்தத் தாய்மொழி… எத்தனையோ வருடங்களின்**
**பின் காதுகளில் விழுந்த அந்த இன்பத் தமிழ் மொழி… தாய்மொழி… தமிழழுகை…!**
**தாய்மொழியின் அழுகை… வேதனையின் போது அடி உணர்விலிருந்து யாராலும்**
**தடுக்கவொண்ணாமல், பீறிட்டெழும் உண்மைமிக்க சுய மொழிப் புலம்பல்…!**
**யாரது…? அவனா அலறினான்…? அந்தக் குற்றவாளி வாலிபனா…? அல்லது**
**வேறு யாராவது தமிழனா…? மனம் படபடத்தது… கால்கள்**
**சற்றே நடுங்கின… மெதுவாக அடியெடுத்து வைத்து வர முயன்ற போது**
**மறுபடியும் அந்த அவலமான அழுகுரல்,**
**மன நிம்மதி வேண்டி மிகச் சத்தமிட்டு வாய்விட்டு அரற்றிக் கொண்டிருந்தது.**
**“என்ர அம்மோவ்…! என்ர கடவுளே…!**
**…ம்ம்ம்ம்…மாஆஆஆ. நோ…கு…து…!”**

*ஒலித்துக் கொண்டிருந்தது. உணவு அட்டையை இயந்திரத்தில் காட்டி இரண்டு தமிஸூம், கோலாவும் பெற்று வந்து ஓரமாக உட்கார்ந்தேன். சாப்பிடும் போது மனம் கோவில்பற்று புட்டுக்கும், தேங்காய்ச் சம்பலுக்கும் ஏங்கியது. விரைவில் சாப்பிட்டு துரிதமாக வாகனத்தரிப்பிடம் திரும்பினேன். நேரம் அதிகாலை நாலரை மணியாகி விட்டிருந்தது. அதிகமான வாகனங்கள் போய்விட்டிருந்தன. என் காவலரணில் போய் நின்று கொண்டேன்.*

*என்னவோ காரணமின்றி என் நினைவுகள் என் பிறந்தகமான கோயில் பற்று நோக்கி அலைந்தன… எத்துணை இன்பமான பூமி… சொர்ணமக்கா வளவின், முருங்கை மரங்களின் அடர்த்தி… ஆறுமுகத்தார் வாத்தியாரின் கத்தரி… வெண்டித் தோட்டங்கள்… திலீபனின் ரேடியோக்கடை… “அச்சம் என்பது மடமையடா… அஞ்சாமை திராவிடர் உடமையடா…” CN 114 இலக்க சபாரத்தினம் போஸ்ட் மாஸ்டரின் ‘பேஜோ’ கார்… (ஒரு அஞ்சடி தூரம் தள்ளி விடுறிரே… தாமுப்பெடியா…?) மாரியம்மன் கோவிலடி… சிதம்பர சக்கரம்… தேர்… சிற்பத் தூண்கள்… வாரத்துக்கொரு திருவிழா… காப்புக்கட்டு… விரதங்கள்… விசேஷங்கள்… ஊத்தப் பரஞ்சோதியின் தோசைக்கடை…*

*மாபெரிய ஆலமரத்தடியில் பஸ் தரிப்பிடம்… நிழற்குடையும், தண்ணீர்ப் பந்தலும், உபயம்: அமரர் நல்லதங்கம் மாணிக்கம் 1937. மரத்தடியில் வீமனின் திடீர் தோசைக்கடை… உடனடி உழுந்து வடை… ராஜியக்காவின் ஆலங்காய்ப் பணிகாரம் பச்சை ஈர்க்கிளில் கோர்த்து… ஒன்று ஐம்பது சதம்… முருகன் தியேட்டரில், புரட்சி நடிகர் எம்.ஜீ.ஆர் நடிக்கும், முகராசி… அதன் பாட்டுப்புத்தகங்கள்… வீரகேசரி…*

*உட்புற வீதியில், சரஸ்வதி அரச தமிழ்க் கலவன் பாடசாலை… கல்வியே கருந்தனம்…! உடையார்ப்போடி மாணிக்கம் சனசமூக மண்டபம்… முன்னால், கல்லுப்பிள்ளையார் உண்டியல்… நவம் மாஸ்டரின் முத்தமிழ் இலக்கியக் கழகம்… அளிக்கும், “வெளி நாட்டு மாப்பிள்ளை” நகைச்சுவை நாடகம்… டிக்கட் விற்கும் முருகப்பன்… பெண்வேடம் சுரேஸ்… அசரத்தினம்… குமாரன்… சிவக்குமார்… தியாகமூர்த்தி… ஜோஸப்பு… நவநீதராசா மாஸ்டரின் மகள் சுபோதினி… அவளது மயக்கும்*

கண்கள்... காதல்கடிதம்... கைக்குட்டை பரிமாற்றம்... மற்றும் வேதா..., சுகுணகுமாரி... கமலாம்பிகை... வீட்டுக்குள், நாகலிங்கம் மாமா... தங்கச்சி சரோஜா... மருமக்கள் அமுதன், சஜிக்குட்டி... எண்பத்திரண்டு வயதில் கூட அநியாயமாகக் கொல்லப்பட்டு விட்ட அப்பாவின் பிரிவுத்துயரில் ஆழ்ந்து நோய்ப்பட்டு சென்ற மாதம் காலம்சென்ற... அம்மா...! அம்மாவின் சாவுக்கும் போக வில்லை... அம்மா... அம்மா...

'அம்மா... நான் எங்கேயிருக்கிறேன்...? யாருக்காக...? எதற்காக...? ஏன்...? இந்த தாய்மொழி கேட்காத தூரத்தில்... தாய்யி மொழி குடைகிற தேசத்தில்... இன்னும் எத்தனை காலம்...? எவ்வளவு நேரம் இப்படி இருந்தேன்... நினைவுப் பெருங் கடலில் ஆழ்ந்து...?

"தாமொங்...! ஞே... தூமோஜுஊஸிக்... பாஞுச்சிக் காவ்ங்லே!" (தாமோங்... ஏன் அழுதிருக்கிறாய்...?)

திடுக்கிட்டுச் சுதாகரித்துக் கொண் டேன்... மணி 5.57 அடுத்த ஆள் வந்து விட்டான். இரண்டரை மணிநேரம் ஒரு நிமிசத்தில் பறந்து விட்டிருந்தது... ஒரு நாளுமில்லாதவாறு ஆழ்ந்த தாய்மண் நினைவுகள்...

'ஸில்யாங்... சாய்யிக்... சாஞ்...!' (சில பிரிவுத்துயரங்கள்... ஸில்யாங்...!) என்று சும்மா சிரித்து விட்டு, எனது பொறுப்புக் களை ஸில்யாங்க்கிடம் ஒப்படைத்து இயந்திரத்தில் விரலடையாளம் பதித்து ஓய்வடைந்தேன். போகத் திரும்பினேன்.

❖❖❖

நான் மறுபடி நிலவறை பக்கமாக நடந்து சென்றேன்... சீருடை மாற்ற வேண்டும். மனம் சரியில்லை. 97 கிலோமீற்றர் தூரத்தில் 'காமுங்' நகரில் உள்ள 'தாய்'ப் பிள்ளையார் கோயிலுக்கு எப்படியும் இன்று போகவேண்டும். இலட்சாதிபதியான இந்திய அய்யர் இருக்கிறார். களியாட் டரங்கிலிருந்து, பெரும்பாலோனார் சென்று விட்டிருந்தனர். துப்பரவுத் தொழிலாளர்கள் வந்து கொண்டி ருந்தனர். பாதுகாப்புக்கூடம் அமைதி யடைந்திருந்தது. சிற்றூழியர் அறைக்குச் சென்று என் சீருடையை மாற்ற முயன்ற போது,...

திடீரென என் உடல் முழுவதும் திடுக்கிட்டுக் குலுங்கியது. நான் துணுக் குற்றேன்... ஒரு அவலமான அழுகுரல் என் செவியில் மெதுவாகக் கேட்டது போலிருந்தது. உற்றுக் கேட்டேன்... ஆம்...! பாதுகாப்புக் கூண்டுக்குள்ளிருந்துதான் அந்த அழுகுரல் கேட்டது. இப்படி எத்தனையோ அவலக்குரல்கள் அடிக்கடி கேட்டிருக்கிறேன்...பொருட்டாகக் கருதாமல் அலட்சியம் செய்து, என் வேலையைப் பார்த்துக் கொண்டு பறந்து விட்டிருக்கிறேன்... ஆனால் இந்தக் குரல்...? அதன் அவலம்... அதன் ஒலியமைப்பு... அதன் இராகம்... அதன் தாய்மொழி...? தாய்யி மொழி...? என்னது... என்னது... காதுகளைக் கூர்மையாக்கிக் கேட்டேன். அந்த அழுகையின் மொழி...?

'என்ர அம்மோ...வ்...!'

என் சர்வாங்கமும் கூசி மயிர்க் கூச் செறிந்தது... இந்த மொழி.. தாய்யி மொழி அல்ல...சொந்தத்தாய்மொழி...எத்தனையோ வருடங்களின் பின் காதுகளில் விழுந்த அந்த இன்பத் தமிழ் மொழி... தாய்மொழி... தமிழழுகை...! தாய்மொழியின் அழுகை... வேதனையின் போது அடி உணர்விலிருந்து யாராலும் தடுக்கவொண்ணாமல், பீறிட் டெழும் உண்மைமிக்க சுய மொழிப் புலம்பல்...!

யாரது...? அவனா அலறினான்...? அந்தக் குற்றவாளி வாலிபனா...? அல்லது வேறு யாராவது தமிழனா...? மனம் படபடத்தது... கால்கள் சற்றே நடுங்கின... மெதுவாக அடியெடுத்து வைத்து வர முயன்றபோது மறுபடியும் அந்த அவலமான அழுகுரல், மன நிம்மதி வேண்டி மிகச் சத்தமிட்டு வாய்விட்டு அரற்றிக் கொண்டிருந்தது.

"என்ர அம்மோவ்...! என்ர கடவுளே...! ...ம்ம்ம்ம்...மா ஆஆஆ. நோ...கு...து...!"

என் இரத்த நாளமெல்லாம் புடைத் தெழுந்தன... விரைந்து பாதுகாப்புக் கூண்டை நோக்கி நடந்தேன். உள்ளே தயக்கத்துடன் பார்த்தேன். அவன்தான்... நான் பிடித்து வந்து தள்ளிய அந்த வாலிபன் மண்டியிட்டு உட்கார்ந்தபடி, முழங்கால் களிடையே தன் கைகளை வைத்துக் கொண்டு கண்களைப் பாதி மூடிக் கொண்டு வேதனையால் அரற்றித் தீர்த்துக் கொண்டிருந்தான். தமிழனா இவன்...? தாய்யீயா...? யாரிவன்... என்ன பெயர்...? எங்கிருந்து வந்து எங்கு சேர்ந்திருக்கிறான்...? பாதாளத் திருட்டுக் கும்பல்களுடன் எப்படித் தொடர்பு...? ஏன்...? என் கேள்வி களுக்கு யார் பதிலளிக்க...?

இரும்புக் கம்பியைச் சற்றுத் தட்டி னேன். அவ்வாலிபன் நிமிர்ந்து பார்த் தான்... மருட்சியுடன் மிரண்டான். அடுத்த அடிக்கு ஆள் வந்து விட்டதாக எண்ணிப் பயந்து போய் "ஞா... சோல்வஙீ.! ஞயக் காஜிங்க்கா ஸூ...ஸாங்..." (நான் நிரபராதி... எனக்கு அடிக்க வேண்டாம்... மதிப்புக்குரியவரே...) என்று என்னைக் கையெடுத்துக் கும்பிட்டான். நான் ஒன்றும் பேசாமல் அவனைப் பார்த்தேன். இவனிடம் தமிழ் பேசினால் மிகப்பெரும் மகிழ்ச்சியடைவான்... இன்பத்தேன் வந்து இவன் காதுகளில் பாயும்... பட்ட அத்தனை வேதனைகளும் நொடிப் பொழுதில் பறந்து விடும். ஆயினும் பேசக் கூடாது. இன்பத் தேனைப் பாய்ச்சக் கூடாது. இவன் குற்றவாளி... எந்த நாட்டவனாக, எந்த இனமாக இருந்தாலும்...! இருந்தாலும்...?

கூண்டுக்கு வெளியே, சாவோங் மேஜை மீது சாய்ந்தபடி சற்றே தூங்கிக் கொண்டிருந்தான். விடியவிடிய அடித்த, குடித்த களைப்பில் அயர்ந்திருக்கிறான்... எனக்கு ஒரு நாளுமில்லாத வாறு ஆத்திரம் பொத்துக் கொண்டு பரவியது. ஆயின் என் செய்ய...? என் ஆளரவம் கேட்டுச் சட்டென விழித்தான்.

'ச்சாங்க்... தஸ்ஜாங்... சரபாவ்ஜ்...? தாமோங்க்...?' (அவனைச் சாப்பிட வேண்டுமா உனக்கு... தாமோங்க்.)

பல்லைக்கடித்தபடி அவனைப் பார்த் தேன். அசதியுடன் எழுந்த சாவோங்க் "ஸ்ஜ்கிங்... ஞாஸீஞ்ஜின் பய்ஜவாவோவ்..." (சற்று நின்று கொள். இதோ வருகிறேன்.) என்று என்னிடம் சொல்லி விட்டு கழி வறைப்பக்கமாகச் சென்றான். இன்னொரு காவலதிகாரி தூரத்தில் நின்று கொண்டு துப்பாக்கியைக் கழற்றிப் பூட்டிக் கொண்டி ருந்தான்.

"என்ர கடவுளே...! என்ன இதுலிருந்து காப்பாற்றப்பா பிள்ளயாரே...! என்ர அம்மோ...வ்..."

கூண்டுக்குள்ளிருந்து தமிழ் அரற்றல் தொடர்ந்தது. நான் அனுதாபத்துடன் அவனைப் பார்த்தேன். குற்றம் செய்த வனைப் கூடக் காப்பாற்ற பிள்ளையார் வேண்டும்... நான் என்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனை உறுக்கினேன். "ஐங்ஙியாஸ்... ஞானுக்? தாமிங்... ஜா...க்...!?" (திருட்டு நாயே... என்ன புலம்புகிறாய்...? என்ன பாஷை அது...?)

அவன் தன் புலம்பலை நிறுத்தி என்னை பயத்துடனும் அசதியுடனும் பார்த்துவிட்டு, "தமிழுங் ஞா... மாஙேப தய்ப்..." என முனகினான். (தமிழ்... என் தாய் மொழி...) திடீரென எங்கோ பார்த்து, கைகளைப் கூப்பினான். தனது வீங்கிப் போயிருந்த முழங்கால்களையும்,பாதங்களையும்தடவித் தடவி முனகினான். பின் மெதுவாக முணுமுணுத்தான்... "என்ர கடவுளே...ய்... என்ர சீவனிருந்தா நான் கதிர்காமத்துக்கு வந்து உதடு குத்தித் தேரிழுக்கன்... என்ர பிள்ளையின்ர தோழுல காவடி ஏத்துரன்... முருகப்பா... கடவுளே...ய்... என்னக் காப்பாத் தப்பா..."

இதற்கு மேல் நான் சற்றும் தாமதிக்க வில்லை. சவோங் கழிவறைப்பக்கம் போய்

விட்டான். மற்றக் காவலதிகாரி நானிருந்த தைரியத்தில் எங்கோ வெளியில் பார்த்துக் கொண்டிருந்தான். நான் இரும்புக் கூண்டைப் பார்த்தேன்… பூட்டப்படாமல், இரும்புத் தாழ்மட்டும் போடப்பட்டி ருந்தது. விரைந்து செயற்பட்டேன். தாழை இழுத்துக் கதவைத் திறந்தேன். அவ்வாலிபன் பயத்துடன் “ஙா…ஆஆ…” என்ற கதறியபடி எழுந்திருக்க முயன்று விழுந்தான். நான் அவனுடன் ஒன்றும் பேசாமல், திறந்த கதவைக் காட்டி “நெய்க் ஜஸ்ஸி… ஜஸ்ஸிங்” என்று மெதுவாகச் சொன்னேன். (தப்பி ஓடிவிடு) ஆனால் என் கண்களில் சிநேகித பாவத்தைக் காட்டவில்லை. அவன் சற்றும் நம்பாமல் என்னைப் பார்த்தான்… ஓடவிட்டுப் பிடித்து பலமாக அடிப்பேன் என்று சந்தேகத்துடன் இல்லையென்ற பாவனையுடன் தலையை அசைத்தான்… ஆனால் என்னை நோக்கிக் கும்பிட்டபடியிருந்தான்… தவழ்ந்து வந்து என் கால்களைப் பிடித்தான்…

நான் அவனை எட்டித் தள்ளிவிட்டு, அவனைப்பார்த்து, கொஞ்சம் சிரித்து நம்பிக்கையூட்டி மறுபடியும், “நெய்க் ஜஸ்ஸி… ஜஸ்ஸிங்” என்றேன். என்னைத் தமிழனாகக் காட்டிக் கொள்ளாமல்.! அவன் தன் காற்சட்டைக்குள் கைவிட்டுத் தடவிக் காட்டி, “ஙாகசநீய்… சவ்கம ஸஜிமங் பாத் மனரைதநி” என்று முனகினான். (என்னிடமிருந்து எழுபது பாத்களையும் அவன் பறிந்து விட்டான். உனக்குத் தர ஒன்றுமில்லை.)

நான் ஆத்திரத்துடன் அவனை அறைந்தேன்… பொங்கி வந்த தமிழைக் கஸ்டப்படுத்திக் கட்டுப்படுத்திக் கொண்டு, “அடப்… ஞாய்யீங்… ஸீமுக்கூ” (ஓடித் தொலைந்து விடுடா அற்பனே…!) என்று அவனது சட்டையைப் பிடித்து தூக்கித் தள்ளி விட்டேன்.

என் தீவிரத்தை உணர்ந்த அவன் ‘விருட்’டென்று எழுந்தான். நான் வெளியில் எட்டிப் பார்த்துச் சமிக்ஞை செய்ததும், நொண்டிய கால்களைப் பொருட்படுத்தாமல், பல்கலைக் கடித்தபடி விரைவாக வெளிவந்தான்… நான் அவனை மற்றக்கழிவறைப்பக்கமாகநடத்திச்சென்று, பின்பக்க வழியால் ஓடிவிடும்படி சைகை செய்தேன். இனி அவன் தாமதிக்கவில்லை. “தாய்ப் பிள்ளையாரப்பா…!” என்று கூவி என்னை நோக்கிக் கும்பிட்டான். ஏற்கனவே இவ்வழியால் பழக்கப்பட்டவனைப் போல அந்தக் கழிவறை வழியாக நுழைந்து குப்பைக்கிடங்குப் பக்கம் அபாயமாக ஆனால் கவனமாக நொண்டியபடி நடந்து சென்றான். அங்கிருந்த குட்டைச் சுவரில் ஏற முயன்று முயன்று விழுந்தான்… பாது காப்பதிகாரிகள் கண்ணில் பட்டால், இரப்பர் குண்டுகள் சீறிவரும்… நான் பதை பதைக்கும் நெஞ்சுடன் பார்த்துக் கொண்டி ருக்க… அவன், அடுத்த தடவை முழு உந்துதலில் கட்டைச் சுவரைக் கடந்து பாய்ந்து வெளிப்பக்கம் விழுந்து விட்டான்… “அம்மா…ஆஆ…!” என்ற வேதனைக்குரல் தமிழ்மொழியில் என் தாய்மொழியில் மெல்லிய சத்தமாக வந்து பாய்ந்தது காதினிலே… இனி அவன் தப்பிவிடுவான்…!

எனக்குள் ஒருநிம்மதிப் பெருமூச்சுப் பிறந்து.உண்மையிலேயே ஏதோ ஒரு கடவுட் தன்மையை அடைந்ததைப் போன்று ணர்ந்தேன். தத்தம் தாய்மொழிக்காக எத்தனை யெத்தனையோ தியாகங்கள் செய்த புனிதர்களிடையே என் தாய் மொழிக்காக நான் இது கூடச் செய்யாவிட்டால் என் தாய்மொழிதான் என்ன…?

திடீரென, ஏதோ ஒரு விசித்திர உணர்ச்சியால் திடுக்கிட்டேன். பயத் துடன் திரும்பிப் பார்த்தேன். என்னை விசித்திரமாகப் பார்த்தபடி நெருங்கி வந்து கொண்டிருந்தான் சாவோங்.

(2007.11.11)

20

பள்ளிக் கூடத்துக்குக் கிட்ட போகப்போக எனக்குச் சரியான சந்தோசமாக கிடந்தது. தூரத்திலேயே 'ஸ்பீக்கர்' பாடுற சத்தம் கேட்டுது. உடம்பெல்லாம் பாரம் குறைஞ்சு பறக்கிறது போலை கிடந்தது. கெதியாப் போகவேணும்.

அப்பாவின்ரை சைக்கிள் பழைய சைக்கிள். ஓட்டைச் சைக்கிள். 'வீச்சா ஓடுங்கோ' எண்டு சொல்லச் சொல்ல ஓடுறாரில்லை. அவசரம் தெரியாது அப்பாவுக்கு சோம்பல். எப்ப பார்த்தாலும் 'சிலோக் கோச்சி' மாதிரித்தான் அப்பாவின்ரை சைக்கிள். ஊந்து ஊந்துதான் போகும். நத்தை மாதிரி.

தன்ரை சைக்கிளின்ரை திறத்திலை சாட்டு வேறை சொல்லுவார்.

"பிள்ளை... அவதிப்படாதையடா. இன்னும் அரை மணித்தியாலத்துக்கு மேலே கிடக்கு . விளையாட்டு துவங்க."

திரும்பத் திரும்ப இதைத்தான் எத்தினை தரம் சொல்லிப் போட்டார். அவருக்கு ஒண்டுந் தெரியாது.

"ரீச்சர் எங்களை அரை மணித்தியாலத்துக்கு முன்னமே வந்திடவேணும் எண்டு சொன்னவ. அப்பதானாம் வெளிக்கிடுத்தலாம். நேரத்துக்கு வராவிட்டால் வேறை ஆளைத்






தானாம் விடுவினம்" எண்டு ரீச்சர் சொன்னதைச் சொன்னாலும் அப்பா 'வீச்சா' ஓடுறாரில்லை.

இவ்வளவுத்துக்கு தனுஷிகாவின்ரை அப்பா அவளைக் கூட்டிவந்து விட்டிருப்பார். லாவண்ணியாவும் வந்திருப்பாள். அவையின்ரை அப்பாமார் 'மோட்டார் சைக்கிள்' வைச்சிருக்கினம். பின்னை நேரத்துக்கு வருவினம்.

தனுஷி எப்பிடி வருவாள்?...

அவள் புதுச் சப்பாத்து வாங்கியிருப்பாள். என்ரை சப்பாத்தும் கிட்டடியிலைதான் வாங்கினது. புதிசுமாதிரித்தான்.

சட்டையிலை 'றோஸ்' குத்தி வந்திருப்பாள். அவளின்ரை வீட்டலை 'றோஸ்' செடியள் பத்தையா நிக்குது. நானும் குத்திக் கொண்டுதான் போறன். அப்பா ஆற்ரையோ வீட்டிலை பத்துரூபா குடுத்து வாங்கினவராம்.

லாவண்ணியும் அப்பிடித்தான் நல்ல வடிவா வெளிக்கிட்டு வருவாள்.

எல்லாரும் வந்து வெளிக்கிடத் தொடங்கியிருக்குங்கள் போலை.

(ஞானம் 104, ஜனவரி 2009)

போன வருஷம் நான் விளையாட்டிலை சேரயில்லை. அப்பா 'டொனேசன்' கட்டப் பிந்திப் போச்சுது. முதலாந் தவணை முடியிற நேரந்தான் நான் பள்ளிக்கூடம் போனனான். விளையாட்டுப் போட்டி எல்லாம் முடிஞ்சு போச்சு. எனக்குச் சரியான கவலை. என்ரை வகுப்பிலை மற்றப் பிள்ளைய ளெல்லாம் விளையாடி னவையளாம். நான்தான் இல்லை. இப்ப நினைச்சாலும் அழுகை அழுகையா வருகுது.

இந்தமுறை நான்தானாம் நல்லாகச் செய்யிறன் எண்டு எங்கடை ரீச்சர் சொன்னவ. மற்றவைக்கு முன்னாலை சொல்லையுக்கை எனக்கு கொஞ்சம் 'கொலர் அப்' தான்.

எங்கடை நிகழ்ச்சிதானாம் முதலிலை. எங்கடை ரீச்சர் சொன்னவா.



"ஏன் பிள்ளை அவதிப்படுறாய்?... உன்ரை நிகழ்ச்சி - அது எல்லா இடமும் போலை இடைவேளைக்குத் தானே நடக்கும்"

அப்பா இப்பிடியே ஏதோ சொல்லிக் கொண்டுதான் வாறார். இவர்தான் எங்கடை பள்ளிக்கூடப் 'பிறிஞ்சிப்பல்' மாதிரி.

அப்பா இப்பிடித்தான். எல்லாத்துக்கும் விளக்கம் சொல்லிக் கொண்டேதான் இருப்பார். அம்மா எண்டா எனக்கு நல்லாப் பிடிக்கும்.எங்கடைநிகழ்ச்சிக்கு 'யூனிபோம்' தைக்க பள்ளிக்கூடத்திலை ஆயிரம் ரூபா கேட்டவை. நான் அம்மா வெட்டை கேட்டன். அம்மா, தான் உண்டியல் போட்டு சேத்து வைச்ச ஐம்பதுரூபா, நூறுரூபா தாள் காசுகளை எண்ணிக் கொண்டு பள்ளிக்கூடம் போனவா. ரீச்சரெட்டைத் தானே குடுக்கிறனெண்டு. நான் தான் வகுப்பிலையே முதல் 'யூனிபோம்' காசு குடுத்திருப்பன் போலை. லாவண்ணியின்ரை அப்பா 'பாங் மனேச்சர்' அவள் கூட எனக்குப் பிறகுதான் குடுத்தவளாக்கும்.

அப்பாவின்ரை 'சிலோக் கோச்சி' ஒருமாதிரி பள்ளிக்கூட வாசலிலை வந்து நிண்டுது.

என்ன வடிவாச் சோடிச்சுக் கிடக்குது. எங்கடை நிகழ்ச்சிக்குத் தைச்ச 'யூனிபோம்' நிறத்திலை 'டிசைனாக' வாசலைச் சோடிச் சிருக்கினம். எங்கடை பள்ளிக்கூட 'ரை' யின்ரை நிறத்திலைதான் வாசல்லை இருந்து விளையாட்டு நடக்கிற வெட்டை வரைக்கும் மாலையள் கட்டிச் சோடிச்சுக் கிடக்கு.

எங்கடை பள்ளிக்கூட வாசலிலை ரண்டு பக்கமும் நிக்கிற உச்சாரத்துக்கு வளர்ந்திருக்கிற பெரிய மரங்களுக்குக் கீழை அப்பா சைக்கிள் விட்டிட்டுவரப் போறார்.

அப்பாவைப்பாத்துக்காத்துக்கொண்டு நிக்க மனம் வரயில்லை. மனம் என்னை ஓடச் சொல்லிச் சொல்லுது. 'ஐஸ்கிறீம்' வானும் நிக்குது. பிறகும் வாங்கலாம் தானே. நான் துள்ளிக் குதிச்சு ஓடினன். ஒரு ஓட்டத்திலை 'ஹவுஸ்' கொட்டிலுக்கே ஓடிவிட்டன்.

ரீச்சர் என்னைக் கண்டிட்டு சிரிச்சா. "கெட்டிக்காரி நேரத்துக்கு வந்திட்டா. நில்லுங்கோ கொஞ்ச நேரம் போனாப் பிறகு வெளிக்கிடுவம். இன்ரவலுக்குத்தானே நிகழ்ச்சி" அப்பா சொன்னது சரிதான். எங்கடை நிகழ்ச்சி 'இன்ரோவலுக்கு' தானாம். இப்பதான் ரீச்சர் உண்மையைச் சொல்லுறா.

ச்சே... எவ்வளவு வடிவான 'யூனிபோம்'. எப்பதான் ரீச்சர் போட்டு வெளிக்கிடுத்தி விடுவாவோ. அந்தரமாக் கிடக்கு.

நான் 'யூனிபோமை' போட்டுக் கொண்டு 'வெட்டையிலை' ஆடியாடிப் போக தூரத்திலை நிக்கிற அப்பாவுக்கு கண்ணுக்குத் தெரியுமோ தெரியாது. ஆரெண்டு யோசிப்பார். குறைக்கு முகமெல்லாம் 'றோஸ் பவுடரும்' பூசி விடுவினம். அப்பா என்னை மட்டுக்கட்ட மாட்டார் எண்டு தான் நினைக்கிறன்.

'வெட்டையிலை' பெரிய அக்கா மாரின்ரை ஓட்டங்கள் நடக்குது. எல்லாரும் கத்துகினம். ஓடுறவையளோடை சேர்ந்து தாங்களும் ஓடப்பாக்கினம். 'ஹவுஸ்' களின்ரை பேரையும், நிறங்களையும் சொல்லிக் கத்துகினம்.

எனக்கு அதைப் பார்க்க விருப்பமில்லை. நெஞ்செல்லாம் படபடத்துத் துடிக்குது.

ரீச்சரும் முன்னுக்குப் போய் நிண்டு துள்ளித்துள்ளிக் கத்துறா. எங்களை வெளிக்கிடுத்தி விடாமல்.

தரணி, லாவண்ணி, ஹம்ஷா, தனுஷி எண்டு எல்லாரும் ஆயத்தமாத்தான் நிக்கிறம்.

உப்பிடி வெள்ளிக்கிடுத்தாமல் நிண்டால் என்ன மாதிரி?... திடீரெண்டு கூப்பிட்டு விட்டால் என்னெண்டு போறது?...

அம்மாவை வரச் சொல்லிக் கேட்டனான். அம்மா வரயில்லை. எங்கை வரச் சொன்னாலும் வெட்கப்படுவா. காதிலை கழுத்திலை ஒண்டும் இல்லாமல் எண்டு ஏதோ அப்பாவுக்குச் சொல்லுவா. உப்பிடித் தான் போனமாதம் எங்கடை ஊர்க் கோயில் திருவிழாவுக்குக் கூட வரமாட்டன் எண்டிட்டா.

தரணியின்ரை அம்மாவும் வரவில் லைத்தான். ஆனால் ஹம்சாவின்ரை அம்மா வந்தவ. அவளை வெளிக்கிடுத்தவாம். எனக் கென்ன எங்கடை ரீச்சர் இருக்கிறாதானே. அவவும் அம்மா மாதிரித்தானே. என்னிலை நல்ல பட்சம்.

முட்டைக்கண்ணி மகிஷாவும் தாயோடை வந்து நிக்கிறா. அவள் ஒரு நாலைஞ்சு நாள் எங்களோடை பயிற்சி எடுத்தவ. பிறகு சரியாச் செய்யிறா இல்லை எண்டு எங்கடை ரீச்சர் நிற்பாட்டிப் போட்டா. அது கலியாணி ரீச்சருக்கு பிடிக்க யில்லை. முட்டைக் கண்ணியை மட்டு மில்லை, வேறையும் மூண்டு பேரையும் தான் நிற்பாட்டியாச்சு. முட்டைக் கண்ணிக்கு பெரிய 'லெவல்'. எங்களோடை எல்லாம் சேரமாட்டா. நடப்புக் காட்டுவா. தகப்பன் டொக்ரராம். அவபெரிய இவ.

"ஏய்... முட்டைக்கண்ணியின்ரை தாய் அங்கை பாரன். 'பீ' வகுப்பு கலியாணி ரீச்சரோடை பின்னாலையும் முன்னா லையும் இழுபடுறா."

லாவண்ணிதான் எனக்குச் சொன்னாள். முட்டைக் கண்ணி மகிஷா 'பீ' வகுப்பு. நாங்கள் 'ஏ' வகுப்பு. இரண்டு வகுப்பையும் கலந்துதான் எங்கடை நிகழ்ச்சி.

"இஞ்சை... ஏய்... அங்கை பாரன் முட்டைக் கண்ணியின்ரை தாயும் கலியாணி ரீச்சரும் எங்கடை ரீச்சரை தனியக் கூட்டிக் கொண்டுபோய் ஏதோ குசுகுசுக்கினம். பின்னாலை வாத்துமுட்டைக் கண்ணியும் நிக்கிறாள்."

லாவண்ணியும் எங்களோடை சேர்ந்து கொண்டு சொல்லுறாள்.

"ஏய்... முட்டைக் கண்ணியின்ரை அம்மாவும் ரீச்சர் வேலைதான். வேறை எங்கையோ படிப்பிக்கிறா. கலியாணி ரீச்சர், எங்கடை ரீச்சர் எல்லாரையும் தெரிஞ்சிருக்கும். அதுதான் கதைக்கினம் போலை"

நான் அவையின்ரை கதையளை மறிச்சு சொன்னன். சரியெண்டு தலை ஆட்டுகினம்.

லாவண்ணியின்ரை அப்பா 'பாங் மனேச்சர்', தரணியின்ரை அப்பா 'மாஸ்டர்'. ஹம்சாவின்ரை அப்பா 'கிளாக்கர்'. தனுஷியின்ரை அப்பா எங்கடை பள்ளிக்கூடத்திலை பெரிய அக்காமாருக்கு படிப்பிக்கிற 'சேர்! எல்லாரும் வந்திருப்பினம்.

எட்டிப் பார்த்தன். அங்காலை வெளியாக்கள் நிக்கிற பக்கமாக அப்பா நிக்கிறார். ஆசையா என்ரை நிகழ்ச்சியைப் பார்க்க முன்னுக்கு வந்து நிக்கிறார். அடிக்கடி என்ரை 'ஹவுஸ்' இருக்கிற பக்கமும் பார்க்கிறார். நான் நிக்கிறது தெரியேல்லைப் போலை கிடக்கு. தூரந்தானே.

'இன்ரோவல்' நிகழ்ச்சியிலை நல்ல வடிவா ஆடவேணும். அது பாட்டுக்கு 'டான்ஸ்' தானே. இடைக்கிடை பரத நாட்டியம் மாதிரியும் சொல்லித் தந்தவை. எனக்கு நல்ல விருப்பமான ஆட்டம் அதுதான்.

அப்பா ஆக்களுக்குள்ளாலை எட்டி எட்டிப் பார்க்கிறார். என்னைத்தான் போலை.

என்ரை நிகழ்ச்சி முடிய அப்பாட்டை ஓடிப்போவம். என்ரை யூனிபோமையும், வெளிக்கிட்ட வடிவையும் பாத்திட்டுச் சந்தோசப்படுவார். உடனை ஆளைக் கொண்டு ஒரு 'கோண் ஐஸ்கிறீம்' வாங்கி யூனிபோமிலை ஊத்திப்போடாமல் குடிக்க வேணும்.

"ஏய்... ரீச்சர் எல்லாரையும் கூப்பிடுறா... வெளிக்கிட வரட்டாம். வாங்கோ... நேரம் கிட்ட வந்திட்டுதாம்."

தரணிதான் கூப்பிட்டாள். எல்லாரும் போறம்.

ஐயோ...நேரம் வந்திட்டுது.எனக்கு உடம்பெல்லாம் சூடேறுற மாதிரிக் கிடக்கு. மேகத்திலை பறக்கிற மாதிரிக் கிடக்கு. சபாத்துப் போட்டாச்சு. தலை வடிவாக் கட்டிக் கொண்டுதான் வந்தனான். குழம்பினாலும் தொப்பி போட மறைக்குந்தானே. இனி என்ன நிகழ்ச்சிக்கெண்டு தைச்சு, முதல் போட்டுப்பார்த்த 'யூனிபோம்' தானே போடக்கிடக்கு. அது எனக்கு நல்ல அளவு, வடிவு. அதைப் போட்டால் சரி. பிறகு கைரண்டிலும் கலர் கலரா குஞ்சங் கட்டுறது. அவ்வளவு தான்.

வெளிக்கிடுற இடத்திலை முட்டைக் கண்ணியின்ரை தாய் நிக்கிறா. பிறகும் ஏதோ கலியாணி ரீச்சரோடை குசுகுசுக்கிறா.

எங்கடை ரீச்சர் எனக்கு 'யூனிபோம்' போட்டு விடுறா. என்னைப் பார்த்து ஏதோ கதைக்கினம். எனக்கு 'யூனிபோம்' வடிவாக் கிடக்குப் போலை. அதைத்தான் கதைக்கினமாக்கும்.

எட்டிப் பாக்கிறன். அப்பாவை சின்னனாத் தெரியுது. இப்பிடியே பார்த்தால் அப்பா என்னைத் தூக்கிக் கொஞ்சுவார். முடிஞ்சாப் பிறகு போறதுதானே.

எங்கடை ரீச்சர் தனியத்தான் எல்லாஞ் செய்யுறா. பாவம். கலியாணி ரீச்சர் உதவி செய்யிறா இல்லை. அவ அவையோடை கதைக்சுக் கொண்டே நிக்கிறா. முட்டைக் கண்ணி மகிஷா என்னைத்தான் பாக்கிற மாதிரிக் கிடக்கு. சிரிக்கிறா இல்லை.

"எல்லாரும் உப்பிடியே குழப்பாமல் நிக்க வேணும். ரீச்சர் முன்னுக்கு நிப்பன். 'லைன்' பண்ணி நில்லுங்கோ. நான் விசில் ஊதிப்போட்டு கையைக் காட்டுவன். நீங்கள் துள்ளித்துள்ளி ஓடி 'கிறவுண்ட்'க்குள்ளை போக வேணும். என்ன?..."

ரீச்சர்தான் சொல்லிப்போட்டு வெளியிலை போட்டா. நாங்கள் எல்லாரும் வண்ணாத்திப்பூச்சியள் மாதிரி கையிலை கட்டின குஞ்சங்களை அசைச்சுப் பாத்து நிக்கிறம்.

ரீச்சர் வெளியிலை இருந்து கையைக் காட்டுறதை எதிர்பாத்துக் கொண்டு நிக்கிறம். எல்லாரும் 'றெடியா' நிக்கிறம்.

திடீரெண்டு என்னை ஆரோ பிடிச்சு இழுக்கினம். கலியாணி ரீச்சர்தான். மறைவிலை கொண்டுபோய் மளமள வெண்டு என்ரை தொப்பியையும், யூனி போமையும் கழட்டுறா. முட்டைக் கண்ணிக்கு அதைப் போடுகினம். அவளின்ரை தாயும் சேர்ந்து தான். எனக்கு எங்கடை ரீச்சரைக் கூப்பிட வேணும் போலை கிடக்கு. ஆனால் முடி

யேல்லை. குரல் வருதில்லை மகிஷாவுக்கு முகமெல்லாம் ‘றோஸ் பவுடர்’ அப்புகினம். முட்டைக்கண்ணி சிரிக்கிறாள்.

எனக்கு அழுகை வருது. உள்ளுக்கை போடுற ‘பெற்றிக் கோட்’டோடை நிக்கிறன். எல்லாப் பிளையளும் என்னைத் தான் பாக்கிற மாதிரிக் கிடக்கு. வெக்கமாக் கிடக்கு.

“அது உந்தக் கிழக்கு றோட்டிலை இருக்கிறபிள்ளை.இங்கத்தைஆக்களில்லை. அவவின்ரை ‘கிளாஸ்’ ரீச்சரின்ரை செல்லம். தாய் யூனிபோமுக்கு அரைவாசிக்காசு தான் தந்தவ. மிச்சம் பிறகாம். அதுகள் உப்பிடித்தான். ஆக்களைத் தெரியுந்தானே உனக்கு. இதுகளுக்கு ஏன் இதெல்லாம்?... உவை வந்து இஞ்சை ஒண்டும் நியாயம் கேட்டுப் படைக்கப் போறது கிடையாது.”

முட்டைக் கண்ணியின்ரை தாய்க்குச் சொல்லிக் கொண்டே முட்டைக் கண்ணியை ‘லைனிலை’ இடையிலை செருகி விடுறா கலியாணி ரீச்சர்.

தனுஷி, தரணி, லாவண்ணி எல்லாரும் என்னைக் கவலையோடை பாக்குதுகள்.

எனக்கு அழுகை வந்தது. கண்ணை கண்ணீர் மறைச்சுக் கொண்டு நிறைஞ்சு வந்தது.

ரீச்சர் விசில் ஊதுறது அடைச்ச காதுக்குள்ளை கேக்கிறது மாதிரிக் கேக்குது. தலையெல்லாம் சுத்துற மாதிரிக் கிடக்கு.

எல்லாரோடையும் சேர்ந்து முட்டைக் கண்ணியும் துள்ளிக் கொண்டு ஓடுறாள். ரீச்சரும் கவனிக்கேல்லைப் போலை.

நான் அழுகிறன். கண்ணீர் வருது. என்ர வடிவான யூனிபோமை மாத்திப் போட் டினம். எங்கடை ரீச்சருக்கு சொல்லி அழவேனும் போலை கிடக்கு. வெளி யிலை போக வெக்கமாக்கிடக்கு. ‘பெற்றிக்’ கோட்டுக்குள்ளாலை ‘நிக்கர்’ தெரியுது. சப்பாத்தோடையும் பெற்றிக் கோட்டோ டையும் எப்பிடி வெளியிலை போறது. வெள்ளைச் சட்டையையும் ரீச்சர் வாங்கி உள்ளுக்கை வைச்சிட்டா.

‘ஸ்பீக்கரிலை’ எங்கடை ‘இன்ரோவல்’ நிகழ்ச்சிப் பாட்டுக் கேக்குது. அப்பா என்னை தேடித் தேடிப் பார்ப்பார்.

நானும் எட்டி எட்டிப் பாக்கிறன். அப்பாவை இப்ப தெரியேல்லை. எல்லாரும் ‘இன்ரோவல்’ நிகழ்ச்சி பாக்கிறதுக்கு முன்னுக்கு திரண்டு குவிஞ்சு கொண்டு நிக்கினம்.

என்னைக் கவனிக்கினமில்லை.

நான் அழுது கொண்டே நிற்கிறன். பாட்டு கேட்க கேட்க இன்னும் நல்லாத் தலை சுத்துற மாதிரிக் கிடக்கு.

கண்ணுக்குள்ளை நிண்ட கண்ணீருக் குள்ளாலை அப்பா கலங்கலாத் தெரியிறார். அப்பாதான், என்னைத் தேடி வந்திட்டார்... என்னைக் கண்வுடனை அவருக்கு கண் கலங்குது.

என்ன நடந்ததெண்டு கேட்கிறார். நானும் அழுதழுது சொல்லுறன்.

என்னைத்தூக்கிதோளிலைபோட்டார். “வாடா செல்லத்துக்கு ஐஸ்கிறீம் வாங்கித் தாறன்” எண்டு என்ரை மனசை மாத்தப் பாக்கிறார். எனக்கு ஒண்டும் தேவையில்லை எண்டு சொல்லி அழுறன்.

அப்பா என்னை வெளியிலை கொண்டு போறார். வெளியிலை சோடிச்சுக் கிடக்கிற தெல்லாம் என்ரை கண்ணீருக்கை கரையிற மாதிரிக் கிடக்கு. வாசலிலை ரண்டுபக்கமும் நிக்கிற பெரிய மரங்கள் என்ரை தலையிலை விழுறமாதிரிக் கிடக்குது.

அப்பா என்னைத் தன்ரை சைக்கிளிலை ஏத்தி இருத்திறார்.

கைதட்டிக் கேக்குது ‘இன்ரோவல்’ நிகழ்ச்சி முடிஞ்சுது போலை.

அப்பா சைக்கிளிலை ஏறி உழக்கத் தொடங்கிறார்.

எங்கடை ரீச்சர் வாசல் வரைக்கும் ஓடிவாறா. என்ரை பேரைச் சொல்லிக் கூப்பிடிறமாதிரிக் கிடக்குது.

அப்பா திரும்பிப் பாக்காமல் ஓடிக் கொண்டு போறார்.

பாவம்... ரீச்சர் என்னோடை கதைக்கத் தான் வந்திருப்பா போலை.

கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2008இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை

21

# காகக்குட்டி

3

ஹேமந்த் கருணாகரன்



அன்று பின்னேரம் மூன்று காகங்கள் எனக்கு முன்னால் வந்து நின்றன. ஒன்று மரத்தில். மற்ற இரண்டும் தரையில், சற்றுத் தொலைவில், மாமரத்தின் அடியோரமாக, மாதுளைச் செடிக்குப் பக்கத்தில் நின்றன.

இந்தக் காகங்களை இதற்கு முன்னர் எங்காவது பார்த்திருக்கிறேனா? சரியாக நினைவில்லை. அப்படிப் பார்த்திருந்தாலும்கூட எதை வைத்து இப்போது இவற்றை அடையாளம் காண்பது? காகம்,மைனா,கிளி,கொக்கு எல்லாவற்றையும் தனித்தனியாக அடையாளம் காண்பது மிகக்கடினம். எப்போது பார்த்தாலும் எல்லாக் காகமும் ஒரே மாதிரியே தெரிகின்றன. அதேபோலத்தான் கொக்குகளும். ஏன் கிளி, மைனா, செண்பகம் போன்ற பறவைகளும் கூட அப்படித்தான்.

பொதுவாக மிருகங்களை அடையாளம் காண்பதைப் போல பறவைகளை லேசில் இனங்காண முடியாது. எல்லாக்கிளிகளும் ஒரே சாயலுடையவை. சிட்டுக்குருவிகளுக் கிடையில் நம்மால் அவ்வளவு சுலபமாக வேறுபாட்டைக் காணமுடிவதில்லையே. அபூர்வமாக சிலபோது அடையாளம் காணக்கூடிய தனி அம்சங்கள் வாய்த்தாற் சரி.

நான் பள்ளியில் படிக்கும்போது ஒரு நொண்டிக்காகத்தை தனியாகவே அடையாளம் வைத்திருந்தேன். அந்தக் காகம் அநேகமாக பின்னேரங்களில் எங்கள் வீட்டுக்கு வரும். எப்படி அது நொண்டி ஆனதென்று தெரியாது. ஏதாவது விபத்தில் சிக்கியிருக்கலாம். அல்லது பிறவியிலேயே அது நொண்டியாக இருந்திருக்கலாம். ஆனால் அந்தக் காகம் எப்போதும் எங்கள் வீட்டைச் சுற்றியே இருந்தது. தெத்தித்தெத்தி நடக்கும். பறக்கும்போது கூட அது மற்றக் காகங்களைப்போல சுமாராகப் பறக்காது. சிறகுகளிலும் ஏதாவது பழுதோ பாதிப்போ இருக்கலாம்.



(ஞானம் 106, மார்ச் 2009)

தினமும் வந்து எங்களோடு அது பழகியமாதிரியே ஆகிவிட்டது. மற்றக் காகங்களைப்போல மிரட்சி யெல்லாம் கிடையாது. யாரும் அதற்குக் கிட்டப் போனால், சற்றுத் தள்ளி விலகும். அல்லது மெல்லப் பறந்து ஒரு கிளையில் அமரும். அதுவும் மிகத்தாழ்ந்த கிளை யில். அண்டிப்பிழைக்கும் நோக்கத் தினால் அப்படியிருந்ததா, இல்லை, அது எங்களையிட்டுப் பயங்கொள்ள வில்லையா என்று தெரியாது.

**"ஈஸ்வரா, சனிபகவான் கடாட்சம். சின்னவனுடைய பலனுக்குத்தான் இந்த வரவு" என்று தாமுவைப் பார்த்துச் சொன்னார். அவருக்கு எங்கள் வீட்டிலுள்ள அத்தனை பேரின் நாள், நட்சத்திரம், ராசி எல்லாம் தெரியும். சின்னவன் என்பது எங்கள் தம்பி. அவனுடைய ராசியின் படிதான் தாமு அப்படி வீட்டுக்கு வந்திருக் கிறது என்பது அவருடைய அபிப்பிராயம். அப்போது அவனுக்குச் சனி பார்வை உச்சத்தில் இருந்ததாகச் சொன்னார்.**

தானியத்தையோ பழங்களையோ சாப் பாட்டையோ போட்டால் கத்திச் சத்த மெல்லாம் போட்டு ஊரைக் கூட்டும் என்றில்லை. சிலபோது அப்படித் தன்னுடைய கூட்டாளிகளை எல்லாம் அழைக்கும். சிலபோது சத்தமே காட்டாமல் காரியத்தைப் பார்த்துவிடும். அப்படியொரு குணம் அதற்கு. எப்போதும் இனத்தொடு கூடி வாழும் பழக்கமுடைய பறவை என்று இந்தக் காகத்தை வைத்துச் சொல்ல முடியாது. பிரிந்து வாழும் பிறவி என்றும் இல்லை. அதுவொரு தினுசான பிறவி. அவ்வளவுதான்.

என்னதான் இருந்தாலும் அந்தக் காகத்தில் அம்மாவுக்கு ஒரு இணக்கம். எந்த வேளையிலும் அம்மாவுக்கு அதன் மேல் பரிவும் பிரியமும், நாங்களெல்லாம் பள்ளிக்குப் போனால் அம்மாவுக்கு அதுதான் துணை. அப்படி இருந்ததால் அதனுடன் அப்படியொரு உறவு வந்திருக்கலாம்.

விரத காலத்தில் அது எல்லோருக்கும் வேண்டிய விருந்தாளி. அது ஒரு காரணமாக இருக்கலாம். மற்றக் காகங்களைப் போல கெட்டித்தனமாக பறக்க முடியாமல் அது தத்தித் திரிவதையிட்டு இரக்கமோ பிடிப்போ ஏற்பட்டிருக்கலாம். அதன் கரைதலொலியில் அம்மா ஏதாவதொரு விருப்பத்தையோ ஈடுபாட்டையோ கொண் டிருக்கலாம். எப்படியோ அம்மாவுக்கு அது மிக வேண்டியிருந்தது.

அந்தக் காகத்தைப் பார்த்து மெல்ல மெல்ல மற்ற ஒன்றிரண்டு காகங்களும் நெருக்கமாக வரத்தொடங்கின. ஆனால் அவற்றின் மிரட்சியில் கள்ளத்தனம் இருந்தது. தட்டிப்பறிக்கும் குணங்கள் இருந்தன. எங்க ளுடைய காகத்திடம் அதெல்லாம் கிடையாது.

நான் அதற்குத் 'தாமு' என்று பெயர் வைத்திருந்தேன். எங்கள் தெருவில் இருந்த தாமுவைப் போலவே இந்தக் காகமும் நொண்டியாக இருந்ததால் அவருடைய பெயரையே வைத்துவிட்டேன். அவர் கெந்திக் கெந்தி நடப்பார். எங்கள் காகத்தைப் பார்க்கும்போது தாமுவின் நினைவு வரும். தாமுவைப் பார்க்கும்போது காகத்தின் நினைவு எழும். அதற்காக தாமு அவ்வளவு காகம் செல்லையாவைப்போல் கருமை என்றில்லை. தாது மஞ்சள் கலந்த நிறம். சீனக் கலப்போ என்று சொல்லத் தோன்றும். தாமுவின் நடைதான் எங்கள் காகத்தை நினைவூட்டும்.

நான் அப்படி தாமுவின் பெயரை வைத்தற்காக முதலில் அம்மாவிடம் திட்டு வாங்கினேன். ஆனால் பிறகு அதை எல்லோரும் 'தாமு' என்றே சொல்லத் தொடங்கினார்கள். ஏன், அப்படித் தன்னுடைய பெயரை நான் அந்தக் காகத்துக்கு வைத்திருக்கிறேன் என்று பிறகு தாமுவுக்கே தெரிந்துவிட்டது. அவர் சிரித்தார்.

ஒரு தடவை எங்கள் காகத்தை யாரோ தந்திரமாகப் பிடித்து விட்டார்கள். பிடித்து, அதன் வாலில் நூலொன்றைக் கட்டிவிட்டிருந்தார்கள். நூலறுந்த பட்டம் அங்குமிங்குமாகத் தத்தளிப்பதைப்போல் அது அந்த நூலோடு எங்களிடம் வந்தது.

அதைப் பார்க்க எங்களுக்கு மிக வேடிக்கை. பதிந்த கிளையில் அமர்ந்திருக்கும் போது நூல் கைக்கெட்டும் தூரத்தில் ஆடிக் கொண்டிருந்தது. இப்போது அதைச் சுலபமாகப் பிடித்து விடலாம் போலத் தோன்றியது. ஆனால் யாரும் நினைப்பதைப் போல அதை அவ்வளவு எளிதில் பிடித்து விட முடியவில்லை. மரத்துக்குக் கீழே போகும்போது அது எப்படியோ பறந்து அடுத்த கிளைக்குத் தாவியது. மறைந்து மறைந்து போனாலும் அதற்குத் எப்படியோ எங்கள் தந்திரம் தெரிந்து விடும்.

தம்பி அன்று எவ்வளவோ முயன்று பார்த்தான். அதைப்பிடித்து விடலாம் என்று. ஆனால், அது ஏய்த்துக் கொண்டே தப்பி விட்டது.

அம்மாவுக்கோ நூலைக் கட்டியி ருந்ததைப் பார்த்ததும் கடுமையான கோபம். அது இரக்கத்தினால் வந்த கோபம்.

யார் இந்தமாதிரிக் காரியம் பார்த் தார்கள்? நொண்டிக் காகம் என்றால் வம்பு செய்யலாமா? மற்றக் காகங்களில் இந்த மாதிரிப் பண்ண முடியுமா?

இந்த நூலொடு அது எங்காவது போய்ச் சிக்கிக் கொள்ளப் போகிறதே என்ற கவலை அவருக்கு.

"கருணா அதை எப்பிடியாவது பிடித்து, அந்த நூலை அறுத்துவிடு. யாரோ அதுக்குத் தொல்லை குடுத்திருக் கிறார்கள்" என்று சொன்னார்.

அதைப் பிடித்து அந்த நூலை நீக்கிவிடுவதற்கு அன்று நாங்கள் பட்ட பாடு கொஞ்சமல்ல. எவ்வளவோ தந்திரங்கள் செய்தே அதைப் பிடித்தோம்.

கையில் அது கிடந்து மிரண்டது. ஒரு குழந்தையைப்போல ஒன்று புரியாமல் தத்தளித்தது. பார்க்க மிகப் பரிதாபம். அதை ஒன்றும் செய்யாமல், வேடிக்கை பார்க்காமல், விளையாட்டெல்லாம் காட் டாமல் விட்டுவிடும்படி பதறினார் அம்மா.

"அடேய், அது களைச்சுப் போயி ருக்குது. தொந்தரவு படுத்தாமல் விடுங்கோ" என்று கடிந்தார்.

அதன் மீது அத்தனை கரிசனை. தன்னுடைய ஒரு பிள்ளையைப்போல் அவ அதை உணர்ந்திருந்தார் என்றே நினைக்கிறேன்.

பின்னேரங்களில் அக்கா அதற்குத் தனியாகத் தானியங்களோ, பழங்களோ வைத்து வந்தாள். அவளோடு அதற்கு நல்ல நெருக்கமான பிரியம். காகம் ஒரு வளர்ப்புப் பிராணியா என்று நினைக்குமளவுக்கு அதன் நடத்தைகளிருந்தன. எங்களுக்கும் அப்படித்தான் அதோடு உறவிருந்தது. அது கூடில்லாமலே எங்கள் வீட்டில் வளர்ந்தது. ஒரு பிள்ளையைப் போல.

வீட்டுக்கு வருகின்ற ஆட்கள், அந்தக் காகம் எங்கள் வீட்டில் அத்தனை நெருக்க மாகவும் சுதந்திரமாகவும் செல்லமாகவும் திரிவதைப் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். அதிலும் வருகின்ற குழந்தைகளுக்கு சிறுவர் களுக்கும் அது தீராத வேடிக்கைப் புதிர்.

எங்கள் வீட்டுக்கு நான்கு மாதங்களுக் கொரு தடவை, ராமசாமிச் சாத்திரி வருவார். அவருடை சுற்றப் பாதை அப்படி ஒரு தடவை அவர் வந்தபோது தாமுவைப் பார்த்தார்.

"ஈஸ்வரா, சனிபகவான் கடாட்சம். சின்னவனுடைய பலனுக்குத்தான் இந்த வரவு" என்று தாமுவைப் பார்த்துச் சொன்னார்.

அவருக்கு எங்கள் வீட்டிலுள்ள அத்தனை பேரின் நாள், நட்சத்திரம், ராசி எல்லாம் தெரியும். சின்னவன் என்பது எங்கள் தம்பி. அவனுடைய ராசியின் படிதான் தாமு அப்படி வீட்டுக்கு வந்திருக் கிறது என்பது அவருடைய அபிப்பிராயம். அப்போது அவனுக்குச் சனி பார்வை உச்சத்தில் இருந்ததாகச் சொன்னார்.

அப்பாவுக்கு இதிலெல்லாம் உடன் பாடுகள் கிடையாது. ஆனால் அவர் எந்த மறுப்பும் எதற்கும் சொல்லுவதில்லை. அவரவருக்கு தோன்றுகிற மாதிரி எதுவும் இருக்கட்டும் என்று இருந்து விட்டார். அதனால் ராமசாமிச் சாத்திரிக்கும்

பிரச்சினை இல்லை. என்றபடியால் இரு வரும் நண்பர்களாகவே இருந்தார்கள். இப்படி ஒரு சமாந்தர வழி இருக்கும் போது நட்பு தானாக வந்து விடுமல்லவா.

தாமுவை அப்பா பெயர் சொல்லியே கூப்பிடுவார். அதற்குப் புரியுதோ இல்லையோ அவர் அப்படிக் கூப்பிடும்போது அது தலையைச் சரித்து ஒரு தினுசாகப் பார்க்கும். எப்படித்தான் அதற்கு இதெல்லாம் புரியுதோ.

"ஏய் காகக்குட்டி வந்திட்டுது" என்று அவர் சிலவேளை சொல்வார். சிலவேளை "தாமூ" என்று செல்லமாகக் கூப்பிடுவார். இந்த 'மு' னாவுக்கு அழுத்தம் கொடுத்து 'தாமூ' என்று அழைப்பார்.

எனக்கு தாமுவில் எப்போதும் பிடித்த மானது, அதனுடைய நிறமும் அதை யிட்டு அது எதையும் வருத்தமாகப் பொருட் படுத்தாதே இருப்பதும். தங்களின் நிறங் குறித்தும் உருவத்தைப் பற்றியும் ஏதாவது வருத்தமோ மகிழ்ச்சியோ எந்தப் பறவைக்காவது இருக்குமோ? அப்படி இருந்தால் காகங்கள்தான் அதிகம் கவலை யடையுமோ?

காகத்தின் குரலைக் கூட அவ்வளவு இனிமையானது என்று யாரும் சொல்வ தில்லை. அவை கரையத் தொடங்கினால் எப்படியோ நம் முகம் சுருங்கிவிடுகிறது. ஆனால் எந்தக் காகமும் தன்னுடைய கருமை குறித்தும் குரலின் கர்ண கடூரம் குறித்தும் எந்த வருத்தமும் கொண்டதாகத் தெரியவில்லை.

ஏன் தாமு கூட அது பற்றி ஒரு போதும் வருந்திய மாதிரியில்லை. அதனுடைய கண்களில் ஒரு நாளும் எந்தக் கவலைக் குறியையும் நான் பார்க்கவேயில்லை. அது மற்றக்காகங்களைப் போல பறக்கவும் திரியவும் முடியாமலிருக்கிறது. அதையிட்ட வருத்தங்கள் கூட ஏன் அதனிடமில்லை? இன்னொன்று மற்றக் காகங்களுக்கில்லாத ஒரு உறவு தாமுவுக்கு உண்டு. அம்மா ஒருத்தியேபோதும் அதன் சந்தோசத்துக்கும் துணைக்கும்.

தாமு எங்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. எங்களின் புலனில் அது ஒரு தீரா இன்பப் புள்ளியாய் நிறைந்துள்ளது. ஒரு நாள் அதைக் காணவில்லை என்றாலும் மனசு தவிக்கும். எங்கே அது, எங்கே அது என்ற தத்தளிப்பு. எங்கிருந்தோ கூடிவிடுகிறது பதட்டம். அந்தளவுக்கு உறவிழைகள் பின்னப்பட்டிருக்கின்றன நமக்கும் அதற்குமிடையில். இது நட்பா, அன்பின் வேறொரு புரிந்து கொள்ள முடியாத வடிவமா? எதுவாயிருக்கும்?

பிராணிகளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவுகள் வேடிக்கையானவை. எப்போதும் தீராத ஆச்சரியம் நிரம்பியவை. சிலபோது சில பிராணிகள் மனிதர்களோடு தோழமை கொண்டிருக்கின்றன. சில பிராணிகள் சவாலாக இருக்கின்றன. வேறு சில பணிந்திருக்கின்றன. அண்டிப் பிழைப்ப தற்காக அப்படி இருக்கலாம். எங்கள் வீட்டில் நிற்கும் நாய் பணிந்தது. பணிவுக்கு அது நல்ல சாட்சி. அதற்குப் பணிவைத் தவிர வேறெதுவும் தெரியாது. அப்படி அது பணிந்திருக்க வேண்டிய காரணம் என்ன என்று நான் பல தடவை யோசித்தேன். காரணம் புரியவேயில்லை. அந்த நாயை விட பூனை கொஞ்சம் கிறுக்காகவே நிற்கிறது. அதையும் விட இன்னும் இந்த காகம் - எங்கள் தாமு கிறுக்கு. ஏதாவது அதற்குப்பிடிக்கவில்லை என்றால் அது கோவித்துக் கொண்டு போய்விடும்.

ஒரு தடவை, சித்தி விரதச் சோறு வைக்க காகத்தைக் கூப்பிட்டாள். தாமுதான் வந்தது. தாமுவுக்கு சோறு வைக்க சித்திக்கு விருப்ப மில்லை. அது நொண்டிக்காகம், குறை ஏதுமில்லாத காகத்துக்கே விரதச்சோற்றை வைக்க வேணும் என்றாள் சித்தி.

அம்மாவுக்கு இது வருத்தம். ஆனால் அவர் எதுவும் பேசவில்லை. தாமுவை விட வேறு பறவை வேணுமா? என்று கேட்டார். ஆனால் சித்தியிடம் எதையும் பேசவில்லை.

தாமு பறந்து போய்விட்டது. இரண்டு நாட்கள் வரவேயில்லை. அது சித்தியோடு

**நான் அவற்றை, அந்தக் காகங்களின் கண்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு நேரம் பார்த்திருப்பேன் என்று சொல்ல முடியாது. ஆனால் மிக நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். தலையைச் சாய்த்து அவை மேலும் கீழும் பார்க்கும்போது பூமியையும் விண்ணையும் ஒன்றிணைப்பது போலத் தோன்றியது. சட்டென, தலையைத் திருப்பி, அவை பக்கவாட்டில் அங்குமிங்கும் பார்த்தன. திசைகளெங்கும் ஒளி நிரம்பியது**

*கோவித்துக் கொண்டுதான் போனதா அல்லது வேறு காரணங்கள் ஏதேனும் இருந்ததா தெரியாது. ஆனால் தாமு கோவித்துக் கொண்டே போனதாக அம்மா எப்போதும் சொல்லிக் கொண்டிருந்தார்.*

*இரண்டு வருசம் வரையில் தாமு எங்களோடு இருந்திருக்கும். எங்களோடு அது நின்றாலும் இரவில் எங்கே போகிறது, எங்கே தூங்குகிறது, அதன் துணை எங்கே, அதற்கு குஞ்சுகள் எல்லாம் உண்டா? என்று எதுவும் தெரியவில்லை.*

*பருவகாலத்தில் மற்றக் காகங்கள் எல்லாம் கூடிக் குலாவும்போது தாமு மட்டும் எந்தச் சம்மந்தமும் இல்லாமல் ஒரு யோகியைப்போல தனியே தன்பாட்டில் இருக்கும். அதனுடைய உலகமே வேறு.*

*இப்படி இரண்டும் வருசமாக எங்களோடு இருந்த பறவை பிறகு அது எங்க போனதென்றே தெரியவில்லை. அதையிட்டு எல்லோருக்கும் வருத்தமே. எனக்குத் துக்கம் தாளமுடியவில்லை.*

*தன்னுடைய புத்தகத்தில் தாமுவைப் போல ஒரு பறவையை வரைந்து வைத்திருந்தான் தம்பி. ஒரு போட்டோ வையாவது எடுத்து வைத்திருக்கலாம் என்று கவலைப்பட்டாள் அக்கா. என்னதான் செய்தாலும் தாமு நிற்பதைப்போல வருமா என்றார் அம்மா. நாளை வரும் நாளை வரும் என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தோம். தெரிந்த மரமெல்லாம் அண்ணாந்து பார்த்தே சில நாட்கள் கழிந்தன. ஆனால் அதை எங்கே போய்த்தேடமுடியும்? மற்றப் பிராணிகளைப்போலவா காகங்களின் வாழ்க்கை, சுலபமாகக் கண்டு பிடித்து விட? அதிலும் தாமுவின் வாழ்க்கை, இன்னும் வேறு சங்கதிகள் கொண்டது.*

*தாமு என்றைக்கும் எங்களைத் துக்கப் படுத்த விரும்பியதில்லை. நாங்கள் தான் அதற்காகத் துயர்ப்பட்டோம். அது மகிழ்ச் சிக்கும் துயரத்துக்கும் அப்பாலானது. எல்லா எல்லைக் கோடுகளையும் தாண் டியது.*

*இப்பொழுது இந்தக் காகங்களும் அதிகம் மிரட்சியில்லாமல் தாமுவைப் போல இருக்கின்றனவே. இவற்றுக்கு என்னைத் தெரியுமா? இல்லையென்றால் எப்படி இப்படிப் பயமின்றி இவ்வளவு நெருக்கமாக, அருகே இருக்கின்றன.*

*பள்ளிக் காலத்துக்கும் இப்போதைக்கு மிடையில் முப்பதாண்டு கால இடைவெளி. இந்தக் கால இடைவெளியை இந்தக் கணம் இல்லாமற் செய்துவிட்டதாகப்படுகிறது. அதே உணர்நிலை. அதே ஈடுபாடு. அதே ஈர்ப்பு. அதே பிரியம். அதே குதூகலம். தாமுவின் கண்களில் ஒளிரும் அதே ஒளியை இப்போது, இந்தக் கணத்தில், இதோ இந்தக் காகங்களில் காண்கிறேன்.*

*எதுவும் அழியவில்லை. தாமுவின் அதே கருமை. அதே கண்கள்.*

*என் உடல் நெகிழ்ந்தது. நடுங்கும் கைகளில் மனதின் பதற்றத்தை உணர்ந்தேன்.*

*நான் அவற்றை ஊன்றிக் கவனித்தேன். அந்தக் கண்களில் காலங்களை ஊடுருவியும் அதைக் கடந்து செல்லும் ஒளி தெரிந்தது. கருமை நிறைந்த ஒளி. வசீகரமான ஒளி. அழகு திரண்டு அவ்விதமானதாய் அந்தக்*

கண்கள் மின்னின. கருமையான மின்னல். ஒவ்வொரு கணத்திலும் பட்டுத் தெறிக்கும் அழகின் மின்னல்.

மிரட்சியும் வேடிக்கையும் அப்பாவித் தனமும் சுடரும் ஞானமும் நிறைந்த அந்தக் கண்கள், எல்லாக் காலத்துக்கும் உரிய ஒரு அற்புத விளக்கைப் போலத் தோன்றின.

நான் அவற்றை, அந்தக் காகங்களின் கண்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு நேரம் பார்த்திருப்பேன் என்று சொல்ல முடியாது. ஆனால் மிக நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

தலையைச் சாய்த்து அவை மேலும் கீழும் பார்க்கும்போது பூமியையும் விண் ணையும் ஒன்றிணைப்பது போலத் தோன் றியது. சட்டென, தலையைத் திருப்பி, அவை பக்கவாட்டில் அங்குமிங்கும் பார்த்தன. திசைகளெங்கும் ஒளி நிரம்பியது.

அப்போது வெளியை நிரப்பும் விதமாய் கரைந்தன அவை. அல்லது அப்படிக் கரைந்து அந்த ஒலியினால் திசைகளை இணைக்கின்றனவா? அல்லது திசைகளில் நிரம்பு கின்றனவா?

எங்கிருந்து இவை வந்தன? வந்து இப்படி வேடிக்கை காட்டும் நோக்கம் தானென்ன? தாமுவின் உறவைச் சொல்லும் படியாய் இவை வந்தனவா? அல்லது அவை அவற்றின் பாட்டில் நிற்கும்போது நான்தான் இவ்வாறெல்லாம் நினைத்துக் கொள்கிறேனா? இப்படியெல்லாம் என்னு டைய எண்ணங்கள் தோன்றுவதன் காரண மென்ன?

இந்தப் பின்னேரமும் இந்தக் காகங் களும் நினைவின் வெளியில் என்னை இழுத்துச் செல்லக் கூடிய அளவுக்கு இவற்றுள் என்ன இருக்கின்றது?

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா
நின்றன் கரிய நிறம் தோன்றுதையே
நந்தலாலா'

நான் பாடுகின்றேனா இல்லை, இந்த வரிகள் என்மனதுக்குள் எழுந்து வருகின் றனவா? ஒன்றுமே புரியவில்லை. ஆனால் அப்படி அந்த வரிகள் மனதில் அலைபோல மெதுவாக எழுந்து வரும்போது இனிய தாகவே இருக்கின்றன.

இதைப்போல எங்களுடைய தாமு நின்றபோது இந்த வரிகள் பல சமயத்தில் மனதில் எழுந்திருக்கின்றன. இதற்கெல்லாம் தொடர்புகளும் ஏதோ ஒற்றுமைகளும் இருக்கின்றனவா?

எல்லாவற்றுக்கும் இடையிலான தொடர்பு எப்போதும் இருந்து கொண்டு தானிருக்கிறது என்று படுகிறது. ஆனால் அவை வெளிப்படையாகத் தோன்று வதில்லைப் போலும். நம் புலனறியாம லிருக்கிறதே தவிர, இந்தத் தொடர் எப்போதும் அடிநாதமாகவோ அடிச்சர டாகவோ நிகழ்ந்து கொண்டே யிருக்கிறது. இல்லையென்றால் இப்படியெல்லாம் நிகழுமா?

இந்த நினைவுகளின் தொடுகை ஒன்று டன் ஒன்று இணைந்தும் கலந்துமே இருக்கிறது. எல்லாமே ஒன்றின் நீட்சி அல்லது ஒன்றின் தொடர்ச்சிதான் போலும்.

பின்னேரம் கரைந்து இரவாக உருமாறிக் கொண்டிருந்தது. காகங்களைப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்? அவற்றைக் காணவில்லை. எப்போதும் அந்த இடத்தை விட்டு அவை போயிருக்கும் என்றுமே தெரியவில்லை. இப்போது அந்த இடத்தில் கருமை மட்டும் திரண்டிருந்தது. அந்தக் கருமையே கரைந்து இப்படி இரவாகியதோ? அவற்றின் கண்களிலிருந்து பெருகிய கரிய ஒளிதான் இப்படி இரவின் நிறமாகியதா?

அப்போது அந்தர வெளியில் கரைந்து கொண்டு போகும் காகங்களின் குரல் கேட்டது. அந்த இருளில், கருமையின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

எந்தத் திசை என்று தெரியவில்லை. எல்லாத் திசைகளுக்கும் அந்த ஒலி படர்ந்து கொண்டிருந்தது.

அது தாமுவின் குரல்தானா?

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2009 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

- **தாய்மடி தேடி....** — திருமதி கார்த்திகாயினி சுபேஸ் — கொழும்பு - 15.

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

- **இன்னும் கன்னியாக** — பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா — அவுஸ்திரேலியா

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

- **விடிவு** — ஞானகரன் யூடிற் ஷியானா — யாழ்ப்பாணம்

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

- **இந்தப் பிள்ளைக்கு** — அகளங்கன் நா. தர்மராஜா — வவுனியா
- **அடிமை வாழ்க்கை** — கேணிப்பித்தன் ச. அருளானந்தம் — திருகோணமலை.
- **இவனும் மனிதனே** — திருமதி உதயலதா நவநீதன் — யாழ்ப்பாணம்.
- **பதவி உயர்வு** — அகிலேஸ்வரன் சாம்பசிவம் — கனடா
- **எங்க பூமி** — ஆ. தங்கதுரை — மட்டக்களப்பு.
- **அமைதியை நோக்கி** — நெடுந்தீவு செ. மகேஷ் — திருகோணமலை.
- **குறை நிறைத்தல்** — எச். எல். எம். நிசார் — மாவனல்லை.
- **வதனமார்** — தீரன் ஆர். எம். நௌஸாத் — கல்முனை
- **யானைக்கல்முனை** — தாழை செல்வநாயகம் — வாழைச்சேனை.

முக்கிய குறிப்பு:

மூன்றாம் பரிசு பெற்ற சிறுகதை 'விடிவு' போட்டி விதிகளுக்கு மாறாக ஏற்கனவே பிரசுரமாகி இருந்ததால், அடுத்த நிலையில் உள்ள கேணிப்பித்தன் ச. அருளானந்தம் எழுதிய 'இந்தப் பிள்ளைக்கு' என்ற சிறுகதைக்கு மூன்றாம் பரிசு வழங்கப்படுகிறது.

---

நடுவர்கள்: திருமதி. பத்மா சோமகாந்தன்,
புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், திருமதி. வசந்தி தயாபரன்.

**(ஞானம் 110. ஜூலை 2009)**

# தாய் மடி தேடி...

1

கார்த்திகாயினி சுபேஸ்



அமரர் 'செம்பியன் செல்வன்'
ஆ.இராஜகோபால்
ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2009இல்
முதற் பரிசு பெற்ற கதை

**ஆ...** அம்மா வந்திட்டா...!

இதோ... அம்மாவோட அப்பா, அக்கா, தம்பி எல்லாரும் வந்திட்டினம்.

எத்தினை நாள் இவையளக் காணாமல் இந்த உடம்பு முழுக்க காயத்தோட நான் பட்ட வேதினை எல்லாம்... அவையளக் கண்டவுடனைக்கு காற்றாய் கடந்து போயிட்டுது.

பாசத்தோட கிட்ட வந்த அம்மாவைக் கண்டவுடன்.... 'அம்மா' எண்டு கூப்பிட்டன்.

அம்மா கையை நீட்டியபடி கண்ணீரோடு ஓடிவந்து என்னைக் கட்டி அணைக்கின்றா.

அப்பா, அக்கா, தம்பி எல்லாரும் என்னைச் சுத்திக் கட்டிலில் இருக்கினம்.

அம்மாவின்ர அணைப்பில எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. இத்தனை நாளும் அவையளப் பிரிஞ்ச ஏக்கம் என்னைப் பேசவிடாமல் தொண்டையை அடைக்கின்றது.

'அம்மா... இந்தளவு நாளும் என்னை தனிய விட்டிட்டு நீங்கள் எல்லாரும் எங்க போனனீங்கள் அம்மா...'

அம்மா ஒண்டும் பேசாமல் என்னைத் தன்ர நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டு அழுகிறா. அந்த அணைப்பு எனக்கு இதமாகவும் ஆறுதலாகவும் இருந்தது.



இதுக்காகத்தானே என்ர உடம்பில உள்ள காயங்களின் வலியோடு காத்திருந்தேன்.

இந்தக் காயங்களின்ர வலியை விட என்ர அம்மா, அப்பா, அக்கா, தம்பி எல்லாரையும் காணேலை எண்ட வலிதானே எனக்கு நிறைய இருந்திச்சு. இப்ப எல்லாரையும் கண்ட உடன என்ர உடம்பில இருந்த எல்லா வலியும் போயிட்டுது.

**(ஞானம் 111, ஆகஸ்ட் 2009)**

அம்மா என்ர தலையைத் தடவி விடுவது எனக்கு ஆறுதலாக இருந்தது.

அம்மாவை நிமிர்ந்து பார்த்தேன்.

என்ர பார்வையில எதைக் கண்டாவோ... அருவியாய் ஓடும் கண்ணீரோடு என்ர நெத்தியில இதமா ஒரு முத்தம் தந்தா.

அப்போது அம்மாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர்த்துளியொன்று என் கண்ணுக்குள் விழுந்ததும் என் இரண்டு கண்களையும் இறுக்கி மூடிக் கொண்டு சிறிது நேரம் இருந்தேன்.

என் கால்மாட்டில் இருந்த அப்பா வைப் பார்த்தேன்.

முழங்காலோடு மருந்து கட்டிய என்ர வலது காலை தன்ர மடியில வைத்து மெதுவாகத் தடவியபடி இருந்தார்.

'அப்பா' எண்டு கூப்பிட்டேன்.

அவர் என்னை நிமிர்ந்து பார்த்து விட்டு மீண்டும் தலை குனிந்தபடி அழுது கொண்டிருந்தார்.

அவரழுத கண்ணீர் என்ர முழங் காலில கட்டப்பட்ட பன்டேஜில் பட்டுத் தெறித்தது.

திரும்பிப் பார்த்தேன்.

அக்காவும் மணிக்கட்டோடு போன என் கையைத் தடவியபடி அழுது கொண்டிருந்தா.

தம்பி பெருவிரலை வாயில் வைத்து சூப்பியபடி என்னையே இமைவெட்டாது பார்த்துக்கொண்டிருந்தான்.

ஏன் எல்லாரும் என்னோட கதைக் காமல் அழுது கொண்டிருக்கிறியள். என்னோட கதையுங்கோவன்.

நான் குளறி அழுகின்றேன்.

குண்டுச் சத்தங்கள் பக்கத்தில் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

திடீரென எங்கேயோ இருந்து வந்த குண்டு ஒண்டு பெரிய சத்தத்தோட வெடிக் கிறது.

நாங்கள் இருந்த இடமெல்லாம் ஒரே புகைமண்டலம்.

நான் என்ர அப்பா, அம்மா, அக்கா, தம்பியைத் தேடினன். அந்தப் புகை மண்டலத்தோட அவையளும் மெல்ல மெல்ல மறைஞ்சு போய்க்கொண்டு இருக்கினம்.

நான் அவையள 'நில்லுங்கோ நில்லுங்கோ' எண்டு கத்திக் கத்திக் கூப்பி டுறன். அவையள் போயே விட்டினம்.

'அம்மா.... அம்மா....' எண்டு கத்தியபடி நானும் அவையளோட போகவேணும் எண்டு எழும்புறன்... ஆனால் கட்டில விட்டு எழும்ப முடியேல்ல... என்ர உடம்பெல்லாம் என்னவோ செய்யிது. மூச்சு அடைக்குமாப்போல கிடக்கிறது.

திடீரென யாரோ என்னை உலுக்கு மாப் போல இருக்க கண்களைத் திறந்து பார்க்கிறன்.

அங்கே 'நேஸ் அம்மா' நிண்டு கொண்டிருந்தார்.

சுற்றும் முற்றும் பார்க்கிறேன். அந்த ஆஸ்பத்திரி வழமைபோல இயங்கிக் கொண்டிருந்தது.

'அம்மா அம்மா' எண்டு என்ர வாய் முணுமுணுத்தபடி இருக்கிறது.

நான் கண்டது கனவு எண்டு விளங்கின பிறகு எனக்கு ஏமாற்றத்தில் அழுகையே வந்துவிட்டது.

என்ர நிலமை அந்த நேஸம்மாவுக்கு விளங்கிவிட்டது போல...

'தம்பி... என்னப்பன் செய்யுது... கனவு கண்டனிங்களோ அப்பன் பயப்பட வேண்டாம்... அம்மாவை வருவினம் என்ன? பிள்ளைக்கு மாக் கரைச்சுத் தரவே குடிக்க...'

எண்டு என்ர தலையத் தடவியபடி அன்போட கேட்ட நேஸ் அம்மாவைப் பார்க்க எனக்கு அம்மா ஞாபகம்தான் வந்தது.

தொண்டை வறண்டதுபோல இருக்க மெல்ல தலையசைத்தேன்.

அவவும் மாவைக் கரைச்சு எனக்கு மெல்ல மெல்லப் பருக்கி விட்டா.

'தம்பிக்கு காருண்யன்தானே பேர்...'

'ம்ம்...'

'எத்தினையாம் வகுப்புப் படிக் கிறியள்..?'

‘நான் இந்த வரிசம் ஆறாம் வகுப்புப் படிக்க வேணும். ஆனா சண்டையால பள்ளிக்கூடம் போகேலை... உங்களுக்கொண்டு தெரியுமே... நான் ஸ்கொலஸிப் எல்லே பாஸ் பண்ணி னனான். பெரிய பள்ளிக் கூடத்துக்குப் போக சப்பாத்து, பாக் எல்லாம் புத்தம் புதுசா வாங்கி வைச்சுக் கொண்டி ருந்தனான். அதுக்குள்ள....’

‘சரி... சரி... இனிக் காயம் மாற பள்ளிக்கூடம் போகலாம்தானே... நான் பிள்ளைக்கு அம்மா மாதிரி. என்ன வேணுமெண்டாலும் என்னட்ட கேளுங்கோ... என்ன...?’

‘ம்’

‘இந்தாங்கோ இது கந்தசஷ்டி கவசப் புத்தகம். முருகனை நினைச்சுக்கொண்டு இதைப் படிச்சிங்கள் எண்டால் உங்க ளுக்கு ஒரு பயமும் இருக்காது என்ன?’

எண்டு சொன்னபடி அதை என்னட்டத் தந்திட்டு மெல்லமா தலையையும் தடவிப் போட்டுப் போய்விட்டா!

நான் இந்த வவுனியா ஆஸ்பத்திரிக்கு வந்ததில் இருந்து நேஸ்மாரும் டொக்டர் மாரும் என்னை மட்டுமில்ல எல்லாரையும் தான் அடிக்கடி வந்து பாத்து கதைச்சுப் போட்டுப் போவினம். என்னோட கன காயக்காரர் இந்த ஆஸ்பத்திரிக்கு வந்தவை. அதிலையும் என்னப் போல சின்னாக்கள்தான் கனக்க... எங்களைப் பாக்கிறதுக்கு எந்தச் சொந்தக் காரர்களையும் உள்ளுக்க விடாததால் நேஸ்மார்தான் எங்கட எல்லா வேலை யையும் பாக்கிறவை. கக்காக்கு, ஒண்டுக்குப் போனாலும், சத்தி எடுத் தாலும் அவையள்தான் கழுவித் துடைச்சு விடுவினம்.

இப்ப என்னோட பேசின நேசுக்கு என்னில நல்ல விருப்பம். அவவில என்ர அம்மாவின்ர முகச்சாடை இருக்கிற தால எனக்கும் அவவில நல்ல விருப்பம்.

**நான் மட்டுமில்ல என்னோட நூற்றுக் கணக்கான பேர் கால் கை இல்லாமலும் பெரிய பெரிய காயங்களோடையும் இருக்கினம். என்னவிட சின்னச் சின்னக் குழந்தையள், வயசு போனவை, பொம்பிளையள், ஆம்பிளையள் எண்டு அந்த இடமே காயக்காறரால நிறைஞ்சு வழிஞ்சுது.**

நான் அவவை ‘நேசம்மா’ எண்டுதான் கூப்பிடுறனான்.

என்ர கையில அவ தந்திட்டுப் போன புத்தகத்தைப் பார்த்தன். ‘ஆபத்து வேளையில் கைகொடுக்கும் கவசம்’ என முருகன் படத்தோட அச்சிடப்பட்டிருந்தது.

‘படிப்போர்க்குத் துன்பம் போம்...’ என்று தொடங்கி ‘சரணம் சரணம் சண்முகா சரணம்’ என்ற இறுதிவரை எனக்கு மனப்பாடம் ஆகி இருந்தது அவவுக்குத் தெரியாதுதானே’.

மாங்குளத்தில இருந்து கிளிநொச்சி அங்க இருந்து புதுக்குடியிருப்பு என ஒவ்வொரு இடமா விமானக் குண்டு வீச்சுக்கிளாலேயும் பல்குழல், செல் வீச்சுக்குள்ளாலேயும் உயிரைப் பிடிச்சுக்கொண்டு ஓடிப் போகேக்கையும் நாள் கணக்காய் பதுங்கு குழிக்குள்ள இருக்கேக்கையும் இந்தக் கவசத்தைத் தானே வாயோயாமல் சொல்லிக் கொண்டி ருந்தனாங்கள் எண்டது இவையளுக்கு எப்பிடித் தெரியும்?

இப்பிடி நாள் முழுக்க கவசத்தைச் சொல்லியும் என்ன பயன். முருகன் கூட எல்லாரையும் கைவிட்டிட்டாரே!

அண்டைக்கும் அப்பிடித்தானே!

செல்லடி தொடங்கியதும் பதுங்கு குழிக்குள்ள ஓடுவம் எண்டு வெளிக்கிட மேல 'சுப்பசொனிக்' பெரிய இரைச்ச லோட பறந்து வந்து குண்டு போட வீட்டுக்குள்ள இருக்கமுடியாமலும் பதுங்கு குழிக்குள்ள போகமுடியாமலும் அந்த ரிச்சுக் கொண்டு,

'காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

கந்த சஷ்டி கவசத்தைச் சொல்லிக் கொண்டிருக்க அம்மா என்னையும் தம்பியையும் நிலத்தில படுக்க வைத்து எம்மை அணைத்தபடி எமக்கு மேல அம்மாவும் படுத்துக்கொண்டா. அப்பாவும் அக்காவ அணைச்சபடி குப்புறப்படுத்தார்.

பெரிய சத்தத்தோட பக்கத்தில விழுந்து வெடித்த குண்டால் உயிரே போனதுபோல இருந்தது. அதுக்குப் பிறகு என்ன நடந்ததெண்டு எனக்குத் தெரியேல்லை.

கண்ண முழிச்சுப் பாக்கேக்க நிலத்தில விரிக்கப்பட்ட உரைப்பையில மரத்துக்குக் கீழ கிடந்தன்.

மரத்தின்ர கிளை ஒண்டில உயத்திக் கட்டப்பட்ட குளுக்கோஸ் என்ர இடக் கையில ஏறிக்கொண்டிருந்தது.

இப்போதைக்கு இதுதான் எங்கட ஆஸ்பத்திரி எண்டதை அறிஞ்சு கொண்டன்.

வலது கை மணிக்கட்டோட இல்லை. வலது கால் முழங்காலோட இல்லை எண்டதை அறிஞ்சபிறகு இதுக்கு நான் செத்திருக்கலாம் எண்டுதான் நினைச்சன்.

அதைவிட தோள்மூட்டோட ஒரு பெரிய காயம். உடம்பெல்லாம் சரியான வலியாக இருந்தது. மருந்து கட்டேக்க செத்துச் செத்துப் பிழைக்க வேண்டிய தாய் கிடக்கு.

நான் மட்டுமில்ல என்னோட நூற்றுக் கணக்கான பேர் கால் கை இல்லாமலும் பெரிய பெரிய காயங்களோடையும் இருக்கினம். என்னவிட சின்னச் சின்னக் குழந்தையள், வயசு போனவை, பொம்பிளையள், ஆம்பிளையள் எண்டு அந்த இடமே காயக்காறரால நிறைஞ்சு வழிஞ்சுது.

சிலர் செத்துப்போனவையின்ர உடம்பை வைச்சு அழுது கொண்டிருந்திச் சினம். டாக்குத்தர், நேஸ்மார் ஓடி ஓடி காயக் காறரை கவனிச்சுக் கொண்டிருந்திச்சினம்.

நான் இந்த மரத்தடி ஆஸ்பத்திரிக்கு வந்ததில இருந்து என்னை ஒருத்தருமே வந்து பாக்கேல. அம்மாவையளுக்கு என்ன நடந்துதோ எங்க இருக்கினமோ தெரியேல்ல. ஆளுக்காள் ஒவ்வொரு இடமா இடம்பெயர்ந்து போனதில பக்கத்தில சொந்தக்காரரும் இல்லை. ஆரும் தெரிஞ்சவையக் கூடக் காணேல்லை.

எனக்கு அப்பா அம்மாவையப் பாக் கோணும் போல ஆசையா இருக்கு...

அண்டைக்கு திடீரெண்டு ஆரோ வந்தினம். என்னையும் இன்னும் காயக் காரரையும் வாகனத்தில ஏத்திக்கொண்டு வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்திச்சினம். அம்மா, அப்பா, சகோ தரங்கள் எல்லாரையும் விட்டிட்டு நான் மட்டும் அநாதையா இஞ்ச இருக்கிறன்.

கையில இருந்த கந்தசஷ்டி புத்தகம் கைதவறிக் கட்டிலுக்குக் கீழ விழுந் திட்டுது... அத அப்பிடியே விட்டிட் டன். எனக்கிப்ப கந்தசஷ்டி கவசமும் வேண்டாம் கடவுளும் வேண்டாம். அம்மா தான் வேணும்.

தோள்மூட்டுக் காயத்தால முள்ளந் தண்டு, முதுகெல்லாம் ஒரே வலி.

கால் கையில இருக்கிற காயத்தால கால் கையெல்லாம் வலிக்குது...

எனக்கு அம்மாவின்ர மடியில படுத்திருக்க வேணுமாப் போல இருக்கு. அம்மா இந்தக் காயங்கள தன்ர கையால தடவி விட்டாலே காணும் எல்லா வலியும் போய்விடும்.

இப்ப எல்லாரும் எங்க இருக்கினமோ எப்பிடி இருக்கினமோ தெரியாது?

ஏன் என்னை ஒருத்தரும் வந்து பாக் கேல்லை..?

நித்திரை கொள்ளேக்க எல்லாம் எல்லாரும் கனவில வருவினம். கனவு கலையேக்க எனக்கு கவலையாத்தான் வரும்...

ஆஸ்பத்திரியில இடைக்கிட ரி.வி. போட்டு விடுவினம். எனக்கு ரி.வி. பாக்கிற மனநிலையே இல்லை. இறுக்க கண்ணை மூடிக்கொண்டு நித்திரை கொள்ளப் பாப்பன். அப்பத்தானே கனவு வரும். கனவில அம்மா என்னைத் தன்ர மடியில வைச்சு தலையைக் கோதி விடுவா.

வீட்ட அம்மாவோட படுக்கிறதுக்கு நாங்கள் மூண்டுபேரும் சண்டை பிடிப்போம். அம்மாக்குப் பக்கத்தில அவவுக்கு மேல கால்போட்டுக் கொண்டு படுத்தால்தான் எனக்கு நித்திரையே வரும்.

சுவரில் இருந்த மணிக்கூட்டைப் பார்த்தன். நேரம் ஏழு மணியைத் தாண்டி விட்டது. சிங்கள நிகழ்ச்சி ஒண்டு ரி.வி. யில போய்க்கொண்டிருந்தது. சிறுவர்கள் விதவிதமாய் தங்களச் சோடிச்சுக் கொண்டு அந்த நடனப்போட்டி நிகழ்ச்சியில ஆடிக் கொண்டிருந்திச்சினம். அவையள் கதைக்கிற மொழி எனக்கு ஒண்டும் விளங்கேல.

எனக்கு பாட்டு, நடனம் எண்டால் நல்ல விருப்பம் எண்டதால அந்த நிகழ்ச்சியப் பாத்தன். அவர்கள் சந்தோஷமாக ஆடிப் பாடி கைதட்டி மகிழ்ந்திருச்சினம். எல்லாரும் எங்கட வயசுப் பிள்ளையள்தானே! எங்களுக்கு மட்டுமேன் இந்தக் கஸ்டம்.

பள்ளிக்கூடத்தில கலைவிழா எண்டால் கட்டாயம் என்ர நடனமும் இருக்கும். விளையாட்டுப் போட்டியில எத்தின 'கப்' எடுத்தனான் தெரியுமே! தமிழ்த் தினப் போட்டியிலேயும் எத்தின பரிசு பெற்றனான். எங்கட கந்தசுவாமி கோயிலில அம்மா வைச்ச நேர்த்திக்காக ஒவ்வொரு திருவிழாவிலேயும் காவடி எடுக்கிறனான். என்ர காவடியாட்டம் 'சுப்பரா' இருக்கெண்டு எல்லாரும் சொல்லுறவை.

அடுத்தமுறை திருவிழாவுக்கு நான் செடில் குத்தி ஆடவேணும் எண்டு அம்மாவை ஆக்கினைப்படுத்தி ஓம்பட வைச்சன். பங்குனியில திருவிழா நடக்கிறது. நடக்கிற சண்டேக்க திருவிழாத்தான் நடக்குமோ? நடந்தாலும் என்னாலதான் பழையபடி ஆட முடியுமோ?

நடக்கவே ஆற்றையன் உதவி தேவைப்படேக்க... ம்... எல்லாம் கனவிலதான் முடியும்.

என்னைப் பாக்க ஆராவது வருவினம் எண்டு வாசலைப் பாத்துப் பாத்து ஏமாந்ததுதான் மிச்சம். என்ர கைகால் புண் கொஞ்சம் கொஞ்சம் ஆறிவரேக்க எனக்கு ஒரு பொல்லொண்டத் தந்து மெல்ல மெல்ல நடக்கப் பழக்கிச்சினம். ஒற்றக் காலால தெத்தித் தெத்தி நடக்கப் பழகினன்.

இடது கையாலயும் மெல்ல மெல்ல எழுதப் பழகினன்.

திடீரெண்டு ஒருநாள் கொஞ்சப் பேர் வந்து என்னையும் என்னோட காயப்பட்டு சுகமடைஞ்சவையையும் வாகனத்தில ஏத்திக்கொண்டு போக வெளிக்கிட்டிச்சினம்.

என்னைப் பார்த்த நேசம்மா என்னைக் கொஞ்சி என்ர தலையைத் தடவி விட்டா...

"எங்கள வீட்டுக்கே கூட்டிக்கொண்டு போகப் போகினம்... அய்யா... நான் என்ர அம்மா, அப்பா, அக்கா, தம்பி எல்லாரையும் பாக்கப் போறன். நான் போய் என்ர அம்மாட்ட கட்டாயம் உங்களப் பற்றிச் சொல்லுவன் நேசம்மா...

ஒரு நாளைக்கு நீங்களும் எங்கட வீட்ட வாங்கோ என்ன?"

அவ எதுவும் கதைக்காமல் என்னையே பாத்துக் கொண்டிருந்தா. கண்ணால கண்ணீர் வடிஞ்சு கொண்டிருந்திச்சு.

பாவம்... என்ர பிரிவை அவவால தாங்க முடியேல்லப் போல...

அவவோட கனநேரம் கதைக்க விடாமல் என்னைத் தூக்கிக்கொண்டு போய் வாகனத்தில ஏத்திப் போட்டினம்.

நானும் அம்மாவையப் பாக்கப் போற சந்தோஷத்தில இருந்தன்.

கொஞ்ச நேரத்திலேயே வாகனம் நிண்டுட்டுது... யன்னலால எட்டிப் பாத்தன். வரிசையா தகரத்தால அடிச்ச வீடுகள் வெய்யிலில பளபளத்துக் கொண்டிருந்திச்சு... அதச் சுத்தி கம்பி வேலி அடிச்சிருந்தது... உள்ளுக்க ஒரே சனம்.

எனக்கு ஒரே ஏமாற்றமா போச்சு... அழுகையும் வந்திட்டு.

எல்லாரையும் இறக்கி வாசலில நிண்ட வேற்றை பேருகள் விபரங்கள் குடுத்த பிறகு உள்ளுக்க கொண்டு போய் விட்டினம். என்னையும் இன்னும் நாலு பேரையும் ஒரு தகரக் கொட்டகைக்குள்ள கொண்டு போய் விட்டினம்.

எனக்கு காயம்பட்ட கால் நிலத்தில் வைச்சபடி இருக்க கஸ்ரமா இருந்திச்சு... வசதியாய் இருக்க ஒரு கதிரை கூட இல்லை. உள்ளுக்க ஒரே வெக்கை. வாசல் பக்கமா இருந்தால் கொஞ்சம் காத்து வரும் எண்டு அரக்கி அரக்கி வாசலில போய் இருந்தன்.

ஆராரோ என்னைக் கடந்து போகினம், வருகினம்.. எல்லாற்ற முகத்தையும் உத்து உத்துப்பாத்தன். ஆரும் அறிஞ்சவை தெரிஞ்சவை இருக்கினமோ எண்டு...

சிலவேளை என்ர அப்பா அம்மா கூட இஞ்ச இருக்கலாமெல்லோ?

ஆனால் அப்பிடி ஒருத்தரையும் காணேல்லை. எல்லாற்ற முகத்திலயும் ஒரே சோகம்தான். இவையளும் ஆராரைத் துலைச்சுப்போட்டு தேடித் திரியினமோ தெரியாது.

இடதுகால நீட்டி ஒரு மரக்குத்தியோட சாஞ்சு இருந்தன்.

ஒரு கோழியின் அலறல் சத்தம் என்னைத் திடுக்கிட வைச்சது.

திரும்பிப் பாத்தன்.

அஞ்சாறு கோழிக்குஞ்சுகளுடன் தாய்க் கோழி மேல பாத்துக் கத்தியது...

அண்ணாந்து பாத்தன்...

பருந்து ஒண்டு கோழிக்குஞ்சுகைள குறிபாத்து வட்டமடித்துக் கொண்டிருந்தது.

அந்த வெட்டவெளியில் குஞ்சுகளுடன் பதுங்குவதற்கு இடமில்லாமல் கோழி அந்தரிச்சுக் கொண்டு நிண்டது.

ஓடிச் சென்று தன்ர குஞ்சுகளை தன் சிறகால அணைச்சுக் கொண்டது.

நானும் இப்பிடித்தானே அண்டைக்கு குண்டு விழேக்க அம்மாண்ட அணைப்பில இருந்தன்... இப்ப... என்ர அம்மா...

கோழியின் அகோரச் சத்தம்...

பருந்து கோழியைத் தள்ளிவிட்டு குஞ்சொன்றைக் கால்களில் தூக்கியபடி சுப்பர்சொனிக் குத்திக் குண்டுபோட்டிட்டு எழும்புவதைப் போல சடாரென மேலெழுந்து பறந்தது...

தாய்க்கோழியும் குஞ்சுகளும் அவலக் குரலில் கத்திக் கொண்டிருந்தன.

பருந்தின் கால்களில் சிக்குண்ட குஞ்சின் அவலச் சத்தம் என்ர காதில விழுந்தது. எனக்கு என்னவோ செய்தது. மெல்ல மெல்ல அந்தக் குஞ்சின் சத்தம் நின்று போக... எனக்கு மயக்கம் வருமாப் போல் இருந்தது...

மெல்ல அந்த மரக்குற்றியோடு சாய்ந்து கண்களை இறுக்கி மூடிக் கொண்டேன்.

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2009இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை

23

இலங்கையில் களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சட்டத்தரணி சு. ஸ்ரீகந்தராசா. கடந்த 18 வருடங்களாக அவுஸ்திரேலியாவில் தமிழ் மொழிக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் சேவை செய்துவருபவர். அவுஸ்திரேலியாவில் முத்தமிழ்விழாவையும், மாணவர் களுக்கான பேச்சு, இசைப் போட்டிகளையும், சர்வதேச இலக்கியப் போட்டி களையும் பத்துவருடங்களுக்கு மேலாக நடாத்தியவர். அங்கே முதன் முதலாக தனித்தமிழ் இசைவிழாவையும், தமிழ் நடனவிழாவையும் நடாத்தியவர். இலங்கையிலும் அவுஸ்திரேலியாவிலும் பல நாடகங் களை எழுதி, இயக்கி மேடையேற்றியதுடன் சிலவற்றில் அவரே முக்கிய பாத்திரமேற்று நடித்தவர்.

இலங்கையில் சிறந்த நடிகர், சிறந்த நாடக இயக்குனர் விருதுகளைப் பலமுறை வென்றெடுத்தவர். தமிழ்மொழியில் அளவுகடந்த பற்றுள்ளவர். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், நடிகர், நாடக இயக்குனர், வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் முதலிய பன்முகத் தமிழ்ப் பணிகளிலே ஈடுபட்டு வருபவர். அவுஸ்திரே லியாவில் விக்ரோறிய மாநில அரசினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ள இவரைப் பல்லினக் கலாசார அமைச்சர் 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தார். தமிழ் இன்பம், சுந்தரத் தமிழ் என்ற தலைப்புக்களில் தமிழ் மொழி, தமிழ் இலக்கியங்கள் பற்றி இளம் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் அவுஸ்திரேலியத் தமிழ் வானொலிகளில் தொடர் உரைகளை ஆற்றிவருகின்றார். இப்பொழுது வீற்றல்ஸீ தமிழ்ச்சங்கத்தின் தொடர் உரைகளை ஆற்றிவருகின்றார். விற்றல்ஸீ தமிழ்ச்சங்கத்தின் தலைவ ராகவும், அவுஸ்திரேலிய தமிழ் ஆய்வு மன்றத்தின் பொதுச் செயலாள ராகவும் பணியாற்றுகின்றார்.






(ஞானம் 112, செப்டெம்பர் 2009)

சிங்கப்பூர் விமான நிலையத்தில் மாற்று விமானத்திற்குக் காத்திருக்கும் பயணிகள் தரிப்பிடத்தில் அமர்ந்தி ருக்கிறாள் மாலதி. மெல்பேணிலிருந்து பயணித்துக் கொண்டிருக்கும் அவளுக்கு சிங்கப்பூரில் மூன்று மணிநேரத்தரிப்பு. கடிகாரத்தில் நேரத்தைப் பார்க்கிறாள். கொழும்புக்கான விமானம் புறப்பட இன்னும் இரண்டு மணி நேரம் இருக் கிறது. விமானத்தினுள் பயணிகளை அனுமதிப்பதற்கு இன்னும் குறைந்தது ஒன்றரை மணி நேரம் ஆகும். அது வரையில் சாய்வுக் கதிரையில் கொஞ்சம் கண்ணயரலாம் என்றால் எண்ண அலைகள் எம்பிக் குதித்து அவளின் இதயத்தில் மோதிக் கொண்டிருந்தன. தன் வாழ்வில் ஏற்பட்டுவிட்ட சோகத் துடன் தொடர்பான நிகழ்ச்சிகள் மாறாத காயங்களாக மனதில் எரிந்து கொண் டிருந்தன.

பதினான்கு மாதங்களுக்கு முன்னர் இதே சிங்கப்பூர் விமான நிலையத்தில் இதே இடத்தில் அவுஸ்திரேலியா வுக்குச் செல்வதற்காக அவள் தரித் திருந்தாள். ஆனால் அன்று, கொள்ளை ஆசைகளோடும், குதூகலிக்கும் உள்ளத் தோடும் இல்லற வாழ்வில் நுழையப் போகும் இன்பக் கனவுகளோடும் காத்திருந்தாள். பூரித்த நினைவுகளும் புதுமையான உணர்வுகளும் அன்றைய பயணத்தில் அவளோடு துணையாக வந்தன.

மாலதி மிகவும் அழகானவள். பார்த்த வர்களை மீண்டும் பார்க்கத்தூண்டும் கவர்ச்சிகரமான முகம். சிவந்த நிறம். ஒல்லியென்று சொல்ல முடியாத உடல். அளவான உயரம். பெற்றோருக்கு ஒரேயொரு பிள்ளை. தந்தை கருணாகரன் இளைப்பாறிய சுங்க அதிகாரி. தாய் ஜானகி ஆசிரியை. இன்னும் இரண்டு வருடங்களில் சேவையி லிருந்து இளைப்பாறக் காத்திருக்கிறார். இருவரும் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்கள் எத்தனையோ தலை முறைகளை இருத்தி வைத்துப் பாராமரிக்கப் போதுமானவை. வெள்ள வத்தையில் விசாலமான காணியுடன் ஒரு வீடு, அதற்கு சற்றுத் தூரத்தில் மூன்று படுக்கை அறைகளுடன் ஓர் உயர்தரத் தொடர்மாடி மனை. யாழ்ப்பாணத்தில் வங்கியொன்றிடமிருந்து இன்னமும் கொழுத்த வாடகையை வசூலித்துக் கொண்டிருக்கும் மாடிவீடு இப்படி அசையாச் சொத்துக்கள் ஒருபுற மிருக்க தங்க நகைகளாகவும், பங்கு முதலீடு களாகவும் வங்கி வைப்புக்களாகவும் ஏராளமான சொக்துக்கள். எல்லாமே மாலதிக்குத்தான்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு முடிந்ததும் அந்த வருடமே மாலதிக்குப் பட்டதாரி ஆசிரியர் வேலை கிடைத்தது. வேலை பார்க்கவேண்டிய அவசியம் அவளுக்கு இல்லை என்றாலும், படித்த படிப்புக்குக் கிடைத்த வேலைக்கு கொஞ்சநாள் போய்வரட்டுமே என்பது பெற்றோரின் கருத்து. திருமணத்திற்குப் பிறகு அவளுக்கு வேலை தேவை யில்லை என்பது அவர்களது எண்ணம். மாலதிக்கும் அதில் உடன்பாடுதான்.

உள்ளூரில் பல நல்ல இடங்கள் தானாகத் தேடியே வந்தன. ஒரேயொரு பிள்ளை. உள்ளதெல்லாம் அவளுக்குத் தான். எனவே தெறித்துப்பார்த்து மாப்பிள் ளையைத் தெரிவு செய்வதில் மாலதி யின் பெற்றோர் மிகவும் கவனம் எடுத்துக் கொண்டார்கள். மாலதிக்கு இதுவரை யாரிலும் காதல் ஏற்பட்டதில்லை என்பதும், பெற்றோர் பார்க்கும் மாப் பிள்ளையை விருப்போடு ஏற்றுக் கொள்ளும் தெளிவான மனநிலை யில் அவள் இருப்பதும் மாலதியின் பெற்றோருக்கு மாப்பிள்ளையைத் தெரிவு செய்வதில் ஒருவித பூரண சுதந்தி ரத்தைக் கொடுத்திருந்தன. ஆயினும்

**தேன்நிலவு மாலதிக்கு இனிக்கவில்லை.**
**தேன்நிலவே இல்லாத போது எப்படி இனிக்கும்? எல்லாப் பெண்களையும் போலத்தான் மாலதியும் அந்தப் புது உறவின் எதிர்பார்ப்பில் வெட்கம் கலந்த மகிழ்வில் உள்ளம் திளைக்க, உடல் சிலிர்க்க அலங்கரிக்கப்பட்ட அந்த அறைக்குள் நுழைந்தாள்.**
**துஷியந்தன் கட்டிலில் ஏனோதானோ என்று வீற்றிருந்தான்.**
**மாலதி அறைக்குள் நுழையும் போது நிமிர்ந்து அவளைப் பார்த்துவிட்டு எந்தவித சலனமும் இல்லாமல் மீண்டும் குனிந்து கொண்டான்.**
**கண்கள் சந்திக்காவிட்டாலும் அவன் முகத்தில் உற்சாகம் இன்மை இருப்பதை மாலதி உணர்ந்தாள். வா என்று ஒரு வார்த்தைகூடப் பேசாவிட்டாலும், ஒரு புன்சிரிப்புக் கூட இல்லாமல் அவன் இருப்பது அவளுக்கு ஒருவித ஏமாற்றத்தைத் தந்தது.**

தாம் தெரிவுசெய்யும் மாப்பிள்ளையை மாலதிக்குப் பிடித்திருந்தால் மட்டுமே மேற்கொண்டு ஆகவேண்டியவைகளைக் கவனிப்பது என்பதில் இருவருமே மிகவும் தீர்மானமாக இருந்தார்கள். மாலதிக்கு மகிழ்ச்சியான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமே என்று அவர்கள் இருவரும் சற்று அதிகமாக சிரத்தை எடுத்துக் கொண்டார்கள்.

அந்த நேரத்தில்தான் மாலதியின் குடும்ப நண்பர் கோவிந்தராஜன் அவுஸ்தி ரேலியா மாப்பிள்ளை ஒருவரின் விபரங் களுடன் வந்தார். பெயர் துஷியந்தன். பொறியியலாளர் நல்ல குடுப்பத்தைச் சேர்ந்தவர். பெற்றோருடன் அவுஸ்திரே லியாவில் வாழ்கிறார். ஒரேயொரு அக்கா. அவவும் திருமணமாகிக் குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவில்தான். நல்ல இடம் என்று சொன்னார். துஷியந்தன் அங்கே சொந்தமாக வீடும் வாங்கியிருக்கிறாராம். பெற்றோர் தங்களுக்கு ஒரு மரு மகளையல்ல மகளையே தேடுவது போலத் தேடுகிறார்களாம். மாலதியின் அழகுக்கும் அறிவுக்கும் நல்ல குணத்துக்கும் ஏற்ற இடம் என்றெல்லாம் சொன்னார் கோவிந்தராஜன். துஷியந்த னின் படத்தையும் கொடுத்தார். அழகான மாப்பிள்ளைதான். ஜானகி அம்மாவுக்கு மாப்பிள்ளையின் அழகு பிடித்துவிட்டது. கருணாகரன் இரண்டொரு நாளில் பதில் சொல்வதாகக் கூறி கோவிந்தராஜனை அனுப்பிவைத்தார்.

அந்த நிமிடத்திலிருந்து ஒவ்வொரு கணமும் கருணாகரனுக்கும், ஜானகி அம்மாவுக்கும் இதே சிந்தனைதான். பல்வேறு விடயங்களைக் கவனத்திற்கு எடுத்துப் பரிசீலித்தார்கள். நாட்டுப் பிரச்சனை முடிவெடுப்பதை விரைவு படுத்தியது. எவ்வளவு சொத்து இருந் தாலும் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலை. ஒவ்வொருநாளும் என்ன நடக்குமோ என்று எதிர்பார்க்க முடியாத வாழ்க்கை. நாடு முழுவதும் இப்படியே என்றால் நாளைக்கு இந்தப் பதற்றமான சூழலில்தானே மாலதி குடும்பம் நடத்த வேண்டும்? மாலதி அவுஸ்திரேலியா போய்விட்டால் பிறகு ஒன்றிரண்டு வருடங்களில் எல்லாச் சொத்துக்களையும் விற்று விட்டுத் தாங்களும் அங்கே போய்விடலாம். மாலதி ஒரே பிள்ளை என்பதால் தங்க ளுக்கு அந்த வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும். சுங்க இலாகாவில் வேலை செய்தவர் என்பதாலா அல்லது இந்தச் சம்பந்தம் வந்தபின்னர் விசாரித்து அறிந்து கொண்டதாலா என்று தெரியவில்லை கருணாகரன் தனக்குத் தெரிந்த அவுஸ்திரேலிய குடியேற்ற விபரங்கள் எல்லாவற்றையும் மனைவியிடம் கூறினார். 'பிறகென்ன? யோசிக்கிறியள்?

பிள்ளையோட அங்க நாங்களும் போய் இருக்கலாம் எண்டால் இந்தச் சனியன் பிடிச்ச நாட்டில கிடந்து ஏன் சீரழிய வேணும்' என்று வெளிப்படையாகவே தன் முடிவைச் சொன்னா ஜானகிஅம்மா. கருணாகரனும் தலையசைத்தார். மாலதிக்கும் புகைப்படத்தில் பார்த்த மாப்பிள்ளையின் முகம் மனதில் பதிந்துவிட்டது. விடயங்கள் வேகமாக நகர்த்தப்பட்டன. ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டன.

அன்றிலிருந்து ஒரு வருடத்திற்குள் மாலதிக்கும் துஷியந்தனுக்கும் அவுஸ்திரேலியாவில் திருமணம் நடைபெற்றது. முருகன் கோயிலில் திருமணமும் அதனைத் தொடர்ந்து ஒரு பெரிய மண்டபத்தில் வரவேற்பு விழாவும் நடைபெற்றன. தேன்நிலவை ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தனது செலவில் வைப்பதற்கு கருணாகரன் எவ்வளவோ முயன்றும் மாப்பிள்ளையின் பெற்றோர் சம்மதிக்கவில்லை. இராசியான வீடு, அது இது என்றென்னவோ எல்லாம் சொல்லி வீட்டிலேயே தேன் நிலவுக்கு ஒழுங்கு செய்தார்கள். திருமணத்திற்காக மூன்று மாத விசாவில் சென்றிருந்த கருணாகரனும் ஜானகி அம்மாவும் திருமணம் முடிந்த பின்னர் ஒரு மாத காலம் அவுஸ்திரேலியாவெல்லாம் சுற்றிப்பார்த்து விட்டுத் திரும்பினார்கள்.

தேன்நிலவு மாலதிக்கு இனிக்கவில்லை. தேன்நிலவே இல்லாதபோது எப்படி இனிக்கும்? எல்லாப் பெண்களையும் போலத்தான் மாலதியும் அந்தப் புது உறவின் எதிர்பார்ப்பில் வெட்கம் கலந்த மகிழ்வில் உள்ளம் திளைக்க, உடல் சிலிர்க்க அலங்கரிக்கப்பட்ட அந்த அறைக்குள் நுழைந்தாள். துஷியந்தன் கட்டிலில் ஏனோதானோ என்று வீற்றிருந்தான். மாலதி அறைக்குள் நுழையும் போது நிமிர்ந்து அவளைப் பார்த்து விட்டு எந்தவித சலனமும் இல்லாமல் மீண்டும் குனிந்து கொண்டான். கண்கள் சந்திக்காவிட்டாலும் அவன் முகத்தில் உற்சாகம் இன்மை இருப்பதை மாலதி உணர்ந்தாள். வா என்று ஒரு வார்த்தைகூடப்பேசாவிட்டாலும், ஒரு



புன்சிரிப்புக்கூட இல்லாமல் அவன் இருப்பது அவளுக்கு ஒருவித ஏமாற் றத்தைத் தந்தது. இத்தனைக்கும் கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக வாரம் ஒரு தடவையாவது இருவரும் பல தடைவைகள் தொலைபேசியில் கதைத்தவர்கள்தான். திருமண நிகழ்ச்சி களின் போதும் வரவேற்பின் போதும் கலகலப்பாகத்தானே இருந்தார். இப்போது ஏன் இப்படி? என்றெல்லாம் மாலதியின் மனம் குழம்பியது.

ஐந்து நிமிடங்களுக்கு பின்னர் அவன் வாய் திறந்தான்.

‘மாலதி! இருங்க. எனக்கு கொஞ்சம் களைப்பாய் இருக்கு. நேற்றிரவு முழுக்க நித்திரையில்லை. நான் கொஞ்சம் படுக்கிறன். நீங்களும் வேணுமெண்டால் படுங்க. உங்களுக்கும் களைப்பாய்த் தான் இருக்கும். இந்த சாறியளையும் கட்டிக்கொண்டு காலையில் இருந்து ஒரே டென்சனாய் இருந்திருப்பியள்...’

அவன் முடிக்கவில்லை, அவள் தொடங்கினாள், ‘ அப்பிடியொண்டுமில்ல. நீங்கள் தான் களைச்சிருக்கிறீங்க. நீங்க றெஸ்ற் எடுங்க. நான் இருக்கிறன்...’

கட்டிலின் ஓர் ஓரத்தில் அவன் சரிந்து படுத்துக்கொண்டான். எவ்வளவு நேரம் மாலதி கட்டிலில் அமர்ந்திருந்தாளோ அவளுக்குத் தெரியாது. துக்கம் தொண்டையில் நெருட, தூக்கம் கண் களை வருட அப்படியே கட்டிலில் மறு ஓரத்தில் படுத்தாள். இடையே ஒரு முறை தூக்கம் கலைந்து மாலதி விழித்த போது அறை இருளாயிருந்தது. துஷியந்தன் விளக்கை அணைத்திருக்க வேண்டும் என்று ஊகித்துத் கொண்டு அவன் படுத்த பக்கம் திருப்பிப் பார்த்தான். அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் குறட்டைச்சத்தம் கூறிக்கொண்டிருந்தது. அவள் மீண்டும் கண்களை மூடிக்கொண்டு மறுபக்கம் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள். மறுநாள் காலை கதவு தட்டப்பட்டது. மாலதியின் மாமியார் இரண்டு தேநீர்க் கோப்பைகளுடன் அறைக்குள் நுழைந் தாள். இவ்வளவுதான் மாலதியின் முதல் இரவு.

நாட்கள் நகர்ந்தன. பகலெல்லாம் பலர் முன்னிலையில் மட்டுமன்றித் தனித்திருக்கும் போதும் கூட துஷியந்தன் மாலதியுடன் கலகலப்பாகவே இருந்தான். இராவானதும் அவளிடம் இருந்து ஒதுங்கினான். ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி விலகியே யிருந்தான். ஒரே கட்டிலில் படுத்திருந்தாலும் சிறிது நேரத்தில் எழுந்து தன் படிப்பறையினுள் சென்று கொம்பியூட்டரில் கலந்து விடுவான். சிலநாட்கள் அங்கேயே மேசையில் தலைசாய்த்துத் தூங்கியும் விடுவான். மாலதிக்கு இனம்புரியாது இழையோடிய துன்பம் நாளாக நாளாக இரணமாகி அணுவணுவாகச் சித்திர வதை செய்யத் தொடங்கியது. திருமணம் முடித்து ஒரு மாதத்தில் பெற்றோர் இலங்கைக்குத் திரும்பியதும் அவளின் வேதனை விம்மி வெடித்தது. உடல் இச்சைக்காக அவள் அலைய வில்லை. ஆனால் உள்ளத்து உணர்வுகளுக்குத் தடைபோட அவளால் முடியவில்லை. வாழ்க்கை நியதிகளுக்கு மாறான தனது கணவனின் நடத்தையில் உள்ள புதிரை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதேவேளை, இதுவரை ஒரு தடவை கூட அவர்கள் உடலுறவு வைத்துக்கொள்ளததால்,அதனால் உண்டாகக் கூடிய அன்னியோன்னியம், உரிமை நெருக்கம் எதுவுமே அவர்க ளுக்குள் ஏற்படவில்லை. சட்டப்படி கணவன் மனைவியாக இருந்தாலும், இன்னும் அவர்களின் உள்ளங்களுக்கும், உடல்களுக்கும் இடையே இருந்த இடைவெளி, நேரடியாக அவனிடம் இதுபற்றிக் கேட்பதற்கான துணிவை எழவிடாமல் அவளைத் தடுத்தது.

இந்த நிலையில்தான், ஒரு நாள் துஷியந்தனின் அக்கா கௌரி, தாயிடம்

கதைத்த வார்த்தைகள் மாலதிக்கு அந்தத் துணிவைக் கொடுத்தன. கௌரி அடிக்கடி வெளியில் எங்காவது அலுவல் களுக்கோ அல்லது கணவனுடன் நிகழ்ச்சி களுக்கோ செல்லும்போது அவர்களின் ஐந்து வயதுப்பிள்ளை லக்ஷியை துஷிந்தனின் வீட்டில் கொண்டுவந்து விட்டு விட்டுப் போவது வழக்கம். அன்றும் அப்படித்தான், ஒரு மாலைப் பொழுதில் லக்ஷியை விட வந்தவளிடம், துஷியந்தனின் தாய், தாங்களும் வெளி யில் போக இருப்பதாகக் கூறினாள்.

'பிள்ளை! நாங்களும் கலை விழா வுக்குப் போக இருக்கிறம் லக்ஷியை என்னெண்டு இங்க விடுகிறது? அவளையும் எங்களோட கூட்டிக்கொண்டு போகட்டே...'

'மாலதியும் வருகுதோ அம்மா?'

'இல்லை பிள்ளை. துஷியும் மாலதியும் வரேல்லை. ஆனால் அவையளோட என்னெண்டு லக்ஷியை விடுறது...?'

'ஏனம்மா? அவையளோட விடுறத்துக்கு என்ன? உங்களோட லக்ஷியை கூட்டிக் கொண்டு போனால் நீங்கள் விழா பாக்க ஏலாது. அவள் குளப்படி பண்ணுவாள். இரவுக்கு லக்ஷி இங்கேயே நிக்கட்டும். நாங்க லேற்றாத்தான் வருவம். அந்த நேரம் லக்ஷியை எடுக்க வரமாட்டம். அவளின்ர நித்திரை குழம்பிப்போகும். நான் நாளைக்கு வந்துகூட்டிப் போவன். அவள் இங்க மாலதியோட படுக்கலாம் தானே! மாலதி என்ன குடும்பம் நடத்தி பிள்ளையா பெறப் போறாள்...? லக்ஷி யை எண்டாலும் கொஞ்சட்டுமன்,'

இதைக்கேட்டுக் கொண்டிருந்த மாலதிக்கு நெஞ்சில் இடி விழுந்தது போல இருந்தது. - மாலதி என்ன குடும்பம் நடத்தி பிள்ளையா பெறப் போறாள்?...- என்ற வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம்? 'தன்னால் பிள்ளை பெறுவதற்கு முடியாதா? தன்னால் குடும்பம் நடத்த முடியாதா? தான் குடும்பம் நடத்த தகுதியற்றவளா? அப்படியென்றால்... அப்படியென்றால்... இந்த வார்த்தைகளுக்கும் தன் கணவன் தன்னிலிருந்து விலகி நடப்பதற்கும் இடையில் தனக்குத் தெரியாத பயங்கர இரகசியம் ஏதோ ஒன்று இருக்க வேண்டும்.' மாலதிக்கு தலை சுற்றியது. வயிற்றில் அமிலம் நிறைந்து எரிவது போல இருந்தது. நெஞ்சில் தாங்கமுடியாத சுமை ஏறிக்கனத்தது.

நேராக துஷியந்தனின் அறைக்குச் சென்றாள். திருமணமான நாள் முதல் நெஞ்சில் புகைந்துகொண்டிருந்த எரிமலை வெடித்தது. எதையும் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே துஷியந்தனிடம் கேட்க நினைத்தாள்.

'நான் உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும்'

'வாங்க, மாலதி, என்ன கதைக்க கோணும். கதைக்கலாம்'

'உங்கட அம்மாவும், அக்காவும் நான் பிள்ளை பெறமாட்டன் அது இது எண்டு என்னென்னவோ எல்லாம் கதைக்கிறாங்க... ஏன் அப்பிடி?'

'ஒட்டுக்கேட்டீங்களா?'

'ஒரே வீட்டில இருந்துகொண்டு ஒட்டுக் கேட்கவேண்டியதில்லை. அவங்க கதைச் சது எனக்குக் கேட்டது.'

'என்ன கதைச்சவங்கள்?'

'நான் குடும்பம் நடத்தமாட்டனாம்... லக்ஷியைத்தான் கொஞ்சிக்கொள்ள வேணுமாம்... என்ன கதை இது?'

'ஓ... இவ்வளவுதானா... அக்கா லக்ஷியை விட்டுட்டுப் போக வந்திருப்பா. அதனால அவ என்னவோ சொல்லி யிருப்பா.. அத நீங்க பிழையாக விளங்கிக் கொண்டீங்க...'

'எனக்கொண்டும் பைத்தியமில்ல. அவங்கட கதையும் சரியில்ல... உங்கட நடத்தையும் சரியில்ல...'

'என்ர நடத்தையில... என்ன சரியில்ல...?'

மாலதிக்குக் கோபம் தலைக்கேறிது. அவனை உற்றுப் பார்த்தாள். அவளது கண்களில் அனல் தெறித்தது. உடல்

நடுங்கியது. அவனது கேள்விக்குப் பதிலாக, ஆயிரமாயிரம் கேள்விகளை அவன்மீது அள்ளி வீசுவதற்கு அவளின் உதடுகள் துடித்தன.

ஆனால், கோபத்தையும் மீறி குமுறி வந்த அழுகை பேச முடியாமல் தடுத்தது. அங்கிருந்து ஓடிச்சென்று தன் அறைக்குள் கட்டிலில் விழுந்து விம்மி வெடித்தாள்.

அன்று இரவு முழுவதும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. கண்ணீரால் தலையணை முற்றாக நனைந்தது. எதை நினைத்தாலும் கண்ணீர் பெருகியது. தொண்டைப் பகுதி இறுகிக் கனத்து நோவெடுத்தது. விடியவிடிய அவளது சிந்தனை சுழன்றது. எந்தத் திசையும் தெரியாத பாலைவனத்தின் மத்தியிலே தன்னந்தனியே விடப்பட்டது போன்றதொரு வெறுமை உணர்வில் இனம் புரியாத பயம் இதயத்தைக் கௌவியது. அன்றுவரை பூரணமான ஒரு கணவனாகத் தன்னுடன் நடந்துகொள்ளாத துஷியந்தன் மேல் அதுவரை எழாத ஒரு சந்தேகம் அவளுக்கு மெல்லத் தலைதூக்கியது. அப்படியொரு சந்தேகம் எழுந்த கணத்திலிருந்து அவளது சிந்தனை முழுவதும் அதனைச்சுற்றிச் சுற்றியே வந்துகொண்டிருந்தது.

மறுநாள் துஷியந்தன் வேலைக்குச் சென்றதும் அவனது படிப்பறையினுள் சென்று அங்கிருந்த எல்லாப் பொருட்களையும் ஆராய்ந்தாள். இந்த ஒரு நேரத்திற்காக விடியும் வரை கண் விழித்து அவன் செல்லும்வரை காத்திருந்தால் ஏற்பட்ட மன அழுத்தத்தால் அந்த அறையை துருவித் துருவி அசுரத்தனத்தோடு துளாவினாள். அங்கே இருந்த பொருட்கள் அவளுக்கு ஆச்சரியத்தையும், பயத்தையும் கொடுத்தன. எத்தனையோ விதம் விதமான மருந்துக் குளிசைகள், மருத்துவ அறிக்கைகள் சிலவற்றை வாசித்துப் பார்த்தாள். அவளுக்கு எதுவுமே விளங்கவில்லை. தொடர்ந்து தினமும் மருந்தெடுக்க வேண்டிய ஏதோ ஒரு நோய் துஷியந்தனுக்கு இருக்கிறது என்று மட்டும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அது புரிய வந்தபோது அவளின் இதயமே வெடிப்பது போல இருந்தது. ஓவென்று அழவேண்டும் போல இருந்தது. ஆனால் அழுகை வர மறுத்தது. கண்கள் மட்டும் நீரை வடித்தன. நெஞ்சு கனத்தது. சித்தசுயாதீனமற்ற ஒருவரைப்போல் அந்த மருந்துகளை வெறித்துப் பார்த்தபடியே இருந்தாள் சில நிமிடங்களில் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவளைப் போல எழுந்தாள். அந்த அறிக்கைகளிலே சிலவற்றை அங்கிருந்து தொலைநகலி மூலம் பிரதி எடுத்தாள். கண்ணில் பட்ட மருந்துகளின் பெயர்களையெல்லாம் ஒரு தாளில் எழுதினாள். தனது அறைக்குள் சென்று கட்டிலில் வீழ்ந்தாள். அன்றே தனது பள்ளித் தோழி இராதவுக்கு கடிதம் ஒன்றை எழுதி எல்லாவற்றையும் அனுப்பிவிட்டாள்.

மாலதியோடு க. பொ. த. உயர்தர வகுப்புவரை ஒன்றாகப் படித்த இராதா இப்பொழுது ஒரு மருத்துவராக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் கடமையாற்றுகிறாள். மாலதியும் இராதாவும் பள்ளித் தோழிகள் மட்டுமல்ல குடும்ப நண்பர்களும் கூட.

அதனால் இதுபற்றி இராதா மாலதியின் பெற்றோரிடம் சிலவேளை ஏதாவது சொல்லிவிடக்கூடும் என்றெண்ணிய மாலதி அவ்வாறு செய்துவிடவேண்டாம் என்று இராதாவிடம் மன்றாடிக்கேட்டு எழுதினாள்.

ஒருவாரத்தில் இராதா மாலதியியைத் தொலைபேசியில் அழைத்தாள். அழுது கொண்டே அவள் கூறிய விடயம் மாலதியின் தலையில் இடிபோல் விழுந்தது. மாலதியின் கணவன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடமுடியாத நோயால் பீடிக்கப்பட்டிருப்பதை அவளிடமே சொல்லும்போது என்னதான் டாக்டராக

இருந்தாலும் இராதாவால் எப்படி அழாமல் இருக்கமுடியும்? மாலதிக்குத் தன் வாழ்க்கையில் இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் தகர்ந்து விட்டது.

'துஷியந்தனால் குடும்ப வாழ்வில் ஈடுபட முடியாது, அவனைப் பீடித் திருக்கும் நோயை முற்றாகக் குணப் படுத்தவும் முடியாது, பெரும்பாலும் தவறான சிற்றின்பத் தொடர்புகளினால் தான் இந்த நோய் ஒருவருக்குத் தொற்றிக்கொள்ளும்' என்கின்ற விபரங் களையெல்லாம் இராதாவிடமிருந்து அறிந்தபோது மாலதியின் இதயம் நொறுங்கியே விட்டது. அப்போது அவளின் உடலில் இருந்த இரத்த மெல்லாம் உறைந்துவிட்டதுபோல இருந்தது அவ ளுக்கு.

அன்றிலிருந்து அவள் நடை பிணமானாள். தான் ஏமாற்றப்பட்டு விட்டதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னைமட்டுமன்றித் தன் பெற்றோரையும் துஷியந்தனும் அவனின் குடும்பத்தினரும் திட்டமிட்டு ஏமாற்றி விட்டார்களே என்பது அவளது உள்ளத்தை ரணகளமாக்கியது.

அவளால் உண்ண முடியவில்லை. உறங்க முடியவில்லை. எவருடனும் பேசப் பிடிக்கவில்லை. யார் முகதையும் பார்க்கப் பிடிக்கவில்லை. தன்னைச் சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் சதிகாரர்கள், மோசக்காரர்கள் என்ற எண்ணம் அவளைப் பயமுட்டி வாட்டி வதைத்தது. எடுத்ததற்கெல்லாம் துஷியந்தன் மீது எரிந்து விழுந்தாள். அவளது மாற்றத் தைக்கண்டு கலவரமடைந்த துஷியந் தனின் தாயும், கௌரியும் அவளிடம் வந்து என்ன ஏது என்று அறிவதற் காகப் பேச்சுக் கொடுத்தார்கள். அப்போது மாலதி அவர்களைப் பார்த்த பார்வையில் அவர்கள் கருகிப் பேனார்கள். எதுவுமே பேசாமல், சுட்டெரிக்கும் கண்களால் அவர்களை ஒரு நிமிடம் அப்படியே இமை வெட்டாமல் அனல்கக்கப் பார்த்து விட்டு, விருட்டெனத் தன் அறைக்குள் சென்று படாரெனக் கதவைச் சாத்தினாள். மறுநாள் அவள் தன் தந்தையைப் போல எண்ணி மிகவும் மதித்து நடந்த துஷியந்தனின் அப்பா அவளிடம் 'மகள், மாலதி நான் உன்னோட கொஞ்சம் கதைக்கவேணும் பிள்ளை' என்று சொல்லிக்கொண்டு வந்தார். மாலதி, நிமிர்ந்து ஓர் அருவருப்பான பிராணியைப் பார்ப்பது போல அவரைப் பார்த்து, 'சீ நீயும் ஒரு மனுஷனா...தூ......' என்றாள். அதைப் பார்த்துவிட்ட துஷியந்தன் பாய்ந்தோடி வந்து, 'ஏய்! என்னடி செய்த நீ?' என்று கேட்டுக்கொண்டே அவளை அடிக்கக் கையை ஓங்கினான். ஓங்கிய கையை தடுத்துப் பிடித்த மாலதி, அதனை உதறித் தள்ளிய வேகத்தில் அவன் நிலை குலைந்துபோனான்.

'என்ன அடிக்க வாறீங்களா? பெம்பிளைய அடிச்சால் மட்டும் நீங்க ஆப்பிளையாகிடுவீங்களா?' என்று சொல்லி விட்டு யாருடைய பதிலுக்கும் காத்திராமல் மின்னலென அவ்விடத்தை விட்டகன்று தன் அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக்கொண்டாள். தன் கையை அவள் உதறித்தள்ளிய வேகத்தல் ஓர் ஆணுக்கு இருக்கக்கூடிய பலம் இருப்பதை உணர்ந்து கொண்ட துஷியந் தனுக்கு, பொம்பிளையை அடிச்சால் மட்டும் நீங்க ஆம்பிளையாகிடுவீங் களோ?' என்ற கேள்வி பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கணையாக நெஞ்சில் பாய்ந்தது, அவனின் உடற்பலத்தையும் மனப்பலத்தையும் ஒரே கணத்தில் உறிஞ்சிக் குடித்தது.

அடுத்தடுத்த நாட்களில் வீட்டுக்கு முன்னால் வாடகைக் கார் வந்து நிற்பதும், மாலதி ஏறிப் போவதும், பின்னர் வாடகைக் காரிலேயே அவள் வந்து இறங்குவதும் எல்லோருக்கும் பதற்றத் தைக் கொடுத்தது. எங்கே போகிறாய் என்று கேட்பதற்கு யாருக்கும் துணி

வில்லை. துஷியந்தன் ஒரு தடவை கேட்டான். "மாலதி... என்ன நீ உன் பாட்டுக்கு எங்கேயோ போறாய்... வாறாய்... அதுவும் டாக்ஷியில...?" அவள் சொன்ன பதில் அவனைத் திக்கு முக்காடச் செய்துவிட்டது. 'பயப்பிடா தீங்க.. உங்கட அக்கா நினைக்கிற மாதிரி நான் ஆம்பிளை தேடிப் போகேல்ல.' துஷியந்தன் மௌனமானான்.

அதற்கு முதல் நாள் துஷியந்தனின் அம்மா, அப்பா, அக்கா கௌரி, கௌரியின் கணவர் எல்லோரும் ஒன்றாகக் கூடியிருந்து மாலதியைக் குறை சொல்லி குற்றம் சாட்டி பேசிக் கொண்டிருந்தது துஷியந்தனுக்குத் தெரியும். தாங்கள் செய்த தவறை மறைத்து, மாலதியைப் பற்றிக் கண்ட விதமாக பேசினார்கள்.

'இப்ப என்ன நடந்து போச்சுதெண்டு இப்பிடிக் குதிக்கிறாள்.'

'உலகத்தில நடக்காத ஒண்டா? கலியாணம் நடந்த பிறகு ஒரு விபத்தோ, நோயோ வந்து புருஷனுக்கு ஏலாமல் போனால் என்ன செய்யுறது.. எத்தினை குடும்பத்தில அப்படியெல்லாம் நடந்தி ருக்குது?'

'அவளுக்குத் திமிர்.'

'போயும் போயும் இப்படி ஒருத்திய எங்கிருந்து அப்பா கண்டு பிடிச்சீங்க.?..' இப்படியெல்லாம் மாலதிக்கு கேட்கக் கூடியதாக அவர்கள் திட்டிக் கொண்டி ருப்பதைத் தனது அறைக்குள் இருந்து மாலதி கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். தன்னை வம்புக்கு இழுத்து அவமானப் படுத்துவதற்காகத் திட்டமிட்டே இப்படி நடக்கிறது என்பதை மாலதி உணர்ந்து கொண்டாள். கோபத்தை அடக்கி மனதுக்குள் குமுறிக் கொண்டி ருந்தாள். அப்போது, கௌரி சொன்ன வார்த்தைகள் அவளைக் கொந்த ளித்தெழத் தூண்டின. ஆனாலும் மிகவும் கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டாள்.

'அவுஸ்திரேலியா வாழ்க்கை கிடைச் சது எண்டு நினைக்காமல் ஆம்பிளைச் சுகத்துக்கு அலையுறாள்... இவளெல் லாம் ஒரு பொம்பிளையா...? என்று கௌரி கக்கிய வார்த்தைகள் வெகு நேரத்திற்கு மாலதியின் மனதை எரித்துக் கொண்டிருந்தன. 'அஞ்சு வயதுப் பிள்ளையை தன்ர தாயோட விட்டுப் போட்டு ஒவ்வோரு வெள்ளிக் கிழமையும் இரவிரவா நைற் கிளப்பில் கூத்தடிக்கிற கௌரி என்னையா ஆம்பிளைச் சுகத்துக்கு அலைபவள் என்று சொல்கிறாள். என்று நெஞ்சுக்குள் குமுறிக்கொண்டிருந்தாள். அந்த வார்த் தைகளை அவளால் தாங்க முடிய வில்லை. ஆத்திரம், துக்கம் எல்லாம் அழுகையாக வெடித்தது. நீண்டநேரம் அழுது தீர்த்தபின்னர் அவள் நிதான மானாள்.

எல்லோரும் சேர்ந்து தன்வாழ்வைப் பாழாக்கிவிட்டு இப்போது தன்னையே குற்றவாளியாக்கிக் கதைக்கிறார்கள். அவர்களுக்குப் பாடம் படிப்பிப்பதை விடத் தன்வாழ்வை அவர்களிடம் இருந்து மீட்டெடுப்பதுதான் புத்திசாலித்தன மானது என்று தீர்மானித்தாள். அதன் விளைவாகத்தான் அவள் அடிக்கடி வெளியே சென்றாள். யாருக்கும் தெரி யாமல் தன் பயண ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் துஷியந்தனின் கேள்விக்கு அப்படி யொரு சூடான பதில் அவளிடம் இருந்து வெளிப்பட்டது. முதல்நாள் தமக்கை கூறிய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு மௌனமாயிருந்த துஷியந்தனின் குற்றமுள்ள நெஞ்சுக்கு மாலதியின் பதிலுக்கும் மௌனமாவதைக் தவிர வேறுவழி இருக்க வில்லை.

பக்கத்து இருக்கைகளில் அமர்ந் திருந்த சிலர் எழுந்து பரபரப்போடு தமது உடமைகளைத் தூக்கிக் கொண்டு நடந்தார்கள். அறிவித்தல் பலகையில்

மாலதி செல்லும் கொழும்பு விமானம் பயணிகளை ஏற்றுவதாக அறிவிக்கும் குறிப்பு வந்து விழுகிறது. அவர்களும் அதே விமானத்தில் பயணிப்பவர்களாக இருக்க வேண்டும். மாலதி எழுந்து தனது கைப்பையை எடுத்துக்கொண்டு, சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்து விட்டு, அவளது விமானத்தில் பயணிகள் ஏறுவதற்கு உட்புகவேண்டிய நுழைவாயிலை நோக்கிப் நடக்கிறாள். அங்கே பாதுகாப்புச் சோதனைகள் முடிவடைந்து விமானத்தினுள் சென்றதும் விமானப் பணிப்பெண் அவளுக்குரிய இருக்கை அமைந்துள்ள பகுதியைச் சுட்டிக்காட்டுகிறாள். மாலதி தன் இருக்கையில் அமர்ந்து, தனது கைப்பை யினுள் இருந்து ஒரு தாளை எடுத்தாள். அது அவள் துஷியந்தனுக்கு முகவரி யிட்டு, மெல்பேண் விமான விலையத்தில் இருந்த தபால் பெட்டிக்குள் போட்டுவிட்டு வந்த கடிதத்தின் பிரதி. அமைதியாக அதை வாசித்துப்பார்க்கிறாள்.

'துஷியந்தனுக்கும் குடும்பத்தாருக்கும் வணக்கம். துஷியந்தனுக்கு என்ன நோய் என்று தெரிந்திருந்தும் ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழடிக்க நினைத்த உங்களையெல்லாம் கடவுள் என்று ஒருவர் இருந்தால் பார்த்துக் கொள்ளட்டும். எனது வாழ்க்கையை நான் தீர்மானித்துக் கொள்வேன். நான் கொழும்பிற்கு எனது பெற்றோரிடம் செல்கிறேன். யாருடனோ ஓடிப்போய் விட்டாள் என்று நீங்கள் ஊரெல்லாம் பறையடிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். அது உங்கள் பாவச் சுமையை மேலும் கூட்டுமேயன்றி என்னைப் பாதிக்காது.

இறுதியாக துஷியந்தனுக்கு சில வார்த்தைகள். அவுஸ்திரேலியச் சட்டப்படி என்னை விவாகரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுத்து உங்கள் பாவங்களில் சிறுபகுதியை யாவது கழுவிக் கொள்ளப் பாருங்கள். நீங்கள் அதைச் செய்தாலும் செய்யா விட்டாலும் வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக வாழ்ந்த எனது பெற்றோர் இறுதிக்காலத்திலும் அப்படியே வாழ வேண்டும் என்பதற்காக நான் திருமணம் செய்வேன். எவ்வளவோ நல்லவர்கள் உத்தமர்கள் இந்த உலகத்திலே இருக்கிறார்கள். அவர்களில் என் கதை முழுவதையும் கேட்டு என்னைத் திருமணம் செய்துகொள்ளும் ஒருவருடன் நான் சந்தோஷமாக வாழ்வேன். ஒரு வகையில், உங்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். அவுஸ்தி ரேலியாவுக்கு நான் வரும் போது இருந்தது போலவே என்னைத் திரும்பிச் செல்ல வைத்திருக்கிறீர்கள். இன்னும் கன்னியாகவே நான் இருப்பது உங்களால் தானே. அந்த நன்றிக் கடனுக்காக உங்களுக்குக் கொடுத்த சீதனப்பணம், வெள்ளவத்தை வீடு எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றை நீங்கள் திருப்பித்தரத் தேவையில்லை. உங்கள் வைத்தியச் செலவுக்கு பயன் படுத்துங்கள். நீங்களோ உங்கள் குடும்பத்தவரோ இனிமேலும் யாரையும் ஏமாற்றாதீர்கள்.

இப்படிக்கு
மாலதி

வாசித்து முடிந்ததும் மெல்லியதொரு நிம்மதிப்பெருமூச்சு அவளிடம் இருந்து வெளிப்படுகின்றது. கடிதப் பிரதியை மடித்து மீண்டும் தன் கைப்பைக்குள் வைக்கிறாள். இருபது நிமிடங்களில் விமானம் தரையோட்டத்தைத் தொடர்ந்து மெல்ல எழும்பிக் கொழும்பை நோக்கிப் பறக்கின்றது.

(யாவும் கற்பனை)

"தம்பி! எப்பிடியெண்டாலும் என்ன வெளீல எடுத்திரு. எத்தின நாளைக்குத்தான் இஞ்ச இருக்கிறது."

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுப்பையர் மகனிடம் மிகவும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டார்.

அவனால் என்ன செய்யமுடியும்.

வவுனியா வைத்தியசாலையும் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி இடைத்தங்கல் நலன்புரி முகாமுமாக மாறிமாறி அவர் அலைக் கழிந்து கொண்டிருப்பது மிகவும் பரிதாபகர மானதுதான்.

ஆனால் அவர் மட்டுமா...

மூன்றாவது தடவை வைத்தியசாலைக்கு வந்திருக்கும்போது தன்னைப் பார்க்க வந்திருந்த மூத்த மகனிடம் மிகவும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார் சுப்பையர்.

சுப்பையரின் மூத்த மகன் வவுனியா விலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் ஆசிரியர். மருமகளும் ஆசிரியை.

இரண்டாவது மகன் வவுனியா பெருந் தெருக்கள் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர். இரண்டாவது மருமகளும் ஆசிரியை.

இவர்கள் யாவரும் வவுனியா நகருக்குள் மிகவும் வசதியாக வாழ்ந்து கொண்டிருக் கின்றனர்.

சுப்பையரின் ஒரே மகள் லண்டனில் கணவன் பிள்ளைகளோடு வசதியாக வாழ்கிறாள்.





அமரர் 'செம்பியன் செல்வன்'
ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச்
சிறுகதைப் போட்டி 2009இல்
மூன்றாம் பரிசு பெற்ற கதை

3

# இந்தப் பிள்ளைக்கு

அகளங்கன் நா. தர்மராஜா

(ஞானம் 115, டிசம்பர் 2009)

**அவரது மனைவி யுத்த அரக்கனால் விழுங்கப்பட்டு முல்லைத்தீவு மண்ணிலே ஐக்கியமாகியபோது அவருக்கு ஆறுதல் கூறக்கூட மூன்று பிள்ளைகளில் ஒருவருமே அங்கில்லை.**

செல்வத்துக்குக் குறைவில்லை. அவரை வைத்துப் பராமரிக்க இரண்டு மகன்கள் குடும்பமாக நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

ஆனால் அவரோ அகதிமுகாமில். திருகோணமலைவைத்தியசாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட பல நோயாளிகளில் சுப்பையரும் ஒருவர்.

அவருக்கு வவுனியாவிற்கு வரச் சிறிதும் விருப்பம் இல்லை. தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த முல்லைத்தீவு மண்ணை விட்டுப் பிரிய மனமில்லாமல் எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியில் அங்கேயே இருந்து வந்தார்.

காணி பூமி சொத்துச் சுகம் அதிகம். அந்த மண்ணிலே வாழ்ந்து பழக்கப் பட்டவர். வேற்றிடம் சென்று வாழ விரும்பவில்லை.

அவரது மனைவி யுத்த அரக்கனால் விழுங்கப்பட்டு முல்லைத்தீவு மண்ணிலே ஐக்கியமாகியபோது அவருக்கு ஆறுதல் கூறக்கூட மூன்று பிள்ளைகளில் ஒருவருமே அங்கில்லை.

சண்டை உக்கிரமடைந்ததால் வவுனியாவிலிருந்த மக்கள் மருமக்களாலேயே அங்கு செல்லமுடியவில்லை.

அப்படியிருக்க லண்டனில் இருக்கும் மகளை எப்படி எதிர்பார்க்க முடியும்.

தங்கள் தாய் இறந்த செய்தியைக் கூட மூன்று நாட்களின் பின்புதான் வவுனியாவிலுள்ள பிள்ளைகள் அறியக் கூடியதாக இருந்தது.

அதுவும் லண்டனிலிருந்துதான் அவர்களுக்கு அந்தச் செய்தி கிடைத்தது.

தங்களுக்குள்ளே கூடி, ரகசியமாக அழுது தீர்த்துவிட்டு தந்தையைப் பற்றிய தகவலை அறியமுடியாமல் அவர்கள் தவித்த தவிப்பு, தவித்தவர்களுக்குத்தான் புரியும்.

சுப்பையருக்கும் காயம் ஏற்பட்டதாகச் செய்திகள் கசிந்த போதும் உண்மைநிலையை அவர்களால் அறிய முடியவில்லை. அந்தக் கொடூரமான செல் தாக்குதலினால் தனது மனைவியைப் பறிகொடுத்த சுப்பையர் நிலை கலங்கிப் போனார்.

சிறு காயங்களோடு தப்பிய அவர் அதன்பின் அங்கிருக்க விரும்பவில்லை.

பல நோய்களின் இருப்பிடமான அவரின் உடம்பு போதிய மருத்துவ வசதியில்லாத அந்த மண்ணில் அதற்கு மேலும் தாக்குப் பிடிக்காது என்பது அவருக்குத் தெரியும்.

மனைவி இல்லாத, பிள்ளைகள் இல்லாத அந்த மண்ணில் தனது நோயையும், தனிமையையும் போக்க நினைத்தார். நோய் நொடி இல்லாமல் பாய் படுக்கை இல்லாமல் நல்ல சுகதேகியாக அங்கும் இங்கும் ஓடி ஆடி சுறுசுறுப்பாக இயங்கிவந்த அவரின் மனைவி, ஒரு நொடிக்குள் கண்முன்னே இரத்த வெள்ளத்தில் கிடந்து செத்த கோரச் சாவு அவரிதயத்தைக் கூரிய வாளாய் அறுத்தது.

பிள்ளைகளைக் கண்டு அந்தத் துயரைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

புதுமாத்தளன் பகுதியிலிருந்து கப்பல் மூலம் வந்த நோயாளிகளில் ஒருவராக திருகோணமலை வைத்திய சாலைக்கு வந்து சேர்ந்தார்.

**“தம்பி! நீ மனித உரிமைக்காறரிட்டப் போய் முறையிட்டுப்பார்.**
**என்ர பிள்ளையளோட இருக்கிற உரிமை எனக்கில்லையோண்டு பாப்பம்.**
**என்ர நோய்க்கு நான் விரும்பிறபடி நல்ல மருத்துவம் செய்யிற**
**உரிமை எனக்கில்லையோண்டு கேட்டுப் பார்.**
**பெத்த தகப்பனப் பாக்கிற உரிமை**
**பிள்ளையளுக்கு இல்லையோண்டு கேள்.”**

---

திருகோணமலை வைத்தியசாலைக்குச் சுப்பையர் வந்து சேர்ந்த செய்தியைப் பத்திரிகை மூலம் அறிந்த பிள்ளைகள் பதறித் துடித்தனர்.

திருகோணமலைக்குச் செல்ல முயன்றனர்.

முல்லைத்தீவு அடையாள அட்டையை வைத்துக் கொண்டு மதவாச்சியைத் தாண்டுவதைவிட யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவது சாத்தியம் போல் தெரிந்தது.

மதவாச்சியோடு திரும்பி விட்டனர்.

மூன்று நாட்களின்பின் வவுனியா வைத்தியசாலையில் தந்தையாரைச் சென்று பார்த்தனர்.

வைத்தியசாலைக்குள் நுழைவதே பயங்கரமானதாக இருந்தது. வவுனியா வைத்தியசாலையின் வழமையான வெளிநோயாளர் பகுதி இராணுவத்தினருக்கே ஒதுக்கப்பட்டபின் அங்கு செல்வதே பயமானதாக இருந்தது.

புதிய வெளிநோயாளர் பகுதியினூடாகத்தான் உள்ளே செல்ல வேண்டும்.

அதற்குள் கண்டபடி யாரும் செல்ல முடியாது.

பாஸ் நடைமுறை, அடையாள அட்டைப் பதிவு எனப் பல நடைமுறைகள் உண்டு.

வன்னியிலிருந்து காயம்பட்டு வந்தவர்களைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றால் பலரின் சந்தேகக் கண்களுக்குள் சிக்கவேண்டி வரும்.

இதற்கெல்லாம் பயந்தால் முடியுமா.

தந்தையைச் சென்று பார்த்தனர்.

தாயை இழந்த சோகத்தைத் தந்தையோடு பகிர்ந்து கொண்டனர்.

இரண்டு நாட்கள் கழித்து சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் அமைக்கப் பட்டுள்ள இடைத்தங்கல் முகாமுக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

வவுனியா நகருக்குள் இருக்கும் இரண்டு பிரபலமான தமிழ்ப் பாடசாலைகளான வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும், சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும் இடைத்தங்கல் நலன்புரி முகாம்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. காமினி மகாவித்தியாலயமும், நகருக்கு சற்று வெளியே இருக்கும் முஸ்லிம் மகாவித்தியாலயமும், பூந்தோட்டம் வித்தியாலயமும் இத் தேவைக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

இவற்றில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் மட்டும்தான் திருகோணமலையிலிருந்து வருகின்ற நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களில் உள்ளவர்களுக்கு அம்மாள் வருத்தம் வந்தால் பூவரசங் குளம் வைத்தியசாலைக்கு அனுப்பப் பட்டு விடுவார்கள்.

இடைத்தங்கல் முகாம்களிற்குச் சென்று உறவினர்களைப் பார்க்க முடியாது.

சுப்பையர் இருந்த முகாமுக்குச் சென்று அவரை யாரும் பார்க்கவில்லை.

பார்க்கவும் முடியாது.

இடையிடையே அவர் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் படும்போது மட்டும் சென்று பார்க்கலாம். சாப்பாடு கொடுக்கலாம்.

இப்போது மூன்றாவது முறையாக வைத்தியசாலைக்கு வந்து கிடக்கிறார் சுப்பையர்.

பிள்ளைகள் அருகில் நிற்கின்றனர்.

"தம்பி! வெளீல விட்டிட்டாங்க ளெண்டா பிறைவேற்றில நல்ல மருந் தெடுத்துப் பாக்கலாம். இஞ்ச கிடந்து என்ன பிரயோசனம்..."

பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

"பாப்பம். நாங்களும் சும்மா இருக் கேல்ல..." மூத்த மகன் சற்று ஆறுதலாகச் சொன்னான்.

"தம்பி! எனக்கு அரசாங்கம் ஒண்டுந் தரத்தேவையில்ல. நாங்களென்ன ஒண்டுக் கும் வழியில்லாத ஆக்களே. என்ன வெளீல விட்டா என்ன பிரச்சி னையாம். என்ர பிள்ளையளோட நான் இருந்திற்றுப் போறன். இதுக்கு ஆரிட்டயும் அனுமதி பெறவேணுமோ."

மகனுக்குச் சொன்னதைத்தான் அவர் இடைத்தங்கல் முகாமிலும் அதிகாரி களுக்குச் சொன்னார்.

யாரும் அதைக் கேட்பதாக இல்லை.

வெளியே விடுவதாகவும் இல்லை.

"நானும் எவ்வளவோ றை (try) பண்ணிக் கொண்டுதான் இருக்கிறன்.

பிரதேசச் செயலாளர், அரசாங்க அதிபர் எண்டு கடிதங்களை வாங்கி அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறன். ஆனா சரி வருதில்ல. பாப்பம்"

சலிப்போடு கூறினான் மூத்த மகன்.

அவனது பதிலில் விரக்தியும் ஏமாற் றமும் கலந்திருந்தன.

இளையவனது முகத்தைப் பார்த்தார் சுப்பையர்.

"தம்பி! நீ மனித உரிமைக்காறரிட்டப் போய் முறையிட்டுப் பார். என்ர பிள்ளை யளோட இருக்கிற உரிமை எனக்கில்லை யோண்டு பாப்பம். என்ர நோய்க்கு நான் விரும்பிறபடி நல்ல மருத்துவம் செய்யிற உரிமை எனக்கில்லையோண்டு கேட்டுப் பார். பெத்த தகப்பனப் பாக்கிற உரிமை பிள்ளையளுக்கு இல்லை யோண்டு கேள்."

கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டவராகக் கதைத்தார் சுப்பையர்.

"அங்கயெல்லாம் போய் முறை யிட்டதாத் தெரிஞ்சா நாங்கள் இஞ்ச இருக்கேலாது. உங்களுக்கு வவுனியா நிலமை நாட்டு நிலமை தெரியாததால சொல்லுறியள். அது வேற பிரச்சனயளக் கொண்டு வரும்..."

"என்ன பிரச்சனயளக் கொண்டு வரும்..." சற்றுக் கோபமாகக் கேட்டார் சுப்பையர்.

அங்கும் இங்கும் பார்த்து விட்டு. "அத விடுங்கோ... அத இஞ்ச கதைக் கேலாது..." என்று சொல்லிவிட்டு மௌன மானான் இளையவன்.

சுப்பையர் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்தார் இருப்பினும் அவரால் அமைதியாக இருக்க முடியவில்லை.

"நீங்கள் ரெண்டு பேரும் அரசாங்க உத்தியோகம் பாக்கிறியள். மருமகள் மார் ரெண்டு பேரும் அரசாங்க உத்தி யோகத்தில இருக்கினம். மகள் லண்டனில வசதியா இருக்கிறாள். எப்ப கேட்டாலும் காசனுப்புவாள்.

அப்ப என்னை ஏன் அகதி எண்டு சொல்லி இஞ்ச வைச்சிருக்கினம். ஏன் அரசாங்கம் எனக்கு வீணாச் செலவழிக் கோணும்.

பேசாமல் என்ன விட்டிட்டா நான் என் பாட்டுக்கு உங்களோடை வந்திருவன். எல்லாருக்கும் நல்லது தானே. அகதி எண்டா என்ன அது ஆரும் இல்லாத ஆக்களல்லோ அகதி..."

எட்டாம் வகுப்புவரை மட்டுமே படித்திருந்த பாமர விவசாயியான சுப்பையரின் கேள்விக்கு, பட்டதாரிகளான பிள்ளைகளினாலோ மருமக்களாலோ கூடப் பதில் சொல்ல முடியவில்லை.

ஏன், அரசினாலும்தான்.

சைவப் பிரகாச மகளிர் கல்லூரி இடைத்தங்கல் நலன்புரி முகாமில் ஒரு செய்தி பரவியது.

“வயது போனவர்களை பிள்ளையள் அல்லது சொந்தக்காரர் விரும்பினால் கூட்டிச் செல்லலாம்” என்ற செய்திதான் அது.

சுப்பையருக்கு மிகுந்த மகிழ்ச்சி.

வெளியே சென்று இந்த ந... விட்டு நீங்கி பிள்ளைகள் பேரப்பிள்ளைகளோடு தங்கிவிடலாம் எனக் கணக்குப் போட்டார்.

மீண்டும் பிள்ளைகளைச் சந்திக்க விரும்பி, நெஞ்சுக் குத்தைச் சாட்டாக்கி வைத்தியசாலைக்குச் சென்று படுத்துக் கொண்டார்.

பிள்ளைகள் தகவல் அறிந்து வந்து சேர்ந்தனர். நலன்புரி நிலையங்களில் செல் போன் பாவனைக்குத் தடை இருப்பினும் கள்ளமாகப் பலர் பாவித்துக் கொண்டு தான் இருந்தனர்.

ஒருவாறு பிள்ளைகளைத் தொடர்பு கொண்டு வைத்திய சாலைக்குத்தான் செல்லுகின்ற செய்தியைத் தெரிவித்திருந்தார்..

“மோன... வயசுபோன ஆக்கள வெளீல விடுகினமாம். ஒருக்கா முயற்சி செய்து பாருங்கோ.”

“அறுபது வயசு முடிஞ்சாக்களத்தான் அப்பிடி விடுறதாத் திட்டமாம். அதுவும் இன்னும் பேச்சோடதான் கிடக்கு...” சுவாரஸ்யமில்லாமல் கூறினான் மூத்தவன்.

சுப்பையருக்கு அளவு கடந்த கோபம் வந்தது. வன்னி மண்ணுக்கே உரித்தான ரோசமும் கோபமும் கொந்தளிக்க,

“அறுபது வயசு முடிஞ்சாத்தான் வயசு போனதெண்டு அர்த்தமோ. முந்தியெல்லாம் ஐம்பத்தைஞ்சு வயசு முடிய வயசு போச்செண்டு பென்சன் குடுத்தவங்களில்லோ. இப்ப அறுபது வயது முடிஞ்சாத்தான் வயது போனதாமோ. உத்தியோகக் காறங்களுக்கும் அரசியல்க் காறங்களுக்கும் தான் உது சரி. எங்களுக்கு உது சரிப்பட்டு வராது.

கிழவன்மாரெல்லாம் தலைக்கு கறுப்பு மை பூசி டை அடிச்சு இளந்தாரியளாத் திரியிறதால வயசு போனதெண்டா என்னண்டு ஒருத்தருக்கும் விளங்கேல்லை.” அவரது கடுங் கோபத்துக்கும் காரணம் இருந்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

“அப்ப... இப்ப என்ன செய்யிறது. ம்... ம்... இன்னும் ஆறு மாதம் அகதி வாழ்க்கைதான். எல்லா வசதியும் இருந்தும் இன்னும் ஆறு மாதங்களுக்கு அகதி தான்.” மிகவும் கவலையோடு சொல்லித் திட்டிக் கொண்டிருந்த சுப்பையர்,

“எப்ப பிரச்சன தீரப்போகுது. எப்ப நிம்மதியா இருக்கப் போறம். வெளியில போனாலும் தமிழன் இந்த நாட்டில அகதி தான்.” என்று சலித்துக் கொண்டவராக தனக்கு எதிரில் உள்ள கட்டிலில் நோயுற்ற தந்தையோடு காயப்பட்டுக் கிடந்த இரண்டு வயதுப் பிள்ளையை உற்று நோக்கினார். அவர்களும் அவரோடுதான் முல்லைத்தீவிலிருந்து வந்திருந்தனர்.

ஒரு பெருமூச்சு விட்டபடி சுப்பையர் தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

“எனக்கென்ன... சரி, இன்னுமொரு ஆறுமாதப் பாடு, இந்தப் பிள்ளைக்கு...”

❍

# கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2009 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| நம்மவர்கள் | பவானி சிவகுமாரன் | தெஹிவளை |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| முட்கம்பி வேலிக்குள்ளே | எஸ்.பி. கிருஷ்ணன் 'வேரற் கேணியன்' | யாழ்ப்பாணம் |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| கொக்குக் குஞ்சுகள் | அகளங்கன் நா. தர்மராஜா | வவுனியா |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| புதுச்சட்டை | சி. கதிர்காமநாதன் | சுழிபுரம் |
| ஆத்ம விஜயம் | ச. அருளானந்தன் | திருகோணமலை |
| என்று தணியும் இந்த..... | ச. முருகானந்தன் | கொழும்பு 06 |
| அந்த வியாழன் இரவில் | 'குடந்தை பரிபூரணன்' ச. பாக்கியசாமி | தென் இந்தியா |
| பள்ளிக்கூடம் | புதுவைப்பிரபா | தென் இந்தியா |
| ஓர் உண்மையான சாட்சி | நெடுந்தீவு மகேஷ் | திருகோணமலை |
| ஊருக்குள் நூறு பெண் | மட்டுவில் ஞானகுமாரன் | தெகிவளை |
| புரிதல் | செல்வி,ப. உதயசாந்தினி | சாவகக்சேரி |

**நடுவர்கள்:** தெளிவத்தை ஜோசப், பத்மா சோமகாந்தன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், திருமதி வசந்தி தயாபரன்.

**(ஞானம் 116, ஜனவரி 2010)**

25

"எத்தினை பேர் போறீங்க?"

"கிளியரன்ஸ்"

"ஆ..."

"அ... மூண்டு பேர்..."

பழையபடி அடுத்திருந்த மேசைக்கு கதைப்பதற்குச் சென்றுவிட்டாள். மேசை மேலிருந்த பேப்பர் வெயிட்டைத் தூக்கி அவள் மேல் எறிந்தால் என்ன என்று கோபம் வந்தது நந்தகுமாருக்கு. ஒரு உயிர்... உயிரின்ர பெறுமதி...

"மிஸ்!"

அவளுக்குக் கேட்கவில்லை. ஒவ்வொரு 'கிளார்க்'காகத் தேடிக் கதைத்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்து சிரிப்பொலி கேட்டுக் கொண்டிருந்தது.

இரண்டு நாட்களாகச் சரியான சாப்பாடு, தண்ணீரில்லை. முகத்தில் இரண்டு நாள் தாடி. மேசை மேல் பரந்திருந்த கண்ணாடியில் பிச்சைக்காரனைப் போல் தெரிந்தான் நந்தகுமாரன். கனவில்.... இல்லை...தூங்கினால் தானே கனவு வரும். அவன் நினைவு முழுவதும் ஆக்கிரமித்துக் கொண்டு அலைக்கழிக்கும், வாட்டும் காட்சிகள். ஐ. சி. யு. வில் செயற்கைச் சுவாசத்திற்காய் ஒட்சிஜன் மாஸ்க் உடன் அசைவின்றிக் கிடக்கும் உடல். அதைச் சுற்றி எடுத்து வந்த இரத்தத்தில் ஊறிய போர்வை.




நந்தகுமாருக்கு அடிவயிற்றில் இருந்து, எழுந்த கலவரம் கண்ணோரத்தில் நீராய்க் கசிந்தது. யாரிட்ட 'கெம்ப்ளெய்ன்' பண்ணுறது? அவனுக்குத் தெரியவில்லை. எல்லோருக்கும் தலை தெறிக்கும் அவசரம். அவன் ஒரு மணித்தியாலத்திற்கும் அதிகமாய் அங்கு நிற்கிறான். ஒருவரும் கவனித்ததாகத் தெரியவில்லை. 'கிளியரன்ஸ்' இது ஒன்றே பூதாகரமாய் உருவெடுத்து, எங்கும் வியாபித்து அவன் நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. மேசைகளினூடே இலக்கின்றி முன்னோக்கிச் சென்றான். ஏ. ஒ. என்று ஒரு மேசை அடையாளம் காட்டியது.

"சேர்"

தலை நிமிரவில்லை. கண்கள் மட்டும் மூக்குக் கண்ணாடிக்கு மேலே உயர்ந்து, என்ன என்றன.



**(ஞானம் 117, பெப்ரவரி 2010)**

**இந்தப் பாதுகாப்பு அமைச்சின் 'கிளியரன்ஸ்'ற்காக இரண்டு நாளாய் நாய் அலைச்சல். இந்த ஏ–9 பாதையைத் திறந்து விட்டாலென்ன? தமிழனென்டா இன்னும்... நண்பனின் உதவியுடன் ஒரு மதகுருவை நாடி, அரசியல்வாதியை அணுகிப் பார்த்தான். அணுகியபோது இரவு ஒன்பது மணி. சரி வரவில்லை.**



"நான் நேற்றும் இங்க வந்தனான். எம். ஓ. டி. 'கிளியரன்ஸ்க்காக...'

"................................'

"அவசரமாக கொழும்புக்குப் போகோணும். ரெண்டு நாளா பேசண்ட்டுக்கு நினைவில்லை. ..... அக்ஸிடெண்ட். கச்சேரிக்கு நேற்று ஃபக்ஸ் பண்ணுறம் எண்டு சொல்லிச்சினம். ஆனா அங்க வரேல்லை."

மூக்குக் கண்ணாடிக்கு மேல் தெரிந்த கண்களில் கோபம் தெரிந்தது.

"ச்சீய்... திருத்தவே முடியாது. எல்லோருக்கும் கெட்டபேர்." கறுவிக் கொண்டு எழுந்து சென்றார். நந்தகுமாரன் திரும்பிப் பார்த்தான். அவர் கையை அசைத்து அந்த கிளார்க்குடன் கதைப்பதும் அவள் ஏதோ சொல்வதும் ஊமைப் படம் போல் தெரிந்தது. நிற்பதுவே சிரமமாக இருந்தது அவனுக்கு.

"நீர் போம் தம்பி. இப்ப நான் அனுப்பிறன்" திரும்பி வந்தார்.

"சேர்... தயவு செய்து..."

"பயப்படாதேயும் நானே நேரில் நின்று அனுப்பி வைக்கிறன். ஃபோர்ம் எல்லாம் நிரப்பிக் குடுத்தனீர்தானே?"

"ஓம் சேர்... மகன்... பத்து வயசு... அன் கென் சியஸ் ..." தொண்டை அடைத்தது, நந்தகுமாரனுக்கு. கண்ணைத் துடைத்தபடி வெளியே வந்தான்.

இந்தப் பாதுகாப்பு அமைச்சின் 'கிளியரன்ஸ்'ற்காக இரண்டு நாளாய் நாய் அலைச்சல். இந்த ஏ-9 பாதையைத் திறந்து விட்டாலென்ன? தமிழனென்டா இன்னும்... நண்பனின் உதவியுடன் ஒரு மதகுருவை நாடி, அரசியல்வாதியை அணுகிப் பார்த்தான். அணுகியபோது இரவு ஒன்பது மணி. சரி வரவில்லை.

'ட்ரீட்மெண்ட்' ற்குப் போவதென்றால் ஆஸ்பத்திரியே 'கிளியரன்ஸ்' எடுக்கும் என்றார்கள். அதை நம்பிச் செல்ல, "டொக்டருக்கும், அவரோட வாற அஸிஸ்டெண்ட்க்கும் தான் நாங்கள் கிளியரன்ஸ் தருவம்" என்று கையை விரித்து விட்டார்கள். கச்சேரிக்குப் போகச் சொன்னார்கள்.

"என்ன காரணத்திற்காகப் போறீங்கள்?"

"ஒரு பேசண்டைக் கொண்டு போறம்... பத்து வயசு"

**அழுதபடி நிற்கும் மனைவி புள்ளியாகி, புலப்படாமல் மறையும் வரை**
**அம்புலன்ஸின் பின் கண்ணாடி வழியே பார்த்துக் கொண்டே சென்றான் நந்தகுமாரன்.**
**இரண்டு நாட்களின் பின் இன்று தான் இப்படிச்**
**சில மணித்தியாலங்கள் ஓடாமல் அமர்ந்திருக்கிறான், மகனைப் பார்த்தான்.**
**ஒரு விரலாவது அசையாதா?... வைத்தியரைப் பார்த்தான்.**
**டொக்டர் சிவகுமார் 'சேலைன்' போத்தலினுள்**
**ஊசி மருந்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். இந்த இரண்டு நாட்களாகக் கடவுளை**
**அவரில் பார்க்கிறான்.**

---

"பேசண்ட்டைக் கொண்டு போற தென்டால், ஹொஸ்பிட்டல் சேர்ட்டி.:.பை பண்ணோணும்.... அதாவது இப்படி ஒரு பேசண்ட் இன்னாரோட ட்ரீட் மெண்ட்றகாக கொழும்பு போறார். அவங்கள் .:.பக்ஸ் அனுப்பினால்தான் நாங்கள் கிளியரன்ஸ் தருவம்"

இதற்காக நேற்று இந்தப் போதனா வைத்தியசாலையில் இந்தக் 'கிளார்க்' கிடம் ஒரு உயிர் போராடும் நிலையைச் சொல்லி விண்ணப்பப் பத்திரம் நிரப்பி வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்துடன் கொடுத்தான். அதை அவள் வாங்கி மேசை மேலெறிந்த அலட்சியத்தைப் பார்த்து, உடனே அனுப்பும்படி கெஞ்சி விட்டு வந்தான். அனுப்பவில்லை ஒரு நாள் தாமதம்.

இன்று அந்த நிர்வாக அதிகாரியின் -ஏ. ஓ- நடவடிக்கையின் மேல் .:.பக்ஸ் அனுப்பப்பட்டிருந்தது. ஒரு வழியாகக் கிளியரன்ஸ் பிரச்சனை தீர்ந்தது.

'ஸ்ரெட்சர்' உடன் நோயாளி - நந்த குமாரனின் மகன் சத்யன் அம்புலன் ஸில் ஏற்றப்படுவதை நந்தகுமாரும், அவன் மனைவியும் அழுதபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நந்தகுமாரனின் மனைவிக்கு கொழும்பு செல்ல அனுமதியில்லை. நோயாளி, நோயாளியின் உறவினர் ஒருவர், வைத்தியர், அவரின் உதவியாளர் இவர்கள் மட்டுமே செல்லலாம். இது எழுதப்படாத நியதி. நந்தகுமாரனின் மனைவி அப்பாவி. உலகம் தெரியாதவள். தனியாகச் சென்று சமாளிக்க மாட்டாள். நந்தகுமாரன் உடன் சென்றான்.

அழுதபடி நிற்கும் மனைவி புள்ளி யாகி, புலப்படாமல் மறையும் வரை அம்புலன்ஸின் பின் கண்ணாடி வழியே பார்த்துக் கொண்டே சென்றான் நந்த குமாரன். இரண்டு நாட்களின் பின் இன்று தான் இப்படிச் சில மணித்தியாலங்கள் ஓடாமல் அமர்ந்திருக்கிறான், மகனைப் பார்த்தான். ஒரு விரலாவது அசையாதா?... வைத்தியரைப் பார்த்தான். டொக்டர் சிவகுமார் 'சேலைன்' போத்தலினுள் ஊசி மருந்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். இந்த இரண்டு நாட்களாகக் கடவுளை அவரில் பார்க்கிறான்.

முச்சக்கர வண்டி மோதியதில் இரத்தம் நிறைய வெளியேறியிருந்தது சத்யனுக்கு. சுற்றியிருந்தவர்கள் ஆஸ்பத் திரிக்குக் கொண்டு செல்லவே தயங்கி னார்களாம், இறந்து விட்டதாக நினைத்து. செய்தி கேட்டு நந்தகுமாரன் ஆஸ்பத்திரிக்கு ஓடியபோது அங்கே நினைவின்றி சத்யன் 'ஒட்சிஜன் மாஸ்க்' உடன் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்தான். அவனைச் சுற்றி எடுத்து வந்த இரத்தம் தோய்ந்த போர்வையைக் கண்டு, தலை சுற்றிக், கண்கள் இருளடைய அருகிலிருந்த மேசையைப் பிடித்தபடி தரையில் அமர்ந்திருந்தான் நந்தகுமாரன்.

சத்யனுக்கு தலையில் அடிபட்டுச் சில எலும்புகள் முறிவடைந்திருந்தன. நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் வைத்தியர்கள் ஊரை விட்டு, நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் அங்கு 'நியூரோ சேர்ஜன்' இல்லை 'ஸ்கானிங் மெசின்' வேறு பழுது. கொழும்புக்கு கொண்டு செல்வதைத் தவிர வேறு வழியில்லை. இந்நிலையில், விடயமறிந்து நந்தகுமாரன் வரும் முன்னே, தலையில் ஒரு அவசர சத்திரசிகிச்சை சத்யனுக்கு நடந்து முடிந்திருந்தது. இல்லையெனில் உயிருக்கு ஆபத்தாகியிருக்கும்.

வழி நடுவே அம்புலன்ஸ் நிறுத்தப் பட்டது. வழமை போல் அங்கே சாரதி, இராணுவத்திடம் அம்புலன்ஸை ஒப்படைதுச் செல்ல இராணுவம் அம்புலன்ஸைச் செலுத்தியது.

விமான நிலையத்தில் 'செக்கிங்' கெடுபிடி குறைவு. இராணுவ விமானம் இவர்களுடன் இன்னுமொரு நோயாளி. ஏனையவர்கள் இராணுவத்தினர். நினை வின்றிக் கிடக்கும் சிறுவனைக் கண்டதும், பரிதாபத்துடன் பார்த்தார்கள், விசாரித்தார்கள். இரண்டு நாள் தாமதம் குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டது.

விமானம் புறப்பட்டது. விமானத்தின் சுவரையொட்டி இரு மருங்கிலும் போடப் பட்டிருந்த ஆசனத்திலமர்ந்தபடி, மேலே தொங்கும் பட்டிகளைப் பற்றியபடி 'பலன்ஸ்' செய்ய வேண்டியிருந்தது. அந்த நிலையிலும் மனம் தட்டி வான் பயணத்தை, விமானப் பயணத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தது.

இரண்டு காதுகளிலும் விரலை வைத்துக் கொண்டு குப்புற விழுந்து படுத்துக் கொண்ட இளம் இராணுவத்தி னரை நந்தகுமாரன் வியப்புடன் பார்த்தான்... இந்தச் சின்ன இரைச் சலுக்கு இப்பிடிப் பயப்படுறான்கள். இடையிடையே இரைச்சல் அதிகரிப் பதும் குறைவதுமாய் இருந்தது. சிறிது நேரத்தின்பின்தான் உண்மை விளங் கியது. சரியான நித்திரை, சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் அலைந்ததில் தனக்குக் காதுகள் அடைபட்டிருப்பது.

விமானம் தரையிறங்கியது. புறப்படும் போதே அறிவித்திருந்ததன்படி ஆஸ் பத்திரி அம்புலன்ஸ் வந்திருத்தது. வாகன வரிசையில் சிறிது பின்னே நின்றிருந்தது. அதுவரும் வரை காத்திருக்கப் பொறுமையின்றி, பொலிஸ், அம்புலன்ஸில் இராணுவத்தினர் இவர் களை ஏற்றிவிட 'சைரன்'னை அலற விட்டபடி கொழும்பு வீதிகளில் அம்புலன்ஸ் விரைந்தது. வாகனங்கள் விலகி ஓரமாகின. வீதிச் சமிக்கைகளை அலட்சியப்படுத்தி பொலிஸ் வழி விட்டது.

விபத்துப் பிரிவில் வைத்தியர் சிவகுமார் சத்யனைக் கையளித்ததும் உடனடியாகச் சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது. இதுவரை காணாத விரைவும், கரிசனையும் நந்தகுமாரனுக்கு ஆறுதல் தந்தன. நான்கு மணித்தி யாலங்கள் சத்திர சிகிச்சைக் கூடத்தின் அருகே நந்தகுமாரன் காத்திருந்தான். நரகவேதனை அங்கு வந்த நோயா ளிகள், வைத்தியர்கள், சக்கர நாற் காலிகள், தாதிமார்கள், துயரம் கலந்த விசாரணைகள், சந்திப்புக்கள் எதுவுமே மனதில் ஒட்டவில்லை.

பொலிஸ் விசாரணைக்கு வந்தது. கடை வாசலில் நின்ற மகனை வேகமாய் வந்த முச்சக்கர வண்டி மோதியதைச் சொன்னான்.

"ஆட்டோ ட்ரைவர் எங்கே? எந்தப் பொலிஸ் ஸ்டேசனில்?"

"அவனை ரிலீஸ் பண்ணீட்டார்கள்"

"ரிலீஸ் பண்ணீட்டார்களா? எப்படி?"

குரலின் கடுமை ப்ளஸ் வியப்புத் தெரிந்தது. நந்தகுமாரனுக்கு இவை பற்றி அக்கறையில்லை.

வெளியே ஸ்ரெட்சர் தெரிந்தவுடன் தன்னிச்சையாய் எழுந்தான். அது நேரே அவசர சிகிச்சைப் பிரிவிற்குள் சென்றது. இவனுக்கு உள்ளே செல்ல அனுமதி யில்லை. வைத்தியர்கள் வரும்வரை காத்திருந்தான். வந்தவுடன் அணு கினான். மொழிப் பிரச்சனை ஒரு புறம் மருத்துவப் பதங்கள் வேறு புரிய வில்லை. இவனுக்கு விளங்கும்படி எளிய ஆங்கிலத்தில், ஓரிரு முறை திரும்பவும் சொல்லப்பட்டது.

"சேர், என் மகன் இன்று கண் விழிப்பானா?"

"இல்லை... நாங்கள் தொடர்ந்து மயக்கத்திலேயே வைத்திருப்போம். ஓய்வு தேவை. உடினடியாக விழிப் பேற்படுவது சில நேரம் உயிருக்கு ஆபத்தாகி விடும். கொஞ்சம், கொஞ்ச மாகத்தான் 'டோஸ்' ஸைக் குறைப்போம்.

"உயிருக்கு ஆபத்தில்லை தானே?"

"லெட்ஸ் ஹோப் சோ... நல்லது நடக்குமென்று நம்புவோம். ஏறக்குறைய மூன்று நாட்கள் தாமதித்து வந்துள்ளீர்கள். உடனடியாக வந்திருந்தால் நிலைமை இவ்வளவு தூரம் மோசமாகியிராது"

நந்தகுமாருக்கு அந்தக் 'கிளாக்கின்' முகம் தெரிந்தது. எல்லாம் நல்லபடியாய் முடியட்டும். இதைப் பேப்பருக்கு எழுதாமல் விடுறேல்ல.

வைத்தியர் சிவகுமார் அவ்விடத் திற்கு வந்து கொண்டிருந்தார். "உங்கள் அதிர்ஷ்டம், டொக்டர் சிவகுமார் உங்களுக்கு கிடைத்தது. ஒரு நியூரோ சேர்ஜன் இல்லாதவிடத்தில் தொலை பேசியில் எம்முடன் தொடர்பு கொண்ட வாறு சேர்ஜரி செய்திருக்கிறார். எலும்பு கள் சரியான முறையில் பொருந்தி விட்டன. இல்லா விட்டால்....

"டொக்டர் உயிருக்கு ஆபத்தில்லைத் தானே?"

"உயிருக்கு எழுபது வீதம் ஹரண்டி... ஆனால் நீங்கள் எஜுகேட்டட் உங்களுக்கு விளங்கும். எந்த விதமான பாதிப்பு இருக்கும் என்று எங்களால் இப்பொழுது சொல்ல முடியாது. கை, கால் இயக்கம் பாதிக்கப்படலாம்... பயப் படாதீர்கள்.... பயப்படாதீர்கள். இன்று எல்லாவற்றுக்கும் ∴பிஸியோதெரபி இருக்கிறது. மெல்ல, மெல்லச் சரியாகி விடும்"

வைத்தியர் சிவகுமார் அங்கு வந்து விடைபெற்றார். "என்ர வேலை முடிஞ்சுது. நாளைக்கு ∴ப்ளைட்ல நான் திரும் போணும்"

உணர்ச்சிப் பிழம்பாகி அவரின் இரு கைகளையும் பற்றி நன்றி சொன்னான் நந்தகுமாரன்.

அவர் சென்றதும் பழையபடி அமர்ந்தான்.

"இங்கே நீங்கள் தங்க முடியாது. ஐ. சி. யு விலிருந்து 'வோர்ட்'டிற்கு மாற்றிய பிறகு தான் யாராவது ஒருவர் பேசண்ட் உடன் தங்கலாம். அதுவரை நீங்கள் நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் மட்டும் இங்கு வரலாம். அதற்கான 'பாஸ்'ஸை அங்கே பெற்றுக் கொள்ளுங்கள்."

அருகிலிருந்து பார்த்துக் கொண்டி ருக்கும் ஒரே ஆறுதலும் பறிக்கப்பட நந்தகுமாரன் 'பாஸ்' உடன் வெளியே வந்தான். மனைவியின் ஞாபகம் வந்தது. சீ... எனக்கிருக்கிற டெக்ஷன்ல மறந்து போனன். துடிச்சுக் கொண்டிருப்பாள். நான்தான் மறந்தன், அவளாவது 'கோல்' பண்ணியிருக்கலாம்தானே. உடன சொல் லோணும் ஒப்பரேஷன் முடிஞ்சுது. நல்லா கவனிக்கிறான்கள். இனிப் பயமில்லை, பாவம் அழுது கொண்டி ருப்பாள்.

'பொக்கெட்'டினுள் கையடக்கத் தொலைபேசிக்காய் கையை வைத்தான். அது காணாமற் போயிருந்தது.

26

என்ன சத்தம்! ஆரவாரம்! தெருவில்?

ஆனந்தசாமி பாயை விட்டெழுந்து, முற்றத்தில் நின்ற வேப்பமரத்தின் கிளையைத் தாழ்த்தி ஒரு குச்சியை முறித்துப் பல் துலக்கியபடி வெளியே சென்றார்.

அறுபதடி அகலமான அந்த இரு வழித் தார்ச்சாலையில் சாரி சாரியாக மக்கள். தலையில், கையில், சைக்கிளில் பொதிகளுடன், கால் நடைகளைச் சாய்த்துக் கொண்டு வயதானவர்கள். தடிக் கட்டுகள், கிடுகுக் கட்டுகள், கூரைத் தகடுகள், தகரங்கள், கோழிக் கூடுகள் இத்தியாதி லான்ட் மாஸ்ரரில், லொறிகளில், ரக்ரர்களில், மாட்டு வண்டிகளில்.

பாண்டியன்குளம், முழங்காவில், துணுக்காய் தொட்டு மல்லாவி, அக்கராயன், வவுனிக்குளம், மாங்குளம் வரை வாழ்ந்திருந்த மக்கள் தங்கள் இல்லங்களை விட்டு கிளிநொச்சிக்கு வந்து கொட்டில், குடிசை அமைத்து எதிர்பாராத சிரமங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்ந்திருந்த நாட்கள்.

மூன்றாவது மாதம் முடியுமுன்பே மற்றொரு இடப்பெயர்வு.

எங்கே போகின்றார்கள்?

"எங்கே தம்பி பயணம்?"

சைக்கிள் கரியரிலும் ஹான்டிலிலும் பொதிகள் கட்டி உருட்டிக் கொண்டு சென்ற ஒரு இளைஞனிடம் கேட்டார் ஆனந்தசாமி.

"விசுவமடுப் பக்கம்..."




அதைக் கேட்டதும் அவருக்கு கந்தசாமியின் ஞாபகம் வந்தது. போன மாசம் அவரிடம் வந்து போன கந்தசாமி "வாருங்கோ மாமா எங்களோட வந்திருங்கோ" என்று கேட்டானே, மறுத்து விட்டேனே!" என்றெண்ணி மனம் நொந்தவராய் திரும்பி நடந்தார்.

'என்றாலும் தம்பித்துரையைக் கேட்டுத்தான் தீர்மானிக்க வேணும்' என்றெண்ணினார்.

தம்பித்துரை எண்பதுகளில் வந்து காணி எடுத்து வீடு கட்டி விவசாயம் செய்து வாழ்ந்து கொண்டிருப்பவர்.

'2005இல் தென்மராட்சி ஆக்கிரமிக்கப்பட்ட வேளை கிளி நொச்சிக்கு வந்த எங்களை ஆதரித்து தனது காணியில் ஒரு



**(ஞானம் 118, மார்ச் 2010)**



**அவர்கள் இடம்பெயர்ந்து வந்து சிலநாளே சென்ற நிலையில், செல் எனும் எறிகணைகள் அருகில் அல்லவா விழுந்து வெடிக்கின்றன. நித்திரை இல்லை. புரண்டு புரண்டு படுப்பார். கிழக்கு வெளிக்கும் நேரம் பாயைச் சுருட்டி வைத்துவிட்டு வெளியே வருவார். பல் துலக்கிக் கொண்டு தம்பித்துரை வீட்டாருடன் படுத்துறங்கும் வள்ளியைக் கூப்பிடுவார், தேநீர் குடிக்க.**

புறம் நெடிதுயர்ந்து கிளை பரப்பிய நாவல் மரத்தின் கீழ் கொட்டில் கட்டி இருக்க உதவியவரல்லவா அவர். இனியும் என்னைக் கைவிட மாட்டார்' என்ற நம்பிக்கை ஆனந்தசாமிக்கு.

“எங்க தாத்தா போயிற்று வாறீங்க?...”

தம்பித்துரையின் பிள்ளைகள் எதிர் நின்று கேட்டனர்.

“தெருவுக்குப் போயிட்டு வாறன் குஞ்சுகளா. மக்களெல்லாம் கொட்டில் குடிசைகளைப் புடுங்கிக் கட்டி ஏற்றிக் கொண்டு விசுவமடுப் பக்கம் போகி றார்களாம் ராசா...”

“ஓம் தாத்தா, நாங்களும் புதுக் குடியிருப்புக்குப் போறம்... அப்பா உங்களைக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்.”

“அப்படியா?”

குழந்தைகளுடன் விரைந்து நடந்த ஆனந்தசாமியைப் பார்த்து தம்பித்துரை சொன்னார் “அய்யா சாமான்களைக் கட்டி வையுங்கோ, புதுக்குடியிருப்புக்குப் போகலாம்...”

“ஓம் தம்பி போவம்...”

தன்னுடைய கொட்டிலுக்குப் போன ஆனந்தசாமி, தோசை சுட்டுக் கொண் டிருந்த வள்ளிக்கொடியை விளித்து சொன்னார்“புறப்படு, புதுக்குடியிருப்புக்குப் போகலாம்... சாமான்களை எடுத்து வெளியில்வை பொதிகட்ட.... நான் குளிச்சிட்டு வாறன்...”

“ஓ... எனக்கு தம்பியும் அந்தப் புள்ளயும் சொன்னவை... நீங்கள் குளிச்சிட்டு வந்து சாப்பிடுங்கோ...”

கிணற்றடிக்குப் போன ஆனந்தசாமி “இனி இந்தக் கிணத்துத் தண்ணி போலக் கிடைக்குமோ?” என முணுமுணுத்தவாறு வழமையிலும் பார்க்க அதிக வாளி நீரை மொண்டு தலையில் ஊற்றினார்.

“போதும் வாங்கோ அய்யா ரக்ரர் வந்திருக்கு” என்ற தம்பித்துரையின் குரல் எழுந்தது.

"இதோ வந்திட்டேன் தம்பி" என்றவர் நாலு முழ வேட்டியைக் கட்டிக் கொண்டு, தலையை நனைந்த துவாய்த் துண்டைப் பிழிந்து உலர்த்தியபடி வந்தார்.

வள்ளிக்கொடி கொடுத்த தோசையை நின்ற நிலையில் சாப்பிட்டார். தம்பித் துரையின் வீட்டு வாசலில் நின்ற ரக்ரரில் அவர் வீட்டு தளபாடங்கள் ஏற்றப்படுவதை அவதானித்தார்.

"வள்ளி நான் சாப்பிட்டாயிற்று நீயும் சாப்பிட்டுக் கொண்டு குசினி சாமான்களை எடுத்து வெளியில் வை" என்றவாறு துணி காயப்போடக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து மூன்று துண்டுகளாக அறுத்தார். சமையல் பாத்திரங்களை ஒரு உரச்சாக்கில் அடுக்கிக் கட்டினார். "வள்ளி உன்னுடைய உடுப்புகளோட என்னுடைய வேட்டி சட்டை சாறம் துவாய் எடுத்து வை... சரியா?"

"ஓமோம்.. நீங்கள் சொல்லு முன்னேயே வைச்சாயிற்று... தலையணை இரண் டையும் பாயில் வைத்து சுருட்டிக் கட்டுங்கோ.. வழியில் அவிழ்ந்து கொட்டுப் படாமல்..."

"வள்ளி சொன்னால் மறுப்பேது... அப்படியே ஆகட்டும்..."

மூன்று பொதிகளும் ரக்ரரில் ஏற்றியாயிற்று.

வள்ளி கையில் ஒரு பொலித்தீன் பை வைத்திருந்தாள். பெறுமதி மிக்க பொருள் அதில் இருக்கலாம்.

"புறப்படுவமா? என்று கேட்டுக் கொண்டே ஓட்டுனர் ரக்ரர் அருகே வந்து நின்றார்.

தம்பித்துரை சொன்னார் "அய்யா மேலே ஏறி இருப்பம், தலயில துவாயை கட்டுங்கோ... நல்ல வெய்யில்ல போகப் போறம்... பக்கத்து வீட்டார் ஒரு வேனில் போகினம்... அவையோட எங்கட வீட்டாரும் வள்ளி அம்மாவும் வருவினம். சரி... இந்தாங்க இந்தப் பையில பாண், பணிஸ் பழம் இருக்கு... தண்ணீர்ப் போத்தலும் இரண்டு இருக்கு... ஏறுங்கோ கவனமாய்..."

ஆனந்தசாமி ஏறிக்கொள்ள உதவிய தம்பித்துரை ஒரு சிறு சூட்கேசை கையில் எடுத்துக் கொண்டு ஏறி அவர் அருகில் அமர்ந்தார்.

ரக்ரர் அந்த மணல் ஒழுங்கையில் சில நிமிடம் நகர்ந்து தெருவில் மிதந்து ஊர்ந்து கொண்டிருந்தது. விலகி ஓட இடைவெளி இல்லை. சமாந்தரமாக இரு வாகனங்களும் ஊடு பார்த்து சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் நடை பயணிகளும். அப்படியிருந்தும் தருணம் பார்த்து ஊடறுத்து நுழைந்து ரக்ரரை முந்திப் போய்க்கொண்டிருந்தது வேன்.

அதனைச் சுட்டிக்காட்டி "அய்யா அந்த வேனில்தான் போகினம்" என்றார் தம்பித்துரை.

"அச்சா... பார் என்னை முந்திக் கொண்டு போறா வள்ளிக்கொடி, எப்பி டியும் எங்களை எதிர்பார்த்து ஓரிடத் தில் நிற்கத்தானே வேணும்..." என்ற ஆனந்தசாமி புதுக்குடியிருப்பில உங்க ளுக்குத் தெரிந்தவை அறிஞ்சவை இருக்கினமா?... எப்பிடியான இடம்?" என விசாரித்தார்.

"ஓம் அய்யா, தெரிஞ்சவர் இருக் கிறார். இரண்டு ஏக்கர் காணி நிறைய தென்னை மா வாழை விசாலமான வீடு கிணறு... எல்லா வசதியும்... அமைதியான ஊர்..."

"என்ன தம்பி நாங்கள் இன்னும் பரந்தன் சந்திக்கு வரேல்லைப் போல?"

தம்பித்துரை எட்டிப் பார்த்துவிட்டு "அந்தா தெரியுது பரந்தன் சந்தி..." என்றார்.

"கிழக்காலை திரும்பியா போறது?..."

"ஓம் அய்யா... அங்கால றோட்டும் கொஞ்சம் பழுது. குண்டும் குழியும்... மெல்ல மெல்லத்தான் போகவேணும்"

"இப்ப என்ன நேரம் தம்பி?"

"இப்ப... பதினொரு மணி... தண்ணீர்ப் போத்தலை ஒருக்கால் எடுக்கிறீங்களா... தொண்டை வரளுது..."

ஆனந்தசாமி கையிலிருந்த பையைத் திறந்தார். தம்பித்துரை போத்தலை எடுத்து ஒரு வாய் குடித்தார். ஒரு பணிசும் வாழைப்பழமும் எடுத்தார். "அய்யா நீங்களும் சாப்பிடுங்கோ, றைவருக்கும்..." என்றவர் ஒரு பணிஸும் பழமும் எடுத்துக் கொண்டு எழுந்து நின்று முன்னால் சரிந்து "இந்தாரும் சாப்பிடும்" என்று ஓட்டுனரிடம் கொடுத்தார். அவற்றை வாங்கி அருகில் தொங்கிய துணிப் பையில வைத்து விட்டு வலப்பக்கத்தில் தறையப் பட்டிருந்த வளையத்திலிருந்த தண்ணீர்ப் போத்தலை வலது கையால் எடுத்துக் குடித்துவிட்டு வைத்தார். பிறகு இடது கையால் பணிஸ் பழம் எடுத்துச் சாப்பிட்டார்.

காலைச் சாப்பாடு ஆயிற்று.

"அய்யா இந்த வெயிலுக்கு இதமா யிருக்கும் ஒரு பாட்டுப் பாடுங்கோ..."

"மரநிழலிலிருந்து பாடிய என்னை வெயிலில் இருந்து பாடக் கேட்கிறீரா... ம் ம் ம்..."

"காக்கை குருவியெல்லாம் பாடும்,
அங்கே
கிளியும் அணிலும் விளையாடும்...
வேப்பமர உச்சியிலிருந்து
குயில் ஒன்று கூவுது
கூடி விளையாடப் போலும்
இணை ஒன்றை அழைக்குது
கிளுவைமர தளையில் ஒரு
பச்சைப் பாம்பு ஊருது
அழகான ஓணான் ஒன்று
அதைப் பார்த்து பதுங்குது

பாலைமரம் பூத்திருக்கு
நாவல்மரம் காய்த்திருக்கு
ஆலமரம் பழுத்திருக்கு
பறவைகளே பறவைகளே
கொண்டாட்டம்தான் உங்களுக்கு..."

"தம்பி, திரும்பிப் பாரும் பார லொறி ஒண்டு சரிந்து கிடக்குது. என்ன பாவம் செய்ததுகளோ... இனி எப்பிடித்தான் அதை தூக்கி நிறுத்தப் போகுது களோ?..."

தம்பித்துரை எழுந்து நின்று பார்த்து விட்டுச் சொன்னார் "நிறைய சாமான்கள் ஏற்றியிருக்கு, இனி எல்லாம் வெளியில இறக்கித்தான் லொறியை எடுக்க வேண்டி யிருக்கும்..."

"நாங்களும் கவனமாய் போக வேணும் அவசரப்படாமல் "ஓட்டுனருக்கு கேட்கும்படி பலத்து சொன்னார் ஆனந்த சாமி.

ரக்ரர் நடுத்தெருவில் போய்க் கொண்டி ருந்தது.

தருமபுரம்.

எல்லைப் பெயர்க் கல் தெரிந்தது.

"அடுத்தது விசுவமடுபுரம்" என்றார் தம்பித்துரை.

"விசுவமடு பழைய குடியேற்ற மல்லவா?..."

"ஓம் அய்யா... இப்ப நல்ல முன்னேற்றம்..."

"அடுத்து?..."

"வள்ளிபுரம்... அதுக்கப்பால் கைவேலி... அடுத்து வரும் புதுக் குடியி ருப்பு... அங்கே கோம்பாவில் என்ற சிற்றூர்... மணல்தரை, தென்னை அதிகம்... மழைக்காலமெண்டால் கால் புதையும் வாய்க்கால்கள்... செழிப்பான மண்..."

ஆனந்தசாமியின் முகத்தில் மலர்ச்சி.

"நல்ல ஊருக்குத்தான் வந்திருக் கிறம்..."

"இன்னும் வரேல்ல இனி வாறது கைவேலி..."

"ஆனால் தம்பி ஒன்று கேட்கிறன்..."

"சொல்லுங்கோ..."

"இங்கேயும் அவன்கள் வரமாட் டான்கள் என்பதற்கு என்ன உத்தர வாதம்?"

❖❖❖

மண் தொட்டு நின்ற மாமரக் கிளை களைதலை தொடாத வரை வெட்டி அகற்றி விட்டு பதிவான இரண்டு கொட்டில்களை அமைத்தார்கள். ஒன்றினுள்ளே மீதி தடி தகரம் தட்டு முட்டுச் சாமான்களை வைத்தார்கள். ஆனந்தசாமி விரும்பிய படி அவருக்கு ஒரு பக்கம் அறைபோல் வெற்றிடம் வைத்து கொடுத்தார்கள். பகலும் இரவும் அவர் அங்கேயே இருப்பார். மணல் தரையில் பாயை விரித்துப் படுத்திருப்பார். அதே அறை யில் வள்ளிக்கொடி சமையல் செய்வாள். இருவரும் சாப்பிட்டபின் பானை சட்டியை ஒரு மூலையில் வைத்து பாயினால் மூடிவிடுவாள்.

மழை ஆரம்பித்தது.

ஒரு நாள் இரவு சுழன்றடித்த காற்று மழைநீரை வாசல் மறைப்பு இல்லாத ஆனந்தசாமியின் 'அறை'யினுள் வீசிற்று. அவருடைய படுக்கை நனைந்தது. அவர் எழுந்து உடனேயே தடுப்புக் கட்டினார். ஒரு பாய் எடுத்து இரு தலைப்பிலும் தடிகள் வைத்துக் கட்டி வாசலில் தொங்க விட்டார். மணல் ஒதுக்கி உள்ளே வெள்ளம் புகாமல் வரம்பு செய்தார்.

மழை கொட்டும் வேளையில்தான் அணிலுக்கும் பறவைகளுக்கும் கொண் டாட்டம். அவை கொறித்துண்ணும் முற்றிய மாங்காய்கள் நெட்டுடைந்து டொம் டொம் என தகரக் கூரையில் விழும். பெரிய மாங்காய்கள் விழும் சத்தம் அவரைத் துயிலெழுப்பும். "என்ன தம்பி செல் விழுகிறதோ?" என்று முணு முணுத்தபடி போர்வையை இறுகப் பற்றியபடி மறுபக்கம் திரும்பிப் படுப்பார்.

கனகாம்பிகைக் குளத்தில் இருந்த போதும் கூரைமீது நாவல் பழமும் பறவைகள் சுவைத்துத் துப்பும் கொட்டை களும் தொப் தொப்பென்று விழும். அது கிடுகுக் கூரை என்பதால் நித்திரைக் குழப்பம் பெரிதாகத் தோன்றவில்லை அவருக்கு. ஆனால், எலி சிலவேளை அவர்மீது விழுந்து ஓடும். திடுக்கிட்டு எழுந்திருப்பார்.

ஆனால், இங்கே...

அவர்கள் இடம்பெயர்ந்து வந்து சிலநாளே சென்ற நிலையில், செல் எனும் எறிகணைகள் அருகில் அல்லவா விழுந்து வெடிக்கின்றன. நித்திரை இல்லை. புரண்டு புரண்டு படுப்பார். கிழக்கு வெளிக்கும் நேரம் பாயைச் சுருட்டி வைத்துவிட்டு வெளியே வருவார். பல் துலக்கிக்கொண்டு தம்பித்துரை வீட்டாருடன் படுத்துறங்கும் வள்ளியைக் கூப்பிடுவார், தேநீர் குடிக்க.

ஆனந்தசாமிக்கு இரத்த அழுத்த நோய் இருந்தது. அதற்கு காலை மாலை ஒரு குளிசை வீதம் உட்கொண்டு வந்தார். நீரிழிவு நோயும் எட்டிப் பார்த்தது. கட்டுப்பாட்டில் இருக்க டொக்ரரின் ஆலோசனைப்படி இனிப்புப் பண்டங் கள் உண்பதை கூடியவரை தவிர்த்து வந்தார். ஆனால், இன்றோ நித்திரைக் குழப்பம், தலைச் சுற்றல், உடல் வெப்பம்.

தனது நோயின் நிலை பற்றி மனைவி யுடன் கதைத்து "ஒருக்கால் புதுக் குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு போய் வரலாம்" என்று தீர்மானித்தார். தம்பித் துரையிடம் சொல்லிக் கொண்டு இருவரும் காலையில் ஒரு முச்சக்கர வண்டியில் புறப்பட்டனர்.

பகல் பதினொரு மணிக்குத் திரும்பிய வர்களிடம், "எப்பிடியிருக்கு பிறசர்? நல்ல மருந்து கொடுத்தார்களா?" என்று கேட்ட தம்பித்துரைக்குப் பதிலளித்தார் ஆனந்தசாமி. "பிறசர் கொஞ்சம் கூடித்தான் இருக்கு. வழமையாக விழுங்கும் நிபடீன் குளிகையும் கொஞ்சம் விற்றமின் குளிகையும் கொடுத்தார்கள். வேற நல்ல மருந்து இங்கே வாறதில்லை என்றும் அமைதியான இடத்தில் ஓய்வெ

டுத்தால் நல்லது என்றும் டொக்ரர் சொன்னார்."

"அய்யா நீங்கள் வவுனியா போய் இருங்கோ, அதுக்கு வழியிருக்கு. இரண்டு நாள் பொறுத்திருந்து புதுக்குடியிருப்பு ஆசுப்பத்திரிக்குப் போங்கோ... வருத்தம் கூடியிருக்கு என்றும் அமைதியான சூழல் இங்கே இல்லை என்றும் வவுனியா ஆசுப்பத்திரிக்குப் போய் சிகிச்சை பெற அனுமதிக் கடிதம் தருவீங்களா என்றும் டொக்ரரிடம் கேளுங்கோ. அவர் சிபார்சுக் கடிதம் தருவார். உதவிக்கு மனைவியைக் கூட்டிப் போகவும் ஒரு பத்திரம் எழுதித் தருவார். அம்புலன்ஸ் வாகனத்தில உங்களைக் கூட்டிப் போய் வவுனியா ஆசுப்பத்திரியில சேர்ப்பார்கள். அங்கே போனபிறகு மகனுடன் போனில கதைக்கலாம். எங்களுக்கும் அப்படி ஒரு எண்ணம் இருக்கு. நிலைமை மோச மானால் நாங்களும் வவுனியாவுக்கு வருவோம், அரசாங்க பஸ்கள் ஓடினால்."

"டொக்ரர் அப்பிடி ஒரு சிபார்சுக் கடிதம் கட்டாயம் கொடுப்பாரா தம்பி?"

"தருவார், நல்ல மருந்துகள் இல்லாத நிலையில் கடும் வருத்தக்காரரை வவுனியா ஆசுப்பத்திரிக்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்."

ஆனந்தசாமியின் முயற்சி பலன ளித்தது.

அந்த வார கடைசி நாளன்று பயணம்.

❖❖❖

காலை ஏழரை மணிக்கு ஆனந்த சாமி தம்பதி புதுக்குடியிருப்பு மருத்து வமனைக்கு வந்து இறங்கினர். வழி அனுப்ப தம்பித்துரை வந்திருந்தார். பயணம் செய்ய நூறுக்கு மேற்பட்ட நோயாளிகளும் உதவியாளர்களும் வந்தி ருந்தனர்.

நான்கு பேருந்துகள் சிவப்பு சிலுவைச் சின்னத்துடன் நின்றன. அனுமதி ஆவணம், அடையாள அட்டை பரிசீலிக்கப் பட்டன. பொதிகள் ஏற்றப்பட்டன. பயணிகள் ஏறி அமர்ந்தனர். புறப்பட பத்து மணி யாயிற்று. அம்புலன்ஸ் பேருந்துகள் புதுக்குடியிருப்பு சந்தியில் திரும்பி ஒட்டிசுட்டான் வீதியில் வேகமெடுத்தன. அப்பகுதியிலிருந்து வந்து புதுக் குடியிருப்பு, கைவேலிப் பகுதியில் எறி கணைகள் விழுந்து வெடிப்பதும், நோயாளர் வண்டிகள் போவதற்காக அன்று மட்டும் தற்காலிகமாக மோதல் நிறுத்தப்பட்டிருப்பதும் மறந்து போயின. விடுதலை உணர்வு மட்டுமே நெஞ்சை நிறைத்தது.

இரண்டு மணிநேரம் ஓடிய அம்புலன்ஸ் வண்டிகள் எதிரே தெரிந்த சீருடை யினரின் தடை நிலையத்தில் போய் நின்றன. சீருடையினர் வந்து நோயாளரில் ஆண்கள் எத்தனை பெண்கள் எத்தனை சிறுவர் எத்தனை என்று எண்ணிச் சொல்லும் படி கேட்டனர்.

முன் இருக்கையிலிருந்த ஒருவர் எழுந்து திரும்பி தலைகளை எண்ணி ஒப்புவித்தார். பின்னர் பயணிகளை இறங்கும்படி பணித்தனர். எல்லாரும் இறங்கி தெருவோரம் நின்றனர். அவர்களை ஏற்றி வந்த அம்புலன்ஸ் வண்டிகள் திரும்பிப் போய்க்கொண்டிருந்தன. காலை உணவு கொள்ளாத பலரது முகங்கள் வாடியிருந்தன. "தேநீர் குடிக்க இங்கே ஒரு கடை கூட இல்லையே" என்று முணுமுணுத்தனர்.

"இனி என்ன நடக்கப் போகிறது? வவுனியா ஆசுப்பத்திரிக்கு எங்களைக் கூட்டிப் போவது யார்? அம்புலன்ஸ் ஏன் திரும்பிப் போயிற்று?" விடை தெரியாக் கேள்விகளாக மனங்கள் தவித்தன.

"அந்தா சி.ரி.பி பஸ்கள் வருகின்றன. அதிலேதான் எங்களைக் கூட்டிப் போய் ஆசுப்பத்திரியில இறக்குவார்கள்" என்றார் ஒருவர்.

அந்த சிவப்பு நிற பேருந்துகள் வந்து எங்கள் அருகில் நின்றன. அவற்றில் ஓட்டுனர் தவிர இரண்டு சீருடையினரும்

இருந்தனர். அவர்கள் இறங்கி "அய்யா ஏறுங்க, அம்மா ஏறுங்க" தமிழ் வார்த்தைகள் சீருடையினரின் 'அன்பான' வார்த்தைகள். அவர்கள் கையில் ஆயுதமில்லை.

பேருந்துகள் நான்கு ஒன்றின்பின் ஒன்றாக ஓடிக் கொண்டிருந்தன. இரண்டு மணிநேரம் வரை விரைந்தோடிய பேருந்துகளின் வேகம் குறைந்தது. ஒரே சீரான ஆமை வேகம்.

இருள் படர்கிறது.

வவுனியா நகரம் தெரிகிறதா? அகன்ற சாலைகள், உயர்ந்த கட்டடங்கள் தெரிகிறதா? சிலர் யன்னல் கண்ணாடியை தள்ளிவிட்டு பார்வையை வெளியே செலுத்தி ஆராய்கின்றனர்.

ஓட்டுனரின் இடப்புறம் உயரத்தில் இருந்த தொலைக்காட்சிக் கருவியில் தமிழ்த் திரைப்படப் பாடல் காட்சிகள் ஓடிக் கொண்டிருந்தன. பயணிகளின் நோயையும் பசியையும் அவை ஓரளவு தணித்தன.

பிரகாசமான மின் விளக்குகள் பல ஒளிர்ந்த ஒரு கட்டடத்தின் எதிரே போய் நின்றன பேருந்துகள்.

"இதுதான் வவுனியா ஆசுப்பத்திரியா?" என ஒருவர் கேட்டதும் எவரும் பதில் சொல்லாதிருந்ததும் -

ஆண், பெண் சீருடையினர் கையுறையுடன் நான்கு பேர் பேருந்துக்குள் ஏறியதும் ஒவ்வொரு நோயாளியிடமும் நோய் விபரம் கேட்டதும் -

பலமான காயப்பட்டு, விரல்முதல் தோள்பட்டைவரை கட்டுப் போட்டிருந்த ஒருவரை கனநேரம் விசாரித்ததும் அவர் இறக்கப்பட்டு மற்றொரு வண்டியில் ஏற்றப்பட்டதும் ஏனைய நோயாளரின் சிகிச்சை பற்றி அவர்கள் எதுவும் சொல்லாமல் இறங்கிப் போனதும் -

பார்த்து எல்லாரும் வியப்பில் ஆழ்ந்திருக்க, பேருந்துகள் முன்னால் தெரிந்த மற்றொரு கட்டடத்தின் எதிரே போய் நின்றன.

**"நோய்க்கு மருந்தெடுக்க வந்த என்னை இங்கே அடைத்து வைத்திருக்கிறாயே! என்னை வெளியில் விடும்வரை நான் உணவு உட்கொள்ள மாட்டேன்!" ஆவேசமாக சத்தமிடுவார். இது கேட்டு அந்த அறையில் இருந்தவர்கள் வந்து "அய்யா சாப்பாடு வந்திருக்கு வந்து சாப்பிடுங்கோ" என்று அன்பாக அழைப்பார்கள்.**

"எல்லாரும் பொதிகளையும் எடுத்துக் கொண்டு இறங்கி வரிசையாய் இருங்கோ"

சீருடை தரித்த பெண் ஒருத்தி தமிழில் சொன்னாள்.

அடுத்து, ஒரு நீளமான கிடுகுக் கொட்டகையினுள் ஒவ்வொருவராக பொதிகளுடன் போகப் பணித்தாள்.

ஆண்கள் ஒரு புறம், பெண்கள் மறுபுறம்.

தனி அறையில், கையுறையுடன் நின்ற ஒருவன் பயணியின் தோளிலிருந்து கால் வரை உருவிப் பார்த்தான் (எதிர் அறையில் பெண் சீருடை). சூட்கேஸ்கள், பொதிகள், பெட்டிகள், கைப்பைகள், ஆள் அடையாள அட்டை எல்லாம் சோதனையிடப்பட்டன. நகைகள் என்ன வகை, எத்தனை, பணம் காசு எவ்வளவு இருக்கு எண்ணிச் சொல்ல எழுதிக் கொண்டனர்.

"சரி எல்லாரும் போய் பஸ்ல ஏறுங்க"

சீருடைப் பெண்ணின் பணிப்பு.

பேருந்துகள் புறப்பட்டன.

"இனி ஆசுப்பத்திரிக்குத்தான் போகும்" அருகில் இருக்கும் வள்ளியிடம் ஆனந்தசாமி சொல்லிக் கொண்டார். மின் வெளிச்சம் பல ஒளிர்ந்த ஒரு கட்டடத்தின் எதிரே பேருந்துகள் வேகம் தணித்தன. "அதுதான் ஆசுப்பத்திரி" என எண்ணினார் ஆனந்தசாமி. ஆனால் பேருந்துகள் ஒரு சுருள் முட்கம்பி வேலியருகில் போய் நின்றன.

"என்ன இதுவா ஆசுப்பத்திரி?"

ஒவ்வொருவர் மனதிலும் அதிர்ச்சி.

"இறங்கி எல்லாரும் உள்ளே போங்க..."

சீருடையினரின் கட்டளை.

ஒரு நீள்சதுர மண்டபம்.

அங்கே சுவரோரம் அமர்த்தப்பட்டனர்.

காலை, மதியம், மாலை, இரவு வயிற்றுக்கு எதுவும் ஈயப்படவில்லை. வெளியில் அருகில் இருந்த பைப்பி லிருந்து தண்ணீர் மட்டும் குடிக்கக் கிடைத்தது.

பாய்கள் வந்தன.

படுத்துக் கொண்டனர்.

சிலர் உறங்கிப் போயினர். பலருக்குத் தூக்கம் வரவில்லை.

ஆனந்தசாமிக்கு பாட்டு வந்தது.

"எல்லா உலகமும் ஆனாய் நீயே..." என்று தொடங்கினார்.

"நல்ல தேவாரம் பாடுங்கோ" என்றார் அருகில் படுத்திருந்தவர்.

என்ன நினைத்தாரோ?

"அந்நியச் சூழல்" என்றா?

"வேண்டாம் இங்கே மௌனம் காப்பது நல்லது" எனச் சொல்லிக் கொண்டு கண்களை மூடித் தூங்க முயன்றார்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது.

தேநீர் வந்தது.

பின்னர் சீருடையினர் வந்தனர். பெயர் விபரம் கேட்டு எழுதினர்.

ஒரு தமிழன் வந்து "எல்லாரும் என்னுடன் வாருங்கோ" என்றார். நடை பவனி வரிசையாய் நகர்ந்தது.

அது ஒரு தமிழ் மகாவித்தியாலயம். அதன் வகுப்பறைகளை மேவி வளர்ந் திருந்த மரங்கள் நிழலும் குளிர்மையும் வழங்கின. ஒவ்வொரு வகுப்பறையிலும் பதினைந்து பேர் வரை பெட்டி பொதிகளை சுவரோரம் வைத்துக் கொண்டு பாயை விரித்து அமர்ந்தனர்.

"தொட்டியில் தண்ணீர் இருக்கு. சாப்பாடு வரும்" என்றார் கூட்டி வந்தவர். போய்விட்டார்.

எட்டரை மணிக்கு பாணும் பொலித்தீன் பையில் சாம்பாரும் வந்தன.

"சமையலறைக்குப் போய் தேநீர் ஒரு பாத்திரத்தில் வாங்கி வந்து எல்லாரும் குடிக்கலாம்" என ஒருவர் வந்து சொன்னார். ஒருவர் போய் அங்கிருந்த பிளாஸ்ரிக் வாளியில் தேநீர் வாங்கி வந்தார். உடன் நான்கு பிளாஸ்ரிக் பேணியும் கொண்டு வந்தார்.

ஆயிற்று, பாணும் தேநீரும் காலை உணவாக.

ஆனந்தசாமிக்கு அந்த நெருக்கத்தில் இருக்கப் பிடிக்கவில்லை. அமைதி தேடி வந்த மனிதர் அவர்.

எழுந்து வெளியே போறார். பாரிய மரம் ஒன்றைச் சுற்றி அமைக்கப் பட்டிருந்த மேடையில் அமர்ந்தார். மேலே கிளைகளிலிருந்து குருவிகள் எச்சமிட்டன.

அவர் மனதில் கனகாம்பிகைக் குளமும் கிடுகுக் கொட்டிலும் நாவல் மரமும் பறவைகளும் நிழலாடின. புதுக் குடியிருப்பு மாமரமும் தகரக் கூரையும் டொம் டொம் சத்தமும் நினைவில் வந்தன.

அவருக்குப் பாட்டு வந்தது. மேலே பார்த்துக் கொண்டு பாடினார்.

"குருவிகளே! குருவிகளே!
எங்கே வந்தீங்க
ஏதிலியாய் போறேனென்றா
இங்கே வந்தீங்க.
புதுக்குடியூருக்கு ஒருக்கால்
போய் வருவீங்களா? அங்கே
தம்பியிடம் என் நிலையை
சொல்லி வருவீங்களா?
மருத்துவ மனைக்கு வந்தேன்
நோய் சுகமாக்க, ஆனா
முட்கம்பி வேலிக்குள்ளே
மடக்கி வச்சாங்க...
குருவிகளே! குருவிகளே!..."

ஆனந்தசாமி அன்று மதியத்தி லிருந்து உணவு மறுத்தார். பகலும் இரவும் அந்த மேடையிலேயே இருந்தார், படுத்திருந்தார்.

"நோய்க்கு மருந்தெடுக்க வந்த என்னை இங்கே அடைத்து வைத்தி ருக்கிறாயே! என்னை வெளியில் விடும்வரை நான் உணவு உட்கொள்ள மாட்டேன்!" ஆவேசமாக சத்தமிடுவார். இது கேட்டு அந்த அறையில் இருந்த வர்கள் வந்து "அய்யா சாப்பாடு வந்தி ருக்கு வந்து சாப்பிடுங்கோ" என்று அன்பாக அழைப்பார்கள்.

"அய்யா நீங்கள் முன்பக்கம் போய் மருந்து எடுக்கலாம். டொக்ரர் இரண்டு பேர் வந்து வருத்தக்காரரைச் சோதித்து குளிகைகள் கொடுக்கிறார்கள்" என்று ஒருவர் வந்து சொன்னார்.

"எனக்கு குளிகை சரிவராது... நான் வந்தது எல்லாம் 'செக்' பண்ணி மருத்துவம் செய்விக்க..என்னை வவுனியா ஆசுப்பத்திரிக்கு அனுப்பட்டும்..."

"இங்கே டொக்ரர் வாறபடியால் உங்களை அங்கே அனுப்ப மாட்டினம்... சீரியஸ் எண்டால்தான் அனுப்புவினம்..."

ஆனந்தசாமி உணவு மறுத்து நான்கு நாள்களாயின. அவருடைய உடல் வலு விழந்தது. குரல் தழு தழுத்தது. நிலைமை ஆபத்தானால் என்ன செய்வது? என் றெண்ணிய ஒருவர் மற்றவர்களுடன் கலந்து பேசி முகாம் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கத் தீர்மானித்தனர்.

அவ்வாறே, நான்கு பேர் அதிகாரி யைப் பார்த்து "சேர் ஆனந்தசாமி என்பவர் உண்ணாவிரதம் இருக்கிறார். நான்கு நாளாயிற்று. தன்னை வெளியில் விட்டால்தான் சாப்பிடுவேன் என்கிறார்" என்று கவலையுடன் சொன்னார்கள்.

"அவருக்கு எத்தனை வயசு?"

"அறுபத்தைந்திருக்கும்..."

"ஓ... அறுபது வயதுக்கு மேற்பட்ட வர்களை வெளியில் செல்ல அனுமதிப் பது பற்றி யோசிக்கிறோம். அவரை சாப்பிடச் சொல்லுங்க... கெதியில விடுவோம்..."

நால்வரும் திரும்பிச் சென்று அதிகாரி சொன்னதை ஆனந்தசாமியிடம் சொன்னார்கள்.

அந்த நேரம் வள்ளிக்கொடியும் அழுதபடி அருகில் இருந்தாள்.

"ஓ... சாப்பிடுங்கோ விட்டிடுவார் களாம்" என்று கண்ணீர் கொட்டினாள்.

ஆனந்தசாமி மறுத்தார்.

"என்ன செய்யலாம்?" எனப் பலரும் கவலைப்பட்டனர்.

அந்த நாளும் கடந்தது.

ஐந்தாம் நாள் விடிந்தது.

ஆனந்தசாமி உணர்வற்றுப் படுத்தி ருந்தார்.

பகல் ஒன்பது மணியளவில் ஒலி பெருக்கியில் ஒரு தகவல் வந்தது. "அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் வெளியில் போயிருக்க அனுமதிக்கப் படுவார்கள். வவுனியாவில் இருக்கும் சொந்தக்காரர் அல்லது தெரிந்தவர்கள் அல்லது நண்பர்கள் வந்து பொறுப்பேற்று அழைத்துப் போகமுடியும். தகுதியுடை யோர் அலுவலகத்துக்கு வந்து பெயர் பதிவு செய்து கொள்ளவும்."

அச்செய்தி ஆனந்தசாமியின் காதில் விழவில்லை. அருகில் இருந்த இளை ஞர்கள் அதனை அவருக்கு உரத்துச் சொல்லிப் புரிய வைக்க முயன்றனர்.

இரண்டு பேர் ஓடிப் போய் முட் கம்பி வேலிக்கு மேலாய், இளநீர்க் குரும்பை வியாபாரியைக் கூப்பிட்டு இரண்டு இளநீர் வாங்கிக் கொண்டு ஓடி வந்தார்கள்.

"அய்யா இளநீர் குடியுங்கோ"

பருக்கிய இளநீர் கடைவாயால் வழிந்தது.

## 27

பம்பைமடு ஓர் அழகிய கிராமம்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியாவின் மேற்கே ஏழு மைல் தொலைவில் உள்ளது.

வவுனியா நகரிலிருந்து மன்னார் வீதியில் ஐந்து மைல் தூரம் சென்று பம்பைமடுச் சந்தியை அடையலாம்.

சந்தியிலிருந்து வடக்கு நோக்கி இரண்டு மைல் தூரம் காட்டுக்குள் சென்றால் அந்த அழகிய கிராமத்தைக் காணலாம்.

இது கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முந்திய நடைமுறை. இப்பொழுது சந்தியில் பெரிய இராணுவ முகாம் இருப்பதால் அதைத் தாண்டிப் புதுப் பாதை வழியே செல்ல வேண்டியிருப்பதால் இன்னும் ஒரு மைல் தூரம் அதிகம்.

நகரை நோக்கிய நகர்வை விரும்பும் மக்களுக்கு ஒரு மைல் பின்னடைவு. வாழ்க்கையில் நீண்ட காலம் பின்னடைவு.

இதுதான் வளர்ச்சி.

பம்பைமடுவில் ஒரு பெரிய குளம் இருக்கிறது.

ஐம்பது குடும்பங்கள் வரைதான் அக்கிராமத்தில் வாழ்ந்தனர். இப்போதும் சில குடும்பங்கள் வாழ்கின்றன.

வாழ்கின்றனவா. இல்லை. இல்லை. இருக்கின்றன.

குளம் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தில் உள்ளது.

குளம் நிறையத் தண்ணீர் இருக்கும்போது பார்க்கவேண்டுமே.

அழகு என்றால் அதுதான் அழகு.

குளக்கட்டில் நின்று இரவு நேரத்தில் கிழக்கே பார்த்தால் வவுனியா நகரின் மின்சார வெளிச்சம் தெரியும்.

கிழக்குப் பார்த்த குளம்.

பொதுவாகவே வவுனியாவிலுள்ள பெருங்குளங்கள் எல்லாம் கிழக்குப் பார்த்தவைதான்.




- அகளங்கன்

நா. தர்மராஜா



(ஞானம் 119, ஏப்ரல் 2010)

குளக்கட்டிலிருந்து குறுக்காக நேரே வவுனியாவிற்குச் செல்வதாயின் நான்கு மைல்கள்தான் இருக்கும்.

ஆனால் செல்ல முடியாதே.

குளம் நிரம்பியிருக்கும் போது காலை யில் குளக்கட்டில் நின்று பார்த்தால் சின்னஞ்சிறு அலைகளில் சூரியக் கதிர்கள் பட்டுத் தெறிக்கின்ற காட்சி யைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

குளம் நிரம்பியதும் தாமரைகள், ஒலுக்கள், கொட்டி, ஆம்பல் எனப் பலவகைப் பூக்களால் குளம் நிறையும் “பொய்கை எனும் நீர் மகளும் பூவாடை போர்த்திருந்தாள்” என்று புலமைப்பித்தன் இந்தக் குளத்தைப் பார்த்துத்தான் எழுதினானோ,

குளத்தில் விரால், வாளை, ஜப்பான், பொட்டியன், கணையன், கெளிறு, கொக்கச்சான், மண்விரால், குறவை அயிரை, மாங்கன், ஒட்டி, விலாங்கு, உழுவை எனப் பலவகை மீனினங்கள் உண்டு.

குளம் வற்றி வறண்டு போவது மிகக் குறைவு.

முன்பெல்லாம் வவுனியா நகரிற்கு உத்தியோகம் பார்க்க வரும் பிற பிரதேச நண்பர்களை எங்கள் ஊரிற்கு அழைத்துச் சென்று குளத்தின் அழகை யும் வயல் வெளிகளையும் காடுகளையும் காட்டுவோம்.

காட்டுப் பழவகைகளை உண்ணக் கொடுப்போம்.

எனது பிறந்த ஊர்தான் இந்தப் பம்பைமடு.

கடுங் கோடைக் காலத்தில் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை எப்போதாவது குளம் வற்றிப் போகும். குளம் வற்றிப் போனால் அலைகரை வெட்டையாகிவிடும். நீர் ஏந்தும் பகுதியை மரநிழல்களுக்கூடாகச் சுற்றி வருவதே பெருஞ் சுகமான மகிழ்ச்சிதான்.

மருத மரங்கள், அடம்பு மரங்கள் பொருந்திய வெட்டையாக அலைகரை இருக்கும்.

விளாத்தி மரங்கள் பழங்களைக் கொட்டும்.

பொறுக்கி மகிழ்வோம்.

முள்ளுப் பற்றைகள் கிடையாது.

வெறுங்காலோடு சுற்றி வருவோம்.

யாரிடம் செருப்பு இருந்தது அணிவ தற்கு.

மழை மேகம் வானத்தில் கூடி விட்டால் குளத்து அலைகரையில் நூற்றுக் கணக்கான மயில்களைக் காணலாம்.

மயில்களின் நடனத்தைக் காணாத கண்ணென்ன கண்ணே. மாலை வேளையில் மழை மேகத்தைக் கண்டு மகிழ்ந்து சிலிர்த்துத் தம் தோகைகளை விரித்து மயில்கள் சுழன்று சுழன்று ஆட, மயில்களின் தோகைகளிலே, கரு முகிலை ஊடறுத்து வரும் சூரியக் கதிர்கள் பட்டுத் தெறிக்க, அந்த அற்புதத்தை எப்படி வர்ணிப்பது.

குளம் நிரம்பியிருக்கும்போது காலை யிலே குளிக்கச் செல்வோம்.

காலையிலே மட்டுமென்ன, காலை மதியம் மாலை என வசதிப்பட்டால் மூன்று நேரமும் குளத்தில் முழுகுவதுதானே எமது வேலை.

நீச்சலிலே உடல் வியர்க்க குளத்தை விட்டு வெளியேறுவோம்.

தட்டைக் கல்லை எடுத்து தண்ணீ ரிலே படும்படி சரித்து எறிந்து அக்கல் தத்தித்தத்திப் போவதைப் பார்த்து மகிழ்வதும், அதையே போட்டியாக்கி எறிவதும் இனிக் கிடைக்காத மகிழ்ச்சியே.

ஊரில் பணக்காரர் என்று யாரும் இல்லை.

பிச்சைக்காரர் என்றும் யாரும் இல்லை.

வீட்டுக்கு வீடு பசுமாடுகளாலும் பிள்ளைகளாலும் நிறைந்தே இருக்கும்.

**சிறகுகள் முளைக்காத பிஞ்சுக் குஞ்சுகளை, எதிர்த்துப் போராட வல்லமை இல்லாத கொக்குகளிடமிருந்து பிரித்தெடுத்துக் கொண்டு வந்து பொரித்து, கறிவைத்து சாப்பிடுவது என்பது மிகமிகக் கொடுமையான பாவச் செயல்தானே. இப்பொழுதுகூட, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த அந்தச் சம்பவத்தை நினைக்க என் மனம் பதறுகிறது.**

ஒரு வேளைச் சாப்பாடு சாப்பிடாத குடும்பம் என்று எந்தக் குடும்பத்தையும் சொல்ல முடியாது.

மீனும், இறைச்சியும், பாலும் தேனும் நெய்யும், மரக்கறிகளும், அரிசியோடு சகலதும் கிடைக்கும்.

விலைக்கு அல்ல

ஊரில் கடையே இல்லை.

கீரை வகைகள், பிரண்டத் தண்டு, வட்டுக்காய் போன்றவைகள் வீதி யோரத்துச் செல்வங்கள்.

பன்றி இறைச்சிக் கருக்கல், மான், மரை இறைச்சி வத்தல்கள், குளத்து விரால், ஜப்பான் மீன் கருவாடு, பாலைப் பாணி, இலுப்பைப்பூப்பாணி, உலுவிந்தப் பழப்பாணி, சாத்துப் பூசணிக்காய், நீத்துப் பூசணிக்காய், தீன் பிலாக்காய், கெக்கரிக்காய், வெள்ளரிப் பழம், வத்தகப் பழம் என சேமித்து வைத்து வாழ்ந்த எம் மக்களுக்கு பஞ்சம் எப்படி வரும்.

அரிசிக்குப் பஞ்சம் இல்லை.

தேங்காய், மிளகாய், மரக்கறி வகைகள் வீட்டிலேயே கிடைக்கும், கோழி வளர்க்காத குடும்பங்களே இல்லை.

சீனி, உப்பு, மண்ணெண்ணெய், சவர்க்காரம் முதலான சில பொருட்கள் தான் வாங்க வேண்டிய பொருட்கள்.

கிராமத்து வாழ்க்கையின் சுகத்தை வாழ்ந்து பார்த்தால்தான் தெரியும்.

எங்கள் குளம் நிரம்பி கலிங்கு (வான்) பாய்ந்து கொண்டிருந்த நேரம் அது.

அயிரை வாருபவர்களும், மீன் அடிப்பவர்களும், தூண்டில் போட்டு மீன் பிடிப்பவர்களும் என ஆண் பெண் இரு பாலாராலும் குளத்தின் பல பாகங்களும் நிரம்பியிருந்த நேரம் அது.

ஊரிலே ஒரு பிரமுகர்.

நாற்பது வயதைத் தாண்டியவர்.

அவரை ஊர்த் தலைவர் என்று சொல்ல முடியாது.

அவர் வவுனியாவிற்கு வெளியே சென்று படித்தவர்.

கொஞ்சம் விசய ஞானம் உள்ளவர்.

இளைஞர்களோடும், சிறுவர்களோடும் கிளித்தட்டு, கோப்பைப்பந்து, வொலிபோல் முதற் கொண்டு கிட்டிப்புள், வார்ப்பாய்தல், கடுதாசி விளையாட்டு வரை சேர்ந்து விளையாடுவார்.

குடும்பஸ்தர், எட்டுப் பிள்ளைகளைப் பெற்றவர்.

வயது முதிர்ந்தவர்களோடும் அவர்களுக்கு ஏற்ற வகையிலே பழகுவார்.

அவர் நல்லவரா கெட்டவரா என்றெல்லாம் என்னால் சொல்ல முடியாது.

எனது நெருங்கிய உறவுக்காரர்.

மத்தியான நேரம் குளத்துக்குக் குளிக்க வந்தார்.

தனது பக்கத்து ஊர் உறவினர் ஒருவரையும் தனது ஒத்த வயது நண்பர் ஒருவரையும் அழைத்து வந்தார்.

வந்தவர்கள் இருவரும் கொஞ்சம் ஊரடி பட்டவர்கள். சிறுவர்கள் குளத்திலே நீச்சலடித்துக் கொண்டிருந்தனர். பெண்களும் ஆண்களும் சேர்ந்து குளிக்க முடியாது. வேறு வேறு இடங்களில்தான் குளிக்க வேண்டும். குளக்கட்டில் ஏறும் போது, பெண்கள் குளித்துக் கொண்டிருந்தால் ஆண்கள் புறக்கட்டினூடாகச் சென்று கொஞ்சம் தள்ளித்தான் குளக்கட்டில் ஏறுவார்கள்.

**“கொக்குக் குஞ்சு இறைச்சியப் போல ருசியான இறைச்சியக் காணேலாது. உந்த அடம்பு மரங்களில் இருக்கிற கூடுகளில் இருக்கிற குஞ்சுகளைப் பிடிச்சு வந்தா இறைச்சி அந்த மாதிரி இருக்கும். நல்லா உறைப்புப் போட்டு பொத்த மிளகாயும் வெட்டிப் போட்டு, கண்ணில கண்ணீர் வாற மாதிரி உறைப்போட கொக்குக் குஞ்சு இறைச்சியச் சாப்பிட்டுப் பாத்தாத்தான் தெரியும் இறைச்சியின்ர அருமை. எலும்பும் இருக்காது எல்லாம் கடிச்சுத் தின்னலாம்.”**

பெண்கள் குளிப்பதை யாரும் பார்க்க மாட்டார்கள்.

குளக்கட்டால் நடந்து செல்வதே நாகரிகமற்ற செயல் எனக் கருதிய காலம் அது.

குளத்து அடம்பு மரங்களில் ஏராள மான கொக்குக் கூடுகள். ஒரே இரைச்சல்.

அலைகரையில்தான் கொக்குகள் அடம்பு மரங்களில் கூடுகளைக் கட்டி யிருந்தன.

கொக்குக் குஞ்சுகளின் இறைச்சி மிகவும் சுவையானது.

யாரும் சிலர் எப்போதாவது கொக்குக் குஞ்சுகளைக் கூட்டுக்குள்ளேயிருந்து பிடித்து வந்து சாப்பிட்டிருப்பார்கள்.

பெருமளவில் ஊரார் அந்தப் பாவச் செயலை விரும்புவதில்லை.

மரங்களில் கூடுகட்டி, முட்டையிட்டு அடைகாத்து, குஞ்சுகள் பொரித்துப் பறக்கும் வரையில் உணவூட்டி தாய்க் கொக்குகள் நடாத்துகின்ற குடும்ப வாழ்க்கை அற்புதமானது.

சிறகுகள் முளைக்காத பிஞ்சுக் குஞ்சுகளை, எதிர்த்துப் போராட வல்லமை இல்லாத கொக்குகளிடமிருந்து பிரித்தெடுத்துக் கொண்டு வந்து பொரித்து, கறிவைத்து சாப்பிடுவது என்பது மிகமிகக் கொடுமையான பாவச் செயல்தானே. இப்பொழுது கூட, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த அந்தச் சம்பவத்தை நினைக்க என் மனம் பதறுகிறது.

குளக்கட்டில் நின்று அலைகரையிலே தெரிந்த கொக்குக் கூடுகளையும் இரைச்ச லையும் பார்த்த பக்கத்து ஊர் உறவினர்,

“கொக்குக் குஞ்சு இறைச்சியப் போல ருசியான இறைச்சியக் காணேலாது. உந்த அடம்பு மரங்களில் இருக்கிற கூடுகளில் இருக்கிற குஞ்சுகளைப் பிடிச்சு வந்தா இறைச்சி அந்த மாதிரி இருக்கும். நல்லா உறைப்புப் போட்டு பொத்த மிளகாயும் வெட்டிப் போட்டு, கண்ணில கண்ணீர் வாறமாதிரி உறைப்போட கொக்குக் குஞ்சு இறைச் சியச் சாப்பிட்டுப் பாத்தாத்தான் தெரியும் இறைச்சியின்ர அருமை. எலும்பும் இருக்காது எல்லாம் கடிச்சுத் தின்னலாம்.”

ஊர்ப் பிரமுகருக்கும் ஆசை வந்து விட்டது.

குளத்தில் நிறை தண்ணீர்.

எப்படி மரங்களிருக்கும் அலை கரைக்குச் செல்வது “அது சரி என்னண்டு காணும் அடம்பு மரத்தடிக்குப் போறது. நிறை தண்ணியில்லே. நீந்திப் போற தெண்டாச் சும்மாவே கொஞ்சத் தூரமே. ஏலுமே ஆராலயும்”

‘‘ஏன் காணும் நீந்துவான், கட்டுமரம் கட்டினாப் போகலாந்தானே.”

“என்னண்டு கட்டுறது”

“இலவ மரத்தப் பிளந்து அதில் கமுகஞ் சிலாகையள வரிஞ்சு கட்டி, வலிச்சுக் கொண்டு போகிலாம். இதென்ன பெரிய கஸ்ரமே...”

“அது சரி... அங்க மரத்தில இருந்து கொக்குக் குஞ்சுகள் தவறி விழுந்தா முதலயள் கிடக்கும் பார்த்துக் கொண்டு கௌவிறதுக்கு அதுக்குள்ள போய் முதலயளுக்கு அம்பிட்டிட்டா...”

“என்ன பெரிய முதல, முதல என்ன கொக்குக் குஞ்சுக்காகவே கிடக்குது, ஆக்கள் போற அசுமாத்துக் கேட்டா ஓடிப்போகுது...”

“சீ...சீ... அப்பிடிச் சொல்லேலாது. முதல கடிச்சாத் தப்பேலாது. அதுக்கொரு வழி பண்ணவேணும்”

“உந்தக் குளக்கட்டுக்குக் கீழ உள்ள வயிரவருக்கு நேத்திவைச்சா முதல கடிக்காது. வயிரவரவிட முதல என்ன பெரிசே”

“ஓம் ஓம் அதுதான் சரி”

குளித்துக் கொண்டிருந்த இளைஞர் களை அழைத்துத் திட்டத்தைச் சொல்லி ஆசை காட்டினார் அந்தப் பிரமுகர். அவர் சொல்வதை வேத வாக்காகக் கருதிச் செயற்படும் சிலர் அங்கே இருந்தார்கள்.

பாவம் புண்ணியம் பார்க்கும் பருவ மல்ல அவர்களது பருவம்.

கொக்குக் குஞ்சு இறைச்சியை ருசிக்க வேண்டும் என்பதும் விளை யாட்டுக் குணமுமே அவர்களிடம் இருந்தன.

அவர்களது பயம் முதலை பற்றி மட்டுமேதான்.

நீந்தத் தெரிந்தவர்கள். அதனால் தண்ணீர் என்ற பயமும் இல்லை.

கட்டு மரத்தைக் கட்டினார்கள்.

நாலுபேர் இரண்டு சாக்குகளோடு கட்டு மரத்தில் ஏறியிருந்து வலிக்கத் தொடங்கினார்கள்.

அதைக் கேள்விப்பட்ட ஊர்ப் பெரிய வர்கள் சிலர் தடுத்துப் பார்த்தார்கள்.

“டேய்... பாவமடா குஞ்சுகளையும் ஆரும் கொல்லுவாங்களோடா... அதுவும் கூட்டுக்க இறக்கிற சிறகு முளைக்காத குஞ்சுகள... பாவமாடா, பறந்து தப்ப வழிதெரியாத குஞ்சுகளக் கொல்லு றதோ, நாங்களும் குழந்த குட்டியளோட வாழுற நாங்கள். வீணா ஊர்ப் பழியத் தேடாதேங்கடா...”

எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள்.

பிரமுகரோ விடுவதாயில்லை. அவ ரோடு நின்றவர்கள் உசார் கொடுத்து நின்றார்கள்.

பாவம் அப்பாவி இளைஞர்கள் நால்வர், ஏதும் அறியாத ஒரு உணர்ச் சியில் விளையாட்டாக கட்டு மரத்தை வலித்துக் கொண்டு அலைகரையை அடைந்தார்கள்.

ஊர்ப் பிரமுகர் ஒரு தேங்காயைக் கொண்டு வந்து குளத்திலே கழுவி கும்பிட்டுவிட்டு வைரவருக்கு நேர்த்தி வைத்துவிட்டுக் குளக்கட்டில் தன் சகாக்களோடு நின்று மகிழ்ச்சியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஊரெல்லாம் குளக்கட்டில் கூடி விட்டது.

அலைகரையிலிருந்து அடம்ப மரங் களில் கூடுகட்டி இருந்த கொக்கு களெல்லாம் தம் குஞ்சுகளைக் காப்பாற்ற முடியாமல் பதகளித்துப் பறந்து இரைந்து அலறிச் சத்தமிட்டன.

மரங்களுக்கு மேலே வெள்ளைக் கொக்குகளின் அவல ஓலம்.

கட்டு மரத்திலிருந்த இருவர் மரங் களிலே மளமளவென ஏறி கூடுகளுக் குள்ளே இருந்த குஞ்சுகளைப் பிடித்துக் கீழே எறிய, சாக்குக்குள்ளே குஞ்சுகளை ஏந்தத் தொடங்கினார்கள் இருவர்.

சில குஞ்சுகள் பறக்க முயன்று தவறி வீழ்ந்து தண்ணீரில் தத்தளித்தன. அவற்றையும் எட்டி எட்டி வாரிப்பிடித்து கழுத்தைத் திருகியும், சிறகுகளை ஒடித்தும் சாக்குக்குள் போட்டனர்.

இரண்டு சாக்குகளும் நிறையும் வரையில் பல மரங்களிலும் ஏறி இறங்கி கொக்குக் குஞ்சுகளை வேட்டையாடின அந்த வெறிநாய்கள்.

சிறகு முளைக்காத குஞ்சுகளையும், கொஞ்சம் சிறகு முளைத்துப் பறக்க முயன்ற குஞ்சுகளையும் வேறாக்கி யிருக்கலாம் என்று தங்களுக்குள்ளே கதைத்துக் கொண்டு சாக்குகளை இறுக்கிக் கட்டினார்கள்.

"அட படு பாவியளே மனுசன் செய்யிற வேலயாடா இது..." என்று திட்டித் தீர்த்துவிட்டுச் செய்வதறியாத ஊர்ப் பெரியவர்கள் திரும்பிவிட்டார்கள்.

சின்னஞ் சிறுசுகளைக் கையைப் பிடித்து இழுத்தாலும் அச்சிறிசுகள் கைகளை உதறிவிட்டு வேடிக்கை பார்த்து மகிழ்ந்தன.

கட்டு மரம் திரும்பிக் கொண்டிருந்தது. நடுக்குளத்துக்கு வந்து விட்டார்கள்.

கட்டு மரத்திலே வந்து கொண்டிருந்த இரண்டு முரட்டு இளைஞர்கள் தண்ணீரில் குதித்து நீந்திக் கரைக்கு வந்திட்டார்கள்.

மற்றைய இருவரும் மெள்ள மெள்ள கட்டு மரத்தை வலித்துக் கொண்டு கரை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

"டேய்! முதலயால தப்பிச்சாச்சு. இனி என்னத்துக்கிடா வைரவருக்கு நேத்தி..."

ஒருவன் ஓடிப்போய் மரத்தின் கீழே வைரவருக்கு நேர்த்திக் கடனுக்காக வைத்திருந்த தேங்காயை எடுத்து அடித்து உடைத்தான்.

குஞ்சு குருமன்கள் எல்லாம் ஓடிப்போய்ப் பொறுக்கித் தேங்காய்ச் சொட்டுக்களைத் தின்னத் தொடங்கி விட்டன. நடுக் குளத்தைத் தாண்டியது கட்டுமரம்.

இன்னும் சிறிது தூரம்.

குளக்கட்டிலிருந்து ஒரு ஐம்பது அடிதான் இருக்கும்.

கட்டு மரத்திலே இருந்த இன்னொ ருவன் குதித்து நீந்திக் கரைக்கு வந்தான்.

கட்டு மரத்திலிருந்தவன் சத்தம் போட்டான்.

"அண்ண! சாக்கு மூட்டையளக் காணேல்ல அண்ண..."

"டேய்! வடிவாப் பாரிடா..."

"இல்லயண்ண. கட்டு மரத்தில நான் மட்டுந்தான் இருக்கிறன் அண்ண. வேற ஒண்டும் இல்லயண்ண."

"அட நாசம் விழுவானே. எங்கடா சாக்குகள். எங்கடா கொக்குக் குஞ்சுகள்."

"ஒண்டயும் காணேல்ல அண்ண..."

"மூதேவி. குதிச்சுச் சுழியோடிப் பாரிடா..."

"எங்கேண்டண்ண பாக்கிறது. எவளவு ஆழம் தெரியுமே..."

"டேய், உவடத்திலதான் விழுந்தி ருக்கும் சுழியோடிப் பாரிடா..."

"கொஞ்ச ஆழமே அண்ண. ரெண்டாள்த் தாழ்ப்பம் இருக்கும். என்னண்டு சுழியோடுறது.

"அப்ப என்ன செய்யிறது..."

"நானென்னண்ண செய்யிறது..."

"வேசமோனே! கரைக்கு வந்தியோ வெறுங்கையோட, கொல்லுவேன்.

"டேய் அங்க பார்ரா திரும்பி. ஏதோ மிதக்குதடா.

சாக்குத் தானோ பார்ரா..."

"அய்யோ முதல அண்ண..."

தேங்காய்ச் சிரட்டையைக் கோதிக் கொண்டு சிறுவர்கள் குளக்கட்டில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

❍

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2010 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| கும்பத்துமால் | கேணிப்பித்தன் ச. அருளானந்தம் | திருகோணமலை |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| வலி | "அகில்" சா. அகிலேஸ்வரன் | கனடா |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| முள்வேலி முகவரி | ஓ. கே. குணநாதன் | மட்டக்களப்பு |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| கூட்டத்தில் ஒருவன் | தேவராசா முகுந்தன் | கொழும்பு 06 |
| பறக்காத பறவைகள் | கே. எஸ். சுதாகர் | அவுஸ்திரேலியா |
| உறுத்தும் உள்ளங்கள் | எச்.எல்.எம். நிசார் | மாவனல்லை |
| வத்துக்குளம் | "அகளங்கன்" நா. தர்மராஜா | வவுனியா |
| மீட்சி இல்லையா | வேரற்கேணியன் | வவுனியா |
| யாரோடு நோகேன் | சி. கதிர்காமநாதன் | சுளிபுரம் |
| அவனும் என் இனத்தவன்தான் | செ. மகேஷ் | யாழ்ப்பாணம் |
| சுவர்க்க வாசல் | தம்பிராசா பரமலிங்கம் | யாழ்ப்பாணம் |
| தேர் வடம் | பூபதி புலேந்திரராசா | மொறட்டுவை |

பரிசளிப்பு வைபவம் - 16.05.2010 மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறும்.

---

நடுவர்கள்: தெளிவத்தை ஜோசப், திருமதி பத்மா சோமகாந்தன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், திருமதி வசந்தி தயாபரன்.

**(ஞானம் 120, மே 2010)**

அந்தக் கோயில் ஊரிலிருந்து ஒதுக்குப்புற எல்லையில் இருந்தது. கோயில் என்று சொல்வதற்கான கட்டிடங்கள் இல்லை. வருசத்துக்கு ஒருமுறை வைகாசியில் ஊர் மக்கள் கூடுவார்கள். கோயிலடியைத் துப்புரவாக்குவார்கள். நீளமான கொட்டில் அமைப்பார்கள். கூரையை தென்னோலையால் வேய்ந்து சுற்றிவர அடைப்பார்கள். கொட்டிலின் உட்பக்கமாக வெள்ளை கட்டுவார்கள். சலவைத் தொழிலாளரின் பங்கு வேள்வி முடியும்வரை இருக்கும். கும்பத்து மாலினை இரண்டாகப் பிரித்திருப்பார்கள். முதலாவது அறையில் அம்மன் கும்பம் இருக்கும். அதனைத் திரை போட்டு மூடியிருப்பார்கள். பெரிய செப்புக் குடங்களில் வேப்பங்குழை பரத்தி அதன் மேல் அம்மன் உருப்பதித்து மந்திர உச்சாடனத்தோடு அம்மனை அதில் ஏற்றிவைப்பார்கள்.

இரண்டாவது அறையிலும் வேறு சிறுதெய்வங்களை வைத்திருப்பார்கள். கொட்டிலைச் சேர்த்தாற் போல் முன்னால் அழகான பந்தல் போட்டிருப்பார்கள்.




பந்தலில் கும்பம் வைக்குமுன் கன்னிக்கால் நடுவார்கள். அதனைச் சோடித்திருப்பார்கள். பார்ப்பதற்கு ஓர் இளம்பெண் நிற்பதுபோல் இருக்கும். அதற்கு நேரே பந்தலுக்கப்பால் வயிரவரின் பந்தல் அம்மனைப் பார்த்தபடி இருக்கும். அதற்கு முன்னால் விறகுகளை அடுக்கித் தீயிட்டுத் தணலை வளர்த்திருப்பார்கள். ஒரு பெற்றமக்ஸ் வெளிச்சம் மட்டும் இருக்கும். அரிக்கன் லாம்புகளும் உலா வரும். அம்மனை உச்சாடனத்துடன் கும்பத்தில் ஏற்றும்போது பூசாரியார் உணர்வு பூர்வமாகக் காணப்படுவார். அவரது உடல் சாமியாட்டம் போடும். கும்பத்தில் சோடனை செய்திருப்பார்கள். கும்பம் வேலைப்பாடுகள் நிறைந்ததாக இருக்கும். கும்பம் ஒற்றைப்படையாக இருக்கும். மூன்று தொடக்கம் ஐந்து கும்பங்கள் வரை நிரையில் வைப்பார்கள். அதற்கென விதிமுறைகளைப் பூசாரியார் தெரிந்து வைத்திருப்பார். ஏழு நாட்களுக்குக் கும்பத்துமாலில் வேள்வி நடக்கும். ஏழாவது நாள் ஆயுதபூசை. அடுத்தநாள் காலை குளிர்த்தி நடக்கும். மாலை ஊர்வலம் வரும். அது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஈற்றில் கடலில் கும்பத்தைச் சொரிவார்கள்.

(ஞானம் 121, ஜூன் 2010)



கும்பத்துக் காலத்தில் பூசாரியும் அவரோடு வேலைசெய்யும் உதவியா ளர்களும் அங்கேயே தங்கி நிற்பார்கள். பயபக்தியாக சடங்குகள் நடக்கும். சடங்குகளில் மக்கள் தங்களை மறந்து ஈடுபடுவார்கள். மக்களை ஒன்றி ணைக்கும் நிகழ்வாக சடங்குமுறை அமைந்து விட்டது. மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்க்க உதவியாகவும் இருந்தது. பறை மேளங் களின் ஒலியால் நாடும் காடும் அதிரும். உடுக்குகளின் இசை காதுகளில் ஒலிக்கும். அதிகாலையில் ஒரு பூசை. மதியம் ஒரு பூசை நடக்கும். இரவு வேளைப் பூசை ஏழெட்டு மணிக்குத் தொடங்கி பதினொரு மணி வரை நடக்கும்.

இரவுப் பூசையின் போதுதான் ஊர்மக்கள் அதிகம் கூடுவார்கள். சுமார் எட்டு மணிக்குப் பூசை தொடங்கும். பூசாரியார் மடை வைத்து ஆசாரங்கள் செய்வார். மடையில் வெற்றிலை, பாக்கு, பழவகை, பொங்கலும் வைப்பார்கள். தேசிக்காய்ச் சாற்றில் சக்கரை சேர்த்து, அதற்குள் சின்ன வெங்காயம் நறுக்கிப் போட்டு சுத்தமான தண்ணீரில் கலந்து வைத்திருப்பார்கள். அதனைப் பாணக்கம் என்பார்கள். பூசகர் பூசையின் போது உடுக்கடித்து மந்திரம் சொல்வார். உடுக்கடிக்கவும் மந்திரங்கள் சொல்லவும் அவருக்குத் துணையாக உதவியா ளர்களும் இருப்பார்கள். உச்சக்கட்டப் பூசையின்போது பறைமேளங்களும் ஓங்கி ஒலிக்கும். உடுக்கு மந்திரத்துக்கு ஏற்ப பேசும். அப்போது திரை திறபடும். தீபம் காட்டப்படும். மந்திரம் ஓங்கி ஒலிக்கும். திரை திறந்ததும் "ஆ...ஊ...." சத்தங்கள் பறக்கும் உருக்கொண்டு சாமியாட்டம் நடக்கும். ஒவ்வொரு சாமியும், தனக்கென ஆட்டத்தைப் போடும். சாமியாடுபவர்களின் தலைகளில் தண்ணீர்க் குடங்களை எடுத்து ஊற்று

**நாட்டில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகளால் மக்கள் அகதிகளாவும், அனாதைகளாகவும் ஆக்கப்பட்டனர். பலர் கொல்லப்பட்டார்கள். பொத்துவில் தொடக்கம் பருத்தித்துறை வரை இளைஞர்கள் பலர் காணமல் போனார்கள். சொந்த நாட்டுக்குள்ளும் நாடோடிகளாக ஆக்கப்பட்டு அகதிகளானார்கள். பலர் படகுகளில் இந்தியாவுக்குப் போனார்கள். இடம் பெயர்ந்து வன்னிப் பக்கம் போனார்கள். யுத்தம் பூதாகரமாய் மூண்டது. கொத்தணிக்குண்டுகள் மக்களை அழித்தன.விமானங்களும், ஆட்டிலறிக் குண்டுகளும், ஷெல்லடிகளும் வெடித்து உடல்சிதறிச் செத்தார்கள். பாதுகாப்புக்காக அமைந்திருந்த பதுங்கு குழிகளுக் குள்ளேயே பலர் சங்கம மானார்கள். மாவிலாற்றில் தொடங்கிய யுத்தம் மாவிலாறு தொடக்கம் முள்ளி வாய்க்கால் கடற்கரையோரம் வரை சுடுகாடாய்ப் போனது. எங்கும் பிணக்குவியல், சரணடைந்தவர்களது கதி தெரியவில்லை. அப்பாவிகள் வவுனியா அகதிமுகாமில் இருந்து முட்கம்பி வேலிக்களுக்குள் தவமிருந்தார்கள்.**

வார்கள். குடங்களில் தண்ணீர் கொண்டு வருவதற்கென்றே சிலர் இருப்பார்கள்.

பறை மேளத்துக்கும், உடுக்கு மேளத் துக்கும் போட்டி நடப்பது போல் ஒலிக்கும். அந்த ஒலிக்கு ஏற்ப சாமிகள் ஆடும். சாமியாடுபவர்கள் பறைமேளம் ஒலிக்கும் இடத்துக்குப் போவார்கள். மேளம் அடிப்பவர்கள் விரைந்தும் பலமாகவும் அடிப்பார்கள். அதற்கேற்ப சாமிகள் குதித்து ஆடும். சாமியாடு பவர்களது கண்கள் அரைவிழி மூடியபடி இருக்கும். சிலரது கண்கள் சிவந்து இருக்கும். பார்க்கப் பயமாகத் தெரியும். ஒரு கையில் சிலம்பினை அணிந்து, பொல்லொன்றை இரு கை களிலும் பிடித்து குலுங்கி ஆடுவார்கள். சாமியாடுபவர்கள் கட்டுச் சொல்வது வழக்கம். அதற்காகவே மக்கள் கும்பத்து மாலுக்கு வருவார்கள். எல்லாச் சாமி களும் வாய் பேசாது. சில சாமிகள் மட்டும் கட்டுச் சொல்லும். மனதில் உள்ள குறைகளுக்கு சாமிகள் பரிகாரம் சொல்வதைத்தான் கட்டுச் சொல்வ தென்பார்கள். சாமி ஆடிமுந்ததும் மலை யேறிவிடும்.

நாட்டில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கை களால் மக்கள் அகதிகளாவும், அனாதை களாகவும் ஆக்கப்பட்டனர். பலர் கொல்லப் பட்டார்கள். பொத்துவில் தொடக்கம் பருத்தித்துறை வரை இளைஞர்கள் பலர் காணமல் போனார்கள். சொந்த நாட்டுக்குள்ளும் நாடோடிகளாக ஆக்கப் பட்டு அகதிகளானார்கள். பலர் படகு களில் இந்தியாவுக்குப் போனார்கள். இடம் பெயர்ந்து வன்னிப் பக்கம் போனார்கள். யுத்தம் பூதாகரமாய் மூண்டது. கொத்த ணிக்குண்டுகள் மக்களை அழித்தன. விமானங்களும், ஆட்டிலறிக் குண்டு களும், ஷெல்லடிகளும் வெடித்து உடல்சிதறிச் செத்தார்கள். பாதுகாப்புக் காக அமைந்திருந்த பதுங்கு குழிகளுக் குள்ளேயே பலர் சங்கமமானார்கள். மாவிலாற்றில் தொடங்கிய யுத்தம் மாவிலாறு தொடக்கம் முள்ளிவாய்க்கால் கடற்கரையோரம் வரை சுடுகாடாய்ப் போனது. எங்கும் பிணக்குவியல், சரண டைந்தவர்களது கதி தெரியவில்லை. அப்பாவிகள் வவுனியா அகதிமுகாமில் இருந்து முட்கம்பி வேலிக்களுக்குள் தவமிருந்தார்கள். கந்தையர் மனதில் பழையன வந்து படம் காட்டியது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டார்.

குடியேறிய மக்களின் மனங்கள் வாடிக் கிடந்தன. சொந்தங்களைத் தொலைத்து விட்ட சோகம். ஒன்றிலும் உற்சாக மில்லாமல் தவித்தார்கள். இப்படியே விட்டால் இவர்களின் வாழ்க்கை என்னாவது? ஆண்டாண்டு தோறும் அழுது

புரண்டாலும் மாண்டார் வருவரோ? வீடுதோறும் சென்று ஆறுதல் கூறினார். துயரங்களால் ஏற்பட்ட கண்ணுக்குப் புலனாகா மனவடுக்களைப் போக்க வல்லது ஏது? குசலம்தான் மனக்கவலையை மாற்றவல்லது. பாரம்பரியக் கலாசாரங்களும் கலையம்சங்களும் அவற்றைக் குறைக்கும் என்பதைக் கந்தையர் தெரிந்து வைத்திருந்தார். இளைஞர்களைப் பார்த்துக் கந்தையர்தான் சொன்னார். "தம்பிமார் எல்லாத்தையும் இழந்துபோட்டம். இனி இழக்க ஒன்றுமில்ல. நாங்க இப்படி இருந்தமென்டால் எங்கட பழக்க வழக்கமெல்லாம் மறஞ்சிடும். ஏங்கட பாரம்பரியங்களை விடாமல் காப்பாற்ற வேண்டும். மக்களின் மனங்களில் மீண்டும் சந்தோசத்தை வரச் செய்வம். இந்த முறை கும்பம் வைப்பம்" எல்லாவற்றையும் தெளிவாக விளக்கினார். இளைஞர்கள் விருப்பத்தைக் தெரிவித்தார்கள். ஊரில் மிஞ்சியிருந்த பெரியவர்களும் சம்மதம் தெரிவித்தார்கள்.

"தம்பிமார் வைகாசிக் கும்பம் நமது ஊரில் விஷேசம். அதைச் செய்வம். போன வைகாசியில நமது சனங்கள்ல அரவாசிப்பேருக்குமேல அழிஞ்சி போச்சுதுகள் இப்ப இருக்கிற நாங்களாவது செய்வம். எல்லாரும் ஒத்துழைச்சால் இருக்கிற சனங்களின் மனத்துயரையாவது போக்கலாம். முதலில் அம்மன் கோயில் பக்கம் போய் வெளியாக்கி கும்பத்துமாலை அமைப்பம். புறப்படுங்க". கந்தையர் எடுத்த முடிவு சரியாகப்பட்டது. கும்பம் வைப்பதற்கான ஏற்பாடுகளையும் கந்தையர் ஒழுங்கு செய்துவிட்டார்.

"அதுதான் அம்மன் நகர். வாங்க போவம்". கந்தையர் இடத்தை சுட்டிக் காட்டிக் கொண்டு நடந்தார். அவரைத் தொடர்ந்துபல இளைஞர்கள் நடந்தார்கள். "எல்லாம் காடு பற்றிப் போய்க்கிடக்கு. சனங்கள் இருந்த இடமெல்லாம் யானைகளின்ட ராச்சியமாப் போச்சு" இளையவர் பெருமூச்சுடன் சொன்னார். "இதுல தான் கோயில் இருந்தது. இதில இருந்த பெரிய காட்டுத்தேங்கா மரத்தக் காணல்ல. அடையாளமே தெரியல்ல" சொல்லிக் கொண்டு தேடினார்கள். சித்திரத்தாரின் கண்கள் கூர்மையானவை. "இந்தாருக்கு இந்தக்கல்லில தான் வயிரவர்ர சூலம் இருந்தது. நல்ல காலம் இந்தக் கல்லாவது இருக்குதே". கிடைக்காததொன்று கிடைத்த சந்தோசம். சூழ்ந்து நின்று பார்த்தார்கள்.

"இனிப்பாத்துக் கொண்டு நிக்கேலாது. சட்டுப்புட்டென்று வேலய முடிக்க வேணும்". சிரமதானத்துக்கு ஆயத்தமானார்கள். "முதல்ல அம்மன் கோயில் இருந்த இடத்தத் துப்பரவாக்குவம்". தொடங்கினார்கள். பற்றைக்காடுகளை வெட்டி இழுத்துக் குவித்தார்கள். காட்டுத்தடிகளை வெட்டிக் கொட்டிலமைத்தார்கள். கிடுகுகளைக் கொண்டு கூரையை வேய்ந்தார்கள். வைரவர் கல்லை மையமாக வைத்து மூன்றடி உயரத்துக்குக் காட்டுத் தடிகளால் பந்தல் அமைத்தார்கள். கோயிலடிக்குப் போவதற்கான ஒற்றையடிப் பாதையும் தயார். குப்பைகளைக் கூட்டித் தீயிட்டார்கள். நிழல்தரு மரங்களை அப்படியே விட்டார்கள். அவர்கள் கோயிலடியை வெளியாக்கி விட்டார்கள். ஒரு கிராமத்து மக்களை உள்ளடக்கக் கூடியதாக வெளி தெரிந்தது. வேலையில் கவனம் இருந்தாலும் கந்தையரின் மனதில் பழைய அனுபவங்கள் இழையோடின.

சம்பிரதாயப்படி பூசாரியாருக்குப் பச்சை பெட்டி அனுப்பியாகி விட்டது. பச்சைப் பெட்டி என்பது பூசாரியாருக்கு உரிய அழைப்பு மரியாதை. ஒரு பனையோலையால் இழைத்த பெரிய கடகப் பெட்டிக்குள் மரக்கறி வகைகள், அரிசி தேங்காய், வேட்டி சால்வை

அனைத்தும் இருக்கும். கணபதிப பிள்ளைப் பூசாரியாரும் உதவியார்களும் வந்து விட்டார்கள். உரிய பொருட்களைக் கணபதியார் பட்டியலிட்டு அனுப்பியிருந்தார். கந்தையர் இளைஞர்களை முடுக்கி விட்டார்.

பொருட்கள் வந்திறங்கின. வெள்ளை கட்டுவதற்கு சலவைத் தொழிலாளரைத் தேடினார். அவர் இல்லை. கிராமத்தில் இருந்த தொழிலாளர் குடும்பங்கள் இடம் பெயர்ந்து வன்னியில் இருந்தன. அங்கு எறிகணைகள் வந்து விழுந்து வெடித்துப் பலியெடுத்துவிட்டது. "எப்படி வெள்ளை கட்டுவது?" கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை மாதிரி யாகி விட்டது. இந்த யுத்தம் எல்லாரையும் பாதித்து விட்டது. கந்தையருக்கு யோசனை பிடித்து விட்டது.

"கந்தையாண்ணே! ஏன் யோசிக்கிறியள். நாங்கள் வெள்ளை கொண்டு வந்து கட்டிறம்". வீடுகளில் இருந்து வேண்டிய துணிகள் கிடைத்தன. இளைஞர்கள் வெள்ளை கட்டிவிட்டார்கள். பறை மேளம் இருந்தது. அடிக்க ஆட்கள் இல்லை. கொடிய போரின் தாக்கத்தை அப்போதுதான் உணர்ந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் இந்த யுத்தம் ஏதோ ஒருவகையில் தாக்கியுள்ளதைக் கந்தையர் புரிந்து கொண்டார். "எங்களுக்கு மேளம் அடிக்கத் தெரியும். நாங்க இருக்கிறம்" இளைஞர்கள் இடைவெளியை நிரப்பினார்கள்.

கந்தையருக்குத் தெம்பு வந்துவிட்டது. பூசாரியார் தனது வேலைகளைத் தொடங்கி விட்டார். இளைஞர்கள் பம்பரமானார்கள். பந்தலை தாங்கியிருந்த கப்புகளுக்கு வெள்ளைத் துணிகளைச் சுற்றினார்கள். வயிரவர் பந்தலில் வெடித்துப் பூமலர்த்த பாளையைக் கட்டவேண்டும். தென்னஞ்சோலையாக இருந்த கிராமங்களில் வட்டுத்தெறித்த தென்னைகள்தான் மிச்சமாய்க் கிடந்தன. தப்பியிருந்த தென்னைகளில் இருந்து தெரிந்து ஒரேயொரு பாளையைக் கொண்டுவந்து கட்டினார்கள். வைரவர் பந்தல் அம்மனைப் பார்த்தபடி இருந்தது. கன்னிக்கால் நாட்டும் சடங்குகளைச் செய்வதற்குப் பூசாரியாருக்கு உதவினார்கள். சிலர் பறைமேளம் அடிப்பதில் கவனஞ்செலுத்தினார்கள். கந்தையருக்கு உலக மாற்றங்களையிட்ட சிந்தனை பிடித்து விட்டது. "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல" தனக்குள் பண்டிதத் தமிழில் சொல்லிச் சிரித்துக் கொண்டார். வேலைகள் துரிதமாகிக் கொண்டிருந்தன. திடீரென பல்லாயிரக் கணக்கான அழகான வண்ணத்துப் பூச்சிகளின் படையெடுப்பு. குஞ்சு குருமானாய் பாட்டம் பாட்டமாக வட்ட மடித்த வண்ணம் பறந்து அந்த இடத்தினைச் சூழ்ந்து கொண்டன. சிறுவர்களுக்குக் கொண்டாட்டம். அவற்றுக்குப் பின்னால் சுற்றினார்கள். அவை பிடிபடாமல் பறந்து திரிந்தன.

**"மண்ணுக்க.. விதைச்சிப் போட்டாங்க.. புதைஞ்சு போய்க் கிடக்குதுகள்.... ...." சனங்களின் கண்கள் பனித்தன. "எப்பம்மா பூமரங்கள இனிப் பார்க்கப் போறம்?" சனங்கள் அங்கலாய்ந்தார்கள். சாமி கைகளை விரித்தது. சனங்களையும் பூசாரியையும் சுற்றிப் பார்த்தது. அட்டகாசமாயச் சிரித்தது. இரண்டு கைகளையும் விரித்து வண்ணத்துப் பூச்சிகளைக் காட்டி "உங்கள... சுத்திப் பறந்து..... திரியுது... பார்..." சொல்லி முடிந்ததும் சாமியாடியவர் சரிந்து கிடந்தார். சிறிதும் பெரிதுமாய் பல்லாயிரக்கணக்கில் வண்ணத்துப் பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன. சனங்கள் விறைத்து நின்றார்கள்.**

அந்திவானம் செம்மை காட்டியது. எல்லா வேலைகளும் முடிந்து விட்டன. பூசாரியார் குளித்து வெள்ளையுடுத்து, திருநீறு பூசி அட்டகாசமாகக் காட்சி யளித்தார். அவரைப் பார்த்த சிறுவர் களுக்குப் பயமாகவும் இருந்தது. யுத்த டாங்கிகளையும், போர் விமானங் களையும் கண்டு பழக்கப் பட்டவர் களுக்கும் பூசாரியாரின் தோற்றம் கிலியைத் தந்தது. ஒருவரில் ஒருவர் ஒளிந்து பார்த்தார்கள். அவர் மந்திர உச்சாடனத்தில் இருந்தார். அம்மனைக் கும்பத்தில் இருத்துவது இலகு வானதல்ல. மந்திரங்கள் முழங்கின. பறைமேளம் ஒலித்தது. பூசை மணியும், உடுக்கொலியும் சேர்ந்து கொண்டது. ஆட்டிலறிக் குண்டுகளும், ஷெல்வெடிச் சத்தங்களுக்கும் நடுங்காத சிறுவர்கள் இந்த பறைமேளத்தின் சத்தத்துக்குப் பயந்தார்கள். வெடிச்சத்தங்களுக்கும் நெஞ்சு படபடக்கும். உடுக்கு, மந்திர ஓசைகளுக்குத் தங்கள் உடல் யாவும் உதறல் எடுத்ததை உணர்ந்தார்கள். பூசாரியார் அம்மனுக்கு உருவேற்றி கும்பத்தில் அமர்த்தும்போது அவரை யறியாமல் "ஹா ...." என்று அலறி விட்டார். சனங்கள் திறந்த கண்மூடாது பார்த்திருந்தார்கள்.

மடை வைத்துப் பூசைதொடங்கித் திரை திறந்ததுதான். தாமதம். ஒருவர் "ஹா....ஆ..." சத்தத்துடன் உடலை வளைத்து, முறுக்கி நிலத்தில் விழுந்து புரண்டார். கும்பத்துமாலின் கருவறைக் குள் நுழைந்து முழங்காலில் கிடந்து சாமியாடினார். அவரின் தலையில் தண்ணீர் கொட்டப்பட்டது. இன்னும் சிலர் ஆடினார்கள். அவர்களைச் சூழ்ந்து மந்திரம் ஓதினார்கள். உடுக்கு முழங் கியது. சனங்கள் குவிந்து விட்டார்கள். சனங்கள் இருந்த இடத்தைவிட்டு எழும்பி னார்கள். அவர்களை அமர்ந்திருந்து பார்க்குமாறு இளைஞர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆண்கள் ஒருபுறம் இருந்தார்கள். பெண்கள் ஒருபுறமாக இருந் தார்கள். சனங்களின் முகங்களில் பிரகாசம் தெரிந்தது. அவர்கள் தங்கள் துயரங்களில் இருந்து விடுபடும் நிலைக்கு வந்து கொண்டிருந்தார்கள். தங்கட பிள்ளைகளைப்பற்றிக் கட்டுக் கேட்க ஆவலாய் இருந்தார்கள். கந்தை யரின் மனதில் சந்தோசம். பாட்டம் பாட்டமாக வண்ணத்துப்பூச்சிகள் வந்தன. எங்கும் பரவிப் பறந்தன. சனங்களில் முட்டி மோதித் திரிந்தன. எவ்வளவு துரத்தியும் முடியவில்லை. வருவதும் போவதுமாகப் பறந்து திரிந்தன. கும்பத்து மாலுக்குள்ளும் சென்று வந்தன.

சனங்களைவிடவும் வண்ணத்துப் பூச்சிகள் அதிகமாயிருந்தன. அங்கு மிங்கும் முன்னும் பின்னும் பறந்து திரிந்தன. "எங்கிருந்து இவ்வளவு வண்ணத்துப் பூச்சிகளும் வருது? ஏன்று மில்லாமல் இப்படிப் பறந்து திரியுதுகள். புதினமாய்க் கிடக்கு". சனங்களுக்கு அதிசயங் கலந்த ஆச்சிரியம். "நானென்டா என்ர வாழ்நாள்ல இப்படி ஒரு புதினத்தக் காணல்ல" வயதில் மூத்த சின்னராசா சொன்னார். உள்ளே சென்ற சாமி வெளியில் வந்து இளைஞரின் மேள இசைக்கு ஏற்பக் குலுங்கியாடியது.

கன்னிக்கால் பக்கத்தால் குலுங்கி ஆடிச் சென்றது. விறகு கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அவ் விடத்தில் சில இளைஞர்கள் எதிரெதிராக நின்றனர். அவர்கள் கைகளில் திருநீறு இருந்தது. வாய்கள் முணுமுணுத்தன. சாமியை நோக்கி மந்திரங்களை முணுமுணுத்து திருநீற்றை "சூ.." வென்று ஊதினார்கள். அவர்களைச் சாமி பார்த்து நெஞ்சில் கையை வைத்து "என்னை அசைக்க முடியாது" சைகை காட்டிச் சென்றது. சாமியின் பின்னாலும் வண்ணத்துப்பூச்சிகள் சுழன்று

திரிந்தன. "இந்த வண்ணத்துப்பூச்சி களால கரச்சலாக்கிடக்கு, இதுகள் எங்கிருந்து வருது?". சனங்கள் ஆளுக் காள் கேட்டுக் கொண்டார்கள். அவர்க ளுக்கு இடைஞ்சலாய் இருந்தது. சாமி தீயை மிதித்துக்கு குதித்து ஆடி வந்தது. தலையை நீட்டி "ம்ம்..." என்று நின்றது. புரிந்து கொண்ட இளைஞர்கள் தலையில் தண்ணீரை ஊற்றினார்கள். கும்பத்து மாலினுள் சென்று சாட்டையை ஏந்தி வந்தது. இளைஞர்களைத் தாண்டிச் சென்றது சுந்தரலிங்கத்தார் மறைந்து நின்றார். அவரைக் கண்டு கொண்டு அவரிடம் சாட்டையைக் கொடுத்து முழங் காலில் நின்று "ஹா....." சத்தமிட்டு கை களை இருபுறமும் நீட்டியது.

சுந்தரலிங்கத்தார் சாட்டையைக் கையி லேந்தி மந்திரித்தார். ஒவ்வொரு கையி லும் மூன்று மூன்று சாட்டையடி கொடுத்தார். முடிந்ததும் சாமியிடம் சாட்டையைக் கொடுத்தார். சாமி கும்பத்து மாலினுள் சென்று சாட்டையை ஒப்படைத்துக் கலையோடு ஆடியது. பூசாரியார் பலத்த சத்தத்தோடு மந்தி ரித்தார். சாமி வெளியே வந்து கன்னிக் காலுக்கு அண்மையில் மண்டியிட்டுச் சர்வாங்காசனத்தில் கிடந்தது. இரு கைகளிலும் வேப்பங்கொத்தினைப் பிடித்தபடி இரு தொடைகளிலும் ஊன்றித் தலையைச் சுழற்றி ஆட்டியது. மூச்சு விரைந்து கனலாகப் பறந்தது. பின் இருகைகளையும் நிலத்தில் ஊன்றிக் குலுங்கி குலுங்கி அழுதது. தலையைச் சுழற்றிப் பலமாகக் கலையோடு பார்த் தார்கள். தங்கட பிள்ளயளப் பற்றிக் கட்டுக் கேட்கும்படி பூசாரியிடம் சொல்லி வைத்தார்கள். பூசாரி வந்தார். மந்திரித்த தண்ணீரைத் தெளித்தார். "எந்தத் தெய்வம் என்று சொன்னால்தான் அதற்குரிய மந்திரத்தைச் சொல்லலாம்." கண்களை மூடி மந்திரத்தை ஓதினார். கேள்வி கேட்டார்.

"சரி.... ஆர்... நீ? சொல்லு".

" நான் அம்மன்"

"எந்த அம்மன்?"

"வன்னித் தெய்வம் வற்றாப்பளை அம்மன்"

சனங்களின் வாய்களில் இருந்து 'வற்றாப்பளை அம்மன்' ஒலித்தது.

''எங்கட பூமரங்களெல்லாம் எங்கம்மா'' மனங்கள் குலுங்கின.

சாமி குலுங்கி அழுதது. நிமிர்ந்து பூசாரியைப் பார்த்தது. இன்னொரு சாமி ஆடிக்கொண்டு வந்தது. அவ்விடத்தில் வந்து நின்றது. நடப்பதைப் பார்த்தது. பூசாரியார் அதற்கு மந்திரித்த தண்ணீ ரைத் தெளித்துத் திருநீற்றைப் 'பூ..' என ஊதிவிட்டார். அந்தச் சாமி ஒருவித சந்தேகப் பார்வையை வீசி அப்பால் நகர்ந்தது. அது போனதும் கலையோடு தலையைச் சுற்றி ஆவேசமாய் சாமி ஆடியது. சனங்களை நிமிர்ந்து பார்த்தது. தரையில் குழியைக் கிண்டி யது. சைகை செய்தது. அந்தக் குழியை கையால் மூடியது.

''மண்ணுக்க.. விதைச்சிப் போட் டாங்க.. புதைஞ்சு போய்க் கிடக்கு துகள்.... .'' சனங்களின் கண்கள் பனித்தன. ''எப்பம்மா பூமரங்கள இனிப் பார்க்கப் போறம்?'' சனங்கள் அங்கலாய்த்தார்கள். சாமி கைகளை விரித்தது. சனங்க ளையும் பூசாரியையும் சுற்றிப் பார்த்தது. அட்டகாசமாயச் சிரித்தது. இரண்டு கைகளையும் விரித்து வண்ணத்துப் பூச்சிகளைக் காட்டி "உங்கள... சுத்திப் பறந்து..... திரியுது... பார்...'' சொல்லி முடிந்ததும் சாமியாடியவர் சரிந்து கிடந்தார். சிறிதும் பெரிதுமாய் பல்லாயிரக் கணக்கில் வண்ணத்துப் பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன. சனங்கள் விறைத்து நின்றார்கள்.

# வலி...!

'அகில்' அகிலேஸ்வரன்

2

அமரர் 'செம்பியன் செல்வன்'
ஆ.இராஜகோபால்
ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2010இல்
இரண்டாம் பரிசு பெற்ற கதை



மச்சக்கறி இல்லையென்றால் மயூரனுக்கு சாப்பாடு இறங்காது. செவ்வாய், வெள்ளி போறதே அவனுக்கு பெரும்பாடாக இருக்கும். அன்று வெள்ளிக்கிழமை என்பதால் சாமினி மரக்கறிச்சாதம் செய்து, ஊறுகாய்த் துண்டொன்றும் வைத்திருந்தாள். மதிய இடைவேளையின்போது வேண்டா வெறுப்பாக சாப்பிட்டுவிட்டு, வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பியிருந்தான்.

'இன்டைக்கு நல்ல பேச்சுத்தான் நடக்கப்போகுது' என்று நினைத்து வந்ததைப் போல வீட்டுக்கு வந்தபொழுது, புன்முறுவல் காட்டி வரவேற்ற சாமினி, அவன் கொண்டு வந்த சாப்பாட்டுப் பெட்டியைத் திறந்து பார்த்ததும் புறபுறுக்கத் தொடங்கினாள்.

"என்னப்பா, கொண்டுபோன சாப்பாடு அப்பிடியே இருக்குது...."

"ம்... மனுசர் சாப்பிடக் கூடிய சாப்பாட்டை வைச்சால் எல்லோ சந்தோசமாச் சாப்பிட" என்றான் வெறுப்பு மண்டிய குரலில்.

"எந்த நாளும் மட்டனும், சிக்கனும் என்று சாப்பிட்டு நல்லா கொலஸ்ரோலை ஏத்தத்தான் உங்களுக்கு விரும்பம்..." புறுபுறுத்தபடி லஞ்ச் பாக்ஸை 'சிங்'கில் போட்டு தண்ணீரைத் திறந்து விட்டாள். சாமினியின் குடும்பம் வெஜிடேரியன் என்று மயூரனுக்கு கலியாணம் பேசும்போதே தெரியப்படுத்தி இருந்தார்கள். நல்லவேளை வெளிநாட்டு தனிக்குடித்தன வாழ்க்கையில் அவன் நிறையவே சமைக்கக் கற்றுக் கொண்டிருந்தான். தனக்குத் தேவையான மச்சச் சாப்பாட்டை தானே சமைத்துக் கொள்ளுவான். சாமினி அவனுக்கு முட்டை மட்டும் அவித்துக் கொடுப்பாள். அவள் மச்சத்தைக் கையாலும் தொட்டதில்லை.

உடை மாற்றி, சற்று நேரம் சோபாவில் அமர்ந்து டீவியை ஓடவிட்டான். வன்கூவரில் நடந்த 'வின்டர் ஒலிம்பிக்' விளையாட்டுப் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பு நடந்து கொண்டிருந்தது. கனடா ஐந்து தங்கப்பதக்கங்களை வென்றிருந்தது.

'இன்றைக்கு ரஷ்யாவும் கனடாவும் ஹொக்கி விளையாடுவீனம். கட்டாயம் பார்க்கவேணும். ஹொக்கியில இந்த முறை கனடா 'வின்'பண்ண வேணும்' மனதுக்குள் நினைத்துக் கொண்டான். அகதியாய் வந்தபோது அடைக்கலம் தந்த நாடல்லவா!

"என்னப்பா இப்பிடியே இருந்தால் சரியா.....? எழும்பி வெளிக்கிடுங்க. இன்றைக்கு நந்தினியின்ர மகளுண்ட 'பேத்டே பார்ட்டி' இருக்கெல்லோ...?

(ஞானம் 122, ஜூலை 2010)

“ஓமப்பா அதை மறந்தே போயிற்றன். அங்கையாவது போனா மச்சம் சாப்பிட லாம் தானே’ என்றான் சாமினிக்கு கோபமூட்டுவதற்காகவே.

அவனைத் திரும்பிப் பார்த்து முறைத்து விட்டுப் போனாள் சாமினி.

மயூரனுக்கு ‘ஹைகொலஸ்டிரோல்’ இருப்பதாக குடும்ப வைத்தியர் சொன்ன நாளில் இருந்து சாமினியும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். செவ்வாயும், வெள்ளியும் வீட்டில் மச்சம் சமைக்க சாமினி அனுமதிப்பதில்லை. மற்றைய நாட்களில் எல்லாம் தனக்கு விரும்பியவாறு ஏதவாது இறைச்சி, ஹொட்டோக், பேகர் என்று வாய்க்கு ருசியாக சாப்பிட்டான். திருடனாய் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பதுபோல அந்த உணவுப் பழக்கத்தையும் தானே விட்டா லொழிய தான் சொல்லி எதுவும் நடக்காது என்பதை உணர்ந்து மௌனி யானாள் சாமினி.

வெள்ளிக்கிழமை மாலை நேரம் என்பதால், அவர்கள் பயணித்த உயர் வேகப்பாதை (Highway) அமைதி யாகக் கிடந்தது. பனிகொட்டும் காலம் என்பதால் நேரத்திற்கே இருள் கௌவத் தொடங்கியிருந்தது. தெருவின் இரு புறமும் பனித்துளிகள் உறைந்து போய் கல்லாகிக் கிடந்தன.

சதா வேலை வேலை என்று ஓடித் திரியும் வேகவாழ்க்கையின் மத்தியில் இப்படி மனைவியுடன் காரில் பய ணிக்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் மகிழ்ச்சி கரமான பொழுதுகள். வேலைப்பளு, கடன்பிரச்சனைகள், தாய் மண்ணின் நினைவுகள் எல்லாவற்றையும் சற்று ஒதுக்கிவிட்டு இருவரும் எத்தனையோ விடயங்களை பகிர்ந்து கொண்டு, ஒருவரை ஒருவர் கிண்டலடித்துக்கொண்டு செல்வது உண்மையில் வாழ்க்கைப் பயணம் இப்படியே நீளக்கூடாதா என்று ஓரிரு சமயங்களில் அவன் நினைத்துக்கொள்வதுண்டு.

மயூரன் காரை செலுத்திக் கொண்டு வர சாமினி சுற்றுமுற்றும் பார்த்து ரசித்துக் கொண்டே வருவாள். பனியில் நனைந்து நிற்கும் கிற்ஸ்மஸ் மரங்கள், வரிசை யாய் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மின்கம் பங்கள், வானுயர்ந்த மாடங்களின் வடிவ மைப்புக்கள், சதா வானத்தில் அங்கு மிங்கும் பறந்து திரியும் விமானங்கள் என்று இவற்றையெல்லாம் ஒரு குழந்தை யைப் போல அலுக்காமல் பார்த்து மகிழ்வாள் சாமினி.

திடீரென்று எதையோ ஒன்றைப்பார்த்த வளைப்போல சாமினி சத்தம் போட்டாள்.

“மயூ..... மயூ... அங்க பாருங்க” என்று அவள் சொல்ல, அவள் காட்டிய திசையில் மயூரன் பார்வையைச் செலுத்தி னான்.



**கனடாவுக்கு அகதியாக வெளிக்கிட்ட அவன், மெக்சிக்கோ வரை ஒரு பிரச்சினையும் இல்லாமல் வந்துவிட்டான். கனடாவுக்கு போவதென்றால் அமெரிக்காவுக்குப் போய் அங்கிருந்துதான் கனடாவுக்குப் போக வேண்டும். மெக்சிக்கோவுக்கு வந்து இரண்டு மாதங்கள் நின்றாகிவிட்டது. அவன் வந்த நேரமோ என்னவோ இலகுவாக அமெரிக்காவுக்கு போகின்ற கள்ளப் பாதைகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன.**

அவர்கள் பயணிக்கின்ற பாதையருகே ஒரு பெரிய ‘ட்ரக்’ ஒன்று வந்து கொண்டிருந்தது.

‘ட்ரக்’ என்றாலே சாமினிக்கு சரியான பயம். “ட்ரக் வருகுது. கிட்டப் போகாதேங்கப்பா” என்பாள். பத்துப்பன்னிரண்டு சில்லுகள் கொண்ட பாரிய அதன் உருவத்திற்கு முன்னால் தங்களின் கார் அவளுக்கு பருந்தின் கால்களுக்கிடையில் இரையாகப்போகும் கோழிக்குஞ்சைப் போல உணருவாள்.

“தள்ளிப்போங்கப்பா... தள்ளிப் போங்க...” என்று அந்த ‘ட்ரக்’ வண்டி தங்களை முந்திச் செல்லும் வரை செபம் போல சொல்லிக்கொண்டே இருப்பாள். அவளது பயம் சிலவேளைகளில் மயூரனுக்கு சிரிப்பாக இருக்கும்.

“அங்க பார்த்தீங்களா....? அதென்னப்பா அதுகள்...?” சாமினியின் கண்கள் கூர்மையுடன் அந்த ‘ட்ரக்’கின் பின்புறப் பகுதியில் பதிந்திருந்தன. மயூரன் அப்பொழுதுதான் கவனித்தான். அந்த ட்ரக்கில் பன்றிக்குட்டிகள் அடைக்கப் பட்டிருந்தன.

அந்த வாகனம் முழுமையும் மூடப் பட்டு, பின்பகுதியிலும், பக்கங்களிலும் சில சிறிய துவாரங்கள் இடப் பட்டிருந்தன. அந்தத் துவாரங்களின் ஊடாக தமது மூக்கை வெளியே விட்டு தம்மை ஆசுவாசப்படுத்தின அந்தக் குட்டிகள். அவை ஒன்றையொன்று முட்டித்தள்ளியபடி துவாரத்தின் வழியே மூச்சுக்காற்றை இழுத்துக்கொண்டன. ட்ரக்கை மூன்று அடுக்குகளாகப் பிரித்து அவற்றை உள்ளே அடைத் திருப்பார்கள் போல் தோன்றியது. அவற்றின் தலை உயரத்தோடு ஒட்டியதாக இருந்த அந்தத் துவாரங்கள் மட்டும் திறந்திருந்தன.

“அங்க பாருங்க நல்ல சிவப்பு நிறத்தில பன்றிக் குட்டியள்” என்றால் சாமினி.

“நான் நினைக்கிறன் இதுகள் இப்பதான் ஒன்று, ஒன்றரை மாதக் குட்டியாய் இருக்கும்.”

“இதுகளின்ட இறைச்சியைத்தான் ‘பேக்கின்’ செய்யுறதுக்கு எடுக்கிறது” விளக்கம் கொடுத்தான் மயூரன்.

“ஐயோ! இவ்வளவு சின்னக் குட்டியளின்ர இறைச்சியைத்தான் நீங்க சாப்பிடுறனீங்களோ?” என்றவள் மேலும் தொடர்ந்தாள்.

“சாக்காட்டத்தான் கொண்டு போறாங்கள், அதுக்காக இப்பிடியா...? அதுகள் சுவாசிக்கக்கூட ஏலாமல் எவ்வளவு கஸ்டப்படுகுதுகள்.”

“உப்பிடி இறைச்சிக்கு என்று வளர்க்கிற ஆடு, மாடு, பன்றி எல்லாத்தையும் இவங்கள் நிலத்தில படுக்கக்கூட விடமாட்டங்களாம் என்ன மயூரன்?” தான் யார் மூலமாகவோ அறிந்திருந்த விடயத்தை ஊர்ஜிதப்படுத்தும் நோக்கத்தோடு கேட்டாள் சாமினி. மயூரன் அதை ஏற்றுக் கொண்டு தலை யசைக்கவும்,

“உயிர் என்டால் எல்லாம் உயிர் தானே. அதில மனுசர், மற்றதுகள் எண்டு பிரிச்சுப் பார்க்க ஏலாது. அதுகளும்

தங்கட உயிரைக் காப்பாத்த எவ்வளவு போராடுதுகள்" என்றாள் சாமினி.

"என்ன கறுமங்கள் இதுகள்" ஒன்றை யொன்று நெரித்தபடி மூக்கை நீட்டி, 'மூசு, மூசென்று காற்றைச் சுவாசித்தன. அவற்றைப் பார்க்க மயூரனுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

'பன்றியள் மட்டுமா? ஏன் நானும் கூட இப்பிடித்தானே கனடாவுக்கு வந்தனான். பன்றியளோட பன்றியா.....'

அவனது விழிகள் வீதியில் பதிந் திருந்தாலும், மனம் பத்து வருடங்களுக்கு முன்னர் நடந்த அந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்தது.

அகதியாக வெளிநாடு வந்த ஒவ் வொரு தமிழனுக்கும் கசப்பான கதைகள் பல இருக்கும். அந்த வகையில் அவனு டைய வாழ்க்கையில் நடந்த கசப்பான சம்பவம் ஒன்றை மீண்டும் இரைமீட்டுக் கொள்ள வேண்டியதாக இந்தச் சம்பவம் அமைந்துவிட்டது.

கனடாவுக்கு அகதியாக வெளிக் கிட்ட அவன், மெக்சிக்கோ வரை ஒரு பிரச்சினையும் இல்லாமல் வந்துவிட்டான். கனடாவுக்கு போவதென்றால் அமெரிக்கா வுக்குப் போய் அங்கிருந்துதான் கனடா வுக்குப் போக வேண்டும். மெக்சிக் கோவுக்கு வந்து இரண்டு மாதங்கள் நின்றாகிவிட்டது. அவன் வந்த நேரமோ என்னவோ இலகுவாக அமெரிக்காவுக்கு போகின்ற கள்ளப் பாதைகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன. இந்த நிலையில் தான் இரண்டுநாட்கள் அவனை தனியே விட்டு விட்டுப்போன ஏஜென்சிக் காரன் ஒருநாள் திடீரென்று வந்து கேட்டான். "தம்பி அமெரிக்கா வுக்குப் போறதுக்கு ஒரு வாய்ப்பு வந்தி ருக்கும். பிரச்சனை இல்லாமல் போயிரலாம்..." என்று சொல்ல மறுப் பேதும் சொல்லாமல் தலையாட்டினான். எப்பிடியாவது கனடாவுக்குப் போய்ச் சேர்ந்தால் போதும் என்றிருந்தது அவனுக்கு.

உடுப்புக்களை மடித்து எடுப்ப தற்குக் கூட நேரமில்லாமல் எல்லா வற்றையும் திரணையாகத் திரட்டி பைக்குள் அடைத்துக் கொண்டான். ஏஜென்சிக்காரன் தான் அழைத்து வந்த வாடகைக்காரில் மயூரனை ஏற்றிக் கொண்டான். எங்க போவது, எப்படி போவது என்று எதுவுமே தெரியாத நிலையில் ஏதோ ஏஜென்சிக்காரன் சொல்கிறான் என்று ஏறிக்கொண்டான்.

கார் நகரத்தை விட்டு வெளியான பாதையொன்றில் போய்க்கொண்டி ருந்தது. சிறிது நேர ஓட்டத்தின் பின் கார் ஒரு ஓரமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ட்ரக்கின் பக்கத்தில் போய் நின்றது. பையை எடுத்துக் கொண்டு இறங்கிய அவனை ட்ரக்கின் முற் பகுதிக்கு அழைத்துச் சென்றான். சாரதியின் இருப்பிடத்திற்கு பின்புறமாக இருந்த சிறிய துவாரம் ஒன்றின் வழியாக உள்ளே இறங்கச் சொன்னான் அந்த 'ட்ரக்'கின் சாரதி.

'என்ன இது இந்த சின்ன துவாரத்திற் குள்ளால் நான் எப்படி உள்ளே போவது' என்ற தயங்கிய மயூரனை சாரதி அரைகுறை ஆங்கிலத்தில் துரிதப் படுத்தினான். அவன் சொன்னது போவே முதலில் கால்களை உள்ளே நுழைத்து இறங்கினான். கால்கள் தரையில் பட்ட இடம் விழுவிழென்று வழுக்கியது. மெதுவாக தலையை உள்ளே எடுத்ததும் வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது. இரண்டு தடவைகள் வாந்தியெடுத்தபின் தலையை நிமிர்த்தினான். அவன் வந்த பாதை மூடப்பட்டு விட்டது. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. ஒருசில நிமிடங் களின் பின் அவனது கண்கள் இருளுக்குப் பழக்கமானது. வாகனத்தின் அசைவிலிருந்து பயணம் தொடங்கி விட்டதை உணர்ந்து கொண்டான்.

**'ஆறறிவு படைச்ச மனுசர் நாங்கள். உயிருக்கு ஆபத்து என்றதும் என்ன பாடுபட்டோ உயிரைக் கையில் பிடிச்சுக் கொண்டு, காடு, மேடு கடல் எல்லாந்தாண்டி நாடு விட்டு நாடு வந்து சேர்ந்திட்டம். இந்த ஜீவராசிகள் இறைச்சிக்கு என்றே வளர்க்கப்படுறதுகள். சாமினி சொன்னதைப் போல தங்கட தேவைக்கு ஏத்தமாதிரி அதுகளை நீட்டிநிமிர்ந்து படுக்கக்கூட விடாமல், சதை பிடிக்கிறதுக்கும், ஆரோக்கியமா இருக்கிறதுக்கும் என்று செயற்கையாக எத்தினையோ மருந்துளைக் கொடுத்து அதுகளை வருத்தி வருத்தி வளர்த்து கடைசியில் ஒன்று பார்க்க ஒன்றை – அடுத்தது நான் தான் என்ற மாதிரி மற்றது காத்திருக்க – மெசினுக்க தலையைக் குடுத்து சாக்காட்டுவான்கள். ஒரு மாட்டின்ட தலை அறுபடேக்க அந்த மாடு துடிக்கிற வேதனையும், அதுக்கு பின்னால நிற்கிற மாட்டுக்கு அடுத்ததாக எனக்கும் இது நடக்கப் போகிறது என்பதையும் உணர்ந்துகொள்ளும், சில மாடுகள் பரிதாபமாகக் கண்ணீர்கூட வடிக்குமாம். திமிறிக்கொண்டு ஓடியும், அவலமாய் கத்தி குரல் எழுப்பியும் தமது எதிர்ப்பைக் காட்டுமாம்.**

---

அப்பொழுதுதான் கவனித்தான். அவனைச் சூழ சிறியவையும், பெரியவை யுமான பன்றிகள் அடைக்கப்பட்டி ருந்தன. புதிதாக வந்த இவனை நெருங்கி அவை மோப்பமிட்டன. மயூரன் பயத் துடன் ட்ரக்கோடு சாய்ந்து கொண்டான். நல்ல வேளையாக சிறுதடுப்புக் கம்பி கள் இடையே இருந்தமையால் அவற்றால் இவனை நெருங்க முடிய வில்லை. அவை அந்த கம்பி இடை வெளிகளின் வழியாக தமது முகத்தை நீட்டி இவனை நெருங்க, பயமும், அருவருப்புமாய் நன்றாக ட்ரக்குடன் ஒட்டிக்கொண்டான். சற்றைக் கெல்லாம் அவனுக்கு மூச்சு முட்டியது. பன்றிக்குட்டிகளின் கழிவு நாற்றம் குடலைப் புரட்டியது. சில பன்றிகள் சிறுநீர் கழித்தன. அது இவன் முகத்தில் தெறித்தது. உடல் முழுவதும் ஏதோ பூச்சிகள் ஊர்வது போல் கசகசத்தது. அந்த சிறிய இடத்தை விட்டு ஒரு அடி கூட எடுத்துவைக்க இடமின்றி அந்த இடத்திலேயே அடைபட்டுக் கிடந்தான்.

'இப்படி நடக்கும் என்று நினைத் திருந்தால், செத்தாலும் பரவாயில்லை என்று சிலோனில் இருந்திருக்கலாம்' என்று ஒரு கணம் அவன் நினைத்துப் பார்க்கக்கூட தவறவில்லை.

மெக்சிக்கோவில் அவன் ஏற்றப்பட்ட இடத்தில் இருந்து அமெரிக்காவுக்குப் போவதென்றால் குறைந்தது இரண்டு மணித்தியாலங்கள் என்றாலும் எடுக்கும். அந்த இரண்டு மணித்தியாலமும் அவன் பட்ட அவஸ்தைக்கு அளவே இல்லை. நரகவேதனை, கையில் இருந்த காசை செலவு செய்ய விரும்பாமல் காலை யில் எதுவும் சாப்பிடவில்லை. மதியம் சாப்பிடுவோம் என்று ஆயத்தமான போதுதான் ஏஜென்சிக்காரன் வந்தான். உள்ளே புழுங்கிய வெப்பத்தில் நாவரண்டு தாகம் எடுத்தது. வாந்தி எடுத்ததில் தலைபாரமாகி, வயிற்றுக்குள் ஏதோவெல்லாம் செய்தது.

"இதுகளையெல்லாம் இறைச்சிக்குத் தானே கொண்டு போறாங்கள்" என்று நினைத்த மயூரனுக்கு தானும் அவற் றுடன் சேர்ந்து ஏதோ ஒரு கொலைக் களத்திற்குக் கொண்டு செல்லப்படுவது போல் தோன்றியது.

பசி மயக்கம் ஒரு புறம், மூச்சுத் திணறல் மறுபுறமாக அரைகுறை மயக்கத்தில் இருந்த மயூரனை அந்த ட்ரக் சாரதி அமெரிக்காவில் பெயர் தெரியாத, சனசந்தடியே இல்லாத ஒரு இடத்தில் இறக்கி விட்டுப் போய் விட்டான். கடும் குளிரில் அரைமயக் கத்தில் கிடந்த அவனை அந்த வழியால் சென்ற அமெரிக்கப் பொலீஸ்காரர்கள் பிடித்துவிட்டனர். அவனுடைய நிலை யைப் பார்த்து முதலில் அவனுக்குச் செய்யவேண்டிய முதலுதவிகளைச் செய்தனர். மயூரனுக்கு பயத்திலும், பயணத்தில் பட்ட அவஸ்தையிலும் காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. இந்த நிலை யில் அவனை ஏனைய கைதிகளுடன் வைத்திருக்க விரும்பாத காவல் துறையினர், அவனை ஒரு விடுதியில் சேர்த்தனர்.

காலையில் கண்விழித்த மயூரன், யாருக்கும் தெரியாமல் அந்த இடத்தை விட்டு வெளியேறி தன் ஏஜென்சியுடன் தொடர்பு கொண்டான். ஏஜென்சிக்காரன் சொன்னபடியே தன் உறவினர்களுடன் தொடர்புகொண்டு கனாடவுக்கு வந்து சேர்ந்தான்.

"என்னப்பா...? எங்க போறீங்க....?" சாமினி சத்தமிடவும் சுயநினைவுக்கு வந்தான் மயூரன். 'எக்ஸிட்' எடுக்க வேண்டிய இடத்தைத் தாண்டி கார் போய்க்கொண்டிருந்தது.

'உச்' சுக்கொட்டினான் மயூரன். சாமினி பொறுமையை இழந்து புறுபுறுக்கத் தொடங்கினாள்.

"சரி.. சரி. இதில எக்ஸிட் எடுத்துப் போவம். இப்ப என்ன அவசரம்?" என்றபடி காரைத் திருப்பினான் மயூரன்.

அந்தக் கசப்பான நினைவுகளினாலோ என்னவோ மயூரனுக்கு குளிரிலும் வியர்த்துக்கொட்டியது. 'காஸ்பொட்'டில் இருந்து தண்ணீரை எடுத்து இரண்டு மிடறு குடித்துவிட்டு வைத்தான்.

"உங்கட கவலையீனத்தால இன் றைக்கு பிறந்தநாளுக்கு நேரத்துக்கு போக ஏலாமல் போயிட்டுது. அப்பிடி என்னப்பா யோசினை....?"

பெரிதாக ஒரு முறை மூச்சை எடுத்துவிட்ட மயூரன் "நான் அகதியாக கனடாவுக்கு வந்த விதத்தை ஒருக்கா நினைச்சுப் பார்த்தன்..."

சாமினியிடம் ஏற்கனவே பல தடவைகள் அந்தக் கதைகளையெல்லாம் மயூரன் சொல்லியிருக்கிறான். "சரி சரியப்பா அதுகளையெல்லாம் விடுங்கோ என்று அவனுடைய தோளிலே அழுத்தி ஆசுவாசப் படுத்தினாள்.

அவர்கள் உள்ளே நுளையவும் கீர்த்தனா கேக் வெட்டவும் சரியாக இருந்தது. சாமினியின் நெருங்கிய உறவு அவர்கள். மகளுக்கு 'கீ பேத்டே' பெரிதாகக் கொண்டாட வேண்டும் என்று மண்டபம் எடுத்து எல்லோருக்கும் சொல்லிச் செய்தார்கள்.

போட்டோ எடுத்துக்கொள்ள ஒரு பகுதியினர் முண்டியடிக்க, ஒரு பகுதி யினர் சாப்பாட்டு லைனில் இணைந்து கொள்ள என்று வந்திருந்த கூட்டம் இரண்டாகப் பிரிந்தது. அன்று வெள்ளிக் கிழமை என்பதால் சைவச்சாப்பாடு ஒரு இடத்திலும், மச்சச் சாப்பாடு எதிர் புறத்திலும் வைக்கப் பட்டிருந்தது.

"மயூ.... உங்களுக்கு இன்டைக்கு நல்ல வெட்டுத்தான். நீங்க அந்தப் பக்கம் போங்க" என்று அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள் சாமினி.

மயூரன் கையில் 'பிளேட்'டும், முள்ளுக் கரண்டியும் எடுத்துக் கொண்டு வரிசையில் நகர்ந்தான். காற்றில் விதவிதமான உணவுகளின் வாசனை கலந்து வந்து கொண்டிருந்தது. மயூரனுக்கு உணவை நெருங்க நெருங்க வயிற்றை குமட்டத் தொடங்கியது. இடியப்பப் பிரட்டல், பிட்டு, ரொட்டி இவற்றுடன் 'சில்லிச்

சிக்கன், மட்டன் கறி, தந்தூரி சிக்கன், மாட்டிறைச்சிப் பிரட்டல் என்பன வரிசையாய் ஆவிபறக்கும் விதமாக வைக்கப்பட்டிருந்தன.

'ஆறறிவு படைச்ச மனுசர் நாங்கள். உயிருக்கு ஆபத்து என்றதும் என்ன பாடுபட்டோ உயிரைக் கையில் பிடிச்சுக் கொண்டு, காடு, மேடு கடல் எல்லாந்தாண்டி நாடு விட்டு நாடு வந்து சேர்ந்திட்டம். இந்த ஜீவராசிகள் இறைச்சிக்கு என்றே வளர்க்கப்படுறதுகள். சாமினி சொன்னதைப் போல தங்கட தேவைக்கு ஏத்தமாதிரி அதுகளை நீட்டிநிமிர்ந்து படுக்கக்கூட விடாமல், சதை பிடிக்கிறதுக்கும், ஆரோக்கியமா இருக்கிறதுக்கும் என்று செயற்கையாக எத்தினையோ மருந்துளைக் கொடுத்து அதுகளை வருத்தி வருத்தி வளர்த்து கடைசியில் ஒன்று பார்க்க ஒன்றை - அடுத்தது நான் தான் என்ற மாதிரி மற்றது காத்திருக்க - மெசினுக்க தலை யைக் குடுத்து சாக்காட்டுவான்கள். ஒரு மாட்டின்ட தலை அறுபடேக்க அந்த மாடு துடிக்கிற வேதனையும், அதுக்கு பின்னால நிற்கிற மாட்டுக்கு அடுத்ததாக எனக்கும் இது நடக்கப் போகிறது என்பதையும் உணர்ந்துகொள்ளும், சில மாடுகள் பரிதாபமாகக் கண்ணீர் கூட வடிக்குமாம். திமிறிக் கொண்டு ஓடியும், அவலமாய் கத்தி குரல் எழுப்பியும் தமது எதிர்ப்பைக் காட்டுமாம். அவன் கேள்விப்பட்டிருக்கிறான். இது எவ்வளவு பெரிய உயிர்க்கொலை.

சட்டென்று மயூரன் தன் கையில் இருந்த பிளேட்டை வைத்து விட்டு விலகினான்.

பத்து வருடங்களுக்கு முன் அந்த 'ட்ரக்'கில் நுகர்ந்த அதே அவருவருக்கும் மணம் அவன் வயிற்றைக் குமட்டச் செய்தது. முகமெல்லாம் வியர்வையில் நனைந்தது. மெதுவாக வோஷ்ரூமுக்குள் சென்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

"என்னப்பா. சாப்பிட இல்லையா? என்ன ஒரு மாதிரி இருக்கிறியள்..?" மயூரனைப் பார்த்ததும் அச்சமும் படபடப்புமாய் வினாவினாள் சாமினி. அவள் பிளேட் அரைவாசி ஏற்கனவே காலியாகியிந்தது. பக்கத்தில் 'புரூட் சலட்' வேறு.

மயூரன் சாமினிக்கு எதிர்புறமாக இருந்த கதிரையில் அமர்ந்துகொண்டான். சாமினியின் பதட்டத்தைப் பார்த்ததும் மயூரன் தன்னை திடப்படுத்திக் கொண்டான்.

"ஒன்றுமில்லை சாமினி எனக்கு இன்றைக்கு ஏதோ சாப்பிட மூட் இல்லாமல் இருக்குது. பசிக்க இல்லை.... நீர் சாப்பிடும்..." என்றான். மயூரனை சந்தேகமாய் பார்த்தபடி இரண்டு ஸ்பூன் சாப்பிட்டவள் அத்துடன் நிறுத்திக் கொண்டாள். 'புரூட் சாலட்டை' கைகளில் எடுத்துக் கிளறியபடி அவனை நெருங்கி அமர்ந்துகொண்டாள்.

"என்னப்பா... என்ன பிரச்சனை...?"

"ஒன்றுமில்லை. எனக்கு பழைய நினைவு வந்திட்டுது..." சிறிது நேரம் மௌமாய் இருந்த மயூரன் தொடர்ந்தான்.

"இனி நான் இந்த இறைச்சியள் ஒன்றும் சாப்பிடப்போறதில்லை. எனக்கு இந்த மச்சங்கள் ஒன்றும் இனிவேண்டாம்" என்றான்.

அவன் குரலில் உறுதி தெரிந்தது. அவன் தாடைகள் இறுகிப்போய் இருந்தன. கண்கள் தீர்க்கமாய் சாமினியின் கண்கள் மீது நிலைத்திருந்தன.

❍

குழந்தை விர்.....விர்.....விர்.... என்று அழுதது.

விக்கி விக்கி அழுதது.

ஏங்கி.... ஏங்கி அழுதது.

அதன் அழுகையை யாராலும் நிற்பாட்ட முடியவில்லை. மெனிக் பாம்மே சத்தத்தில் உறைந்து போனது.

இந்தக் குழந்தையின் அழுகை புதுமையானதுமல்ல, புதியதுமல்ல, அடிக்கடி இப்படித்தான் கத்தும். கத்தத் தொடங்கினால் நிப்பாட்டவே முடியாது!

அது மூன்று வயதுக் குழந்தை அதுக்கு உலகமே தெரியாது!

எட்டு மாதமாக முடங்கிப்போன வாழ்க்கை.

அதுதான் அந்தக் குழந்தைக்கு வெறுப்போ என்னவோ.....! சுதந்திரமாகச் சுற்றித் திரிய வேண்டிய பிள்ளையை இந்த சிறைக்குள்ள கொண்டு வந்து போட்டா.... என்ன செய்யும்? வாழ்வே வெறுத்து அழத்தானே செய்யும்!

ஒருநாளா.... இரண்டு நாளா...... எத்தின நாளைக்குத்தான் பொலித்தீன் பையால் முளைத்துப் போயிருக்கிற அகதிக் குடிசைக்குள்ள முடங்கிப் போய்க் கிடக்கின்றது.

வெயிலடிச்சாப் புழுக்கம்! மழை பெஞ்சா சதுக்குப் புதுக்கென்று....! ஊரில உள்ள நுளம்பெல்லாம் ஆக்களிலதான்....மனுஷ வெட்க வெற....

ஆன.....மான.... சோறா? கறியா?

ஏதோ அவிச்சுப் போடுறத திண்டு துலைக்க வேணும். நாத்தல் நெத்திலிக் கருவாடும் கோறா அரிசிச் சோறும்!

வெளியில ஒண்டும் சொல்லேலா வெட்கம் கெட்ட வாழ்க்கை. அது நம்மட தலைவிதி வாழ்ந்துதான் ஆகணுமெண்டா...... இந்தப் பிஞ்சுக் குழதைகள்தான் என்னசெய்யும்.... அதுகள் என்ன பாவம் செய்ததுகளோ தெரியா ...... நம்மட வயித்தில வந்து புறந்துத்துகள்.

தாயிட வயித்தில புறந்தத விட.... நாயிட வயித்தில புறந்திருந்தாலும் கொஞ்சம் சுதந்திரமாக திரியுங்கள்.....

நாசமாப் போன சண்டையில எல்லாத்தையும் இழந்து போட்டு வந்து இப்படிச் சாக வேண்டிக் கிடக்குது......




(ஞானம் 123, ஆகஸ்ட் 2010)

ஆரிட்டச் சொல்லி அழுற.... ஆண்ட வனிட்ட சொல்லி அழுறத்திற்கு ஆண்ட வனும் செத்துப் பொயித்தான்.

குழந்தைக்கு இதுதான் ஒரே வெறுப்பு போல......

சினம் பிடிச்ச குழந்தை போல் அழுதது.

குழந்தையின் நீண்ட அழுகையை அந்த இளந்தாயினால் கட்டுப்படுத்த முடிய வில்லை.

ஒரே அழுத அழுகைதான்!

தனிமரமாய் ஒடிந்து போயிருக்கும் அவளினால் அந்தக் குழந்தையின் பலத்திற்கு தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஏதேதோ தாலாட்டுப் படித்தாள் .....இம்....இம்.....

தோளோடு சேர்த்து போட்டு அமத்திப் பார்த்தாள்..... தோள் சூட்டுக்கு கொஞ்சமாவது படுக்குமெண்டு..... அது எங்க... அழுகையை விட்டாத்தானே!

பால கொஞ்சம் அடிச்சுக் குடிச்சுப் பார்க்கலாமெண்டு பார்த்தா பால் மாவக்கண்டு பத்துமாதம்.

சரி...சரி... என்று போட்டு நெஞ்சப் பிதுக்கி வெளிய எடுத்து விட்டா அது பால்வத்தி றப்பர் குழாய் போல சுருண்டு போய்க் கிடந்தது.

பரிதாபம் பொறுக்க முடியாம பக்கத்துக் குடிசை பார்வதியக்கா ஓடி வந்து பால் கொஞ்சம் அடிச்சுக் கொடுத்தா...

குடிக்க மறுத்து அடம்பிடித்தது குழந்தை.

பொலித்தீன் கொட்டிலின் வெக்கையும் ஆக்களின் வெக்கையும்..... குழந்தை புழுங்கிப் போய் வியர்த்து வடிந்தது.

ஆத்திரம் தாங்காது அழாத அழாத என்று இரண்டு மூன்று அடிகள் போட்டாள். பச்சை மேனியில் விரல்கள் பதிந்து போயிருந்தன பலன் இல்லை.

ஐயோ... பிஞ்சுக் குழந்தைக்கு அடிச்சுப் போட்டனே! தாயின் வயிறு பற்றி எரிந்தது.

நெஞ்சுக்குள்ளே வெடித்து வெடித்து அழுதாள்.

சட்டையைக் கழற்றி எறிந்து போட்டு குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.



**தனிமையில ஆப்பிட்டுப்
போனால் வில்லங்கத்துக்குள்ள
மாட்டிக் கொள்ள வேண்டி வரும்
என்று அவளுக்குத் தெரியும்.
கேட்டு– பார்த்து– அனுபவித்தும்
பழக்கப்பட்டவர்கள் அவர்கள்.
செம்மணிப் புதைகுழியிலிருந்து
தொடரும் புதைகுழிப் பாரம்பரிய
நினைவுகள் நெஞ்சில் அலை
அலையாக வந்து மோதின.
எதையும் இழக்க அவள் தயார்.
ஆனால் அதை மட்டும் இழக்க அவள்
தாயாரக இல்லை.
மண்ணும்–பண்பாடும்
அவளுடன் ஒட்டிப் பிறந்த இரணைக்
குழந்தைகள்.**

குழந்தையின் அழுகை தொடரவே செய்தது.

எரிச்சல்..... எரிச்சலாகக் குமைந்தது.

தொட்டில் இருக்கா..பாவைப் பிள்ளை யிருக்கா...... பொம்மை இருக்கா..... அவள் குழந்தைக்கு விளையாடக் கொடுத்து பிராக்குக் காட்ட...... குழந் தைக்கு வேடிக்கை காட்டுறத்துக்கு அங்க பிண வைச்சி..... இஞ்ச பாஸ் எடுத்து கொழும்புக்குப் போய் வந்திருக்கிறாள்.

அங்க றோட்டோரத்தில பொலித்தீன் கூடாரத்திற்குள்ள வாழ்கிற சனங்களைப் பாத்து வேதனப் பட்டிருக்கிறாள்.

அண்டைக்கு அந்த அவல வாழ்க்கை அவளுக்கும் வரும் எண்டு கனவிலயும் நினைச்சுப் பார்கவேயில்ல.

ஆனா.... இண்டைக்கு அதவிட கேவல மாக.....

தெகிவள மிருக்கக் காட்சிச்சாலைக் குள்ள போய் அடைபட்டுப் போய்க் கிடக்கிற பறவைகளையும் மிருகங் களையும் குழந்தைக்கு காட்டும் பொழுது, அது கை கொட்டிச் சிரிக்கும். ஆனா.... அவளுக்கு ஏனோ நெஞ்சு சுளீர்.....சுளீர்...... என்று வலிக்கும்.

இண்டைக்கு..... அவர்கள் இந்தக் கூண்டுக்குள்!

அடிக்கடி கொழும்பில் இருந்து வந்து அவர்களைப் பார்த்துப் போகி றார்கள். சிலவேளைகளில் வெளிநாட்டு வெள்ளைக்காரர்களும் வந்து பார்த்து விட்டுப் போகிறார்கள்....

குழந்தைக்கு எதை வேடிக்கை காட்டுவதென்றே தெரியவில்லை.

ஒரு தண்ணீர்ப் பைப்படியில் ஒரு நூறு நூற்றியைம்பது பேர் தண்ணீர்க் குடங்களையும் வாளியையும் வைத்துக் கொண்டு தண்ணிக்காகக் காத்துக் கொண்டு நின்றனர்.

அங்கையாவது கொண்டு போய் பிராக்குக் காட்டுவோம் என்றெண்ணிக் கொண்டு அங்கேயோடிப் போனாள்.

நாலைஞ்சு சின்னப் பிள்ளைகளும் தண்ணிக் குடத்தோட நிண்டாங்கள்.

“இஞ்ச பார்.... அக்கா தண்ணீர்க் குடத்தோட நிக்கிறாங்க.... அங்க பார்.... அந்த அண்ணா தண்ணி வாளியோட நிக்குறார்....” அவள் எவ்வளவோ சொல்லிப் பாத்தாள்.

குழந்தை மசியவேயில்லை.

அழுகின்ற குழந்தையின் பரிதாபம் பொறுக்க முடியாமலும்.... அந்தத் தாய் படுகின்ற அவஸ்த்தையைப் பார்க்க முடியாமலும் தண்ணியெடுக்க பைப்படி யில நிண்ட ஒரு பொம்பிள, “பிள்ள இதில வைச்சித்திரியாம அங்கால பின் பக்கம் கொண்டு போய் பிராக்குக் காட்டு புள்ள...” என்றாள்,

சரி....சரி..... அங்கேயாவது கொண்டு போய் என்னத்தையாவது காட்டிப் பாப்பம்..... வெறுப்போடு குழந்தையைத் தூக்கிக் கொண்டு பின்பக்கம் போனாள்.

அங்க என்னத்தக் காட்டுற..... அங்க காட்டுறத்திற்கு ஒண்டுமில்ல. ஒரு கக்கூஸ்..... அதில கக்காக்குப் போறத்துக்கு வயித்தப் பொத்தித்து வரிசையில பத்துப் பதினைஞ்சு பேர்.

அவங்க வரிசையில முகஞ் சுழிச்சுக் கொண்டு நின்று படுற அவஸ்தயப் பாத்தா... குழந்தைக்கு பிராக்குக் காட்டின மாதிரித்தான்!

வரிசையில நிற்கும் ஆண்களின் பார்வை முழுவதும் அவள் மீது நிலைக்க தொலை தூரத்தில் பார்வையை வெறித்தாள். முகாமின் எல்லையில் நாலைந்து பங்கர்கள் முளைத்து நின்றன. அந்த பங்கர்களுக்குள்ளே சில சிப்பாய்கள் நடமாடுவது தெளிவாகவே தெரிகின்றது.

குழந்தை அழுவதை நிறுத்துவதாக இல்லை. கக்கூசுக்காக வரிசையில் நின்றவர்கள் ஒவ்வொன்றாகக் கலைய .... அவளுக்கு கொஞ்சம் பயமாக இருந்தது. தனிமையில் விடப்பட்டது

போல ஒரு பய உணர்வு. குழந்தையின் கரைச்சல் வேறு.

தனிமையில ஆப்பிட்டுப் போனால் வில்லங்கத்துக்குள்ள மாட்டிக் கொள்ள வேண்டி வரும் என்று அவளுக்குத் தெரியும். கேட்டு - பார்த்து - அனுபவித்தும் பழக்கப்பட்டவர்கள் அவர்கள். செம்மணிப் புதைகுழியிலிருந்து தொடரும் புதை குழிப் பாரம்பரிய நினைவுகள் நெஞ்சில் அலை அலையாக வந்து மோதின.

எதையும் இழக்க அவள் தயார். ஆனால் அதை மட்டும் இழக்க அவள் தாயாரக இல்லை.

மண்ணும் - பண்பாடும் அவளுடன் ஒட்டிப் பிறந்த இரணைக் குழந்தைகள். குழந்தை பெரிய சத்தம் போட்டு அழுது ஊரைக் கூட்டியது.

குழந்தையின் சத்தம் முகாமின் எல்லை வரை கேட்டிருக்க வேண்டும்!

பங்கரில் இருந்த தொலை நோக்கிக் கண்ணாடி அவள் மேலே விழுவது தெரிகிறது.

அபாயச் சமிக்கை!

ஆணிவேரை இழந்த மரமானாள்.

இனி ஒரு கணம் கூட அங்கு நிற்க முடியாது.

பொழுதும் விடைபெற்றுக் கொண்டி ருந்தது. கருக்கல் பொழுது!

ஆத்திரம் எல்லாம் சேர்த்து பிள்ளை யைப் போட்டுக் குத்த வேண்டும் போல இருந்தது.

பேசாத...... பேசாமப்படு.... பல்லைக் கடித்து பின்பக்கத்தில ஆத்திரத்தில நாலு அடி அடித்து குழந்தையை இறுக்கி அணைத்துக் கொண்டு முன் வாசலுக்கு வந்தாள்.

அடி வாங்கியும் குழந்தை அழுவதை நிறுத்துவதாக இல்லை. சிணுங்கித் கொண்டேயிருந்தது.

வாசலில் நின்றபடி அதைக் காட்டி னாள். இதைக் காட்டினாள். குழந்தை அழுகையை நிறுத்துவதாக இல்லை.

நீண்ட நேரம் நின்றாள்.

குழந்தை அழுதழுது களைத்துப் போனது.

இவ்வளவு நேரமும் வாசலில் கல்லாய் நின்ற இராணுவச் சிப்பாயின் மனதை குழந்தையின் அழுகை கரைத்திருக்க வேணும்!

அவர்களை நோக்கி வந்தான்.

இவ்வளவு நேரமுமாக ஒவ்வொன்றா - ஒவ்வொரு கதையாக - குழந்தைக்குச் சொல்லிச் சொல்லி பலனில்லாமல் அலுத்துப் போனவள் ஏதோ வேண்டா வெறுப்பாக ஆ..... இந்த...... மாமா வாறார்..... என்றாள்.

இவ்வளவு நேரமுமாக.... தோளின் பின்பக்கம் திரும்பியபடி அழுது கொண்டிருந்த குழந்தை திடீரென தலையைத் திருப்பி ஆ........ எங்கம்மா.... என்றது.

தீராத நோய்க்கு மருந்து கிடைத்தது போல இருந்தது அந்தத் தாய்க்கு.

அந்தா வாறார்.....

அவர்களை நோக்கி நடந்து வரும் சிப்பாயைக் காட்டினாள்.

அவன் துவக்கைத் தோளிலே தொங்கப் போட்டபடி அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

ஆரு நம்மட மாமாவா.....?

குழந்தை மீண்டும் கேட்டது.

குழந்தையின் அழுகை அடங்கி யிருந்தது. ஆனால் முற்றாக ஓய வில்லை. ஓம்.... நம்மட மாமாதான்.....!

குழந்தையின் அழுகை ஓய்ந்து... ஒரு சின்னச் சிரிப்பு.

தாய்க்கும் சந்தோசம்.

அந்தச் சிப்பாய் அவர்களை நெருக்கி வந்தான்.

குழந்தை அவனைப் பார்த்துச் சிரித்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு அந்தக் குழந்தையின் முகத்தில் மலர்ந்த சிரிப்புது அது!

அவன் ஏதோ சொன்னான் குழந்தை யைப் பார்த்து.

அவன் சொன்னது என்னவென்றே

அவளுக்குப் புரியவில்லை.

ஆனால்.......

அந்த குழந்தையை அந்த வார்த்தைகள் சுட்டிருக்க வேணும்.

இது எங்கட மாமா இல்ல.....

மீண்டும் குழந்தை அழ ஆரம்பித்தது.

அவள் வார்த்தைகளைத் தொலைத்து நின்றாள்.

அவளுக்கு ஒன்றுமட்டும் புரிந்தது.

குழந்தை அழுது தானாக தீரும்வரை விடுவதனைத் தவிர வேறு வழியில்லை. குழந்தை அழுது தீரட்டும் என்று அதன் பாட்டில் விட்டு விட்டாள்.

நீண்ட நேரம் அழுது அழுது அலுத்துக் களைத்து ஓய்ந்தது. தோளிலே துவண்டு கிடந்தது.

மெதுவாகத் தோளை வருடினாள்.

பிள்ளைக்கு என்ன வேணும்....?

மௌனங்கள் இடைவெளிகளாயின.

மீண்டும்.....

பிள்ளைக்கு என்ன வேணும்...?

ரிப்பி....ரிப்பி...வேணும்.....

சரி.... வாங்கித் தாறன்....

எந்தக் கடையில வாங்கித்தரு வீங்க....

மாமாட கடையில.....

எந்த மாமாட கடையில.... பாபு மாமாட கடையிலயா.....

ஓம்.... பாபு மாமாட கடையில....

சரி.... வாங்க போவம்.....

குழந்தை கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

பாபு மாமாட கடைக்குப் போனா நம்மட வீட்டுக்கும் போகலாம் என அம்மா.......

ஓம் போகலாம்....!

நம்மட வீடு இருக்குமா...?

தெரியா....!

அப்ப... நான் விளையாடுற பப்பி நாய்க் குட்டி......

எங்கயும் ஓடியிருக்கும்.....

அப்ப.... தாத்தா.... பாட்டி எல்லோரும்.....

அவங்களும் ஓடியிருப்பினம்....

எங்க ஓடியிருப்பினம்.... எங்களைப் போலையா...? பாவம் அம்மா, எங்களப் போல தாத்தாவாலயும் பாட்டியாலயும் ஓடேலாதே!

........ ........... .........

வீட்டுக்குப் போய் விறாந்தையில இருந்து பப்பியோடயும்..... தாத்தா.... வோடயும்...... பாட்டியயோடயும் விளையாடுவன்.........

........... ............ ..........

வெடிச் சத்தம் கேக்குமா அம்மா.......

....... இம் தெரியாது..........

சரி.... வாங்களனம்மா வீட்ட போவம்...

தோளில் இருந்த குழந்தை கீழே இறங்கிவிட்டது.

உற்சாகம்!

குழந்தை தாயின் விரல்களைப் பிடித்துக் கொண்டது.

நடந்தார்கள்!

அவர்களுக்கே அவர்கள் எங்கே நடக்கிறார்கள் என்று தெரியாது.

எங்கும் நெருக்கி அடித்த பல பட்டுக் கம்பிகளின் முள்வேலி. சுற்றிச் சுற்றி நடந்தார்கள்.

எங்கும் ஒரே முள்வேலி.

நீண்ட தூர நடையின் பின்பு மௌனத்தைக் கலைத்துக் கொண்டு குழந்தை கேட்டது.

அம்மா, வீட்ட போனதும் அப்பா வருவார்தானே...!

அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

அந்தக் கேள்வி....!

அவளின் உயிரை வேரோடு கிள்ளி எறிவது போல இருந்தது.

நினைவுகள்! எழுதப்படாத கல்லறையைத்தேடி எங்கே போவது....

# கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி - 2011 முடிவுகள்



## முதற்பரிசு - ரூபா 5000/-

- கூடுகள் சிதைந்தபோது — சாம்பசிவம் அகிலேஸ்வரன் (அகில்) — கனடா

## இரண்டாம் பரிசு - ரூபா 3000/-

- மற்றவை நேரில் — வேரற்கேணியன் எஸ். பி. கிருஷ்ணன் — யாழ்ப்பாணம்

## மூன்றாம் பரிசு - ரூபா 2000/-

- எச்சில் — திருமதி கார்த்திகாயினி சுபேஸ் — யாழ்ப்பாணம்

## ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்

- ஆசியாவின் அதிசயம் — அஷ்ரஃப் சிஹாப்தீன் — கொலன்னாவ
- சீட்டு பிஸ்கட் — என். சந்திரசேகரன் — இரத்தோட்டை
- நினைவலைகள் — குடந்தை பரிபூரணன் S. பாக்கியசாமி — தமிழ்நாடு
- என்னைப் பெற்றவள் யாரோ? — திருமதி கே. ஏ. ரஹீம் — நீர்கொழும்பு
- ஒப்புரவு — உ. நிசார் — மாவனல்ல
- அவள் தாயாகிவிட்டாள் — அல்ஹாஜ் AC ஜரீனாமுஸ்தபா — கடுவெல
- திமிறி எழு — புதுவை பிரபா — தமிழ்நாடு

---

**நடுவர்கள்:** திருமதி பத்மா சோமகாந்தன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், தி. ஞானசேகரன்

**(ஞானம் 130, மார்ச் 2011)**

# கூடுகள் சிதைந்தபோது...

அகில் கனடா



**கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2011இல் முதற் பரிசு பெற்ற கதை**

கோடை வெயில் தலையில நெருப்பை அள்ளிக் கொட்டினது மாதிரி ஒரே வெக்கை. காத்து மட்டும் அப்பப்ப வந்து உடம்பைத் தடவி குளிரப் பண்ணிப்போட்டு போகுது. வீட்டுக்குள்ள இருக்க எனக்கு அலுப்பா இருக்குது. அதுதான் இந்த பூங்காவில வந்து குந்தியிருக்கிறன். எவ்வளவு நேரம்தான் அந்த நாலு சுவரையும் பாத்துக்கொண்டிருக்கிறது.....? என்ர கண்ணுக்கெட்டின தூரத்தில ரெண்டு, மூண்டு சின்னப் பிள்ளைகள் நின்று ஊஞ்சல் ஆடி விளையாடிக்கொண்டு இருக்கீனம். அந்த மரத்திற்கு கீழ சீனநாட்டுச் சோடி உட்கார்ந்திருக்கீனம். ஒவ்வொருநாளும் இந்த நேரத்திற்கு அவையள் இஞ்ச வந்துவிடுகீனம். பிள்ளையள் ரெண்டும் தூரத்தில விளையாடிக்கொண்டு இருக்குதுகள். அந்த வயதுபோன ஆப்கான் கிழவனும், மொட்டாக்குப்போட்ட அவன்ர மனுசியும் நடைப்பயிற்சி செய்துகொண்டு இருக்கீனம். என்ன சந்தோசமான வாழ்க்கை...? எல்லாரின்ட முகத்திலயும் சந்தோசமும், திருப்தியும்....!!!

நான் மட்டும்........?

நான் மட்டும் ஏன் இப்படி....?

உள்ளும் புறமும் ஏதோ அனல் என்னை சுட்டெரிப்பதாய் நெளிகிறேன்.

தனிமை...!

வெறுமை.....!

நெஞ்சிலே கனம்....!

கடந்து போன பலரும் தன்னந்தனியாய் உட்கார்ந்திருந்த என்னை ஒருவிதமாய் பார்த்துவிட்டு நகர்ந்தனர். என் முணுமுணுப்பு அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது. சரியாக வாரப்படாத முடி, சவரம் செய்யப்படாத முகம், கசங்கிப்போன உடை, கையில் சிகரெட்டு.... நானா இது? எனக்கே நம்பமுடியவில்லை.

அதுசரி காலையில சாப்பிட்டனானோ.......?

வெளிக்கிடேக்கை கதவை சரியாக பூட்டினனானோ....?

அது இருக்கட்டும்.

ம்.... என்ர வீடு எங்க இருக்குது?

'சீ... நான் இங்க வந்திருக்கக் கூடாது.'

'நான் இங்க வந்திருக்கக் கூடாது'

என்னுள் வெறுப்பு மண்டுகிறது. புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை எறியத்தான் பார்த்தேன். அந்தச் சிறுமி மட்டும் என் குறுக்கே ஓடிவராமல் இருந்தால். பத்திரமாக

(ஞானம் 131, ஏப்ரல் 2011)

சிகரெட்டுத் துண்டைக் கொண்டு போய் அணைத்துவிட்டு மர நிழலில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு நடக்கிறேன்.

எங்கே போகிறேன்.......?

என் கால்கள் நடக்கச் சொல்கின்றன.

நான் நடக்கிறேன்.

எவ்வளவு தூரம்......? எத்தனை மைல்.....?

நடக்க நான் தயார். இப்படி நடந்தே ஊர்கள் கடந்துவந்த அகதித் தமிழன் நான்.

சந்தடியற்று நீண்டுகிடக்கிறது அந்த வீதி. ஒன்றிரண்டு கார்கள் ஓசைபடாமல் ஊர்ந்து செல்கின்றன. குடிமனைகள் தெருவின் ஓரமாய் பாதசாரிகள் நடப்பதற்காக போடப்பட்டிருந்த சீமெந்துத் தரையில் என் வெறும் கால்கள் தம் போக்கில் நடக்கின்றன.

'ஓ செருப்பு அணியக்கூட மறந்து போனேனோ..!'

எனக்குள் நானே சிரித்துக் கொள்கிறேன்.

என் மேலாடையின் வியர்வை நாற்றம் எனக்கே அருவருப்பாக இருக்கிறது.

'இன்றைக்காவது போய் குளிக்க வேணும்'

ரோட்டைக் கடந்து மறுபக்கம் செல்ல நினைக்கிறேன். ஏதோ சிறு சத்தம் என்னை தலைநிமிர வைக்கிறது.

அந்தக் கார் திடீர் என்று 'பிரேக்' போட்டு நிற்கிறது. பிறகு கொஞ்சம் பின்னுக்கு எடுத்து, கொஞ்சம் விலத்தி, பிறகு வேகமாக முன் நகர்கிறது. நடு வீதியில் ஏதோவென்று வேகமாக அசைவதாய் தெரிகிறது. என் கண்கள் அந்த இடத்தில் நிலைக்குத்தி நிற்கின்றன. படபடவென்று இறக்கையை அடிக்கிறது ஒரு சிறு குருவி.

வெறிச்சோடிக்கிடக்கும் தெருவின் நடுவிற்கு என்னையும் அறியாமல் வந்து விடுகிறேன்.



**துவக்குச் சூட்டுச் சத்தம் இப்ப நல்லா கிட்டக் கேட்குது. சனம் விழுந்தடிச்சு ஓடுதுகள். ஆமிக்காரங்கள் ஏதோ கத்திக் கதைக்கிற சத்தம் கூட கேக்குது. வாகனங்களின்ர உறுமலும் கேட்குது. சனங்கள் என்னையும் கிழவனையும் பார்த்து புறுபுறுத்துக்கொண்டு போகினம். "அவையளுக்காக என்ர மனுசியின்டயும், பிள்ளையின்டயும் உடம்பை நாய், நரி தின்னவும், காக்காய் கொத்தவும் இப்பிடியே போட்டிட்டு வரேலுமே?"**

**அதுக்குள்ள எரிகுண்டொன்று எங்களுக்கு அருகில் விழுந்து வெடிக்குது. ஒரு குடும்பம், இரண்டு, மூன்று குழந்தைகள் என்ர உடம்பெல்லாம் பதறத் தொடங்கீற்றது. மரண பயம் என்னைப் பிடிச்சுட்டுது.**

**அந்தக் கோர சாவைப் பார்த்ததும் எனக்கு எல்லாமே மறந்து போனது.**

முதுகில் கருமையும், வயிற்றுப்புறம் இளமஞ்சலுமாய் அந்தக் குருவி துடி துடிக்கிறது. இன்னொரு குருவி, அதன் ஜோடியாக இருக்க வேண்டும் இந்தக் குருவியை தவிப்புடன் சுற்றிச் சுற்றி நடக்கிறது. விழுந்து கிடக்கும் குருவி யோ தன் சிறிய செட்டைகளை படபட வென்று அடிக்கிறது. தலையை இரண் டொரு முறை தூக்கிப் பார்த்து விட்டு அப்படியே தொப்பென்று சரிய இறந்து போகிறது. அதன் உடல் நசிந்து போய், மேல் இறகு பிய்ந்துபோய் கிடக்கிறது. லேசாக இரத்தம் கசிகிறது.

குருவியை அடித்துவிட்டு கார் தன் போக்கில் போய் விட்டது.

"கண் மண் தெரியாமல் ஓட்டுறான். விசரன்.... இவன் எங்க போய் பிரளப் போறானோ...." என் உதடுகள் முணு முணுக்கின்றன.

ஜோடிக் குருவியால் தன் இணையின் பிரிவைத் தாங்க முடியவில்லை. தன் இறகுகளை விரித்து விரித்துக் காட்டி அதை தன்னுடன் பறந்து வருமாறு அழைக்கிறது. இழப்பை உணர்ந்து வேதனையுடன் இரண்டடி தூரம் பறப்பதும் திருப்பி வந்து இறந்து கிடக்கும் தன் ஜோடியை அலகால் தொட்டுப் பார்த்து சத்தம் போடுவதுமாக அந்தரிக்கிறது. அங்குமிங்கும் பார்த்து தலையை ஆட்டியபடி நடக்கிறது.

தூரத்தில் இன்னுமொரு கார் வருகிறது. அது வருகின்ற வேகத்தில், அதன் சக்கரங்களுக்குள் அகப்பட்டு இறந்து கிடக்கும் சிறுகுருவியின் உடல் மேலும் சிதைந்து சின்னாபின்னமாகப் போகிறதே. என் நெஞ்சு பதறுகிறது. என்னைப் போலவே அந்தக் குருவியும் பரிதவிக்கிறது. அச்சிறுகுருவியால் ஒன்றும் செய்ய இயலவில்லை. தன் ஜோடியை விட்டுப் போக மனமில்லாமல் அருகில் இருந்த மரத்தில் அமர்வதுவும், பின் தன் ஜோடியின் அருகில் போய் அமர்ந்து கொள்வதுவுமாக அதன் நிலை இருக்கிறது.

நான் அவசரமானேன். தெருவோர மாய் கிடந்த கடதாசி அட்டையை எடுத்துக் கொண்டு இறந்துகிடந்த குருவியை நெருங்கினேன். என் இதயம் வெடித்து விடும் போல இருந்தது.

இரத்தமும் சதையுமாய் ஏதேதோ நினைவுகள் என் மனதைச் சூழ்ந்து கொள்கின்றன. மரக்கிளையில் அமர்ந்த படி அந்தக்குருவி என் செயலைக் கண்டதும் பயத்துடன் ஆரவாரிக்கிறது. ஒரு பூவைப் போல அந்தக் குருவியை மெதுவாகத் தூக்கியெடுத்து அட்டைப் பெட்டியில் கிடந்தினேன். என் விழிகள் நீரைச் சொரிந்து கன்னங்களில் வழிந் தோடுகிறது. இரு கைகளிலும் தூக்கி, முகத்திற்கு அருகே கொண்டு வந்து அந்தக் குருவியைப் பார்க்கிறேன்.

'இப்படித்தான் என்ர சசியும்......'

என் ஆன்மாவுக்குள் அடக்க முடியாத வேதனை. குலுங்கிக் குலுங்கி அழுகிறேன்.

இழப்பின் வலி அறிந்தவன் நான்.

குருவியின் இழப்பில் என் இழப்பின் வேதனை. எவ்வளவு நேரம் அப்படியே நடுத்தெருவில் அமர்ந்திருந்து அழுதே னோ தெரியாது.

என்னை விலத்திக் கொண்டு ஒரு கார் மெதுவாக முன்னகர்ந்தது. அதில் அமர்ந்திருந்த வெள்ளையின வயோதிபர் மென்முறுவலுடன், சிறு வியப்புமாய் என்னை அங்கீகரித்து தலையசைத்து விட்டுப் போவது தெரிந்தது.

ஒரு குழந்தையைப் போல பத்திர மாக அந்தக் குருவியை எடுத்து தெருவோரமாய் நின்றிருந்த மரத்தடியில் வைத்துவிட்டு அப்பால் நடக்கிறேன். அதன் இணை என்னை நன்றிப் பெருக் கோடு பார்க்கிறது.

நடந்து நடந்து என் கால்கள் வலிக்கின்றன. அதைவிட என் மனம் வலிக்கிறதே.

அது இறக்க முடியாத சுமை. என் உயிரை அணுவணுவாய்க் கொல்லும் வேதனை. கனவிலும், நினைவிலும் சதா அந்த நிழல் விம்பங்கள். என் நினைவு களைச் சுமந்தவள், என் கனவுகளின் உருவாக கருவான என் குழந்தை, இருவருரையும் இழந்த நடைபிணம் நான்.

'நான் இங்க வந்திருக்கவே கூடாது...'

'நான் விசரன்..... நான் பைத்தியக் காரன்.....' ஓலமிடும் என் மனதைக் கட்டுப் படுத்த முடியாமல் வேகவேகமாக நடக்கிறேன்.

"ஐயோ அம்மா எனக்கு பயமாயி ருக்குதம்மா. என்னைக் கட்டிப்பிடியுங்கோ அம்மா" மூத்தக்காவின் நான்கு வயது மகன் கயன் அனுங்குவது இப்போதும் என் காதுகளில் கேட்கிறது. நாலா புறமும் குண்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அக்கா மகனை அள்ளி யெடுத்து அணைத்துக்கொள்கிறா. கயன் அவள் மார்போடு ஒட்டிக்கொள்கிறான். அவன் உடல் பயத்தில் நடுங்குகிறது. கண்கள் குழிவிழுந்து, எலும்பும் தோலு மாய் கயன்....

"தம்பி இனி இங்க இருக்கேலாது போல இருக்குது. சனமெல்லாம் வெளிக் கிடுதுகள். நாங்களும் அங்கால போவம். எல்லாத்தையும் இழந்திட்டம். இனி இதுகளையும் இழக்க ஏலாது. பார் பொடியன் பயத்தில நடுங்கிற நடுக்கத்தை" என்கிறா மூத்தக்கா.

இரணைமடுவில இருந்து வெளிக் கிட்டு இது மூன்றாவது இடம். சனத்தோட சனமா அள்ளுப்பட்டு போய்க் கொண்டிருக்கிறம். எங்கட இடப் பெயர் வுக்கு ஒரு முடிவு இல்ல. எனக்கு சசியை நினைச்சால்தான் பயமும், கவலையும். சசிக்கு, இப்ப ஏழு மாதம். வயிறு நல்லா வெளியில தெரிஞ்சுது. அவளைப் பார்க்கத்தான் எனக்கு நெஞ்சு பகீர் என்டு இருக்கும். அவள் சுகம் பெலமாக பிள்ளையப் பெத்தெடுக்க வேணும் என்றதுதான் என்ர பிராத்தனையாக இருந்தது.

'அவளால வரிசையில நிக்க ஏலுமா?'

நான்தான் பாணோ, பருப்போ வரிசையில நின்டு என்னென்டாலும் அவளுக்கு வாங்கிக்குடுக்கிறது.

'எத்தினைநாள் நான் சாப்பிட்டுட்டன் என்டு பொய் சொல்லி அவள சாப்பிடப் பண்ணியிருப்பன்'

கலியாணங்கட்டி ரெண்டு வருஷத் துக்குப் பிறகுதான் சசிக்கு வயித்தில குழந்தை தங்கினது. அந்த செய்தி கேட்ட சந்தோசம் நீடிக்காமல் இந்த நாட்டுப் பிரச்சனையும் தொடங்கீற்றுது. அந்த நாள் தொடக்கம் ஆன சாப்பாடு கூட இல்லை. பயம்... பசி.... பட்டினியோட.... பிள்ளை எப்பிடி பிறக்கப் போகுதோ என்டு சில நேரங்களில யோசிக்க பயமாகத்தான் இருந்தது.

ஒவ்வொருக்காலும் அவள பத்திரமா பங்கருக்குள்ள இறக்கி, ஏத்தி.....

எப்பிடி இருக்க வேண்டியவள். நாரி நோ, முதுகு நோ என்டுகொண்டு அந்த வெறும் தரையிலயும், மண் புழுதீக்கையும் படுத்தெழும்பேக்க எனக்கு செத்திரலாம் போல இருக்கும். அவளும் தான் எலும்பும் தோலுமாய்.... ஆன சாப்பாடு கூட இல்லாமல்......

எத்தினை இரவுகளை அவள் பங்கருக்குள்ளயே கழிச்சிருக்கிறாள். குண்டுக்குப் பயப்படுகிறதை விட அவள் பாம்பு, பூச்சியளுக்குத்தான் கூடப் பயம்.

ஆனால் கடைசியில.....

அடுத்தநாள் ஆமிக்காரங்கள் நாங்க இருந்த முள்ளிவாய்க்கால் பகுதியைச் சுத்திவளைச்சுட்டாங்கள். அக்கா வெளிக் கிடுவம் என்டு சொல்லியும் யோசிச்சுக் கொண்டிருந்தது எவ்வளவு பிழையென்டு அப்பதான் தெரிஞ்சுது. பீரங்கி, பல்குழல்.... பத்தாததுக்கு பிளேனு

களும் விட்டுவைக்க இல்லை. இந்தத் தாக்குதல் கடைசித் தாக்குதலாம் என்று எல்லோரும் கதைக்கீனம். சனம் காடு கரம்பையளுக்குள்ளாலயும், கடல் பக்கத் தாலயும் வெளியேறப் போறதா கதைச் சவை. சனத்தோட சனமா நாங்களும் வெளிக்கிட்டம்.

சசிக்கு நடக்க ஏலாமல் இருந்துது. எனக்கு சில நேரம் கோபம் கூட வந்தது. இந்தப் பயங்கரத்தைத் தாண்டினால் காணும் என்டு இருந்தது எனக்கு.

"கெதியா நடவப்பா. இன்னும் கொஞ்சத் தூரம்தான்" என்டு அவளை அவசரப்படுத்தினேன். குண்டுகள் நாங்க வந்த பாதைகளில் எல்லாம் விழுந்து வெடிச்சுது. செத்தவர்கள் சாக மிச்சமான ஆக்கள் நடந்துகொண்டிருந்தம்.

"ஐயோ... என்ர பிள்ளை. என்ர பிள்ளை..." திடீரென்று பின்னால வந்து கொண்டிருந்த அக்கா கத்திக் குழறினா. அக்காவின்ர கையில இருந்து ரெத்தம் வடிஞ்சுது. அவ கயனைத் தூக்கிக் கொண்டு வந்தவா. கயனுக்கு மண்டையில காயம்பட்டிருந்தது. நான் சசியின்ர கையில இருந்த உர 'பாக்'கில இருந்து ஒரு சீலையக் கிழிச்சு கயனுக்கு கட்டுப்போட்டன்.

"சசி நீ இதுகளைப் பார்க்கக்கூடாது. அங்கால போ" மெல்லிய குரலில் நான்தான் சொன்னன். அவள் விறைத்துப் போய் பார்த்துக்கொண்டு நின்றாள். தலை இல்லாத முண்டங்கள், கை கால் இழந்த உடல்கள் என்று எத்தினையக் கடந்து அவள் வந்துட்டாள். இதென்ன பெரிசா....!!!

கட்டியிருந்த துணியையும் மீறிக் கொண்டு கயனுடைய தலையில இருந்து இரத்தம் வந்துகொண்டிருக்குது. கயன் அப்பவும் மயக்கமாகத்தான் கிடக்கிறான். பேச்சு மூச்சில்லை. அக்கா மயங்கி விழுந்திட்டா. கொஞ்ச நேரத்தால தானே கண்ணை முழிச்சிட்டா.

"வவுனியாவுக்குள்ள போயிட்டால் பிள்ளைக்கு ஏதாவது மருந்துபோடலாம்" யாரோ சொல்ல அத்தான் கயனைத் தூக்கிக் கொண்டு வேகவேகமாக நடந்தார். அக்காவும் அவருக்குப் பின்னால ஓடினா.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கிட்டவாகக் கேட்குது. ரெண்டுபக்கமும் சரியான சண்டை நடக்கிறமாதிரி சத்தம் கேட்குது. சனத்தோட சனமா நாங்களும் நடந்தம். சசியும் மூச்சிறைக்க நடந்து வந்தாள். நடக்க ஏலாமல் கஷ்டப்பட்ட சசியைப் பத்திரமாகப் பிடிச்சுக்கொண்டு நடந்ததில நான் அக்காவையளையும் தவறவிட்டுட்டன்.

கண் எட்டுற தூரத்தில மண் மூடை அடுக்கியிருக்கிறது தெரிஞ்சுது. அது கடந்தால் அங்கால வவுனியாதான் என்டு யாரோ சொன்னது கேட்டுது. சசியின்ர முகத்திலும் கொஞ்சம் தெம்பு வந்தமாதிரி தெரிந்தது. நேரமும் இருட்டிக்கொண்டு வந்தது. என்ன பாம்பு, பூச்சி எங்க கிடக்குதோ தெரியாது. நான் புதர்களை விலக்கிக்கொண்டு சசிக்கு முன்னால நடக்கிறன். அப்பத்தான் அந்த இடி மாதிரி பெரிய சத்தம்....

நான் ஒரு புதருக்குள்ள விழுந்து கிடந்தன். எனக்கு கையில காயம் பட்டு ரெத்தம் ஓடிக்கொண்டிருந்தது. கண்ணைத் திறக்க முடியாமல் கண்ணுக் குள் மண்ணும், தூசியுமாய்... புழுதி மண்ட லம் அடங்க சில நிமிசங்கள் எடுத்துது. அழுகுரல்களும், ஓலமும் தான்..

"சசி...."

"என்ர சசி..." நெஞ்சு பதைபதைக்க சசியைத் தேடினேன்.

சசி ஒரு தென்னைமரத்தோடு குப்புறக் கிடந்தாள். அவள் கிடந்த தோரணை....

"ஐயோ சசி....!"

"ஓம் என்ர சசி செத்துப்போயிட்டாள்"

"என்ர சசி என்னை விட்டுட்டுப் போயிட்டாள்"

**சன்னங்கள் அவளின்ர கழுத்து, நெஞ்சு, வயிறு என்று துளைச்சிருந்துது. அவளின்ர ஒரு கால்ல முழங்கால் மட்டும்தான் இருந்துது. ஒரே இரத்தவெள்ளம். 'ஐயோ சசி... என்ர சசி....' 'நான் என்ர சசிக்காக அழவா? இல்ல வயித்திலயே அழிஞ்சுபோச்சுதே அந்த என்ர குழந்தைக்காக அழவா....?'**

"சசியோட சேர்ந்து அவளின்ர வயித்தில இருந்த பிள்ளையும்...."

சன்னங்கள் அவளின்ர கழுத்து, நெஞ்சு, வயிறு என்று துளைச்சிருந்துது. அவளின்ர ஒரு கால்ல முழங்கால் மட்டும் தான் இருந்துது. ஒரே இரத்தவெள்ளம்.

'ஐயோ சசி... என்ர சசி....'

'நான் என்ர சசிக்காக அழவா? இல்ல வயித்திலயே அழிஞ்சுபோச்சுதே அந்த என்ர குழந்தைக்காக அழவா....?' முகத்திலயும், தலையிலயும் அடிச்சுக் கொண்டு அழுகிறன்.

'டொக்டர் ஆம்பிளைப் பிள்ளை என்டு சொன்னவர்....'

"நான் கண்ட கனவெல்லாம் அழிஞ்சு போச்சுது. எனக்கினி ஆரு...'

ஆறுதல்படுத்த யாருமில்லாமல் பைத்தியக்காரனைப் போல கொஞ்ச நேரம் அவளை என்ர மடியில போட்டுக் கொண்டு இருந்தன். என்ர காயத்தின்ர வலியோ, அதில இருந்து ரெத்தம் வடிகிறதோ எனக்கு தெரியேல்ல.

'எவளின்ர மடியில என்ர உயிர் போகவேணும் என்டு நினைச்சனோ, இன்றைக்கு அவள் பிணமா என்ர மடியில...'

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் இப்ப இன்னும் கிட்டத்தில கேட்குது.

ஆட்கள் ஏதோ சொல்லிக்கொண்டு போகீனம். என்ர காதில எதுவுமே விழேல்ல. குண்டுகள் விழுந்து வெடிச்சு புழுதி கிளம்புது. சன்னச் சிதறல்கள் நெருப்புப் பொறிகளாத் தெறிக்கிது. துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கிட்டவாக் கேட்குது. நாய், நரியளின்ர ஊளைச் சத்தங்களும் தூரத்தில கேட்குது.

"தம்பி அழுதுகொண்டிருக்க இப்ப நேரமில்ல. எழும்புங்க தம்பி" யாரோ ஒரு வயதானவர் என்னை நெருங்கி என்ர நிலமையைப் பார்க்கிறார். என்ர கைக்காயத்தைப் பார்த்து தன்ர இத்துப்போன சாரத்தின்ர ஒரு முலை யைக் கிழிச்சுக் கட்டுப்போடுகிறார்.

'என்ர ஆருயிர் மனைவி.... அவளை இப்படியே போட்டுவிட்டு எப்படி வரஏலும். ஏழுமாதக் குழந்தை அவள் வயிற்றுக்குள்ளேயே கருகிப்போச்சுது. இவையள் இல்லாமல் நான் மட்டும் இருந்து என்ன செய்யப்போறன்....?'

கிழவர் எங்கேயோ இருந்து ஒரு தகரத் துண்டைக் கொண்டு வாறார்.

"தம்பி இதால கிடங்கைக் கிண்டு..." என்றபடி அவர் வேகமாக அந்த தகரத் துண்டால மண்ணை கிளறுறார். எனக்குள்ள ஒரு வேகம்... அவரிட்ட இருந்து அதைப் பிடுங்கி வேகவேகமாக மண்ணைக் கிளறுறேன். காய்ந்து வறண்ட நிலம் அவ்வளவு லேசில் குழியைத் தோண்டமுடியவில்லை. கிழவனும் ஏதோ தடியை முறிச்சு தன்ர பங்குக்கு நிலத்தை குத்தி எனக்கு உதவுறார்.

துவக்குச் சூட்டுச் சத்தம் இப்ப நல்லா கிட்டக் கேட்குது. சனம் விழுந்தடிச்சு ஓடுதுகள். ஆமிக்காரங்கள் ஏதோ கத்திக் கதைக்கிற சத்தம் கூட கேக்குது. வாகனங்களின்ர உறுமலும் கேட்குது. சனங்கள் என்னையும் கிழவனையும் பார்த்து புறுபுறுத்துக்கொண்டு போகீனம்.

"அவையளுக்காக என்ர மனுசி யின்டயும், பிள்ளையின்டயும் உடம்பை நாய், நரி தின்னவும், காக்காய் கொத்தவும் இப்பிடியே போட்டிட்டு வரேலுமே?"

அதுக்குள்ள எரிகுண்டொன்று எங்களுக்கு அருகில் விழுந்து வெடிக்குது. ஒரு குடும்பம், இரண்டு, மூன்று குழந்தைகள் என்ர உடம்பெல்லாம் பதறத் தொடங்கீற்றது. மரண பயம் என்னைப் பிடிச்சுட்டுது. அந்தக் கோர சாவைப் பார்த்ததும் எனக்கு எல்லாமே மறந்து போனது. எப்பிடியாவது ஓடித்தப்ப வேணும். எனக்கு உடம்பெல்லாம் பதறத் தொடங்குது. கிழவனையும் இழுத்துக் கொண்டு நான் ஓடுறன்.

உடம்பைக் குறுக்கியும், குனிந்த படியும், ஊர்ந்தும், தவழ்ந்தும் அந்த சென்றிபொயின்ட்டை நெருங்கி விட்டம். சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம்.... என்ர கையைப் பிடிச்சிருந்த கிழவரின் கைபிடி நழுவிப்போச்சுது. அவர் விழுந்துட்டார். நான் மற்ற சனத்தோட சேர்ந்து கைகளை மேல தூக்கிக் கொண்டு நடக்கிறன். இராணுவம் அப்பிடியே எங்கள சுத்திவளைச்சுது. ஏதேதோ விசாரணைகளுக்குப் பிறகு எஞ்சியிருந்த எங்களை தங்களின்ட வாகனங்களில் ஏத்திக்கொண்டு முகாமிற்கு கொண்டுவந்தவை.

அங்கதான் பெரியக்காவைப் பார்த்தன். தலையில் காயம்பட்டிருந்த கயனும் இறந்து போய் அத்தான்தான் வழியில் ஒரு பாழுங்கிணத்துக்குள்ள அவனை தூக்கிப் போட்டுட்டு வந்த வராம்.

"நரியள் குதறாமல் என்ர மகன் பத்திரமா இருப்பான்.." அத்தான் தலையில் கைவைத்தபடி திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு இருக்கிறார். சசியின்ர செய்தி கேட்டதும் அக்காவால அழக்கூட முடியேல்லை. யாருக்காக அழுகிறது? எதை நினைச்சு அழுகிறது என்டு தெரியேல்ல.

பிறகு முகாம் வாழ்கை, விசாரணைகள் என்டு தொடர, அக்கா தான் முகாமுக்கு வெளியில போய் என்னை வெளிநாட்டுக்கு அனுப்ப வேணும் என்டு காரியங்களைச்செய்தவா. என்ர அம்மாவும், பெரியண்ணன் குடும்பம், சின்னக்கா குடும்பம், தங்கச்சி எல்லோரும் இங்க கனடாவிலதானே இருக்கீனம்.

'ஆரு இருந்தென்ன என்ர சசியும்... பிள்ளையும் எனக்கில்லையே....'

மூத்தக்கா தான் என்னை சின்னன்னில இருந்து வளர்த்தவா. என்னில் சரியான பாசம்.

நான் பெத்த பிள்ளையத்தான் இழந்திட்டன். உன்னையும் இழக்க என்னால ஏலாது" என்டு என்னோட பிடிவாதமா நின்டு என்னை இங்க அனுப்பிவைச்சது அவாதான்.

என்ர மனம் முழுக்க அந்த முள்ளிவாய்க்கால் காட்டுக்குள்ளதான் சுத்திக்கொண்டு இருக்குது.

'என்ர சசி... என்ர பிள்ளை...'

'இவ்வளவு காலமும் எனக்கு சோறு போட்டு தாய்க்கு தாயாய் இருந்து என்னைப் பார்த்தவள். அவளின்ட உடம்ப நல்ல விதத்தில அடக்கம் செய்யக்கூட என்னால முடியேல்லையே...'

'பாவி...'

'நான் பாவி... மகா பாவி. அந்த குழந்தைய கையில வைச்சுக் கொஞ்சத் தான் ஏலாமல் போச்சு. கடைசியா நாய் நரியள் தான்...'

'ஐயோ... நினைச்சால் எனக்கு பைத்தியம் தான் பிடிக்குது'

'நான் ஏன் இங்க வந்தன். நான் சுயநலக்காரன், பாவி... நான் விசரன்...'

'நான் விசரன்...'

என் கால்கள் வலியெடுக்கின்றன. நான் நடக்கிறேன்.

தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறேன்.

32

பொறுப்பதிகாரியின் எதிரே போய் நின்று வணக்கம் சொன்னார் வியாசர். 'வணக்கம்.... என்ன விசயம்?

'உட்காருங்க' சொன்னார் அதிகாரி.

வியாசர்: நானும் மனைவியும் கொழும்புக்குப் போக வவுனியாவில் ரயில் ஏறவே பஸ்ல வந்தனாங்கள். ஆனால் எங்களை இங்கே கொண்டுவந்து இறக்கிவிட்டார்கள்.

'தயவுசெய்து நாங்கள் போக அனுமதி தாருங்கோ..'

'நீங்க எங்கேயிருந்து வந்தது....'

'வள்ளிப்புனத்திலயிருந்து'

'அது எங்கேயிருக்கு வன்னியில எந்த பக்கம்?'

'முல்லைத்தீவில ஒரு கிராமம்'

'ஓ அங்கே நிரந்தர வாசியா?'

'இல்லை.. கிளிநொச்சியிலயிருந்து இடம்பெயர்ந்து போனது'

'ஏன் இடம் மாறினீங்கள்'

'அங்கே ஷெல் குண்டுகள் விழுந்தன... விமானங்களும் குண்டுகளைப் போட்டன... சிலர் செத்துப் போனார்கள். பலர் காயப்பட்டு ஆஸ்பத்திரியில சிகிச்சை பெறுகிறார்கள்.'

'அதெல்லாம் நீங்கள் நேரில் பார்த்ததா?'




'பார்த்தேன்... நான் பரந்தன் பக்கம் போய்க் கொண்டிருந்தபோது ஒரு வீட்டின் மேல் நாலு குண்டுகளை போட்ட கிபிர்விமானத்தைப் பார்த்தேன். அந்த வீட்டில் வசித்த ஐந்து பேரும்பக்கத்து வீட்டுக்காரர் இரண்டு பேரும் பலியானார்கள்.

அடுத்தடுத்த வீடுகளின் இருந்த பன்னிரண்டு பேர்காயப்பட்டனர்.

'கிபிர் தான் குண்டு போட்டதெண்டு உங்களுக்கு எப்படித் தெரியும்?' உங்கட பொடியளிடத்திலயும் கிபிர் வேகத்தில் பறக்கும் விமானங்கள் இருக்கே? 250 கிலோ குண்டுகளும் இருக்கே?..'

கேள்வி தொடர்ந்தது.

**(ஞானம் 132, மே 2011)**

'உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்'

'ஐந்து பேர் ஆண்கள் இரண்டு, பெண்கள் மூன்று'

'எல்லாரும் புலிகளா'

இந்தக் கேள்வி அவரை திடுக்கிட வைத்தது.

'உண்மையைச் சொல்' என மனம் இடித்துரைத்தது.

'ஒருவர் மட்டும்....' என்றார்

'அவன் இப்போ எங்கே?'

'அவருக்கு காயம்... ஷெல் துண்டு அடிச்ச காயம்...

ஆஸ்பத்திரில இருந்தார். இப்ப எங்கே இருக்கிறார் எண்டு தெரியாது சேர்'

'அவன்ட இயக்க பெயர் என்ன'

'விக்ரமன்'

'நீங்க உண்மை பேச வேணும்' பொய் சொன்னால் நீங்கள் வெளில போக முடியாது. போய் இருங்க... இன்னும் விசாரிக்க இருக்கு'

வியாசர் எழுந்தார்.

அதிகாரி காவல் சிப்பாயை அழைத்து 'இவரை கூட்டிப்போ' என சொல்லுவது போல அவனுக்கு தாய் மொழியில் கட்டளையிட்டார்.

அவன் வாங்க என வியாசரை அழைத்துப் போனான்.

அவர் இருந்த கூடாரத்தின் முன்னால் அவரை நிறுத்தி, உங்கட 'வைப்' கூப்பிடுங்கள் உங்கட சாமான்கள் எடுத்துக் கொண்டு என்னோட வாங்க'

'எங்கே போறது நாங்கள்'

'வேற இடத்துக்கு'

வியாசர் மனைவியைப் பார்த்து 'வேற கொட்டிலுக்கு போகட்டாம், பாய் பொதியளை எடுத்து வா' என்றார்

இருவருமாக அவன் பின்னால் நடந்தனர்.

தெருவைக் கடந்து, முகாமின் பின் பகுதிக்கு அவர்களைக் கூட்டிப் போன சிப்பாய் ஒரு தகரக் கொட்டிலைக் காட்டி இங்கே இருங்க என்றான், போய்விட்டான்.

உள்ளே போனார்கள், இராணி கையில் எடுத்து வந்த பாயைத் தரையில் விரித்துப் படுத்துக் கொண்டாள். கணவரைப் பார்த்துக் கேட்டாள் என்ன, எங்களை வெளியில விட மாட்டினமா பெரியவர் என்ன சொன்னார்.



**'போதும் நிறுத்து என்றார் அதிகாரி, புன்சிரிப்புடன் தொடர்ந்தும் பெரிய படிப்பாளிப்போல் பேசுகிறாய்... நீயும் குற்றவாளி... அதை மறந்து விடாதே... என்றார். அச்சுறுத்தும் தொனியில் வியாசர் அவர் சொன்னவற்றைப் பொருட் படுத்தாமல் 'சேர் ஒரு நிமிஷம் என்னை பேச அனுமதியுங்கள்' எங்களை வெளியில் செல்ல அனுமதியுங்கள்... நாங்கள் சுவிசில் இருக்கும் எங்கட மகனிடம் போக.. உங்களுக்கு நன்றியாக நீங்கள் விரும்புற பரிசு எதுவானாலும்...' ஸ்ஸ்ஸ் என்ன துணிவு! என வியந்த அதிகாரி 'அப்படியா?.... சரி போய் இருங்க' என்றார்.**

வியாசரின் முகத்தில் படர்ந்த கவலை ரேகைகளைக் கண்டு திடுக்கிட்டவளாய்? 'என்ன நடந்தது சொல்லுங்களேன்?... என விம்மலுடன் கேட்டாள்.

'இன்னும் விசாரிக்க வேணுமாம்'

எனக்கெண்டால் பயமாயிருக்கு.. தம்பியைப் பற்றியும் கேட்டவரே?

யாரும் எங்களை தெரிஞ்சவை இஞ்ச இருந்தால் சொல்லிக் குடுப்பான்கள், எங்கட மனுசர் அதில கெட்டிக்காரர்... எங்கட கஸ்டகாலம்... இதுக்குள்ள வந்து அகப்பட்டிட்டம்... நாங்கள் வெளிநாட்டுக்கு போகவெண்டு வந்தனாங்கள் என்டு சொன்னீங்களா, பெரியவருக்கு? இந்தத் தகரக் கொட்டில்ல கிடந்து சாக வேண்டியதுதானா? 'இராணி அழுதாள், அரற்றினாள், திட்டினாள், யார் யாரையோ பெயர் குறிப்பிடாமல் 'அவன் இவன் என்று' 'என்ன அழுகுரல் கேட்கிறதே ஆராய அயல் கொட்டில் காரர் வந்து எட்டிப்பார்த்தார்கள். என்ன பிரச்சினை? ஏன் அம்மா அழுறா? என்று கேட்டான் ஒரு இளைஞன். அவன் பெயர் சாந்தன்.

வியாசர் சொன்னார் 'தம்பி நாங்கள் சுவிசிலஇருக்கிற எங்கட மக னோட போய் இருக்க வெண்டு வந்தனாங்கள்.. இடையில எங்களை வழிமாத்தி கொண்டு வந்து இப்படி வச்சிருக்கிறான்களே. பெரியவரிட்டை போய் கேட்டால், அவர் சில கேள்விகள் கேட்டார். பிறகு இன்னும் விசாரிக்க வேணும் இருங்கோ என்றிட்டார்.'

'வயதான எங்களை இந்த தகரக் கொட்டில்ல இருக்க வச்சால் நாங்கள் வரண்டு சாகிறதே?' என்று இராணி சொன்னாள்.

சற்றுப் பொறுத்து இராணி கேட்டாள் 'நீங்கள் எந்த ஊர் தம்பி?' சாந்தன் சிரித்து விட்டுச் சொன்னான் 'யாதுமூரே...இப்ப அகதி முகாம்' நீங்கள் வாருங்கோ வந்து நிலாவோட இருந்து கதையுங்கோ, மனசுக்கு ஆறுதலாய்ள இருக்கும்....'

'ஆர் தம்பி நிலா'

'நிலா வேணி என்ர மனைவி'

சாந்தன் இருவரையும் கூட்டிப்போய் தனது மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்து 'தேநீர் குடுங்கோ' என்றவாறு அவர்கள் அருகில் போய் அமர்ந்தான்.

நிலா வெந்நீர்ப் போத்தலில் இருந்த சாயநீரை இரண்டு அலுமினியக் குவளைகளில் ஊற்றி, சீனி கலந்து ஆற்றி எடுத்து வந்து இருவருக்கும் கொடுத்து 'குடியுங்கோ' என்றாள்.

அவர்கள் குடிக்கும் வரை சற்று தூரத்தில் நின்றவள் திரும்பி வந்து அவர்கள் அருகில் இருந்தாள்.

அவர்களுக்கு ஆறுதல் சொல்லும் வகையில் நிலா, இராணியுடன் பேசினாள். என்ன அம்மா செய்கிறது?... எங்கட போதாத காலம்... வேற வழியில்லாமல் வந்த கூட்டுக்கிளியளாய் அகப்பட்டிருக்கிறம். அழுது கெஞ்சினாலும் திறந்து விடும் கருணையுள்ளம் இந்த மனுசருக்கு இல்லை... எது நடந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியது தான்... இங்கே நடக்கிற சம்பவங்களை அச்சத்தோடும் கவலையோடும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்... அடுத்த முறை உங்களை விசாரணைக்கு கூப்பிடும் போது பணிவாய் தயவாய் உங்களை 'வெளியில் போக விடுங்கோ' என்டு கேளுங்கோ... தைரியத்தை இழக்காமல் துணிவாய் பேசுங்கோ... சத்தியம், நீதி, தருமம் வெல்லும் என்பார்கள். கடவுள் ஏன் இப்படி எங்களைச் சோதிக்கிறானோ? என்ன பாவம் செய்தோம்? எங்கள் உழைப்புக்கும் தியாகத்துக்கும் ஒரு நாள் பலன் கிடைத்தேயாகும்.

நாங்களும் நிம்மதியாய் இருக்கும் காலம் வரும்'

'நீர் சொல்லுற தெல்லாம் சரிதான் மகளே... ஆனால் நாங்கள் நம்பியிருந்த

நீதியும் தருமமும் எங்களை ஏன் கைவிட்டது? அநீதியும் அ த ர ம ம் த ா னே அராஜகம் புரிகிறது....' இராணியின் வாதம்.

'அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்' இது எங்கள் மூதாதையர் நம்பிய நீதி' காலம் பதில் சொல்லும் அம்மா.... கவலையை விடுங்கோ...'

'உனக்கு நல்ல அறிவிருக்கு... நல்ல மனம் படைச்ச பிள்ளை... நல்லாய் இருப்பாய்...' நிலாவின் கையைப் பற்றி தன் நெஞ்சில் வைத்து வாழ்த்தினாள் இராணி. இருவரும் பேசிக் கொண்டிருந்தவற்றை செவிமடுத்திருந்த வியாசர் வாய் திறந்தார்.

'அகதிகளா? சிறைக் கைதிகளா?... முகாம் வாழ்க்கைக்கு பழக்கப்பட்டு விட் டார்களா? வாலிபர்கள் பந்தடிச்சு விளையா டுகிறார்கள்... வளர்ந்தவர்கள் 'காட்ஸ்' விளையாடுகிறார்கள்... பெண் பிள்ளை கள் கூடிப்பேசி, சிரித்து பொழுது போக்குகிறார்கள்..ரேடியோ பெட்டியை சுற்றியிருந்து சினிமாப்பாட்டுக்கு தாளம் போடும் கூட்டம் ஒரு பக்கம்...

தொட்டியைச் சுற்றிநின்று நெருக்குப் பட்டு நீராடிவிட்டு ஈரக்கூந்தலுடன் அன்ன நடையில் வரும் நங்கையர்... எதிலும் ஆர்வமற்றவர்கள் பகல் இரவு தெரியாதவராய் பாயில் கிடக்கி றார்கள்... நாங்கள் இருப்பது பிரமாண் டமான முட்கம்பிக்கூடு என்ற உணர்வே யில்லாதவர்கள்... மேலே பாருங்கோ சுதந்திரமாய் மரக் கிளைகளில் பாடி விளையாடும் பட்சிகளை.. எங்களைப் பார்த்து 'ஏ மனித அடிமைகளே! என அவை கூறுவதுபோல் தோன்ற வில்லையா?...'

மனக்கவலையை மறந்து சிரித்தாள் இராணி 'இவர் பண்டிதர், புலவர் பறவை களைப் பார்த்து பாட்டுப் பாடுவார்...' என்று நிலாவைப் பார்த்து சொன்னாள். ஆனால் அம்மா அவருக்கு தன் விடுதலை பற்றிய கவலைமாத்திரமல்ல ஒட்டுமொத்தமாக இருந்த முகாம் மக்களின் விடுதலைபற்றியும் சிந்திக் கிறார். போல் தெரிகிறது...' என்றாள் நிலா.

'ஆனால் நான் சிந்திப்பதால் மட்டும் அதுநடக்கிறகாரியமில்லையே மகள்.

'உண்மைதான்... அவரவர் தன் விடுதலையைப் பற்றி சிந்திக்கவேண்டிய கட்டம் இது.'

'சரியா சொன்னீங்கள் மகள்... நான் அடுத்த விசாரணையில ஒரு முடிவு கண்டுதான் வருவேன்'

'ஓ அப்படியொரு தைரியம், துணிவு எல்லோருக்கும் வரவேணும்'

'நான் போய் கொஞ்ச நேரம் படுத்திருக்க விரும்புறன்.

இராணி இருந்து கதைக்கட்டும் வரட்டுமா?

இரண்டு நாள் கடந்த நிலையில் வியாசருக்கு அழைப்பு வந்தது. 'வாங்க வியாசர் உட்காருங்க' சொன்ன அதிகாரிக்கு வணக்கம் கூறிவிட்டு கதிரையில் அமர்ந்தான் வியாசர்.

அதிகாரி கேட்ட முதல் கேள்வியே வியாசரைத் திடுக்கிட வைத்தது.

'உங்க மகன் விக்ரமன் புலிதானே? சண்டையில காயப்பட்டவர் தானே?

'ஒப்புக்கொள் உண்மையைச் சொல். உன்னால் வாதாட முடியும்.

நியாயத்தை உணர்த்து.. உன்னால் முடியும்' என்றது உள்மனம் 'என் மகன் இயக்கத்தில் இருந்தவர்தான், சண்டையில காயப்பட்டவர் தான்'

'ஏன் அனுப்பினீங்க'

எங்களுக்கு தெரியாமல் ஓடிப் போனான் சேர்... இப்போ வன்முறையைக் கைவிட்டு சனநாயக நீரோட்டத்தில் கலந்து விட்ட முன்னாள் பிறபிரிவுப் போராளிகளும் பெற்றாருக்குச் சொல் லாமல் ஓடிப்போனவர்கள்தான். அவர் களை ஏற்றுக் கொண்டது போல் இவர்க ளையும் மன்னித்து அவர்கள் தாம் விரும்பிய தொழிலில் ஈடுபட வழிக்

காட்டுங்கோ... நீங்கள் பெரிய மனிதர் பெரிய பதவியில் இருக்கிறீங்க... புத்தரின் போதனையைப் பின்பற்று கிறீர்கள். நாங்களும் எங்கள் மூதாதை யர்களும் பலர் புத்த சமயத்தவர்கள். அவர்கள் புத்தருக்கு கோயில் கட்டியி ருந்தார்கள். சித்தார்த்தன் ஒரு அரச குமாரன்... இந்து மதத்தவன்... மனித இனம் படும் அவலங்களைக் கண்டு மனம் நொந்து, அரச பதவியையும் இல்வாழ்க்கையையும் துறந்து ஏகாந்தம் நாடி தனியே அமர்ந்து தவம் புரிந்தான், ஞானம் பெற்றான். அறம், அன்பு, கருணை, தருமத்தைப் போதித்தான். அவன்மேல் நம்பிக்கை கொண்டவர்கள் நாங்கள்.'

'போதும் நிறுத்து என்றார் அதிகாரி, புன்சிரிப்புடன் தொடர்ந்தும் பெரிய படிப்பாளிப்போல் பேசுகிறாய்... நீயும் குற்றவாளி... அதை மறந்து விடாதே... என்றார். அச்சுறுத்தும் தொனியில். வியாசர் அவர் சொன்னவற்றைப் பொருட் படுத்தாமல் 'சேர் ஒரு நிமிஷம் என்னை பேச அனுமதியுங்கள்' எங்களை வெளியில் செல்ல அனுமதியுங்கள்... நாங்கள் சுவிசில் இருக்கும் எங்கட மகனிடம் போக.. உங்களுக்கு நன்றியாக நீங்கள் விரும்புற பரிசு எதுவானாலும்...'

ஸ்ஸ்ஸ் என்ன துணிவு! என வியந்த அதிகாரி 'அப்படியா?.... சரி போய் இருங்க' என்றார்.

பாதுகாப்பு உத்தியோகத்தனை அழைத்தார். தன் தாய் மொழியில் சில வார்த்தைகள் கட்டளையிடும் தொனியில் சொன்னார். அவன் வியாசரை கூட்டிக் கொண்டு வெளியே போனான்.

வெளியில் அவரை நிறுத்தி அதிகாரியின் திட்டத்தை விளக்கமாய் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல வியாசரின் முகத்தில் சிறுநகை சிலகணம் மலர சரி...சரி..சரி எனவே பதிலளித்தார்.

❖❖❖

வியாசர் தம்பதியை காணவில்லை வேறு முகாமிற்கு மாற்றப்பட்டிருக்கலாம்

விசாரணைக்கென்று போகிறார்கள், வருகிறார்கள் சிலர் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டதாக சொல்கி றார்கள் வேறு சிலர் மிகப் பாதுகாப்பான முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள் சிலர் அதிசயமாக விடுதலையும் அடைகிறார்கள்.

முகாம் வாசிகளுக்கு அவை ஒன்றும் புதுமையல்ல பழகிப்போன செய்திகள். வியாசர் இராணி காணாமல் போனதும் அத்தகைய ஒரு சம்பவமே.

❖❖❖

'கொழும்பில் இருந்து கதைக்கிறேன். தம்பியும் என்னுடன் வந்திருக்கிறார்'

அப்பா சுகமாய் இருக்குறீங்களா?... தம்பி அம்மா சுகமா?... எப்படி அப்பா சிரமமில்லாமல் வர முடிந்ததா? சிரமில்லாத பயணம் இப்போ இல்லை யெண்டு தெரியாதா?... விபரமாக இப்போ கதைக்க முடியாது... எல்லாம் நேரில் சொல்லலாம்... வங்கியில் இருந்த சேமிப்பு முழுவதும் செலவாயிற்று... எப்படி என்றதயும் நேரில்தான் சொல்ல முடியும். நம்பிக்கையான ஒரு பயண முகவருடன் பேசியிருக்கிறேன். எங்களைக் கூட்டிக் கொண்டு போய் உன்னிடம் ஒப்படைச்ச பிறகு கட்டணம் எல்லாம் பெற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். பயணச் சீட்டுகளுக்கும் தற்போதைய செலவுகளுக்குமாக கொஞ்சம் பணம் அனுப்பவும்.

"சரி அப்பா"

❍

# எச்சில் 3

காந்திகாயினி சுபலன்



**கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2011இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை**

*1978*

"டேய் நாசமாய்ப் போனவனே..... என்ன காரியாம் செய்து விட்டாய்.. சீச்சி..... அசிங்கம் அசிங்கம்... பாளாய்ப் போன நளப்பயலே.... என்ன துணிச்சல் உனக்கு..... உன்னை.... உன்னை..... என்ன செய்கிறேன்.... பார்.....!

வேலாயுதத்தாரின் கொடூர கர்ச்சனையைக் கேட்டு அருகில் தென்னை மர உச்சியில் நின்ற கந்தன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

தேங்காய் பறிக்கும் போது திடீரென வேகமாக வீசும் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அங்குமிங்குமாய் மரம் சுழன்றடிக்கும் நேரத்தில் பதறிப்போகும் மனம்போல் பதறிய நெஞ்சத்துடன் கீழே சறுக்கியபடி வந்தான் கந்தன். நெருப்பில் நிற்பதுபோல் கோபத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தார் வேலாயுதத்தார். எதிரில் நிற்கும் சிறுவனைத் தன் கையால் அடித்தால் தீட்டாகிவிடுமே என்று அந்தக் கோபத்திலும் உணர்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். சற்றுத் தள்ளி நின்ற கொய்யாமரத்தை நோக்கி வேகமாக ஓடினார்.

அந்த ஆறுவயது பாலகனோ பருந்தைக் கண்ட குஞ்சுபோல பயத்தினால் கூனிக் குறுகி நடுங்கிக் கொண்டிருந்தான். என்ணெய் வற்றிய செம்பட்டைத் தலை உடல் முழுதும் செம்மண் புழுதி. காற்சட்டை மட்டும் அணிந்திருந்தான். அவன் வீட்டுக் கூரையின் ஓட்டைகள் போல் அவன் அணிந்திருந்த காற் சட்டையிலும் ஆயிரத்தொட்டு ஓட்டைகள். கால்களில் செருப்பும் இல்லை.

வேலாயுதத்தின் கடுங் கோபத்தால் மிரண்டு போன அவன், அவர் இந்தளவுக்கு கோபப்படும்படி தான் என்ன தவறு செய்தேன் என்று புரியாமலும் என்ன நடக்கப்போகிறதோ என்ற பயத்தினாலும் விழிபிதுங்கி உடல் நடுங்கி நின்றான்.

தன் கணவரின் கர்ச்சனைகேட்டு வீட்டினுள் சமையல் வேலையில் மும்முரமாக இருந்த தனவல்லியும் பதறியடித்து ஓடிவந்தாள்.

அதற்குள் கொய்யாத் தடி ஒன்றினை முறித்துக் கொண்டுவந்த வேலாயுதம் சிறுவனின் காலின் கீழே ஒரு போடும் போட்டுவிட்டார்.

சிறுவன் துடித்துப் போனான்.

"அப்பா!" என குளறியடித்தபடி அப்போது தான் மரத்தால் இறங்கிவந்த கந்தனை ஓடிச் சென்று கட்டிக் கொண்டான்.

**(ஞானம் 133, ஜூன் 2011)**

**'என்ன செய்தவனோ.... நீ எனக்கு குடிக்க தண்ணி கொண்டுவந்த செம்பை இதில வைச்சிட்டு அங்கால போறத்துக் கிடையில எந்தப் பக்கத்தால வந்தானோ தெரியாது..... வந்து செம்பில தொட்டுட்டான்....! என்ன துணிச்சல் உவனுக்கு.......; மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க கத்தினார் வேலாயுதத்தார்.**

**'தண்ணி விடாய்ச்சிது.... அது தானப்பா.... குடிக்க......' விம்மலுடன் சிறுவன் சொல்லமுன்.... 'சிரட்டையில் குடிக்கிற நாயளுக்கு.... செம்பில தண்ணி கேக்குதோ......; சீறிப் பாய்ந்தார் வேலாயுதம்.**

---

"ஏனப்பா அந்தக் குழந்தைக்கு அடிச்சனீங்கள்......?" ஓடிவந்த தனவல்லி மூச்சுவாங்கக் கேட்டாள்.

"குழந்தையோடி.... உவன் என்ன காரியம் செய்தானெண்டு உனக்குத் தெரியுமே..... குழந்தையாம் குழந்தை...... மூதேவிக்கு இன்னும் நாலு போட வேணும்' எனத் தடியை ஓங்கியபடி சிறுவன் முன் சென்ற வேலாயுதத்தாரை கந்தன் கையெடுத்துக் கும்பிட்டபடி மறித்தான்.

"ஐயா..... அவன் சின்னப்பிள்ளை.... அவனை அடியாதையுங்கோ.......

உங்கட காலில வேணுமெண்டாலும் விழுறன்........."

'உனக்கு எத்தினதரமெடா சொல்லுறனான் தேங்காய் புடுங்க வரேக்க உன்ர வாரிசுக்களை கூட்டிக் கொண்டு வராதையெண்டு....... வந்தா சும்மா இருக்குதுகளே... அதையிதைத் தொட்டுத் தீட்டுப் படுத்திறாங்கள்......'

சிறுவன் மேலிருந்த வேலாயுதத்தாரின் கோபம் இப்போது கந்தன் மேல் சீறிப் பாய்ந்தது....

"ஐயா இந்த ஒரு தடவை மன்னிச்சுக் கொள்ளுங்கோ.... இனி இப்படி நடக்காது...." என்ற கந்தன், மகனிடம் திரும்பி..... 'என்னடா....... செய்தனி.....' என கோபத்தோடு கேட்டான்....

விக்கி விக்கி அழுது கொண்டிருந்தவன்..... "இல்லையப்பா....... நான்..... நான்.... ஒண்டும் செய்யல்ல..."

'டேய்........ றாஸ்கல்...... பொய் சொல்லாதை' என வேலாயுதத்தார் கையோங்க தந்தையின் இடுப்பைப் பிடித்தபடி அவர்பின் ஒளிந்து கொண்டான் சிறுவன்.

'விடுங்கப்பா.... அவனை. சின்னப் பெடியனைப் போட்டு அடிக்கிறீங்கள். அப்பிடி என்னதான் அவன் செய்து போட்டான். சொன்னால் தானே தெரியும்' ஆற்றாமையோடு கேட்டாள் தனவல்லி.

'என்ன செய்தவனோ.... நீ எனக்கு குடிக்க தண்ணி கொண்டுவந்த செம்பை இதில வைச்சிட்டு அங்கால போறத்துக் கிடையில எந்தப் பக்கத்தால வந்தானோ தெரியாது..... வந்து செம்பில தொட்டுட்டான்....! என்ன துணிச்சல் உவனுக்கு.......' மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க கத்தினார் வேலாயுதத்தார்.

'தண்ணி விடாய்ச்சிது.... அது தானப்பா.... குடிக்க......' விம்மலுடன் சிறுவன் சொல்ல முன்....

'சிரட்டையில் குடிக்கிற நாயளுக்கு.... செம்பில தண்ணி கேக்குதோ......' சீறிப் பாய்ந்தார் வேலாயுதம்.

'விடுங்கோ அப்பா இவன் சின்னப்பிள்ளை தெரியாமல் செய்திருப்பான். இதுக்காக அவனை இப்படியே அடிக்கிறது..... இவனின்ர வயசில எங்களுக்கும் ஒரு பிள்ளை இருக்கெல்லே.... !

'எங்கட பிள்ளையும் இவனும் சரி சமனோடி.... இதில நிண்டு விசர்க்கதை கதையாமல் அங்கால போ.... டேய்

கந்தன் உன்ரை பிள்ளையைக் கூட்டிக் கொண்டு நீயும் நடையைக் கட்டு... தனிய வந்து தேங்காய் புடுங்கிறதெண்டால் புடுங்கு..... இல்ல வராதை.....'

'ஐயா..... மன்னிச்சுக் கொள்ளுங்கோ இனிமேல்...... இப்பிடி......'

'சரி.... சரி..... போ... போ...' என்று அலட்சியமாய் சொன்னவர் செம்பைப் பார்த்தார். அந்தச் 'சில்வர்' செம்பில் அவர் முகம் விகாரமாய்த் தெரிந்தது... நடந்தவற்றைப் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருந்த செம்பு தன்னைப் பார்த்து பழிப்பது போல் இருந்தது அவருக்கு.

'சீ.... இனி இந்தச் செம்பை யார் பாவிப்பது?'

கையில் இருந்த தடியை செம்பினுள் விட்டு செம்பைத் தூக்கினார். அந்தப் பிஞ்சின் தாகத்துக்கு உதவாத தண்ணீர் வீணே கொட்டியது. அதனை அப்படியே கொண்டு சென்று குப்பை யினுள் தடியோடு சேர்த்து வீசி விட்டுச் சென்றார் வேலாயுதம்.

*1991...*

வெளியே போன வேலாயுதத்தார் விறு விறு என வீட்டுக்கு வந்த கோலத்தைப் பார்த்ததுமே வெளியே அனலாக எரிக்கும் சூரியனின் சூடு அவரையும் தொற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது.

வந்த வேகத்தில் இருந்த சால்வை யைத் தூக்கிக் கதிரையில் போட்டவர் வேட்டியையும் மடித்துக் கட்டிக் கொண்டார்.

'எடியே தனவல்லி..... எங்கேயடி உன் பிள்ளை.... கூப்பிடு அவனை......' அடுப்படியில் வேலையாய் நின்றவள் ஓடி வந்தாள்.

'என்னப்பா என்ன நடந்தது.....'

'இன்னும் என்ன நடக்கவேணும்.... ஊர்ப்பள்ளிக்கூடத்தில் சாதி கெட்டது களோட சேர்ந்து திரியுறான் எண்டு ரவுண் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி.... அவர் கேட்டதெல்லாம் வாங்கிக் குடுத்து படிக்கவைச்சு..... கம்பஸ்சுக்கு போவா னெண்டு பாத்தால்...... கோட்டை விட்டு வந்து நிக்கிறான்..'

'மகன் பாஸ் பண்ணயில்லை எண்டது முந்தநாளே உங்களுக்குத் தெரியும் தானே.... அப்ப பேசாமல் இருந்திட்டு இப்ப வந்து ஏன் சத்தம் போடுறியள்...?'

'இப்ப தானே இன்னொரு விஷயம் கேள்விப் பட்டன்......'

'என்ன விஷயம்...'

'அந்த எளிய சாதி கந்தன்ர மகனுக்கு கம்பஸ் கிடைச்சிருக்காம்...'

'உங்களுக்கு உங்கடை பிள்ளைக்கு கம்பஸ் கிடைக்கேலை எண்ட கவலை இல்லை. கந்தன்ர பொடியனுக்கு கம்பஸ் கிடைச்சிட்டது எண்டதுதான் கவலை....'

'ஏய் நீ வாயை மூடு.... தின்னக் குடிக்க வழியில்லாமல் திரிஞ்சதுகள் படிச்சுப் பாஸ் பண்ணீட்டுதுகள். இவனுக்கு கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தன்.... எங்கட மானத்தையே வாங்கிப் போட்டான். பள்ளக் கூடத்துக்குப் போடச் சப்பாத்தில்லாமல் தேஞ்ச செருப்பும் கிழிஞ்ச உடுப்பும் போட்டுக் கொண்டு திரிஞ்ச கீழ் சாதிப் பயல் பாஸ் பண்ணீட்டான்.... என்ர பிள்ளை..... என்ர பிள்ளை.... பெயிலாயிட்டான்.... எங்கட சாதிக்கே அவமானம்.. தாங்க முடியெல்ல... எல்லாம் உன்ர வளப்பு..... கள்ளுவித் தெண்டாலும் கந்தன் மகனை கம்பஸ்சுக்கு அனுப்பிப் போட்டான் எண்டெல்லே சனம் பெருமை யாய் பேசுது. ஊரில என்னால தலை காட்ட முடியயெல்ல..... சீ....... எங்கேயடி அவன்....'

'அவன் வீட்டில இல்லை..... வெளி யில எங்கேயோ போட்டான்'

'எளியதுகளோட எங்கேயும் ஊர் சுத்திப்போட்டு வருவான்... வரட்டும் ரெண்டில ஒண்டு பாக்கிறன்.....'

கந்தனின் மகனுக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைத்ததை பொறுத்துக்

கொள்ள முடியாத வேலாயுதத்தார் தான் சமூகத்தின் முன் தரம் தாழ்ந்து விட்டதாய் உணர்ந்தார். அதனால் தனது ஒரே மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டு தன் மகன் வெளிநாட்டுக்கு படிக்கப் போயிருக்கிறான் என மார்தட்டிக் கொண்டார்.

.... .... .... .....

*2009*

தன்னையே நம்பமுடியவில்லை வேலாயுதத்தாருக்கு. கண்ணாடி முன் நின்று மீண்டும் மீண்டும் தன்னையே சுற்றிச் சுற்றிப் பார்த்தார். கழுத்தில் தொங்கிய 'ரையை' பலமுறை சரி செய்து கொண்டார். அணிந்திருந்த ஜீன்ஸ் பொக்கற்றுக்குள் இரண்டு கை களையும் வைத்தப்படி சப்பாத்துச் சத்தம் எழுப்ப முன்னும் பின்னும் நடந்துபார்த்தார்.

'சா........ கோட் சூட்டில நான் சோக்காத் தான் இருக்கிறன்" கண்ணாடி காட்டிய விம்பத்தை அவரால் நம்பமுடியவில்லை. "தனவல்லி இருந்தாள் எண்டால் வாயில கைவைத்திருப்பாள். பாவம் அற்ப ஆயுளில் போய்விட்டாள். என்ர இந்த ராஜாக் கோலத்தையும் இந்த லண்டனையும் பார்க்க அவளுக்குத்தான் கொடுப்பினை இல்லை".

"அப்பா நேரம் போகுதெல்லே.... இவ்வளவு நேரமாய் கண்ணாடிக்கு முன்னால் நிண்டு என்ன செய்யிறியள்"

தன்னைத் தானே ரசித்துக் கொண்டி ருந்தவர் மகனின் குரல் கேட்டதும் 'இந்தா வந்திட்டன்' ஏன் இப்படி அவசரப் படுறாய்..." என்றபடி அறையை விட்டு வெளியே வந்தார்.

மனைவி இறந்த சில மாதங்களிலேயே வேலாயுதத்தார் லண்டனுக்கு மகனிடம் வந்துவிட்டார். வேட்டியும் சறமும் கட்டித்திரிஞ்ச மனுசனுக்கு வெள்ளைக் காரனின் உடுப்பு முதலில் சிரமத்தைத் தந்தாலும் தன்னை அறுபதிலும் அழகாயும் இளமையாயும் காட்டுவதால் அதனையே விரும்பி அணிந்து பழக்கப் படுத்திக் கொண்டார். இப்போது மகனின் நெருங்கிய நண்பனின் திருமணத்திற்கு மகன் குடும்பத்துடன் புறப்பட்டு விட்டார்.

மண்டபம் நிறைந்த சனம்.

வந்தவர்களின் அலங்காரத் தோற் றங்கள் அவர்களின் செல்வந்தத் தனத்தை வெளிக்காட்டியது.

எல்லோரும் மகனுக்கு கைலாகு கொடுத்து ஆங்கிலத்தில் உரையாடிய போது வேலாயுதத்தாருக்கு பெருமை யாக இருந்தது.

'என்ரை மகன் கம்பஸ் போகாட்டி என்ன இத்தனை பெரிய பணக்காரர்களை நண்பர்களாகக் கொண்டிருக்கிறான். என்ன மாதிரி ஆங்கிலம் கதைக்கிறான்..... அந்தக் கந்தன்ர மகன்..... இப்ப நானேன் அதுகளை நினைக்க வேணும். கம்பஸ் போனவன் இப்ப ஊரில எங்கயேனும் மரமேறிக் கொண்டுதான் இருப்பான்.

கெட்டி மேளம் கொட்ட தாலி கட்டி முடிந்தது.....

வந்தவர்கள் அறுகரிசி போட்டு மணமக்களை வாழ்த்தத் தொடங்கினர். வேலாயுதத்தாருக்கு பசி வயிற்றை நுள்ளியது.

காலையிலும் வரும் அவசரத்தில் சாப்பிடாமல் விட்டதை இப்போது தான் உணர்ந்தார். சாப்பாடு இருக்கும் இடத்திற்குச் சென்றார். ஏற்கனவே ஒரு சிலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அடுக்கி வைக்கப்பட்ட தட்டுகளில் ஒன்றை எடுத்து விதம் விதமாக வைக்கப் பட்டிருந்த உணவுகளை எடுத்துக் கொண்டார். சாப்பிடத் தொடங்கிய போதுதான் கவனித்தார் தான் இருக்கும் மேசையின் எதிரில் குழந்தையுடன் தன் மகனின் வயதை ஒத்த ஒருவன் இருப்பதை. குழந்தையை மேசையில் இருத்திவிட்டு தட்டில் இருந்த சோற்றை தானும் சாப்பிட்டு குழந்தைக்கும் ஊட்டிக் கொண்டிருந்தான் அவன். குழந்தை

சாப்பிட அடம் பிடித்து சிணுங்கிச் சிணுங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

திடீரென வேலாயுதத்தாரின் தட்டில் இருந்த சிவப்புநிற இனிப்புவகை ஒன்றைக் காட்டி அதைத் தரும்படி குழந்தை அழுதது.

'அது தாத்தா சாப்பிடுறது.... உங்க ளுக்கு இஞ்ச இருக்கு.... ' என்றபடி தனது தட்டில் இருந்த இனிப்பை குழந்தையிடம் கொடுத்தான் அவன். குழந்தையோ இவரின் தட்டில் இருக்கும் இனிப்புத்தான் வேண்டுமென அடம் பிடித்தது.

அதனைப் பார்த்துக்கொண்டு வேலாயு தத்தாரால் சும்மா இருக்க முடியவில்லை. அழுது கொண்டிருந்த குழந்தையிடம் தன் தட்டில் இருந்த இனிப்பைக் கொடுத்தார்.

'ஐயா உங்களுக்கு.....'

'பறவாயில்லைத் தம்பி குழந்தை தானே...'

'இந்தாங்கோ இதை நீங்கள் சாப்பி டுங்கோ.... ' என தனது தட்டில் இருந்த இனிப்பை அவரது தட்டில் வைத்தான் அவன்.

அவரும் இனிப்பின் மேலுள்ள ஆசையில் அதனை எடுத்துச் சுவைத்துச் சாப்பிட்டார்.

..... ..... .... ....

வீட்டில் அன்றைய இரவுச் சாப்பாடின் போது போய் வந்த திருமணம் பற்றி பேச்சு வந்தது.

'உன்ர சிநேகிதன் நல்ல பணக்காரன் போல' தன்மனதில் பட்டதை மகனிடம் கேட்டார் வேலாயுதம்.

'பின்ன.... நல்ல உத்தியோகத்தில் எல்லோ இருக்கிறான்....

'அது சரியப்பா.... உங்கள ஒராளுக்கு அறிமுகப் படுத்தி வைக்க வேணும் எண்டு நினைச்சனான் மறந்து போனன்....'

'ஆரது.....'

'அதுதானப்பா நீங்கள் சாப்பிடேக்க உங்களுக்கு முன்னால ஒரு குழந்தைப் பிள்ளையோட இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தானே...

ஓமோம்.. ஆர் அது... பார்க்கவே வசதியான இடத்தாள் மாதிரித்தான் தெரிஞ்சது.. மகளோடையே இங்கிலீசில தான் கதைச்சுக் கொண்டிருந்தவர்...

'நான் ஆரெண்டு சொன்னால் நீங்கள் நம்பமாட்டீங்கள்... வாய்க்குள் சிரித்தப்படி சொன்னான் மகன்.

'சரி ஆரெண்டு சொல்லன்.'

'அது எங்கட கந்தன்ர மகன்.'

'என்னது...'

சாப்பிட்டுக் கொண்டிருந்தவரின் தொண்டைக்குள் இறங்கமறுத்த உணவு அப்படியே நின்றுவிட்டது.

தந்தையின் அதிர்ச்சியை உணராத தனயன் தொடர்ந்தான்.

'கம்பஸ் முடிஞ்சதும் புலமைப்பரிசில் கிடைக்க லண்டனுக்கு வந்திட்டான். நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான். அவனுக்குக் கீழ்தான் நான் வேலை பார்க்கிறன். கைநிறையச் சம்பாதிக் கிறதால சொந்த வீடு வாசல் எண்டு வசதியா வாழுறான். அவன் உங் களையும் அடையாளங் கண்டிருக்க மாட்டான்'

மகன் சொல்லிக்கொண்டு போவதைக் கேட்க கேட்க அதிர்ச்சியில் உறைந்து போன அவருக்கு புரைக்கேறியது.....

உச்சந்தலையில் நாலு தட்டுத்தட்டி தண்ணீரை மடமடவெனக் குடித்தார். மேலும் சாப்பிடப் பிடிக்காதவராய் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

.... .... ... ....

நேரம் இரவு பதினொரு மணியையும் தாண்டி விட்டது.

வேலாயுதத்தாருக்கு இருப்புக் கொள்ளவில்லை. படுத்துப் பார்த்தார். நித்திரையும் வரவில்லை. எழும்பி அங்கும் இங்கும் அறைக்குள் நடந்தார். முதல் நாள் நல்ல விருந்துண்டு விட்டு மறு

நாள் காலை காலைக் கடைனைக் கழிக்க ஒரு இடவசதியில்லாமல் வயிற்றுள் பிசையும் வலியுடன் அவதிப்படுபவர் போல் அந்தரப்பட்டுக் கொண்டிருந்தார்.

சீச்சீ...... இன்னாரென்று தெரியாமல் போய்விட்டதே!

சே... என்ன காரியம் செய்து விட்டேன்.

ஒரு..... ஒரு.... நளவன்ர... எச்சில் தட்டில் இருந்து....ச்சா ஒரு அற்ப இனிப்பால இத்தனை நாள் கட்டிக்காத்த ஆச்சாரம் போய் விட்டதே.... நினைக்கவே வயிற்றைப் புரட்டியது.

சத்தி வருமாப் போல இருக்கக் குளியலறைக்குள் ஓடினார்..... ஓங்கா ளித்தார்...

இந்நேரத்திற்கு சாப்பிட்டதெல்லாம் செமித்துப் போயிருக்குமே...

ச்சா, போயும் போயும் ஒரு எளிய சாதியின்ர எச்சிலச் சாப்பிட்டிட்டன்.

அதை வேற ஆரார் பாத்தினமோ.... கடவுளே.... நானென்ன செய்வன்.... மீண்டும் மீண்டும் அதே நினைவு.

இருக்க முடியாமல், நிக்கவும் முடியாமல் படுக்கவும் முடியாமல் அந்தரப்பட்டார் வேலாயுதத்தார்.

பல வருடங்களுக்கு முன் செம்பில் தெரிந்த அவரது விகார முகம் மீண்டும் மீண்டும் ஞாபகத்திற்கு வந்து எரிச்சலை ஏற்படுத்தியது. கடிகாரமும் மூன்று மணியைக் கடந்து சென்று கொண்டிருந்தது. இவரின் மனமுள் மட்டும் நேற்றைய கல்யாணச் சாப்பாட்டி லேயே நிலைத்து நின்றது.

பொழுது விடிந்தும் மனம் விடிய வில்லை.

வேலைக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த மகன் தன் அறையில் இருந்து வந்த தந்தையின் முகத்தைப் பார்த்ததும் 'என்னப்பா உடம்பேதும் சரியில்லையா....' என அக்கறையோடு விசாரித்தான்.

அவனின் விசாரிப்பை உணராதவர் போல் "நீ சரியாத்தான் ஆளப் பாத்தியோ?" என்றார் யோசனை யோடு.

ஆரையப்பா... என்னப்பா... சொல்லு றியள் எனக்கு விளங்கேல...

'இல்ல.... நேற்றைக்கு கலியாண வீட்டில எனக்கு முன்னால இருந்து சாப் பிட்டது கந்தன்ர மகனெண்டு சொன்ன னியல்லோ... ஆளச்சரியா பாத்துத்தான் சொன்னியோ..'

நம்பமாட்டாமல் கேட்டார் வேலாயு தத்தார்.

'அவனுக்கு கீழதான் நான் வேலை செய்யிறன் எண்டுறன் அப்பிடி ஆள் தெரியாமல் சொல்லுறனே... அதுக்கிப்ப என்னப்பா...?

'இல்லையடாப்பா.... நேற்று அவன்ர..... அவன்ர.... தட்டில இருந்த இனிப்பை வாங்கித் திண்டிட்டன்..... அவன்ர எச்சில் தட்டில........ சீ...... என்ர உடம்பே தீட்டாகிப் போச்சு.....'

தந்தையின் மனப் போக்கை அறிந்துகொண்ட மகன்..

'என்ன கதை கதைக்கிறியள் இன்னும் நீங்கள் மாறயிலேயே...... கந்தனும் வேலாயுதமும் ஒண்டெண்டத எப்பதான் புரியப் போறியளோ உங்களத் திருத்தவே ஏலாது..... சரியப்பா..... அந்த தீட்ட என்னத்தப் போட்டு கழுவப் போறீங்கள்.... அப்ப செம்பைத் தூக்கி எறிஞ்சீங்கள் இப்ப.....' என்று கேட்டபடி அருகில் நின்ற தந்தையை மேலிருந்து கீழாக ஒரு பார்வை பார்த்துவிட்டு தன் கைப்பையையும் கார்ச் சாவியையும் எடுத்துக் கொண்டு விருட்டெனச் சென்று விட்டான்.

மகன் கேட்ட கேள்வியாலும் தன்னைப் பார்த்த பார்வையாலும் சிலையாகி நின்றார் வேலாயுதத்தார்.

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2011 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

- **முற்றத்துக்கரடி** — அகளங்கன் திரு. நா. தர்மராஜா — வவுனியா

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

- **வேளை வந்த வேளை** — திரு. கண மகேஸ்வரன் — கரவெட்டி

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

- **பௌர்ணமி இரவுகள்** — திரு. நல்லையா சந்திரசேகரன் — றத்தோட்டை

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

- **முள்ளிவாய்க்கால் குருவி** — திரு. ஓ.கே. குணநாதன் — மட்டக்களப்பு
- **கோமதி அல்லது மங்களம்மா சபதம்** — திரு. ஜின்னாஹ் ஷரிபுத்தீன் — தெகிவளை
- **கடவுளின் சோதனை** — சூசை எட்வேர்ட் — திருமலை
- **பிரளயம்** — கவிஞர் முல்லை வீரக்குட்டி — தம்பிலுவில்
- **அடையாளம் காணப்படாத பறக்கும் வஸ்துக்கள்** — சி. வ. இரத்தினசிங்கம் — கொழும்பு 10
- **ஓநாய்களும் ஆட்டுக்குட்டிகளும்** — உ. நிசார் — மாவனல்லை
- **ஆச்சரியங்கள்** — வேரற்கேணியன் — யாழ்ப்பாணம்
- **எமக்கேன் உல்லாசம்** — திரு. பா. பாலச்சந்திரன் — சுன்னாகம்
- **சின்னக்கா** — மாலினி அரவிந்தன் — கனடா

மேற்படி போட்டிக்கான பரிசளிப்பும், புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2011 க்கான பரிசளிப்பும் 18.12.2011 மாலை 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறும்.

– ஆசிரியர்.

---

**நடுவர்கள்:** தி. ஞானசேகரன், திருமதி வசந்தி தயாபரன், திரு. புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

**(ஞானம் 138, நவம்பர் 2011)**

34

காலை பதினொரு மணியிருக்கும்.

வீடுகளில் பெண்கள் சமையல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பாடசாலை இல்லாததால் சிறுவர்கள் முற்றங்களில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆண்கள் வீடுகளில் இல்லை.

அரிவுவெட்டுக் காலம் என்பதால் ஆண்கள் வயலில் அரிவுவெட்டு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

வயோதிபர்கள் சிலர் மட்டுமே வீடுகளில் இருந்தனர்.

திடீரென ஊர் பரபரப்பாகியது.

கதை பரவத் தொடங்கியது.

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2011இல் முதற் பரிசு பெற்ற கதை

# முற்றத்துக் கரடி

1



அகளங்கன்
நா.தர்மராஜா

அந்த ஊரைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் யாவரையும் ஊருக்குள் கொண்டு வந்தனர்.

பாடசாலை மைதானத்தில் சுடுவெய்யிலில் அவர்களை நிறுத்தி வைத்தனர்.

அடையாளஅட்டைகளைக் காட்டும்படி வற்புறுத்தப்பட்டனர். வயல் வேலைக்குச் செல்லும்போது யாராவது அடையாள அட்டையை எடுத்துச் சென்றிருப்பாரா.

தங்கள் பிள்ளைகளையும் கணவன் மார்களையும் இராணுவத்தினர் பாடசாலை மைதானத்தில் நிறுத்தி வைத்திருப்பதைக் கேள்விப்பட்டு, வீட்டிலிருந்த பெண்கள் பதைபதைத்தார்கள்.

சமைத்தது பாதி சமைக்காதது பாதியாக அடையாள அட்டைகளை எடுத்துக் கொண்டு ஓடினார்கள்.

கைக்குழந்தைகளைத் தூக்கிக் கொண்டும், ஓடி விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டும், ஓடினார்கள். வீடுகளிலே ஓரிரு முதியவர்கள் மட்டுமே மீதம் இருந்தனர். கர்ப்பிணித் தாய்மாருக்கு ஒரு நம்பிக்கை, தம்மை ஒன்றுஞ் செய்யமாட்டார்கள் என்று.

பிள்ளைகளைத் தூக்கிச் சென்றவர்கள் பச்சைப் பிள்ளைகள் தங்களுக்குப் பாதுகாப்பு என நினைத்தார்கள்.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் என்ற ஊரில் நடந்த சம்பவத்தை அந்த ஊர்மக்கள் அறியாமல் இல்லை.

இந்த ஊர் இரண்டாவது சத்துருக் கொண்டானாக ஆகிவிடக்கூடாது என இறைவனைப் பிரார்த்தித்தனர்.

வைரவா! அம்மாளாச்சி! என முணு முணுத்துக் கொண்டனர். பாடசாலை மைதானத்தில் ஊர்மக்கள் கூடியிருந்த நேரத்தில் வீடு வீடாக இராணுவத்தினர் புகுந்தனர்.

(ஞானம் 139, டிசம்பர் 2011)

ஒரே பதட்டம்.

என்ன நடக்கப் போகிறது என்று யாராலும் ஊகிக்க முடியவில்லை. காசியப்புவும் பெத்தாவும் வீட்டுத் திண்ணையில் இருந்தனர. காசியப்பு வுக்கு எண்பத்தைந்து வயதுக்கு மேல் இருக்கலாம். அவரின் மனைவியை அவ்வூரில் யாவரும் பெத்தா என்றுதான் அழைப்பார்கள்.

பெத்தா பாக்குரலில் பாக்கிடித்து காசியப்புவுக்குக் கொடுத்துக் கொண்டி ருந்தார்.

காசியப்பு தெருவில் ஓடுபவர் களையும், இராணுவத்தினரையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

பயம் என்றால் என்ன என்றே அறியாத அவரின் உதடுகள் ஏதேதோ முணுமுணுத்தன.

அந்த ஊரிலுள்ள வைரவருக்கு மடை போடுவதென்றால் காசியப்புதான் பூசாரி. அம்மனுக்குப் பொங்கல் வைப்ப தென்றாலும் காசியப்புதான் பூசாரி.

அந்த ஊரில் மட்டுமல்ல, சுற்று வட்டாரத்தில் அவரைத் தெரியாதவர்கள் இல்லை. அவர் பிறந்தது அந்த ஊரில் தான்.

❖❖❖

இயற்கை வளமும் வனப்பும் நிறைந்த அந்த ஊரின் பெயர் பம்பைமடு.

அங்குள்ள குடும்பங்கள் யாவும் விவசாயக் குடும்பங்கள், சாதி சமயச் சண்டைகள் அந்த ஊரார் கேட்டறியாதது. யாவரும் சைவ சமயத்தவர்கள்.

காசியப்பு பம்பைமடு வட்டாரத்தின் அங்கத்தவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டு நடுச் செட்டிகுளம் பிரதேச சபையின் தலைவராக (Chairman) இருந்தவர்.

திண்ணைப் பள்ளிப் படிப்பைத் தவிர வேறு படிப்புப் படிக்காதவர். எழுத வாசிக்கத் தெரியும். ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடுவார். ஆங்கிலச் சொற்கள் சிலவற்றைத் தெரிந்து வைத்தி ருந்தார். அந்த ஊரவர்கள் மட்டுமன்றி அயற் கிராமத்தவர்கள் பலரும் அவரிடம் வந்து தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

ஒரு சிறந்த நீதிபதிபோல அவர் செயற்பட்டு ஆலோசனையும், அறிவுரை யும் வழங்கி வந்தார்.

இயக்கங்களின் வளர்ச்சிக்குப் பின் அவரிடம் வருபவர்கள் குறைவு. அவருக்கு அந்தப் பிரதேசத்தில் மதிப்பு ஏற்படத் தொடங்கியதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு.

அவரது வலது கண் மூடப்பட்டபடி பார்வையற்று விளங்குவதுதான் அதற்குச் சாட்சி.

கண்ணை இழந்த காசியப்புவை, (அப்போது காசிப்பிள்ளை) திருமணஞ் செய்ய அந்தப் பிரதேசத்துப் பெண்கள் எல்லாம் போட்டி போட்டனர் என்று பெத்தா இன்றும் பெருமையாகச் சொல்லிக் கொள்வார்.

அவரைத் திருமணஞ் செய்யும் அதிஷ்டம் சொந்த மச்சாளான பெத்தா வுக்குத்தான் அடித்தது.

❖❖❖

விவாசயிகள் நிறைந்த வன்னியிலே வீரர்களும் நிறைந்திருந்தனர். வயலில் அரிவு வெட்டி உப்பட்டியாகப் போடு வார்கள். ஓரிரு நாட்களில் காய்ந்த வுடன் நான்கு ஐந்து உப்பட்டிகளைச் சேர்த்து மாவக்கையாக்கி வயல் வரப்பு மூட்டில் கட்டக் கந்தாக வைப்பார்கள். சில நாட்களின் பின் கட்டக் கந்துகளைப் பிரித்து நான்கு ஐந்து மாவக்கைகளை ஒன்றாகக் கயிற்றால் கட்டித் தூக்கிச் சென்று பெரிய சூடாக வைப்பார்கள்.

ஒரே இடத்தில் வைத்தால் தான் சூடடிக்க வசதியாக இருக்கும். மழைக் காலங்களில் சூடடிக்க முடியாது.

காற்றுக் காலத்தில் சூடடித்தால் தான் தூற்றிப் பதரைப் பிரிக்க முடியும்.

எருமை மாடுகளால் சூடடித்த காலத்தில் இதுதான் நடைமுறை. கட்டக் கந்துகளைப் பிரித்து சூடுவைப்பது ஒரு பெரிய வேலை. இப்பொழுது யாரும் செய்வதில்லை.

மோதகத்தின் வடிவில் இருபது இருபத்தைந்தடி உயரம் வரை பெரிய சூடு இருக்கும்.

சூடு வைக்கும்போது கவனமாக முடி கூட்ட வேண்டும். முடி சரியாக அமையாது போனால் சூட்டுக்குள் தண்ணீர் போய் விடும்.

தண்ணீர் போனால் சூடு வெந்து போகும். நெல் மடிநெல்லாகி பழுதாகி விடும்.

விதை நெல்லுக்குப் பயன்படாது. சாப்பாட்டுக்கும் உதவாது.

முடி கூட்டுவதற்கு பொதுவாக திருமண மாகாத இளைஞர்களே ஏணியில் ஏறி நிற்பார்கள்.

ஏணியில் கடைசித் தடிவரை ஏறி நின்று கடைசிப் பிடிக் கதிரையும் மடக்கி மேலே போட்டுவிட்டால் முடி கூட்டி முடிந்து விடும்.

முடி சூட்டுவது ஒரு வகையான வீரமாக வன்னியிலே கருதப்பட்டது. முடி கூட்டுவதற்கு ஏணியிலே ஏறப்பயப்படும் இளைஞர்களை அந்த ஊர்ப் பெண்கள் திருமணஞ் செய்ய விரும்ப மாட்டார்கள். முடி கூட்டும் போது தப்பித் தவறி அந்த இளைஞன் விழுந்து விட்டால், அல்லது முடி சரிந்து விழுந்து விட்டால், அல்லது சூட்டுக்குள் தண்ணீர் போய் சூடு வெந்து போய்விட்டால் நெல் மடி நெல் ஆகிவிட்டால் அந்த இளைஞனுக்கு யாரும் பெண்கொடுக்க மாட்டார்கள்.

எந்தப் பெண்ணும் அவனைத் திருமணஞ் செய்ய விரும்பாள். ஊரவர்கள் யாவரும் சேர்ந்து ‘பரத்தை’ முறையில் வயல் வேலைகளைச் செய்த அந்தக் காலத்தில் யாருடைய வயலில் சூடு வைத்தாலும் காசியப்புதான் ஏணியிலே ஏறி முடி கூட்டுவார். அதனால் அவருக்கு அந்த ஊரில் தனிமதிப்பு இருந்தது. நல்ல கட்டுமஸ்தான உடல், அளவான மீசை, அழகான இளைஞன். வம்பு தும்புவிற்குப் போகாதவர். சுருட்டு, கடுதாசி விளையாட்டு, சாராயம் என்று எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாதவர். வெற்றிலை மட்டும் எப்போதாவது போடுவார்.

❖❖❖

வவுனியா நகரிற்கு மேற்கே ஏழு மைல் தொலைவில் உள்ள பம்பைமடு என்ற அவரது கிராமத்தில் இயற்கை வளங்கள், அதிகம் உண்டு. பால், இறைச்சி, குளத்து மீன், மரக்கறி வகைகள், பழவகைகள் என்று எதற்கும் குறைவில்லை. அரிசிக்குப் பஞ்சமில்லை.

பாலைப்பழம், வீரைப்பழம், உலுவிந் தம்பழம், நறுவிலிப்பழம், நாவற்பழம், விளாம்பழம், கூழாம்பழம், பனிச்சம் பழம், எனக் காலத்துக்குக் காலம் பழ வகைகள் மிகுதியாகக் கிடைக்கும்.

முரலிப் பழம் மட்டும் அங்கு இல்லை.

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் கரம்பைப் பழம், துடரிப்பழம், சூரைப் பழம் எனப் பழங்களோடுதான் வீடு திரும்பு வார்கள். குளத்துக்குப் போனால் கரையாக் கண்ணிப்பழம், பனிச்சம் பழம், விளாம் பழம் எனப் பலவகைப் பழங்கள் அங்கு கிடைக்கும். வட்டுக் காயும், பிரண்டைத் தண்டும், பொன்னாங்காணிக் கீரையும் குளத்தில் குளித்து விட்டு வரும் பெண்களின் மடிகளை நிறைத் திருக்கும்.

சேலையினால் பீலியிலே மீனை வாரிக்கொண்டு வருவார்கள் பெண்கள். இலுப்பைப் பூக்காலத்தில் இலுப்பைப் பூக்களைப் பிழிந்து காய்ச்சி பாணியாக்கி வைத்திருப்பார்கள்.

மாரிகாலத்தில் காலை உணவுக்கு பழஞ்சோறும் எருமைத் தயிரும் இந்தப் பாணி வகைகளும்தான் அதிகம் பயன் படும்.

குளத்து விரால் மீன் கருவாடும், பண்டிக் கருக்கலும், இறைச்சி வத்தலும் இல்லாத வீடுகளைக் காணமுடியாது.

கெக்கரிக்காய், நீத்துப் பூசணிக்காய், சாத்துப் பூசணிக்காய், தீன்பிலாக்காய் வீடுகளில் குறைவின்றிக் கிடக்கும்.

❖❖❖

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் காட்டிலே உலுவிந்தை பழுக்கத் தொடங்கி விடும்.

முந்திரிகைப் பழம்போல குனட்டுக் குனட்டாக (குலை குலையாக) வீரைப் பழத்தின் அளவில் உலுவிந்தம் பழங்கள் பழுத்துத் தொங்கும். மிக மிக அழகான காட்சி அது.

உலுவிந்தம் பழங்களையும் பிழிந்து காய்ச்சி பாணியாக எடுத்துப் பலநாட்கள் வைத்துப் பயன்படுத்தலாம்.

நல்ல சுவையாக இருக்கும்.

ஒரு ஐப்பசி மாதம். ஊர்ப் பெண்கள் சிலர், சிறுவர்கள். சில இளை ஞர்கள், பெரியவர்கள் என இருபத் தைந்து முப்பது பேர் வரையில் கடகப் பெட்டி களையும் கொண்டு உலுவிந்தம் பழம் பிடுங்கச் சென்றனர்.

பம்பைமடுக் குளக் கட்டில் நடந்து சென்று கலிங்கைக் கடந்து காப்பி லிகள் குழிவெட்டித் தங்கி யிருந்த டிப்போப் பாதை வழியே அலை கரைக் காட்டுக்குள் நுழைந்தனர்.

உலுவிந்தை மரம் பெரிய மரமல்ல. சிறு செடி தான். நீட்டுத் தடிகள் கொண்ட சிறு மரம்.

உலுவிந்தம் வரிச்சுக் களை (நீட்டுத் தடிகள்) வீடுகட்ட, குடில் அமைக்க பயன் படுத்துவர்.

நல்ல உறுதியான பெலப்பான உலுவிந்தம் வரிச்சுகளுக்கு ஊரில் நல்ல பயன்பாடு உண்டு.

பெரிய மரங்கள் உள்ள சோலைக் காட்டிலேதான் உலுவிந்த மரங்கள் வளரும்.

முள்ளு மரங்கள் செடிகள் கொண்ட கரம்பைக் காட்டில் அது வளராது.

அதனால் வெறுங்காலோடு காட்டுக் குச் செல்பவர்களுக்கு முள்ளுக் குத்த வாய்ப்பில்லை.

மெல்லிய உலுவிந்தந் தடிகளை வளைத்து குனட்டுக் குனட்டாக உலுவிந்தம் பழங்களைப் பிடுங்கி பெட்டிகளில் போடுவார்கள். நிலத்திலே கிடக்கும் இலை குழைச் சருகுகளுக்குள் திருநீல கண்டம் எனப்படும். ஒரு வகை விஷ அட்டை கிடந்து சிலருக்குக் கடித்தி ருக்கிறது. ஆனால் யாரும் சாகவில்லை. விஷகடி வைத்தியர் அந்த ஊரில் இருந்தார்.

விஷப் பாம்புகள் யாருக்கும் கடித்த தில்லை.

திசைப் பூண்டில் மிதித்து திசை தெரியாது காட்டில் சென்றவர்கள்



**காசியர் அந்தச் சிறுமியைக் காப்பாற்று வதற்காகக் குறுக்கே பாய்ந்தார். கரடி சிறுமியைப் பிடிப்பதற்குள் கரடியின் முன்னங்கால்கள் இரண்டையும் பிடிக்க முயன்றார். பிடி தவறி விட்டது. ஒரு காலை மட்டும்தான் பிடிக்க முடிந்தது. மற்றக் காலிலிருந்த நகத்தினால் காசியரின் கண்ணைத் தோண்டி எடுத்தது கரடி. வலது கண்ணிலிருந்து இரத்தம் வழிய கரடியின் அந்தக் காலையும் ஒருவாறு பிடித்துக் கொண்டு கரடியோடு கட்டிப் புரண்டார்.**

கூக்குரல் எழும்பி மற்றவர்களோடு சேர்ந்து கொண்டனர். மான் அதர் வழியே நின்று கொண்டு சிறுவர்கள் ஆளுக்காள் உலுவிந்தம் பழங்களை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

சில்வண்டின் ரீங்கார இன்னிசை.

நல்ல நிழற் குமுமை.

சந்தோஷமாகப் பழம் பிடுங்கிப் பெட்டிகளை நிறைத்துக் கொண்டிருந்தனர்.

உலுவிந்தம் பழங்களை விரும்பிச் சாப்பிடும் மிருகங்கள் இரண்டு. ஒன்று பன்றி. மற்றது கரடி.

உலுவிந்தம் பழக் காலத்திலும் பாலைப் பழக்காலத்திலும் பன்றி இறைச்சியில் நெய் அதிக மிருக்கும்.

அந்தக் கொழுப்பு நெய்யிலேயே பன்றி இறைச்சியைக் கருக்கலாம். கரடிக்கு உலுவிந்தம் பழம் என்றால் பெரு விருப்பு.

அன்று மத்தியானம் கடந்து விட்டது.

காட்டில் நேரம் போனதே தெரியவில்லை.

ஐயோ! ஐயோ! என்று சிறுபிள்ளையின் கதறல் சத்தம் போன்று சத்தம் கேட்கத் தொடங்கியது.

"இது கரடிச் சத்தந்தான். கவனம். இனிக்காணும் றோட்டுக்குப் போவம்" என்றாள் ஒருத்தி.

சத்தம் மிகமிக அண்மித்தது.

எல்லோரும் பெட்டிகளைத் தலையில் தூக்கிக் கொண்டு விரைவாக வெட்டைக்கு (வெளியான இடம்) வந்தனர்.

யாரும் எதிர்பாராத நேரத்தில் ஒரு கணப்பொழுதுக்குள் திடீரெனப் பாய்ந்தது கரடி.

பொன்னம்மா

"கடவுளே! அம்மாளாச்சி! புதுக் குளத்து வயிரவா!" என்று அலறியபடி கீழே விழுந்தாள்.

தலையிலிருந்த உலுவிந்தம் பழப் பெட்டி கவிழ்ந்து சிதறியது. கரடிக்கும் பொன்னம்மாவுக்கும் இடையில் பாய்ந்தார் காசியர். "பொன்னம்மா! பொன்னம்மா!" என்று கத்தியபடி காசியர் கரடியைப் பிடித்துக் கொண்டார்.

பொன்னம்மா புரண்டு எழுந்து ஓடி வெட்ட வெளிக்குச் சென்று விட்டார்.

"ஓடுங்கோ! ஓடுங்கோ!"

என்று கத்தியபடி காசியர் கரடியின் முன்னங்கால்கள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

"ஓடுங்கோ! ஓடுங்கோ! எல்லாரும் ஓடுங்கோ"

காசியர் கத்திச் சத்தமிட்டபடி திரும்பிப் பார்த்தார்.

கரடி ஊன்றியிருந்த இரண்டு கால்களையும் தூக்கிப் பாய்ந்து காசியரின் வயிற்றில் கட்டிப் பிடித்துக் கொண்டது.

காசியரின் உடம்பு முழுவதும் கரடியின் கால் நகங்கள் கிழிந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அவருக்கு எப்படி அவ்வளவு துணிச்சலும் பலமும் வந்ததோ தெரியாது. கரடியை இழுத்துத் தூக்கி எறிந்து விட்டார்.

கரடி கீழே விழுந்து கிடக்க, உடம்பு முழுவதும் இரத்தவாறாக காசியர் நிற்க, காட்டில் நின்ற யாவரும் "அய்யோ! அய்யோ!" என்று அலறியபடி தெருவுக்கு வந்தனர்.

விழுந்து கிடந்த கரடி திடீரெனப் பாய்ந்தது.

காசியரை நோக்கியல்ல.

ஒரு எட்டு ஒன்பது வயது மதிக்கத் தக்க சிறுமியைக் குறிவைத்துப் பாய்ந்தது.

காசியர் அந்தச் சிறுமியைக் காப்பாற்றுவதற்காகக் குறுக்கே பாய்ந்தார்.

கரடி சிறுமியைப் பிடிப்பதற்குள் கரடியின் முன்னங்கால்கள் இரண்டையும் பிடிக்க முயன்றார்.

பிடி தவறி விட்டது. ஒரு காலை மட்டும்தான் பிடிக்க முடிந்தது. மற்றக் காலிலிருந்த நகத்தினால் காசியரின் கண்ணைத் தோண்டி எடுத்தது கரடி.

வலது கண்ணிலிருந்து இரத்தம் வழிய கரடியின் அந்தக் காலையும் ஒருவாறு பிடித்துக் கொண்டு கரடியோடு கட்டிப் புரண்டார்.

"வைரவா! அம்மாளாச்சி!..." என்று யாவரும் சத்தமிட்டுக் கத்தத் தொடங்கி விட்டனர்.

கரடி காசியரின் உடம்பு முழுவதும் நகங்களால் கிழித்து விட்டது. வெறும் மேலோடு நின்ற காசியரைப் பார்க்கப் பயமாக இருந்தது. இரத்தம் உடல் முழுவதும் வழிந்தது.

கரடியின் பிடியிலிருந்து ஒருவாறு தப்பித்து எழுந்த காசியர் மீண்டும் கரடி தன்னை நோக்கிப் பாயும் போது கரடியின் முன்னங்கால்கள் இரண்டையும் கவனமாகப் பிடித்து ஒரு கணப் பொழுதுக்குள் ஒரே சுற்றாகச் சுற்றிச் சுழற்றித் தூக்கி எறிந்தார்.

தூரத்தில் விழுந்த கரடி திரும்பிப் பார்க்காமல் அலறியபடி ஓடத் தொடங்கி விட்டது.

பொன்னம்மா ஓடிவந்து தனது சேலையைக் கிழித்துக் காசியரின் கண்ணுக்குக் கட்டுப் போட்டார்.

களைத்துப் போய் நின்ற காசியருக்குத் தண்ணீர் கொடுத்து உடம்பில் வடிந்த இரத்தத்தைத் துடைத்தனர்.

வீடுவரை நடந்து வந்து சேர்ந்தனர்.

வண்டில் கட்டி வவுனியா நகரிலிருந்த வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர்.

காசியரின் வலது கண் பறிபோனது. வெறும் இமை மட்டும் கண்துவாரத்தை மூடியபடி சரிசெய்யப்பட்டது.

❖❖❖

காசியப்புவும் பெத்தாவும் திண்ணையில் இருந்தபோது அந்த வீட்டுக்கு வந்தான் ஒரு இராணுவன். இராணுவ வீரன் என்று சொல்ல எனக்கு விருப்பமில்லை.

சற்றுத் தூரத்தில் நின்றபடி

"அடோ! அடோ! ... ஐடென்றி ஐடென்றி..." என்று அதட்டி அடையாள அட்டையைக் கேட்டான்.

காசியப்பு அதிர்ந்து போனார்.

அவரைப் பார்த்து "அடோ!" என்று யாரும் இதுவரையில் அழைத்ததை அவரது காதுகள் கேட்கவில்லை.

தனது பேரப்பிள்ளையின் வயது கூட இல்லாத அந்த இராணுவன் தன்னைப் பார்த்து தனது வீட்டு முற்றத்தில் நின்று கொண்டு "அடோ!" என்று கூப்பிட்டது அவருக்கு மிகுந்த கோபத்தையும் அவமானத்தையும் கொடுத்தது.

அந்தத் தள்ளாத வயதிலும் எழுந்து சென்று அவனைப் பிடித்துத் தூக்கி வளவுக்கு வெளியே எறியவேண்டும் போல் இருந்தது அவருக்கு.

அவனிடம் துப்பாக்கி மட்டும் இல்லாம லிருந்தால் சிலவேளை காசியப்பு செய்தும் இருப்பார்.

அதற்குரிய துணிவும் பலமும் அவருக்கு அப்பொழுதும் இருந்தது. அவர் சாப்பிட்ட சீனட்டி அரிசிச் சோறும். பன்றிக் கருக்கலும், எருமைத் தயிரும் அவரது உடலை மிக ஆரோக்கிய மாகவே வைத்திருந்தன.

எந்த நோயும் இல்லாத வைரம் பாய்ந்த உடல் அவரது உடல். ஆனால்... அவரது வயதுக்குரிய அறிவு உணர்வை அடக்கியது. பெத்தா எழுந்து சென்று இருவரது அடையாள அட்டைகளையும் எடுத்து வந்தார்.

தனது அடையாள அட்டையை வைத்துக் கொண்டு காசியப்புவின் அடையாள அட்டையை அவரிடம் கொடுத் தார்.

காசியப்பு திண்ணையில் இருந்தபடி அடையாள அட்டையை நீட்டினார்.

அவருக்கும் வன்னித் திமிர். எழுந்து சென்று அடையாள அட்டையைக் காட்ட விருப்பமில்லை.

தூரத்தில் நின்ற இராணுவன்

“அடோ! எழும்பி வரேலாது...” என்று ஏசினான். காசியப்புவுக்கு உடம்பு கோபத்தால் நடுங்கத் தொடங்கிவிட்டது. அவன் அப்படிக் கூப்பிட்டதை வேறு யாராவது கேட்டுவிட்டால்... என்ற தன்மான உணர்வில் அங்கும் இங்கும் பார்த்தார். யாரும் இல்லை.

பெத்தாவின் முகத்தைப் பார்த்தார். தலை கவிழ்ந்தார்.

பெத்தாவிற்கு அவரின் முகத்தைப் பார்க்கக் கவலையாக இருந்தது. பெத்தா சென்று தன் அடையாள அட்டையைக் காட்டினார். அதைப் பார்த்தபடி அவன் ஏதோ சொன்னான். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

காசியப்புவும் அடையாள அட்டை யோடு சென்று அவனுக்குத் தன் அடையாள அட்டையை நீட்டினார்.

அவரது உடம்பு துடித்துக் கொண்டி ருந்தது.

தனது வீட்டு முற்றத்தில் தனது அடையாளத்தை ஒரு அந்நியனுக்கு நிரூபிப்பதைப் போன்ற அவமானத்துக்கு நிகர் வேறெதுவுமில்லை என்று அவர் நினைத்துக் கொண்டார்.

வைரவர் கோவில் பூசாரி என்றாலே யாவருக்கும் ஒரு மரியாதையும் பயமும் இயல்பாகவே ஏற்படும்.

அம்மாள் கோயிலில் பூசை செய்யும் போது அவரிலே அம்மாள் வந்துவிட உரு ஏறி ஆடுவார்.

வாக்குச் சொல்வார். திருநீறு போடுவார். தண்ணீர் ஓதி அடிப்பார். பிரதேச சபையின் தலைவராக இருந்து பெருமதிப்புப் பெற்றவர். அரசாங்க அதிகாரிகள் அந்த ஊருக்கு வந்து கூட்டம் வைத்தால் அவர் சொல்வதை மிகவும் கவனமாகக் கேட்பார்கள். கையிலிருந்த அடையாள அட்டையை நீட்டியபோது அது தவறி அவனது, காலடியில் விழுந்து விட்டது.

“அடோ! என்ன கீழ் போடுறது எடுடா.”

அரைகுறைக் கொச்சைத் தமிழில் சொன்னான் அவன்.

வேறு வழியின்றி குனிந்து அவனது காலடியில் விழுந்து கிடந்த அடையாள அட்டையை எடுத்து அவனிடம் கொடுத்தார். அவன் அதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்.

“வேலுப்பிள்ளை” என்றான்.

“காசிப்பிள்ளை” என்றார் அவர்.

❍

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2011இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை

35

# வேளை வந்த வேளை...

2



கண.மகேஸ்வரன்

இரவிரவாக இருமித்தொலைக்கிறது. மூச்சு முட்டுகிறது. சளித் தொல்லையால் நாவசைக்கக்கூட முடியவில்லை. காதை வேறு அடைக்கிறது.

அதிகாலை விடிவதற்குள் இந்த அசதி இப்போதெல்லாம் வருத்துகிறது.

இன்னும் ஒரு வாரம் தாக்குப் பிடித்தால் தொண்ணூறு முடிந்துவிடும். இவ்வளவு காலம் உயிர் வாழ்ந்ததே அதிசயமாயிருக்கிறது.

ஏறத்தாழ இருபது வருடங்கள் இந்த வயோதிபர் இல்லமே கதியென்று வந்தாயிற்று.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் தொடங்கிய யுத்த அரக்கனின் கோரப்பிடி இறுகிய போது, இனியும் பிள்ளைகளை இங்கு வைத்திருக்க முடியாதென்று உறுதியான தீர்மானமெடுத்து, அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப முடிந்ததில் ஒரு திருப்திதான்.

மகள், மகன்மாரிருவரும் அங்கு, அந்நாட்டுப் பிரஜைகளாகி குடும்பம் குட்டிகளென வாழப் பழகி விட்டார்கள்.

அவர்களது திருமணங்களைப் பார்க்கக் கூட எங்கள் இருவருக்கும் கொடுத்து வைக்கவில்லை. இந்த நீண்ட இடைவெளியில் பேரப் பிள்ளைகளைப் பார்க்கவும் முடியவில்லை.

கொள்ளி வைக்கக் கூடப்பிள்ளைகள் இல்லாத வருத்தம் பாடாய்ப் படுத்தியது. எனக்கு மூத்தவனும், தாய்க்கு இளைவனுமென்று இரு ஆண்பிள்ளைகள் இருப்பதான கனவில் மிதந்த எங்களுக்கு, இந்த யுத்தம் பேரிடியாய் வந்ததில் மனக்காயமே அதிகமாயிற்று.

கொள்ளி வைக்க ஆளில்லையாம். அம்மாவின் மரணச் சடங்குகளை வீடியோ



**யுத்தம் நிறுத்தம் என்று இங்கோர் இடைவெளி வந்த போதும், பெற்ற கடனுக்காவது பிள்ளைகள் வந்து தனியாகத் துயருற்றிருக்கும் இந்தக் கிழவனைப் பார்க்கவில்லையே என்ற மனக்குறை வாட்டுவது என்னவோ உண்மை தான். பேதலிப்புத்தான். கிழவன் வயோதிப மடத்தில் ஒரு குறையுமில்லாமல் இருக்கும்தானே என்று என்னை அஃறிணையாகப் பார்க்கிறார்களோ என்னவோ?**

(ஞானம் 140, ஜனவரி 2012)

**பெற்ற தாயையே அனுப்பி, கர்ணனுடன் ஒட்டியிருந்த கவசக் குண்டலங்களையே பறித்தெடுத்த கபடக் கண்ணனுக்கு, தன்மேல் விழுந்த அர்ஜுனனின் பாணங்களைக் கழற்றி இரத்ததானம் செய்த மாவீரன் கர்ணனின் கடைசிக் கொடை நினைவுதான் வந்து தொலைத்தது.**

பண்ணி அனுப்பச்சொல்லி காசு அனுப்பு கிறார்களாம். கண்டறியாத பிச்சைக்காசு. நானென்ன அவ்வளவு இளிச்சவாயனா?

இந்த வீடியோ நாடாவை அங்கே நண்பர்களுக்குப் போட்டுக்காட்டி, கூடி உண்ணப் போகிறார்களாம். துக்கம் கொண்டாடப் போகிறார்களாம். என்ன உலகமடா இது?

இவர்கள் ஊரில் இருக்கும்போது மகள் பருவமடைந்ததும், மற்றப் பிள்ளை களைப்போல் இவளுக்கும் ஆசையிருக்கு மென்று சொல்லி, அதனை ஊருக்கு அறிவிப்பதுபோல் சடங்கு வைக்க வேண்டும். நாலு பேருக்குச் சொல்லிச் சாப்பாடு கொடுக்க வேண்டும். புகைப் படங்கள் எடுக்க வேண்டுமென்று சொன்ன போது கூட மசியாதவன் நான். அப்போது மனைவி பிள்ளைகளால் எனக்குக் கிடைத்த பட்டம், 'சரியான கஞ்சப் பிரபு'.

ஏதோ நான் செய்யக் கூடாததைச் செய்தவன் போல் என்னை ஏளனம் செய்த இவர்களுக்கு இப்போ வீடியோ நாடாதான் ஒரு கேடு.

இருபது வருடங்களின் முன் மனைவியும் என்னை விட்டுப் பிரிந்த போது தான் கவலை பூதாகாரமாக என்னைப் பற்றிக் கொண்டது. இனித் தனியாக வாழ முடியாதென்ற முடிவுக்கு வரவேண்டி யதாயிற்று.

இருந்த வீடும் 'ஷெல்' விழுந்து நாசமாய்ப் போனதில் கவலை இரட்டிப் பாயிற்று.

இந்த வயதுபோன நேரத்தில் ஆறு தலுக்கு யாருமில்லை என்ற நிலைப் பாட்டுடன் இந்த இல்லத்திற்கு வந்து சேர்ந்தேன்.

சுமைகளை இறக்கி வைக்க என் போன்ற சில முதியோர் காத்திருந் தார்கள். அன்பான பராமரிப்பு. வந்த புதிதில் ஓடியாடி வேலைசெய்து மற்றவர் களுக்கும் உதவ முடிந்ததில் பாதிக்க வலை தீர்ந்துதான் போயிற்று.

அரச ஓய்வூதியம் கிடைப்பதால், அதை அப்படியே இங்கு கொடுத்து விட்டு கொஞ்சம் தெம்பாக இருக்க முடிந்ததில் மீதிக் கவலையும் போயொழிந்தது என்றுதான் கூறவேண்டும்.

பிள்ளைகள் புகலிட வாழ்க்கைக்குத் தம்மைத் தயார்ப்படுத்தியிருப்பதால் அவர் களும் இங்கு வரப்போவதில்லை.

எமது சொத்துக்களை மட்டும், அவர்க ளால் தத்துவக்காரர்களாக நியமிக் கப்பட்டவர்களின் அற்றோணி தத்து வத்தைப் பதிவுசெய்து கையளித்த திருப்தி வேறு. இனி இங்கு வந்து அவர்கள் ஆண்டனுபவிப்பார்களோ, இல்லை ஏது செய்வார்களோ செய்து விட்டு மனநிறைவுடன் வாழட்டும் என்ற மனோ நிலையில் எனது காலமும் கடந்து போகிறது.

இருந்தபோதும் ஒரேயொரு கவலை நெஞ்சை அரிக்கத்தான் செய்கிறது.

யுத்தம் நிறுத்தம் என்று இங்கோர் இடைவெளி வந்த போதும், பெற்ற கடனுக்காவது பிள்ளைகள் வந்து தனி யாகத் துயருற்றிருக்கும் இந்தக் கிழவ னைப் பார்க்கவில்லையே என்ற மனக் குறை வாட்டுவது என்னவோ உண்மை தான். பேதலிப்புத்தான்.

கிழவன் வயோதிப மடத்தில் ஒரு குறையுமில்லாமல் இருக்கும்தானே என்று என்னை அஃறிணையாகப் பார்க்கிறார் களோ என்னவோ?

வேறு சில பிள்ளைகள் அந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வந்து பெற்றோரை - உறவுகளைப் பார்த்து ஆறுதல் கூறி அவர்களது சிறு தேவை களையாவது நிறைவேற்றட்டுமென்று தம்மாலான சிறு பண உதவிகளையும் செய்து, அந்நிய மொழி பேசும் தம் குழந்தைகளை அறிமுகப் படுத்தி, யுத்தத்தால் சிதைந்து போன அழிவு களைக் காட்டி, இதுதான் நமது தாயக பூமியென்று காட்டியதோடு நின்று விடாமல் நாடு பூராகவும் ஒரு சுற்றுலா போய்வந்து குழந்தைகளோடு, இங்கு வாழப்பிடிக்காமலேயே திரும்பி விட்டார்கள்.

அதிக வெப்பம், வரட்சி, மீள எப் போதும் போர் வெடிக்கலாம் என்ற அச்சம், நுளம்புத் தொலை, கிராமப் புற வாழ்க்கை என்ற சலிப்பும், கஸ்டப் பட்டாலும் அங்கு நிம்மதியான வாழ்க்கை வசதிகள், பொருளாதார நன்மைகள் என்ற அன்ன பிற காரணிகள் அவர்களை ஆட்கொண்டதில் வியப்பில்லைத்தான்.

❖❖❖

இந்த நீண்ட இடைவெளிக்குள் எனது மகள் முறையான ஒரு தூரத்து உறவினள் மட்டும், கணவன் குழந்தை களுடன் வந்து பார்த்து, வரும் போதெல்லாம் ஏதும் தின்பண்டங்கள் கொண்டு வந்து தந்து, கொஞ்ச நேரம் இருந்து கதைத்து ஆறுதல் சொல்லிப் போவாள். அது எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. இப்படியொரு உறவாவது எனக்கு இருக்குமென்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

இந்தப் பிள்ளையின் இடையறா வரவுக்குப் பின் விட்டுப்போன கவலை கள் சில மீண்டும் வந்து ஒட்டிக் கொண்டது.

பெற்ற பிள்ளைகளுக்கு எல்லா வற்றையும் எழுதிக் கொடுத்துவிட்டதில், இந்தக் குடும்பத்திற்கென எதையுமே செய்ய முடியவில்லையே என்ற புதிதான ஒரு மன உளைச்சலுக்கு ஆளாவதைத் தவிர எனக்கு வேறு மார்க்கம் தெரிய வில்லை.

எதையும் நின்று நிதானித்து ஆறுதலாக முடிவெடுக்கத் தெரியாத என் அவசர புத்திக்காக பல வேளைகளில் என்னையே நொந்துகொண்ட சந்தர்ப்பங்களால் தூக்கமின்றித் தவித்த அந்த இரவுகளை எப்படி மறக்க முடியும்? அது இப்போதும் வந்து தொலைத்தது.

எல்லாமே பழங்கதையாய் - ஆறிய கஞ்சியாய்ப் போனதுதான் மிச்சம்.

இப்போது சளித்தொல்லையால் அவதிப்படும் இந்த வேளையில் கூட இந்த நினைவுகள் என்நெஞ்சை ரம்பமாக அறுத்தெறிவதைத் தவிர்க்க முடியாமல் தத்தளிக்கிறேன்.

ஊரில் இருக்கிற தூரத்து உறவான இந்தப் பிள்ளைக்கும் கணவனுக்கும், வெளிநாட்டிலிருக்கும் என் புத்திர சிகா மணிகளுக்கு எமது சொத்து பூரா வையும் எழுதிக்கொடுத்தது தெரிந்தி ருந்தும் என்னமாய் என்னைப் பார்த்துப் போகும் இவர்களது அன்பான உபசரிப் புக்கு ஈடிணை தானேது?

என் பிள்ளைகளிடம் காணாத ஒன்றை இவர்களிடம் காணும்போது, எனக்கு என் மேலேயே வெறுப்பு வருகிறது.

இத்தனை வயதுவரை ஏன் வாழ்ந்தே னென்று என் ஆன்மாவை, என் உள்ளத்து உணர்வுகளே ரணமாக்கின்றன.

எப்போது எனக்கு இயற்கை மரணம் வருமென்ற எதிர்பார்ப்பில் நான் உறைந்து கிடக்கிறபோதுதான், இந்தச் சளித் தொல்லை என்னை வதைக்கத் தொடங்கி விடுகிறது.

வயோதிபத்தில் சளியே மரணத் திற்குக் காலாகி விடுகின்றதென்பதனை இத்தனை வயது வாழ்ந்த பின்னரும் உணராதவனா நான்?

இந்த நிமிடமே அது நேர்ந்துவிடக் கூடாதா என்று மனது அங்கலாய்க்கிறது.

நிச்சயமாக எனது வேளை நெருங்கி விட்டதென்று எனது அறிவுப் புலனுக்குத் தெரிகிறது.

இன்று காலை நான் அவதிப்படுவதை யாரோ மடத்தலைவிக்குச் சொல்லியிருக்க வேண்டும்.

வழமையாக மேற்பார்வை செய்ய வருகிற நேரத்திற்கு முன்னமே வந்து, 'பெரியவர், ஆஸ்பத்திரிக்கு வெளிக்கிடுங்கொ. வான் வந்ததும் போகலாம்' என்றார். அதற்கு என்னால் மறுப்புச் சொல்ல முடியவில்லை.

❖❖❖

ஆஸ்பத்திரியில் இரண்டு நாட்கள் அவதிப்பட்டபோது, மடத்துக்கு வந்து பார்த்துப் போகிற அதே மகளும் மருமகனும்தான் உறவு என்று சொல்லி வந்து கொண்டிருந்தார்கள்.

'இந்த நேரம் உங்களால் வேறெதுவும் சாப்பிடமுடியாது. மரக்கறி சூப் கொண்டு வந்திருக்கிறம். இதுதான் இப்போதைக்கு நல்லது. மத்தியானம் வீட்டிலயிருந்து சாப்பாடு எடுத்துவாறம்' என்றபோது என் கண்கள் பனித்தன.

கையாலாகாத என்னால் இவர்களுக்கு எந்தக் கைம்மாறும் செய்ய முடியவில்லையே என்று மனது புகைந்தது.

கடவுளே, இன்னுமேன் என்னைச் சோதிக்கிறாய்? இன்னுமேன் இந்தப் பிள்ளைகளைக் கடமைப்படுத்துவான் என்று ஆதங்கமாயிருந்தது.

பெற்ற தாயையே அனுப்பி, கர்ணனுடன் ஒட்டியிருந்த கவசக் குண்டலங்களையே பறித்தெடுத்த கபடக் கண்ணனுக்கு, தன்மேல் விழுந்த அர்ஜுனனின் பாணங்களைக் கழற்றி இரத்ததானம் செய்ய மாவீரன் கர்ணனின் கடைசிக் கொடை நினைவுதான் வந்து தொலைத்தது.

இவர்கள் இனி நிம்மதியாக வாழ வேண்டுமானால், இவர்களுக்காக என் உயிரைத் துறந்தாக வேண்டும். ஏனோ அப்படியொரு நினைவு.

இவனைக் கொண்டே கொள்ளி வைத்து என் தேகம் வெந்துபோக வேண்டுமானால் இவனுக்கு ஏதாவது கொடுத்தாக வேண்டுமே... அதற்கும் வாய்ப்பில்லாமல் செய்து விட்டேன்... என்னை இறுதிவரை பார்க்கிறவர் யாரோ, அவர்கள் பேரில் மரண சாசனமாவது எழுதி வைத்திருக்கலாம். அதுவும் கை நழுவிப்போயிற்று.

குழந்தை குட்டிகளுடன் வாழும் இந்த இளம் குடும்பஸ்தன் என்ன உறவு சொல்லி எனக்குக் கொள்ளி வைக்க வேண்டும்? இது மட்டும் கடனாகாதா? பெற்ற பிள்ளைகளே கூட இல்லாதபோது இதெல்லாம் தேவைதானா?

எல்லாமே காலங் கடந்த சிந்தனைகள். இனி என்ன செய்யலாம்?

நான் ஒரு சைவக்காரனாக இருப்பதால் தானே, என் தேகம் எரிந்து சாம்பராக வேண்டுமென்று நினைக்கிறேன்.

இந்தக் கத்தோலிக்க வயோதிபர் மடத்திலேயே என் காலம் இதுவரை கழிந்தபோது வராத ஞானம் இப்போது வந்து சேர்ந்தது.

கொள்ளியாவது மண்ணாங் கட்டியாவது? மண்ணிலே வந்த இந்த உடல் மண்ணோடு மண்ணாகக் கலக்கட்டுமே!

எத்தனை ஆயிரமாயிரம் மக்கள் பங்கருக்குள்ளேயே புதையுண்டு போன குருதி தோய்ந்த இந்த மண்ணில் எனது மரணம்தான் ஒரு கேடா? இதுவரை யுத்த அரக்கன் என்னை விழுங்கவில்லை என்பதால்தானே மண்ணிலே புதையுண்டு மறைவதைப் பற்றிய சிந்தனையே என்னுள் முகிழ்க்கவில்லை.

'மாமா... மாமா! என்ன கனக்க யோசிக்கிறியள்?'

மருமகன் உரத்துக் கூப்பிட்ட போது தான் சுயத்திற்கு வரமுடிந்தது. என்னால் எதுவும் பேச முடியவில்லை. நா அசைய மறுத்தது. வார்த்தைகள் வர மறுத்தன. 'ஒன்றுமில்லை' என்று சைகை காட்டவே முடிந்தது. நாவோடு வாய்க்குள் அமுங்கிய

சளி பிதுங்கி உதட்டுக்கு வெளியே பிசுபிசுத்தது.

மருமகன் கண்களில் கலக்கம் தெரிந்தது. மகள், கண்ணில் துளிர்த்த கண்ணீரை மறைவாகத் துடைப்பதும் என் கண்களுக்குத் தப்பவில்லை.

பண்டேஜ் துணியொன்றை எடுத்து மடித்து என் வாயைத் திறந்து மருமகன் சளியைத் துடைத்தெடுத்தபோது என்னால் தாங்க முடியவில்லை.

இதனைப் பார்த்துக் கொண்டே வந்த மடத்தலைவி என் கைநாடியைப் பிடித்துப் பார்த்தாள். அணையப்போகும் சுடர் பிரகாசமாக ஒரு தடவை ஜொலிப்பதுபோல் எனக்கு இன்னும் பார்வை நன்றாகவே இருப்பதாக நான் உணர்ந்தேன். இப்போது காதும் தெளிவாகக் கேட்கிறது.

மடத்தலைவி மருமகனை அழைத்து மெதுவாகச் சொல்வது என் காதில் துல்லியமாகவே விழுகிறது.

'நாடி அடங்கிக்கொண்டு போகுது. யாருக்காவது அறிவிக்கிறதென்டால் அறிவியுங்கோ!'

அறிவிக்க யாரிருக்கிறார்கள், இவர் களைத் தவிர? என் மனம் தவியாய்த் தவிக்கிறது.

"ஸிஸ்டர்! பிள்ளையளின்ர விலாசம் தருவீர்களா? அறிவிக்க வேண்டியது எங்கள் கடமை. அவர்கள் வருவார் களென்று நம்பிக்கையில்லை. அப்பிடியே அவை வருவினம் என்டாலும், அதுவரை நீங்கள் மடத்திலை வைத்திருக்க முடியா தென்றும் எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் அநாதைப் பிணமாக அவரை ஆஸ்பத்திரிச் செலவிலை அடக்கம் செய்யவும் மனசு கேட்குதில்லை. நாங்கள் செலவு விடுகிறம். தயவுசெய்து மடத்திற்குக் கொண்டுபோய், இவர் பாசமாய்ப் பழகிய அந்த முதியோர்கள் அஞ்சலி செலுத்திய பின் ஒரு மலர் வளையமாவது வைத்து, உங்கள் பிரார்த்தனைகளுடன் ஆசித்து அடக்கம் செய்ய ஆயத்தப்படுத்தலாம். டொக்டர் அப்பவே என்னைக் கூப்பிட்டுச் சொன்னவர், 'இனி நீங்கள் மடத்திற்கே கொண்டு போகலாம்' என்று".

மருமகன் கதைக்குமட்டும் பொறுமை யாகச் செவிமடுத்த மடத்தலைவி, புன்முறு வலோடு சொன்னார். 'டொக்டர் எனக்கும் சொன்னவர் தம்பி. சரி, நாங்கள் அங்கையே கொண்டுபோவம். மற்றது, தனது பிள்ளையளின்ர விலாசம் ஒன்டும் என்னட்டைத் தரயில்லை. அவர் பென்சன் எடுத்து வந்து அப்பிடியே மடத்துக்கே தாறவர். நீங்கள் குழந்தை குட்டிக்காரர். உங்களுக்கு அந்தச் சிரமம் வேண்டாம். நாங்களே அதைக் கவனிக்கிறம்?

ஸிஸ்டர் பரிவோடு சொன்னபோது நாம் மெய்சிலிர்த்துப் போனோம். மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது. இனித் தாம திக்க நேரமில்லை. அவரை உயிர் பிரியு முன் மடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். நான் ஸிஸ்டரைத் துரிதப் படுத்தினேன்.

இப்போது சர்வ அங்க அசைவுகளும் நின்று என் உயிர் அடங்கிப் போவதான உணர்வு என்னுள் எழுகிறது.

மருமகன் சொன்னமாதிரி மடத்திற்குப் போய்ச் சேருமட்டுமாவது என் உயிர் பிழைக்கவேண்டும். மனதாரக் கடவுளை வேண்டிக் கொண்டேன். அங்கே உள்ளவர் களையெல்லாம் ஒரு கணம் பார்த்து மகிழ்ச்சியுடன் போய்ச் சேரவேண்டும். மனசு அங்கலாய்க்கிறது.

இந்த உறவுகளையும் விட்டால் இனி எனக்கு யார் இருக்கிறார்கள்? இவர்கள் முன்னிலையிலேயே என் ஆவி பிரிய வேண்டும். அதற்குள் எதுவோ தொண் டைக்குள் அடைக்கிறது. மனதை அலட்டிக் கொண்டதால் வந்த வினை போலும். நீண்ட ஒரு பெருமூச்சை இழுத்துவிட்டு என்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டேன்.

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2011இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை

36

# பௌர்ணமி இரவுகள்

3

**நல்லையா சந்திரசேகரன்**

"லயத்துக் கோடிகள் தன் வரலாற்றில் பெரிய திருப்பு முனையை பலரும் திகைத்துப் பார்க்கும் அளவுக்கு யாருக்கும் தெரியாமலே செய்து வந்திருப்பது பரகசிய மாகவும், இன்றும் கூட இரகசிய மாகவும் உள்ளவைகள் நிறையவே உண்டு. கல்வி, செல்வம் ஏன் வீரத்திலும் உச்சத்தைத் தொட்ட, எட்டிய எத்தனையோ பேர் உண்டு."

இந்த வசனத்தை ஆறுமுகம் தன் பள்ளிக்கூட வாழ்க்கையில் ஓர் ஆசிரிய ரால் அடிக்கடி அடிக்கடி வகுப்பில் சொல்லி யதைக் கேட்டு, அதை அசைபோட்டு தன் இலட்சிய இலக்கை இரட்டிப்பாக்கி கொண்டவன் ஆறு.

பெயருக்கேற்பவே ஆறு சலசல வெனவே ஓடிக்கொண்டு இருப்பான். ஆற்றைக் காண்பது போல ஆறுவைக் காண்பவர்கள் ஒருவித மன மகிழ்ச்சியைப் பெறுவார்கள். ஆறு போலவே அடுத்தவர் களுக்கு ஏதோ ஒன்றை செய்து கொண்டி ருப்பான். ஆனால் அவன் கொள்கை, நடுநிலைமை மட்டும் ஆற்றைப்போல தடைபடும் இடங்களில் திசை மாறாது. காட்டாற்று வெள்ளம்போல தடைகளை மீறி பாயும். ஆனால் ஊருக்கு மட்டும் சேதம் இருக்காது. சில நேரங்களில் கொடூர காலநிலை ஆற்றையும், ஊரையும் கூட அலங்கோலப்படுத்தி பெரும் அழிவையே கொண்டு வந்து விடுமல்லவா?

(ஞானம் 141, பெப்ரவரி 2012)



மாத்தளையைச் சேர்ந்த இறத்தோட்டையில் 03-05-1970ல் பிறந்த நல்லையா சந்திரசேகரன் வேவல்மட தமிழ் வித்தியாலயத்தில் பதிலதிபராகக் கடமையாற்றுகிறார். இறத்தோட்டை இந்து மகா வித்தியாலயத்தில் சாதாரணதரம் வரை பயின்றுவிட்டு மாத்தளை ஸாஹிராக் கல்லூரியில் உயர்தரத்தில் பயின்ற இவர் தனது ஆசிரியர் பயிற்சியை கொட்டகலை யதன்சைட் ஆசிரியர் கலாசாலையில் பெற்றவர். சிறுகதை, கவிதை, கட்டுரை, பாடலாக்கம் ஆகிய துறைகளில் எழுதிவரும் இவர் சூரியகாந்தி இறத்தோட்டை நிருபராகவும் கடமை புரிகிறார். இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைப் போட்டிகளிலும் மூன்று பாடலாக்கப் போட்டிகளிலும் இரண்டுகவிதைப் போட்டிகளிலும் பரிசில்கள் பெற்றுள்ளார்.

இவருடைய ஆக்கங்கள் 'பிரகாசம்' இதழ் 'குறிஞ்சிப் பேரிகை' நூல், ஆகியவற்றிலும் சுவைத்திரள் பூங்காவனம், குன்றின்குரல் 'நீங்களும் எழுதலாம்' மத்திய மாகாண சாகித்திய விழா மலர், வீரகேசரி, தினக்குரல் ஆகியவற்றிலும் வெளியாகியுள்ளன.

அப்படியே ஆறுவின் அதீத ஆற்றல்கள், கற்பனைகள் அவன் வாழும் தோட்டத்தை, தோட்டச் சூழலை கரைகடந்து செல்லும்போது அவனை அவலட்சணமாகப் பார்ப்பார்கள். ஆனால் ஆறு பெருக்கெடுத்து தன் உருவத்தை மாற்றிக் கொள்வது போல் ஆறு தன் உருவத்தில் எந்த மாற்றத்தையும் செய்ய மாட்டான்.

ஆறுவின் துடிப்பிற்கும், துணிவிற்கும் கணந்தோறும் உந்தப்பட்டுக் கொண்டிருக்கிற உணர்விற்கும் ஒரு இலட்சியம் உண்டு. அத்தோடு அவனுக்கு வழிகாட்டியாய், பக்க பலமாய் ஒரு நல்ல கூட்டம் உண்டு. ஆறுவின் துடிப்பிற்கும், துணிவிற்கும் அவனுக்குள் கணந்தோறும் உந்தப்பட்டுக் கொண்டிருக்கிற உணர்வுகளுக்கும், தன் மக்களைப் பற்றிய நிதர்சனமான நிந்திக்கப்படுகின்ற கொடுமைகளுக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது. இதிலிருந்து தம் மக்கள் ஒரு நிம்மதியான விடியலுக்கு எப்போது முகம் காட்டப் போகிறார்கள் என்பதே ஆறுவின் விம்மலும் வெடிப்பும்.

எப்போதும் அவனிடம் நிதானமான நிதர்சனப்பார்வை இருக்கும். அதனால்... அவனின் உண்மையான உணர்வு பூர்வமான வேட்கை மற்றவர்களுக்கு காட்டாற்று வெள்ளத்தைப் போல் கண்களுக்குத் தெரியும். இது அவனுக்கும் நன்றாகவே புரியும்.

தோட்டச் சூழல் ஒன்றில்... அடக்கு முறைகளுக்கு அடிபணிந்து போய் இருக்கும் நிலையில், மனித வாழ்க்கைக்கான சுவாத்தியங்கள் எல்லாம் சுரண்டப்படும் நிலையில் என்றுமே எப்படியும் மீளமுடியாதவாறு எட்டடிக்குள் கொத்தடிமைகளாய் குறுகிப்போய் இருக்கும் போது எப்படி குமுறி எழ முடியும்? கும்பிடு போட்டே பழகியவர்களுக்கு... ஆனால் மீறிய சிலரில் இருந்த மிடுக்கும், துடுக்கும் அவர்களை



மேன்மைபடுத்தியது. எல்லோரையும் மீட்சிக்க முடியாமலும் போய்விட்டது.

ஆறுவும், மீளத்துடிக்கும்... மீட்சிக்கவும் துடிக்கும் ஒரு மின்னல் கீற்று.

தோட்டச் சூழலில், தோட்டச் சூழலுக்கு அப்பாற்பட்டு எதனையும் சிந்திக்கும் மனோபவம் மருந்துக்கும் இல்லாததை எண்ணி மனம் நொந்து போய் விடுவான் ஆறு. தோட்டக் கட்டு மானம் எப்படி ஆங்கிலேய அடக்கு முறையாய் மீள முடியாதவாறு அமைக்கப் பட்டு உள்ளதோ... அதே போன்றே அங்கு வாழும் மனிதர்களின் மனோ பாவமும் மாறிவிடாதவாறு மறியல் செய்யப் பட்டுள்ளதை உணர்ந்து உள்ளுக்குள் குமுறிக் கொதிக்கும் ஆறுவின் மனம். அப்போ தெல்லாம்... அவன் வீர பாண்டியன் கட்டபொம்மனை தனக்குள் உருவகித்துக் கொள்வான். வீர பாண்டியனாய் வீரவசனம் பேசி முளைத்து வரும் அரும்பு மீசையை முறுக்கிக் கொள்வான். வாளை ஒரு தடவை எடுத்து

**பசி வந்தால் பத்தும் பறந்துப்போம் என்பது போல பதவி வந்ததால் அவளுக்கு எல்லாமே போய்விட்டது. ஆறுவின் குடும்பத்தை மட்டுமல்ல அவளது குடும்பத்தையும் மறந்தே போய்விட்டாள். அவள் மட்டுமல்ல... ஆறுவும் தான். அத்திவாரத்தையே மறந்தவர்கள் ஆனார்கள்.**

விசிறிவிட்டு செருகிக் கொள்வான் கற்பனையிலும், நிஜத்திலும்.

நிலைக் கண்ணாடி முன் நின்று தன் முகபாவத்தை ஒரு தடவை மீட்டுக் கொள்வான். அங்கே அழுக்குத் தோய்ந்து போயிருக்கும் வெளீர் என்ற கண்ணாடி. அதனுள் அழுக்காய் தெரிவான் ஆறு ஆவேசத்தோடு. ஆனாலும்... அவன் கண்ணுக்கு தெரிவதெல்லாம் அழுக்குப் படிந்த தனக்கெதிரான எதிராளி. அவனோடு முறைத்துப் பார்த்து பேசிக் கொள்வான். முட்டி மோதிக் கொள்வான்.

சற்று நேரத்தின் பின்...

ஆறுதலடைந்து அமைதிகொள்வான்.

பின் ஆவேசப்பட்டு... கோபாவேசப்பட்டு...

மக்களின் துயர்களை கண்ணாடிக்குள் இருக்கும் அழுக்குப் படிந்த உருவத்துக்கு எடுத்துரைப்பான். நியாயம் கேட்பான்.

எப்படி நியாயம் கிடைக்கும்?

தான் மட்டுமே பேசி களைப்பு வரும் போது...

கண்ணாடிக்குள் இருப்பது தான் தான் என்பதை மறந்து எதிரியாய் எண்ணி கணைதொடுப்பான். வாளை உருகி (வெட்டும்போது) சிரிப்போடு நிறுத்திக் கொள்வான்.

பின்...

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி விடுவான்.

இந்தப் பழக்கமே அவனை பாடசாலையிலும்... தோட்டத்திலும்... நகரத்திலும் உண்மை வீரபாண்டியனாகவே வலம்வர வைத்தது. வீரபாண்டியன் ஆறு என்றால் தெரியாதவர்கள் இருக்க முடியாதளவு பிரபல்யம் ஆனான். பாடசாலைக் காலங்களில் நடிப்பு மேதையாய் மேடையில் வலம் வந்தான். வீரனைப் போன்ற அவனது உடல்வாகும் மீசையும் அவனை உண்மை வீரபாண்டியனையே முன் கொண்டு வந்து நிறுத்தியது.

அது மாத்திரமன்றி ஆறுவின் அறிவு வளர்ச்சி வேகமும், அதீதமும் அவனை மேலும் அழகனாக்கியது. இதற்கு அவனது ஆசானின் அறிவுரையும், அத்தி வாரமும் எப்போதும் அணி சேர்ப்பதாய் அமைந்திருந்தது. அத்தோடு அவனுக்கு பெரும் படை சேர்த்ததாய் இருந்து வந்தது.

ஆறுவின் தோட்டம் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இரண்டில் தேயிலைத் தொழிற்சாலைகள். ஒன்றில் ஐந்தாம் வகுப்பு வரை தோட்டப் பாடசாலை. ஒரே ஒரு ஆசிரியர் எல்லாவற்றுக்கும். சிறிய கட்டடம். எண்பது பிள்ளைகள் வரை. எப்படித்தான் படிப்பார்களோ தெரியவில்லை...?

ஆறு, ஆறாம் வகுப்பு படிப்பதற்காய் நகரம் போனபோதே பாடசாலை எப்படி இருக்கும் என்பதை தெரிந்து கொண்டான். வாழ்க்கையில் படிப்பது எப்படி என்பதை புரிந்து கொண்டான். எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்க்கையில் புதிய பயணத்தை புடம்போட புதுவழி ஒன்றை தேடிக் கொண்டான். அன்று தான் புது மனிதனாய் புறப்பட ஒரு புத்துணர்வு பெற்றான்.

தோட்டப் பாடசாலையில் படித்ததையும், நகரப் பாடசாலையில் படித்ததையும், எண்ணி திகைத்துப் போனான். அப்படி என்றால் உயர் படிப்பு எல்லாம் எப்படி இருக்கும் என பெரிய கனவையே கண்டான். வெளிநாட்டுல போய் கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போட் பல்கலைக் கழகங்களில் படிப்பவர்களின் அனுபவத்திற்கும், ஆற்றலுக்கும்... ச்சீ... ச்சீ... நாம எல்லாம் என்ன பொறப்போ...?

மனதுக்குள் நொந்து கொள்வான்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையும் எத்தனை எத்தனை ஆயிரம் வேறுபாடுகளுடன். அது போலத்தானே ஒவ்வொருவரின் கல்வியும் கூட.

அப்புறம் எப்படி...? கற்றறிந்த மனிதங்களை காண்பது. இப்போதெல்லாம் கற்றறிந்த 'றோபோ' போன்ற மனிதர்களை அல்லவா கண்டு கொண்டு இருக்கிறோம். நான் மட்டும் எப்போதும் மனிதனாகவே வாழ வேண்டும் என மனதுக்குள், தன் மனச்சாட்சிக்குள் மந்திரமாய் பல நூறு தடவைகள் சொல்லிக் கொண்டான் ஒரு வித மானசீக நெருடல்களுடன்.

அவனின் தோட்ட லயன் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். ஒவ்வொரு தரம். லயன்களுக்கே ஒவ்வொரு பெயர்கள். வங்களா லயம், மேட்டு லயம், பணிய லயம், கோயில் லயம், ஸ்கூல் லயம், நடு லயம், ஸ்டோர் லயம் என ஒவ்வொரு காரணப் பெயர்கள். சிலருக்கு லயத்தின் பெயரை மட்டும் சொன்னால் போதும். அங்குள்ளவர்களின் அதிசயத்தை அப்படியே கூறிவிடுவார்கள். அந்தளவிற்கு ஒவ்வொரு லயமும் ஒவ்வொரு லய லாவண்யங்களோடுதான் பேசப்படும், அவர்களின் தாள லயத்துக்கேற்ப.

தோட்டத்துரை முதல்... கங்காணி வரை தங்கள் நிர்வாக இயந்திரங்களை முடக்கிக் கொள்ள இதுவும் ஒரு சாதகமான சாதனமாகும். அனேகமான சந்தர்ப்பங்களில் அதுவே அவர்களின் ஜாதகமாகவும் அமைந்து விடும். அதற்கேற்ப அவர்களின் பலாபலன்களும் அமைந்து விடுவதும் அவர்கள் அறியாத ஒன்றல்ல.

தோட்டம் என்றால் லயத்தின் பெயரே அங்குள்ளவர்களின் அடையாள அட்டை. அவர்களுக்குள் பேசப்படும் அன்னியோன்ய பரிபாஷை. தோட்ட உத்தியோகத்தர், நகர வர்த்தகர்கள், ஏன் ஆசிரியர்கள் கூட லயத்தின் பெயரை வைத்தே அங்குள்ளவர்களின் அந்தரங்கங்கள் ஏன் அவர்களின் ஆணிவேராய் பேசப்படும் சாதியைக் கூட சாமர்த்தியமாக தெரிந்து கொள்வர்கள், அனுபவசாலிகள். என்னதான் ஒரு சிறிய தோட்டமாக இருந்தாலும் கூட இத்தனை அம்சங்களும் இல்லாத ஒரு தோட்டம் இருக்க முடியாது என்பது தான் யதார்த்தம்.

இவை எல்லாவற்றையும் மீறி ஒருவன் மேலேழுந்து வருவது என்பது அந்த வாழ்க்கைச் சூழலில் சுழன்றவனுக்கு மட்டுமே தெரியும் புரியும்.

நாட்டில் இனப்பிரச்சினை பற்றிய பேச்சு எழும் போதெல்லாம் ஆறு தனக்குள்...

இதற்கெல்லாம்... அப்பால்... எமக்குள்ளேயே இருக்கும் எத்தனையோ தீர்க்க முடியாத பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தீவிரவாதியாகவே இருந்து வந்தான்.

ஏனென்றால்...

ஆறு கூட தன் பயணத்தைக் கடக்க, மற்றவர்களைவிட தான் சார்ந்த மக்களாலேயே பல வழிகளிலும் தடுக்கப்பட்டான். அல்லது காட்டிக் கொடுப்புக்களுக்குள் கண்ணீர் விட்டான், கதறினான் என்பதெல்லாம் அனுபவங்களே ஆசானாய் இருந்து சொல்லும்.

ஆறு சொல்லிப்பார்த்தான். உணர்த்தினான். விளக்கினான். செய்து காட்டினான். முடியவில்லை. பள்ளிப் படிப்பை முடித்து பங்களா காவல்காரனின் ஆசீர்வாதத்தால் தோட்டத்தில் சுப்பவைசர் ஆனான். ஆரம்பத்தில் தன் மக்களையே மாட்டைப் போல் வேலை வாங்குவதும், ஆணையிடுவதும், உத்தியோக பரிபாஷையில் பேசுவதும் ரெம்பக் கஸ்டமாக இருந்தாலும் காலம் செல்லச் செல்ல அவை எல்லாம் சர்வ சாதாரணமாகியது. இப்போ தெல்லாம் அப்படி பேசி வேலை வாங்கினாலேயே ஒரு உத்தியோக திருப்தி இருந்தது.

இல்லாவிட்டால் நம்ம தம்பி என்று எல்லாவற்றையும் சமாளித்து விடுவார்கள். உத்தியோகத்துக்கு கூட ஒரு மதிப்பு கொடுக்க மாட்டார்கள். மக்களை, தம் மக்களை மக்களாகவே இருந்து பார்க்கும் போது, இல்லாத குறைகள் எல்லாம் இப்போதுதான் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது குறைகளை. இப்போது ஆறு எப்படியும் ஒரு அந்நியனே. ஏனென்றால் அவனது உத்தியோகம் அவனை அவர்களிலிருந்து அந்நியப்படுத்தி விட்டிருந்தது.

உண்மையில் இந்த 'சுப்பவைர்' பதவி என்பது தொழிலாளிக்கென கொடுக்கப் படும் ஒரு பதவி உயர்வே தவிர அப்படி ஒன்றும் உத்தியோகத்தனம் நிறைந்தது அல்ல. ஆனாலும் அவரவர் செயற்படும் விதமும், பேசும் முறையும் அவர்களை தோட்டத்துக்கு 'குட்டித்துரைகள்' ஆக்கும். இந்த குட்டித் துரைத் தனமே சில குடும்பங்களின் குடியை கெடுப்பதும், குட்டிச் சுவராவது மாவதற்கு காரணங்களாகி விடும்.

சில தோட்டத்து ரோஜாக்கள் இப்படி சுகத்திற்காக முள்ளில் பட்டு பட்டு போனதும், முகமிழந்து போனதும் தோட்டங்களில் சர்வசாதாரணம். அதற் கெல்லாம் சதா வேலை செய்யாமலே கூலி வாங்கும் ஒரு கூட்டமும் இருக்கும்.

இதெல்லாமே ஆறுவுக்கு அடக்கத்தை தந்தாலும், சில வேளை களில் இவற்றுக்கு அடங்கி முடங்கி விடுவான். அப்படி ஒரு நாள் அடங்கி முடங்கியதே அவனை புரோமோசனோடு ஊவா பிளான்டேஷனுக்கு மாற்றியது.

சில வேளைகளில் சில தீமைகள் பெரும் நன்மையாக முடிந்து விடுவதும் உண்டு தானே...!

அவனது திறமைகள், தோற்றம் அவனை குட்டித் துரையிலிருந்து சின்ன துரையாக்கியது. சின்ன துரை ஒன்றும் சின்ன பதவி இல்லை. பெரியவர் இல்லாதபோது சின்னத்துரையே தோட்டத் துக்கு ராஜா.

தொழில் நிமித்தம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து தூரதேசம் போல கண்டி, நுவரெலியா கடந்து பதுளை ஊவா பிளான்டேஷனுக்கு போய் எல்லாவற்றிலும் அந்நியனாகிப் போனான் ஆறு. எந்த நல்லது கெட்டதுகளுக்கும் வருவதில்லை. அவனது குடும்பமும் அவனைப் பார்க்கப் போவதுமில்லை.

இப்ப போல அப்ப கையில் தொலைபேசி தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றுமில்லை. கடிதமும் தந்தியும் தான். அதையும் மீறினால் ஓபிசில் இருந்து டெலிபோன். இல்லாவிட்டால் பத்தரவு கடையிலிருந்து டெலிபோன். மாதா மாதம் இருபதாம் தேதி பத்து மணிக்கு பத்தரவு கடைக்கு டெலிபோன் வரும். ஆறுவுடன் பேசுவார் ஆறுவின் அண்ணன். ஒரு நாள் பேசும்போது ஆறுவே கலியாணத்திற்கு ஏற்பாடு செய்ய சொல்லி விட்டான்.. பெண் எங்கே பார்ப்பது. சின்ன துரையல்லவா...?

ஆறுவின் அந்தஸ்துக்கு தோட்டத்தில் எங்கே எப்படி பெண் பார்ப்பது...? எங்கு தேடியும் கிடைக்கவில்லை. ஆறுவின் அம்மா அதை நினைத்து நினைத்தே போய்விட்டார்.

இரண்டு, மூன்று வருடங்களுக்குப் பின் எப்படியோ ஒரு பெண் கிடைத்து

விட்டாள். தோல் மட்டும்தான் வெள்ளை என்று கொஞ்சக் காலம் போகவே தெரிந்தது. எப்படியும் அவளும் சின்ன துரைசானி தானே. அவளும் எப்போதுமே எதிர்பார்த்திராத பதவிதானே சம்பளம் இல்லாமல். ஆனாலும்... அதிகாரத்தால் கௌரவத்தால் பெரிய பதவிதானே.

பசி வந்தால் பத்தும் பறந்துப்போம் என்பது போல பதவி வந்ததால் அவளுக்கு எல்லாமே போய்விட்டது. ஆறுவின் குடும்பத்தை மட்டுமல்ல அவளது குடும்பத்தையும் மறந்தே போய் விட்டாள்.

அவள் மட்டுமல்ல... ஆறுவும்தான்.

அத்திவாரத்தையே மறந்தவர்கள் ஆனார்கள்.

அவளின் தாய் இறந்த போதுகூட எல்லாம் முடிந்து ஒரு கிழமைக்குபின் போய் வந்தார்கள் யாரையோ போல.

அது போலவே ஆறுவின் தகப்பன் இறந்ததற்கும் இருவருமே போகவில்லை. ஆறு மட்டும் ஒரு கிழமைக்குப் பின் தனியாய் அப்பாவிற்கு அஞ்சலி செலுத்த போனான். தோட்டமே மந்திரி வாறதை வரவேற்பது போல வரிசையில் நின்று பார்த்தார்கள்.

அவன் வளர்ந்த தோட்டம். சுருண்டு படுத்திருந்த லயன். ஓடியாடி விளையாடிய லயத்துக்கோடிகள் எல்லாமே எல்லாமே மனக்கண்முன் வந்து போயின. ஒருவாறு சுதாகரித்துக் கொண்டான். அவனை ஒத்த அவனது செட்டுகள் அவனை கிழடுகளாய் இருந்து பார்ப்பது போல வறுமையாலும், உழைப்பாலும் உரு மாறிப் போயிருந்தார்கள்.

அன்று அவன் அடங்கிப் போக காரணமாய் இருந்த அருளாந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள், மணக் காத மல்லிகை போல. அவன் மனம் சுரீர் என்றது துயரத்தின் மத்தியிலும். அவளால் தானே ஆறு இன்று சின்னதுரை ஆகி இருக்கிறான். அவள் மட்டும் இன்றும் தோட்டத் தொழிலாளியாய்...

அவன் லயக்காம்பராவுக்குள் நுழை கிறான். குப்பிலாம்பு வெளிச்சத்திலும், விளக்கு வெளிச்சத்திலும் அப்பாவின் சீதேவி சுவரில் சில முளைகளுடன் நீட்டிக் கொண்டிருந்தது அவனை வர வேற்க. அருகில் சிறிய பேணியில் தண்ணீரும் வெற்றிலையும்.

ஒப்பாரி வைக்கிறார்கள். ஆறுவும் கண்களை துடைத்துக் கொள்கிறான். ஒப்பாரி ஓய்வதற்கு நீண்ட நேரம் எடுத்தது. அதுவரையும் அந்த குப்பி லாம்பு வெளிச்சத்தில் ஆறு அடையாளம் தெரியாமலே இருந்தான்.

உஸ்... உஸ் என பெட்ரோல்மெக்ஸ் நிறைந்த வெளிச்சத்துடன் வர மற்றவர் களிலிருந்து ஆறு மட்டும் வித்தியாச மானவனாய் வேறுபட்டு தெரிந்தான். கொழுகொழுத்த உடம்புடன்.

சிறிது நேர அமைதி.

ஆறு பாயிலிருந்து எழும்பி காலைத் தடவியவாறு வெளியே செல்ல அங்கு ஆண்கள் கூட்டம் மீண்டும் ஒரு செத்த வீட்டைப் போல் இருந்தது. உஸ்... உஸ் பெட்ரோல்மெக்ஸ் மீண்டும் வெளியே வர வாசலில் நிற்கிறவர்களின் எல்லா முகங்களும் நன்றாக தெரிகின்றன.

ஒரு பெரியவர் தம்பி என்னங்க அம்மா வரல்ல... என்று இழுத்தார்.

அதற்கு ஆறு ''அம்மா... பிள்ளைகள் இங்கு வந்து இருக்க கஷ்டம்தானே. லைட் இல்ல. வெளியதெருவ போறதுனா என்ன செய்யிறது. அதனால் தான் கூட்டி வரல்ல'' என்றான்.

பெட்ரோல் மெக்ஸ் வெளிச்சத்தில் வெளிநாட்டு என்.ஜி.ஓ. ஒன்றின் பெயர்கள் எழுதப்பட்ட மலசல கூடம் ஒன்று ஆறுவின் கண்களில் பட அவன் மனம் சந்தோசத்தால் நிறைந்து போனது. அதனை நோக்கி மெல்ல அடியெடுத்து வைக்கிறான். அந்த அமாவசை இரவும் அவனுக்கு பௌர்ணமி இரவாய் கண் களுக்குப்பட்டது.

❍

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி - 2013 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| **கொள்ளிக்காசு** | கே. கே.அருந்தவராஜா | வவுனியா |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| **பொய்யாயின எல்லாம்** | நவஜோதி ஜோகரட்னம் | இங்கிலாந்து |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| **இங்கு வீசியது ஒரு சமாதானக்காற்று...!** | சூசை எட்வேட் | திருகோணமலை. |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| **இரண்டு சம்பவங்கள்** | கே. எஸ். சுதாகர் | அவுஸ்திரேலியா |
| **விடிவு** | உ. நிசார் | மாவனல்லை |
| **மௌனத்தின் ஓசை** | எஸ். ஐ. நாகூர்கனி | கொழும்பு 12 |
| **பரியாரி மாமி** | குரு அரவிந்தன் | கனடா |
| **இப்படியும் அப்படியும்** | புதுவைப் பிரபா | இந்தியா |
| **பணம் பந்தியிலே** | வெலிகம ரிம்ஸாமுஹம்மத் | மவுன்ற்லெவனியா |
| **இரண்டாவது உலகமகா யுத்தம்** | ஆ. தங்கராசா | மட்டக்களப்பு. |

நடுவர்கள்: தி. ஞானசேகரன், திருமதி பத்மா சோமகாந்தன், திருமதி வசந்தி தயாபரன்.

**(ஞானம் 162, நவம்பர் 2013)**

37

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2013இல் முதற் பரிசு பெற்ற கதை

# கொள்ளிக்காசு

1




கே. கே. அருந்தவராஜா
(மேழிக்குமரன்)


சனிக்கிழமை சண் தொலைக்காட்சியில் இலண்டனில் நடைபெற்ற மானாட மயிலாட இறுதி நிகழ்ச்சி நடைபெற்றது. நானும் மகள் ஆர்த்தியும் இருந்து பார்த்துக்கொண்டிருந் தோம். மனைவி சகுந்தலா போய்ப் படுத்து விட்டாள். அவளுக்குத் தொலைக்காட்சித் தொடர் மட்டும் போதுமானது.

மானாட மயிலாட நிகழ்ச்சி முடிய இரவு ஒரு மணியாகிவிட்டது. கண் எரிச்சலாக இருந்தது. இருவரும் போய்ப்படுத்துக் கொண்டோம்.

எப்போது தூங்கினேன் என்பது தெரியாது. ஒவ்வொரு நாளும் படுக்கப் போகும்போது எப்போது தூங்கினேன் என்பதை ஞாபகம் வைத்திருக்க வேண்டும் என்று நினைப்ப துண்டு. ஒரு நாள்கூட நான் எப்போது தூங்கினேன் என்பதை என்னால் ஞாபகம் வைத்திருக்க முடியவில்லை.

"சண்முகம், தம்பி சண்முகம்"

யாரோ கூப்பிட்டது கேட்டது.

"சண்முகம் நான் போறன்."


யாழ். மாவட்டம் இளவாலை - காடிவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட 'பல்கலைச் சுடர்', 'அருங்கலை விநோதன்', 'தமிழ் மணி' கே. கே. அருந்தவராஜா 27-02-54இல் பிறந்தவர். 1985 முதல் ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழ்ந்த காலத்தில், பத்திரிகை, சஞ்சிகை ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். 19 வருடங்கள் ஜேர்மன் கல்விச் சேவையில் பணியாற்றியவர். ஜேர்மன் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றிய இவர், ஆறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவரது தற்போதைய நிரந்தர முகவரி: 21, ஹொறவப் பொத்தான வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியா.
தொ. பேசி: 0774248267
மின்னஞ்சல்:
rajah27@hotmail.com


நித்திரைக்கூடாக அந்தக்குரல் கேட்டது. ஆம், அது அம்மாவின் குரல்.

திடுக்கிட்டு எழும்பினேன்.

அறைக்கு வெளியே முன்ஹோலுக்கு வந்தேன். யாரும் இல்லை.

என்னுடைய பெயர் விக்கினேஸ்வரன்.

ஆனால் அம்மா மட்டும்தான் என்னை சண்முகம் என்று கூப்பிடுவா. அம்மாவின் குடும்பத்தினரின் குலதெய்வம் முருகன் என்பதனால் அம்மா என்னை சண்முகம் என்று கூப்பிடுவா.

என்றுமில்லாமல் இன்றைக்கு என்ன அம்மாவின் குரல் கனவில். தூக்கக் கலக்கத்துடன் யோசித்தவாறு நின்றிருந்தேன்.

தொலைபேசி அழைத்தது. நேரத்தைப் பார்த்தேன் காலை ஐந்து மணி.

தொலைபேசியின் மறுமுனையில் சிறிலங்காவிலிருந்து அண்ணை.

"விக்னேஸ், அம்மா மோசம் போயிட்டா"


(ஞானம் 163, டிசம்பர் 2013)

அண்ணை விக்கி விக்கி அழுதார்.

எனக்கு உடல் எல்லாம் நடுங்கியது.

அப்படியென்றால் என்னைக் கூப்பிட்டது அம்மாவா?

என்னை அறியாமலே கண்களில் கண்ணீர்

எனக்கு எதுவுமே புரியவில்லை.

வாழ்க்கை புரியாத புதிர்.

"விக்னேஸ் என்னடா குரலைக்காணம். என்ன வாறியா அக்காவைக்கும் சொல்லு. வாறதெண்டா எப்ப எண்டு சொல்லு. அதுவரை பிரேதத்தை வைச்சிருக்க அலுவல்கள் பார்க்க வேணும்."

அண்ணை பிரேதம் என்று சொன்னது எனக்கு நெருடலாக இருந்தது.

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. குரல் வர மறுக்கிறது.

"என்ன விக்னேஸ் பேசண்டா. நீ கடைசிப்பிள்ளை. நீதான் கொள்ளிவைக்க வேணும்."

"ஓம் அண்ணை நான் அக்காவையோடை கதைச்சுப்போட்டுச் சொல்லுறன்."

தொலைபேசியை வைத்து விட்டுத் திரும்பினேன். சகுந்தலாவும் ஆர்த்தியும் படுக்கையறை வாசலில்.

"ஆரப்பா ரெலிபோன்?. ஏன் கண்ணெல்லாம் கலங்கிக் கிடக்கு?"

ஆர்த்தி ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டாள்.

"அப்பா அழாதையுங்கோ." கண்களைத் துடைத்து விட்டாள்.

"ஏனப்பா அழுகிறீங்கள்?"

"அப்பம்மா இறந்து போய்விட்டா"

நான் ஆர்த்தியை இறுக அணைத்துக் கொண்டேன்.

என்னையறியாமலே கண்களில் நீர் வழிந்தது.

"அப்பாடா ஒரு தொல்லை தீர்ந்து போச்சு." சகுந்தலா பெருமூச்சுவிட்டாள்.

எனக்கு அவளைப்பார்க்க வெறுப்பாக இருந்தது.

சே என்ன மனுசர்கள்.

❖❖❖

சகுந்தலாவோ ஆர்த்தியோ அம்மாவைப் பார்த்ததில்லை.

நான் ஜேர்மனியில் இருக்க சகுந்தலாவும் அகதியாய் வந்து தனது அண்ணனுடன் இருந்தாள். புறோக்கர் பேசிச் செய்த கல்யாணம்தான்.

இரண்டு பேருக்கும் ஒத்து வரவில்லை.

பிரச்சனை, நான் என்னுடைய வீட்டுக்கு ஒரு சதமும் கொடுக்கக் கூடாது என்பது தான்.

நானும் சண்டை பிடிச்சு பிடிச்சு அக்காவையையும் கூப்பிட்டு கல்யாணமும் செய்து வைச்சிட்டன். அண்ணையை கூப்பிட அவர் ஊரோடையே இருக்கப்போறன் என்று சொல்லிப்போட்டார்.

சகுந்தலா தன்ரை சொல்லைக் கேளாமல் அக்காவையைக் கூப்பிட்டுப் போட்டன் என்று அவையளோடை தேவையில்லாமல் கொளுவிக் கோவிச்சுக் கொண்டாள். அக்காவை இரண்டு பேரும் என்ரை வீட்டை வாறதில்லை. ரெலிபோனிலை கதைக்கிறதோடை சரி.

ஏதாவது பிரச்சனை வந்தா, தான் தற்கொலை செய்வனெண்டு வெருட்டுவாள். நானும் பயந்து பல விசயங்களில் பின்வாங்கியிருக்கிறன்.

இப்பிடியே நாட்கள் ஓடி ஆர்த்தி பிறந்து அவளுக்கும் பதினாலு வயசாச்சு.

இப்படியே விட்டா இது சரிவராது என்டு சகுந்தலா பிளான் பண்ணி வீடொன்றை வாங்க வைச்சாள். நானும் இரண்டு வேலை அவளும் வேலையெண்டு ஓய்வொழிச்சல் இல்லாமல் அலைஞ்சு வீட்டுக் கடன் கட்டிக் கொண்டு திரியிறம். ஒரு யூரோ கையிலை தங்கிறதெண்டால் பெரும்பாடு.

அம்மாவுக்குக் கூட எப்பவாவது இருந்திட்டுத்தான் பணம் அனுப்பிறது. அதுவும் சகுந்தலாவுக்குத் தெரியாமல் என்ர நண்பன் மனோவிட்ட நான் அப்ப அப்ப அம்பது அம்பதாய் கொடுத்து வைச்சு அனுப்பிறது.



**அம்மாவைப் பார்த்தன், என்னால் நம்பமுடியவில்லை. எலும்புக்கூடாய் கிடத்தியிருந்தார்கள். எனக்கு பதினாறு வருடங்களின் முன்னால் பார்த்த அம்மாவின் முகம்தான் ஞாபகம் இருந்தது. எல்லோரும் அழ நானும் அம்மாவின் காலைப்பிடித்து ஐயோ அம்மாவென்று அழுதேன். வெளியில் பறை அடித்தார்கள். என் உயிர் உருகியதை அன்று தான் உணர்ந்தேன்.**

பெத்த தாய்க்கே களவாய்ப் பணம் அனுப்ப வேண்டியதை நினைச்சா கவலை யாய் இருக்கும். என்ன செய்யிறது சிலு வையை தோளிலை தூக்கி வைச்சாச்சு. சுமந்து தானே ஆகவேணும்.

அம்மா தன்னுடைய அண்ணனின் மகளைச் செய்யச் சொல்லிக் கேட்டவ. அவை பெரும் எடுப்புக்காரர். எனக்கு ஒத்து வராதெண்டு மறுத்துப் போட்டன். ஒருவேளை சொந்தத்துக்குள்ள மச்சாளை செய்திருந்தா இந்தப் பிரச்சினைகள் வந்திருக்காதோ. ஆருக்குத் தெரியும் மனம் அப்பப்ப கிடந்து கவலையிலை அடிச்சுக்கொள்ளும்.

கையாலாகாத் தனங்களுக்கான சமர சங்கள். மனச்சாட்சி சம்மட்டியால் அடித்தது.

❖❖❖

நான் கதிரையில் இருந்தேன்

“என்னப்பா போப்போறியளோ?” சகுந்தலா குரலை உயர்த்திக்கேட்டாள்.

“பின்ன போகாம”

“என்னெண்டு போறது. இந்த மாதம் லோன்காசு கட்டயில்லை.”

“அது கிடக்கட்டும். நான் போகப் போறன்.”

“அங்க நாட்டிலை நிலமை சரிவர யில்லையாம். உங்களுக்கு ஏதும் நடந்தா நானும் பிள்ளையும் நடு றோட்டிலை.”

“உங்க எத்தனையோ சனம் போய் வருகுதுகள். அங்க ஒண்டும் பிரச்சனை யில்லையாம்.”

சகுந்தலாவுக்கு என்ன செய்வதெண்டு தெரியவில்லை. தன்னுடைய கடைசி ஆயுதத்தைப் பாவிச்சாள்.

“நீங்கள் போனால், திரும்பி வந்து என்ர பிணத்தைத்தான் பார்ப்பியள்.”

“அம்மாவை நான் பார்த்து பதினாறு வருசமாச்சு. அவ சுகமில்லாமல் கிடக்கிறா எண்டு அண்ணை சொன்ன போதும் நான் போகயில்லை. செத்த வீட்டுக்கும் நான் போகாமல் இருக்கேலாது. நீ என்ன செய்தாலும் பரவாயில்லை.. நான் போறது போறதுதான்.”

“உங்களுக்கு என்னைவிட கொம்மா பெரிசா போயிட்டாவோ. அவை செய்த தெல்லாம் எனக்குத் தெரியாதோ.” சகுந்தலா சன்னதம் ஆடினாள்.

“அம்மா பேசாமல் இருங்கோ, அப் பம்மாவின்ரை செத்த வீட்டுக்கு அப்பா போகவேணும். அப்பா நீங்கள் போட்டு வாங்கோ.” ஆர்த்தி கோபத்துடன் பேசினாள்.

சகுந்தலா இதைக்கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை. ஆர்த்தி வளர்ந்து விட்டாள். அவளுக்கு நல்லது கெட்டது தெரியும் என்பது எனக்குப் புரிந்தது.

“என்ன கோதாரி எண்டாலும் செய்து தொலையுங்கோ.” அறைக்குள் போயி ருந்து சகுந்தலா அழுவது கேட்டது. தன்னுடைய பசப்பு சரிவரவில்லை என்ற கோபம் அவளுக்கு.

அக்காவை இரண்டு பேருக்கும் எடுத்துச் சொன்னன். ஒப்பாரி வைச்சு அழுதிச்சினம்.

பெரியக்கா என்னட்டைக் கையிலை காசில்லை. அதுதான் என்ன செய்யிற தெண்டு தெரியேல்லை எண்டு சொன்னன்.

"விக்னேஸ் நான் வேலை செய்யிற யில்லை. அத்தானும் வேலையில்லாமல் இருக்கிறார். தெரியும்தானே. மாறிக் கொண்டு போட்டு வா. ஏதோ பார்ப்பம்" மூக்கால அழுதா.

"விக்கி நான் ஒரு அறுநூறு யூரோ தாறன் பார்த்துப் போட்டுவா. பிறகு மிச்சத்தைப் பார்ப்பம்." இது சின்னக்காவின் பதில்.

எனக்கு என்ன செய்வதெண்டு தெரி யேல்லை.

போறவாற செலவு. அங்க செத்த வீட்டுச் செலவு. அம்மாவுக்குக் கொள்ளி வைக்க கையிலை ஐஞ்சு சதம் இல்லை. வெளிநாட்டு வாழ்க்கை எண்டு பெயர். நினைக்கவே கவலையும் வெட்கமுமாய் இருந்தது. நாய்க்கு நடுக்கடலிலை போனாலும் நக்குத் தண்ணிதான்.

என்னுடைய நண்பன் மனோவுக்கு ரெலிபோன் அடிச்சு விசயத்தைச் சொன்னன்.

"மச்சான் நீ அப்பப்ப தந்த காசிலை ஒரு ஆயிரம் கிடக்கு. நானும் கொஞ்சம் தாறன் நீ யோசிக்காம போயிட்டு வா."

மனோ சொன்னபோதுதான் நான் கொடுத்து வைச்ச காசு ஞாபகத்தக்கு வந்தது. ரிக்கற் செலவு போக மிச்சம் நாக்கு வழிக்கப்போதாது. வெளிநாட்டில் இருந்து போய் கஞ்சத்தனம் பண்ணினா இனசனம் என்ன நினைக்கும்.

❖❖❖

ஒரு மாதிரி மனோவிட்டைக்காசை வாங்கிக் கொண்டு அண்ணைக்கும் அடிச்சுச் சொல்லிப்போட்டு விமானத்தில் ஏறிவிட்டன்.

தூரமும் நேரமும் குறுகிக்கொண்டு போக எனக்கு மனம் பக்கு பக்கெண்டு அடிக்கத் தொடங்கியது.

அம்மா சுகமில்லாமல் இருந்தபோது தொலைபேசியில் கதைத்தன்.

"சண்முகம் இந்த முறை நான் தப்ப மாட்டன்."

"ஏன் அம்மா அப்பிடிச் சொல்லுறாய். நான் ஆர்த்தியைக் கூட்டிக்கொண்டு வந்து காட்டுவன் நீ இருப்பாய்"

கையாலாகாத்தனங்களுக்கான சமர சங்கள். மனச்சாட்சி சம்மட்டியால் அடித்தது.

"இல்லைச் சண்முகம் எனக்குத் தெரியும் நீதான் கடைசிப்பிள்ளை. நீதான் கொள்ளி வைக்க வேணும்." அம்மா இருமினா. எனக்கு உடம்புக்குள் என்னவோ செய்தது.

அம்மாவின் நினைவுகளை அடக்க முடியாமல் விமானத்தில் இருப்பதையும் மறந்து அழுதேன்.

செத்த வீட்டுச் செலவை எப்படிச் சமாளிக் கப்போறன்.

எனக்குச் சின்ன வயசில அப்பா செத்துப்போக என்ன கஷ்டப்பட்டு அம்மா எங்கள வளர்த்தா. இப்ப நாங்கள் வெளிநாடுகளில.

பெயருக்குத்தான் வெளிநாட்டு வாழ்க்கை. அம்மாவுக்குக் கொள்ளி வைக்க கையிலை காசில்லை. சே, என்ன வாழ்க்கை. என்மீதே எனக்கு வெறுப்பாயிருந்தது.

பேருக்கு வெளிநாட்டு சிற்றிசன். சொந்த வீடிருக்கு. காரிருக்கு எண்ட பேச்சுத்தான். கையில ஒரு சதம் இல்லை. ஒரே றோலிங்தான்.

உலகமயமாக்கல் வந்தாலும் வந்தது. வேலை செய்யிற நடுத்தரக் குடும்பங்கள் பாடு அதோ பாடுதான். சம்பள உயர்வு இல்லை. ஓவர்ரைம் இல்லை. டபுள் பேமன்ற் இல்லை. விலைவாசி உச்சத்துக்குப் போட்டுது. எல்லார்பாடும் பெரும்பாடாய்ப் போச்சு.

இது எல்லாருக்கும் விளங்கிறதும் இல்லை. விளங்கின எங்களைப்போல ஒரு சிலராலையும் ஒண்டும்செய்ய முடியிறதில்லை. செம்மறி ஆட்டுக் கூட்டங்களாய் ஓடிக் கொண்டிருக்கிறம்.

கட்டுநாயக்காவுக்கு வந்திட்டன். வெளி யாலை அண்ணை வந்து காவல் நின்றார். கண்டவுடன் ஓடிவந்து கட்டிப் பிடிச்சு அழுதார். என்னாலையும் அழுகையை கட்டுப்படுத்த முடிய வில்லை.

அண்ணை சூட்கேசை வானிலை ஏற்றினார். அப்பதான் அண்ணையைப் பார்த்தன். நல்லா கறுத்து மெலிஞ்சு போயிருந்தார். தலைமயிரும் கொட்டி, கண்ணும் உள்ளுக்குப்போய் பாவம் இலங்கை வருமானத்திலை நாலு பிள்ளை யளோடை எப்படிச் சீவிக்கிறது.

நாங்கள் ஆருமே அண்ணைக்கு உதவி செய்யிறதில்லை.

போலித்தனமான உறவும், பாசமும், வாழ்க்கையும்.

கையாலாகத்தனத்துக்கான சமரசங்கள். மனச்சாட்சி சம்மட்டியால் அடித்தது.

வான் யாழ்ப்பாணத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

"அண்ணை எப்ப எடுக்கிறதாய் உத்தேசம்?"

"உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தனான். நாளைக்கே எடுப்பம் விக்கி"

"பெரிசா எடுப்பெடுக்க வேண்டாம். சிம்பிளாய்..." என்ரை கையாலா காத்தனத்தை மென்று விழுங்கினேன்.

"என்ன விக்கி சொல்லுறாய். மூன்றுபேர் வெளிநாட்டிலை. அக்கம் பக்கத்திலை பெரிசா கதைக்கினம்.. நீ உப்பிடிச் சொல்லுறாய்"

"இல்லை அண்ணை. பொதுவாய்ச் சொன்னனான். பார்த்துச் செய்வம்."

அண்ணை மௌனமானார்.

எப்படிச் சமாளிக்கப் போறன், அம்மாவுக்குக் கொள்ளிவைக்கக் காசில்லாமல் இந்தப்பாடு. அந்த வீட்டை வாங்கியிருக்காவிட்டால் ஒரு மாதிரிச் சமாளிச்சிருக்கலாம். சகுந்தலாவின்ரை ஆட்டத்திற்குத் தலையாட்டினது என்ர பிழை.

கையாலாகாத் தனங்களுக்கான சமர சங்கள். மனச்சாட்சி சம்மட்டியால் அடித்தது.

❖❖❖

இருட்டிவிட்டது. வீடு வந்து விட்டது எங்கள் வீட்டுக்குப் போகும் ஒழுங்கை யால் வான் திரும்பியது.

வெளிநாடு போகும்போது கண்ணீருடன் கட்டிப்பிடிச்சு கொஞ்சி அழுது போய்வா ராசா எண்டு அனுப்பிவைச்ச அம்மாவை இப்ப பிணமாகப் பார்க்கப் போறன்.

வான் நின்றது. அண்ணை இறங்கி சூட்கேசை இறக்கினார். அண்ணி ஓடிவந்து கட்டிப்பிடிச்சு அழுதா. பெரியம்மா, ஒண்டைவிட்ட அக்கா என்று எல்லோரும் ஒப்பாரி வைச்சு அழுது கூட்டிக்கொண்டு போனார்கள்.

அம்மாவைப் பார்த்தன், என்னால் நம்பமுடியவில்லை. எலும்புக் கூடாய் கிடத்தியிருந்தார்கள். எனக்கு பதினாறு வருடங்களின் முன்னால் பார்த்த அம்மாவின் முகம்தான் ஞாபகம் இருந்தது. எல்லோரும் அழ நானும் அம்மாவின் காலைப்பிடித்து ஐயோ அம்மாவென்று அழுதேன். வெளியில் பறை அடித்தார்கள். என் உயிர் உருகியதை அன்றுதான் உணர்ந்தேன்.

வெளிநாடுகளில் அமைதியாக நடக்கும் மரணச்சடங்குகளில் உணர்வுகள் சங்கமிப்பதில்லை. நமது சடங்குகள் உயிரின் வேர்வரை உணர்வுகளுக்கு நீர்பாய்ச்சி விடுகின்றன.

எல்லோரும் சற்று அமைதியானார்கள்.

அண்ணையும் ஏனைய உறவினர்களான ஆண்களும் என்னை ஒரு அறைக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

"தம்பி வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறியள். அம்மாவின்ரை செத்த வீடு தடல்புடலாய் நடத்த வேணும். கொம்மா உங்களைக் கஷ்டப்பட்டு வளர்த்தவ. அந்த மனிசி பெரிசா ஒரு சுகத்தையும் காணயில்லை." என்னுடைய பெரியப்பா சொன்னார்.

முந்தி டேய் விக்கி எண்டு கூப்பிடுகிற பெரியப்பா என்னை நீங்கள் எண்டு

மரியாதையாய் கதைச்சது ஒருமாதிரி கூச்சமாய் இருந்தது. வெளிநாட்டுக்குப் போனதால உறவுகள்கூட அந்நியப்பட்டுப் போகுது.

"ஓம் பெரியப்பா, நான் எல்லாம் வரயிக்கை சொல்லிப் போட்டன். அண்ணை சொன்னார்."

வெளிநாட்டு ஏழையான எனது வறுமைத் தனத்தை நினைக்க என்ன சொல்வதெண்டு தெரியவில்லை.

நான் ஒப்புக்கு தலையாட்டி வைச்சன்.

பிறகென்ன எல்லா ஆயத்தங் களையும் செய்யுங்கோ. அவர் கொஞ்சம் ஓய்வெடுக்கட்டும்.

பெரியப்பா சொல்ல எல்லாரும் ஒவ்வொருவராய்க் கலைந்தார்கள்.

இவர்களின் எதிர்பார்ப்புக்கு நான் எப்படி ஈடுகொடுக்கப்போகிறேன்.

என்ன செய்யலாம் அண்ணையைக் கூப்பிட்டு ஏதாவது பிரட்ட முடியுமா எண்டு கேட்டுப்பார்ப்பம். சீ அண்ணை என்ன நினைப்பார். அண்ணை தானே உள்ளதைச் சொல்லுறதிலை பிழை யில்லை. கருமம் கைமீறிப் போறதுக்கு முதல் ஏதாவது செய்ய வேணும்.

அண்ணையைக் கூப்பிட எழும்பி னேன். அண்ணையின் மூத்த மகள் மஞ்சு உள்ளே வந்தாள்.

என்னைப்பார்த்து கவலைதோய்ந்த முகத்தில் மெதுவாகச் சிரித்தாள்.

நான் அவளின் கையைப்பிடித்தேன் "எப்பிடி இருக்கிறாய்?"

"நல்லாய் இருக்கிறன் சித்தப்பா." கையில் ஒரு கவர் வைத்திருந்தாள்.

"என்ன கையில வைச்சிருக்கிறாய்?"

"சித்தப்பா, அப்பம்மா சுகமில்லாமல் படுத்திருந்தபோது என்னைக் கூப்பிட்டு இந்த என்பலப்பை தந்தவ. சித்தப்பா வரும்போது அவரிடம்கொடு எண்டு சொன்னவ."

தந்து விட்டு மஞ்சு வெளியில் போய் விட்டாள்.

எனக்கு நெஞ்சுபடபடத்தது. என்ன உள்ளே இருக்கிறது.

என்பலப்பைக் கிழித்தேன்.

சண்முகம்,

நீ கட்டாயம் வருவாய் எண்டு எனக்குத் தெரியும். நீ வெளிநாட்டிலை என்ன கஷ்டப்படுகிறாய் எண்டு பக்கத்து வீட்டு மணியத்தின்ரை கடைசிப்பொடியன் வந்த போது எல்லாம் சொன்னவன்.

அக்காவை இரண்டுபேரின்ரை நிலை மையும் எனக்குத் தெரியும். நீயும் சின்னக்காவும் அப்பப்ப காசு அனுப்பி னனியள்.. அண்ணை ஒரு குறையும் வைக்காம என்னைப்பார்த்தவர். எனக்கு ஒரு செலவும் இல்லை.

அதனால் நீங்கள் அனுப்பின காசை நான் சேர்த்து வைச்சு வங்கியில மஞ்சுளா மூலமா போட்டு வைச்சி ருக்கிறன். எனக்குத் தெரியும் நான் செத்தா நீ செத்தவீட்டுச் செலவுக்குக் கஷ்டப்படுவாய். அதனால இத்தோட அந்தக் காசின்ரை பேப்பரும் வைச்சி ருக்கிறன். நீ கவலைப்படாம அதை யெடுத்து செலவழிச்சு என்ரை செத்த வீட்டை வடிவாய் செய். நான் செத்தாலும் என்ரை பிள்ளையள் கொள்ளிக்காசுக்குக் கூடக் கஷ்டப்படக் கூடாது.

இப்படிக்கு, அம்மா.

கீழேயிருந்த மற்றப் பேப்பரைப் பார்த்தேன். ஐந்து இலட்சத்துக்கான நிரந்தர வைப்புக்கான சேர்டிவிக்கட் அது. அம்மாவின் பெயரில் இருந்தது. பின்னுருத்து என்னுடைய பெயர் இருந்தது.

அம்மா என்று வாய்முணுமுணுத்தது. என்கண்ணிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஒழுகி கடிதத்தை நனைத்தது.

எவ்.டியை எடுத்துக் கொண்டு அண்ணையைத் தேடிப்போனேன்.

❍

38

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால்
ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2013இல்
இரண்டாம் பரிசு பெற்ற கதை

2

# பொய்யாயின எல்லாம்...



நவஜோதி ஜோகரட்னம் (லண்டன்)

"எடுக்கிற நேரமெல்லாம் 'போன்' ஒரே என்கேஜ்ட்தான். நாள் முத்தும் யாரோட கதைச்சுக்கொண்டிருக்கிறவளோ தெரிய வில்லை?" 'படபட'த்துக் கொண்டு கதவைத் திறந்தவண்ணம் கேட்ட கணவனின் குரல் உச்சஸ்தாயியில் இருந்தது.

"நாள்முத்தும் கதைக்க வில்லையே! சிறிதுநேரம் ரோகினியோடதான் கதைத்த னான்" நெஞ்சம் கேவி மனதுள் பதற்றம் நெளிவதுபோல் அவளின் குரல்.

'முசுறு மாதிரி மூஞ்சியை வைச்சுக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்திட்டுது. இனி பிள்ளைகளும் நானும் பகிடிவிட்டுக் கதைக் கேலாது. சிரிக்கேலாது. அறைகளுக்க முடங்க வேண்டியதுதான். வாய் திறந்து ஒரு வார்த் தையும் கதைக்க ஏலாது. உடனேயே அடியே பிடியேயெண்டு சண்டையில தொடங்கிவிடும். வேறு ஏதோ வருத்தம் போல' என்று தனக்குள் எண்ணியவளுக்கு கோபமும் அழுகையும் வந்தது.

"பொய் சொல்லாதையடி சனியனே! நாள் முழுதும் வீட்டில இருந்துகொண்டு போனில அளந்து கொண்டிருக்கிறதுதான்



கவிஞரும், சிறுகதை எழுத்தாளரும், கட்டுரையாளருமான நவஜோதி ஜோகரட்னம் ஈழத்தின் முற்போக்கு இலக்கியவாதியான பிரபல எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் மூத்த புதல்வியாவார். இவரது 'எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்' என்ற கவிதைத் தொகுப்பு 2005ஆம் ஆண்டில் வெளியாகியது. ஏற்கனவே பல சிறுகதைப் போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளார். லண்டன் தமிழ் தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் அறிவிப்பாளராகவும், நிகழ்சித் தயாரிப்பாளராகவும் பணிபுரிந்த அனுபவம் கொண்ட நவஜோதி ஜோகரட்னம், தற்போது பாமுகம் FA TV யில் அறிவிப்பாளராகவும் 'மகரந்தச் சிதறல்' என்ற நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்குபவராகவும் பணிபுரிகிறார். லண்டனில் இசை, நடன நிகழ்வுகளில் மேடைத் தொகுப்பாளராக நன்கு அறியப்பட்டவராவார். லண்டனில் 'தமிழ் பெண் எழுத்தாளர்கள்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கள ஆய்வுக் கட்டுரை பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

(ஞானம் 164, ஜனவரி 2014)

தொழில் இவளுக்கு'' என்று அவன் கொதித்தான்.

''நாள் பூராகவும் வீட்டிலை எப்படி என்னால் சும்மா இருக்கமுடியும்? எனது மூன்று பிள்ளைகளின் வேலைகள். வீட்டு வேலைகள் யார் செய்கிறது? நான்தானே செய்கிறேன்.''

''தேவடியாள். பொத்தடி வாய். இனிமேல் ஒண்டும் கதைக்காதையடி என்னோட. எந்நேரமும் கண்டவை எல்லாரோடையும் கதைக்கிற பரதேசி நாய்.''

வழுவழுத்த உறுதியோடு தனக் குள்ளேயே ஒரு உலகை அவள் உருவாக்கிக்கொண்டிருந்தாள். வாக்கு வாதங்கள் உருவெடுத்தது. எதிர் பாராத விதமாக எங்கெங்கோவெல்லாம் அறைகள் விழுந்தன. தலை, தோள், முதுகு, முகம் என்று மூர்க்கத்தனமான உதைகள். அவளின் கண்களில் நீர் கோத்துக் கொண்டேயிருந்தது. துக் கங்கள் அவளைக் குறுக வைத்துக் கொண்டிருந்தன.

புலம்பெயர்ந்து மேல்நாடுகளுக்கு வந்தும்கூட ஆண்கள் சிலர் தம் கோர முனைகளில் வாழ்வை நகர்த்து கிறார்கள். யாரோடும் போன்செய்து கதைக்கக் கூடாது, வாசிக்கக் கூடாது, தொலைக்காட்சி பார்க்கக் கூடாது, இன்டனெற் பார்க்கக் கூடாது என்று தடைகளைக் குவித்தால் ஒரு பெண் என்ன செய்வது? தினமும் வேலை யிலிருந்து திரும்பும் கணவனின் கடு கடுப்பும், படபடப்பும் பதற்றத்தையும் பரிதவிப்பையும் அவளுள் குமைப்பது இயல்பாகிவிட்டது. இன்றும் குளிர் மையில் நகர்ந்து இனிமையில் விரிந்து கொண்டிருந்த அழகான மாலை நேரத்தை அவன் நச்சிலே நெய்து வீசிய சொற்களும் செயல்களும் நொறுக்கிச் சிதைத்துவிட்டன.

வலிந்து இளமைப் பருவத்தின் இனிமையான நினைவுகளைத் தன் விழித்திரையில் நிறுத்திப் பார்க்கிறாள். பிள்ளைப் பருவத்தில் அவளை நேசித்த வர்களின் கொஞ்சல்கள். சிறுமியாக இருந்தபோது அவளை அயலவர்கள் அன்பால் நெகிழ வைத்த நிகழ்வுகள். பாடசாலைக்கு ஆயத்தமாகும் வேளை களில் குழந்தைப்பிள்ளைபோல் எண்ணி அவசர அவசரமாகப் பாசத்தின் அதட்ட லோடு அம்மா தீத்திவிட்ட அன்பான காலை உணவு. வயற்பரப்பில் நடந்து போகையில் மலர்களை நுகர்ந்து பார்த்த அழகிய கணங்கள், பாடசாலை, கலாசாலை என்று அவள் பணியாற்றும் காலங்களில் அவளின் மெலிந்த உடலை நோகவிடாது அவளின் பொதிகளைச் சுமந்த தந்தையின் ஆசைக் கரங்கள். அவரின் அன்பான வார்த்தைகள்... அவள் பாதங்களை மோதி மோதி சிலிர்ப்பூட்டி கூச்சலிடவைத்து நடனமாடிய கடல் அலைகள்...

பொங்கிவரும் பெருநிலவில் ஹிக் கடுவ கடற்கரை மணலில் கால் புதைய நடந்து, கைகோத்து காதல்மொழி பேசிய வனா இவன்?

கண்டியின் விரிந்தகன்ற வாவிக் கரையில் அமர்ந்து, தென்றல் வருடிச் செல்லும் சுகத்தில் திளைத்து, அவள் கூந்தலைக் கோதி எதிர்ச்காலச் சொப்பன உலகை அவள் மனதில் கட்டி எழுப்பி யவனா இவன்?

ஆசிரியை பயிற்சிக் கலாசாலையில் எந்தக் காதலனின் பாசம் பொங்கும் கடிதங் களுக்காகக் காத்துக் கிடந்தாளோ அந்தக் கடிதங்களை எழுதியவனா இவன்?

மனிதர்கள் இப்படியும் உருமாறிப் போவார்களா?

கா.ஃப்காவின் 'உருமாற்றம்' கதையில் வரும் ஒரு விற்பனைப் பிரதிநிதி திடீ ரென்று பெரும் கரப்பான் பூச்சியாய்

**புலம்பெயர்ந்து மேல்நாடுகளுக்கு வந்தும்கூட ஆண்கள் சிலர் தம் கோர முனைகளில் வாழ்வை நகர்த்துகிறார்கள். யாரோடும் போன்செய்து கதைக்கக் கூடாது, வாசிக்கக் கூடாது, தொலைக்காட்சி பார்க்கக் கூடாது, இன்டனெற் பார்க்கக் கூடாது என்று தடைகளைக் குவித்தால் ஒரு பெண் என்ன செய்வது? தினமும் வேலையிலிருந்து திரும்பும் கணவனின் கடு கடுப்பும், படபடப்பும் பதற்றத்தையும் பரிதவிப்பையும் அவளுள் குமைப்பது இயல்பாகிவிட்டது. இன்றும் குளிர்மையில் நகர்ந்து இனிமையில் விரிந்து கொண்டிருந்த அழகான மாலை நேரத்தை அவன் நச்சிலே நெய்து வீசிய சொற்களும் செயல்களும் நொறுக்கிச் சிதைத்துவிட்டன.**

மாறியது மாதிரி இவனும் அசுத்த மிருகமாய் மாறிவிட்டானோ?

அவனின் மிருகத்தனமான நடத்தை களை அவளால் அப்போது கற்பனை செய்துகூடப் பார்த்திருக்கமுடியாது.

இரத்தப் பிசுபிசுப்போடு அவளின் முதல் குழந்தையின் பிஞ்சு உடலை உச்சிமோர்ந்து சுகித்து மகிழ்ந்த கணங் கள் இன்று நினைவில் கரைந்தே போய் விட்டன. இன்று மூன்று குழந்தை களுக்குத் தாயாகி, மனங்கள் பசுமை இழந்து, வெம்மையில் தகிப்பதாய் உணர் கிறாள்.

அவள் முகம் வீங்கிச் சிவந்து கொப்பளித்துக் கொண்டிருந்தது.

சிறு சிறு விடயங்களையெல்லாம் பெரிது படுத்தி பிரச்சனையாக்கிக் கொண்டால் வாழ்வு என்னாவது? வாய் திறந்து அவனிடம் ஒரு சொல்லோ கருத்தோ கதைக்க இயலாது.

“குளியலறைக்குச் சென்றால் சற்றுத் துப்புரவாக்கிவிட்டு வந்தால் எல்லோ ருக்கும் நல்லது. பிறகு நான்தான் படிந்து போன ஊத்தைகளைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருக்க வேண்டும். எல்லோரும் ஒத்துழைத்தால் வீடு ஒழுங் காகத் துப்புரவாக இருக்கும் தானே!”

தான் பௌவியமாகச் சொன்னதாகத் தான் அவளின் நினைப்பு.

“தொடங்கிட்டாள்’ பரத்தைக்கு எந்த நேரமும் பைத்தியக் கதைதான். என்னைக் கண்டால் எதிரியைக் கண்டதுமாதிரி ஏதாவது தொடங்கிவிடுவாள்... மற்ற எல்லோருடனும் நடிச்சுக் கதைப்பாள். அவளுக்கு வாய் சும்மா கிடவாது. வெட்கம்கெட்ட நாய். பிள்ளைகளோடு எங்காவதுபோய் செத்துத் தொலை கிறாளில்லை.”

அன்று தலையில் பட்ட அடி சற்று வித்தியாசமான வலியை ஏற்படுத்தியது அவளுக்கு. மிரள்கின்ற தனது குழந்தை களின் விழிகளை நோக்கினாள். கர கரத்தது கண்ணீர். அடுத்தடுத்து சுழலும் யோசனைகளால் கணங்கள் பிய்ந்து கொண்டிருந்தன.

லண்டனில் பெட்டிகளை அடுக்கியது போன்ற அப்பாட்மென்ட் வீடுகளின் செயற்கைத் தன்மையும், கல்லறைத் தன்மை கொண்ட அமைதியான சூழலும் சேர்ந்து அவளை அச்சுறுத்துவதுபோல் இருந்தது. அழுகையும், விசும்பல்ளோடு விம்மல்களும், விறைத்த விழிகளிலிருந்து மடை பாயும் வெள்ளி ரேகைகளும் இரவின் அமைதியை இரக்கமற்று நொறுக்கிக் கொண்டிருந்தன.

கதவின் மணியோசை இசையோடு ஒலித்துக்கொண்டது.

**‘என்னடி தேவடியாள், நான் பேசுறதையே நிப்பாட்டச் சொல்றாய்?’ என்றவன், மேசையில் குடித்துக் கொஞ்சம் மீதியிருந்த விஸ்கி போத்தலைத் தூக்கி அவளை நோக்கி எறிந்தாள்.**

அவசரமாகச் சென்று கதவைத் திறந்தான் அவன்.

“வாங்கோ வாங்கோ... வந்து இருங்கோ” அவன் யாரையோ அமோகமாக வரவேற்பது இவளின் காதில் கேட்கிறது.

“உங்க எங்க நிற்கிறீர்? இங்க வந்து பாரும் யார் வந்து நிற்கிறது என்று”

நடிப்புத்துறையில் கைதேர்ந்த காவிய நாயகன் இவன். அவனது குரல் அவளுள் அருவருப்பைப் பரப்பியது. செய்வதெல்லாம் செய்துபோட்டு ஒன்றும் அறியாத பாவி போல் எல்லோரும் நம்பும்படி நடிப்பதில் மிகக் கை தேர்ந்தவன் என்பது அவளுக்கு மட்டு மல்ல, அவளோடு மிக நெருங்கிப் பழகிய வர்களுக்கும் தெரியும்.

“அவள் ஒரு பைத்தியக்காரி. அவள் இலங்கையிலிருந்து இந்த நாட்டுக்கு வந்தபோது அவனின் நண்பர்களே அவனின் நடத்தை பற்றிக் கூறும்போது அவள் நம்பவேயில்லை. வெறும் முட்டாள் அவள்!”

ஜூலியோ இக்ளிசியாஸ் என்ற ஸ்பெயின் நாட்டு இசைப்பாடகனின் பாடலை அவள் ரசிக்கத் தொடங்கியிருந்த நாட்கள்.

‘I Want to know what love is’ என்ற அவனின் கந்தர்வ இசைக்குரலில் மயங்காதவர்கள் யார்?

அவன் இசையரங்கில் தோன்றிப் பாடுகிறான் என்று அறிந்து, அந்த நிகழ்ச்சிக்குப் போகவேண்டும் என்று கேட்டபோது, ‘உனக்கென்னடி இக்ளிசியாஸ்’ என்று ஏளனமாய் சொன்னவன், ஒரு பூக்கடையில் வேலை செய்யும் போத்துக்காரியோடு, இக்ளிசியாஸின் பாட்டுக் கச்சேரிக்குப் போய் இரவிரவாய் ‘அமர்க்களமாய்’ பொழுதைக் கழித்து விட்டுத் திரும்பியதை எப்படிச் சொல்வது?

அதைப்பற்றிக் கேட்டபோது, அடி போட்டு அவள் வாயை அடக்கியதை எப்படி அவள் நெஞ்சைவிட்டு அகற்ற முடியும்?

சுவரில் மாட்டியிருந்த திருமணப் படத்தைக்கூட ஒருநாள் எடுத்து நொறுக்கினான்.

“இப்போது என் மூன்று சின்னஞ் சிறு குஞ்சுகளின் உயிர்களும் குரல்களும் இன்று என்னுள் ஓடிக் கொண்டிருக்கின்றன. எனது குழந்தைச் செல்வங்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.”

எண்ணச் சுவரில் எதிரொலிக்கும் குரல்கள்!

எதிர்பாராத அந்த நேரத்தில் வந்திருந்தவள் ரஞ்சனிதான்! இனியவள். ஒத்தாசையோடு பழகுபவள். ரஞ்சனியின் வீட்டிலிருந்து பதினைந்து நிமிடங்களில் அவளின் வீட்டிற்கு வந்துவிடலாம். அடிக்கடி நண்பிகள் இருவரும் சந்திப்பதுண்டு. பரதநாட்டியம் பழகும் போது ஏற்பட்ட நட்பு. பரதக் கலையோடு பல்கலைக்கழகத்தில் வைத்தியத் துறையில் இறுதியாண்டில் படித்துக் கொண்டிருக்கிறாள். இப்போது பாய்ந்து பரவும் குதூகலங்களை விட மாய்ந்து மடியும் மனக் குமுறல் களைத்தான் பகிர்ந்து கொள்வார்கள்.

அவள் வெளியே வருவதின் தயக்கத்தின் காரணத்தை ஊகிப்பதில் ரஞ்சனிக்குச் சிரமம் இருக்கவில்லை. தன் துக்கங்கள் என்முன் திறக்கப்படுவதை

அவமானமாகக் கருதும் அவளின் குறுகலை உணர்ந்துகொண்டாள்.

'நானே சென்று பார்க்கிறேன்' என்று கூறிக்கொண்டே மேல்மாடி அறைக்கு வந்தாள்.

"வாக்குத் தத்தங்கள், பொன்னாலான மாங்கல்யம், மஞ்சள் குங்குமம் என்று அவன் சேர்த்துத் தந்த பரிசுகள் எல்லாம் போலியானவை. இவைதான் தொடரும் பரிசுகள்" என்று நண்பியைக் கட்டியணைத்தபடி நீவி நீவி நனைந்து கொண்டிருந்தாள்.

"ஓய்வு எடுத்துக்கொள்... ஒன்றும் யோசிக்காதை. நாளை காலை வந்து பார்க்கிறேன்."

மரங்களில் குளிர் காற்று விசும்பித் தணிவதுபோல் உணர்ந்தாள் அவள்.

ரஞ்சனி ஆதரவாகத் தேற்றினாள்.

பெண்களைத் தூசியாகக் கருதும் ஆண்களின் ஆதிக்க மனோபாவத்திற்கு அவள் மசிந்துபோகும் பெண் அல்ல.

ஆண்களின் வெறியாட்டத்தை அமைதியாகச் சகித்துக் கொள்வதில் உள்ள அபாயத்தை அவள் விளக்கினாள்.

❖❖❖

கார் வீட்டிற்கு முன் வந்து நின்ற வேகத்தில் அவன் கணவனின் விறைப்பு தெரிந்தது.

அவன் ஒரு பட்டயக் கணக்காளன்.

ஒரு தனியார் நிறுவனத்தின் பிரதம கணக்காளன் அவன். அந்த நிறுவனத்தின் இயக்குநர் ஒரு தமிழர். ஏதோ பண மோசடியில் சிக்கி நீதிமன்றமும், வழக்கறிஞர் அலுவலகமுமாக அலைத்துக் கொண்டிருக்கிறார்.

சும்மாவே சுடுதண்ணியாகத் திரியும் பட்டயக் கணக்காளருக்கு சொல்லவா வேண்டும்?

'இன்று அலுவலகத்தில் எதுவும் பிரச்சினையோ?' என்று இவள் தனக்குள் நினைத்துக்கொண்டாள்.

வீட்டிற்குள் நுழைந்ததும் நுழையாதது மாய், 'எங்கேயடி நான் மேசையில் வைத்த சிவப்பு பைல்? என்றான்.

" எந்த சிவப்பு பைல்?"

அப்படி ஒரு பைலை அவள் அன்று எங்குமே பார்க்கவில்லை.

'நான் பார்க்கவில்லை'

'என்னடி பார்க்வில்லையோ?' என்று தொடங்கியவன் பெண்ணினத்தின் மீதான சகல வசைகளையும் வாரிக்கொட்ட ஆரம்பித்தான்.

இது தினசரி பூசைதான்.

அவள் பேசாமல் இருந்தாள்.

'என்னடி நான் கேட்கிறேன். நீ பேசாமல் இருக்கிறாய்? அவ்வளவு கொழுப்போடி உனக்கு?' என்றவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் விகாரமாகிக் கொண்டிருந்தான்.

'பட்டயக் கணக்காளன்' என்ற பட்டம் தாங்கிய அவன் ஒரு அற்ப ஜந்துவைப்போல் அவளுக்குத் தெரிந்தான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'அசிங்கமாய்ப் பேசுவதை நிறுத்து' என்றாள்.

'என்னடி தேவடியாள், நான் பேசுறதையே நிப்பாட்டச் சொல்றாய்?' என்றவன், மேசையில் குடித்துக் கொஞ்சம் மீதியிருந்த விஸ்கி போத்தலைத் தூக்கி அவளை நோக்கி எறிந்தாள்.

அவள் சடாரென்று விலகிக் கொண்டாள்.

சுவரில் மோதிச் சிதறிய போத்தலிலிருந்து தெறித்த விஸ்கியின் மணம் அறையில் பரவியது.

அவள் அமைதியாகத் தனது அறைக்குள் சென்று, தொலைபேசியில் 999 பொலிஸ் எண்ணை அழுத்தினாள்.

❍

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2013இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை

39

3

# இங்கு வீசியது ஒரு சமாதானக்காற்று...!

சூசை எட்வேட்



திருகோணமலையைச் சேர்ந்த சூசை எட்வேட் கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் எழுதி வருபவர். இதுவரை 70க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். "கருத்துக்கலசம்" கவிதைத் தொகுதி, "இவன்தான் மனிதன்" சிறுகதைத் தொகுதி ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

**ம**ணிவண்ணன் அரசாங்க மருத்துவ மனையில் படுத்துக்கிடந்தார். காயகனத்தில் (வாட்)தான் கிடந்தார். முழங்கை மூட்டில் காயத்தோடு எலும்பும் தாக்குப்பட்டு இருக்கிறது' சற்று பிசகியும் இருக்கிறது! இடது கையில் பெரிய பற்றுப் போட் டிருந்தார்கள்! கையை அசைக்காமல், கட்டிலை விட்டு இறங்காமல் இருக்க வேண் டும் என்ற கட்டளைப் பிரகாரம் அவர் காலம் கழிந்தது இரண்டு வாரம்.

முந்தா நேற்றுத்தான் கட்டு பிரிக்கப் பட்டது. புதுக்கட்டு போடப்பட்டிருக்கிறது சிறிதாக. இப்போது கொஞ்சம் பரவாயில்லை! நோவுவலி பெரிதாக இல்லை! எழுந்து நடமாடவும் அனுமதி கிடைத்திருக்கிறது! அவருக்கு இப்போ குதூகலம்தான்!

இவ்வளவு காலமும் அவர் காயத்தைவிட மனக்காயம் பெரிதாகவே இருந்தது! எத்தனை வேலைகளைச் செய்த கையும் காலும், எங்கெல்லாம் ஓடுதாவடியாகத் திரிஞ்ச மனுசன்! என்றாலும் எப்படியான இட்டல் இடைஞ்சலிலும் அவர் மனநிம்மதியாக இருக்கக் கற்றுக் கொண்டவர். படுக்கையில் கிடக்கும் போதும் ஒரு நூல் அவர்கையிலிருக்கும்! அதைப் பார்த்துக் கொண்டே இருந்தாரென்றால் பொழுது ஆனந்தமாகக் கழியும்! வீட்டில் என்றால் நூலகத்தில் எடுத்து எத்தனையோ புத்தகங்களை மாறி மாறி வாசித்து இன்பம் கண்டிருப்பார்! இப்போது ஒரு புத்தகத்தைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறார்!

இவரேன் இங்கு வந்துகிடக்கிறார்? அதுவும் ஒரு கதைதான்' பிள்ளைகள் வெளிநாட்டில், அவர்களும் அனுப்புவார்கள். இவரும் வாழை தென்னை மா பலா என்று பயன்தரும் மரங்களை வளர்த்தெடுத்து சிறு வருமானத்தை ஈட்டிக்கொள்வார்!

வேப்பமரமும், இப்பில்மரமும் சடைத்து வளர்ந்து நிழல்பரப்பி நிற்கிறது. இந்த நிழலால் சூரியஒளிபடாமல் அருகிருக்கும் வாழைகளின் வளர்ச்சி

(ஞானம் 165, பெப்ரவரி 2014 )

குன்றிப்போகிறது! சின்னச்சின்னக் குலைகளைத்தான் ஈனுகின்றன! இதைக்காணச் சகிக்காத அவர், கொப்புகளைத் தறிக்க முடிவெடுத்தார். ஏணி ஒன்றைக் கொண்டு வந்து சாத்தி மரத்திலேறி, மேல் கொப்புக்கும் தாவி ஏறினார். கொப்பு களைத் தறிக்கையில் ஒரு சிந்தனை உதயமாகியது பேரினம் சிற்றினங்களை வளரவிடாமல் செய்கிறது. நான் இந்த வாழைகள் வாழவழி செய்வது போல், சிற்றினம் வாழச்செய்ய வழி இல்லையா!

இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக் கையில் ஒரு ஆவேசத்தில் தன்னையே மறந்துவிட்டார்! அவர் இப்படித்தான், சிந்தனையில் மூழ்கித் தன்னை மறப்பது இடைக்கிடை நடக்கும்! எல்லாச் சந்தர்ப் பங்களிலும் இது வாய்க்குமா!.... மேல் கொப்பிலிருந்து கீழே விழுந்து போனார்! கையை ஊன்றியிருக் கிறார். அந்தக் கைதான் பாதிக்கப் பட்டது! நல்ல வேளை, வேறு ஆபத் தில்லை! மனையாள் கத்திக்குளற, அயலவர் ஓடிவர பாவம் இங்கே வந்து கிடக்கிறார்! கட்டிலைவிட்டு இறங்க முடியாத நாளில், படுத்தபடியே சுற்றுவட்டத்தை நோட்டமிடுவார் மணி வண்ணன். கால்கை முறிந்தவர்கள், இடுப்பு கழுத்து தெறித்தவர்கள், பெரும் பந்தனம் போட்டு தூக்கி கட்டி யிருப்பார்கள்! பெரும் காயப்பட்ட வர்களும் உளர்! அவர்கள் வேதனையில் துடித்துப் பெரும் குரலெடுத்து கத்து வார்கள்! முக்கிமுனகி வேதனையை சகிக்க முயல்வாரும் உளர்! இவர்கள் வேதனையோடு ஒப்பிடுகையில் தன் துன்பம் பரவாயில்லை என்று தோன்றும் அவருக்கு! 'நம் துன்பங்களையே யோசித்துக் கொண்டிருப்பதால் மேலும் நிம்மதி இழக்கப்படும்! பிறர் கஸ்டங் களை கேட்டறிந்தால் நாம் பரவா யில்லை என்று மன ஆறுதல் பிறக்கும்' என்ற உண்மை புலப்பட்டது. பல நூல் களையும் வாசிப்பதால் இப்படியான கருத்துக்கள் வருவது அவருக்கு சாசுவதம்! வேதனையில் கத்தும் போது, தாதிகள் ஓடிவந்து திட்டிப்பேசி அடக்கு வார்கள்! தாய்க்கும் தாதிக்கும் ஓரெழுத் துத்தானே பேதம்! தாயன்பு வேண்டாம், தயவான அன்புப் பேச்சாவது இருக்க வேண்டாமா? அடுத்த தெருவில் இருக்கும் ஒருத்தியை இவருக்குத் தெரியும். அவள் படிப்பை முடித்துக் கொண்டு ஒரு வேலைக்காக எப்படி யெல்லாம் அலைந்தவள்! தகப்பனோடு திரிந்து எத்தனை பேரின் காலைப்பிடித்து கெஞ்சித் திரிந்தவள்! ஒரு வேலைக்காக தவமிருந்தவள்! எப்படியோ இந்தத் தாதி வேலை கிடைத்தது! தகப்பன் உழைக்க முடியாதவன் ஆகிவிட்டதால் அவள் உழைப்பு மிகவும் வேண்டப்பட்டது. அவளால் இன்று தளைக்கிறது!

அவள் கூட நோயாளிகளை வருத்தக் காரரை திட்டுகிறாள்' அதட்டுகிறாள்' ஏனோதானோ பாவனையில் இயந்திரம் போல் இயங்குகிறாள்!......... இவைகளைப் பார்த்துப்பார்த்து மனம்வெதும்பி போனார் மணிவண்ணன்! அருகில் போய் ஆறுதலளிக்க எண்ணுவார். கட்டிலை விட்டு அரக்கமுடியாததால், தன் மன ஆதங்கத்தை கட்டிப்போட்டுவிடுவார்! இப்போது அவருக்கு விடுதலை கிடைத்தது போலிருக்கிறது' நடமாடக் கூடியதாக இருக்கிறது' அனுமதியும் கிடைத்திருக்கிறது!

எதிர்ப்புறக் கட்டிலில் வேதனை யில் ஒருவன் அலறிக் கொண்டி ருந்தான்! தாதிகள் வந்து திட்டித்தீர்க்கப் போகிறார்கள் என்று இவருக்கு விளங்கி விட்டது. அவசரமாக அவனண்டை போனார். அவன் நாடியை ஆதரவோடு தடவிக்கொடுத்தார். காயப்பட்ட காலை யும் வருடி விட்டார். தன்வாயிலே விரலை வைத்து சத்தம் போட வேண்டாம் என்று




**"இது எல்லாம் தேவையில்லாத பிரச்சினையும், சண்டையும்! தமிழரும் நல்லம்: முஸ்லீம்களும் நல்லம்: சிங்களவரும் நல்லம்தான்! எல்லோரும் நல்ல மாதிரித்தான் புழகிவந்தாங்க, இந்த அரசியல்வாதிகள்தான் பதவியப்பிடிக்க, அரசியல் ஆதாயத்துக்காக, இனத்துவேசத்த மூட்டி, சண்டைய உண்டாக்கி, நாட்டையும் மக்களையும் சீரழிக்குறாங்க"**

சைகை செய்தார்! அவருக்குத்தான் சிங்களம் தெரியாதே! அவன் சத்தம் குறைந்து முனகலானது! அன்பின் சக்தியே சக்தி! ''மாத்தயா வத்துறு ஓன,'' அவன் கேட்டான். இவருக்கு விளங்கி விட்டது. தண்ணீர் எடுத்துக் கொண்டுவந்து பருக்கி விட்டார். அவனுக்கு கையிலும் கட்டுப் போட்டிருந்தது! குடித்து முடித்ததும் ''பொஹொமஸ்துதி மாத்தயா'' என்றான். அப்போதுதான் அவனை வடிவாகப் பார்த்தார். தேகமெல்லாம் பச்சை குத்தியிருந்தது! இரண்டு புயங்களிலும் சிங்கத்தலை இருந்தது! கீழ்க் கையிரண்டிலும் குத்துவாள் மிளிர்ந்தது! மார்பில் புத்தரின் சாந்த சொரூபம் சித்திரிக்கப் பட்டிருந்தது!...... எப்படியான மோட்டுப் பிறவிகள் நடமாடுகின்றனர் நம் நாட்டில்! இம்சை அரசனாகவும் இருக்க வேண்டும்' அகிம்சா மூர்த்தி யாகவும் விளங்கி கடவுள் அருள் கிடைக்க வேண்டும்! என்னே அறியாமை! எத்தனை பேர் இவன் கத்திக்குத்துக்கு இலக்காகினரோ! என்றாலும் அவர் அவனை வெறுக்கும் மனதாயில்லை! அவன் முனகிக் கொண்டிருந்தான். அவருக்கு கழிவிரக்கத்தை ஏற்படுத்தியது! தன் இருப்பிடம் ஏகினார். வைப்பறையில் இருந்த 'பிஸ்கற்' பெட்டியொன்றை எடுத்துப் பிரித்து நாலை அவன் கரத்தில் திணித்தார், அவன் புன்னகைத்தான். அடுத்த கட்டிலில் இருப்பவர்கள் இவரை வினோதமாகப் பார்த்தனர். அவர்களில் சிங்களவரும் தமிழரும் கலந்திருந்தனர். அவர்களுக்கும் பரிமாறினார் பொதி காலியாகும்வரை! எல்லோருக்கும் இவரில் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது! அன்பளிப்பால் மட்டுமல்ல, புன்னகை எப்போதும் பூத்திருந்ததாலும்தான்! இவர் கொஞ்சம் வசதியானவர்தான். என்றாலும் வசதி படைத்த எல்லோருக்கும் இந்தமனம் வருமா? இவர், வாழ்க்கையில் வைத்திய மனையைக் கண்டறியாதவர்! அந்தப் பெருமிதத்தில் வாழ்ந்தவர். இன்று வைத்திய மனையில் படுத்துக் கிடப்பதைக் கேள்வியுற்று இனசனம் நண்பர்களுக்கெல்லாம் ஆச்சரியம்! ஆகையால் பலரும் அள்ளுப்பட்டு வந்தனர் பார்வையிட! அதையும் இதையும் கொடுத்தே சென்றனர், இழுப்பறை நிரம்பி விட்டது! அவர்களும் கடன் தீர்க்கவே இவற்றைக் கொடுக்கின்றனர்.அயலிலோ, இன சனத்திலோ ஆரும் நோயுற்றோ நொந்து போயோ இருப்பதாகக் கேள்விப் பட்டால் காணும், போய்ப் பார்த்து

ஆறுதல் சொல்லி, பணமாகவோ பண்ட மாகவோ கொடுத்து விட்டே வருவார்! பார்வையாளர் நேரம் இவர் கட்டிலைச் சுற்றித் தான் பலர் சூழ்ந்திருப்பர்! இம்மாதிரி சூழ்நிலையில் ஒருவர் கூட எட்டியும் பார்க்காதவர் மனம் என்ன பாடுபடும்! இதை உணர்ந்து கொண்ட அவர், அவனண்டை சென்று குசலம் விசாரித்து, மிதமிஞ்சிப் போயிருப்பவற்றை, தோடம்பழம், முந் திரி, அப்பிள் வாழைப்பழம்.... என்று கொடுத்து ஆறுதல் படுத்திவருவார்! அவன் கையெடுத்துக் கும்பிடாத குறை யாய் அவருக்கு நன்றி சொல்வான்! அந்தக்களத்தில் வைத்திய நிபுணரைவிட மணிவண்ணன் கதாநாயகனாகிக் (ஹீரோ) கொண்டிருந்தார்!

அந்தக்களத்தில் புதிதாக ஒரு சிறுவனை கட்டிலிலே கிடத்தியிருந் தார்கள்! கரமொன்றில் பாரிய கட்டுப் போடப்பட்டிருந்தது. முகத்திலும் காயம். மருந்திட்டு ஒட்டுப் போடப் பட்டிருந்தது! எல்லாம் சிகிச்சை அறையில் ஆற்றப்பட்டு இங்கு விடப்பட்டிருக்கிறது! அவனும் ஈனக்குர லெடுத்து அழுது கொண்டிருந்தான்! தாதியர் இருவர் வந்து ‘‘அழவாணா.... அழவாணா.... சத்தம் போடவேணா! இது உங்கட வீடு இல்ல, ஆசுப்பத்திரி.....!’’ சிறுவனுக்கும் அதே கண்டிப்பு வார்த்தைகள்தான்! தகப்பனாயிருக்க வேணும், அருகில் நின்று ‘‘சத்தம் போடாத அழாத, பேசு வாங்கள்’’ என்று மெல்லியகுரலில் சத்தத் தைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபாடு காட்டிக் கொண்டிருந்தார்! பையன் குரல் குறைவதாயில்லை! ‘‘என்ர உம்மா...! உம்மாவப் பார்க்கவேணும்... பார்க்கவேணும்...!’’ என்று குமுறலா னான்! மணிவண்ணனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து போனார் கையில் பிடித்திருந்த புத்தகத்தை வைத்து விட்டு.

‘‘தம்பி.... ராசா.... அழாதையுங்கோ, மருந்து போட்டிருக்கு, கொஞ்ச நேரத்தால் நோக்குறைஞ்சி போயிரும்! உம்மா கெதியா வந்திருவாங்க, வாப்பா பக்கத்திலதானே நிற்கிறார்! பயப் படாதேயுங்க!...’’ இப்படியே இரங்கலுரை ஆற்றும்போது, அவர் கரங்கள் பையனின் முகத்தையும், காயப்பட்ட கரத்தையும் வருடியபடியே இருந்தன! ஆரஞ்சுச் சுளைகளை அவன் வாயில் வைக்க அவன் மென்று சுவைத்து சுவைத்து விழுங்கினான். ‘கண்டோஸ்’ ஒன்றையும் வாயில் வைத்தார்! அதன் சுவையை நன்றாகவே இரசித்தான்! அழுகையை மெல்ல மறந்தான்!

சில ஆரெஞ்சுகளையும், கண்டோஸ் பக்கற்றையும் பக்கத்தில் வைத்துவிட்டு, பக்கத்தில் நின்று நடப்பதை மெய் மறந்து இரசித்துக் கொண்டிருந்த தகப் பனைப் பார்த்தார். அவரைப் பார்த்ததும் இஸ்லாமியர் என்று விளங்கி விட்டது. பாய்த்தாடியோடு இருந்தார்.

இவர் விசாரித்தார் ‘சிறுவனுக்கு என்ன நடந்தது’ என்று. ‘‘எங்கட கச்சுப் பெருநாள் முடிஞ்சும் இவங்கள்ற விளையாட்டு முடிய இல்லப் பாருங்க! பொடியங்களோட சேர்ந்து வெடி கொளுத்தி விளையாடியிருக்காங்க. பெரிய மூலவெடிய இவர் கையில் வைச்சு கொளுத்தியிருக்கிறார். எறியக்கு முன்னம் வெடிச்சிற்றுது! கைநல்லாக் காயம்பட்டிருக்கு முகத்திலயும் வெக்க பட்டு காயம்!’’ ‘‘கதையைக்கேட்டு ஆ’!வென்று அனுதாப ஆச்சரியத்தில் வாயைத்திறந்தார் அவர்!

‘‘இவங்கட உம்மா எங்க? ஏன் வரஇல்ல!’’

‘‘அந்தக் கதைய ஏன் கேக்குறீங்க, அவ வயல் வேலசெய்ய ஈச்சிலம்பத் தைக்கு போனவ, அங்கதான் எங்கட வயல் இருக்கு. இப்ப சரியான மழைதானே, வெள்ளத்துக்க அகப்பட்டு

வரமுடியாம இருக்கிறா..... நான் வீட்ட இருந்து கிண்ணியா ஆசுபத்திரிக்கு கொண்டு போனனான். அங்க சுகப் படுத்த ஏலாதெண்டு 'அம்புலன்சு'ல எங்கள இங்க அனுப்பிவைச்சாங்கள்! காயப்பட்ட உடனே நான் பயந்துபோனன் கை துலைஞ்சுதாக்குமெண்டு! இங்க வந்த பிறகுதான் தெரிஞ்சுது பயப்படத் தேவையில்ல எண்டு! "அம்மாவுக்கு சேதி தெரியுமா?"

"அவவுக்கு செல்போனில தெரிஞ்சாக் களிட்ட சொல்லியிருக்கிறன்' கேள்விப் பட்டு அழுது குழறியிருப்பா!"

மகனைக் காணமுடியாமல் அந்தத் தாய் மனம் எப்படியெல்லாம் சஞ்சலப் பட்டு அவதிப்பட்டிருக்கும்......! மனக் கண்ணால் நினைத்துப்பார்த்து வருத்தப் பட்டார் இவர்! தன் கட்டிலில் படுத்துக் கிடந்து புத்தகத்தைக் கையி லெடுத்தார். ஆனால் புலன் அங்கு செல்ல வில்லை. பையனின் தாயின் வேதனை யான முகமே முன் தோன்றியது! இப்படியாக அன்றாடம் நடக்கும் வேதனை யான காட்சிகளைக் கண்டும் கேட்டும் பழக்கப்பட்டுப்போன அவர்களுக்கு, அன்றைய பொழுதும் போய், நாளைய பொழுதும் புலர்ந்தது.

காலைச்சாப்பாட்டுக்காக சத்தம் போட்டு அழைத்தனர் அதற்கான தாதியர்! தட்டுகளோடு வரிசையில் நின்று வேண்டி வந்தனர். நடக்க முடியாத வர்களுக்கு உதவியாளர்கள் பெற்றுக் கொடுத்தனர்! சிறுவனின் வாப்பாக் காரன் காலையுணவைப் பெற்று ஊட்டியும் விட்டார். அதிகாலையில் சில பெண்கள் காலைப்பலகாரம் கொண்டு வருவர். சிலர் அதையும் வேண்டுவர். அவர் பார்த்துக் கொண்டே இருந்தார், வாப்பாக்காரன் சாப்பிட்டதாகத் தெரிய வில்லை! வளாகத்துள் சிற்றுண்டிச்சாலை யுண்டு, புறத்தில் கடைகளும் உண்டு. இவர் வெளிக்கிட்டதாகத் தெரிய வில்லை!

மணிவண்ணன் அவரை அழைத்தார். "நானா இங்க வாங்கோ" அவர் வந்து நின்றார். "நீங்க ஒண்டும் சாப்பிட இல்லையா?!" இல்லை என்று தலையை மட்டும் ஆட்டினார் பரிதாபமாக! "ஏன்......?"

"நான் பொடியனுக்கு திடீரெண்டு இப்படியானவுடனே, எனக்கு 'அப்செற்றா' கிற்றுது! ஒரு ஆயத்தமு மில்லாமல் பக்கற்றுக்க காசும் இல்லாமல் கிண்ணியா ஆசுபத்திரிக்கு கொண்டு போனனான். அவங்கள் இங்க அம்பு லன்சில அனுப்பினாங்கள். அதால தான்....! " இவர் பையிலிருந்து ஐம்பது ரூபாயை எடுத்து நீட்டினார். அவர் வேண்டத்தயங்கினார். பசிக்களை முகத்தில் தெரிந்தது! இவர் வற்புறுத்தி காசை சட்டைப்பையில் திணித்தார்! அவர் வெளியே போய்வந்தார் பசியாறி! அந்த நானா மணிவண்ணனோடு ஐக்கிய மாகிவிட்டார். அடிக்கடி அவரண்டை வந்து வீட்டுநிலைமை நாட்டுநிலைமை, வாழ்க்கை நிலைமை எல்லாம் பகிர்ந்து கொள்வார்!

திடீரென்று அந்த பச்சைக்குத்துக் காரன் மணிவண்ணனை அழைப்பது தெரிந்தது! இவர் நானாவைத்தான் அனுப்பினார். இவருக்கு கொடுக்குமாறு ஆரெஞ்சுப் பழங்களை கொடுத்து விட்டிருந்தான்!

அவருக்கும் நண்பர்கள் அன்பர்கள் தாராளம்தான்! நன்றிக்கடன் தீர்ப்பதில் அவா முனைப்புக்காட்டினார்! தீமைக் குத் தீமை செய்து பழிதீர்ப்பது போல் நன்மைக்கு நன்மை செய்வதும் இருக்கும் தானே! இதே பாணியை மற்றவர்களும் பின்பற்றலாயினர். அவரளவு கொடுப்ப னவுகள் இல்லா விட்டாலும், அன்பு ஆதரவான கதைபேச்சு சரளமான தாகியது! சிங்களவர், தமிழர், இஸ்லா மியர் என்ற பேதத்தைக் காண முடிய வில்லை! மனிதம் முக்கிய இடம் பெற்றுக்கொண்டிருந்தது.

அங்கே! மணிவண்ணனுக்கு வீட்டிலிருந்தும் சாப்பாடு வரும். சொந்தக்காரர் அருகில் இருப்பதால் அங்கிருந்தும் வரும். ஆசுபத்திரிச் சாப்பாட்டை நானாவுக்கே கொடுத்து விடுவார். பையனுக்கு சுவைப் பண்டங்களைக் கொடுப்பதில் கவனமெடுப்பார். இப்படியே நாட்கள் சென்று கொண்டிருக்கையில்,

இரண்டு பேரை புதிதாக படுக்கையில் அனுமதித்திருந்தார்கள்! அவர்கள் சாரமும் சட்டையும் அணிந்திருந்தார்கள். கூடவந்தவர்கள் இராணுவத்தினர்! சீருடையில் நின்றனர். கொஞ்ச நேரம் இவர்களைக் கவனித்து உரையாடிவிட்டு போயினர். கட்டிலில் கிடந்த இருவரும் இராணுவத்தினர் என்பது உறுதியாயிற்று.

அதன் பிறகு ஒருவரும் அவர்கள் பக்கம் திரும்பியும் பார்ப்பதில்லை!

மணிவண்ணன் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் நிலைகுத்தி வேறெங்கோ பார்த்துக் கொண்டிருப்பார்! முகம் விறைப்பாக இருக்கும்! ஆனால் இருவரும் இளமையானவர்கள். இராணுவத்தில் சேர்ந்து அதிக காலமிருக்காது!

மணிவண்ணன் சும்மா உலாத்தல் போடுவார், உலாவுகையில் ஒரு சுகத்தைக் காண்பவர். தேகாரோக்கியமும் கூட! அப்படி உலாவருகையில் அந்த இராணுவத்தினரை உற்றுநோக்கிக் கொண்டிருப்பார்! அவர் இதழ்கள் புன்னகையைச் சிந்தியவாறிருக்கும்! இதே புன்சிரிப்பு மெள்ள மெள்ள அவர்கள் முகத்திலும் திகழலாயிற்று! மேலுமது பரந்த சிரிப்பானது! எல்லாம் பூப்பந்தின் இயற்கைக் குணம்தான' எதிர்விளைவுகள்தான்!

இவருக்கு உடனடியாக நெருங்கிக் கதைக்க பெருவிருப்புத்தான். ஆனால் சிங்களம் பேசவராதே! வைத்தியமனை முன் சுவரில் பல வாசகங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, 'புன்னகையே சமாதானத்தின் முதல்படி,' என்று! அவர் அனுபவத்தில் கண்டுணர்ந்து வருகிறார் இதை! நானாவை அழைத்துக் கொண்டு அவ்வீரரண்டை அடைந்தார்! நானாவுக்கு நல்லாச் சிங்களம் பேசவரும்! திருகோணமலை மூவினமக்களும் சமமாக கலந்துறையும் இடம். இங்கு பலபேருக்கு இருமொழியும் பேசவரும்! இருவரும் புன்னகைத்தபடி, "சனிப்ப கோமத...?" என்று கேட்டு நின்றனர். "சனிப்ப கொந்தாய்" என்று சிரித்தனர். அவர்களுக்கும் தமிழ் தெரியாது. இஸ்லாமிய நண்பர்தான் மொழி பெயர்ப் பாளரானார்! "உங்களுக்கு காலிலே பெரிதாகக் கட்டுப் போட்டிருக்கு, என்ன நடந்தது?" "கண்ணி வெடி எடுக்கிற வேலதான் இப்ப நடக்குது. நாங்க மேற்பார்வைக்குத்தான் நிற்கிறநாங்கள். எண்டாலும் மிதிவெடி எங்கடகாலப் பதம் பார்த்துற்று! பாதுகாப்பான சப்பாத்துப் போட்டபடியா அவ்வளவு பாதிக்கல! அதிர்வில காலிரண்டும் வீங்கிப் போச்சுது! காலக்கீழ வைச்சு நடக்க ஏலல்ல!" இவர்கள் ஆறுதல் வார்த்தைகள் கூறி வந்துவிட்டனர். மணிவண்ணனைத் தெரியாதா, வைப்பறையில் இருந்தவற்றை எடுத்து பரிமாறி விட்டு வந்தார்! அவர்கள் அகமும் முகமும் மலர்ந்தது! ஒருவரின் கால்தான் மிகவும் பாதித்திருந்தது. அவர் காலை கீழே ஊன்றி நடக்க மிகவும் கஸ்டப் பட்டார்! அடிக்கடி சலம்விட கழிவறை போக மிகவும் சிரமப்பட்டார்! ஒவ்வொரு கட்டிலையும் பிடித்து அரக்கிக் கொண்டிருந்தார்! அவருக்கு உதவி தேவைப்பட்டது! இராணுவத்தினருக்கு வைத்தியமனையில் அனுமதித்ததோடுசரி, அவர்கள் கடமை முடிந்துவிட்டது! உற்றவர்கள் எங்கோ தூரத்தூரில்!

மணிவண்ணனும் நானாவும்தான் தோள் கொடுத்தனர்! அவர்கள் உதவி அடிக்கடி வேண்டப்பட்டது! இப்போது இந்த இராணுவவீரர்களின் முகம்

எப்போதும் சிரித்திருந்தது! இஸ்லாமிய நண்பரின் உதவிதான் எல்லோருக்கும் அடிக்கடி வேண்டப்பட்டது! வெளிக் கள வேலைகள் வேண்டப்பட்ட வற்றை வேண்டிக்கொடுக்கும் உதவி கள் பெரிதும் வேண்டப்பட்டது! அவரும் முகம் கோணாமல் முக மலர்ச்சியோடு எத்தனை தரமும் வெளியே நடந்து திரிவார்! முக்கியமாக சுடுகலனில் சுடுநீர் பெற்றுக் கொடுப்பதுதான் இடம் பெறும். சேவை செய்வதில் ஒரு ஆன்ம திருப்தியைக் காண்கிறார் போலும்!

இரவு பத்துக்குமேல் இருக்கும் நேரம்! எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்தில்! மணிவண்ணனுக்கு தூக்கம் வரவில்லை. அவர் வழக்கமான தன் புத்தகத்தைப் பிடித்தபடி நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது இரண்டு தாதிகள் அங்கே வந்தனர். ஒரு இராணுவ வீரனைத்தான் இமைவெட்டாமல் பார்த்து நின்றனர்! மணிவண்ணனின் புலன் புத்தகத்தில் இல்லை! "இவருக்கு ஊசிபோட வேணும்' நல்லா நித்திரை அடிக்கிறார்' கிட்டப் போகப் பயமாயிருக்கு! ஆமிக்காரன் என்ன செய்வானோ தெரியாது! என்னப்பா செய்வம்!?" அவர்கள் தயங்கி நின்றனர்!

மணிவண்ணனுக்கு விசயம் விளங்கி விட்டது. அவர் எழுந்து நின்றார், அவர் கண்கள் நானாவைத்தான் தேடின. அவரும் ஆளில்லாத கட்டிலில் கிடந்து நல்லநித்திரை! மணிவண்ணன் துணிவை வரவழைத்துக் கொண்டு அந்தக் கட்டி லண்டை போனார். "மாத்தயா..... மாத்தயா நகின்ட..... நகின்ட..... என்று தட்டித்தட்டி எழுப்பினார். அவன் மிகுந்த சிரமப்பட்டு கண் விழித்தான். நல்ல நித்திரை கெட்ட சினம் முகத்தில் தெரிந்தது! என்றாலும் மணிவண்ணனின் முகத்தைக் கண்டதும் சிரிப்பாக மாறியது! அவர் ஊசிபோட தாதிகள் நிற்கிறார்கள் என்பதை சைகையால் நடித்துக் காட்டினார்!

அவன் எழுந்திருக்க முயற்சித்தான், அதற்குள் தாதிகள் வந்துவிட்டனர். "எழுந்திருக்கத் தேவையில்லை" என்று சிங்களத்தில் சொல்லி, மருந்தைப்பூசி ஊசியேற்றிவிட்டுச் சென்றனர்.

மணிவண்ணன் அந்த இடத்தை தடவிக் கொடுத்துவிட்டு, அவரைப் படுக்கவைத்து போர்த்துவிட்டு வந்தார்! இந்தச் சம்பவத்திற்குப் பிறகு தாதி மாரும் அவரில் ஒரு தனிமரியாதை! 'மணிவண்ணன் ஐயா' என்றே அழைத்துக் கொண்டுவருவர்!

எல்லோர் நெஞ்சிலும் ஒரு கேள்வி...? 'இவர் நெடுகிலும் ஒரு புத்த கத்தை பிடித்து பார்த்தபடி இருக் கிறாரே, உலகமே அதில் இருப்பதைப் போல! அப்படி என்னதான் அதில் இருக்கிறது? இந்தக் கேள்வி பல ருக்கும் இருந்தாலும், பெரிதும் பொருட் படுத்தவில்லை எவரும்! இரு இராணு வத்தினருக்கும் இதை அலட்சியப் படுத்த முடியவில்லை! கொஞ்சம் நடக் கக்கூடியவன் அவர் அருகில் வந்தான். "மொக்கத பொத்த பலன?" அவர் அந்தப் புத்தகத்தை அவர் கையில் வைத்தார். அதைப்பார்த்ததும் மிகுந்த சந்தோசப்பட்டு சிரித்தான்! சிங்கள எழுத்துக்களும் அதில் தெரிந்தன! "தமிழ் மூலம் சிங்களம்' சிங்களம் மூலம் தமிழ் படிக்கும் புத்தகம்தான் அது!" தான் அதைப்படித்து விட்டு தருவதாக வேண்டிச்சென்றான்! இருவரும் அதைச் சத்தம் போட்டு படிப்பது கேட்டது! அவர்களுக்கும் தமிழ் படிக்க மிகுந்த ஆவல் என்று தெரிந்தது! இருவரும் மாறிமாறிப் படிப்பதை பார்த்து இரசித்துவிட்டு, மணிவண்ணன் நானா வையும் அழைத்துக்கொண்டு அவர்க ளண்டை போனார். அவர்கள் அந்தப் புத்தகத்திலிருக்கும் சொற்களை எல்லோ ரும் கேட்க பெரிதாக வாசித்துக் காட்டினர். பள்ளா - நாய், பூஸா - பூனை, மியா-எலி, அரக்க - மாடு, எலுவ - ஆடு,

அக்வெயா- குதிரை, சிங்கேயா- சிங்கம், கொட்டியா- ? .......'' இதுக்கு அர்த்தம் சொல்லத் தேவையில்ல, எல்லோருக்கும் தெரியும்!'' என்று சொல்லிச் சிரித்தனர்! எல்லோரும் சேர்ந்து சிரித்தனர்!

அப்போது சந்தர்ப்பம் பார்த்து மணிவண்ணன் ஒரு கதை சொன்னார், ''எனக்குச் சிங்களம் தெரியாததால எத்தினையோ தரம் ஆமிக்காரரிட்ட அடிவாங்கியிருக்கிறன்!.....அதுக்குப் பிறகுதான் சிங்களம் படிக்கிற இந்தப் புத்தகம் வாங்கினனான்!'' நானா மொழி பெயர்த்துச்சொன்னதும், அவர்கள் அனுதாபத்தோடு அவரை ஏறிட்டுப் பார்த்துவிட்டு வெட்கித் தலை கவிழ்ந்தனர்!..... இவரைப்போல எத்தனை நல்லவர்கள், அப்பாவிகள் அடிவாங்கி யிருப்பார்கள்! அடிமட்டுமா வாங்கி னார்கள்! சிறிதுநேரம் மௌனம் நிலவியது! மௌனம் அதிகம் பேசும்!

''இப்பவும் அப்படி நடக்கிறதா?'' ஒருவன் கேட்டான், ''இல்ல இப்ப இல்ல, இது சண்டைக்காலத்திலதான் நடந்தது!'' மீண்டும் மௌனம்! மற்றவன் பேசினான், ''இது எல்லாம் தேவையில்லாத பிரச்சி னையும், சண்டையும்! தமிழரும் நல்லம்' முஸ்லீம்களும் நல்லம்' சிங்கள வரும் நல்லம்தான்! எல்லோரும் நல்ல மாதிரித்தான் பழகிவந்தாங்க, இந்த அரசியல்வாதிகள்தான் பதவியப்பிடிக்க, அரசியல் ஆதாயத்துக்காக, இனத்து வேசத்த மூட்டி, சண்டைய உண்டாக்கி, நாட்டையும் மக்களையும் சீரழிக்குறாங்க''

மற்றவன் சொன்னான், ''நாங்கள் வறுமை யால வேல இல்லாததால தான் இதில சேர்ந்து அநியாயத்துக்குத்துணை போறம்!''

இதன் பிறகு மணிவண்ணனில் அவர் களுக்கு அனுதாபம் பிறந்திருக்க வேண்டும்! அன்பளிப்புகளும் உபசரிப்பு களும் பலமாகவே இருந்தன!

பல சந்தர்ப்பங்களில் எல்லோரும் ஒன்றுகூடி அரட்டையரங்கம் ஆரம்பமாகி விடும்! சிரிப்புக்கும் குதூகலத்துக்கும் குறைவே இல்லை! மணிவண்ணன் இடைக்கிடை பகிடிகள்விட்டு எல்லோ ரையும் குதூகலிக்க வைப்பார்!

ஒரு வயதானவர் படுத்துக்கிடந்தார். அங்கு அப்போது அவர்தான் வயதில் கூடியவர். கோணமலை என்று பெயர். அவர் எழும்பித்திரியமாட்டார். அனேகமாக படுத்துத்தான் கிடப்பார்.

தாதிகள் கோணமலை ஐயா என்று கூப் பிட்டுக்கொண்டு அவரண்டை போவர். இப்படி அடிக்கடி நடக்கும்! ஒருநாள், 'கோணமலை ஐயா.... கோணமலை ஐயா என்று கூப்பிட்டுக்கொண்டு வந்தனர் தாதிகள். அவர், ''கோணமலைக்கு முன்னால் 'திரு'வப் போட்டால் என்ன வரும்?'' திருகோணமலை. என்று சொல்லி சிரித்தனர் அவர்கள்! அவர்கள் சிரிப்போடு எல்லோரும் கலந்தனர்!

பார்வையாளர் நேரத்தில் அன்பர் கள் இனசனம் அதையிதை கொடுக்கும். அன்று கூடக்கிடைத்தவர், எல்லோ ருக்கும் பரிமாறி மகிழ்வார்! இது விசயத்தில் மணிவண்ணன் எப்போதும் முதலிடம்தான்! புன்னகை மன்னனும் அவர்தான்! புன்னகையால் அன்ப ளிப்பால் இந்த இனிமைச் சூழ்நிலைக்கு அடித்தளமிட்டவரும் அவர்தான்! இப்படி யாக நல்லுறவு துளிர்விட்டு வளர்ந்து வருகையில் அதற்கும் சோதனை வரலா யிற்று!

திடீரென்று மருத்துவமனை பரபரப் பானது! எல்லோர் முகத்திலும் கலவரம்! ஊழியர்கள் அங்குமிங்கும் ஓடித்திரிந்தனர்!

புதிதாக காயக்காரரை கொண்டுவந்து போட்டவண்ணமிருந்தனர்! அதிகம்பேர் எரிகாயங்களும், வெட்டுக்காயங்களும் தான்! அவர்கள் வேதனை தாளாது முனகியும் கத்துவதாயுமிருந்தனர்! ...ஆ! அம்மா....ஐயோ.. தாங்கேலாமல் இருக்கே... என்ர பரமேசா! கோணேசா!

அத்தனைபேரும் தமிழர் என்று விளங்கியது! பரபரப்பாக ஓடித் திரிந்த தாதியரில் ஒருவரை மறித்து 'என்ன நடந்தது?' என்று கேட்டார் மணிவண்ணன். அவள்மிரண்டு கதைக்கப் பயந்தவளாய் ஏதோ சைகை செய்துகொண்டு அப்பால் போனாள்!

இதற்குள் நானா வெளியிலிருந்து வந்தார். அவரும் பரபரப்பாகவே காணப் பட்டார்! மணிவண்ணனுக்குத்தான் முதலில் விசயத்தைச் சொன்னார்! எல்லோருக்கும் விளங்கிவிட்டது! நானா சொன்ன செய்தி இதுதான், மணிக்கூட்டு கோபுரத்துசந்தியில் புதிதாக பெரிய புத்தர்சிலை அமைத்திருந்தார்கள். பலரின் எதிர்ப்பும் இருந்தே வந்தது! யாரோ இரவு வேளையில் கைக் குண்டை எறிந்திருக்கிறார்கள்!...... அதன் பிரதிபலிப்பாக அதன் அண்டை யில் இருந்த கடைகளுக்கு தீவைத்தி ருக்கிறார்கள்! வாள் வெட்டும் நடந்தி ருக்கிறது! மீண்டும் இனக் கலவரம் மூளும்போலுள்ளது!

நானாவும் சேதி சொல்லிவிட்டு ஒருமூலையில் போயிருந்து யோசித்துக் கொண்டிருந்தார்! ஊழியர்கள் ஓடித்திரிந் தார்கள். ஆனால் வழக்கமான கல கலப்பு' சிரிப்பொலி' பேச்சொலி எல்லாம் காணாமலே போய்விட்டன! எங்கும் நிசப்தமே நிலவியது! அது பயங்கர அமைதியாக இருந்தது! ஏதோ பயங்கரம் நிகழ்வதற்கு முன்னறிவிப்புப் போலுமிருந்தது! எல்லோர் இதயமும் பெரிதாக மேளம் தட்டிக்கொண்டிருந்தது! மூளை தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தது!

சிங்களத்தாதிகளும் தமிழ்த்தாதி களும் வேறுபட்டு நின்றனர்! தனித் தனியே கூட்டுச் சேர்ந்து குசுகுசுத்தனர்! இந்தத் திடீர் சூழ்நிலை மாற்றம் மணிவண்ணனுக்கு தலையில் இடித்துக் கொண்டே இருந்தது! இந்நிலை நீடித்துக் கொண்டிருப்பதை அவரால் சகிக்கவே முடியவில்லை!

படுக்கையை விட்டெழுந்து சுற்றிவர கண்களை மேயவிட்டார். எல்லோரும் கிடந்தபடி எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்! சிலர் கண்களை மூடி நித்திரைபோல் பாசாங்கு காட்டினர்!

புதிதாக வந்த காயக்காரர் வேதனைக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர்! இப்போது அவர்களிடம் குசலம் விசாரிக்கச் சென்றால், அவர்கள் வேத னையை - ஆத்திரத்தைக் கொட்டுவர்! அது நிலைமையை மேலும் மோசமாக்கி விடும்!

பச்சை குத்துக்காரன், நெஞ்சில் இருக்கும் புத்தர் சித்திரத்தில் அறைந்து அறைந்து ஏதோ புலம்பிப் புலம்பி ஆத்திரத்தை வெளிப்படுத்திக் கொண் டிருந்தான்! அவனையும் இப்போதைக்கு தவிர்க்கவேண்டும்! நானாவைப் பார்த் தார், குறிப்புணர்ந்து அவர் அருகில் வந்தார். அவரோடு இராணுவத்தினர் கட்டிலில் இருந்து ஒவ்வொரு கட்டி லாகச் சென்று பிஸ்கற்றுகளையும், ஆரெஞ்சுகளையும் மலர்ந்த முகத்தோடு பரிமாறி மார்புகளையும் வருடிக் கொடுத்துக் கொண்டே வந்தார்! அப்போது அவர் சொன்ன சமாதானச் செய்தி இது, ''தோழர்களே! நாம் என்றும் அன்பான நண்பர்களாகவே இருப்போம்! சுமாதானமாய் வாழ்வோம்! மோடை யாக்களால் (மடையர்களால்) அரசியல் இலாபமீட்டுபவர்களால் ஏற்படும் அசம் பாவிதங்களால் நீங்கள் உங்கள் மனதைப் பழுதாக்கிக் கொள்ளாதீர்கள்! அன்பே சமாதானம்! அதுவே கடவுளின் இல்லம்!''

அந்தக்களம் பழையபடி களை கட்டியது!

❍

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2014 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| வெட்டுப்புள்ளி | திருமதி மாலாதேவி மதிவதனன் | யாழ்ப்பாணம் |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| எதிர்வீடு | திரு. சந்திரன் சண்முகம் | அவுஸ்திரேலியா |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| காணாமல்போன ஒருத்தி | அனுராதா பாக்கியராஜா | களுவாஞ்சிக்குடி. |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| பாவம் சுடும் | உ. நிசார் | மாவனல்லை |
| கோடை மழை | ச. முருகானந்தன் | கொழும்பு 06 |
| பாவ மன்னிப்பு | நெடுந்தீவு செ. மகேஷ் | யாழ்ப்பாணம் |
| காத்திருந்த காதல் | திருமதி மைதிலி தயாபரன் | வவுனியா |
| தாத்தாவை மீட்டெடுத்த பேரன் | கண மகேஸ்வரன் | கரவெட்டி |
| சிற்றின்பம் | ஆனந்தராணி நாகேந்திரன் | நெல்லியடி |
| திருமுருகாற்றுப்படை | சந்திரகாந்தா முருகானந்தன் | கொழும்பு 06 |

நடுவர்கள்: பத்மா சோமகாந்தன், சிற்பி சிவசரவணபவன், செங்கை ஆழியான்

**(ஞானம் 117, பெப்ரவரி 2015)**

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2014இல் முதற் பரிசு பெற்ற கதை

40



# வெட்டுப்புள்ளி

திருமதி மாலாதேவி மதிவதனன்



திருமதி மாலாதேவி மதிவதனன் கவிதை கட்டுரை, சிறுகதை, பாடலாக்கம், நாடகம், விமர்சனம், ஓவியம் போன்ற துறைகளில் ஈடுபட்டு வருகிறார். அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்ற இவர் தற்போது நெல்லியடி பிரதேச செயலகப்பிரிவில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். பல்வேறு இலக்கியத் துறைகளில் பலதரப்பட்ட போட்டிகளில் கலந்து இதுவரை பத்துக்கும் மேற்பட்ட பரிசில்களை வென்ற இவர், 'சமூகஜோதி','கலைச்சுடர்' ஆகிய விருதுகளைப் பெற்றவர். தற்போது அளவெட்டியில் வசித்து வருகிறார்.

இவரது தொடர்பு முகவரி : மங்குனியன் வளவு, அளவெட்டி மத்தி, யாழ்ப்பாணம்.

ஆலயமணியின் ஆயத்த ஓசை அலாரமாய் அவள் காதில் விழுந்து தூக்கத்தைத் துரத்தவும் விழித்துக் கொண்டாள். போர்வைக்குள் பாது காப்புத் தேடிக் கொண்டிருந்த தன் இளைய மகளை மேலும் தூங்கவிடாது "செல்லம் எழும்புங்கோ! அஞ்சு மணி ஆச்சு, எழும்பிப் படியுங்கோ சோதினை வருதெல்லே" தாயாரின் எழுப்புதல் அனத்தலாய்க் காதில் விழுந்தபோதும் போர்வையை மீண்டும் இழுத்துப் போர்த்தபடி மறுபக்கம் புரண்டு படுத்தாள் மலரவள். போர்வையைச் சற்று விலத்தி "எழும்பம்மா எழும்பு" என்ற தாயின் கரங்களைப் பற்றி "இரவு நெடுநேரம் படித்தேனம்மா. கொஞ்சநேரம் விடுங்கோவன் அம்மா கண்ணைத் திறக்க முடியல" எனக் கெஞ்சும் மொழியில் மலர் கேட்கவும் சாருமதி மனம் கரைந்தாள். "நல்லாத் தூங்கு அப்புறம் ரெண்டு புள்ளி போதாது மூன்று புள்ளி போதாது என்று கவலைப்படுவாய் அப்ப தெரியும்" என்று கூறிக்கொண்டே தன் வழமையான வேலைகளைக் கவனிக்க எழுந்தாள் சாரு. மறு ஓரத்தில் சுருண்டு படுத்திருந்த கணவனைக் கரிசனையோடு நோக்கி "எழும்புங்கோவன் பனம்பழம் பொறுக்கப் போக வேணுமெல்லோ. விடியமுன் போனால்தான் பொறுக் கலாம். பிந்தினால் ஆரும் எடுத்துப் போடு வினம்" என்று கூறியபடி குசினுக்குள் நுழைந்தாள்.

(ஞானம் 179, ஏப்ரல் 2015)

**குழம்பிய முகத்துடன் வீடுவந்து சேர்ந்த சாருமதியைக் கணவனது கேள்விக் கணைகள் துளைத்தெடுத்தன. "ஏனப்பா எரிஞ்சு விழுகிற? விதானையார் என்ன சொன்னவா? வீடு எப்ப வருமாம்?" திரும்பவும் கேட்டான். "புள்ளிபோட்டு அனுப்பி வைப்பினமாம். ஆக்கள் கூடின குடும்பம், சின்னப்பிள்ளையள் கனக்க இருக்கிற குடும்பம், விதவைக்குடும்பம், ஊனமுற்ற குடும்பங்களுக்கு கூடின புள்ளிகள் கிடைக்கும். பத்துப்புள்ளிக்கு மேல வந்தாத்தான் வீடு கிடைக்குமாம். ஒரு மாதத்துக்குள்ள பட்டியல் வந்திடுமாம். அலுவலகத்தில் ஒட்டி விடுவாவாம். அப்ப வந்து பாக்கட்டாம்." சாரு கொடுத்த விளக்கத்திலிருந்து 'எங்களுக்கு வீடு கிடைக்காது' என்ற முடிவிற்கே இன்பரூபன் வந்துவிட்டான். அவனது பலவீனமான இதயம் படபடவென வேகமாத் துடித்தது.**

பச்சை விறகு தீப்பற்ற முடியாமல் அவள் மனது போலவே புகைந்து கொண்டிருந்தது. 'தேத்தண்ணி குடுத்தால் சூடாக் குடிச்சிட்டுப் போவார்' என எண்ணிய போதும் அடுப்பு அவள் மனதிற்கு துணைவர மறுத்தது. அவளுக்கு எதுதான் துணை வந்தது. எல்லாமே இழப்புத்தான். காங்கேசந்துறையில் காணி வீடுவாசல் என வசதியாக வளர்ந்து இளமைப் பருவத்தில் இடம்பெயர்ந்து எல்லாம் இழந்து ஏதிலியாய் அலைந்து எல்லை என வன்னியில் மணவாழ்வு கண்டு இறுதிப்போரில் இரு மழலைகளைப் பறிகொடுத்த இளம் தாய் அவள். எறிகணையின் இரும்புத் துண்டங்கள் அவள் மாங்கல்யத்தைக் குறிவைத்த போது உயிர் தப்பிக் கொண்டது. ஆனால் உடலின் சில பாகங்களில் தங்கி இடம் பிடித்துக் கொண்டன. முள்ளந்தண்டிற்கு அருகில் உள்ளே சென்ற தோட்டாச் சன்னம் ஒன்று அவனைப் பலத்த தொழில் செய்ய விடாது பதம் பார்த்துக் கொண்டது. அவள் கணவனோ பார்த்தால் முழு மனிதன் ஆனால் பலவீனத்தின் முழுக் குத்தகைக்காரன். 'ம் ம். ம்.' சாருமதியின் பெருமூச்சின் வெப்பத்தால் அடுப்பில் அனல் பற்றிக்கொண்டது போலும். முளாசி எரிந்து தண்ணீர் கொதித்துப் பறந்தது. தேயிலைச் சாயம் ஊறப்போட்டவள் சீனிப் போத்தலைத் திறந்து பார்க்கும்போதுதான் சீனி நேற்றே முடிந்து போனதை உணர்ந்து கொண்டாள். "விடியத் தேத்தண்ணி எண்டாலும் வடிவாக் குடிச்சால்தான் உசார் வரும்" என நினைத்தபடி பேணிகள் சிலவற்றைத் தடவிப் பார்த்தாள். எல்லாம் வெறுமையாகவே இருந்தன. அவள் வீட்டுக் கோர்க்காலி போல. "என்னப்பா நான் போகட்டே? பனம்பழம் பொறுக்க" என்ற கணவனுக்கு வெறும் தேநீரை வடித்துக் கொடுத்தாள். தனது இயலாமையையும் வீட்டின் இல்லாமையையும் எண்ணி அவனால் மனம் வருந்தவே முடிந்தது. மடமடவென அண்ணாந்து சாயத்தை அடித் தொண்டைக்குள் இறக்கிவிட்டு பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கினான். தூக்கத்தைக் கலைத்துவிட்டுத் தன் கால்களைக் கட்டிக்கொண்டு நின்ற மகளுக்கு வெறும் சாயத்தை எப்படிக்கொடுப்பது என்ற வேதனையுடன் "இப்ப பிள்ளை இதைக் குடிப்பாளாம், பின்னேரம் அம்மா இனிக்க இனிக்க தேத்தண்ணி தருவாவாம்" எனத் தலையை வருடிவிட்டபடி சொன்னாள். தாயின் அன்பான தலைவருடல் கசப்பைக்

கரையச்செய்ய "இது போதும் அம்மா" எனக் கூறியபடி குப்பிவிளக்கை உயரப் பேணியில் வைத்துவிட்டுப் பாடத்தை படிக்கத் தொடங்கினாள் மலர்.

"சாரு விதானையார் வீட்ட போட்டு வாருமன். வீட்டுத்திட்டம் என்ன மாதிரி யெண்டு விசாரிச்சுக்கொண்டு வாறியா? இந்த மாரி மழைய இந்தக் கொட்டில் தாங்காது. இந்தியன் வீட்டுத்திட்டம் வன்னியால் வந்தவைக்கு குடுக்கப் போயினம் எண்டு நேற்றுக் கடையடில கதைச்சவை" என்றவனை இடைமறித்து "நீங்கள் போய்க் கேட்டுட்டு வாங்கோவன் ஒருவேலையும் இல்லைத்தானே உங்க ளுக்கு, நான் ஒருக்கா கமலாக்கா பலகாரம் சுட வரச்சொல்லிக் கேட்டவா போகவேணும். போனால் ரெண்டு நாளுக்கு சீவியம் தள்ளலாம்" என்றாள். "இல்லையப்பா விதானையார் ஒரு பொம்பிளை, நீ போய்க் கதைச்சா கொஞ்சம் கவனமாய்க் கேட்பா. அதான் சொன்னான்" என்று இழுத்தான். "ஓமோம் நீங்கள் சொல்வதும் சரிதான்". இதை விட்டால் வேறு வழியில்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த முப்பத்தைந்து வருட வாழ்நாளில் ஐம்பது வீடு கண்டிருப்பாள் சாருமதி. இடம்விட்டு இடம்மாறி புதுப்புது வீடுகளில் குடியேறுவதும் கூட்டித் துடைப் பதும் கொஞ்சநாளில் வீட்டுக்காரர் ஏதோ காரணம் காட்டி எழுப்புவினம். இல்லாட்டில் எறிகணையும் விமானத் தாக்குதல்களும் இராணுவ நகர்வுகளும் எழுப்பும். சொந்த இடத்திற்கு இனி மேலும் போக இயலாது என்ற எண் ணத்தில் கஷ்டப்பட்டு உழைச்ச காசும் மீள்குடியமர்வுக்கு என்று அரசாங்கம் தந்த ஐம்பதாயிரம் பணமும் சேர்த்து வாங்கின இந்த ஒரு பரப்புக் காணிதான் இப்போது அவர்களின் சொந்தம். அவர்களது கனவுகளும் எதிர்கால இலட்சி யங்களும் இந்த மண்ணுள்ளேயே புதைந்து கிடந்தன. மாடமாளிகை ஒன்றும் வேண்டாம். கல்லால் ஒரு சின்னவீடு. 'பிள்ளையும் வளர்ந்து வாறாள் வயசுக்கு வந்தால் ஒரு பாதுகாப்பான இருப்பிடம் வேணும் அவ்வளவுதான். இண்டைக்கு விதானையார் அம்மாட்டக் கட்டாயம் போக வேண்டும்' என முடிவு செய்தவளாக கமலாக்கா வீடு நோக்கி நடையைக் கட்டினாள்.

மதியநேரம் பார்த்து விதானையார் அலுவலகம் சென்றதினால் வழமையை விடவும் சனம் குறைவாக இருந்தது. வந்த ஒழுங்கில் உள்ளே வரும்படி எழுதிப் போட்டிருந்தது. வெறுமையாய்க் கிடந்த வாங்கு ஒன்றின் ஓரமாய் உட்கார்ந்து கொண்டாள். விதானையாரம்மா அவவிடம் செல்லும் ஒவ்வொருத்தருக்கும் பொறுமை யாய்ப் பதில் சொல்லி தேவையானவற்றை எழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தா. 'எனக்கும் எப்பிடியும் வீட்டுத்திட்டம் எடுத்துத் தருவா' என்ற நம்பிக்கை அவள் மனதில் துளிர்விட்டு விருட்சமாய் மாறி பூத்துக்குலுங்கிக் காய்த்துக் கனிந்தது. சாருமதியின் முறைவரவும் பவ்யமாய் எழுந்து விதானையார் முன் நின்றவள் கைகளைப் பிசைந்து கொண்டாள். "சொல்லும் சாருமதி என்ன விசயம்? மகள் இந்த முறை ஸ்கொலர்சிப் எடுக்கிறா என்ன? கவனமாய் படிப்பியும். அவள் கெட்டிக்காரி" என அன்பாக வினவவும் "ஓம் அம்மா படிக்கிறாள். வீடுதான் ரொம்ப கஸ்டமா இருக்குதம்மா. வீட்டுத்திட்டம் என்னமாதிரியெண்டு கேட்டுப் போக வந்தன்" என்று பாதி உள்ளேயும் பாதி வெளியேயுமாய் பகர்ந்தாள். "எல்லாற்ற விண்ணப்பங்களும் அனுப்பி வச்சிருக்கு. உங்கட குடும்ப நிலைமையளுக்கு புள்ளி போட்டு அனுப்பிவினம். பத்துப்புள்ளிக்கு மேல வந்தா வீடு கிடைக்கும்" என்றபடி விண்ணப்பப் படிவம் அனுப்பியவர்களது

பெயர்ப்பட்டியலை அவளிடம் நீட்டினாள். அதில் இன்பரூபன் எனும் அவளது கணவனது பெயரும் பதிவு செய்யப் பட்டிருந்ததைக் கண்ட சாருமதி வீடு கிடைத்துவிட்டது போல ஆனந்தம் அடைந்தாள். "அம்மா அப்ப எங்களுக்கு பத்துக்கு மேல வருமோ அம்மா?" ஆவலாய்க் கேட்டாள். "புள்ளி பிரதேச செயலகத்தில்தான் போட்டுப் பட்டியல் வரும். வீட்டிலுள்ளோர் எண்ணிக்கை ஏலாதவை இருந்தா புள்ளி கூட வரும். பெண் தலைமைத்துவக் குடும்பம் எண்டால் புள்ளி கூடப் போடுவினம். எல்லாம் கூட்டி இறுதிப்புள்ளியோட பட்டியல் வரும்" என்று தெளிவாகவும் விளக்கமாகவும் கூறினார். "எனக்கும் ரெண்டு புள்ளைங்க செல்பட்டுப்போய் செத்துட்டாங்கள். அதுகள் இருந்தா அஞ்சுபேர் நாங்கள். இவரும் ஒன்றும் செய்ய ஏலாதவர் அம்மா.." சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். "அழாதையும் இப்ப இருக்கிற குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைதான் பாப்பினம். இன்ப ரூபனுக்கும் வெளியால தெரியிற மாதிரி ஊனம் இல்லை. கைகால் இல்லாம கண் தெரியாம இருந்தாத்தான் ஊனம் என்று பதிவினம். சரி சரி பட்டியல் வரட்டும் பாப்பம். ஏதும் செய்ய ஏலும் எண்டால் செய்வம்" என்றபடி விதானையம்மா இருக்கையைவிட்டு எழுந்தார்.

குழம்பிய முகத்துடன் வீடுவந்து சேர்ந்த சாருமதியைக் கணவனது கேள்விக் கணைகள் துளைத்தெடுத்தன. "ஏனப்பா எரிஞ்சு விழுகிற? விதானையார் என்ன சொன்னவா? வீடு எப்ப வருமாம்?" திரும்பவும் கேட்டான். "புள்ளிபோட்டு அனுப்பி வைப்பினமாம். ஆக்கள் கூடின குடும்பம், சின்னப்பிள்ளையள் கனக்க இருக்கிற குடும்பம், விதவைக்குடும்பம், ஊனமுற்ற குடும்பங்களுக்கு கூடின புள்ளிகள் கிடைக்கும். பத்துப்புள்ளிக்கு

**"ஏதாவது மேலதிக காரணம் காட்டி கொஞ்சப்புள்ளி கூட்ட வழி செய்யலாம் சாரு. குறை நினைக்காதையும் சாரு. செத்த பிள்ளையள காணாமல் போனவை எண்டு இல்லாவிட்டால் இன்பரூபனுக்கு காது கேளாது என்று மெடிக்கல் ஏதும் எடுத்துத் தர முடியுமா? இல்லாட்டி இன்பரூபனும் நீரும் பிரிந்து வாழுறதா கடிதம் தந்தால் பிரதேச செயலருடன் கதைச்சுப் பாக்கலாம்". என விதானையாரம்மா தீர்வுத் திட்டங்கள் பலவற்றை முன்வைத்தார். "என்னம்மா சொல்லுறியள் இருக்கிற மனுசனை பிரிஞ்சு போனாரெண்டும் கேட்கிற காதை கேளாது எண்டும், செத்துப்போன குஞ்சுகளை காணேல்ல எண்டும், எப்பிடியம்மா மனச் சாட்சிக்கு மாறா பச்சைப்பொய் சொல்ல முடியும்?" விம்மலோடு சாருமதி விதானையாரம்மாவைப் பார்த்துக் கேட்டாள்.**

மேல வந்தாத்தான் வீடு கிடைக்குமாம். ஒரு மாதத்துக்குள்ள பட்டியல் வந்திடுமாம். அலுவலகத்தில் ஒட்டி விடுவாவாம். அப்ப வந்து பாக்கட்டாம்." சாரு கொடுத்த விளக்கத்திலிருந்து 'எங்களுக்கு வீடு கிடைக்காது' என்ற முடிவிற்கே இன்பரூபன் வந்துவிட்டான். அவனது பலவீனமான இதயம் படபட வென வேகமாத் துடித்தது.

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் மலரிற்குக் காலை வாரிவிட்டிருந்தது. வெட்டுப் புள்ளி நூற்று ஐம்பத்தைந்தாக வெளியிடப்பட்ட வேளை அவள் நூற்று ஐம்பத்து நான்கு புள்ளிகளைப் பெற்றி ருந்தாள். கண்ணீரும் கம்பலையுமாய் பாடசாலையிலிருந்து வந்த மலரைத்

தேற்றுவது இயலாத காரிய மாய்க் கிடந்தது. "அழாதையம்மா அழாதை. ஏங்களுக்கு ஏன்தான் இந்தச் சோதனைகள்... கடவுளும் ஏறெடுத்துப் பார்க்கிறாரில்லை. அழாதையடா." மகளைத் தேற்றினாலும் சாருமதியின் மனம் ஓலமிட்டு ஒப்பாரிவைத்து உள்ளுக்குள் மறுகியது. வெளியே தெரியவில்லை. "எனக்கு காசு கிடைக்காதம்மா. எவ்வளவு கஸ்டப்பட்டு படிச்சனான். என்னைவிட வகுப்பில பின்னுக்கு நிக்கிற பிள்ளைகள் கனபேர் பாஸ் பண்ணி இருக்கினம்." விம்மி விம்மி விக்கல்கள் மத்தியில் வெடித்துக் கொட்டினாள். இன்பரூபன் எதுவும் பேசாமல் மௌனமாய் இருந்தான். அவனது முகவரிகள் மனவடுவை வரைந்து காட்டின. "பாஸ் பண்ணினால் மாதம் மாதம் காசு தருவினம். உங்கள கஸ்டப்படுத்தாமல் மேல படிக்கலாம் எண்டு இருந்தனம்மா...." மலர் தொடர்ந்தாள். "சரி சரி விடம்மா. இது மட்டுமா சோதினை ஓ .எல்., ஏ.எல் எண்டு இன்னும் எத்தினை இருக்கு விடம்மா. அழுது அழுது காய்ச்சல் வரப்போகுது." மகளை அணைத்துக் கண்களைத் துடைத்துவிட்டாள். "காய்ச்சல் வந்து செத்துப்போனால் பறவாயில்லை அம்மா." கரைந்தாள் மகள்.

"விதானையார் ஒவ்வீசில வீட்டுத் திட்டப் பட்டியல் ஒட்டிக் கிடக்காம் சாரு." கமலாக்கா எட்டிக் கூறிவிட்டுப் போனாள். மகளைத் தந்தையுடன் விட்டுவிட்டு அலுவலகம் நோக்கி நடந்தாள். இல்லை இல்லை ஓடினாள் என்றே சொல்ல வேண்டும். பெருவாரி சனம் முட்டிமோதி எட்டி எட்டிப் பார்த்தவண்ணம் நின்றனர். பெரும்பாலானோர் ஆண்கள். அவர் களுடன் இடிபட இயலாமல் சிறிது ஒதுங்கியே நின்றவளைக் கண்ட கிராம சேவையாளர் சாருவை உள்ளே வரும்படி அழைத்துத் தனது மேசையிலிருந்த பட்டியலின் பிரதியொன்றைக் காட்டினார். "புள்ளி போதாது. ஒன்பது தசம் எட்டு வந்திருக்கு" என்றார். இடிவிழுந்தது போல் ஏங்கிப்போய் நின்றாள் சாரு. "ஏதாவது மேலதிக காரணம் காட்டி கொஞ்சப்புள்ளி கூட்ட வழி செய்யலாம் சாரு. குறை நினைக்காதையும் சாரு. செத்த பிள்ளையள காணாமல் போனவை எண்டு இல்லாவிட்டால் இன்பரூபனுக்கு காது கேளாது என்று மெடிக்கல் ஏதும் எடுத்துத் தர முடியுமா? இல்லாட்டி இன்பரூபனும் நீரும் பிரிந்து வாழுறதா கடிதம் தந்தால் பிரதேச செயலருடன் கதைச்சுப் பாக்கலாம்". என விதானை யாரம்மா தீர்வுத் திட்டங்கள் பலவற்றை முன்வைத்தார். "என்னம்மா சொல்லுறியள் இருக்கிற மனுசனை பிரிஞ்சு போனா ரெண்டும் கேட்கிற காதை கேளாது எண்டும், செத்துப்போன குஞ்சுகளை காணேல்ல எண்டும், எப்பிடியம்மா மனச் சாட்சிக்கு மாறா பச்சைப்பொய் சொல்ல முடியும்?" விம்மல்களூடு சாருமதி விதானையாரம்மாவைப் பார்த்துக் கேட்டாள். "சில வேளைகளில் மனச் சாட்சிக்குப் பிழையாக நடப்பதுதான் சரிபோல் தெரிகிறது. உம்முடைய நிலமை நல்லாத் தெரிஞ்சபடியாலதான் நான் இப்படிச் சொன்னான. என்னால வேற ஒண்டும் செய்ய முடியாது" என்றபடி அலுவலகத்தைப் பூட்ட ஆயத்த மானார்.

'வீடு கிடைக்காத விசயத்தை எப்படி அவருக்கு எடுத்துச் சொல்வேன்' என எண்ணியபடி வீட்டை நோக்கி நடந்த வளுக்கு பாதை வெகுதூரமாகத் தென் பட்டது. சாருமதி கூறியவற்றைக் கேட்ட இன்பரூபன் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டான். நாட்கள் சில கழிந்தன. மலர் கொஞ்சம் கொஞ்சமாகத் தேறினாலும் படிப்பு அவளுக்கு முன்னைய பிடிப்பைத் தர மறுத்தது. இன்பரூபன் நடைப்பிணம்

**அங்கு கூடிய அயலவர்களால் ஆவி அகன்ற இன்பனின் உடல் வெளியே எடுக்கப்பட்டது. விதானையாரும் வந்து தனது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்து கொண்டார். 'விதானையார் இனி வீட்டுத்திட்டம் கொடுப்பா' அதுதான் அவன் விழுந்து செத்தானோ' என்று யாரோ சொல்லிக்கொள்வது காற்றில் கரைந்து காதினுள் விழுந்தது.**

போல் குடிசையின் ஓரங்களில் குந்திக் குந்தி இருந்து ஆழ்ந்த யோசனையில் அமிழ்ந்து போவான். சாருமதிதான் ஏனோ தானோவென்று இயங்கிக் கொண்டிருந்தாள். அன்றிரவு பலத்தமழை பொழிந்து தள்ளியது. கொட்டிலுனுள் புகுந்த வெள்ளம் சாருமதியின் கால்களை நனைக்கவும் பதறிப்போய் எழுந்தாள். கும்மிருட்டாகக் கிடந்தது. அருகே கைகளால் தடவிப் பார்த்தால் மலர் மட்டும் அவளது கைகளுக்குத் தட்டுப் பட்டாள். இன்பனைக் காணவில்லை. "இஞ்சருங்கோ எங்க கிடக்கிறியள் தண்ணி வந்துட்டுது எழும்புங்கோ" தலைமாட்டில் துளாவி தீப்பெட்டியைத் தடவினாள். அகப்பட்டது. தட்டத் தட்டப் பற்றவில்லை. ஈரமாகிக் கசிந்து போயிருந்தது. பற்றிய குச்சியும் காற்றில் அணைந்து போனது. "என்னப்பா எங்க கிடக்கிறியள் ஒருக்கா எழும்புங்கோவன். என்ன மனுசனப்பா கொஞ்சமும் உணர்வே இல்லையே. இந்தக் கத்துக் கத்துறன்" சலித்துக் கொண்டவள் வெளியே வெட்டிய மின்னல் ஒளியில் இன்பனின் படுக்கை வெறுமையாகக் கிடந்தது கண்ணில் பட்டது. சொல்லாமல் எங்க போனவர்? அவள் மனம் அங்கலாய்த்தது.

பொழுது புலரவும் மழை ஓயவும் சரியாக இருந்தது. அதுவரை கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்த சாருமதி மெல்ல வெளியே வந்து பார்த்தாள். 'மழைக்குள்ள எங்க போனவர்?' சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அடுத்த வளவுக் குள் பார்க்க எண்ணி நடக்கையில் எதேச் சையாக கிணத்தையும் எட்டிப் பார்த்தாள். வெள்ளம் உட்சென்று தண்ணி மேலே உயர்ந்திருந்தது. "அதென்ன அதென்ன மிதக்குது. இன்பன் சாரம் போல.. ஐயோ ஐயோ.." அவள் அலறல் சுற்றுப் புறமெங்கும் பட்டுத்தெறித்து எதிரொலித்தது. ஐந்து நிமிடங்களுள் அங்கு கூடிய அயலவர்களால் ஆவி அகன்ற இன்பனின் உடல் வெளியே எடுக்கப் பட்டது. விதானையாரும் வந்து தனது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்து கொண்டார். 'விதானையார் இனி வீட்டுத் திட்டம் கொடுப்பா… அதுதான் அவன் விழுந்து செத்தானோ' என்று யாரோ சொல்லிக்கொள்வது காற்றில் கரைந்து காதினுள் விழுந்தது. "வரவுசெலவுத் திட்ட வாசிப்பில் அதிகளவு மாணவர்களை உட்சேர்த்துக் கொள்வதற்காக புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி நூற்று ஐம்பதாகக் குறைக்கப்பட்டு இதுவரையும் வழங்கப்பட்ட ஐந்நூறு ரூபா உதவித் தொகை ஆயிரத்து ஐநூறாக அதிகரித்து வழங்கப் படவேண்டுமென ஜனாதிபதி தெரிவிப்பு" கமலாக்கா வீட்டு வானொலி அன்றைய மதியச் செய்தியை அலறிக் கொண்டிருந்தது.

❍




"இஞ்சருங்கோ.........இஞ்சருங்கோ" கமலினி என்னத்தையோ கண்டவள் போல காலையிலேயே என்னை எழுப்புறாள்.

"சனிக்கிழமை தானே, என்னைக் கொஞ்சம் தூங்கவிடலாம்தானே" சொல்லிக்கொண்டு எழும்பிக் கட்டிலில் இருந்தபடியே கலைவளன் சிசு நாகேந்திரம் ஐயா சொல்லித் தந்த சில உடற்பயிற்சிகளைச் செய்யிறன்.

"இஞ்சருங்கோ கேட்குதே பாட்டு இன்பத்தமிழ் ஒலியப்பா" "இன்பத்தமிழ் ஒலியோ....!" ஆச்சரியத்தோடு கட்டிலைவிட்டு இறங்கி குசினிக்க போகிறன். பாலசிங்கம் பிரபாகரனின் கணீர் என்ற குரல் கேட்கிறது. என்ர மனைவி தன்ர i pad இல காட்டுறாள்.

"இன்பத்தமிழ் ஒலி இணையத் தளத்துக்குள்ளால வருகுது அல்லே"

"பாலசிங்கம் பிரபாகரனின் இன்பத்தமிழ் ஒலி றேடியோ மெல்போனில் ஒலிக்காமல் நின்று 4 வருடமாப் போச்சுது... அதனாலதான் எத்தனையோ வயோதிபர்கள் அந்த இரண்டு வருடத்தில் கூடிய விரைவாக இறைவனடி போகிறார்கள்" என்று சுந்தா தன்ர மாமனின் மரணச்சடங்கில் பேசியது எனக்கு நினைவு வர நானும் ஏதோ புதுத்தென்பு வந்தவன் மாதிரி முகம் கைகால் கழுவி வெளியேவர கமலினியும் எனக்குத் தேநீர் கொண்டு வந்து தந்தாள்.

தேநீர்க் கோப்பையுடன் வெளியே முற்றத்துக்கு வருகிறேன். எதிர் வீட்டு முற்றத்தில் வீடு விற்பனைக்கு ("for sale") என்ற விளம்பரம் கண்ணில் பட்டதும், தேநீர்க் கோப்பையை வைத்து விட்டு எதிர் வீட்டுக் காரருடன் பேசப் போனேன். மகளும் கூட வந்தாள்.

எதிர் வீட்டுக்காரர் பொஸ்னியா நாட்டைச் சேர்ந்தவர். அவரும் சொந்த நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக சொந்தமாக நடாத்திக் கொண்டிருந்த

(ஞானம் 180, மே 2015

நெசவு ஆலையையும் இழந்து சொந்தச் சகோதரனை இராணுவம் அவர் கண்முன்னாலேயே சுட்டுக் கொன்ற கொடூரத்துடன்தான் இங்கு வந்து வாழ்கின்றார்.

எங்கள் வளவில் புல் வளர்ந் திருந்தால் வெட்டுவது, நாங்கள் இல்லாதபோது யாரும் தேடிவந்தால் கவனிப்பது என்று எமக்கு மிகவும் உதவியாக இருந்தவர் திடீரென்று வீட்டை விற்கப் போட்டிருப்பது எனக்கு மிகவும் மனக்கவலையைத் தந்தது. அவர் வீட்டிற்குப் போய் கதவைத் தட்டினேன் “என்ன மத்தியூ வீடு விற்கப் போட்டிருக்கிறீர்கள்?”

“என்ன செய்வது மதி, மனைவி என்னோடு கோவித்துக் கொண்டு வீட்டை விட்டுப்போய் தாய் வீட்டில் இருந்து கொண்டு விவாகரத்துக் கேட்கிறாள்.” என்றார் ஆங்கிலத்தில். நான் ஏக்கத்தோடு “விவாகரத்தா.....” என்றேன்.

அது என் மகளின் காதில் விழ அவள் விவாகரத்து என்றால் என்னப்பா என்று கேள்வி கேட்டாள்.

“மத்தியூ நீங்கள் எனக்கு நிறைய உதவிகள் செய்து இருக்கிறீர்கள். இருந் தாலும் எனக்காக, இந்த வீட்டை நீங்க விற்கிறபோது உங்களை மாதிரி ஒரு நல்ல குடும்பத்துக்கு வில்லுங்கோ அது எங்களுக்கு, நீங்கள் செய்யும் பெரிய உதவியாக இருக்கும்” என்று அவரிடம் நான் கேட்டதற்கு இணங்க அவரும் ஏற்றுக் கொண்டார்.

திங்கட்கிழமை காலையில் வேலை யால் வரும்போது வீடு sold என்ற விளம்பரப் பலகையைப் பார்த்தேன்.

இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது எதிர் வீட்டுக்கு யாரோ வந்து திருத்த வேலைகளைச் செய்வதற்கு இறங்கிக் கொண்டி ருந்தார்கள். இரவிரவாக அந்த வீட்டில் துப்பரவாக்கும் வேலைகளை நிறையப் பேர் செய்து கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலையில் பெரிய பெரிய வாகனங்களில் சாமான்கள் வந்து இறங்கிக் கொண்டிருக்க நான் வெளியில் பார்த்தேன். “எதிர் வீட்டில் இருந்து வரும் மொழியையும் ஆட்களையும் பார்த்தால் சிங்களவர்கள் போல இருக்கு என்றாள்” என் மனைவி சோகமாக. நாம் சொல்லிமுடிக்க, எதிர் வீட்டில் இருந்து ஒரு பெண்மணி வந்தாள். அவளோடு 13 வயதிலும், 11 வயதிலும், 7 வயதிலுமான மூன்று பெண் பிள்ளைகளும் வந்தார் கள். நான் சிறியாணி பாலித்த. இது என் பிள்ளைகள் நாங்கள் எதிர் வீட்டில் குடிவந்திருக்கிறோம். இன்று நல்ல நாள் என்றபடியால் வீட்டுக்கு வரவேணுமாம். அதால வந்திட்டம். எங்களுக்கு 4 மணி நேரத்துக்கு உங்கட வீட்டிலிருந்து மின்சாரம் தரமுடியுமா? இந்த வீட்டுச் சொந்தக்காரர் உங்களைப் பற்றிச் சொல்லியும் இருக்கிறார்.

“வேற நாட்டுக்காரர் இந்த வீட்டை வாங்குவதற்குகாக 5 ஆயிரம் வெள்ளி கள் கூடுதலாகத் தாறம் என்று சொன்ன போதும் உங்களுக்காகத்தான் இந்த வீட்டை எங்களுக்கு தர முன்வந்தவர், மத்தியூ” என்று சொல்லிக் கொண்டு அதுக்கும் நன்றி சொன்னாள்.

என் மனைவி கமலினி என் முகத்தைப் பார்க்க, நான் தலை அசைக்க, மகன் வயரின் ஒரு பக்கத்தைக் கொண்டுபோய் மின் இணைப்பைத் தொடுத்தான். அவர்கள் வீட்டில் ஏதோ ஒரு மெஷின் இயங்கும் சத்தம் கேட்டது.

மதியம் 12.30 மணியளவில் சிறியாணி பாலித்த கையில் நிறைய உணவுப் பண்டங்களுடன் வந்து, “இது பால் சோறு, வீட்டுக்குப் புதிதாய் வந்தால் செய்வோம். நீங்களும் செய்வீர்கள் தானே” எனச் சொல்லிக் கொண்டி ருக்கும் போதே எங்கள் பிள்ளைகளை அவர்கள் வீட்டுக்கு வரும்படி கேட்க எமது அனுமதிக்குக் காத்திராமல்

அவர்கள் அந்தப் பிள்ளைகளோடு ஓடி விட்டார்கள்.

என் மகன் ஆதவனும் ஆரணியும் தாங்கள் வளர்க்கும் பூனைக் குட்டியைக் கொண்டு போனவர்கள், திரும்பி வந்து அதனைக் கொண்டுவந்து விட்டுவிட்டு மீண்டும் அங்கே ஓடினார்கள். ஓடும்போது "அங்க ஒரு பெரிய அல்சேஷன் நாய் இருக்கப்பா" என்று சொல்லிக் கொண்டு ஓடினாள் ஆரணி.

மத்தியூ நான் கேட்டதற்கு இணங்கித் தான் சிங்கள ஆட்களுக்கு வீட்டைக் கொடுத்தான். அவனுடைய நல்ல மனதையும் மனைவி கமலினி பாராட்டி னாலும் எதிர் வீட்டுக்காரர் சிங்களம் என்பதும் அவர் வந்ததும் வராத துமாக எமது வீட்டில் வந்து எமது பிள்ளைகளோடு அவர்களின் பிள்ளை களும் அன்னியோன்யமாகப் பழகுவதும் எனக்கும், மனைவிக்கும் என்னவோ போலிருந்தது.

சனிக்கிழமை காலையில் அவர்களின் வீட்டில் ஆண்களும், பெண்களுமாக நிறைந்திருந்தார்கள். வீடு வேண்டியதற்காக உறவினர்கள் நண்பர்களுக்கு (B B Q), விருந்தும் நடந்தது. அன்று நல்ல வெயில் பொழுதாகவும் இருந்தது.

சிறியாணியும், பாலித்தவும் வந்து வலுக் கட்டாயமாக என்னையும் மனைவி யையும் வரும்படி அழைக்க நான் குளித்துவிட்டு வருவதாகப் பொய் சொல்லிக் கொண்டு குளியல் அறைக்குள் போகிறேன். குளியல் அறையில் உள்ள கண்ணாடியில் என்னைப் பார்க்கிறேன்.

முள்ளிவாய்க்காலின் கொடூரங்கள் கண் முன்னால், கண்ணாடியில் ஓடுகிறது. கண்ணாடியில் முகத்தைப் பார்க்க முடிய வில்லை. தண்ணீரைத் திறந்து குளிக் கின்றேன்.

சிங்கள மக்களிலும் மனிதாபிமானம் உள்ளவர்களும் இருக்கிறார்கள்தானே. தமிழரின் போராட்டத்துடன் இணைந்தி ருந்தவர்கள் கூட எத்தனையோ பேர் சிங்களப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு இங்கு சந்தோசமாக வாழ்கி றார்கள்தானே.

வெளிக்கிட்டுக் கொண்டு எதிர்வீட்டுக்குப் போகிறேன். என் மனைவியும் சிறியாணியும் ஆங்கிலத்தில் கதைக்கிறார்கள். எனது பிள்ளைகளும் அவர்களின் பிள்ளை களுடன் சந்தோசமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கோழிக் காலைக் கையில் எடுத்துக்கொண்டு ஏதோ சாட்டுச் சொல்லிவிட்டுக் காரை எடுத்துக் கொண்டு வெளியில் போகிறேன்.

மாலையில் வீடு வந்தபோது வீட்டின் முன்பகுதியில் நிறைய மாற்றம் செய்யப் பட்டிருந்தது. கதிரைகள் மாற்றி அடுக்கியும், பல படங்கள் இடம் மாறியும், விடுதலை சம்பந்தமான பிரசுரங்கள், கிட்டு மாமாவின் படம் எல்லாம் எடுத்து எனது புத்தக அறையில் ஒரு மூலையில் அடுக்கப்பட்டும் இருந்தன.

சாயிபாபாவின் பெரிய படத்தை முன்னால் மாட்டி மாலையும் போட்டி ருந்தாள் மனைவி.

எதிர் வீட்டுப் பிள்ளைகளும் எனது பிள்ளைகளும் தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

என் மனைவி என்னைப் பார்க் கிறாள், நான் உள்ளே போகிறேன்.

"நாளைக்கு நீங்களும் கொஞ்சம் நேரத்தோட வேலையால வாங்கோ... சிறியாணி பாலித்த அவர்களின் குடும்பத்தினருக்கு மதியம் சாப்பாடு செய்யிறன்..." என்று சொல்லிக்கொண்டு போகிறாள்.

என் மேசையில் "அல்சேஷனும் ஒரு பூனைக் குட்டியும்" என்ற சிறுகதை வாசித்த குறையில்.... புத்தகம் திறந்த படியே இருந்தது.

நான் அப்படியே நிற்கிறேன் மனைவி கமலினி ஓடி வந்து "என்னங்க அப்படிப்

பார்க்கிறீங்க எல்லாச் சிங்களவரும் கெட்டவர்கள் என்று சொல்ல முடியா துங்க... அவர்களிலும் மனிதாபிமான முடையவர்களும் இருக்கிறார்கள். அப்படி இருந்ததால் தானே முள்ளி வாய்க்காலின் கோரத்தைப் படமெடுத்து சனல் 4க்குக் கொடுத்து தமிழருக்கு நேர்ந்த கொடூரத்தை வெளி உலகுக்குக் காட்டக்கூடியதாக இருந்தது.”

என் மனைவியின் பேச்சைக் கேட்டு நான் அப்படியே உறைந்து போனேன்.

முள்ளிவாய்க்கால் கோரப்படு கொலை நடந்து ஐந்து வருடங்கள் கழியும் இந்த வேளையில் எல்லோருமே மறந்து போகிறார்கள். அதை ஒரு நிகழ்வாக, சம்பவமாக, காலம் கடந்து சொல்லப்படும் கதையாக மறந்து போகி றார்கள்.

என் வீட்டிலேயே இப்படி என்றால்.......

சனிக்கிழமை காலையிலேயே என் மனைவி எழும்பி வீட்டைத் துப்பரவு செய்வதிலும், சாமான்களை அடுக்கி வைப்பதிலும், கவனமாக இருந்தாள்.

இணையத்தின் வாயிலாக ஒலிபரப் பப்படும் இன்பத்தமிழ் வானொலியின் சத்தம் மிகக் குறைவாக இருந்தது.

நான் எழுந்து குளித்து வெளியே வந்தபோது வீடு முழுவதும் பல விதமான கறிகளின் வாசனை வீட்டை நிறைத் திருந்தது. மதிய சாப்பாடு அழகான சட்டிகளில் போட்டு மேசையில் வைத்துக் கொண்டிருந்தாள் மனைவி கமலினி.

சிறிது நேரத்தில் கதவு தட்டிக் கேட்டதும் மனைவி ஓடிப்போய் கதவை திறந்தாள்.

சிறியாணியும் பாலித்தவும் பிள்ளை களும் உள்ளே வர எனது பிள்ளைகள் ஓடி வந்து அவர்களையும் அழைத்துக் கொண்டு தங்கள் அறைக்குச் சென்றனர்.

பாலித்த வரும்போதே கையில் ஒரு போத்தல் கொண்டு வந்தார். நாம் இருவரும் வீட்டின் பின்பகுதியில் உள்ள அறையில் இருந்து பேசுவ தற்காகப் போகும்போது நான் என் மனைவியைப் பார்த்தேன். அவள் தலையை அசைத்தாள். இரண்டு கிளாசு களையும் ஐஸ் போட்ட பாத்திரத்தையும் மேசையில் வைத்துவிட்டுப் போனாள்.

நானும் பாலித்தவும் கொஞ்சமாக ஊற்றி கையில் எடுத்துக் கொண்டு பல விடையங்களை பேசிக் கொண்டி ருக்கும்போது சாப்பாடு தயார் என்று என் மனைவி வந்து சொன்னாள்.

நானும் பாலித்தவும் சாப்பிட குசினிக்குள் போக என் மனைவியும், சிறியாணியும் சிரித்துக் கதைத்துக் கொண்டு சந்தோசமாக இருந்தார்கள். அப்போதுதான் எதேச்சையாகப் பார்த் தேன். பாலித்த வீட்டுப் பெரிய அல்சேஷன் நாயின் கழுத்துக்குள் எங்கள் வீட்டுப் பூனைக் குட்டி தலை வைத்துப் படுத்து உறங்கிக் கொண்டி ருந்தது. பாலித்த நாயும், பூனையும் படுத்துறங்கும் காட்சியை எனக்குக் காட்டினான்.

பாலித்த கைகாட்டும் திசையில் சிறியாணியும், என் மனைவி கமலினியும் பார்க்கிறார்கள்.

அப்போது இந்தக்காட்சியுடன் என் பிள்ளைகளையும், அவர்கள் பிள்ளை களையும் என் மனைவி எனக்குக் காட்டு கிறாள் இதைக் கவனித்த சிறியாணி

இப்படி நாம் ஏன் இலங்கையிலும் சந்தோசமாக வாழமுடியாது சேர்ந்து வாழும் காலம் இனியும் வராதா...?

சிறியாணியின் கேள்விக்கு யாருமே பதில் சொல்லவில்லை.

சாப்பாட்டைக் கோப்பையில் போட்டுக் கொண்டிருக்கும்போது என் மனதில் ஏதோதோ எண்ணங்கள் ஓடிக் கொண் டிருந்தன.

“இஞ்சருங்கோ.......... இஞ்சருங்கோ சாப்பிடுங்கோவன்”

42







மழைமேகம் திரண்டு வானம் இருண்டு போய்க்கிடந்தது. சந்தியா தன் பார்வையை வெளியே செலுத்தினாள். விஸ்தாரமாகக் கிடந்த அந்தச் சிறை வளாகத்து மதிற் சுவரையுந் தாண்டி உயர்ந்து வளர்ந்து நின்ற தெருவோரத்து மரங்களே அவள் கண்களில் பட்டன.

அவள் கைகளிரண்டும் தடித்த இரும் பாலான சன்னல் கம்பிகளை இறுகப்பற்றிக் கொண்டிருந்தன.

துயரம் தாங்கமுடியாமல் தலையைக் குனிந்துகொண்டவளின் கண்களிலிருந்து முட்டி மோதிக் கொண்டுவந்த கண்ணீர்த் துளிகள் நிலத்தில் வீழ்ந்து உருளத் தொடங்கின.

என்ன செய்யமுடியும்? பத்து வருஷங் களாக இந்த இருண்ட வாழ்க்கையைத் தானே அவள் வாழ்ந்துகொண்டிருக்கிறாள்.

ஊரில் அம்மாவும் தம்பியும் உயிரோடு இருக்கிறார்களோ என்னவோ. எந்தத் தகவ லையுமே அறிய முடியவில்லையே.

அந்தக் கணமே அவளுக்கு ஓவென்று வாய்விட்டழவேண்டும் போலிருந்தது. இரும்புக் கம்பிகளின் பிடி தளர அப்படியே நிலத்தில் அமர்ந்துகொண்டவள் கொஞ்சநேரம் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

இத்தனைக்கும் நான் என்ன குற்றம் செய்தேன். கடவுளே எனக்கேன் இந்தத் தண்டனையைத் தந்தாய்? அவள் தன்னைத் தானேகேட்டுக் கொண்டாள்.

அப்போதுதான்... சந்தியா.... என்று யாரோ அழைப்பது அவள் காதுகளுக்குத் துல்லியமாகக் கேட்டது.

குரல் வந்த திசையை அவள் பார்வை தேடியது. சிறைக் கதவுக்களுக்கு

(ஞானம் 181, ஜூன் 2015

**ஊருக்குள் நல்லபாம்புகளும் நச்சுப் பாம்புகளும் குடிவந்தமாதிரி வந்தவர்களில்தான் அவனும் ஒருவன். எல்லாக் கெட்ட பழக்கங்களுக்கும் தலைவன் என்று சொன்னார்கள். ஆயுதம் தாங்கி அவர்கள் சுற்றும் போதும் எல்லோரும் அஞ்சிநடுங்கினர். பெண்ணைப் பெற்றவர்களும் பிள்ளைகளை வைத்திருப்பவர்களும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டுதான் வாழ்ந்தனர். அப்படியொரு இக்கட்டான காலம்.**

வெளியே புதிதாக வந்த சிறையதிகாரிதான் நின்று கொண்டிருந்தாள்.

நீதான் சந்தியாவா? அவள்தான் கேட்டாள்.

ஆமா நானேதான் என்பதுபோல் சந்தியா தலையை அசைத்தாள். சரிசரி உட்காரு சொல்லியவள் தன் கையில் இருந்த C.R. கொப்பியொன்றைப் புரட்டியபடியே ஒவ்வொரு கைதிகளினதும் பெயரையும் சரிபார்த்துச் சென்றாள்.

இது சாதாரண விஷயம்தான். ஆனால் அதிகாரிதான் புதியவளாக இருந்தாள். சந்தியா இதைப் பற்றிச் சட்டைபண்ணியதாகவே தெரியவில்லை.

கண்களில் கசிந்துகொண்டிருந்த நீரைக் கைகளில் துடைத்தபடியே கொஞ்சம் தூங்கலாம் என்று முயற்சித்துப் பார்த்தாள்.

எப்படி முயன்றும் அவளால் தூங்கவே முடியவில்லை. அதற்கு மாறாக அவளுடைய இந்தக் கொடுமையான வாழ்க்கைக்குக் காரணமான அந்தச் சம்பவம்தான் அவள் நினைவில் வந்து மோதியது.

இப்படியொரு கொடுமை அவளுக்குக் கிடைக்குமென்று அவள் கனவுகூடக் கண்டாளில்லை.

அப்படியொரு சந்தோஷமான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்த காலம் அது.

அப்பா இல்லாத கவலையைத் தவிர வாழ்க்கையில் அம்மா அவளையும் அவன் தம்பியையும் எந்தக் குறையுமே தெரியாமல்தான் வளர்த்துவந்தாள். காலையில் ஸ்கூலுக்குப் போவதும் மாலையில் சினேகிதிகளோடு பொழுதைக் கழிப்பதுவும், கோவில், திருவிழா பண்டிகைகள் என்று அம்மா, தம்பி உறவுக்காரர், சினேகிதிகள் எல்லோரோடும் சந்தோஷித்த நாட்கள்தான் எத்தனை?

நாவூறு பட்டமாதிரி எல்லாம்தான் தொலைந்து விட்டனவே. எல்லாவற்றையும் நினைக்கும்போது அவளுக்கு நெஞ்சே வெடித்துவிடும்போல் வேதனையைக் கொடுத்தது.

அப்பாவின் இழப்புக்குப்பின்னே அவரின் ‘பென்சன்’ பணத்தில்தான் எந்தக் குறையுமே யில்லாமல் அம்மா அவளையும் தம்பியையும் வளர்த்து ஆளாக்கினாள்.

அவர்கள் வாழ்க்கை இயல்பாக நகர்ந்து கொண்டிருந்தது. சந்தியா பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்தாள்.

அவளுடைய அழகையும் குணத்தையும் விரும்பி எத்தனையோ சம்பந்தங்கள் வீடுதேடி வந்தபோதும் படிப்பை முடித்துவிட்டுத்தான் திருமணம் செய்வேன் என்று பிடிவாதம் பிடித்தாள் அவள்.

சீதனம் அது இது என்று எதுவுமே கொடுக்க இயலாத நிலையில் சந்தியாவின் அம்மாவுக்கும் அது சரியென்றே பட்டது. ஏதாவதொரு தொழில் அமைந்தபின் பார்க்கலாமென்பதுதான் அம்மாவின் திட்டம்.

சந்தியா நல்ல கெட்டிக்காரியென்பதால் மருத்துவத்துறையை நம்பிக் கொண்டிருந்தாள். ஆனால் விதி யாரை விட்டது.

ஊருக்குள் நல்லபாம்புகளும் நச்சுப் பாம்புகளும் குடிவந்தமாதிரி வந்தவர்களில்தான் அவனும் ஒருவன். எல்லாக் கெட்ட பழக்கங்களுக்கும் தலைவன் என்று சொன்னார்கள். ஆயுதம் தாங்கி அவர்கள் சுற்றும் போதும் எல்லோரும் அஞ்சிநடுங்கினர்.

பெண்ணைப் பெற்றவர்களும் பிள்ளைகளை வைத்திருப்பவர்களும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டுதான் வாழ்ந்தனர். அப்படியொரு இக்கட்டான காலம்.

ஏதோ ஒரு அவசர அலுவலாகப் பாடசாலைக்குப் போய்விட்டு அவசர அவசரமாக வீடுதிரும்பிக் கொண்டிருந்தாள் சந்தியா.

அப்போதுதான் 'கிரீச்' சென்ற சத்தத்துடன் அந்த மோட்டார் சைக்கிள் அவள் காலடியில் வந்துநின்றது.

யார் நீ.... என்னவேணும் உனக்கு?

சந்தியாதான் கேட்டாள்.

அவன் சிரித்தான்.

சந்தியா கடுப்பாகினாள்... ஏய்... கேட்கிறேனில்ல.... எதுக்காக என் வழியை மறித்துக் கொண்டு நிற்கிறாய்.... யாருடாநீ.....? அவள் காட்டமாகக் கேட்டாள்.

"அமைதி அமைதி.... ஐ லவ் யூ சந்தியா. உன்னை நான் உயிருக்குயிராகக் காதலிக்கிறேண்டா. என் பேரு ஜனார்த்தனன்."

"அடி செருப்பால" அவன் சொல்லி முடிக்கு முன்னமேயே அவள் வார்த்தைகளால் எகிறினாள்.

இந்த நச்சரிப்பு அன்றோடு முடியவில்லை. அவன், அவளை மிரட்டுமளவுக்கு வளர்ந்து நின்றது.

அவள் தன் மறுப்பை எப்படியெல்லாமோ வெளிப்படுத்தி விட்டாள். அவன் எதற்குமே இறங்கினானில்லை. உன்னை அடையாமல் விடமாட்டேண்டி என்னுமளவிற்கு வெறி கொண்டு அலையத் தொடங்கினான்.

"சந்தியா எனக்கு நீ சம்மதம் சொல்லவில்லையென்றால்....அதைப்பற்றி எனக்குக்கவலையேயில்லை.... உன்னைக் கடத்திக் கொண்டுபோயாவது, கல்யாணம் பண்ணிவிடுவேன். இது சத்தியம்டா...."

அதைக் கேட்டதும் அவள் அவமானத்தில் துடித்துப் போனாள். இனித் தாமதிக்கக் கூடாது. எல்லாவற்றையுங் கேட்டுவிட்டு அம்மா அழுதுவடித்தாள்.

"அழாதம்மா.... நான் சொல்லுற படிகேள். சொந்த வீடில்லாத நாங்கள் எங்கையிருந்தால் என்ன? காலையிலேயே நாங்கள் கிளம்ப வேண்டியதுதான் சரியா?"

மகளின் வார்த்தைக்குக் கட்டுப் பட்டாள் தாய். வீட்டுக்காரருக்கும் அவளெடுத்த முடிவுதான் சரியாகப் பட்டது.

யாருக்கும் தெரியாமல் விடியற் காலையிலேயே அவர்கள் பயணப்பட்டு விட்டார்கள்.

ஊரைவிட்டுக் கிழம்பிவந்து எப்படியோ மூன்றுமாதங்கள் ஓடிவிட்டன. தாய் மாமன் வீட்டில் சந்தியாவின் குடும்பத்தினர் சௌகரியமாகத்தான் வாழ்ந்தனர்.

ஆனால் 'காலைக் கடிக்க வந்த பாம்பு சும்மா இருக்கவில்லையே' அவள் ஏமாற்றி விட்டாளே என்ற கோபத்தில் அவன் வலைவீசத் தொடங்கினான்.

இன்றைக்கோ நாளைக்கோ சாவென்றிருக்கிற உனக்கெல்லாம் கலியாணம் ஒருகேடா என்று கேட்டாளே.

கொலைகாரன், பொம்பிளைப் பொறுக்கி, குடிகாரன் இன்னும் என்னென்னவோ எல்லாம் சொன்னாளே.

என்றைக்கோ அவள் கேட்ட வார்த்தைகள் எல்லாம் அவன் மண்டையைக் கிளற வன்மம் அவனுக்குள் கிளர்ந்

தெழும்பியது. பழிக்குப் பழி தீர்க்காமல் விடமாட்டேன் என்று தீர்மானித்தவன் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி னான்.

காலை நேரத்து வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டு சந்தியாவும் குடும்பத்தினரும் ஆசுவாசமாகத் கதைத்துப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போதுதான் வாசலில் அந்த ஜீப் வண்டி வந்துநின்றது.

சந்தியாவின் மாமா சாரங்கபாணிதான் முன்னேசென்று பேசினார். அதற்குள் அவர்கள் எல்லோரும் வீட்டுக்குள் புகுந்து விட்டனர்.

ஏதேதோ கேட்டார்கள். உருட்டி மிரட்டினார்கள். கடைசியில் சந்தியாவை, விசாரணைக்கழைத்துச் செல்வதாகச் சொன்னபோதுதான் எல்லோரும் துடித்துப் போயினர்.

சந்தியா எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். ஆனால் எதுவுமே ஆக வில்லை.

வலுக்கட்டாயமாக சந்தியா வண்டி க்குள் ஏற்றப்பட்டு விட்டாள். அம்மாவும் மாமாவும் அழுதுபுலம்பிக் கொண்டே ஓடிவந்தனர். அடுத்தகணமே ஜீப் வண்டி காற்றாய்ப் பறந்தது.

சந்தியா அப்போதுதான் பார்த்தாள் வண்டிக்குள் அவன் உட்கார்ந்திருந்தான். அவளுக்கு எல்லாமே புரிந்துவிட்டது.

ஆயுதம் கையில் இருந்தால் எதை யும் சாதித்துவிடலாம் என்று நினைக் கிறான் போலும்.

அவள் துணிந்துவிட்டாள். என்ன நடக்கு மென்று பார்த்துவிடுவோம். தைரியம் இழக்காமல் அவனை முறைத்தாள் அவள்.

அவன் சிரித்தான். ‘ஓம்’ என்று ஒரு வார்த்தை சொல்லிவிடு சந்தியா.... நான் உன்னைக் காப்பாற்றிவிடுவேன். சொல்லாமல் சொல்லியது அவன் பார்வை.

முட்டாள் செத்தாலும் சாவேண்டா உன்னைப்போல கேடுகெட்டவனுக்கு வாழ்க்கைப்படுவேனென்று மட்டும் கனவு காணாதடா. மனசுக்குள் நினைத்துக் கொண்டவள் வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இனி ‘உன்குடுமி’ என் கையில் தானடி என்பதுபோல்.... அவளைச் சீண்டினான் அவன். சந்தியா.... நீ கவலைப் படாதடா நான் இருக்கிறேன்.

அவள் மௌனமாக இருந்தாள். என் இனத்துக்கு என் இனத்தவனால்தான் அழிவு என்பது எவ்வளவு பொருத்தமான சிந்தனை. வேதனையில் துவண்டு போனாள் அவள். ஒவ்வொருநாளும் அவளைக் கலங்கடித்தார்கள். பயப் படுத்தினார்கள். தங்கள் இஸ்டத்துக்கு உடன்படாதவர்களைக் கடைசியில் ‘தேசத் துரோகி’யாகப் பட்டமளித்து சிறைப்படுத் துவதுதான் அவனுகளின் வேலை. சந்தியாவுக்கும் அதேநிலைதான் உள்ளக விசாரணை அது இது என்று அவளைப் பாடாய்ப்படுத்தினர். அவள் எதற்குமே மசிந்தாளில்லை. இப்போது அவள் ‘தேசத் துரோகி’ சந்தேகத்தின் பேரில் கைதி என்ற அறிக்கையுடன் அவள் சிறைக்குள் தள்ளப்பட்டுவிட்டாள்.

இன்றைக்குப் பத்து வருஷங் களாகிவிட்டன. காணாமற் போனவர் களின் பட்டியலில் அவளும் ஒருத்தி. அவளைத் தேடி அம்மா அலை வாளாக்கும்.

இவளோ இந்த இருட்டறைக்குள் வாசம் செய்கிறாள். காணாமல் போனோர் என்ற பட்டியிலில் அவளும் ஒருத்திதான்.

❍

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி - 2015 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| யாழ்மண்ணுக்குரியது... | கலாபூஷணம் எஸ்.ஐ.நாகூர்கனி | கொழும்பு 12 |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| மாற்றங்கள் | ச. முருகானந்தன் | கொழும்பு 06 |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| துணையென ஒன்று... | திருமதி மைதிலி தயாபரன் | வவுனியா |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| மானிடன் | கு. ஜெயகுணசீலன் | கண்டி |
| யாழின் சாட்சியங்கள் | நந்தீஸ்வரி துரைராசா | வவுனியா |
| மனதின் திருவிளையாடல் | சூசை எட்வேட் | திருகோணமலை |
| இது முடிவல்ல ஆரம்பம்! | வாகரைவாணன் | மட்டக்களப்பு |
| விடுவிப்பு | தம்பிராசா பரமலிங்கம் | யாழ்ப்பாணம் |
| ஆயுள் தண்டனை | கனஹா கந்தசாமி | புசல்லாவை |
| பயணங்கள் | எச். எப். ரிஸ்னா | மவுன்ற்லெவனியா |

நடுவர்கள்: தி. ஞானசேகரன், திருமதி பத்மா சோமகாந்தன், திருமதி வசந்தி தயாபரன்.

**(ஞானம் 189, பெப்ரவரி 2016)**




வந்தாரை வாழ வைக்கும் - வரலாற்றுப் புகழ் மணக்கும் தலைநகரின் இதய இடமாம் வாழைத்தோட்டப் பகுதியின் தொடர் மாடி வீடொன்றிலிருந்து, வருடங்கள் பல கடந்தாலும், வலி மாறாத ஒரு வரலாற்றுக் குற்றத்திற்கு இலக்காகிப்போன ஓர் அதிபரின் ஜனாஸா - அதாவது பிரேதம் தன் முடிவுரைக்காகப் பயணிக்கப் போகிறது.

ஆம்... ஒரு ஜனாஸா நல்லடக்கத்திற்காக இறுதி யாத்திரைப் போகப் போகிறது. எங்கே போகிறது?

ஒரு நீண்ட வேனில், ஜனாஸாவை சுமந்திருக்கும் சந்தூக் ஏற்றப்படுகிறது. சந்தூக்கின் இரு புறங்களிலும் இவ்விருவராக நால்வர், முன் ஆசனத்தில் சாரதியுடன் இன்னொருவர், ஆக அறுவர் வேனில் ஏறிக் கொள்ள, வேன் பயணிக்கத் துவங்கியது. விரைந்தோடிச் செல்கிறது... அங்கே, கூடியிருந்தோரில் இருபது பேர்வரை ஒம்னி பஸ் ஒன்றில் ஏறிட, அது வேனைப் பின்தொடர்கிறது.

வழமையாகவே கொழும்பில் முஸ்லிம்களின் இறுதி யாத்திரை மாளிகாவத்தைக்கோ - குப்பியா வத்தைக்கோ - அன்றி ஜாவத்தைக்கோ மேற்கொள்ளப்படுவதுண்டு.

வட கொழும்பு முஸ்லிம்கள் மாதம் பிட்டி மையவாடிக்கு ஜனாஸாவை தோளில் தூக்கிச் செல்வர். ஆனால் -

இந்த அதிபரின் ஜனாஸா - அதாவது ஓய்வுநிலை கண்ட முன்னாள் அதிபர் முனாஸ் பிரின்ஸிபல்லின் ஜனாஸா - வேனில் ஏற்றப்பட்டதே



சத்திய எழுத்தாளன்
கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர்கனி

(ஞானம் 190, மார்ச் 2016)

-விரைந்தோடிச் செல்கிறதே பேலியா கொடையையும் அது கடந்தல்லவா செல்கிறது. போகுமிடம் வெகு தூரமோ? “பொன்னுலகு” மிகு தூரமோ?

அக்கம் பக்கம் நின்ற வாழை வாரிசுகள் கண்ட காட்சிகளை பற்றியும் - சுற்றியும் விண்டனர், மென்றனர், உண்டனர்.

சுமார் மூன்று மணிநேரமாக அமைதியாக விரைந்தோடிய வேன், சற்றே இளைப்பாற புத்தளத்திற்கு முன்னால் இருக்கும் மதுரங்குளி சந்தி கடந்த - சந்தடி முடிந்த ஹோட்டலொன்றின் முன்புறத்தே நின்றது. ஓம்னி பஸ்ஸும் ஓய்வை விழைந்து களைப்புத்தீர, வேன் அருகே ஒதுங்கியது. ஜனாஸாவை மட்டும் வேனினுள் வைத்துவிட்டு, மற்ற அனைவரும் ஹோட்டலினுள் நுழைந்தனர். உள்ளத்து சோகத்தை உடற்சோர்வு கெஞ்சியதா? அஞ்சியதா? அல்லது மிஞ்சியதா?

வெளியே நின்ற ஹோட்டல் முதலாளி வேனை நெருங்கி, ஜன்னல் கண்ணாடியை நகர்த்தி உள்ளே நோட்ட மிட்டார். பச்சை நிறத்து சில்க் புடவை போர்த்திய - மல்லிகைச் சரம் சுற்றி மணம் வீச - ஒரு சந்தூக் வேனினுள் இருந்தது.

இறந்து போனவர் யாராக இருக்கும்? எந்த ஊரிலுள்ள ஜனாஸா இது? எந்த ஊருக்குக் கொண்டு செல்கின்றனர்? என வினாக்கள் முதலாளி மனத்தில் முகிழ்க்க, பலமான சிந்தனை அவர் வதனத்தில் வரிக்கோடிட, மீண்டும் பழைய இடத்திற்கு வந்து நின்று கொண்டார்.

சற்றைக்கெல்லாம் ஜனாஸா மனிதரின் எதிர்வீட்டுக்காரர் தேநீர் அருந்திய பின், முதல் நபராக வெளியே - ஹோட்டல் முதலாளி அருகே வந்தார்.

“யாருடைய ஜனாஸா இது? ஜனாஸாவை எங்கே கொண்டு போகிறீர்கள்?” எனக் கேட்டார் ஹோட்டல் முதலாளி வந்தவரிடம்.

இந்த இரு வினாக்களுக்கிடையே ஒரு கதையல்ல. ஒரு வரலாற்றின் வெட்டுமுகமே தொட்டும் தொடாமலும் கண்சிமிட்டுவதை யாரறிவார்?

அதென்ன.. வரலாற்றின் வெட்டுமுகம்?

❖❖❖

நேற்று - முந்தாம் நாள்போல இருக்கிறது.

கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங் களுக்கு முன்னம் - 1990 அக்டோபர் 30ஆம் நாள் பட்டப்பகல் எட்டிப் பார்க்கத் தயாராகும் முற்பகல் வேளை - வெய்யிலின் விளைவால் யாழ் மண்ணே வெளிச்சமாகியிருந்த நன்னாள் - சூரியனை பாம்பு கவ்வியதோ என ஐயுறும்படியாக, இருள் கவியத் துவங்கிய கரிய நாள் - பன்னெடுங் காலமாக பைந்தமிழின் ஒரு பக்கமாக - யாழ் மண்ணின் மறுபக்கமாக வாழ்ந்த முஸ்லிம்களை இரு மணி நேர அவகாசத்தில் சிறு கும்பலொன்று ஆயுத முனையில் துரத்திவிட்ட துரோகக் கடலின் ஒரு துளி, இந்த முனாஸ் பிரின்ஸிபல்.

“எத்தலம் போனாலும் புத்தளம் போகாதே” என்பர். ஆனால் - அத்தளமே புகலிடம் தந்து அரவணைத்து, துரத்தப் பட்ட யாழ் மைந்தர்கள் சிலரை, இன்னும் பலர், வேறு எங்கெங்கோ சென்றனர். ஆம். நாட்டின் நாலாப் புறங்களுக்கும் தத்தம் மன - பண வசதிக்கேற்ப சிதறிப் போயினர். “எங்கள் நாட்டிலும் இன்னொரு பாலஸ்தீனம் சிதறிக் கிடக்கிறது” என, நம் நாட்டு பைந்தமிழ்ப் பாவலன் ஒருவன் புதுக்கவிதை பாடியது போல, யாழ் முஸ்லிம்கள் சிதறி - சின்னாபின்னமாகி - சீர்கெட்டு - சீரழிந்து போயினர். அன்னவர்களின் அடிமட்ட சகோதரர்கள் சிலர், பிரதான

**"என்னதான் அரசியல் காத்து மாறிமாறி வீசினாலும், நாம யாழ்ப்பா ணத்தவர்கள். கொழும்பில் வாழ்ந்தாலும், வேறு எங்கு வாழ்ந்தாலும், நம்ம ஒரிஜினல் அடையாளம் எப்போதும் மாறப் போவதில்ல.... கொஞ்சம் இளைப்பாறி அமைதியானார், ஆயிரம் பிறை கண்டவர்.**

**மீண்டும் தொடர்கிறார்...**

**சூழ்நிலையின் கைதியான நாம, எங்கே – எப்படி வாழ்ந்தாலும் நம்ம பூர்வீகத்தை –ஆரம்பத்தை மறக்கக் கூடாது. நாம யாழ்ப்பாண மண்ணில பிறந்து, அங்கேயே மூச்சு வாங்கி, அங்கேயே படித்து வாழ்ந்தவங்க–நம்ம எல்லாருடைய உடம்புகளும் யாழ்ப்பாணத்திற்கு உரியது" அதனால என்ட ஒரேயொரு ஆசையை நீங்க எல்லாரும் சேர்ந்து நிறைவேற்றி வைக்கணுங்கறது என் விருப்பம்....**

நகர்களின் தெருக்களில் பஞ்சைகளாய் - பராரிகளாய் - பரதேசிகளாய் இன்னும் - இப்போதும் சுற்றித் திரிகின்றனரே- என்னே கொடுமை!

நம் முனாஸ் பிரின்ஸிபல் படித்த வரல்லவா? பண்பான ஆசிரியரல்லவா? அதிபராக உயர்ந்து, ஓய்வு நிலை கண்ட அனுபவ சுமைதாங்கியல்லவா? அந்த வயதிலும் ஐந்து பாகங்களும் ஒரே புத்தகமாக வெளிவந்திருக்கும் கல்கி கிருஷ்ணமூர்த்தியின் "பொன்னி யின் செல்வன்" நாவலை பத்தாவது தடவையாக தன் வீட்டு ஈஸிச்செயரில் அமர்ந்து, காலையுணவை உண்ட களைப்புத் தீர, வாசித்துக் கொண்டிருந்த வேளையில்தான் அந்தத் துரத்தும் செய்தி தூரத்தில் கேட்டது, ஊர் பரபரப்பானது. என்ன? ஏது? என்றறிய, வந்தியத்தேவன் வல்லவரையனை இடையில் விட்டு தெருவுக்கு வந்தவர்தான்-,

"தெருகூட, இனி அதில் நிற்கக்கூட இடமில்லை; சொந்தமில்லை" என்று சொல்லுமாப்போல் துரத்திவிட்டதால், புத்தளத்திற்கு வந்து, நல்லவர் ஒருவரின் வீட்டுத் தோட்டத்தில் ஒதுங்கி, நாளாவட்டத்தில் வீட்டுரிமையாளர் தந்த நோட்டுரிமையில் ஓலைக் குடிசையைக் கட்டி, புத்தனுபவம் பூக்க, புலம்பெயர் வாழ்வை புதிதாகத் துவங்கினார், முனாஸ் பிரின்ஸிபல். தன் மூத்த மகன் ரம்னாஸ், மூன்றாண்டுகளுக்கு முன்னம் தன் வகுப்புத் தோழன் பாலேந்தி ரனுடன் வெளிநாடு சென்றவன், இப்போது சுவிட்ஸர்லாந்தில் தொழில் பார்க்கிறான். கரிய நாள் சம்பவத்திற்குப் பிறகு - உரிய பணி இதுவென கடமை தழுவிய பொறுப்புணர்ந்து, அவன் அனுப்பி வைத்த சிறு தொகையில் விரலுக்கேற்ற வீக்கம் போல ஒரு வாழ்க்கையை அமைத்து, மனைவி நல்லாள் ஜொஹராம்மாள், சுபைதா - வாஹிதா என்னும் இரு பருவமெய்திய மகள்களுடன் அடக்கமாகக் காலத்தைத் தள்ளிக் கொண்டு போகிறார். இதற்கு பிரின்ஸிபல் யாழ் மண்ணில் பெற்ற அனுபவம் தழுவிய பக்குவம் கை கொடுக்கிறது என்பதே உண்மை!

கருப்பையில் சிசுவுக்கும் - கல்லுக்குள் தேரைக்கும் உணவளிக்கும் வல்லமை கொண்ட இறைவன், தன் குடும்பத் துக்கு உண்ண உணவும், குந்த ஏதோ இல்லிடமும் தந்திருப்பதில் மகிழ்ச்சி தான். என்றாலும் - "அது" போல இல்லையே என்ற அதிருப்தி பிரின்ஸிபலின் உள்ளத்திலும் ஊஞ்ச லாடிக் கொண்டே இருக்கிறது.

"வானத்திற்குக் கீழே வீட்டைக் கட்டிப்புட்டோம். இனி மழைக்குப் பயந்தும் பயனில்லை; வெய்யிலுக்குப் பயந்தும் பிரயோசனமில்லை. வாழ்ந்து தான் ஆகணும்" என்று பக்கத்து வீட்டு இஸ்மாயில் காக்கா சதாவும் சொல்லும் யதார்த்த வரிகளை, இந்த முனாஸ் பிரின்ஸிபலும் அடிக்கடி நினைத்துப் பார்ப்பார். என்றாலும் அவரது இதயத்தின் ஓரத்தில் "அந்தக் குறை" இருந்தே வந்தது. அது என்ன...?

"காலமும் புயலும் மனிதனுக்காகக் காத்திருப்பதில்லை" என ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டே! அதுபோல காலம் முனாஸ் பிரின்ஸிபலுக்காகக் காத்திருக்கவில்லை. ஒரே ஓட்டம்! அந்த ஓட்டத்தின் வேகத்தில் என்னென்னவோ நடந்தேறிவிட்டன.

தங்கைமார் இருவரையும் கரை சேர்க்காமல், தான் தனக்கொரு வழியை பார்ப்பதில்லை என்பதில், மூத்தவன் ரம்னாஸ் உறுதியாக இருந்ததால், தன்னிரு பெண் பிள்ளைகளையும் கரை சேர்ப்பதில் முனாஸ் பிரின்ஸிபல் மும் முரமாகவும் - கண்ணும் கருத்து மாகவும் இருந்தார். மீன் பிடிக்கும் நோக்கில் கரையில் குந்திவிட்டால், மிதப்பில் கவனக் குறைவாக இருக்கலாமா? "பொறுப்புணர்ந்து நடக்கும் பிரின்ஸிபல்" என்று கல்வி வட்டாரத்தில் பெயர் பெற்ற வராயிற்றே! ஆரிய கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணா யிருக்க வேண்டு மென, தனது சக ஆசிரியர்களுக்கு அடிக்கடி ஆலோசனை கூறி, "வேலை வாங்கும் சமர்த்தர்" தன் வாழ்வில் கோட்டை விடுவாரா?

"குன்றா உழைப்பும் குறையா முயற்சியும் - என்றும் எதையும் சாதிக்கும்" என்பதற்கொப்ப, தன்னிரு பெண் பிள்ளைகளான சுபைதாவுக்கும் - வாஹிதா வுக்கும் கொழும்பில் சொந்தக் கடை வைத்து வியாபாரஞ் செய்யும் இரு கண்ணியமான இளைஞர்களைப் பேசி - மகன் அனுப்புவதில் சிறுக சிறுக ஒதுக்கி வந்த சேமிப்பில் - காணும் காணாததற்கு தன்னிடம் பயின்ற "முழிப்பான" ஓரிரு பழைய மாணவர்களின் உதவியில் விஷயத்தை முடித்துவிட்டார். யாழ் மண்ணின் மைந்தரல்லவா... எடுத்த காரியத்தை தொடுத்து முடிப்பதில் மகா.. மகா கெட்டிக்காரர் நம்ம முனாஸ் பிரின்ஸிபல்!

தன்னிரு மகள்களுக்கும் யாழ் மண்ணின் மைந்தர்களைத்தான் மணாளர் களாக அடைய விழைந்தார். ஆனால் - அது மட்டும் கைகூடவில்லை. மனிதன் நினைப்பதுதான் நடப்ப தில்லையே! கொழும்பில் சுபைதாவுக்கும், மலைய கத்தில் கண்டியில் வாஹிதாவுக்கும் மணவினை அமைந்தது. ஆனால், இருவரது குடும்பங்களும் நீண்ட காலமாக கொழும்பிலேயே வாழ்பவர்கள். கொழும்பு மயமாகவே மாறிவிட்ட வர்கள். ஊர் எதுவானாலும் பேர் கெடாமல் பெருமையோடு வாழும் குடும்பங்களின் குலக் கொழுந்துகள்.

என்ன இருந்தாலும் - தன்னிடம் பயின்ற எவ்வளவோ பழைய மாண வர்கள் இருந்தும், தனக்கு மருகர் களாக "யாழ்ப்பாணத்தவர்"கள் அமைய வில்லையே என்ற ஆதங்கம், ஒரு குறையாக அதிபரின் உள்ளத்தில் இருக்கவே செய்தது. ஆனால் "அதை" வெளிக்காட்டிக் கொள்ளாத ஆமை யானார்; ஊமையானார்.

மகன் ரம்னாஸோ, மன்னார் மாவட்டத்து மங்கையொருத்தியை பெற்றோரின் அனுமதியோடு வெளி நாட்டிலேயே மணந்து கொண்டான். மகனாவது வடபுலத்து மாவட்ட மங்கை யொருத்தியை மணந்தானே என்பதில் நம் அதிபருக்கு ஓரளவு திருப்திதான். இப்போது ரம்னாஸ் ஒரு ஆண் - ஒரு பெண் குழந்தைகள் இரண்டுக்கு

தந்தையாவான். என்னதான் ஒரு குடும்பஸ்தனாக ரம்னாஸ் மாறி - தேறி விட்டாலும்; தன் தாய் தந்தையையும் - இரு தங்கையரையும் மறக்கவில்லை. மாதாந்தம் அனுப்பவேண்டியதை அனுப்பி விடுவான். தந்தையின் அறிவும் - அனுபவமும் மகனிடம் ஓரளவேனும் இல்லாமல் போய்விடுமா என்ன? அடிமரத்தின் வாசம் நுனி மரத்திலும் இருக்கத்தானே செய்யும்?

மகள்மார் இருவரும் காலம் செய்த கோலத்தின் விளைவால் கொழும்பில் மணஞ் செய்து, "கொழும்பாத்தி"களாகவே மாறிவிட்டதால், கொழும்பு வாழ்க்கைப் பழக்கப்பட்டு பரிச்சயமாகி விட்டது. இதனால் இனி புத்தளத்தில் தம் பெற்றோர் ஏன் இருக்க வேண்டும்? நாளடைவில் புத்தளத்தில் கட்டிய கல்வீட்டை ஏதோவொரு விலைக்கு விற்றுவிட்டு, கொழும்புப் பக்கம் வந்து விடலாமே. இந்த யோசனையை சுவிஸில் வாழும் அண்ணனுக்கும் சொல்லி, ரம்னாஸும் சம்மதித்து, இப்போது பிள்ளைகள் மூவரும் பெற்றோரை நச்சரிக்கலாயினர்.

நல்ல கருத்தை யார் சொன்னாலும், அதை ஏற்க வேண்டும் என்பது முனாஸ் பிரின்ஸிபலின் மனநிலை. "எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற குறளமுது பருகிய தமிழாசான் இவர். சொல்லவா வேண்டும்!

பிள்ளைகள் மூவரும் பெரியர்வர்களாகி - குடியும் குடித்தனமுமாக வாழ்ந்து வரும் நிலையில், பெற்றோரின் நலன் நோக்கி ஒரு மாற்று வாழ்க்கையை முன்மொழிந்தால், அதை வழிமொழிந்து வாழ்ந்து காட்டுவதுதானே பெரியோர்க்கழகு. சொந்த மண்ணையும் - சூழ்ந்து வாழ்ந்த சொந்தங்களையும் இரு மணி நேரத்தில் கைவிட்டு, மாற்று வாழ்வை கைகொண்ட கண்ணியவான்கள் அல்லவா யாழ் முஸ்லிம்கள்! ஆயுத முனையில் அதிகாரத் தோரணையில் சொன்ன வார்த்தைக்கே வாழ்விடத்தை மாற்றி, வாழ்நிலையை மாற்றி, புதுப்புது அனுபவங்களை சந்திக்கத் தலைப்பட்டு விட்ட முனாஸ் பிரின்ஸிபலுக்கு, தன் பிள்ளைகளின் பெருவிருப்பத்திற்காக கொழும்பு வருவது பெரிய விஷயமே அல்ல.

முன்னாள் அதிபரின் மனைவி நல்லாள் ஜொஹறாம்மாள் ஒரு பிரச்சினையே அல்ல. தன் கணவர் எவ்வழியோ, தானும் அவ்வழியே என ஒவ்வொரு நிமிடமும் நினைத்து வாழும் நெஞ்சம். இஸ்லாமிய பாரம்பரிய யாழ் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பெண். தமிழாசானின் மனைவி, அதனால் பண்புநலனுக்கு ஜொஹறாம்மாளிடம் குறைவேயில்லை.

அப்பாடா... ஒருவாறு முனாஸ் பிரின்ஸிபல் தன் இல்லக் கிழத்தியுடன் கொழும்புக்கு வந்துவிட்டார். புத்தளம் என்னதான் புகலிடம் தந்து, அரவணைத்தாலும், அதற்கான நன்றியுணர்வு நன்றாகவே அவருள்ளத்தில் குடிகொண்டிருந்தாலும், புத்தளம் யாழ்ப்பாணம் அல்ல என்றே அவரது உள்ளுணர்வு சொல்லி வருவதை யாரறிவார்?

இப்போது - கொழும்பு வாழ்க்கைக்கு புத்தளத்தை விட்டும் எழும்பி வந்து, ஆண்டுகள் இருபது ஆகிவிட்டன. கொழும்பு புறக்கோட்டை பெரிய பஸ் ஸ்டேண்டுக்கு அருகிலிருக்கும் வாழைத் தோட்டம் என்ற பகுதியில் - இந்தத் தொடர் மாடியில், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ புனர்நிர்மாணஞ் செய்து திறந்து வைத்த காளியம்மன் கோவிலுக்கு நேர் மேலே - முதலாம் மாடியில் இருப்பதே முனாஸ் பிரின்ஸிபலின் வீடு.

மூத்தவள் சுபைதா மாமி - மாமாவோடு வெள்ளவத்தையில் வாழ்கிறாள். அவளுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். இளையவள் வாஹிதா மாமி - மாமாவோடு முஸ்லிம்கள் செறிந்து வாழும் புதுக்கடையில் - நீதிமன்ற நிழலில் ரஹ்மானிய்யா பள்ளி வாசலுக்கு அருகிலுள்ள பெரிய வீட்டில் வாழ்கிறாள். அவளுக்கு ஒரு ஆண் குழந்தை மட்டுமே!

இரு குடும்பத்தாரும் வாரம் தப்பாமல் சனி - ஞாயிறு தினங்களில் வாழைத்தோட்டம் வந்துவிடுவர். பெற்றோரின் அன்பைப் பரிமாறி மகிழ்வர். இரு மருமகன்களும் முனாஸ் பிரின்ஸிபலுக்கு கிடைத்த பொக்கிஷங்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

என்னதான் மன நிறைவான வாழ்க்கை வாழ்ந்தாலும், நாலு விஷயம் தெரிந்த -நல்லாசானாய், நல்ல அதிபராய் பெயர் சொல்லும்படி பணியாற்றி சிறந்த முனாஸ் பிரின்ஸிபலுக்கு ஒரு மனக்குறை இருந்தே வந்தது. அந்தக் குறையை நாலுபேர் அறிய - நாலுவிதமாகப் பேசித் திரியாவிட்டாலும், தன் மன ஆழத்தை தன் மனையாளிடம் அவ்வப்போது சொல்லியே வந்திருக்கிறார்.

தொலைக்காட்சி முன்னமர்ந்து கட்டாயம் செய்திகளைப் பார்ப்பார். தமிழ்த் திரைப் படங்களை சிறிய வயதில் - விடலைப் பருவத்தில் யாழ்ப்பாணம் வெலிங்டன் திரையரங்கில் பார்த்த நினைவுகள், இப்போதும் மங்காமலும் - மறையாமலும் தன் மனத் திரையில் ஓடினாலும், இந்த முதிய காலத்தில் முண்டியடித்து பார்க்க விரும்பமாட்டார். ஆனாலும் - தமிழ்த் திரை இலக்கியத்தின் பல விஷயங்களில் இந்த முனாஸ் பிரின்ஸிபல் “விஷயஞானம்” உள்ளவர்.

ஒருமுறை சினிமா இதழொன்றில் உலக நாயகன் கமலஹாசன் ஒரு பேட்டியில் சொன்ன விஷயத்தை - தன் வாணாளின் குறிக்கோளாக பலமுறை சொல்லி “பழைய ஞாபகங்களில் மூழ்கிப் போவார். அந்த விஷயம்” “சொர்க்கமேயானாலும் சொந்த இடம்போல் ஆகாது” - இதுதான் அதிபரின் மன ஆசை; மனவோசை.

தமிழ்த் திரை இலக்கியத்தின் பழைய பாடல்களை விரும்பி கேட்கும் இரசிகர் நம்ம அதிபர் என்பது பலருக்குத் தெரியாது.

கவிஞர் கண்ணதாசன் எழுதி - அவரே திரையில் பாடிய “பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது” என்ற பாடலை அடிக்கடி முணுமுணுப்பார். அதில் ஒரு வரிக்கு அழுத்தம் கொடுத்து, தனித்திருக்கையில் அவரே பாடுவார். “யாரும் இருக்குமிடத்தில் இருந்துகொண்டால், எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது; அதில் அர்த்தம் உள்ளது” என்ற வரியிலுள்ள அர்த்தத்தை தன் மனவோசையாக சதாவும் ரீங்காரம் செய்வார்.

சமீபத்தில் ரம்னாஸ் தன் மனைவி - பிள்ளைகளுடன் இலங்கை வந்தான். பேரக் குழந்தைகளை தன் பெற்றோருக்குக் கண்ணில் காட்டிவிட வேண்டும் என்றே குடும்பத்துடன் வந்திருந்தான். அந்த வார இறுதியில் - ஞாயிறு நன்னாளில் தன் இரு பெண் பிள்ளைகளும் வாழைத்தோட்டத்திற்கு வாப்பா - உம்மாவைப் பார்க்க, அண்ணன் - அண்ணி - சிறிய வாரிசு குட்டிகளை கண்டு களிப்புற வந்திருந்தனர்.

“ரம்னாஸ் இன்று நம் குடும்பத்தவர் எல்லாருமே ஒன்று கூடியிருக்கிறோம். நாம் முன்பு யாழ்ப்பாண வீட்டில் சாப்பிட்டதுபோல நிலத்தில் பாய் விரித்து, மேலே சுப்பரா விரித்து, எல்லோரும் ஒன்றாயிருந்து சாப்பிடுவோமே” என்ற தகப்பனின் பிரேரணையை எல்லாரும் ஏகமனதாக ஏற்றனர்.

இதோ எல்லோரும் நிலமமர்ந்து, நிம்மதியாக அந்த நாள் ஞாபகத்தோடு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், ஆயிரம் பிறை கண்டுவிட்ட அதிபரான தகப்பன்,

"ரம்னாஸ்" நீங்க எல்லாரும் கேளுங்க... நான் ஒரு முக்கியமான விஷயத்த சொல்றன். ஏன்ட ஒரே ஆசையும்கூட.. எனப் பீடிகை போட்டார் முனாஸ் பிரின்ஸிபல்.

எல்லோரும் அவர் முகத்தை ஏறிட்டு ஆவலுடன் பார்த்தனர். ஒரு சூரியனை எத்தனையோ கமலங்கள் பார்த்தன.

"என்னதான் அரசியல் காத்து மாறிமாறி வீசினாலும், நாம யாழ்ப்பா ணத்தவர்கள். கொழும்பில் வாழ்ந்தாலும், வேறு எங்கு வாழ்ந்தாலும், நம்ம ஒரிஜினல் அடையாளம் எப்போதும் மாறப் போவதில்ல.... கொஞ்சம் இளைப்பாறி அமைதியானார், ஆயிரம் பிறை கண்டவர்.

மீண்டும் தொடர்கிறார்...

"சூழ்நிலையின் கைதியான நாம, எங்கே - எப்படி வாழ்ந்தாலும் நம்ம பூர்வீகத்தை - ஆரம்பத்தை மறக்கக் கூடாது. நாம யாழ்ப்பாண மண்ணில பிறந்து, அங்கேயே மூச்சு வாங்கி, அங்கேயே படித்து வாழ்ந்தவங்க - நம்ம எல்லாருடைய உடம்புகளும் யாழ்ப்பா ணத்திற்கு உரியது" அதனால என்ட ஒரேயொரு ஆசையை நீங்க எல்லாரும் சேர்ந்து நிறைவேற்றி வைக்கணுங்கறது என் விருப்பம்....

"எல்லாம் தெரிஞ்ச கதைதானே மாமா..." சுபைதாவின் மணாளர்.

"உங்க விருப்பம் என்னன்னு சொல்லுங்க மாமா... நாங்க நெறவேத்தி வைக்கிறோம்" வாஹிதாவின் மணாளர்.

யாழ்ப்பாணத்திலுள்ள காணி - வீடு பற்றிப் பேசப்போகிறார் என்றே அனைவரும் எண்ணினர்; எதிர்பார்த்தனர்.

"எனக்கும் எண்பது வயசு ஆகிடுச்சி... இப்ப கொஞ்ச நாளாகவே ஒரு விதமான நெஞ்சழுத்தம்" எனக்கு நடக்கும்போது நோவுது... ஒருவேளை நான் மௌத்தாகிட்டா...என் ஜனாஸாவை யாழ்ப்பாணத்துக்கு வேன்ல கொண்டு போய், அந்த மண்ல அடக்கிடுங்க... என் உடம்பு யாழ்ப்பாண மண்ணுக் குரியது. ஆமா.. என் உடம்பு யாழ்ப் பாணத்திற்குரியது. அதனால நான் அந்த மண்ணுக்கு கடன் வைக்கப்படாது. யாழ்ப்பாண மண்ணில பொறந்து, யாழ் மண்ணிலேயே அடக்கமானாத்தான் கடன் தீரும். இப்போ நெலமை மாறி வருது. பெரிய குளத்தடி மையவாடியில என் மய்யித்த அடக்கிடுங்க... இதை மட்டும் நீங்க எல்லாரும் சேர்ந்து செஞ்சிடுங்க... இதுதான் என் இறுதி ஆசை...

"என்ன வாப்பா... நீங்க.. நாம எல்லாருமே வெகு சீக்கிரத்தில யாழ்ப் பாணம் போவோம்" என்ற ரம்னாஸின் நம்பிக்கைக் குரலுக்கு எல்லாரும் அமைதியாகினர்.

நாட்கள் சில நகர்ந்தன.

இதோ அந்த ஜனாஸாவை ஏந்திய வேன், மதுரங்குளி ஹோட்டல் முற்றத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்கிறது. ஆம். அந்த யாழ் மண்ணுக்கு . பிறந்த மண்ணுக்கு "கடன் தீர்க்க" இதோ ஜனாஸா வேன் யாழ் மண் நோக்கி விரைந்தோடுகிறது.

❍




நாற்பது வருடங்களுக்கு முன்பு தொடங்கிய நட்பு! இத்தனை ஆண்டுகளுக்குப் பின்தான் சந்தித்தேன். நான் அவரை அடையாளம் காணவில்லை. அவர்தான் உற்று உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். எனக்குள் குழப்பம். யாராக இருக்கும்?

எனது அருகில் அமர்ந்திருந்து பயணம் செய்தவர் இறங்கியதும் அவர் என்னருகில் வந்து அமர்ந்து கொண்டார். சற்றுத் தயக்கத்துடன் என்னை நோக்கியபடி, "நீங்கள்?" என்று கேட்டார். நான் சொல்வதற்கு முன்னதாகவே "பரமநாதன் தானே?" என்றதும் எனக்குள் வியப்பு! இவர் யாராக இருக்கும்? நன்கு பரிச்சயமான முகம் என நான் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவராகவே, "நான் இந்திரசேன" என்றார். என் மனம் சிலிர்த்து மகிழ்வில் துள்ளியது. அப்படியே அவரை அணைத்துக் கொண்டேன்.

ஓ.... என்னுடைய இளமைக் கால நண்பன் இந்திரசேன! நானும் அவனும் முதல் நியமனம் பெற்று கம்பளை வைத்தியசாலையில் நான்கு வருடங்கள் ஒன்றாகப் பணியாற்றியிருக்கிறோம். அந்தக் காலம் எவ்வளவு இனிமையாகக் கழிந்தது. போர் மேகங்கள் சூழாத அமைதியான காலம். தமிழரும் சிங்களவரும் நட்புடனும் பரஸ்பர நம்பிக்கையுடனும் வாழ்ந்த நாட்கள்.

அப்போது நாம் இருவரும் மணம் முடிக்காத பிரமச்சாரிகள். ஒரே அறையில் வாடகைக்குத் தங்கியிருந்து ஒன்றாகத் திரிந்து, இளம் நங்கையரைச் சீண்டி இரசித்த பருவம். இடைக்கிடை படத்திற்குப் போவோம், உல்லாசப் பயணம் போவோம். சிவனொளிபாதம், சிகிரியா, யாழ்ப்பாணம், காலி, கதிர்காமம் எனப் பல இடங்களுக்குச் சுற்றுலா போவோம்.

சம்பள நாட்களில் வீட்டுக்கார அன்ரிக்குத் தெரியாமல் பியர் அடிப்போம். எமது கதை பேச்சிலிருந்தே கண்டுபிடித்து அன்ரி புத்திமதி கூறுவார்.


ச. முருகானந்தன்

(ஞானம் 191, ஏப்ரல் 2016)

இந்திரசேனாவின் ஊர் காலியில் இருந்தது. எனது ஊர் யாழ்ப்பாணம் வடமராட்சியிலிருந்தது. வடக்கும் தெற்கு மாக இரு துருவங்களைச் சேர்ந்த வர்கள். எனினும், காந்தத்தின் எதிர் முனை கள் ஒன்றையொன்று கவர்வது போலவே நாமும் நெருக்கமாகப் பழகினோம். சிங்களம் தெரியாத எனக்கு சிங்களம் சொல்லித் தந்து தடை தாண்டும் அரசகரும மொழிப் பரீட்சையில் என்னைச் சித்திய டைய வைத்தது இந்திரசேனதான். தமிழ் படிக்க வேண்டிய கட்டாயமோ பரீட்சையோ அவருக்கு இல்லாது விட்டாலும், அவரும் என்னோடு சேர்ந்து தமிழ் படித்தார். ஆரம்பத்தில் கொச்சைச் சிங்களத்தில் நானும், கொச்சைத் தமிழில் அவரும் கதைப்பது சுவாரஸ் யமாக இருக்கும். எனினும் வெகு விரைவிலேயே இருவரும் இருமொழி களிலும் சரளமாகப் பேசப்பழகிவிட்டோம்.

எங்கள் இருவரிடையேயும் நட்பு மிகவும் நெருக்கமாக வந்த பின்னர் ஒரு வார இறுதியுடன் வந்த அரச விடுமுறை யுடன் சேர்ந்ததாக நாம் இருவருமாக இந்திரசேனாவின் வீட்டிற்கு காலிக்கு சென்றோம். புது வருட நாட்கள் என்பதால் முழுக்கிராமமும் மகிழ்ச்சியில் இருந்தது. காலி நகரிலிருந்து இந்திரசேனாவின் வீட்டிற்கு சென்ற பாதையெங்கும் எங்களது கிராமங்களைப் போலவே இருந்தது. பனை மரத்திற்குப் பதிலாக கித்துள்மரங்களைக் காண முடிந்தது. எங்கள் வீடுகளில் இருக்கும் மாமரங் களைப் போல் அங்கு பலாமரங்களும், ஈரப்பலாக்காய் மரங்களும் இருந்தன. தென்னை மரங்கள் அங்கும் இருந்தன.

இந்திரசேனாவின் அப்பா அமரசேகர, அம்மா சிறியாவதி மற்றும் சகோதரர் களான இந்திக்க, புத்திக்க சகோதரி இந்துராணி, சிறியாணி எல்லோரும் மிகவும் அன்புடன் என்னை வரவேற் றார்கள். சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள 'பேக்கரி' ஒன்றில் வேலை செய்த காலத்தையும், அப்போ திருந்த அந்நியோன்யத்தையும் பற்றி அப்பா குறிப்பிட்டார். 1956இல் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச் சட்டமும், குடியேற்றமும் அதன் பின்னர் தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொண்ட சாத்வீகப் போராட்டமும், அதை அடக்க அரச ஆயுத படைகளைப் பாவித்தமை பற்றியும் நினைவு கூர்ந்தார். எல்லாம் அரசியல், பதவி ஆசை காரணமாக, ஐக்கியமாக இருந்த உறவுகளை கலைத்து விட்டார்கள். 1958 கலவரத்தின் பின்னர் தாம் ஊரோடு வந்துவிட்டதாகக் கூறி அந்த நாள் ஞாபகங்களை அவர் மீட்டார். அந்தக் கலவரம் வந்திருக்கா விட்டால் நான் அங்கேயே ஒரு தமிழ்ப் பெண்ணை மணக்கும் சாத்தியம் இருந்தது என்று கூறி நெடுமூச்செறிந்தார். 'யாரையே நினைக்கிறாரோ?'

இந்திரசேன வீட்டில் உபசரிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. இந்திர சேனாவின் அம்மா வகை வகையான சுவையான உணவுகளைச் சமைத்துத் தந்தார். பலாக்காய் கறி, அம்பரலங்காய் கூட்டுக்கறி, ஈரப்பலாக்காய், குழம்பு இல்லாத மீன் கறி என வித்தியாசமான வகையான கறிகள் மூலம் திணறடித்தார்.

இந்திரசேனவின் அண்ணா, தம்பி இருவரும் எடுத்த எடுப்பிலேயே நட்பாகப் பழகினார்கள். விடுமுறை நாட்கள் ஆதலினால் எல்லோரும் என்னோடு தமது நேரத்தைச் செலவிட்டார்கள். இந்திக்க, புத்திக்க, சிறியாணி எல்லோருமாக எனக்கு ஊரைச் சுற்றிக் காட்டினார்கள். சிறியாணி அழகாகவும், நிறமாகவும் இருந்ததுடன் இயல்பாக உரையாடினாள். அப்போதெல்லாம் எங்கள் ஊரில் யுவதிகள் இளைஞர்களோடு அதிகம் உரையாடுவதில்லை. சிறியாணியின்

உரையாடல் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு நாள் எல்லோரும் கிக்கடுவ கடற்கரைக்குச் சென்று நீராடி பொழுதை இனிமையாகக் கழித்தோம். கண்டி திரும்பிய பின்னரும் எனக்கு சிறியாணி யின் நினைவு ஆக்கிரமித்திருந்தது. இப்படி ஒரு கலகலப்பான பெண்தான் எனது வாழ்க்கைத் துணையாக வர வேண்டும் என எண்ணிக் கொண்டேன். புதுவருடக் கொண்டாட்டங்கள் எமது கொண்டாட்டங்களை ஒத்ததாகவே இருந்தன.

சில மாதங்களின் பின்னர் இந்திரசேனா என்னுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த போது அவரும் மிகவும் மகிழ்ந்தார். இந்திரசேனாவைக் கண்டதும் என் தங்கைகள் அறையுள் பதுங்கிவிட்டார்கள். வெகு சிரமப்பட்டே அவர்களை அழைத்து இந்திரசேனாவுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். எனது அம்மா, அப்பாவுடன் இந்திரசேனா சரளமாகப் பழகினார். அவர்களும் அவரை அன்புடன் உபசரித் தார்கள். மானாண்டி சந்தைக்குச்சென்று அப்பா ஆட்டு இறைச்சி வாங்கி வந்தார். இன்னொரு நாள் கடற்கரைக்குச் சென்று மீன் வாங்கி வந்து ஒடியல் கூழ் காய்ச் சினோம். அதன் காரமான சுவையை இந்திரசேன இரசித்துக் குடித்தார்.

இந்திரசேன விரும்பியதால் நயினா தீவுக்குச் சென்றோம். இத்தனை அருகில் இருந்தும் இதுதான் என் குடும்பத்த வர்களுக்கும் முதற்தடவை. தங்கைகளும் இப்பயணத்தில் கலந்து கொண்டமை இந்திரசேனாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவர்களைக் கேலி செய்து சிரிக்க வைத்தார். கடற்பயணத்தில் மேகலாவை, கடலில் தள்ளி வீழ்த்தப் போவதாகப் பயம் காட்டினார். "ஐயோ..... இங்கே யாருக்கும் நீந்தத் தெரியாது" என தங்கை மேகலா பயத்தோடு கூறினாள். "பயப்படாதீர்கள்... எனக்கு நீச்சல் தெரியும்..... நான் காப்பாற்றுவேன்...." என்றார் இந்திரசேனா. நாகபூசணி அம்மனையும், நாகவிகாரை புத்தரையும் தரிசித்தோம். "நாம் எல்லோரும் ஒரே அடியில் தான் வந்திருக்க வேண்டும்" என இந்திரசேன சொன்னபோது அது சரி என்றே எனக்கும்பட்டது. பின்னர் கண்டிக்குத் திரும்பினோம்.

எங்களது உறவு இனிமையாகத் தொடர்ந்தது. எம் நட்பில் விரிசல் ஏற்பட்ட தில்லை. அடிக்கடி சிங்களப் பத்திரிகை களில் வருகின்ற இனவாத மிகையான செய்திகளைப் படித்துவிட்டு என்னிடம் கூறுவார். "ம்..... தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்ததுதான் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம்... இந்தநாடு சீரழியப் போகிறது.....". இன்று அது நடந்து விட்டது.

1977ஆம் ஆண்டு கலவரத்தின்போது இந்திரசேன எனக்குத் துணையாக நின்று என்னைப் பாதுகாப்பாக முகாமில் சேர்த்தார். தனது அப்பாவை 1958இல் யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்பாக அனுப்பி வைத்த தமிழர்களை நினைவு கூர்ந்தார். கலவரத்தோடு சென்ற நான் ஊருக்கு மாற்றம் பெற்று அங்கேயே தங்கிவிட்டேன். இதன் பின்னர் சில காலம் எம்மிடையே கடிதத் தொடர்பு இருந்து, பின்னர் அற்றுப்போனது. சிறியாணி யின் திருமணத்திற்கு அழைத் திருந்தும் போகமுடியவில்லை.

இடையில் ஒரு இருபது முப்பது வருடங்கள் நடந்த யுத்தமும் அதன் தாக்கமும் எல்லோரையும் புரட்டிப் போட்டுவிட்டது. தமிழ்சிங்கள மக்களி டையேயான உறவையும் நம்பிக்கை யையும்தான்!

இன்று யுத்தம் முடிந்து சில வருடங்கள் கடந்த நிலையில் இந்திரசேனாவுடனான சந்திப்பு! தலைநரைத்து முதுமையின் ஆக்கிரமிப்பு எம்மிடம் தெரிந்தது. தான்

இப்போ கொழும்பில் இருப்பதாகவும், ஊர் திரும்பமுன்னர் சந்திக்கும்படியும் தனது முகவரியைத் தந்தார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆதலினால் அவரது வீட்டிற்குச் சென்ற உரையாடினேன். யுத்தக் கொடுமைகளும், யுத்தம் முடிந்தும் தீர்வு முன்வைக்கப் படாமையினால் அமைதியின்மை பற்றியும் உரையாடினோம். இருவர் கண்களும் கலங்கின.

"உனது தங்கை மேகலா எப்படி இருக்கிறாள்?.... யுத்தம் உங்களையும் பாதித்ததா?" என்று கேட்டதும் என் கண்கள் கலங்கின.

"மச்சான்..... மேகலாவும், அவளது கணவரும் இருபது வருடங்களுக்கு முன்னர் ஷெல் விழுந்து இறந்து போனார்கள்..." என்றதும் இந்திர சேனா....."ஓ என்ன கொடுமை!" என்று கலங்கினார்.

"எனது மனைவி, மகன், பேரப் பிள்ளைகள் இருவர் என நான்கு பேரை இறுதியுத்த காலத்தில் நந்திக் கடலோரம் இழந்து விட்டேன்..." எனத் தொடர்ந்து கூறிய என்னால் அழுகையை அடக்க முடியவில்லை. அவர் என்னைத் தேற்றினார்.

சிறிது மௌனத்தின் பின்னர் இந்திரசேன தொடர்ந்தார் "எனது தங்கை சிறியாணியை நினைவிருக்கிறதா? மத்திய வங்கி குண்டு வெடிப்பின் போது இறந்துவிட்டாள்"

இந்திரசேனாவின் வார்த்தையில் மனது சிதறியது. "எவ்வளவு கலகலப்பான பெண்.. கொடிய யுத்தம் எல்லோரையும் பாதித்து விட்டது" என நெடுமூச் செறிந்தேன்.

"எனக்கு ஒரு தடவை யாழ்ப்பாணத்தைப் பார்க்க ஆசையாக இருக்கிறது.... அப்பாவும் ஆசைப் பட்டவர்." என்ற இந்திரசேன, மாத இறுதியில் தமது குடும்பத்தவர்கள் சகிதம் வருவதாகக் கூறினார்.

இந்திரசேன இளவயது நண்பன் இப்போது ஆண்டுகள் பல கடந்து ஊருக்கு வருவதில் எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் அவர்களைச் சிறப்பாக உபசரித்து அனுப்ப வீடு இல்லை. விமானக்குண்டு வீச்சில் கற்குவியலாகப் போன எனது வீட்டைத் திருத்தவும் முடியாது. அருகில் ஒரு சிறிய தற்காலிக குடிசையில்தான் தங்கியிருக்கிறோம். எனினும் நண்பன் வரவிரும்புவதை மறுக்க முடியுமா?

இந்திரசேனவின் குடும்பத்தினர் வட பகுதிக்கு வரும் பாதையின் அழகையும், பாதையோரம் புதிதாகக் கட்டப் பட்டுள்ள கட்டடங்களையும் பார்த்து வியப்படைந்ததாகக் கூறினார். இந்திர சேனாவின் குடும்பத்தினரை வாடகை லொட்ஜில் தங்கவைத்தபோது அவருக்குச் சற்று மனம் சங்கடமாக இருந்ததை உணர்ந்தேன். எனினும் அவர் என்னைப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. மறுநாள் அவர்களை எனது கிராமத்திற்கு அழைத்துச் சென்ற போது சிதைவடைந்த வீடுகளும், பிற கட்டடங்களும் தரிசனமானபோது அவருக்குக் கவலையாக இருந்தது. எனது தம்பியின் வீட்டில் அவர்களை உபசரித்து மதிய போசனமும் வழங்கிய பின்னர் எனது வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். கற்குவியலாக இருந்த எனது வீட்டைக் கண்டு ஆச்சரியத்துடன், "புதிய வீடு கட்டுவதற்கு உதவவில்லையா?" என்று கேட்டார். "இந்திய அரசின் உதவித் திட்டத்தில் சிலருக்கு வீடுகட்ட பணம் கிடைத்தது. எனக்கு இன்னமும் கிடைக்க வில்லை" என்றேன். இந்திரசேன அனுதாபத்துடன் என்னை நோக்கினார்.

"இவ்வளவு அழிவுகளை நான் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் இங்கு வந்து பார்த்தால்தான் தெரிகிறது. மீளவும் குடியேற்றப்பட்டதாக ஊடகங்களில் பார்த்தபோது எல்லா வசதிகளும்

செய்திருப்பார்கள் என்று நம்பினேன்....." என்றார்.

"உண்மைதான். வருடக்கணக்கில் அகதிமுகாம் என்ற பெயரில் சிறைபோல வைத்திருந்துவிட்டு கொண்டுவந்து சொந்த ஊர்களில் இறக்கி விட்டதைத் தான் மீள் குடியேற்றம் என்றார்கள். கணிசமானோரின் காணிகள் இன்னமும் ஆக்கிரமிக்கப்பட்டே உள்ளன. சில கிள்ளித்தெளிப்புகளை விட இங்கு பெரிதாக எதுவுமே செய்யப்படவில்லை. அடிப்படை வசதிகள், வாழ்வாதாரம், வதிவிடம், தொழில்வாய்ப்பு எனப் பல சிக்கல்களுக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளார்கள்..."

"உண்மைதான் பார்த்தால் தெரிகிறது...."

"வெளிநாட்டிற்கு அகதிகளாகச் சென்றவர்களின் உதவிகளும், இந்திய வீட்டுத்திட்ட உதவிகளும் இல்லா விட்டால் இன்றைய நிலைமை இன்னும் மோசமாக இருந்திருக்கும்... பாதுகாப்புக்குச் செலவிடும் பணத்தில் ஒரு பகுதியையாவது மக்களின் வாழ்வா தாரத்திற்குச் செலவிட்டால் மக்கள் மீண்டெழுந்திருப்பார்கள்...."

"ஆமாம்.... போர் முடிந்து விட்டது. ஆனாலும் இங்கே பல இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. விடுதி கள் இராணுவத்தினருக்கு அமைக்கப் பட்டுள்ளன." என்று நிறுத்திய இந்திர சேன தொடர்ந்தார். "ம்.... இங்கு இராணு வத்தினர் உலா வருகிறார்கள்... ஆனால் போரில் எத்தனை இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்து வீணாகப் பலியாகி விட்டார்கள்... உங்கள் இளைஞர் களின் பெரும் எண்ணிக்கையிலான மரணங்கள்கூட அர்த்தமற்ற வைதான்... என்னுடைய மூத்த மகனும் இராணுவத்தில் இணைந்து ஆனையிறவு சமரில் இறந்து விட்டான்." இந்திரசேனாவின் குரல் தழதழக்க கண்கள் கலங்கின.

நான் அதிர்ச்சியுடன் அவரை நோக்கி னேன்.

"உங்களுடைய மகனைப் போலவே என்னுடைய மகனையும் பறிகொடுத்து விட்டேன். பேராளியாகச் சென்றவன் ஒரு வருடத்திற்குள்ளாகவே இறந்து விட்டான். அவனது உடலைக்கூட பார்க்கக் கிடைக்க வில்லை....." நானும் அழுதேன்.

இருவரிடையேயும் சிறிது நேர மௌனம் திரையிட்டிருந்தது. நான் தான் மௌனத்தைக் கலைத்து பேச்சை மாற்றினேன். "இன்னொரு விசயம் இங்கு இப்போது மதுபானக் கடைகள் அதிகரித்துவிட்டன. போதைப் பொருட் களும் உலா வருகின்றன. இளைஞர் கள் போருக்குள் வாழ்ந்ததாலோ என்னவோ விரக்தியுள்ளவர்களாக, வன் முறையாளராக மாறிவருகிறார்கள். கொள்ளை, கொலை, அடிதடி, பாலியல் வன்முறை என்பன அதிகரித்துவிட்டன."

"நானும் கவனித்தேன். நாற்பது வருடங் களுக்கு முன்பிருந்த யாழ்ப்பாண மக்களின் இனிய முகங்களைக் காண முடியவில்லை. ம்........ எப்படி எல்லாம் இருந்தவர்கள் இப்படி மாறிப் போனார்கள்.." என்று நெடுமூச்செறிந்தார் இந்திரசேன.

# துணையென ஒன்று

45



அமரர் 'செம்பியன் செல்வன்'
ஆ.இராஜகோபால்
ஞாபகார்த்தச் சிறுகதைப்
போட்டி 2015இல்
மூன்றாம் பரிசு பெற்ற கதை




**வை**த்தியசாலையின் ஐந்தாம் இலக்க வார்ட்டின் முன்பாக அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்த அமுதாவின் எண்ணம் ஒரு நிலையில் இருக்கவில்லை. உள்ளே என்ன நடந்திருக்குமோ என்ற பதைபதைப்பில் மனம் அலைந்து கொண்டிருந்தது.

உள்ளே சென்று பார்க்கலாமா என்று எழுந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். மகப்பேற்று வைத்திய நிபுணர் உள்ளுக்கு சென்றது நினைவுக்கு வந்தது. அவரின் கண்களில் பட்டுவிட்டால் பிள்ளை பெறவிருக்கும் அம்மாமாரைக் குழப்புவதற்கு வந்த தாகப் பேசுவர்கள் என்பது நினைவுக்கு வரவே முன் நின்ற காலையும் பின்னால் எடுத்துக் கொண்டாள்.

எப்பொழுது பார்வையாளர் நேரம் வரும் என்பது போல இருந்தது. யோசனையுடன் முன்னோக்கிப் பார்த்துக் கொண்டவள், அருகில் வந்தபோது கேள்விக் குறியுடன் நோக்கிய தாதியைக் கண்டு வெகுவாக நெளிந்துவிட்டு சற்றுத் தூரத்தில் நின்றாள்.

மகள் களைத்துவிடுவாளோ என்ற கவலை மறுபடியும் எழுந்தது. பேசாமல் சத்திரசிகிச்சை செய்து குழந்தையை எடுத்திருக்கலாம். இவ்வாறான உபாதைகள் எழாமல் இருந்திருக்குமே என்று அந்தத் தாயின் மனம் சிந்தித்தது.

எப்படியாக வாழ்ந்தாலும் பெண்ணாகப் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் அநுபவிக்க வேண்டிய சோதனை தான் இது. ஆனால் இங்கு விளைவு மகிழ்ச்சியூட்டுவதால், ஒரு புதிய பிறப்பை உலகிற்கு எடுத்துச் சொல்லு வதால், அந்த வருத்தங்களையெல்லாம் அம்மாமார் கணப்பொழுதில் மறந்து விடுகின்றனர் என்று நினைத்தாள்.

குழந்தை பிறந்தவுடனும் நாற்பத்தோராவது நாளில் அதனை, பிள்ளையார் கோயிலுக்குக்

(ஞானம் 192, மே 2016)



திருமதி மைதிலி தயாபரன்

**'இப்படித்தானே சொந்தக்காரன் எண்டு சொல்லி ஒருத்தன் கூட்டிக் கொண்டு போய், தன்ர வீட்ட வச்சுப் படிப்பிக்கிறதாச் சொல்லி, அவன்ர மனுசியும் இல்லாத நேரத்தில இப்பிடி வேட்டை யாடி. இப்ப கையில குழந்தையையும் குடுத்திருக்கிறான். துணைஎண்டும் உதவி எண்டும் ஒவ்வொருத் தனும் சொல்லுறது எதுக்காக எண்டு தெரியும்தானே' அவளின் மனம் கசப்போடு நிகழ்ந்தவற்றை எடை போட்டுக் கொண்டது.**

கொண்டுசெல்ல வேண்டும் என்று நேர்ந்து கொண்டாள். அந்த ஆலையடிப் பிள்ளையாரின் அருள்தான், இவ்வாறு திருமணம் நடந்து ஒரு வருடத்திலே குழந்தை பெறக்கூடியதாக இருக்கிறது என்பதை நினைக்கும்போதே அவளை யறியாமல் கண்களில் நீர் சுரந்தது.

மகளை அழைத்துக்கொண்டு சென்ற தும் செய்யவேண்டிய அடுக்குகள் அனைத் தையும் நினைவுபடுத்திப் பார்த்தாள். சரக்குத் தூள், கோப்பித்தூள் முதலாக கருவாடு வரைக்கும் அவள் வாங்கி வைத்திருந்ததை மறுபடியும் நினைவு படுத்திப் பார்த்தாள்.

குழந்தைக்குத் தேவையான குழந்தைச் சட்டை, நப்பி துணிகள், சோப்பு சாமான்கள், நுளம்புவலை என ஒவ்வொன்றாக அவளின் மனக்கண் முன்னாக வந்து நின்றன. கூடவே சிரிப்பும் வந்தது.

எத்தனை பிள்ளைகள் பெற்று விட்டாலும், எத்தனை பிள்ளைகளை எடுத்து வளர்த்திருந்தாலும் பிள்ளை பெறப் போகும்போது பதட்டமாகத்தான் இருக்கிறது. அதிலும் ஐந்து பிள்ளை களைப் பெற்று வளர்த்த அவளுக்கு, மகளை உள்ளே அனுப்பி விட்டு இத்தனை பதட்டத்துடன் இருக்கவேண்டியதாக இருக்கிறதே என்று யோசித்தாள்.

யாரும் இல்லாத அநாதைகளும், வசதியில்லாதவர்களும், உதவியில்லா தவர்களும், சேமமாகப்பிள்ளை பெற்றுத் திரும்பவில்லையா. எதற்காக இந்தப் பதட்டம் என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்ட அவள் நிமிர்ந்த போது, பைகளுடனும் சத்தத்துடனும் வரும் மக்களைக் கண்டதும் பார்வையாளரின் நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்து கொண்டு, தன் மகளைக் காண விரைந்தாள்.

❖❖❖❖❖

குழந்தையைப் பெற்றுவிட்டு வெளி யில் அழைத்துச் செல்வதற்குக் காத்தி ருந்த அந்தப் பெண்ணின் கண்கள், தனக்கு அருகாகக் குழறிக் கொண்டு கிடந்த பெண்ணிடம் சென்று வந்தது.

பாவம்.. செல்லமாக வளர்ந்து வந்தவள் போல.. வலியினைத் தாங்காது துடித்துக் கொண்டிருந்தாள் என நினைத்தாள். அவளுக்குத் தன்னுடைய உடல் வலியை விடவும் மற்றையவளின் கதறலே அவளைக் கலவரப்படுத்துவதாக இருந்தது.

அவளுக்கு சீக்கிரத்தில் குழந்தை கிடைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். 'ஓ' வென்ற அவளின் அலறலைக் கேட்டுச் சற்றுத் தூரத்தில் நின்ற குடும்ப சுகாதார சேவகிகள் அவசரமாக வந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர். ஒருத்தி அவளின் தலை யைத் தடவவும் மற்றையவள் வயிற்றை மெதுவாக அமுக்கிக் கொண்டாள்.

திடீரென அவளது கதறல் உச்ச ஸ்தாயிக்குச் சென்றது. தொடர்ந்து குழந்தை வெளியே இழுப்பது தெரிந்தது. தலையைத் திருப்பியவாறு அனைத் தையும் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

'அப்பாடா.. பிள்ளை பிறந்துவிட்டது என்ற சந்தோசம் அவள் முகத்திலும் தெரிந்தது. நேற்று இரவில் இருந்து அவள் குழறிக் கொண்டதைப் பார்க்க முடியாமல் இருந்தது. ஆனால் அரை மணித்தியால வயிற்றுக் குற்றலின்

பின்னால் தனக்கு ஓரளவு சுகமாகவே குழந்தை கிடைத்ததை நினைவுபடுத்திப் பார்த்தாள்.

தையல் போடுவதற்கு வைத்தியர் வருவதில் தாமதம் ஏற்பட்டதால் அந்தக் குழந்தையுடன் அந்த இடத்தில் வெகு நேரமாகக் காத்துக் கிடந்ததைப் போல் இருந்தது. அன்று அந்தப் பிரசவ விடுதியில் அவர்கள் இருவரைத் தவிர வேறு யாரும் இல்லாததால் அந்தப் பெண்ணையே அவதானித்துக் கொண்டிருந்தாள்.

அருகில் நின்றுகொடிருந்த தாதியர் விலத்தியதும் பிறந்துவிட்ட சிசுவின் முகம் தெளிவாகத் தெரிந்தது. தனது தலையை மேல் நோக்கி உயர்த்தி அந்தக் குழந்தையைப் பார்த்தாள்.

குழந்தை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. அழகான வெள்ளை நிறக் குழந்தையாக இருந்தது. நன்கு உடம்பாக கொழுகொழு வென்று இருந்தது.

தலையை மறுபக்கமாகத் திருப்பி தனது பக்கத்தில் இருந்த குழந்தையைப் பார்த்தாள். கண்களை மூடி உறங்கிக் கொண்டிருந்த அந்தச் சிசுவும் அழகில் குறைந்தது கிடையாது என்பதை யாரும் சொல்லிவிடுவர்.

தன்னுடைய அத்தனை துயரங் களையும் மறந்து முகத்தில் ஒரு புன்னகை பிறந்தது. எதையோ சாதித்து விட்ட திருப்தி மனதில் எழுந்தது. உடம்பைச் சற்றுத் திருப்பி பிள்ளையைப் பார்த்தவாறு நித்திரை கொள்ளுவதற்காக விழிகளை மூடினாள்.

தன்னை யாரோ தட்டுவது போல இருக்கவும் திரும்பிப் பார்த்தாள். வைத்திய சாலையில் சிற்றூழியரில் ஒருத்தி அவளைக் கண்டு புன்முறுவல் பூத்தாள்.

“வார்ட்டுக்குப் போகலாம் அம்மா. லுங்கிய எடுத்துப் போடு” என்று சொன்னாள். அவள் கையில் எடுத்த வுடன் குழந்தையை எடுத்து கால் மாட்டில் வைத்துவிட்டு கூடையையும் எடுத்துக் கொண்டு ஸ்ரெச்சரைத் தள்ளிக் கொண்டே போனாள்.

பிரசவ அறையின் கதவை இன்னொரு ஊழியர் நின்று திறந்து விடுவது தெரிந்தது. மெதுவாக ஸ்ரெச்சரை முன்னுக்குத் தள்ளவும் முன்னாலே வந்து நின்றனர் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, அண்ணி என பெருமளவு உறவி னர்கள்.

சிசுவில் குத்திட்டு நின்ற அந்தக் கண்கள் மேல்நோக்கிச் சென்றதும் ஏமாற்றத்தைக் காட்டவும் அவர்கள் முகத்தைத் திருப்பி மறுபடியும் கதவைப் பார்க்க முற்பட்டனர். தனது பக்கத்தில் இருந்த அந்தப் பெண்ணின் உறவினர்கள் அவர்கள் என்பதை கணப்பொழுதில் புரிந்துகொண்டாள் அவள்.

தொடர்ந்து அவளைத் தள்ளிக் கொண்டு சென்ற தாதி ஒருவரும் காணப் படாத அந்த வார்ட்டின் கட்டில் ஒன்றுக் கருகில் கொண்டு சென்று அவளது கூடையை இறக்கி வைத்தாள். குழந் தையை கட்டிலில் கிடத்திவிட்டு, அவள் இறங்குவதற்கு உதவி செய்தாள்.

மெதுவாக அவளின் கைகளைப் பிடித்தபடியே இறங்கியவள், லுங்கியை ஒழுங்காகக் கட்டிவிட்டு கட்டிலில் மேற் பகுதியை ஆதரவாகப் பிடித்தபடியே ஆறுதலாகக் கட்டிலில் அமர்ந்தாள். அவளுக்கு மிகவும் களைப்பாக இருந்தது.

“எதும் சாப்பிடம்மா... பாக்க ஆராவது வருவாங்களா?” என்று தாதி கேட்டார். இல்லையென அவள் தலையாட்டியதால் வைத்தியசாலையில் கொடுக்கும் சாப் பாட்டை அவளுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றார்.

அவள் சென்றபிறகு குழந்தையின் தலையை ஆதரவாகத் தடவியபோது, அது அரவத்தினால் எழும்பிக் கத்தத் தொடங்கியது. அதை ஆசுவாசப்படுத்து வதற்காகக் கையில் எடுத்தாள்.

தன்னை ஆதரவுடன் தடவி அணைத்துக் கொள்ளும் தந்தையாரின் முகம் ஏனோ மனத்திரையிற் தோன்றி மறைந்தது. உச்சிமோந்து அணைத்து உணவூட்டும் அன்னையின் கரங்கள் அவளைத் தொடுவதுபோல இருந்தது. ஆளுக்கொரு கையைப் பிடித்தபடி அவளை ஊஞ்சலாட்டும் அண்ணாவினதும் அக்காவினதும் எண்ணம் திடீரென எழுந்தது.

மனது கல்லாக இறுகியதைப் போல இருந்தது. அழுதுகொண்டிருந்த குழந்தையின் குரல் தூரத்தில் ஒலிப் பதைப் போலக் கேட்டது.

"களைச்சுப் போன அம்மாவுக்கு சாப்பாடு எதுவும் குடுக்க வேணும் எண்டு உங்களுக்குத் தெரியேல்லயா. எங்க ரோசியக் கூப்பிட்டு சாப்பாட்டக் கொண்டரச் சொல்லுங்கோ" என்று யாரோ சொன்னதும் திடீரென விழித் தெழுந்தாள்.

தனக்கு அருகில் நின்றவாறு பிரதம தாதி பேசிக் கொண்டி ருந்ததைப் பார்த் ததும் அவளுக்கு என்ன நடந்தது என்பது புரிந்தது. தொடர்ந்து வந்த களைப்பாலும் சாப்பாடு இல்லாமல் இருந்ததாலும் அவளுக்கு மயக்கம் வந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொண்டாள்.

தாதியர் கொண்டு வந்து கொடுத்த அந்த சாப்பாட்டைச் சாப்பிட்டதும் மறுபடியும் தெம்பு வந்ததைப் போல இருந்தது. குழந்தையைத் தன்னோடு அணைத்தெடுத்து பாலூட்ட ஆரம் பித்தாள். தன்னையும் மீறிய சோர்வில் மறுபடியும் உறங்கிவிட்டாள்.

ஆளாரவாரம் கேட்டபோது மறுபடியும் உறக்கம் கலைந்தது. தன்னுடைய அறைக்குள் அத்தனை பேர் எதற்காக வந்தனர் என்பது அவளுக்குப் புரிய வில்லை. ஏதோ தோன்றவும் சஞ்சலத் துடன் குழந்தையைப் பார்த்தபோது அது உறங்கியபடி கிடந்தது.

அடுத்த கட்டிலிற்குக் கொண்டு வரப்பட்ட தாயையும் பிள்ளையையும் பார்ப்பதற்காக அத்தனை பேரும் வந்திருக் கிறார்கள் என்பது விளங்கியது. தங்களைப் பார்ப்பதற்கு வருவதற்கு யாரும் இல்லை என்பது நினைவுக்கு வந்தது.

அத்தனை நேரமும் கடமையை மறந்திருந்த இயற்கை உபாதைகள் தலைகாட்டத் தொடங்கின. கழிவறைக்குச் சென்றுவரவேண்டும் என்ற நோக்கத் துடன் மெதுவாக எழுந்து தன்னுடைய கைத்தடியைத் தேடினாள்.

அவளின் தலைமாட்டில் இருந்த அதை அங்கிருந்த பெண் ஒருத்தி அறிந்து எடுத்துக் கொடுக்கவும் அதைக் கவனமாக ஊன்றியபடியே வலது கைப்பக்கமாகத் திரும்பி வந்தாள். மாபிள் இடப்பட்ட நிலத்தில் அதை ஊன்றிக் கொண்டு வருவது சிரமமாக இருந்தது. ஒருவாறு சென்று கழிவறையை அடைந்தாள்.

அவள் திரும்பவும் தன்னுடைய கட்டி லுக்கு வந்தபோது குழந்தை விழித் திருந்தது. அவனை அழ விடாதவாறு ஒரு வயதானவர் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தார்.

அவளுக்கு நிம்மதியாக இருந்தது. அருகில் அமர்ந்தவாறே அடுத்த கட்டிலை நோட்டம் விட்டாள். அவளுக்கு அருகாக இருந்து பிள்ளை பெற்ற பெண் என்பது அவளுக்குப் புரிந்ததும் அறிமுகமாகப் புன்முறுவல் செய்தாள்.

அவளின் தந்தையார்தான் தன்னுடைய குழந்தையை அழவிடாது வைத்தி ருந்தவர் என்பது தெரிந்தது. குழந்தை யின் தலையைத் தடவிவிட்டு அனை வரும் சென்றனர்.

அன்று இரவு தூக்கம் இல்லாமற் கிடந்தவள், தன் குழந்தையையும் அருகில் இருந்தவளின் குழந்தையையும் கவனித்துக் கொண்டிருந்தாள். அசதி காரணமாக அசைய முடியாத நிலையில் மற்றைய பெண் படுத்திருந்தாள். பிள்ளையைப் பெற்ற களைப்பில் இருந்து இன்னமும் மீண்டு கொள்ளவில்லை. வெகு

செல்லமாக வளர்ந்திருப்பாள் போலும் என்று நினைத்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் தன்னுடைய குழந்தையின் உடையை மாற்றிக் கொண் டிருந்த வேளையில் யாரோ அழைப் பதைப் போல இருக்கவும் திரும்பிப் பார்த்தாள். அருகில் கட்டிலில் படுத் திருந்த பெண்தான் அழைத்தாள்.

தன்னுடைய குழந்தையையும் முகத் தைக் கழுவித் துடைத்துக் கொடுக்கு மாறு கேட்டாள். அவள் கொடுத்த புதிய உடைகளை வாங்கிக் குழந்தை யைத் துடைத்துவிட்டுப் போர்த்தி விட்டாள். அந்தத் தாயின் முகத்தில் திருப்தி ஏற்பட்டது.

மெதுவாகக் கைகளைக் கொடுத்து எழுந்து அமர்ந்தவள் அவளைப் பற்றிக் கேட்டாள். சொல்லுவதற்கு எதுவும் விசேடமாக இல்லாததால் தான் ஒரு அநாதை என்பதை மட்டும் தெரிவித்தாள். அவளின் அனுதாபப் பார்வை அவளின் மீது படர்வதைப் போல இருந்தது.

“நேற்று இரவு சாப்பிட்டிருக்க வில்லையா. இரவு முழுதும் நித்திரை இல்லாமல் இருந்த மாதிரித் தெரிஞ்சுது” என்று கேட்டாள். உண்மைதான் வைத்திய சாலையின் கொடுத்த வெறும் பாணை சாப்பிட முடியாமல் வயிற்றைக் காயப் போட்டது அவளுக்கும் தெரிந்திருக்கிறது என்று நினைத்தாள்.

அடுத்த வேளை அவளைப் பார்க்க வந்திருந்த அவளின் தாயார் இவளுக்கும் சாப்பாடு கொண்டுவந்தார். அதை வாங்கிக் கொள்ளுவதற்கு அவளின் மனம் ஒப்பவில்லை. அவர்களின் தொந்தர விற்காக கூச்சத்துடன் அதைப் பெற்றுக் கொண்டாள்.

வைத்தியசாலையில் இருக்கும்போது எதையும் நினைக்கத் தோன்றவில்லை. தாதிமாரின் அன்பான உபசரிப்பும் அந்தப் புதிய பெண்ணின் அன்பான பேச்சுக் களும் ஆறுதலும் அவளின் நிலை மையை மாற்றிவிட்டதைப் போல உணர்ந்தாள். புதிய அவதாரத்தின் தொடர்ந்த தொந்தரவுகள் அவளிடம் மீதமிருந்த நித்திரையையும் தொலைக்க வைத்தன.

மாற்றங்கள் என்பது சடுதியாகத்தான் நிகழ்கின்றது. ஒரே நாளில் தன்னை அநாதியாக்கிய விதியும் அப்படித்தானே!

குழந்தை பிறந்து இரு நாட்கள் கடந்து விட்டன. அவர்கள் இருவரையும் வீட்டுக்குச் செல்லலாம் என்பதைத் தெரிவித்த தாதியர், பிள்ளைகளுக்கான பீ.சீ.ஜீ ஊசியை ஏற்றிவிட்டுச் சென்றனர்.

குழந்தையை பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு வீட்டுக்கு தகவல் சொல்வ தற்காக அந்தப் பெண் தொலைபேசி இருக்கும் இடத்திற்குச் சென்றுவிட்டாள். தன் குழந்தையைக் கையில் வைத்தி ருந்தவாறே அவளின் குழந்தையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் அவளுடைய தாய் அமுதாவும், தந்தையும் அக்காவும் வந்தி ருந்தனர். அவளின் பொருட்கள் எல்லாம் எடுத்துக் கொண்டபின்னாக அவளின் பெற்றோர் இவளை நோக்கி வந்தனர்.

“நீ வெளிக்கிடேல்லயா அம்மா” என்று அவளின் தாயார் கேட்டார்.

“எல்லாம் ஆயத்தம். நான் வெளிக் கிடுறன்” என்றவாறே அந்தப் பெண் குழந்தையை ஒரு கையிற் தாங்கியவாறே மற்றைய கையில் தடியையும் எடுத்தபடி நிமிர்ந்தாள். மெதுவாக அவளது பையை எடுத்துக் கொடுத்தவாறே

“நீ பிழையா நினைக்காட்டி நாங்க ஒண்டு சொல்லுறம். இந்தப் பிள்ளைய உனக்கு விருப்பமெண்டா எங்களிட்டத் தா. எங்கட பேரப்பிள்ளயோட சேத்து வளத்தெடுக்கிறம்” என்று தயங்கியவாறே அந்தப் பெண்மணி சொன்னார்.

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அப்படி ஒரு எண்ணம் அவளுக்கு வந்திருக்கவேயில்லை. அவர்கள் ஏன்

அவ்வாறு சொல்கிறார்கள் என்று யோசித்தாள்.

"உனக்கு ஒருத்தரும் இல்ல. கஸ்டத்தில இருக்கிறாய் எண்டு என்ர மகள் சொன்னாள். அதுதான் ..." என்றவாறு இழுக்கவும், அவளுக்கு 'ஓ' வென்று கதறியழ வேண்டும்போல தோன்றியது.

அன்னை தந்தையின் அன்பிற்குள் அக்கா, அண்ணாவின் செல்லமாய் செல்வத்தில் சிறகடித்துப் பறந்தவள், வன்னியில் இருந்து புறப்பட்டு வவுனியா நோக்கி வந்தபோது, விழுந்த குண்டில், ஒரே நேரத்தில் அனைவரையும் இழந்து தனது ஒரு காலும் நடக்கச் சக்தியற்று வவுனியா வைத்தியசாலையினால் உயிர் மீட்கப்பட்டது அப்போது நினைவுக்கு வந்து நின்றது.

கண்ணில் இருந்தும் நீர் சொரிய தன்னுடைய குழந்தையை நன்றாக மார்போடு இழுத்து அணைத்துக் கொண்டாள். அவளிடம் இருந்து வார்த்தைகள் எதுவும் வந்திருக்கவில்லை. குழந்தையை உற்றுப் பார்த்தபடி மௌனமாக இருந்தாள்.

"உனக்கு ரொம்பச் சின்ன வயசு அம்மா. பிள்ளய எங்களிட்டத் தந்து போட்டு, உனக்குத் துணையொண்டத் தேடிக் கொள்ளுறதுதான் நல்லம்" என்று அந்தப் பெண்மணியின் கணவர் சொல்லவும், விறைத்தபடி நிமிர்ந்தாள்.

'இப்படித்தானே சொந்தக்காரன் எண்டு சொல்லி ஒருத்தன் கூட்டிக் கொண்டு போய், தன்ர வீட்ட வச்சுப் படிப்பிக்கிறதாச் சொல்லி, அவன்ர மனுசியும் இல்லாத நேரத்தில இப்பிடி வேட்டையாடி. இப்ப கையில குழந்தையையும் குடுத்திருக்கிறான். துணை எண்டும் உதவி எண்டும் ஒவ்வொருத்தனும் சொல்லுறது எதுக்காக எண்டு தெரியும்தானே' அவளின் மனம் கசப்போடு நிகழ்ந்தவற்றை எடை போட்டுக் கொண்டது.

அவள் தொடர்ந்து மௌனமாக இருக்கவும் அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு ஏதோ நினைத்தவளாக அந்தப் பெண் "நீ என்ன நினைக்கிறாய் எண்டது எங்களுக்கு விளங்குது. உனக்கு வேண்டிய நேரத்தில வந்து பிள்ளயப் பாக்கலாம். அதின்ர நீ அம்மா எண்டு சொல்லாம விட்டாச் சரி" என்று சொல்லவும் அவளின் வாய் தானாகவே திறந்து கொண்டது.

"என்ர பிள்ளய நான் வச்சு வளப்பன். அத யாருக்கும் குடுக்க மாட்டன். எனக்கு எண்ட பிள்ள வேணும்" என்றாள்.

"எப்பிடியம்மா வளப்பாய். உனக்குத் தான் உதவிக்கு ஆரும் இல்லையே!" என்று பெரியவர் சொன்னார்.

"என்னப் போல இன்னும் எத்தினயோ அம்மாமார் வன்னியில இருந்து வந்தவங்க கூலி வேல செய்து பிள்ளைகளப் பாக்கிறாங்க. எனக்கும் முடியும். ஏதாவது செய்து பிள்ளயப் பாக்க முடியும். எனக்கு இருக்கிற ஒரேயொரு துணை இந்தப் பிள்ளய நான் விட்டுக் குடுக்கமாட்டன்" என்று அவள் மறுத்தாள்.

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பார்வையில் பேசிவிட்டு அவர்கள் நகர்ந்ததும், குழந்தையின் உடையை எடுக்கக் குனிந்தவளுக்கு கண்ணில் பட்டது, அவர்கள் தந்துவிட்டுப்போன அவர்களின் விலாசம் எழுதப்பட்ட தாள்.

வெளியாட்களின் உதவி எத்தின நாளுக்கு என்றபடியே சிந்தித்த அவளின் கால்கள் நகரத் தொடங்கின.

அவர்கள் வைத்துவிட்டுப் போன அந்தக் காகிதம் காற்றில் அகப்பட்டு ஊசலாடத் தொடங்கியது, அவளைப் போல.

❍❍❍

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2016 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| பேரீச்சை முட்கள் | மூதூர் மொகமட் ராபி | திருகோணமலை |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| இனம் | உ.நிசார் | மாவனல்ல |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| தெளிவு | தேவகி கருணாகரன் | அவுஸ்திரேலியா |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| அடுத்த தலைமுறையாவது | கலாபூஷணம் எஸ்.ஐ.நாகூர்கனி | கொழும்பு 12 |
| தோடு | சிவனு மனோகரன் | டிக்கோயா |
| அனுபவம் புதுமை | கே.எஸ்.சுதாகர் | அவுஸ்திரேலியா |
| தலைமுறைகளைத் தேடி..? | செ.குணரத்தினம் | மட்டக்களப்பு |
| சமாதி | ப.க.மகாதேவா | தெஹிவளை |
| கரப்பத்தான் பூச்சி | த.கோபாலகிருஷ்ணன் | மட்டக்களப்பு |
| தெளிவு | மதிவதனி (வாணமதி) | சுவிற்சர்லாந்து |
| வயிறு | அண்டனூர் சுரா, | தமிழ்நாடு |

நடுவர்கள்: தி. ஞானசேகரன், திருமதி பத்மா சோமகாந்தன், திருமதி வசந்தி தயாபரன்.

**(ஞானம் 206, ஜூலை 2017)**

46

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2016இல் முதற் பரிசு பெற்ற கதை

1

# பேரீச்சம் மூட்டைகள்



மூதூர் மொகமட் ராபி

'அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!' சுபஹுக்கு பாங்குகேட்டு நெத்திரை கலைஞ்சு கண்ண முழிச்சேன். ராவெல்லாம் கத்திக் கத்திக்கிட்டே இருந்த தில எப்ப நெத்திரை கொண்டனோ அந்த அல்லாஹ்தான் அறிவான். எப்பயாவது ஒருதரம் நெத்திரை கொள்றவகளுக்குத்தான் அதெல்லாம் நெனைவிருக்கும். பொழுது விடிஞ்சா கண்ணுல தண்ணியோட இரிக்க என்னப்போல ஆக்களுக்கு நெனை விரிக்குமா? இந்த ஏழுவருச காலத்தில என்ட கண்ணோட கண்மூடாத ராவுதான் கூடுதலா இரிக்கும்.. ஆனா ஒவ்வொருதரம் எழும்பக்கொளயும் என்னமோ வரிசக்



திரு.எம்.பீ.முகம்மது ரபி, நமது நாட்டின் மூத்த இலக்கியப் படைப்பாளி திரு.வ.அ.இராசரத்தினம் பிறந்த மண்ணாகிய மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓர் எழுத்தாளராவார். இவர் மூதூர் மத்தியகல்லூரியின் முன்னாள் அதிபர் மறைந்த திரு. ஏ.எம். புஹாரி மற்றும் மூதூர் அந்நஹார் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அம்ரா புஹாரி தம்பதிகளின் ஒரே புதல்வராவார். மூதூர் மொகமட் ராபி எனும் பெயரில் தேசிய பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் சிறுகதைகள், கவிதைகள், பத்திகள் போன்ற படைப்புகளை எழுதிவரும் இவர் ஒரு பாடசாலை ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார். இதுவரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவர் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட பல சிறுகதை மற்றும் கவிதைப்போட்டிகளில் பரிசுகளை வென்றிருப்பதுடன் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ்நாட்டின் காக்கைச்சிறகினிலே இலக்கிய சஞ்சிகை மற்றும் அவுஸ்திரேலிய அக்கினிக்குஞ்சு இணையத்தளத்தினால் நடாத்தப்பட்ட எஸ். பொ. ஞாபகார்த்த, அருண் விஜயராணி ஞாபகார்த்த சிறுகதைப் போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசுகளை பெற்றுள்ளார். இலுப்பம் பூக்கள், முயல்களும் மோப்ப நாய்களும் ஆகிய இரு சிறுகதைத்தொகுப்புகளை வெளியிட்டுள்ள திரு. எம். பீ. முகம்மது ராபி வெகுவிரைவில் நாளைக்கும் நிலவு வரும் எனும் சிறுகதைத் தொகுப்பையும் மணல் தீவுகள் எனும் புதுக்கவிதை நூலையும் வெளியிடவுள்ளார்.

(ஞானம் 207, ஆகஸ்ட் 2017)

கணக்கா படுத்தெழும்புன மாதிரித்தான் இரிக்கும். செல நேரத்துல எங்க படுத்துக்கெடக்கனென்டது கூட மறந்து பெயித்துருமென்டா பாத்துக்கங்கன நீங்க.

"யா அல்லாஹ்! ஒவ்வொருநாளும் ஒன்னைத் தொழுவுரத்தையும் ஒனக்கிட்ட துஆ கேக்கிறதையும் வுட்டா மத்த ஒண்ணையும் என்னால செய்ய ஏலாமக் கெடக்கே. இன்னும் எத்தின காலத்துக் குத்தான் என்னை இப்படி நாலு செவுத்துக் குள்ளயே வச்சிருக்கப் போறா..? இதைவிட என்னைய இந்த படுத்த படுக்கையிலேயே கண்ணை முழிக்க வுடாம மவுத்தாக்கி விடமாட்டியா?"

நெனைக்கக்கொள கண்ணுலருந்து வடியிற தண்ணி சும்மா கொதிதண்ணி கணக்கா என்ட காதுப்பக்கத்தால வழிஞ்சு போய் பொடரியை நனைக்குது. நெத்திரையும் இல்லாம முழிப்புமில்லாம ஒருவெதமான மயக்கத்தில கெடந்து ஒழத்திக்கிட்டிருக்கிறேன்..

வூட்டுக்குப் பக்கத்தால காட்டுக்கு கொள்ளிக்குப்போற வண்டிமாட்டுச் சத்த மெல்லாங் கேக்குது. மாட்டுற கழுத்து மணிச் சத்தமும் வண்டில்றோதச் சத்தமும் ஒண்ணாச் சேந்து கேக்குது.. வாப்பா நெத்திரைவுட்டெழும்பி தொண்டையைச் செருமிக்கிட்டு எழும்புறாக.. எழும்பிப் பெய்த்து மால்ற (குடிசையின்) தகரக் கதவை சராலெண்டு தொறக்கிற சத்தமும் கறள் புடிச்ச பழைய வாளியால தண்ணிய அள்ளியெறைக்கிற கெணத்தடிச்சத்தமும் வருவுது. கொள்ளியடுப்பை மூட்டி உம்மா தேத்தணி வைக்கிறாக.. அடுப்புக்குள்ள கெடக்கிற தென்னஞ் செரட்டை சீறிக்கிட்டு பத்தி யெழும்புமே.. அந்தச் சத்தமும் நல்லாக் கேக்குது பாருங்க.

வேதத்தீவு கரையில கொக்கு நிக்கிறாப்பல பால்வெள்ளை நெறத்தில உடுப்பும் பர்தாவும் போட்டுக்கிட்டு பக்கத்துவூட்டு பாத்திமா, ரவ்சானா எல்லாரும் எங்கட முத்தத்தில வந்து நிண்டு ஸ்கூலுக்குப்போறதுக்கு என்னக் கூப்பிடுதொள்.. மாலுக்குள்ளருந்து நானும் தங்கச்சியும் பத்தாப்பழசாப்போய் மஞ்சளடிச்ச வெள்ளைச்சட்டைய போட்டுக்கிட்டு வெளியில வாறோம்.. மானாவாரி வயல்வெட்டை முத்திலும் யாரோ குப்பையப் பத்தவச்ச பொகை மாதிரி பனி புடிச்சிக்கெடக்கு.. ராவல்லாம் பனிப்பெஞ்சு தவரப்பத்தை நெருஞ்சிப்பத்தையெல்லாம் நனைஞ்சு கெடக்கு.. வயல் வரம்பால எல்லாரும் நடந்து ஸ்கூலுக்குப்போறோம்..

ஸ்கூல்ல அசெம்பிளிக் கூட்டம் நடந்த பொறவு வகுப்புக்குள்ள தேம்பூச்சி கலஞ்ச மாதிரி புள்ளையொள்ளாம் போடுற சத்தம்.. டீச்சர்மார்ர அதட்டுவை... கொப்பில எழுதிற பாடம்.. எடைவேளை வுட்டோனயே நாங்க வெளையார்ற 'ஆமி-புலி' கேம்ப் அட்டாக் வெளை யாட்டு.. தொண்ணூறாமாண்டு ஷெல் லடிச்சு ஒடைஞ்சு வுழுந்த பழைய ஸ்கூல் கட்டடச் செவுத்தில மாங்கொட்டைச் சுண்ணாம்பால நாங்க கீறுற படம்.. ராசங்காக்காட வேலியோரத்துப் புளிய மரத்துக்குக் கல்லெறிஞ்சி பொறக்கித் தின்ற நொண்டான் (பிஞ்சுகள்).. ஆளுக் காள் வைக்கிர பட்டப்பேர்.. பொட்டை யளோட புடிக்கிற மாங்காச் சண்டை.. எல்லாம் படத்தில வாறதப்போல தெரிஞ்சு பொறவு ஓடுற தண்ணிக்குள்ள ஆடுற நெலவு மாதிரி நடுங்கிக் கலைஞ்சுபோற நேரத்தில திருப்பியும் திணுக்கெறிஞ்சு எழும்பிட்டேன்.

யாரோ என்ட றூம் கதவை தட்டுற சத்தங் கேக்குது.

கதவுக்குக் கீழால எனலாடுது. என்ட கதவுலயிருக்க கண்ணாடிச் சதுரத்துக் குள்ளால காட் பொம்புளைகள் ரெண்டு பேர்ற வெள்ளை மொகந் தெரியுது. ரெண்டு பேரும் ரெண்டு விதமான பொம்பு ளையொள். அதில ஒரு பொம்புளை

கொஞ்சம் ஒசரம். எரக்கமான கொண முள்ளவ. அவக்கு கண் ரெண்டும் பூனையிர கண்மாதிரி தனிப்பச்சை கலர்ல இரிக்கும். மத்தவ கொஞ்சம் தொக்க.. ஆனா சுடுதண்ணி. ரெண்டுபேரும் எந்த நாளும் இஞ்சதான் டியூட்டிக்கு வாறவக. என்ட கதவை வெளியா லருந்து தொறந்துபோட்டு உள்ள எட்டிப்பாக்கிறாக. அவகள்ள தொக்கப் பொம்புளை, நா இன்னும் எழும்பாம படுத்திக் கிட்டிருக்கதைப் பார்த்துப் பொட்டு என்னமோ அறபியில சத்தம் போடத் தொடங்கினா. ஒடனே மத்தவ அவட காதுக்கிட்ட குனிஞ்சி என்னமோ சொல்ல டக்கெண்டு நிப்பாட்டிப்பொட்டு அங்கால பெயித்தா.

அவளொள் ரெண்டுபேரும் மத்த மத்த றூமுகளை ஒவ்வொண்ணாத் தொறந்துவுர்ற 'கிரீச்..கிரீச்' சென்ட சத்தம் காதுக்குள்ள கேட்டுக் கிட்டேயிருக்க எழும்புறதுக்கு மனசில்லாம அப்பிடியே மல்லாந்து கெடந்திக்கிட்டிருந்தேன். வாப்பா, உம்மா, தங்கச்சியெல்லாரும் எங்கதான் போனாக..? ஸ்கூல், புளிய மரம், வயல்வெட்டை, வண்டில் மாட்டுக் கழுத்து மணிச்சத்தம் எல்லாம் எங்க தான் போனிச்சு..? திருப்பியும் நா எங்கெரிக்கிறனென்ட ஐமிச்சம் வந்திட்டு. சுத்திவரப் பாத்தேன்.. எல்லாம் ஒரே மாறாட்டமாக் கெடக்கு. எல்லாம் கனவுல நடக்கிற மாதிரியும் பொழையாக்கீறுன படம் மாதிரியும் ஒரே கொழப்பமா இரிக்கிது.

'யா அல்லாஹ்! நான் எப்பதான் வூட்டுக்குப் போவேன்.. எல்லாரையும் பாப்பேன்..?என்ட தம்பி தங்கச்சியெல்லாம் பெரியாக்களா வளந்திரிக்குமொள.. நான் இஞ்ச மவுத்தாப்போனா ஊர்லே உம்மா வாப்பா சகோதரங்கள் சொந்த பந்தங்கள் எல்லாப்பேரும் என்னைத் தேடுவாகளே.. அவக மட்டுமா.. எனக் கெண்டு கவலைப்பட இப்ப என்ட ஊரே தெரண்டு நிக்கிதாமே. நாசமாப் போவானொள்.. போனமாசம்தான் உம்மாவ மட்டும் டெலிபோன்ல பேசவுட்டா னொள்.. ஏழு வருசத்துக்குப் பொறவு அவட குரலக்கேட்டோடனே கொஞ்சநேத்தைக்கு எனக்கு தொண்டை யெல்லாம் அடச்சிப் பெய்த்துது.. கதைச்சத்த வுட நாங்க ரெண்டு போரும் மாத்தி மாத்தி போன்ல கத்தினதுதான் கூட. அப்பிடிப் பேசக்கொள உம்மா அப்படித்தான் சொன்னாங்க. இந்த ஒலகமே என்ட விடுதலயத்தான் கேட்டுக் கிட்டுக் கெடக்குதாம்.. யா அல்லாஹ்! என்னைக் காப்பாத்து.. என்னை இந்த ஊருல மட்டும் மவுத்தாக்கிவுட்டுறாத யா அல்லாஹ்!'

❖❖❖

*மார்ச் மாசம் 2005.*

அப்ப நா எங்கட ஊர் ஸ்கூல்ல எட்டாம் வகுப்புப் படிச்சிக்கிட்டிருந்தேன். ஒரு வெள்ளிக்கெழமை விடியக்காலம்பற வெறுந் தேத்தணிச்சாயத்தை குடிச்சிப் போட்டு வெட்டா வெறும் வவுத்தோட ஸ்கூலுக்குப் போயிருந்தேன். தங்கச்சி ஒத்தரும் அண்ணைக்கு வரயில்ல. பதினொண்ணரை மணிவரைக்கும் பச்சத் தண்ணியத் தவிர வேற ஒண்ணு மில்லாமக் காஞ்சு கெடந்ததுல தலையச் சுத்திக்கிட்டு வந்திச்சு. கையில ஒரு சதமும் இல்லாதத்தால மத்தியானம் உம்மா சோறு கறி ஒண்ணும் ஆக்கியிருக்க மாட்டான்டு தெரியும். என்டாலும் ஸ்கூலுக்குப் போய் பசியோட வருவ னென்டு சொல்லி எனக்கு தின்றதுக்கு என்னமாவது வெச்சிருப்பான்ற நம்பிக்கை யில காஞ்சு கெடந்த வயல் வரம்பால வூட்டைப்பாத்து வெசையா நடந் தேன். அப்பதான் பாத்தேன். எடையில என்னைக் கண்டுக்கிட்டு, 'தாத்தோவ்!' என்டு கீசிக்கத்திக்கிட்டு ஓடிவந்தான் கடசித் தம்பி.

'டேய் என்னடா..? ஏன்டா இப்பிடிக் கத்திக்கிட்டு ஓடிவாறா..?'

‘தாத்தா.. தாத்தா.. வாப்பா ஒன்னய கொழும்புக்கு கூட்டிக்கிட்டு போப் போறாகளே.. எனக்குத் தெரியுமே..’ என்டு கத்திக்கிட்டு திருப்பியும் வூட்டுக்கே ஓடுனான் தம்பி. அவன்ட கையில ஒரு புத்தாப்புது வெளையாட்டுக் காரும் அரைவாசி கடிச்சுத்துத் திண்ட கெண்டோசும் இருந்திச்சி. அதை யெல்லாம் பாத்தா உம்மாவ வெளி நாட்டுக்கு அனுப்புற ஏஜென்ஸி பாறூக் மாமா கொழும்புல இருந்து வூட்டுக்கு வந்திருக்கிறமாதிரிதான் இருந்திச்சு. ஒருவேளை உம்மா வெளிநாட்டுக்குப் போற விசியம் சரிவந்திட்டா..? பாவம், உம்மா ஏற்கனவே அவக்கு இழுப்பு வருத்தம் வேற இரிக்கி. எப்படித்தான் சவூதிக்குப் பெய்த்து இருக்கப் பொறாவோ தெரியாது. உம்மாவை வெளிநாட்டுக்கு அனுப்பு றதுக்கு வாப்பாக்கும் எங்க ளுக்கும் துண்டா விருப்பம் கெடையாது.. ஆனா அதைவுட்டா எங்களுக்கு வேறு வழியும் கிடையாது. அவ போனாத்தான் இனி நாங்க எல்லாரும் சாப்பிட ஏலுமென்ட நெலமை வந்திட்டு.. ஏற்கனவே எல்லாரும் அரைப்பட்டினி காப்பட்டினி.. காணா தத்துக்கு ஊர்ல இரிக்க சில்லறைக் கடையிலயெல்லாம் வாப்பாக்கு கடனும் நெறையக் கெடக்கு.



அவரும் என்னதாஞ் செய்வாரு..

கொள்ளிவெட்றதுக்கு காட்டுக்குள்ள போனா புலி நிண்டுக்கிட்டு தெரத்திறதும் ஊருக்குள்ள வந்தா கடைக்காரன் கடனக் கேட்டு தேடுறதுமா இருந்தா அவரும் எத்தினைக்குத்தான் பொறுப்பாரு. புலி தெரத்தினாலும் பறவாயில்லண்டு ரெண்டு மூணு தரம் கொள்ளியேத்தி வந்தாரு.. மத்த தரம் போவக்குள்ள வண்டிலை புலிபுடிச்சி வச்சிக்கிட்டு ஐயாயிரம் ரூபாய் கப்பம் கேட்டானொள். அங்க இங்க கடன ஒடன வாங்கி எப்படியோ வண்டிலைக் கொண்டுக்கிட்டு வந்தார். இனி காட்டுக்குள்ள கொள்ளிக்கு போற யில்லண்டுதான் கொஞ்சநாள் இருந்தாரு. ஆனா எல்லாருக்கும் வவுறு என்டு ஒண்ணு கெடக்கே. எங்கட பசி, பட்டினி மட்டுமில்ல பள்ளிவாசக்காசி, புள்ளை யொள்ற பள்ளிக்கூடக்காசி குடுக்காத வெக்கமும் எல்லாத்தையும் பொறுக் கேலாம திருப்பியும் காட்டுக் குள்ள போனாரு. அவ்வளவுதான் இந்த முறை ரெண்டு மாட்டையுஞ் சேத்து புலி கொண்டு பெய்த்தானொள். இனி வந்தா ஆளும் மிஞ்சாது என்டு சொல்லிப் பொட்டானொளாம். பாவம், ஒழைப்புக் கெண்டிருந்த வண்டில் மாடும் அநியா யமாப் பெய்த்துது. அது இருந்த நேரத்தில ஏதோ ஒண்ணு ரெண்டு நேரமாவது வூட்டுல அடுப்பு பத்தினிச்சி. அதுவு மில்லாமப் பெய்த்துது. வாங்கின கடனும் வவுத்துப் பசியும் கூடிக் கிட்டுப்போக உம்மாவால சமாளிக்க யேலாமப் பெய்த்துது. வாப்பாவும் எப்ப பாத்தாலும் ஒரு மாதிரி யோசனை யோட குந்திக்கிட்டிருக்கத் தொடங் கினாரு.

ஊருக்குள்ளே எத்தினையோ வசதிக்காரக்கள் இருந்தாக. அவ கல்லாம் ஒண்ணுக்கு ரெண்டு மூணு தரம் மக்காக்குப் போய் டபுள்,

**என்ட வயசைக் அஞ்சாறு வருசம் கூட்டிப்போட்டு கள்ளப் பாஸ்போட் ஒன்டு எடுத்தா எனக்கு சவூதி போவலாமென்டும் குடும்ப நெலமையை யோசிச்சு ஓமென்டு சொல்லட்டாமென்டுஞ் சொன்னாரு. எனக்கு என்ன செய்யிறதென்டு வெளங்கயில்ல. மலைக்குக்கூட தனியப் போவாத நா எப்பிடி சவூதிக்கு தனிய போவனென்டு நெனைக்கக் கொளயே மேலெல்லாம் நடுங்கிப் பெய்த்துது எனக்கு.**

ரிபிள் ஹாஜியாரா வரத்தொடங்கினாக. ஏழெட்டுத்தரம் உம்றாக்குப போனாக.. அவகளுக்கிட்ட நெறையப் பேருக்கிட்ட வாப்பா சாடமாடையா கஷ்டத்தைச் சொல்லி ஒரு ஒத்தக்கரத்தையாவது கடனுக்கு வேங்கித் தரச்சொல்லிக் கேட்டுத்தான் பாத்தாக. கடக்கரையில குருத்துமண் ஏத்தியாவது கொஞ்சங் கொஞ்சமா அவகட கடனை கட்டுற னென்டுங் கேட்டுப்பாத்திரிக்காக.. ஆனா ஒத்தரும் ஒதவி செய்யயில்ல. சிலபேர் ஆக்களுக்குள்ள வெச்சு பெருமைக்கு வாங்கித் தாரெனென்டு சொல்லிப்போட்டு பொறவு வாப்பாவ இழுத்தடிச்சு ஏமாத்திப் போட்டாக.

வாப்பாட ஏலாத நெலைமையைப் பார்த்துப் பொட்டுத்தான் உம்மா ஏஜென்சி பாறுக்மாமாவை வரச்சொல்லி யிருந்தாக. அவரு எங்கட தூரத்துச் சொந்தக் காரந்தான். ஹவுஸ் மெயிட் வேலைக்கு வெளிநாட்டுக்குப் போறதுக்கு முடி வெடுத்து உம்மாவைப் படம்புடிச்சு பாஸ்போட் போமெல்லாம் நெறப்பி அனுப்பியாச்சு. இனி அவ வெளிநாடு போகிறதுக்கு விசா வரணும் என்டுதான் பாறூக் மாமா சொல்லிக் கிட்டிருந்தாரு. உம்மாக்கு விசாதான் வந்திருக்கும். அதான் எயாபோர்ட்டுக்கு போகப் போறாங்க போல.. அப்பிடியே என்னையும் கொழும்புக்கு எயா போட்டுக்கு கூட்டிட்டுப் போகப் போறாகளாக்கும்.. நெனைக்கவே சும்மா ஜில்லென்டு இருந்திச்சு.. இந்தா பக்கத்துல இரிக்கிற மலைக்கே (திருகோணமலை) யாரும் என்னைக் கூட்டிக் கிட்டுப்போனது கெடையாது... ஹைய்யா..! இப்பவே கொழும்புக்கு போற மாதிரிதான் இருந்திச்சு. பசிச்சதெல்லாம் மறந்து பெய்த்துது. ஒரே ஓட்டத்துல தம்பியைத் தெரத்திக்கிட்டு வூட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

ஆனா வூட்டுக்குப் போன எனக்கு வேறொரு செய்தி காத்திக்கிட்டு இருந்திச்சி.

வெளிநாட்டுக்குப் போகப்போறது உம்மா இல்லியாம் நாந்தானாமென்டு குண்டத்தூக்கிப்போட்டாரு ஏஜென்சி பாறூக் மாமா. வெறைச்சிப்பெய்த்து நிண்ட என்னை மாலுக்கு வெட்டையால கெணத்தடிப்பக்கம் தனியக் கூட்டிக்கிட்டுப் போய்க் கதைச்சாரு. உம்மாவுக்கு இழுப்பு வருத்தம் இருந்ததால மெடிகல் தரமாட்டனென்டுட்டானாம். அப்பிடியே போனாலும் உம்மாவால அங்கரிக்கிற வெயிலுக்கு வருத்தம் தாங்கேலாதாம்.. அதனாலதான் முடிவை மாத்தினதா மென்டு நெலமையை வெளக்கமா எடுத்துச் சொன்னாரு. என்ட வயசைக் அஞ்சாறு வருசம் கூட்டிப்போட்டு கள்ளப் பாஸ் போட் ஒன்டு எடுத்தா எனக்கு சவூதி போவலாமென்டும் குடும்ப நெலமை யை யோசிச்சு ஓமென்டு சொல்லட்டா மென்டுஞ் சொன்னாரு. எனக்கு என்ன செய்யிறதென்டு வெளங்கயில்ல. மலைக் குக்கூட தனியப் போவாத நா எப்பிடி சவூதிக்கு தனிய போவனென்டு நெனைக்கக் கொளயே மேலெல்லாம் நடுங்கிப் பெய்த்துது எனக்கு.

தங்கச்சி தம்பியெல்லாம் பக்கத்து வூட்டு வளவுக்குள்ள வெளையாடிக் கிட்டு இரிக்க உம்மாவும் வாப்பாவும் மாலுக்குள்ள ஆளுக்கு ஒரு மூலையில

பேசாமக் குந்திக்கிட்டு இருந்தாக. உம்மா உசுமாம கண்ணைச் சீலைத் தலைப்பால பொத்திக்கிட்டிருக்க வாப்பா என்னை நேரப் பாக்காம வேறெங்கயோ பாத்திக்கிட்டு இருந்தாக. உம்மாக்கு என்னை அனுப்புறதில கொஞ்சமும் விருப்பம் இல்ல என்டதை அவ வாப்பா இரிக்க பக்கம் பாக்காம இரிக்கிற திலருந்தே நா தெரிஞ்சிக கிட்டேன். நா வர முந்தி என்னை அனுப்புற விசியத்துல அவக ரெண்டு பேருக்குள்ளயும் வாய்த் தக்கம் நடந்திரிக்காப்பல வெளங்கினிச்சு. எப்பிடியோ பாறுக் மாமாட தெண்டிப்புல உம்மாவையுஞ் சம்மதிக்க வச்சிப்புட்டாக வாப்பா. அதுக்குப் பொறவு நாங்க நாலஞ்சுதரம் கொழும்புக்கு அலஞ்சு திரிஞ்சதில ரெண்டொரு கெழமையில பாஸ்போட் எல்லாம் ரெடியாகி விசாவும் கெடச்சதெல்லாம் கனவுல நடந்த மாதிரித்தான் இரிந்திச்சிது. 2005ம் வரிசம் ஏப்பிரல் மாசம் மொதலாந் திகதியென்டுதான் நெனைப்பிரிக்கி, வாப்பா, உம்மா, ஏஜென்ஸி பாறூக் மாமா எல்லாரும் வந்து என்னைக் கொழும்பு எயாபோட்டுல பிளேனேத்திவுட்டாக. என்ட வாழ்க்கையில தட்டாத்தனிய நாஞ் செஞ்ச மொதல் பிரயாணமே பிளேனேறி இந்த சவூதிக்கு வந்ததுதான்.

மஹ்ரமான ஆம்புளைத் தொணை யில்லாம வயசுக்கு வந்த பொம்புளப் புள்ளையொள் தூரப்பிரயாணம் போறது கூடாது என்டு ஸ்கூல்ல பெரிய மவுலவி சேர் படிச்சுத்தந்திரிக்காக. வேற நாட்டுல ருந்து மக்காவுக்கு ஹஜ்ஜு செய்யிற துக்கு வந்த எத்தினையோ வயசான பொம்புளகளைக்கூட மார்க்கச் சட்டத்துல அப்பிடி வரப்படா தெண்டு சொல்லி சவுதி அரசாங்கம் திருப்பிய னுப்பியூட்ட கதையையும் அவக தான் சொல்லித்தந்தாக. ஆனா ஹவுஸ் மெயிட் வேலைக்கு தனியாகப் பறந்து வாற என்னப்போல கொமர் புள்ளை யொளை மட்டும் ஏன் இந்த சவுதி அரசாங்கம் உசுமாம நாட்டுக் குள்ள எடுக்குது என்டதுதான் எனக்கு வெளங்கயில்ல. எங்கட பெரிய மவுலவி சேர இனும எங்கயாவது கண்டா இதப்பத்திக் கேக்கணுமென்டு யோசிச்சிக் கிட்டுதான் ரியாத் எயாபோட்டில் வந்திறங் குனேன்.

❖❖❖

ரியாத்தில கால் வச்சதும் இஞ்ச உள்ள பில்டிங்குகளையும் அந்த ஊர்ர வடிவையும் பாத்து மலைச்சுப் பெய்த்தேன்.

இஞ்சயிரிக்கிற அறபி ஏஜென்ஸிக் காராக்கள் வந்து என்னையும் என்னைப் போல வந்த மத்தப் பொம்புளைகளையும் எயாப் போட்டுல வச்சுப் பொறுப் பெடுத்தாக. வாகனத்துல ஒரு எடத்துல ஒண்ணாத் தங்க வச்சு எல்லாரையும் பிரிச்சுப் பிரிச்சு ஒவ்வொருவூடுக ளுக்கும் அனுப்புனாக. என்னை ரெண்டு மூணு வூட்டுக்கு மாத்தி மாத்தி கடைசியில ரியாத்துலருந்து நானூறு கிலோமீட்டருக்கு அங்கால த.்.வாதிமி என்ட ஊருல இரிக்கிற ஒரு அறபிட வூட்டுக்கு வேலைக்கு அனுப்புனாக. அந்த வூட்டுக்கார அறபி அங்கயிரிக்கிற மினிஸ்ட்ரியில பெரிய ஒபிஸராம். அவர்ர பொஞ்சாதியும் நல்ல வடிவான அறபி பொம்புளதான். நா அவவை மேடம் நோனா எண்டுதான் கூப்பிடு வேன். வயசைக் கூட்டிப்போட்டு கள்ள பாஸ்போட்ல வந்ததால எனக்கு ஒரு றெயினிங்கும் கெடைக்கயில்ல. அதால அங்கவுள்ள நெலமையுந் தெரியாம வேலையுந்தெரியாம சரியான கஷ்ட மாத்தான் இரிந்திச்சி.. காணாததுக்கு அறபு பாஷையும் வெளங்கயில்ல.. ஊர்ல குர்ஆன் மதரசாவுல மனப்பாடமாக்கி ஓதுன அறபுக்கும் சவுதியில பேசுற அறபுக்கும் சம்பந்தங் கொறைவென்டது இஞ்ச வந்த பொறவுதான தெரிஞ்சுது.

எனக்கு வந்துசேந்த வூட்ற நெல வரம் சரியா வெளங்கயில்ல. இருந் தாலும் ஒருமாதிரி தட்டுத்தடுமாறி உடு துணிகளைக் கழுவுறது, மாபிள் தரையைத் தொடைக்கிறது, மேடம் நோனாட சமைய லுக்கு ஒதவுறது என்டு எல்லா வேலகை ளையும் செய்திக்கிட்டுத்தானிருந்தேன். மேடம் நோனாட பெரிய புள்ளை யொளைப் பாத்துக்கிறது கூட பெரச்சி னையில்ல.. ஆனா அவட நாலுமாசக் கைப் புள்ளையைப் பாத்துக்கிறததான் எனக்குத் தெரியாத வேலை. அவனுக்கு பால் கரைச்சு குடிக்கக்குடுக்கிறதும்தான் பழக்க மில்லாத பெருங்கஷ்டமாருந்திச்சு.. திடீர் திடீரெண்டு அறபியும் மேடமும் புள்ளைகளைப் பாத்துக்கச் சொல்லிப் போட்டு கார்ல ஏறிப்போயிட்டு நாலைஞ்சு மணித்தியாலஞ் சொணங்கித்தான் வருவாக. போவக்கொள பாலைக் கரைச்சிக் குடுத்து நெத்திரையாக்கிப் போட்டுத்தான் போவா அவ.

ஆனா சில வேளையில அவ போற நேரத்துல புள்ள நெத்திரை கொண்டா மட்டும் பாலைக் கரைச்சி எழும்புனாக்குடுக்கச் சொல்லிட்டுப் போவா.. அப்பிடி உட்டுட்டுப் போன ஒரு நேரத்திலதான் என்ட தலநசீபை (தலைவிதி) மாத்தி எழுதுன அந்தச் சம்பவம் நடந்திது. அதை இப்ப நெனைச்சாலும் என்ட மேலெல்லாஞ் சிலுக்குது.

கண்மூடித் தொறக்கிறதுக்குள்ள எல்லாமே நடந்து பெய்த்துது.

ஒண்ணையொண்ணு முழுங்குற பாம்புக் கதை ஒண்ணு எங்க உம்மம்மா ஒரேயே சொல்லுவாக. அந்தப் பாம்புக் கதையில வாற மாதிரி பொழுதை கெழமையும் கெழமைய மாசமும் மாசத்தை யெல்லாம் வருசமும் முழுங்கிக் கிட்டே போனதில பாழாய்ப் போன இந்த ஊருக்கு நா வந்து ஏழுவருசம் ஓடிப்பொயித்திது. இந்தாரிக்க பூட்டுனறூமக்குள்ள நாலு செவுத்தையும் மாத்தி மாத்திப் பாத்திக்கிட்டு என்ட காலம்போவுது. காட் பொம்பிளைகளோட மட்டுந்தான் கதைக்கப் பேசலாம். தேவைக்கி திக்கித்தெணறி அதொளோட பேசிப் பேசியே இப்ப யாராவது அறபுல பேசினா கொஞ்சமென்டாலும் வெளங்குது. நானும் ஏதோ பரவாயில்ல கொஞ்சம் நஞ்சம் கதைப்பேன். ஆனா சளசளன்டு பேசுனா வெளங்கிறது கஷ்டம்.

ரெண்டு மூணுமாசத்துக்கொரு தரம் எப்பையாவது திடீரெண்டு காட் பொம்பிளையொள் வந்து அபாயாவ உடுத்திக்கிட்டு வெளிக்கிடச் சொல்லு வாளொள்.. நெறைய பொலீஸ் காவலோட பெரிய வேன் மாதிரி வாகனத்தில என்னை மட்டும் ஏத்திக் கிட்டு அங்கரிக்கிற அறபிகள்ற ஊர் நீதவான் கோர்ட்டுக்கு கொண்டு போவா ளொள். அது ஒரு பெரிய பள்ளிவாசல் மாதிரித்தான் இரிக்கும். நெறைய அரபிகள் வெள்ளை உடுப்புகளோட கூடிக் கெடப்பானொள்.. ஜட்ஜ் மொதக்கொண்டு ப்ரொக்டர்மார் வேலை செய்யிறாக்கள் சகலபேரும் அறபியிலதான் பேசுவா னொள். எனக்கு ஒரு எழவும் வெளங்காம முழிசிக்கிட்டிருப்பன். எடையில எனக் கிட்ட வந்து அறபியில எழுதின ஒரு வெள்ளைப் பேப்பரைக் காட்டி, ‘இது நீ எழுதினதா?’ என்ட மாதிரித்தான் என்னமோ கேப்பானொள்.. அதுக்கு நா பதில் சொல்றதுக்கு மொத அவனொளே என்னமோ அறபியில ஜட்ஜுக்கிட்ட போய்ச் சொல்லுவானொள். இந்த மாதிரியே எல்லா நடக்கும். பொறவு என்ன..? திரும்பியுங் கூட்டிக்கொண்டு வந்து அதே றூமுக்குள்ள அடைச்சு வைப்பா ளொள்.. இப்பிடியேதான் போகுது என்ட காலம்.

இந்த நாசம் புடிச்ச நாட்டுக்கு நா வராமவுட்டு ஊர்லயே இருந்திருப்பேன்,

இந்நேரம் என்னோடு படிச்ச மத்த மத்தப் புள்ளையொளைப்போல நானும் படிச்சி அல்லாஹு அஹ்லம் ஓஎல்ல ஏஎல்லப் பாஸ் பண்ணி அரசாங்க வேலக்கும் போயிருப்பேன். மாசச் சம்பள மெடுத்து உம்மாவையும் வாப்பாவையும் ஒரு கொறையில்லாம கவனிச்சிக்கிட் டிருந்திருப்பேனே.. தம்பி தங்கச்சி மாரையும் படிக்க வச்சிருப்பனே என்டு நெனைக்கக்கொளதான் என்ட கண்ணுல தண்ணியும் கல்புல ரெத்தமும் வரப் பாக்குது.

❖❖❖

*ஜனவரி மாசம் 9, 2013*

இன்டைக்கு என்னை எங்கெயோ கூட்டிப் போறனென்டு முந்தநாள் டியூட்டி லருந்த காட் பொம்புளைகள் சொல்லி யிருந்தாளொள். எந்தநாளும் கூட்டிப் போற கோர்ட்டுக்குத்தானென்டு நெனைச்சு உசாரில்லாமத்தான் இருந்தேன். ஆனா பொறவுதான் தெரிஞ்சுது இஞ்ச ரியாத்துல இரிக்கிற ஸ்ரீலங்கா எம்பஸியால ஒரு மவுலவி என்னை வந்து பாக்கப் போறாராம் என்டு தெரிய வந்திச்சிது.

என்னை மாதிரி காவல்ல இரிக்கிற மத்தப் பொம்பிளைகளையெல்லாம் பாத் திட்டுப் போறதுக்கு கொறஞ்சது மாசத்தில ஒத்தராவது வாறாக. ஆனா எனக்கு மட்டும் இந்த பாலைவனத்து ஊர்ல வந்து பாக்கிறதுக்கும் பேசிறதுக்கும் யார்தான் இரிக்கப்போறாக.. அதால என்ட ஊர்லருந்து யாரையாவது பாக்க மாட்டமா.. தமிழ்ல பேச மாட்டமான்டு இரிக்கும்.. நம்ம நம்மட சொந்தப் பாசையில கதைக்கிறதுக்கும் நம்மட கல்புல இரிக்கிறதச் சொல்றதுக்கும் சந்தர்ப்பங் கெடைக்காதான்டுதான் நா இவ்வளவு காலமும் யோசிச்சிக்கிட்டு கெடந்தேன். அதாலதான் எம்பஸி மவுலவியப் பாக்கிறதுக்கு விரும்புனேன்.

ஆனா ரெண்டு மூணு வரிசத்துக்கு மொத ஒரு பொம்புளை ரெண்டு மூணுதரம் என்னைத் தேடி வந்து பார்த்துப்போட்டுப் போனவதான்.. அவ ஒரு டொக்டர் என்டுதான் சொன்னா.. இஞ்ச சவுதியில எங்கேயோ ஒரு எடத்திலதான் ஆஸ்பத்திரியில வேலை செய்யிறா என்டுதான் சொன்னா.. ஆறுமாசத்துக்கு ஒருதரம் வந்திட்டிருந்தா.. அப்பிடி வரக் கொள எத்தினையோ மணித்தியாலம் கார்ல பிரயாணஞ் செஞ்சுதான் வாறதாச் சொல்லிக்கிட்டிருப்பா. ஒவ்வொரு தரமும் என்னப் பாத்ததும் அவக்கு கண் ரெண்டும் கலங்கிப் பெய்த்திரும். ஆனா அத எனக்கிட்ட காட்டிக்காம கெட்டித்தனமா மறைச்சுக்கிட்டு ஆறுதலா எரக்கமாக் கதைப்பா.

'எப்பிடி இருக்கிறீங்க மகளே?' என்டு தொடங்கி எனக்குப் பக்கத்தில இருந்து என்ட தலையத் தடவிக்கிட்டே என்னை நெஞ்சோட அணைச்சுக்குவா.. எனக்கு ஒடன என்ட உம்மாட நெனைவு தான் வரும்.. அவ என்னோடு பேசுற நேரமெல்லாம் கண்ணுல தண்ணி வழிஞ்சோடுமே தவிர ஒரு சொல்லுக் கூடப் பேசவராது எனக்கு. மாசக் கணக்கில செவுத்தை பாத்திக்கிட்டு உசுமாம கெடக்கிறவளுக்கு திடீரென்டு எப்படிப் பேசவரும்?

'ஏன்டா பேசாம இருக்கிறா? என்னை விட்டால் நீ வேற யாரோடதான்டா பேசலாம்? இந்த உலகமே இன்டைக்கு உன்னைப் பத்தித்தானே மகளே பேசிட்டிருக்கு. அது தெரியுமா உனக்கு?' என்டு என்ட கண்ணைத் தொடச்சிப் போட்டு நெஞ்சோட கொழந்தை மாதிரி என்னை கட்டிப்புடிச்சிக்குவா அந்த பொம்புளை டொக்டர். என்ட ஒடம்பை யெல்லாம் செக் பண்ணி வருத்த மேதும் இருக்குதாண்டெல்லாம் கேட்டு அடுத்தமுறை வரக்கொள மருந் தெல்லாம் எடுத்துக்கிட்டு வருவா.

'உனக்காக உன்ட ஊர்லயும் மற்ற மற்ற ஊர்களிலேயும் துஆ கேட்டு

**"சே! இவள் சரியான அழுத்தக்காரிடீ. அந்தப் பச்சைப் பாலகன் தொண்டையில பால் பொறுத்து மவுத்தாகினான் என்டு இவள் சொல்றதெல்லாம் பொய். இவள்தான் உண்மையாவே கொன்டிருப்பாள்."**

ஆயிரக்கணக்கான மக்கள் தொழுகையும் போராட்டமும் நடத்திறாங்க.. நம்ம ஜனாதிபதி கூட...' என்டு என்னென் னமோ சொல்லிக்கிட்டே போவா. அதிலை யெல்லாம் எனக்கு கவனமில்லாம அந்த டொக்டர் பொம்புளையிட அழகான மொகத்தையும் அவ வித்தியாசமா பேசிற தமிழையுந்தான் பார்த்துக்கிட்டிருப்பேன். ஆனா, கடைசியாக அவ வந்த நேரத்தில் மட்டும், 'அதெல்லாம் இரிக்கட்டும்! என்னை எப்ப ஊருக்குப் போவ வுடுவாங் களாம்?' என்று தைரியமாகக் கேட்டு விட்டேன்.

அவ ஒரு நிமிஷம் என்ட கண்ணை உத்துப் பார்த்துப்போட்டு என்னை கட்டிப் புடிச்சிக்கிட்டா. சின்னவயசுல வெட்டா வெறுங்காலோட வயல் வெட்டைக்குள்ள வெளையாடப்போவேன். அப்ப உள்ளங் கால்ல முள்ளோ கண்ணாடிச் சில்லோ குத்திரும்.. அப்ப நா கத்திக்கிட்டே வருவேன்.. ஒடனே எங்க உம்மாவும் இதே மாதிரித்தான் என்னை கட்டிப் புடிச்சுக்குவா.. கத்துவைய நிப்பாட்டித் தான் மருந்துபோட்டுடுவா.

'அது.. அது வந்து நம்மட கையில் இல்லம்மா.. எல்லாத்துக்கும் அந்த அல்லாஹ்தான் இருக்கிறான்.. நீ கவலைப் படாம தொடர்ந்து துஆ கேளு மகளே.' என்று கூறும்போதே ஒடைஞ்சுபோகும் அவட குரல்.

'நா என்னபாவஞ் செஞ்சேன்? ஏன் அந்த அல்லாஹ் என்னை இப்பிடி கஷ்டப் படுத்திறான்.. நான் படிக்கத் தானே ஆசைப் பட்டேன்.. படிக்கிறத்துக்கு வுட்டிருந்தா நானும் நல்லா வந்திருப் பனே.. இப்பிடி இஞ்ச வந்து அலைக் கழியணுமா..?'

'சரிம்மா! நடந்தது நடந்திட்டுது. நாங்க எல்லாருமே ஒன்னை வெளியி லெடுக் கத்தாண்டா பாடுபடுறம்.. நீ நம்பிக்கையாயிரு! இந்தா இதில.. சொக்லேட், பிஸ்கட்டெல்லாம் இருக்கு.. எடுத்துவைம்மா.. அப்ப நா போய்ட்டு வரட்டாடா? அழக்கூடாது அடுத்த முறை வருகிற நேரம் உனக்கு என்ன கொண்டுவர?'

'எனக்கு எதுவும் வேணாம்.. என்னைய என்ட வூட்டுல கொண்டுபோய் உம்மாக்கிட்ட வுடுங்க!'

'சரி.. சரிடா! நா வாறேன்டா.. பார்க்கிற டைம் முடிஞ்சிட்டும்மா! சரி.. அல்லாஹ் இருக்கான் மகளே அவன் உன்னைய பாத்துக்கொள்ளுவான்.. அவன் பாத்துக் கொள்ளுவான்?' என்டு அவவும் என்னை மாதிரி கண்ணைத் தொடைச்சிக்கிட்டுதான் போனா.

அதுக்குப் பொறவு அவ வரவே யில்லை.

❖❖❖

மொதலாவது வெள்ளை உடுப்பு ஒண்ணை எனக்குப் போட்டுவுட்டாளொள்.

பொறவு என்ட ரெண்டு கையையும் பின்பக்கத்தால ஒண்ணாச்சேத்து மார்ச் ஒண்ணைப் போட்டாளொள். ஒரு பென்னாம் பெரிய முத்தவெளி (மைதா னம்) மாதிரியிருந்த வெட்டவெளி ஒண்ணுலலே போய் திறக்கிற மாதிரி நெறையக் கதவெல்லாம் இரிக்கிற ஒரு மண்டபத்துக்குள்ள என்னை கூட்டிப் போய் அங்க ஓரமாகப் போட்டிருந்த ஆஸ்பத்திரி வாங்குபோல இருந்த ஒண்ணுல இரிக்கச் சொன்னாளொள். என்னுடைய தலைமுடியை ஒண்ணாச் சேத்துப் பின்னி முடிஞ்சு கழுத்துப்

பொடரியை மறைக்காம தூக்கிக்கட்டி றப்பர் பட்டியைப்போட்டு கட்டினாளொள்.

காட் பொம்புளைகள்ல ஒருத்தி என்ட காதுக்கிட்டக் குனிஞ்சு 'உன் பாவங்க ளுக்காக எல்லாம் வல்ல அல்லாஹ் விடம் நீ மன்னிப்புக் கேட்டுக் கொள்' என்டு என்னமோ கனக்க அறபு பாசையில ரகசியம்போல குசுகுசுத்தா. அவ சொன்னதில எனக்கு கொஞ்சந்தான் வெளங்கினிச்சு. என்ட கல்பு (இதயம்) ஒரு கல்லைப்போல இறுவிப்போய்க் கெடந்திச்சி. எனக்கு நடக்கிறதல்லாம் வேற யாருக்கோ நடக்கிற மாதிரியும் நா அதை புதினம் பாக்கிற மாதிரியுந்தான் இருந்திச்சு.

இந்த எடத்துக்கு வாறதுக்கு ரெண்டு மூணு மணித்தியாலத்துக்கு முந்தி ஸ்ரீலங்கா எம்பஸிலருந்து வந்த ஒரு மவுலவியை என்னச் சந்திக்க வுட்டா னொள். அவரைக் கண்டு நான் கதைச்ச பொறவுதான் என்னை இனும இவனொள் வுடவே போறதில்ல.. தண்ட னையை உறுதிசெஞ்சுபோட்டு அதை ஒடனடியாக நெறைவேத்தத்தான் இஞ்ச கூட்டி வந்திரிக் கானொள் என்டதெல்லாம் வெளக்கமா எனக்குத் தெரியவந்திச்சி. அதைக் கேட்டதும் எனக்குகண்ணெல்லாம் இருட்டி ஒருமாதிரிப் பெய்த்திட்டேன். அவரும் பாவம். எனக்கு இஞ்ச எல்லாத் தையுஞ் சொல்லி ருப்பாகன்டு நெனைச்சிக் கிட்டுத்தான் வந்திருக்காரு.. எனக்காக கவலைப்பட்டு அழுது துஆ கேட்டுத்தான் அனுப்பினாரு..

அதோட எல்லாமே வெறுத்து இனி என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ட மாதிரிப் பெய்த்துது. ஒலகமெ கெடந்து கெஞ்சி மன்டாடியும் மனமெளகாத இந்த காட்டுமெராண்டிகளுக்கிட்ட இனியும் கெஞ்சப்படாது. குத்தமில்லாத என்னக் அநியாயமாக் கொண்டுட்டாகண்டா அந்தப் பாவம் இந்த நாட்டைச் சும்மா வுடாது. ஏழைக்குடும்பத்திட கண்ணுல வந்த தண்ணி இஞ்சயே சுத்தும்.. நா மவுத்தாப்போய் எத்தின வரிசம் போனாலும் அது காட்டும். இந்த ஒலகத்துல பொறந்த எல்லாருக்கும் மவுத்து ஒண்ணுதான் நெரந்தர முடிவு. ஆறுலயுஞ் சாவுறாக அறுவதிலயுஞ் சாவுறாக. நா தகிரியமாத்தான் மவுத்தா கணும் என்டு மனசை வைராக்கிய மாக்கிக்கிட்டன்.

கொஞ்ச நேரத்தில் என்ட தலையையும் மொகத்தையும் முழுசா மூடுறதுக்கு பேக் மாதிரி ஒரு கறுப்புத்துணியக் எடுத்துக்கிட்டு வந்து போட்டுப் பாத்தா ளொள். அது கொஞ்சம் எனக்குப் புடிச்சமாதிரி இரிக்க அதைக் கழட்டிப் போட்டு வேற ஒண்டைப்போட்டுப் பாத்தா ளொள். அது சரியாயிரிக்க கழட்டியெடுத்து கையில வச்சிக்கிட்டு அவளொளுக்குள்ள ரகசியமா என்னமோ கதச்சிக்கிட்டாளொள்.

'ஏய்! ஏன்டி இப்பிடி மலையாட்டம் அசையாம இருக்கிறா? இன்னும் கொஞ்ச நேரத்தில் உன்ட தலையை மூடிக் கூட்டிப் போகப்போறம்..கெதியா அல்லாஹ்க்கிட்ட நீ செய்த பாவத்தையெல்லாம் மன்னிக்கச் சொல்லி வாய்விட்டு மன்னிப்புக் கேளு பாப்பம்..!' என்று அறபியில் லேசான கோவத்தோட அதட்டினாள் காட் பொம்பு ளைகளில அந்த ஒசரமானவ.

நான் ஒண்ணும் பேசாம இருந்தேன்.

'ஏய்..நான் சொன்னது வெளங் கல்லையா ஒனக்கு..? இப்ப ஒன்ட பேரைக் கூப்பிடுவாங்க.. அப்பிடிக் கூப்பிட்டதும் இந்த ஊர்ச்சனமெல்லாம் ஒண்ணு கூடியிருக்கிற வெட்டவெளிக்கு நடுவுல ஒன்னக் கூட்டிக் கொண்டு போய் விடுவோம். அங்க வச்சு உனக்குரிய மார்க்கத் தீர்ப்பு வாசிக்கப்படும். அதுக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் ஒனக்குரிய தண்டனை ஒடனடியா நெறை வேற்றப் படும்... அதனால்தான் சொல்கின்றேன்.. நேரத்தை வீணாக்காம கெதியா மனம் விட்டு அழுது ஒன்ட பாவங்களுக்காக

அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டுக் கொள் சகோதரி!' என்டு கெஞ்சுற மாதிரித் தான் அரட்டினா அவ.

நான் கொஞ்சமும் உசும்பயில்ல!

'சே! இவள் சரியான அழுத்தக்காரிடீ. அந்தப் பச்சைப் பாலகன் தொண்டையில பால் பொறுத்து மவுத்தாகினான் என்டு இவள் சொல்றதெல்லாம் பொய். இவள் தான் உண்மையாவே கொன்டிருப்பாள். பாரு.. நாம இவ்வளவு சொல்லியும் அவள்ற உதடு ரெண்டும் கொஞ்சமாவது அசையுதா? அல்லாஹ்தான் இவள்ற பாவங்களை மன்னிக்கணும்!'

'சரி, விடு விடு! பாவம், நல்லவள் தான் ஆனா நல்லாப் பயந்து போயிருக் கிறாள் போல...'

'கொஞ்ச நேரத்தில் பாங்குசொல்ற மாதிரியான குரல்ல யாரோ என்ட முழுப் பேரைச் சத்தமாகக் கூவி அழைப்பது கேட்டது. அதனைத் தொடர்ந்து 'அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்' என்டு சன மெல்லாம் கோஷம் போடுற சத்தமும் கேட்டது. அதக்கேட்ட ஒடனே என்ட தலையையும் மொகத்தையும் கறுப்புத் துணியால மூடிட்டாங்க. குருடாகிவிட்ட என்னை அந்த காட் பொம்புளைகள் ரெண்டு பேரும் ஆளுக்கொரு பக்கமா ரெண்டு தோளையும் புடிச்சபடி வெளிச்சம் நிறைஞ்ச தொறந்த வெளிக்கு நடத்திக் கூட்டிக்கிட்டுப் போவதை உணர்ந்தேன்.

'அல்லாஹு அக்பர்..! அல்லாஹு அக்பர்!'

தண்டனை நெறைவேத்துப்படப்போற எடத்தை நெருங்க நெருங்க என்ட காலெல்லாம் பெலங்கெடத் தொடங் கிட்டுது.. என்ட தகிரிய மெல்லாம் கொறைஞ்சு தொண்டை காஞ்சி நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கிட்டு லேசான தலசுத்து வாற மாதிரியிருந்திச்சு.

'அல்லாஹு அக்பர்..! அல்லாஹு அக்பர்!'

'பயப்பிடாத சகோதரி! இறைவன் உனக்கு நற்பாக்கியத்தை அருள்வான். அவனிடத்தில் மன்னிப்புக் கேட்டு மன்றாடு..' என்று நடந்தவாறே மீண்டும் கிசுகிசுத்தாள் பெண் காவலாளி.

'இல்ல.. நா பயப்பிடப்படாது.. நா கத்தப் படாது.. புலியடிக்கிற ஊருல பொறந்து புலிக்கே திருப்பியடிச்ச ஊருல வளந்த புள்ள நான். நா பயப்புட மாட்டேன்.. நா எந்தப் பாவமும் செய்யயில்ல... நா தகிரியத்தை வுடப்படாது. ஒரு பாவமும் நா செய்யயில்ல.. யா அல்லாஹ்! நான் எதுக்கு மன்னிப்புக் கேக்கணும்..? என்னை இந்த நெலைமைக்கு ஆளாக்கி னவக முழுப்பேருந்தான் பாவதாரிகள். கஷ்டப்பட்ட குடும்பங்களிருக்கிறதை அறிஞ்சும் ஒதவி செய்யாம பாத்துக் கிட்டிரிக்கிற வசதிக்காரக்கள்.. வெளிநாட்டுக்கு வேலைக்குப்போற பொம்புளைகள்ற குடும்பக் கஷ்டங்களை கண்டுக்காம அவகளையெல்லா மடை போட்டுத் திட்டித்தீர்க்கிற ஆலிம்கள்... நெலை மையைப் புரிஞ்சுக்காம என்னைப்போட்டு அடி.. அடியென்டு அடிச்சு அநியாயப் பழி சுமத்தின அந்த மேடம் நோனா, என்னை நீதமா விசாரிக்காம என்னென்னத்தையோ அறபுல போட்டு எழுதி வலுக்கட்டாயமா கையெழுத்து வாங்குன பொலீஸ் காரனொள்.. மவுத்தாப் போன கைப்புள் ளையிட ஒடம்பைக் கூட சோதிக்காம தீர்ப்பெழுதின ஜட்ஜ்மார்.. வெள்ளைக் காரிக்கொரு சட்டம் சோத்துக்கில்லாத எங்களுக்கொரு சட்டம் போட்டு வசதிக் காரனொளை மட்டும் தப்பவுடுற சவூதி அரசாங்கம்.. இவக எல்லாருந்தான் யா அல்லாஹ் பாவிகள்.. இவ்வளவுபேரும் என்னைக் கொலை செய்த பாவிகள்.. நா பாவி இல்ல, யா அல்லாஹ்..!' என்டு மனசுக்குள்ள ஓலமிட்டுக் கத்தினேன்.

அவ்வளவுதான் அதுவரைக்கும் மன சிலருந்த பயமெல்லாம் பறந்து பெய்த்துது.

'அல்லாஹு அக்பர்..! அல்லாஹு அக்பர்!'

"ஒன்ட கடைசிநேரம் நெருங்கிட்டுது சகோதரி. நீஇப்படி வாயே திறக்கா மலிருக் கிறாயே.. அதனால மனவருத் தத்தோடுதான் ஒன்னை விட்டுட்டு நாங்க போறோம்.. மறுமையில் திரும்பவும் நாம் சகோதரிகளாக சந்திப்போம். ஆனாலும் செய்த பாவங்களை மன்னிக்கச்சொல்லி வல்ல அல்லாஹ்விடம் உன்ட இருதயத் தாலாவது மன்றாடு. அவன் உன்னை நிச்சயம் மன்னிப்பான்!' என்டு காதோரம் சொல்லிப்போட்டு காட் பொம்பிளைகள் ரெண்டுபேரும் தள்ளிப் போய்ட்டாளொள். ஆனா நா வாயத் தொறக்க வேயில்ல.

'அல்லாஹு அக்பர்..! அல்லாஹு அக்பர்!'

தட்டாத்தனிய ஒரு வெட்டவெளியில நா மட்டும் நின்டுக்கிட்டிருக்கிற மாதிரி இருந்திச்சு. ஆனா டக்கெண்டு என்ட அருவுல யாரோ ஒராள் வந்து நிண்டதை என்ட மனஞ்சொல்லியது. அந்த உருவம் என்னைத்தொட்டு என்ட ரெண்டு முழங் காலும் தரையில படுறமாதிரி மண்டியிட்டு சரியான மொறைக்கு ஒழுங்கு படுத்தி இரிக்கச் செஞ்சுபோட்டு பெய்த்துது. பொறவு திருப்பியும் வந்து, 'பயப்படாதே மகளே! இறைவனின் தீர்ப்பை நான் நிறைவேற்றுவதற்கு நீயும் ஒத்துழைத்து உதவிசெய் மகளே. அல்லாஹ் உனக்கு நற்பாக்கியத்தை அருள்வான்' என்டு எனக்கு மட்டும் கேக்கிற மாதிரி மெல்லிய குரல்ல கூறியது. அது ஒரு ஆம்புளையிட குரல்.

'அல்லாஹு அக்பர்..! அல்லாஹு அக்பர்..!' கோஷம் வுடாம கேட்டுக் கிட்டேயிருக்க நா கொஞ்சமும் பயப்பிடாம அசையாம அமைதியா இருந்தன். வெயில்ற அகோரத்தில் எனக்கு வேர்த்துக் கொட்டியது. ஆனா என்ன காரண மென்டு தெரியாம டக்கென்டு ஆக்கள்ற சத்தமெல்லம் நின்டுட்டுது. கோர்ட்ல எழுதப்பட்ட மார்க்கத் தீர்ப்பு எல்லாருக்கும் கேக்கிற மாதிரி சத்தமாக வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதுல அங்கங்க ரெண்டு மூணுதரம் வந்த என்ட பேரைத் தவிர வேற எதுவும் எனக்கு வெளங்கயில்ல.

தீர்ப்பு வாசித்து முடிஞ்சதும் கொஞ்ச நேரம் சத்தமேயில்லை. பொறவு திடீரென்டு அங்க கூடியிருந்தவகல்லாம் ஒண்ணுசேந்து, 'அல்லாஹு அக்பர்..! அல்லாஹு அக்பர்..!' என்டு போட்ட கோஷத்தில அந்த வெட்ட வெளியே அதிரத் தொடங்குனிச்சு. நா ஓத வேண்டியதையெல்லாம் ஒண்ணுவுடாம வாயைத் தொறக்காம வெசை வெசையா மனசால ஓதி முடிச்சேன்.. என்னப்பெத்து வளத்த உம்மாவையும் வாப்பாவையும் கூடப்பிறந்த சகோத ரங்களையும் நெனைச்சிக்கிட்டேயிருக் கிறேன். எதுக்குமே துணிஞ்ச என்ட ஊரையும் எனக்காகப் போராடுன எல்லா ஊர் மக்களையும் நெனைச்சுப் பாத்துக்கிறேன். நியாயத் தீர்ப்புநாளில எல்லாரையும் நா மஹ்சர் வெளியில சந்திக்கப்போவதையும் யோசிச்சிப் பாக்கிறேன். யா அல்லாஹ் நீயே பெரியவன்!'

என்ட கடைசி நிமிஷம் முடிவில்லாம நீண்டு கெடக்க.. என்ட உதடுகள் இறுதி வார்த்தைகளை சத்தமாக உச்சரிக்க லாயின:

'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸுலுல்லாஹி.. யா அல்லாஹ்..! என்னைக் கொலை செஞ்ச சகல பாவிகளையும் மன்னித்து விடு.. ஆ!'

❍

47

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2016இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை




# இனம்

உ.நிசார்

சிறுவன் ஆதில் தனது குஞ்சு வீட்டுக்கள் என்ன செய்வதென்று அறியாதுபோல் அமர்ந்திருந்தான். சற்று முன் தனது வயதையொத்த ஆக்கிலும் அம்ராவும் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற கவலையே அதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். தனக்கும் அவர்களுக்கும் இடையே ஏற்பட்ட சிறு முரண்பாடு பெரியதொரு தகராறுக்கு வழிசமைத்ததைப் பற்றிச் சிந்திக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. எனினும் அவனது பாட்டனாரான கையூம் ஹாஜியாரை அது வெகுவாகச் சிந்திக்க வைத்துவிட்டது. வெளி விறாந்தையில் போடப்பட்டிருந்த ஒரு கதிரையில் அமர்ந்தவாறு எதிர் வீட்டில் குடியிருக்கும் கலாம் சற்று முன் சொன்னவைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்து அவர் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்.

"மாமா, இனியும் எங்களால பொருக்க ஏழா, நீங்களும்தான் ஒங்கட இனசனம்களும் தான் இந்த ஊருக்கு வந்து குடியீந்த நாளுல ஈந்து எங்களுக்குப் பிரச்சினைகளைத் தந்து கொண்டே ஈக்குறீங்க. நீங்கள் எல்லாரும் இந்த ஊருக்கு வந்தான் வரத்தானுகள். அப்பிடி ஈக்க, வந்த எடத்துல வந்தோமா, வாழ்ந்தோமா எண்டு செல்லி ஈக்காம என்ன மாமா இதெல்லாம்?

"நீங்க எல்லாரும் இங்க வந்து எங்கட காணி பூமிகள் அபகரிச்சிக் கொண்டீங்க. எங்கட மாப்புளமார எடுத்துக் கொண்டீங்க. யாவாரம் தொழில் பரிச்சிக் கொண்டீங்க".

(ஞானம் 208, செப்டெம்பர் 2017)

அப்போது பேரன் ஆதில் தனது குஞ்சு வீட்டுக்குள் இருந்து வெளியே வந்து அடிக்கடி கேட்டருகே செல்வதையும் பாதையை நோட்டமிடுவதையும் காண கையூம் ஹாஜியாருக்குக் கவலையாக இருந்தது. சற்று முன் தனக்கும் தனது இனசனங்களுக்கும் எதிராக கலாம் கொட்டித் தீர்த்ததை நினைத்துப் பார்த்தார்.

"எங்கட புள்ளகளுட படிப்பயும் ஆக்கிரமிச் சிட்டீங்க. ஸ்கோலசிப் பரீட்சயில எங்கட புள்ளகளுக்கு கெடச்ச வேண்டிய எடங்கள் ஒங்கட புள்ளகளுக்கு கெடச்சிக் கொண்டு போகுது. கெம்பஸ் அனுமதியிலயும் எங்கட புள்ளகள மீறி ஒங்கட புள்ளகள் தான் முன்னுக்கு வாராங்க. அரசாங்கத் தொழில் வாய்ப்புகளிலும் எங்கள விட ஒங்களுக்குத்தான் முன்னுரிம கெடச்சுது."

"எப்பவோ ஒரு நாள் அந்த இயக்கத் துக்குப் பயந்து ராவோடு ராவா கையில கெடச்சத்த சுருட்டிக் கொண்டு இங்க வந்ததாகச் செல்லுரீங்க. இதெல்லாம் ஒரு கதயா? ஒங்கள அங்கேந்து அனுப்பி வச்ச அந்த இயக்கத்த எதிர்த்துப் பேச, இல்ல அவங்களுக்கு ஒங்கட நியாயத்த எடுத்துச் செல்ல, ஒங்களுக்குள்ள ஒரு தலைவர் ஈக்க இல்லயா? ஒரு மத்திஷம் ஈக்க இல்லயா? குறைஞ்சது ஒரு ஆம்புள ஈக்க இல்லயா?"

"சரி, அந்த இயக்கத்தச் சேந்தவங்ள விடுங்கோ, ஒங்களோட ஒட்டி உறவாடி அடுத்த ஊட்டுக்காரரு, ஊரு மனிஷரு, நீதி நியாயம் தெரிஞ்சவங்க யாருமெ அந்த இயக்கத்துட சடுதியான தீர்மானத்த எதிர்த்து, ஒங்களுக்கு ஆதரவாய் பேச முன்வர இல்லயா? நீங்கள் எல்லாதாரும் எங்களோட பழகுற மாதிரிதான் அந்த ஜனங்களோடயும் நடந்து கொண்டி ருப்பீங்க. அவங்கட ஒரு நாய் குட்டி யாவது ஒங்களுக்குப் பின்னால வாலை ஆட்ட வராதத்துக்குக் காரணம் அது வாகத்தான் ஈந்திருக்க வேணும்."

"யுத்தம் முடிஞ்சி பெய்த்திட்டுது, பிரச்சினகளும் படிப்படியாகத் தீந்து கொண்டு வருது. இனி இப்பவாவது ஒங்களுக்கு, ஒங்கட ஊர் தேஷங் களுக்குப் போய் சேரலாம்தானே. என்னத் துக்கு இன்னும் இந்த ஊரக் கட்டிக் காக்க வேணும்?"

கோப்பையொன்று இருந்தது. அவள் தான் கொண்டு வந்தவற்றை கையூம் ஹாஜியாருக்கு முன்னால இருந்த மேசை மீது வைத்து விட்டு அவருக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

ஆத்திபா, சிறுவனைத் தூக்கித் தனது தோளில் போட்டவாறு உள்ளே செல்ல, கையூம் ஹாஜியார் பலகாரம் ஒன்றை எடுத்துச் சாப்பிட்டு விட்டுத் தேநீரைக் குடிக்க ஆரம்பித்தார்.

சிறிது நேரத்தில் ஆத்திபா வெற்றி லைத் தட்டுடன் மீண்டும் அங்கே வந்து கையூம் ஹாஜியாருக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள். அதன் பிறகு அவள் வெற்றிலைத் தட்டில் இருந்த பாக் கொன்றைத் தேர்ந் தெடுத்து அதைச் சீவிய வண்ணம் தனது பேச்சைத் தொடர்ந்தாள்.

"நாங்கள் என்ன பிரச்சினையைக் கொடுத்தோம் அவர்களுக்கு சின்னப் பிள்ளைச் சண்டையொன்றை வைத்துக் கொண்டு அவர்கள்தான் எங்களுடன் பிரச்சினைப்படுகிறார்கள். நாங்களும் இந்த மண்ணுக்கு வந்து இருபத்தைந்து வருஷங்களைக் கட்டித்திட்டோம். இவர் கள் இன்னும் எங்களைப் பார்த்து வந்தான் வருத்தான் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ரசூல் நாயகம் கூட மக்காவுல இருந்து மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து போனவர்தான். அவர் களை அன்று மதீனத்து மக்கள் அன்பா தரவா வரவேற்று அனுசரித்து ஆதரித்து நடந்து கொண்டனாலதான் ஒரு மதம்,

ஒரு கலாச்சாரம், ஒரு பண்பாடு, ஒரு நாகரீகம் உலகத்து உருவாகிச்சிது. இன்று கூட அங்கு வாழுற மக்கள் அதைப் பற்றிப் பெருமை கொள்கிறார்கள். ரசூல் நாயகத்தைப் பின்பற்றி அவர்களுடைய வாழ்க்கை முறைப்படி நாங்களும்தான் அவர்களும்தான் இந்த நாட்டுல வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இஸ்லாமியர்கள் எல்லோரும் சகோதரர்கள் என்று நாங்க ளும்தான் அவர்களும்தான் அறிந்து வைத்திருக்கின்றோம். அப்படி இருக்க அவர்கள் எங்களைப் பார்த்து ஏன் வந்தான் வருத்தான் என்று சொல்லிக் கொண்டு நிற்க வேணும்?

"நாங்கள் இந்த மண்ணுக்கு அகதி களாக வந்தாலும் ஏதோ வசதி வாய்ப்பு இருந்தவர்கள். இங்கிருந்த காணி, பூமிகளை காசு கொடுத்து வாங்கியது உண்மைதான். அந்தக் காணி, பூமிகளை கொள்வனவு செய்ய அவற்றின் பெறு மதியை விடவும் அதிகமாகப் பணத்தை நாங்கள் கொடுத்திருக் கின்றோம். அவர்களின் மாப்பிள்ளை களையும் நாங்கள் எடுத்துக் கொண்டதாக எங்களைக் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்களும் எங்களுடைய மாப்பிள்ளை மார்களை எடுத்துக்கொண்டு தானே இருக்கிறார்கள். ஆனால் அதன் மூலம் புதிய சந்ததியொன்றை உருவாகி யிருப்பதை மறந்து பேசுறாங்க. அவர்க ளுடைய வியாபாரங்களைக் கைப்பற்றிய தாகவும் ஒரு குற்றச்சாட்டை வைக்கி றார்கள். இதென்ன கதை இது? வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் நடக்கிற நேரங்களில் எங்களைப் போல அவர்களும் எத்தனையோ நன்மைகளை அடைந்துதானே இருப்பார்கள்."

"நாங்கள் இங்கே வரப்போன தனால்தான் ஸ்கோலர்சிப் பரீட்சை யிலும் கெம்பஸ் அனுமதியிலும் ஒரு போட்டி உருவாகி இந்தப் பிரதே சத்தில் கல்வித் தரம் அதிகரித்

**"நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் போது அகதிகளாகத்தான் இந்த ஊர்களுக்கு வந்து சேர்ந்தோம். கொழும்பு, கண்டி, புத்தளம், நீர்கொழும்பு, மாவனல்லை என்று எத்தனையோ இடங்களில் குடியமர்ந்தோம். பனங்குலை ஒன்று நிலத்தில விழுந்து காய்கள் சிதறிப் போனது போல நாங்களும் அங்கும், இங்கும் சிதறுண்டு போனோம். அந்தப் பனங்குலையை திரும்ப பழைய நிலைக்கே கொண்டு வர யாராலதான் முடியும்? அதற்கும் காரணங்கள் இருக்கு. நாங்கள் வந்த வந்த இடங்களில் எங்களுடைய பிள்ளைகளுக்கு கலியாணம் காப்புகளைச் செய்து வைத்திட்டோம். அதன் மூலமாக இங்கே எங்களுடைய சந்ததிகள் பெருகிட்டது. அது மட்டுமல்ல நாங்கள் இந்தப் பகுதியில் காணி பூமி வாங்கிட்டோம். வியாபாரங்களில் நிலையாகிட்டோம். தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிட்டோம். இவை யெல்லாவற்றையும் துறந்து நாங்கள் எங்களடைய பூர்வீக மண்ணுக்குத் திரும்பவும் போவது சிரமம். இதெல்லாவற்றையும் இங்கே இருப்பவர்களுக்கு விளங்க இல்ல."**



திருப்பதை இவர்கள் மறந்திட்டார்கள். அதுமட்டுமல்ல அங்கிருந்து புலம் பெயர்ந்து வந்த ஆசிரியர்கள் இந்தப் பிரதேசத்தின் கல்வித் தரத்தை மேம் படுத்த படுகின்ற உழைப்பையும் அவர் கள் மறந்திட்டார்கள்."

"இவர்கள் கேட்கும் கேள்விகள் சரிதான். ஆனால் அன்று இரவு நாங்கள் பட்ட அவதி எங்களுக்கு மட்டும்தான் தெரியும். இருபத்தாறு மணி நேரத்துக் குள்ள இங்கிருந்து போ என்று அவர்கள் சொல்ல நாங்கள் யாரிடம் போவோம்? யாரிடம்தான் நியாயம் கேட்போம். எங்கட காணி, பூமி, கட்டிய வீடு வாசல், நட்ட மரம், கொண்ட சொத்து சுகம், உழைத்த உழைப்பு, சிந்திய வியர்வை இவையெல்லாவற்றையும் இழந்துதான் நாங்கள் எங்களுடைய உயிர்களைக் கூட பணயமாக வைத்துக் கொண்டு தான் இங்கு வந்து சேர்ந்தோம். பெண் களும், குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மாரும், உடல் தளர்ந்தவர்களும், வயோதிபர்களும் என்ன சிரமப்பட்டி ருப்பார்கள், காடு மேடுகளைக் கடந்து, கடல் வழியாக வந்த அந்தப் பயணம் இன்று கூட எங்களுக்கு கடும் வேதனையைத் தந்து கொண்டிருக்கிறது. அது இவர்களுக்கு எங்கே விளங்கப் போகுது? தலைவலியும் தனக்கு வந்தால் தானே தெரியும்."

"ஒரு விஷயம் நடந்து முடிந்ததற்குப் பிறகு பலரும் பலவிதமான கேள்வி களைக் கேட்பார்கள்தான். ஆனால் அன்று இருந்த சூழ்நிலை, அவர்களுக்கு எங்கே விளங்கப் போகுது? இன்றுகூட என்ன நடக்குது? காலத்துக்குக் காலம் எதேதோ இயக்கங்கள் அவர்க ளுடைய நன்மைக்காக வேண்டி மக்களை ஒன்று கூட்டுகிறார்கள். ஊர்வலம் போகிறார்கள். ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். கூட்டம் வைக்கிறார்கள். நூல்களை வெளியிடுகிறார்கள். ஆனால் அவை எதுவுமே கைகூடவில்லை. அதற்குப் பதிலாக அடிபட்டதும் உதை பட்டதும் பயமுறுத்தப்பட்டதும் தான் எங்களுக்கு பரிசாகக் கிடைத்தது. வந்து போன அரசாங்கங்களும் எங்களு டைய தலைவர்களைப் பகடைகளாக்கி விளையாடியதைத்தான் நாங்க கண்டோம்"

"நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் போது அகதிகளாகத்தான் இந்த ஊர்களுக்கு வந்து சேர்ந்தோம். கொழும்பு, கண்டி, புத்தளம், நீர்கொழும்பு, மாவனல்லை என்று எத்தனையோ இடங்களில் குடியமர்ந்தோம். பனங் குலை ஒன்று நிலத்தில விழுந்து காய்கள் சிதறிப் போனது போல நாங்களும் அங்கும், இங்கும் சிதறுண்டு போனோம். அந்தப் பனங்குலையை திரும்ப பழைய நிலைக்கே கொண்டு வர யாராலதான் முடியும்? அதற்கும் காரணங்கள் இருக்கு. நாங்கள் வந்த வந்த இடங்களில் எங்களு டைய பிள்ளைகளுக்கு கலியாணம் காப்புகளைச் செய்து வைத்திட்டோம். அதன் மூலமாக இங்கே எங்களுடைய சந்ததிகள் பெருகிட்டது. அது மட்டுமல்ல நாங்கள் இந்தப் பகுதியில் காணி பூமி வாங்கிட்டோம். வியாபாரங்களில் நிலையாகிட்டோம். தொழில் வாய்ப்புக் களைப் பெற்றிட்டோம். இவை யெல்லா வற்றையும் துறந்து நாங்கள் எங்களடைய பூர்வீக மண்ணுக்குத் திரும்பவும் போவது சிரமம். இதெல்லாவற்றையும் இங்கே இருப்பவர்களுக்கு விளங்க இல்ல."

"திலகம்பால் அம்மையார் இப்ப கொஞ்ச நேரத்துக்கு முதல்ல என்னோட போன்ல கதச்சா. அவங்க குடும்பத்துல எல்லாரும் போல நுவரெலியாவுக்கு போய் கொண்டிருக்கிற வழியில எங்க ளையும் கண்டு சுகநலம் விசாரித்துவிட்டுப் போகவர இருக்கிறாங்களாம்."

"என்ன அவங்க எல்லாரும் எங்கட வீட்டுக்கு வரப்போறாங்களாமா? நாங்கள்

யாழ்ப்பாணத்தில இருந்து வரும்போது ஐயரும் திலகம்பாலும் எங்கள மிச்சம் உருக்கமா வழியனுப்பி வச்சவங்க அப்ப ரமேஸ், விக்ரம், உமா எல்லாரும் சின்னப் பிள்ளைகள். எங்கட பிள்ளைகளுட வயதிலேயேதான் அந்தப் பிள்ளைகளும் இருந்தாங்க. இனி அவங்க எல்லாரும் சுகமா இருக்கிறாங்கலாமா?"

"ராமேஷும், விக்ரமும் ஜேர்மனிக்குப் போய் நல்லா காசு பணம் சம்பாதிச்சிக் கொண்டு விடுமுறையொன்றுக்கு இப்போ இங்க வந்து இருக்கிறாங்களாம். ரமேஸ் தமிழ் பிள்ளையொன்றைக் கலியாணம் கட்டியிருக்கிறானாம். விகரம் ஜேர்மன் பிள்ளையொன்றைக் கலியாணம் கட்டி யிருக்கிறானாம். ஐயரும் திலகாம்பாலும் பாட்டன், பாட்டியும் ஆகிட்டாங்களாம்."

"பாவம் உமா இளம் வயசிலேயே விதவ யாகிட்டாள். யுத்தம் யாருக்குத்தான் நன்மை செய்யும், அது சரி, ஆத்திபா அவங்க எப்படி எங்கட வீட்டக் கண்டு பிடித்து இங்க வருவாங்க?"

"ஐநியா எங்கட வீடு இருக்கிற இடத்த ரமேஸுக்கு விபரமாகச் சொல்லி வைத்தாள். அவன் அதைச் சரி கண்டு நாங்கள் அதுக்கா சிரமப்படத் தேவை யில்லை என்று சொல்லி இருக்கிறான். இன்னும் கொஞ்ச நேரத்துல அவங்க இங்க வந்திடுவாங்க என்று நான் நெனைக் கிறேன்"

ஆத்திபா தான் சீவிக் கொண்டிருந்த பாக்கை இரண்டாக வெட்டி அரியத் தொடங்கினாள்.

"ஆத்திபா நாங்கள் எவ்வளவு காலத் துக்கு பொறகு அவங்களைக் காணப் போகிறோம்."

"உமா, இப்போ எங்கட வீட்டு லதானாம் குடியிருக்கிறதா, அவளுக்கு ஒரு பொடியன். ஒரு பெட்ட என்று ரெண்டு பிள்ளைகள் இருக்கிறாங்களாம். எங்கட ஆட்சேபன இல்லாவிட்டால் அந்த வீட்டுட பெறுமதி எங்களுக்குத் தந்து போட்டு உமாவுக்கு அதை வேண்டிக் கொடுக்க அண்ணன்மார் ரெண்டு பேருக்கும் விருப்பம் இருப்பதாக திலகாம் பாலட பேச்சில் இருந்து எனக்கு விளங்கிச்சிது.

"ஆத்தி அதுவும் நல்லதுதான். நாங்கள் எங்க இனி யாழ்ப்பாணத்துக்கு போகப் போறோம். எங்கட மறுமக்கள் எல்லாரும் இந்தப் பகுதியச் சேர்ந்தவங்க. அவங்க யாழ்ப்பாணத்துக்கு போய் குடிபதியாவதற்கு விருப்பப்படுவாங்களா?"

"ஆத்திபா, தான் அரிந்த பாக்கை எடுத்து இரண்டு வெற்றிலைச் சுருள் களைச் செய்து அவற்றுள் ஒன்றை கையூம் ஹாஜியாரிடம் கொடுத்து விட்டு அடுத்ததை தனது வாயுக்குள் திணித்துக் கொண்டாள்.

"யாழ்ப்பாணத்துல இருக்கிற எங்கட வீட்ட அவங்களுக்குக் கொடுக்க நீங்கள் என்ன விருப்பப்படுரீங்களா?"

"ஆத்திபா, எங்களுக்குப் பொறந்த புள்ளகள் அஞ்சு பேரும் பொம்புளப் புள்ளகளாகவே பொறந்துட்டாங்க. அவங்க அழகு வடிவா இருந்தாலயும் வீடு வளவு நக நட்டு காசு பணம் சீதனம் என்று இந்தப் பகுதி மாப்புளமார் பெரிதா எதிர்பார்க்காதத்திலயும் மூத்த நாலு பேரும் சேர்ந்திட்டாங்க. அவங்க நாலு பேரும் புள்ளகுட்டிகள பெத்து சந்தோஷமா வாழுறாங்க. ஆனா. ஐநியாவுக்குத்தான் நல்ல ஒரு எடம் வந்து வாய்க்க இல்ல. அவளுக்கும் இப்போ வயது முப்பது ஆகிட்டது. அவளைக் கரைசேர்க்க தேவையான காசு பணமும் எங்களிட்ட இல்ல. அதனால நீ விருப்பம் எண்டால் மட்டும் யாழ்ப்பாணத்து இருக்கிற எங்கட வீட்ட ஐயருக்குக் கொடுத்துப் போட்டு அந்தக் காசு எடுத்து ஐநியாவுட கலியாணத்தச் செறப்பாச் செஞ்சி போடுவோம்."

"நான் விருப்பம்தான். நீங்கள் நெனக்கிற மாதிறியே செய்து போடுவோம்.

தாய் தகப்பன் ஹயாத்தோட இருக்கக் குள்ளதான் புள்ளகளும் கலியாணம் காப்புகள் நடந்தேற வேணும். அப்பதான் அவங்கட சக்கராத்து நேரத்துல சந்தோஷமாக கண்ண மூடிக்கொள்ள முடியுமாக இருக்கும்.

அப்போது அவர்களது வீட்டுக்கு முன்னால் ஆடம்பர ஜீப் வண்டியொன்று வந்து நின்றது. சற்று நேரத்தில அங்கிருந்த சிலர் அதிலிருந்து இறங்கிக் கொண்டனர். அவர்கள் ஐயர் வீட்டுக் குடும்பம்தான் என்பதை விளங்கிக் கொண்ட ஆத்திபா உடனே பாதைவரை ஓடிவந்தாள். அதைத் தொடர்ந்து கையூம் ஹாஜியாரும் வந்தார். வீட்டின் கதவோரமாக ஐநியா, நின்று கொண்டு அங்கு வந்திருப்பவர்களை எட்டிப் பார்த்தாள்.

கையூம் ஹாஜியாரும் ஆத்திபாவும் வந்திருப்பவர்களை மிகவும் அன்பாத ரவாக வரவேற்று வீட்டுக்குள் அழைத்து வந்தனர். நீண்ட காலத்துக்குப் பிறகு இவ்வாறு சந்திக்கக் கிடைத்ததையிட்டு இரு குடும்பத்தவர்களுக்கும் மிக்க மகிழ்ச் சியாக இருந்தது.

ஐயர், திலகாம்பாள், விக்ரம், ரமேஸ் அவர்களது மனைவிமார், உமா, ஐயரின் பேரக் குழந்தைகள் என எல்லோரும் அங்கு வந்திருந்தனர்.

சுகநலம் விசாரித்து இரு குடும்பங் களினதும் இன்றைய நிலைகளைக் கேட்டறிந்து, யுத்த அவலங்களை நினைவு கூர்ந்து, ஊர் புதினங்களைக் கதைத்து முடிய தேநீர் விருந்துபசாரம் நடை பெற்றது. அதன் பிறகு திலகாம்பால், கையூம் ஹாஜியாரின் குடும்பத்தவர் களுக்குத் தான் கொண்டு வந்திருந்த பரிசுப் பொருட்களைக் கொடுக்க ஆரம்பித்தாள். அவற்றுள் உணவுப் பண்டங்கள், பழவர்க்கங்கள், உடைகள், சிறுவர்களுக்கு விளையாட்டுப் பொருட் கள் என்பன இருந்தன. அது மட்டுமல்ல ஐநியாவின் பாழடைந்த கழுத்தையும், கைகளையும் கண்ணுற்ற திலகாம்பாள் தனது கழுத்தில் இருந்து மாலைகளில் ஒன்றையும் கைகளில் இருந்த வளை யல்கள் இரண்டையும் எடுத்து அவற்றை அணிவித்து மகிழ்ந்தார். அதன் பிறகு ஐயரும் திலகாம்பாலும் கையும் ஹாஜியா ரையும் ஆத்திபாவையும் ஒரு புறமாக அழைத்து வந்தனர்.

“கையும், நான் உங்கட பேச்சில் இருந்து நீங்களோ உங்கட பிள்ளைகளோ, யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வரமாட் டீங்கள் என்பதே நாங்கள் விளங்கிக் கொண்டோம். அதனால அங்கே இருக்கிற உங்கட வீட்டை உமாவுக்குக் கொடுத்து விடுங்கோ. நீங்கள் அதுக்காக என்ன விலை கேக்குறீங்களோ அதை தருவதற்கு விக்ரமும், ரமேஸும் தயாராய் நிக்கிறாங்க.”

“எங்களால இனியும் யாழப்பா ணத்துக்கு வரமுடியாத காரணத்தை நான் உங்களிடம் சொல்லி விட்டேன். அதனால அங்கே இருக்கிற எங்களின் வீட்டை உங்களுக்குக் கொடுப்பதில் எனக்கோ, ஆத்திபாவுக்கோ எங்கட பிள்ளைகளுக்கோ எந்த ஆட்சேபனையும் இல்ல. நாங்களும்தான், நீங்களும்தான், எங்கட முன்னோர்களும்தான் ஒரே குடும்பத்துச் சகோதரர்களைப் போல ஆண்டாண்டு காலம் எங்களுக்கு இருந்த நட்ப நாங்க நல்லா விளங்கி வைத்திருக் கிறோம். அதனால அந்த வீட்டுக்கு ஒரு விலை சொல்ல என்னால முடியாது.”

அப்போது திலகாம்பால் ஒரு சைகை யைச் செய்ய ரமேஸ் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான். “அங்கிள் நீங்கள் சொன்ன தெல்லாவற்றையும் எங்க ளுக்குள் இருக்கும் அந்த நட்பு இந்தக்கொடுக்கல், வாங்கலுக்கு குறுக்கே இருக்கக் கூடாது. நீங்களும் ஐந்து பெண்பிள்ளைகளுடைய ஒரு தகப்பன். ஐநியதாவுக்கு இன்னும் திருமணம்

நடக்கவும் இல்ல. அதற்காக உங்களுக்குகாசு பணம் தேவை. நீங்களும் சந்தோஷமா கழிக்க வேண்டும். நான் உங்களுக்கு ஒரு ஓபன் செக் ஒன்றை தரப் போகிறேன். நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டு உங்களுக்கு விருப்பமான தொகையை அதுல எழுதி பணமாக்கிக் கொள்ளுங்கள்."

அவன் தனது கையில் தயாராய் வைத்திருந்த செக்கை எடுத்து கையூம் ஹாஜியாருக்கு கொடுக்க முற்பட்டான்.

"ரமேஸ் அந்த வீட்டை நாங்கள் கண்டு வெகு காலமாகுது. அது என்ன நிலையில் இருக்கிறதென்றுகூட எங்களுக்குத் தெரியாது. உமாவுக்குத் தான் அந்த வீட்டை நீங்கள் வேண்டிக் கொடுக்கப் போகிறீர்கள். அவ இருக்கிற நிலையில் அவவுக்காக வேண்டப்போற ஒரு சொத்துக்கு என்னால ஒரு விலை சொல்ல முடியாது. உமாவிலயும்தான் எண்ட பிள்ளைகளிலும்தான் நான் அன்று ஒரு வேறுபாட்டைக் காணவில்லை. அவர்கள் எல்லோரையும் நான் எண்ட பிள்ளைகளாகவே தான் பார்த்தேன். அதனால அந்த வீட்டுக்கு ஏதோ ஒரு விலையை நீங்கள்தான் நிர்ணயிக்க வேண்டும்?

அதன் பிறகு இருதரப்பினரும் ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படி பெரிய தொரு தொகை பணத்தை ரமேஸ் கையூம் ஹாஜியாருக்கு அளிக்க அவர் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

அப்போது ஆதிலின் குஞ்சு வீட்டில் ஐயரின் பேரக் குழந்தைகளும் விளையாடிக் கொண்டிருப்பதை கையூம் ஹாஜியார் கண்ணுற்றார்.

"ஐயரே எண்ட பேரக் குழந்தையும் உங்கட பேரக் குழந்தைகளும் அங்கே விளையாடிக்கொண்டிருப்பதைப்பாருங்கள். எங்கடபிள்ளைகளும் ஒரு காலத்தில் அப்பிடித்தான் யாழ்ப்பாணத்தில் குஞ்சு வீடு கட்டி விளையாடினார்கள். ஆனால் நாங்கள் பிரிய வேண்டும் என்று இறைவன் நாட்டம் வைத்திருக்கின்றான். அதனால் நாங்கள் என்னதான் செய்வோம்?

"கையூம் நானா நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை இன்று யாழ்ப்பாணம் என்றால் என்ன, கொழும்பு என்றால் என்ன, கண்டி என்றால் என்ன எல்லா இடங்களிலேயும் தூரச் சென்று வர வசதிகள் இருக்கு. நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். எல்லாம் சந்தோஷமாக நடக்கும். ஐநியாவிண்ட கலியாணத்துக்கு சொல்லுங்கோ நாங்கள் கட்டாயம் வந்து கலந்து கொள்வோம்.

அவர்கள் விடைபெறும் நேரம் நெருங்கிவிட்டது. அதனால் ஒவ்வொரு வரும் ஒவ்வொருவரிடம் இருந்து உருக்கமாக விடை பெற்றுக் கொண்டனர்.

திடீரென வீட்டுக்குள் சென்ற கையூம் ஹாஜியார் வீட்டு உறுதியுடன் அங்கே வந்து அதை ஐயரிடம் கையளித்தார்.

"ஐயரே, நான் கூடிய கெதியில் யாழப்பாணம் வருவேன். வந்ததும் உமாவின் பெயருக்கு உறுதியை மாற்றித் தருவேன்.

ஐயரும் அவருடன் வந்தவர்களும் கவலையோடு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். உடன்பிறப்பு, கூட்டம், குடும்பம், மதம், சமூகம், கலாசாரம் என்பவற்றைத் தாண்டி இனம் என்பதற்கு இன்னுமொரு அர்த்தமும் இருப்பதை கையூம் ஹாஜியார் அப்போது விளங்கிக் கொண்டார்.

❍

48

3

## அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2016இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை




தேவகி கருணாகரன்


தேவகி கருணாகரன், பிறந்து வளர்ந்தது யாழ்ப்பாணம். தற்போது தன் கணவர் Dr.எஸ்.கருணாகரனுடனும், பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடனும் சிட்னியில் வாழ்ந்து வருகிறார். அவுஸ்திரேலிய பாதுகாப்பு இலாகாவில் பதினைந்து வருடம் வேலை செய்து ஓய்வுபெற்ற பின், தன் பதின்மவயதில் ஆரம்பித்து தொடர முடியாமல் போன எழுத்துப்பணியை இப்போது மேற்கொண்டுள்ளார்.
வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளிலும், கலைமகள், கலப்பை சஞ்சிகைகளிலும் வெளிவந்த அவரது கதைகளைத் தொகுத்து புத்தகமாக "அன்பின்ஆழம்" என்னும் தலைப்பில், காலம்சென்ற மூத்தஎழுத்தாளர் எஸ்.பொ அவர்களின் தலைமையில், 2014 ஆண்டில் சிட்னியில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் அவரது கதைகள் சமீபத்தில் வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளிலும் ஜீவநதி சஞ்சிகையிலும் வெளிவந்துள்ளன.




வருடங்கள் உருண்டோடின. கண்ணை மூடித் திறப்பதற்குள் ஆறு வருடங்கள் கடந்து விட்டன. நிர்மலாவின் ஒரே வாரிசான, அவளது சந்தோசத்திற்கு ஆணிவேரான, ரஜீவன், வசீகரமான, இளந்தாரியாக வளர்ந்து நிற்பதைப் பார்த்து நிர்மலா புளகாங்கிதம் அடைந்தாள்.

அதுமட்டுமா ஏ லெவல் பரீட்சையில் நாலு பாடங்களிலும் உயர் மதிப்பெண் எடுத்து கொழும்பு மருத்துவக் கல்லூரியில் அவனுக்கு இடம் கிடைத்ததால் நிர்மலா மகிழ்ச்சியின் சிகரத்திற்கே போய்விட்டாள் பெருமையுடன் ரஜீவனைக் கட்டி அணைத்து, "நீ என் மகனடா! டே..! குனியடா, உன் கன்னம் எனக்கு எட்டுதில்லை". குரல் தழுதழுக்க, கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்க அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள். "நீ என் மகனடா," அந்த வார்த்தைகள் ரஜீவனின் மனதில் எதிர்க்கேள்வியை எழுப்பியது.


(ஞானம் 209, ஒக்டோபர் 2017)

**"இப்ப கூடவா அப்பாவைப் பற்றி ஒரு சொல்லாவது சொல்ல முடியவில்லை. இந்தப் பெருமை அப்பாவிற்கும் போய்ச் சேரவேணுமே. எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அப்பாவைப் பற்றி அம்மா தானாகவே எதுவும் கதைத்த தில்லை. மேலும் என் பதின்மவயதில், அப்பாவைப் பற்றி அம்மாவிற்கு எந்த ஒரு நினைவோ அபிப்பிராயமோ இல்லை என்ற புரிதல் ஏற்பட்டிருந்தது.**

"இப்ப கூடவா அப்பாவைப் பற்றி ஒரு சொல்லாவது சொல்ல முடிய வில்லை. இந்தப் பெருமை அப்பா விற்கும் போய்ச் சேரவேணுமே. எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அப்பாவைப் பற்றி அம்மா தானாகவே எதுவும் கதைத்த தில்லை. மேலும் என் பதின்மவயதில், அப்பாவைப் பற்றி அம்மாவிற்கு எந்த ஒரு நினைவோ அபிப்பிராயமோ இல்லை என்ற புரிதல் ஏற்பட்டிருந்தது. இது எனக்கு ஒரே குழப்பமாகவும் புதிராகவும் இருந்தது. உள்ளத்தில் ஒரு மூலையில் உறுத்திக் கொண்டேயிருந்தது. அதைப் பற்றி ஒருவரிடமும் சொன்னதுமில்லை. இந்த எண்ணங்கள் ஒரு விநாடி அவன் மனதில் எழுந்து ஓடி மறைந்தன. "என்ன ரஜீவ் உன்னுடைய இந்தச் சாதனையை, சந்தோசத்தைக் கொண்டாட வேண்டாமா?" நிர்மலாவின் குரலில் ஒரே குதூகலம்.

"சரி அம்மா. ஆன்டி கத்ரீன் கொழும்பிலே இருக்கிறாவா அல்லது நோர்வே போயிட்டாவோ".

"இன்னும் இங்கேதான்."

"நல்லம், அவவையும் அழைத்துக் கொண்டு வெளியே சாப்பிடப் போவோம்."

உறவினரே இல்லாத அவர்களுக்கு கத்ரீன்தான் நெருக்கமான நண்பர். பிறநாட்டுப் பெண்மணியாயிருந்தும் அவர் தான் அவர்களுக்கு எல்லாமே.

"ஓம் ஓம் நல்ல ஐடியா. ரஜீவ், நீயே போன் பண்ணி, இந்த நல்ல செய்தியைச் சொல்லி, வெளியே ரெஸ்டொரண்டுக்கு சாப்பிட வரச் சொல்லு." நிர்மலாவின் குரலில் மகிழ்ச்சி கரை புரண்டோடியது.

கத்ரீனை தொலைபேசியில் அழைத்த ரஜீவன், "ஆன்டி எனக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்திருக்கு. இதைக் கொண்டாடுறதற்கு "டெண்டர் பிரெஷ்" ரெஸ்டொரண்டுக்கு போறோம். நீங்களும் அங்கே வந்திடுங்கோ," என ஆங்கிலத்தில் அழைத்தான்.

அவரும், "பாராட்டுகள்! நான் வராமல் எப்படி? கட்டாயம் வாரேன்," என உற்சாகமாகப் பதிலளித்தார். கத்ரீன் ஆன்டியை, அவனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து தெரியும். அம்மாவின் மிகவும் நெருங்கிய சிநேகிதி, இங்கு மனிதஉரிமை கவனிப்பு இலாகாவில் பணிபுரிந்து வருபவர்.

உணவகத்திற்குள் தாயும் மகனும் போய்ச் சேரவும், கத்ரீனும் உள்ளே நுழைந்தார். காதுவரை கிராப்பண்ணிய இளம் பொன் நிறமுடியுடன் வெள்ளிநரை முடியும் சேர்ந்து, அவர் முகத்திற்கு தனி வசீகரத்தைக் கொடுத்தது. மெல்லிய செந்நிற உதடுகளுக்கிடையே சீரான வெண்பற்கள் தெரிய, "கன்கிராஜு லேசன்ஸ் ரஜீவ் மை பாய்," என அவன் கையைப் பிடித்துக் குலுக்கி, அணைத்து கன்னத்தில் முத்தமிட்டார். அவர் எப்போதும் பாவிக்கும் வாசனைத் திரவியத்தின் லேசான மல்லிகை சுகந்தம் அவன் நாசியை வருடியது. சற்றுத் தள்ளி நின்று ரஜீவனை தலைமுதல் கால்வரை

பார்த்தார். ஆறு அடிஉயரமும், மா நிற முகத்தில் மீசைகருக்கோடிட, தலை முடியை மேலே மட்டும் அடர்த்தியாக வளரவிட்டு, கீழே சுற்றிவர நம்பர் நொட் கிராப்பு அடித்திருந்தான்.

"டேய்! ரஜீவா நீ உண்மையிலே வாட்ட சாட்டமாக இருக்கிறாய். உனக்கு உன் அம்மாவின் அழகிய, பெரிய வட்டக் கண்கள், அந்தக் கண்களாலே யூனிவசிட்டியிலே எத்தனை பெட்டை களை மயக்கப் போறியோ தெரியாது" எனக் கூறி கலகலவெனச் சிரித்தார் கத்ரீன்.

"அவன் என்ட மகன், எந்தப் பெண்ணை யும் மயக்கவும் மாட்டான், ஏறெடுத்துப் பாக்கவும் மாட்டான், இல்லையடா," என்றவள். தன் ஒரே மகனை, கண்களில் பெருமை மின்ன நோக்கினாள் நிர்மலா. அவளது உலகமே ரஜீவன்தான், அவனை வேறு யாருடனும் பங்குபோட அவள் மனம் ஒப்புமோ தெரியவில்லை.

உணவை ஆர்டர் பண்ணிவிட்டு, மூவரும் மருத்துவக் கல்லூரியைப் பற்றிக் கதைத்தார்கள். உணவு மேசைக்கு வரவும் பரிமாறியபடி கத்ரீன் தன்னு டைய தாய்நாடான நோர்வே சென்று சந்தித்ததன் குடும்பத்தாரைப் பற்றியும், அவர்களோடு கழித்த சந்தோசமான நாட்களைப் பற்றியும் கூறினார். இந்தச் சம்பாசணையில் குதூகலமாகக் கலந்து கொண்ட ரஜீவனுக்கு, திடீரேன எங்களோடு என் அப்பா இருந்திருந்தால் எவ்வளவு நல்லா இருந்திருக்கும் என்ற எண்ணம் வரவும், முகம் வாடிவிட்டது.

இதைக் கவனித்த நிர்மலா, "என்ன ரஜீவ், பிரைட்ரைஸ் நல்லா இல்லையா?" கரிசனையோடு கேட்டாள்.

"இல்லை, இல்லை நல்லாத்தான் இருக்கு," எனக் கூறியபடி, உணவில் கவனத்தைச் செலுத்தினான்.

இதைக் கவனித்த கத்ரீனும்,? "வட் இஸ் ரொங் ரஜீவ்?" எனக்கேட்டார்.

"நதிங் ஆன்டி. ஒரு சின்ன நினைப்புதான், அப்பா இருந்திருந்தா எனக்கு மெடிசின் செய்ய இடம் கிடைத்த தைக் கண்டு எவ்வளவு பெருமையும் சந்தோசமும் பட்டிருப்பார்." அவன் கண்களிலே கண்ணீர் திரையிட்டது.

நிர்மலா மௌனம்காக்க, கத்ரீன் மட்டும், "உனக்குத்தானே அம்மாவாகவும் அப்பாவாகவும் நிர்மலா இருக்கிறாவே. உனக்கு ஒரு குறையுமில்லாமல் பார்த்துக் கொள்ளுறா. 'ஷீ இஸ் எ மதர் இன் எ மில்லியன்,' என்றார் நிர்மலாவைப் பார்த்தபடி. நிர்மலாவின் அழகிய பெரிய கண்களில் மகன்மேல் இருந்த பாசம் தேங்கிநின்றது.

"யெஸ் யெஸ் ஐலவ் மை அம்மா. 'இஸ் ஆல் ஐ ஹவ்,' என்று சொல்லி முடித்ததும், ரஜீவனின் கையடக்கத் தொலைபேசி அடித்தது. அவன் நண்பன் வரதன்தான் லைனிலே, "ஓம் வரதன், சாப்பிட்டு முடிந்ததும் வெளிக்கிட்டு வாரேன்," எனக் கூறி லைனைக் கட் பண்ணிவிட்டு, சாப்பிட்டு முடித்தான்.

தாயிடமும் ஆன்டியிடமும், "வரதனைச் சந்திக்கப் போறேன், அம்மா நீங்கள் ஆன்டியோட வீட்டே போங்க," எனச் சொல்லி விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான்.

ரஜீவன் போன பின் நிர்மலா, "கத்ரீன் இவன் ரஜீவன், அப்பா! அப்பா! எண்டு என் உயிரை வாங்குறான். அப்பான்ட போட்டோ, அப்பா எப்படி இருப்பார், என்டு கேக்கிறான். என்ன சொல்லிச் சமாளிக்கிறது என்று தெரியாது." அவள் நெஞ்சின் அடிப்பாகத்திலிருந்து ஒரு வெப்பப் பெருமூச்சு வெளிவந்தது.

"நிர்மலா, ஆம்பிளைப் பிள்ளை களுக்கு, தகப்பன் ஒரு ஹிரோ. அவர்க ளையும் மீறி அவர்கள் உள்ளுணர்வு அப்பாவைத் தேடுகிறது. பிறந்ததில் இருந்து தகப்பனைக் காணாத ரஜீவன்

தன் பதின்ம வயதில் தேடுவது இயற்கை. போகப்போக இந்தத் தேடலை விட்டு விடுவான்," என ஆறுதல் சொன்னார் கத்ரீன்.

"அவன் பிறப்பைப் பற்றிய உண்மையை அறிந்தால் என்ன நடக்குமோ? என்ன நினைப்பான்? என்னை வெறுப்பானோ?" நிர்மலாவின் குரலில் சோகமும், பயமும் முட்டிமோதியது.

"நிர்மலா, ரஜீவ் இஸ் சென்சிபில், புத்திசாலி. அவன் உன்னை வெறுக்க மாட்டான். அவன் அம்மாபிள்ளை. பாலத்தைக் கடக்க வேண்டிய நேரம் வரும்போது பாத்துக்கொள்ளலாம்," நிர்மலாவின் தோள் மேல் கை வைத்து ஆறுதல் சொன்னார் கத்ரீன்.

மருத்துவ கல்லூரியில் ரஜீவனுக்கு சகமாணவ, மாணவிகளுடன் சிநேகம் ஏற்பட்டது. முதல் நாளே சகமாணவியான சங்கரியின் அழகு ரஜீவனைக் கவர்ந்து விட்டது. ஒரு வருடப் பழக்கத்தில் ஒருவரை ஒருவர் விரும்பத் தொடங்கியிருந்தனர். ஒரு பெண்ணையும் மயக்கவும் மாட்டான் மயங்கவும் மாட்டான் என்ற நிர்மலாவின் எண்ணம் காற்றோடு போய்க்கொண்டிருந்தது. ரஜீவனின் காதல் வேகமாக வளர்ந்தது.

வருடங்கள் மூன்று உருண்டோடின. ரஜீவன் மருத்துவப் பயிற்சி வகுப்புகளுக்கு கொழும்பு பெரிய மருத்துவ மனைக்கு போன இடத்தில், ஒரு நாள் வயதுபோன நர்ஸ் ஒருவர் அவனைப் பார்த்துவிட்டு,

"நீ தம்பி,.... டொக்டர் நிர்மலாவின் மகன் தானே?" எனக்கேட்டாள்.

"ஓம், ஓம் அம்மாவைத் தெரியுமா? உங்கட பெயர்?"

"சுரபி, ஓ நல்லா தெரியும். உண்ட அம்மா வேலை செய்யிற ஆஸ்பத்திரியிலேதான் பதினைந்து வருசமா வேலை செய்தனான். இப்போ இங்கே வேலை செய்றேன்," என்றாள்.

இன்னுமொரு நாள் ஒரு நோயாளியைப் பரிசோதித்து விட்டு, பிரதம மருத்துவரோடு ரஜீவன் வெளியே வந்த வேளை, பக்கத்து அறையில் நர்ஸ் சுரபி, யாரோ ஒருவரிடம்,

"உனக்கு டொக்டர் நிர்மலாவைத் தெரியும் தானே? அவளுடைய பிள்ளை, ரஜீவன் இங்கே மெடிக்கல் படிக்கிறான், கெட்டிக்காரன். அவன் ஒரு (IVF) ஐ வி எவ் குழந்தை, அது தெரியுமோ உனக்கு?" என்று சொன்னது ரஜீவனின் காதில் விழுந்தது.

அவன் அப்படியே திகைத்துப்போய் ஆஸ்பத்திரி நடை பாதையில் தன்னை அறியாமலே, ஸ்தம்பித்து நின்று விட்டான்.

பிரதம டொக்டர், "என்ன அப்படியே நிண்டிட்டாய்" எனக் கேட்கவும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, அவருடன் சென்றான்.

அன்றைய மிகுதிப் பொழுது எப்படிப் போனதென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் மூளையில் பல கேள்விகள். அது விடை தெரியாத வினாக்கள். "நான் ஐ வி எவ் மூலம் பிறந்த பிள்ளையா? நர்ஸ் சுரபி என்னைத்தான் ஐ வி எவ் குழந்தை, எனச் சொன்னவவோ? அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அப்பா உள்நாட்டுப் போரில் இறந்ததாக அல்லவா அம்மாவும் கத்ரீன் ஆன்டியும் சொல்லினம். அப்ப இந்த நர்ஸ் என்ன சொல்றா....? ஐயோ என்பிறப்பே மர்மமாக இருக்கிறதே!"

பலதையும் நினைத்த ரஜீவன் மனதில், குழப்பம், ஏமாற்றம், மனக்கசப்பு என உணர்வுகள் சேர, ஒரு துயரார்ந்த தனிமையை உணர்ந்தான். தலை முடியைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது. படிப்பிலேயும் கவனம் செலுத்த முடியாமல் கலங்கிப் போயிருந்தான். சங்கரியையும் அடிக்கடி சந்திப்பதைத் தவிர்த்து, கல்லூரிக்குப் போகிற நேரம் தவிர, மிகுதி நேரம்

வீட்டில் முடங்கிக் கிடந்தான். இதைக் கவனித்த நிர்மலா,

“என்ன ரஜீவ் சோர்ந்து சோர்ந்து கிடக்கிறாய்? தடிமல், காய்ச்சலோ?” என அவன் நெற்றியிலே கை வைத்தபடி கேட்டாள்.

“இல்லை அம்மா, இந்த வெய்யில் சூடு தான் தாங்க முடியல்லை. அதோட தேர்ட் இயர் கிளினிக்கல், புற்றுநோய் கேஸ்களைப் பார்த்துப் பார்த்து மனமும் சோர்ந்து போகுது,” என்று சொல்லி சமாளித்துக் கொண்டான்.

“உனக்கு ஒரு சின்ன செக்கன்ட் ஹாண்ட் கார் ஒண்டு வாங்கித் தாரேன். நீ வெயிலிலே அலையாமல் யூனி போய் வரலாம்.”

“இல்லை, அம்மா வேண்டாம் நான் சமாளிப்பேன்.” தாயிடம் தன்பிறப்பைப் பற்றிய உண்மை தெரியாது குழம்பிப் போயிருக்கிறேன் என்று எப்படிச் சொல்லுவது.

சங்கரிக்கும் ரஜீவன் ஏதோவருத்தத் திலோ, குழப்பத்திலோ இருக்கிறான் என்று புரிந்து விட்டது. ஒரு நாள் கிறீன் கபின் ரெஸ் டொரண்டிலே காப்பி அருந்திக் கொண்டிருக்கும் போது, “ரஜீவ், ஏதோ கவலையிலே இருக்கிறாய். இல்லை எண்டு சொல்லாதே. மனதிலே வைத்து அவதிப்படாமல் என்னட்டைச் சொல்லு,” என அவன் தோள்மேல் ஆதரவாக ஒரு கையைவைத்துக் கொண்டு கேட்டாள் சங்கரி.

ரஜீவனும் சங்கரியிடம் சொன்னால் ஆறுதலாக இருக்குமே என நினைத்து, நர்ஸ் சுரபி, அவன் பிறப்பைப் பற்றி சொன்னது அவன் மனதில் எழுந்த விடைதெரியாத சந்தேகங்கள் எல்லாவற் றையும் சொன்னான்.

“நான் குழந்தையா இருக்கும்போதே என் அப்பா இறந்துவிட்டதாக உனக்குச் சொன்னனான் தானே. அவருடைய போட்டோ கூட பார்த்ததில்லை. உள் நாட்டுப் போர் மூட்டம் நாங்கள் வீடு பொருள் எல்லாம் இழந்தபோது எப்படி போட்டோ மிஞ்சியிருக்கும், எண்டு அம்மா சொல்லுவா. போட்டோ இல்லாட்டி அப்பா பார்க்க எப்படி இருப்பார் என கேட்பேன். கொஞ்சம், கொஞ்சம் உன்னைப் போலத்தான் என இப்படி ஏதாவது சொல்லி மழுப்பி விடுவா. அதற்கு மிஞ்சி என்ன கேள்வி கேட்பது?”

“அப்படியா? நீ பாவம், உனக்கு அப்பா இல்லையே எண்டு சிறுவயது முதல் மனவருத்தப்பட்டிருப்பாய் போல,” அவன் கையை தன்மடியில் எடுத்து தடவிய படி சொன்னாள் சங்கரி.

“இப்போ இந்த நர்ஸ் சொன்னதைக் கேட்டபின் என் பிறப்பிலே ஏதோ மர்மம் இருக்குது போலிருக்கு. ஏன் ஐ வி எவ் மூலம் என்னைப் பெத்தார்கள்?”

“ரஜீவ் உன் பெற்றோருக்கு இயற்கை யாகக் கருத்தரிக்க முடியாததால் ஐ வி எவ் மூலம் உன்னைப் பெத்திருக்கலாம். நாம் படித்திருக்கிறோமே ஒரு பெண் ணின் உடலில் இருந்து முட்டையை எடுத்து ஆணின் உயிர் அணுவையும் ஒரு கிண்ணத்தில் வைத்து சினைப் படுத்தியபின் கருமுளையை உடலுக்குள் செலுத்துவதைத்தான் சொல்றேன்.”

“ஆனால் சங்கரி, அம்மா மானிப்பா யில் இருக்கேக்கே எப்படி ஐ வி எவ் சிகிச்சை எடுத்திருப்பா?”

“அதையும் யோசிக்க வேணும்தான். ஆனால், உன்னுடைய அம்மா டொக்டர் என்ற படியால், விசயம் தெரிந்தவ, அப்பாவோட கொழும்புக்கு வந்து சிகிச்சை எடுத்திருக்கலாம் தானே?”

“அப்படியும் இருக்கலாம். இதைப் பற்றி ஆரிட்ட கேக்கிறது? அம்மாண்ட சகோதரர் சகோதரிகள் எண்டு ஒருவரும் இப்போ உயிரோடு இல்லை. எங்கட இந்த உள்நாட்டுப் போர் எத்தனை பேரைக் காவுகொண்டு போய்விட்டது.

அப்பாவைப் பற்றி வீட்டில் கதைக்காத போது எப்படி அவருடைய சொந்தங் களைப் பத்தி.....”

“ஏன் ரஜீவ் உம்முடைய அம்மாண்ட மெடிகல் பைலை எடுத்துப் பார்த்தால், உண்ட ஐமிச்சம் தீர்ந்திடும்.”

“ஓம் ஆனால் அம்மா வுக்குத் தெரியாமல் பாக்க வேணுமே. நான் சந்தேகப்படுறேன் எண்டு தெரிந்தா, அம்மா என்ன நினைப்பாவோ?”

“சரி,.... ஏலும் எண்டா டிரை பண்ணு,” என்று கூறினாள். இருவரும் கபேயை விட்டு வெளியேறினர்.

எப்படி அம்மாண்ட மெடிகல் பைலைப் பார்ப்பது என யோசித்துக் கொண்டிருக்க, நிர்மலா மூன்று நாளைக்கு மெடிக்கல் கொண்∴ப்ரன்சுக்காகக் கண்டிக்கு புறப் பட்டுப் போய்விட்டாள். அம்மாவுக்குத் தெரியாமல் மெடிக்கல் பைலை பார்க்க ரஜீவனுக்கு உடன் பாடில்லை. எனினும் குற்ற உணர்வோடு, மனம் பக்பக் என அடிக்க அன்று இரவு அம்மாவின் அறைக்குள் நுழைந்தான். ஒவ்வொரு லாய்ச்சியாகத் தேடினான். இரவின் நிசப்தத்தில் சுவர் பல்லிகள் ஓடித் திரியும் ஒலி கேட்டதும், உடம்பு ஒரு கணம் வியர்த்துக் கொட்டியது. கடைசியாக ஒரு ஆவண நிலைப் பெட்டியில், தாயின் மருத்துவப் பைலைக் கண்டெடுத்தான். கதிரையில் அமர்ந்து மேசைமேல் பைலை வைத்து, ஒவ்வொரு ஒற்றை யாகத் திருப்பிப் பார்த்தவன், திடீரென முன்னால் நகர்ந்து அமர்ந்தான். தைமாதம் 18ஆம் திகதி, அவன் பிறந்த தினம். புகழ் பெற்ற ஆஸ்பத்தியிலே தான் பிறந்திருக்கிறான். ஒற்றைகளை பின் நோக்கித் திருப்பிப் பார்த்தான். அதே ஆஸ்பத்திரியிலே நிர்மலாவின் ஐ வி எவ் சிகிச்சையைப் பற்றிய விபரங்கள் இருந்தன. அதோடு ஒரு (வயல்), குப்பி இலக்கமும் இருந்தது, அப்படியானால் இதை வைத்துக் கொண்டு என் ரத்த உருத்தான தந்தை யார்......? அவன் உடலில் ஒரு உற்சாகம் பரவியது. ஆஸ்பத்திரியின் பெயர், வைத்தியரின் பெயர், ஐ வி எவ் நடந்த திகதி, வயல் இலக்கம், எல்லா வற்றையும் தன் மொபையில் குறித்துக் கொண்டான். ஆவண நிலைப் பெட்டியில் எல்லாவற்றையும் இருந்த மாதிரியே வைத்து விட்டு, தாயின் அறையை விட்டு குற்ற உணர்வோடு வெளியே றினான்.

அடுத்த நாள் சங்கரியைக் கல்லூரியில் சந்தித்ததும் தான் கண்டறிந்த விடயங் களைக் கூறினான். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு சங்கரி,

“ரஜீவ் உம்முடைய அப்பாவுக்கு உயிர் அணுக்கள் குறைவாக இருந்திருக் கலாம். நான் முன்னம் சொன்னது போல, அப்பாவின் அணுக்களால்தான் ஐ வி எவ் சிகிச்சை நடந்திருக்கிறது. இதுக்கு ஏன் இப்படி குழம்புறாய். டேக் இட் ஈசி (Take it easy),” என அவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

“இல்லை சங்கரி” இதிலே ஏதோ ஒரு விசயம் எனக்கு சரியாப்படல்லை. இங்கே ஒரு பெரிய ஆஸ்பத்திரியிலே அம்மாவுக்கு ஐ வி எவ் சிகிச்சை நடந்தி ருக்கு. அப்பாவின் உயிர் அணுவினால் எண்டால் ஏன் வயல் நம்பர் எல்லாம். அப்படி எண்டால் என்ரத்த உருத்தான அப்பா ஊர் பெயர் தெரியாத ஒருவரா?” என் அப்பாவைச் சார்ந்த எந்தப் பொருளோ படமோ அம்மாட்ட இல்லாத தற்கும் இதுக்கும் நிச்சயமாக தொடர்பு இருக்கு. அப்பா இல்லாததால் என் மனதில் ஏற்பட்ட வெறுமையை அம்மா புரிந்து கொண்டதாகத் தெரியேல்லை. எத்தனை இரவுகள் படுக்கையில் படுத்தபடி ஒரு கற்பனை அப்பா என்னை அணைப்பது, அதே அப்பா

எனக்கு கிரிக்கட் பட் எப்படிப் பிடிப்பது என என்னை அணைத்தபடி பின்னால் நின்று காட்டிக் கொடுப்பது போல கற்பனை செய்திருக்கிறேன். சங்கரி, என்னுடைய இந்த ஏக்கத்தை என் நெஞ்சுக்குள்ளே பூட்டி வைத்திருந்தேன். இண்டைக்குதான் உன்னிட்ட சொல்றேன். கொஞ்சம் ஆறுதலா இருக்குது" எனத் தன் ஆதங்கத்தை சங்கரியிடம் கொட்டி னான்

"ரஜீவ்! உம்முடைய ஏக்கம் எனக்கு விளங்குது. காரணத்தோடுதான் உம்முடைய அம்மா அப்பாவைப் பற்றி அடிக்கடி கதைக்காமல் இருந்திருக்கிறா..... நீ இப்படி அம்மா வுக்குத் தெரியாமல் அப்பா யார் என அறியப் பாக்கிறாய் எண்டு தெரிய வந்தால் அவரிண்ட மனம் சங்கடப்படும்!"

"ஓம் சங்கரி, ஆனால் அம்மாவுக்கு தெரியாமல்தான் ஆராயவேணும். அம்மா விண்ட மனதை காயப்படுத்த எனக்கு விருப்ப மில்லை. ஐ லவ் அண்ட் செரி அம்மா. ஆனால் என்னையும் மீறி என் அப்பா யார் எண்டு கண்டுபிடிக்க வேணும் என என் உள்ளுணர்வு உந்திக் கொண்டே இருக்குது"

"ஏன் ரஜீவ் கத்ரீன் ஆன்டிக்கு உம்மு டைய பிறப்பைப் பற்றிய உண்மை தெரிந்திருக்குமோ?"

"ஓம் ஓம், அவவிட்டைக் கேக்கிறது தான் சரி. எனக்கு ஏன் அந்த யோசனை வரல்லை." என்றான் ரஜீவன் மனதில் ஒரு தெளிவுடன்.

ரஜீவன் அடுத்தநாளே கத்ரீனை அவர் வீட்டில் போய் சந்தித்தான்.

சுகங்கள் விசாரித்து, அவனுடைய மருத்துவப் படிப்பைப் பற்றிக் கதைத் தார்கள். பின்பு ரஜீவன் தயக்கத்துடன், "ஆன்டி, உங்களை ஒன்று கேட்கலமா பிலீஸ்? நான் பிறக்க முன்னமே உங்களுக்கு அம்மாவைத் தெரியும் தானே."

"யெஸ் யெஸ்"

**"காசுக்காக உயிர் அணுக்களை வித்து பல சிசுக்களுக்குத் தந்தையான உன் அப்பாவைத் தேடப் போறாய் என்றால், போய்த்தேடு. அவன் வீட்டு வாசற்கதவைத் தட்டி, "நீ தான் என் உயிரினத் தந்தை" எனப் பல பிள்ளைகளுடன் நீயும் ஒருவனாகப் போய்த்தட்டு!" சிநேகிதி நிர்மலா மேல் உள்ள பாசம் உச்சத்திற்கேறிக் கொண்டிருப்பது கத்ரீனின் குரலில் தொனித்தது.**

"நான் கொழும்பிலேயா, யாழ்ப்பாணத் திலேயா பிறந்தனான்?" அடுத்த கேள்வி யைக் கேட்டான்.

"கொழும்பிலேதான். பெர்த் செர்ட்டி∴ பிக்கட் அதைத்தானே சொல்லுறது." கத்ரீன் தயங்காமல் பதிலளித்தார்.

"ஓம் தெரியும். வேறு ஒரு சந்தேகம். நேராகவே கேக்றேன். நான் ஐ வி எவ் குழந்தையா? என்னுடைய அப்பா யார்? உங்களுக்கு அவரைத் தெரியுமோ?" ஒன்றன் பின் ஒன்றாகக் கேள்விகளைக் கேட்டு கத்ரீனை அதிர்ச்சிக்குள்ளாக் கினான்.

"ரஜீவன் ஏன் இந்தச் சந்தேகங்கள்?" புருவங்கள் உயர கேட்டார்.

"இதோ பாருங்கோ என்னிடம் ஆதாரம் இருக்கிறது." என தன் மொபைலே குறித்து வைத்திருந்த வயல் இலக்கம், ஐ வி எவ் குழந்தை என்னும் விபரங் களைக் காட்டினான்.

"கத்ரீன் ஆன்டி, அம்மாவுக்குத் தெரியாமல். அவவிண்ட மெடிகல் பைலில் இருந்துதான் இதை எடுத்தேன்.. என்னை அப்படி பாக்கேதேங்கோ.. எனக்கு வேறு வழி தெரியவில்லை."

"பரவாயில்லை, மேலே சொல்லு" ஆதரவோடு சொன்னார்.

“உங்களுக்கே தெரியும் நான் சிறு பிள்ளையா இருக்கும்போது என் அப்பா எப்படி இருப்பார் எண்டு கேட்டபடி இருப் பேன். வளரவளர அந்த ஆசையை வெளியே காட்டாட்டியும் என்னையும் மீறி என் உள்ளுணர்வு அப்பாவுக்கா ஏங்குது. இப்போது என்னிடம் உள்ள இந்த விபரங்களைக் கொண்டு அப்பா யார் என அறியப் பாக்கிறேன். முதலிலே உங்களிட்ட கேட்டுப்போட்டு செய்வோம் எண்டுதா....” ரஜீவன் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

“ரஜீவ் இந்தக் கேள்வியை நீ ஒருநாள் கேப்பாய் என நான்மட்டும் இல்லை உன் அம்மாவும் எதிர்பார்த்ததுதான். விசயம் தெரிந்தால் எங்கே உன்னுடைய பாசத்தை அன்பை இழந்து விடுவாளோ என்ற பயம். அதனால் தானோ என்னவோ இதை உன் அம்மாவும் நானும் உனக்கு எப்போ சொல்வது எப்படிச் சொல்வது என்று தெரியாது தள்ளிப்போட்டுக் கொண்டிருந்தோம்.”என்றார்,

“ஆன்டி என் அப்பா யார் என தெரிந்தால், அம்மா மேல் எனக்கு இருக்கும் அன்பு, பாசம் ஒரு துளி கூடக் குறையாது. சொல்லுங்கோ”

ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பின் கத்ரீன், “மைடீயர் ரஜீவ்,”. ஓம் நீ ஐ வி எவ் குழந்தை தான். இந்த குப்பி இலக்கத்தைக் வைத்து உன் அப்பா யார் என்று நீ தாராளமாக தேடிப் போகலாம். அதற்கு முன் உன் அம்மாவின் கடந்த கால வாழ்க்கையைப் பற்றி தெரிந்து கொள்ளவேணும்.”

“வடக்கில் நடந்த உள்நாட்டுப் போரில், தன் அம்மா அப்பாவை இழந்து, வீடு வாசல் அழிந்துபோன கதையைத் தான் நிர்மலா உனக்கு சொல்லியிருப்பா. ஆனால் உனக்குச் சொல்லாத ஒரு கதையும் இருக்கிறது,” எனக் கூறிக் கொண்டு, டிபோயிலிருந்து தேநீரை கப்பில் ஊற்றி அவனிடம் கொடுத்தார். தனக்கும் ஒரு கப் ஊற்றிக் கொண்டு, “காவல்துறை தனிப்பிரிவு விசாரணை என்ற பெயரில் வீடுகளுக்குள் புகுந்து, ஆண்கள் பெண்கள் என்று பாராது கைது செய்தனர். அப்படிக் கைது செய்யப் பட்டவர்களுக்குள் உன் அம்மாவும் ஒருவர். அவவுக்கு அப்போ பதினேழு வயதுதான், உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தா. கைதுசெய்யப்பட்ட பெண்கள் சித்திரவதைக்கும் மூர்க்கமான பாலியல் வல்லுறவிற்கும் பலியானர்கள். எந்தக் குற்றமும் சுமத்த முடியாததால் விடு விக்கப்பட்ட நிர்மலா, குற்றவா ளிகளை உயர் நீதிமன்றம் வரை இழுத்து, அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கப் போராடினாள். கெடுக்கப்பட்ட மற்றப் பெண்கள் சமுதாயத்திற்கு பயந்து, முகம் கொடுக்க முடியாது ஒதுங்கி வாழ, நிர்மலா தனக்கு இழைக்கப்பட்ட அநீதியால் அடி பணியமாட்டேன் என எதிர் நீச்சலடித்து, துணிச்சலோடு தன் கல்வியைக் கைவிடாது பள்ளிக்கூடம் போய்ப் படித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மருத்துவம் படிக்க இடமும் பெற்றுக் கொண்டாள்..

“அவளுடைய சளையாத போராட்டத் திற்கு மனிதஉரிமை இலாகா ஆதரவா கவும் உதவியாகவும் இருந்தது. அன்று உன் அம்மாவுடன் தொடங்கிய எங்கள் சிநேகம் இன்று மட்டும் தொடர்கிறது.

“தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து விலகிக் கொள்ளுமாறு உன் அம்மா வுக்கும் தாத்தாவுக்கும் பல அச்சுறுத் தல்கள் வந்தன. உன் அம்மா அஞ்ச வில்லை. திடீரென உன் தாத்தா காணாமல் போயிற்றார். அவர் என்ன ஆனார் என்று இன்று மட்டும் தெரியாது. நிர்மலா தனித்து நின்றாள்”

“ஆன்டி!..... அப்போ பாட்டியும், மாமா வும்?” துக்கம் அவன் தொண்டையை

அடைத்தது.

"உன் மாமா, இது எல்லாத் துக்கும் முன்னமே காணாமல் போயிட்டார். நிர்மலாவை கைது செய்த பதட்டத்தின் போது உன்பாட்டி, தலை அடிபட விழுந்தவதான் பின் எழுந்திருக்கவே யில்லை."

"அம்மாவின் வழக்கு ஆறுவருடங் களுக்கு தாமதிக்கப்பட்டு, மறுக்கப்பட்ட நீதியாக முடிந்தது. ஆனால் பத்திரிகைகள் நிர்மலா தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை சவாலாக எடுத்துப் பகிரங்க மாகப் போராடி, எதிர்நீச்சல் போட்டு பெண்ணியத்திற்கே பெருமை தேடிக் கொடுத்திருக்கிறாள் எனப் பக்கம் பக்க மாகப் பாராட்டி எழுதின. இது இந்நாட்டு பெண்களிடையே ஒரு விழிப்புணர் வையும் தன்னம்பிகையையும் ஏற்படுத்தி யிருக்கும்."

பல கொடூரங்களின் மத்தியிலும் தன் தாய் சாதித்ததைக் கேட்டு ரஜீவனின் உள்ளம் கசிந்து உருகி கண்ணீர் மல்க. நாக்கும் காய "மைகோர்ட்" என்னும் வார்த்தை மட்டும் வெளிவந்தது.

"கொழும்புக்கு வந்து இப்போ வேலை செய்யும் இதே ஆஸ்பத்திரியில் சேர்ந்து புதுச் சூழலில் கடந்த சம்பவங்களை மெல்லமெல்ல மறந்து வந்தாள். ஊரிலே இருந்த ஓரிரு சொந்தங்களின் தொடர்பும் அறுந்துவிட்டது. நாங்கள் சினேகிதர்கள் இருந்தென்ன, அவளுடைய சுகதுக் கங்களில் பங்குபற்ற ஒருவரும் இல்லாது தனிமையில் தவித்தாள். கார், பங்களா இருந்தென்ன தனக்கென்று ஒருகுடும்பம் வாழ்க்கை பாசம் காட்ட ஒருவருமில்லை என்ற வெற்றிடம். வயதும் ஏறிக்கொண்டிருந்தது. உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தாக்க மடைந்திருந்த நிர்மலாவினால் கல்யாணத் தையோ தாம்பத்திய உறவையோ ஏற்க முடியவில்லை. இதைப் பற்றி மருத்துவ மாணவனான உனக்கு விளங்கும் என நினைக்கிறேன்.

"ஒரு அநாதைக் குழந்தையை வளர்க்கலாமே என்றேன். ஆனால் அவளது பெண்மையின் இயல்புணர்ச்சி, தான் ஒரு தாயாகி, தன் ரத்தமும் சதையுமான உறவைத் தேடியது. ஊர்ப் பேச்சுக்குப் பயப்படாது ஐ வி எவ் சிகிச்சையை நாடினாள். ஒரு விதத்திலே இதில் நிர்மலாவின் சுயநலமும் கலந்தி ருக்கலாம். ரஜீவ் எல்லா உண்மையையும் சொல்லிட்டேன்." பெரிய பாரத்தை இறக்கி வைத்த நிம்மதியோடு தொடர்ந் தார்,

"ரஜீவ், சொல்லமுடியாத கொடுமை யும் வேதனையும் அனுபவித்து, பிள்ளைப் பாசத்திற்காக தவிக்கும் உன் தாயின் மன நிலையை மதிக்காது போறதென்றால் போ. உன்னைத் தடுக்கமாட்டோம்.

"காசுக்காக உயிர் அணுக்களை வித்து பல சிசுக்களுக்குத் தந்தையான உன் அப்பாவைத் தேடப் போறாய் என்றால், போய்த்தேடு. அவன் வீட்டு வாசற்கதவைத் தட்டி, "நீ தான் என் உயிரினத் தந்தை" எனப் பல பிள்ளை களுடன் நீயும் ஒருவனாகப் போய்த் தட்டு!" சிநேகிதி நிர்மலா மேல் உள்ள பாசம் உச்சத்திற்கேறிக் கொண்டிருப்பது கத்ரீனின் குரலில் தொனித்தது.

விழிகளினின்று கண்ணீர் வழிந்தோட, ரஜீவன் கத்ரீனின் கைகளைப் பிடித்துக் கொண்டு "தாங்யு! தாங்யு! அம்மாண்ட கடந்த காலத்தைப் பற்றி தெளிவூட்டி யதற்கு நன்றி," என்றான்.

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2017 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| தீயடி அரவம் | அண்டனூர்சுரா | தமிழ்நாடு |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| பூப்படையாத அநாதைகள் | அஸாத் எம் ஹனிபா | கலுபோவில |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| நினைவுத் தடங்கள் | சவுந்தரராஸா லிசாந்தினி | அக்கரைப்பற்று 19. |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| கரைதேடும் ஓடங்கள் | வைரமுத்து சிவராசா | ஜேர்மனி |
| அவளுக்காகவும் | திருமதி மதிவதனி | சுவிற்சர்லாந்து |
| சீதனம் என்னும் வலை | மொஹமட் புவார்ட் பாரா | கண்டி |
| பகீரதி | திருமதி மைதிலி தயாபரன் | வவுனியா |
| சில மனிதர்கள் அப்படித்தான் | கே.எஸ். சுதாகர் | அவுஸ்திரேலியா |
| திருந்திய உறவு | நெடுந்தீவு மகேஷ் | யாழ்ப்பாணம் |
| சப்பாத்து | வெலிகம ரிம்ஸா முஹம்மத் | மவுன்றலெவனியா |

பரிசளிப்பு 24-02-2018 மாலை 5.30 மணிக்கு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெறும்

---

நடுவர்கள்: தி. ஞானசேகரன், திருமதி பத்மா சோமகாந்தன், திருமதி வசந்தி தயாபரன்.


(ஞானம் 213, பெப்ரவரி 2018)

49

# தீயடி அரவம்

**அண்டனூர் சுரா**





குழந்தை திடுக்கென விழித்து கண்களை "படக், படக்"கென அடித்து கொண்டு கேட்டது "அம்மா சுடாதா...?"

தாய் தன் முந்தானையால் குழந்தையை இறுகப் போர்த்தினாள். தன் மார்போடு இறுக அணைத்தாள். தலை முடிகளைக் கோதினாள். அம்மாவின் அரவணைப்பிலிருந்து மெல்ல எழுந்திருந்தது குழந்தை. போர்த்தியிருந்த சேலையை விலக்கி அம்மணமாக நின்றது.

"அம்மா, சுடாதா...?"

தாய் குழந்தையின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை. அப்படியாக பார்க்க அவளுக்கு மனத்திடம் இல்லை. குழந்தையின் மீதான பாசப்பிணைப்பு மனதிற்குள் கற்களைப்போல அரைபட்டது. தாய் எழுந்தாள். குழந்தையின் உச்சந் தலையில் கையை வைத்தாள். தடவிக்கொடுத்தபடி சொன்னாள். "சுடாதடி தங்கம். சுடாது...."

குழந்தை, தாயின் வலது கை ஆட்காட்டி விரலைப்பிடித்திருந்தது. தாயின் முகத்தை நிமிர்ந்து பார்த்தது. "உன் விரலே சுடுது, நெருப்பு சுடாதுங்கிறே..."

தாய் குழந்தையை நோக்கிக் குனிந்தாள். குழந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

**அமரர் 'செம்பியன் செல்வன்'**
**ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச்**
**சிறுகதைப் போட்டி 2017இல்**
**முதற் பரிசு பெற்ற கதை**





**சு.ராஜமாணிக்கம்**
தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டத்தில் அண்டனூர் என்கிற குக்கிரா மத்தைச் சேர்ந்தவர். ஆசிரியர் பணி. பத்து வருடங்களாக தீவிரமாக எழுதிக்கொண்டிருப்பவர். கல்கி, தினமணி, லண்டன் புதினம், ஆஸ்திரேலியா அக்னிக்குஞ்சு நடத்திய சிறுகதைப் போட்டிகள் உட்பட பல போட்டிகளில் பரிசுகள் பெற்றவர். மழைக்குப் பிறகான பொழுது, திற, நாடோடிக்கலைஞன் மீதான விசாரணை என்கிற மூன்று சிறுகதைத் தொகுப்புகளும், முட்டாள்களின் கீழ் உலகம் என்கிற கட்டுரைத் தொகுப்பும், முத்தன் பள்ளம் என்கிற நாவலையும் வெளிக்கொண்டு வந்துள்ளார். தற்பொழுது அப்பலோ என்கிற நாவலை எழுதிக்கொண்டிருக்கிறார்.

**(ஞானம் 215, ஏப்ரல் 2018)**

**கொடுத்தக் கடனை வசூலிக்க முதலில் ஒருத்தன் வந்தான். வீட்டிலிருந்த தட்டுமுட்டு சாமான்களை விற்றுக் கொடுத்த பணத்தை அவன் வட்டியென்று வரவு வைத்துகொண்டான். இன்னொருத்தன் வந்தான். அவன் வட்டிக்கு வட்டியென வசூலித்துகொண்டான். இன்னொரு நாள் அவன் பெயரைச் சொல்லிக்கொண்டு இன்னொருத்தன் வந்தான். வட்டிக்கு – வட்டிக்கு – வட்டிக்கு – வட்டி பணமே அடையல. என்ன சொல்றீங்க… என மகளின் முகத்தைப் பார்த்தவாறு கேட்டு நின்றான்.**

அவளது முகவாய்க்கட்டைக்குக்கையைக் கொடுத்து உயர்த்தினாள். குழந்தையின் மூக்கைப்பிடித்து கொஞ்சி அள்ளி முத்தம் கொடுத்தாள். "அம்மா நான். பொய் சொல்வேனா... நெருப்பு எல்லாரையும் சுடாதடி தங்கம்..தங்கம் செய்றதே நெருப் பிலதான்... நீ தங்கம் இல்லையா... உன்னைச் சுடாது....."

"அம்மா மார்புக் காம்பிலிருந்து வரும் பால் சுடுகிறது. கண்களில் வழியும் கண்ணீர் சுடுகிறது. வியர்வை, மூச்சு, மூத்திரம்....அத்தனையும்சுடுகிறது. ஏனம்மா நெருப்பு மட்டும் சுடாது...?" குழந்தை கேட்டிருந்த கேள்வி இருட்டின் கற்புத்திரையை கிழிப்பதாக இருந்தது.

தாய் இன்னொரு கணம் குழந்தை யின் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள். குழந்தையை அழைத்துத் தன் மடியில் உட்கார வைத்துக் கொண்டாள். குழந்தை யின் நிர்வாண பிட்டம் சேலை, பாவாடை யைத் தாண்டி தொடைகளைத் தகித்தது. குழந்தை தாயின் பக்கமாகத் திரும்பி முகத்தைப்பார்த்தது. குழந்தையின் பார்வையில் தாயின் முகம் புலப்பட வில்லை. கலங்கிப்போயிருந்த கண்கள் தான் தெரிந்தன.

"இல்ல, சுடும். நீ பொய் சொல்றே. பாரு உன்னோட கண்ணு கலங்கிப் போயிருக்கு..."

தாய் குழந்தையின் முகத்திலிருந்து பார்வையை எடுத்துச் சுவற்றுப்பக்கமாகத் திரும்பிக்கொண்டாள். மாராப்புச்சேலையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண் டாள். முந்தானை முனையில் மூக்கைச் சிந்திக் கொண்டாள்.

"ஏன்ம்மா நீ அழுறே...?" நான்கு வயது டைய குழந்தை திக்கித் திணறி அதைக் கேட்டது.

தாய் மாராப்புச் சேலையால் முகத்தைத் துடைத்துகொண்டாள். கண் பூழை, நாசி, வாயின் இரு புற விளிம்புகளையும் துடைத்தாள். "அம்மா கண்ணில தூசி விழுந்திருச்சா....அதான்,..." அவளது உதடுகள் துணுக்கிற்றன.

"இல்ல....நீ பொய் சொல்ற..."

தாய்க்கு அந்நேரத்திற்கு சிரிப்பு வந்தி ருக்கவில்லை. ஆனாலும் சிரித்தாள். கண்கள் எப்பொழுதும் பொய் சொல்வ தில்லை. அத்தனை நேரம் அழுத கண்களில் அவள் சிரிப்பை வர வைத்தாள். உதடுகளைச் சுழித்து மேலும் கொஞ்சம் விரித்து "அம்மா சிரிக்கிறேன் பார்..." என்பதைப்போல உதடுகளை விரித்தாள். குழந்தை உதடுகளைப் பார்க்க வில்லை. கண்களைத்தான் பார்த்தது.

நான்கு வயதுக் குழந்தைதான் அது. ஆனால் கேட்கின்ற கேள்விகளில் நான்கு தலைமுறை முதிர்ச்சி இருந்தது. அக்குழந்தையை அள்ளுவதா, கொஞ்சு வதா, இல்லை ஒரே அதட்டில் அதட்டி அதன் பிஞ்சு மனதைப் பொசுக்குவதா... தாய்க்குத் தெரிந்திருக்க வில்லை.

தாய், தன் மூத்த மகளை எழுப்பினாள். அவள் எட்டாம் வகுப்பு படிக்கிறவள். தாய் கேட்கும் கேள்விக்கு தொனி அறிந்து பதில் சொல்பவள். "என்னடி, என் கண்ணு சிவந்தாப்போயிருக்கு..."

மூத்தவள் எழுந்திருக்கவில்லை. தாயின் முகத்தைப் பார்க்கவில்லை. ஆனால் சொன்னாள் "இல்லம்மா..."

"பார்த்தீயா உன் அக்காவே சொல்றாள். அம்மா நான் அழலடி தங்கம்..."

குழந்தை சொன்னது "இல்ல நீ அழுதேதா.."

அடுத்து தாய் மகனை எழுப்பினாள். மகன் மூன்றாம் வகுப்பு படிக்கிறவன் "நீ சொல்லடி தங்கம், அம்மாவோட கண்ணு கலங்கியாப் போயிருக்கு...?"

அவன் எப்பொழுதும் அக்காள் கட்சி. அக்காள் என்ன சொல்கிறாளோ அதை அப்படியே சொல்கிறவன். " இல்லம்மா...."

தாய் குழந்தை பக்கமாகத் திரும்பினாள். "இப்ப சொல்லு, என் கண்ணு சிவந்தாப்போயிருக்கு...?"

குழந்தை அக்கா, அண்ணன் இருவரையும் ஒரு கணம் பார்த்துவிட்டு சொன்னது. "ம்மா...சிவந்துதான் இருக்கு..."

அக்காக்காரி குழந்தையைத் தூக்கி நெற்றியில் முத்தம் கொடுத்தாள். " நீ என் தங்கக்குட்டில. அம்மா கண்ணு சிவக்கலடி தங்கம். அம்மாவுக்கு கண்ணு வலியா...அதான்..."

குழந்தை அக்காவின் இடுப்பில் நன்றாக உட்கார்ந்து கொண்டது. தோள் கட்டையை இறுகப்பிடித்து கொண்டது. அதன் நாசியில் நூல் போல சளி ஒழுகிக்கொண்டிருந்தது. அதைத் தன் இரண்டு விரல்களால் அள்ளி தன் பாவாடையில் துடைத்துகொண்டாள். தன் வெளிப்பாவாடையை எடுத்து குழந்தையின் முகத்தைத் துடைத்து அதன் கன்னத்தில் 'பசக்'கென ஒரு முத்தம் கொடுத்தாள்.

அக்காள் எப்பொழுது முத்தம் கொடுத்தாலும் பதிலுக்கு அதே அளவு முத்தத்தை வட்டியும் முதலுமாகச் சேர்த்து கொடுக்கும் பழக்கம் குழந்தைக்கு இருந்தது. அன்றைய தினம் குழந்தை அப்படியாகக் கொடுக்கவில்லை. குழந்தை அக்காவின் கண்களைப் பார்த்தவாறு இடுப்பில் வெறுமென உட்கார்ந்து இருந்தது.

"அக்காவிற்கு முத்தம்...?"

"நான் தரமாட்டே..."

"ஏன்...?"

"நா ஒன்னு கேட்பே. நீ சொன்னா முத்தம் தருவேன்..."

"ம்..கேளு...."

குழந்தை, தாய் இருக்கிற பக்கம் திரும்பிப்பார்த்தது. அவள் நிலைப் படியில் உட்கார்ந்து நிலையில் தலை வைத்து விட்டத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு கேட்டுவிடாதபடி குழந்தை அக்காவின் காதிற்குள் கிசுகிசுத்தது. "அக்கா, நெருப்பு சுடும் தானே....?"

அக்காள் முகத்தைச் சட்டென வேறொரு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள். அவளது கண்களில் நீர்ச்சுனை பொங்கியது. உதடுகள் கத்தரித்த இறகுகள் போல துடித்தன. இமைகள் படக், படக்..கென அடித்துக் கொண்டன.

"சுடும்ந்தே...நான் கண்டுப்பிடிச்சிட்டேன். அம்மாவும், நீயும் பொய் சொல்றீங்க" குழந்தை காணாத ஒன்றைக் கண்டுப்பிடித்து விட்டதைப்போல சிரித்தது.

அக்காள்காரிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரிந்திருக்கவில்லை. அவளுக்கு பேச்சு வருவேனா என்றது. பேச வாயைத் திறந்தால் வார்த்தைக்குப் பதிலாக வேறதுவோ வந்து உதடுகளில் முட்டியது. குழந்தை, அக்காவின் கண்களைப் பார்த்தது. அக்காவின் கண்கள் கலங்க, குழந்தையின் கண்களும் கலங்கியது. அக்கா உடம்பைக்குலுக்கி சிணுங்கினால் போதும். குழந்தை உடைந்து அழுது கொட்டி விடும். அப்படியாக அழுதால் அவ்வளவேதான்! ஒரு வாரகால கற்பிப்பு, திட்டமிடல் அத்தனையும் வீண் என்றாகிவிடும்.

"உன் கண்ணு ஏன் கலங்குது...?"

அக்காக்காரி கண்களை குழந்தையிடம் காட்டினாள். "கண்ணுல தூசி விழுந்திருச்சு. அக்காவுக்கு ஊதிவிடு..."

குழந்தை அக்காவின் கழுத்தைச் சுற்றி இறுகப்பிடித்துக்கொண்டது. கண்களைப் பார்த்து " ப்பூ...ப்பூ..." என்றது. குழந்தையின் வாயிலிருந்து காற்று வருவதற்குப் பதிலாக எச்சில்தான் வந்தது. அச்செய்கை அவளுக்கு சிரிப்பை வரவைத்தது. அவள் சிரித்தாள். அக்காவின் சிரிப்பைப்பார்த்து குழந்தை சிரித்தது. அவர்களைப் பார்த்து தாய் சிரித்தாள். தாயைப்பார்த்து மகன் சிரித்தான்.

நீண்ட நாட்களுக்குப்பிறகு அவர்கள் சிரித்திருந்தார்கள். சிரித்து முடிக்கையில் அக்கா வின் கண்களிலிருந்து ஒரு துளி கண்ணீர் தெறித்தது. அவளது கண்ணீரைப்பார்த்தாள் தாய். மகளின் கண்ணீர் அவளுக்கு கோபத்தை வர வைத்திருந்தது. "என்னடி... குழந்தை மாதிரி நீயும்...?"

தாயின் வார்த்தைகள் சுடும்சொற்களாக இருந்தன. அவளால் ஒரு பதிலும் சொல்ல முடிந்திருக்ககவில்லை. தாயை வெறிக்கப் பார்த்தாள். தம்பியைப் பார்த்தாள். குழந்தையைப் பார்த்தாள். உடைந்து அழுதாள்.

"என்னடி...சொல்லவாறே நீ. நேற்றைக்கு வரைக்கும் சரிண்ணே...இப்ப கொடம் கொடமா வடிக்கிறே..."

மகள் சொன்னாள் "வேண்டாம்ம்மா..."

தாய்க்கு வந்திருந்த கோபத்தில் தான் பெற்ற பிள்ளை என்று கூட பார்க்காமல் கேட்டாள். "அப்ப அவன் படுக்க கூப்பிட்டானே...போறேங்கிறீயா...?"

மகள் பாவம்! தாய் கேட்டகேள்வியில் அவள் உடைந்து நொறுங்கி போயிருந்தாள். அவளால் ஒரு பதிலும் சொல்ல முடிந்திருக்கவில்லை. தாயின் சொற்கள் அவளைப் பொசுக்கி விட்டிருந்தது. அவளது கண்களில் பூத்திருந்த கண்ணீர் சலனத்தில் தீய்ந்து கண்ணீர் வடிந்த தடம் மட்டும் கன்னத்தில் இருந்தது. அவளால் அழ முடிந்திருக்கவில்லை. தன் தலையில் விழுந்திருக்கும் தீர்க்க ரேகையை நினைத்து நொந்து குழைந்து வடிந்துகொண்டிருந்தாள். தான் நிற்கிறேனா...உட்கார்ந்திருக்கிறேனா... நான் எங்கே இருக்கிறேன்... யார் கூட இருக்கிறேன்... என்ன நடந்தது... யாது நடக்கிறது... எதுவும் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

"என்னடி நான் கேட்கிறேன். ஒரு சத்தத்தையும் காணோம்...."

"சரிம்மா..."

"என்ன சரி...?"

"முடிச்சிக்கலாம்...." தாய் ஓடி வந்தாள். மகளை மார்போடு அணைத்தாள். மகளின் காதுகளுக்கு இரு கைகளையும் கொடுத்து முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள். மகளின் முகம் அப்பொழுதுதான் காம்பிலிருந்து அறுந்த பூவைப் போலிருந்தது. உயிர் அறுந்து முகத்தில் மூச்சு மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. நெற்றியில் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள். இறுக அணைத்தாள். அணைக்க அணைக்க அத்தனை தாய்ச் சுணை அவளுக்கு.

மகள் தயாராகிவிட்டாள். மகன், குழந்தை இரண்டு பேர் மட்டும்தான். அவர்களைத் தயார் செய்ய வேண்டும். மகன் குறித்து ஒரு கவலையுமில்லை. தாய் சொல் தட்டாத பிள்ளை. நூலைப் போல சேலை. குழந்தை பற்றிய கவலை தான் அவள் முன் கந்து வட்டியைப்போல நின்றது.

குழந்தையைத் தயார் செய்ய தாயும் மகளும் இறங்கினார்கள். குழந்தைக்கு திரௌபதி அம்மன் தீ மிதி திருவிழாப்பற்றி கதை சொன்னாள். "ம்...ம்..." போட்டுக்கொண்டு வந்த குழந்தை ஓரிடத்தில் சட்டென நிறுத்தி கேட்டது. "சுடாதா...?"

தாய் சொன்னாள், “பார்த்தாய்தானே... சுட்டா நெருப்பில நடக்க முடியுமா...”

குழந்தைக்காக அவள் இராமா யணத்திற்குத் தாவினாள். அவள் கதையில் அனுமன் இலங்கைக்கு பறந் தான். சீதையைப் பார்த்தான். அனுமன் வாலில் தீ வைத்தார்கள்.

குழந்தை கேட்டது “அம்மா, அனு மனுக்கு சுடாதா...?”

“அனுமன் உன்னைப் போல தங்கம். அதுக்கு சுடாது.....”

“தங்கமுனா சுடாது. ம்...?”

“ஆமாம்டி தங்கம் சுடாது...”

குழந்தை சிரித்தது. தங்கத்தை நெருப்பு சுடுவதில்லை; குழந்தை நம்பியது. தாய் மூன்று பிள்ளைகளையும் ஆரத்தழு வினாள். ஒருவரை யொருவர் இறுகக் கட்டிப்பிடித்து கொண்டு தூங்கினார்கள்.

அன்றைய தினம் இரவு, அவளது கனவில் கணவன் வந்தான். அவன் வட்டிக்கு பணம் வாங்கி வட்டி கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொண் டவன். வட்டிக்கு பணம் வாங்கு கையில் நடந்தேறிய உரையாடல்கள் அவளது மண்டைக்குள் நூலாம் படையாக பின்னின.

“வட்டி நூத்துக்கு ஏழு ரூவா. பரவா யில்லையா..?”

“கொடுங்க சாமி... அவசரம். மனைவிக்கு ஆபரேசன்...”

“எவ்ளோ வேணும்....?”

“பத்தாயிரம் ரூபா...”

“ஒன்னாம் தேதி வட்டி வந்தா கணும்....”

“தந்திடுறேன்...”

“வரலைன்னா வட்டி அசல்ல சேர்ந் திரும்......”

“அப்படியெல்லாம் நடந்திடாதுங்க... தந்திடுவேன்....”

“வட்டி அசல்ல சேர்ந்திட்டா ஏழு வட்டி எட்டு வட்டியாயிடும்...”

கணவன் திடுக்கிட்டான்.“என்ன சொல் றீங்க...?”

“உனக்கு அதப்பத்தி என்னக் கவல. நீதான் ஒன்னாம் தேதி வட்டியக் கொடுத்திடுவீயே...”

“ஆமாமாம்...கொடுத்திடுவேன்...”

“மறுமாசம் வட்டி ரெண்டுக்கும் சேர்த்து கொடுத்திடணும்...”

“சரிங்க...”

“கொடுக்கலன்னா வட்டி அசல்ல சேர்ந்திரும்....”

“அதுக்குள்ள கொடுத்திடுவேன்க....”

“அதையும் ஒன்னாந்தேதி கொடுக் கலைன்னா, எட்டு வட்டி ஒன்பதாயிடும்...”

அவனுக்கு கண் கட்டியது. என்ன செய்ய! பணத்தைப் பார்க்க முடியுமா...?. வட்டியை விடவும் மனைவி முக்கியம் இல்லையா...!

“கையெழுத்தப் போடு....”

“பத்தாயிரம் தானே வாங்குறேன்... அம்பதினாயிரம் ரூபானு எழுதுறீங்க....”

“நாளைக்கு பின்னே நீ பிரச்சனைக்கு போக மாட்டேனு என்ன இருக்கு...?”

“அதெல்லாம் மாட்டேங்க...”

“பிறகு இதப்பத்தி என்ன கவல வேண்டிக்கிடக்கு...பணத்த வாங்கிக் கிட்டு போயி பொஞ்சாதிக்கு ஆக வேண்டி யதைப் பாரு.....”

அவனது கைகள் நடுங்கின.

“என்ன நடுக்கம்...?”

“ஒன்னுமில்ல. எப்பவும் அப்படித் தான்...”

கடன் வாங்கி ஆறு மாதங்கள் கடந்து விட்டிருந்தன. மனைவி குணமடைந்தால் வட்டியையும் முதலையும் உடனே அடைக் கலாம்... மாத்திரை செலவுக்கே கடன் மேல கடன் வாங்க வேண்டியிருக்க எப்படியாம் வட்டியை அடைப்பது...!

கொடுத்தக் கடனை வசூலிக்க முதலில் ஒருத்தன் வந்தான். வீட்டிலிருந்த தட்டுமுட்டு சாமான்களை விற்றுக் கொடுத்த பணத்தை அவன் வட்டி யென்று வரவு வைத்து கொண்டான். இன்னொ ருத்தன் வந்தான். அவன் வட்டிக்கு வட்டி

யென வசூலித்துகொண்டான். இன்னொரு நாள் அவன் பெயரைச் சொல்லிக்கொண்டு இன்னொருத்தன் வந்தான். வட்டிக்கு - வட்டிக்கு - வட்டிக்கு - வட்டி பணமே அடையல. என்ன சொல்றீங்க...என மகளின் முகத்தைப் பார்த்தவாறு கேட்டு நின்றான்.

மறுவாரம் வக்கீல் நோட்டீஸ் வந்தது. ஐம்பதாயிரம் கடன். கூடவே வட்டி. ஒரு பக்கம் வக்கீல், இன்னொரு குண்டர்கள், மிரட்டல் பேர்வழிகள், அர்த்தராத்திரியில் மகள், மனைவிகுறித்து விசாரிக்கும் முகவரியற்றவர்கள்,...என ஒவ்வொருத்தராக வந்தார்கள்.

ஒரு நாள் இரவு கணவர், முருங்கை மரத்தில் தொங்கி பிணமாகிப்போனான். கடன் கொடுத்தவர்களும் துக்கத்திற்கு வரவே செய்தார்கள். நீயாவது கடனை அடை என்பதை மிரட்டல் தொனியில் சொல்லிச் சென்றார்கள்.

இத்தனை நாள் கனவில் வராத கணவன் அன்றைய தினம் வந்திருந்தான். வந்தவன் என்கூட வந்துவிடுமாறு அழைப்பு விடுத்தான். திடுக்கென விழித்தாள் தாய். அவளுக்கு உடலும் கண்களும் வியர்த்திருந்தன. அவளால் அதற்குமேல் கண்களை மூடி இருக்க முடியவில்லை. கண்களை மூடினாள். ஒரு மாதகாலமாக ஒருவர் மாறி ஒருவரென வீட்டிற்கு வரும் கடன்காரர்களின் முகங்களே தெரிந்தன.

ஒருநாள் அவள், பிள்ளைகளை அழைத்து கொண்டு காவல் நிலையத்திற்கு சென்றாள். இன்னொரு நாள் தாலுகா ஆபிஸ். ஒரு வாரமாக கலெக்டர் ஆபீஸ்க்கும் வீட்டிற்குமாக அலைந்தாள்.

இன்னொரு நாள், இன்னும் ஒரு நாள்.... ஒரு நாளேனும் அவள் கலெக்டரைப் பார்க்க முடிந்திருக்கவில்லை. அவள் கொடுத்த மனு உரிய இடத்திற்குச் சென்று சேர்ந்திருக்கவில்லை.

“என்னம்மா இது....”

“கடன்காரன்க மிரட்டுறாங்க...”

“வாங்கத் தெரியுதுல...கொடுக்கவும் தெரியணும்ல...”

“இத கலெக்டரு சொல்லட்டும்...”

”சரி.சரி.போ..என்னனு விசாரிக்க போலீஸ்க்காரங்க வருவாங்க...”

“வந்தாங்க...”

“வந்தாங்கல... அவங்க சொல்ற மாதிரி நடந்துக்கோ....”

மறுவாரம், மறு மாதம்... மறுநாள், ஜமாபந்தி.....

“உனக்கு என்ன வேறு வேலையே இல்லையா..! வெளியே போம்மா....” வார்த்தை அவள் மீது இருந்தாலும் கண்கள் அவளது மகள் மீதே இருந்தன.

அதன்பிறகு கடன் வசூலிக்க வருபவர்கள் இளைஞர்களாகவே இருந்தார்கள். மகளை வழியில் மறித்து கடனைக் கேட்பதாக இருந்தார்கள். அதை நினைக்கையில் தூக்கத்தின் ஆணிவேர் அறுந்துவிட்டிருந்தது. எழுந்து உட்கார்ந்து கொண்டவள் சுவற்றில் சாய்ந்து கண்களை இறுக மூடி அவள் முன்னே பூதாகரமாக வளர்ந்து எழுந்து நிற்கும் கடன் மலைகளைப் பார்த்து திகைத்து நின்றாள்.

மறுநாளுக்கான பொழுது விடிந்திருந்தது. அவள் பிள்ளைகளை சடுதியில் கிளப்பினாள். மடியில் கடைசி கடைசியாக கலெக்டரிடம் கொடுக்க இருக்கும் மனு. தோளில் நான்கு வயது குழந்தை. ஒரு கையில் மகன். மற்றொரு கையில் மகள். மகளின் கையில் சீமெண்ணை (மண்ணெண்ணெய்) கேன். அவர்கள் கலெக்டர் ஆபிஸ் நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

50



# பூப்படையாத அநாதைகள்



**அஸாத் எம். ஹனிபா**

விடியும் காலைப் பொழுதுகளில் அந்த அரச மருத்துவமனையினுள் நுழையும் போதெல்லாம் பொதுச்சந்தையொன்றி னையே தினமும் எனக்கு ஞாபகமூட்டும். குறிப்பாக வெளிநோயாளர் பிரிவில் காணப் படும் சனநெரிசலும் மூக்கைப் பொத்திக் கொள்ளும் நெடியும் சந்தையை விடவும் மோசமான நிலைக்கு நோயாளிகளைக் கொண்டு போய்விடும்.

இருப்பினும் அன்று எனது உள்ளக நோயாளர் விடுதியில் நிசப்தம் நிலவியது. எனது மேசையில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் கோவையைக் கண்டதும் எனக்குள் பெரும் தீப்பிழம்பு எரிந்துகொண்டிருந்தது. இப்போ தெல்லாம் எப்படியும் ஒரு கிழமைக்கு மூன்று நான்கு பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட விடயத்தைப் பற்றிய அறிக்கை அனுப்புவது சாதாரண விடயமாகப் போய் விட்டது.

பெண் பொலிஸ் அதிகாரிகள் அழைத்து வந்துள்ள சிறுமியை பற்றிய சட்டமருத்துவ அறிக்கை தயார்படுத்தி அனுப்புவதே




கிழக்கிலங்கை கல்முனை மாநகரில் பிறந்தவர். தற்போது தெகிவளை களுபோவிலையில் வசித்துவருகிறார். எம்.பி.பி.எஸ் மருத்துவர். பட்டப் பின் படிப்பு விஞ்ஞான முதுமாணியும்கூட. சுகாதார அமைச்சின்கீழ் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்து வருகின்றார். கவிதை மூலம் அறியப்பட்ட ஒரு படைப்பாளி. வீரியமான கவிதைகளுடன் சிறுகதைகள் மற்றும் ஆய்வு கட்டுரை இலக்கியம் என்பவற்றையும் எழுதி வருகிறார். அத்துடன் சிறந்த சமூக ஆய்வாளருமாவார். இவரது இலக்கியப் பணிக்காக உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய பொன்விழா மாநாட்டில் கௌரவிக்கப்பட்டார். இவரது கவிதை நூல்கள் ஆத்மாவின் புண் (2012), பிரேத பரிசோதனைகள் (2016) என்பனவாகும்.


**அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2017இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை**

**2**

**(ஞானம் 216, மே 2018)**

**சன்மார்க்க நிழலில் நடாத்தப்படும் அந்த அநாதை இல்லத்தில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுக்கு எதிராக முதன் முதல் குரல் எழுப்பிய பெண்குழந்தையின் வயது பன்னிரண்டு மட்டுமே. ஆச்சரியமாக இருந்தாலும் அதுதான் உண்மை. அவளோ இன்னும் பூப்படைந்து வயதுக்கு வரவில்லை. ஆனால் இச்சை தீர்க்கும் காமுகன் அந்த சிறுமியைக்கூட விட்டுவைக்கவில்லை. அவள் தான் இந்தமூடி மறைக்கப்பட்ட துஷ்பிரயோகத்தை முதன்முதலில் வெளிக் கொணரக் காரணமாயிருந்தாள். அவள் பெயர்தான் ஆயிஷா.**

அன்றைய முதல்வேலையாக இருந்தது. பல கேள்விகளுடன் விழுங்குவதுபோல பார்த்த வண்ணமிருந்தனர். அந்தச் சிறுமியை தாதியுடன் அழைத்துச் சென்று எனது பிரத்தியேக அறையில் வைத்து விசாரிக்கத்தொடங்கினேன்.

அவளைப் பார்த்தவுடன் ஒரு முஸ்லிம் என்பதற்கான ஆதாரங்கள் அவள் உடையில் தெரிந்தது. தாதி என்னிடம் தந்த படிவத்தில் அவளின் பெயர் எழுதப்பட்டிருந்தது. அதை அவளிடம் கேட்டு மீண்டும் உறுதிசெய்து கொண்டேன்.

அவள், அநாதை இல்லமொன்றிலிருந்து தான் அழைத்துவரப்பட்டிருந்தாள். அந்த இல்லத்தின் பெயரைக் கேட்டதுமே இது ஒரு சதி வேலையாக இருக்குமோ என்றுகூட ஒருகணம் எண்ணத்தோன்றியது. ஏனெனில் அது நான் நன்கு அறிந்திருந்த முஸ்லிம் பெண் வைத்திய நிபுணர் என்ற அந்தஸ்தைக் கொண்ட, சமூகத்தில் பெரும் செல்வாக்குமிக்க ஒருவரால் நடாத்தப்படும் அநாதை இல்லம்.

இஸ்லாமியப் பெண்ணுலகை பாது காக்க மற்றவர்களுக்கு அறைகூவல் விடுத்த அந்த பெண் மருத்துவரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதை என்னால் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை.

அந்தப் பெண் டாக்டர் அரச சேவையை இராஜினாமா செய்துவிட்டு தலை நகரில் தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து கொண்டே, சமூகச் சீரழிவுக்கு எதிராக மார்க்கப் பிரசாரம் தீயாய்ச் செய்து வருபவர். அந்தப் பிரபல சன்மார்க்க உபன்னியாசியின் பராமரிப்பின்கீழ்தான் அநாதைச் சிறுமிகள் காப்பகம் இயங்கி வருகின்றது.

அந்தச் சிறுமியின் வாக்குமூலம் என்னை நிலைகுலையவைத்தது. அவளது ஒவ்வொரு வார்த்தையும் நான் நினைத் திருந்தவற்றுக்கு மாறாக தலைகீழாக இருந்தது. நெஞ்சு திடுக்கிட்டுத் தெறித்தது. கோபம் கனலாய்ப் பறந்தது. அநீதிக்கு எதிராக போராடாத ஒரு கோழையின் பயமும், ஏழைப்பெண்களின் இயலாமையும் என்னைக் கொன்று விடுமாற் போலிருந்தது.

பாகிஸ்தானின் மலாலாவை, இந்தியாவின் ஹாதியாவை நமது மண்ணின் வித்யாவைப் பற்றிப் பேசிய போலிப் பெண்ணியவாதியா அந்த டாக்டர்? என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. அவர் சுயநலம் கருதியே பெண்பிள்ளைகளுக்கென்று ஒரு அநாதை விடுதியை நடாத்தி வருகிறார். அநாதைகளின் பெயரைச் சொல்லிச்சொல்லி காசு கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. அநாதைகளை வைத்து கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கவும் வெறும் புகழ்ச்சிக்காக அநாதைகளைப் பயன்படுத்துவதும் எப்படி சமூக சேவையாகும்?

அதில் பொறுப்பாளராக இருந்த பெண்ணின் கணவரால் அங்கே இருந்த பதினெட்டு சிறுமிகளுக்கு செய்ததாகக் கூறப்படும் பாலியல் துன்புறுத்தல்கள் பல மாதங்களாக இங்கே புகைச்சலை ஏற்படுத்திக் கொண்டு இருந்தன. இது விடயமாக அந்த மருத்துவரிடம் கேட்டபோது, 'தனது கட்டடங் களைக் கைப்பற்றுவதற்கு தன்னிடம் நீண்ட நாளாய் கைகட்டி சேவகம் செய்த ஒரு சாராரின் சதி' என்றும், 'இப்பிரச்சினைகளை பேசுபொருளாக்கி இருப்பவர்கள் தன்னுடைய மார்க்கப் பிரசாரத்திற்கு எதிரானவர்கள். அத்துடன் இது, தன்னுடைய பொருளாதார வளர்ச்சிமீது காழ்ப்புணர்ச்சி கொண்ட வர்களின் கட்டுக்கதை' என்றும் சொல்லி விட்டார்.

சன்மார்க்க நிழலில் நடாத்தப்படும் அந்த அநாதை இல்லத்தில் இடம் பெற்ற பாலியல் வல்லுறவுக்கு எதிராக முதன் முதல் குரல் எழுப்பிய பெண்குழந்தையின் வயது பன்னிரண்டு மட்டுமே. ஆச்சரியமாக இருந்தாலும் அதுதான் உண்மை. அவளோ இன்னும் பூப்படைந்து வயதுக்கு வரவில்லை. ஆனால் இச்சை தீர்க்கும் காமுகன் அந்த சிறுமியைக்கூட விட்டுவைக்கவில்லை. அவள் தான் இந்தமூடி மறைக்கப்பட்ட துஷ்பிர யோகத்தை முதன்முதலில் வெளிக்கொணரக் காரணமாயிருந்தாள். அவள் பெயர்தான் ஆயிஷா.

ஆயிஷாதான் இன்று எனக்கு முன்னால் சட்டமருத்துவ அறிக்கைக்காக அமர்ந்துள்ள சிறுமி. தினமும் அந்தச் சிறுவர் இல்லத்தில் பாலியல் வல்லு றவுக்கு ஆளான தனது சக தோழிகளின் அவல நிலையைக் கண்டு செய்வத றியாது துடிதுடித்த அவள், அந்த அநாதை இல்லப் பாடசாலை அதிபரிடம் சென்று அந்தச் செய்தியை முறையிட்டாள். அதிர்ந்துபோன அதிபர், அந்த இரகசிய விடயத்தை உடனடியாக அநாதை இல்லத்தின் ஏகபோக உரிமையாளரான பெண் வைத்திய நிபுணரிடம் சொன்னார். பின்னர் டாக்டரும் அதிபரும் அங்கு வந்தார்கள். குழந்தைகளைத் தனித் தனியாக விசாரித்தார்கள். அனைத்துக் குழந்தைகளும் தத்தமது கசப்பான துயர அனுபவங்களை அழுதழுது சொன் னார்கள். அந்த சிறுமிகளைக் கட்டிய ணைத்து முத்த மிடுதல் மற்றும் தூக்கத்தில் அவர்களின் மர்மஸ்தானங்களைத் தொடுதல் என்பவற்றுக்கு அப்பால் பல வேண்டத்தகாத வெட்கப்பட வேண்டிய விடயங்கள் அங்கு நடந்ததாக அந்த சிறுமிகள் அனைவரும் கூறினர்.

'இதற்கு இப்போதே ஒரு முடிவு கட்டுகிறேன்!' என்று கூறிச்சென்ற டாக்டர் சில நாட்களில் அதனை முற்றாக மறந்துபோனார். இல்லை, மறந்து விட்டதாய் நடித்தார். அதுமட்டு மல்ல அவர் அந்த விடயத்தை மறைத்து விடுவதற்காக தனது செல்வாக்கையும் சமூக அந்தஸ்தையும் பல்வேறு வழி களில் பயன்படுத்தத் தொடங்கினார்.

உறுதிமொழி வழங்கிய பெண் மருத்துவர் ஒன்றுமே செய்யவில்லை. எப்போதும் பெண்ணியம், முஸ்லிம் பெண்களின் ஒழுக்க விழுமியங்கள் பற்றி ஊடகங்களில் எழுதியும் பேசியும் வருபவர் அந்தப்பெண் டாக்டர். அதனால் தான் அவர் முஸ்லிம் அநாதைச் சிறுமிக ளுக்காக ஒரு இல்லத்தை அமைத்தார். ஆனால் ஆரம்பத்திலிருந்தே பல்வேறு காரணங்களால் சிலந்தி வலைகள் போல் சர்ச்சைகள் அந்த அநாதை இல்லத்தைச் சுற்றிவளைத்து இருந்தன.

ஒரு பெண்ணின் அவலத்தை மற்றொரு பெண் நிச்சயம் நீக்க முன்வருவார் என்று உறுதியாக நம்பியிருந்த ஆயிஷா ஏமாற்றமடைந்து ஆயுள்கைதிபோல காத்திருந்தாள். சில மாதங்கள் உருண்டோ டியபின் மற்றுமொரு சந்தர்ப்பத்திற்காக

காத்திருந்த வேளை, பள்ளிவாசல்களின் ஒன்றியத்தின் பிரமுகர் ஒருவரின் மகள் அந்த அநாதை இல்லத்திற்கு நன் கொடைகள் வழங்குவதற்காக விஜயம் செய்தார்.

அவளை அணுகிய ஆயிஷா தாம் தினந்தோறும் எதிர்நோக்கும் பயங் கரத்தை விபரித்தாள். அந்தக் கொடூரச் செய்தியை கேட்டதும் அந்த இளம் பெண், கசிந்த விழிநீரை தனது விரல் களால் துடைத்துக்கொண்டாள். ஒரு கட்டுக் கோப்பாக மார்க்கவழியில் நடாத்தப் படும் அநாதை இல்லம் என வெளியில் காட்டப் பட்டு நன்கொடைகள் பெற்றுக் கொண்டு எப்படி இங்கு பாலியல் துஷ்பிர யோகத்தை அனுமதிக்கமுடியும். அவ ளுக்கு நினைக்கவே தூக்கிவாரிப் போட்டது. அவள் ஆயிஷாவிடம் என்ன செய்யலாம் என்று கேட்டிருக்கிறார். ஆயிஷா உடனே,

"ராத்தா... உங்களது போனில் நாம் நமது துன்பங்களை சொல்கிறோம். நீங்கள் அதனை ஒலிப்பதிவு செய்து உங்களது வாப்பாவிடம் கொடுங்கள். அவர் நமக்கு உதவுவார். இல்லையா?" என்று கேட்டி ருக்கிறாள். அந்த இளம்பெண், இரகசி



**டாக்டரும் அவரது உயர்குடி சட்டத்தரணிகளும், சமய இயக்க அங்கத்தவர்களும் சூட்சுமமாக பணத்தின் மூலம் அணைக்கமுயன்றார்கள். அந்த முயற்சியில் வெற்றியும் கண்டார்கள். ஆம், குற்றமிழைத்தவர்கள் ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்கள். எந்த விடுதியில் அந்த அநாதைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டார்களோ அந்த விடுதிக்கே அந்த அப்பாவிச் சிறுமிகள் மீண்டும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆனால் போராட்டத்தை துவக்கி வைத்த ஆயிஷாவை விஷேடமாக கவனிக்கின்றோம் என்ற போர்வையில் தனிமையான அறையில் வைத்து, அவளது மனநிலை குழம்பி இருப்பதாக சொல்லி அந்த பெண்மருத்துவர் ஆயிஷாவுக்கு விதவிதமான மாத்திரைகளையும் கொடுத்து வந்துள்ளார். அத்துடன் அவர், ஆயிஷா மனநிலை பாதிக்கப்பட்டவள் என்று பொலிஸ் நிலையத்தில் பொய்யான முறைப்பாடும் செய்திருந்தார். அந்த முறைப்பாட்டின் பின்னர், ஆயிஷாவை பொலிசார் சட்டமருத்துவ மற்றும் உளநல பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதித்திருந்தனர்.**

யமாக குழந்தைகளின் குரலிலேயே அவர்கள் அனுபவித்த வன்கொடுமைகள் அனைத்தையும் ஒலிப்பதிவு செய்தாள். அதன்பின், ஆயிஷாவும் அவளது தோழிகளும் நம்பிக்கையுடன் காத்திருந் தார்கள்.

அந்தப் பெண்ணும் அவளது ஒலிப் பதிவை பள்ளிவாசல்கள் சம்மேள னத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தனது தந்தையிடம் கொடுத் திருக்கிறார். அந்த ஒலிப்பதிவு இரகசி யமாக பளிவாசல்கள் சம்மேளன அங்கத்தவர்கள் மத்தியில் உலா வந்திருக்கிறது. சிலர் எதாவது செய்ய வேண்டும் என்று துடித்தார்கள். இது அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் அடிமட்டத்தில் எழுந்த ஏழைச் சிறுமி களின் அபயக்குரல் அல்லவா? என்று ஆவேசப்பட்டனர். இந்த விடயத்தை அறிந்து கொண்ட அந்த அநாதை இல்லத்தின் உரிமையாளரான பெண் மருத்துவர், தனது செல்வாக்கைப் பயன் படுத்தி மேட்டுக்குடி பிரமுகர்களின் உதவி யுடன் அதனை அப்படியே மூடிவைத்து அமைதிகாத்தார். ஆம், அவர்கள் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த சமூகத் தையும் ஏமாற்றிவிட்டனர்.

பாவம் ஆயிஷாவும் அவளது தோழி களும். பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஏதாவது செய்யும் என்று காத்திருந்து காத்திருந்து மீண்டும் ஏமாந்து போனார் கள். ஆயிஷா தனது முயற்சியைக் கைவிடவில்லை. இறைவனை நம்பி தினமும் பிரார்த்தனை செய்தாள்.

அவள் எதிர்பார்த்திருந்தபடி, ஒரு விடுமுறை தினத்தன்று அங்கு அன்ப ளிப்பு பொருட்கள் பகிர்ந்தளிக்கவந்த இன்னொரு பெண்ணின் உதவியுடன் ஆயிஷா, தமக்கெதிராக நடைபெறும் பாலியல் துஷ்பிரயோகத்தை பொலி சாரின் கவனத்துக்கு துணிச்சலுடன் கொண்டுசென்றாள்.

அந்த இறுதி முயற்சி இலேசாக எரியத் துவங்கியது. பொலிஸாரும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் சேர்ந்து அதிரடியாக களத்தில் இறங்கிக் குற்றச்சாட்டுக்கான தகுந்த ஆதாரங் களைச் சேகரிக்கத் துவங்கினர்.

அதனை அந்த டாக்டரும் அவரது உயர்குடி சட்டத்தரணிகளும், சமய இயக்க அங்கத்தவர்களும் சூட்சுமமாக பணத்தின் மூலம் அணைக்கமுயன்றார்கள். அந்த முயற்சியில் வெற்றியும் கண்டார்கள். ஆம், குற்றமிழைத்தவர்கள் ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்கள். எந்த விடுதியில் அந்த அநாதைகள் துஷ்பிர யோகம் செய்யப் பட்டார்களோ அந்த விடுதிக்கே அந்த அப்பாவிச் சிறுமிகள் மீண்டும் அனுப்பப்பட்டி ருக்கிறார்கள்.

ஆனால் போராட்டத்தை துவக்கி வைத்த ஆயிஷாவை விஷேடமாக கவனிக் கின்றோம் என்ற போர்வையில் தனிமை யான அறையில் வைத்து, அவளது மனநிலை குழம்பி இருப்பதாக சொல்லி அந்த பெண்மருத்துவர் ஆயிஷா வுக்கு விதவிதமான மாத்திரைகளையும் கொடுத்து வந்துள்ளார். அத்துடன் அவர், ஆயிஷா மனநிலை பாதிக்கப்பட்டவள் என்று பொலிஸ் நிலையத்தில் பொய்யான முறைப்பாடும் செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டின் பின்னர், ஆயிஷாவை பொலிசார் சட்ட மருத்துவ மற்றும் உளநல பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதித்திருந்தனர். ஆயிஷா போன்ற ஆயிரக் கணக்கான சிறுவர்களைக் காப்பாற்றவேண்டும் என்று பெருமூச்சு விட்டவனாக, பாலின பாகுபாடுகள், மதங்கள், கொள்கைகள், உயர்மட்ட அழுத்தங்கள் எல்லாம் தாண்டி அவளது படிவத்தை எடுத்து நீதி நேர்மை வேண்டி நிரப்பத்தொடங்கினேன். அது, இனியாவது என் சமூகம் அடைகாக்கும் மௌனத்தைப் பேசும்.

மின் கட்டணம் செலுத்தவென்று புறப்பட்டு வந்து வரிசையில் போய் நின்றபோது, அந்தக் கேன்டீன் கண்ணில்பட்டது. அது மின் வாரிய ஊழியர்களுக்கான கேன்டீன்.

ஒரு காலத்தில் அப்பா அங்கேதான் வேலை பார்த்தார். ஊரிலிருந்து குடும்பத்தை இடம்பெயர்த்து, அண்ணா கூட்டிக் கொண்டு வந்தபோது அப்பா வேலைக்குச் சேர்ந்த இடம் அதுதான்.

'இனிமேல் வேலைக்குப் போக வேண்டாம்' என்று அண்ணா எவ்வளவோ சொல்லியும் அப்பா கேட்கவில்லை.

"அதெப்படிடா? ஓடியாடி உழைச்ச உடம்பு... வீட்டுலேயே உட்காருமா? சே! மனுஷன் சும்மா இருக்கிற மாதிரி கொடுமை வேறே எதுவும் இல்லை. இந்த உலகத்துலே.....! வெறுமே மூச்சு விடுறதுக்கா மனுஷன இருக்கான்.... உழைக்கணும்.... கடைசி வரைக்கும் உழைக்கணும்... அதுதான் பெருமை...."

அண்ணாவால் அப்பாவைத் தடுக்க முடியாது. இருந்தாலும் பலிக்கிறதா பார்ப்போம் என்றுதான் சொன்னான். அப்பா கேட்டால்தானே?

இப்பொழுது கூட, தினசரி காலை ஐந்து மணிக்கு எழுந்து, தயாராகி, எண்பது கிலோமீட்டர் தள்ளி இருக்கும் அந்த வெளியூருக்கு வேலைக்குச் செல்கையில், இவளுக்கு அப்பா ஞாபகமே வரும். இவற்றால் உடல் சோர்வு, தாங்க முடியாத சோகம் ஏற்படுகையில் அலுவலகத்திற்கு லீவு போட்டு விடுவோமா என்று தோன்றும்.

'ரயிலில் வசதியாய் உட்கார்ந்து கொண்டு புத்தகம் படித்துக் கொண்டே போய்ச் சேர்ந்து, பின்பு ஃபேனுக்கடியில் அமர்ந்து வேலை செய்யப் போகிறாய்... அதோடு போகும் வழியில் நீட்டி நிமிர்ந்து சில சமயங்களில்

(ஞானம் 217, ஜுன் 2018)



# நினைவுத்தடங்கள்

அமரர் 'செம்பியன் செல்வன்'
ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச்
சிறுகதைப் போட்டி 2017இல்
மூன்றாம் பரிசு பெற்ற கதை 3


**சவுந்தரராஸா லிசாந்தினி**



கிழக்கு இலங்கையைச் சேர்ந்த சவுந்தரராஸா லிசாந்தினி 24-08-1997 இல் பிறந்தவர். சிறுகதை, கட்டுரை, கவிதை, நாட்டார்பாடல் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டு இயங்கிவரும் இவர், க.பொ.த. உயர்தரக் கல்வி பயின்றவர். தேசிய இலக்கிய விழா-2017 இல் பரிசுச்சான்றிதழும் கேடயமும் பெற்ற இவரது 'சாதி' என்ற கதை இரண்டாம் இடத்தைப் பெற்றது. இவர் எழுதிய 'படிப்பும் பண்பும்' என்ற சிறுவர் கதையும் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

இவரது தொடர்பு முகவரி :
262, வை. எம். சி. ஏ. ஒழுங்கை,
முதலியார் வீதி,
அக்கரைப்பற்று -19.
மின்னஞ்சல்: haswi040@gmail.com

குட்டித் தூக்கம். காற்றாட ஜிலுஜிலு என பயணம்.... இதற்கெல்லாம் நீ அலுத்துக் கொள்ளலாமா? நியாயமாகுமா? உன் உடல் நோவெல்லாம் ஒரு நோவா?

'உன் அப்பா இம்மாதிரியெல்லாம் நினைத்து அலுத்துக் கொண்டிருந்தால், வேலைக்குச் செல்லாது முடங்கியிருந் தால், தன் உடல் சோர்வையும், சங்கடத் தையும் பொருட்படுத்தியிருந்தால் இன்று நீயும் உன் அண்ணன்மார்களும் இப்படி சொகுசாக இருக்க முடியுமா? நல்ல நிலையில் வாழ முடியுமா? இந்த எண்ணங்களெல்லாம் சட்டுச் சட்டென்று மின்னலடித்தாற் போல் மனதில் தோன்றி - இவளைத் துள்ளியெழச் செய்யும்... சே! சோம்பியிருத்தல் தகுமா?

அப்பா ஒரு நாளாவது லீவு போட்டி ருப்பாரா? ஓய்வெடுப்போம் என்று எப்போதேனும் முடங்கியிருப்பாரா? எப்படி அந்த மனிதனால் அது முடிந்தது? ஹோட்டலில், வாரத்தில், ஒருநாள் லீவில் கூட ஏதேனும் வெளிவேலை என்று போய் ஐந்நூறு, அறுநூறு சம்பாதித்து வந்துவிடுவாரே!

கணம், கணமாக இருக்கும் விறகுகள் படலாய் எரிந்து கொண்டிருக்கும் மூன்று, நான்கு அடுப்பிற்கு முன்னால் வெப்பப் தகிப்பாய், கால் கடுக்க நின்றல்லவா உழைக்கவேண்டும்!

மீண்டும் மீண்டும் அவற்றை நினைத்துப் பார்க்கையில், இவள் கண்கள் வற்றாக் குளமாகிறது!

"மேடம், நகருங்க...." பின்னால் நின்றவர் சொன்னபோது தெரிந்தது தனக்கு முன்னால், இருந்த இடைவெளி. நகர்ந்தாள் இவள்.

அப்பா எப்போதுமே மனதில் இருக் கிறார். அவரை நினைக்கும் போதெல் லாம் அழுகை வந்துவிடுகிறது. அவரது ஓயாத ஒழியாத உழைப்பை நினைத்தால் சலித்துக் கொள்ளவே கூடாது. அது அவருக்குச் செய்யும் துரோகம். அவரின் கடமையுணர்வுக்கும் உழைப்புக்கும் செய்யும் அவமரியாதை. மனதைத் தேற்றிக் கொள்வாள் இவள்.

அம்மா செல்லுவாங்க...

"பதினைந்து வயசுலே வேலைக்கு போனவர் உங்க அப்பா.... அப்போயிருந்து இந்த உழைப்புதான். அவருக்கும் வயசு எழுபதாகப் போறது... இன்னும் உட்கா ராமே உழைக்கிறார் மனுஷன்! கோயில் தெருவுலே மூர்த்தி இருந்தாரே. தெரியுமா? அவர் மாதிரி உங்க மூணு பேரையும் கல்யாண வேலை, சமையல் வேலைன்னு அனுப்பியிருந்தார்னு வச்சிக்கோ... என்றைக்கோ நம்ப குடும் பமும் வறுமையில்லாமே, தரித்திரம் இல்லாமே, சந்தோஷமா நிம்மதியா இருந்திருக்கும்... ஆனா செய்தாரோ பார்த்தியா? அதுதான் உங்க அப்பாவோட மன உறுதி. இந்த ஹோட்டல் உத்தி யோகம் என்னோட போகணும், என் பிள்ளைகளெல்லாம் அரசாங்க உத்தியோ கத்துக்குப் போகணும்... மதிப்பா இருக் கணும்... சதா எங்கிட்டே உங்கப்பா இதைத்தான் சொல்லுவார். உழைப்பு தான் அவருக்கு தெய்வம். அந்த உறுதியை யாராலேயும் அவர் கிட்டே யிருந்து குலைச்சிட முடியாது...."

அம்மா சொன்னது அத்தனையும் சத்தியமான வார்த்தைகள்தான். இவை கல்வெட்டில் பொறிக்கப்பட வேண்டி யவை.!

எங்கள் மூவரையும் படிக்க வைப்பதில் அத்தனை உறுதியாகத்தானே இருந்தார் அப்பா....!

மூக்குப் பொடி வாங்கக் கிடைக்கும் சின்னக்காசைக் கூட அம்மாவிடம் கொண்டு வந்து கொடுத்து விடுவார், காரணம் பெரியவன் ஏதோ கொப்பி வாங்கணும் னான்... என சொல்லுவார்.

தன்னுடைய பொடி தேவையை குறைத்துக் கொண்டாலும் அதனுடைய பழக்கம் அவரை விடவில்லை. "வேண்டாத

பழக்கம் எப்படியோ பழகிடுச்சு, இத விட்டுத்தொலைக்க முடியல.... அதப் போட்டாத்தான் படிப்பே ஓடறது....''

என்றவாறே ஒரு இழுப்பு இழுத்து விட்டு கையில் ஒரு புத்தகத்தை எடுத்தா ரானால் பக்கங்கள் சரசரவென்று ஓடும் அப்பாவுக்கு

படிப்பில் சூரப்புலி. அந்தக் காலத்து எட்டாங்கிளாஸ் அப்பா. ஆங்கில தினசரியை சரளமாய் படிக்க கூடியவர். உச்சரிப்பு அத்தனை தெளிவாய் இருக்கும்.

''ஒழுங்கா படிக்க வச்சிருந்தா பெரிய உத்தியோகத்தர் ஆயிருப்பான்... தலை விதி இப்படி போயிட்டு. படிக் காட்டி இப்படித்தான் கரண்டி பிடிக்க ணும்னு பாட்டி சொல்லிப் பலமுறை கேட்டிருக்கிறாள் இவள். இது குத்துக் கதையா இல்ல புத்திமதியா என இன்னும் இவளுக்கு விளங்கவில்லை!

காலையில் எழுவது முதல் இரவு படுக் கைக்கு செல்லும் வரை ஒவ்வொரு செயலிலும் அப்பாவின் அடையாளங்கள் படிந்துதான் போயிருக்கின்றன.

இன்று காலையில் கூட குளித்துவிட்டு வந்து தலை சீவும் போது நிர்மலா சொன்னாள். ''கண்ணாடி முன்னாடி எவ்வளவு நேரம் நிற்கணும்... தலை வார்றதுக்கு இவ்வளவு நேரமா?''

''உனக்கு தெரியாது... நேரே வகி டெடுத்து தலையைப் படியச் சீவுறது கூட நம்ம ஒழுக்கத்தின் அடையா ளந்தான். நெற்றியிலே முடிவந்து வந்து விழுகுது..... அதைத்தான் இழுத்துப் படிய வைக்கிறேன்....''

தலையைத் தூக்கி அழுத்தி வாரி, பின்புறம் இறக்கி, பளீரென்ற விபூதிப் பட்டையுடன், செவ்வக வடிவில், இரு புருவத்தையும் இணைக்கும் விதமாய் குங்குமம் பதித்து அப்பா உட்கார்ந் திருக்கும் காட்சி கண் முன்னால் நிற்கிறது.

**அப்பா ஒரு நாளாவது**
**லீவு போட்டிருப்பாரா?**
**ஓய்வெடுப்போம் என்று எப்போதேனும்**
**முடங்கியிருப்பாரா?**
**எப்படி அந்த மனிதனால் அது**
**முடிந்தது?**
**ஹோட்டலில், வாரத்தில்,**
**ஒருநாள் லீவில் கூட**
**ஏதேனும் வெளிவேலை என்று**
**போய் ஐந்நூறு,**
**அறுநூறு சம்பாதிதது**
**வந்துவிடுவாரே!**
**கணம், கணமாக இருக்கும்**
**விறகுகள் படலாய் எரிந்து**
**கொண்டிருக்கும்**
**மூன்று, நான்கு அடுப்பிற்கு**
**முன்னால் வெப்பத் தகிப்பாய்,**
**கால் கடுக்க நின்றல்லவா**
**உழைக்கவேண்டும்!**
**மீண்டும் மீண்டும் அவற்றை**
**நினைத்துப் பார்க்கையில், இவள்**
**கண்கள் வற்றாக்குளமாகிறது!**

முன்னே வைத்திருக்கும் தேக்கு மரப் பெட்டியின் மீது இடது கை படர்ந் திருக்க, அப்பா நோட்புக்கை விரித்துப் பிடித்துக் கணக்கெழுதும் காட்சி மறை யவே மறையாது. அப்பாவின் வருவா யில் ஒவ்வொரு காசுக்குமான செலவு கணக்கு அதில் உண்டு. தன் செலவுக ளெல்லாம் நியாயமாய் இருக்கிறதா? என்று அடிக்கடி பார்த்துக் கொள்வார். அத்தனையும் வீட்டுக்கான செலவுதான்!!!

விலைவாசிப்புள்ளி எப்படியெல்லாம் எப்பொழுதெல்லாம் ஏறியிருக்கின்றது என்பதை அப்பாவின் அந்தக் கணக்கு நோட்டை வைத்து துல்லியமாய்க் கணித்து விடலாம். ஆனால் அப்பாவின் வருமானம் மட்டுமே ஒரே நிலையிலேயே

இருந்ததுதான் பரிதாபம். கடைசியாக அப்பா வாங்கிய சம்பளம் 'முந்நூற்றி அறுபது ரூபாய்'.

அத்தனை உழைப்புக்கும் அது ஒரு கூலியா? இல்லவே இல்லை. விடியற் காலை ஐந்து மணியிலிருந்து இரவு ஒன்பதுவரை நடுவே, மதியம் ஒரு மணி நேரம் ஓய்வு. ஏறக்குறைய ஐம்பது அறுபதாண்டு காலம் உழைத்திருக்கிறார் அப்பா. என்னவொரு அசுர முயற்சி!.

இன்றுகூட அவ்வப்போது யாராவது கண்ணில் தட்டுப்படும் போது கிடைக்கும் மதிப்பான விசாரிப்பு. அது அப்பாவுக் கான அயராத உழைப்புக்காக கிடைத்த மரியாதை.

"உங்கப்பா இருக்காரே... அவரை மாதிரி சுத்தமான மனுஷனை பார்க்கவே முடியாது. இராத்திரியும், பகலும் ஓய்வில் லாமல் மனம் சளைக்காமல் பாடுபட்டி ருக்கின்றார். உழைப்பால் உயர்ந்த மனுஷன் அவர்தான். நீங்க உயர்ந்தா அவர் உயர்ந்த மாதிரிதானே!"

இப்படி எத்தனை பேர் சொல்லக் கேட்டிருக்கிறாள் இவள்.

"உனக்கு நான் இலவசமாய் டியூஷன் சொல்லித் தர்றேன்னா அது உனக்காக இல்லை. உங்க அப்பாவுக்காக.... அவர் ஒரு நாள் வசதியா, சந்தோஷமா, ஓய்வுலே இருக்கிறதை நாங்க பார்க் கணும். அதுக்காகத்தான்... நீ நல்லா படிக்கலைன்னு நான் சொல்லலை ரொம்ப நல்லா படிக்கணும் அதுக்காகத்தான்...."

கணக்கு வாத்தியார் வேலுச்சாமி சொன்னது இன்னமும் பசுமையாக மனதில் நிற்கிறது.

விடியற்காலையில் பால் வாங்கப் போகும் போது, படிக்க எழுப்பிவிட்டுப் போவாரே! எப்படிப்பட்ட ஆசிரியர்க ளெல்லாம் இருந்த காலம் அது! நினைக்கவே மெய் சிலிர்த்தது இவளுக்கு.

"அய்யா, கொஞ்சம் அப்படிப் போய் இருங்க... அநியாயத்துக்கு இரு முறீங்களே. ரொம்ப கஷ்டப்படுறீங்களே அங்கயே உட்காருங்க... உங்க வரிசை வர்றபோது கூப்பிடுறோம்..."

தாள முடியாத புகைச்சலில், இழுப்பில், கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பெரியவரைப் பார்த்துக் கூறினார் ஒருவர்.

வீட்டுல யாரும் இல்லையா? இங்க ஏன் வந்தீங்க, பாவம்.

இன்னொருவர்பரிதாபப்பட்டபோது 'இல்லை' என்பதற்கடையாளமாய் தலையை ஆட்டிக் கொண்டே ஓரமாய் போய் அமர்ந்தார் அந்தப் பெரியவர்.

இவளுக்கு அப்பாவின் நினைவு வந்தது. எரியும் அடுப்பின் முன்னால் நின்று நின்று சூடு ஏறிய உடம்பில் எப்படிக் கொடூரமான இருமல் வரும். வீடே அலறுவதுபோல் இரு முவாரே. பாட்டிலை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடி... அந்தத் தண்ணி மருந்தை எத்தனை நாட்கள் வாங்கி கொண்டு வந்து கொடுத்திருக்கிறாள்.

---

**இவளுக்கு அப்பாவின் நினைவு வந்தது. எரியும் அடுப்பின் முன்னால் நின்று நின்று சூடு ஏறிய உடம்பில் எப்படிக் கொடூரமான இருமல் வரும். வீடே அலறுவதுபோல் இருமுவாரே. பாட்டிலை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடி... அந்தத் தண்ணி மருந்தை எத்தனை நாட்கள் வாங்கிகொண்டு வந்து கொடுத்திருக்கிறாள். மருந்து குடித்தால் சற்று அடங்கும். அது மருந்து குடித்ததால் அடங்கியதா இல்லை இருமி இருமிப் போதும் என்று அதுவே போய்விட்டதா? என நினைக்கத் தோன்றும்.**

மருந்து குடித்தால் சற்று அடங்கும். அது மருந்து குடித்ததால் அடங்கியதா இல்லை இருமி இருமிப் போதும் என்று அதுவே போய்விட்டதா? என நினைக்கத் தோன்றும்.

தன்னைப் பார்த்தவுடனேயே "என்ன தங்கச்சி.... அப்பாவுக்கு இருமலா?" என்று கேட்டு, "கொண்டாயா பாட்டிலை...." என்று டாக்டரின் சீட்டு இல்லாமலேயே மருந்தை ஊற்றிக்கொடுத்து அனுப்பும் முனுசாமி ; எத்தனைபேர் அப்பாவை அடையாளம் கண்டிருந்தார்கள் அப்போது?....

இப்பொழுது இந்தக் கேன்டீனில் அப்பா கூட வேலைபார்த்தவர்கள் யாரேனும் இருக்கக் கூடுமா?

அப்பா அங்கே வேலை பார்த்த காலத்தில் ஓரிரு தடவைதான் இவள் அங்கே வந்திருக்கின்றாள். எந்த இடத்தில் இருந்தாலும் அங்கே தனக் கென்று ஒரு அடையாளத்தை, கௌர வத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் சிறப்பு அப்பாவுடையது.

அப்பா வந்தபிறகுதான் அந்தக் கேன்டீன் வியாபாரம் பலமடங்கு கூடியது என்றார்கள். அதற்கு முன் ஊழியர்கள் வெறும் தேநீருக்காக மட்டுமே அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்ததாகவும் பிறகுதான் பண்டங்கள், இனிப்பு வகை கள், சாப்பாடு என்று பலபொருள் பெரு கியது என்று அதன் மனேஜர் சொல்லக் கேட்டிருக்கிறாள் இவள்.

"ஆட்டோ ஏற்பாடு பண்றேன் மாஸ்டர்... நீங்க வந்தால் போதும்.... சூப்பர் வைஸ் பண்ணுங்க... வேணாம்னு மட்டுமே சொல்லிடாதீங்க..."

"என் மூத்த பிள்ளைட்டக் கேட்க ணும்... ரொம்பநாளா என்னைக் கெஞ்சிக் கொண்டிருக்கான் அவன்.... வேலைக்குப் போக வேண்டான்னு, அவன் சரின்னு சொன்னா வரேன்.... தப்பா நினைச்சுக் கிடாதீங்க. அவங்க வார்த்தைக்கும் மதிப்புக் கொடுக்கணுமல்லையா."

இப்படிச் சொல்லித்தான் நின்று கொண்டார் அப்பா. மின்வாரிய ஊழியர் களில் பெரும் பகுதியினர் அப்பாவை அன்று வீடுவரை கொண்டுவந்துவிட்டுப் போனது மறக்க முடியாத நிகழ்வு.

அப்பாவால் வெறும் கண்காணிப்புப் பணி நிச்சயம் செய்ய முடியாது. அவர் ஓடியாடி உழைத்தவர். தொழிலா ளிகளுக்கு மத்தியிலேயே காலம் கழித் தவர். கடுமையான உழைப்பாளி, முழுமை யான தொழிலாளி, அதைச் சொல்லத் தயங்கித்தான் அண்ணாவின் பேச்சுக்கு மதிப்பளித்து விலகிக் கொண்டார் அப்பா.

மின் கட்டணத்தைச் செலுத்திவிட்டு வரிசையை விட்டு விலகியபோது, "ஒரு பார்வை பார்த்துவிட்டுத்தான் போவோமே" என்று மனதில் தோன்றிய அதீதமான ஈர்ப்பினால் கேன்டீ னுக்குள் நுழைந் தாள் இவள். ஒரு டீக்கு சொல்லிவிட்டு அமர்ந்தாள். அப்போது அது கண்ணில் பட்டது. கழுத்தில் மாலையோடு, நடுநாய கமாய் அப்பா! சுற்றிலும் அந்தக் கேன்டீன் தொழிலாளர்கள் அடுத்தடுத்த வரிசையில்.

டீயை அருந்திவிட்டுக் கல்லாவில் காசு கொடுக்க வந்தபோது அந்த இன் னொன்றும் கண்ணில்பட்டது. இவ ளுக்கு, காசுமேசை கண்ணாடியின் கீழே அப்பாவின் புகைப்படம். தோளில், கௌரவப்படுத்திய துண்டு, போர்த்திய நிலையில் அருகில் அந்த மனேஜரோடு இமைக்காமல் அதையே பார்த்தவளின் கண்கள் லேசாக கலங்கின.

❍

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2018 முடிவுகள்



**முதற்பரிசு – ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| ❍ **பயங்கரவாதியின் செல்லமகன்** | ஈழ நல்லூர் கண்ணதாசன் | புங்கன் குளம் |

**இரண்டாம் பரிசு – ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| ❍ **யாரோ ஒளிந்திருக்கிறார்கள்** | கே.எஸ்.சுதாகர் | அவுஸ்திரேலியா |

**மூன்றாம் பரிசு – ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| ❍ **வீழ்வேனென்றோ நினைத்தாய்...? –** | அன்டனூர் சுரா | தமிழ்நாடு |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| ❍ **காலத்தால் கரையாத நினைவுகள்** | தேவகி கருணாகரன் | அவுஸ்திரேலியா |
| ❍ **தப்பான முடிவுகள்** | ச.முருகானந்தன் | கொழும்பு 06 |
| ❍ **நல்லதொரு மகனாகப் போகிறேன்** | செல்லையா சதீஸ்குமார் | கிளிநொச்சி |
| ❍ **வீழ்வேனென்று நினைத்தாயோ?** | K.G. முகம்மது ராபி | திருகோணமலை |
| ❍ **காசு வந்ததும்** | நவஜோதி ஜோகரட்ணம் | லண்டன் |
| ❍ **உரிமை** | உ .நிசார் | மாவனல்ல |
| ❍ **காணாமல் போன கலைஞன்** | வயிரமுத்து சிவராசா | ஜேர்மனி |

நடுவர்கள்: புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், திருமதி ராணி சீதரன், திருமதி வசந்தி தயாபரன்,திருமதி ஞானம் ஞானசேகரன் (ஞானம் இணை ஆசிரியர்), திரு. தி. ஞானசேகரன் (ஞானம் பிரதம ஆசிரியர்)

**(ஞானம் 222, நவம்பர் 2018)**

52

# பயங்கரவாதியின் செல்லமகன்

ஞானம் சஞ்சிகை நடத்திய அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி - 2018 இல் முதற் பரிசு பெற்ற சிறுகதை.




"தமிழ்....... தமிழ்.......... என்று தன் சிறிய மகன் தமிழ்வேந்தனை அழைத்தாள் சாம்பவி.

எங்கிருந்தோ ஓடிவந்தான் தமிழ்

"என்னம்மா..........?"

"என்ன செய்கிறாய்...? முகம் கழுவிப்போட்டு படிக்கத் தொடங்கு, இருட்டத் தொடங்கீற்றுது..."

"வாறன் அம்மா, புறாக்களுக்கு சாப்பாடும் தண்ணியும் எடுத்து வைச்சிட்டு வாறன்....." என்று கெஞ்சலாகச் சொல்லிவிட்டு மீளவும் போனான் தமிழ்.

ஆண்டு ஆறில் படித்துக்கொண்டிருக்கும் அந்த வீட்டின் கடைக்குட்டியான தமிழ்வேந்தனை எல்லோரும் ஆசையாகத் 'தமிழ்' என்று அழைத்து மகிழ்வர். தமிழ் பாடசாலை விட்டு வந்ததும், தனது படிப்பு நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் வீட்டில் புறா வளர்த்தல், கிளி வளர்த்தல் போன்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவான். சாம்பவியும் அவனது சொந்த விருப்பத்திற்கு விட்டு விட்டாள்.

சாம்பவி ஒரு பாடசாலை ஆசிரியை. இரண்டு பிள்ளைகள். மூத்தவன் சுடரவன், இளையவன் தமிழ்வேந்தன். சாம்பவியின் கணவனான மாறன் அரசியல் கைதியாக கொழும்பில் உள்ள சிறையொன்றில் தடுத்து



'ஈழநல்லூர் கண்ணதாசன்' என்ற பெயரில் இலக்கியப் படைப்புகளைத் தரும் இவர், தனது பாடசாலைக் காலத்தில் இருந்து சிறுகதை, கவிதை எழுதுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார். **மோகனமுகாரி** எனும் புனைபெயரில் இவரால் எழுதப்பட்டு 1985ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் முரசொலி பத்திரிகையில் வெளிவந்த ***"அரை அலங்காரத்துடன் அம்மன் சிரிக்கிறாள்"*** என்னும் சிறுகதை அனைவரதும் பாராட்டுப்பெற்றது. யாழ். பல்கலைக்கழகத்தின் இசைத்துறைப் பட்டதாரியான இவர், மிருதங்க வாத்தியக் கலையில் பிரபல்யம்பெற்றவர். சென்ற வருடம் வெளியிடப்பட்ட துறைசார் நூலான ***"முப்பத்தைந்து தாளங்களில் தனியாவர்த்தனம்"*** மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் பணி, தொடர்ச்சியான ஆற்றுகைகள் காரணமாக சில வருடங்கள் எழுதாமல் இருந்துள்ளார். இவரது ***"பஞ்சகதிகள்"*** என்னும் நூலும், ***"காலம் தின்னும் நர மாமிசங்கள்"*** எனும் கவிதை நூலும் வெளிவர இருக்கின்றன.

**இலங்கை இராணுவத்தினது இன அழிப்புச் செயற்பாடுகளை ஆயிரக்கணக்கில் நேரில் கண்டும், அனுபவித்தும், பிள்ளைகளை, உறவுகளை பறிகொடுத்தும் ஏதிலிகளாய் நொந்து கெட்ட மக்கள் ஏதோ ஞாபகமறதிக்காரர்கள் போல தங்களைக் கொடுமைப்படுத்தியவர்களுடன் சமரசமாகி ஏதோ அற்ப சொற்ப சலுகைகளுக்காக முன்னாள் போராளிகளைக் காட்டிக் கொடுக்கத் தொடங்கிவிட்டனர்.**

வைக்கப்பட்டிருக்கிறான். மண்ணுக்காக போராடப் போனமைக்கு காலக் கடவுள் அளித்த வரம் அது. ஆயுள் தண்டனை பெற்று அடைக்கப் பட்டிருக்கும் தனது கணவனை மாத மொருமுறை சென்று கண்டு கதைத்து விட்டு வருவாள் சாம்பவி. சிறைத் தடுப்புகளினூடே தூசி படிந்த பார்வைக் கூடத்தில் கலங்கும் கண்களுடன் அவளும், கணவன் மாறனும் விழிகளால் கதைபேசி அழுதபடி இதயத்தை அங்கே இழந்து விட்டு வெறுங் கூடாய் வீடு திரும்புவாள் சாம்பவி. கணவனுக்கான தீர்ப்புக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் மேல் முறையீட்டு வழக்குத் தொடுத்துள்ளாள் அவள்.

இரண்டு வருடகாலப் புனர்வாழ்வை நிறைவு செய்து, இனியேனும் நிம்மதியாக வாழலாம் என்ற எண்ணத்தில், ஏற்கனவே பட்டதாரியாக இருந்தமையால் அரச உத்தியோகம் ஒன்றிலும் இணைந்து தானுண்டு, தன் வேலை, குடும்பம் என்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தான் மாறன். ஆயினும், அவன்மேல் இல்லாத விடய மொன்றை உருவாக்கி, சாட்சிகளையும் உருவகித்து ஆயுள் தண்டனை வழங்கி அடைத்து வைத்திருக்கிறது அரசு.

இலங்கை இராணுவத்தினது இன அழிப்புச் செயற்பாடுகளை ஆயிரக் கணக்கில் நேரில் கண்டும், அனுபவித்தும், பிள்ளைகளை, உறவுகளை பறிகொடுத்தும் ஏதிலிகளாய் நொந்து கெட்ட மக்கள் ஏதோ ஞாபகமறதிக்காரர்கள் போல தங்களைக் கொடுமைப்படுத்திய வர்களுடன் சமரசமாகி ஏதோ அற்ப சொற்ப சலுகைகளுக்காக முன்னாள் போராளிகளைக் காட்டிக் கொடுக்கத் தொடங்கிவிட்டனர்.

சாம்பவி தன் கணவனைச் சந்திக்கப் போகும்போது தனது மூத்தமகனையோ அல்லது மாறனின் சகோதரி ஒருவரையோ தன்னுடன் அழைத்துப் போவாள். யாழ்ப் பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்று வருவதென்பது இரண்டு நாள் பயணம் அத்துடன் இரண்டு வருடங் களாகத் தந்தையை எங்கே, எங்கேயென்று நாளும் பொழுதும் கேட்டுக் கொண் டிருக்கும் தமிழ்வேந்தனுக்கு அப்பா ஒரு வேலையாக கொழும்பில் நிற்கிறார் என்றே சொல்லி வைத்திருக்கிறாள். அப்பா சிறையில் இருக்கிறார் என்று அறிந்தால் அந்தச் சின்னஞ்சிறு பிஞ்சு மனம் வாடிவதங்கிவிடும் என்று கருதி இவ்விடயத்தை அவனுக்கு விளங்கப் படுத்தவுமில்லை, கொழும்புக்கு அவனை அழைத்துச் செல்வதுமில்லை.

தன் சின்ன மகன் தமிழ்வேந்தன் மீது உயிரையே வைத்திருக்கிறான் மாறன். புனர்வாழ்வை நிறைவு செய்ததன் பின்னர் வெளிநாட்டுக்குப் போவதற்கான வாய்ப்புகள் பல அவனைத் தேடி வந்தபோதும், தன்பிள்ளைகளை இந்த நாட்டிலேயே படிப்பிக்கவேண்டும், பொரு ளாதார ரீதியாகத் தன்னை வளர்த்து, கஷ்டப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்து தான் இந்த நாட்டிலேயே வாழ்ந்தி ருந்தான் மாறன். எந்த அப்பாவியையும் கேட்டுக் கேள்வி இல்லாமல் தண்டிப்பதற் காகத்தானே இந்த நாட்டினது பயங்கர வாதத் தடைச்சட்டம் தன் கோரப்பற்களை

**சாம்பவி தமிழையும் கையில் பிடித்துக் கொண்டு உள்ளே போனாள். உள்ளே கம்பிவலைத் தடுப்பிற்கு அப்பால் நின்று கொண்டு மாறன், 'சாம்பவி..... சாம்பவி' என்று அழைத்தான். கண்கள் கலங்கியபடி சாம்பவி, "ஓம்.....ஓம்.... எப்பிடி இருக்கிறியள்" என்று கேட்டாள். இத்தனை தொலைவு பயணித்து வந்து, கணவனின் முகத்தைக் கூட வடிவாகக் காணமுடியவில்லையே என்ற ஏக்கம் அவளது குரலில் தொனித்தது.**

காட்டியவாறு காத்திருக்கிறதே. அத்துடன் அதனைப் பயன்படுத்தும் எண்ணத்துடன் பொறாமைக்காரர்களும், இனத்தினது புல்லுருவிகளும் காத்திருக்கும்போது மாறன் போன்ற முன்னாள் போராளி களினது நிலை இதுதான்.

ஒரு நாள் தமிழ் சாம்பவியிடம் "அம்மா புறா வளர்க்கப் போறன். ஆசையாக் கிடக்கு..." என்று கேட்டான். சாம்பவி முதலில் ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால், தமிழ் ஒவ்வொரு நாளும் நச்சரிக்கத் தொடங்கிவிட்டான். 'சரி, பிள்ளை அப்பாவின் சிந்தனையில்லாமல் இருக்கிறதுக்கு இதுவும் ஒரு வழிதான்' என்று எண்ணி, ஒரு புறாக் கூடும், இரண்டுசோடி புறாக்களும் வாங்கிக் கொடுத்தாள்.

ஒவ்வொரு நாளும் பாடசாலைவிட்டு வந்ததும் வீட்டுப்பாடங்களைச் செய்து விட்டு, புறாக்கூட்டினருகே சென்று விடுவான் தமிழ். இருட்டும்வரை அவ்விடத்திலேயே அவனது பொழுது கழியும். வீட்டுக்கு எவர் வந்தாலும் அவர் களை அழைத்துச் சென்று தான் வளர்க்கும் புறாக்களைக் காட்டி மகிழ் வான். தந்தையைப் பிரிந்திருக்கும் தமிழினது இத்தகைய பொழுது போக்கு களையும், மகிழ்ச்சியையும் பார்த்த சாம்பவியினது மாமா முறையான ஒருவர், ஒரு கிளிக்கூட்டையும், ஒரு சோடி கிளிக ளையும் வாங்கிக் கொண்டுவந்து தமிழுக்குப் பரிசளித்தார். தமிழுக்கு இரட்டைச் சந்தோஷம். இன்னொருவர் சாம்பவியினது ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் இன்னும் இரண்டு புறாக்களை வாங்கிக் கொடுத்தார். படிப்பு நேரம் தவிர, புறாக்களையும், கிளிகளையும் பராமரிப்பதிலேயே தமிழினது நேரம் கழிந்தது.

சாம்பவிக்கோ கணவனைப் பிரிந்து வாழும் சோகம். மூத்தவன் ஏ. எல். படிப் பவன். அவனுக்கு பாடசாலை, ரியூசன் எனப் பொழுது கழிந்துவிடும். தமிழ், தந்தை பற்றி யோசிக்காமல் இருக்கவும், தந்தையைப்பற்றிக் கேள்வி கேட்காமல் இருக்கவும், இந்தப் பறவை வளர்ப்புப் பொழுது போக்கு உதவுவது கண்டு சாம்பவி நிம்மதி அடைந்தாள். ஆனாலும், இரவில் நித்திரைக்குப் போகும் நேரங் களில் இடைஇடையே தந்தையினது ஞாபகம் பீடிக்கும் பொழுது "அம்மா... அப்பா எப்ப வருவார்? ஏன் கனகாலமா கொழும்பில நிற்கிறார்?" என்று சாம்பவி யைத் துளைத் தெடுப்பான்.

கைதாகிச் சிறைக்குப் போகு முன்பு, ஒவ்வொரு நாளும் வேலை விட்டு வந்ததும் சிறிது நேரம் படுத்து ஓய்வெடுப்பது மாறனின் வழமையான செயற்பாடுகளில் ஒன்று. அந்நேரம் தமிழ் வீட்டில் நின்றால், தகப்பனின் மீது படுத்தும், உருண்டும் விளை யாடுவான். அப்பாமீது கொள்ளை ஆசை அவனுக்கு. கடைக்குட்டி என்பதனால் செல்லமெல்லாவற்றிற்கும் சொந்தக் காரனாய் தமிழ் திகழ்ந்தான். தமிழின் உடல் நிலைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அவன் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுப்பான் மாறன். இடை யிடையே வீட்டுக்கு அண்மையிலுள்ள யாழ்ப்பாணம் கச்சேரியடி பழைய பூங்காவிற்குத் தமிழைக் கூட்டிச்சென்று விளையாட விடுவான். இப்போது எல்லாமே தடைப்பட்டுவிட்டன தமிழுக்கு.

சென்றமாதம் கணவனைக் காணு வதற்காகக் கொழும்புச் சிறைக்குச் சென்றிருந்த பொழுது, சின்ன மகன் தமிழ் வேந்தனைப் பார்க்க ஆசையாக இருக்கிறது என்று மாறன் சொல்லி யிருந்தான். எனவே, இம்முறை போகும் பொழுது தமிழையும் அழைத்துச் செல்ல முடிவு செய்திருந்தாள் சாம்பவி.

அடுத்து வந்த வெள்ளிக்கிழமை இரவு வழமையாகப் பயணிக்கும் பேரூந்தில் சாம்பவியும், தமிழும் கொழும்புக்குப் புறப்பட்டனர். தமிழ், புறப்படும்போது அம்மம்மாவைக் கூப்பிட்டு "அம்மம்மா, புறாக்களுக்கும், கிளிகளுக்கும் சாப்பாடு வைக்கவேணும். மறக்காமத் தண்ணியும் வைச்சு விடுங்கோ....." என்று சொல்ல, அம்மம்மாவும் சிரித்தபடி, "ஓம், ஓம், நான் எல்லாம் பாக்கிறன். நீங்கள் யோசிக்காம அப்பாவிட்ட போட்டு வாங்கோ...." என்று சொல்லி அனுப்பியிருந்தா.

இரவிரவாக அப்பாவைப் பற்றி கதைத்துக் கொண்டிருந்து விட்டு, தாயின் மடியில் நித்திரை கொண்டான் தமிழ். சாம்பவி கணவனின் நினைவுகளுடன் விழித்தபடி பயணம் செய்தாள்.

காலை ஐந்து மணிக்கு பேரூந்து கொழும்பு வந்து சேர்ந்தது. சாம்பவி வழமையாக மாறனைச் சந்திக்க வரும் பொழுது கொழும்பில் தங்கிவிட்டுச் செல்லும் வெள்ளவத்தையில் உள்ள ஒரு வீட்டில் காலைக் கடன்களை முடித்துவிட்டு, காலை எட்டரை மணிக்கு பொரள்ளையிலுள்ள மாறனை அடைத்து வைத்திருக்கும் சிறைச்சாலைக்கு தமிழை யும் அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

கொழும்புக்கு வந்தும் இன்னும் அப்பா வைப் பார்க்காத ஏக்கத்தில் தமிழ் பரபரத்துக் கொண்டிருந்தான். "இண்டைக் குவரைக் கண்டதும் முதல்ல கதைக்கக் கூடாது. ஏனெண்டா, இவ்வளவு நாளும் ஏன் வீட்டுக்குவராம இருக்கிறியள் எண்டு சண்டை பிடிக்க வேணும். கொஞ்சநேரம் சண்டை பிடிச்சுப் போட்டு, பேந்து அப்பாவை கட்டிப் பிடிச்சுக் கொஞ்சவேணும், அவற்ற தோளில ஏறி இருக்கவேணும். மீசையைப் பிடிச்சு இழுக்க வேணும்......" என்று அவனது பிஞ்சு உள்ளம் துடித்துக் கொண்டி ருந்தது. தான் வளர்க்கும் புறாக்கள் கிளிகள் பற்றியும் அப்பாவுடன் கதைக்க வேண்டும் என்ற ஆசையுடன் இருந்தான் அவன்.

காலை ஒன்பது மணிக்கு சிறைச் சாலையைச் சென்றடைந்தனர். சனத்திரள் அதிகமாக இருந்தது. அங்கு காணப் பட்ட ஒவ்வொரு முகங்களிலும் பிரிவுத் துயரங்களும், ஏக்கங்களும் மண்டிக் காணப்பட்டன. சாம்பவி, பெயர்களைப் பதியும் இடத்தில் மாறனின் பெய ரையும், கைதி எண்ணையும், அவன் தங்கியிருக்கும் சிறைக் கூடத்திற்குரிய எழுத்தையும் பதிந்தாள். அந்த விபரங் களை ஒரு துண்டில் எழுதி வாங்கிக் கொண்டு உள்ளே போனான் ஒரு சிறைக்காவலாளி. சிறைக்காவலாளியை 'மாத்தையா' என அழைப்பர்.

தமிழ் ஒன்றும் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தான். 'அப்பாவைப் பார்க் கிறதுக்கு ஏன் இத்தனை அடுக்குகள்...?' என அவனது சின்னஞ்சிறு குழந்தை யுள்ளம் எண்ணிக் கொண்டதோ என்னவோ.

அரை மணித்தியாலம் கழிந்தது. அந்தச் சிறைச்சாலையில் கைதிகளை வெளி யிலிருந்து வருவோர் சந்திக்கும் இடங்கள் இரண்டு வகையாக அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று சாதாரண கைதிகளின் சந்திப்புப் பகுதி, அடுத்தது பயங்கரவாத தடைச்சட்டத்தினால் கைது செய்யப்பட்டோரும், தண்டனைக்குட் படுத்தப்பட்டோரும், மற்றும் போதை வஸ்து, கொலை போன்ற பெரிய குற்றங் களைப் புரிந்தோரும் சந்திக்கும் பகுதி. அது 'ஸ்பெஷல் பகுதி' என அழைக்கப் படுகின்றது. இந்த ஸ்பெஷல் பகுதியில் கைதிகளுக்கும், அவர்களைச் சந்திக்க வருபவர்களுக்குமிடையே மூன்றடுக்கு

இறுக்கமான கம்பித்தடுப்புக் காணப்படும். அந்த கம்பி வலைத்தடுப்பு ஒரு வலை என்பதால் அடுத்த பக்கத்தில் நிற்பவரது முகம் தெளிவாகத் தெரியாது. இது போன்று மூன்று அடுக்குகள் ஒவ்வொரு கம்பிவலைத் தடுப்புகளுக்கும் இடையில் ஒன்றரை அடிக்குமேல் இடைவெளி இருக்கும். அந்தக் கம்பி வலைகளுக்கு ஒரு புறத்தில் கைதிகளும், மறுபுறத்தில் சந்திக்க வருபவரும் நின்று கதைக்க வேண்டும். அத்துடன் கறள் பிடித்தும், தூசு மண்டியும் காணப்படும் ஆகையால் புகைக்குள் நின்று கதைப்பது போன்று முகங்களைப் பார்க்க முடியாமல் கத்திக் குழறிக் கதைத்து விட்டுச் செல்ல வேண்டியதுதான். இந்த நாட்டில் காணாமற்போனபல விடயங்களில் மனிதா பிமானமும் ஒன்று என்பது உலகறிந்த விடயம்தானே. ஆனால், சிறைச் சாலையினது வெளிப் பக்கத்தில் தங்க நிற எழுத்தில் மிக மிக அழகாக

'சிறைக்கைதிகளும் மனிதர்களே' என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. அத்தகு ஸ்பெஷல் சந்திப்புப் பகுதிக்குத்தான் மாறனைக் காண்பதற்காக சாம்பவி போகவிருக்கிறாள்.

உள்ளேயிருந்து வந்த ஒரு 'மாத்தையா' 'மாறன் மாறன்' என குரல் கொடுத்தான். சந்திப்புக்கு வருபவர்கள் சந்திக்கவிருக்கும் கைதியின் பெயரைப் பதிந்த பின், அப்பெயரும், சிறைக்கூட எண்ணும் எழுதப்பட்ட ஒரு சிறிய துண்டு உள்ளே அனுப்பப்படும். அதற்குரிய கைதி அந்தத் துண்டுடன் வந்து சந்திப்பிடத்திற்கு அன்று பொறுப்பாக இருக்கும் ஜெயிலரிடம் (சிறை அதிகாரி) அத்துண்டைக் கொடுத்ததும் அதை வாங்கிக் கொண்டுவந்து வெளியில் அறிவிப்பார்கள். அவ்வாறு இப்பொழுது அறிவிக்கப்படுகிறது.

சாம்பவி தமிழையும் கையில் பிடித்துக் கொண்டு உள்ளே போனாள். உள்ளே கம்பிவலைத் தடுப்பிற்கு அப்பால் நின்று கொண்டு மாறன், 'சாம்பவி..... சாம்பவி' என்று அழைத்தான். கண்கள் கலங்கியபடி சாம்பவி, "ஓம்.....ஓம்.... எப்பிடி இருக்கிறியள்" என்று கேட்டாள். இத்தனை தொலைவு பயணித்து வந்து, கணவனின் முகத்தைக் கூட வடிவாகக் காணமுடியவில்லையே என்ற ஏக்கம் அவளது குரலில் தொனித்தது.

"தம்பி வந்திருக்கிறானே......?"

"ஓமப்பா......தூக்கிக்காட்டுறன்....." என்று சொல்லி விட்டு தமிழைத் தூக்கிக் காட்டினாள். "அப்பா எண்டு கூப்பி டுங்கோ..., அப்பாவின்ர முகம் விளங்குதே....?" என்று குரல் விசும்பிய படி கேட்டாள்.

இருட்டாகக் கிடந்தது அந்தக் கம்பி வலைகளின் தடுப்பு, அந்தச் சிறைச் சாலையின் நிர்வாகம் போல. தமிழ் "அப்பா....... அப்பா...." என்று கூப்பிட்டான். அப்பாவின் முகத்தைத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை அவனால்.

"என்ர குஞ்சு....... என்ன செய்யு றீங்கள்...? நல்லாப் படிக்கிறீங் களோ...? அண்ணாவோட சண்டை பிடிக்கிறனீங்களோ....?" என்று கேட்டான் மாறன்.

அப்பாவினது மடியில் ஏறி இருக்க லாம், அப்பாவைக் கொஞ்சலாம், அதற்கும் மேலாக அப்பாவோடு கொழும்புக் கடைகளுக்கும் போய் விளை யாட்டுச் சாமான்கள் வாங்கலாம் என் றெல்லாம் எண்ணி வந்திருந்த தமிழ் திகைத்துப் போனான். நெருப்பில் வாட்டிய குருத்தோலையாகத் துவண்டு போனது அந்தச் சிறியவனின் மனசு.

பக்கத்தில் சந்திப்புக்காக வந்திருந்த ஏனையோரது உரத்த சப்தங்கள் வேறு அவனைக் குழப்பி விட்டிருந்தது.

மாறன் தனது நிலையையெண்ணி அழுதான். சாம்பவியும் அழவே மனது டைந்து நின்ற தமிழ் தன் கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். சிறிது நேரம் சாம்பவியிடம்,

வீட்டு நிலைமை, பிள்ளைகளின் படிப்பு, மேல் முறையீட்டு நீதிமன்ற வழக்கறிஞர் தொடர்பான விடயங்களைக் கேட்டறிந்து கொண்டான் மாறன்.

“வெலாவ ...... எவறாய்......ஜண்ட.... ஜண்ட..” என்று ஒரு மாத்தையா சத்த மிட்டான்.

“கவலைப்படாம இருங்கோ...... நான் லோயரைக் கண்டு கதைச்சிட்டுத்தான் போவன். உடம்பைக் கவனிச்சுக் கொள்ளுங்கோ......” என்று கண்ணீருடன் கூறிய சாம்பவி தமிழிடம் “அப்பாவிடம் போட்டு வாறன் என்று கையைக் காட்டுங்கோ.........” என்றாள். தமிழ் கையை உயர்த்திக் காட்டினான். மாறனும் கையைக் காட்டிவிட்டு, கண்களைத் துடைத்தவாறே உள்ளே சென்றான்.

சாம்பவி தமிழை அழைத்துக்கொண்டு வெளியே வந்தாள். தமிழ் ஒன்றுமே பேசாமல் அமைதியாய் நடந்துவந்து கொண்டிருந்தான். அந்தச் சின்ன மன சினது ஏக்கம் புரிந்தவளாய், அவளும் ஒன்றும் கதைக்கவில்லை. அவளுக் குள்தான் எத்தனை தவிப்புகள். இருவரும் ஓட்டோ ஒன்றில் வெள்ளவத்தைக்கு வந்து, மாலை லோயரைக் கண்டு கதைத்து விட்டு, இரவுப் பேரூந்தில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர்.

இரவு பேரூந்துப் பயணத்தின் போது, சாம்பவியின் மடியில் படுத்துக் கிடந்த தமிழ் திடீரென தாயிடம் கேட்டான், “அம்மா...... அப்பாவ ஏன் அடைச்சு வைச்சிருக்கினம்.....? அப்பா பாவம்..?”

அவனுக்கு என்ன பதில் கூறுவது என்று தவித்தபடியே அவனது தலை யைத் தடவினாள் சாம்பவி. “என்ர அப்பா பாவம்....” என்று முனகியவாறே நித்திரை கொண்டான் தமிழ்.

காலை ஐந்து மணிக்கு பேரூந்து யாழ்ப்பாணம் கச்சேரியடியை அண் மித்தது. கச்சேரியடியில் ஏ9 வீதிக்க ருகிலேயே வீடு இருந்ததால் அதிலே இருவரும் இறங்கி வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

வீடு வந்ததும் கதவைத்திறந்து வெளியே வந்த அம்மம்மா தமிழைப் பார்த்து, “குஞ்சு.... அப்பாவைப் பாத்தனீங் களோ....?” என்று கேட்டா.

தமிழ் ஒன்றும் பேசவில்லை.

அமைதியாய் வீட்டுக்குள் வந்து உடுப்பை மாற்றிவிட்டு வீட்டின் பின் பக்கம் போய் வந்தான். பின்னர் தன்னு டைய பாட்டில் புத்தகப்பையை எடுத்து புத்தகங்களை அடுக்கத் தொடங்கினான்.

உடை மாற்றிவிட்டு முகம் கழுவு வதற்கு கிணற்றடிக்குப் போன சாம்பவி திகைத்தாள்.

புறாக்கூடு திறந்து கிடந்தது. புறாக் கள் ஒன்றையும் காணவில்லை. கிணற்ற டியோடு தொங்க விடப்பட்டிருந்த கிளிக் கூட்டைப் பார்த்தாள். அதுவும் திறந்து கிடந்தது.

“ஐயோ, சின்னவன் ஏங்கப் போகி றானே..!” என்று பதறிக் கொண்டு வீட்டுக்குள் விரைந்து வந்தாள்.

“தமிழ்....... டேய் தமிழ்..... புறாக் கூட்டையும், கிளிக்கூட்டையும் பாத்தனியே...?”

“ஓம், அம்மா...!”

சாம்பவி அதிர்ந்து போய் மகனைப் பார்த்தாள்.

“தம்பி அதுகள் திறந்து கிடக்கடா... பறவைகள் ஒண்டையுமே காணேல்ல...” என்றவாறு அவனது முகத்தைப் பார்த்தாள். தான் வளர்த்த பறவைகள் பறந்து விட்டன என்பதையறிந்து தனது சின்ன மகன் அழுது குளறப் போகிறானே என்ற கலவரத்தில் இருந்தது அவளது முகம்.

“அது... நான்தான் இப்ப திறந்து விட்டனான்....” என்றான் தமிழ்.

சாம்பவி ஒன்றும் புரியாமல் மகனைப் பார்த்தாள்.

தன் பாட்டில் புத்தகங்களையும் சரி பார்த்து, சரி பார்த்து அடுக்கிக் கொண்டி ருந்தான் தமிழ்.

❍

53



# யாரோ ஒளிந்திருக்கின்றார்கள்

2

அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2018இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை

**- கே.எஸ்.சுதாகர்**



இவரது சிறுகதை 'இனி ஒரு விதி செய்வோம்', 1983இல் 'ஈழநாடு' பத்திரி கையில் வெளிவந்தது. தொடர்ந்து சிறுகதை, கவிதை, கட்டுரை, பத்தி எழுத்து, விமர்சனம், நாவல் போன்ற துறைகளில் எழுதி வருகின்றார். இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பட்டதாரி. தற்போது வசிப்பது அவுஸ்திரேலியாவில். 'எங்கே போகின்றோம்', 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்' என்ற இரண்டு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஏறக்குறைய 25 சிறுகதைப்போட்டிகளில் பரிசு பெற்றுள்ளார்.

இந்த வருடம்(2018) - தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம், 'போடி மாலன்' நினைவாக நடத்திய சிறுகதைப்போட்டியில், வந்திருந்த 337 சிறுகதைகளில் இவரது 'பாம்பும் ஏணியும்' என்ற சிறுகதை முதல் பரிசு பெற்றுள்ளது. அத்துடன் 'ஞானம்' சஞ்சிகை நடத்திய அமரர் செம்பியன் செல்வன் ஆ.இராஜகோபால் நினைவுச்சிறுகதைப்போட்டியில் இரண்டாவது பரிசும் பெற்றுள்ளார். கவிஞர் கி.பி.அரவிந்தன் நினைவாக 'காக்கைச் சிறகினிலே' முன்னெடுத்த உலகத்தமிழ்க் குறுநாவல் போட்டியில் இவரது 'மெல்பேர்ண் வெதர்' என்ற குறுநாவல் பாராட்டுப் பரிசினைப் பெற்றுள்ளது.

'அக்கினிக்குஞ்சு' இணையத்தளம் இவரது தமிழ்ச் சிறுகதை இலக்கியப் பணிக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவப் படுத்தியுள்ளது.

(www.shuruthy.blogspot.com.au)

"சேர்! எங்கே என் மனைவி உமா? வழமையாக எட்டு மணிக்கெல்லாம் இங்கே வந்துவிடுவாரே..." காரைத் தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டு வேகமாக வந்த களைப்பில், மனைவியைக் காணாத அதிர்ச்சியுடன் கேட்டான் சிறீபாலன்.

"பயப்படாதீர்கள்! இன்னும் அரைமணி நேரத் திற்குள் இங்கு வந்துவிடுவார். இன்று கொஞ்சம் தாமதமாகிவிட்டது. நீங்கள் வெளியே உள்ள இருக்கையில் அமர்ந்துகொள்ளுங்கள். அங்கே நிறையப் புத்தகங்கள் இருக்கின்றன. அல்லது ரெலிவிஷன் பார்க்கலாம்" சொல்லியபடியே அந்த ஆண் தாதி சிறீபாலனை நிமிர்ந்து பார்த்தார். பார்த்த மாத்திரத்தில், சிறீபாலனுக்கு இந்த நிலை வந்திருக்கக்கூடாது எனக் கவலை கொண்டார். அவருக்கு அருகே இருந்த பெண் தாதி மேசையில் குனிந்தபடி அவசர அவசரமாக எதையோ எழுதிக் கொண்டிருந்தார்.

சிறீபாலன் கோர்ட் சூட் ரை அணிந்த நிலையில் வேலைக்குப் போவதற்கு முன்பாக

**(ஞானம் 224, ஜனவரி 2019)**

**’என்னுடைய அறைக்குள் டைனோசர் ஏலியன் கரடி சிங்கம் எல்லாம் ஒளித்திருக் கின்றன. சிலவேளைகளில் அவை என்னைக் கொல்லப் பார்க்கின்றன’ என்று ஒருநாள் ஆர்ப்பாட்டமிட்டு, கையிலே கத்தி ஒன்றை எடுத்து வெறி பிடித்தவள்போல உமா நடந்துகொண்டதை நினைத்து வைத்தியர் தனக்குள் புன்முறுவல் கொண்டார்.**

அங்கு வந்திருந்தான். கம்பீரமான தோற்றம், நறுக்கு மீசை, வயது நாற்ப துக்குள் இருக்கும்.

அந்தப்பெரிய அறைக்குள் ஏழெட்டு நோயாளர்கள் வரையில் இருந்தார்கள். ஆனால் நாற்பதுபேரின் இரைச்சல் அங்கே நிலவியது. இரண்டு தாதிமார்கள் அவர்களைக் கண்காணிப்பதற்கும், கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் போதாமல் இருந்தது.

‘பயப்படாதீர்கள்’ என்ற அந்தத் தாதி யின் சொல் சிறீபாலனைச் சற்றுச் சிந்திக்க வைத்தது. ஏதோ நடந்திருக்க வேண்டும். வாசலில் நின்றபடியே உமாவை அங்கும் இங்கும் தேடினான். அறைக்குள் அவனது மனைவியைத் தவிர மற்றைய எல்லோரும் இருப்ப தாகவே அவனுக்குப்பட்டது.

மருந்திற்குக் கட்டுப்படாவிடில் ‘ஷொக் றீற்மன்ற்’ கொடுக்கவேண்டிவரும் என மனோதத்துவ நிபுணர் கடந்தமுறை சந்தித்த போது சிறீபாலனிடம் கூறியி ருந்தார். அப்போது சிறீபாலனின் மனைவி உமா, “எனக்கொன்றும் இல்லை. அப்படி யிருக்க ஏன் எனக்கு மருந்து தருகின்றீர்கள். சும்மா மருந்தைக் குடிப்பது உடம்பிற்கு கேடு தரும் அல்லவா?” என டாக்டரைக் கேட்டிருந்தாள்.

’என்னுடைய அறைக்குள் டைனோசர் ஏலியன் கரடி சிங்கம் எல்லாம் ஒளித்திருக் கின்றன. சிலவேளைகளில் அவை என்னைக் கொல்லப் பார்க்கின்றன’ என்று ஒருநாள் ஆர்ப்பாட்டமிட்டு, கையிலே கத்தி ஒன்றை எடுத்து வெறி பிடித்தவள்போல உமா நடந்துகொண்டதை நினைத்து வைத்தியர் தனக்குள் புன்முறுவல் கொண்டார்.

“மருந்தை உடனடியாக நிறுத்த முடியாது. மெது மெதுவாகக் குறைத்து, வருத்தம் முற்றாகக் குணமாகியதும் நீங்கள் வீட்டிற்குப் போகலாம்” என உமாவிடம் ஆறுதல் சொல்லியிருந்தார் டாக்டர்.

வெளியே இருந்த தொலைக் காட்சி யில் மிருகங்கள் பறவைகள் பற்றிய தொரு விபரணம் போய்க் கொண்டி ருந்தது. அன்னப்பட்சிகள் மனிதர்களைப் போலவே பெரும்பாலும் ஒரு துணை யுடனே தமது வாழ்நாள் முழுவதும் இருப்பதாகவும், ஒருபாலின சேர்க்கை யும் அவற்றுள் அவதானிக்கப்பட்டுள்ளது எனவும் சொல்லிக் கொண்டிருந் தார்கள். அன்னப்பட்சிகள் பாலில் கலந்தி ருக்கும் நீரை விட்டு பாலை மாத்திரம் அருந்தும் எனச் சிறீபாலன் சிறுவயதில் கேள்விப்பட்டிருந்தான். மனிதர்களும் ஏன் அன்னப்பட்சிகள் போல தீயன வற்றை விடுத்து நல்லனவற்றை எடுத்து வாழப் பழகக்கூடாது? கண்கள் அந்த விவரணத்தில் லயித்திருந்தாலும் சிறீபால னின் மனம் எதையோ அசை போட்டது.

தெளிந்த நீரோடை போல ஓடிச் செல்லும் மனிதர்களின் வாழ்க்கை, இப்படித்தான் சில வேளைகளில் திடீர் திடீரென மாறிவிடுகின்றது.

உமா மனோவியாதிக்குச் சிகிச்சை பெற, இங்கே வந்து மூன்று மாதங்களாகி விட்டன.

குடும்பத்தின் முழுப்பொறுப்பும் அவன் தலையில் வந்துவிட்டதன் பின்னர் கொஞ்சம் தளர்ந்து போனான் சிறீபாலன். அதிகாலையில் சமையல் செய்து, தன் இரண்டு ஆண்பிள்ளைகளையும்

பள்ளிக்கு அனுப்பி வைத்து விட்டு, உமாவைப் பார்க்க இங்கே வந்து விடுவான். உமாவுடன் சிறிது நேரம் இருந்து விட்டு பின்னர் வேலைக்குப் புறப்பட்டுவிடுவான். பள்ளியில் வகுப்பு களுக்கு முன்னரும் பின்பும் பிள்ளை களைப் பராமரிக்கும் வசதி இருப்பது சிறிது ஆறுதல் அவனுக்கு. பின்னர் மீண்டும் வேலை முடித்து, மனைவியைப் பார்த்துச் செல்வான்.

தகவல் தொழில் நுட்பம் எவ்வளவோ முன்னேறிவிட்ட நிலையில், அதனால் இப்படியான அபத்தங்களும் உலகில் மலிந்து விட்டன. உலகின் மிகக் குறுகிய எண்ணிக்கையினரான இந்த இழிசெயலைச் செய்பவர்கள். மானிடத் தின் கேடுகெட்ட ஈனப்பிறப்புகள். பொறாமை, எரிச்சல், இயலாத்தன்மை கொண்ட இவர்களால் சில மனிதர்களின் வாழ்க்கை அல்லாடுகின்றது. இந்தச் செயல்களை செய்பவர்களைக் கண்டு பிடிப்பதும் கடினம், அதேபோல இதனால் பாதிப்படைபவர்களையும் அடையாளம் காண்பது கடினம். உமாகூட இப்படியான சுழிக்குள் அகப்பட்டிருந்தும் அவளைக் கண்டுபிடிப்பதற்கு தாமதமாகிவிட்டதே என வருந்தினான் சிறீபாலன்.

''என்ரை கொம்பியூட்டர், ஸ்மாற் போன், மின்னஞ்சல், இணையம், முகநூல் எல்லாத்துக்குள்ளும் - யாரோ ஒரு சிலர் ஒளிந்திருக்கின்றார்கள்" என்று உமா முதன்முதல் சொன்னபோது சிறீபால னுக்குச் சிரிப்புத் தான் வந்தது.

"ஒளிச்சிருந்து...?" சிறிபாலன் தனது கேள்வியைக் கேட்டு முடிப்பதற்கு முன்னரே,

''அவர்கள் எப்போதோ அங்கே ஒளிந்திருக்க வேண்டும். இந்த மர மண்டைக்கு சில மாதங்களுக்கு முன்னர் தான் இந்த விடயமே தெரிய வந்தது. அவர்கள் அங்கே ஒளிந்துகொண்டு எனக்கெதிராக பல சதித்திட்ட வேலை களில் ஈடுபடுகின்றார்கள்" கவலையுடன் சொன்னாள் உமா.

"அதுசரி... அப்படியெல்லாம் அவர்கள் செய்வதற்கு, நீர் என்ன பெரிய முக்கிய மான ஆளா? அரசியல்வாதிகள், பெரிய பிஸ்னஸ் பீப்பிள்ஸ, சினிமாக்காரர் எண்டு சொன்னால் நான் ஒத்துக் கொள் ளுவன்."

"எறும்புக்கும் அதனளவில் எது நடந் தாலும் அது அதற்குப் பெரிதுதான்" என்று உமா சொன்னபோது சிறீபாலன் மௌனம் காத்தான்.

உமா இலங்கையில் பன்னிரண்டாம் வகுப்பு வரையும்தான் படித்திருந்தாள். புலம்பெயர்ந்து வந்ததன் பிற்பாடு அவளின் முன்னேற்றம் வியக்கத்தக்கதாக இருந்தது. பல்கலைக்கழகம் சென்று கணக்கியல் பட்டதாரியாகி, இன்று ஒரு தொழிற்சாலையின் நிர்வாகக் கட்ட மைப்புக்குத் தலைமை தாங்குகின்றாள். அவளுடன் பள்ளியில் படித்தவர்கள் எல்லாம் எங்கோ தங்கிவிட அவள் கிடுகிடுவென்று முன்னேறி விட்டாள்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் உமாவின் பாடசாலை நண்பி – மனோகரி - தன் குடும்பம் சகிதம் அமெரிக்காவில் இருந்து வந்திருந்தாள்.குழந்தைகளின் குதூகலத்தில் வீடு மகிழ்ச்சி கொண்டது. மனோகரி, உமாவிற்கு அமெரிக்காவில் இருந்து ஒரு ஸ்மாற்போன் பரிசாக வாங்கி வந்திருந்தாள். ஸ்மாற்போன் வாங்கவேண்டும் என்ற உமாவின் நீண்டநாள் ஆசை நண்பியின் வரவால் தீர்ந்தது. மனோகரி தானே அதனை 'செற் அப்' செய்து கொடுத்தாள். அவள் அமெரிக்காவில் கொம்பியூட்டர் சயன்ஸ் படித்திருந்தாள்.

பாடசாலையில் படிக்கும் காலங்களில் மனோகரி முதல் மூன்று மாணாக்கருள் ஒன்றாக வந்துவிடுவாள். உமா பதினைந் திற்குள் வருவாள். எப்படி அமெரிக்கா விற்கு ஏனைய நாடுகள் முதன்மை

யான இடத்தில் இருப்பது பிடிக் காதோ... அப்படியே மனோகரிக்கும். வந்த அன்றிரவே கேள்விகளைத் தொடங்கிவிட்டாள்.

"எங்கை உம்முடைய கொன்வகேசன் சேர்டிபிக்கற் படங்கள் எல்லாத்தையும் காட்டும் பாப்பம்?"

அவற்றைப் பார்த்துக் கொண்டி ருக்கும் போதே மனோகரியின் முகம் மழை முகிலாகி விட்டது. கறுத்துப்போன முகத்தில் கண்கள் சூரியன் போல் தகதகவென மின்னியது. முகத்தை சில நிமிடங்கள் வேறு திசையில் வைத்தி ருந்தாள் அவள்.

மனோகரி அமெரிக்கா போய் விட்டதன் பின்னர், ஒருநாள் நேரம் நள்ளிரவைக் கடந்து விட்டிருக்கலாம். உமா படுக்கையில் எழுந்து உட்கார்ந் திருப்பதை சிறீபாலன் கண்டுகொண்டான்.

"என்ன பேஸ்புக் பார்க்கின்றீரா?"

"இல்லை... இங்கே பாருங்கள்!"

அவள் காட்டிய திக்கில், அவளது ஸ்மாற்போன் தன்னுடைய பாட்டில் ஒளிர்வதையும் பின்னர் சில விநாடி களில் மறைவதையும் கண்டான். அப்படி யாக இரண்டு மூன்று தடவைகள் நடந்தன. அவர்களின் படுக்கை அறைக்குள் இருளுடன் கலந்த அந்த வர்ண ஜாலம் பயத்தைக் கொடுத்தது. சிறீபாலனுக்கு அந்தக்காட்சி திகைப் பாக இருந்தாலும் உமாவின் மன ஆறுத லுக்காக, "ஸ்மாற்போன் தன்னுடைய பாட்டில் அப்டேற் செய்கின்றது" என்று சொல்லி வைத்தான்.

"உங்கடை ஸ்மாற்போன் இப்படி அப்டேற் செய்வதில்லையே?" உமாவிற்கு சிறீபாலனின் பதிலில் திருப்தி இருக்க வில்லை.

சிறீபாலனின் சமாதானம் உமாவிற்கு மட்டுமேயானது. அவனுடைய மனதிலும் பதில் காணமுடியாத கேள்விகள் எழுந்தன. இவை எல்லாம் தகவல் தொழில் நுட்பத்தின் மறுபக்கங்கள் என்றாலும் இதைச் செய்பவர்கள் யார்? ஏன் செய்கின் றார்கள்?

அதன் பின்னர் முகநூலில் போடும் பதிவுகள் எல்லாம் தனக்காகவே போடப் படுகின்றன எனப் பயந்தாள் உமா. கொம்பியூட்டரின் முன்னால் பல மணி நேரம் சுய நினைவற்றவர்கள் போல் இருந்தாள். நள்ளிரவில் திடீர் திடீரென விழிப்படைந்து, முகநூலைத் தட்டிப் பார்ப்பதும், பேயறைந்தவள் போல் இருப்பதுமாக இருந்தாள்.

"என்ன உமா? ஏன் இப்படி இருக் கின்றீர்?"

"எனக்கு ஒன்றுமில்லை!"

சிலநாட்களாக தனது முகநூலை செயலற்றுப் போகச் செய்வதும், பின்னர் திரும்ப செயல்படவைத்து இடையில் ஏதாவது நடந்திருக்கின்றதா எனப் பார்ப்பதுமாக இருந்தாள்.

தனது முகநூலில் போடப்பட்ட புகைப் படங்கள் பிரதி செய்யப்பட்டுள்ள தாகவும், தான் வேலை செய்வது சார்ந்த தகவல்கள் திருடப் பட்டுள்ளதாகவும் சொன்னாள்.

"உமா! அப்படியென்றால் முகநூலை மூடிவிடு!"

அதற்கு அவள் சம்மதிக்கவில்லை. சாப்பிடாமல் இருந்தாலும் இருக்க முடியுமே தவர முகநூலை மூடிவிட முடியாது என்றாள் உமா.

மனோகரி குடுத்துச் சென்ற ஸ்மாற் போனின் பாவனையின் பின்னர்தான் இத்தகைய விசித்திரங்கள் ஆரம்ப மாகின.

இப்படியான பதகளிப்பில் உமா இருக்கும் போது, ஒருநாள் அமெரிக் காவில் இருந்து மனோகரி தொலைபேசி எடுத்தாள்.

"உமா! இப்போது நீர் எங்கு வேலை செய்கின்றீர்?"

மனோகரி அவுஸ்திரேலியா வந்து போனதன் பின்னர், உமா இன்னொரு

புதிய இடத்திற்கு வேலை மாறியிருந்தாள். அதை எப்படியோ மோப்பம் பிடித்திருந்தாள் மனோகரி.

"அவுஸ்திரேலியா, நீர் வந்தபோது தானே எல்லாம் சொல்லிவிட்டேன்."

"பரவாயில்லை. இன்னுமொருக்கா சொல்லுமன். நீர் வேலை செய்யுமிடத்தில் ஸ்ரீலங்கன்ஸ் இண்டியன்ஸ் வேலை செய்கின்றார்களா?"

"மனோகரி... வெளிநாட்டுக்கு வந்ததன் பிற்பாடும் இதுகளை நோண்டிக் கொண்டிருக்கக் கூடாது."

"சரி...சரி... அப்ப வைப்பம்."

கதைக்கும்போதுகூட யார் மனதையும் நோகடிக்கக் கூடாது என்பதில் கருத்தாக இருப்பவள் உமா. நம்மை நாமாக வாழ விடுகின்றார்கள் இல்லையே எனக் கவலை கொண்டாள் அவள்.

தொலைபேசி உரையாடல் முடிந்து அரை மணி நேரம் இருக்கலாம். உமா புதிதாக வேலை செய்யும் நிறுவனத்திற்கு உலகின் பல பாகங்களிலும் கிளைகள் இருந்தன. அந்தக் கம்பெனியின் அமெரிக்கக் கிளையின் புகைப் படத்தை மனோகரி தனது முகநூலில் பதிவிட்டிருந்தாள்.

இதை கணவனுக்குச் சொன்னால் விபரீதம் ஆகிவிடும் என்பதால் மூடி மறைத்தாள் உமா. ஆனால் மனதில் பல ஆயிரம் கேள்விகள் உருவாகிப் பயமுறுத்தின.

இன்னுமொரு தடவை அவர்கள் ஒரு செத்தவீட்டிற்குப் போகும்போது வழியில் ஒரே மஞ்சள் பூக்கள் பூத்த வயற்காட்டைக் கடந்து சென்றார்கள். அது ஏதோ தானியப் பயிராக இருக்க வேண்டும். அதன் அருகில் நின்று ஒரு புகைப்படம் எடுத்து பேஸ்புக்கில் போட விரும்பினாள் உமா. அது ஒரு ஹைவே என்பதால் காரை நிறுத்த முடியாமல் போய் விட்டது. படம் எடுக்க முடியவில்லை.

வீட்டிற்கு வந்து சில மணி நேரம் இருக்கும். உமா பேஸ்புக்கைத் திறந்த போது, அதே மஞ்சள் வயற்காட்டு வெளியில் அவளது தோழி சிவானி படம் எடுத்துப் போட்டிருந்தாள். ஆச்சரியம் என்னவென்றால் சிவானி இருப்பது இருபது மணி நேரம் கார் ஓடும் தூர மான பிறிஸ்பேர்ணில். முடிச்சுக்கள் அவிழ்வது போலவும், ஒரு திகில் படத்தைப் பார்ப்பது போன்றும் இருந்தது உமாவிற்கு. மனோகரியும் சிவானியும் முகநூல் நண்பர்களாக இருப்பதைக் கண்டுபிடித்தாள். எப்படி அவர்கள் இருவரும் நண்பர்கள் ஆனார்கள்? உமாவின் மனம் சஞ்சலப்படுகின்றது. அவளா? இவளா? மனசு தராசு முள்ளாக ஆடுகின்றது.

அந்தப்படத்தை சிறீபாலனும் தன் இரண்டு கண்களாலும் பார்த்திருந்தான்.

மனோகரியின் வருகைக்கு முன்னர் கூத்தும் கும்மாளமுமாக மகிழ்ச்சியாக இருந்த குடும்பம். இன்று மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் போலாகிவிட்டது. வாழ்க்கை யானை புகுந்த வயல்காடாகிவிட்டது.

உமா விதம்விதமான கற்பனைகளை தன் மன அடுக்குகளில் உருவாக்கிக் கொண்டாள். தன்னுடைய ஸ்மாற் போனிற்குள் ஒரு செயலி இருந்து கொண்டு இங்கு அவுஸ்திரேலியாவில் தன்னைச்சுற்றி நடப்பவற்றை, அமெரிக்காவில் மனோகரிக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றது என நினைத்தாள். முகநூலில் தன்னைப் பலர் உசுப்பேத்துவது போலவும், முகநூலில் உள்ள ஓட்டை உடைசலுக்குள்ளால் யாரோ புகுந்து தனக்கு எதிராகச் சதித்திட்டங்கள் தீட்டுவதாகவும் விரக்தி கொண்டாள். சிறீபாலனுக்குச் சொன்னவற்றை விடவும், இன்னும் பலவற்றை தன்னுள் அடக்கி வைத்திருந்தாள்.

சிறீபாலனுக்குப் பக்கத்தில் ஒரு வெள்ளையினத்தவர் வந்து அமர்ந்தார். அவர் தன்னை டேவிட் என அறிமுகம் செய்துகொண்டார். வயது ஐம்பதிற்கு மேல் இருக்கலாம். மொட்டை விழுந்திருந்தது. மொட்டந்தலையில் சில வியர்வைத் துளிகள் கோர்த்திருந்தன. கதைக்கும் போது இடையிடையே நோய்களின் மருத்துவப் பெயர்களையெல்லாம் எடுத்து விட்டார். நிரம்பப் படித்த அவரது இடது கையில் ஏதோ ஒன்று பூட்டியிருந்தது. வேண்டும்போது அதனால் அவரது வலது கையையும் சேர்த்துப் பூட்டிக்கொள்ளக்கூடிய கருவி அது. திடீரென்று எழுந்து தொலைக் காட்சிப் பெட்டிக்குப் பின்னால் இருந்த செக்கியூரிட்டிக்கமராவின் அருகில் சென்று வினோதமாக அதனைப் பார்த்தார்.

"இது எல்லாம் என்னத்துக்குப் பூட்டியிருக்கு என்று உங்களுக்குத் தெரியுமா?" தானாகவே சிறீபாலனுடன் கதையை ஆரம்பித்தார்.

"இல்லை. சொல்லுங்கள்!"

"இவைஎல்லாம் என்னைக் கையும் மெய்யுமாகப் பிடிச்சு சிறைக்குள் போடுவதற்குத்தான். நான் இன்னும் கொஞ்சநாட்களில் சமூக விரோதிகள் நாலுபேரைக் கொல்லப்போகின்றேன் என்ற திட்டத்தை எப்படியோ இவர்கள் அறிந்துவிட்டார்கள். இங்கே பூட்டியிருக்கின்ற எல்லாக் கமராக்களுக்குள்ளாலும் என்னைக் கண்காணித்தபடி இருக்கின்றார்கள்."

சிறீபாலன் இருக்கையில் அமர்ந்தபடியே, அவருக்கு எதிராக இரண்டு அடிகள் பின்னோக்கிச் சறுக்கீஸ் விட்டு அமர்ந்தான்.

"உங்களுக்கு இன்னுமொன்று சொல்வேன். என்னுடைய மனைவி கொஞ்ச நாட்களுக்கு முன்னர், நடு இரவில் நான் உறங்கிக் கொண்டிருக்கும்போது என்னைக் கொல்லப் பார்த்தார். எங்கள் வீட்டில் இருந்த கமராதான் அவளைப் பிடித்துக் கொடுத்தது. இப்போ ஜெயிலுக்குள் கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றார்."

டேவிட்டின் கதை பேச்சு எல்லாம், அவருக்குச் சம்பந்தமில்லாமல் வினோதமாக இருப்பதை உணர்ந்தான் சிறீபாலன்.

"இன்று காலை இங்கு நடந்த கூத்தைக் கேளுங்கள். ஆசிய நாட்டுப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். உங்கள் நிறம்தான் அவருக்கும். திடீரென்று கூக்குரல் போட்டபடி மைக்கிறோவேவை நிலத்தில் போட்டு உடைத்தார். ரெலிவிஷனை நொருக்கினார். அவரைத் தனித்த அறைக்குள் போட்டுவிட்டார்கள். அவர் செய்த காரியம் என்ன தெரியுமோ? தன்னுடைய உடுப்புகளை எல்லாம் கிழிச்சு எறிஞ்சு போட்டுதன்னைத் திறந்து விடும்படி சத்தமிட்டார், ஒன்றும் பயனில்லாது போக தனது மலத்தை எடுத்து கமராவிற்கு வீசி எறிந்தார். அறை முழுவதும் துர்நாற்றம் அடிக்கும் வண்ணம் ஜன்னல்கம்பிகள் எல்லாவற்றிலும் பரவிப் பூசினார். எனக்கு ஒரே புளுகம். இஞ்சை இருக்கிற எல்லாக் கமராக்களுக்கும் இப்பிடி எறியவேணும்" சொல்லிவிட்டுக் கெக்கட்டம் போட்டுச் சிரித்தார் டேவிட். பின் சிறீபாலனைக் கூர்ந்து பார்த்து, அவர் கோபப்படவில்லை என்பதை ஊகித்துக் கொண்டு மீண்டும் சிரிக்கத் தொடங்கினார்.

அவரின் சிரிப்புச் சத்தம் கேட்டு உள்ளேயிருந்த பெண் தாதி வெளியே வந்து எட்டிப் பார்த்தார்.

"டேவிட் எப்பிடி வெளியிலை போனனீங்கள். எங்களுக்குச் சொல்லாமல் வெளியிலை போகக்கூடாது என்று எத்தனை தடவைகள் சொல்லிப்போட்டம். நல்ல காலம். உங்கள் மனைவி இன்னும்

வரவில்லை. கெதியில் உள்ளுக்குப் போங்கள்" திட்டியபடி டேவிட்டைக் உள்ளே கலைத்தார் அவர்.

"மனைவி ஜெயிலுக்குள் என்று சொன்னாரே!" தாதியிடம் கேட்டான் சிறீபாலன்.

"என்ன செய்வது? எல்லாருடைய கதையையும் கேட்கச் சோகமாகத்தான் இருக்கின்றது. டேவிட்டும் மனைவியும் பல வருடங்களுக்கு முன்னரே விவாக ரத்துச் செய்தவர்கள். பாவம் அந்தப் பெண்மணி. டேவிட்டிற்கு இப்படியாகப் போனதன் பின்னர் திரும்பவும் அவருடன் வந்து இணைந்திருக்கின்றார். அடிக்கடி இங்கே வந்து டேவிட்டைப் பார்த்துச் செல்வார்."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது, உமா இரண்டு பெண் தாதியர் களின் நடுவே ராணி போல வந்து கொண்டிருந்தாள். அவர்கள் பின்னாலே சற்றுத் தூரத்தில் டாக்டர் தன் ஸ்டெதஸ் கோப்பைச் சுழட்டியவாறே விரைந்து வந்து கொண்டிருந்தார்.

உமா சிறீபாலனைக் கண்டுவிட்டாள். சிறீபாலன் கரையில் ஒதுங்கி நின்று உமாவின் வரவை எதிர்பார்ப்பதை தாதி மார்களும் புரிந்து கொண்டார்கள். அண்மித்ததும்,

"எப்பிடி இருக்கின்றீர்கள்? சுகனும் பரதனும் ஸ்கூலுக்கு ஒழுங்கா போறான்களா? இன்னும் இரண்டு கிழமையிலை வீட்டிற்குப் போய் விடலாம் என்று டொக்ரர் சொன்னவர்" உமா சிறீபாலனைக் கட்டித் தழுவி குதூ கலத்துடன் சொன்னாள்.

அவளின் உடல் சுகந்தம் வீசியது. தலை மயிரின் 'பன்ரீன் புறோபீன்' வாசம் நறுமண வட்டம் எழுப்பியது. குளித்து முழுகி உடல் எங்கும் ஸ்பிறே விசிறி ஒரு மகா ராணியைப் போல நின்றாள். வீட்டில்கூட இப்படி அவள் இருந்தது கிடையாது.

டாக்கடர் சிறிது நேரத்தில் சிறீபா லனைச் சந்திப்பதாகக் கூறிச் சென்றார்.

"சாப்பாட்டைக் கவனியுங்கோ. வேலைக்கு ஒழுங்காப் போய் வாருங்கோ. என்னைப் பற்றி ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். இன்னும் கொஞ்ச நாளில் வீட்டிற்கு வந்து விடுவேன்" விடை பெற்றாள் உமா. சிறீபாலனிற்கு எல்லாமே வியப் பாக இருந்தது.

டேவிட் சொல்லிச் சென்ற ஆசிய நாட்டுப் பெண், சிறீபாலனின் மூளைக் குள்ளிருந்து வெளியே எட்டிப் பார்த்தாள். அவன் சொன்னவற்றுள் எது உண்மை, எது பொய் என்று சிறீபாலனின் மனம் அசை போட்டது.

சிறிது நேரத்தில் வைத்தியரிடமிருந்து சிறீபாலனுக்கு அழைப்பு வந்தது.

"உமாவில் சிறிது சிறிதாக முன்னேற் றங்கள் தெரிகின்றது. இப்போது மருந்து கள் சாப்பிடுகின்றார். ஷொக் றீற்மன்ற் தேவையில்லை என நினைக்கின்றேன்" வைத்தியர் சொல்லிக் கொண்டிருக்கும் போது இடை மறித்தான் சிறீபாலன்.

"டொக்ரர் உமாவை முற்று முழு தாகக் குணப்படுத்த முடியாதா?"

சிறீபாலனின் கேள்விக்கு வைத்தியர் புன்முறுவல் செய்தார்.

"நீங்கள் அறாறட் (Ararat) என்ற இடத்தில் இருக்கும் புத்திசுவாதின முற்ற வர்கள், பைத்தியங்கள் தங்கும் விடுதி யைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின் றீர்களா?

மெல்பேர்ணில் இருந்து இரு நூறு கிலோ மீட்டர்கள் தூரத்தில்தான் இந்தக் காப்பகம் இருக்கின்றது. 130 வருடங்களில் 13,000 இறப்புகள் இங்கே நடந்திருக்கின்றது என்று சொன்னால் ஆச்சரியமாக இருக்கும் அல்லவா? நோயாளிகள் மாத்திரமின்றி அவர்களின் உறவினர்கள், காவலாளர்கள், வேலை செய்பவர்கள்கூட அங்கே இறந்திருக்

கின்றார்கள். 1998ஆம் ஆண்டுவரை இந்த விடுதி இயங்கியிருக்கின்றது. முன் பெல்லாம் வைத்தியசாலையில் இவர்க ளுக்கென்று தனிப்பிரிவு இருந்த தில்லை. எல்லோரும் இந்தக் காப்பகத் துக்குள்தான். இப்போது தொழில் நுட்பமும் எவ்வளவோ முன்னேறி விட்டது. இந்தவகை நோயாளர்களும் அதிகரித்துவிட்டார்கள்."

வைத்தியர் சிறீபாலனின் கேள்விக்கு பதில் தராமல் சுற்றி வளைத்து ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். சொல்ப வற்றில் பதிலைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை சிறீபாலனிடம் விட்டுவிட்டார்.

"இன்று காலை வேலைக்கு வந்து அரைமணி நேரத்திற்குள் ஒருவர் வீட்டிற்குத் திரும்பிவிட்டார். காரணம் முகநூல். முக நூலில் யாரோ அவரைப் பற்றி அவதூறாக எழுதிவிட்டார். அதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவம் இல்லாமல், தொடர்ந்து வேலை செய்ய முடியாமல் இருந்ததால் லீவைப் போட்டு விட்டுப் போய்விட்டார். வேலை செய்யு மிடங்களில் இவற்றைப் பாவிக்காதீர்கள் என்று சொன்னாலும் சிலர் கேட்பதாக வில்லை."

"டொக்ரர்....! முகநூல், ருவிட்டர் மூலம் சமீபத்தில் இந்தியாவில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் அகப்பட்ட வர்களை மீட்டெடுத்து காப்பாற்ற முடிந் திருக்கின்றதே!" சிறீபாலன் மறுத்துப் போட்டான்.

"உண்மைதான்.... அதனால்தான் - எதையும் தாங்கும் தைரியம் இல்லா தவர்கள், நவீன தொழில்நுட்பம் கொண்ட கருவிகளை பாவிக்காது தவிர்த்து விடுதல் நல்லது என்று சொல்லி வருகின்றேன். உங்களுக்கு ஒன்று தெரியுமா? ரஷ்சியாவில் உயர் ரகசியங் களைப் பேணும் இடங்களில் எல்லாம் இப்போது இந்தவகை தொழில்நுட்ப சாதனங்களைப் பாவிப்பதில்லை. தட்டச்சு செய்வதற்குக் கூட கொம்பியூட்டர் பாவிப்பதில்லை. பழைய டொக்குடா ரைப் றைட்டர்"தான்."

தொடர்ந்தார் வைத்தியர், "நாங்கள் இங்கே நோயாளிகளுக்கு மருந்து மாத்தி ரைகள் மாத்திரம் கொடுப்பதில்லை. நம்பிக்கையூட்டும் விதத்தில் அவர் களுடன் உரையாடுகின்றோம். அதன் தொடர்ச்சியை நீங்களும் செய்தல் வேண்டும். சமூகத்தில் இதைப்பற்றிய விழிப்புணர்ச்சியை பரவச் செய் யுங்கள். உமா விரைவில் வீடு வந்து விடுவார். இனி அவரைப் பின் தொடரும் டாக்டர் நீங்கள்தான்."

சிறீபாலனுக்கு நம்பிக்கை பிறக் கின்றது.

வீட்டிற்குச் சென்றதும் முதல் வேலையாக உமாவின் அந்தப் பிசாசு பிடித்த ஸ்மாற்போனை ஒரு பொலித்தீன் பைக்குள் போட்டு பேப்பரினால் சுற்றி வைத்தான்.

மறுநாள் வேலைக்குச் செல்லும்போது காரை 'யாறா' ஆற்றுக்கு அண்மையாக நிறுத்தினான். தலையைச் சுற்றி உமாவின் போனை மூன்றுதடவைகள் சுற்றிவிட்டு தண்ணீருக்குள் எறிந்தான். குமுறிக்கொண்டிருந்த 'யாறா' நதி, 1400 டொலர்கள் பெறுமதிவாய்ந்த அந்த ஸ்மாற்போனை உள்வாங்கிக் கொண்டது. சிறீபாலன் பொக்கற்றுக்குள்ளிருந்த தனது ஸ்மாற்போனைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

❍

# வீழ்வேனென்றோ நினைத்தாய்

- அண்டனூர் சுரா






இயற்பெயர் - சு.ராஜமாணிக்கம்
தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டத்தில் அண்டனூர் என்கிற குக்கிராமத்தைச் சேர்ந்தவர். ஆசிரியர் பணி. பத்து வருடங்களாக தீவிரமாக எழுதிக்கொண்டிருப்பவர். கல்கி, தினமணி, லண்டன் புதினம், ஆஸ்திரேலியா அக்னிக்குஞ்சு நடத்திய சிறுகதைப் போட்டிகள் உட்பட பல போட்டிகளில் பரிசுகள் பெற்றவர். மழைக்குப் பிறகான பொழுது, திற, நாடோடிக்கலைஞன் மீதான விசாரணை என்கிற மூன்று சிறுகதைத் தொகுப்புகளும் முட்டாள்களின் கீழ் உலகம் என்கிற கட்டுரைத் தொகுப்பும் முத்தன் பள்ளம் என்கிற நாவலையும் வெளிக்கொண்டு வந்துள்ளார். செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச்சிறுகதை போட்டியில் (2017) இவரது "தீயடி அரவம்" என்ற சிறுகதை முதற் பரிசுபெற்றது. தற்பொழுது அப்பலோ என்கிற நாவலை எழுதிக்கொண்டிருக்கிறார்.

மே மாதம், ப்ளஸ் டூ தேர்வு முடிவு வெளியான அன்றைக்கும் கூட அப்படிதான். உறவினர்கள், அண்டை வாசிகள் என பலரும் அவளது பிறந்த நாளையும், தேர்வு எண்ணையும் கேட்டு நச்சரித்திருந்தார்கள். அவளை விடவும் அவளது உறவினர்களுக்கே அவள் பெறப்போகிற மதிப் பெண்ணைத் தெரிந்து கொள்வதில் அதிக ஆர்வமிருந்தது. ஆனால் அவள் யாரிடமும் தன்னை பற்றிய குறிப்பு களைப் பகிர்ந்துகொள்ளவில்லை. விடிந்ததும் தன் தம்பி சீமானை அழைத்து கொண்டு அவளுக்குப் பரிச்சயமான கணினி மையத்திற்குச் சென்றிருந்தாள். தேர்வு முடிவு மட்டுமல்ல, அவளுக்குத் தொடர்புடைய எதுவும் தனக்கு தெரிந்ததற்குப் பிறகே அடுத்தவர்களுக்குத் தெரிய வேண்டும் என நினைக்கும் சராசரியானவளாகவே ஜெயபாரதி இருந்தாள்.

(ஞானம் 225, பெப்ரவரி 2019)

**அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2018இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை**

பிளஸ் டூ தேர்வு முடிந்த அன்றைய தினம் அவளது அப்பா வேதநாயகம் கேட்டிருந்தார் 'ஜெயபாரதி எவ்ளோ மார்க் வரும்...?'. என்ன பதில் சொல்வதென்று அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனாலும் அவள் எதிர்ப்பார்த்த மார்க்கை சொல்லி வைத்தாள். 'தொள்ளாயிரத்து ஐம்பது வரும்ம்ப்பா....' அப்படியாகச் சொல்ல அவளுக்கு கொஞ்சம் தயக்கமிருக்கவே செய்தது. ஆனால் வேதநாயகம் தன் மகளிடம் அவ்வளவு மதிப்பெண் எதிர்ப்பார்க்கவில்லை. எண்ணூறு, எண்ணூற்று ஐம்பது அவ்வளவேதான் அவரது கணிப்பு, எதிர்ப்பார்ப்பு எல்லாம். அந்த அளவிற்கான மதிப்பெண்ணே அவருக்கு போதுமென இருந்தது. அதை நினைக்கையில் அவருக்கு கிரீடம் முளைத்தது. அவர் பெருமிதத்துடன் நடந்தார். நடையில் ஒரு வித குதிப்பும், மான் குட்டியின் பரவச துள்ளலுமிருந்தது.

வீட்டை விட்டு கணினி மையத்திற்கு சென்றிருந்த மகள் வீடு திரும்புகையில், வீடும் தெருவும் வியப்பில் ஆழ்ந்தது. ஊரே அவள் குறித்த பேச்சுதான். அவள், எதிர்ப்பார்த்த மதிப்பெண்ணை விடவும் இருநூறு மதிப்பெண் கூடுதலாகப் பெற்றிருந்தாள். அவள் பெற்ற மதிப்பெண் அவளுக்கே வியப்பைத் தரும் படியாக இருந்தது. இத்தனைக்கும் அவள் படித்தது ஓர் அரசு பள்ளி. இரு பாலர் பயிலும் பள்ளியும் கூட.

அதிகாலை எழுந்து டியூசன், டியூசன் முடிந்து ஸ்கூல், ஸ்கூல் முடிந்து திரும்பவும் டியூசன்,... வீடு என்கிற ஒன்று உறங்கவும், இரண்டு வேளை சாப்பிட மட்டுமாகவே இருந்தது. அவளது இரு வருட காலக்கடிகாரம் அப்படியான ஒரே அச்சிலேயே சுற்றியிருந்தது. இரண்டு வருட உழைப்பால் அவளது குடும்பம் மட்டுமல்ல அவள் படித்த பள்ளிக்கூடம் கூட இம்மதிப்'பெண்'ணால் புதுப்பொலிவு பெற்றது. ஒரு பசுங்கன்றை பெற்றெடுத்து விட்ட மகிழ்ச்சியில் தழைக்கும் பசுவின் புத்துயிர்ப்பு அப்பள்ளிக்கு.

**ஒன்றிரண்டு தொலைக்காட்சிகள் இரண்டு மூன்று கல்வியாளர்களை வட்ட மேஜையில் உட்கார வைத்து கொண்டு நீட் தேர்வில் தமிழ்நாடு பிடித்திருக்கும் இடத்தையும், சிபிஎஸ் – ஸ்டேட் போர்டு, நீட் தேர்வு தேவை, தேவையற்றது குறித்து விவாதிக்கத் தொடங்கின. சற்று நேரத்தில் அத்தொலைக்காட்சி இச்செய்தி ஒன்றுக்காகதான் இவ்வளவு நேரம் காத்திருந்ததைப்போல, மற்றொரு ப்ரேக்கிங் செய்தியை வெளியிட்டது. 'நீட் தேர்வு முடிவு எதிரொலி, ஏமாற்றத்தில் திருச்சி மாணவி தற்கொலை..' அச்செய்தி ப்ரேக்கிங் செய்திக்குரிய பரபரப்புடன் இரங்கல் பின்னணி இசையுடன் கூடிய செய்தியாக ஒளிபரப்பானது.**

வேதநாயகம் அன்றைய தினம் வேலைக்குச் செல்லவில்லை. மகளின் நீட் தேர்வு மதிப்பெண்ணைத் தெரிந்து கொள்வதற்காக வீட்டிலேயே இருந்தார். அவர், ஒரு செய்தி தொலைக்காட்சியை எடுத்து வைத்து கொண்டு கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது மனைவி கோமதி சமையலறைக்கும் தொலைக் காட்சிக்குமாக ஓடிக்கொண்டிருந்தாள். சற்று நேரத்தில், அவர்கள் எதிர்ப்பார்த்திருந்த ப்ரேக்கிங் செய்தி கண்முன்னே விரிந்தது. 'நீட் தேர்வு முடிவு வெளியீடு. தமிழக அளவில் முதலிடம் பிடித்து மாணவி கீர்த்தனா சாதனை...' செய்தியும் செய்திக்கு பின் ஒலித்த இசையும் வீட்டின் நான்கு மூலைகளையும் தொலைக் காட்சியின் திரைக்கு முன் கொண்டுவந்து நிறுத்தியது.

வேதநாயகத்திற்கு அச்செய்தியைப் பார்க்கையில் ஏக்கமாக இருந்தது. அவர் கீர்த்தனா என்கிற இடத்தில் தன் மகள் ஜெயபாரதியை வைத்து மனதிற்குள் ஆழ்ந்தார். சமையலில் கவனம் செலுத்திய கோமதி, கை கரண்டியுடன் இடுப்பிற்கு இரண்டு கைகளையும் கொடுத்து தொலைக்காட்சி முன் வந்து நின்றாள். செய்தி வாசிப்பாளர் அத்தனை பெருமிதத் துடன் நீட் தேர்வு குறித்த செய்தியை வாசித்து கொண்டிருந்தார்.

வேதநாயகம் கையில் ரிமோட் இருந்தது. அவர் அடுத்தடுத்த சேனலுக்கு மாறுவதும், சற்று நேரம் அதை நிறுத்திப் பார்த்துவிட்டு வேறொரு சேனலுக்கு தாவுவதுமாக இருந்தார். எல்லா செய்தி தொலைக்காட்சியிலும் நீட் தேர்வு முடிவு குறித்த செய்தியே முதன்மை செய்தியாக ஓடிக்கொண்டிருந்தது. ஒன்றிரண்டு தொலைக்காட்சிகள் இரண்டு மூன்று கல்வியாளர்களை வட்ட மேஜையில் உட்கார வைத்து கொண்டு நீட் தேர்வில் தமிழ்நாடு பிடித்திருக்கும் இடத்தையும், சிபிஎஸ் - ஸ்டேட் போர்டு, நீட் தேர்வு தேவை, தேவையற்றது குறித்து விவாதிக்கத் தொடங்கின. சற்று நேரத்தில் அத்தொலைக்காட்சி இச்செய்தி ஒன்றுக்காகதான் இவ்வளவு நேரம் காத்திருந்ததைப்போல, மற்றொரு ப்ரேக்கிங் செய்தியை வெளியிட்டது. ‘நீட் தேர்வு முடிவு எதிரொலி, ஏமாற்றத்தில் திருச்சி மாணவி தற்கொலை..’ அச்செய்தி ப்ரேக்கிங் செய்திக்குரிய பரபரப்புடன் இரங்கல் பின்னணி இசையுடன் கூடிய செய்தியாக ஒளிபரப்பானது. ஒரு பெண் செய்தி வாசிப்பாளர் அச்சேனலுக்குரிய நீட்டல், நிறுத்தலுடன் அச்செய்தியை வாசித்து கொண்டிருந்தார்.

அச்செய்தி, கோமதியை பதற்றத்திற்கு உள்ளாக்கியது. அவளது கையிலிருந்த பாத்திரங்கள் அவளையும் அறியாமல் தவறுவதும், உருள்வதுமாக இருந்தன. அவள் திரும்பவும் தொலைக்காட்சியின் முன் வந்து நின்றாள். சற்று முன்பு வரைக்கும் முதன்மை செய்தியாக இருந்த நீட் தேர்வு முடிவும், முதல் மதிப் பெண் எடுத்த மாணவியும் இரண்டாம் செய்தியாகி ‘இதற்கிடையில்’ என்கிற பதற்றச் சொல்லுடன் தற்கொலை செய்து கொண்ட மாணவி முதன்மை இடத்திற்கு வந்திருந்தாள். கோமதி, கணவன் பக்கமாகத் திரும்பி ‘எந்த ஊர் பொண்ணு...?’ எனக் கேட்டாள். அவர், ‘ திருச்சி...’ என்றதும் அவளது உதடுகள் ‘இச்சூச்சூ...’ கொட்டின. கோமதியின் முகம் இருளத் தொடங்கியது. அவ ளையும் அறியாமல் மகள் ஜெயபாரதி கண்முன் வந்து நின்றாள்.

வேதநாயகம், அச்செய்தியிலிருந்து மற்றொரு சேனலுக்கு மாறினார். அதில் முதல் மதிப்பெண் எடுத்த மாணவி தலைப்பு செய்தியிலேயே இருந்தாலும் வரி செய்தி தற்கொலை செய்து கொண்ட மாணவி குறித்த செய்தியாக ஓடிக்கொண்டிருந்தது.

கோமதி வாசலுக்கு ஓடி வந்தாள். இது நாள் வரைக்கும் பற்றாத ஒரு பதற்றத் தீ அவளைப் பற்றியது. அவள், நீட் ரிசல்ட் பார்த்து வருகிறே னென்று கம்ப்யூட்டர் மையம் வரைக்கும் சென்றிருந்த மகளின் வருகைக்காக ஏங்கினாள். கண்கள் அவளது முகத் தையே தேடுவதாக இருந்தன.

தொலைக்காட்சியிலிருந்து பார்வை யை எடுத்து வாசலுக்கு ஓடி வந்தார் வேதநாயகம். அவரது முகத்தில் ஈரலை நடுங்கச் செய்யும் பதற்றம் இருக்கவே செய்தது. ஆனால் அதை வெளியில் காட்டிக்கொள்ளாதவராய் மனைவியைப் பார்த்து ‘கோமதி, ஏன் இப்படி நிற்கிறே...?’ எனக் கேட்டார்.

‘ஜெயபாரதிய இன்னும் காணோம்ங்க..’ அவளால் அதே சொல்ல முடிந்திருக்க

**'அவள் இன்னும் கிடைக்கலையா...?' விம்மலும், கண்ணீரில் பதத்துபோன குரலுமாக அக்கேள்வி இருந்தது. அதற்குமேல் அவரால் ஒன்றும் பேச முடிந்திருக்கவில்லை. வாய் பேச வேண்டிய வார்த்தைகளை அவரது நாசிகள் பேசின. அடுத்து என்ன செய்வதாம், போலீஸ் ஸ்டேசன் போகலாம் என நினைத்தார். அங்கு போனால் போலீஸ்காரர்கள் என்ன கேட்பார்கள், ' உன் பொண்ணு யாரையேனும்....' அதை நினைக்கவே அவரது இதயம் அறுவதைப்போலிருந்தது.**

வில்லை. அவள், கைகளைப் பிசைவதும், தலையைச் சொறிவதுமாக இருந்தாள். அவள், வீட்டிற்குள் ஓடி அடுப்பிலிருந்த குழம்பை திறந்துகூட பார்க்காமல் அடுப்பை அமர்த்திவிட்டு திரும்பவும் அவள் வாசலுக்கு ஓடி வந்தாள். அவளுடைய முகம் வியர்த் திருந்தது. அவிழ்ந்த கூந்தலை அள்ளி முடியாமல் மார்பிற்கிடையில் ஓடிக் கிடந்த முந்தாளையை கூட எடுத்து விட்டுக்கொள்ளாமல் அப்படியே நின்ற வாறு மகள் போன திசையில் கண் வைத்து காத்திருந்தாள்.

'ஏங்க. ஓடிப்போய் புள்ளய அழைச்சிட்டு வந்திடுங்க...' கோமதி சொன்னதையே வேதநாயகமும் நினைத் தார். ஆனால் அவள் சொன்னதன் பிறகு அப்படியாகச் செல்ல அவரது மனம் இடம் கொடுக்கவில்லை. இத்தனை நாட்கள், மகளின் மீது வைத்திருந்த பற்றுதலும் அவள் மீது எழுப்பியிருந்த நம்பிக்கையும் சடுதியில் நொறுங்கு வதைப் போல உணர்ந்தார். இரண்டடிகள் முன் எடுத்து வைத்த கால்கள் நான்கடி கள் பின் வாங்கின.

'போயிட்டுதான் வாங்களேங்க...'

' எங்கேடி போகச் சொல்றே. அவள் ரிசல்ட் பார்த்து திரும்ப வேண்டாமா, இரு, இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவா...'

நான் போகிறேனென கோமதி கொஞ்ச தூரம் நடந்தாள். நடையில் வேகமிருந்தாலும் எப்பக்கம் போக வேண்டுமென்று அவளுக்குத் தெரிந்தி ருக்கவில்லை. சாலையின் விளிம்பில் போய் நின்று மகளின் வருகைக்காக ஏங்கினாள். மகள் வரும் சமிக்ஞை அவளுக்கு கிடைக்கவில்லை. போன வேகத்தில் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள். அவள் திரும்பியதும் வேத நாயகம் சாலைக்கு ஓடினார். தூரத்தில் சீமான் சைக்கிளில் வருவது தெரிந்தது.

'என்னங்க புள்ள வந்திட்டாளா...?'

'இம்,..' என்றவாறு அவன் வீட்டிற்குள் நுழைந்தான்.

'என்னங்க, சீமான் மட்டும் தான்ங்க வாறான்...'

வேதநாயகம் வாசலுக்கு வந்தார். 'உனக்கு என்னடியாச்சு...ம்....? சீமான் மட்டும் வந்தால் என்ன, அவள் பின்னாடி வருவாள், ஏன்டி இப்படி பதறுற...' அப்படி சொன்னாலும் அவருக்கும் படபடப்பு இருக்கவே செய்தது.

'உங்களுக்கு எப்பதான் புள்ள மேல கவலை வந்துச்சு, ம்...?. நீங்க போயி டீவிய கட்டிக்கிட்டு அழுங்க. எனக்கிள்ள பெத்த வயிறு பதைக்குது...' அவளது முணங்கல் அவரது பதற்றத்தை மேலும் கூட்டியிருந்தது.

சீமான் சைக்கிளை வாசலில் நிறுத்தினான். ஒரே நேரத்தில் தாயும், தந்தையும் கேட்டார்கள். 'ரிசல்ட் என்னாச்சுப்பா...?' ' அக்கா எங்கேடா...?'

சீமான் இருவரையும் ஒரு சேரப் பார்த்தான். முதலில் அப்பா கேட்ட கேள்விக்கு பதிலைச் சொன்னான் 'அக்கா பாவம்ப்பா, நீட்ல அவள் செலெக்ட் ஆகல....'.

கோமதியின் ஈரல் நடுங்கியது. ‘அடேய், அதுவா முக்கியம், அவ எங்கேடா...?’

தாயின் கேள்வி அவனை பதைக்க வைத்தது. ‘நீ போடா தம்பி, நான் வாறேன்னு சொல்லிருச்சும்மா...’ கோமதியின் கால்கள் ஆட்டம் கண்டன. ‘என் புள்ளைய அங்கேயே விட்டுட்டு வந்திட்டியேடா, உன்னைய அதுக்காகவா அவ கூட போகச் சொன்னே...’ அவனது சட்டையைப்பிடித்து கன்னத்தில் அறைந்தாள்.

வேதநாயகம் சைக்கிளை எடுத்து கொண்டு கிளம்பினார். மகளைத் தேடிச் செல்கிறேன்... என்பதை நினைக்கையில் அவருக்குள் யாரோ உதைப்பதைப்போலிருந்தது. அவரால் சைக்கிளை மிதிக்க முடியவில்லை. அவர் நேராக கம்ப்யூட்டர் மையத்திற்குச் சென்றார். தன் மகளின் வருகைக் குறித்து விசாரிக்கவே தயக்கமாக இருந்தது. அவளைப் பற்றி விசாரிக்காமல் அவள் பெற்றிருக்கும் மதிப்பெண்ணைக் கேட்டார். கம்ப்யூட்டரின் முன் உட்கார்ந்திருந்தவர் ‘ஜெயபாரதியை நானும் கூட எதிர்ப்பார்த்தேன்ண்ணே... நூற்றி எட்டு மார்க் தானே எடுத்திருக்கா... பாவம் ரொம்ப ஃபீல் பண்ணினாள். யாரையும் பார்க்க அவளுக்கு பிடிக்கல. இவ்ளோ நேரம் இங்கேதான் இருந்தாள். இப்பதான் இந்தப் பக்கமாகப் போனாள்...’ அவர் கேட்கத் தயங்கிய கேள்விக்கும் சேர்த்து பதில் கிடைத்திருந்தது மனதிற்கு இதமாக இருந்தது. ‘வாறேன் தம்பி...’ என்றவாறு அவர் சைக்கிளை எடுத்துகொண்டு கம்ப்யூட்டர் பையன் சொன்ன வழியில் சைக்கிளைச் செலுத்தினார். இருபுறமும் பார்த்தவாறு சைக்கிளை மிதித்தார்.

‘அண்ணே...ஜெயபாரதி நீட்ல பாஸ் பண்ணிட்டாளா..?’ அவளது வயதையொத்த நான்கைந்து பெண்கள் அவரை வழி மறித்து கேட்டதும் அவர் சற்று சிரித்தவராக ‘ இல்லையேம்மா...’ என்றார் ‘அவளே செலெக்ட் ஆகலையா....’ என்றவாறு அவர்கள் நின்று பெருமூச்சு விட்டு நகர்ந்தார்கள். அவர் சைக்கிள் மணியை அடித்து ‘ஜெயபாரதிய பார்த்தீங்களா...’ எனக் கேட்டார்.

‘என்னண்ணே அவளைக் காணோமா.?’ என்றவாறு ஒரு பெண்ணின் வாய் பெரிதெனத் திறந்தது.

அவரது வாயில் ‘இம்...’ என்றே வந்தது. ஆனாலும் அதை தொண்டைக்குள் விழுங்கியவராக ‘இல்ல, உங்க பிரண்ட்டாச்சே, பார்த்தீங்களானு கேட்டேன்...’ என்றவாறு சைக்கிளைத் திருப்பினார். மகள் மீது அவருக்கு என்றைக்குமில்லாமல் கோபம் வரச் செய்தது. இந்நேரத்திற்கு அவள் வீட்டிற்கு சென்றிருக்க கூடும் என நினைத்த அவர், சைக்கிளை நேராக வீட்டிற்கு விட்டார். வீட்டு வாசலில் ஊர்க்காரர்கள் நான்கைந்து பேர் நின்றிருந்தார்கள். வீட்டை நெருங்குகையில் கோமதி கேட்டாள் ‘எங்கேங்க புள்ள...?’

‘வீட்டுக்கு போயிட்டதாக கடைக்காரர் சொன்னார் புள்ள..’

‘ இன்னும் வரலையேங்க...’

அவரது சைக்கிள் அவரையும் அறியாமல் திரும்பியது. மகளைத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்பதை நினைக்கவும், அதை அடுத்தவர்களிடம் சொல்லவும் மனதிற்கு பாரமாக இருந்தது. ‘ ஏங்க ஸ்கூல்ல பார்த்தீங்களா...?’

‘ இல்லையே புள்ள’

‘என்ன மனுசனோ, போங்க அப்படியே டியூசன்லயும் பார்த்திட்டு வாங்க...’

அவர் சைக்கிளிலிருந்து எழுந்து உந்தி மிதித்தார். ‘ஏங்க, பார்த்திட்டு போன் பண் ணுங்க...’ சுடு தண்ணீரை காலில் ஊற்றிக் கொணடு நிற்பதைப் போல அவளது தவிப்பிருந்தது.

வேதநாயகம் அத்தனை வேகத்தில் சைக்கிள் மிதித்து யாரும் பார்த்ததில்லை. சைக்கிளை கடைத்தெருக்களின் குறுக்கே செலுத்தி பெரிய கடை வீதிகளின் வழியே சென்றார். கடைகளுக்கு மதிய தினசரிகள் வந்திருந்தன. நீட் தேர்வு முடிவும், தற்கொலை செய்துகொண்ட இரு பெண்களின் செய்தியும் முக்கிய செய்தியாக இடம்பிடித்திருந்தன. ஒரு பெட்டிக்கடையில் தொங்கிய தற் கொலை குறித்த செய்தியுடன் கூடிய வால் பேப்பரைப் பார்க்கையில் அவரது உதடுகள் விம்மின. தூசி விழுந்து விட்டதைப்போல கண்கள் உறுத்தின. அவர் நேராக சென்று பள்ளியில் சைக் கிளை நிறுத்தினார். அவளுக்கு பாடம் நடத்திய ஆசிரியர்களிடம் விசாரித்தார். 'ஜெய பாரதி இங்கு வரலையே. வந்தால் என்னை பார்க்காமல் போக மாட்டாளே...' என அவர்கள் சொல்லியிருந்தார்கள்.

ஆசிரியரிடம் அவள் குறித்து பேச எத்தனையோ செய்திகள் இருந்தும் அதுக்குறித்து பேச அவரால் முடிந்திருக்க வில்லை அங்கேயே நின்றால் வாய் தவறி ஏதேனும் உளறிவிடுவேன் என்கிற தவிப்பில் அவர் அந்த இடத்தை விட்டு விலகினார். அடுத்ததாக, அவரது தேடல் அவள் படித்த டியூசனின் பால் சென்றது. டியூசனின் வெளிக்கதவுகள் பூட்டியிருந்தன. வீட்டிற்கு போன் பண்ணி விசாரிக்கலாமென்று பாக்கெட்டில் அலைபேசியைத் துழாவினார். அவச ரத்தில் செல்போனை வீட்டில் வைத்து விட்டு வந்தது நினைவிற்கு வந்தது. அதுவும் ஒரு வகையில் நல்லது என்றே பட்டது. அவ்வழியே போகிறவரை நிறுத்தி அவரிடம் போன் வாங்கி வீட்டிற்கு அழைப்பு விடுத்தார். எதிர் முகத்தில் முதல் 'ரிங்'லேயே அழைப்பு எடுக்கப்பட்டது. ' ஜெயபாரதி வீட்டுக்கு வந்திட்டாளா...?'

**ஜெயபாரதி வீட்டிற்கு வந்தாள். அவள் பள்ளி செல்கையில் டியூசன் முடிந்து வீடு திரும்புகிற நேரமாக அது இருந்தது. வீட்டு வாசலில் ஆட்கள் நிறைந்திருப்பதைப் பார்க்கையில் அவளுக்குள் அம்மா குறித்த கவலை சுருளெடுத்தது. நான் நீட் தேர்வில் தேர்வா காததற்காக, அம்மாவிற்கு ஏதேனும்..., அவள் இதய நோயாளி வேறு... அவளது கண்கள் அம்மாவின் இருப்பைத் தேடின. அம்மா ஒன்றும் நடக்காததைப்போல வாசலைக் கூட்டி பெருக்கிக் கொண்டிருந்தாள்.**

'அவள் இன்னும் கிடைக்கலையா...?' விம்மலும், கண்ணீரில் பதத்துபோன குரலுமாக அக்கேள்வி இருந்தது. அதற்கு மேல் அவரால் ஒன்றும் பேச முடிந்தி ருக்கவில்லை. வாய் பேச வேண்டிய வார்த்தைகளை அவரது நாசிகள் பேசின. அடுத்து என்ன செய்வதாம், போலீஸ் ஸ்டேசன் போகலாம் என நினைத்தார். அங்கு போனால் போலீஸ்காரர்கள் என்ன கேட்பார்கள், 'உன் பொண்ணு யாரை யேனும்....' அதை நினைக்கவே அவரது இதயம் அறுவதைப் போலிருந்தது. அவரது நினைவு அடுத்ததாக மாமியார் வீட்டிற்குத் தாவியது. அங்கு போயி ருப்பாளோ...?, இதுநாள் வரைக்கும் என்னிடம் சொல்லாமல் அங்கு சென்ற தில்லையே..., எதற்கும் தொடர்பு கொண்டு கேட்டு விடலாமென தொடர்பு கொண்டார்.

'ஹேலோ, நான்தான் மச்சான் பேசுறேன். ஜெயபாரதி...' சொல்லி வாய் மூடுவதற்குள் பதில் மச்சினனிடமிருந்து வந்தது. 'அவ இங்கே வரலையே மச்சான்...'

அவருக்கு இச்.. என்றிருந்தது. எனக்கு முன்பே கோமதி தொடர்பு கொண்டு கேட்டிருக்கிறாள். எப்படி கேட்டாளோ... அழுது ஒப்பாரி வைக்கத் தான் செய்திருப்பாள். காணோ மென்றி ருப்பாள்... காலையிலிருந்து தேடிக் கொண்டிருக்கிறோம். என்றும் கூட சொல்லி யிருப்பாள். அலைபேசியை உரியவரிடம் கொடுத்துவிட்டு அவருக்குத் தெரிந்த அவளது தோழிகளின் வீடுகளுக்கு சைக்கிளை விடுத்தார். கடைத்தெரு, கோயில், குளம்,...என எங்கும் தேடி முடிக்கையில் விளக்கு வைக்கும் நேரம் வந்திருந்தது. இந்நேரத்திற்கு அவள் வீட்டிற்கு வந்திருக்கவே செய்வாள் என்கிற நம்பிக்கையுடன் அவர் வீட்டை நோக்கி சைக்கிளை மிதித்தார்.

தூரத்திலிருந்து பார்க்கையில் வீட்டு வாசல் மனிதத் தலைகளாகத் தெரிந்தன. அவருக்குள் சுருள் சுருளாக கூடா நினைவு. நெஞ்சுக்கூட்டை அடைக்கும் தவிப்பு. அவர் சைக்கிளிலிருந்து இறங்கி தள்ளிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார். தெரு விளக்குகள் ஒளிரத் தொடங்கின.

கோமதி தலைவிரிக் கோலமாக உட்கார்ந்திருந்தாள். இத்தனைக்கும் காரணம் தானென்று சீமான் சுவரில் சாய்ந்தவாறு அழுது ஓய்ந்து போயி ருந்தான். செய்தி தெரியப்பட்டு மச்சி னனும், மாமியாரும் வந்திருந்தார்கள். வந்தவர்கள் அத்தனை நேரமிருந்த அமைதியைக் குலைத்து பதட்டத்தைக் கூட்டியிருந்தார்கள்.

பக்கத்து வீட்டுக்காரர் காதில் போனுடன் ஓடி வந்தார். 'வேத நாயகம், பைபாஸ் ரோட்டுல ஆக்ஸி டண்டாம்....' அவர் சொல்லி முடிக்க வில்லை, வீடு ஓ....வென்று ஓல மெடுத்தது. வேதநாயகம் சைக்கிளை அதே இடத்தில் கிடத்தி விட்டு பைபாஸ் நோக்கி ஓட்டமெடுத்தார். அவர் பின்னே நான்கைந்து பேர் ஓடினார்கள். ஒன்றி ரண்டு பேர் அவரவர் வைத்திருந்த சைக்கிளையும், பைக்கையும் எடுத்து கொண்டு விரைந்தார்கள்.

வேதநாயகம் ஒரு திருப்பதில் திரும்பு கையில், ஜெயபாரதி தூரத் தில் வருவது தெரிந்தது. அவளது வருகை அத்தனை நேரம் அவரை விட்டுப் போயிருந்த உயிர் திரும்ப வும் அவருக்குள் நுழைந்த ஆயாசத்தைக் கொடுத்தது. அவர் நின்று நிதானித்து பார்த்தார். மகள்தானே அவள்...? ஆம், மகளேதான்...! அவரது கண்கள் கலங்கி மகிழ்ச்சியில் பனித்தன.

ஜெயபாரதி வீட்டிற்கு வந்தாள். அவள் பள்ளி செல்கையில் டியூசன் முடிந்து வீடு திரும்புகிற நேரமாக அது இருந்தது. வீட்டு வாசலில் ஆட்கள் நிறைந்திருப்பதைப் பார்க்கையில் அவ ளுக்குள் அம்மா குறித்த கவலை சுருளெடுத்தது. நான் நீட் தேர்வில் தேர்வா காததற்காக, அம்மாவிற்கு ஏதேனும்..., அவள் இதய நோயாளி வேறு... அவளது கண்கள் அம்மாவின் இருப்பைத் தேடின. அம்மா ஒன்றும் நடக்காததைப்போல வாசலைக் கூட்டி பெருக்கிக் கொண்டி ருந்தாள். ஜெயபாரதி நின்று நிதானித்து அப்பாவைப் பார்த்தார். அப்பா, கீழே விழுந்து கிடந்த சைக்கிளை எடுத்து நிமிர்த்தி சக்கரத்தைச் சுற்றி விட்டு கொண்டிருந்தார். அவளது கண்கள் தம்பி சீமானின் பக்கம் சென்றன. அவன் சுவரில் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தான். அவனருகில் சென்று கண்கள் விரிய இடுப்பிற்கு இரு கைகளையும் கொடுத்து நிமிர்ந்து நின்றபடி கேட்டாள். 'தம்பி, ஏன் இங்கே எல்லாரும் கூடியிருக்காங்க...?'

அவன் சிரிக்கலாமென்று உதடு களைப் பிரித்தான். அழுகைதான் வந்தது.

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2019 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| ❍ **கலியுககாண்டம்** | ஈழநல்லூர் கண்ணதாசன் | யாழ்ப்பாணம் |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| ❍ **புலிப்பகைவன்** | முஸ்டீன் | கொழும்பு 13 |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| ❍ **அசோகன் பிறந்தான்** | என். நஜ்முல் ஹுசைன் | பத்தரமுல்ல |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| ❍ **மணக்கும் மனிதம்** | எஸ். ஐ. நாகூர்கனி | கொழும்பு 12 |
| ❍ **மனிதம் வாழ்கிறது** | தேவகி கருணாகரன் | அவுஸ்திரேலியா |
| ❍ **மனிதாபிமானம்** | செ. குணரத்தினம் | மட்டக்களப்பு |
| ❍ **வேண்டாம்** | செல்வி. தேவி அருணாசலம் | திருகோணமலை |
| ❍ **ஊர் திரும்புதல்** | சந்திரகாந்தா முருகானந்தன் | கொழும்பு 06 |
| ❍ **விதியோடும் மதியோடும்** | விமல் பரம் | லண்டன் |
| ❍ **தங்கம்மா ஆச்சி** | வைரமுத்து சிவராசா | ஜேர்மனி |

நடுவர்கள்: 'சாகித்திய ரத்னா' தெளிவத்தை ஜோசப், புலோலியூர் அ. இரத்தின வேலோன், திருமதி பத்மா சோமகாந்தன், திருமதி ராணி சீதரன், திருமதி வசந்தி தயாபரன்

**(ஞானம் 235, டிசம்பர் 2019)**

‘ஈழநல்லூர் கண்ணதாசன்’ 2018ஆம் ஆண்டு “செம்பியன் செல்வன்” ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி’யில் முதற் பரிசு பெற்றதன்மூலம் ஏற்கனவே ஞானம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். தனது பாடசாலைக் காலத்தில் இருந்து சிறுகதை, கவிதை எழுதுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார். **மோகனமுகாரி** எனும் புனைபெயரில் இவரால் எழுதப்பட்டு 1985ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் முரசொலி பத்திரிகையில் வெளிவந்த **“அரை அலங்காரத்துடன் அம்மன் சிரிக்கிறாள்”** என்னும் சிறுகதை அனைவரதும் பாராட்டுப்பெற்றது. யாழ். பல்கலைக்கழகத்தின் இசைத்துறைப் பட்டதாரியான இவர், மிருதங்க வாத்தியக் கலையில் பிரபல்யம்பெற்றவர். இவரால் வெளியிடப்பட்ட துறைசார் நூலான **“முப்பத்தைந்து தாளங்களில் தனியாவர்த்தனம்”** மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் பணி, தொடர்ச்சியான ஆற்றுகைகள் காரணமாக சில வருடங்கள் எழுதாமல் இருந்துள்ளார். இவரது **“பஞ்சகதிகள்”** என்னும் நூலும், **“காலம் தின்னும் நர மாமிசங்கள்”** எனும் கவிதை நூலும் வெளிவர இருக்கின்றன.



55

யாழ். நல்லூர் முத்திரைச்சந்தியில், கிட்டுப்பூங்காவிற்கு அருகில் அமைந்திருந்தது ‘இசை நாடகம்’ கனகசுந்தரத்தாரின் இல்லம்.

நல்லூரானின் காலை பத்து மணிப்பூஜை மணியோசை ‘கணீர்’ என்னும் நாதத்துடன் செவிகளை நிறைத்துச் சூழலை தெய்வீக மயமாக்கிக் கொண்டிருந்தது.

சாய்மனைக்கதிரையில் அமர்ந்திருந்த கனகசுந்தரத்தார் வலது கரத்தையெடுத்து நெஞ்சில் வைத்துக்கொண்டு, விழிகளை மூடியவாறு, கோவிலின் திசை நோக்கித் தலையைத்திருப்பி மூச்சையுள்ளிழுத்து வெளியேவிட்டவாறு “முருகா.” என்று சத்தமாகச் சொன்னார்.

பாரம்பரிய இசை நாடகக் கலைஞரான கனகசுந்தரத்தாரின் எழுபது அகவைகளைக் காலம் தின்றிருப்பினும் அவரது மனதோ, அவரது இளவயதுக் கலானுபவங்களில் தோய்ந்து, கழிந்துபோன காலக்களிப்பில் நனைந்து கிடந்தது.




(ஞானம் 236, ஜனவரி 2020)

## ஈழநல்லூர் கண்ணதாசன்

1

**அமரர் ‘செம்பியன் செல்வன்’ ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2019இல் முதற் பரிசு பெற்ற கதை**

விறாந்தைச்சுவரில் மாட்டப்பட்டிருந்த அவரது அரச வேடத்திலான இளமைக் கால நாடக மேடைப் படத்தைப்பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டார். மறு பக்கம் சுவரில் கொளுவப்பட்டி ருந்த ‘அரிச்சந்திர மயான காண்டம்’ நாடகப்படத்தில் அரிச்சந்திரனாக கனக சுந்தரத்தார் சந்திரமதியுடன் நின்று கொண்டிருந்தார்.

அரிச்சந்திரன் சரித்திர இசை நாடகத்தில் அரிச்சந்திரன் வேடத்தில் கனகசுந்தரத்தார் மேடையில் தோன்றும் போது சனங்களின் கைதட்டல்களும், விசிலடிகளும் காதுகளைப் பிளக்கும்.

இரண்டு கட்டை சுருதியில், ஒலிவாங்கி யில்லாமலேயே நூறு அடிகளுக்கப்பா லிருக்கும் இரசிகர்களுக்கும் கேட்கும் வண்ணம் தனது வெண்கலக்குரலில், லயந்தவறாது கனகசுந்தரத்தார் பாடு கையில் தேன்குடித்த வண்டுகள் போலக் கூட்டம் முயங்கிக் கிடக்கும்.

அந்தக்காலங்களில் தனது கம்பீரமான நடிப்புத்திறனாலும் நவரசங்களையும் துல்லியமாக வெளிப்படுத்தும் முக பாவனைகளாலும் நாடக இரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டிருந்தார் கனகசுந்தரத்தார்.

“இஞ்சேருங்கோ...!”

கனகசுந்தரத்தார் நிஜ உலகிற்கு மீண்டு வந்தார்.

அவரையழைத்தவாறு அருகில் நின்றி ருந்த மனைவி சொர்ணவல்லியின் கையில் தேநீர்க் கோப்பையிருந்தது. அன்பு ததும்பிய துணைவியின் வதனத்தைப் பார்த்து, அதனாலெழுந்த மனக்கிளர்ச் சியுடன் தேநீர்க் கோப்பையைப் பெற்றுக் கொண்டார்.

“ சொர்ணம்...!”

காதல் மீதூரும்போது இவ்வாறு ஆசையாக அழைப்பார் கனகசுந்தரத்தார். ஆனால், இன்று அவர் கலைத்தாகத் திலிருந்தார்.

“என்ன...?’ என்பது போலத் தாய்மையும் காதலும் பொங்கிவழிய அபிநயமாய்க் கேட்டபடி அவரை நோக்கிக் கொண்டிருந்தது சொர்ண வல்லியின் விழிகள்.

“முந்தி எங்கிட நாடக வாழ்க்கை எவ்வளவு சந்தோசமாப் போய்க் கொண்டி ருந்திச்சுது... !”

அடிக்கடி தனது மன ஆதங்கங்களை சுமைதாங்கியான அவளிடம் அவர் பகிர்ந்து கொள்வதால் பரிவுடன் அவரைப் பார்த்தபடி நின்றிருந்தாள் சொர்ண வல்லி. அவளும் ஒரு கலைஞர்தானே. கலைத்துறை சார்ந்த அதுவும் எமது மண்ணின் அடையாளங்களான, எங்களுக் கேயுரியதான பாரம்பரிய கலைகள் சமகாலத்தில் கைவிடப்பட்டுக் கொண்டி ருக்கிறமை பற்றி அவளும் மனக் கவலை கொண்டிருந்தாள்.

“பகலில் நாடகங்களின்ர ஒத்திகையள் பார்க்கிறதும் இரவில நாடகங்கள் மேடையேத்திறதுமாய் “பிசி” யாயி ருக்கும். அதுவும் எங்கட பொடிய ளின்ரை காலத்தில... ச்சா... அது வொரு பொற்காலமப்பா.. எங்கள உண்மையா மதிச்சாங்கள்.... நாங்களும் விருப்பத்தோட உழைச்சம்.... ம்... இப்ப ...? எல்லாம் பம்மாத்து வேலையாப் போச்சு... !”

“அப்பா... ! நீங்கள் தேவை யில்லாமக் கவலைப்பட்டு வருத்தத்த உண்டாக்காதீங்கோ... காலம் மாறிப் போச்சுது...’ என்று கூறிவிட்டு அடுக்களை யுள் புகுந்தாள் சொர்ணவல்லி.

அரிச்சந்திரன் மயான காண்டத்தில் அரிச்சந்திரனாகக் கனகசுந்தரத்தாரும், சந்திரமதியாகச் சொர்ணவல்லியும் தோன் றுகின்ற காட்சிகள் பார்ப்போரை அழ வைத்துவிடும் தொடர்ந்து வந்த வேறு இசை நாடகங்களிலும் இவர்களிருவரும் அரசன், அரசியாக நடித்தாலே நாடகம் வெற்றி பெறுமென்பது எழுதாத சட்ட மாக, நாடகக் கலைஞர்களின் ஏக விருப்பமாக மாறிப்போக, இருவர்

களுக்கிடையிலும் காதலும் கருக்கொள்ள உண்மையிலேயே வாழ்க்கையிலும் கணவன் மனைவியாக இணைந்து கொண்டனர்.

பல்லவியும் அனுபல்லவியுமாய்த் தொடங்கிய அவர்களது இல்லற வாழ்க்கை, சரணங்களாக இரண்டு பிள்ளைச் செல்வங்களுடன் முழுக் கீர்த்தனையாய் வடிவம் பெற்றது.

மூத்தவள் காஞ்சனா தனது சிறிய வயதில் தந்தையுடனும், தாயுடனும் அரிச்சந்திரன் சரித்திர நாடகத்தில் லோகிதாசனாக நடித்தவள், கொஞ்சம் வளர அதற்கும் மறுத்து விட்டாள். மகன் துவாரகன் நாடகப்பக்கம் தலைவைத்தும் படுக்கவில்லை. காலச்சூழல் வேறு, கலைத்துறையில் கைவைத்துவிட்டது. திருமண வயது வந்ததும், வெளிநாட்டுச் சம்மந்தமொன்று சரிவந்து காஞ்சனா நாட்டைத்துறக்க, அக்காவினது தயவுடன் நாட்டுப் பிரச்சனைகளைக் காரணம் காட்டி, தம்பி துவாரகனும் 'அகதி' யென்ற விருப்ப நாமத்துடன் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்து கொண்டான்.

கனகசுந்தரத்தாருக்குப் பெருத்த கவலை.

தனது கலைத்துவத்தைப் பேணுவதற் கும், அதனை முன்னெடுத்துச் செல்வ தற்கும் தனது இரத்தவுருத்து வாரிசு களொன்றும் தன்னோடில்லையே என்ற வெறுமை அவரை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது.

அதனை விடவும், இந்தக் காலத்து இளைஞர்கள் கூத்து, இசைநாடகம், வில்லுப் பாட்டு, கதாப்பிரசங்கம், ஆகிய துறைகளில் தம்மை ஈடுபடுத்து வதற்குத் தயங்குகின்றமை, கலையே தனது உயிர் மூச்சென வாழ்ந்து கொண்டிருக்குமந்த மூத்த கலைஞனுக்கு ஏமாற்றத்தையளித்துக் கொண்டிருந்தது.

எவராவது இளவயதுக்காரரொருவர் கனக சுந்தரத்தாரைக்கண்டு, தனக்குப் பாரம்பரியக் கலைகளைப்பிடிக்கும், அவைபற்றி ஆழமாக அறிந்தகொள்ள விரும்புகிறேன் என்று சொன்னால் அவருக்குத் தனது உயிரையும் கொடுக்கத் தயாராயிருந்தார் அவர். தனது மேடை அனுபவங்களையும், கண்ணை இமை காப்பது போலக் காத்து வைத்துக் கொண்டி ருக்கும் தனது நாடகப் பிரதிகளையும் பகிர்வதற்கு நல்லதொரு ஆர்வல ருக்காகக் காத்துக் கிடந்தாரவர். கலையை வளர்க்கிறோம் கலைஞர்களைக் கௌரவிக் கிறோமென்று கபட நாடகம் போடுகின்ற அரசாங்க நிர்வாகத்தரப்புகளின் 'கணக்குக்காட்டல்' நோக்கிலான திடீர் விழாக்களுக்கு அவர் எதிர்ப்புக் கொண்டி ருந்தார். அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கிறார், பாராளுமன்றக்கதிரையில மர்ந்திருக்கிறார் என்பதற்காக, கலை வாசனையே இல்லாதவர்களைக் கொண்டு வந்து அவர்களது கரங்களால் உண்மைக் கலைஞர்களினை மதிப்பளிப்ப தாகக் கொச்சைப்படுத்தும் நிகழ்வுகள் அவரது உள்ளத்தை வேதனைப்படுத்திக் கொண்டிருந்தன.

அத்துடன் அறுபது வயதிற்கும் மேலான முதிர்ந்த கலைஞர்களுக்கு விருது வழங்குகிறோமென்று, சமூகத்தில் முறையாக இறங்கித் தேடாமல் விண்ணப் பித்தவர்களை மட்டும் பரிசீலித்து விருது வழங்கும் அரச நிர்வாகச் சோம்பேறித் தனங்களில் விசனங் கொண்டிருந்தாரவர். அவரது இத்தகைய இறுக்கமான நிலைப் பாடுகள் காரணமாக, விருதுகள் ஒன்றிற்கும் அவர் விண்ணப்பிக்கவில்லை. அதனால் அவரின்னும் 'இசைநாடகம்' கனகசுந்தரம்தான். 'வாலொன்றும்' வந்து சேரவில்லை.

நீண்டகாலமாக மேடைவாய்ப்புகள் இன்மை காரணமாகவும், முதுமை காரண மாகவும் முடங்கிக் கிடக்கும் கனக சுந்தரத்தாரின் மனமும், உடலும் ஆற்றுகைத் தவனத்தில் ஏக்க முற்றுக் கிடந்தன.

**“வணக்கம் ஐயா…! நாங்கள் பல்கலைக்கழகத்திலயிருந்து வாறம். உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறம். உங்கிட இசைநாடகக் கலானுபவங்களைப் பற்றியும், உங்கிட வாழ்க்கை வரலாற்றையும் ஆய்வு செய்து புத்தகமாக்கிவிட வேணுமெண்ட விருப்பத்தோட வந்திருக்கிறம்.அதுக்கு உங்கிட ஒத்துழைப்பைக் கேட்கிறம்… ” தேனும், பாலும் கலந்தால் எத்துணை இனிமையாகவிருக்குமோ அவ்வளவு தித்திப் பாகவிருந்தது. கதைத்தவளின் குரலும் அதில் கனிந்திருந்த பண்பும்.**

அடுக்களையுள் மதிய உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த சொர்ணவல்லி தன்னை மறந்த நிலையில், அரிச்சந்திர மயான காண்டத்தில் சந்திரமதிபாடும் பாடல்களிலொன்றை முணு முணுப்பாகப் பாடத் தொடங்குகிறாள். உணர்வு மிகை நிலையில் கொஞ்சங் கொஞ்சமாகச் சத்தம் அதிகரிக்கத் தொடங்குகிறது.

சுடலைகாத்து நிற்பவன் தன்னுயிர் நாதனென்றறியாது, இருள் சூழ்ந்த பொழுதில், உயிரிழந்த மகன் லோகி தாசனது உடலை எரிப்பதற்காகக் கொண்டு வருகிறாள் சந்திரமதி. வந்திருப் பவள் தனது துணைவி யென்றறியாத அரிச்சந்திரன் அந்த மயானத்தில் உடலை எரிப்பதாயின் கூலியாக மூன்று பணமும், முழுத்துண்டும் தரவேண்டும், இல்லையாயின் பிணத்தை யெரிக்க அனுமதிக்க முடியாது என்று கூறு கின்றான். சந்திரமதி அழுது, தனது நிலையை அவனிடம் எடுத்துக் கூறு கிறாள். அதற்கு அவன், ‘பெண்ணே நீ ஏழையெனப் பொய் சொல்கிறாய்… உன் கழுத்தில் பொற்றாலி மின்னுகிறதே …’ என்கிறான்.

அதைக்கேட்ட சந்திரமதி இடியேறு கேட்ட நாகம் போலத்திடுக்கிடுகிறாள்.. அவளது தாலியானது அவளது கணவன் அரிச்சந்திரனது விழிகளுக்குத் தவிர வேற்றார்விழிகளுக்குத்தென்படாது.எனவே காத்து நிற்பவன் தனது துணைவனே யென்றறிந்தும், அவனது இழி நிலையைக் கண்டும் தாங்கவொண்ணாத் துயரில் அழுகிறாள் சந்திரமதி. அரிச்சந்திரனும் வந்திருப்பது தனது மனைவியென்றும் இறந்த உடலாகக் கிடப்பது தங்களது ஒரே வாரிசு லோகிதாசன் என்றும் அறிந்து திக்பிரமைகொண்டு நிற்கிறான். எனினும், சத்தியம், உண்மை, கடமை தவறாத அவன், மயானத்திற்குரிய கூலியை அளிக்கா விடில் தனது மகனது உடலேயெனினும் அதனையெரிக்க அனுமதிக்க முடியாது என்கிறான்.

கடமைக்கும், காதலுக்கும், பிள்ளைப் பாசத்திற்கும் இடையிலான இந்தக் கதைப் பகுதிக்கான உன்னத உணர்வுகள் உணர்ச்சிக் கலவையாக, ஒப்பற்ற பாடல் களாக கேட்போர், பார்ப்போர் நெஞ்சை நெக்குருக வைப்பதாக அமைந்திருக்கும்.

அதிலொரு பாடலைத்தான் சமைத்துக் கொண்டிருந்த சந்திரமதி (சொர்ண வல்லி) பாடுகிறாள்.

பாடலின் உணர்வு வெளிப்பாடும், கடந்தகால ஆற்றுகைகளின் ஆழ்ந்த நினைவுகளும் சேர்ந்து ‘பாவம்’ துள்ளிக் குதிக்கிறது.

சாய்மனைக்கதிரையில் சாய்ந்து, ஒய்ந்து கிடந்த அரிச்சந்திரனுக்கு (கனக சுந்தரத்தாருக்கு) உருவேறுகிறது.

துள்ளியெழுகிறார்

மூலையில் கிடந்த தும்புத்தடியைக் கையிலெடுக்கிறார்.. அது ‘கோல்’ ஆகிறது. கொடியில் கிடந்த சிறிய துவாயொன்றை யெடுத்துத் தலையில் சுற்றிக் கொள்கிறார்.

“ஆரடி கள்ளியிந்த
அடாத கானகத்தே…”

அடுக்களையுள் பாய்ந்து செல்கிறார்.

அடுக்களை மயானமாகிறது.

கீழே கிடந்த திருகுவலை லோகிதா சனாகிறது.

மயான காண்டம் அங்கு அரங் கேறுகிறது.

சந்திரமதியின், மனதை நெகிழ்க்கும் பாடல்களும், அதற்கு அரிச்சந்திரனது கடமையுணர்வூறிய கம்பீரமான தொனியி லான பாடல்களும் அணி வகுத்து வந்தன.

சந்திரமதி உரக்கக் கதறியழுது தனது உள்ளத்து வேதனையைப் பாடல்களாக வெளிப்படுத்துகிறாள்.

அரிச்சந்திரன் கோலை ஊன்றிக் கொண்டும் அங்குமிங்கும் நடந்து இடை யிடையே 'தட்தட்' டென நிலத்தில் குத்தியடித்துக் கொண்டும் தனது உச்சக்கட்ட உணர்வுவெளிப்பாடுகளை பாடல்களாகப் பொழிகிறார்.

மகனையிழந்த சோகத்திலும், தனது நாடாளும் மன்னவனான கணவனைச் சுடலைக் காவலனாகக் கண்ட அதிர்ச்சி யிலும் நிற்கும் சந்திரமதியினதும், ஒத்த உணர்வுகளை அரிச்சந்திரனதும் பாடல்களூடு அடுக்களை ஒப்பற்ற அரங்காகின்றது.

வீட்டைச்சுற்றி நின்ற பூவரசு மரங்க ளெல்லாம் இரசிகர்களாகவும், இலைக ளெல்லாம் கரங்களாகவும் கர கோஷங்கள் எழுகின்றன.

வீடெங்கும் நிறைந்த இசைவெள்ளம் பெருக்கெடுத்து ஜன்னல்களுக்கூடாகவும் இடுக்குகளுக்கூடாகவும் வழிகிறது.

கைதட்டல்கள் அடுக்களை சாளரத் தினருகே அதிர்கின்றன.

பக்கத்து வீட்டு அரிமளம், முன் வீட்டு கமலாவும் பிள்ளைகளும், வீதியால் சென்று கொண்டிருந்து அங்கு வந்தி ருந்த கொஞ்சப்பேர் எனப் பத்திற்கும் மேற்பட்டோர் அங்கு நின்று கைதட்டிக் கொண்டிருந்தனர்.

அரிச்சந்திரனும், சந்திரமதியும் திடுக் குற்று கனகசுந்தரராகவும் சொர்ணவல்லி யாகவும் சமகாலத்திற்கு வந்தனர்.

சாளரவோரத்து இரசிகர்கள் கலைந்து சென்றனர்.

கனகசுந்தரத்தாரினதும், சொர்ண வல்லி யினதும் மனசுகள் அன்று முழு வதும் நிறைந்து கிடந்தன.

ஒருநாள், மாலை நான்கு மணி யிருக்கும்.

வழமைபோல கனகசுந்தரத்தார் முன் விறாந்தையில் சாய்மனைக்கதிரையில் சாய்ந்து கிடந்து பழைய நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்தார். சொர்ணவல்லி பின்வளவில் அலுவலாய் நின்றிருந்தாள்.

முன்கேற்றைத் திறந்து கொண்டு இரண்டு பெண் பிள்ளைகள் தயங்கித் தயங்கியபடி வளவுக்குள் வந்தார்கள். அவர்கள் 'சுடிதார்' அணிந்திருந்தார்கள். கைகளில் ஆளுக்கொரு கைத்தொலை பேசியும், குறிப்பேடும் (Note Book) வைத்திருந்தார்கள்.

இருவருக்கும் இருபத்தியிரண்டு அல்லது இருபத்து மூன்று வயசிருக்கும்.

ஒருத்தி மிகவும் பவ்வியமாக தலையை வீட்டின் உள்ளே நீட்டி, "கனக சுந்தரம் ஐயாவின் வீடு இதே....?" என்று கேட்டாள்.

"ஓம்.. ஓம்..! உள்ளுக்குள்ள வாங்கோ...!"

மரியாதையுணர்வுடனும் வதனங் களில் சாந்தம் தவழவும் அவர்களிருவரும் உள்ளே வந்து, அங்கிருந்த கதிரைகளில் அமர்ந்தனர்.

"சொல்லுங்கோ பிள்ளையள்.. நான் தான் இசை நாடகம் கனகசுந்தரம்...!"

"வணக்கம் ஐயா...! நாங்கள் பல்கலைக் கழகத்திலயிருந்து வாறம். உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறம். உங்கிட இசைநாடகக் கலானுபவங்க ளைப் பற்றியும், உங்கிட வாழ்க்கை வரலாற்றையும் ஆய்வு செய்து புத்தக மாக்கிவிட வேணுமெண்ட விருப்பத்தோட வந்திருக்கிறம். அதுக்கு உங்கிட ஒத்து ழைப்பைக் கேட்கிறம்... "

தேனும், பாலும் கலந்தால் எத்துணை இனிமையாகவிருக்குமோ அவ்வளவு தித்திப்பாகவிருந்தது. கதைத்தவளின் குரலும் அதில் கனிந்திருந்த பண்பும்.

**கனகசுந்தரத்தாருக்குத் தனது சொந்தப் பிள்ளைகள் பற்றி நினைவு வந்தது. அவர்களின் வயது தானிருக்கும் இவர்களுக்கு. பிள்ளைகள் தன்னுடைய கலைக்கு மதிப்புக் கொடுக்காமற் புறக்கணிக்க, இவர்கள் இத்துணை ஆர்வத்துடன் தன்னை மதித்து வந்திருக்கிறார்களேயென்று உள்ளூர மகிழ்வு கொண்டார். இளைய தலைமுறை பற்றிய நம்பிக்கை அவருள் துளிர்விட்டது.**

அவள் தொடர்ந்தாள். "என்ரை பெயர் கிருஷிகா... இவவின்ற பெயர் தனுசா. நாங்கள் பல்கலைக்கழக இசைத் துறையில, இறுதியாண்டு படிக்கிறம். நான்தான் உங்கிட கலைபற்றி ஆய்வு செய்யவிருக்கிறன். இவ வேற 'ரைற்றில்' எடுத்திருக்கிறா..."

கனகசுந்தரத்தாருக்குத் தனது சொந்தப் பிள்ளைகள் பற்றி நினைவு வந்தது. அவர்களின் வயது தானிருக்கும் இவர்களுக்கு. பிள்ளைகள் தன்னுடைய கலைக்கு மதிப்புக் கொடுக்காமற் புறக்கணிக்க, இவர்கள் இத்துணை ஆர்வத்துடன் தன்னை மதித்து வந்திருக் கிறார்களேயென்று உள்ளூர மகிழ்வு கொண்டார். இளைய தலைமுறை பற்றிய நம்பிக்கை அவருள் துளிர்விட்டது.

இவர்களுக்கு நல்ல விதமாக ஒத்து ழைப்பதென்று முடிவெடுத்துக் கொண்டார்.

"நான் என்ன செய்ய வேணும் உங்களுக்கு... ?"

"ஐயா, என்ர ஆய்வுக்கட்டுரைக்காக நானெடுத்திருக்கிற தலைப்பு 'ஈழத்து இசை நாடக வரலாறில் கலைஞர் கனக சுந்தரம் அவர்களின் வாழ்வும் பணி களும்' எண்டது ஐயா. உங்களுக்கு நேரம் இருக்கிறநேரம் வந்து உங்களின்ர தகவல்களைப்பெற வருவன்.. "

கிருஷிகா சொன்னாள்.

கனகசுந்தரத்தார் தலையாட்டித் தனது அனுமதியை வழங்கினார்.

சொர்ணவல்லி வந்து எட்டிப் பார்த்தாள். "இவதான் என்ர குசினி...! இவவும் ஒரு கலைஞர்தான்...!

அவர்களிருவரும் எழுந்து நின்று "வணக்கமம்மா" என்றனர்.

சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்து விட்டு கனகசுந்தரத்தாரிடம் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக்கொண்டு இரு வரும் புறப்பட்டனர்.

புறப்படும்போது இருவரும் அவரது கால்களைத் தொட்டு வணங்கினார்கள்.

அந்தத் தம்பதியினரது மனசுகள் குளிர்ந்து போயின.

அவர்கள் போனபின்பு கணவனைப் பார்த்து "நல்ல பண்பான பிள்ளைகள்... என்னப்பா... ?"

அவரும் தலையாட்டி ஆமோதித்தார்.

அதன்பிறகு அந்த வீட்டிற்கு கிருஷிகா அடிக்கடி வந்து போனாள். தனது சொந்த மகளைக்கண்டு மகிழ்வது போல அந்த முதியவர்கள் அவளைக் கொண்டாடினர்.

தங்களை இக்காலச் சமூகம் கைவிட்டு விட்டதென்று மனம் புழுங்கிக் கொண்டி ருந்த அவர்களுக்கு, தம்மையும், தமது கலையாற்றுகைகளையும் பெரிதாய் மதித்து, ஆர்வத்துடன் கேட்டுக்கேட்டு எழுதிக் கொண்டு போகும் கிருஷிகாமீது அளவற்ற அன்பு ஏற்பட்டுவிட்டது. அவளது கலாரசனையான கேள்விகள் அவர்களைச் சந்தோஷப்படுத்தின.. அவள் மூலம் தமது கலை, பல்கலைக்கழக மட்டத்தில் பரவி, இளம் சமுதாயம் முழு வதற்கும் விருப்புடையதாக மாறிச் செழித் தோங்கப் போகிறது என மனம் பூரித்தனர். அதுவரை தமது உயிர்போலக் காத்துப் பேணி வந்த தம்மிடமிருந்த இசை நாடகப்பிரதிகள், ஒலி நாடாக்கள், ஒளி நாடாக்கள் அனைத்தையும் கிருஷிகா விடம் தூக்கிக் கொடுத்தார் கனக சுந்தரத்தார்.

அவள் கேட்டபோதெல்லாம் பதிவு செய்து கொள்வதற்காக அவர்களிரு

வரும் ஆடினார்கள்., பாடினார்கள், நடித்தார்கள்.

பல்கலைக்கழகம் மதிக்கிறது, இசை நாடகக்கலை வளரப் போகிறது, வேறென்ன வேண்டுமவர்களுக்கு?

கிருஷிகா வீட்டுக்கு வராதபோதும், தனக்குப் பழைய ஞாபகங்கள் தோன்றும் போது அவளைத் தொலைபேசியூடாக அழைத்து, அவளுக்கு அவற்றைச் சொல்லி ஆவணப்படுத்துவதில் நிறை வடைந்தார் கனகசுந்தரத்தார்.

ஒருநாள் கிருஷிகா, விபரங்களைச் சேகரித்தாகிவிட்டது, இனித்தனக்குப் புத்தக மடிக்கிற வேலை தானிருக் கிறதெனச் சொல்லிச் சென்றாள்.

அதன்பிறகு பல நாட்களாக அவள் அந்த வீட்டுப்பக்கம் வரவில்லை.

அவள் தங்கள் வீட்டுக்கு வராமலிருப் பதற்கான காரணம், பரீட்சைகளாயிருக்கு மென அவர்கள் தம்மைச் சமாதானப் படுத்திக் கொண்டனர். தொலைபேசி அழைப்புகளுக்கும் பதிலில்லை.

மாதங்கள் பலவாயின. கிருஷிகா வரவே யில்லை. ஒருநாள், அவளுடைய தொலைபேசி இலக்கத்திற்கு எதேச்சை யாகக் கனகசுந்தரத்தார் எடுத்துப் பார்த்தார்.

மறுபுறத்தில் அழைப்பு மணி யொலித்துக் கேட்டது.

“ஹலோ...! ஆர் எடுத்தது...?”

அதிகாரத் தோரணையிலான நடுத்தர வயது கடந்த பெண்ணொருவரின் குரல்.

“நான் இங்க இசைநாடகம் கனக சுந்தரம் கதைக்கிறன். கிருஷிகா இருக் கிறாவே...?”

“நான் அவவின்ரை அம்மா கதைக் கிறன்...”

“கிருஷிகா இசை நாடகம் பற்றிப் புத்தகம் எழுதப்போறனெண்டு விபர மெல்லாம் எடுத்துக் கொண்டு போனவா. என்ன மாதிரி.. புத்தக வேலையெல் லாத்தையும் முடிச்சிற்றாவே...?”

“ஓ... அது அவவின்ர ‘பைனல் இயர் எக்ஸாமில, டெசிற்றேசன்” என்கிற பாடத்திற் காகத்தான் செய்தவா. ரெண்டு புத்தகம் கட்டி அங்கேயே குடுத்திற்றாள். அதில அவவுக்கு ‘ஏ’ எல்லே வந்தி ருக்கு...!”

“அவ கெட்டிக்காரி...! அவவைக் கனநாளா எங்கிட வீட்டுப்பக்கம் காணேல்லை... அதுதான் எடுத்தனான்...”

“அவ இப்ப வெளிநாட்டில பாருங்கோ... கம்பசுக்குப் போகமுதலே அவவுக்கொரு சம்மந்தம் பேசி வைச்சிருந் தனாங்கள். கலியாணம் சரிவரும் வரைக்கும் பிள்ளைக்கும் பொழுது போகத்தானே வேணும்... அதுதான் படிக்க விட்டனாங்கள். படிப்பும் முடிய கலியாணம், பயணம் எல்லாம் சரி வந்திட்டுது. “கொன்வக் கேசன்” முடிய அவ வெளிநாட்டுக்குப் போயிற்றா.... ”

கனகசுந்தரத்தார் அதிர்ந்து போனார்.

“அப்ப.. என்ர புத்தகங்கள், நாடகக் கொப்பிகள், கெசெற்றுக்களெல்லாம்... ?

“அது பாருங்கோ, அதுகளயொரு ‘பாக்கில’ போட்டு வைச்சிருந்தனான். இப்ப நாங்கள் வேற வீட்டுக்கும் மாறீற்றம். பிள்ளையின்ரை படிப்பு முடிஞ் சுதுதானே, இனியென்னத்துக் கெண்டு என்ரையவர் அத எங்க தூக்கிப் போட்டாரோ தெரியேல்ல. அது சரி, நீங்களெப்பிடியிருக்கிறீங்கள்...? என்ரை மோள் கெட்டிக்காரியென்ன...? இப்ப இவ ‘டிகிரி ஹோல்டர்...!’ அவளுக்குக் கலைகளில பெரிசா நாட்டமில்லைக் கண்டியளோ...”

தொலைபேசியை நழுவவிட்டு விட்டு உறைந்து போயிருந்த கனகசுந்தரத்தாரை உள்ளேயிருந்து ஓடிவந்த சொர்ணவல்லி திகைத்துப்போய்ப் பார்த்தாள்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த அவர்களது மயான காண்ட நாடகப் படத்திலிருந்த அரிச்சந்திரனும், சந்திரமதியும் அவர்களை பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.




**அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2019இல் இரண்டாம் பரிசு பெற்ற கதை**

2004இல் 'அக்கினிச் சுவாசம்' எனும் பாடல் அல்பத்தைத் தயாரித்து வெளியிட்டதோடு அதில் ஆறு பாடல்களையும் எழுதினார். இதுவே முதலாவது படைப்பும்கூட. இதுவரையும் 12 பாடல்கள் எழுதியுள்ளார். 05 குறும்படங்களைத் தயாரித்துள்ளதுடன் ஏழு குறம்படங்களை இயக்கியுள்ளார். 2013இல் அரச திரைப்படப் பிரிவின் சிறந்த ஆவணப்பட இயக்குநருக்கான விருதைப் பெற்ற இவர் 12 ஆவணப் படங்களை இயக்கியுள்ளார். ஐந்து நாடகங்களை மேடையேற்றியிருக்கின்றார். இதுதவிர மூன்று ஒலிப்புத்தகங்கள் மற்றும் இரண்டு வீடியோ சஞ்சிகைகளையும் வெளியிட்டுள்ளார். ஆறு நூல்களையும் பதிப்பித்தார்.

2009ல் ஜப்பான் பில்ம்கிறேவ் இன்டர்நேஷனல்-டிஜிப்ளேன் ஆகியவற்றின் சினிமாப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் பெற்று அசூசி ஒஷினோவின் பாசறையில் பயிற்சியை நிறைவு செய்தமை, ஈரான் இஸ்லாமிய குடியரசின் கலாசாரப் பிரிவுக்காக Iranian cinema toward perfection எனும் தொகுப்பைத் தயாரித்தமை, எப்.பீ.ஏ ஸ்ரீலங்கா ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற குறும்படப் பயிற்சிப் பட்டறையில் பிரதான பயிற்றுவிப்பாளராகவும், விரிவுரையாளராகவும் உளவளத் துணையாளராகவும் செயற்பட்டமை ஆகியன குறிப்பிடத்தக்கன.

மௌனப் போரும், புன்னகை ஆயுதமும் (2012)வேப்பம்பழச் சுவையும் புழுதி வாசனையும்(2018), நிமிரக் காத்திருக்கும் புரட்சியின் வளைவு (2019) ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகள், ஹராங்குட்டி (2012), பிணந் தின்னிகள் (2018) கன்றுக்குட்டி (2019) ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகள், இரத்தக் குளியல் (2017) நாவல் என பல படைப்புகளைத் தந்த இவர் 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான கிழக்கு மாகாண சாகித்திய விருதையும் 2016இல் கிழக்கு மாகாண இளங்கலைஞர் விருதையும் (காட்சியூடகத் துறைக்களித்த பங்ளிப்புகளுக்காகப்) பெற்றார், 2017 சிறந்த நாவலுக்கான (ஷோர்ட்லிஸ்ட்) பெயார்வே விருதும் கிடைத்தது

தமிழ்மிரர் பத்திரிகையின் இலக்கியப்பகுதி பொறுப்பாசிரியராகச் செயற்பட்ட இவர் தற்போது புதியமாற்றம் பத்திரிகையின் பிரதம ஆசிரியராவார். கவிதை, சிறுகதை, நாவல், பத்தி, கட்டுரைகள், திறனாய்வு, பாடல், சினிமா, மொழிபெயர்ப்பு, நாடகம், ஊடகம் எனப் பல்துறைசார்ந்த செயற்பாட்டாளராகத் தனது பங்களிப்புகளை ஆற்றிவருகின்றார்.

**(ஞானம் 237, பெப்ரவரி 2020)**

அதிகாலைக் குளிர் நடுக்கத்தைப் பரிசளித்துக் கொண்டிருந்தபோது குவைத் - ஈராக் எல்லைப் பகுதி பரபரப்பாக இருந்தது. குவைத்தின் அமெரிக்க இராணுவ மத்திய முகாமிலிருந்து இன்னும் சற்று நேரத்தில் அமெரிக்க ரோந்துப் படைகள் வந்துவிடும். அதனைப் பின்பற்றி வாகனத்தொடரணி தனது பயணத்தை ஈராக்கை நோக்கி ஆரம்பித்து விடும். அமெரிக்க இராணுவத்தின் கட்டுப் பாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பல்வேறு பணிகளைச் செய்வதற்காக உயிரைப் பணயமாக வைத்த அறுநூறு ஊழியர்கள் மரண அமைதியுடன் இருந்தார்கள். பெரிய சம்பளத்துக்காக ஒரு வருட ஒப்பந்தத்தை அவர்கள் செய்திருந்தாலும் அந்தப்பயணந்தான் அவர்களின் இறுதிப் பயணம் என்ற எண்ணம் அனைவருக்குள்ளும் ஒரே மாதிரியாகத் தோன்றி ஓடிக் கொண்டி ருந்தது. யாரும் யாருடனும் பேசிக் கொள்ள வில்லை. யாரும் யாரையும் முகம் நோக்கவுமில்லை. பன்னிரெண்டு மாத ஒப்பந்தத்தில் ஆறுமாதப்பணம் முன் கூட்டியே கிடைத்துவிட்டது. அதனால் கிடைத்த சிறிய ஆறுதல் மட்டுமே அவர்களை சுவாசிக்கச் செய்தது. ஆபத்து நிறைந்த பாலைவனப் பயணம். எந்த நேரத்தில் எந்த வண்டி எந்தப்பக்கம் இருந்து தாக்கப்படும் என்பது பற்றி யாருக்கும் தெரியாது.

கன்வேய்க்குப் பொறுப்பான அமெரிக்க இராணுவ அதிகாரி செல்லத் தயாராக இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங் களை ஒவ்வொன்றாக இறுதி செய்து கொண்டிருந்தார். இரண்டு ஹெலிகள் மிகவும் தாழ்வாகப் பறந்து சென்றன. அதனைத் தொடர்ந்து டாங்கிகள் நகரத் தொடங்கின. எல்லா வாகனங் களும் தேவையானளவு இடைவெளி விட்டு சம வேகத்தில் பயணத்தை ஆரம்பித்த போது ஒரு மனிதக் குரல்கூடக் கேட்கவில்லை. இதற்கு மேலும் என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. பக்கத்தில் இருந்த ராணுவச் சிப்பாயிடம் எதையாவது பேசலாம் என்றால் வெடிக்கத் தயாரான துப்பாக்கியை அவன் சின்சியராக இறுகப் பற்றியிருந்த விதத்தைப் பார்த்ததும் அமைதியாக இருந்துவிட்டேன். அவனது கவனத்தைக் குலைத்த பாவம் எனக்கெதற்கு.

அழகான ஈழ தேசத்தில் விடுதலைப் புலிகளால் திணிக்கப்பட்டு அனுபவிக்காத மரணபயத்தையா இங்கு அனுப வித்துவிடப் போகின்றோம் என்ற திமிர் என்னை இயல்பாக இருக்கச் செய்தது. மட்டக்களப்பில் பிரதான பாதையைத் தவிர அனைத்துப் பகுதிகளும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் மும்முரமான யுத்தம் நேரங் காலம் இல்லாமல் நடந்து கொண்டே தான் இருந்தது. அப்போது பிரதான வீதியால் செல்லும் இராணுவ கன்வேயின் வாகனங்களை எண்ணிக் கொண்டிருந்த சிறுவயது அனுபவத்தோடு இப்போதைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது எனக்குச் சிரிப்பாக இருந்தது. வாகனத் தொடரணி தாக்கப்படுதல் என்பது ராணுவப் பார்வையில் பெருத்த அவ மானமும் தோல்வியுமாகும். அதனால் தொடரணி சென்று முடியும்வரை மணித்தி யாலக் கணக்கில் வீதியோரத்தில் கொளுத்தும் வெயிலில் தலையைக் கீழே தொங்கவிட்டபடி மக்களை நிறுத்தி வைக்கச் செய்த அச்சம் சாமானிய மானதல்ல. காலம் செல்லச் செல்ல விடுதலைப்புலிகள் விதைத்த அச்சத் துக்குள் நானும் அடிமையாக வாழ்ந்து கொண்டிருந்ததை உணர்ந்த போது மொத்தமாக எங்களில் யாருக்கும் குரல் இருக்கவில்லை. எனது குரல் எங்கே போனது அதை எப்படி இழந்தேன் என்று தேடத் தொடங்கியபோது நான் உணர்ந்த அவமானம் என்னைத் துரத்தித்

**நானும் வேகவேகமாக இறங்கி காயப்பட்டவர்களைக் காப்பாற்றும் முதலுதவி அணிக்கு ஒத்தாசைகள் வழங்கத் தொடங்கினேன். "அம்மா அம்மா" என்று தேன் தமிழில் ஒரு புலம்பல் ஒலி தெளிவாக என்காதில் ஒலித்தது. அந்தத் திசையை நோக்கி நகர்ந்து உரிய நபரை இனங்காண்பது யுத்தகளத்தில் தன் ஆருயிர் நண்பனின் உயிரைக் காக்கத் தன்னைத் தியாகம் செய்தல் போன்றேதான் இருந்தது. அவனைப் பத்திரமாக இழுத்துச் சென்று பாதுகாப்பை உறுதிப்படுத்திவிட்டு நிமிரும்போது அவன் எனது கையை இறுகப் பற்றி உடைந்த அரபியில் கதைக்க முற்பட்டபோது "தமிழில் கதை" என்றதும் அவனுக்கு உயிர் பிழைத்து விடுவோம் என்ற நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியிருந்து. எனது கரங்களை இறுகப் பற்றிக் கொண்டான்.**

துரத்தி அடித்தது. எனது குரலை நான் கண்டு பிடித்து அதை ஒலிக்கச் செய்தபோது எல்லோரும் அந்நியமாகப் பார்த்தார்கள். விடுதலைப்புலிகள் தமக்கு எதிராக ஒலிக்கும் அந்தக் குரலை நிரந்தரமாக அடக்கிவிட முனைந்தார்கள். அந்தப் போராட்டத்தில் எதிர்த்து நிற்க முடியாமல் நான் தோற்றுப்போய் பின்வாங்கி துப்பாக்கிச் சூட்டை வாங்கிக் கொண்டு உயிரைப் பாதுகாப்பதற்காக ஓடிப்போய் பதுங்கிய இடம் குவைத். பதுங்கினால் பாயத்தானே வேண்டும். அந்தப் பாய்ச்சலுக்காக என்னை நிறையவே தயார்படுத்த வேண்டியிருந்தது. என்னைத் தயார்படுத்திக் கொள்ளும் பாதையில் ஓர் அங்கமாக உளவுப் பணியைத் தேர்வு செய்து யார்யாருக்கோவெல்லாம் உளவாளியாக இருந்து இன்னும் ஓடிக்கொண்டிருக்கின்றேன். ஏனெனில் மீளவும் நாட்டுக்குச் சென்று புலிகளுக்கு கிலி கொடுக்கும் சக்தியாக நான் செயற்பட வேண்டுமல்லவா. அதனால் ஒருவன் புலி என்று தெரிந்து விட்டால் அவனை நான் எந்தத் தேசத்திலும் சும்மா விடுவதில்லை.

இப்போது அமெரிக்க இராணுவத்தின் பாதுகாப்பு எல்லைக்குள் இருந்துகொண்டு அவர்களின் எதிரிகளுக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றேன். எனக்கென்று வகுக்கப்பட்ட பயணம் வெறும் இருபது நாட்களுக்கானது. ஓர் உளவுப் பணி நிமித்தம் செய்து கொண்ட ஒப்பந்தப் பிரகாரம் அந்தக் கால எல்லைக்குள் எனக்கு வழங்கப்பட்ட தகவல் பரிமாற்றப் பணியைச் செவ்வனே செய்து விட்டு அங்கிருந்து கிடைக்கும் தகவலை நேரடியாகப் பெற்றுக்கொண்டு எவ்வகையிலும் கசிந்திடாபடி மீளவும் நான் திரும்பி வரவேண்டும். ஏதாவது இசகு பிசகாகினால் எனது உயிருக்கு துளியும் உத்தரவாதம் கிடையாது. உடனடியாகச் சுட்டுத்தள்ளிவிட்டு உலகப் பயங்கரவாதியின் இறப்பை உலகுக்கு பிரகடனப் படுத்துவார்கள். அல்லது நிச்சயமாக குவாந்தனாமோ சிறைதான் கிடைக்கும்.

"அம்மார் வெரி கெயார்புல்" என்று கொன்வே கொமாண்டர் என் தோளை அழுத்தித் தட்டும்போதே இரண்டு அமெரிக்கச் சிப்பாய்கள் எனது பாதுகாப்பில் கரிசனை கொள்ளத் தயாராகி இரு பக்கத்திலும் நின்றார்கள்.

உலகத்துக்குப் பச்சைப் பொய்யைச் சொல்லி விட்டு ஆக்கிரமிப்புச் செய்திருக்கும் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகப் போராடும் ஈராக்கின் தேசியவாதிகள் தமது தகவல் பரிமாற்றத்துக்கு அமெரிக்கப் படைகளையே பயன்படுத்தும் ஆச்சரியமான வழிமுறையை தம்மை உலக வல்லரசாக்கி மார்தட்டிக் கொள்ளும் அவர்கள் கடைசி வரையும் கண்டுபிடிக்கவே இல்லை. அவர்களுக்கு

எதிரான செய்தியை அவர்களது பாதுகாப்புடன் சுமந்து செல்லும் நான் இந்தப் பயணகாலத்தில் அவர்களால் கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டிய நபராகவும் இருந்தேன். அவ்வளவுதான் அவர்களது புத்திசாலித்தனம். பொய்யும் புரட்டும் புத்திசாலித்தனமாக மாறி விடுவதுமில்லைத்தானே.

பயணத்தின் பாதுகாப்பை மீளவும் உறுதிப்படுத்த ஹெலிகள் சென்ற வழியே திரும்பின. பாலைவனப் பகுதி முடிந்து குடியிருப்புப் பகுதியை அண்மித்த போதுதான் அந்த விபரீதம் மிக வேகமாக நடந்தேறியது. எங்கி ருந்து தாக்கப்படுகின்றது என்பது புரியா மலேயே தமக்கு வசதியான பக்கமெங்கும் சுட்டுத்தள்ளிய இராணுவத்தின் வெடி யோசையிலேயே பதட்டமும் பயமும் அப்பட்டமாக வெளிபட்டது. அதற்குள் நான்கு டேங்கர்கள் செயலிழந்து புகைந்து கொண்டிருந்தன. பத்து ட்ரக் வண்டிகளாவது முற்றாகத் தாக்குதலைச் சந்தித்திருந்தன. எல்லாத் திசைகளிலும் சிதறிய உடல்களுக்கு மத்தியில் காயப் பட்டவர்களின் அவலப் புலம்பல் இன்னும் திகிலை சூடாக அடிமனதுக்கு ஏற்றிக் கொண்டிருந்தது. துல்லியமான திட்டமிட்ட தேர்வு செய்யப்பட்ட வாகனங் களுக்கு மட்டுமான இலக்குத் தப்பாத தாக்குதல். வாகனங்களின் வேகமும் இடைவெளியளவும் மிகவும் திறம்படக் கணிக்கப்பட்ட தாக்குதலை முறிய டிப்பதற்கான எவ்விதமான அவகா சமும் இல்லை. அனுமானிப்ப தற்கிடையில் அனைத்தும் நடந்து முடிந்து விட்டிருந்தன. மிகத் தூரத்தில் இருந்து இயக்கப்பட்ட சக்திவாய்ந்த நிலக் கண்ணி வெடிகளை பறந்து திரிந்த ஹெலிகளால் அடையாளங் காண முடியாமல் போனதில் ஆச்சரியமில்லை. ஆயினும் படைவீரர்கள் தமது அதிர்ச்சி யையும் அச்சத்தையும் துப்பாக்கி மூலம் இலக்கின்றித் தாறுமாறாகச் சுட்டுக் களைப்படைந்தபோது ஆச்சரி யமாக இருந்தது. எல்லா நாட்டிலும் போராட்டக்காரர்களை எதிர்த்துப் போராடும் இராணுவம் முட்டாளாக் கப்படும் போது மக்களின் வரிப் பணம் இப்படித்தான் வீணாக்கப் படுகின்றது. அதை யாரும் பொருட்படுத் துவதேயில்லை.

குறுகிய இடைவெளிக்குள் மீட்புப் படையணியும், முதலுதவிப் படையணியும் வேகமாக வந்துசேர்ந்தன. அனைவரும் பொசிஷன் எடுத்து அடுத்த தாக்குதலை எதிர்பார்த்துத் தயாராக இருந்தனர். ஊழியர்கள் ஏற்றப்பட்டிருந்த ஒரே யொரு வண்டி தாக்குதலுக்கு உள்ளாகி இருந்தது. அதுவும் அந்த வாகனச் சாரதியின் அவசரத்தினாலும், கலவரப் பட்ட புத்தியாலும் நேர்ந்த அவலம் என்பது பார்க்கும் போதே தெரிந்தது. நானும் வேகவேகமாக இறங்கி காயப் பட்டவர்களைக் காப்பாற்றும் முதலுதவி அணிக்கு ஒத்தாசைகள் வழங்கத் தொடங்கினேன். “அம்மா அம்மா” என்று தேன் தமிழில் ஒரு புலம்பல் ஒலி தெளிவாக என்காதில் ஒலித்தது. அந்தத் திசையை நோக்கி நகர்ந்து உரிய நபரை இனங்காண்பது யுத்தகளத்தில் தன் ஆருயிர் நண்பனின் உயிரைக் காக்கத் தன்னைத் தியாகம் செய்தல் போன்றேதான் இருந்தது. அவனைப் பத்திரமாக இழுத்துச் சென்று பாது காப்பை உறுதிப்படுத்திவிட்டு நிமிரும் போது அவன் எனது கையை இறுகப் பற்றி உடைந்த அரபியில் கதைக்க முற்பட்டபோது “தமிழில் கதை” என்றதும் அவனுக்கு உயிர் பிழைத்துவிடுவோம் என்ற நம்பிக்கை துளிர்விடத் தொடங்கி யிருந்து. எனது கரங்களை இறுகப் பற்றிக் கொண்டான். அவனை அம்பியூலன்சுக்கு

மாற்றி முதலுதவிகளை வழங்கிக் காயங் களுக்குக் கட்டுப்போட்டு வைத்திய சாலையில் அனுமதித்து விட்டு கண் விழிக்கும்வரை பக்கத்தில் இருந்து "பயப்படத் தேவயில்ல, உயிருக்கு ஒரு ஆபத்துமில்ல சரியோ" என்று பொய் சொல்லும் போது அவனது கண்கள் கலங்கியிருந்தன.

அவனால் மெதுவாகப் பேச முடிந்தது. "அண்ணே நான் செத்துவிடுவன் போலக் கிடக்கு" என்றபோதே அவனால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. "திடீர்னு வர்ர சிக்கலான அவசர நிலைமையைச் சமாளிக்கப் போதுமான மருத்துவ வசதி இந்த முகாம்ல இல்ல, அதனால கெஞ்சம் சிரமமாகத்தான் இரிக்கும் கொஞ்சம் பொறுத்துக்க" என்றதும் அதுதான் தனது மரணத்துக்கான உத்தரவாதமாகக் கண்டான். அதன் பின்னர் அவனது வார்த்தைகள் உடைந்து உடைந்து வெளிப்பட்டன. அவனது சிந்தனைகள் மரணத்தை ஏற்றுக்கொள்ள உணர்வு களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தன. அவனது யோசனையை வேறு பக்கம் மாற்றுவதைத் தவிர வேறு வழியி ருக்கவில்லை. அவனது கடவுச் சீட்டை எடுத்து பெயரைப் பார்த்தேன். முஹம்மது அலி முஹம்மது ஹுஸைன் என்றிருந்தது. அவனது பேச்சுக்கும் பெயருக்கும் சம்பந்தமிருக்க வில்லை. முகத்தில் எவ்வித மாறுதலையும் காட்டிக் கொள்ளாமல் அவனுடன் உரையாட ஆரம்பித்தேன்.

"உன்ட பேரென்ன?"

"குசைன்"

"அதில்ல உண்மையான பேரென்ன? உண்மையாகப் பேசு அப்பதான் என்னால உனக்கு உதவ முடியும். நானும் இலங்கதான், மட்டக்களப்பு"

"சொரி அண்ண, என்ட பேர் சிந்துஜன், நானும் மட்டக்களப்புதான். சமாதான காலத்துல பேர மாத்தி குவைத்துக்கு வந்துட்டன். ஒரு சிங்கள ஆளுக்கிட்டக் கதச்சி முஸ்லிமாள்தான் இந்தப் பாஸ்போர்ட் எடுத்துத் தந்தாரு"

"அப்ப நீ இயக்கமா?"

அவன் தலையை மட்டும் அசைத் தான். அவனுக்கு முன்னால் மரணம் நின்று கொண்டிருந்தது. ஆயினும் அவன் சொல்லும் தகவல்கள் உண்மைதான் என்று நம்ப முடியாது. பெயர் மாற்றிக் கொண்டு எதற்காக அவன் இங்கு வந்தான்? நாட்டிலிருந்து வெளியேற வேண்டிய அவசியம் என்ன வந்தது? சிலவேளை இவனும் புலிகளின் உளவுப் பிரிவு உறுப்பினனா? அவன் உளவுப் பிரிவு உறுப்பினன் என்றால் நிச்சயமாக எடுத்தோம் கவுத்தோம் என்று காரியம் செய்திருக்க மாட்டான். அவனது பின்னணி குறித்து கவனம் ஓடிக்கொண்டிருந்தது. பேச்சுக் கொடுப்பதென்று முடிவு செய்தேன். படுகாயம் பட்ட அவனிடம் கிட்டத்தட்ட விசாரணைக் கொப்பான கதையாடல் மனசுக்குக் கஸ்டமாக இருந்தது. புலிகள் மீதான வெறுப்பும் ஆத்திரமும் அப்படியே என் கண் முன்னால் பேருருவமாக எழுந்து நிற்க அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய பகைவன் எனது காலடியில் வீழ்ந்து கிடக்கின்றான். அவனைக் கொல்வதுதான் எனக்கு அமைதியைத் தரக்கூடும் என்று யோசிக்கும்போது எனது கரங்களை அவன் பற்றியிருந்தான்.

"அண்ணே நான் செத்துட்டா என் பொணத்த இங்கேயே புதைக்கச் சொல்லுங்க, அண்ணே நீங்க ணெண்டு வேல செய்யனுமண்ணே, இந்த ஆறு மாசத்துச் சம்பளத்த இயக்கத்துக்குத் தாரதா சொல்லி இருந்தன். ருமைத்தியா கத்தா மூனு பள்ளிக்குப் பக்கத்துல பக்காலா போட்டிருக்கிற நாதனுக்கிட்ட

ரெண்டாயிரம் தினார் காசிரிக்கி அத எடுத்து முர்காப் ஐபிசி பில்டிங் பக்கத்துல சிட்டி சலூன்ல என் பங்குன்னு சொல்லிக் குடுத்திருங்க. அப்பிடியே என் சாவப் பத்தியும் சொல்லிருங்க, கம்பனி இன்சூரன்ஸ் காசு தரும் அத எங்கம்மாக்கிட்டக் குடுத்துவிடுங்க, அவக்கு ஆஸ்துமா இருக்கு பிளீஸ் அண்ண, நீங்க கடவுள் மாதிரி அண்ணே"

"இல்லாடா பயப்படாத உன்னக் காப்பாத்திருவாங்க" அவனது கண் களில் கண்ணீர் பொசிந்தது. அவன் சாவுக்காக அச்சப்படவில்லை இதுவரை எதற்காகவும் அழுதவிழிகளுமல்ல போன்று தெரிந்தது. ஆயுதம் தூக்கி யவன் எதற்காக அழுதிருக்கின்றான். இரும்புத் துப்பாக்கி மாதிரி விறைப்பாக வளைந்துகொடுக்காது கண்கலங்காது கம்பீரமாக மனசையும் உணர்வுகளையும் கொன்றுவிட்டு மலைமாதிரி இருப்ப வன்தான் போராளி என்ற பிரமைக்குள் எல்லோரையும் போல அவனும் பீடிக்கப்பட்டுத்தான் இருப்பான். எத்தனை மரணங்களைத் தாண்டி நான் பயணப் பட்டிருக்கின்றேன். எங்காவது கண்கள் கலங்கியதா எனக்கு! வாழ்க்கையில் பல உணர்வுகளைத் தொலைத்துக் கொண்டி ருக்கும் போலி விறைப்புக் காட்டுகின்ற துப்பாக்கி மனிதர்கள்.

நான் யாரென்பதை வெளிப்படுத்தி விட்டு இனி இராணுவத் தோரணை உரையாடல் மட்டும்தான் சரியெனப் பட்டது. அவனிடம் உண்மையைச் சொல்லுவோமா என்று யோசிக்கும் போதே அவன் எனது கரங்களை அழுத் தினான்.

"அண்ணே, நான் பொழைக்க மாட்டன் போலத் தெரீது, என் அம்மாக்கிட்ட என் சாவச் சொல்லிராதீங்க" அவன் தனது மரணத்தை ஆத்மார்த்தமாக உணரத் தொடங்கிவிட்டான். குண்டு வெடிப்பில் சிக்கினால் ஏற்படும் மரணங்கள் வித்தியாச மானவைதான். ஒருவனை மிகவும் திடமாக வைத்திருந்து நம்பமுடியாத விறைப்போடு பலவீனப்படுத்திக் கொன்று விடும். மரணத்தை கம்பீரமாக எதிர் கொள்ள ஒரு ராணுவ வீரனால்தான் முடியும். அந்த வீரக்களை அவனது முகத்தில் பிரதிபலிக்கத் தொடங்கியது.

"சரி அதெல்லாம் விடு என்னால் முடிந் தளவுக்கு உன் எதிர்பார்ப்புகள நிறை வேற்றுவன், நீ ஏன் கள்ளப் பாஸ்போர்ட்ல நாட்டவிட்டு வந்தாய்"

"மட்டக்களப்பு ஜெயில்ல இருந்து அன்புமணியோட தப்பின எட்டுப்பேர்ல நானும் ஒருத்தன், அதுக்குப் பிறகு சமாதானம். அம்மான் செய்த துரோகம் உயிருக்கு உத்தரவாதமில்ல அதனால தப்பி வந்துட்டன். வன்னியில இருந்து தொடர்பப் பேணி இங்க புலனாய்வு பிரிவிலதான் இருந்தன், என் சாவுக்கு மாவீரன் பாட்டிசைக்க ஆள் இல்லாமப் போயிட்டண்ணே"

"அந்தக் கவலய விடு உன் வித்துடலுக்கு முடிந்தளவு சரியான இறுதி மரியாதையைச் செய்ய முயல்கின்றேன்" ஏதோவொரு நம்பிக்கையில் என்னைப் பார்த்தான். அந்தப் பார்வையில் நான் யார் என்ற கேள்வி தொக்கி நின்றது. பதில் அவனுக்குப் பயனற்றது. ஏனெனில் இப்போது அவனுக்கு நான்தான் எல்லாமே என்ற நிலை.

"உலகத்துல கடைசி வரையும் ரகசியம் என்டு ஒன்டு இல்ல எனெ அண்ணே"

"ஏன் அப்டிச் சொல்றாய்?"

"இதுவரைக்கும் யாரென்டே தெரியா மல் வாழ்ந்த நான் இப்ப எல்லா உண்மை யையும் யாரென்டே தெரியாத உங்கக்கிட்டச் சொல்லிக் கிட்ருக்கன் பாருங்கோ"

"அதான் வாழ்க்க, ஒரு புள்ளியில் முடியும்போது எதிரியென்டாலும் நம்பித்தா

னாகனும், அது செரி இங்க உங்கட தேடுதலுக்குள்ள இருக்கின்ற பெயர்களச் சொல்லு"

அவன் மிகவும் முடியாமல் அவதிப்பட்டான். அதிகமாகக் குருதி வெளியேறி இருந்தது. அவனது உடல் சூடு குறைந்து கொண்டே சென்றது. இன்னும் விஷேட மருத்துவக்குழு வந்து சேரவில்லை. அதுவரைக்கும் அவன் தாங்கமாட்டான் என்று எனக்குத் தெரிந்தது. எனது கேள்வி அவனுக்குள் என்ன உணர்வை ஏற்படுத்தியதோ தெரியவில்லை. சித்திரவதைப்பட்டு உண்மையைக் கடித்துக் கொண்டிருக்கும் திமிர்பிடித்த வீரனின் உரம் அவனது முகத்தில் பிரதிபலித்தது.

"ப்ளீஸ் சொல்லுடா, ஏன்னா நானும் நீங்க தேடும் ஆட்கள் பட்டியலில் இருக்கலாம்னு எனக்குத் தெரியும்" என்று அவனைப் பார்த்துப் புன்னகைத்தேன்.

அவன் அமைதிக்கு நீண்ட நேரம் எடுத்துக் கொண்டான். அவனால் பேசுவது மிகவும் சிரமமாக இருந்தது. ஒவ்வொரு சொல்லாக அடுக்கினான் அதன் ஒலியும் சுருதியும் குறைந்து கொண்டே சென்றது

"ஒரு டிசம்பர்ல உங்களுக்கு சூடு பட்டிச்சா அண்ணா"

நான் தலையசைத்தேன். அவன் புன்னகைத்துக் கொண்டான். "மு..க..ம...ட்" ஒவ்வொரு எழுத்தாக மிகச் சிரமத்தோடு உச்சரித்தான். பார்வையால் பேசினான் ஆம் என்று தலையசைத்தேன். அப்படியே குனிந்து காதினுள் "இப்போது அம்மார்" என்றேன். அவனது கைகள் எனது கையைப் இறுகப் பற்றிக் கொண்டிருந்தன, மீண்டும் அவனது கண்களில் இருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் வந்தது. "அ....ம்..." என்றதோடு புன்னகை பூத்தபடி என்கரங்களை மிக அழுத்தி இறுக்கினான்.

அவன்மீது எனக்கிருந்த கொலை வெறி ஒரு கணத்தில் எங்கு போன தென்றே தெரியவில்லை. மனிதம் எல்லாவற்றையும் வென்று அமைதியாக என்னைச் சூழ்ந்து நின்று கொண்டிருந்தது. பகைவன் எதிரி நண்பன் எல்லாமே வெறுமையாகி நின்ற பயனற்ற பொழுதில் விஷேட வைத்திய குழு இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடுமென்ற அறிவித்தல் கேட்டது.

❖❖❖

குறிப்பு *01:* ருமைத்தியா கத்தா மூனு பள்ளிக்குப் பக்கத்துல பக்காலா போட்டிருக்கிற நாதனுக்கிட்டரெண்டாயிரம் தினார் பற்றி விசாரித்தபோது அப்படி ஒரு தீனார்கூட தன்னிடமில்லை என்று வாதிடும்போதே அவன் சொல்லும் பொய் பளிச்செனத் தெரிந்தது.

குறிப்பு *02:* முர்காப் ஐபிசி பில்டிங் பக்கத்தில் இருந்த சிட்டி சலூனில் அவனது மரணச் செய்தியைச் சொல்லி ஒரு வாரத்தின் பின் எதேச்சையாக அங்கு எட்டிப் பார்த்தேன் அவனுடைய படத்துக்குப் பக்கத்தில் எண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

குறிப்பு *03:* சரியாக நான்கு வருடங்கள் பாதுகாத்த அவனது காப்புறுதிப் பணம் ஐந்து லட்சம் ரூபாயோடு அவனது அம்மாவின் இருப்பிடத்தைத் தேடிக் கண்டடைந்தபோது அக்கம் பக்கத்தில் உள்ள சனங்கள் சுடுகாட்டுப் பக்கம் வழிகாட்டினார்கள். மருந்துவாங்கப் பணம் இல்லாமலேயே ஆஸ்த்துமாவினால் இறந்து விட்டிருந்தாள்.

குறிப்பு *04 :* அப்போது நிறையப் புதிய பணக்காரர்களும் பல துரோகிகளும் இருந்தார்கள். மாவீரர்கள் என்று எந்த நினைவிடமும் இல்லாதிருந்தது.




**என். நஜ்முல் ஹுசைன்**



1967 ஆம் ஆண்டு “சுஜாதா” எனும் தமிழ்-சிங்கள கையெழுத்துச் சஞ்சிகையின் தமிழ் பகுதி ஆசிரியராக இலக்கியப் பிரவேசம் செய்த நஜ்முல் ஹுசைனின் முதல் ஆக்கம் 1968ஆம் ஆண்டு தென்னிந்திய “குமுதம்” சஞ்சிகையில் வெளியாகியது.

மாதத்தின் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் இடைவிடாது கவியரங்கினை நடாத்திவரும் கொழும்புத் தலைநகரில் வெற்றிநடை போடும் தமிழ்க் கவிஞர்களின் தேசிய அமைப்பான ‘வகவம்’ எனும் வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர். இவ்வமைப்பு இவரது தலைமையின் கீழ் இதுவரை 65 கவியரங்குகளை வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. இலங்கையின் எல்லாத் தேசியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. வானொலி தொலைக்காட்சிகளிலும் பங்களிப்புச் செய்து வருகிறார். பாடசாலைக் காலம் முதல் வானொலி முஸ்லிம் சேவையில் குரல் கொடுத்து வந்துள்ள இவர் ‘இளைஞர் இதயம்’ எனும் நிகழ்ச்சியினை இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் நடாத்தி வந்துள்ளார். இவரது மெல்லிசைப் பாடல்கள், இஸ்லாமிய கீதங்கள், வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி, ஒளிபரப்பாகி வருகின்றன.

மேடைக் கவிதைகள் பாடுவதில் ஆர்வம் காட்டி வரும் இவர் பட்டி மன்றப் பேச்சாளரும் ஆவார். 2011இல் மலேசிய கோலாலம்பூரில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக் கவியரங்கில் இலங்கை சார்பாக கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமையில் கவிதை பாடினார். கொழும்பு கம்பன் கழகத்தின் கம்பன் விழா 2017 உரையாற்றி தமிழறிஞர்களின் பாராட்டையும், வாழ்த்தையும் பெற்றார். தமிழகத்தின் மேடைகளிலும் கவிதை பாடியுள்ளார்.

மரபுக் கவிதை, புதுக்கவிதை என்று எழுதிவரும் இவர் ‘பனித்தீ’ எனும் கவிதை நூலினை 1992இலும் ‘இனிவரும் நாட்களெல்லாம்’, ‘நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள்’ ஆகிய இரண்டு கவிதை நூல்களை 2018இலும் வெளியிட்டுள்ளார். சிறுகதைகளையும் எழுதி வரும் இவரது சிறுகதைத் தொகுதி விரைவில் வெளிவரவிருக்கிறது.

அரச விருதான கலாபூஷணம் விருது பெற்றுள்ள இவர் 2002ஆம் ஆண்டு இலங்கை அரசின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் போது ‘படைப்பாளர் விருது’ வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரது கவிதை பங்களிப்புக்காக அகில இன நல்லுறவு ஒன்றியம் இவருக்கு ‘கவிமணி’ பட்டம் வழங்கியது.

**(ஞானம் 238, மார்ச் 2020)**

சாமசிரி ஆடாது அசையாது அமர்ந்திருந்தான். அவனது இடது காலில் இன்னும் இலேசாக இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

அவனது வீட்டுக்குள் அந்த முஸ்லிம் குடும்பம் ஆனந்தக் கண்ணீரோடு கூடி நின்றது. அவர்கள் காட்டிய அன்பிலே அவனது மனைவி, பிள்ளைகளும் திக்கு முக்காடிக் கொண்டிருப்பது அவனுக்கு நன்றாக விளங்கியது.

கலகெடிஹேன பன்சல தலைமை ஹாமுதுரு கூட சோமசிரியை அழைத்து தனது பாராட்டினைத் தெரிவித்திருந்தார்.

சுற்றியிருந்த ஊரார்கூட அவனை ஒரு வீர புருஷனாக வாயார வாழ்த்திக் கொண்டிருந்தனர்.

தனக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் அத்தனை பாராட்டிற்காகவும் மிகவும் மகிழ்ச்சியடைய வேண்டிய சோமசிரியால் முழுமையாக அப்படி இருக்க முடியவில்லை.

சென்ற சனிக்கிழமை ஒரு வேலையாகத் தனது மோட்டார் வண்டியில் உடுகொடக்கு அருகிலிருந்த சிங்களக் கிராமத்திற்குச் சென்றிருந்தான். வரும் வழியில் திஹாரி ஊடாக வேகமாக வந்து கொண்டிருந்தான். அப்போது நண்பகல் வேளை. திஹாரி ஆற்றுக்கருகில் வந்தபோது ஆறு வழமையை விட வேகமாகச் செல்வதை அவதானித்தான். எங்கேயாவது பெரிய மழை பெய்கிறது என்று ஊகித்துக் கொண்டு வந்து கொண்டிருந்த போதுதான் அந்த வித்தியாசமான சத்தங்கள் அவனது காதில் விழுந்தன.

'என்ன அந்த சத்தம்' என்று எண்ணிப் பார்க்கும் முன்பே சுழன்று ஓடும் ஆற்றைப் பார்த்து விட்டான்.

அங்கே அவன் கண்ட காட்சி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அங்கே யாரோ ஒருவர் தண்ணீரில் அடிபட்டுப் போய் கொண்டிருந்தார்.

இல்லை ஒருவரல்ல இருவர். நன்றாகப் பார்த்தான். இல்லை மூவர் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு பெண்கள். ஒரு சிறுவன். அப் பெண்ணின் ஆடையைப் பார்த்தவுடனேயே தெரிந்துவிட்டது. அவர்கள் முஸ்லிம்கள். சோமசிரி ஒரு கணமும் யோசிக்கவில்லை. மோட்டார் வண்டியை கீழே போட்டு விட்டு சட்டையைக் கழற்றினான்.

---

**பெரிய நீச்சல் வீரனான சோமசிரி ஆற்றில் குதித்தான்.**
**முதலில் அவனுக்கு தத்தளித்துக் கொண்டிருந்த சிறிய பெண் பிள்ளையைத்தான் பிடிக்க முடியுமாயிருந்தது. ஒருகையால் அச் சிறுமியைப் பிடித்துக் கொண்டே சிறுவனையும் பிடித்துக் கொண்டான். இருவரையும் ஒருவாறு கரை சேர்த்தான்.**
**நேர இடைவெளி விடவில்லை. மீண்டும் நீரில் குதித்தான். தத்தளித்துக் கொண்டிருந்த பெண்ணின் கொண்டையைப் பிடித்தான். வேகமாக இழுத்துக் கொண்டு கரைக்கு வந்தான். அப்போது அங்கே பலர் வந்து கூடிவிட்டனர். அந்தச் சிறுவன் சிறுமிக்கு முதலுதவி வழங்கிக் கொண்டிருந்தனர். சோமசிரியும் களைத்துப் போய்விட்டான்.**
**அவனது இடது காலும் ஏதோ ஒரு கல்லில் அடிபட்டிருந்தது.**
**அதிலிருந்து இரத்தம் வழிந்தது. சோமசிரி செய்த காரியம் சாதாரணமானதல்ல.**
**மூன்று உயிர்களைக் காப்பாற்றியுள்ளான்.**
**அவன் மட்டும் அந்த நேரத்தில் வராமலிருந்தால்**
**அந்த மூன்று உயிர்களும் பறிபோயிருக்கும்.**

**மினுவன்கொடை முஸ்லிம்கள் அச்சத்தில் உறைந்து போயிருந்தார்கள். அவசரகால சட்டம் ஊரடங்கு சட்டம் என சட்டங்கள் ஊமையாக ஆட்சி செய்து கொண்டிருக்க சோமசிரியும் நண்பர்களும் கையிலே ஆயுதங்களுடன் முஸ்லிம் வியாபார ஸ்தாபனங்கள் என அடையாளம் தெரிந்த இடங்களை எல்லாம் அடித்து நொறுக்கினர். ஆங்காங்கே இருந்த ஆயுதப் படைகள் வெறும் அஃறிணைகளாகத்தான் அவர்களுக்குத் தோன்றினர்.**

அவன் கழற்றிய வேகத்தில் சட்டை கிழிந்தது. பெரிய நீச்சல் வீரனான சோமசிரி ஆற்றில் குதித்தான். முதலில் அவனுக்கு தத்தளித்துக் கொண்டிருந்த சிறிய பெண் பிள்ளையைத்தான் பிடிக்க முடியுமாயிருந்தது. ஒருகை யால் அச் சிறுமியைப் பிடித்துக் கொண்டே சிறுவனையும் பிடித்துக் கொண்டான். இருவரையும் ஒருவாறு கரை சேர்த்தான். நேர இடைவெளி விடவில்லை. மீண்டும் நீரில் குதித்தான். தத்தளித்துக் கொண்டிருந்த பெண்ணின் கொண்டையைப் பிடித்தான். வேகமாக இழுத்துக் கொண்டு கரைக்கு வந்தான். அப்போது அங்கே பலர் வந்து கூடி விட்டனர். அந்தச் சிறுவன் சிறுமிக்கு முதலுதவி வழங்கிக் கொண்டிருந்தனர். சோமசிரியும் களைத்துப் போய்விட்டான். அவனது இடது காலும் ஏதோ ஒரு கல்லில் அடிபட்டிருந்தது. அதிலிருந்து இரத்தம் வழிந்தது.

சோமசிரி செய்த காரியம் சாதாரண மானதல்ல. மூன்று உயிர்களைக் காப்பாற்றி யுள்ளான். அவன் மட்டும் அந்த நேரத்தில் வராமலிருந்தால் அந்த மூன்று உயிர்களும் பறிபோயிருக்கும்.

அந்தப் பெண் ஆற்றில் குளிக்க வந்த நேரம் யாருமே அங்கு இருக்கவில்லை. தனது மகன் நீச்சல் வகுப்புக்கு போகிறான்தானே என்ற குருட்டுத் தைரியத்தில் ஆற்றில் இறங்கி விட்டாள். ஆற்றின் வேகத்தோடு ஈடுகொடுக்க முடியாது போனதைப் பிறகுதான் உணர்ந்தாள்.

நல்லவேளை இரக்க குணமுள்ள சோமசிரி வந்து சேர்ந்தான். உடனடியாக நீரில் மூழ்கிய மூவரும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். சோம சிரியை அருகிலுள்ள டிஸ்பென்சரிக்கு தூக்கிச் சென்று அவனது இரத்தம் வழியும் காலுக்கு கட்டுப்போட்டு விட்டனர். அங்கே வந்த அனைவருமே சோமசிரியை மார்போடு அணைத்துக் கொண்டனர். சிறிது நேரத்திலேயே சோமசிரி மூன்று உயிர்களைக் காப்பாற்றிய செய்தி ஊர் முழுக்கப் பரவிவிட்டது. பெண்கள் கூட சோமசிரி யைப் பார்க்க வந்தனர். தங்கள் மலர்ந்த வதனத்தினால் சோமசிரிக்கு நன்றி சொன்னார்கள்.

“சோமசிரி, சோமசிரி” என்று எல்லோரும் உச்சரிக்க ஆரம்பித்தனர்.

அந்த ஊரிலே சோமசிரி ஹீரோவாக போயிருந்தான். ஊர் பள்ளிவாசல்கூட அவனுக்கு நன்றி பாராட்டி விழா நடத்தத் தயாராகிக் கொண்டிருந்தது.

இன்று அவனது வீட்டுக்கு அவன் காப்பாற்றிய முஸ்லிம் குடும்பம் வந்திருந்தார்கள். அவர்கள் நன்றியை வெளிக்காட்டிய விதத்தில் சோமசிரியின் முழுக் குடும்பமுமே திக்கு முக்காடிப் போயிருந்தது.

தான் செய்த வீர காரியத்தை எண்ணி மகிழ்ச்சிக் கடலில் திளைக்கவேண்டிய சோமசிரியின் அடிமனதின் ஒரு மூலையில் தாங்க முடியாத சோகம் அவனை முழு மகிழ்ச்சி கொள்ள முடியாத வகையில் வதைத்துக் கொண்டிருந்தது.

'நான் நல்லவனா கெட்டவனா?' விடை தேடி அவனது மனச்சாட்சி அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

இப்போது மூன்று முஸ்லிம் உயிர்களைக் காப்பாற்றிய அவன் ஒரு மாதத்திற்கு முன்பு என்ன செய்தான்....?

❖❖❖

மினுவன்கொடை முஸ்லிம்கள் அச்சத்தில் உறைந்து போயிருந்தார்கள். அவசரகால சட்டம் ஊரடங்கு சட்டம் என சட்டங்கள் ஊமையாக ஆட்சி செய்து கொண்டிருக்க சோமசிரியும் நண்பர்களும் கையிலே ஆயுதங்களுடன் முஸ்லிம் வியாபார ஸ்தாபனங்கள் என அடையாளம் தெரிந்த இடங்களை எல்லாம் அடித்து நொறுக்கினர்.

ஆங்காங்கே இருந்த ஆயுதப் படைகள் வெறும் அஃறிணைகளாகத்தான் அவர்களுக்குத் தோன்றினர்.

சோமசிரியினதும் அவனது நண்பர் களினதும் மனங்களில் வெறியினைத் தவிர எதுவுமே இருக்கவில்லை. முடியுமான இடங்களுக்கெல்லாம் தீ வைத்தனர். ஓர் ஒழுங்கை வழியே சோமசிரி வெறியுடன் சென்றபோது ஒரு மறைவிடத்தில் ஹிஜாப் அணிந்த ஒரு பெண்ணும் அவளை அச்சத்தோடு அணைத்துக் கொண்டு இரண்டு சிறுமிகளும் இருந்தனர். ஹிஜாபுடன் அப் பெண்ணைப் பார்த்தவுடன் சோமசிரிக்கு தங்கள் இனத்தையே அழிக்க வந்த தற்கொலைக் குண்டுதாரியாகத்தான் அவள் தென்பட்டாள்.

மிகவும் மூர்க்கமாக அவளைத் தாக்கினான். அச் சிறுமிகளையும் கொடூரமாகத் தாக்கினான். அவர்கள் அச்சத்தால் அலறினார்கள். தங்களைத் தாக்க வேண்டாம் என்று கூக்குர லிட்டார்கள். அவர்களது அவலக்குரல்கள் எதுவுமே சோமசிரியின் காதுகளுக்கு ஏறவில்லை. அவர்கள் மூவரும் படுகாயப் பட்டு மயக்கமுறும்வரை தாக்கினான். அவர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கினர்.

பின்புதான் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். அது போன்றே இன்னும் பல அப்பாவிகள் அவனதும் நண்பர்களினதும் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

மினுவான்கொடையை அழித்து விட்டோம் என்று வெற்றி முரசு கொட்டி திரும்பி வந்தார்கள்.

❖❖❖

'திஹாரி ஆற்றில் தத்தளித்துக் கொண்டிருந்த அந்த முஸ்லிம் குடும்பத்தைப் பார்த்தபோது எதுவுமே யோசிக்காமல் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு எனக்கு ஏன் ஏற்பட்டது?. ஊர் மாறிச் சென்று முஸ்லிம்கள் என்ற காரணத்துக்காக வெட்டி விட்டு வந்த என்னால் இவர்கள் சாகட்டும் என்று போகமுடியாமல் போனதே ஏன் ? ஏன் ? '

சோமசிரி தன்னையே கேட்டுக் கொண்டான். விடை அவனுக்கு கிடைத்தது.

"ஆம் நான் ஒரு நல்ல பௌத்தன்.

மனிதர்கள் மீது இரக்கத்தை மட்டுமே காட்டிய புத்தபிரானின் அடியொற்றி வாழ்பவன்.

புத்தர் சிலையின் முன் சென்று நின்றான்.

"புத்தர் பிரானே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். மன்னித்துக் கொள் ளுங்கள்" கண்ணீரால் புத்தர் சிலையை அபிஷேகம் செய்தான் சோமசிரி.

அங்கே இன்னொரு அசோக சக்கரவர்த்தி பிறந்திருந்தான்.

❍

# அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ. இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி - 2020 முடிவுகள்



**முதற்பரிசு - ரூபா 5000/-**

| | | |
|---|---|---|
| ❍ ஒரு போத்தல் தண்ணீர் | எஸ். ஐ. நாகூர்கனி | கொழும்பு 12 |

**இரண்டாம் பரிசு - ரூபா 3000/-**

| | | |
|---|---|---|
| ❍ காவியத் தலைவன் | ஈழநல்லூர் கண்ணதாசன் | யாழ்ப்பாணம். |

**மூன்றாம் பரிசு - ரூபா 2000/-**

| | | |
|---|---|---|
| ❍ நுண்ணுயிர்க் கொல்லி | Dr. எஸ்.சிவகலை | கொழும்பு 06 |

**ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| ❍ தூறல்கள் மழையாகலாம் | விமல் பரம் | லண்டன் |
| ❍ நெருப்புப் பெட்டி | முஸ்டீன் | கொழும்பு 13 |
| ❍ அம்மாவின் எண்பதாவது பிறந்ததின உரை | கே.எஸ்.சுதாகர் | அவுஸ்திரேலியா |
| ❍ அவளா இவள் | தேவகி கருணாகரன் | அவுஸ்திரேலியா |
| ❍ வெறுமை | கீர்த்தனி வாகீசன் | அவுஸ்திரேலியா |
| ❍ ஐந்தும் பெற்றால் | வயிரமுத்து சிவராசா | ஜேர்மனி |
| ❍ சதிமுயற்சி என்னும் கற்பனை | எஸ்.பி.கிருஷ்ணன் | யாழ்ப்பாணம் |

நடுவர்கள்: 'சாகித்திய ரத்னா' தெளிவத்தை ஜோசப், புலோலியூர் ஆ.இரத்தின வேலோன், டாக்டர் ச. முருகானந்தன், திருமதி வசந்தி தயாபரன், ஞானம் பாலச்சந்திரன்.

**(ஞானம் 243, ஆகஸ்ட் 2020)**




**தண்ணீர் மனுக்குலத்திற்கு மட்டுமன்றி, ஜீவராசிகள் அனைத்திற்கும் இறைவன் வழங்கியுள்ள கொடை எனலாம். தண்ணீர் குடித்தால் தாகம் தீருகிறது. அதுவே நிலத்தில் கொட்டினால் சிதறி ஓடி பயனற்றுப் போகிறது. தண்ணீரைப் பாவிப்பதையொட்டி, பயன் நிகழ்கிறது. இங்கு தண்ணீர் கொட்டப்படுகிறது. ஆனால் அது புனிதமாகிறது. அது எப்படி?**

ஏறத்தாழ பதினைந்து - இருபது வருடங்களாக, ஒரு புதுப் பழக்கம் மனிதரில் ஒட்டிக் கொண்டு, இன்றுவரை உறவாடி வருகிறது. அது..... யார் எங்கே போனாலும், அது பஸ் பயணமோ - ரயில் பயணமோ - பணிமனை விஜயமோ எதுவானாலும், கையில் ஒரு போத்தல் தண்ணீருடன் போவது, இன்று ஒரு பெ∴ஷனாகி விட்டது.

ஆனால் மூன்று தசாப்தங்களுக்கு முன்னம், இந்த நபீஸாம்மா என்ற ஐம்பது வயது நிரம்பிய - யாழ்ப்பாணத்து பாரம்பரிய முஸ்லிம் குடும்பத்தின் மூதாட்டி தன் வீட்டை விட்டு, தான் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு வெளியேறிய வேளையில், தேவைப்படும் முக்கிய சாமான்களை எல்லாம் பெட்டியில் போட்டுப் பூட்டிய சந்தர்ப்பத்தில், மறக்காமல் லிட்டர் பிளாஸ்டிக் போத்தல் தண்ணீரை - யாழ் மண் சிந்திய கண்ணீரை மூடியை இறுக மூடி பெட்டியின் அடியில் போட்டு மூடிவிட்டாள்.

இதைப் பார்த்துவிட்ட மகனின் மனையாள், மருமகள் ஜெய்புன்னிஷா "தண்ணி போத்தல் ஏன் மாமி..." எனப் பதறி - பதைபதைத்த நேரத்திலும் பக்குவமாக கேட்டாள். "அதுவா.... ஒரு தேவைக்கு.. பேந்து சொல்வினம்" என்றபடி போகும் பரபரப்பில் மற்றக் காரியங்களைக் கவனிக்கலானாள். ஜெய்புன்னிஷா மௌனித்து விட்டாள். மாமியார் நபீஸாம்மா தமிழ் வளர்த்த யாழ்ப்பாண முஸ்லிம் புலவர் அப்துல் காதரின் அருமந்த பேத்தியல்லவா? காரணமில்லாமல் எதையும் மாமி செய்யமாட்டாங்க...! என்ற மலையளவு நம்பிக்கை மருமகளுக்கு. இஸ்லாம் எங்கள் வழி - இன்பத்தமிழ் எங்கள் மொழி என்ற பண்பில் வளர்ந்த பாடறிந்தொழுகும் பண்பினள் இந்த மாமி.

(ஞானம் 244, செப்டெம்பர் 2020)

**தமிழ்ப்பால் குடித்து வளர்ந்த சுபைரின் குடும்பத்தில் மனைவி ஜெய்புன்னிஷாவும் – மகள் சுபைதா டீச்சரும் அக்கம் பக்கத்தாருக்கே தெரியாமல் வளர்ந்த அடக்கத்தின் அடையாளங்கள். இப்போது ஆயிரம் பிறை கண்டுவிட்ட நபீஸாம்மா பெட்டியினுள் ஒளித்து வைத்துள்ள போத்தல் தண்ணீரைப்பற்றி தாயும் – மகளும் மறந்தும் எப்போதும் பேசியதேயில்லை. பொறுமை எத்தனை நாட்களுக்குத்தான் அடைகாக்கும்? இரு பெண்களுக்கும் 'இதுபற்றி' பேச வேண்டும் என்ற உணர்வு. இன்று குஞ்சு பொரித்து விட்டது.**

அது என்ன பதறி பதைபதைத்த நேரத்தில்..?

ஓ... அதுவா.? மனிதர்கள் மறந்தாலும், வரலாறு மறக்காத - மன்னிக்காத - கறைபடிந்த சம்பவம். பன்னெடுங் காலமாக யாழ்ப்பாண மண்ணில் பிறந்து, தமிழைப் பேசி - சுவாசித்து வாழ்ந்துவந்த முஸ்லிம்கள், இரண்டு மணிநேர அவகாசத்தில் சொத்துபத்துக்களை அப்படி அப்படியே போட்டுவிட்டு போகும்படி விரட்டப்பட்டதால், வெளி யேறிய சோகம் சுமந்த சம்பவம்.

முஸ்லிம்கள் அனைவரும் ஜின்னா மைதானத்தில்'தம்பிகள்'வெளியேறும்படி பிரகடனப் படுத்திய தீர்மானத்தை சீரணிக்க முடியாமல், தத்தம் வீடுகளுக்கு வந்து,

அவசியப்படும் பொருட்களை மட்டும் பெட்டிகளிலும், கைப்பைகளிலும் போட்டு தூக்கிக்கொண்டு, மனப்பாரத்தோடு வெளி யேறினார்கள். உத்தமன் இராமன் காட்டுக்குப் போகும்போது, அயோத்தி மக்கள் அழுதது போன்று, முஸ்லிகள் வெளியேறியபோது, யாழ்ப்பாணத் தமிழ் சகோதரர்கள் மௌனக் கண்ணீர் வடித்தனர். அவர்களால் வேறு என்னதான் செய்ய முடியும்? புலவர் அப்துல் காதரிடம் தமிழ்ப் படித்த கனகசபை என்ற கிழவர் 'இது தமிழ்த் தாயின் ஒரு கண்ணைப் பிடுங்கி வீசுவது போலாகும்' எனக் கூறியது யார் காதிலும் விழவில்லை. வேட்டுச் சத்தம் போட்ட வேலியினால் எவர் காதிலும் விழ வில்லை.

சுபைர் தன் தாய் நபீஸாம்மா - மனைவி நல்லாள் ஜெய்புன்னிஷா - ஐந்து வயது மகன் அன்வர் - மூன்று வயது மகள் சுபைதா சகிதம் - சோனகத் தெரு பள்ளிவாசலில் சொல்லப்பட்ட 'ழுஹர்' (நண்பகல்) தொழுகைக்காக பாங்கோசையை (அழைப்போசையை) யாழ் மண்ணிலிருந்து கேட்கும் கடைசி பாங்கோசையாக செவியேற்ற வனாக வெளியேறினான்.

இது நடந்து முப்பது வருடங்கள் நிறைந்து விட்டன.

சுபைரின் குடும்பம் அன்றிரவு வருகிற வழியில் 'தெரிந்தவர்' வீட்டில் தங்கி விட்டு, மறுநாள் எல்லோரையும் போல படகில் ஏறி, கற்பிட்டி வழியாகப் புத்தளம் வந்து சேர்ந்தது. சிலகாலம் புத்தளத்திலும், சிலகாலம் நீர் கொழும்பிலுமாக காலத்தைக் கடத்தி, கடைசியாக கொழும்புக்கு வந்து சேர்ந்தனர்.

ஆம்... கொழும்பில் தமிழ் வளர்த்த மண்ணாகிய வாழைத்தோட்டம் என்ற பகுதியில், சுமார் இருபது வருடங் களாக சுபைரின் குடும்பம் வாழ்ந்து வரு கின்றது. வந்தாரை வாழ வைக்கும் வாழைத்தோட்டம் சுபைரின் குடும்பத் திற்குப் பிடித்துப்போனது. ஏன் தெரியுமா?

புறக்கோட்டை வாழைத் தோட்டத் திற்குப் புறநகர். புறக்கோட்டை நாலாம் குறுக்குத் தெருவில் ஒரு யாழ்ப்பா ணத்தார் கடையில்தான் சுபைர் நீண்ட காலமாக நியமிக்கப்படாத முகாமை யாளராகப் பணி புரிந்து வருகின்றான். கடை முதலாளிக்கு சுபைரும் - சுபைரின் குடும்பமும் நீண்டகால அறிமுகம். யாழ்ப்பாண முஸ்லிம்களை விரட்டியதை விரும்பாத மௌன சாட்சியங்களில் கடை முதலாளியும் ஒருவர்.

சுபைர் தன் மகன் அன்வரை வாழைத் தோட்டப் பாடசாலை அல்ஹிக்மாவிலும், மகள் சுபைதாவை பக்கத்தேயுள்ள பாத்திமாவிலும் சேர்த்துப் படிக்க வைத்தான். படிப்பில் இருவரும் சோடை போகவில்லை.

யாழ்ப்பாண மண்ணில் துளிர்த்த செடிகளல்லவா? அன்வர் வங்கி யொன்றில் மனேஜராகவும், சுபைதா அரசின் நியமனம் பெற்ற ஆசிரியை யாகவும் உயர்ந்தனர். இன்று இருவரும் திருமணமாகி, இரு குடும்பங்களின் தலைவன் - தலைவியாகி மகிழ்ச்சியில் காலத்தை கழிக்கின்றனர்.

சுபைதா வாழைத்தோட்டத்திலேயே - தாய் வீட்டோடு தங்கிவிட்டாள்.

அமெரிக்காவிலுள்ள 'நயாகரா' நீர்வீழ்ச்சியில் தண்ணீர் கொட்டும் சத்தத்தின் இரைச்சல் வெகுதூ ரத்திற்கு கேட்குமாம். ஒருநாள் அந்தப் பேரிரைச்சல் மௌனித்து விட்டதாம். என்னவென்று பார்த்தால், நயாகரா வின் அருகே இரு பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்களாம். வினோதமாக இச் சம்பவம் சோடித்து சொல்லப்பட்டாலும், பெண்களுக்கேயுரிய சில குணங்கள் இச்சம்பவத்தில் கண் சிமிட்டுவதை மறுக்க முடியாது.

தமிழ்ப்பால் குடித்து வளர்ந்த சுபைரின் குடும்பத்தில் மனைவி ஜெய்புன்னி ஷாவும் - மகள் சுபைதா டீச்சரும் அக்கம் பக்கத்தாருக்கே தெரியாமல் வளர்ந்த அடக்கத்தின் அடையாளங்கள். இப்போது ஆயிரம் பிறை கண்டுவிட்ட நபீஸாம்மா பெட்டியினுள் ஒளித்து வைத்துள்ள போத்தல் தண்ணீரைப்பற்றி தாயும் - மகளும் மறந்தும் எப்போதும் பேசியதேயில்லை. பொறுமை எத்தனை நாட்களுக்குத்தான் அடைகாக்கும்? இரு பெண்களுக்கும் 'இதுபற்றி' பேச வேண்டும் என்ற உணர்வு. இன்று குஞ்சு பொரித்து விட்டது.

"ம்மா... என்ர வாப்பம்மா... அதுதான்... ஒங்க மாமி ரொம்ப காலமாக ஒரு பிளாஸ்டிக் போத்தல் தண்ணீரை பெட்டியினுள் ஒளிச்சி வச்சி, பூதமாதிரி காத்து வர்ராங்களே... அது என்ன ரகசியமா?" என மகள் சுபைதா தன் தாய் ஜெய்புன்னிஷாவிடம் கேட்டே விட்டாள்.

"அதுதாம்மா எனக்கும் தெரியல்ல... பல முறை நானும் பார்த்திருக்கேன்... அந்த போத்தலை எடுக்கிறதும், பார்த்திட்டு வைக்கிறதுமா ஒன்ர வாப்பம்மா பல வருஷமா செஞ்சிட்டு வர்ர வழக்கம், இப்போ... பழக்கமாகிடிச்சி...."

"எதுக்கும் நாம வாப்பம்மா கிட்டேயே... கேட்போமா?" - சுபைதா டீச்சரின் ஆர்வம்.

"ஆமா சுபைதா... என்னால இதுக்குமேலே பொறுக்க முடியாது. இது முப்பது வருஷமா நடக்குற கதை...."

அதே நேரம் நபிஸாம்மா தலை வாசலில் நின்றவர், உள்ளே வருவதைக் கண்ட சுபைதா..

"வாப்பம்மா.. இங்க வாங்க... ஒங்க கிட்ட ஒரு விஷயம் பேசணும்.." சுபைதா பேத்தி கூப்பிட்ட குரலை செவியேற்ற நபீஸாம்மா தள்ளாடியபடி உள் அறைக்குள் அடியெடுத்து வைக்க,

**“ஜனாஸா குளிப்பாட்டும் போது, கடைசியாக ஓதி ஜனாஸா மீது ஊத்துவீங்களே... மூனு குவளை தண்ணி.. நான் இறந்திட்டா அந்த போத்தல் தண்ணீரால அந்த மூனு குவளை ஊத்தி கபன் செஞ்சிடுங்க... யாழ்ப்பாண தண்ணீர் தரும் ஈரத்தோட கபன் செஞ்சி அடக்கிடுங்க. என் கடைசி ஆசையின் அடையாளம்தான் இந்த போத்தல் தண்ணீர்...” என விக்கி விக்கிப் பேசிய நபீஸாம்மா சேலைத் தலைப்பால் முகத்தை மூடி அழுதாள்.**

“வாங்க... மாமி...” என்ற மருமகளின் குரலும் வரவேற்றது.

நபீஸாம்மா கட்டிலிலும், தாயும் - மகளும் இரு கதிரைகளிலும் அமர்ந்தனர்.

“கனநாளா கேட்கணும்னு பொறுத் திருந்து, இன்று கேட்கப் போறன்..” சுபைதா டீச்சர் பீடிகை போட, “சரி... கேளு...” என வயோதிப மாது - வாப்பம்மா வாசலைத் திறந்து விட்டார்.

“ஆமா... கன காலமா பெட்டியில ஒரு போத்தல் தண்ணீர் இருக்கே, அதுட ரகசியம் என்ன வாப்பம்மா...?”

“ஓ... அதுவா? நானும் ஜெய்புனி டமாவது சொல்வோம்னு பல நாளா நெனச்சிட்டுத்தான் வாரேன். என்ர வயசுக்கு மறந்திடுது..” என்ற வாப்பம்மா சற்றே யோசிக்க... அமைதி அரசோச்சியது.

“இப்போ... ஒங்க பேத்தி கேட் குறேன்...சொல்லுங்க...”

“நம்ம வாழைத்தோட்ட நஜ்மி பள்ளியிலே, பெண் ஜனாஸாக்களை குளிப்பாட்டி கபனி டும் கைங்கரியங்களை செய்வதற்கு இருபத்தைந்து பெண்களை பயிற்சி கொடுத்து வச்சிருக்காங்க. நீயும் அதில ஒருத்திதானே...” நபீஸாம்மா தெளிவாகப் பேசினார். சற்று மௌனித்து மீண்டும்..

“அதனால உன்னையும் கிட்ட வச்சிதான் சொல்லனும்-ஜெய்புன் நீயும் நல்லா கேளு... யாழ்ப்பாணத்தை விட்டு நம்ம முஸ்லிம்களை விரட்டினாங்களே.... அது எந்த வகையிலும் முறையல்ல் எனக்குப் பிடிக்கவே பிடிக்கல்ல. நாம பொறந்த மண்ணு அது.. ‘பெற்ற தாயும் - பிறந்த பொன்னாடும் நனிசிறந்தனவே’ என்றொரு பாட்டிருக்கே...”

சிறிது நிசப்தம் வாப்பம்மாவின் வார்த்தைகளை சிறையிட்டன.

“....நாம் யாழ்ப்பாண மண்ணில பொறந்து, இன்று எங்கெங்கோ வாழ்றோம் - பிறகு இறந்துபோறோம். இது நம்ம தலை நஸீபு... எனக்கும் வயசாயிடிச்சி... நான் இறந்துபோனா, யாழ்ப்பாண தண்ணியில குளிப்பாட்டி, கபன் செஞ்சி என் ஈர உடம்பை அங்கேயே அடக்குங்க என சொல்ல முடியுமா? நிலைமை எப்படி எப்படி இருக்குமோ? ஒன்ர அப்பன் ஒருத்தனால என்ன செய்ய முடியும்...?” என மீண்டும் அமைதி...

“ஜனாஸா குளிப்பாட்டும் போது, கடைசியாக ஓதி ஜனாஸா மீது ஊத்துவீங்களே... மூனு குவளை தண்ணி.. நான் இறந்திட்டா அந்த போத்தல் தண்ணீரால அந்த மூனு குவளை ஊத்தி கபன் செஞ்சிடுங்க... யாழ்ப்பாண தண்ணீர் தரும் ஈரத்தோட கபன் செஞ்சி அடக்கிடுங்க. என் கடைசி ஆசையின் அடையாளம்தான் இந்த போத்தல் தண்ணீர்...” என விக்கி விக்கிப் பேசிய நபீஸாம்மா சேலைத் தலைப்பால் முகத்தை மூடி அழுதாள். அறை வாசலில் நின்று அதுவரை வீட்டின் மூன்று பெண் ஜென்மங்களும் பேசிய வார்த்தைகளை சுபைரும் கேட்டப்படி அழுதான். இந்த

அழுகைகளை காலத்தின் கரங்களாலும் துடைத்தெறிய முடியாது.

"வாப்பம்மா... உங்களுக்கு இப்படியொரு ஆசையா?" எனக்கூறியபடியே சுபைதா வாப்பம்மாவின் கழுத்தை கட்டிப் பிடித்து, நெற்றியையும் கன்னத்தையும் முத்தமிட்டப்படி அழுதாள்.... ஜெய்புன்னிஷா கற்சிலையாகி கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள்.

தாய் மண் மீது கொண்ட பாசத்தை வெளியில் சொல்ல முடியாதபடி, நாட்டில் இப்படி எத்தனை நபீஸ ாம்மாக்கள் மௌனச் சித்திரங்களாக அழுகிறார்களோ? தாய் மண்ணின் மீது கொண்ட தாகம் என்று தணியுமோ?

நல்லடியார்களுக்குத் தங்களின் முடிவுகள் எப்போது வருமென்பது சூசகமாகத் தெரியுமோ?

நபீஸாம்மா நிறைவாக வாழ்ந்து முடித்த யாழ் பெண்ணாள். 'அந்த நாள்' தனக்கும் வெகுவிரைவில் வரும் என அவரது உடல் நிலை உணர்த்தியதோ என்னவோ? 'அதை' எதிர்பார்த்து நபீஸ ாம்மா காத்திருந்தாள், விழி பூத்தி ருந்தாள் மௌன காட்சியாக...

காலம் யாருக்காகவும் காத்திருக்க வில்லை. ஒரே ஓட்டம்.. அந்த ஓட்டத்தில் ஒருநாள் அந்தி சாயும் நேரம்...

அந்த வீட்டிலிருந்து "வீல்..." என ஒரு சப்தம்.. தொடர்ந்து அழுகுரல்களின் சிதறல்... ஆம், நபீஸாம்மா வபா.்.த் தாகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்...

செய்தி வாழைத்தோட்டம் முழுதும் பரவியது. யாழ் முஸ்லிம்கள் வாழும் இடமெங்கும் தொலைபேசி - கைப்பேசி செய்தியை கொண்டுபோய் தூது சொல்லின. வாழைத் தோட்ட நஜ்மி பள்ளிவாசல் மையத்து கட்டிலையும், சந்தூக்கையும் கொடுத்துதவி, "இன்றிரவு ஒன்பது மணிக்கு ஜனாஸா குப்பியா வத்தை முஸ்லிம் மைய வாடியில் அடக்கம் செய்யப்படும்" என்ற தகவலை ஒலிபெருக்கியது.

இதோ...

சுபைதா டீச்சர் வாப்பம்மாவின் ஜனாஸாவை குளிப்பாட்டுகிறாள். "உம்மா... அந்த 'ஒரு போத்தல் தண்ணீரை' எடுத்து வாங்க" என ஏவுகிறாள். ஜெய்புன்னிஷா யாழ்ப்பாணத் தண்ணீரைத் தருகிறாள். அதிலிருந்து மூன்று முறை குவளையில் தண்ணீரை நிறைத்து, கலிமாவை சொன்னபடி ஜனாஸா மீது ஊத்துகிறாள். தண்ணீர் சொட்டு சொட்டாக நிலத்தில் விழுகின்றன....

அவை கழுவிய தண்ணீர் சொட்டுக்கள் அல்ல யாழ்மண் அழுத கண்ணீரின் சொட்டுக்கள் அவை சிதறிய சொட்டுக்கள் அல்ல பதறிய சொட்டுக்கள் பன்னீர் மொட்டுக்கள் - வாசம் வீசும் பன்னீரின் மொட்டுக்கள்.

(யாவும் கற்பனை)

கதையில் வரும் சில.. அரபுச் சொற்களும் தமிழ்ப் பதங்களும்..

***ஜனாஸா*** - பிரேதம், ***நஸீபு*** - தலைவிதி, ***கபனிடுதல்*** - வெண்ணிறப் புடவையால் போர்த்தி விடுதல், ***சந்தூக்*** - பாடை, ***மையம்*** - பிரேதம், ***மையவாடி*** - பிரேதம் அடக்கம் செய்யும் மைதானம், ***'இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்'*** - "நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வுக்குரியவர்கள், அவன் பக்கமே மீண்டும் செல்லக் கூடியவர்கள்" மரணம் சம்பவித்தால் - ஏதும் சிரமத்தின் போது முஸ்லிம்கள் சொல்லும் வரி, ***வபா.்.த்*** - மரணமாதல், ***கலிமா*** - இறைவிசுவாச உறுதிமொழி, ***வாப்பம்மா*** - தந்தைவழி பாட்டி

❍

59

**கா**லை ஏழுமணி...

பரபரத்துக் கொண்டிருக்கும் காலைப்பொழுதில் ரோகினி பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தாள்.

"கோகிலன் கெதியா வெளிக்கிடுங்கோ...."

கோகிலனிடம் தாயின் வேகம் தொற்றிக்கொள்ள, அவளுக்கு ஈடுகொடுக்குமாப்போல், இரவே சரிபார்த்து அடுக்கி வைத்திருந்த புத்தகப் பையினுள், சாப்பாட்டுப் பெட்டியையும் எடுத்துத் திணித்து வைத்துக்கொண்டு வெளியே ஓடிவந்தான்.

ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் கோகுலனைத் தனது 'ஸ்கூட்டியில்' ஏற்றிக் கொண்டு புறப்பட்டாள் ரோகினி.

மகன் கோகுலனை அவனது பாடசாலையில் இறக்கிவிட்டு வேலைத் தலத்திற்குப் போக வேண்டும். இன்று, அவள் வெளிக்கள உத்தியோகத்தராய் வேலை செய்யும் அவளது நிறுவனத்தின் உதவி வழங்கல் தொடர்பாய் அவளும், அவளுடன் பணிபுரியும் வதனியும் இன்னும் இரண்டு ஆண் ஊழியர்களும் சேர்ந்து பயனாளிகளை அவர்களின் இடத்திற்கே சென்று தனித்தனியாகச் சந்தித்து விபரங்கள் எடுக்க வேண்டும். அதற்கும் மேலாக, அவளது இற்றை வாழ்வை அனுதாபமாய் அணுகுபவர்கள் போன்று அண்மித்து, தமது காமத் தூண்டில்களை வீசிப் பார்க்கும் ஆண் 'நடிகர்' களிடமிருந்து அவளைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும்.

"கோகுலன் அம்மா இண்டைக்கு வர 'லேட்'டாகும்.... 'ஓட்டோ' மாமாவுக்குப 'போன்' பண்ணி விடுறேன், பள்ளிக்கூடம் விட்ட உடனே அவர் வந்து ஏத்துவார். அப்பிடியே 'ரியூசனுக்கு'ப் போங்கோ.... நான் அங்க வந்து பிள்ளைய ஏத்துறன்...!" என்றவாறு அவனது பாடசாலை வாயிலில் அவனை இறக்கிவிட்டாள்.

தாயை அவன் ஏக்கத்தோடு பார்த்தான்.

அவனை இழுத்து, வாஞ்சையுடன் அவனது தலையில் கொஞ்சியவாறு, "அப்பா வந்திட்டாரெண்டா, என்ர குஞ்சுவைத் தலையில வைச்சுத் தாங்குவார்....!" என்றாள்.

கோகிலனின் விழிகளில் கனவு தெரிந்தது.

ரோகினியின் விழிகளிலுந்தான்.

☼ ☼ ☼




(ஞானம் 245, ஒக்டோபர் 2020)

வனம் சலனமற்றுக் கிடந்தது.

இடையிட்டுக் கேட்கும் சின்னக் குருவிகளின் 'கீச்'சொலி, கூடவே தனது இணையை வேண்டி அனுங்கிக் கொண்டிருக்கும் ஒரு பெண்மானின் கேவல் தொனியைத் தவிர, வேறு சப்தங்களில்லை.

தபோவனத்தில் சீதை தனித்திருந்தாள்.

லவனும், குசனும் முனிவருடன் காடுலாத்தப் போயிருந்தனர்.

அன்றோர் அதிகாலையில் நீராட்டிக் கொண்டிருக்கும்போது லவன் கேட்ட கேள்வி இன்னும் அவள் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

"தாயே முனிவர் பெருமான் நேற்றுக் கற்பித்தார், தாயிற் சிறந்த கோவிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என.... எனது தந்தை எப்படியிருப்பார் அன்னையே? அவர் வாய்ச்சொல் எப்படியிருக்கும் மாதாவே...?"

ஏக்கம் பொங்கிடத் தனயன் வினவிய வினாவிற்கு சீதையினது மான் போன்ற விழிகளிலிருந்து நழுவி வீழ்ந்த கண்ணீர்த் துளிகளே பதில் சொல்லின.

தாதையைப் பற்றிக் கேட்கும் பொழுதெல்லாம் தனது அன்னை மௌனித்து விடுவதனையும், அவளது அழகிய நயனங்கள் ஈரமாகிப் போவதனையும் பார்த்துப் பதை பதைத்துப் போன லவனும், குசனும் பின்பு அம்மா சீதாவிடம் தமது தந்தை பற்றிக் கேட்பதையே நிறுத்திக் கொண்டார்கள்.

தபோவனத்தைச் சுற்றிச் சுற்றி விளையாடும் பொழுது, குடும்பமாக வானரங்கள் கூடியிருந்து குதூகலிப்பதனைக் கண்டு அவர்களது பிஞ்சு மனங்கள் ஏக்கங்கொள்ளும். தாய் வானரங்களைக் கட்டியணைத்துக் கொண்டு குட்டி வானரங்கள் கிறங்கிக் கிடப்பதனையும், தந்தை வானரங்கள் தமது இணைகளுக்கும், குட்டிகளுக்கும் கனிகளைப் பறித்துக் கொணர்ந்து கொடுப்பதனையும், அவற்றினது விழிகளில் துலங்கும் பாச வீச்சினையும் கண்டு லவனுக்கும், குசனுக்கும் ஆசை யாசையாய் இருக்கும்.

'எங்களது தந்தையும் இப்படி எங்களுடன் விளையாட வரமாட்டாரா....?'

தனித்துக் கிடந்த சீதையின் மனம் இரண்டாவது வனவாழ்வு தொடர்பாய் எண்ணித் துயரங்கொண்டிருந்தது.

கல்யாண பந்தத்தினில் இணைந்திருந்த காலத்திருந்து இடையிடையே மின்மினி வெளிச்சங்கள் மினுக்கங்கள் காட்டிய போதும் அந்தகார இருளே அவளது வாழ்வில் அடர் காடாய் மண்டிக் கிடக்கிறது.

அதிகாலைப் பொழுதில் இராமன் நினைவுடனே துயிலெழுவாள். அடர் வனத்தின் இலைகளூடே கசிந்து வரும் காலையிளம் கதிரவனின் கதிரொளிக் கீற்றுக்கள் கணவன் மேற்கொண்ட காதலை அவளுள் காட்சிப்படுத்தும். அதிகரித்துச் செல்லும் சூரியவெப்பம் அவள் துணைவனின் சுறுசுறுப்பைச் சுட்டிக் காட்டும். பகற்பொழுது முழுதும் அவனை எதிர்பார்த்துக் கிடந்த பொழுதுகளை நினைவுறுத்தி அவளைப்பாடாய்ப் படுத்தும். இரவின் தழுவலுக்காய் இரந்து கிடக்கும் மாலைப் பொழுது அவளது இதயத்து நாயகன் அரசவையிருந்து இதழ்க் கடையோரப் புன்னகையுடன் இன்பம் நுகரவரும் பொழுதை எண்ண வைக்கும். இரவு முழுதும் இடர் வனத்தூடே எட்டி யெட்டிப் பார்க்கும் வெண்ணிலவு அவளது இளகிய மனதைக் கொன்று தொலைத்துக் கொண்டிருக்கும்.

மொத்தத்தில் அவள் தன் இராமனை யெண்ணிச் சிறுகச் சிறுகச் செத்துக் கொண்டிருந்தாள்.

**என்ன இது!? தீ மூட்டப்பட்டிருக்கிறதே?**
**கொதிக்கும் செந்தணலின் கதிர்கள் உடல் பொசுக்கத் தகிக்கிறதே? 'காதல் எனக்குத் தாங்காதென்று**
**வெப்பம் கூட்டவென என் நாதன் நெருப்பைக் கொளுத்தி வைத்திருக்கிறானோ....?'**
**"சீதா... ! அந்தத் தீயில் இறங்கித் திரும்பி வா...!"**
**'ஆ.......! யாரது...? அவனா......? பூவென எனைப் பொத்திப் பொத்திப் பார்த்த அவனா? மிதிலையிலே**
**பஞ்சணையின்றிப் படுத்துறங்கியறியாதிருந்த நான்,**
**கல்லிலும், முள்ளிலும், கடும் மழையிலும், கோடையிலும் உள்ளிருக்கும் அன்பினால்**
**உடன் போனேனே..... அந்த அருமை நாயகன் தானா அழைப்பு விடுக்கிறான்?**

---

அவள் புரிந்த தவறுதான் என்ன?

மிதிலையில் சாளரத்தூடே, வீதியால் சென்று கொண்டிருந்த இராமனின் விழிகளை நோக்கியதுதான் அவள் செய்த தவறா? இத்தனை வாழ்வுத் துன்பங்களையும் ஒரேயடியாய் அனுபவிக்க அவள் செய்த குற்றம்தான் என்னே?

நாதனுடன் வனம் போந்து, கல்லும் முள்ளும் அவள் பிஞ்சுப் பாதங்களைத் தாக்கிய பொழுது, அவனது நெஞ்செனும் பஞ்சணைக்காய் அத்தனையும் தூசு எனத் தாங்கினாளே? குருவியெனக் கூட்டிலடைத்து இலங்கை இராவணன் கொண்டு தன், மாங்காய் நாட்டில் சிறைவைத்த போது அத்தனையையும் தன் அன்பனையெண்ணித் தாங்கினாளே? அவளைத் தன் நாட்டில் தனிமைச் சிறையிலடைந்திருந்த வேளை, கேட்போர் மூப்பார் இல்லாத பொழுதும் திராவிட அரசன் இராவணன் அவள் பக்கத்திலும் வரவில்லையே? தள்ளி நின்று தானே தன்னை அவன் மனசுள் தாங்கக் கேட்டுத் தவங்கிடந்தான்?

கடந்த காலத்துக் கணங்கள் அவள் மனதைக் காயப்படுத்திக் கொண்டிருந்தன.

இலங்கையில் இராம, இராவண யுத்தம் நிறைவுற்ற நாள் அது.

இரத்தத் துளியாய் ஈழம் சிதம்பிக் கிடந்தது.

அசுரப் பெண்டிர்கள் தமது இதயத்து நாதர்களினது இறந்த உடல்கள் மீது வீழ்ந்து அழுகின்ற விண்ணை முட்டிய சோகக் கதறல்கள் அசோகவனத்தில் அமைதியற்றுக் கிடக்கும் சீதையினது செவிப்பறைகளில் அதிர்க்கிறது. கடல் கடந்து கிட்கிந்தா வனவெங்குமுள்ள வானரப் பெண்டுகள் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு, யுத்தத்திற்குச் சென்ற தங்கள் கணவர்கள் உயிருடன் வருவார்களோ, இல்லையோ என்று அறியாது ஏக்கமுற்றுக் காத்துக் கிடந்தனர். உண்ணுவாரில்லாது, இலைகளை விடவும் அதிகமாய்க் கனிகளைத் தாங்கி நின்ற மரங்கள் அவர்களது மனசுகளைப் போலப் பாரந் தாங்காது வளைந்து போய்க் கிடந்தன. யுத்தத்திற்குக் கணவர்கள் கடல் கடந்து போன காலத்திருந்துதான், வானரப் பெண்டிர்கள் உண்ணுவதை நிறுத்தி விட்டார்களே!

யுத்தத்து இலங்கையில், சோகத்தோடு அசோகவனத்தில் துவள்ந்திருந்த சீதை தன் முன்னே தோன்றிய காட்சியில் நெகிழ்ந்தாள்.

அன்பின் பெருக்காய் அவள் முன்னே அடிபணிந்து நின்றிருந்தான் அனுமன்!

என்ன உரைக்கவென இங்கு அவன் வந்துளான் என இயலாமை குடிகொண்ட விழிகளினால் உற்று நோக்குகிறாள் சீதை.

அன்னையினது பாதமன்றி விழிகளை வேறிடம் அகற்றிடாது அனுமன் உரைக் கிறான்,

"இறை வென்றது...! பகை அழிந்தது...!"

தன்னை அழைத்துப் போகத் தன் நாயகன் இராமன் ஓடோடி வருவானென உள்ளக் கணக்கிட்டிருந்த சீதை ஏமாற்ற முற்றாள். நாதன் வதனத்தை எப்போது காண்பாள்...? அவளின் மார்பில் முகம் புதைத்து எப்போது அழுவாள்...? அவள் மீது கொண்ட ஆசை, இராவணன் உடலில் எங்கிருக்குமென ரௌத்திரம் நிறைந்த அவள் நாதனின் அம்புகள் தேடித்தேடி அத் திராவிடனுடலைத் துளைத்திருக்குமே.... அதற்காக அவள் இராமனை ஆரத்தழுவி எப்போது வாழ்த்துவாள்...?

அடுத்து என்ன?

ஐயோ...! நெஞ்சு வெடித்து விடுவது போன்று உயிர் மூச்சுத் துடிக்கிறது அவளுக்கு!

பாதங்களைப் பார்த்தபடியே இராம தூதன் பகர்கிறான்.

'ஐயன் நம்மை அழைத்து வரச் சொன்னான்...!"

அசோக வனத்திலிருந்த அத்தனை மலர்களும் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டின. காலம் தின்ற பல நாட்களின் பின்னே காணப்போகிறாள் தன் நாயகனை, நாணம் பொங்கியது.

பகற் பொழுதுகளில், பாதமன்றி முகம் பார்த்தறியாப் பரமநாதனை மீண்டும் பார்க்கப் போகிறாள்.

ஆறுதலாய்ப் புறப்பட்டாள்.

அனுமன் ஓர் ஆண் அன்றோ?

அவசரம் காட்டினால் அவனுக்குத் தன் நாயகன் மேல் தான் கொண்டி ருக்கும் காதல் நோயின் வேகம் தெரிந்து விடுமோ என்ற வெட்கம் அவளுக்கு, இரண்டு மடங்கு வேகமாய், விரைவாய்ப் போவென்று உள்ளிருந்து எதுவோ உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது. அது இதயமா? அது அவளிடத்தில்லையே? அப்போ, எதுதான் உள்ளேயிருந்து இப்படித் துடித்துக் கொண்டிருக்கிறது? உயிர்! இனிமேலும் அவனைக் காணாவிடில் இறந்து விடுவேன் என்று இடித்து இடித்து உரைத்துக் கொண்டிருக்கிறது அது!

யுத்தம் நிகழ்ந்த இடத்திற்கு அனுமனுடன் சீதை வந்தடைகிறாள்.

வாடிய மலரெனத் தன் சோடியைக் கண்டான் இராமன்.

வானரங்கள் "வாழ்க...! வாழ்க....!" என அன்னையை வாழ்த்தி வணங்கின. தம் காதல் இணைகளைக் காணக்கடல் கடந்து கானகம் ஏகும் அவசரம் வானரங்களுக்கு!

சிரசுகளும், கை கால்களும் சிதறிக் கிடந்த போர் மண்ணில் பூவெனச் சீதை போய் நின்றாள்.

நிலத்தில் குத்தி நின்ற இராமனின் வில்லின் அடிப்பகுதியைக் காணக்கூட முடியாது, வெட்கம் அவளைப் பிய்த்துத் தின்றது.

ஆருயிர் நாதனின் அழகு வதனம் காண ஆவல் கொண்டு கெஞ்சின அந்த அழகியின் விழிகள்.

"அன்னையே...! என்று ஆனந்தக் கண்ணீர் உடல் நனைக்க அழுது கொண்டிருந்தான் இலட்சுமணன்.

வானர வீரர்களின் கூக்குரல்களும், திராவிடப் பெண்டிர்களின் ஒப்பாரி யொலியும், இன்னும் இறந்திடாது படுகாய முற்றுக் கிடக்கும் திராவிடர்களின் முனகல் ஒலியும் செவிகளை அதிர வைத்துக் கொண்டிருக்கும் போது, அவை எல்லாவற்றையும் மீறி, அந்த ஒற்றைக்குரல் கேட்பதற்காய் ஏங்கிக் கொண்டு நின்றாள் சீதா.

காதில் கிசுகிசுக்கும் அந்தக் காதற் குரல் எப்போது தான் கேட்கும்?



**வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சட்டையும், வெண்நரைத் தலையும், நெற்றியில் பட்டையாய்ப் பூசியிருந்த வெள்ளைத் திருநீறுமாய்க் காட்சியளிக்கும் ஆறுமுகத்தாருக்குள்ளிருக்கும் கருப்பு மனசு கதைத்துக் கொண்டிருந்தது.**

ஆசை சுமந்து வருமந்த ஆண்மைக் குரல் எப்போது கேட்கும்?

“சீதா..”

ஆ.... கேட்டுவிட்டது!

திடுக்குற்றாள் சீதா

அதில் காதலில்லை, ஆசை மீதுரும அன்பு இல்லை. அள்ளியணைத்து முத்தமிடும் ஆர்வம் இல்லை.

அதிர்ந்துபோய் நின்றாள் அந்த அயோத்தியின் முதல் மருமகள்.

என்ன இது!?

தீ மூட்டப்பட்டிருக்கிறதே? கொதிக்கும் செந்தணலின் கதிர்கள் உடல் பொசுக்கத் தகிக்கிறதே?

‘கூதல் எனக்குத் தாங்காதென்று வெப்பம் கூட்டவென என் நாதன் நெருப்பைக் கொளுத்தி வைத்திருக் கிறானோ....?’

“சீதா... ! அந்தத் தீயில் இறங்கித் திரும்பி வா...!”

‘ஆ.......! யாரது...? அவனா......? பூவென எனைப் பொத்திப் பொத்திப் பார்த்த அவனா? மிதிலையிலே பஞ்சணையின்றிப் படுத்துறங்கி யறியாதிருந்த நான், கல்லிலும், முள்ளிலும், கடும் மழையிலும், கோடையிலும் உள்ளிருக்கும் அன்பினால் உடன் போனேனே..... அந்த அருமை நாயகன்தானா அழைப்பு விடுக் கிறான்?

இலட்சுமணன் விசும்புகிறான்.

அனுமன் வால் நுனி கொண்டு தன் விழிகள் விழுத்தும் நீர்த்துளிகளைத் துடைப் பதில் தோற்றுக் கொண்டி ருக்கிறான்.

“சீதா...! சுடரினுள் இறங்கியுந்தன் சுத்தத்தை நிரூபி...! எனக்காகவல்ல.... உலகத்துக்காக...!”

அது அவளின் இராமனின் குரல் தான்!

ஆழத்து மனசிருந்து சீதைக்கு ஆத்திரம் கிளம்புகிறது!

‘கூடாது’ எனக் காதல் குட்டி அடக்குகிறது.

கொடியென அசைந்து அந்தக் கொடு நெருப்புள் புகுகின்றாள். ‘ஆ.... என் கணவா...! உலகத்துக்கு மட்டுமல்ல, உனக்கும் என்மேல் ஐயமா....?’ அவளிதயக் கொதிப்பின் முன் அக்கினி எம்மாத்திரம்? அது குளிர்கிறது! குனிந்தபடி வெளிவந்த சீதையை குரங்குகள் கும்பிட்டன. அது நாணத்தால் வந்த குனிவு அன்று.

அந்தக் கோதையின் மனக் கொதிப்பைக் குரங்குகள் அறியுமோ?

“சீதை சுத்தமானவள்.... சீதை சுத்த மானவள்....!”

ஆண் தேவர்கள் ஆகாயத்திலிருந்து மலர் சொரிந்தனர்.

இராமன் வழிகாட்டி விட்டான். இனி வனத்திற்குப் போய் வானரங்களும் தம் மனைவிமாருக்கு அக்கினி வளர்த்துக் கற்புப் பரீட்சை வைக்கக் கூடும்.

காலம் காலமாகக் கட்டிக் காத்த கலாசாரமும், காதலும் சீதையை, சிரித்தபடியே பின்னும் இராமன் பின்னால் போக வைத்தது.

“அம்மா...!”

குசனின் அழைப்பு, சீதையை ஈழத்திலிருந்து இந்தியக் காட்டுக்கு இழுத்து வந்தது.

“அம்மா...! இதோ இனிமையான பழங்கள்.... உண்ணுங்கள்....!”

இழுத்து அணைத்துக் கொள்கிறாள் சீதா தன் மைந்தனை.

“உன் கன்னங்களை விடவா எனக்குக் கனிகள் இனிக்கும்? உன் செல்ல மொழிகளை விடவா இச்சிறப்புடைப் பழங்கள் இனிக்கும்...?”

மகனை முத்தமிடுகிறாள்.

எங்கிருந்தோ ஓடிவந்த லவனும் தாயை அணைத்து தனக்கொரு முத்தம் பெற்றுக் கொள்கிறான்.

கணவன் மேல் அவள் கொண்ட காதலின் மெய்யுருக்களல்லவா அவர்கள்....? பார்க்குந்தோறும், பார்க்குந்தோறும் அவர்களுக்கூடாக இராமனையல்லவா அவள் பார்த்துப் பெருமூச்செறிகிறாள்? பக்கத்து மரங்களெல்லாம் தீ பட்டதாய் பட்டுப் போனமைக்கு அவளென்ன செய்வாள்? அவளையேயறியாது அடிக்கடி வெளிவருமந்தச் சுடுமூச்சுக்களுக்கல்லவா சுடச்சுடத் தண்டனை வழங்க வேண்டும்?

‘ஐயோ....! அந்தக் கணங்கள்....’’

நினைக்குந்தோறும் நெஞ்சு பதறுகிறது அவளுக்கு. அயோத்தியில் நிறைமாதக் கர்ப்பிணியாய் சீதா.

உனக்கும் குட்டிக்கால்களின் உன்னதங்களை உள்வாங்கி, உள்வாங்கி பூரித்த வயிற்றுடனும், மனசுடனும் பஞ்சணையில் காத்திருக்கிறாள், தான் அனுபவிக்குமந்தப் பரவசத்தை அன்பன் இராமனுடன் ஆசையாய்ப் பகிர்ந்து கொள்ள.

தாய்மையின் மினுமினுப்பு தாராளமாய்த் தெரிகிறது.

சிலிர்த்துத் தெரிகிறது சீதையவள் பேரழகு.

துணைவன் இராமன், குடிகளின் குறை யறிய மாறு வேடத்தில் ஊருக்குள் போயுள்ளான்.

களைத்துப் போய் ஓர் மரத்தடியில் காலாற நின்றிருந்தான்.

குடியானவனொருவனின் குரல் காற்றைக் கிழித்துக் கொண்டு அவன் காதில் இறங்கு கிறது.

“வெளியே போ...!”

விடயமொன்று வெளிக்கிறது! செவிகளைக் கூர்மையாக்குகிறான் இராமன்.

“உங்களுடன் வாழவே ஓடோடி வந்தேன்...ஏற்றுக்கொள்ளுங்கள் என்னை....!” பெண்ணொருத்தியின் அவலக் கோரிக்கை. “என்னையேன் புறக்கணிக்கிறீர்கள்...? என் தெய்வம் நீங்கள் தான்....!”

“தெய்வமா..? நானா....? எங்கோ எவனுடனோ பல நாட்கள் இருந்து விட்டு இன்று எனை நாடி வந்துள்ளாய்.... இங்கு நில்லாது போ வெளியே....!”

“நான் மாசு மறுவற்றவள்.... உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்... என்னையேற்றுக் கொள்ளுங்கள்....!”

.“ஏற்றுக்கொள்வதா...?உன்னையா....? எங்கேயோ எவனுடனோ இருந்துவிட்டு வந்தவுன்னை ஏற்றுக்கொள்ள நானென்ன மானங்கெட்ட மன்னன் இராமனென்றா உன் மனதுள் மதிப்பிட்டு வைத்திருக்கிறாய்...?” கோபத்தில் வார்த்தைகள் கொப்பளிக்கின்றன.

துடித்து நின்றான் இராமன்.

‘ஆண்’ என்ற ஆணவம் தெய்வப் பிறவிக் குள்ளிருந்து திரும்பத் திரும்பக் கிளர்கிறது. ‘அரசன்’ என்ற மமதை அன்பை மறைக்கிறது. தன்னுணர்வுக்கு முக்கியத்துவங்கொடுக்கும் சராசரி மனிதப் புழுவானான் இராமன். குடிகள் தன்னைக் குறைவாயெண்ணுதல் கூடாதென்னும் எண்ணம், வனந்தனில் தன்னுடன் ஏகி, கவலைகள் பலவும் சுமந்து, கணவனே கண்கண்ட தெய்வ மெனவுருகும் மனைவி சீதாவின் மனதை மதிப்பிட மறுக்கிறது.

அரச மாளிகையை அடைகிறான் இராமன்.

அரசன் பற்றிய அபிப்பிராயம் முக்கியம் அவனுக்கு.

உத்தரவு பிறக்கிறது.

கர்ப்பிணியான சீதையைக் காட்டில் கொண்டுவிடக் கட்டளை பறக்கிறது.

சிந்தை முழுதும் தன் நாயகனைய வந்தனை செய்து வாழும் சீதை, அவள் வயிற்றிலுதைக்கும் வாரிசுகளுடனும் வனத்திற்கு அனுப்பப்பட்டாள்.

அவளது மனம் பற்றி எவருக்கென்ன கவலை?

இராமனின் மானம்தானே பெரிது?

அப்போது இராமன் பகன்று அனுப்பினான்?

"இது எனக்காகவல்ல, உலகத் திற்காக....!"

தூரத்தே லவனும், குசனும் வருவது கண்டு விழி வழி நீரைத் துடைத்துக் கொள்கிறாள் சீதை.

☼ ☼ ☼

நிலவன் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான்.

எண்பது கிலோமீற்றர் வேகத்தில் அந்தப் பேரூந்து போய்க் கொண்டிருந்த போதும், அவனுக்கு அது மெதுவாய்ப் போய்க் கொண்டிருப்பது போலத் தெரிகிறது.

செய்யாத குற்றம் ஒன்றிற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பத்து வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் அத்தண்டனைக் காலத்தை அனுபவித்து விட்டு, நேற்றுடன் தண்டனைக் காலம் முடிவுற்றமையினால், இன்று வீடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான் நிலவன்.

யுத்தம் முடிந்ததன் பின்னர், மனைவி ரோகினியுடனும், ஆறுமாதக் கைக் குழந்தையான மகன் கோகுலனுடனும், சன்னங்களின் பொழிவுகளில் தலை தப்பிக் காய்ந்த கருவாடாய் முள்ளி வாய்க்கால் கடந்து வவுனியா அருணாசல முகாம் வந்தடைந்து சற்று ஆறியபோது காட்டிக் கொடுக்கப்பட்டான் நிலவன்.

"இவன் வன்னியில இயக்கத்தில இருந்தவன்...!"

காட்டிக் கொடுத்தவனுக்கு அன்றைய 'கோட்டா' முடிந்தது.

நிலவனுக்கோ, அடிகள் உதைகள் நிறைந்த விசாரணைகள், பின்பு நீதிமன்ற இழுத்தடிப்புகள், தீர்ப்பு, தண்டனைக் காலமென பத்து ஆண்டுகள் அவனது இளமைக் காலத்தைக் கொன்று தின்ற னவாய்ப் போயொழிந்தன.

தமிழ் அரசியற் தலைமைகளும் தட்டிக் கேட்காது மௌனமாயின.

பாலகனாய் விட்டுப் பிரிந்த மகன் கேகிலனிப்போ பத்தரை வயதுப் பையனாக வளர்ந்து நிற்கிறான்.

நீண்ட பெருமூச்சுக்களும், நித்திரை யைக் கொன்றதுமான பயண இரவு கழிய, அதிகாலையில் வீடு வந்து சேர்ந்தான் நிலவன்.

யாழ்ப்பாணம், நல்லூரடியில் துர்க்கா மணி மண்டபத்திற்குப் பின் வளவில் அமைந்திருந்தது நிலவன் குடும்பத் தினது வீடு.

தகவலை முதலே அறிந்திருந்தமை யினால், ரோகினியும் மகன் கோகிலனும் வாசலில் காத்திருந்து ஆசையுடன் வரவேற்றனர்.

கவலைகள் வெள்ளைக் கோடு களாய் ரோகினியின் தலையில் சித்திரம் வரையத் தொடங்கியிருந்தன.

புதிய வாழ்வுக்கு அந்தக் குடும்பம் தயாரானது.

மகனிலும், மனைவியிலும் அன்பைப் பொழிந்தான் நிலவன்.

கழிந்துபோன பத்து வருடங்களாக, தொண்டு நிறுவனமொன்றில் வெளிக்கள உத்தியோகத்தராய் வேலை செய்த ரோகினி, குடும்பத்தையும் கவனித்து, நிலவனின் வழக்கு விடயங்களையும் கவனித்து வந்திருந்தாள்.

இரண்டொரு நாட்கள் கழிந்தன.

ஒருநாள், வீட்டிற்குப் பக்கத்தே, கோவில் வீதியிலமைந்திருந்த 'ஆறுமுகம் பலசரக்கு'க் கடைக்குப் பொருட்கள் வாங்குவதற்காகச் சென்றிருந்தான் நிலவன். சிறிய வயதிலிருந்தே தெரிந்த வரென்பதால் அமர்க்களமாய் வர வேற்றார் கடைக்கார ஆறுமுகத்தார். அந்தக் காலத்தில் 'லங்கா புவத்' என்றொரு அடைமொழியும் ஆறு முகத்தின் பெயருக்கு முன்னால் பயன் படுத்தப்பட்டு வந்தது.

"ஆ.. தம்பி நிலவன்...! எப்ப வந்த னீங்கள்.....?"

"ரெண்டு நாட்களுக்கு முந்தியண்ண..!"

"எனிமேலென்ன... வெளி நாடெங் கேயும் போற பிளானோ?"

"இலலையண்ணை.... மனிசி பிள்ளை யளோட ஒண்டா வாழ வேணும்.... இங்கயே ஒரு வேலையைத் தேட வேணும்...!"

"அது சரி...., நீங்களொரு வேலை யைத் தேடீற்றா, பேந்து அவவை வேலையால நிற்பாட்டலாந்தானே...?"

'இவர் என்ன சொல்கிறார்....?' என்று யோசனை செய்தவாறு நிலவன் அவரைப் பார்த்தான்.

"தம்பி.. நீர் எங்கிட ஊர்ப் பொடியன்... உமக்கு நான் ஒண்டையும் மறைக்கக் கூடாது.....!"

'நீங்கள்' என்பது 'நீர்' ஆகக் குறைந் திருந்தது. 'உங்களுக்கு' என்பது 'உமக்கு' என மருவியிருந்தது.

நிலவன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்.

"நான் ஒண்டையும் முதல்ல நம்பேல்ல.... அது உண்மையெண்டும் சொல்லமாட்டன்.... உம்மிட மனிசி.... "

நிலவன் சுவாரசியமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சொல்லுறனெண்டு குறை நினை யாதேயும்.... அவவைப் பற்றி இஞ்ச கடையடியில் வந்து நின்று பொடி யங்கள் கதைக்கிறவங்கள்.... அவ வேலை செய்கிற இடத்திலயிருந்து இளந் தாரிப் பொடியங்கள் அடிக்கடி வீட்டுக்கு வாறதும்..... இவ சில வேளை களில வேலை செய்யுற இடத்து வாகனத்தில் ஏறிப்போய் ரெண்டு மூண்டு நாள் கழிச்சுத் திரும்பி வாறது மெண்டு கதைக்கிறாங்கள்.... என்னயி ருந்தாலும் மானம், மரியாதை முக்கியம் கண்டியோ....?"

அவரது கதையினது நோக்கம் அவனுக்குப் புரிந்தது.

வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சட்டையும், வெண்நரைத் தலையும், நெற்றியில் பட்டையாய்ப் பூசியிருந்த வெள்ளைத் திருநீறுமாய்க் காட்சிய ளிக்கும் ஆறுமுகத்தாருக்குள்ளிருக்கும் கருப்பு மனசு கதைத்துக் கொண் டிருந்தது.

சாமான்களை அமைதியாக வாங்கிக் கொண்டு புறப்படும்போது ஆறுமுகத் தாரினது விழிகளை நேருக்கு நேர் பார்த்தபடி சொன்னான் "என்ர மனுசிய எனக்குத் தெரியுமண்ண....!"

'என்ர கடைப்பருப்பு அவிந்தாலும், இவனிட்ட என்ர கதைப்பருப்பு அவியாது போல கிடக்கு...' என்பது போன்று நிலவன் போவதையே பார்த்துக் கொண்டி ருந்தார் ஆறுமுகத்தார்.

மனைவியுடனும், மகனுடனும் மகிழ்ச்சி பொங்கிடக் குடும்பத்தை நகர்த்திக் கொண்டிருந்தான் நிலவன்.

நண்பனொருவன் மூலம் தனக்கொரு வேலையையும் தேடிக்கொண்டான்.

ஒரு நாள் மாலை, முற்றத்தில் நின்று பூக்கன்றுகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் ரோகினி. நிலவன் பாத்திகளை மண்வெட்டியால் சரிபண்ணிக் கொண்டிருந்தான்.

அப்போது பக்கத்து வீட்டுச் சுப்பிர மணியத்திற்கும், மனைவி கனகத்திற்கும் சண்டை தொடங்கி விட்டது. அது வழமை. கனகம் கோபித்துக் கொண்டு போவதும், பின்பு இரண்டு நாளில் திரும்பி வருவதுவும் அவர்களது வாழ்வின் ஒரு அங்கமாய்ப் போய் விட்டது. சுப்பிரமணியம் என்று சொல்லு வதைவிட, 'குடிகாரச் சுப்பிரமணியம்' என்பதே அங்கு அறியப்பட்ட பெயரா யிருந்தது.

பெரிதாகச் சண்டைச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"போடி வெளியில....!"

கனகம், சுப்பிரமணியத்தைப் பொருட் படுத்தாமல் வீட்டிற்குள் நுழைய முயன்றாள். சுப்பிரமணியத்துடன் கோபித்துக் கொண்டு தாய் வீட்டிற்குப் போய், தான் கனகம் திரும்பி வந்தி ருந்தாள்.

"நீ நினைச்சவுடன் வெளிக்கிட்டுப் போறதுக்கும், கொம்மா வீட்ட போற னெண்டு எங்கேனும் படுத்துப் போட்டுத் திரும்பி வாறதுக்கும் இது என்ன '.........' வீடென்று நினைச்சியோடி......?"

தன்னை நியாயப்படுத்த கனகமும் ஏதேதோ சொல்லி வாக்குவாதப் பட்டாள்.

"நீ நினைச்சமாதிரி ரெண்டு மூண்டு நாள் ஆரோடையும் திரிஞ்சு போட்டு வீட்ட வர, நான் ஈ..... எண்டு இளிச்சுக் கொண்டு வரவேற்க நானென்ன பக்கத்து வீட்டு நிலவன் எண்டு நினைச்சி யோடி.....?"

ஆறுமுகத்தின் பருப்பு அடுத்த வீட்டில் அவிந்து கொண்டிருப்பதை உணர்ந் தான் நிலவன்.

கலக்கத்துடன் தன்னைப் பார்த்த ரோகினியை காதலுடன் கண்ணசைத்துத் தேற்றினான்.

'உனக்காக நான், எனக்காக நீ....!'

.........................

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மூன்று நாள் 'கம்பன் விழா' நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மூன்றுநாட்களும் இராமனின் சிறப்பை, அவனது வீரத்தை, ஆண்மையை, ஏக பத்தினி விரதத் தனத்தை உருகியுருகிப் புகழ்ந்து புல்லரித்துக் கொண்டிருந்தனர் உள்ளூரினதும், தமிழகத்தினதும் தலை சிறந்த பேச்சாளர்கள்.

இறுதிநாள் இரவு நிறைவு நிகழ் வில் மண்டபத்தில் நிறைந்திருந்த பெண் களும், ஆண்களும் எழுந்து நின்று பக்திமல்கக் கண்ணீர் ஒழுகக் கத்திக் கொண்டிருந்தனர்.

"இராமன் வாழ்க....! சீதா ராமன் புகழ் ஓங்குக.....!"

துர்க்கா மணிமண்டபத்திற்குப் பின் வளவிலிருந்த நிலவனின் வீட்டில் உழைத்துக் களைத்த நிலவன், ரோகினி குடும்பம் ஒலிபெருக்கிச் சத்தத்தையும் மீறி ஆனந்தமாய் உறங்கிக் கொண்டி ருந்தது.

அங்கு, வில்லம்புகளை விடவும் மிகப் பலமான சொல்லம்புகளை வென்ற உண்மையான இராமனை, தன்னை நம்பி வந்தவளின் இதயத்தைப் புரிந்து கொண்ட ஆண்மை மிகு இராமனைக் கட்டியணைத்தவாறு இன்பமாய் உறங்கிக் கொண்டிருந்தாள் சீதா.

❍




# நுண்ணுயிர்க் கொல்லி

**எஸ். சிவகலை**
(Dr. S. Ratha)

மக்களுக்கு நன்மை பயக்கும் வகையிலும், துன்பப்பட்டவர்களை ஆற்றுப்படுத்தும் நோக்கிலும் தனது படைப்புகளை உருவாக்கி வருவதாகக் குறிப்பிடும் Dr.சிவகலை (ராதா) கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றுகிறார்.

யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பின்னர் வேலணை மத்திய கல்லூரியிலும் பெற்றவர். இடைநிலைக் கல்வியை யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் பெற்று தனது உயர்கல்வியை யாழ். பல்கலைக்கழகத்தில் கற்று வைத்தியராகச் சித்தியடைந்தவர். இவர் உளவியலில் சிறப்புத் தேர்ச்சிக்கான பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பூர்த்திசெய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பரந்து கிடக்குமோர் சீன சாம்ராச்சியத்தின் மத்திய மாகாணம். இங்குள்ள ஹான்ஸ் நதிக்கரை ஓரமாக ஒரு வானுயரக் கட்டிடம். இதன் முன்றலிலுள்ள இரண்டு நான்மு மரங்கள் 'பிளமிங் நுண்ணுயிர் ஆராய்ச்சி மருத்துவமனை' எனப் பெயர் பொறிக்கப்பட்ட வெள்ளித் தகடுகளைத் தாங்கிக் கொண்டிருந்தன. மரங்கள் வளர வளரப் பெயரும் உயர்ந்து கொண்டிருந்தது. சாம்பல் நிற அடிவானத்தில் எழுகின்ற சூரியனின் ஒளிக்கீற்றுகள் ஹான்ஸ் நதியில் நேர்கோடுகளாக விழும்போது தெறிப்படையும் ஏழு நிறங்களும் பெயர் தாங்கிய வெள்ளித் தகடுகளில் ஒரு வானவில்லை உருவாக்கியிருந்தன.

இந்த மருத்துவ மனையிலேதான் நுண்ணுயிர் உயிரியலில் மிகவும் பிரசித்தி

**அமரர் 'செம்பியன் செல்வன்' ஆ.இராஜகோபால் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2020இல் மூன்றாம் பரிசு பெற்ற கதை**

**(ஞானம் 246, நவம்பர் 2020)**

பெற்ற இளம் மருத்துவன் ஜெயபோ கடமையாற்றுகிறான். நெற்றியின் முன் விழுந்து பரவிக் கிடக்கும் கருமையான சுருள் முடி எதிலும் அச்சமோ வியப்போ அடையாத சாதாரண தோற்றம், எந் நேரமும் மருந்து வாசனையும் தொற்று நீக்கிகளின் வாசனையும் வீசும் வெள்ளைக் கோட், இவைகளைக் கொண்டு அவனை இலகுவாக அடையாளம் கண்டுகொள்ளலாம். ஆராய்ச்சிக் கூடத்தில்தான் அதிக ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பான். இவனிடம் காணப்பட்ட அசாதாரண இயல்பு என்னவென்றால் மிகவும் ஆபத்தான நுண்ணுயிர்களை ஆராய்ச்சி செய்தாலும் அச்சமின்றிக் காணப்படுவான். இருந்த போதிலும், நோயாளர்களின் வலி நிவாரணியாகவும் பணியாற்றினான். தான் கற்ற மருத்துவ சேவையை வறுமைக் கோட்டின் அடிமட்டம்வரை வழங்குவதில் எப்பவும் அவன் பின்நின்றதில்லை. இத்யாதிகளால் அவனை அறியாதோர் அம் மருத்துவ மனையில் இல்லையெனலாம்.

டாக்டர் ஷியாசிஸ் அழகும் கவர்ச்சியும் ததும்பும் ஏற்ற இறக்கங்களைக் கொண்ட தெரிவைப் பருவத்தினள். என்றாலும் மடந்தைப் பருவம் தானென்று மனச் சாட்சியில்லாமல் பொய் சொல்லலாம். இவளும் நுண்ணுயிர் உயிரியல் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவள். தொற்று நோய்கள் பற்றியும், இவற்றினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், நடத்தை மாற்றங்கள் பற்றியும், ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பவள். பிளமிங் மருத்துவமனையின் விளம்பரப் பக்கத்தில் வெளியான விளம்பரத்தின் மூலம் இந்த மருத்துவமனைக்குள் நுழைந்தவள், நுண்ணுயிர்க் கொல்லிகளின் வெற்றிகரமான ஆராய்ச்சிகளின் மூலம் இந்த மருத்துவமனையைச் சர்வதேசத் தரத்திற்கு தூக்கி நிறுத்தியது மட்டுமில்லாமல், இரவு பகலான இவளின் ஆய்வுகூட வேலை இவளை ஜெயபோவுக்கு நெருக்கமாக்கியது. இப்பொழுதெல்லாம் இவளைப் பார்க்கும்போது ஜெயபோ ஓர் தடுமாற்றத்தை உணரலானான். காதல், கனவு, நம்பிக்கை என்பவற்றுக்கான காரணங்களை அவளிடமிருந்து தேடத் தொடங்கினான். காதலை விட ஏதோ சக்தி வாய்ந்ததொன்று இவளிடமிருப்பதாக இவனுக்குள் ஓர் உணர்வு.

தனது அறையில் சில கோப்புக் களைப் புரட்டிப்பார்த்துக் கொண்டிருந்தவன் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுத் தலையை நிமிர்த்தினான். புன்னகை கலந்த சிரிப்புடன் ஷியா அங்கு நின்றிருந்தாள் . “குட்மோர்னிங் ஜெயபோ. மே கம் இன்” என்றவாறு முத்துப்போன்ற பற்கள் தெரியச் சிரித்தாள். பதிலுக்கு “குட்மோர்னிங்” என்றவன் “பிளீஸ் ஹாவ் எ சீட்” சொல்லியவாறே அவள் நீட்டிய காகிதத்தை வாங்கினான்.

**“ஷிஸ் வெளிப்படையா சொல்லுறன்..வாழ்க்கை என்றால் அதில் எல்லையில்லாத தேடல் இருக்க வேணும். கவர்ச்சி, செக்ஸ், காதல், இவை எல்லாவற்றையும் மீறிய ஓர் உறவை உன்னில் இஸ்தாபிக்க முடியுமென நான் நம்புறன். காதலையும் மீறிய ஏதோ வொன்று அதைவிட சக்தி வாய்ந்தது. பல்ப்புக்கும் பற்றிக்குமுள்ள தொடர்பு போல....” சொல்லிவிட்டு ஜன்னலின் வெளியில் பார்வையைச் செலுத்தினான்.**

**“ஜெயபோ வெதர் யு ஆர் ரைட்.. ஓர் றோங்” பட். சில சமயங்களில் காதலெனும் உணர்வு சில தவறுகளால், சில சத்தியங்களால், சில சமயங்களில், ஏன்? இறக்கும்போது கூடத் தோன்றலாம்.**

அழகிய ஆங்கிலக் கையெழுத்துகளில் "ஜேர்மன் பயோ டெக்" நிறுவனமிடமிருந்து 'மோர்புர்க்' நுண்ணுயிரியைக் கொள்வனவு செய்து அதிலிருந்து நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் தயாரிப்பதற்குரிய ஒப்பந்தத்திற்கு உங்களின் அனுமதியைக் கோருகிறேன். இப்படிக்கு உங்கள் உண்மையுள்ள ஷிஸ்.

நனவிலியிலிருந்து சுழன்று சுழன்று நனவுக்குள் வந்த கேள்விகளெல்லாம் வார்த்தைகளாக வரமறுத்துப்போக அணிந்திருந்த கண்ணாடியைக் கழற்றி மேசைமேல்வைத்தவாறு அவளை நோக்கலானான். அவளும் 'இதைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் எப்படி ஜெயபோ' எனக் கேட்டவாறே பதிலுக்குச் சிரித்தாள்.

மிஸ் ஷிஸ் நுண்ணுயிர்க் கொல்லிகள் எப்பொழுதுமோர் சட்ட வரம்புக் குள் உற்பத்தி செய்யப்படல் வேண்டும். அதில் மாசுபடுத்தும் நுண்ணங்கிகள் வளர்ந்தால் மிகவும் ஆபத்தான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். 'அல்ட்ரா சென்ட்ரிபிக்கேஷன் வடிகட்டுதல்' சரிவரப் பேணப்பட வேண்டும். இவ்வாறான பிரச்சினைகளெல்லாம் இருப்பதனால் இதை நாங்கள் போர்டு மீட்டிங்கில் முடிவெடுக்கலாமென மூச்சு விடாமல் கூறிமுடித்தான்.

'தேங்க்ஸ் ஜெயபோ' என்றவள் அவனிடமிருந்து விடைபெற்றாள்.

அவள் விடை பெற்றாளே தவிர அவளைப் பற்றிய எண்ணங்கள் அவனிடமிருந்து விடை பெற மறுத்து மூளையில் கேள்விக் குறிகளாக வளைந்து வளைந்து எழுந்தன. எத்தனையோ ஆராய்ச்சியில் வெற்றி பெற்றவன் இப்பொழுது தான் தன்னுடைய மனதை ஆராய்ந்து பார்க்கிறான். அவனுடைய நனவிலிக்குள் சிதறிக்கிடந்து குவிய மறுக்கும் அவளைப் பற்றிய எண்ணங்களை கார்ல் ஜுங், பிராய்டு இலக்கான் ஆகியவர்களின் உளவியல் கொள்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து விடைகளைக் காண முடியாமல் அவ் எண்ணங்களிடம் தோற்றுப் போகிறான்.

போர்டு மீட்டிங் ஆரம்பமாகி சிறிது நேரத்தின் பின்தான் ஜெயபோ பிரசன்னமானான். போர்டு மீட்டிங் விவாதம் ஆரம்பமானதும் ஜெயபோ எழுந்து நின்று "ஜேர்மன் பயோ டெக்" நிறுவனத்தின் புதிய ஒப்பந்தம் பற்றி மிஸ். ஷிஸ் இப்பொழுது ப்ரெசென்ட் செய்வார். நீலநிற மினிஸ் ஸ்கேர்ட்டும், ஸ்லீவ் டீ ஷர்ட் உடனும் தங்கப் பதுமை போன்ற தோற்றமளித்தவள் ப்ராஜெக்ட் பற்றி விளக்கமளித்தாள். நுண்ணுயிரிகளை வளர்ப்பூடகங்களில் வளர்க்கும் போது ஏற்படும் காண்டமினேஷன், தகுந்த வெப்பநிலை, பி.எச், வளர்க்கப்பட்ட நுண்ணுயிர்களை செயலிழக்கச்செய்து நுண்ணுயிர்க் கொல்லிகளைத் தயாரிக்கும் முறைகள் என்பன பற்றி நேரம் போனது தெரியாமலே பேசினாள்.

நாடியில் வைத்த கையை அமர்ந்திருந்த கதிரையில் வைத்தவாறு மேனேஜிங் டைரக்டர், எக்ஸ்சலேண்ட் மிஸ் ஆனா ஏன் மற்றைய நிறுவனங்கள் இந்தவிதமான ஒப்பந்தத்தைப் பயன்படுத்த முன்வரவில்லை? என அவளைக் குறுக்கிட்டார். சிக்கலான கேள்வி என்றாலும் அவளிடமிருந்து ஒரே ஸ்பாட்டில் பதில் வந்தது. 'பயம்'. நுண்ணுயிர்களின் பிறழ்வுகள் மனித இறப்புகளையும் உண்டாக்கி விடுகின்றன என்ற பயம்.

எங்களிடமுள்ள உயர் தொழில் நுட்பங்களையும், தொழில்நுட்பக் கருவிகளையும் கொண்டு இவற்றைத் தடுக்கலாம் என ஜெயபோ அவளுக்காக பொசிட்டிவ் ஆ.்.ப்ரொச் செய்ய ஒப்பந்தம் போர்டு மீட்டிங்கில் நிறைவேற்றப்பட்டது. .

நுண்ணுயிரியிலிருந்து நுண்ணுயிர்க் கொல்லிகள் பிரித்தெடுக்கும் ஆய்வுகள் துரித கதியில் ஆரம்பமாகின. ஷிஸ் இரவு பகலாக ஆய்வுகளை நடத்திக் கொண்டிருந்தாள். ஜெயபோ அவளுக்கு இது பற்றிய தொழில் நுட்பங்களை விளங்கப் படுத்திக் கொண்டிருந்தான். இப்பொழுது ஒரே அறையினுள் ஒரே மேசையில் எதிரெதிராகக் கைக் கெட்டிய தூரத்தில் தான் இருவரும் அமர்ந்திருந் தார்கள். நேத்திரங்கள் நேருக்கு நேராகச் சந்தித்துக் கொண்டன. புன்ன கையுடன் அவள் தலை குனிந்திருந்தாள். அவன் புன்னகையுடன் தலை நிமிர்ந் தான். மனதின் நினைவிலிக்குள் சிதறிக் கிடந்த உணர்வுகளுக்கெல்லாம் உயிர் கொடுத்து இப்பொழுது பேசலானான்.

"ஷிஸ் வெளிப்படையா சொல்லு றன்.. வாழ்க்கை என்றால் அதில் எல்லை யில்லாத தேடல் இருக்க வேணும். கவர்ச்சி, செக்ஸ், காதல், இவை எல்லாவற்றையும் மீறிய ஓர் உறவை உன்னில் இஸ்தாபிக்க முடியுமென நான் நம்புறன். காதலையும் மீறிய ஏதோ வொன்று அதைவிட சக்தி வாய்ந்தது. பல்ப்புக்கும் பற்றிக்குமுள்ள தொடர்பு போல...." சொல்லிவிட்டு ஜன்னலின் வெளியில் பார்வையைச் செலுத்தினான்.

"ஜெயபோ வெதர் யு ஆர் ரைட்.. ஓர் றோங்" பட், சில சமயங்களில் காதலெ னும் உணர்வு சில தவறுகளால், சில சத்தியங்களால், சில சமயங்களில் ஏன்? இறக்கும் போது கூடத் தோன்றலாம்.

ஜன்னலின் வெளியே பார்த்தவன் இப்பொழுது ஆச்சரியம் கலந்த உணர் வோடு அவளை நோக்கிக் குனிந்தான். இருவருடைய வெளிச் சுவாசக்காற்றின் இடைவெளி குறைந்தது. அவளுடைய கரங்களைத் தனது கரங்களால் பற்றினான். போகத்தின் வாசல் திறந்து கொள்ள, அவளுடைய காதில் கிசு கிசுத்தான். 'ஷிஸ், நீ என்றும் என்னு டைய காதலையும் மீறிய அந்த அபார சக்தியின் தேடலுக்காக' என்ற போது யாரோ கதவில் தட்டுமோசை கேட்டு அவளிடமிருந்து விலகியவன் கதவை நோக்கி நடக்கலானான்.

அன்று நேரத்துடன் மருத்துவ மனைக்கு ஜெயபோ வந்திருந்தான். நுண்ணுயிர்க்கொல்லி தயாரிப்பின்



இறுதிக்கட்ட நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆப்பிள்போனிலிருந்து அவனுக்கு அவசர அழைப்பு.. போனின் ஓன் செய்யும் பொத்தானை இழுத்தவன் மறுமுனையில் சொல்லப்பட்ட தகவலால் நிறுத்தும் பொத்தானை அழுத்தியவன் சுத்தமாய் அதிர்ந்துபோய் இருந்தான். காதுக்குள் பூமி குலுங்கியது.

மறுமுனையில் ஷிஸ் இன் அம்மா சொல்லிய தகவல் 'ஷிஸ் சிவிய பீவர் ஆல் துடித்துக் கொண்டிருக்கிறாள்....' இப்பொழுது தன்னை சுதாகரித்துக் கொண்டவன் ஆம்புலன்ஸ் வண்டியில் நேராக அவளுடைய வீட்டுக்குப் பறந்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவனைச் சங்கடமான சூழ்நிலைக்கு இட்டுச் சென்றிருந்தாலும் நிதானத்தை வரவழைத்தவனாய் கட்டிலில் ஓரத்தில் படுத்திருந்து வலியால் துடித்துக் கொண்டிருந்தவளைத் தாமதியாமல் அம்புலன்ஸில் ஏற்றியவன் அதன் அக்சிலேட்டரை மிதிக்க வண்டி மருத்துவமனை நோக்கி ஜெட் வேகத்தில் பறந்தது. அது எழுப்பிய அபாய ஒலியால் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்கனவே தயார்நிலையில் வைக்கப் பட்டிருந்தது. இப்பொழுது ஷிஸ் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டாள். வெள்ளைநிறக் கோட்டை அணிந்து கொண்ட ஜெயபோ தானே இப்பொழுது அவளுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவனாக மாறினான்.

தான் வேலை செய்து பழகிய சூழ்நிலை அவனுக்கு நிதானத்தைக் கொடுத்திருந்தாலும், அவனது உணர்வுகள் கடலிலிருந்து தூக்கி எறியப்பட்ட மீனாகத் துடித்தன. சிகிச்சைகளை ஆரம்பித்தான். அவனுடன் எப்பொழுதும் கடமையாற்றும் ஹெட் நேர்ஸ் இரத்தப் பரிசோதனையிலிருந்து, போலிமரிஸ் செயின் ரியாக்சன் வரையிலான எல்லாப் பரிசோதனைகளையும் செய்து முடித்து அவற்றின் ரிபோர்டுக்களையும் அவனிடம் சமர்ப்பித்தாள். தொழிலிலும் மனப் போக்கிலும் தொற்று நோயியல் மருத்துவன் என்பதால் அவனுக்கு ரிப்போர்ட்டுக்களை நுணுகி ஆராய வேண்டிய அவசியமிருக்கவில்லை. அனுபவம் போதுமானதாக இருந்தது. ஷிஸ்க்கு என்ன நடந்தது என்பது தெளிவாகப் புலப்பட்டது.

மேபேர்க் வைரஸ்சிலிருந்து நுண்ணுயிர்க் கொல்லி தயாரிக்கும்போது எங்கேயோ பிறழ்வு நிகழ்ந்து வெளியேறிய வேறோர் வகையான வைரஸ் சிஷியின் உடலினுள் தொற்றிக் கொண்டது என அருகினில் காத்திருந்த நர்சுக்கு விளக்கமளித்தவன் தாமதியாமல் கையுறைகளுக்குள் கைகளை நுழைத்தவாறே ஷிஸ்இன் கட்டிலை நெருங்கினான்.

இரத்தத்திலுள்ள ஹீமோக்ளோபின் அளவு குறைந்துள்ளதாலும் சுவாசச் சிற்றறைகள் பாதிக்கப்பட்டிருந்ததாலும் அவளுக்குச் சுவாசிப்பது சிரமமாக இருந்தது. செயற்கையாக சுவாசிக்க கருவியைப் பொருத்திவிட்டு இதயத் துடிப்பைச் சோதிப்பதற்காக கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஸ்டெத்தை அவளின் நெஞ்சின் இடப்பக்கம் வைத்தான். இருதயம் மிகவும் பலவீனமாகத் துடித்துக் கொண்டிருந்தது. இப்பொழுது அவளுக்காக அவனது இருதயமும் சேர்ந்து துடித்தது.

தன்னைத் தானே மாற்றிக்கொள்ளும் இவ்வாறான வைரஸ்களுக்கு எவ்விதமான தடுப்பு மருந்துகளும் இல்லாததால் இண்டெர்பெரோன் ஆல்பா போன்ற நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மருந்துகள் நாளங்கள்

வழியாக ஏறிக்கொண்டிருந்தன. ஜெயபோ அவளையே அவதானித்துக் கொண்டிருந்தான். அவளுடைய சரீரம் படும் அவஸ்தை, அதன் பலவீனம், அதன் ஒவ்வோர் அசைவுகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவளுடைய உயிரை உடலிலிருந்து கபளீகரம் செய்ய முயன்றுகொண்டிருந்தன. ஜெயபோவோ அவளைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருந்தான். எதையோ சொல்ல நினைத்துத் திறந்து மூடும் வழியாகக் காற்று வருவதும் போவதுமாக இருக்க அவள் கண்களை மூடிக்கொள்கிறாள். இதயத் துடிப்பில் விகற்பம் தெரிந்தது. உடலின் விளிம்பில் வந்து நின்ற அவளின் ஆன்மா அவனுடைய ஆன்மாவுடன் ஈனக்குரலில் பேசத் தொடங்கியது.

"நான் உங்களுடன் வாழ்நாள் முழுவதையும் கழிப்பதாக எண்ணுகிறேன். நான் உங்களை மனதார..... என்னைத் திருப்பி அனுப்பிவிடாதீர்கள்." ஜெயபோவின் நனவிலியெனும் இரகசியச் சுரங்கத்திலிருந்த பிம்பமொன்று சுழன்று சுழன்று நனவினில் வந்துகொண்டிருந்தது. அதை அவன் கொடிய துன்பத்திலுமோர் மாபெரும் சக்தியாக உணர்ந்து கொண்டிருந்தான். நிசப்தம் குடிகொண்டது.

'டாக்டர், ஷீஸ் பிழைச்சிருவாங்களா?' அணிந்திருந்த தலையுறையைக் கைகளால் சரிசெய்தவாறே ஹெட் நேர்ஸ் நிசப்தத்தைக் கலைத்தாள்.

அவளை நோக்கித் திரும்பியவனின் வதனம் நிகழ்ந்துமுடிந்த சம்பவங்களின் ஒட்டு மொத்த விம்பமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. நேர்ஸ் தனது அனுபவத்தால் நிலமையைப் புரிந்து கொண்டாள். நெற்றியைச் சுருக்கியவாறு நேராக தனது ஒப்புதலுக்காக காத்துக்கிடைக்கும் ஜெர்மன் டெக் ஒப்பந்த நகல்களில் கையொப்பமிடுவதற்காக ஆய்வு கூடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான். நுண்ணுயிர்க் கொல்லிகளைக் ஹார்வெஸ்ட் செய்வதில் தவறு நடந்துவிட்டது. என எழுதிக் கையொப்பமிட்டவன் அதை ஜேர்மன் பயோ டெக் நிறுவனத்திற்கு அனுப்புமாறு செக்ரிட்டியிடம் சொல்லிக் கொண்டிருந்த பொழுது எங்கிருந்தோ பாடலொன்று காற்றில் கலந்து வந்து கொண்டிருந்தது. 'இரவல் தந்தவன் கேட்கின்றான், இல்லையென்றால் அவன் விடுவானா?'

ஷிஸ் அவனுக்கு கொடுத்துவிட்டு சென்றிருந்த காதலுக்கப்பாலான அந்த அபார சக்தியைக் கொண்டு அவன் மீண்டும் அந்த ஆராய்ச்சியை வெற்றிகரமாகச் செய்து அந்த நுண்ணுயிர்க் கொல்லியைத் தயாரிக்க ஆரம்பமானான்.....

மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்த ஆன்மாவால் கைவிடப்பட்ட சரீரமொன்று அபரக்கிரிகைகள் எதுவும் இல்லாமல் இறுதி ஊர்வலத்துக்குக்காகத் தயாராகிக் கொண்டிருந்தது.

ஜெயபோவின் ஆத்மாவோ 'எலும்புக்கும் சதைக்கும் மருத்துவம் கண்டேன் இதற்கொரு மருந்தைக் கண்டேனா...? என ஈனசுரத்தில் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருந்தது.

❍

# ஈழத்து ஆரம்பகால சஞ்சிகைகளும் சிறுகதைப் போட்டிகளும்



பேராசிரியர்
செ. யோகராசா

"நாம் மறுமலர்ச்சியை ஆரம்பித்த காலத்திலிருந்து நமது ஈழநாட்டு இளைஞர்கள், கதைகள் கட்டுரைகள் எழுதுவதில் தங்களுக்கு எவ்வளவு ஆவல் இருக்கிறது என்பதை காரியத்திலேயே ஆரம்பித்துவிட்டார்கள். இதில் நம்மை மிகவும் திகைக்க வைத்த விஷயம் என்ன வென்றால்... அனேக ஸ்ரீமதிகளுக்கும், குமாரிகளுக்கும்கூட இந்த எழுத்தார்வம் உண்டாகியிருப்பதுதான்.

இவ்வித உற்சாகிகளுக்கெல்லாம் ஒரு சந்தர்ப்பம் அளித்துப் பார்ப்பதென்று முடிவு செய்துள்ளோம். அவர்களுக்கு மூன்று பரிசுகள் வழங்கத் தீர்மானித்திருக்கிறோம். எழுதுபவர்ளுக்குச் சில நிபந்தனைகள்.

1. மறுமலர்ச்சியின் சந்தாதாரர்களே இதில் கலந்து கொள்ளலாம்
2. எழுதப்படும் விஷயத்தில் நிறையச் சம்பவங்கள் இருக்கக் கூடாது ஒரேயொரு சம்பவத்தை வைத்துச் சித்திரிக்க வேண்டும்
3. மறுமலர்ச்சியில் 4 பக்கங்களுக்கு மேல் விஷயம் வரக்கூடாது
4. கதைகள் வந்துசேர வேண்டிய கடைசித் தேதி: 5-8-1946
5. முதலாவது சிறந்த கதைக்குப் 15 ரூபா பரிசும் அடுத்த இரண்டு கதைகளுக்கு ஐந்து ரூபா வீதம் இரு பரிசுகளுமாக மொத்தம் மூன்று பரிசுகள் வழங்கப்படும்.
6. இப்போட்டி சம்பந்தமாக ஆசிரியர்களின் தீர்ப்பே முடிவானது." - மனேஜர்

ஈழத்தின் இரண்டாவது கலை இலக்கியச் சஞ்சிகையான மறுமலர்ச்சி (1946 பங்குனி -1948 ஐப்பசி) நடத்திய சிறுகதைப்போட்டி தொடர்பான அறிவித்தலே (1946ஆனி) மேலே தரப்பட்டுள்ளது. இலக்கியச் சஞ்சிகையொன்றினால் ஈழத்திலே நடத்தப்பட்ட முதல் சிறுகதைப்போட்டி என்பது கவனத்துக்குரியது!

(மேலுள்ள அறிவித்தலை, இக்கால சிறுகதைப் போட்டிக்கான அறிவித்தலோடு ஒப்பிட்டுப் பார்ப்பது போட்டிக்கான நோக்கம், விதிமுறைகள் முதலானவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப்பற்றி அறிவதற்கு வழி சமைக்கும். மேற்கோள் நீண்டிருப்பினும் அது இடம்பெற்றிருப்பதற்கு இதுவே காரணமாம்)

மேற்கூறிய அறிவித்தல் மேலும் இரு தடவைகள் பிரசுரிக்கப்பட்டதோடு முடிவு திகதியும் நீடிக்கப்பட்டிருந்தது.

முடிவுகள் பின்வரும் குறிப்புடன் இடம்பெற்றிருந்தது.

## மூன்று பரிசுகள்

நாம் எதிர்பார்த்ததற்கு மேலாகவே வெகு உற்சாகத்தோடு நமது பரிசுப் போட்டியில் கலந்துகொண்ட எல்லா ஆரம்ப எழுத்தாளர்களுக்கும் எமது வந்தனங்கள். அனேகருடைய கதைகள் பாராட்டத்தக்கவிதமாய் அமைந்துள்ளன. பரிசு முடிவு கீழ்க்கண்ட விதமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- முதற்பரிசு: ஸ்ரீ. E. இராஜநாயகன், தாழையடி, திருநெல்வேலி

- மற்றைய இரண்டு பரிசுகள்: 1. ஸ்ரீ. கு. பெரியதம்பி, கோப்பாய்
  2. செல்வி பத்மா துரைராஜா, நீர்வேலி

முதற்பரிசு பெற்ற இராஜநாயகம் மறுமலர்ச்சி நிலைநாட்டிய எழுத்தாளர்களுள் முக்கியமானவர் (தினக்குரல் பிரதம ஆசிரியர்களுள் ஒருவராக இருந்த இ. பாரதியின் தந்தை) அமரரான இவரது சிறுகதைத் தொகுப்பு எதுவும் இன்றுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. கு.பெரியசாமி தொடர்ந்து தரமான சிறுகதைகள் எழுதினாலும் நன்கு அறியப்படாத - மறுமலர்ச்சி - இவைகாட்டிய மற்றொரு எழுத்தாளர். செல்வி பத்மா பத்மா துரைராஜா பற்றி இன்றைய மூத்த எழுத்தாளர்களே தெரியப்படுத்த வேண்டும் அதிகம் எழுதியிருப்பதாக அறிய முடியாவிடினும் முன்னோடி பெண் எழுத்தாளர்களுள் ஒருவராகிறார்.)

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் மறுமலர்ச்சி சஞ்சிகைச் சிறுகதைகள், மறுமலர்ச்சி காலகட்டச் சிறுகதைகள் ஆகியவற்றின் செல்நெறிகள் பற்றி இவர்களது சிறுகதைகள் எவற்றை வெளிப்படுத்துகின்றன என்றறிவது அவசியமானது.

'விழிப்பு' - ராஜநாயகன் சிறுகதை. கலை நாட்டங்கொண்ட கணவனுக்கும் குடும்ப வாழ்வில் ஈடுபாடுகொண்ட மனைவிக்கு மிடையில் ஏற்படும் மனப்போராட்டம் - முரண்பாடுகள் பற்றிப்பேசுகின்றது. அவளின் இயல்பு அறிந்த இன்னொருவன் அவள் வாழ்க்கையில் குறுக்கீடு செய்வதும் அவ்வழி இறுதியில் தம்பதிககள் தம்மை உணர்ந்து ஒன்றிணைவதுமாக முடிவுறுகின்றது. 'அம்மான் மகள்' (கு. பெரியதம்பி) சிறுகதையும் குடும்ப உறவு சார்ந்து எழுந்துள்ளது என்பதைத் தலைப்பே உணர்த்துகிறது!

ஒப்பீட்டு ரீதியல், பேசுபொருள் ரீதியிலும் எடுத்துரைப்பு முறையிலும் வித்தியாசமாக அமைகிறது, 'உப்பும் சர்க்கரையும்' (பத்மா துரைராஜா) அதாவது மாலை வேளையில் உலாசென்ற ஒருவன் உலா இனிமை தருவதற்கு தனது காதலி வரவில்லை என்று ஏங்குகிறான். அதே மாலை வேளையில், தனது குழந்தைகளின் உணவான 'கஞ்சி'யில் போடுவதற்கு உப்பு இல்லையே என்று இன்னொருவன் ஏங்குகிறான். இருவேறு காட்சிகளாக எழுதப்பட்டுள்ள இச்சிறுகதையில் உப்பும் சர்க்கரையும் ஒரு விதத்தில் பாத்திரங்களின் இயல்புகளையும் நினைவூட்டும் குறியீடு என்று கருதுவதற்கு வாய்ப்புள்ளது.! இவ்விதத்தில சமகாலச் சிறுகதைச்

செல்நெறிகளிலிருந்து விலகி இவ் வெழுத்தாளர்க்குப் பெருமை சேர்க்கிறது என்பதில் தவறில்லை!

கொழும்பிலிருந்து, ஈழத்தின் முதலாவது கலை இலக்கியச் சஞ்சிகையும் முதலாவது முற்போக்கு சஞ்சிகையுமாக விளங்கிய பாரதி வெளிவந்திருந்தது. இதே பெயரில் மட்டக்களப்பு - மண்டூரிலிருந்தும் பாரதி என்றொரு சஞ்சிகை வெளிவந்திருக்கிறது (1948 மர்கழி - 1949 டிசம்பர்) 09 இதழ்கள் வெளிவந்திருக்கிறது; இவ்வாறு நோக்கும்போது மற்றொரு சிறுகதைப் போட்டியை நடத்திய ஆரம்பகாலச் சஞ்சிகையாக இது காணப்படுகிறது. 'பாரதியின் இலவசச் சிறுகதைப்போட்டி' என்ற தலைப்புடன் வெளிவந்த அறிவித்தலில் இடம்பெற்றுள்ள போட்டி விதிகள் இன்றைய சிறுகதைப்போட்டி விதிகளை ஒத்தவையாகக் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட போட்டியின் தெரிவுகள் பின்வருமாறு அமைந்தன:

1. நடைப்பிணம் (பரிசுக்கதை) - வெண்ணிலா (ஸ்ரீமான் இரகுநாதன்)
2. வீணில் மாயாதே (போட்டிக்கதை) - N. சாமித்தம்பி
3. மன்னிப்பா! (போட்டிக்கதை) - V. சந்திரசேகரம்
4. இரு உள்ளங்கள் (போட்டிக்கதை) - கிரிஷா

மேற்கூறியவற்றுள் 'நடைப்பிணம்' சிறுகதை நண்பர்களிருவரது நட்பின் மேன்மையை முதன்மைப்படுத்தினாலும் அதனூடாக அன்றைய காலகட்டத்தில் நிலவிய சாதிப்பிரச்சினைக் கொடுமையை மன நெகிழ்ச்சிதரும் விதத்தில் வெளிப்படுத்துகிறது என்ற விதத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. அன்றைய காலகட்டத்திலே ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் நிலவி வந்துள்ள சாதிப்பிரச்சினையை அம்பலப்படுத்துவது போன்று, அவ்வாறானதொரு கலாசாலைப் பின்புலத்தில் நிகழ்வது கவனத்திற்குரியது. மட்டக்களப்பில் அவ்வேளை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆரம்பமாகவில்லை என்பதுடன் சாதியம் கோலோச்சுவதற்கான வாய்ப்பும் இங்கில்லையாதலால் இச்சிறுகதையை எழுதியவர் யாழ்ப்பாண எழுத்தாளராக இருக்கவும் வாய்ப்புள்ளது. எதுவாயினும் இத்தகைய பேசுபொருள் காரணமாக இச்சிறுகதை முன்னர் ஈழகேசரியில் வெளிவந்த பிரபல்யமான (ஆனந்தன் எழுதிய) தண்ணீர்த்தாகம் சிறுகதையின் தொடர்ச்சி என்று கூறத்தக்கது. (இச்சிறுகதை எழுத்தாளர்பற்றியும் மேலதிகமாக எதுவும் தெரியவில்லை)

'வீணில் மாயாதே' வித்தியாசமான பேசுபொருள்பற்றி எழுந்துள்ளது. அதாவது காதல் தோல்வி காரணமாக துறவுநிலை நாடிய பெண்ணொருத்தி அந்நாள் காதலன் தேடிவந்த போதும் மனச்சலனம் எய்தாதிருப்பது பற்றி விபரிக்கும் வித்தியாசமான கருவாகும். (எழுதியவர் பற்றி மேலதிகமாக அறிய முடியவில்லை)

மன்னிப்பா! தமது வசிப்பிடத்தில் தங்குவதற்கு இடம் கொடுத்த நண்பர்களுக்கு, வந்தவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியும் வந்தவரது குடிப்பழக்கத்தைத் திருத்த முற்படுவது பற்றியும் பேச முற்படுகின்ற இன்னொரு வித்தியாசமான சிறுகதையாகிறது (இச்சிறுகதையை எழுதியவர் ஆரையம்பதியைச் சேர்ந்தவர்.

அதிகமெழுதாவிடினும் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் கற்றகாலத்தில் -1949 அளவில் - சகபாடிகள் எழுத்துலகில் நாட்டம் கொள்வதற்கு வழி சமைத்தவர். பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றியவர். இன்றைய எழுத்தாளர்களான திசேரா, மணிசேகரன் ஆகியோர் இவரது வாரிசுகளே.

'இரு உள்ளங்கள்' - ஆசிரியர் மாணவிக்கிடையிலெழுந்த காதல் சார்ந்த போராட்டத்தைப் பேசுபொருளாகக் கொண்டது; அன்றைய சூழலுக்குப் புதியது. (எழுதியவர் பற்றி அறிய முடியவில்லை.)

மேற்கூறிய எழுத்தாளர்கள் எவரும் தமது சிறுகதை எழுத்து முயற்சியைத் தொடர்ந்ததாகவும் தெரியவில்லை!

ஐம்பதிற்கு முன்னர் வேறு இலக்கியச் சஞ்சிகைகளும் வெளிவந்துள்ளன. எரிமலை (திருகோணமலை), லங்காமுரசு (மட்டக்களப்பு), உதயன் (மட்டக்களப்பு) கலைஞானி (கொழும்பு) இவையும் சிறுகதைப்போட்டிகள் நடத்தியிருக்கக் கூடும். ஏனெனில் பெயர்ரீதியில்கூட அறியப்படாததொரு சஞ்சிகையே மேற்குறிப்பிட்ட பாரதி (மண்டூர்)யுமாகும். (இவ்விடத்தில் இச்சஞ்சிகையின் 10 இதழ்களுள் ஒன்பதைக் கஷ்டப்பட்டுத்தேடி எடுத்து வெளியுலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்திய வாய்ப்பு தனக்கு ஏற்பட்டமைக்காக இக்கட்டுரையாளர் மகிழ்ச்சியடைகிறார்).

சமகால ஈழத்துச் சிறுகதைச் செல்நெறியைச் சார்ந்தும் விலகியும் எழுதப்பட்ட மேற்குறிப்பிட்ட சிறுகதைகளின் உருவ அமைதியும் எடுத்துரைப்பு முறையும் திருப்தி தரக்கூடிய விதத்தில் அமையவில்லை. அவ்வேளை இவ்வாறான சிறுகதைப்போட்டிகள் ஆரம்பகால எழுத்தாளர்களை மனங்கொண்டு நடத்தப்பட்டிருப்பது இதற்குக் காரணமாகலாம். இவ்விதத்தில் போட்டி பற்றிய 2ஆவது அறிவித்தலில் திகதி நீடிப்பிற்கு, "பல மாணவர்களுக்கு இப்போது தான் விடுதலை வந்திருக்கிறதாம் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்" எனவும் காரணம் கூறப்பட்டிருப்பது அவதானிப்பிற்குரியதொரு விடயமாகிறது! எவ்வாறாயினும் ஈழத்துச் சிறுகதை வரலாறு எழுதப்படுகின்றபோது இத்தகைய சிறுகதைகளின் செல் நெறிபற்றியும் கவனிப்பது அவசியமே!

மேற்குறிப்பிட்டவாறு ஆரம்பித்த சிறுகதைப் போட்டியின் வரலாற்று ஓட்டமானது காலந்தோறும் கண்ட மாற்றங்கள் அவற்றின் நிறை குறைகள் என்பன பற்றியதொரு தேடலில் ஈடுபடுவதும் பயன்மிக்கது.

ஞானம் வெளியிடும் இச்சிறப்பிதழ் முயற்சியும் வரவேற்கத்தக்கதேயாம்!

# ஞானத்தில் தமது முதலாவது சிறுகதையை எழுதிய எழுத்தாளர்கள்

| இல. | ஆண்டு | மாதம் | இதழ் | ஆசிரியர் | கதைத்தலைப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 2000 | ஜூன் | 1 | ஜெ.ரூபராஜ் தேவதாசன் | அடைமானம் |
| 2. | 2000 | ஜூலை | 2 | ஞானம் பாலச்சந்திரன் | ஆயிரங்காலத்துப் பயிரின் அறுவடையின்போது... |
| 3. | 2000 | செப்ரெம்பர் | 4 | டிலான் ஜெயந்தன் | ஒற்றறைக் கூவல் |
| 4. | 2000 | டிசம்பர் | 07 | கனகசபை தேவகடாட்சம் | காதல் ஊனமாவதில்லை |
| 5. | 2001 | ஏப்ரல் | 11 | சரயு | அவள் என்ன செய்வாள் |
| 6. | 2001 | ஆகஸ்ட் | 15 | எம். சுஹைதா பீ | பொம்புளப்புள்ள |
| 7. | 2001 | செப்ரெம்பர் | 16 | அக்னஸ் சவரிமுத்து | உறவுக்காரன் |
| 8. | 2002 | ஜனவரி | 20 | ச. கவிதா | எதிர்நீச்சல் |
| 9. | 2002 | ஜனவரி | 20 | சுதர்ம மகாராஜன் | புழுதி |
| 10. | 2002 | ஏப்ரல் | 23 | இஸ்லாமியச் செல்வி | இவர்கள்போல இன்னும்... |
| 11. | 2002 | ஆகஸ்ட் | 27 | செ. தமிழ்ச்செல்வன் | ஓர் ஆசிரியர் கௌரவிக்கப்படுகிறார். |
| 12. | 2002 | நவம்பர் | 30 | எஸ் செல்வகுமார் | அவனும் நானும் |
| 13. | 2003 | மார்ச் | 34 | உக்குவளை அக்ரம் | குசுமாவதி |
| 14. | 2003 | நவம்பர் | 42 | முத்து | இத்துவரும் சுமைதாங்கிகள் |
| 15. | 2004 | ஜூன் | 49 | சந்திரகாந்தா முருகானந்தன் | யாரிடம் நோவேன்? |
| 16. | 2005 | ஏப்ரல் | 59 | தபின் | ஒரு பாம்பும், மலையும், கடலும், சில கடவுளர்களும் |
| 17. | 2005 | நவம்பர் | 66 | கெ. சர்வேஸ்வரன் | விரதம் |
| 18. | 2005 | டிசம்பர் | 67 | வே. தமருகா றொபட் | நீரும்...! நெருப்பும் ...! |
| 19. | 2006 | செப்டெம்பர் | 76 | பிரமிளா செல்வராஜா | பீலிக்கரை |
| 20. | 2006 | நவம்பர் | 78 | ஆ.புனிதகலா | தீக்குள் விரலை வைத்தால்... |
| 21. | 2007 | மே | 84 | சூரன். ஏ. ரவிவர்மா | திக்குத்தெரியாத... |

| இல. | ஆண்டு | மாதம் | இதழ் | ஆசிரியர் | கதைத்தலைப்பு |
|---|---|---|---|---|---|
| 22. | 2007 | செப்ரெம்பர் | 88 | பெரிய ஐங்கரன் | கண்கொத்திப் பாம்புகள் |
| 23. | 2008 | மார்ச் | 94 | சீனா உதயகுமார் | மலர்விழியாள் |
| 24. | 2008 | செப்ரெம்பர் | 100 | வி ஜீவகுமாரன் (டென்மார்க்) | மெயில் லோஞ்ச் |
| 25. | 2008 | செப்ரெம்பர் | 100 | தம்பையா கயிலாயர் | தேடல் |
| 26. | 2009 | ஜனவரி | 104 | சிவா சண்முகம் | அட்வைஸ் இலவசம் |
| 27. | 2009 | பெப்ரவரி | 105 | கிறுக்கி | மழையில் நனைந்த உறவு |
| 28. | 2009 | மார்ச் | 106 | கா.தவபாலன் | சூனியப்பிரதேசம் |
| 29. | 2009 | மார்ச் | 106 | சி. ஹேமந்த் | காகக்குட்டி |
| 30. | 2009 | ஜூன் | 109 | மு. ஜெயசீலன் | கவ்வாத்துக் களம் |
| 31. | 2009 | செப்ரெம்பர் | 112 | சியாமளா இராசரத்தினம் | பாவமா? பாடமா? |
| 32. | 2009 | ஒக்ரோபர் | 113 | அகில் (கனடா) | ரேடியோப் பெட்டி |
| 33. | 2010 | ஜூன் | 116 | த. மயூரகிரி | ‘அஸதோமா ஸத் கமய’ |
| 34. | 2010 | ஜூன் | 121 | ஞா. குமுதினி | சின்னத் தேவதையும் பெரிய தேவதைகளும் |
| 35. | 2010 | ஜூலை | 122 | அ. விஜய் (தமிழ்நாடு) | எனக்குள் ஒருவன் |
| 36. | 2010 | ஒக்டோபர் | 125 | எஸ். ஆர். பாலச்சந்திரன் | மனுதர்மம் |
| 37. | 2010 | டிசம்பர் | 127 | ம. நிரேஸ்குமார் | குழந்தைத் தாய் |
| 38. | 2011 | செப்டெம்பர் | 136 | பா. சுமன் | விடியலைத்தேடி! |
| 39. | 2012 | ஒக்டோபர் | 149 | ப.க . மகாதேவா | உறவைத்தேடும் உயிர்கள் |
| 40. | 2013 | ஏப்ரல் | 155 | எஸ். கிருஷ்ணமூர்த்தி (அவுஸ்திரேலியா) | சாப்பாடு |
| 41. | 2014 | மே | 168 | நெல்லை லதாங்கி | பிஞ்சு மனம் |
| 42. | 2015 | மார்ச் | 178 | நிவேதா உதயராஜன் | உறவுகள் |
| 43. | 2016 | ஜனவரி | 188 | க. சிவகரன் | பிறந்தும் பிறவாமலும் |
| 44. | 2016 | ஒக்டோபர் | 197 | யாழ் புத்தன் (அவுஸ்.) | சோசல் மீடியா |
| 45. | 2017 | நவம்பர் | 210 | என். ஜி.ராதாகிருஷ்ணன் | ஹீரோவின் வாட்போர் |
| 46. | 2018 | ஜூன் | 217 | சவுந்தரராஸா லிசாந்தினி | நினைவுத் தடங்கள் |

## ஞானத்தில் வெளிவந்த மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்


| இல. | ஆண்டு | மாதம் | இதழ் | மொழி | மூலமொழி ஆசிரியர் /மொழிபெயர்ப்பு | தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2000 | ஆகஸ்ட் | 3 | ஆங்கிலம் (இலங்கை) | சி.வி.வேலுப்பிள்ளை<br>தமிழில்: மு சிவலிங்கம் | பார்வதி |
| 2. | 2004 | ஜனவரி | 44 | சிங்களம் | நீரங்க விக்ரமசிங்ஹ<br>தமிழில்: லொ.சுதர்மன் | மணல் |
| 3. | 2005 | ஜூன் | 61 | சிங்களம் | ஜே.ஷீலா விக்ரமரத்ன<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம | ஒரே ரத்தம் |
| 4. | 2005 | ஜூலை | 62 | சிங்களம் | றுவன் சமிந்த அத்துகோறள<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | தலைவிதி |
| 5. | 2005 | ஆகஸ்ட் | 63 | சிங்களம் | அஜித் பெரகும் ஜயசிங்ஹ<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | புலிகளின் முகாம் |
| 6. | 2005 | செப்டெம்பர் | 64 | சிங்களம் | தயாலால் பத்மசிறி<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | ஒரு தேயிலைத் தொழிற்சாலையில் சந்தித்த யுவதி |
| 7. | 2005 | நவம்பர் | 66 | சிங்களம் | எஸ். பிரமிலானிஸா தில்றுக்ஷி<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | சரஸ்வதி |
| 8. | 2005 | டிசம்பர் | 67 | சிங்களம் | செல்வி **H. W** அரவிந்த சந்திரபத்ம<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | புயலுக்குப்பின் |
| 9. | 2006 | ஜனவரி | 68 | சிங்களம் | ரி. காமினி மிகிராணி<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | முடிவில்லாத கண்ணீர் |
| 10. | 2006 | பெப்ரவரி | 69 | சிங்களம் | அனுல டி. சில்வா<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | புஸ்பலதா |
| 11. | 2006 | மார்ச் | 70 | சிங்களம் | அமரபால கறசிங்கஹ ஆரச்சி<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | ஜனவரி 31ஆம் திகதி |
| 12. | 2006 | ஏப்ரல் | 71 | சிங்களம் | கே. ரி.கங்கா நிலானி<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | யுத்தத்தின் சாபம் |

| இல. | ஆண்டு | மாதம் | இதழ் | மொழி | மூலமொழி ஆசிரியர் /மொழிபெயர்ப்பு | தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 13. | 2006 | மே | 72 | சிங்களம் | குசும் அறம்பத்<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | எதிரொலி |
| 14. | 2006 | ஜுலை | 74 | சிங்களம் | நுங்கமுகம பஞ்ஞாரத்னதேரர்<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | தோழமை |
| 15. | 2006 | செப்டெம்பர் | 76 | சிங்களம் | ஆர். கே. சமன் அனுர<br>'தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | ஒரு இராணுவச் சிப்பாயின் மரணம் |
| 16. | 2006 | நவம்பர் | 78 | சிங்களம் | ஆரியதிலக பீரிஸ்<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | எனக்கு யுத்தம் வேண்டாம் |
| 17. | 2007 | மார்ச் | 82 | சிங்களம் | திலின அழகக்கோன்<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | பரமேஸ்வரி பொலிஸிற்குப்போனாள் |
| 18. | 2007 | ஜுன் | 85 | ரஷ்யா | டால்ஸ்டாய்<br>தமிழில்: வீ.கே. சபாரத்தினம் | மன்னன் அஸஹர்தன் |
| 19. | 2008 | ஜனவரி | 92 | சிங்களம் | குசுமா எபிட்டிவல<br>தமிழில்: ஆறுமுகம் தங்கவேலாயுதம் | அதுவும் சிவப்பு இரத்தந்தான் ! |
| 20. | 2008 | டிசம்பர் | 103 | கானா | மாபெல் டவ்- டான்குவா<br>தமிழில்: சோ.பத்மநாதன் | எதிர்பார்ப்பு |
| 21. | 2010 | ஜனவரி | 116 | சிங்களம் | கே. சுனில் ஷாந்த<br>தமிழில்: திக்குவல்லை கமால் | எருமைமாடு |
| 22. | 2010 | ஜுன் | 121 | சிங்களம் | உபாலி லீலாரத்தின<br>தமிழில்: திக்குவல்லை கமால் | செல்வி |
| 23. | 2010 | ஆகஸ்ட் | 123 | சிங்களம் | கமல் பெரேரா<br>தமிழில்: திக்குவல்லை கமால் | ஒரு குடும்பத்தின் கதை |
| 24. | 2010 | செப்டெம்பர் | 124 | அரபு | ஸகரிய்யா தாமிர்<br>தமிழில்: அஷ்ர.்.ப் சிஹாப்தீன் | சின்னச் சூரியன் |

| இல. | ஆண்டு | மாதம் | இதழ் | மொழி | மூலமொழி ஆசிரியர் /மொழிபெயர்ப்பு | தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 25. | 2010 | நவம்பர் | 126 | சிங்களம் | லீலானந்த விக்ரமசிங்ஹ<br>தமிழில்: எம். எம். மன்ஸூர் | மண்வெட்டிப்பிடி |
| 26. | 2011 | மார்ச். | 130 | ஏத்தியோ ப்பியா | ஹாமா டூமா<br>தமிழில்: எம். எம். மன்ஸூர் | காட்டிக்கொடுத்தல் |
| 27. | 2011 | ஏப்ரல் | 131 | சிங்களம் | தெனகம சிறிவர்தன<br>தமிழில்: திக்குவல்லை கமால் | அமைச்சரின் முகம் |
| 28. | 2011 | ஜூன் | 133 | பிரெஞ்சு | கீத மாபஸான்<br>தமிழில்: எம். எம். மன்ஸூர். | அறுவடை |
| 29. | 2011 | ஆகஸ்ட் | 135 | சிங்களம் | ஜயதிலக கம்மெல்லவீர<br>தமிழில்: திக்குவல்லை கமால் | இருண்ட வானம் |
| 30. | 2012 | ஜனவரி | 140 | பாரசீகம் | பாரி மன்ஸூரி<br>தமிழில்: அஷ்ர.்.ப் சிஹாப்தீன் | வானவில் |
| 31. | 2013 | ஜூலை | 158 | சிங்களம் | குணசேன விதான<br>தமிழில்: சிவா சுப்பிரமணியம் | பாலம் |
| 32. | 2013 | ஆகஸ்ட் | 159 | ஜம்மு காஷ்மீர் | ஆப்துல் கனி பெக் அத்தார்<br>தமிழில்: கெகிறாவ ஸுலைஹா | எதிரி |
| 33. | 2013 | செப்டெம்பர் | 160 | வங்காளம் | சுனில் கங்கோபாத்தியாய<br>தமிழில்: எம். எம் மன்ஸூர் | மறுமணம் |
| 34. | 2014 | பெப்ரவரி | 165 | சிங்களம் | கே. ஜயதிலக<br>தமிழில்: எம். எம். மன்ஸூர் | நூலகம் |
| 35. | 2014 | ஏப்ரல் | 167 | அமெரிக்கா | ஏனெஸ்ற் ஹெமிங்வே<br>தமிழில்: கெகிறாவ ஸுலைஹா | மழையில் நனைந்த பூனை |
| 36. | 2014 | ஜூலை | 170 | சிங்களம் | கீர்த்தி வெலிசரகே<br>தமிழில்: திக்குவல்லை கமால் | பூமிதோஷம் |

| இல. | ஆண்டு | மாதம் | இதழ் | மொழி | மூலமொழி ஆசிரியர் /மொழிபெயர்ப்பு | தலைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 37. | 2016 | ஏப்ரல் | 191 | சிங்களம் | விமலதாஸ முதாகே<br>தமிழில்: திக்குவல்லை கமால். | மனிதர்கள் |
| 38. | 2018 | ஜூலை | 218 | சிங்களம் | நிஸாந்த கருனாரட்ண<br>தமிழில்: மலரன்பன் | மலைப்பாம்புகள் |
| 39. | 2019 | ஜனவரி | 224 | நைஜீரிய | பென்ஒக்றி<br>தமிழில்: சோ.பத்மநாதன் | கோணல்<br>பிரார்த்தனைகள் |
| 40. | 2019 | பெப்ரவரி | 225 | சிங்களம் | ஜீ. ஜீ. சரத்ஆனந்த<br>தமிழில்: திக்குவல்லை கமால் | உயர்திணையும்<br>அ.்.றிணையும் |
| 41. | 2019 | டிசம்பர் | 235 | சிங்களம் | லீலானந்த விக்ரமசிங்ஹ<br>தமிழில்: அப்துல் ஆபீத் | இருளில் ஒளிரும் |
| 42. | 2020 | ஜனவரி | 236 | சிங்களம் | பந்துல ஜயரத்ன<br>தமிழில்: எம்.எம். மன்ஸூர் | விழிப்பு |
| 43. | 2020 | செப்டெம்பர் | 244 | சிங்களம் | கிர்த்தி வெலிசரகே<br>தமிழில்:அப்துல் ஆபித் | மீண்டெழுதல் |
| 44. | 2020 | டிசம்பர் | 247 | சிங்களம் | விமலதாஸ முதாகே<br>தமிழில்: திக்கவல்லை கமால் | படைவீரனும் ரோஸியும் |
| 45. | 2021 | ஜனவரி | 248 | ஆங்கிலம் (இந்தியா) | ஆர். கே. நாராயன்<br>தமிழில்: பொ.கருணாகரமூர்த்தி | ஜோசியனின் ஒரு நாள் |
| 46. | 2021 | மார்ச் | 250 | ரஷ்யா | மெக்ஸிம் கோர்க்கி<br>தமிழில்: மலரன்பன் | கொலுஷா |

# போர்க்காலச் சிறுகதைகள் (தொகுப்புகள்)




ஈழப்போர் ஏற்படுத்திய அனர்த்தங்களின் பல்வேறு கோலங்களை இந்தப் போர்க்காலக் கதைகள் பேசுகின்றன. ஞானம் சஞ்சிகையின் முதல் 50 இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. போரினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் எண்ணிலடங்காதவை. இளைஞர்களின் உயிர்த்தியாகங்கள், பொதுமக்களின் உயிரிழப்புகள், பொருள் இழப்புகள், அங்கவீனமாக்கப்பட்டோர், தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த மனைவியர், சகோதரங்களை இழந்தோர், பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள், இடப்பெயர்வுகள், புலம்பெயர்வுகள், இராணுவத்தினரின் அடாவடித்தனம், சோதனைச் சாவடியின் கெடுபிடிகள், கைதுகள், சிறைவாசம், காணாமல் போன கணவன் உயிரோடு வருவாரா? என ஏக்கத்துடன் காத்திருக்கும் மனைவியர், காணாமல்போன பிள்ளை திரும்பி வருவானா எனக்காத்திருக்கும் பெற்றோர். - இப்படியான எத்தனை எத்தனை அவலங்கள்....


இந்த அவலங்கள் பலவற்றை இக்கதைகள் பேசுகின்றன.

**– தி. ஞானசேகரன்**

ஏஐ ஏஐ ஏஐ

போர் என்றால் அதன் தாக்கம் ஒரு சாராரை மட்டும் பாதிப்பதில்லை. இருசாராரையும் பாதிக்கத்தான் செய்யும். சிங்கள மக்கள் இந்தப் போரினால் எத்தகைய பாதிப்புக்குள்ளானார்கள், அவர்கள் இந்தப் போரை எவ்வாறு எதிர்கொண்டார்கள். அவர்களது உணர்வுகள் என்ன? இவற்றைப் பற்றி சிங்கள எழுத்தாளர்கள் நிறையவே எழுதியிருக்கிறார்கள். அக்கதைகளில் சிலவற்றை நண்பர் ஆ. தங்கவேலாயுதம் அவ்வப்போது மொழிபெயர்த்து ஞானம் வாசகர்களுக்குத் தந்து கொண்டிருந்தார். இக்கதைகளுக்கு வாசகர்களிடம் பெரும் வரவேற்பு இருந்தது. இவற்றில் சிலவற்றை தேர்ந்தெடுத்து “யுத்தத்தின் சாபம்” என்ற மகுடத்தில் நூலாக்கி உள்ளோம்.

**– தி. ஞானசேகரன்**





தரமான தங்க நகைகளுக்கு....

# Nagalingams Jewellers

Designers and Manufacturers of
22kt Sovereign Gold
Quality Jewellery

101, Colombo Street, Kandy.
Tel: 081 - 2232545

# CENTRAL ESSENCE SUPPLIERS

Suppliers to Confectioners & Bakers

Dealers in all kinds of Food Essences,
Food Colours, Food Chemicals,
Cake Ingredients Etc.

76B, Kings Street, Kandy.
Tel: 081 - 2224187, 081 - 2204480, 081 - 4471563

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/05/News/2021




ISSN 2478-0340